வெளியீடு—23—7—1975]
Issued—23—7—1975]

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1975 மார்ச் 11

Tuesday 11th March 1975

தொகுதி LXV—எண் 1

Volume LXV– No. 1

©

தமிழ் நாடு அரசு

1975

GOVERNMENT OF TAMIL NADU

1975

சட்டமன்றப் பேரவைத் துறை

சென்னை-600009.

Legislative Assembly Department

Fort St. George, Madras-600009.

விலை 50 காசுகள்]

PRICE 50 Paise].

V2;11,31'N75

31N75-65;2

61694

# Tamil Nadu Legislative Assembly Debates

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

11TH TO 15TH MARCH 1975.

VOLUME LXV (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS.

*Tuesday, 11th March 1975.*


| | Pages. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies. ... | ix–xvi |
| 1. Questions and Answers ... ... ... | 1–25 |
| 2. *Announcements*— | |
| (i) Adjournment Motions relating to C.M.C. Hospital, Vellore. ... ... ... ... | 25 |
| (ii) Business of the House ... ... ... | 99–102 |
| 3. Permission sought by a Member who came late to put supplementary questions for the question tabled by him. ... ... ... ... | 25–26 |
| 4. *Point of Information*— | |
| New flag in I.G's Office. ... ... ... | 26 |
| 5. Refusal to admit a Pass holder in Speaker's Gallery. ... ... ... ... ... | 27 |


A-2—1

Pages.

*Tuesday, 11th March 1975—cont.*

6. Government Bills—
   (i) The Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 (L.A. Bill No. 7 of 1975) ... ... ... ... 27–60
   (ii) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1974. (L.A. Bill No. 49 of 1974) ... 60–75

7. Voting on Demands for Grants for the year 1975–76—
   Demand No. 6—Registration
   Demand No. 32—Welfare of the Backward Classes, etc. ... ... ... ... 76–98

8. Papers laid on the Table ... ... ... 103

*Wednesday, 12th March 1975.*

1. Questions and Answers ... ... ... 109–140

2. Adjournment Motion—
   New flag in I.G's Office ... ... 140–145

3. Calling Attention—
   Prevalence of cholera and other deadly diseases in Ramanathapuram district and the need to take relief measures ... ... ... 145–149

4. Voting on Demands for Grants for the year 1975–76 (cont.)—
   Demand No. 6—Registration
   Demand No. 32—Welfare of the Backward Classes, etc. ... ... ... ... 149–211, 212–257



Pages.

*Wednesday, 12th March 1975—cont.*

5. Point of Clarification—
   Criticism of the Constitution ... ... 211–212

6. Papers laid on the Table ... ... ... 258–259

*Thursday, 13th March 1975.*

1. Questions and Answers ... ... ... 261–283

2. Points of Order—
   Agriculture Minister's answer to a question 283–284

3. Voting on Demands for Grants for the year 1975–76 (Cont.)—
   Demand No. 18—Medical ... ... ...
   Demand No. 19—Public Health ... ...
   Demand No. 34—Urban Development ... 284–301, 301–381

4. Admission of outsiders in the Lobby ... 301

5. Papers laid on the Table ... ... ... 382–383

*Friday, 14th March 1975.*

1. Questions and Answers ... ... ... 467–499

2. Points of Order—
   (i) Supply of I l ey notes and other papers relating to ) mands for Grants in advance to Member ... ... ... ... 499–502
   (ii) Immediate ısideration of Adjournment Motions gi notice of pertaining to affairs of ( .C. Hospital, Vellore ... 502–509

D
V211,81 N75
31N25.E5;2
61694

Pages.

*Friday, 14th March 1975—cont.*

3. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

Demand No. 36—Irrigation ... ... ...

Demand No. 37—Public Works—Buildings

Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant ... ... ...

Demand No. 39—Roads and Bridges ... ...

Demand No. 48—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ...

Demand No. 51—Capital Outlay on Irrigation

Demand No. 52—Capital Outlay on Public Works—Buildings ... ... ...

Demand No. 53—Capital Outlay on Roads and Bridges ... ... ... ... 510-567

4. Papers laid on the Table ... ... ... 567

*Saturday, 15th March 1975.*

1. Questions and Answers ... ... ... 583-598

2. Point of Order—

(i) Information regarding Central Cabinet's discussion on the State Autonomy Resolution adopted by the Assembly ... 598

(ii) Non-utilisation of question hour in full for answering questions and consideration of other business during question hour 599-602 599-602

3. Adjournment Motion—

Vellore C M.C. Hospital's affairs ... ... 603-633

4. Calling Attention—

Delay in the merger of Grade I and Grade II Tamil Pandits ... ... ... ... 633-634



Pages

*Saturday, 15th March 1975—cont.*

5. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.*

Demand No. 36—Irrigation

Demand No. 37—Public Works—Buildings

Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant ... ... ...

Demand No. 39—Roads and Bridges ... ...

Demand No. 48—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply

Demand No. 51—Capital Outlay on Irrigation

Demand No. 52—Capital Outlay on Public Works—Buildings

Demand No. 53—Capital Outlay on Roads and Bridges ... ... ... ... 634-689

6. Papers laid on the Table ... ... ... 689

## உள்ளடக்கம்.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. .. | 1—25 |
| 2. | அறிவிப்புகள்— | |
| | (அ) வேலூர் சி. எம். சி. மருத்துவமனை பற்றி கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து. | 25 |
| | (ஆ) பேரவை அலுவல் குறித்து .. .. | 99—102 |
| 3. | வினா நேரம் முடிந்து வந்த ஓர் உறுப்பினர் தன் வினாவிற்கு துணை வினா கேட்க அனுமதி கோரல். | 25—26 |
| 4. | காவல் துறைத் தலைமை அதிகாரி அலுவலகக் கட்டடத்தில் புதிய கொடி பறப்பது குறித்து. .. | 26 |
| 5. | பார்வையாளர் அனுமதிச் சீட்டு பெற்றவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து. | 27 |
| 6. | அரசினர் சட்ட முன் வடிவுகள்— | |
| | (அ) தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/1975). | 27—60 |
| | (ஆ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிலச் சீர்திருத் தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காவது திருத்தச் சட்ட முன் வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 49/1974). | 60—75 |
| 7. | 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— | |
| | (அ) நிதிக் கோரிக்கை எண் 6 பத்திரப் பதிவு .. | |
| | (ஆ) நிதிக் கோரிக்கை எண் 32—பின் தங்கிய வகுப்பினர் நலன். | 76—98 |
| 8. | பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. | 103—107 |

# தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

## தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்புப் பொருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இனாம் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர் இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனா உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங்கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

HIS EXCELLENCY THIRU KODARDAS KALIDAS SHAH

### Members of the Council of Ministers

1. THE HON. DR. M. KARUNANIDHI : (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN : (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN : (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM : (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN : (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA : (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Wakfs

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Oversees and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேயன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனைப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்–மேற்கு |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம் |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம் 2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. — | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 92 | சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 | சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 | சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 | சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 | சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 | சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 | சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 | சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 | சீனிவாசன், திரு. தெ. ப. | போளூர். |
| 101 | சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 | சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 | சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 | சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 | சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 | சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 | சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 | சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 | சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 110 | சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 | சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 | சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 | சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 | சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 | சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 | சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 | சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 118 | சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 | சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 | சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 | செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 | ஜெயராமன், திரு. சி. | சேலம்–1. |
| 123 | செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 124 | செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 125 | செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 | சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 | சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 | சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 | சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 | சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 | டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 | தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை—மேற்கு. |
| 133 | தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 | தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 | தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 | திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி |
| 137 | தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 | தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 | திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 | துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 141 | துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 | துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 | துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 | தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 | தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 | தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 | தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 | நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 | நரசிம்மன், திரு. வ. சி. | ஆரணி. |
| 151 | நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 | நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 | நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 | நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 | நாச்சியப்பன், திரு. வ. எம். டி. | ஆத்தூர். |
| 156 | நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 | நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 இராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்;—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி.

*வினா 266—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித்துறை ஏற்படுத்த அரசால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சித்துறை என்ற பெயரில் இல்லாமல் அரபு-பார்சிய-உருதுத் துறை ஒன்று இயங்கி வருகிறது. அது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் சுமார் ரூ. 40,000 அந்தத் துறைக்கு ஒதுக்கி வருகிறது.

திரு. பெ. சௌந்தர பாண்டியன்: தலைவர் அவர்களே, தற்போது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சியில் எந்த எந்தப் பகுதிகளை தேர்ந்தெடுத்து ஆராய்ந்துக் கொண்டிருக்கிறார்கள்? இது குறித்த விவரத்தைப் பல்கலைக் கழகம் புத்தகமாக வெளியிடுவது பற்றி அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரபு-பார்சிய-உருது ஆகியவை அடங்கிய ஒரு துறை 1930-ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. பல்வேறு ஆராய்ச்சி நூல்களை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமியர்களுடைய பழக்க வழக்கங்கள், தமிழகத்தில் அது எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பது பற்றியும், இன்னும் அது தொடர்புடைய பல்வேறு பணிகள் பற்றியும் நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. உமறுப் புலவர் எழுதிய "சீறாப் புராணம்" என்னும் நூலை பல்வேறு நூலாசிரியர்களுடைய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் வெளியிட்டிருக்கிறார்கள். டாக்டர் முகம்மது உசேன் நயினார் என்பவர் ஐந்து நூல்களை ஆராய்ச்சிகள் மூலமாக வெளியிட்டிருக்கிறார்கள். முகமது முனவர்கான் பகதூர் பக்கீர் கவாகர் என்பவர் ஒரு புத்தகத்தை

உருதுவில் வெளியிட்டிருக்கிறார். மௌலானா முகம்மது உசேன் மாவி என்பவர் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார். முகம்மது யூசுப் கான் என்பவர் இரண்டு நூல்களை வெளியிட்டிருக்கிறார். ஜுனுப் உஷா என்பவர் நான்கு நூல்களையும், ஜனாப் யூசுப் கோக்கன் என்பவர் ஆறு நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இஸ்லாமிய இலக்கியத்தில் மிகச் சிறப்புக்குரிய இலக்கிய நூல்கள் இன்னும் பலரிடத்தில் இருக்கின்றன. அவற்றை நம்முடைய அரசு பெற்றுவெளியிட முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறையே அவற்றைக் கவனிக்கலாம். சிறந்த தமிழ் நூல்களாக இருந்தால் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் பெறலாம். சிறந்த, முக்கியமான வரலாற்றுச் சிறப்புமிக்க நூல்களை வெளியிடுவதற்கு தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக ஓரளவு உதவி தருகிறார்கள். அந்த உதவி அடிப்படையில் செய்யலாம். அதற்குரியவர்கள் அரசை அந்த முறையில் அணுக வேண்டும்.

### *Nattalam High School*

* 267 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal under the consideration of the Government to upgrade the post of Headmaster of Nattalam Government High School, Kanyakumari district into a Gazetted one?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, நட்டலம் பள்ளிக்கூடத்தை அரசிதழ் பதவி உயர்வு பெற்ற தலைமையாசிரியரைக் கொண்ட பள்ளிக்கூடமாக மாற்றுவதற்கு வேண்டிய எண்ணிக்கை அங்கு இருக்கிறது அதை அரசிதழ் பதிவு தலைமையாசிரியரைக் கொண்ட உயர்நிலைப்பள்ளியாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியரை நியமிக்க வேண்டுமென்றால் அந்தப் பள்ளியில் குறைந்தது ஆயிரம் மாணவர்களாவது இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால், இந்தக் குறிப்பிட்ட பள்ளியில் 514 பேர் தான் இருக்கிறார்கள், என்ற காரணத்தால் அந்தப் பள்ளியை ஒரு அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர் நியமிக்கின்ற பள்ளியாகக் கருதுவதற்கில்லை.





### *College of Karnatic Music in Thanjavur District*

* 268 *Q.*—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether the Tamil Nadu State Committee for the Bi-centenary of Vedanayagam has recently requested the Government for grants for opening a college of Karnatic Music at Thanjavur and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கவிஞர் வேதநாயகம் அவர்கள் மாயூரத்தைச் சேர்ந்தவர்கள். தமிழில் முதன் முதலில் வெளி வந்த மிகப் புகழ்வாய்ந்த "பிரதாப முதலியார் சரித்திரம்" என்னும் நாவல் அவரால் இயற்றப்பட்டது. அத்தகைய சிறப்பான பாராட்டுக்குரியவர் அவர். எனவே, அத்தகைய சிறந்த கவிஞருக்கு இந்த முறையில் நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கு நமது அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றி செயற்குறிப்பு எதுவும் இல்லை. அப்படியொரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று யாரிடத்திலிருந்தும் விண்ணப்பம் வரவில்லை. அதற்காகக் குழுவினர் இருந்து, அந்தக் குழுவினர் சில பல செயற் குறிப்புகளுடன் அரசை அணுகினால், அரசு அவற்றைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

### *Power generator for Thanjavur Hospital*

* 269 *Q.*—Thiru A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether a generator was purchased for the purpose of meeting power cut or power failure at the R.M. Government Hospital, Thanjavur, if so, when; and

(*b*) whether the generator has been installed and has started working?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம். 1971 செப்டம்பரில் வாங்கப்பட்டது.

(இ) மின் சக்தி வழங்கப்பட வேண்டிய வெவ்வேறு இடங்களில் மின்சக்தி சுமை அதிகமானதன் காரணமாக, தானியங்கி மின்சக்தி ஏற்பாடு, புதைமின் கம்பிகள் போடுதல் போன்ற மாறுதல்களைச் செய்வது அவசியமாயிற்று. இதற்கு கூடுதலாக ரூ. 45,000 செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. திருத்த மதிப்பீட்டுக்கு அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கென முன்னமே கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் மின்சக்தி உற்பத்திப் பொறி நிறுவப்பட்டுள்ளது. வோல்டாஸ் நிறுவனத்தின் பணிப் பொறியாளர் இதனை ஓரிரு தினங்களுக்குள் இயக்கி வைப்பார். ஏப்ரலில் இது பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டாக்டர் ச.மு. பழனியப்பன்: தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மருத்துவ மனையில் உள்ளதுபோல், மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்துள்ள மற்ற மருத்துவ மனைகளிலும் இம்மாதிரி வசதி செய்யப்பட்டிருக்கிறதா?. அப்படிச் செய்யப்படாவிட்டால், எதிர்காலத்தில் திடீரென்று ஏற்படும் நிலைமையைச் சமாளிக்க இத்தகைய நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி ஏற்படுத்தலாம் என்ற ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், செயல் முறையில் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை இப்பொழுது நான் அறியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, ஏற்கனவே கேட்ட கேள்விதான். தஞ்சையில் செய்தது மாதிரியாக எல்லா இடங்களிலும் இம்மாதிரி ஜெனரேட்டர் போட்டு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படியானால், இதுவரையில் எந்த எந்த ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியில் இப்படி ஜெனரேட்டர்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஏறத்தாழ அதே வகை கேள்விக்குத்தான் இப்பொழுது பதிலளித்தேன். கொள்கையளவில் தேவைக்கேற்ப ஜெனரேட்டர்கள் அமைத்துக்கொள்ள மருத்துவ மனைகள் முன்வர வேண்டுமென்று ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், அமைத்துக் கொள்வதென்பது எளிதாக இல்லை. தஞ்சாவூர் மருத்துவ மனையில் ஏற்பட்ட நிகழ்ச்சி வருந்தத்தக்க நிகழ்ச்சி. 1971ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வாங்கிய ஜெனரேட்டரை சரியான முறையில் இயக்குவதற்குத் தேவையான கேபின் தனியாகப் போட வேண்டியிருக்கிறது. சரியான கேபிள் கிடைக்கவில்லை என்று பொறியியலாளர் தெரிவித்து, அதனால் தாமதமாகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கின்றனர். அந்தக் கம்பெனியும் (வோல்டாஸ்) இன்ஜினியருக்கு நேரம் இல்லை என்று சொல்லிவிட்டு, பிறகு இன்ஜினியர் இம்மாதம் 1ந் தேதி வந்து சரிபார்த்த பின்னர்தான் அது இயங்குகிறது. எதையெடுத்தாலும் ஒரு வகையில் தாமதம் இருக்கிறது. அதற்குத் தேவையான கருவிகள் கிடைக்கவில்லை; கருவிகள் கிடைத்ததும் அதை வைக்கத் தனிக் கட்டடம்



கட்ட வேண்டும் என்று சொல்லி, ரூ. 12,500க்கு கட்டடம் கட்டப்பட்டது. இப்படி சில டெக்னிக்கல் பிரச்சனைகள் ஆங்காங்கு ஏற்பட்டுவிடுகின்றன. தேவைக்கேற்ப எந்த எந்த அளவு முடியுமோ அந்தந்த அளவு, உடனடிப் பலன் தரத்தக்க அளவில் பரிசீலிக்கப்படவேண்டும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அதுவும் வாய்மொழியாக. தேவைக்கேற்ப செயல்படுத்தலாம்.

### கோடாறங்குளம் மருத்துவ விடுதி.

*வினா 270: திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம் பகுதியில் உள்ள கோடாறங்குளம் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மருத்துவ விடுதி மாற்றப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) ஆம்.

(இ) கோடாறங்குளத்திலுள்ள மருத்துவ விடுதி ஒரு வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தது. பிரம்மதேசத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ், ஒரு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. ஆதலால் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தின்படி கோடாறங்குளத்தில் இயங்கி வந்த மருத்துவ குழந்தை நல விடுதியை பிரம்ம தேசத்தில் புதிதாகக் கட்டிய கட்டிடத்திற்கு அரசு ஆணையைப் பெற்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கு நல்ல முறையில் நடைபெற்றுவந்த மருத்துவ விடுதி எந்த அடிப்படையில் மாற்றப்பட்டது? மாற்ற வேண்டிய காரணங்கள் என்ன? மாற்றப்பட வேண்டியதற்குத் தகுந்த காரணம் எதும் காட்டாமல் மாற்றியுள்ளதால் அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்து, கோடாறங்குளத்திற்கே அந்த மருத்துவ விடுதியை மீண்டும் ஆரம்பிக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று கோடாறங்குளத்தில் சப்-சென்டர் நடத்துவதற்கு அரசின் அனுமதியைப் பெறக்கூடிய வாய்ப்பு அந்த ஒன்றியத்தில் இல்லை. மொத்தம் எவ்வளவு சப்-சென்டர்கள் இருக்க வேண்டுமோ அதைவிட ஒன்று அதிகமாக கோடாறங்குளத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மூன்றில் இரண்டு பகுதி அரசாங்க உதவி மானியம் வழங்கக்கூடிய வாய்ப்பு இல்லை, என்று ஆடிட் அப்ஜெக்ஷனில் தெரிவிக்கப்பட்டது. அந்த நிலையில் அது இயங்குவதை அங்கே கைவிட்டுவிட்டு,

மறுபடியும் ஐந்தாண்டுகள் கழித்து, மக்கட்தொகை அதிகரிப்பு ஏற்பட்ட அடிப்படையில் 4,728 பேரைக் கொண்டிருக்கும் பிரம்மதேசப் பகுதியில் நாங்கள் நடத்த முடியும். கோடாறங்குளத்தில் 1,768 பேர்தான் இருக்கிறார்கள்—அந்த வட்டாரத்தில் அமைக்கும்போது பத்தாயிரம் பேருக்கு ஒன்று என்ற முறையில் அதிக மக்கள் தொகை அமையும் என்று சொல்லி, 18—1—1972 அன்று பஞ்சாயத்து ஒன்றியத்தில் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டு அந்த ஒன்றியத் தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டு, அப்படி அனுப்பப்பட்ட அடிப்படையில் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. கோடாறங்குளத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கியது. பிரம்மதேசத்தில் இப்பொழுது கட்டடம் கட்டப்பட்டு, அதில் இயங்கி வருகிறது. கோடாறங்குளத்தில் இயங்கினால் அரசாங்கத்தின் உதவித்தொகை கிடைப்பதற்கில்லை என்று ஆடிட் அப்ஜெக்ஷன் தெரிவித்தது. பிரம்மதேசத்தில் நடத்துவதற்கு அனுமதி கேட்கப்பட்டது. அதற்குரிய காரணம் காட்டப் பட்டது. ஒன்றியம் தீர்மானித்தது. எனவே, "நன்றாக இயங்கிற்று அல்லவா?" என்ற கேள்வி எழவில்லை.

## Modern Mortuaries

* 271 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to set up modern mortuaries in the Government Hospitals in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விவர அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த நவீன சவக்கிடங்குகளை தாலுக்காக்கள் அளவில் கூட வைத்திருப்பதன் காரணம் என்ன என்று தெரியவில்லை. இதற்காக உயர்ந்த அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப் படுகிறார்கள். அரை உயிரோடு இருக்கிறவர்களை எல்லாம் கூட அங்கே இழுத்துக்கொண்டு போய் போடுவதற்கு இதுபோல இதை அதிகப்படியாகச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சவத்திற்கு கூட உயிர் வந்துவிடுகிறது என்று சொல்லலாம் என்றாலும் அரை உயிரோடு இருப்பவர்களை எல்லாம் சவக்கிடங்குகளில்

@104—107-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



கொண்டுபோய்ப் போட்டுவிடுகிறார்கள் என்பது உண்மை அல்ல. மேலும் இந்தச் சவக் கிடங்குகளை பல இடங்களில் அமைக்கவில்லை. நான்கு மாவட்ட தலைநகர மருத்துவ மனைகளில் நோயாளிகள் அதிகம், கொலை செய்யப் பட்டவர்களுடைய சடலம் மறுபடியும் பரிசோதனைக்காக வைக்கப்பட வேண்டிய நிலை அதிகம் இருக்கிறது. இது போன்ற காரணங்களினால் நவீன சவக்கிடங்கு கட்டப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது. அவை திருச்சி, கடலூர், சேலம் தூத்துக்குடி, ஆகிய நான்கு இடங்களில்தான் கட்டுகின்ற ஆலோசனை இருக்கிறது. இவற்றைத் தவிர எதிர்காலத்தில் இன்னும் சில மருத்துவ மனைகளிலும் கட்டுவதற்கு ஆலோசனை இருக்கிறதே தவிர, தாலுக்கா மருத்துவ மனைகளில் இப்போது ஏற்படுத்துகிற நிலை இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சில பேஷண்டுகள் இறந்து விட்டால் அவர்களைக் கொஞ்சம் நேரம் அவர்களது படுக்கையிலே வைத்து நல்ல முறையில் பரிசோதனை செய்து உயிர் பிரிந்துவிட்டதா என்பதைத் தெரிந்து கொண்டே சவக் கிடங்கிற்கு அனுப்பி வைப்பது நல்லது. திரு. பழனிசாமி கூறியது போல பல இடங்களில் இறந்துவிட்டதாக மார்ச்சரிக்கு அனுப்பப்பட்டு பிறகு உயிர் வந்ததாக எடுத்து வரப்பட்ட கேஸ்கள் இருக்கின்றன. ஆகவே சவக்கிடங்கிற்கு நன்றாகப் பரிசோதனை செய்த பிறகு சில மணி நேரங்களுக்குப் பிறகே அனுப்பப்படவேண்டுமென்று உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இனி புதிதாக உத்தரவு பிறப்பிக்க வேண்டியதில்லை. மாண்புமிகு அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தபோதே அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட் டிருக்கின்றன. எங்காவது இதுபோல தவறு நடந்தால் **it is a serious offence** தவறு நடந்தால் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் பொறுப்புள்ள அதிகாரி யாரும் நடந்து கொள்ளமாட்டார்கள். இறந்துபோனவுடன் பரிசோதனை செய்ய வேண்டு மென்பது கட்டாயமான ஒரு கடமை. அந்தக் கட்டாயமான கடமையைக் கூடச் செய்யத் தவறியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டால் அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். இன்றைக்கு நாலாயிரத்திற்கும் மேற்பட்ட டாக்டர்கள் இருக்கிறார்கள். சாவு எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்றாலும் தினமும் ஆயிரக்கணக்கில் இறக்கிற நிலைமை இருக்கத்தான் செய்கிறது. இறந்தவர்களை உடனே சவக்கிடங்கிற்கு அனுப்பி விடுவதும் இல்லை. குறைந்தது ஆறு, ஏழு மணிகள் ஆகிறது அனுப்புவதற்கு. சவக்கிடங்கு இல்லாததால் யாரும் உயிர் பெற்றுவிடுவதில்லை. அதிகாரிகள் பொறுப்பை உணர்ந்தே நடப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த நவீன சவக் கிடங்கு வட ஆற்காடு மாவட்டத் தலைநகர் வேலூரில் இல்லை. வேலூரில் ஏற்கனவே ஒரு முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த பிணம் சவக்கிடங்கு வசதி இல்லாத காரணத்தால் ஆற்றுப்படுகையில் புதைக்கப்பட்டு பின்னர் அதைத் தேடினார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத் தலை நகர மருத்துவமனை களிலும் நவீன சவக் கிடங்குகளை ஏற்படுத்த அரசு முன் வருமா?

அடுத்து சவக்கிடங்குக்கு அனுப்பப்பட்ட பிறகு உயிர் பெற்று எழுவதைச் சொன்னார்கள். என் அனுபவத்தில் சொல்ல முடியும். என்னுடைய பாட்டியார் இறந்து 8 மணி நேரத்திற்குப் பிறகு சுடுகாட்டிற்குக் கொண்டு போகிற நேரத்தில் உயிர் வந்தது. அப்படி ஏன் வருகிறது என்பதைச் சிறந்த டாக்டர்களை வைத்து ஆராய்ச்சி நடத்துவார்களா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, சில பேர்களுக்கு உயிர் நீங்கியதற்கான அடையாளங்கள் அத்தனையும் காணப்பட்டு, பரிசோதனை செய்கிறபோதும் இறந்துவிட்டதாக முடிவு எடுக்கப்பட்டு மறுபடியும் சில நேரம் கழித்து அவர்களுக்கு உயிர்ப்புச் சக்தி திரும்பி வந்துவிடுகிற நிலையில் இறந்தவர்கள் எழுந்துவிடுவதும் உண்டு. எழுந்தவர்களை எழுந்துவிடாமல் இருக்க அடித்துக் கொன்றும் இருக்கிறார்கள். இதில் இந்து பிணம், முஸ்லீம் பிணம், கிறிஸ்துவ பிணம் என்கின்ற வேறுபாடு இல்லை. மருத்துவ மனையில் இறந்து, விஞ்ஞான அடிப்படையில் பரிசோதனை செய்து இறந்து விட்டதாகத் தீர்மானிக்கப்பட்ட எல்லா சவங்களுமே இப்படி உயிர்ப்புச் சக்தியைப் பெற்றுத் திரும்புவது என்கிற நிலை இல்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பெண் இறந்து, அந்தச் சவத்தைக் கோரிப் பெறுவார் யாரும் இல்லாத காரணத்தால் நகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு அந்தப் பெண் புதைக்கப்பட்டதற்கும் அங்கே சவக் கிடங்கு இல்லையென்பதற்கும் சம்பந்தம் இல்லை. அது வேறு. இது வேறு.

<u>திரு. என். மருதாசலம் :</u> தலைவர் அவர்களே, கோவை நகராட்சி மருத்துவ மனை மிக முக்கியமான மருத்துவ மனையாயிற்றே. அங்கே நவீன சவக் கிடங்கினை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> அங்கும் விரைவில் கட்ட வேண்டுமென்று அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> சவக் கிடங்குகளுக்கு இவ்வளவு டிமாண்டு இருக்கிறதே!

<u>கிருதுமால் நதி.</u>

*272 வினா.—<u>திரு. த. சோனையா :</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் உதயமாகி இராமநாதபுரம் மாவட்டம் வழியாகச் செல்லும் கிருதுமால் நதியின் இரு கரைகளையும் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> ஆம்.



<u>திரு. கு. திருப்பதி :</u> கிருதுமால் நதி என்பது மதுரையில் ஓடுகின்ற சாக்கடைக்கு வேறு பெயர். அதை விரைவில் செயல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, மதுரையில் எப்படி ஓடி வருகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. மதுரையில் இருப்பதைப் பற்றி ஆய்வில் இருப்பதாகத் தெரிவித்தேன்.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> இந்த கிருதுமால் நதியின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று பார்வேட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறாரே, அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> அணை கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. நதியை அகலப்படுத்தி, இரு கரைகளையும் பலப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லி வருகிறார்கள்.

<u>“மதுரைப்பாலம்” இரயில் நிலையத்தருகில் மேம்பாலம்.</u>

*273 வினா.—<u>திரு. த. சோனையா :</u> மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

“மதுரைப்பாலம்” இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள குத்தநேரி இருப்புப் பாதையினைக் கடந்து செல்ல மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தற்போது இல்லை.

<u>கோதுமை ஒதுக்கீடு.</u>

*274 வினா.—<u>திரு. என். இட்டப்பா :</u> மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்பொழுது மாதந்தோறும் மத்திய அரசு ஒதுக்கும் கோதுமையின் அளவு என்ன?

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> 1975 பிப்ரவரி மாதத்திற்கு மத்திய அரசு 41,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்தது. மார்ச்சு மாதத்திற்கு 51,000 டன் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீடு பொது விநியோக முறையின் கீழ் விநியோகத்திற்குச் செய்யப்படுகிறது. இதைத் தவிர சென்ற இரு மாதங்களாக மாதம் 9,000 டன் கோதுமை, அரைவு ஆலைகளுக்காகத் தனியாக ஒதுக்கப்படுகிறது.

[1975 மார்ச் 11

* 275 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that wheat is issued to the States on monthly basis for public distribution ;

(b) if so, the monthly quota for Tamil Nadu ;

(c) whether the monthly issue for May 1974 had been cut by the Centre ; and

(d) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1974 ஜூன் திங்கள் வரை நமது மாநிலத்திற்கான மாத ஒதுக்கீடு 9,000 மெட்ரிக் டன்னாக இருந்தது.

(உ) இல்லை.

(எ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஒதுக்கப்படுகிற கோதுமை எந்த எந்த வகையில் எவ்வளவு ஒதுக்கப்படுகிறது? ஒவ்வொரு மாதமும் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொது விநியோக முறையில் பொது மக்களுக்குக் கார்டுகள் மூலம் கொடுப்பதற்கு ஒதுக்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இப்போது 60 ஆயிரம் டன் நமக்கு ஒதுக்குவதாகச் சொல்கிறார்கள். சர்க்கார் ஒரு லட்சம் டன் கேட்டதே, அதில் இந்த 60 ஆயிரம் டன் சேருமா? அல்லது இந்த 60 ஆயிரம் டன் போக நமக்குப் பாக்கி ஒரு லட்சம் கொடுப்பார்களா? சமீபத்தில் நடந்த முதலமைச்சர்கள் மகாநாட்டில் எது பற்றி விவாதிக்கப்பட்டது? அதன் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த 60 ஆயிர டன்னைத் தவிர ஒரு லட்சம் கொடுத்தால் அதை வாங்கிக் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் வழி இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே அண்மையில் டில்லியில் உணவு அமைச்சர்கள் மகாநாடு கூடியதே, அதில் விநியோகம் சம்பந்தமாக நமக்கு அரிசி, கோதுமை கூடுதலாகத் தருவது பற்றி ஏதாவது கருத்து தெரிவிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கோதுமை பிரச்சினை மாத்திரம் தான் இந்த மகாநாட்டின் அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருந்தது.



1975 மார்ச் 11]

சர்க்கரை சம்பந்தமாகவும் நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பங்கு பெற்றார்கள். தனித்தனியாக, பிரிவு பிரிவாக, மாநில அமைச்சர்கள் கூடி, அவர்களோடு மத்திய உணவு அமைச்சர் பேசியிருக்கிறார். அந்த விவாதத்திற்கிடையில் அரிசியைப் பற்றியும், பேச்சு வந்தது. அரிசி போதுமான அளவில் நம்மிடத்தில் இல்லை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதென்றால் கோதுமையைக் காட்டிலும் பல மடங்கு அதிக விலை ஆகிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: அரவை ஆலைகளுக்கு இப்போது ஒதுக்கப் படுகிற அளவு அதிகமானது. அதைக் குறைத்துக்கொள்ள வேண்டும். 12 ஆயிரம் டன் ஒதுக்கினால் போதும் என்று மதிப்பீட்டுக் குழுவில் கூறப்பட்டிருக்கிறதே அது எந்த அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கிறது? அரவை ஆலைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு குறிக்கப்படுமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமது மாநிலத்தில் 24 அரவை ஆலைகள் இருக்கின்றன. அவைகளுக்கு எவ்வளவு கோதுமை கொடுப்பது என்பது நிர்ணயிக்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு 9 ஆயிரம் டன் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அரவை ஆலையின் கெப்பாசிட்டியோடு ஒதுக்கப்படுகிற இந்த அளவைப் பார்த்தால் கால்வாசி கூட போதாது. போதுமான அளவு கோதுமை இல்லாத காரணத்தினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது இல்லை. நாம் 9 ஆயிரம் டன்னைக் கூட அவர்களிடத்தில் விட்டுவிடாமல் மத்திய அரசு அரவைக் கூலியாக என்ன நிர்ணயித்திருக்கிறதோ அதைக் கொடுத்துவிட்டு அவர்கள் தயாரிக்கிற மைதா, ரவை போன்றவற்றையும் கூட வாங்கி பொது விநியோக முறையில் தான் கொடுத்து வருகிறோம்.

திரு. கே. ஏ. வகாப்: மத்திய அரசு வெளிநாடுகளிலிருந்து தானியம் இறக்குமதி செய்வதில்லை என்று முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகையிலேயே வந்திருக்கிறது. அப்படி அவர்கள் முடிவு செய்திருக்கிற காரணத்தினால், நாம் நம்முடைய மாநிலத்திற்குத் தேவைப்படுகின்ற அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள மத்திய அரசு நம்மை அனுமதிக்க வேண்டும் என்று இந்த அரசு வற்புறுத்துமா? அப்படி இல்லை என்றால், வேறு மாற்று ஏற்பாடுகள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாமே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய முடியாது. நாம் தாய்லாந்து நாட்டுடன் தொடர்பு கொண்டு அவர்கள் இன்ன விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள், அங்கிருந்து இறக்குமதி செய்துகொள்ள எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று மத்திய அரசைக் கேட்டோம். இது வரை அனுமதி தரவில்லை. மத்திய அரசாங்கத்தின் கொள்கை அரிசி இறக்குமதி செய்தால், அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்குக் கோதுமையை வாங்கிக் கொள்ளலாம் என்பதுதான்.

[1975 மார்ச் 11

அரிசி சாப்பிடுகிறவர்களைக் கோதுமை சாப்பிடுங்கள் என்று சொல்வது சரியல்ல. வடபுலம் முழுவதிலும் உள்ளவர்கள் கோதுமை சாப்பிடுகிற காரணத்தினால் கோதுமையை இறக்குமதி செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கின்ற மத்திய அரசு அரிசி சாப்பிடுகின்றவர்களுக்கு அரிசியை இறக்குமதி செய்யவேண்டும் என்று சொல்வதற்கு அனுமதி தரமாட்டேன் என்பது சரியல்ல என்பதுதான் நமது மாநில அரசின் வாதமாகும்.

ஆனால், இது வரை மத்திய அரசு அரிசியை இறக்குமதி செய்து தரமாட்டோம் என்று சொன்னதாகத் தெரியவில்லை. நாங்கள் மத்திய உணவு அமைச்சரோடும் இந்தியப் பிரதமரோடும் பேசிய போதெல்லாம் எங்களுக்குத் தென்பட்டது பரிவு உணர்ச்சியோடு அரிசியை இறக்குமதி செய்து தருவதற்கு சம்மதித்து இருப்பதாகத்தான் தென்பட்டது. இதை ரொம்பப் பெரிது படுத்தினால் அரிசியே கிடைக்காமல் போய் விடுமோ என்ற அச்சம் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மத்திய அரசு 60 ஆயிரம் டன் கோதுமையைக் கொடுக்கிறார்கள். இந்தக் கோதுமை பூராவும் நேரிடையாக ஜனங்களுக்கு விநியோகிக்கப்படுகிறதா? நாம் அரவை ஆலைகளுக்குக் கோதுமையைக் கொடுத்து ரவை, மைதாவாக அவர்களிடத்தில் இருந்து வாங்கிக்கொள்கிறோம் என்றார்கள். என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறது? என்ன விலைக்கு அவர்களிடமிருந்து வாங்கப்படுகிறது? பொது மக்களுக்கு என்ன விலையில் விநியோகிக்கப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கெனவே இதைப்பற்றி விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். நமக்கு மத்திய அரசு 51 ஆயிரம் டன் கொடுத்தால் அதைப் பொது விநியோக முறையிலேயே பொது மக்களுக்கு நேரிடையாக விநியோகிக்கிறோம். அரவை ஆலை அதிபர்களுக்கு மத்திய அரசு 9 ஆயிரம் டன் என்று நிர்ணயித்துத் தருகிறார்கள். அதை அவர்களிடமிருந்து திருப்பிக் கேட்க உரிமை இல்லை என்றால், நாம் நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த 9 ஆயிரம் டன்னுக்கு மைதா, ரவை போன்றவற்றை நம்மிடமே ஒப் படைக்க வேண்டும் என்று சொல்லி அரவைக் கூலியைக் கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்ளுகிறோம். அப்படி வாங்கிக்கொள்வதற்கு என்ன விலை நிர்ணயிப்பது என்பது தான் பிரச்சினையாக இருக்கிறது. என்ன விலைக்கு வாங்குகிறோம், என்ன விலைக்கு விற்கிறோம் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கு. காமாட்சி: நமக்கு ஒதுக்கப்படுகிற கோதுமையை ஓட்டல் களுக்காக நாம் ஏதாவது தனியாக அலாட்மென்ட் செய்கிறோமா? அப்படி ஒதுக்கப்பட்டால் அதன் விலை என்ன? இப்போது ஓட்டல்களில் பூரி, சப்பாத்தி விலைகளையெல்லாம் உயர்த்தி விட்டார்களே?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆலைகளுக்கு ஒதுக்கப்படுகிற 9 ஆயிரம் டன்னிலிருந்து கிடைக்கிற மைதா, ரவை போன்றவற்றை பல்க் கன்ஸ்யூமர்ஸ் என்ற அடிப்படையில் ஓட்டல்களுக்கு அளிக்கிறோம்.



1975 மார்ச் 11]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது அரிசி சம்பந்தமாக மத்திய சர்க்கார் கொண்டுள்ள கருத்தைப் பற்றி இங்கே கூறப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தால், ஒரு கிலோவுக்கு 4 ரூபாய் அடக்கமாகிறது. இவ்வளவு அதிக விலை கொடுத்து வாங்குவது சிரமமாக இருக்கும். ஃபாரின் எக்சேஞ்சும் அதிகம் செலவாகும். கிலோ 2 ரூபாய்க்கு விற்கும் போதே நம் நாட்டு மக்கள் அதிக விலை என்று சொல்கிறார்கள், என்ன விலை ஆனாலும் பரவாயில்லை. நாங்கள் சப்சிடி செய்து கொடுக்கிறோம் என்கிற உறுதி யினை நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசாங்கத்திற்காக ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் வாதாடுகிறார். அரிசியே இல்லாது அல்லல்படுகின்ற பொது மக்களை எப்படிச் சந்திப்பது? என்ன விலையானாலும் இந்த நேரத்தில் அரிசியை வாங்கிக் கொடுப்பது என்பது சிறந்ததாக இருக்காதா என்பது கேள்வி. மத்திய அரசாங்கம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி ஆகின்ற கோதுமைக்குச் சப்சிடி கொடுத்து வடபுலத்தில் விநியோகம் செய்யவில்லையா? அதுபோல, அரிசி உணவை சாப்பிடுகிறவர்களுக்கு அரிசியை வரவழைத்து சப்சிடி செய்து கொடுக்கக்கூடாதா? மத்திய அரசைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்து அன்போடும் அனுதாபத்தோடும் தான் பேசினார்கள். அரிசியை இறக்குமதி செய்து உதவி செய்வது போலத்தான் சொல்லியிருக்கிறார்கள். நண்பர் மாரிமுத்து அவர்கள் ஏன் இதை எதிர்க்கிறார்கள் என்பது தெரியவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நாங்கள் எதிர்க்கவில்லை. அவர்கள் நிலை என்ன, உங்கள் நிலை என்ன? நீங்கள் என்ன சொன்னீர்கள் என்று தான் கேட்டேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, கோதுமை விநியோகத்தைப் பொறுத்த வரையில் மத்திய அரசாங்கம் நமக்கு அனுப்பக்கூடிய கோதுமை மிகவும் தரங்குறைந்ததாக இருக்கிறது. பொது மக்களிடத்தில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. நமக்கு ஒட்டு கன்சைன்மெண்டைக் கொடுக்கிறார்களோ என்னவோ? கொடுக்கின்ற கோதுமையை நல்ல குவாலிட்டி உள்ளதாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதைப் பெறுவதற்கு நமது அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சென்ற மாதம் நானே சென்று பார்த்தேன். பொது மக்கள் அருமையாக இருப்பதாகச் சொன்னார்கள். இந்த மாதம் விநியோகம் செய்யப்பட்ட கோதுமையைப் பற்றி திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் என்னிடமே சொன்னார்கள். அது பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9–30)

திரு. வை. பாலசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம் முடைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்கின்ற வகையில் கோர் நிறுவனம்

நமக்கு ஏராளமான கோதுமையைக் கொடுக்க முன் வந்திருப்பதாகத் தெரிகிறது. இதுவரையிலே கேர் நிறுவனம் நமக்கு எவ்வளவு கோதுமை தந்திருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இன்னும் நம்முடைய கைக்கு வந்து சேரவில்லை. மத்திய அரசாங்கம் அதைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள் சொல்கின்றபடி, மத்திய அரசாங்கத்தினர் நமக்கு 51,000 டன் கோதுமை கொடுக்கிறார்கள். இப்போது 2 கிலோ தான் கொடுக்கிறார்கள். ஆனால், கோதுமை அதிகமாக வருவதால், 6 கிலோ வரை எல்லா இடங்களிலும் ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கலாம். ஆகவே, 6 கிலோ வரையாவது கொடுக்க அரசு முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் அந்தக் கணக்கைச் சொன்னவுடனே நாங்களே கணக்குப் போட்டுப் பார்த்தோம். அது சரியாக வரவில்லை. இப்பொழுது மாவட்ட அளவிலே நாங்களே கொடுத்து வருகிறோம். சென்ற மாதம் 41,000 டன் கொடுத்து இருக்கிறோம். சென்னையைச் சேர்ந்து எல்லா மாவட்டங்களிலும், இப்பொழுது கூடுதல் கோதுமை கிடைக்கவிருப்பதால், இந்த மாதம் அளவைக் கொஞ்சம் அதிகப்படுத்தியும், கொடுக்கப்படாத இடங்களுக்கு விரிவுபடுத்திக் கொடுத்தும், இப்படி இந்த இரண்டு முறையிலே கொடுக்க முயற்சி செய்கிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, மத்திய அரசிடம் நாம் நமக்கு அரிசிதான் தேவை என்று வலியுறுத்தியும் கூட, கோதுமையைத்தான் தருகிறது. மத்திய உணவு அமைச்சரவர்கள், நாம் வெளி நாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தால் விலைவாசி ஏறும், தாய்லாந்திலேயே அரிசியின் விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தியாவிலேயே மத்திய அரசாங்கத்தினிடம் ஏராளமாக அரிசி இருக்கிறது என்றும், ஆந்திரா போன்ற பகுதிகளிலே உபரியாக விளைந்திருக்கிறதென்றும், நாம் செய்திகளை அறியும் போது, நம்முடைய நாட்டிலே விளைகின்ற அரிசியைப் பட்டினியால் வாடும் நமது மாநில மக்களுக்குக் கொடுக்க மத்திய அரசு ஏன் மறுக்கிறது?. நம்முடைய அரசு மேலும் வற்புறுத்தி நமக்குத் தேவையான அரிசியை மத்திய அரசாங்கத்திடம் கேட்டுப் பெறுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். மற்ற மாநிலங்களுக்கு, அதிக விளைச்சலில்லாத மாநிலங்களுக்கு ஏற்கனவே கொடுத்து வந்த கமிட்மென்டை கொடுப்பதாகவும் அதனால் புதிதாகக் கொடுக்க இயலாது என்றுதான் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். இருந்தாலும், நாம் ஏற்கனவே மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்ததைச் சுட்டிக்காட்டி, இந்த ஆண்டு பற்றாக்குறையாக இருப்பதால், குறைந்தபட்சம் அரிசி தந்ததாக வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.





திரு என். கே. பழனிசாமி: சார், மத்திய சர்க்கார் நமக்கு மாதா மாதம் 60,000 டன் கோதுமை கொடுப்பதாகச் சொன்னார்கள். இது தவிர, மற்ற மாநிலங்களோடு கலந்து, கொள்முதல் செய்யப்போவதாகச் சொல்லப்பட்டதே, அவற்றைப் பெற, கோதுமையையும் மற்ற தானியங்களையும் பெற சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: சில மாநிலங்களிலே கோதுமையை உபரியாகத் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். சில மாநிலங்களிலே அரிசியை உபரியாகத் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டுக்கும் மத்திய அரசு அனுமதி கொடுத்தால்தான் தரமுடியும் என்பது அவர்களுடைய வாதம். ஆனால், மத்திய அரசாங்கம், தொடர்ந்து நேரடியாக மாநிலத்துக்கு மாநிலம் அரிசி கொடுப்பதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்லிவருகிறது.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தற்பொழுது பேரூராட்சிப் பகுதிகளில் கோதுமை விநியோகம் குறைந்திருக்கிறதே, அதை அதிகமாக்க அரசினர் உத்தரவு போடுவார்களா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: அந்தந்தப் பகுதிகளுக்கு விநியோகிப்பதுபற்றி, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். நாம் ஆலோசனை கூறியிருப்பது, நகராட்சிகள், டவுன் பஞ்சாயத்துக்கள், வறட்சி நிலவுகிற பகுதிகள், தொழிலாளர் வாழ்கின்ற பகுதிகள், நெசவாளர் வாழ்கின்ற பகுதிகள், இப்படிப் பிரித்துப் பார்த்து, அரிசி வழங்கவேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறோம்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவரவர்களே, தமிழகத்திலே அரிசி அதிகமாக இருந்த சமயத்தில், மற்ற மாநிலங்களுக்குத் தேவைப்பட்டபோது நாம் கொடுத்ததற்கு மத்திய அரசாங்கம் அதிகமான ஆட்சேபனை கிளப்பவில்லை. எந்தக் காரணத்திற்காக இப்பொழுது ஆட்சேபனை கிளப்புகிறார்கள்? அதைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசாங்கத்திடம் சொல்லி, வெளி மாநிலங்கள் கொடுக்கும் அரிசியைப் பெற நம் அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: மாண்புமிகு முதலமைச்சரவர்களும் அதுபற்றிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நேரில், நானும் முதலமைச்சரும் மத்திய உணவு அமைச்சருடன் இதுபற்றி விவாதித்தோம். குறிப்பாக, உபரியாக உள்ள பஞ்சாப், ஆந்திரா போன்ற மாநிலங்கள் நாங்கள் தருகின்றோம் என்று சொல்லும்போது, அதற்கு மறுக்காமல் நீங்கள் அனுமதி தரவேண்டுமென்று வலியுறுத்தினோம். அரிசியைப் பொறுத்த அளவில், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. ஆகவே, அனுமதி வேண்டுமென்று வலியுறுத்தினோம். பஞ்சாப் அரசாங்கம் தங்களுக்கிருக்கிற அரிசித் தேவையைக் குறைத்துக் கொண்டு, தமிழ்நாடு படுகிற அல்லலைப் பார்த்து, உங்களுக்கு அரிசி

அனுப்பியிருக்கிறோம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருந்தது. அதை வைத்தும், நாம் பஞ்சாபிடமிருந்து அரிசியைப் பெற மத்திய அரசாங்கம் அனுமதி தரவேண்டுமென்று வற்புறுத்தி னோம். இன்னும், பஞ்சாப் மாநிலத்திலே உபரியாக இருப்பதை வாங்கித் தருகிறோம் என்று, கூட்டுறவு ஸ்தாபனங்களும் கேட்டிருக் கின்றன. அதற்கும் அனுமதி தரவேண்டுமென்று மத்திய அரசாங் கத்தை வலியுறுத்தி வருகிறோம்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

*276 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மிகப்பெரிய பரப்பளவுள்ள கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றி யத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) : இம் மாநிலத்தில் நிர்வாகத்திற்கு எளிதாயிராமல் மிகப் பெரிய அளவிலான ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிப்பது குறித்து ஆய்வு செய்யப் பட்டு வருகிறது. புதிதாக ஏற்படுத்தப்படும் ஒன்றியங்களுக்குத் தேவையான அலுவலர்கள், பணியாளர்கள், மற்றும் கட்டடங்களுக்காகும் செல வினங்களைக் கணக்கிட்டு அரசு நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு இது பற்றி முடிவெடுத்துத் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

*277 வினா—திரு என். இட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தினைப் பிரித்து அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு மன்னை ப. நாராயணசாமி: இல்லை.

* 278 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செம்பனார்கோவில் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா—

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தமிழ் நாட்டில் பல ஒன்றியங்களில், இந்த நிலைமை உள்ளது. குறிப்பாக, இந்த கும்மிடிப்பூண்டி ஒன்றியம் ஒரு தாலுகா முழுவதுமே கொண்டதாக அமைந்திருக்கிறது. ஆகவே, 62 ஊராட்சிகளைக் கொண்ட இந்த ஒன்றியத்தில் நாம் ஒதுக்கிய வேலையில்



பாதி வேலையைக் கூட செய்ய முடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, பெரிய ஒன்றியங்களையாவது இரண்டாகப் பிரிக்க, மத்திய அரசாங்கத்தோடு சேர்ந்து நம் அரசு தீவிரமாக முயலுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி. நான் அதைத்தான் சொன்னேன், ஆய்வில் இருக்கிறது என்று. இதற்கான செலவினங்கள் மற்றவைகள் எல்லாம் நம்முடைய மாநிலச் செலவினங்களைப் பொறுத்து கவனிக்கப்படும். ஒரு ஒன்றியம் புதிதாகத் துவக்கப்பட வேண்டுமென் றால், கட்டடம் கட்ட ரூ. 4 இலட்சம் தேவைப்படும். அதல்லாமல், நிர்வாகத்திற்காக, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1½ இலட்சம் தேவைப்படுகிறது, வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி முடிவடையும் வரை தற்பொழுது நிர்வாகப் பிரிவுகளில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது என அரசின் பொதுத் துறை ஒரு தடை விதித்துள்ளது. இதில், ஊராட்சிகளைப் பிரித்து இணைத்தல் போன்ற அனைத்தும் அடங்கும். எனவே, மாநிலத்திலுள்ள பெரிய ஒன்றியங்களைப் பிரிப்பதற்கான பணி பின்னர் மேற்கொள்ளப் படும்.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் என்ற அமைப்பு பிரிக்கப்படுகின்றபொழுது, அப்போதிருந்த ஜனத் தொகைக்கு ஏற்பப் பிரிக்கப்பட்டது. இப்பொழுதுள்ள ஜனத்தொகை, மற்ற மற்ற நிலைமைகளை வைத்து, எவ்வளவு ஜனத்தொகை, அல்லது வாக்காளர் அடிப்படையில் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன இந்தப் பிரிவினை, அதற்கான ஆய்வு நடைபெற்று வருவதாகச் சொன்னார்களே, அவை எந்த எந்த வகையில் பிரிக்கப்படவிருக்கின்றன? ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படவிருக்கிற நேரத்தில் எந்த வகையிலே பிரித்து அமைக்கப்படவிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப.நாராயணசாமி : தலைவர் அவர்களே, முதலிலே பிரிக்க, இந்த ஒன்றியங்களை ஏற்படுத்தும்பொழுது 66,000 மக்கள் என்று அப்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்கள்—ஆனால் அப்பொழு திருந்து பரப்பளவை வைத்துச் செய்திருக்கிறார்கள். இப்பொழுது பரப் பளவு அப்படியேதானிருக்கிறது. மக்கள் தொகைதான் அதிகமாகியிருக் கிறது. பரப்பளவு கணக்கை எடுத்துக் கொண்டு பிரிப்பதுதான் நலமாக இருக்குமே தவிர, மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு பிரித்தால், ஒவ்வொன்றையும் கூட இரண்டாகப் பிரிக்க வேண்டியிருக்கும். ஆகவே, பரப்பளவை வைத்து, எங்கு வேலை நடைபெறக் கஷ்டமாக இருக்கிறதோ அங்கு பிரிப்பதுதான் நல்லதாக இருக்கும்.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, செம்பனார்கோயில் ஒன்றியம் 58 ஊராட்சிகளைக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் அமைத்த நிர்வாகச் சீர்திருத்தக் குழு, பின் தங்கிய பகுதிகளையும், மக்கள் தொகை யையும் அடிப்படையாகக் கொண்டு இரண்டாகப் பிரிக்கலாம் என்று சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறதே, அந்த அடிப்படையிலே ஒன்றி யங்களைப் பிரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சிபாரிசு வந்ததாகத் தெரியவில்லை. இனி வந்தால்தான் அதைப்பற்றி பரிசீலனை இருக்கும்

(திரு. மன்னை ப. நாராயணசாமி) [1975 மார்ச் 11

நான் முன்னதாகவே சொல்லியிருக்கிறேன், பரப்பளவு அதிகமாக இருந்து கஷ்டப் படுகின்ற ஒன்றியங்களைப் பொருளாதாரத்தைப் பார்த்து பரப்பளவு அடிப்படையில் பிரிக்கவிருக்கிறோம் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைவரும் கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள், வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்பட்ட பிறகுதான், இவைபற்றி கவனிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு ஒன்றியத்தின் பெயரையும் சொல்லி, பிரிக்கப்படுமா, பிரிக்கப்படுமா என்று கேட்டுக் கொண்டிருந்தால், நேரம்தான் வீணாகும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்குண்டான அரசாங்கம் குறிப்பிட்ட வேண்டுகோள்கள், அரசாங்கத்திலே காத்துக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது தமிழ் நாட்டிலேயுள்ள பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் பரப்பளவில், பொருளாதார ரீதியில், மக்கள் தொகை எண்ணிக்கையில் மிகப் பெரிதாக இருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், சில நேரங்களில் ஒரு ஊராட்சி ஒன்றியம் இரண்டு சட்டமன்ற தொகுதிகளுக்குள் இருக்கிற காரணத்தால் சில சீர்கேடுகள் கூட இருக்கின்றன. ஆகவே, நிர்வாகத்தை முடுக்கிவிட்டு ஊராட்சி ஒன்றியங்களைச் சீர்படுத்துகின்ற வகையில் முடிவுகளை அரசாங்கம் எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, நான் முன்னதாகவே பொதுவாகச் சொல்லிவிட்டேன். அப்படி அதிகக் கஷ்டமாக இருக்கின்ற ஒன்றியங்களைப் பிரிக்கின்ற உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு தனது பரிவுரையில் "வளர்ச்சி வட்டார எல்லைகளைப் பெருமளவிற்குத் திருத்தியமைப்பதற்கான அவசியம் எதுமில்லை" என்று பரிந்துரைத்துள்ளது. அளவில் மிகப் பெரிதாகமைந்த சில வளர்ச்சி வட்டாரங்களை இரண்டாகப் பிரிப்பது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மேற்படி குழுவின் பரிவுரையை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு அதற்கான ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. அரசாங்கத்திற்குப் பிரிக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும்கூட இப்போதுள்ள பொருளாதார வசதியில் மத்திய சர்க்கார் முன்னாலே ஒவ்வொரு யூனியனுக்கும் முதல் ஐந்தாண்டுகளுக்கு 12 இலட்ச ரூபாயும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 5 இலட்சம் ரூபாயும் கொடுத்து வந்ததை 1—4—1974க்கு பிறகு நிறுத்திவிட்டார்கள். அதனால் அதற்குப் பிறகு மாநில சர்க்கார்தான் அந்த வகையில் 6 கோடி ரூபாய் வரையில் செலவினங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் பொறுத்து அரசு முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. திருவரங்குளம், கும்மிடிப்பூண்டி, உத்திரமேரூர் ஆகியவைபற்றி நான் அரசாங்கத்திற்குத் தகவல்கள் வந்திருக்கின்றன. மற்ற ஒன்றியங்களைப் பற்றி வந்ததற்குப் பிறகு பரிசீலிக்கலாம். வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பொதுத் தேர்தல்கள் வரையில் இப்போதுள்ள ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள எல்லைகளை அல்லது வார்டுகளைப் பிரிக்கக்கூடாது என்று மத்திய சர்க்கார் உத்திரவு தொடர்ந்து வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1975 மார்ச் 11]

திரு. பொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி மன்றங்களும், பேரூராட்சி மன்றங்களும் அங்கங்களாக இருக்கின்றன. பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் இவற்றில் அவற்றினுடைய வளர்ச்சி, நாம் ஆகியவற்றை விந்தியாசம் இருக்கின்றது. ஆகவே குறைந்தது பேரூராட்சி மன்றங்களையாவது பிரிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாநில சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் இந்திய சர்க்கார் பொதுத் தேர்தல்கள் வரையிலே வாக்காளர் பட்டியல் தயாரிப்பது வரையிலே ஸ்தல ஸ்தாபனங்களிலே வார்டுகளை மாற்றக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்று நான் முறையாகப் பதில் சொல்கிறேன். வேறு கேள்வியிருந்தால் கேட்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைமை அலுவலகம் தற்போது மாயூரம் நகராட்சிப் பகுதியில் இருக்கிறது. அதனை மணல் மேட்டிலே அமைக்கின்ற கோரிக்கை நீண்ட நாட்களாக விடப்பட்டு வருகிறது. மாயூரம் ஒன்றியத்தினுடைய தலைமை அலுவலகத்தினை மணல் மேட்டுக்கு மாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது வேறமாதிரியாகவே இருக்கவேண்டும். மணல் மேடாக ஆக்க வேண்டியதில்லை. மூலக் கேள்விக்கும் போடப்பட்டிருக்கிற உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : நிர்வாக சௌகரியங்களை முன்னிட்டு கொள்கை அளவிலே பெரிய ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்று அரசு ஒப்புக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கால தாமதமாகிறது. ஆகவே பெரிய ஊராட்சித் தொகுதிகளை இவற்றை முடிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதைப்பற்றி பின்னே தான் யோசிக்கப்படும்.

திரு. வை. பாலசந்தரன் : 28 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட ஒரு பஞ்சாயத்து தமிழ்நாட்டிலே இல்லை. ஆனால் என்னுடைய தொகுதியிலேதான் ஒரு ஊராட்சியிலே 28 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அங்கே அது 20 ஆண்டுகளாகத் தனி மனிதனின் அதிகாரத்தில் இருந்து வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 28 ஆயிரம் மக்கள் தொகை கொண்டிருப்பதற்காக வருத்தப்படுகிறேன். மக்கள் தொகையை அவ்வளவு தூரம் வளரவிட்டிருக்கக் கூடாது. குடும்பக் கட்டுப் பாடுத் திட்டம் மூலமாக அந்த ஜனத்தொகையை இனிமேலாவது வளராமல் இருப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: திடீர் தேர்தல் வரும் என்ற காரணத்தினால் தான் அதையெல்லாம் பிரிக்கக்கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருந்தது. ஆனால் இப்போது திடீர் தேர்தல் இல்லை என்று ஆகி விட்டதே. ஆகவே மத்திய சர்க்கார் உத்திரவோடு இதை உடனடியாகச் செய்தால் நலமாக இருக்கும். வருகிற தேர்தலுக்கு முன்னதாகவே ஊராட்சிகளையும் நகராட்சிகளையும் வார்டுகளையும் பிரிப்பதற்கு நம்முடைய சர்க்கார் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: யோசிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் உத்திரவிட்டு இருக்கிறது என்றும் நம்முடைய அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். என்னுடைய தொகுதிக்கருகில் வெம்பாக்கத்திலே 65 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. திமிரி, காவேரிப்பாக்கம் போன்ற இடங்களிலே 58 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஆனால் கன்னியாகுமரியிலே 10 ஊராட்சி மன்றங்கள் இருந்தாலும் ஒரு ஒன்றியம் இருக்கிறது. ஆகவே யூனியன் சேர்மன் தேர்தல் சுலபமாக நடந்துவிடுகிறது. ஆனால் இப்படிப்பட்ட இடங்களில் 65 ஊராட்சி தலைவர்களைக் கொண்டுபோய் சேர்த்துத் தேர்தலில் ஜெயிப்பது என்பது எவ்வளவு கஷ்டமான காரியம்? அதை அமைச்சர் அவர்கள் மனதிலே வைத்துக்கொண்டு 30, 35 ஊராட்சி மன்றங்கள் இருந்தாலே ஒரு ஒன்றியம் என்ற அளவிற்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி: கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு முன்னமேயே பதில் சொல்லியிருக்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, on account of the the Delimitation Commission's decisions and orders, it is stated by the Hon. Minister that they have to wait for taking up the re-organisation of Unions. Now that the Delimitation Commission's decisions have been published, from that we see that instead of strengthening the unity of the Unions, they have completely broken the unity into pieces. May I know from the Hon. Minister whether he will go into all these things and take steps to maintain the unity of the Unions?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, நான் முன்னமேயே சொன்னதுபோல் கமிஷன் சொன்னவற்றை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி பரிசீலனைதான் இப்போது இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. என். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பு அது 50 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருந்தாலும் சரி, 25 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருந்தாலும் சரி ஒன்றியங்களைப் பிரிப்பது என்பது மக்கள் தொகை அடிப்படையிலேதான். ஒரு



இலட்சம், 80 ஆயிரம் மக்கள் தொகை என்ற அடிப்படையிலேதான் பிரிக்கப்படுகின்றன. இப்போது ஏ., பி., சி., டி., என்று தரம் பிரித்து இருக்கிறோம். போதிய அளவிற்கு ஆராய்ந்து இந்தத் தரம் பிரிக்கப்படவில்லை, ஆகவே மீண்டும் பரிசீலனை செய்து ஏ. பி. சி. டி. என்பதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கோரிக்கை இருந்து வருகிறது. அதைப் பற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே 50, 60 ஊராட்சிகள் இருப்பதால் ஊராட்சித் தலைவர்களை ஒன்றியங்களின் தலைவர் தேர்தலுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் சிரமம் இருக்கிறது என்று திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். ஆகவே அந்தக் கிராமத்தைத் தவிர்த்து ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களை நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சார், நீங்கள் தொடர்ந்து இப்படியாகவே செய்துவருகிறீர்கள். நீண்டகாலமாக நான் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறேன். என்னிடம் இருக்கிற உரிமையால் இப்படிச் செய்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்ற முறையிலே கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்துக்களிலே இருக்கக்கூடிய கிராமங்களைப் பிரிப்பது அரசாங்கத்தின் பரிசீலனையிலிருப்பதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களினுடைய தேர்தல் ஏப்ரல், மே மாதங்களிலே நடைபெறவேண்டும், சட்டபூர்வமாக. அதற்குள்ளாக இது முடியுமா? அப்படி முடிவதற்குக் காலதாமதமாகுமா? அரசாங்கம் இந்த மே மாதத்திலே தேர்தலை நடத்தப்போகிறதா, அல்லது இரண்டொரு ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தலை நடத்த இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை. சீக்கிரமாக முடிவு செய்து அறிவிக்கப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஊராட்சி ஒன்றியங்களில் சிப்பந்திகளினுடைய எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோதே இதிலே பலத்த மாறுதல்களைச் செய்யவேண்டுமென்றும், தேவையற்ற உத்தியோகங்களை நீக்க வேண்டுமென்றும் சிக்கனத்தைக் கையாள வேண்டுமென்றும் சொல்லியிருந்தார்களே, இன்றைய தினம் ஒன்றியங்களிலே தேவையற்ற பதவிகள் பல இருந்துகொண்டிருக்கின்றன. அவற்றை நீக்கி சிக்கனம் செய்வதற்கு ஏற்ற முறையிலே அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்போது இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்திலே அப்படிப்பட்ட சீர்திருத்தத்தை நாம்

[1975 மார்ச் 11

செய்யும்போது பொதுவாக கஷ்டமாக இருக்கும். போகப் போக அதிகமாக சிப்பந்திகள் இருந்தால் அவர்களுக்கு எல்லாம் வேறு வேலை தேடிக் கொண்டு எங்கெங்கு சீர்திருத்தம் தேவையோ அங்கங்கே செய்யலாம்.

திரு. சோ. அழகர்சாமி: பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை நடத்தும் காலம் முடிவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். காலத்தை முடிவு செய்யவில்லை என்றாலும் புதிய தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முன்பே இந்தக் கேள்வி கேட்டார்கள். இது பற்றிப் பின்பு அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஏற்கனவே கேட்ட கேள்வி. மற்ற உறுப்பினர்கள் என்ன கேள்வி கேட்கிறார்கள் என்று கவனிக்க வேண்டும். இந்தத் துணைக் கேள்விக்கு ஏற்கனவே அமைச்சர் அவர்கள் "ஆய்வில் இருக்கிறது" என்று பதில் சொன்னார்கள்.

## சிங்கோனா உற்பத்திக் கழகம்.

*279 வினா—திரு. இ. ராமசாமி: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் சிங்கோனா, தொய்வு தோட்டங்களை இணைத்து ஒரு கார்ப்பரேஷனாக அமைக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: ஆம்.

## காடுகளிலிருந்து வாசனைப் பொருள்கள்

*280 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கைவசம் உள்ள காடுகளில் வாசனைப்பொருள்கள் தயாரிப்பதற்கு உபயோகப்படக்கூடிய மரம், செடி, கொடிகள் வளர்க்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு ஓ.பி. இராமன்: ஆம். சந்தனம், தைல மரங்கள், பர்சாரா, எலுமிச்சை புல், இலவங்கம், ஜெரேனியம் முதலியவைகள் பயிரிடப் படுகின்றன.

திரு. ச. சங்குமுத்துத் தேவர்: தமிழ்நாட்டில் எந்தெந்த பாகங்களில் இதுபோன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன? திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு மலைத் தொடர் பகுதியில் இந்த மாதிரி செடிகள் வளர்க்கப்படுகின்றனவா?



1975 மார்ச் 11]

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: தற்சமயத்தில் கோவை மாவட்டத்தில் ஆனைமலைப் பகுதியிலும், நீலகிரி மாவட்டத் மலைப் பகுதிகளிலும் தான் இதுபோன்ற தைலச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. பிற மாவட்டங்களில் எந்தெந்தப் பகுதிகளில் வளர்க்க முடியும் என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கு. அ. பொம்மன்: வாசனைத் திரவியங்களிலிருந்து எண்ணெயை நடுவட்டத்தில் இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். போதிய இயந்திரங்கள் இல்லாததால் அதிகமாக உற்பத்தி செய்வதற்கில்லை என்று சொல்லப் படுகிறது. அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதுபற்றி முழு விவரம் இல்லை.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: இந்தத் தைலமரங்களை வளர்ப்பதால் காட்டு இலாகாவுக்கு லாபகரமாக இருக்கிறதா? எந்த விதத்தில் இது காட்டு இலாகா வருமானத்தைப் பெருக்குகின்ற விதத்தில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: சந்தன மரம் வளர்ப்பது அதிக லாபகரமாக இருக்கிறது. பல செடிகளை மருந்துப் பொருளாக நாட்டு வைத்தியத்தில் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். லாப நோக்கோடு இல்லாமல் சில அத்தியாவசியத் தேவைகளை முன்னிட்டு சில பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன.

திரு. தொ.ப. சீனிவாசன்: சந்தனமரம் லாபகரமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜவ்வாது மலைப் பகுதிகளில் ஏராளமாக சந்தன மரக்காடுகள் இருக்கின்றன. அங்கிருந்து கள்ளத்தனமாக பயங்கரமான முறையில் சந்தன மரங்கள் கடத்தப்படுகின்றன. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? தற்போது சந்தனத் தைலம் தனியாரால் தயாரிக்கப்படுகிறது. அந்தத் தொழிலை அரசாங்கமே மேற்கொண்டால் லாபகரமாக இருக்குமல்லவா?

மாண்புமிகு திரு. ஓ.பி இராமன்: தனியாருக்கு ஒன்றும் நாம் விடுவதில்லை. காடுகளில் உள்ள சந்தன மரங்கள் அகில இந்திய அளவில் ஏலம் விடப்படுகிறது. இந்தியாவில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் உள்ள "ரிஜிஸ்டர்டு காண்டிராக்டர்ஸ் ஃபார் சான்டல்வுட்" கலந்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அறிவிக்கப்படுகிறது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஏலத்தில் எடுக்கிறார்கள். தனியாக சந்தனத் தைலத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாமா என்பது பற்றித் தொழில் துறையில் ஆய்வில் இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: நம் நாட்டு சீதோஷ்ண நிலையில் ஜிரேனியம், சின்கோனா போன்றவற்றைத் வளர்ப்பது சிறந்த முறையில் இருக்கிறது என்றும் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகின்றது என்றும் சொல்லுகிறார்கள். அவற்றை நல்ல முறையில் மேம்படுத்த தமிழ்நாட்டு மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளில் எவை எவை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்த விவரங்களுக்குத் தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : காட்டிலாகாவிலே மருந்துக்குத் தேவையாக இருக்கக்கூடிய தைல மரங்கள் இருக்கின்றனவே அவை இன்றைக்கு நமது மாநிலத்திற்கு மட்டும் போதுமானது என்று இருந்தால் லாபகரமாக இருக்காது. மற்ற மாநிலங்களுக்குத் தேவைக்குத் தகுந்தபடி ஏற்றுமதி செய்ய அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: தைலச் செடிகள் சில பகுதிகளில் தான், மலைப் பகுதிகளில்தான் வளரும். மற்றபடி ... போன்ற பிளான்டேஷன்களும் இருக்கின்றன. பெருமரம் வளர்க்கும் திட்டங்கள் தேக்கு வளர்க்கும் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. செடிகள் வளர்க்கக்கூடிய இடம் எவ்வளவு இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் இவற்றை வளர்க்கலாம்.

திரு. எஸ். முருகையன் : சந்தன மரத்தின் மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு வருஷம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ கோடி முதல் 2 கோடி ரூபாய் வரை வருமானம் வருகிறது. இந்த ஆண்டு அதற்காகச் செலவிடப்பட்டது எவ்வளவு? அது போதுமானதா? இன்னும் அதிகப்படுத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சந்தன மரம் வளர்ப்பதற்காக எவ்வளவு செலவு என்ற கணக்கு இல்லை. சந்தன மரங்களை விற்ற கணக்கு இருக்கிறது. சென்ற ஆண்டு மூன்று கோடி ரூபாய் அளவுக்கு சந்தன மரங்கள் விற்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : சந்தன மரம் வளர்ப்பது லாபகரமாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் பகுதியில் சந்தனத் தைலம் இறக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுவதாக இருந்தது எந்த நிலையில் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் ; அங்கு அத்தகைய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவது பற்றி பரிசீலனை செய்தார்கள். தற்போது காதி இலாகா மூலமாக தொழிற்சாலையை ஏற்படுத்தலாமா என்று பரிசீலனை செய்து வருவதாகக் கேள்விப்படுகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, best sandalwood, lemon-grass and other scented grasses are available in plenty in Pennagaram and Denkanikottah areas, Dharmapuri district but no proper investigation has been made. Private people are manufacturing saldalwood oil, etc., and selling them and are earning a lot of money. So, will the Hon. Minister be pleased to take steps to investigate the possibility of starting a sandalwood oil factory in those areas ?



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதெல்லாம் தாவர வகைகளை வளர்க்கும் திட்டத்தின் அடிப்படையில் எடுத்துக் கொள்கிறோம். சந்தன மரங்கள் எந்தெந்தப் பகுதியில் வளர்க்கப்பட வேண்டுமோ அதற்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கப்படுகிறது. அதைச் சற்று அதிகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை இருப்பதாக அறிகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : சந்தனத் தைலத்திற்கு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் நல்ல கிராக்கி இருக்கிறது. சந்தனத் தைலத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த சாத்தியப்படக்கூடிய சூழ்நிலை இருந்தால் தனியார் முன்வந்தால் அரசு அவர்களுக்கு உதவி புரியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அந்த அளவுக்கு சந்தன மரங்கள் ரா, மெட்டீரியல்கள் கொடுக்க முடியுமா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. ஆகவே, அரசுத் துறையில் ஆரம்பித்தாலும், தனியார் துறையில் ஆரம்பித்தாலும் ரா, மெட்டீரியல்ஸ் முழு அளவு கொடுப்பதில் சிரமம் ஏற்படக் கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்புகள்.

### (அ) வேலூர் சி. எம். சி. மருத்துவ மனை பற்றி கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. சோ. அழகர்சாமி, திரு. எ. ஆர். மாரிமுத்து ஆகியோர் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனை பற்றிய பிரச்சினை குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. வினா நேரம் முடிந்துவிட்டதால் ஓர் உறுப்பினர் தனது வினாவிற்குத் துணை வினா கேட்க அனுமதி கோரல்.

திரு. கே. எ. வகாப் : கேள்வி நேரம் முடிந்து விட்டது என்று தாங்கள் கூறிவிட்டீர்கள். முதல் கேள்வி என்னுடைய கேள்வி. நான் சபைக்குக் கொஞ்சம் தாமதமாக வந்தேன். அதற்காக வருந்துகிறேன். அதனால் அந்தக் கேள்விக்கு நான் துணைக் கேள்விகள் கேட்க முடியவில்லை. அமைச்சர்கள் நேரம் கழித்து வந்தால் அனுமதிக்கப்படுகிறார்கள். அந்த வகையில் எனக்கும் துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.
...இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகள் இருக்கின்றன. விதி 35 (3)-ல்—

" When all the questins for which an oral answer is desired have been called the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whose name it stands . . . ."

என்று இருக்கிறது. கேட்காமல் இருக்க வேண்டும். கேள்வி கேட்டு விடை எல்லாம் கொடுத்து, துணைக் கேள்விகள் எல்லாம் கேட்கப்பட்ட பிறகு மறுபடியும் எடுத்துக் கொள்ள முடியாது. இந்த அவையில் அது எழுப்பப்படாமல் இருந்தால் மறுபடியும் எழுப்பலாம். ஆகவே, மறுபடியும் அதை எழுப்புவது முறையல்ல.

4. காவல்துறைத் தலைமை அதிகாரி அலுவலகக் கட்டடத்தில் புதிய கொடி பறப்பது குறித்து.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஐ.ஜி. ஆபீசில் தொன்று தொட்டு தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது. ஒரு சில நாட்களாக தேசியக் கொடி பறக்க வில்லை. புதிதாக ஒரு கொடி இப்போது பறந்து கொண்டிருக்கிறது. இது ஒருவேளை மாநில சுயாட்சிக் கொடியா அல்லது வேறு எந்தக் கொடியோ என்று நாங்கள் எல்லாம் ஐயப்படுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—அது என்ன கொடி, எந்த அரசாங்க உத்தரவின்பேரில் பறக்கிறது என்பதை அவைக்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல ஆண்டுக் காலமாக ஐ.ஜி. ஆபீஸ் கட்டடத்தின் முகப்பில் இந்திய தேசியக் கொடிதான் பறந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒரு வாரத்திற்கு முன்பு என்று கருதுகிறேன். மத்திய அரசிலிருந்து ஒரு உத்தரவு வந்தது. ஐ.ஜி.ஆபீசில் இந்திய தேசியக் கொடி பறக்கக்கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களுக்கும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல் இங்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐ.ஜி. சர்க்காருக்கு எழுதிக் கேட்டார்—வெறும் போஸ்ட் இருப்பதா அல்லது கொடி போடுவதா என்று. தமிழ் நாடு அரசினுடைய சின்னத்தை இணைத்து ஏற்கெனவே போலீசாருக்குரிய நீல நிற வண்ணக் கொடி பறக்க விடப்பட்டிருக்கிறது. இப்போது ஐ.ஜி. ஆபீசில் மாத்திரம் பறக்க ஆரம்பித்திருக்கிறது.



(முற்பகல் 10-00)

5. பார்வையாளர் அனுமதிச் சீட்டு பெற்றவருக்கு அனுமதி மறுக்கப் பட்டது குறித்து.

திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் பதிலுரை கூறினார்கள். அந்த உரையைக் கேட்பதற்காக எனது தொகுதியிலிருந்து இரண்டு பேர் வந்திருந்தார்கள். நான் அவர்களுக்கு சனிக்கிழமை அன்று 12 மணியிலிருந்து 1 மணி அளவிற்கு ஸ்பீக்கர் பாஸ் வாங்கியிருந்தேன். நேற்று அவர்கள் வந்த சமயத்தில் அவர்களை 11·55 மணி அளவில் வந்த அவர்களை, உள்ளே விட மறுத்திருக்கிறார்கள். எனக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இரண்டாவது அனுபவம் என்று நான் கூறிக் கொள்கிறேன். இதற்கு முன்னாலும் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இதனால் நான் எனது தொகுதி மக்கள் முன்னால் தலை குனியக் கூடிய அளவிற்கு இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. ஆகவே இதைக் கண்டித்து நான் சபையை விட்டு வெளி நடப்பு செய்கிறேன்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1975-ம் ஆண்டு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 7/1975)

THE HON. THIRU O. P. RAMAN : Sir, I beg to move—

" That the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill*, 1975 (L.A. Bill No. 7 of 1975) be taken into consideration.

In moving the Bill, I wish to say that there has been a widespread drought in this State and the agriculturists have borrowed debts in order to tide over the crisis caused by the failure of crops. It is in the interests of the general public that, at the present time, agriculturists should be spared the distractions and expenditure involved in litigation launched by their creditors and be enabled to rehabilitate themselves in order that the maximum possible advantage may result to the State in the matter of production of food crops.

* Published in the *Tamil Nadu Government Gazettee* Extraordinary, dated 8th March, 1975.

In order to give temporary relief to the agriculturists, the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 1 of 1975) was promulgated by the Governor on 16th January 1975 to provide that no suit for the recovery of a debt shall be instituted and no application for the execution of a decree for payment of money passed in any such suit shall be made and no suit for application for the eviction of a tenant for non-payment of a debt shall be instituted or made, against any agriculturist in any civil or revenue court before the expiry of a year from the date of the commencement of the Ordinance, that is the 16th January, 1975 and that all further proceedings in suits and applications of the nature mentioned above shall stand stayed till then. However, the benefits of the proposed legislation will not apply to persons who have been assessed to income-tax, agricultural income-tax or sales tax in any of the years 1971–72, 1972–73 and 1973–74.

The Bill seeks to replace the said Ordinance. Sir, I request the House to accept the motion.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நமது மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. சிவப்பிரகாசம் அவர்கள் தங்களைப் பற்றி ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். தாங்கள் கொடுக்கிற விஸிட்டர்ஸ் பாஸிலே இவ்வளவு நேரத்திலிருந்து இவ்வளவு நேரம் வரை என்று கூறுகிறார்கள். எவ்வளவு சீட்டுகள் இருக்கிறதோ அவ்வள விற்கு முதலில் கொடுக்கிறார்கள். நாங்கள் பல தடவை கேட்கும்போது கூட 40 சீட்டுகள் முடிந்து விட்டன என்பார்கள். அவர் முதல் நாளே வாங்கிய சீட்டிற்கு இடம் ஒதுக்கப் படாமல் போனதற்குக் காரணம் என்ன என்பதை தாங்கள் சொல்லவில்லை. இது சம்பந்தமாக பதில் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் என் பதிலைக் கேட்கவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : அவர்தான் முதல் நாளே பாஸ் வாங்கி இருப்பதாகச் சொன்னார். எத்தனை சீட் இருக்கிறதோ அதற்குத்தான் பாஸ் கொடுப்பார்கள். இப்படி ஏன் ஆனது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. சிவபிரகாசம் அவர்கள் கேட்டு விட்டு, சபாநாயகர் அவர்கள் பதிலை எதிர்பார்த்து என்ன பதிலை அவர் சொன்னார் என்பதற்குப் பிறகு எந்தவித நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை. அவர் பேசிவிட்டு உடனே போய்விட்டார்.



திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, எத்தனை சீட் இருக்கிறதோ அவைகளுக்குத்தான் பாஸ் கொடுக்கப்படுகிறது.. அப்படி இருக்கும்போது பாஸ் கொடுக்கப்பட்டு என் அனுமதி மறுக்கப்பட்டது, அப்படியென்றால் வேறு யார் உட்கார்ந்து கொண்டார்கள். பாஸ் கொடுப்பதிலே வேறு ஏதாவது முறைகேடுகள் நடைபெறுகின்றனவா ? ஒருவருக்குக் கொடுத்து விட்டு, அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை பல தடவை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இம்மாதிரி முறைகேடு நடக்காமல் தாங்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல தடவை என் கவனத்திற்குக் கொண்டு வந்தோம் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். இதைப் பற்றி விசாரிக்கச் சொல்கிறேன். இது மாதிரி இனிமேல் நடக்காமல் இருக்குமாறு செய்யச் சொல்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த முக்கியமான சட்டத்திலே ஒரு சில கருத்துக்களை என் கட்சியின் சார்பாகக் கூற முற்படுகிறேன். இது ஆர்டினன்ஸாகப் பிறப்பிக்கப்பட்டு, மசோதாவாகி சட்ட வடிவம் ஆவதற்கு ஏதுவாக இருக்கிறது. இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட ஏழை எளிய விவசாயிகளுக்கு இது நல்ல ஒரு சட்டமாக இருக்கும். இந்தச் சட்டத்தில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணத்திற்கு, இதிலே 7-வது கிளாஸில் ஒன்று இருக்கிறது—

*Act to override other laws, contracts, etc.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961), the Malabar Tenancy Act, 1929 (Tamil Nadu Act XIV of 1930), the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Act, 1968 (Tamil Nadu Act 16 of 1968), the Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act, 1972 (Tamil Nadu Act 21 of 1972) or in the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908) or in any other law for the time being in force or any custom, usage or contract, or decree or order of a Court or other authority.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது, இங்கு இரண்டு பில்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு டிமாண்ட்ஸ். இந்த பில்லுக்கு எவ்வளவு நேரம், அந்த இரண்டாவது பில்லுக்கு எவ்வளவு நேரம், டிமாண்ட்ஸுக்கு எவ்வளவு நேரம் என்று பிரித்துக் கொண்டு விட்டால் நல்லது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சாதாரணமாக பில்லிலே நிரம்ப பேர்கள் பேச மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன் எல்லா கட்சித் தலைவர்களோடு ஆலோசித்துப் பிரித்துக் கொண்டால் சரியாக இருக்கும். என்னைப் பொறுத்த வரையில் ஒரு மணி நேரத்தில் இந்த பில்லை முடித்து விடலாம் என்று நினைக்கிறேன். 11 மணிக்குள்ளே இந்த பில்லை முடித்து விடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இரண்டாவது பில் பொறுத்த வரை பல சிக்கல்கள் இருக்கின்றன. அது சின்ன விஷயமாக இருந்தாலும் கொள்கைப் பிரச்சினையாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு பில்களுக்கும் சேர்த்து ஒரு மணி நேரமல்ல. இந்த பில்லுக்கு ஒரு மணி நேரம், அதற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தச் சட்டத்திலே அதிகமான முற்போக்கான அம்சங்கள் இருந்த போதிலும் இது என்னென்ன சட்ட திட்டங்களுக்கு உட்படும் என்பது விவாதத்திற்குரிய பிரச்சினையாக ஆகிவிடும் என்று கருதுகிறேன். அண்மையிலே இந்த டெனன்ஸி ரிகார்ட்ஸ் சட்டமானது கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் உகந்ததாக இருக்குமென்று சட்டமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் அந்த மாவட்டத்தில் அமுலில் இல்லாத காரணத்தினால் பாதிக்காது என்று உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு ஏற்பட்டதன் காரணமாக இப்போது வேறு ஒரு திருத்தச் சட்டம் சட்ட மன்றத்தில் ஆய்வில் இருக்கிறது. பொதுவாக இந்த சட்டங்கள் ஆக்கப்படுகிற நேரத்திலே, அவை எல்லா இடங்களுக்கும் பொருந்தக் கூடிய அளவிலே சட்டங்களை உருவாக்குவது பொருத்தமாக இருக்கும். அந்தப் பகுதியில் இன்னும் பல சட்டங்கள் அமல்படுத்தப்படவில்லை. உதாரணத்திற்கு, இந்த கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் 40–60 போன்ற சட்டங்கள், இப்படி விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு நல்ல சட்டங்கள் என்று எவை இருக்கின்றனவோ அவைகளெல்லாம் கன்னியாகுமரிப் பகுதிக்கு விஸ்தரிக்கப்படவில்லை. ஆனால் மாறாக, வேறு ஒரு சில சட்டங்கள் அங்கே இருக்கின்றன. அங்கே இந்தக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சட்டம் என்று, ஆக்ட் 8 ஆஃப் 1950 என்று திருவிதாங்கூர் சட்டம் இருக்கிறது. காலாகாலங்களில் அதன் ஆயுளை நீட்டிக் கொண்டு வருகிறார்கள். இந்த மாதிரி **An act to override other laws, contracts, etc.** என்ற சட்டம் அந்தச் சட்டங்களுக்கு உகந்ததாக இருக்குமாவென்ற கேள்வியும் எழுகிறது.

இப்போது கோர்ட்டுகளிலே பெரும்பான்மையான வழக்குகள் முடங்கிக் கிடக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். பல வழக்கறிஞர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று புகார் கூறியிருக்கிறார்கள். இதிலே, இந்தச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறார்களென்றால் இனி ஒரு கேஸ் ஃபைல் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்கு எக்ஸிக்யூஷனை மட்டும் தடை செய்தால்



போதாதா என்று சற்று ஆராய வேண்டும். இம்மாதிரி கேஸ் ஃபைல் செய்வதற்கு தடை இருக்க முடியாது. தீர்ப்பு கொடுப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது என்று கருதுகிறேன். நடத்துவதற்கு ஸ்டே கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். அப்படி ஒரு “பிளாங்கெட்” லெஜிஸ்லேஷன் வருகிற காரணத்தால் வக்கீல்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு வேளை இதிலே சொல்வார்கள், ஏழை எளிய மக்களை பாதுகாப்பதற்காக இந்தச் சட்டம் வந்து இருக்கிறது என்று. நடைமுறையில் இருக்கும் சிக்கலை உணர்ந்து, இந்த மாதிரி சட்டம், இயற்றுகிற நேரத்தில், செயல்பட வேண்டும், ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், இதிலே விதிமுறைகளைப் பிறப்பிப்பதற்கு என 8-வது ஷரத்தில் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அந்த விதிமுறைகளை எல்லாம் துரிதமாகச் செய்து தர வேண்டும். எப்படி ஆர்டினன்ஸ் பிறப்பித்த உடனே சட்டம் வருகின்ற தன்மை இருக்கிறதோ அதைப்போல விதிமுறைகளையும் உடனடியாக பிறப்பிக்கவில்லை என்றால், இப்படிப்பட்ட சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டு விடும்.

இப்போது வறட்சிப் பகுதியாக இருக்கிற இப்படிப்பட்ட பகுதிகளை விரிவாகத் தெளிவு படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். நாடு முழுவதும், தமிழ்நாடு முழுவதும் பாதகமாக இருக்கிறது என்று குறிப்பு இருக்கிறது......

It extends to the whole of the State of Tamil Nadu,

It shall be deemed to have come into force on the 16th January 1975.

என்று எல்லாம் கூறியிருக்கிறது.

இந்த அளவிலே குறிப்பிட்டு இருக்கிற காரணத்தால், வறட்சிப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கும் என்று இருப்பதைத் தெளிவு படுத்த வேண்டும். இதிலே தெளிவாக இருந்தாலும், அப்படி ஒரு ஐயப்பாடு ஏற்படும் நிலை இருக்கிறது.

In the definition of ‘debt’.

என்று சொல்லும் நேரத்தில், பல்வேறு காரியங்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்......includes rent.. என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது.

any liability arising out of a breach of trust, any liability in respect of maintenance

என்று எல்லாம் விதிவிலக்குகள் சொல்லி இருந்தாலும், இதிலே என்ன முறையில் நடைமுறைச் சிக்கல் ஏற்படும் என்பதையும் நாம் சற்று சிந்திக்க வேண்டும். இதிலே பல்வேறு விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டு

இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் கடனைப் பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் குறித்தும் அரசாங்கம் ஆணை பிறப்பித்து இருக்கிறது. இந்த வசூல்களையெல்லாம் கொஞ்சம் தள்ளிப் போடவேண்டுமென்று, ஆணை பிறப்பித்து இருக்கிறது. நடைமுறையில் இந்த மாதிரியான காரியங்கள் நடக்கவில்லை. இன்னும் பல இடங்களில் கெடுபிடியாக வசூல் நடப்பதாக பலவிதமாக புகார்கள் வந்து கொண்டு இருக்கின்றன.

இந்த மாதிரியான நிலைமையைப் பார்க்கிற நேரத்தில் நாம் சற்று சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விவரங்களெல்லாம் இந்தச் சட்டத்தில் தெளிவாக இல்லாத காரணத்தால் அது பற்றி நாம் முடிவு எடுக்க வேண்டும். இது பொதுவாக வரவேற்கக் கூடிய சட்டமாக இருந்தாலும், நடைமுறையில் பல சிக்கல்கள் எழும் காரியங்கள் இருக்கின்றன. இன்று பணம் கொடுக்கவில்லை என்றால் அதை வசூல் செய்ய இடைஞ்சலாக இருக்கும் ஒரு சில ஷரத்துக்களும் இதிலே அமைந்து இருக்கிறது. ஆகவே, இதை ஆர அமர சிந்திக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமிழ் நாடு கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக) நிவாரணச் சட்ட முன்வடிவின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய சில கருத்துக்களை உங்கள் முன் எடுத்து வைக்கலாம் என்று கருதுகிறேன். இதிலே உள்ள சில சங்கடங்களை எடுத்துச் சொல்வதற்கும், அவைகளைப் போக்குவதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும் வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்திலே திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, திருநெல்வேலி, இன்னும் வடாற்காடு போன்ற மாவட்டப் பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் வாழை பயிரிடுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். விவசாயிகள் வாழை பயிரிட்டு வளர்ச்சியான பிறகு அதை ஒரு தனிப்பட்ட வாழை வியாபாரிகளிடம் ஒப்படைக்கிறார்கள். அந்த வாழை வியாபாரிகள் அந்தத் தார்களை கிரயம் பேசி எடுத்துச் சென்று பெரிய நகரத்திலே இருக்கும் வியாபாரிகளிடத்தில் ஒப்படைத்து, அவர்கள் லாபத்தையும், கமிஷனையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் ஒப்பந்தப்படி விவசாயிகளுக்குத் தரவேண்டிய உரிய தொகையைக் கொடுக்காமல் காலதாமதம் செய்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டுவது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், ஏராளமான விவசாயிகள் வாழை பயிர் செய்து வாழை வியாபாரிகளுக்கு குத்தகைக்குத் தந்து இருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக்குத் தரவேண்டிய பணத்தை தராமல் காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. கோர்ட்டுக்குச் சென்றால் அவர்கள் அங்கே என்ன சொல்கிறார்கள்



என்றால், அவர்களுக்கு இருக்கும் கொஞ்ச நஞ்ச நிலத்தைக் காட்டி 'நானும் விவசாயி, ஆகவே, இந்த நிவாரணச் சட்டத்தின் மூலம் எனக்கும் பாதுகாப்பு இருக்கிறது' என்று எதிர் மனு தருகிறார்கள். உள்ளபடியே சொல்கிறேன், வாழை வியாபாரிகளுக்கு நிறைய லாபம் கிடைக்கிறது, கமிஷன் மண்டியில் அவர்களுக்கு அதிக கமிஷன் தருகிறார்கள். ஆனால் அவர்கள் விவசாயிகளுக்குத் தரவேண்டிய பணத்தை, கொடுக்க வேண்டிய நியாயமான பணத்தை கொடுக்காமல் காலம் தாழ்த்துவது விவசாயிகளை மிகவும் பாதிக்கிறது. இது போன்ற நிலைமை தமிழகத்தில் பல மாவட்டப் பகுதிகளில் இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, விவசாயிகளுக்குச் சேரவேண்டிய, கிடைக்கவேண்டிய, அவர்களுடைய நிலத்திலிருந்து வரவேண்டிய வருவாய் பற்றி நாம் என்ன முடிவு எடுக்கப் போகிறோம் என்பது என்னுடைய ஐயப்பாடாகும். அவர்கள் அடைந்த லாபத்தில் விவசாயிகளுக்கு உரிய தொகையை அவர்கள் கொடுக்கவில்லையென்றால், நடவடிக்கை எடுத்து அதை வசூல் செய்வதற்கு தடை ஏற்படுகிறது. ஆகவே, அந்த விவசாயிகளுக்கு நாம் எந்த அளவுக்கு நிவாரணம் தரப்போகிறோம் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், விவசாயி தனக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை இழந்து விடும் நிலை ஏற்படுகிறது. இப்போது உருவாக்கப்பட்டு இருக்கும் சட்டத்தால் பல வகைகளில் கைமாற்றோ, வட்டிக்குப் பணம் வாங்குவதற்கோ முடியாத சூழ்நிலை இருக்கிறது. விவசாயிகள் தனனுடைய விவசாயத்தைப் பெருக்கவும், குடும்பச் செலவுக்குச் செய்ய வேண்டிய பணத்திற்காக கடன் வாங்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இந்த நிவாரணச் சட்டத்தால் அவர்கள் யாரிடத்திலும் பணம் கேட்டு வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, விவசாயிகளுக்கு நாம் எந்த வகையில் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதையும், விவசாயிகளுக்குச் சேரவேண்டிய தொகையை அவர்கள் எந்த விதத்தில் பெறுவது என்பதையும் மனதில் கொண்டு அதைத் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்பு பயிரிடும் விவசாயிகள் எல்லா மாவட்டத்திலும் இருக்கிறார்கள். அந்தக் கரும்பு பயிரிடும் விவசாயிகள் கரும்பு ஆலைகளோடு ஒப்பந்தம் செய்து கொண்டு அதைக் கொடுத்து விடுகிறார்கள். சிலர் கொட்டகை போட்டு தனிப்பட்ட முறையில் வெல்லம் செய்து, மண்டிக்கு போடுகிறார்கள். அப்படி வெல்லத்தை மண்டிக்கு போட்டு விட்டு, சிலர் ரசீது பெற்று வீட்டுக்குத் திரும்பிவிடுகிறார்கள். பிறகு பணம் கொடுங்கள் என்று கேட்டு மண்டிக்கு அவர்கள் சென்றால், இந்தச் சட்டத்தைக் காட்டி, 'நானும் நிலம் வைத்து இருக்கிறேன், நானும் விவசாயி, ஆகவே, கோர்ட்டுக்கு போ என்று சொல்லி, அங்கே எனக்குப் பாதுகாப்புத் தேவை' என்று சொல்லி மண்டிக்காரர்கள் மனு கொடுக்கிறார்கள். ஆகவே, கரும்பு பயிரிட்ட வியாபாரிகள் மண்டிக்காரர்களிடமிருந்து பணம் வாங்க முடியாமல் இருக்கிறது. விவசாயிகள் இப்படிப்பட்ட வகைகளில் கஷ்டப்படுவதைத் தடுக்க, அவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்கலாம் என்பதையும் ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இப்படி நிவாரணம் கேட்டு கோர்ட்டில் மனு போடுகிற நேரத்தில், அதைப் பரிசீலனை செய்கிற நேரத்தில், உள்ளபடியே பாக்கி தரவேண்டியது நபரா, வியாபாரியா என்பதை அலசி ஆராய்ந்து பார்த்து அந்த மனுவின் மீது தீர்ப்பு தெரிவிக்கலாம். அதுதான் நியாயமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இதே சட்டத்தில் இருக்கிறது. சேல்ஸ் டாக்ஸ் கட்டுபவர்கள், இன்கம் டாக்ஸ் கட்டுபவர்கள் ஆகியவர்களுக்கு விதி விலக்கு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மண்டியில் வியாபாரம் செய்பவர்கள் சிலர் அவர்களுடைய கணக்கை முறையாக வைப்பது இல்லை. அவர்கள் சேல்ஸ் டாக்ஸ், இன்கம் டாக்ஸ் போன்றவற்றை கட்டுவது இல்லை. ஆகவே, அவர்களைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருப்பதால், திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களில் இருக்கும் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சில விவசாயிகள் விவசாயத்திற்கு வேண்டிய செலவிற்காக பான் புரோக்கர்களிடம் சென்று தங்களிடமுள்ள நகையை, வேறு பாத்திரங்களை அடகு வைத்து பணம் வாங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணத்தை அளிக்க இந்தச் சட்டத்தில் வழிவகை இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் விவசாயிகளுக்கு எந்த வகையில் உதவுவது, அவர்களுடைய கடன் சிக்கல்களை தீர்ப்பது என்பதை எல்லாம் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் நம்முடைய கம்பர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்கின்ற அளவு கடன் பட்டவர்கள் கலங்கி நிற்கிறார்கள், துயரம் அடைகிறார்கள், தொல்லைக்கு ஆளாகிறார்கள் என்பதை எல்லாம் கருத்தில் கொண்டு ஆராய்ந்து பார்த்து, தக்க நேரத்தில் இந்தச் சட்டத்தை கொண்டு வந்ததற்காக என் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொண்டு, மேலும் இருக்கின்ற சிக்கலை தீர்க்க இந்த அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும், அதற்கான நிவாரணத்தை இந்த அவையில் அறிவிக்க வேண்டும் என்று கேட்டு, இந்த சட்ட முன்வடிவை வரவேற்று, என் வார்த்தையை முடிக்கிறேன்.

<u>திரு. கே. எ. வகாப் :</u> தலைவரவர்களே, கடன் பட்ட விவசாயிகளுக்கு தற்காலிக நிவாரணம் சட்ட முன் வடிவை நான் வரவேற்கிறேன். இந்த நாட்டில் இப்போது உள்ள வறட்சி நிலையில் விவசாயிகள் எப்படி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் துன்பத்தை உணர்ந்த நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்படி ஒரு சட்டத்தை அறிவித்து இருப்பது விவசாயிகள் உள்ளத்தில் பால் வார்த்தது போல் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். கடன் என்று சொல்லப் படுகின்ற கடலில் தத்தளித்துக்





கொண்டு இருக்கிற ஏழை விவசாயிகளுக்கு இது ஒரு கட்டு மரமாக நம் அரசால் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் உண்மையில் இது ஒரு தற்காலிக நிவாரணம் என்று கூறப்பட்டு இருக்கிறது. இதை ஒரு நிரந்தர நிவாரணமாக ஆக்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லை என்றால் கட்டு மரத்தை வழியில் பிடுங்கிக் கொண்டால் மறுபடியும் கடலில் விழுந்து சாக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதுவும் தமிழகத்தில் இருக்கிற விவசாயிகள் எதற்கும் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறவர்கள். அவர்கள் வாழ்விற்கும் சாவிற்கும் குடும்பத்தில் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு வசதி படைத்த விவசாயியாக இருந்தாலும் கடன்பட்டுத்தான் எதையும் செய்ய வேண்டியிருக்கிறது.

இங்கே மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் குறிப்பிட்டது போல் அங்கே விவசாயிகள் ஒவ்வொன்றிற்கும், ஏர் உழும்போது, விதை விதைக்கும்போது, களை எடுக்கும் போது இன்னும் அறுவடைக்கும் கடன் வாங்க வேண்டி யிருக்கிறது. ஆனால் அறுத்ததை வீட்டிற்குக் கொண்டுவர முடியாத நிலையில் அதை வியாபாரிகளிடத்தில் மண்டிகளின் முதலாளிகளிடத்தில் வாங்கிய கடனுக்காக அங்கே கொடுக்கின்ற நிலைதான் இந்த நாட்டு விவசாயிகளுக்கு இருக்கிறது. இதைப் போக்க ஒரு நிரந்தரமான திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுடைய வாழ்வு நெருப்புக்கு மத்தியில் வாழ்கிறவர்களைப்போல தினம் தினம் கஷ்டப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறது. இன்றைய தினம் அவர்களுடைய பொருளாதார நிலை எப்படி அமைந்திருக்கிறது என்றால் அவர்களைச் சுற்றி இருக்கிற வட்டிக்காரர்கள், மண்டி வியாபாரிகள், பெரிய நில உடைமையாளர்கள் இவர்களிடையே அவர்கள் தினம் தினம் வேதனைப்படுகிற நிலையில் தான் உள்ளது. இன்றைய தினம் தமிழ்நாட்டில் மிக மிக அதிகமாக வளர்ந்து வருவது வட்டிக் கடைகள் தான். அவைகள் கூட சட்ட ரீதியாக செயல்படுகின்றனவா என்றால், நிச்சயமாகக் கிடையாது.

உதாரணத்திற்கு அண்மையில் சென்னையில் நடந்த நிகழ்ச்சியை நாம் பார்க்க முடியும். ஆயிரம் ரூபாய் வைத்து ஒருவன் வட்டிக் கடை வைத்தால் ஆறு மாதத்திற்குள் 5 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க முடிகிறது. ஒரு லட்சம் முதல் போட்டால் ஒரு வருஷத்தில் மூன்று லட்சம் ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள். பரிதாபமான விவசாயிகள் அப்படிப்பட்டவர்களிடம் சிக்கிக்கொண்டு இருக்கிறார்கள். சட்டத்தைக் காட்டி கோர்ட்டுக்கு செல்லுகிற விவசாயிகள் எத்தனை பேர் இருக்க முடியும்? நூறு பேரில் ஒருவர் இருவர் தான் இருக்க முடியும். நிலத்திலோ, கடையிலோ, வியாபாரத்திலோ வீட்டிலோ முதலீடு செய்வதை விட 50 ஆயிரம் போட்டால் 50

லட்சம் சம்பாதிக்கலாம் என்ற நிலையில் வடநாட்டினர் நடத்துகிற வட்டிக்கடைகள் அல்லாமல் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே நினைக்கக் கூடிய் நிலையை தமிழகத்தில் பார்க்கிறோம்.

ஜனப் பெருக்கத்தை விட அதிகமாகப் பெருகிக் கொண்டு வருவது இந்த வட்டிக் கடைகள்தான். இதைக் கட்டுப் படுத்த வேண்டும். அதைக் கட்டுப் படுத்தினால் விவசாயிகளைப் பாதுகாக்க முடியும். அதை விட்டு விட்டால் வங்கிகளில் கொடுக்கப் படுகின்ற கடன்களையும் வரையறுத்து வைத்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுப்பது இல்லை. அதன் காரணமாக அதிக வட்டிகளை வாங்கு கிறவர்களிடம் விவசாயிகள் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. அதைக் கேட்கவே நமக்குப் பயமாக இருக்கிறது. 5 ரூபாய் 10 ரூபாய் வட்டி என்று சொல்கிற அளவு நாள் கணக்கில் கூட வட்டி கட்ட வேண்டிய அமைப்பு இருக்கிறது. ஆகவே, வங்கிகள் விவசாயிகளுக்கு நகை மீது 4 ஆயிரம் 5, ஆயிரம் என்ற அளவு வரம்பு வைத்து அந்த அளவில் பணத்தைக் கடனாக கொடுக்க அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

இப்போது தாற்காலிகமாக வந்திருக்கிற நிவாரணத்தை நிரந் தரமாக்கவேண்டும். அரசாங்கம் அதற்கான முயற்சிகளை எடுத்து இந்த நாட்டில் இருக்கிற விவசாயிகளின் வாழ்க்கையை மேலும் வளமானதாக்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று முடிக்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர் களே. இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் இன்னும் சில மாற்றங்களை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் என்னுடைய ஒரு சில கருத் துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் விவசாயிகள் பட்டிருக்கிற கடனைத்தான் ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைத்திருக்கிறோம். ஆனால் பஞ்சப் பிரதேசங்களில் குறிப்பாக இராம நாதபுரம் போன்ற மாவட்டங்களில் விவசாயிகளுக்குக் கடன் ஏற் பட்டது மாத்திரம் அல்ல. அன்றாட வாழ்க்கை நடத்தவே அவர் களுக்கு பிரச்சனையாக இருக்கிறது. சிறு நில விவசாயிகள் தங்க ளிடம் உள்ள அரை குறை நிலங்களை பெரிய நிலச்சொந்தக் காரர்களுக்கு விற்று விட்டுப் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட அப்படிப்பட்ட மக்கள் தரும் நிலத்தை அரை விலைக்கும் கால் விலைக்கும் வாங்கிவிடுகிறார்கள். இதனால் ஏழைகள், பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்களிடம் உள்ள சிறிய அளவு நிலங்களை விற்றுவிட்டுப் போக நேரிடுகிறது. இதைச் சமாளிக்க வேண்டும் என்றால், வெறும் கடன் நிவாரணம் மட்டும் போதாது. இப்போது இருக்கிற நில வள வங்கிகளின் மூலமாக இப்படி நிலத்தை விற்க முன் வருகிறவர்கள் நிலத்தைப் பெற்று கடனாக அவர்களுக்குத் தேவைப்படுகின்ற பணத்தைக் கொடுக்க அரசு



முன் வந்தால் அது சாலச் சிறந்ததாகும். ஆனால், நிலத்தை improve செய்யத்தான் கடன் கொடுக்கப்படுகிறது இப்போது. அந்த நிலத்தை மேலும் மேலும் improve பண்ணத்தான் கடன் கொடுக்கப்படுகிறது. இப்படி improve செய்ய எங்கே அவர்களிடம் வசதி இருக்கிறது? அவர்களால் என்ன செய்ய முடியும்? இதையே விற்று தங்கள் அரைப் பட்டினியை தீர்க்க வழிவகை கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டிருக்கிற நிலையில் விவசாயிகள் இருக்கும்போது, அதை வைத்து நிலத்தைப் பறிக்க பணக்காரன் தயாராக இருக்கும்போது, அவர்களுக்கு நில வள வங்கிகளின் மூலமாக அவர்களுடைய நிலத்தை வாங்கிக் கொண்டு அல்லது அடமானமாகப் பெற்றுக்கொண்டு உடனடியாக குறுகிய காலத்தில் பணம் கொடுக்க வசதி செய்து தருவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு நிவாரணம் என்று கருதி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் ஒருவருக்குச் சலுகை, மற்றொருவருக்கு பாதிப்பாக இருக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன் ஒத்திவைப்பு என்ற காரணத்தால் மாவட் டங்களில் கோர்ட்டுகளில் வேலை குறைந்திருக்கிறது. வக்கீல்கள் வேண்டும் என்றால் ஒரு மாதம் சம்பாதிக்கிறதை வைத்துக் கொண்டு இரண்டு மூன்று மாதம் வாழலாம். ஆனால், இந்த வக்கீல் குமாஸ்தாக்கள் படாத பாடு பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த வக்கீல் குமாஸ்த்தாக்கள் வாழ்வதற்கு ஏதாவது வசதி செய்து.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மில்லில் (லாக் அவுட்) லே ஆப் ஆகும் போது எப்படி முதலாளிகள் தொழிலாளர் களுக்குக் கொடுக்கிறார்களோ அது போல் வக்கீல்கள் இப்படிப்பட்ட நேரத்தில் வக்கீல் குமாஸ்த்தாக்களுக்கு ஏதாவது வசதி செய்து கொடுக்கலாம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: வக்கீல்பாடே திண்டாட்டமாக இருக்கிறபோது வக்கீல் குமாஸ்த்தாக்களுக்கு எங்கே நிவாரணம் கொடுக்க முடியும்? அதுவும் Muffasil கோர்ட்டுக்களில் இருப் பவர்கள் ஒரு வேலைக்கும் போக முடியாது. வருமானம் கிடையாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஊரில் ஒரு பழமொழி சொல்லுவார்கள். அந்தப் பழமொழிப்படி ஊர் இரண்டு பட்டால் யாருக்கோ கொண்டாட்டம் என்று. ஊர் ஒன்றாகி விட்டால் சிலருக்கு பிழைப்பு கெடுகிறது. ஒரு சாராருக்கு நல்லது கிடைத்தால் இவ்வாறு ஆகிறது என்பதைப்போல அம்மையார் வாதம் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். ஊர் இரண்டு பட்டாலும் ஒன்று பட்டாலும் வக்கீலுக்கு நிறைய வேலை இருக்கும். ஆகவே, இப்படி கஷ்டப்படுகிற குமாஸ்தாக்களுக்கு எந்த அளவு நிவாரணம் அளிக்க முடியுமோ அதைச் செய்ய வேண்டும். அரசாங்கம் கடனையோ தனி நபர் ஜாமீனில் வங்கிகள் மூலமாகவோ 1000—2,000 கடனைக் கொடுத்தால் பின்னால் வசூலித்துக் கொள்ளலாம்.

(முற்பகல் 10—30)

அவர்களுக்குக் கடன் கொடுப்பதும் தனி நபர் ஜாமீனில்தான் கொடுக்க வேண்டும். ஏனென்றால், பெரும்பாலும் அவர்களுக்கு சொத்து பத்து ஒன்றும் இருக்காது. ஆகையால் தனி நபர் ஜாமீனில் 300, 400 ரூபாய் அரசாங்க வங்கிகளிலிருந்து கடனைக் கொடுத்தால் பின்னால் வசூல் செய்து கொள்ளலாம். அப்படியே முடியாவிட்டாலும் "பாட் டெட்டில்" சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான்; வேறு வழியில்லை. ஆகவே, இந்த மசோதாவில் விவசாயிகளுக்கு உதவி செய்வது போல ஏழை வக்கீல் குமாஸ்தாக்களுக்கும் அரசாங்கம் உதவி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த மசோதா சரியான நேரத்தில் கொண்டு வரப்பட்ட அவசர சட்டத்திற்குப் பதிலாக கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டமானது ஓராண்டுக் குத்தான் கடனை நிறுத்தி வைக்க வகை செய்கிறது.

அது மட்டுமல்ல. குத்தகை பாக்கியை, 1974 ஜூன் 30 முடிய உள்ள பசலி பாக்கியை வசூல் செய்யக் கூடாது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு குத்தகை 1975 ஜூன் மாதத்தில்தான் வருகிறது. அந்தப் பாக்கியை வசூல் செய்யலாம் என்று இந்த சட்டத்தில் வியாக்கியானம் ஏற்பட்டு, அதற்கான நடவடிக்கைக்கு போகக் கூடும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டமானது இன்றைக்கு சாதாரண விவசாயிகள்,—விற்பனை வரி, மற்ற வருமான வரி எதுவும் செலுத்தாதவர்கள்—ஓராண்டு மட்டும் கடனை செலுத்த வேண்டியதில்லை என்று சொல கிறது. அதனால் மட்டும் அவர்களுக்குச் சரியான பலன் அளிக்க முடியுமா என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சரியான பலன் கிடைக்க வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தில் ஓராண்டு கடனை நிறுத்தி வைக்க வேண்டும் என்றிருப்பதை 3 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று திருத்தி அமைக்க வேண்டும். ஜனவரி 16 வரை கடனை வசூல் செய்யக் கூடாது என்றால் கடன் கொடுத்தவர்கள் எப்போது ஜனவரி 16 வரும் என்று காத்திருந்து, வந்தவுடன் வசூலாகக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கி விடுவார்கள். அப்படியானால் இப்போது இருப்பதை விட விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.



அதுமட்டுமல்ல, இன்றைக்குக் கடன் கொடுப்பவர்கள் கொடுத்த தொகைக்கு மட்டும் நோட்டோ பத்திரமோ எழுதி வாங்குவது கிடையாது. 100 ரூபாய் கடன் கொடுத்தால் 400,500 ரூபாய் என்று நோட்டோ பத்திரமோ எழுதிக் கொள்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் பரிசீலனை செய்து வாங்கிய கடனை மட்டும் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வாங்கிய பணத்திற்குமேல் வட்டி செலுத்தியிருந்தால் அந்தக் கடனையே ரத்து செய்துவிட வேண்டும்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்று உத்தரப் பிரதேசத்தில் ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அரிசனங்கள், மலைவாழ் மக்கள் வாங்கிய கடன் எதுவாக இருந்தாலும் அந்தக் கடனை வசூல் செய்ய அவர்கள்மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று உத்தரப் பிரதேசத்தில் சட்டம் போட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் வசூல் செய்யப் போனவர்களை கைது செய்திருப்பதாக இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் பத்திரிகையில் பார்த்தேன்.

அதேமாதிரி, இங்கும் செய்ய வேண்டும். சாதாரண ஏழை விவசாயிகளுக்கு நிலம் எதுவும் இருக்காது. அவர்களுக்கு நிலமோ புலமோ இல்லாததால் அவர்களை நம்பி நோட்டோ பத்திரமோ வாங்கிக் கொண்டு யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள். கூட்டுறவு சங்கங்களிலும் அவர்களுக்குக் கடன் கிடைக்காது. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் கொடு வட்டிக்காரர்கள் கடன் கொடுக்கிறார்கள். காரணம், எப்படியாவது அடித்துப் பிடித்து கடனை வசூல் செய்து விடலாம் என்று அவர்கள் துணிந்து கொடுக்கிறார்கள். ஒன்றுந் தேதி சம்பளம் வாங்கக் கூடியவர்களாக இருந்தாலும், வேறு தொழில் செய்யக்கூடியவர்களாக இருந்தாலும் அடித்துப் பிடித்து எப்படியாவது வசூல் செய்து விடுகிறார்கள். அப்படிச் செய்வதை அனுமதிக்கக்கூடாது. அப்படி வசூல் செய்வது சட்ட விரோதமான செயல் என்று உத்தரப் பிரதேசத்தில் சட்டம் போட்டிருப்பதைப்போல இங்கும் போட்டு, வசூல் செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல. கடன் கொடுத்தவர்கள் ஒன்றுக்கு நான்காக நோட்டோ பத்திரமோ எழுதி வைத்துக் கொண்டு, ஏழை விவசாயிகளைத் தொந்தரவு செய்யும் நிலைமை இருக்கிறது என்று ஏற்கெனவே நான் சொன்னேன். அதைச் சரியான முறையில் விசாரணை செய்து, அது சரியா, இல்லையா என்பதைக் கண்டறிந்து, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கத் தக்கவகையில் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

இந்த மசோதாவில் ஓராண்டுக்குக் கடன் வசூலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று இருப்பதை 3 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று திருத்தம் செய்ய வேண்டும்.

அரிசனங்கள், மலைவாழ் மக்கள் வாங்கிய கடனை—கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இந்த நோக்கங்கள் நிறைவேறும் வண்ணம் இந்த மசோதாவை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்

***திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கின்ற முறையில் அமைந்திருக்கிற இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதே நேரத்தில் இதிலே இருக்கிற சில முரண்பாடுகளையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதில் டெபனிஷன் கொடுத்திருப்பது, விவசாயிகள் என்றால்,

'agriculturist' means a person who owns an interest in agricultural land, and who, by reason of such interest, is in possession of such land or is in receipt of the rents or profits thereof and shall include a lessee, etc., etc.

இந்த டெபனிஷனில் ஏற்பட்டிருக்கிற முரண்பாடுகளின் காரணமாக வரவிருக்கிற விளைவுகள் என்னவென்றால் வசதி படைத்தவர்கள், வியாபாரிகள், மற்றும் சிட்டி ஃபோர்மேன் இவர்களுக்கெல்லாம் கூட சொந்தமாக நிலம் இருந்தால் இந்த சட்டத்தின் அடிப்படையில் நன்மைகள் கிடைக்க வாய்ப்புகள் இருக்கின்றன. உண்மையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் யாருக்கு நன்மை செய்ய வேண்டிய தேவை இல்லையோ அவர்களுக்குக் கூட இந்தச்சட்டத்தின் டெபனிஷனைப் பார்க்கும்போது நன்மை வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு நன்மை வருவதில் நமக்கு வருத்தமில்லை. ஆனால் நாம் யாருக்குச் செய்ய வேண்டாம் என்று நினைக்கிறோமோ அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய வகையில் சட்டத்தின் டெபனிஷன் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மற்றவர்களின் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, சொந்தக்காரர்களுக்கு குத்தகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பெயரில் நிலம் இல்லை. அதனால் உண்மையாக நாம் நன்மை செய்ய வேண்டிய ஏழை விவசாயிகளுக்கு பலன் கிடைக்காமல் போகிறது. ஏனென்றால், அவர்கள் பெயரில் குத்தகைக்கான ரிகார்டுகள் கூட இருக்காது. யார் யார் நிலத்தையோ அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் பெயர் கணக்கில் வராது. காரணம் அவர்களிடம் சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகள் இருக்காது. ஆகையால் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு நன்மை இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதனால் உண்மையிலேயே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கும் இந்தச் சட்டத்தின் நன்மை கிடைக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டத்தில் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, இந்த சிட்டி ஃபோர்மென் பெயரில் நிலம் இருந்தால், இந்தச் சட்டத்தினால் அவர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கடனை மறுப்பார்கள். ஆகையால் இந்தச் சட்டத்தின் அடிப்படையில் விவசாயிகள் அந்தக் கணக்கிலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கடன்களுக்கு இந்தச் சட்டத்தில் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. விவசாயிகள் பல்வேறு கடன்களை அரசாங்கத்திலிருந்து பெற்றிருப்பார்கள். நில வள வங்கிகளிலிருந்து கடன் பெற்றிருக்கிறார்கள். அதைப்போல "சாயில் கன்சர்வேஷன் ஸ்கீமில்" கடன் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குக் கூட விதிவிலக்கு கொடுத்தால்தான் நம்முடைய இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய நம்முடைய அம்மையார் அவர்களும் மற்றுமுள்ள சில நண்பர்களும் கூறியதைப் போல இன்றைக்கு வக்கீல்களும் வக்கீல் குமாஸ்தாக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு நீதி மன்றங்களில் ஓராண்டுக்கு தொழில் இல்லாத ஒரு இக்கட்டான நிலை ஏற்படும் என்பதை அரசாங்கம் உணரும். வக்கீல்களில் சிலர் வசதி படைத்தவர்களாக இருப்பார்கள். இந்தத் தொழில் மூலம் மட்டுமல்லாமல் வேறு வகைகளில் வருமானம் உள்ளவர்களும் இருப்பார்கள். அவர்களைப் பற்றிக் கவலை இல்லை. ஆனால் இந்தத் தொழிலை மட்டும் நம்பி இருக்கிற சாதாரண வக்கீல்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். பல்வேறு வகைகளில் இந்த நாட்டு மக்களுக்கு நிவாரணமளிக்கும் சட்டங்களையும் திட்டங்களையும் கொண்டுவந்தாலும் இதுவரையில் வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்களுக்கு எந்தவிதமான நிவாரண சட்டமும் கொண்டுவரப்படவில்லை. இப்போதாவது அவர்களுக்கு இந்த சட்டத்தின் பயன் கிடைக்கும் வகையில், அவர்கள் வாழ்க்கை வளம்பெறத் தக்க வகையில் கடன்களும் மற்ற சலுகைகளும் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு குமாஸ்தாக்களையும் மறந்துவிடக் கூடாது. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக, என். ஜி. ஓ. க்கள் 1-ஆம் தேதி அல்லது 2-ஆம் தேதி சம்பளம் வாங்கினால் 10-ஆம் தேதி வரைக்கும் கூட வாங்கிய பணம் இருப்பதில்லை. தீர்ந்து போகிறது. கடன் கொடுத்த வட்டிக்காரன் 1-ஆம் தேதியே கேட்டில் வந்து இருந்து வாங்கிப் போய்விடுகிறான். அவர்கள் வாங்குகிற சம்பளத்தில் பெரும் பகுதியை வட்டிக் கடைக்காரனுக்குத்தான் கொடுக்கிறார்கள். பத்தாந்தேதிக்குப் பிறகு அவர்கள் வட்டிக் கடைக்காரர்களை நம்பித்தான

வாழ்க்கை நடத்த வேண்டியதாக இருக்கிறது. இவர்களுக்கும் வழிவகை செய்ய வேண்டுமென்ற அளவில் கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா: உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற விவசாயிகள் கடன் ஒத்தி வைப்பு மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

இன்றைய தினம் நாட்டில் இருக்கக்கூடிய வறட்சி காரணமாக கடன் பட்டிருக்கிற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் அரசு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இதில் ஒரு வருஷத் தவணை என்று சொல்வது பொருத்தமானதாக இல்லை என்பது என் கருத்தாகும். ஒரு வருஷம் என்பதற்குப் பதிலாக 3 வருஷங்கள் என்று போட்டு பின்னர் இதை எப்படி தவணை முறையில் வசூல் பண்ணுவது என்பதைப் பற்றியும் முடிவு செய்வது மிகவும் உதவியாக இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தில் குத்தகையை 1974 ஜனவரி மாதம் 30-ந் தேதி வரை பாக்கிகளை வசூலிக்கக் கூடாது என்று சொல்லப் படுகிறது. இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கக் கூடிய வறட்சி, இந்த ஆண்டு விளையாமல் இருக்கக் கூடிய நிலை இதை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு பார்ப் பார்களேயானால் சட்டத்தில் உள்ளபடி இந்த வருஷம் தரவில்லை என்பதற் காக கோர்ட்டுகளுக்குப் போகக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே 1975 மார்ச் 31-ஆம் தேதி வரை என்று போட்டு விட்டால் இந்த ஆண்டுக்காகவும், இந்த பசலிக்காகவும் நடவடிக்கை எடுக்க முடியாது. இந்தப் பாதுகாப்பை விவசாயிகளுக்கு இந்த ஆண்டு பசலிக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் தனிப்பட்ட லேவாதேவிக் காரர்களிடம் பட்டிருக் கின்ற கடன்களைவிட அதிகமாக கூட்டுறவு நாணயச் சங்கங்களிடம்தான் கடன் பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 14 கோடி ரூபாய் கடனாக கூட்டுறவு நாணயச் சங்கங்களிடம் இருந்து பெற்றுத்தான் விவசாயம் செய்திருக்கிறார்கள். இந்த வருஷம் பருவமழை தவறியது, காலதாமதமாகத் தண்ணீர் விட்டது, காலத்தில் தண்ணீர் விடமுடியாத நிலை ஏற்பட்டது என்பவற்றின் காரணமாக இந்த வருடம் அந்த மாவட்டத்தில் மிகக் குறைவாக விளைந்திருக்கிறது. அதன் காரணமாக, அந்த மாவட்ட விவசாயிகளால் இந்த ஆண்டு அந்த 14 கோடி ரூபாய் கடனைத் திருப்பித் தரமுடியாத நிலைமைதான் இருக்கிறது.

ஆகவே, கூட்டுறவு நாணயச் சங்கங்களின் கடனுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களும் அந்தக் கடனை இந்த ஆண்டு தள்ளி வைத்து, பிறகும் தவணை முறையில் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். விஷயம் தெரிந்த ஒரு சிலர் ரெவின்யூ அதிகாரிகளிடம்



விளையவில்லை என்று சர்டிபிகேட் வாங்கி சென்டிரல் பாங்கில் கொடுத்து ஒத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பல சிறு விவசாயிகளால் இந்த சர்டிபிகேட்டை வாங்க முடியவில்லை. இந்தச் சட்டத்தின் மூலமாகவே இந்தக் கடன்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி ஒன்றும் சொல்லப் படவில்லை. விவசாயத் தொழிலாளர்களும் கடன் பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீதும் இந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்காதிருக்க தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதாகத் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கனம் உதவி சபா நாயகர் அவர்களே, அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற வகையில்—கவர்னர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை இந்த மன்றமும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாக பேரவைமுன் வந்திருக்கிற சட்ட முன்வடிவை நான் மனப் பூர்வமாக ஆதரிக்கின்றேன்.

தமிழகத்தில் வறட்சியின் கொடுமையால் பாதிக்கப்பட்டிருக்கிற விவ சாயிகள் வைத்திருக்கக் கூடிய பயிர்கள் எல்லாம் காய்ந்து போய்விட அனுமதிக்கக் கூடாது என்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலவள வங்கி, கூட்டுறவுத் துறையின் மூலமாக உடனடியாக விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கருதி, பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாக ஏற்கனவே இருக்கிற கிணறுகளை ஆழப் படுத்தி மகசூல்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதி 5 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள்.

என்றாலும், வறட்சியினால் விவசாயிகள் ஏற்கனவே அதிகம் பாதிக் கப்பட்டிருப்பதனால் அவர்கள் தனிப்பட்டவர்களிடம் பெற்றுள்ள கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் கஷ்டப் படுவார்கள் என்பதற் காகத்தான் அரசாங்கமே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகின்ற இந்த நேரத்தில், சட்டத்தில் இருக்கக் கூடிய சில குறைபாடுகளையும், அதை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் நான் கூறாமல் இருக்க முடியாது.

ஒரு விவசாயி இன்கம் டாக்ஸ் அஸ்ஸஸியாக இருந்தால் இந்தச் சட்டத்தின் மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காது. அதுபோல ஒரு விவசாயி ஷெட்யூல் பாங்கில் அல்லது கூட்டுறவு வங்கியில் அல்லது கோவாப்ரேடிவ் சொஸைடியில் கடன்வாங்கியிருந்தால்அவனுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பு கிடையாது. அவற்றுக்கு இந்தச் சட்டத்தில் இருந்து விலக்கு கொடுத்திருக்கிறார்கள். இது சரியல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

காரணம் கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி அல்லது ஷெட்யூல் பாங்க்காக இருந்தாலும் சரி, வேறு எந்த வங்கிகளின் மூலம் வாங்கியிருந்தாலும் சரி இந்த விவசாயிகளுக்கும் இந்த ஆண்டு மகசூல் கிடைக்கப்போவது கிடையாது. காரணம் எல்லா விவசாயிகளுடைய பயிர்களும் தான் காய்ந்துபோய் கிடக்கின்றன. என்றாலும் நிலவள வங்கியில் இருந்தோ, ஷெட்யூல் பாங்குகளில் இருந்தோ, கூட்டுறவு சங்கங்களில் இருந்தோ கடன் பெற்றவர்களின் மீது அந்த ஸ்தாபனங்கள் இன்றைக்கு சூட் பைல் பண்ணலாம். இவர்களது நிலத்தை ஏலத்திற்குக் கொண்டுவரலாம். ஜப்தி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். காரணம் இன்றைக்கு நாம் கொண்டு வந்திருக்கிற சட்டம் தனிப்பட்டவர்களிடம் இருந்து வாங்கியிருக்கக்கூடிய கடனில் இருந்து மட்டும் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. விவசாயிகள் என்றால் எல்லோரும் ஒன்றுதான். தனிப்பட்டவர்களிடம் கடன் வாங்கியிருக்கக்கூடிய விவசாயி—கூட்டுறவு வங்கிகளில் இருந்து கடன் வாங்கியிருக்கக் கூடிய விவசாயி என்பதாக எல்லாம் பிரித்து வைத்து நாம் சட்டம் இயற்றத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

அடுத்து, இன்கம்டாக்ஸ் அஸ்ஸெஸியாக இருந்தால் அவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தாது என்று இருக்கிறது. இன்றைக்கு 6,000 ரூபாய் வருமானம் இருந்தால் போதும். அவரும் இன்கம்டாக்ஸ் அஸ்ஸெஸியாக ஆகிறார். அரசாங்க உத்தியோகத்தில் அல்லது வேறு ஏதாவது வேலையில் இருக்கக்கூடியவர்களாக இருந்தாலும் மாதம் 400 ரூபாய் சம்பளம் என்றால் இன்கம்டாக்ஸ் அஸ்ஸெஸியாக ஆகிவிடுவார்கள். இவர்களால் மட்டும் இந்தக் கடுமையான வறட்சி நிலைமையில் விவசாயத்திற்காக வாங்கிய கடனை எப்படித் திருப்பித் தர முடியும்? ஆகவேதான் Income-tax assessees paying a tax of more than Rs. 10,000 or 15,000 என்று சொல்லிவிட்டு, மற்ற இன்கம்டாக்ஸ் அஸ்ஸெஸிகளுக்கு எல்லாம் இந்தச் சட்டத்தின் மூலம் பலன் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும். ஆகவே, அரசு சரியான ஸ்டேஜில் அமெண்டுமெண்டு மூலம் இவர்களுக்கும் சரி, கூட்டுறவு வங்கிகள், ஷெட்யூல் பாங்குகள், கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் இருந்து கடன் வாங்கியவர்களுக்கும் இந்தச் சட்டம் பாதுகாப்பாக அமையக் கூடிய வகையில் திருத்தம் செய்ய வேண்டுமென்று நான் ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக கிராமங்களில் பார்த்தால் தனிப்பட்டவர்கள் யாரும் விவசாயிகளுக்குக் கடன் தருவது கிடையாது. நூற்றுக்கு 90 சதவீதம் அவர்கள் பெறுகிற கடன்கள் எல்லாம் கூட்டுறவு சங்கங்களில் இருந்துதான் கிடைக்கிறது. கொஞ்சம் எங்களைப்போல் ஷெட்யூல் பாங்குகளோடு தொடர்பு உடையவர்களுக்கு அந்தப் பாங்குகளில் இருந்துகடன் கிடைக்கிறது. தனிப்பட்டவர்கள் யாரும் விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதில்லை. அரசு எந்த நேரம் எப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருமோ என்கிற அச்சம் அவர்களுக்கு இருந்துகொண்டுதான் இருக்கிறது. அப்படியே கொடுத்தார்கள் என்றாலும் எதிர் நடை கிரயம் வாங்கிக் கொண்டுதான் கொடுக்கிறார்கள். இரண்டாயிரம் கடன் கொடுத்தால் 2 காணி நிலத்தை கிரயம் எழுதிக் கொடுக்கச் சொல்லிவிட்டுக் கொடுக்கிறார்கள்



இந்த இரண்டாயிரத்தைத் திருப்பிக் கொடுக்கிறபோது அந்த இரண்டு காணி நிலத்தை திரும்ப அவர்களது பெயருக்கு மாற்றுகிறார்கள். அது வும் இல்லையென்றால் இரண்டாயிரம் கொடுத்துவிட்டு ஐந்தாயிரம் எழுதி வாங்கிக் கொள்கிறார்கள். இந்தச் சட்டப்படி இந்த ஆண்டு கடனைக் கொடுக்கவில்லை என்றால் அடுத்த ஆண்டு ஐந்தாயிரத்திற்கு சூட் பைல் பண்ணிவிடுகிறார்கள். கூட்டுறவு சங்கங்களில் இருந்தோ, ஷெட்யூல் பாங்குகளில் இருந்தோ கடன் பெறும்போது இதுபோல இரண்டாயிரம் கொடுத்துவிட்டு ஐந்தாயிரத்திற்கு அவர்கள் எழுதி வாங்க முடியாது. ஆனால் அங்கேயுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்—மணிலெண்டர்ஸ் தான் இதுபோல செய்கிறார்கள். ஆகவே இதுபோல தனியார்கள் பணம் கடன் கொடுக்கிறபோது அவர்கள் யார் யாருக்கு எவ்வளவு பணம் எப்போது கடன் கொடுத்தார்கள் என்பதை ரிஜிஸ்தர் பண்ணச் சொல்ல வேண்டும். பின்னால் கேஸ் என்கிறபோது இது எவிடென்சுக்கு வரும்.

இதனால் எல்லாம் வக்கீல்களுக்கு வேலையில்லாது போய்விடுமோ என்று யாரும் அஞ்ச வேண்டியதில்லை. பேரவைத் துணைத் தலைவர் வக்கீல் ஆனதால் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எங்களுக்கு வேலை இருக்கிறது. இது இல்லை என்றாலும் வேறு வேறு வேலைகள்தான் வந்து கொண்டே இருக்கின்றனவே.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நானும் வக்கீல் தொழிலைவிட்டு பத்து வருஷங்களாகி விட்டன. ஆனாலும் இதனால் எல்லாம் வக்கீல்களிடையே அன்எம்பிளாய்மெண்டு வந்துவிடும் என்று யாரும் நினைக்க வேண்டாம். * * * * *

நான் சொன்ன கருத்துகளின் அடிப்படையில் உடனடியாக திருத்தம் செய்யாவிட்டாலும் எதிர்காலத்திலாவது இது போன்ற நன்மைகள் எல்லா விவசாயிகளுக்கும் வரக் கூடிய அளவில் நாம் கொண்டு வருகிற சட்டங்களை அமைக்க வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்கீல் சமுதாயத்தைப் பற்றி சொன்னவைகள் எல்லாம் அவைக் குறிப்பில் இருப்பது நல்லது அல்ல. அவைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: இது போன்று மிகவும் உபயோகமாக இருக்கக் கூடிய மசோதாவை கொண்டு வந்ததற்காக நான் இந்தச் சர்க்காரைப் பாராட்டுகிறேன். இந்த மசோதா குறிப்பிடத்தக்க அளவுக்கு

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய ஒன்றாக இருந்தாலும் இதற்கு இந்தச் சபையிலேயே மறு புறத்தில் இருந்து எதிர்ப்பு வருவதையும் பார்க்கிறோம். வக்கீல்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டால் என்ன செய்வது என்றார்கள். வக்கீலை விட வக்கீல் குமாஸ்தாக்களுக்காகப் பேசினார்கள். வேலையில்லாவிட்டால் கடை வைப்பது? இன்னொரு விதமான எதிர்ப்பு இனிமேல் யாரும் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கமாட்டார்கள் என்பதாகும். இதுபோல இரண்டுவிதமான எதிர்ப்பு இருக்கிறது உண்மையாக விவசாயிகள் வட்டிக்கூட கொடுக்க முடியாத நிலையில் இருப்பதை உணர்ந்திருப்பவர்கள் யாரும் இதுபோல சொல்வது கிடையாது.

இந்த மசோதா சட்டமாவதனால் பிரயோஜனம் இருக்கும் என்றால் அது ஒரு குறிப்பிட்ட அளவில்தான் இருக்கும். காரணம் நாம் இப்போது இந்தக் கடன் வசூலை ஒரு வருடத்திற்குத்தான் ஒத்திவைக்கிறோம். ஏற்கெனவே 30 சதவீதம், 40 சதவீதம் வட்டி என்று பேசிக் கடன் கொடுத்திருக்கிறார்கள். சட்டப்படி 9 சதவீதம்தான். இன்னும் கந்துவட்டி இருக்கிறது. நிலங்கள் அல்லது வேறு பண்டங்கள் ஆகியவற்றை அடமானம் வைத்தும் கடன் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் ப்ரோநோட்டாக ஒன்றுக்கு மூன்று மடங்கு எழுதப்பட்டு வாங்கிக் கொண்டிருக்கிற கடன்களும் உண்டு. நம் மாநிலம் ஒன்றில்தான் மணிலெண்டர்களைக் கட்டுப்படுத்தக் கூடிய சட்டம் கிடையாது. வேறு ஒவ்வொரு மாநிலத்திலும் மணிலெண்டர்கள் யார், யாருக்கு எப்போது எந்த அளவு கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் ரிஜிஸ்தர் செய்ய வழிமுறை இருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே உங்கள் அனுமதியுடன் படிக்கிறேன்.

" Registration of money lenders is compulsory in M.P., Bihar Bombay, East Punjab and Bengal. Failure to register debars a money-lender from seeking legal aid for the recovery of his dues. Penalties are also provided for carrying on money lending business without licence . . . .

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: We are not discussing about money-lenders here.

நீங்கள் இந்த பில்லைப்பற்றி மட்டும் பேசுங்கள். ஏற்கெனவே நாம் இதை 11 மணிக்குள் முடிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறோம். ஆகவே சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. என். .கே. பழனிசாமி</u>: இப்போது வறட்சியின் காரணமாக நாம் இதுபோல ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறோம். ப்ளானிங் கமிஷனே பத்து வருஷங்களுக்கு ஒரு முறை நம் நாட்டில் இதுபோன்ற வறட்சி வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சி நூற்றாண்டுகளாக காணாத வறட்சி என்று சொல்லப்படுகிறது. நீங்கள் ஜூலை, ஆகஸ்டு மாதம் வரை இந்த வறட்சி இருக்கும் என்று சொல்கிறீர்கள். அப்புறம் மழை பெய்கிறது என்றாலும்



உடனே பயிர் வைத்து கைக்குப் பணம் வந்துவிடப் போவதில்லை. விவசாயிகள் மாட்டிற்குத் தீவனம் கூடக் கிடைக்காது கஷ்டப்படுகிறார்கள் நாம் அவர்களை முதலில் ரீஹாபிலிடேட் பண்ணியாகவேண்டும். மழை பெய்கிறது என்றவுடனே அவர்களுக்கு தக்காவிக்கடன் கொடுத்து விதை வாங்க, உரம் வாங்க—தீவனத்திற்கு வழியின்றி பலர் இப்போது கால் நடைகளை எல்லாம் விற்று வருகிறார்கள்—அவர்கள் மாடு வாங்க எல்லாம் உதவி செய்தாகவேண்டும். உடனடியாக அடுத்த வருஷமே இந்தக் கடனை வசூலிக்க முடியாது. இதை ஒரு 3 ஆண்டு காலம் ஒத்தி வைக்க வேண்டும். அதோடு கூட்டுறவு சங்கங்கள், பாங்குகள் ஆகியவை பெனல்டி இண்ட்ரெஸ்ட் போடாமல் இருப்பதற்கும் வழிவகை செய்தாகவேண்டும்.

நாம் 1938-ம் ஆண்டு சட்டப்படி 1972இல் சட்டம் கொண்டுவந்தோம். கொடுத்த முதலைவிட இரண்டு பங்கு வட்டி கட்டப்பட்டிருந்தால் அந்த முதலையே ரத்து செய்து விடுகிற ஒரு சலுகை ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

(முற்பகல் 11-00)

1954-ம் வருஷத்திலே அதைவிட ஒரு வறட்சி ஏற்பட்டு, இது மாதிரி ஒரு சட்டம் இந்தச் சபையிலே கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் கூட ஒரு வருஷ காலம் ஒத்தி வைக்கப்பட்டது. காரணம், வறட்சி தீர வில்லையென்று, 35 நாள் எக்ஸ்டென்ஷன் கொடுத்தார்கள்.

தவணையிலே கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடிய முறையிலே அச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி முறையில் இதை என் செய்யக் கூடாது என்றுதான் கேட்கிறேன். வட்டியையெல்லாம் 3 வருஷத்திற்கு ஒத்தி வைப்பது, கடனை 3 வருஷம் கழித்து 5 தவணை களிலே கட்டக் கூடிய வகையிலே வழிவகை செய்யக் கூடாதா, இருக்கக் கூடிய கஷ்ட நிலையில். அவர்களுடைய கடனைப் போக்கி, நிவாரணப் படுத்தி, ரீஹேபிலிடேட் செய்து, உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்பது தான் இந்த மசோதாவின் நோக்கம். இவையெல்லாம் இல்லாவிட்டால் எப்படி உணவு உற்பத்தி செய்ய முடியும்.? விவசாயி நன்றாக இருந்தால் தானே? அந்த நோக்கம் இதில் நிறைவேறுகிறதா? நிறைவேறுகிற வகை யில் இந்த மசோதாவைத் திருத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Sir, when I go through this Bill. I am inclined to welcome it in principle. When I go through it rather seriously, I find that there are a lot of loopholes in this.

First of all, in the definition of ' agriculturist ' there is no provision at all for agricultural labour. Agricultural labour will be definitely involved, when the agricuturist is suffering. So, there should be some provision by which if an agricultural labourer who has

[Thiru K. M. Subramaniam] [1975 மார்ச் 11

got slender means has mortgaged or pawned some small article with the Marwari or pawn-broker, he should also be given certain relief.

Secondly, so far as the time is concerned, June 1974 is not the proper time. For example, in Coimbatore district actually 'varatchi'—drought started after June 1974. There should be a provision that it should include up to June 1975 and not 1974.

Coming to exemptions, I have to agree with Mr. Krishnamurthy that private money lenders are very few now. Only pepole who do not know the various ways getting money through Government, Co-operative Societies and scheduled banks go to the private money lenders. It is stated here that even debts due to the State Government is exempt. The State Government is trying to protect the, agriculturists. I can understand about rent. But it is said here 'any sum payable to the State or the Central Government or to any local authority, whether by way of revenue, tax, cess, or loan or otherwise' I am only trying to point out that loan to the State Government should be classified really as a loan.

I am now coming to the other subject. The nationalised banks, scheduled banks are also expected to open branches throughout the villages in order to help the agriculturists. They have advanced loans to the agriculturists. This Bill says that they are exempt. So, the scheduled banks can legally proceed against the borrowers. What is the use of having scheduled banks, co-operative societies, all extending their area of operation in villages ? The very purpose of nationalisation is to help the needy and not the rich. Now all these banks are exempt. This means, this Bill is only to exhibit to the poorer classes that we are doing something but which we are not doing at all. I will finish it by saving that the Bill as published has to be completely remodelled. If you want to help the agriculturists, it is very necessary to do it. I have given certain amendments and they should also be incorporated in the main Bill so that the needy agriculturists may be helped and not the rich.

*திரு. தோப்பூர் திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கான தற்காலிகக் கடன் நிவாரண மசோதாவை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசு இன்றைக்கு விவசாயிகள் பட்டிருக்கிற கடன்களிலிருந்து



1975 மார்ச் 11] [திரு. தோப்பூர் திருவேங்கடம்]

தற்காலிகமாக நிவாரணம் அளிக்கின்ற விதத்திலே, ஒரு மசோதாவை கொண்டு வந்திருப்பது உள்ளபடியே விவசாயிகள் வரவேற்று பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நேற்றையதினம் கூட நம்முடைய முதலமைச்சரவர்கள் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய விதத்திலே தக்காவிக் கடன்கள், ரூ. 500-ல் இருந்து, ரூ. 2,000வரை வழங்குவதாக நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிருர்கள். அது வரவேற்கக் கூடிய ஒன்ருகும். அதேபோல, வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துக் கொண்டு, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும்போது, விவசாய அபிவிருத்திகளைப் பற்றியும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று கூற விரும்புகிறேன். விவசாயிகளுக்குக் கிணறு வெட்ட வறட்சி நிவாரணப் பணியிலே ஒதுக்கியிருக்கிற பணத்திலே கணிசமான தொகையை கிணறுகளை ஆழப்படுத்துவதற்காகக் கொடுக்கவேண்டும். அதற்காகக் கொடுக்கின்ற கடன்களிலே 50 சதவீதம் மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தனியார் கடன்களை மட்டும் ஒத்தி வைப்பதை நாம் இங்கே பார்க்கிறோம். மற்றக் கூட்டுறவுக் கடன்களையும், நிலவள வங்கிகளுடைய கடன்களிலிருந்தும் தற்பொழுது ஓரளவாவது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஜப்பான் போன்ற நாடுகளில் ஓவர் டியூஸே வருவது கிடையாதாம். அந்த அளவு அங்கே கடன்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டு, விவசாயிகள் ஓவர் டியூஸ் ஆகாத அளவு அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அதே முறையிலே, நம்முடைய தமிழகத்திலே உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொழில்களை அபிவிருத்தி செய்ய Tamil Nadu Industrial Investment Corporation. இருப்பதைப் போல், விவசாயத்தை அபிவிருத்தி செய்ய Tamil Nadu Agriculturist Investment Corporation என்கிற அமைப்பு இருப்பதைப்போல், ஏதாவது ஒரு அமைப்பை உருவாக்கி விவசாயிகளுக்குப் பல்வேறு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் பல்வேறு முனைகளிலே கடன்களைப் பெறுகிருர்கள். அதைத் தவிர்த்து, விவசாயிகள் ஒரே முனையிலே கடன்களைப் பெறுவதற்காக நாம் முனையவேண்டும். விவசாயிகள் எங்கெங்கு கடன் கிடைக்கிறதோ அங்கங்கு பெறுகிருர்கள். தனியாரிடம் கிடைத்தால் பெற்றுக் கொள்கிருர்கள் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைத்தால் பெற்றுக் கொள்கிருர்கள். நிலவள வங்கிகளிடம் கிடைத்தால் பெற்றுக்கொள்கிருர்கள். வங்கிகளிலே கடன் கிடைத்தால் பெற்றுக் கொள்கிருர்கள். இப்படி பல முனைகளில் கடன் கிடைப்பதால் அவர்களை அறியாமல் எங்கெங்கு கடன்களைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அவர்கள் கடன்களைப் பெற்று வருகிருர்கள். அவர்கள் ஒரே முனையில் கடன்களைப் பெற்ருல் எவ்வளவு பெற்றிருக்கிருர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள அவர்களுக்கும் வாய்ப்பிருக்கும். ஆகவே, விவசாயிகள் ஒரு முனையிலே கடன் பெற வழிவகை செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றைக்குத் தமிழக அரசு நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் ஆரூரான் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமாகவிருந்த நிலங்களை சர்க்கரை ஆலைக் கார்ப்பரேஷன் மூலமாக, ஆர்ஜிதப்படுத்தியிருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். அதுவும் விவசாயத்திற்குச் சம்பந்தப்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே தமிழகத்திலே விவசாயிகளுக்குத் தற்காலிகமாகக் கடன் நிவாரணத்தின் மூலம் கடன்களை ஒத்தி வைத்திருப்பதை வரவேற்கிறேன். அது தற்காலிகமாக இல்லாமல் நிரந்தரமாக, விவசாயிகள் கடன் தொல்லைகளிலேயிருந்து விடுபடுவதற்கு அரசாங்கம் நிரந்தர பரிகாரங்களைக் காண முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவைப் பொறுத்தவரையிலே, நம்முடைய அரசாங்கம் ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்வதாக ஒரு தோற்றத்தைக் கொடுத்துவிட்டு, ஆனால் அதே நேரத்தில் உண்மையாக ஏழை எளிய விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடிய அளவுக்கு இந்த மசோதா இருக்கிறதா என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டால், நிச்சயமாக இங்கே எடுத்துச் சொல்லிய அளவுக்கு அது நன்மை செய்யாது, செய்யவில்லை என்பதைத் திட்டவட்டமாக நான் குறிப்பிட முடியும். ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில் கடன்பட்ட விவசாயிகளுக்கு நன்மை அளிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மையாகவே நன்மை செய்கிறதா என்றால், இல்லை. ஏறத்தாழ 90 சதவிகிதம் விவசாயிகள் இன்றைய தினம் கடன்பட்டிருக்கிறார்கள்—கூட்டுறவு சொஸைட்டியிலேதான் பணத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் இங்கே 'Exception' என்ற ஒரு ஷரத்து இருக்கிறது. அந்த ஷரத்திலே "'Debt' does not include— (i) rent or compensation for the use and occupation of house property" என்றெல்லாம் போட்டுவிட்டு அதற்குபிறகு 6வது ஷரத்திலே 'any sum payable to any Co-operative Society....' என்று திட்டவட்டமாகப் போடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் 'any banking company to which the Banking Regulation Act, 1949 applies'

என்று இருப்பதால் ஷெட்யூல்ட் பேங்க்ஸ், நேஷனலைஸ்டு பேங்க்ஸ், கூட்டுறவு சங்கங்கள் இவைகள் எல்லாம் கடன் கொடுத்திருந்தால் அதற்கு நிவாரணமாக இதிலே ஒன்றும் சொல்லப்படவில்லை, இவைகளிலேதான் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட விவசாயிகள் கடன் வாங்கியிருப்பார்கள்., ஆகவே அவர்கள் எவ்வாறு இந்தச் சட்டத்தினால் பயன் அடையமுடியாது என்று நான் சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது, இல்லை யென்று சொல்லமுடியாது. அமைச்சரவையிலே இருக்கிற பல அமைச்சர்கள் விவசாயத்திலே ஈடுபட்டவர்கள். அவர்களுக்கு எல்லாம் தெரியும், திரு. அன்பில் தர்மலிங்கத்தைக் கேட்டுப் பாருங்கள், அவர்களை ரகசியமாகக் கேட்டுப் பாருங்கள், நன்மை செய்





கிறதா இது என்று, இல்லை என்றுதான் சொல்வார்கள். ஏராளமான கடிதங்கள் எனக்கு இதைப்பற்றி வந்திருக்கின்றன. பல மாவட்டங்களிலிருந்து வந்திருக்கின்றன.

குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலிருந்து கூட ஏழை எளிய விவசாயி கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். 'தாளடி பயிர்செய்ய முடியாமல் நாங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம், 95 சதவீதம் கோவாப் ரேடிவ் பேங்குகள் போன்றவற்றில்தான் வாங்கிக்கொண்டிருக்கிறோம் ஆகவே அந்த கிளாஸை திருத்தியமைக்கவேண்டுமென்றும் ஆகவே இந்த மசோதா அவர்களுக்கு உதவி செய்யாது என்றும்' எழுதியிருக் கிறார்கள்.

அது மட்டுமல்ல இதில் சில முரண்பாடுகள்-லேக்குனஸ் இருக் கின்றன. அண்மையிலே எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதிலே ஒரு கருத்தை சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவைப் பயன்படுத்தி கொஞ்சநஞ்ச நிலம் வைத்துக்கொண்டிருந்தாலும் நகரத் திலே வேறு தொழில் செய்துகொண்டிருக்கக்கூடியவர்கள்— ஒரு அம்மாள் சொல்லியிருக்கிறார்கள், 3 ஆயிரம் நான் கடன் கொடுத்தேன், நகரத் திலே 1 லட்சத்து ஐம்பதாயிரம் மதிப்பிற்கு வீடு வைத்திருப்பவருக்கு கொடுத்தேன், ஆனால் அந்த நிலத்தைக் காட்டி இதிலிருந்து தப்பித் கொள்ள முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார் கள். இப்படிப்பட்ட முரண்பாடுகள் எல்லாம் இருக்கின்றன, இதை நீக்குவது அரசாங்கத்தினுடைய கடமை. ஏதோ அரைகுறையாக, அவசரத்தின் காரணமாக, ஏதோ ஆர்டினன்ஸ் போட்டு விட்டார்கள் என்பதற்காக எந்தவிதமான நன்மையும் செய்யாத முறையிலே இந்த மசோதா இருப்பது மட்டுமல்ல, டிராப்டும் சரியில்லை., நான் இப்படிச் சொல்வதால் சட்ட அமைச்சர் கோபித்துக்கொள்ளக் கூடாது. நான் உண்மையைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீங்கள் உண்மையைச் சொன்னால் நான் இல்லையென்று சொல்லமாட்டேன். 1952ஆம் ஆண்டிலே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதைத்தான் பாலோ செய்திருக்கிறோம், எங்கே தவறு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால் பரவாயில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : 1938-ஆம் ஆண்டு சட்டம் ராஜாஜியால் கொண்டுவரப்பட்ட சட்டம். அதற்கும் இதற்கும் வேறுபாடு இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது வேறு, இது வேறு, அதற்கும் இதற்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். 1938ஆம் ஆண்டுச் சட்டத்திலே என்ன கொண்டு வரப்பட்டது., இதிலே என்ன இல்லை என்று தெளிவாகச் சொன்னால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் கன்ஸ்ட்ரக்டிவ் சஜ்ஜஷனைக் கொடுக்கிறேன். இதிலே 'Exception' என்று ஏறத்தாழ 8 ஷரத்துக்கள் போட்டிருக்கிறீர்கள். இதை நீங்கள் மாற்றி அமைக்கவேண்டும். கோவாப்ரேடிவ் பேங்குகள் மூலமாகத்தான் 90 சதவீதம் வாங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதிலே ஒன்றும் பிரச்னையில்லை. கோவாப்ரேடிவ் லோனைப்பற்றி நாம் முடிவு எடுக்கிறோம். டிரவுட் அபக்டட் ஆக இருந்தால் நோ கலெக்ஷன் என்று இருக்கிறது. சிறு பகுதியாக இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்துச் சொன்னால் அதற்கும் கொடுக்க தயாராக இருக்கிறோம். கோவாப்ரேடிவ் ஆக்டிற்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சட்டத்தின் மூலமாக திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும். இது போதாது, நாம் உத்திரவு போட்டுவிட்டு அதற்குத் தகுந்த வகையிலே ஸ்டேச்சுட்டரி அமெண்ட்மெண்ட் கொண்டு வரவில்லை என்று சொன்னால் என்ன பிரயோஜனம்? கோர்ட்டிற்குப் போனால் அதிகாரிகள் தொல்லைகள் கொடுக்கமுடியும். the Government must bring forward proper amendments to this Bill என்பதுதான் என்னுடைய கருத்து. இதை லா டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி சட்ட அமைச்சர் பெரிய லாயர். அவர்களே ஒரு சிறந்த அட்வோகேட். இதைப்பற்றி அவரே யோசித்துப் பார்த்து விட்டு நான் சொல்லக்கூடிய கருத்து சரிதானா என்பதைப் பார்த்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற கடன்பட்ட விவசாயிகள் தற்காலிக நிவாரணச் சட்டத்தை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே கடன் கொடுத்தவர்கள் வட்டி வேந்தர்கள் கடனுக்காக விவசாயிகளை வெளியேற்ற வேண்டும், அவர்களைப் பழிவாங்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்திலே வரப்பிரசாதமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுவும் 16—1—1975 முதல் அமலுக்கு வருகிறது. நம்முடைய கழக அரசைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட அறிவிப்புகள் விவசாயிகளுக்கு நன்மைகளைச் செய்துவருகிறது. நீதி மன்றத்திற்குப் போய் டிகிரி வாங்கிவந்து வீட்டிற்குள் அமீனாவுடன் நுழைந்து ஜப்தி செய்வது போன்ற நடவடிக்கைகள் எல்லாம் இனிமேல் இதனால் முடியாது., அதற்கெல்லாம் இது மிகப்பெரிய தடையாக இருப்பது மட்டுமல்லாமல் ஏற்கனவே கொடுக்கப்பட்ட கடன்களினால் சிறந்த முறையிலே தங்களுடைய பணிகளைச் செய்யமுடியாமல் இருந்த விவசாயிகளுக்கு இது ஒரு பெரிய நிவாரணமாக அமைந்து இருக்கிறது.



அது மட்டுமல்ல ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபாய் அளவிற்கு 5 கோடி ரூபாய் வரையில் தற்காலிக் கடனாக விவசாயிகளுக்கு கலெக்டர்கள் மூலமாக வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது.

அது மட்டுமல்ல, எங்கே கிணறு வெட்டுகிற விவசாயிகளுக்குத்தான் பயன்கிட்டும் நீலகிரி போன்ற மலைப்பிரதேசங்களில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பயன்கிட்டாமல் போய்விடுமோ என்ற அச்சத்தைப்போக்குகிற வகையில் நீலகிரியிலே இருக்கிறவர்களுக்கும் 10 லட்சம் ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்து, உருளைக் கிழங்கு பயிர் செய்யக்கூடிய விவசாயிகளுடைய கடன்களையும் ஓராண்டுக்குத் தள்ளி வைத்து இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

வக்கீல்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமோ என்று சிலர் தெரிவித்தார்கள். நானும் வக்கீல் இனத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே சொல்லிக்கொள்கிறேன், இப்போது புரகிபிஷனைக் கொண்டுவந்திருக்கிறோம், இதிலே இல்லாத வழக்குகள் அதிலே வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கேகூட ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இது விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கவில்லை என்று சொன்னார்கள் இந்த அளவிலே விவசாயிகள் கடன் பட்டதற்குக் காரணம் என்ன? அவர்களுக்குக் கொடுக்கிற உரத்திற்கு வரியை உயர்த்தியது மத்திய அரசுதான். சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டு பம்புசெட்டுக்கு வரியை உயர்த்தியது மத்திய அரசுதான். உரம் பம்புசெட்டு போன்றவற்றிற்கு வரியை உயர்த்திய காரணத்தினால் தான் விவசாயிகள் மேலும் கடனாளியானார்கள். இதற்கெல்லாம் யார் பொறுப்பு என்று பார்க்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள் மத்திய அரசாங்கம் செய்வது எப்படியென்றால் குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியையும் பறித்ததாம், அதைப்போன்று மத்திய அரசு விவசாயியை இந்த நிலைமைக்கு ஆளாக்கிவிட்டு விவசாய முனையிலே வரியைப் போடுகள், ரூரல் ரிசோஸ்சஸ் மேல் வரிப்போட்டு எங்களுக்குக் கொடுத்தால்தான் உரிய நிதியைத் தருவோம் என்று சொல்லியிருப்பது விவசாயின் தலையின்மேல் பாரத்தை ஏற்றிவிடுகிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரமில்லை, ஆக்டைப்பற்றி இரண்டு வார்த்தைகள் சொல்லுங்கள்.

திரு. கா. வேழவேந்தன் : சட்டத்திலே இருக்கிற விவரங்கள் போதுமானவை அல்ல என்றும் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வாங்குகிற கடன்களை வசூலிக்காமல் இருப்பதற்கு இதிலே புரவிஷன் இல்லையென்றும் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள்.

கூட்டுறவுச் சங்கங்கள் கடன்களைக் கூட வசூலிப்பதில்லை. எங்காவது திருப்பிக் கொடுக்க முடியும் என்றால் அதைத் தடுக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. கூட்டுறவுச் சங்கங்களில் அந்தக் கடன் திரும்ப வந்தால்தான் அடுத்த ஆண்டுக்கு ரிசர்வ் பாங்கி மூலம் பணம் தேவை என்று கேட்க முடியும். பணம் திரும்ப வரவேண்டும். இதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறி இதை மனதார வரவேற்று அமைகிறேன்.

திரு. எஸ். வடிவேல் : துணைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கடன் ஒத்தி வைப்பு மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஓராண்டு என்பதை மூன்று ஆண்டுகள் என்று மாற்றியமைக்க வேண்டும். எட்டிலே வராத கடன், கோர்ட்டுக்குப் போகாத கடன்களும் உண்டு. அரிசன மக்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள் ஒரு ரூபாய் பணம் கடன் வாங்கி அரை ரூபாய் வட்டி கொடுக்கிறார்கள். 1-ம் தேதி அவன் நேரிலே வந்து கெடுபிடி செய்து வசூலித்து விடுவான். அவன் தான் கோர்ட், அவன்தான் போலீஸ், அவன்தான் எல்லாம். அந்த மாதிரி வசூலிக்கக்கூடாது என்று அவர்கள் மேல் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உத்திரப் பிரதேசத்தில் அப்படி வசூல் பண்ணியவர்கள் மேல் கடுமையாக நடவடிக்கை எடுத்து தண்டித்திருக்கிறார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன். உத்திரப் பிரதேசத்தில் அரிசன மக்கள், ஆதிவாசிகள் கடன்கள் அவ்வளவு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. நாமும் அவ்வாறு அந்தக் கடன்களை ரத்து செய்வது பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த திரு. கணபதியா பிள்ளை அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு விவசாயிக்கு 360 ரூபாய்தான் வருமானம் கிடைக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அந்த விவசாயத் தொழிலாளர்கள் பஞ்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சித்திரை மாதம் 1-ம் தேதி பிறந்தால் நட்டுறொட்டுச் சாமான்கள், குவளைகள், லோட்டாக்கள் எல்லாம் அடகு வைக்கப்பட்டு சாப்பிடும் நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் உத்திரப் பிரதேசத்தைப் போல் நம்முடைய மாநிலத்திலும் கடன் ரத்து செய்யும் சட்டத்தைக் கொண்டு வருவது பற்றிப் பரிசீலித்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



உழவுத் தொழில் சம்பந்தப்பட்டவரை ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் 50 ஆண்டுக் கால கடன், 30 ஆண்டுக் காலக் கடன் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் வீடு கட்ட 20 ஆண்டுக் காலக் கடன் கொடுக்கிறார்கள். நில அபிவிருத்தி செய்ய ஏழை எளிய விவசாயிகளுக்கு அத்தகைய நீண்ட காலக் கடன்களைக் கொடுக்க அரசு முனையவேண்டும்.

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர் ”

என்று நம்முடைய வள்ளுவப் பெருந்தகை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார். இன்று

“ உழுதுண்டு வாழ்வார் எல்லாம் சாவார் தொழுதுண்டு
பின்செல்பவர் தொந்திபெருப்பார் ”

என்று மாற்றியமைக்கும் நிலைமைதான் இருக்கிறது. உழவுத் தொழிலாளர்களுக்காகப் பாடுபடக்கூடிய இந்த அரசு பரிசீலனை செய்து கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : தலைவர் அவர்களே, பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தின் குறிக்கோளை வரவேற்றிருக்கிறார்கள். அதையொட்டி அவர்களுடைய பேச்சில் அவர்கள் நினைத்த காரியத்தையும் எடுதது்ச் சொல்லி இணைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களே தவிர இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை வரவேற்கத்தக்க முற்போக்கான சட்டம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் குறிக்கோளை நாம் முதலில் பார்க்க வேண்டும்.—

'Indebted Agriculturists (Temporary Relief) Act.

பல்வேறு கடன்களைப் பெற்ற அல்லது கடனா பட்டிருக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் தற்காலிகச் சட்டம். தொழிலாளர்களின் பல்வேறு இனங்களைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் பல்வேறு சட்டங்களைக் கொண்டு வர வழிமுறைகள் இருக்கின்றன. இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், விவசாயிகள் கடனாளியாக இருக்கிறார்கள், அவர்களுக்குத் தற்காலிகமாக நிவாரணம் அளிக்க வேண்டும், தனிப்பட்டவர்களிடம் கடன் பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற முறையில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுதான் முக்கியக் குறிக்கோள். அரசாங்கக் கடன்களைத் தள்ளி விட்டார்கள். விதிவிலக்கு கொடுத்திருக்கிறார்கள். வங்கிக் கடன்களுக்கு விதிவிலக்கு. அதைப் பற்றிச் சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். அரசாங்கம் எந்த முற்போக்கான சட்டமானாலும் நிலைமைக்குத் தகுந்தாற்போல் ஏற்றுக் கொண்டு தனியாக உத்தரவு பிறப்பிக்கும்.

(திரு ஓ. பி. இராமன்) [1975 மார்ச் 11

'Collection of loan instalments in drought-affected areas".

"I am to invite your attention to the policy announcement made by the Chief Minister on the floor of the Legislative Assembly on 18th December 1974 to the effect that the collection of loan instalments from the 'co-operative institutions will be postponed in the drought-affected areas . . . . . ."

என்று எக்சிக்யூட்டிவ் ஆர்டர் செயலாளர் மூலமாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பாதுகாப்பு இப்போதே இருக்கிறது. அரசு கடன்களும் தள்ளிப் போட வேண்டுமென்று ரெவின்யூ இலாகா மூலம் தாக்கீது அனுப்பப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மிகப் பெரிய முக்கியமான குறிக்கோள் தனிப்பட்டவர்களிடம் உண்மையான விவசாயிகள் கடன்பட்டு நீதி மன்றத்தின் மூலமாக ஓராண்டுக் காலத்திற்கு அவர்களை அச்சுறுத்த முடியாத அளவுக்கு தற்காலிகமான பரிகாரம் தேவை என்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஓராண்டு போதாது, மூன்று ஆண்டு என்று ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். வறட்சி தொடர்ந்து இருக்குமென்று எதிர் பார்க்கக் கூடாது. மழை பெய்து நல்ல நிலை ஏற்படும். மேலும் வறட்சி கடுமையாக இருந்தால் அப்போதைக்கப்போது செய்து கொள்ளலாம், சட்டத்தைத் தேவைக்கேற்ப திருத்திக் கொள்ளலாம். ஆகவே, மூன்று ஆண்டு என்று போடத் தேவையில்லை. அரசு உன்னத நோக்கத்தோடு விவசாயிகளுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற கடன் நிவாரணச் சட்டத்தை எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். சில விதிவிலக்கு சொல்லியிருக்கிறார்கள் இன்கம் டாக்ஸ், விவசாய வருமான வரி, பற்றியெல்லாம் சேல்ஸ் டாக்ஸ் பற்றியும் உறுப்பினர்கள் சொல்லி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இதை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் இந்த சட்டத்தில் சி பிரிவில்

"'debt' means any sum of money which a person is liable to pay under a contract (express or implied) for consideration received and includes rent in cash or kind which a person is liable to pay or deliver in respect of the lawful use and occupation of agricultural land.'"

என்று இருக்கிறது. நான் சொன்ன வாழைக்காய் வியாபாரி பற்றி அமைச்சர் அவர்கள் எந்தக் குறிப்பும் சொல்லவில்லை. இதில் நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்ட பிரிவை சட்டத்தில் நுழைத்தால் டிஸ்கிரிமினேஷன் வந்து விடும். சட்ட இலாகாவில் கூர்ந்து கவனித்து தனியாக சட்டத்தில் போட இடம் தராது என்று கூறியிருக்கிறார்கள். எனவே, அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அரசுத் தரப்பில் தெரிவித்துக் கொள்கிறேன்



1975 மார்ச் 11]

THIRU K. M. SUBRAMANIAM : Sir, the Hon. Minister has not mentioned anything about the loans given by the Scheduled Banks. What will happen to such loans?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் செட்யூல் பாங்கு பொறுத்து மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்,

திரு. சோ. அழகர்சாமி : ஜுன் மாதம் 1974-ம் ஆண்டு முடிவாகிற பசலிக்கு குத்தகை பாக்கிக்கு மட்டுந்தான் நடவடிக்கை எடுக்கக்கூடாது. இந்த ஆண்டு ஜுன் 1975-ம் வருஷம் பாக்கிக்காக நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. அது சம்பந்தமாக அமைச்சர்கள் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆண்டு விளைந்த பகுதிகள், விளையாத பகுதிகள் இருக்கின்றன. இந்தச் சட்டத்தில் கொண்டு வருவது இதற்கு முன்னால் உள்ள பழைய பாக்கிகளைப் பொறுத்துத்தான். மற்றதற்கு ஃபேர் ரென்ட் ஆக்ட் இருக்கிறது. அதன்படி முடிவு செய்ய வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : ஃபேர் ரென்ட் ஆக்ட்படி குத்தகை நிர்ணயம் செய்யலாம். குத்தகை செலுத்த முடியாத நிலைமையில் அவன்மீது நடவடிக்கை எடுப்பதைத் தடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அதைத் தனி விவாதமாகப் பேசிக் கொண்டிருப்பது சரியாக இல்லை.

(முற்பகல் 11·30).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஃபேர் ரெண்ட ஆக்ட், கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடெக்ஷன் ஆக்ட, இந்த இரண்டு சட்டத்திலும், ஒவ்வொரு ஆண்டிலும் விளையாவிட்டால் அதற்கு வாரத்தை ரத்து செய்வது என்பது தனிச்சட்டமாக ஏற்கெனவே இருக்கிறது. விளையாத விவசாயிகள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற சட்டம் பரவலாக வறட்சி இருக்கிற காலத்திலே முன்னாலே உள்ள கடனை வசூலிக்கக் கூடாது என்பதற்காகத்தான்.

திரு கு. காமாட்சி : தலைவரவர்களே, பொதுவாக இந்தச் சட்டம் எல்லா விவசாயிகளுக்கும் நீட்டிக்கப்படுமானால் நலமாக இருக்கும். கோவாபரேடிவ் சொசைடி மூலமாக கொடுக்கப்படுகிற கடன்களைப் பொறுத்த வரை வறட்சிப் பகுதிகளுக்கு மாத்திரம் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுவதற்கான வாய்ப்பு சட்டத்தில் ஏற்படுமாவென்று அறிய விரும்புகிறேன். கோவாபரேடிவ் பாங்க் கடன் கொடுத்திருக்கிறார்கள். நேஷனலைஸ்ட் பாங்க் கடன் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைக் கட்டுப் படுத்துவதற்கு இந்தச் சட்டம் இடம் தருமாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் ; தலைவரவர்களே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளைப் பொறுத்து, அதை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாது. கோவாபரேடிவ் சொசைடி மூலமாக கொடுக்கப்பட்ட கடன் பூராவும் ரிசர்வ் வங்கி கொடுக்கிற கடனாகும். ஆகவே அதையும் இந்தச் சட்டத்தில் கொண்டுவர இயலாது. ஆனால் ரிசர்வ் வங்கியை அணுகி அது ஒத்துக் கொண்டபடி, வறட்சிப் பகுதி என்று நோடிபை செய்யப்பட்ட பகுதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த அளவிற்கு விளையவில்லை என்று சர்டிபிகேட் கொடுக்கிறாரோ அந்தப் பகுதிகள் ஆகியவைகளில் கூட்டுறவுக் கடன்களை வசூலிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் கவலையில்லை. நேஷனலைஸ்ட் பாங்குகளைப் பொறுத்த அளவிற்கு மத்திய அரசாங்கம் ஒத்துக் கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி ; தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

## *Clause 2.*

MR. DEPUTY SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill'.

THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

'In clause 2, in sub-clause (*c*), after the words "occupation of agricultural land", *add* the words 'and also interest and penalty interest.'

'In clause 2, after sub-cause (c), *add* the following new sub-clause and renumber the sub-clauses (d) and (e) as (e) and (f) :—

(d) Debt after expiry of the period may be repaid in five equal instalments.'

The amendment was duly seconded.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றபட்டது

## *Clause 3.*

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That Clause 3 do stand part of the Bill"



THIRU N. K. PALANISAMY : Sir, I move the following amendment :—

"In Clause 3, for the words "before the expiry of a year from the date of commencement of the Act, *substitute* the words, "before the expiry of three years from the date of commencement of the Act."

The amendment was duly seconded.

THIRU S. ALAGARSWAMY : Sir, I move the following amendment :—

" In Clause 3, for the words " before the expiry of a year from the date of the commencement of the Act, *substitute* the words, " before the expiry of three years from the date of commencement of the Act ".

The amendment was duly seconded.

திரு. சோ. அழகர்சாமி ; ஒரு நிமிஷம் இதில் பேச அனுமதி கோருகிறேன். இந்தத் திருத்தம் சம்பந்தமாக பதில் சொல்லும்போது அமைச்சரவர்கள், அந்தந்த காலங்களில் அவ்வப்போது வறட்சி ஏற்படுகிற காலங்களில் இப்படி ஒத்தி வைக்கக் கூடிய சட்டங்களைக் கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். இப்போதுள்ள நிலையில் கடன் வாங்குகிறார்கள், அடுத்த ஆண்டு நன்றாக விளைந்தாலும்கூட, இப்போது வாங்கிய கடனைக் கட்டுவதற்கு சங்கடப்படுவார்கள். இந்த பாக்கிக்காக கோர்ட் நடவடிக்கை எடுக்கப்பட்டால் பல தொந்திரவுகளுக்கு ஆளாவார்கள். அவர்களுக்கு நல்ல நிவாரணம் அளிப்பதற்கு இதை 3 ஆண்டுகளுக்கு என்று செய்தால் தான் சரியாக இருக்கும். ஆகவே, தயவு செய்து ஒன்று என்பதை மூன்று என்று போட்டால் கடன்பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய வகையில் இருக்கும். இல்லாவிட்டால், இந்தச் சட்டம் ஏற்கெனவே வந்த நிவாரணச் சட்டம் மாதிரி பயனில்லாமல் போகும். ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் 3 ஆண்டு என்று திருத்த வேண்டும். 3 ஆண்டு என்று போட்டால்தான் அவர்களுக்கு உண்மையில் நிவாரணம் அளித்ததாகும் என்று கேட்டு இப்படிச் செய்து நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 4, 5, 6, 7, 8, 9 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

திரு. என். கே. பழனிசாமி ; தலைவரவர்களே, இந்த மசோதா நிறைவேறுவதை ஆதரிக்கிறோம். கனம் அமைச்சரவர்கள் பதில் சொல்லுங் கூடிய சமயத்தில் தொடர்ந்து வறட்சி இருக்குமானால் நாங்கள் புனரா லோசனை செய்து மறுபடியும் எக்ஸ்டெண்டு பண்ணுவதற்கு முயற்சி செய்வோம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே கனம் அமைச்சரவர்கள் சொன்னதற்குப் பிறகு கண்டிப்பாக மழை வரும்—அப்படி 10 மாதம் மழை இல்லையென்றால் மறுபடியும் மேலும் ஒரு வருஷத்திற்காவது வகை செய்யப்படுமா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அரசைப் பொறுத்த அளவிலே விவசாயிகளுக்குச் சிரமம் இருக்குமானால், நிச்சயமாகச் செய்வோம்.

Sir, I move ;—

"That the Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 (L.A. Bill No. 7 of 1975), be passed"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காவது திருத்தச் சட்ட முன்வடிவு (ச. பே. ச. மு. வ. எண். 49/1974).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காவது திருத்தச் சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 49/1974) பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என நான் முன்மொழிய விழைகிறேன்.

தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் : 58/1961) 73 (XIII) வது பிரிவின் மூலம், கரும்பு பயிரிடுவதற்குப் பயன் படுத்தப் படும் நிலங்களுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கு தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத் தின் (தமிழ் நாடு சட்டம்: 41/1971) 3 (10) வது பிரிவின் மூலம் திரும்பப் பெறப்பட்டது. இவ்வாறு விதிவிலக்கு திரும்பப் பெறப்பட்டதனையடுத்து, அதன் விளைவாக, அரசு மேற்கொண்ட திரு ஆரூரான் சர்க்கரை ஆலையின் உபரி நிலங்களை நிர்வகிக்கும் பொருட்டு, தமிழ் நாடு 1961-ஆம் ஆண்டு 58-வது சட்டத்தின் 94-A (2) பிரிவின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளவாறு,

*1975 மார்ச் 8ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.





கழகம் ஒன்றை அரசு அமைத்தது மேற்சொன்ன சட்டத்தின் 94-B (1) பிரிவிற்கிணங்க, நீடித்திருக்கிற குத்தகை ஒப்பந்த மொன்றின்கீழ் ஒரு சர்க்கரை ஆலையால் குத்தகைக்காரராக வைத்துவரப்பட்ட நிலம், தொடர்புடைய நிலச் சொந்தக்காரரின் உச்சவரம்புப் பகுதிக்குள் இருக்குமானால், அந்த நிலம், முடிவடையாதுள்ள அந்தக் குத்தகை ஒப்பந்தகாலம் வரையில் கழகத்தால் குத்தகைக்காரராக வைத்துவரப்படுவதாய்க் கருதப் பட வேண்டும். அதற்கிணங்க, அந்தச் சர்க்கரை ஆலைக்குப் பதிலாக அந்தக் கழகம் ஒரு தரப்பாக இருந்திருந்தாற்போல, அந்தக் குத்தகை ஒப்பந்தம் மேற்சொன்ன கழகத்தின்மீது முழு ஆற்றலும் விளைவும் உடையதாக இருக்கும் என்பதோடு, அதன் காரணமாக, அக்கழகத்தின் மீது முழுமையாகவும், திறனுள்ள வகையிலும் செயல்படுத்தப்படலாம், அல்லது நடவடிக்கை எடுக்கப்படலாம், இவ்விதித் துறையின்கீழ், திரு ஆரூரான் சர்க்கரை ஆலையால் குத்தகைக்கு வைத்து வரப்பட்ட 3,000 எக்கருக்கும் மேற்பட்ட நிலம் தமிழ் நாடு கரும்புக் கழகத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 769 எக்கர் தொடர்பான குத்தகை ஒப் பந்தம் 1974-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாளுடன் முடிவடைந்தது. நிலச் சொந்தக்காரர்களில் சிலர் குத்தகைக் காலம் முடிவடைந்தன் மேல் தங்கள் நிலங்களைத் தாங்களே பயிரிடுவதற்காக விடுவிக்கும் பொருட்டு மனுச் செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது. எஞ்சிய நிலங்கள் தொடர் பான குத்தகை ஒப்பந்தங்களும் அடுத்தடுத்து ஆண்டுகளில் முடிவடைந்து விடும். சர்க்கரை ஆலைக்கு முறையாக கரும்பு அனுப்புவதை உறுதி செய்யும் பொருட்டு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுகின்ற வரையில், இந்த நிலங்கள் இன்னும் சிறிது காலத்திற்குத் தமிழ் நாடு கரும்புக் கழகத்தின் அனுபோகத்திலேயே நீடித்துவரவேண்டியது அவசியமாகு மென்று கருதப்பட்டது. எனவே, இந்த குத்தகை நிலங்கள் தொடர்பாக அவற்றின் குத்தகைக் காலம் முடிவடையும் நாளிலிருந்து மேலும் ஐந்தாண்டுக் காலத்திற்குக் குத்தகைக் காலத்தைத் தொடர்ந்து நீட்டிக்கச் செய்யும் வகையில் 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ஆம் தேதி அன்று சட்டமன்றப் பேரவையில் 49/74-ஆம் எண்ணுள்ள சட்ட முன்வடிவை கொண்டுவருவதன் மூலம் சட்டத்தைத் திருத்த அரசு முடிவு செய்தது.

சட்டமன்றப் பேரவைக்கூட்டத் தொடர் 1975-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு ஒன்றின் மூலம் முடித்துவைக்கப்பட்டது. எனவே, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ் நாடு அவசரச் சட்டம் 2/75) சாற்றுரைப்பது அவசிய மாயிற்று. இந்த அவசரச் சட்டம் 1975-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ஆம் நாளிட்ட தமிழ் நாடு அரசிதழ் சிறப்பிதழில் வெளியிடப்பட்டது. இச்சட்ட வரைவு தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த அவசரச் சட்டத்திற்குப் பதி லாகக் (தமிழ் நாடு அவசரச் சட்டம் 2/75) கொண்டுவரப்படுகிறது. இதனை பகுதி பகுதியாகப் பரிசீலனை செய்யும் நிலை வருகையில், மேற்சொன்ன அவசரச் சட்டத்தை ரத்து செய்வதற்கு அவசியமான திருத்தம் கொண்டு வரப்படும்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 மார்ச் 11

பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை இச்சட்ட வரைவை ஏற்று நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கிற மசோதா விநோதமான மசோதாவாக இருக்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே 14 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இந்த சர்க்கரை ஆலைக்கு கரும்பு உற்பத்தி செய்யும் நிலம் பூராவும் தனிப்பட்ட விவசாயிகள் பல பேர் வைத்துக் கொண்டு, அந்த சர்க்கரை ஆலையோடு ஒப்பந்தம் செய்து கொண்டு அவர்கள் கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைக்கு கொடுத்து வருகிறார்கள். இந்த சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் ஒரு தனிப்பட்ட முதலாளிக்குச் சொந்தமானது. முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் சலுகை செய்ய வேண்டுமென்று கரும்பு விவசாயம் செய்யும் நிலங்களையெல்லாம் இந்த 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் வைத்த அதே முறையிலேயே அவர்களுக்குச் சலுகை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்ட பின்பும், அந்த நிலங்களையெல்லாம் எடுத்து சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளிடத்தில் கொடுக்காமல், அந்த நிலங்களையெல்லாம் ஒரு கார்ப்பரேஷன் என்ற அமைப்புக்குள் கொண்டு, அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் கரும்பை அந்த ஆலைக்குத் தரவேண்டுமென்று போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திரு. வி. எஸ். டி.க்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறதா? சட்டத்திற்குச் சம்பந்தம் இல்லாமல் பேசக்கூடாது. இதிலே கொடுத்து இருப்பது தனிப்பட்ட ஆலைக்குச் சொந்தமான நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். இது எப்படி விதிவிலக்கு ஆகும்.

திரு. சோ. அழகர்சாமி : உச்ச வரம்பிலிருந்து எடுத்த பின்னால், கரும்பு விவசாயிகளுக்கு ஏன் அவர்கள் உழுகின்ற நிலத்தைக் கொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்வது வேறு. முதலாளிக்கு முன்பு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்போது அரசாங்கம் அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சருக்கு ஏன் கோபம் வருகிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உங்களுடைய தவறான பேச்சைக் கேட்கிறபோது கோபம் வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் பேசுவது முறைதானா என்று கேட்கிறேன். அதற்கென தனி கார்ப்பரேஷன் அமைத்து........



1975 மார்ச் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உச்ச வரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்படவில்லை. நன்றாக படித்து விட்டுப் பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இந்த நிலங்களுக்கு என்று மட்டும் தனியாக கார்ப்பரேஷன் அமைத்து............

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தச் சட்டம் இயற்றி ரொம்ப நாளாகிவிட்டது.

திரு. சோ. அழகர்சாமி : அப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைத்து, அங்கே இருக்கிற சிறு விவசாயிகள் நிலத்தையும் குத்தகைக்காக எடுக்கப்பட்டு இருக்கிறது. ஒரு சிறிய விவசாயி 3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள் பூராவும் இந்த சர்க்கரை ஆலைக்கு குத்தகைக்கு இருக்கிறார்கள். அப்படி குத்தகைக்கு இருப்பவர்கள் நிலத்தையும் எடுத்து இருக்கிறீர்கள். அப்படி எடுத்து அவர்கள் பூராவும் கரும்புதான் சாகுபடி செய்ய வேண்டும், அதுவும் அந்தச் சர்க்கரை ஆலைக்குத்தான் தரவேண்டுமென்று செய்து இருக்கிறீர்கள். நேரடியாக நாங்களே விவசாயம் செய்து நாங்களே கரும்பு தருகிறோம் என்று சொல்வதற்கான அடிப்படை உரிமை அவர்களுக்கு இல்லை. கரும்பு வேண்டாம், வேறு பொருள்களைப் போடுகிறோம். எங்கள் நிலத்தை எங்களுக்குச் சொந்தமாக்கித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். அந்தச் சர்க்கரை ஆலை சர்க்காருக்குச் சொந்தமான ஆலையும் அல்ல. அந்த சர்க்கரை ஆலை சர்க்காருக்குச் சொந்தமாக இருந்தாலும், அமைச்சர் வாதிடுவதில் நியாயம் இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம். தனிப்பட்ட முதலாளிக்கு, அந்தத் தனிப்பட்ட முதலாளியின் கரும்பு ஆலைக்கென கரும்பு உற்பத்தி செய்து தரவேண்டியது அவசியம்தானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரும்ப திரும்ப அதையே பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. அதை ஒரு பிரச்சினையாக்க வேண்டாம். நம்முடைய பில்லில் ஏற்கெனவே அதற்கு விமர்சனம் சொல்லிவிட்டார்கள். அடுத்த பாயிண்ட்டுக்கு வாருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : ஆகவே, இந்தச் சட்டத்தின் மூலமாக சாதாரண ஏழை எளிய விவசாயிகள் 2 ஏக்கர், 1 ஏக்கர் வைத்து இருப்பவர்கள் குத்தகை முடிந்தவுடனே, அவர்களுக்கு அந்த நிலங்களைச் சொந்தமாக்கித் தரவேண்டும். இப்படி ஒரு தனிப்பட்ட முதலாளிக்கு நீங்கள் வாழ்நாள் பூராவும் குத்தகைக்கு இருங்கள், நீங்கள் கரும்புதான் பயிர் செய்ய வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்துவது சரியல்ல. ஆகவே, இந்த மசோதாவை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் எடுத்த ஆயிரக்கணக்கான நிலங்களின் ஊடே சில நிலச்சுவான்தார்களின், சிறிய சிறிய நிலங்கள் இருக்கின்றன. அந்த

சிறு நிலச் சுவான்தார்களிடையே, பினாமி நிலச்சுவான்தார்களும் இருக்கிறார்கள், அவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கூறுகிறாரா?

திரு. சோ. அழகர்சாமி : பினாமி இருந்தால் அவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதை கார்ப்பரேஷன் அமைப்பில் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் 4 ஏக்கர், 5 ஏக்கர் வைத்துள்ள சிறிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுடையதையும் எடுத்துக் கொண்டு அந்த ஆலைக்குப் பயிர் செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்வது நியாயமல்ல.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தின் ஊடே சில பேர், சிறிய சிறிய நிலச்சுவான்தார்கள் நிலம் வைத்துள்ளார்கள். அவர்கள் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் விட்டு இருப்பது தவறு என்று சொல்கிறீர்களா? அப்படி குத்தகை விட்டு இருப்பவர்களிடம் அந்த நிலத்தை விட்டு விட வேண்டுமென்று சொல்கிறீர்களா?

திரு. சோ. அழகர்சாமி : கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை தெளிவாக இருக்கிறது. நிலம் சம்பந்தப்பட்டமட்டில், யார் யார் நிலத்தில் உழுகிறார்களோ அவர்களுக்கு நிலம் சொந்தமாக்க வேண்டும். பினாமி இருந்தால் அதைக் கண்டுபிடித்து, அதற்கான நடவடிக்கைகளை எடுங்கள். மத்தியில் 4–5 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகளின் நிலத்தையும் இந்த அமைப்புக்குள் கொண்டு வந்திருக்கிறீர்கள், அதை அவர்களுக்கு ஒப்படைப்புச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சர்க்காருடைய நிலத்தை நிலச்சுவான்தார் நிலத்திற்கு பரிமாறிக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறீர்களா ?

திரு. சோ. அழகர்சாமி : 4–5 ஏக்கர் வைத்துள்ள சாதாரண விவசாயிகள்...............

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்கு அந்த நிலத்தை கொடுத்து காப்பாற்ற வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

திரு. சோ. அழகர்சாமி : அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் சொல்லவில்லை. குறிப்பாக, உச்ச வரம்பிற்கு மேல் இருக்கும் நிலங்களை எடுத்து ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருப்பித் திருப்பி கேட்டுக் கொள்கிறேன், ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை அரசு எடுத்து இருக்கிறது. அதற்கிடையே சிறுசிறு நிலச்சுவான்தார்கள் நிலம் இருக்கின்றன. அதையும் சேர்த்து குத்தகைக்கு எடுத்து இருக்கிறோம். அதைத்தான் கேட்கிறேன், மீண்டும் அவர்களிடமே திருப்பித் தரவேண்டுமென்று கேட்கிறீர்களா?

திரு. சோ. அழகர்சாமி : இல்லவே இல்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லவே இல்லையென்றால், சட்டத்தை ஆதரிக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : அந்தக் கரும்பு ஆலையை அரசே எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த ஆலையை எடுக்கவேண்டிய அதிகாரம் வந்த உடனே நிச்சயமாக எடுப்போம்.

திரு. சோ. அழகர்சாமி : சிறிய சிறிய விவசாயிகள் நிலத்தை குத்தகைக்கு விட்டு இருக்கிறார்கள். அவற்றை கார்ப்பரேஷன் என்ற பெயரால் அடைத்து வைத்துக் கொண்டு, கரும்பாலைக்கு உதவ வேண்டுமென்று சொல்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களுக்கு அதைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமா என்றால், ஆமாம் என்று சொல்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : திருப்பிக் கொடுத்து விடவேண்டுமென்பது இல்லை. இந்த சட்டத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சிறிய சிறிய நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தொடர்ந்து குத்தகை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டால் கொடுத்து விடுங்கள் என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நிலங்களையெல்லாம் அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள், இந்தச் சட்டம் கொண்டு வராதீர்கள் என்பது உங்களுடைய வாதமா?

திரு. சோ. அழகர்சாமி: நான் சொல்வதை அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். 1 ஏக்கர், 2 ஏக்கர், 5 ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடிய சிறிய சிறிய விவசாயிகளுக்கு..........

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கம் நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும், இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்கிறீர்களா என்பது என்னுடைய வாதம்.

திரு. சோ. அழகர்சாமி : அந்த மாதிரி உச்ச வரம்பு சட்டத்தின் மூலம் எடுத்த நிலத்தை நிலம் இல்லாத சாதாரண மக்களுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்பது எங்களுடைய கொள்கை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உச்ச வரம்புச் சட்டம் விவாதத்திற்கு வரும்போது அது பற்றிச் சொல்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : கார்ப்பரேஷன் என்ற அமைப்பு வைத்து..

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கார்ப்பரேஷன் என்று அமைக்கும் சட்டம் ஏற்கெனவே பாஸாகி ரொம்ப நாள் ஆகிவிட்டது.

திரு. சோ. அழகர்சாமி : இந்த மாதிரி தனிப்பட்ட முதலாளிக்கு உதவுகிற வகையில் இருக்கும் இந்தச் சட்டம் தேவையில்லை.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கார்ப்பரேஷனைப் பற்றி இந்தச் சட்டம் சொல்லவில்லை. கார்ப்பரேஷனுக்குச் சொந்தமில்லாத நிலங்களை குத்தகைக்கு எடுத்துக் கொள்வது இந்தச் சட்டம். அப்படி குத்தகைக்கு எடுத்திருக்கும் நிலத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறீர்களா?

திரு. சோ. அழகர்சாமி : குத்தகை நிலத்தை சாதாரண விவசாயிகளுக்கு கொடுக்கும் முறை, பினாமியாக வைத்து இருக்கும் நிலத்தை கண்டுபிடித்து உழுபவர்களுக்கு கொடுக்கும் முறை ஆகியவற்றை கொண்டு வருவதற்குப் பதிலாக, கார்ப்பரேஷன் அமைத்து அந்த ஆலைக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று முறையில் கொண்டு வர வேண்டுமென்று செய்திருக்கிறீர்கள்.

(மணியடிக்கப்பட்டு, திரு. வி. கிருஷ்ணமூர்த்தி பேச அழைக்கப் பட்டார்).

(திரு. என். கே. பழனிசாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினருக்கு அமைச்சரை குறுக்கு விசாரணை செய்ய நேரம் இல்லை.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கின்ற இந்த சட்டம் முழுமனதாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். நண்பர் திரு. அழகர்சாமி அவர்கள் சில வாதங்களை இங்கே வைத்திருக்கிறார். அமைச்சர் சொன்னதைப்போல



10 ஆயிரம் ஏக்கர் அந்த வகையில் இருக்கிறது. தியாகராஜ முதலியார் ஏராளமாக வைத்திருந்த காலத்தில் கொடுத்திருந்தார்கள். இப்போது Farm எடுத்துக்கொண்டது. விதிவிலக்கு கொடுங்கள் என்று சில சிறு விவசாயிகள் கேட்கிறார்கள் என்றும் அது நியாயம் என்றும் மாண்புமிகு அங்கத்தினர் சொன்னார்கள். அது நியாயம் அல்ல என்று சொல்ல விரும்புகிறேன். எதற்காக அந்த நிலத்தை கொடுத்தார்கள்? எதற்காக ஆரூரான் ஷுகர் பாக்டரிக்கு 10 ஆண்டு காலமாக 15 ஆண்டு காலமாக கொடுத்தார்கள். தியாகராஜ முதலியார் கரும்பு நட்டால் கொடுக்கலாம், ஆனால் அரசாங்கம் Farm–ஐ நடத்துகிறது. அது கரும்பு நட்டால் கொடுக்கக் கூடாது என்றால் என்ன அர்த்தம்? இந்த சர்க்கரை ஆலையில் அவை தொடர்ந்து இருக்கவேண்டும் என்றால் அதில் ஒரு பெரிய அரசியல் பின்னணி இருக்கிறது. இந்த தமிழகத்தில் இந்த விவசாய சட்டம் நம்மை ஆளுபவர்களாக இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் இருந்த போது வந்தது. அன்றைக்கு அண்ணா அவர்கள் கூட சொன்னார்கள். அதற்கு முன்பு இந்தச் சட்டத்தை defeat செய்ய வேண்டும், முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு முறை தஞ்சையில் ஒரு லைசன்ஸ் வாங்கி பத்திரிகை அதிபர் பணத்தை வைத்து அந்த காங்கிரஸ் கட்சி 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தையும் வேறு ஒருத்தர் பணத்தையும் வைத்து சர்க்கரை ஆலையாக வந்தது. சட்டம் கொண்டு வருகிற சமயத்தில் இதில் விதி விலக்கு கொடுக்கிறோம் என்று கருணை உள்ளம் கொண்ட தலைவர் காமராசர் தலைமையை கொண்ட அரசாங்கம் அன்றைக்கு exemption கொடுத்தது. அவர்களுக்கு வேண்டியவர்கள் என்ற காரணத்தாலே 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தை கரும்பு பயிர் செய்து கொள்ள (exemption) என்ற பெயராலே கொடுக்கப்பட்டு அதில் விளைவித்துக் கொண்டு இருந்தார்கள். இப்போது அதற்கு ஒரு முடிவு காலம் கட்ட வேண்டும் என்பதற்காக இப்போது இந்த நடவடிக்கை. அதிலே இன்னொரு மோசம் என்ன வென்றால் ஒரு Industry வேண்டும் என்றால் raw meterials continuous ஆக கிடைக்க resources வேண்டும். இல்லாவிட்டால் எந்த தொழிலும் விழுந்து விடும். அந்த சர்க்கரை ஆலை இங்கே போட்டதே மோசடி. தமிழ் நாட்டில் 10 சதவீதம், 9 சதவீதம், 8.5 சதவீதம் என்று ரெகவரி இருக்கும் போது 6.75 சதவீதம் ரெகவரி கிடைக்கின்ற தஞ்சாவூரில் கொண்டு வருவது எப்படி சரியாகும்? இதனால் அரிசி உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. நல்ல விதத்தில் நெல் விளைகிற இடத்தில் நெல் விளைவிக்காமலும் குறைவாக recovery கிடைக்கிற கரும்பு உற்பத்தி செய்ததாலும் அதை வீணடித்துக்கொண்டு வருகிறார்கள் என்பது தான் என்னுடைய குற்றச் சாட்டு. ஆகவே இந்த Farm—ஐ தொடர்ந்து நடத்த வேண்டும். கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மூலம் வேண்டும் என்றாலும் நடத்தலாம். ஆனால் அதை அடியோடு எடுத்துக் கொண்டு போய் தர்மபுரி மாவட்டத்திலோ வேலூரிலோ அந்த ஆலையை வைக்க வேண்டும். இந்த நிலத்தில் நெல் பயிர் செய்யப்படவேண்டும். அந்த கண்டிஷனோடு இந்த அரசாங்கம் இதைச் செய்ய வேண்டும் என்று கூறி இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன். வணக்கம்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இந்த மசோதா கொண்டு வரக்கூடிய நேரத்தில் ஐந்து வருஷத்திற்கு என்று இருக்கிறது கார்ப்பொரேஷனில் பைலாஸ்களை எடுத்துக்கொண்டால் சீலிங் ஆக்டில் இருக்கிற சர்பிளஸ் லாண்ட் என்று சொல்லியிருக்கிறது. சீலிங் ஆக்டில் இருக்கிற சர்பிளஸ் லாண்ட் மட்டும் சர்க்காருக்கு சேர்ந்தது. சர்க்காருக்கு சேர்ந்தது என்றால் இன்று கோவாப்ரேடிவ் பார்மிங்க்கு தரலாம். அல்லது ஸ்டேட் பார்மிங் செய்ய முடியும். இன்றைக்கு அந்த பார்மில் கரும்பு போடலாம் என்று பைலாஸில் இருக்கிறது. பருத்தி போன்றவை அங்கே போடப்படுகிறது. குத்தகை கொடுக்க வேண்டும் என்றால் ரொம்பக் கஷ்டம். 15 பேர்கள் தான் டைரக்டர்களாக இருக்கிறார்கள். அந்த 15 பேரும் ஆட்களை வைத்து வேலை செய்கிறவர்கள். கிட்டத்தட்ட ஆயிரம் கிடைக்கும் எக்கருக்கு. மூவாயிரம் எக்கருக்கு 3 லட்சம் வருமானம் கிடைக்கிறது. ஒரு ஐ.எ.எஸ். அதிகாரி கூட இதற்கு போடப்பட்டு இருக்கிறார். அதில் வருகிற வருமானத்தை சர்க்கார் சொன்னால் நல்லது. அது நஷ்டத்தில் ஓடுகிறது. மசோதாவின் நோக்கம் 5 வருஷத்திற்கு ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு சரியான முறையில் கொடுப்பது. பாக்கி இருக்கிற பண்ணைகளில் வைத்து உற்பத்தி செய்வது. இதில் சர்க்காருக்கு என் சம்பந்தம் என்று தான் கேட்கிறேன். ஆகவே, இந்த மசோதா அவசியம் இல்லை. சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம். பைலா பிரகாரம் என் எடுத்துக்கொள்ளக் கூடாது? இந்த சர்க்கார் கூட்டுப்பண்ணையாக அல்லது சர்க்கார் பண்ணையாக வைத்து விவசாயம் செய்தால் அரசுக்கும் நல்ல வருமானம் இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

*திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, நான் இந்த மசோதா மீது என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவை ஆதரித்து சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் கரும்பு ஆலைகளுக்காக எழுதி வைக்கப்பட்ட நிலங்கள் உச்சவரம்பு மசோதாவை எமாற்ற எழுதி வைக்கப்பட்ட நிலங்கள். வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் மட்டும் அல்லாமல் அவரை சார்ந்துள்ள நபர்களும் இப்படி ஒரு சட்டத்தின் காரணமாக அவர்கள் நிலங்களை எங்கே எடுத்துக் கொள்ளப் போகிறார்களோ என்று எமாற்றுவதற்காக அந்த மூவாயிரம் எக்கர் நிலங்களையும் எழுதி வைத்து விட்டார்கள். இந்த உண்மையை யாரும் மறைக்க முடியாது. ஆகவே, அவர்கள் எமாற்றிய அந்தச் சட்டத்தை ரத்து செய்து விட்டு இன்றைக்கு இருக்கிற நிலங்களை எல்லாம் எடுத்து ஒரு கார்ப்பொரேஷனுக்கு அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த கார்ப்பொரேஷன் நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அவர்களிடமிருந்து எடுக்கக் கூடிய நிலத்தை அடியோடு நிலஉடமையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகள் வேகமாக செயல்பட அந்த நிலங்களை எடுத்துக்கொள்வதில் சில சிரமங்கள் இருப்பதாக சொல்லுகிறார்கள். இருந்த போதிலும் வந்திருக்கும் நிலங்களை வைத்து பார்க்கிறபோது நாம் மகிழ்ச்சி அடையலாம்.



திரு. பழனிசாமி கரும்பு சாகுபடி, பருத்தி சாகுபடி என்று சொன்னார்கள். அவர் கரும்பு சாகுபடி விஷயத்தில் தீவிர கவனம் செலுத்துபவர். கரும்பு சாகுபடி மூன்று தவணைக்கு மேலே நெல் தான் சாகுபடி செய்ய வேண்டும். தொடர்ந்து கரும்பு விவசாயம் செய்ய முடியாது. அவர் சொல்லுவது சரியானதல்ல. இப்போது எடுத்து இருக்கும் நிலங்களை தரிசு போடாமல் அந்த பருவம் வந்த போது கரும்பு விவசாயம் என்று சொல்லுகிற அதில் 80 ஆயிரம் மூட்டை நெல்லை உற்பத்தி செய்திருக்கிறோம். வரவு செலவு கணக்கை இப்போது அங்கே பார்த்ததில் 15 லட்சம் ரூபாய் ஆதாயம் கிடைத்திருக்கிறது. அதிலே அரசாங்கம் கார்ப்பொரேஷனை வைத்திருப்பது நஷ்டம் என்றெல்லாம் பேசுவது அரசியல் நோக்கம் கற்பிப்பதாகும். அது நியாயமாக பிரமாதமாக நடந்து வருகிறது.

அது மட்டுமல்ல. இந்த நேரத்தில் மூவாயிரம் எக்கர் நிலத்தை வைத்திருக்கின்ற வி. எஸ். தியாகராஜ முதலியார் குடும்பத்திற்கு ஆதரவாக திரு. அழகர்சாமி பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். என் அவ்வாறு சொல்லுகிறேன் என்றால் அவர் குடும்பத்தில் மட்டும் 400 எக்கர் எழுதி வைத்துவிட்டு கோவிலுக்கு 200 எக்கர் எழுதிவைத்து விட்டு தர்மகர்த்தாக்களும் அவர்களே என்ற நிலையை வைத்து எறத்தாழ ஆயிரம் எக்கர் நிலத்திலிருந்து நெல் கரும்பு இந்த குத்தகையில் இருந்து வருகிறது. ஆகவே இந்த நிலத்தையும் திருப்பி கொடுக்க வேண்டும் என்று வாதாடிக்கொண்டிருந்தால் அதன் பின்னணி என்ன என்பதை அந்த விவசாயிகள் அறிவார்கள். அங்கே 4,000 விவசாய தோழர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த விதமான விவகாரமும் கிடையாது. இன்றைய தினம் என்ன கூலி கேட்கிறார்களோ அதை உடனடியாக பெற்று விடுகிறார்கள்.

ஆகவே, சிறு விவசாயிகள் நிலம் இடையில் இருப்பதால் அவர்களால் நல்ல விதத்தில் விவசாயம் செய்ய முடியாது. பாசன வசதி மற்ற வசதிகள் எல்லாம் மற்ற நிலங்களுக்கு கிடைக்கிற நேரத்தில் அதே அளவு இடையில் உள்ள நிலத்தில் விவசாயம் செய்ய முடியாது. கார்ப்பொரேஷன் எடுத்துக்கொள்ளாவிட்டால் இம்மாதிரியான சிரமத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள்.

(நண் பகல் 12-00)

ஆகவே, இந்தச் சட்டம் அவசியம் தேவைப்படுகிறது. ஆகையால் இந்த குத்தகை தொடர்ந்து இருக்க வேண்டும். இந்த கார்ப்பொரேஷன் இருப்பதன் மூலம் அந்த நிலங்களை குத்தகைக்கு எடுத்து நல்லமுறையில் கரும்பு உற்பத்தி செய்ய முடியும். உற்பத்தி செய்யும் கரும்பை வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியாருக்குச் சொந்தமான சர்க்கரை ஆலைக்குத்தான் விற்கவேண்டுமென்ற கண்டிஷன் ஒன்றும் இல்லை. யார் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு, தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் இருக்கிற கரும்பாலைக்கு வேண்டுமானாலும் கொண்டுபோய் கொடுக்க எற்பாடு இருக்கிறது. இந்த கார்ப்பரேஷனுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. இதைப் புரிந்துகொண்டு திரு. பழனிசாமி அவர்களும் மற்றவர்களும் பேசினால் நல்லது.

இந்த கார்ப்பரேஷன் கூட "தமிழ்நாடு கரும்பு உற்பத்திப்பண்ணை" என்று தான் இருக்கிறதே தவிர "வடபாதிமங்கலம் கரும்பு விவசாயப் பண்ணை" என்று பெயர் இல்லை. ஆக, எல்லா வகையினும் கரும்பு உற்பத்தியைப் பெருக்கி, கட்டுப்படியாகக்கூடிய விலைக்கு விற்பனை செய்து, நல்ல லாபம் ஈட்டக்கூடிய சகல வசதிகளும் அதிகாரங்களும் இந்த கார்ப்பரேஷனுக்கு இருக்கிறது. இதைப்பார்க்கும்போது, எதிர்காலத்திலே சர்க்கரை உற்பத்தியில் அதிக அக்கறை கொண்டு, எல்லா ஆலைகளுக்கும் கரும்பு உற்பத்தி செய்து கொடுத்து உதவக்கூடிய சூழ்நிலை இந்த கார்ப்பரேஷனுக்கு இருக்கும்.

என்னுடைய ஆலோசனையாக இங்கே நான் கூற விரும்புவது, இப்படி லீசுக்கு நிலங்களை எடுத்துக்கொள்வதை விட, 3,000 ஏக்கர் நிலத்தையும் அரசாங்கமே கைப்பற்றி, நிலச் சொந்தக்காரர்களுக்கு உரிய நஷ்டயீடு கொடுத்துவிடலாம். இப்போது இந்த கார்ப்பரேஷனுக்கு 3,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. மீதமுள்ள சுமார் 3,000 ஏக்கர் நிலத்தையும் நஷ்டயீடு கொடுத்து எடுத்துக்கொண்டால் இன்னும் நல்ல முறையில் இந்த கார்ப்பரேஷன் கரும்பு உற்பத்தி செய்ய முடியும் என்ற என்னுடைய ஆலோசனையை கூறி, அமர்கிறேன்.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு கரும்பு உற்பத்தி கார்ப்பரேஷன் நிலத்திற்கு இடையிடையே இருக்கிற சிறு விவசாயிகள் நிலங்களை பழைய குத்தகை அளவுக்கே எடுத்து கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு சட்டமாக உருவாக்கியிருக்கிறது. அந்த பழைய குத்தகை 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப் பட்டது. அப்போது ஏக்கருக்கு சிறு விவசாயிகள்† 120 ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : † என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மேலும் அதுமாதிரி பேசாமல் திருத்திக் கொள்ளுங்கள்.

திரு. கு. பெரியசாமி : அப்போது சிறு விவசாயிகள் நல்ல முறையில் பயிர்செய்ய முன்வராததால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆகையால் இப்போதும் அதே குத்தகையை கொடுப்பது என்பது சரியல்ல. அதனால் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. 15 ஆண்டுக்கு முன்னால் இருந்த ஏக்கருக்கு 120 ரூபாய் என்ற குத்தகையை கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்து, நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தில் அதிகமான விவாதம் இருக்காது என்று நான் கருதினேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களும், திரு. பழனி

† மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



சாமி அவர்களும் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதற்கெல்லாம் சரியான பதில் அளிக்கின்ற வகையில் மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொன்னார்கள்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே இது ஒரு கார்ப்பரேஷனாக அமைக்கப்பட்டு, அதற்கு சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டு, அந்த சட்டதிட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த அவையிலே அதற்கு ஒப்புதலும் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது வந்திருக்கிற இந்த திருத்தம் அந்த கார்ப்பரேஷனால் கையகப்படுத்தப்பட்ட 3,092 ஏக்கர் நிலத்திற்கு இடையிடையே இருக்கிற சுமார் 760 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துக் கொள்வது பற்றியது. இடையிடையே இருக்கிற நிலங்கள் 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று இல்லாமல் 56 சென்ட், 72 சென்ட், 25 சென்ட், 18 சென்ட் என்று ஒரு ஏக்கருக்கு உட்பட்ட நிலங்கள் 38 பேர்களுக்கு சொந்தமாக இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் வேறு சொந்த நிலங்களும் இருக்கின்றன. இந்த துண்டு நிலங்கள் 3,000 ஏக்கருக்கு இடையிடையே இருப்பதால் ஏற்கெனவே இவைகளையும் சேர்த்து ஒன்றாக குத்தகைக்கு எடுக்கப்பட்டது. அதை இப்போது மேலும் 5 ஆண்டு காலத்திற்கு இந்த கார்ப்பரேஷன் குத்தகைக்கு எடுத்துக் கொள்வது என்ற அளவிலே இந்த திருத்தம் இருக்கிறது.

அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தில் 20 ஆண்டு காலத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கே பேசும்போது உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பேசினார்கள். நாம் சொல்லியிருப்பது 5 ஆண்டு காலம். ஆகவே, அவர்களுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையிடையே இருக்கிற நிலங்கள் மிகவும் குறைவானவைதான். ஆகவே, 5 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களுக்கு வேறு நிலங்களும் இருக்கின்றன. ஆகையால் அந்த நிலங்களை நஷ்டயீடு கொடுத்து நிரந்தரமாக அரசாங்கம் எடுத்துக் கொண்டால் என்ன என்று திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் கேட்டார்கள். அதையும் பரிசீலனை செய்து, எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

இந்த கார்ப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு காலம் ஆகிறது. இந்த ஓராண்டு காலத்தில் ஏறத்தாழ 15 லட்சம் ரூபாய் லாபம் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சர்க்காருக்கு சொந்தம். இந்த கார்ப்பரேஷன் உற்பத்திச் செய்யும் பொருள் எல்லாம் சர்க்காருக்குச் சொந்தம்; கையகப்படுத்தக்கூடிய நிலங்களும் அரசாங்கத்திற்குத்தான் சொந்தம். 5 ஆண்டு கால குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப் படக்கூடிய நிலங்களும் அரசாங்கத்தின் பொறுப்பில்தான் இருக்கும்.

ஏனென்றால் இந்த கார்ப்பரேஷன் அரசாங்கத்தைச் சேர்ந்தது. எனவே, இந்த மசோதாவை ஏற்று, நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், ஒரு கிளாரிபிகேஷன். குத்தகைக்கு விட்டிருக்கிற நிலங்களில் ஒரு தனியாருக்கு ஆயிரம் எக்கர் வரை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் 5 எக்கருக்குக் குறைவாக யார், யார் நிலம் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்ய திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அவர்களுக்கு தனியாக 5 எககர், 6 எககர் நிலம் இருக்கிறது. ஏற்கெனவே கார்ப்பரேஷன் கையகப்படுத்தியிருக்கிற நிலத்திற்கு ஊடே இருக்கிற நிலம்—ஒரு எக்கருக்கு உட்பட்ட நிலம் உள்ளவர்கள் 38 பேர். அவர்களிடம் இருந்து குத்தகைக்கு எடுக்கப்படும் நிலம் 27 எக்கர். அவர்கள் அரை எக்கர், கால் எக்கர் என்று நாற்றங்காலுக்கு வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். 1 முதல் 3 எக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் 85 பேர்கள். அவர்களிடம் இருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலம் 166.14 எக்கர். அவை போக, மீதி நிலம் ஏறத்தாழ 2,123 எக்கர் வடபாதிமங்கலத்திற்குச் சொந்தமாக இருக்கிறது. இந்த கார்ப்பரேஷன் நிலத்திற்கு ஊடே சிறு சிறு துண்டு நிலங்களாக இருப்பவைகளை நாம் குத்தகைக்கு எடுத்துக் கொள்வதுதான் இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேறு நிலங்கள் இருக்கின்றன. ஆகையால் இதை ஏற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—"பிரிவு 2 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

திரு. என். கே. பழனிசாமி: திரு கே. எம். சுப்பிரமணியம் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய திருத்தங்கள் முன்மொழியப் படவில்லை.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



*New Clause 3.*

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Sir, I move—

"After clause 2, *add* the following clause, namely:—

"3. Repeal: The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Ordinance, 1975 (Tamil Nadu Ordinance 2 of 1975) is hereby repealed."

New Clause 3 was put and carried.

*Clause 1.*

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 1 do stand part of the Bill"

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Sir, I move—

In clause 1, in sub-clause (1), *for* the words and figures "Fourth Amendment Act, 1974", *substitute* the words and figures "Amendment Act, 1975".

The amendment was put and carried.

Clause 1 as amended, was put and carried.

*Enacting Formula*

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the enacting formula do stand part of the Bill".

THE HON. THIRU A. P. DHARMALINGAM: Sir, I move—

In the enacting formula, *for* the words "Twentry-fifth year", *substitute* the words "Twenty-sixth year".

The amendment was put and carried.

The enacting formula, as amended, was put and carried.

**The Long Tile was put and carrried.**

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, "இந்த சட்ட முன்வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த திருத்த மசோதா சட்டமாக இந்தச் சபையில் நிறைவேறக்கூடிய நிலையில் இருக்கிறது. எங்கள் கட்சியின் சார்பில் இருக்கக்கூடிய கருத்துக்களை ஏற்கெனவே திரு. அழகர்சாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் இன்றைக்கு அரசுக்கு ஏதோ வருமானம் இருக்கிறது என்று சொல்கிற வாதம் சரியான வாதமாக இருக்கமுடியாது. நாம் ஏற்கெனவே உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்ததன் நோக்கமே—ஒரு சிலரிடத்தில் நிலம் குவிந்து இருக்கக்கூடாது என்கிற அடிப்படையில்தான். கரும்புக்காக ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த விதிவிலக்கை ரத்து செய்கிறோம் என்றால் அதை ரத்து செய்துவிட்டு அந்த நிலங்களை சர்க்கார் கையகப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும். அதைவிட்டு ஒரு குடும்பத்திற்குச் சொந்தமான இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஏக்கரா நிலத்தை எடுத்து அவர்கள் கையிலேயே வைத்து—அதை குத்தகை என்ற அடிப்படையில் எடுத்து வைத்துக்கொள்வது நம் கொள்கைக்கே விரோதமாக இருக்கிறது. ஆகவே அதைப் புனர் பரிசீலனை செய்தாகவேண்டும்.

அது மாத்திரம் அல்ல, சிறு சிறு விவசாயிகளுக்கு கரும்பு விவசாயம் என்றால் மறு வருஷம் நஞ்சையாகத்தான் இருக்கும். சில சமயம் இரண்டு மூன்று ஆண்டுகள் நஞ்சையாகவே இருக்கும். அந்த சிறு விவசாயிகளுக்கு நம் கொள்கை அடிப்படையில் நஞ்சையாக அவர்கள் பயிரிட்டுக் கொள்ளக்கூடிய நன்மை ஏற்படுகிற வகையில் ஒப்படைக்கப்பட வேண்டுமே தவிர அவற்றையும் கார்ப்பரேஷன் குத்தகை என்ற அடிப்படையில் வைத்துக் கொள்வது—இதனால் அரசுக்கு லாபம் வருகிறது என்று சொல்கிற வாதம் பொருந்தாது. இது ஏற்கெனவே சர்க்கார் வகுத்துக்கொண்டிருக்கிற கொள்கைக்கு விரோதமாக இருக்கிறது என்பதை இந்த மூன்றும் திருத்த மசோதாவின் மூன்றாவது வாசிப்பில் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம் என்று குறிப்பிடுகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : மூன்றாவது வாசிப்பில்—ஒரே ஒரு விளக்கம். நாம் சர்க்கரை ஆலைகளுக்கு அளித்திருந்த விதிவிலக்கை நில உச்சவரம்புச் சட்டத்தில் இருந்து நீக்கி விட்டோம். இதன் காரணமாக வடபாதிமங்கலம் பண்ணைக்குச் சொந்தமான இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நிலத்திற்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கை நாம் ரத்து பண்ணி விட்டோம். ஆனால் ஒரு பக்கம் ரத்து பண்ணிவிட்டு மறுபக்கம் அந்த நிலத்தை அவர்களிடம் இருந்து லீசுக்கு எடுத்துக்கொண்டுள்ளதைப்போல கார்ப்பரேஷன் லீசுக்கு எடுத்திருக்கிறதா ? அல்லது அந்த நிலத்தை அரசாங்க உடைமையாக்கி கார்ப்பரேஷனுக்குக் கொடுத்திருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, திரு. கே. டி. கே. அவர்கள் பேசியது ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. வேதனையாகவும் இருக்கிறது. அவருக்கு யாரோ தவறான தகவல்களைக் கொடுத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். திரு. என். கே. பழனிசாமி அவர்கள்



பேசும்போது 5 வருடம் என்று லீசுக்கு எடுத்திருப்பது சரியல்ல, அதை 20 வருஷ லீசாக ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். இப்படி அவர்களுக்குள்ளேயே முரண்பட்ட வாதம்.

கார்ப்பரேஷன் என்று வைக்க வேண்டுமா என்பது வேறு பிரச்சினை, கார்ப்பரேஷனிடம் இருக்கக்கூடிய நிலத்தை எல்லாம் எடுத்து விவசாயிகளிடம் கொடுத்துவிடவேண்டுமா என்பது வேறு பிரச்சினை.

இப்போது இந்த மன்றத்தின்முன் வந்துள்ள பிரச்சினை எல்லாம் உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்திருப்பதன் காரணமாக அவை அரசாங்கத்தின் கையில் வந்திருக்கிறது. அதை நாமே ஒரு பண்ணையாக வைத்து நம்முடைய சொந்த அதிகாரிகளைப்போட்டு நிர்வாகத்தை அமைத்து வேளாண்மை செய்கிறோம். இந்த மொத்த நிலத்திற்கு இடையே சிறு சிறு விவசாயிகளுக்கு கொஞ்சம் கொஞ்சம் நிலம் இருக்கிறது. அதைப்பற்றிக்கூடச் சொன்னார்கள். அந்த நிலங்கள் எப்படி வந்தது ? பினாமியாக உருவாக்கப்பட்ட ஒன்றுதான் என்று அந்தப் பக்கத்தில் இருந்தே சொன்னார்கள். அப்படிச் சொல்லி விட்டு இதை எதிர்த்தார். அது வேறு விஷயம். நாம் இந்தச் சிறு சிறு நிலங்களை விட்டுவிடுவோமானால் பெரும் நிலச்சுவான்தார்களால் பினாமியாக அங்கங்கே உருவாக்கப்பட்ட இந்த நில உடைமைகள் விடப்பட்டுப்போகும். இதை எப்படி கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரிக்கிறது என்று புரியவில்லை. நாம் இந்த மொத்தப் பண்ணையிலும் சீராக ஒரே மாதிரியான பாசனத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். இன்றைக்கு நடுநடுவேயுள்ள சிறு சிறு நிலங்களை விட்டு விட்டால் நீர்ப்பாசன வசதி முறைகளே அடியோடு பாழ்பட்டுப்போகும். ஆகவேதான் நாம் இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக இந்த நிலங்களையும் சேர்த்து மொத்தமாக 5 வருஷ லீசுக்கு எடுத்துக்கொள்ள இந்தச் சட்டம் வகை செய்கிறது. இதை ஒரு பக்கம் எதிர்க்கிறபோதே மறுபக்கம் 5 வருஷம் போதாது, 20 வருஷ லீசுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திரு. பழனிசாமி திருத்தத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டார். அதன் மர்மம் தெரியவில்லை.

கம்யூனிஸ்டு கட்சி தெரிவித்திருக்கிற எதிர்ப்பை ஏற்றுக்கொண்டால் முன்னால் இருந்த முதலாளி அங்கங்கே தனித்தனியாக உருவாக்கியிருக்கிற நிலத்தை எல்லாம் திருப்பி கொடுத்துவிடும்படியாகத்தான் இருக்கும். கம்யூனிஸ்டுக் கட்சி அந்த எதிர்ப்பை உருவாக்க வேண்டாமென்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) நான்காம் திருத்த சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (7) 1975-76—ஆம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### (அ) நிதி கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"நிதிக் கோரிக்கை எண் 6 —பத்திரப்பதிவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,86,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, I move—

" That the allotment of Rs. 1,86,05,000 under Demand No. 6—Registration—be reduced by Rs. 100 ".

THIRU N. DENNIS : Sir, to discuss about the necessity to adopt measures to restrain the registration of trasfer of properties outside Tamil Nadu, I move—

" That the allotment of Rs. 1,86,05,000 under Demand No. 6—Registration—be reduced by Rs. 100 ".

திரு கே. ஏ. வகாப்: தலைவர் அவர்கள், நிலங்களின் மதிப்பிற்கு மேலும் விலையை அதிகபடுத்தும் முறையில் அமைந்திருக்கின்ற நில மதிப்பு நிர்ணய விலைகளைப் பற்றி விவாதிக்க........

"நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,86,05,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to confirm the 240 listed section writers, I move—

" That the allotment of Rs. 1,86,05,000 under Demand No. 6—Registration—be reduced by Rs. 100."

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.—

"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,78,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."







THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 5,78,27,000 under Demand No. 32—Welfare of the Backward Classes, etc.,—be reduced by Rs. 100 ".

திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்தங்கிய மக்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்த..........

"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,78,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss the need to fix the monthly hostel allowance to backward class students at Rs. 100 p.m., I move—

" That the allotment of Rs. 5,78,27,000 under Demand No. 32—Welfare of the Backward Classes, etc., be reduced by Rs. 100."

THIRU M. A. LATHEEF : Sir, to discuss about the need to have a separate Directorate to look after exclusive problems of religious minorties in the State, I move—

"That the allotment of Rs. 5,78,27,000 under Demand No. 32—Welfare of the Backward Classes, etc., — be reduced by Rs. 100 ".

திரு. ஏ.ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை கீரமங்கலம் வகை வல்லநாட்டுச் செட்டியார் இனத்தைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல் சம்பந்தமாக விவாதிக்க....

"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,78,27,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே.பி. கோபால்: தலைவர் அவர்களே, படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டிய தன் அவசியம் பற்றி விவாதிக்க......

"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ.5,78,27,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவுத்துறை—மானியக் கோரிக்கை எண் 32—பிற்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சிடப்பட்டு பேரவை அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு துறைகளும் 1974–75-ல் ஆற்றிய பணிகளும், 1975–76-க்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றிய குறிப்புகளும் அவற்றில் அடங்கியிருக்கின்றன. அதன் மேல் மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல கருத்துக்களைக் கேட்டு பின்னால் பதில் அளிக்கிற முறையில் நான் எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை வரவேற்று இந்த நிலையில் அமைகிறேன்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, நடப்பாண்டிற்கு பின் தங்கிய மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ள நிதிகளுக்கும் இதர பிரச்சினைகளுக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய பல கருத்துக்களை இந்த மன்றத்தில் வைப்பதற்கு முன் வருகிறேன்.

என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தும் வகையில் இந்தக் கருத்துக்களை அரசு ஏற்க வேண்டும் என்று ஆணித்தரமாக எடுத்துச் சொல்லும்முகத்தான் என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லுகிறேன்.

திருச்சி மாநகரிலும், மதுரை, சென்னை போன்ற பகுதிகளிலும் செயற்கை வைரத் தொழிலில் ஏறக்குறைய 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த குடும்பங்கள் தற்போது ஈடுபட்டிருக்கின்றன. இந்தச் செயற்கை வைரம் உற்பத்தி செய்கின்ற தொழிற்கூடம் வெட்டுப்பாளையத்தில் அமைந்திருக்கிறது. உற்பத்தியாகின்ற செயற்கை வைரங்கள் நம்முடைய மாநிலத்திற்கு அதிகம் பயன்படுகின்றனவா என்றால் இல்லை என்றுதான் நான் சொல்வேன். ஏனென்றால், இங்கே உற்பத்தியாகின்ற செயற்கை வைரங்களை விநியோகிக்கின்ற பொறுப்பு வட மாநிலத்தில் உள்ள ஒரு கம்பெனிக்குத்தான் தற்போது இருக்கிறது. ஆகவே, உற்பத்தியாகின்ற பெரும் பகுதியான செயற்கை வைரங்களில் தரமுள்ள வைரங்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டு, தரம் இல்லாத நாலாந்தர, ஐந்தாந்தர செயற்கை வைரங்கள் தான் இங்கே தமிழகத்தில் விநியோகிக்கப்படுகின்றன என்று முதல் குற்றச்சாட்டை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். செயற்கை வைரத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பின்தங்கிய மக்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைப் பற்றியும், அந்தத் தொழில் நலிந்துகொண்டு வருவதைப் பற்றியும், தொழிலுக்கேற்ப ஊதியம் வழங்கப்படுவதில்லை, கிடைப்பதில்லை என்பது குறித்தும் வலியுறுத்தி முதலமைச்சர் அவர்



களுக்கு 4—4—1973-லும், 12—4—1973-லும், 9—6—1973-லும், 10—9—1973-லும், 15—9—1973-லும், ஆக பட்டியல் போட்டே தங்கள் கோரிக்கைகளைப் பல முறை வலியுறுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. இந்தக் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. அதே நேரத்தில் அவர்கள் செய்கிற வேலைக்குப் போதுமான ஊதியம் தரப்படவில்லை. தொழிலாளர்களுக்குரிய சட்டம் அவர்களுக்கு விஸ்தரிக்கப்படவில்லை. ஆகவே, பல்வேறுபட்ட கோரிக்கைகளை அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனாலும், 1970-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அவர்கள் வலியுறுத்திக் கேட்டு வருகிற கோரிக்கைகள் அரசாங்கத்தின் காதில் எட்டாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதற்கு வேண்டிய பரிகாரம் தேடப்படாமல் இருப்பதற்கும் என்ன காரணம்? இவ்வளவு காலதாமதம் ஆகியும் அந்தக் கோரிக்கைகளை அனுப்பியவர்களுக்கு ஒரு பதிலும் அனுப்பப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? பின்தங்கிய மக்களுக்கு என்ன என்னவோ செய்கிறோம், உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று எல்லோரும் மார் தட்டிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே தவிர, இந்தப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கான பரிகாரத்தைக் காண எந்த விதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை, இந்த அரசு எடுக்கத் தயங்குகிறது என்று குற்றச்சாட்டை இந்த மன்றத்தில் சாட்ட விரும்புகிறேன்.

திருச்சியிலும், மதுரையிலும், கோவையிலும், சென்னையிலும் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர் குடும்பங்கள் தற்போது வேலை இல்லாமல்—வருவாய் இல்லாமல் அவதிப்படுகின்றன. அதை எண்ணிப் பார்த்து இந்தத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அரசாங்கம் கடன் உதவி அளிக்க வேண்டும்; அவர்கள் வேலை செய்ய நாட்கள் கிடைக்க முறைப்படுத்த வேண்டும். உற்பத்தி செய்கிற தரமான செயற்கை வைரங்களை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க வேண்டும்.

பின் தங்கிய நலத் துறை அமைச்சரே தொழிலாளர் நலத்துறை அமைச்சராகவும் இருப்பதால் இந்தத் தொழிலாளர்களுக்கு என்ன பரிகாரம் தேட முடியுமோ, அளிக்க முடியுமோ அதை விரைவில் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம்முடைய நாட்டில் எத்தனையோ பின்தங்கிய சமுதாயங்கள் பல இருக்கின்றன. சமுதாயத்தில் பின்தங்கியவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் ஏராளமானோர் இருக்கின்றனர். இந்த நிலையில், இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் இந்திய அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அங்கே வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்கள் இங்கே வருகை தந்தும் நுழைந்துகொண்டு இருக்கின்றனர்.

அங்கே நல்ல முறையில் வாழ்ந்துகொண்டிருந்த குடும்பங்கள் தாயகத்திற்குத் திரும்பி வந்தவுடன் மிகுந்த ஏமாற்றம் அடைந்த நிலையில் தொழில் வழியின்றித் தவிக்கிறார்கள். காரணம், அங்கே

போட்டுக் காட்டப்பட்ட சினிமாப் படங்களைப் பார்த்துவிட்டு—இங்கே வீடு கட்டும் திட்டம், வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம், பட்டா வழங்கும் திட்டம் போன்றவைகள் பல இருக்கின்றன என்ற கற்பனைக் கோட்டையில் உலவிக்கொண்டிருந்தார்கள். இங்கே வந்ததும் அவர்கள் கட்டிய கற்பனைக் கோட்டை தரைமட்டமாக ஆக்கப்பட்டு, வறுமையில் வாடி துடிக்கின்ற நிலைக்கே ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருப்பது நல்லதல்ல.

இலங்கையில் இருந்து வருகின்ற நம்முடைய தமிழ்ச் சமுதாயம் பெரும்பாலும் பின்தங்கிய மக்கள்தான். அவர்கள் சமுதாயத் துறையில் மட்டுமல்ல பொருளாதாரத் துறையிலும் மிகமிகப் பின்தங்கிய மக்கள், அவர்களுக்கு வாழ வழி வகுத்து, வீட்டு மனைகள், முதல் கடன், வேலை வாய்ப்புகள், மற்ற உதவிகளை எல்லாம் இந்த அரசாங்கம் செய்து தருகின்றதா என்றால் இல்லை என்று தான் நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

கடன் தொகை பெறுவதற்காக அவர்கள் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அலைகிறார்கள். வட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அலைகிறார்கள். கோட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அலைகிறார்கள். எங்கு சென்றும் நிவாரணம் கிடைக்காமல் வேதனைப்பட்டு புழுவாய்த் துடிக்கின்றனர். இதை நாம் மறந்துவிடக்கூடாது.

(பிற்பகல் 12-30)

அப்படிப்பட்டவர்கள், வறுமை, பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களாகவும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும்தான் இருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து இந்த அரசாங்கம் மறந்துவிடக் கூடாது.

இந்த மாமன்றத்தில், பட்ஜெட் விவாதத்தில் என்னுடைய நண்பர், எங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் இளஞ்செழியன் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். திருவரங்குளத்திலும், வம்பன் காலனியிலும் இருக்கின்ற இலங்கை அகதிகள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற குறையை எடுத்துச் சொன்னபோது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பட்டினியால் சாகவில்லை, வியாதியால், வயிற்றுப் போக்கால் செத்தார்கள் என்ற ஒரு கருத்தை எடுத்து வைத்தார்கள். என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், அந்தத் திருவரங்குளத்திலும், வம்பன் காலனியிலும் ஏறத்தாழ 264 குடும்பங்கள் வசிக்கின்றன. மொத்தம் 2,000 பேர் அங்கேயிருக்கிறார்கள். இந்த 2,000 பேருக்குப் போதுமான உணவு கிடைக்கிறதா என்றால், இல்லை. குடிநீர் கிடைக்கிறதா என்றால், இல்லை. கடன் கிடைக்கிறதா என்றால், இல்லை. ஆகவே வாழ்வழியின்றி, வருவாயின்றி பல நாட்கள் சிலர் பட்டினி கிடந்து செத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்தில் குற்றம் சாட்ட விரும்புகிறேன். செத்தவர்களில் பலபேர் உணவில்லாமல் வயிற்றுப் பசியால், வாழ வழியில்லாமல், பல நாட்கள் வாடியிருந்து .. .. .. ..





மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் ஒரு கிராமத்தில் நடந்திருக்கிற சம்பவத்தைப் பற்றி விவரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கும் இந்தத் துறைக்கும் என்ன சம்பந்தம் என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நான் சொல்வது, அவர்களும் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அகதிகளாக வந்தவர்கள். பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், ஆகவே, அப்படிப்பட்ட மக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்தத் துறைக்கும் அரசுக்கும் இருக்கிறது என்பதால்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பல்வேறுபட்ட ஜாதிக்காரர்கள் இந்தத் துறையிலே வருகிறார்கள். இந்தத் துறைக்கென்ன சில பணிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணிகளிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற பணிகளெல்லாம் ஒருவேளை கிடையாது. ஆகவே, அவற்றை மற்ற விவாதங்களிலே வைத்துக் கொண்டு, இந்தத் துறையைப் பற்றி நல்ல கருத்துக்களை, ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : பிற்பட்டோர் நலன், தாழ்த்தப்பட்டோர் நலன் எல்லாம், கல்வி வசதியை அடிப்படையாகக் கொண்ட நலன்கள். அவற்றிலே, அவர்கள் பெறுகிற சில வசதிகளைப் பற்றி வரும் தொழில் துறையையெல்லாம் பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இத்துறைகள் கல்வி, கல்வி முன்னேற்றம்பற்றி கவனிக்கின்ற, கல்வி இலாகாக்கள்.

திரு. கு. காமாட்சி : நண்பர் சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசும் பொழுது, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த இளஞ்செழியன் அவர்கள் பேசும்பொழுது பட்டினியால் செத்தார்கள் என்று சொன்னதாகச் சொல்லி, அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சரவர்கள் பட்டினியால் சாகவில்லை, நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கிறார்கள் என்று சொன்னதைச் சொல்லி, இப்பொழுது பழையபடியே அவர்கள் பட்டினியால் தான் செத்தார்கள் என்று இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள். அதை ஆதாரத்தோடு கூறினால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

(திரு. துரைமுருகன் தலைமை)

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்கள், தொழிலாளரைப் பற்றி நான் இங்கே குறிப்பிட வேண்டாமென்று சொன்னார்கள். பொற்கொல்லர் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ? அவர்கள் பிற்பட்ட வகுப்பிலே வருகிறார்களா இல்லையா ? ஆகவே, ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால் சமுதாயம் அழிந்துவிட முடியாது. பொற்கொல்லர்கள் எப்படி தொழிலைச் செய்கிற காரணத்தினால் பின்தங்கிய வகுப்பினர்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1975 மார்ச் 11

என்று சொல்கிறார்களோ, அதேபோல் செயற்கை வைர உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டவர்களும் பின்தங்கியவர்கள். அதைப் பற்றி வாதாட இங்கே எனக்கு உரிமையும், கடமையும் இருக்கிறது என்பதால் அதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு காமாட்சி அவர்கள் என்ன ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசுகிறீர்கள் என்று கேட்டார்கள். என்னிடம் ஏராளமான ஆதாரமிருக்கிறது. இந்த மாதிரி நடந்ததை நிரூபிக்க என்னிடம் ஏராளமான ஆதாரமிருக்கிறது. இந்த மன்றத்திலுள்ளவர்களைக் கொண்ட சர்வகட்சிக் குழு அமைக்கட்டும். நாம் திருவரங்குளம் செல்வோம், வம்பன் காலனிக்குச் செல்வோம். அங்கே இருக்கிற பொதுமக்களிடம் வாக்குமூலம் வாங்குவோம், அங்கேயிருக்கிற சங்கத் தலைவர் முருகையாவிடம் வாக்குமூலம் வாங்குவோம் .. .. .. ..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : எங்கெங்கே போகலாம், எங்கெங்கே வாக்கு மூலம் வாங்குவது என்பதல்ல பிரச்னை. நீங்கள் டிமாண்டிலே பேசுங்கள்.

திரு. கு. காமாட்சி : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பட்டினியால் சாகவில்லை, நோய்வாய்ப்பட்டு செத்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இவர் திரும்பவும் பட்டினியால்தான் செத்தார்கள் என்று சொல்கிறார். .. .. .. ..

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் சர்வ கட்சிக் குழு ஒன்றையமைத்துப் பரிசீலனை செய்யத் தயார் என்றால், நான் இதற்குப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். அரசு தயாரா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஏற்கெனவே சொன்னேன், இதற்கும் இந்தக் குழு போடுவதற்கும், என்னுடைய இலாகாவிற்கும் சம்பந்தமே கிடையாது. இலாகா சம்பந்தமாகப் பேசுங்கள், அதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அங்கே வாழ்கின்ற மக்கள் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பின் தங்கிய சமுதாயத்திலே இருப்பதால்தான் இந்த இலாகாவைப் பற்றி பேசுகிறேனே தவிர, நான் ஒன்றும் விவரம் தெரியாமல் பேசவில்லை. சமுதாயத்திலே பின்தங்கியவர்களுக்கு இந்த இலாகா கடமைப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவரவர்களே, இரண்டு இலாகாவைப் பற்றியும் விவரமாகச் சொன்னேன். கல்வி, கல்வியினுடைய முன்னேற்றத்தைப் பற்றி, அந்த அமைப்பிலுள்ளவைகளைப் பற்றி, இந்த இலாகாக்கள் கவனிக்கின்றன. பின்தங்கியவர்களுக்கு அந்த விஷயத்தில் சலுகை அளிப்பதுபற்றி. தொழிற்செய்வதற்கென அதிலே ஜாதி கிடையாது. தொழிலாளரைப் பாதுகாக்க தொழிலாளர் நலத் துறையிருக்கிறது. அதற்குண்டான வாதங்களை அந்தச் சமயத்திலே வைக்கவேண்டுமென்று நான்தான் முன்பே குறிப்பிட்டேன்.



1975 மார்ச் 11]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அதற்காகத்தான் பதில் சொன்னேன், பொற்கொல்லர்கள்..... (மணியடிக்கப்பட்டது) * என்ன ஐயா

மாண்புமிகு மாற்றுத் தலைவர் ( திரு. துரை முருகன்) : * என்ன ஐயா என்றெல்லாம் சொல்லக் கூடாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஐயா, என்பது நல்ல தமிழ்ச் சொல்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : ஐயா என்பது நல்ல தமிழ்ச் சொல்தான். அதற்கு முன்னால் சொன்ன வார்த்தையை நடவடிக்கைகள் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஐயா என்பது மரியாதையான சொல்.

MR. CHAIRMAN (THIRU DURAI MURUGAN) : Come to the subject.

THIRU P. SOUNDARAPANDIAN : It is within the subject. I am dealing with the subject and I am not going out of the subject.

ஆகவே, பொற்கொல்லர்கள் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். நகைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். தொழில் ரீதியாகப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் நகை செய்கின்ற தொழிலாளிகள் சமுதாய ரீதியில் பார்க்கிற நேரத்தில் பொற்கொல்லர்கள். அப்படிப்பட்டவர்கள்தான் செயற்கை வைரத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் பின் தங்கிய இலாகாவிற்குப் பொறுப்பிருக்கிறது என்ற காரணத்தினால்தான் சுட்டிக் காட்டினேனே தவிர, விவரம் தெரியாமல் சொல்லவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, நமது அரசாங்கம் என்னென்ன நிவாரணம் அளிக்க வேண்டுமோ அவற்றைச் செய்துதர வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பிலிருக்கிறது என்று சொல்கிறார்கள். எல்லா உறுப்பினர்களும், எல்லா மானியத்திலும் பேசுவதற்கு வாய்ப்பிருக்காது. ஆகவேதான், இரண்டு வழியிலும், சமுதாயம் என்ற வகையிலும், தொழில் என்ற வகையிலும் சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால்தான் இங்கே எடுத்து வைக்கிறேனே தவிர, வேறல்ல என்பதை தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பின்தங்கியவர்கள் நீண்ட காலமாகக் குடியிருப்பார்களானால், அவர்கள் குடியிருக்கிற நிலம் அரசாங்கப் புறம்போக்காக இருந்தால் பட்டா செய்து கொடுப்பதாக அடிக்கடி அரசு கூறுகிறது.

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது

என்னைப்பொறுத்தவரையிலும் இந்தத் திட்டத்தை வரவேற்றாலும் அதை நிறைவேற்றுகின்ற நேரத்தில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாகும். உதாரணத்திற்கு ஒன்றை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தில், சின்ன தாராபுரத்தில், வெங்கடாபுரத்தில் ஏறக்குறைய 40 குடும்பத்தினர், பின்தங்கியவர்கள், அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறார்கள். சர்வே நம்பர் 240–பி, விஸ்தீரணம் 1 ஏக்கர் 49 செண்ட். இந்த 1 ஏக்கர் 49 செண்ட்டில் ஏறத்தாழ 49 குடும்பங்கள் பல்லாண்டுகாலம் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த இடத்தை பட்டா செய்துதர வேண்டுமென்று 22 முறை மனு கொடுத்திருக்கிறார்கள். ஒரு முறை, இரண்டு முறை அல்ல, நாம் வரலாற்றிலே பார்க்கிறோம், கஜினி முகம்மது 17 முறை நம்முடைய நாட்டைப் பிடிக்கப் படையெடுத்தானாம். அந்த ஊர் மக்கள் அந்த இடத்திற்குப் பட்டா தரவேண்டுமென்று 22 முறை படையெடுத்திருக்கிறார்கள். யார் யாருக்கு அவர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் முதலமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்திருக்கிறார்கள், ரெவின்யூ துறை அமைச்சரிடம் கொடுத்திருக்கிறார்கள் . . . . . .

திரு. கு. காமாட்சி : கஜினி முகம்மது கொள்ளையடிக்கத்தான் வந்தான் என்று சரித்திரத்திலே பார்க்கிறோம். ஆனால் நீங்கள் நாட்டைப் பிடிக்க என்று சொல்கிறீர்களே என்றுதான் கேட்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவர்கள் நாட்டைப் பிடிக்கப் படையெடுத்தார்கள், இவர்கள் வீட்டைப் பிடிக்கப் படையெடுத்தார்கள்.

திரு. கு. காமாட்சி : கொள்ளையடிக்க வந்ததாகத்தான் சரித்திரம் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திரு. காமாட்சிக்கு—அவன் நாட்டைப் பிடிக்கத்தான் படையெடுத்தான் என்று வரலாறு இருக்கிறது—ஆதாரம் வேண்டுமானால் தருகிறேன். அது மட்டுமல்ல அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள், சப் கலெக்டரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள், கல்வியமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள், பொதுப்பணித் துறை அமைச்சரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆக, 22 முறைகள் மனு கொடுத்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை யென்பதை எண்ணும்போது நாம் இயற்றுகின்ற எந்தச் சட்டமும், சொல்கின்ற எந்தக் கொள்கை விளக்கமும் ஏட்டளவிலேயும் ஏட்டளவிலேயும்தான் இருக்கிறதே தவிர நாட்டளவில் எட்டுவதற்கு, நாட்டு மக்களுக்குக் கிட்டுவதற்கு எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுவது எனது கடமை ஆகும்.



இந்தக் குடும்பங்கள் கொடுத்த மனுக்கள் எங்கே போயிற்று ? இதுவரையில் நடவடிக்கை எடுக்காமல் ஊறுகாய்ப்பானையில் போட்ட ஊறுகாயைப்போல் ஊறிக்கொண்டிருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : 22 தடவைகள் மனு கொடுத்ததாகவும் இன்னும் நிலம் கொடுக்கப்படவில்லையென்றும் சொன்னார்கள். நிலம் கொடுப்பது ஒன்று, இருக்கிற நிலம் பஞ்சாயத்துக்களிடம் இருக்கிற வெஸ்டட் லேண்ட் ஆக இருக்க வேண்டும். அது ஒரு பகுதி. அல்லது பஞ்சாயத்துக்களிடம் இல்லாத ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே அவர்கள் பொறுப்பிலே இருக்கக்கூடிய நிலமாக இருக்கவேண்டும். அது ஒரு பகுதி. பொது மக்கள் பயன்படுத்துவதற்காக இருக்கக்கூடிய நிலமாக இருக்கவேண்டும். அது ஒரு பகுதி. சமுதாய நலத்திற்குப் பயன்படுத்துகின்ற நிலமாக இருக்கவேண்டும். அது ஒரு பகுதி. இப்படிப்பட்ட இடங்களிலே பொதுமக்கள் தெரிந்தோ தெரியாமலோ ஏழை மக்கள் வீடு கட்டிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டுமென்றால் இந்த 3 அடிப்படைகளிலேதான் செய்து கொடுக்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் எந்த அடிப்படையிலே இருக்கிற நிலம் அது என்று சொல்லி, அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை, அவர்களுக்கு இருக்கிற தொல்லை இது, அது ஏன் நீக்கப்படவில்லையென்று கேட்டால், பதில் சொல்லலாம். இருக்கின்ற தொல்லைகளினால் காலதாமதம் ஏற்படலாம். 8 நாட்களிலேயே நிலங்களை கொடுக்கப்பட்டிருக்கின்றன, நானே கொடுத்திருக்கிறேன். ஆகவே, தொந்தரவு இல்லாமல் இருந்தால் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : விதி முறைகளின்படி இல்லாமல் என்ன தடை இருக்கிறது அவர்களுக்குக் கொடுப்பதற்கு ? அந்த நிலம் எந்தத் தலைப்பில் வருகிறது என்று அரசு ஆராய்ந்து உரிய பதிலை ஏன் அவர்களுக்குச் சொல்லவில்லை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : அந்த நிலத்தினுடைய சர்வே நம்பர் அவர்களால் கொடுக்கப்பட்டது. அது எந்தப் புறம்போக்கு என்று சொல்லட்டும், அரசாங்கம் பதில் சொல்லத் தயாராக இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அரசாங்க ரெவின்யூ புறம்போக்கு என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மனுவிலே அப்படித்தான் இருக்கிறது. மனுவை வாங்கிப் பாருங்கள். ஆகவே, மனு நீதித் திட்டம் என்று சொல்லிக்கொண்டு ஆங்காங்கே சுற்றுப்பயணம் செய்துகொண்டு, அங்கங்கே வாங்குகிற மனுக்களைப் பரிசீலித்து என்ன, என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அதை எடுத்திருந்தால், மக்களுக்கு உரிய பதில் அனுப்பியிருந்தால் இது போன்ற சிக்கல்கள் வந்திருக்காது, நடைமுறையிலே, பொதுமக்களும் சிரமப்படவேண்டிய சூழ்நிலை இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பொய்ப்புத்தூர் என்ற கிராமத்தில் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் 10, 12 குடும்பங்கள் ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே வீட்டையெல்லாம் கட்டி குடியிருந்துகொண்டு இருக்கிறார்கள். அதிலே என்ன சிக்கல் ஏற்பட்டிருக்கிறதென்றால்—அவர்கள் குடியிருக்கிற வீட்டை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆர்ஜிதம் செய்துகொடுக்க—அவர்களுடைய வீட்டை காலிசெய்துவிட்டு இவர்களை அங்கே அங்கே அமர்த்தவேண்டுமென்ற புரப்போஸல் (proposal) நடந்துகொண்டிருக்கின்றது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த பொய்ப்புத்தூர் கிராமத்திற்கு நானே சென்று பார்த்தேன். அது தனிப்பட்டவருடைய நிலமாக இருந்தது. அந்த இடத்திலே அரிசன மக்கள் வீடு கட்டிக் கொள்ளவேண்டுமென்ற முறையிலே இடத்தைக் கேட்டு மனு கொடுத்தார்கள், ஆனால் அவர்கள் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். அங்கே பின்தங்கிய மக்கள் குடியிருப்பதால் அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று நான் சமாதானம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே அது அவர்களுக்கே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அது நல்லபடியாக நடந்திருந்தால் நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஏன் என்றால் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மக்கள் அங்கே குடியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டிருக்கிறார், துணை கலெக்டர் பார்வையிட்டிருக்கிறார், தாசில்தார் பார்வையிட்டிருக்கிறார்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்துவிடுங்கள் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: குறுக்கீடுகள் எல்லாம் இருந்தன. இன்னும் நிறைய பாயிண்ட்கள் எல்லாம் சொல்லவேண்டும், இன்னும் 15 நிமிடங்கள் வேண்டும். நல இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் பார்வையிட்டிருக்கிறார்கள், நலத்துறையைச் சேர்ந்த தாசில்தார் பார்வையிட்டிருக்கிறார். இத்தனை அதிகாரிகளும் பார்வையிட்ட பிறகு பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மக்கள் குடியிருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகும் இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேறு இடத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆர்ஜிதம் செய்துகொடுக்க முயற்சிக்காமல் அந்த புரப்போஸலை மேலே அனுப்பியிருக்கிறார்கள். இரண்டு சமுதாயத்திற்கும் மோதல் ஏற்படுகிற அளவுக்கு இந்த அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் நானும் அங்கே சென்று சமாதானப்படுத்தியிருக்கிறேன். பின்தங்கிய சமுதாயத்தினருக்கு வீட்டு மனைகள் வழங்கப்படவேண்டுமென்று சொல்கிற அரசு குடியிருக்கிற வீடுகளிலேயே அவர்கள் தொடர்ந்து





வசிப்பதற்கு பட்டா செய்துகொடுப்பதிலும், குடியிருப்பவர்களை அங்கேயே இருக்கச் செய்வதிலும் என்ன தடை இருக்கிறது? அதை ஏன் இன்னொரு இலாகா ஆர்ஜிதம் செய்ய முற்படவேண்டும்? இதற்கு உடனே முற்றுப்புள்ளி வைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? அரசாங்கம் வீட்டு மனைகளுக்குப் பட்டா வழங்குகிற நேரத்திலே, நிலம் ஆர்ஜிதம் செய்கிற நேரத்திலே இருக்கிற சிக்கல்களை உடனடியாகத் தீர்ப்பதற்கும், பின்தங்கிய மக்களுக்கு வீட்டு மனைகளை வழங்குவதற்கும் துரித நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் நாம் பார்க்கிறோம், பின் தங்கியோர் நலனுக்காக இலாகா துவக்கப்பட்டது 1969-ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் நாள். அந்த இலாகாவுக்கு சென்னையிலே மட்டும் அப்போது ஒரு நெறியாளரைப் போட்டிருந்தோம். இந்த மாமன்றத்திலே நானும் மற்ற உறுப்பினர்களும் பின்தங்கியோர் நலத் துறைக்கு அதிகாரிகளும் இன்னும் சில பணியாளர்களும் நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டபோது, 1974-ஆம் ஆண்டு மே திங்கள் 17-ஆம் நாள் அன்று மாவட்ட நல அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே உள்ள மொத்த மக்கள் எண்ணிக்கை 4 கோடியே 34 ஆயிரத்து 200 பேர்கள். இது 1971-ஆம் ஆண்டு கணக்குப்படி.

அதிலே பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 1,15,14,597 பேர்கள். இப்போது இருக்கின்ற அதிகாரிகள் போதுமா? நிச்சயமாகப் போதாது. இந்தப் பணிகளைத் துரிதப்படுத்த இன்னும் கூடுதல் பணியாளர்களை இந்த அரசாங்கம் நியமிக்கவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் இவர்களுக்கு நாம் இலவசமாகக் கருவிகளை வழங்குகிறோம். அவர்கள் சமுதாயத்தில் மட்டுமல்ல, பொருளாதாரத்திலும் மிக மிகத் தாழ்ந்தவர்கள். ஆகவே, அவர்களுக்கு நாம் எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கும்.

1974–75-ம் ஆண்டில் அவர்களுக்கு இலவசமாக தொழில் கருவிகள் வாங்க இந்த அரசாங்கம் ஒதுக்கியிருந்த தொகை ரூ. 6,00,000. நடப்பு ஆண்டில் 1975-76-ல் ஒதுக்கியிருக்கும் தொகை 2,00,000 தான். சமுதாய வளர்ச்சிக்கேற்ப பொருளாதார வருவாய் குறைந்திருக்கும் நேரத்தில் 4,00,000 ரூபாயை இந்த அரசாங்கம் குறைத்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். கிராமப் பகுதியில் வாழ்கின்ற சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம். அவர்களுக்கு இலவசமாகக் கருவிகள் தரவேண்டியது மிக மிக அவசியமாகும். அப்படி இருக்கும் நேரத்தில் ஏன் இந்தத் தொகையைக் குறைத்திருக்கிறீர்கள்? அதற்கு என்ன காரணம் என்பதை இந்த அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இந்தப் பின்தங்கியோர் மானிய விளக்கப் புத்தகத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் புள்ளி விவரங்களையும், தீட்டப்பட்டிருக்கும் திட்டங்களையும் பார்க்கும்போது நாட்டு மக்களுக்கு அதன் பலன் நாள் கடந்துதான் கிடைக் கிறது என்பதை எண்ணும்போது உள்ளபடியே நாம் மெத்த வருத்தப்பட வேண்டும். ஆகவே, இந்தத் துறையில் கூடுதல் அதிகாரிகளை நியமித்து பணியாளர்களை உருவாக்கி பின்தங்கிய மக்களின் நல்வாழ்வுக்கும், பொரு ளாதார ஏற்றத்திற்கும் இந்த அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். என்னுடைய உரையில் குறிப்பிட்ட அத்தனை கருத் துக்களையும் ஆய்ந்து பார்த்து பரிகாரம் காணவேண்டுமென்று வலியுறுத்தி, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ஈ. எம். நடராசன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் நான் கலந்து கொள்ள வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பின்தங்கிய பட்டியலில் உள்ள சவரத் தொழிலாளி, சலவைத் தொழிலாளி, லம்பாடிகள் ஆகியவர்களுக்கு நமது அரசு செய்யும் சலுகை கள் போதாது. அவர்களுக்கு மேலும் பல உதவிகள் செய்ய வேண்டும். அரசாங்க வேலைகளில் அவர்களுக்கு இன்னும் அதிக சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, நான் சார்ந்திருக்கும் கொங்கு வேளாளர் கவுண்டர் சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பொருளாதார ஏற்றத் தாழ்வற்ற, சாதி சமுதாய பேதமற்ற சமுதாயம் காண வேண்டும் என்ற கொள்கையை உறுதியாக ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உண் மையில் எல்லா அரசியல்வாதிகளுமே சாதி உணர்வை வளர்த்து வரு கிறார்கள் என்று உறுதியாகக் கூறுகிறேன். இன்றைய நிலையில் நான் பிறந்துள்ள கொங்கு வேளாளர் இனம் ஒன்றுதான் தமிழ்நாட்டில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

கொங்கு வேளாளர்கள் தமிழகத்தில் சுமார் 45 லட்சம் பேர்கள் உள்ளனர். மொத்த மக்கள் தொகையில் 12 சதவிகிதம் உள்ளனர். கோவை மாவட்ட ஜனத்தொகையில் 65 சதவிகிதம் உள்ளனர். கோவை, சேலம், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் கொங்கு நாடு எனப்படும் வறண்ட பகுதியில் மிகப் பெரும்பான்மையினராக உள்ளனர். இதில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப் பட்ட 9 தாலுகாக்கள் அடங்கி உள்ளன.

கொங்கு வேளாளர்கள் கடும் விவசாய உழைப்பாளிகள், விவசாயத்தை மட்டுமே நம்பி இருப்பவர்கள். கவுண்டர் இனத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் குடும்பத்துடன் காலையில் சூரியன் உதயம் ஆகும் முன்பே நிலங்களுக்குச் சென்று, சூரியன் மறைந்த பின்னர் வீட்டுக்குத் திரும்பும் வரையில் தங்களுடைய நிலத்தில் கடுமையாக உழைக்கும் ஆற்றல் பெற்றவர்கள்.





அடுத்ததாக, பிற்பட்டோர் என்றால் யார் என்று கேட்க விரும்பு கிறேன். படிப்பு, பொருளாதாரம், சமூக அந்தஸ்து ஆகியவற்றில் பின் தங்கிய நிலையில் இருப்பவர்களே பிற்பட்டோர் பட்டியலில் இருப்பதே நியாயமான காரணமாகும். இவைகளில் எந்தத் தகுதியும் இல்லா கொங்கு வேளாளர்கள் முன்னேறிய ஜாதி என்பது குறித்து அந்த இனமக்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளனர் என்பதைத் தெரியப் படுத்த விரும்புகிறேன். ஆகவே, கருணைமிக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொங்கு வேளாளர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டு மக்கள் தொகையில் 12 சதவிகிதமாக உள்ள கொங்கு வேளாளர்கள் அரசாங்க வேலை நியமனங்களில் 1 சதவிகிதம் கூட இல்லை என்பதை அறிய மிகவும் வேதனைப்படுகிறேன். கொங்கு வேளாள மாணவ மாணவிகள் நல்ல மார்க்குகள் பெற்றும் கல்லூரிகளில் இடம் கிடைப் பதில்லை. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி ஆகியவற்றில் கொங்கு வேளாள மாணவர்கள் 2 சதவிகிதம் கூட இல்லை. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் நர்சுப் பயிற்சிகளில் கொங்கு வேளாளர்களில் ஒருவருக்குக் கூட இடம் கிடைப்ப தில்லை. இந்த நிலைமையில் நாங்கள் எங்கள் தொகுதிகளுக்குப் போகப் பயப்படும் நிலைமையில் இருக்கிறோம் என்பதைத் தெரியப்படுத்துகிறேன். கடந்த 25 ஆண்டுகளாக குரூப் 1 சர்விசு கமிஷன் நியமனத்தில் கொங்கு வேளாளர்கள் ஒருவர் கூட நியமனம் பெறவில்லை என்பது மிகவும் வேதனையாக உள்ளது.

கொங்கு வேளாளர்கள் இப்படித் தவறுதலாக முன்னேறிய பட்டியலில் இருப்பதால் தகுதி இருந்தும் கல்லூரிகளில் இடம் கிடைப்பதில்லை, வேலைகள் கிடைப்பதில்லை. இது மிகப் பெரிய கொடுமையாகக் கருது கிறேன். தமிழ் நாட்டு மக்கள் தொகையில் 12 சதவிகிதம் உள்ள கொங்கு வேளாளர்கள் இப்படிப் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையை உடனே நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கொங்கு வேளாளர்கள் பெரும்பான்மையினர் சாதாரணமாகக் கடை நிலை ஊழியர்களாக, மில் தொழிலாளர்களாக, சிறு விவசாயிகளாக, வண்டி இழுப்பவர்களாக, மூட்டை சுமப்பவர்களாக வாழ்க்கைப் போராட்டத் தில் உள்ளனர். இவர்களிடத்தில் உள்ள நியாயத்தை உணர்ந்து அரசு உதவும் என நிச்சயமாக கொங்கு வேளாளர்கள் நம்புகிறார்கள்.

கொங்கு வேளாளர்களை வெள்ளையன் ஆட்சிக்காலத்தில் கோவை மாவட் டத்தில் பல கிராமங்களில் குற்றவாளிகள் பாரம்பரைப் பட்டியலில் வைத்தி ருந்தார்கள். உதாரணமாக, என்னுடைய சொந்த ஊரான எண்ணா மங்கலம் கிராமமே குற்றவாளிகள் பரம்பரைப் பட்டியலில் இருந்தது. அப்படிப்பட்ட இனத்தை, யாரோ ஒரு சில பட்டக்காரர்கள், ஜமீன்தார்கள், அந்த இனத்தில் இருந்தார்கள் என்பதற்காகக் கொங்கு வேளாளர்களை முன்னேறியவர்கள் என்று புறக்கணிப்பது நியாயமல்ல என்று கருது கிறேன்.

கொங்கு வேளாளர்கள் குறைகளை நன்கு உணர்ந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே கொங்கு வேளாளர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க 1969-ம் ஆண்டிலேயே வாக்குறுதி அளித்துள்ளார்கள். அதை விரைவில் செயல்படுத்துமாறு மிகவும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கொங்கு வேளாளர் கவுண்டர்கள் இனம் திராவிட முன்னேற்றக் கழகத்தை மட்டுமே மிகவும் நம்பி உள்ள இனம். பேரறிஞர் அண்ணாவின் கட்டளையை ஏற்று மிகப் பெரிய சாதிச் செல்வாக்குள்ள சாதித் தலைவர்களை, காங்கிரஸ் கட்சியில் செல்வாக்குள்ள அமைச்சராக இருந்தவர்களை, மிக மிகச் சாதாரண நிலையில் இருந்தவர்கள், சாதி, பணம், படிப்பு ஆகிய தகுதிகள் இல்லாத, மைனாரிடி வகுப்பைச் சார்ந்த சாமானியத் தொண்டர்களைக் கொண்டு மிகப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்துக் காட்டினர். அப்படிப்பட்ட கொங்கு வேளாளர் இனம் சாதி வெறி இல்லாமல் நம்முடைய அரசுடன் நல்ல வகையில் ஒத்துழைத்து வருகிறது.

கொங்கு வேளாளர் கவுண்டர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசால் பலன் அடைந்து, பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தையே பலவீனப் படுத்தும் இனமாக நிச்சயமாக இருக்கமாட்டார்கள் என உறுதி கூறுகிறேன்.

கொங்கு வேளாளர்களைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தால் அந்த இனம் கலைஞர் அரசுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்றென்றும் நன்றி உணர்வுடன் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று உறுதியாகக் கூறிக் கொண்டு, பிற்பட்டோர் மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மன்றத்தில் வைத்திருக்கும் பின்தங்கிய வகுப்பினர் மானியம், ரிஜிஸ்ட்ரேஷன் மானியம் ஆகியவற்றின்மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பிற்பட்டோர் நல இலாகா 1969-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது எந்த அளவுக்கு பிற்பட்ட மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்யவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்று எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் "பர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில்" புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 1·00)

1973-74ஆவது ஆண்டில் பல்வேறு துறைகளுக்கு எந்த அளவிற்குப் பணம் ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டதோ அதை விட ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே ஒதுக்கப்பட்டு வருகிறது என்பதைப்



பார்க்கும்போது நிச்சயமாக இந்த இலாகாவானது பிரிக்கப்பட்டாலும் கூட, பிற்பட்ட மக்களுக்கு இது அதிக பணங்களை ஒதுக்கவில்லை, அதிக அளவிற்கு சேவை செய்யவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக மாணவர்களுக்கு அளிக்கப்படுகிற ஸ்காலர்ஷிப்பைப் பார்த்தால் 1974-75ஆம் ஆண்டு எஸ்டிமேட் தொகை ரூ. 4 கோடியே 31 இலட்சமாகும். ஆனால் 1975-76இல் வருகின்ற இந்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 3 கோடியே 88 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு 1973-74ஆம் ஆண்டு செலவு செய்த தொகை 51 இலட்ச ரூபாய் என்றால் இன்றையதினம் அதை விட அதிகமாக இந்த ஆண்டு ஒதுக்கப்படவில்லை. அதுபோல மதிய உணவிற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 1973-74ஆம் ஆண்டில் 12 இலட்சம் என்றால் இந்த ஆண்டு 10 இலட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு துறைகளுக்கு, பிற்பட்ட இனத்தவர்களுக்கு அரசு ஒதுக்கி இருக்கின்ற தொகை மிகக் குறைவாக இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக இது வரவேற்கத் தக்க அம்சம் இல்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பிற்பட்ட மாணவர்கள் நிலை ஆல் இந்தியா சர்வீசில் எப்படி என்று பார்க்கும்போது, மிகவும் குறைவான மாணவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால் இந்த அரசால் பிற்பட்ட மாணவர்களுக்காக ஸ்பெஷல் டிரெயினிங் கிளாஸ் நடத்தப்பட்டாலும் கூட, அது சிறந்த முறையில் செயல்படவில்லை, மாணவர்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய வகையில் இல்லையென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, பிற்பட்ட மாணவர்களுக்கு இங்கே நடத்தப்படுகிற ஸ்பெஷல் கிளாஸ் சென்னை நகரத்தில் மட்டும் நடைபெறுகிறது. இதை பிற மாவட்டங்களுக்கும் விஸ்தரித்தாலொழிய, பிற்பட்ட மாணவர்களுக்குத் தகுந்த பயனை அளிக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். Coaching for meritorious boys வகுப்பு 1972ல் ஆரம்பிக்கப்பட்டாலும் கூட, அது சில மாவட்டங்களில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தென் மாவட்டங்களில் செயல்படவில்லை என்பதைப் பார்க்கும்போது பல்வேறு இலாகாக்களில் தென் மாவட்டங்கள் ஒதுக்கப்படுவதைப் போல, தென் மாவட்ட பிற்பட்ட வகுப்பினரையும் இந்த அரசு ஒதுக்குகிறது என்ற குற்றச்சாட்டைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பிற்பட்ட மக்களுக்கு என்று ஒரு இலாகா ஒதுக்கியிருந்தாலும் கூட, அதில் மதச் சார்பில்லாமல் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு மதத்தில் இருந்தாலும், சில மதத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சலுகை கொடுக்கப்படுவதில்லை. குறிப்பாக, கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களுக்குச் சலுகைகளை கொடுக்க அரசு மறுக்கிறதென்றால் இது வரவேற்கத் தக்க அம்சமல்ல. மதம் மாறியவர்களுக்கு சலுகைகளைக் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கச் சட்டத்தில் இடையூறு இருக்கிறது என்று அரசாங்கம் கூறுகிறது. பிற்பட்ட மக்களுக்காக இந்த அரசாங்கம் அத்தனை பொறுப்பையும் ஏற்றிருக்கிறது.

ஆகவே, இந்த அரசாங்கம் மதச் சார்பு அடிப்படையில் இல்லாமல் எல்லா பிற்பட்ட மக்களுக்கும் எல்லாச் சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். உதாரணத்திற்கு, கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்கே இந்த லேடின் கத்தோலிக்கர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். லேடின் கத்தோலிக்கர்களுக்கும் ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. இருவரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள். ஆகவே ரோமன் கத்தோலிக்கர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வீர சைவம் என்ற பண்டாரம் என்ற வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிறார்கள். பொருளாதார ரீதியிலும் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களையும் இந்த பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சி. எஸ். ஐ. கிருஸ்துவர்களை இந்த பிற்பட்ட வகுப்பில் சேர்த்திருந்தாலும் கூட, கல்லூரிகளில் அட்மிஷன் பொறுத்த மட்டில்தான் அவர்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு இந்த நன்மைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பிற்பட்ட மக்களுக்கு அரசு வழங்குகிற கடன்கள், மற்றும் உத்தியோக முறையில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகள் இவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆகவே இவர்களையும் அந்த பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து அனைத்து நன்மைகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இப்போது நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு இலாகா வைத்திருக்கிறோம். ஆனால் இந்த மாநிலத்தில் இருக்கிற மைனாரிடி-சிறுபான்மை சமுதாயத்தவர்களைப் பாதுகாக்கின்ற பல்வேறு காரியங்களில் அவர்கள் அரசாங்கத்தின் நன்மைகளைப் பெறுவதற்கு வழி வாய்ப்பு இல்லாமல் இருக்கிற அவல நிலை இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்ட சமுதாயத்திற்கு என்று தனித் தனியாக ஒரு இலாகாவை ஒதுக்கி இருப்பதைப் போல மைனாரிட்டி சமுதாயத்திற்கும் ஒரு டைரக்டரேட், தனி அலுவலகம் அமைத்து அவர்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டைப் பொறுத்தமட்டில் இன்று இந்த மாநிலத்தில் ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரெஜிஸ்ட்ரேஷனுக்காக நாம் சொத்துக்களின் விலை குறித்து ஒரு பட்டியலை வைத்திருக்கிறோம். ஒவ்வொரு இடத்திலும், கிராமத்திலும் இருக்கிற நிலத்திற்கு வால்யுவேஷன் பிக்ஸ் பண்ணி ஒவ்வொரு கிராம அதிகாரியிடமும் அந்த விலைப் பட்டியல் இருக்கிறது. அந்த விலைப் பட்டியலை அனுசரித்துத்தான் டாகுமெண்ட்ஸ் பதிவாக வேண்டும். அண்டை மாநிலங்களில் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணம் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால் பலர் என்ன செய்கிறார்கள் என்றால், ரெஜிஸ்ட்ரேஷனுக்காக நமது மாநிலத்தில் அதிகமாக கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று



பிற மாநிலங்களுக்கு தங்கள் டாகுமெண்ட்களை எடுத்துச் சென்று அங்கே பதிவு செய்கிற முறை இருந்து கொண்டேயிருக்கிறது. இது சம்பந்தமாக நான் ஒரு வெட்டுப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன். இந்த முறையால் நமது மாநிலத்தில் பதிவாகவேண்டிய பத்திரங்கள் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதனால் நமக்கு வருமானம் வரவேண்டியது குறைகிறது என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும். ஒருவேளை ரெஜிஸ்ட்ரேஷன் சட்டத்தைப் பொறுத்த வரை மத்திய அரசாங்க சட்டதிட்டத்திற்கு உட்பட்டிருந்தாலும்கூட, இந்த முறையில் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தை இங்கே கட்டாமல் தப்பித்துக் கொள்கிற முறையை மாற்றுவதற்கும், நம் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாயைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் நாம் செய்ய வேண்டியது, ஒன்று, மத்திய அரசாங்கத்தை நாடி இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும், அல்லது வேறு முறையில் நம் மாநிலத்திற்கு வரவேண்டிய வருவாயை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய முறையில் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் வேர்கிளம்பியில் ஒரு சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் நிறுவ வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இது மிகவும் தேவையானது. இவ்வாண்டிலாகிலும் இதனை நிறைவேற்ற வேண்டும்.

*திரு. நா. நாச்சிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியத்தை வரவேற்று நான் எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது தமிழக அரசு பொதுவாக நாட்டினுடைய நலனைக் கருத்தில் கொண்டு நல்ல பல திட்டங்களைத் தீட்டி அந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இப்படி சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிற திட்டங்களில் ஒன்றுதான் இந்த பின்தங்கிய சமுதாயத்திற்காக தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி அதற்கு நல்ல கணிசமான தொகைகளை வழங்கி இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. இந்த பின்தங்கிய துறைக்காக 1967-ல் ரூ. 1·6 கோடி மட்டும் செலவழித்து அதற்குப் பிற்பாடு இந்த ஆண்டில் ரூ. 5·8 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கி அவர்களுக்காகச் செய்கிறதென்றால் இந்த அரசு பின்தங்கியவர்களுக்காக மிகச் சிறந்த முறையில் நல்ல முறையில் பணியாற்றுகிறது என்பதற்கு வேறு ஆதாரம் கூற வேண்டியதில்லை.

இப்படி பின்தங்கியவர்களுக்காக சிறந்த பணியாற்றும்போது பின்தங்கியவர்கள் யார் என்பதற்கு விளக்கத்தை அமைச்சரவர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்த விளக்கத்தில், "உழைக்கும் உழைப்பாளர் சமூகத்தைச் சேர்ந்த பலரும் கல்வியில் பின்னடைந்திருப்பதற்கான காரணம் அவர்களுக்குப் போதிய கல்வி வசதி இன்மையே என்பது யாவரும் அறிந்த உண்மை. கல்வியறிவின்மையால் அவர்கள் சமுதாயத்தில் பின்தங்கியுள்ளவராகி விட்டனர். அவர்களின் நிலை உயர வேண்டுமானால் கல்வி மேம்பாட்டுக்கு வழிவகை செய்வதுதான் மிகச் சிறந்த வழி எனக் கருதப்பட்டுள்ளது" என்று உலகத்தில் எல்லா நாடுகளிலும் எல்லா மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஒரு உண்மையை இன்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

எந்த ஒரு சமுதாயம் அல்லது ஒரு மனிதன் முன்னேற வேண்டுமானாலும் அச்சமுதாயத்திற்கு அல்லது அவனுக்கு அடிப்படையான தேவை கல்வி தான் என்பதை இன்று நாம் ஒப்புக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட அடிப்படைத் தேவையான கல்வி தேவைப்படக்கூடிய ஒரு பெரிய சமுதாயத்தை, விவசாயத்தையே நம்பிக்கொண்டு கிராமப்புறத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயத்தை, ஆண்களில் 100-க்கு 90 பேர் கல்வி அறிவு இல்லாதவர்களாகவும், பெண்களில், 100-க்கு 99 99 பேர் கல்வி அறிவு இல்லாதவர்களாகவும் இருந்து கொண்டிருக்கிற சமுதாயத்தை முற்பட்டோர் பட்டியலில் சேர்த்து வைத்து இருக்கிறார்கள். அப்படி சேர்த்து வைத்து இருப்பதால் அவர்கள் கல்வி அறிவு பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் தான் கொங்கு வேளாளக் கவுண்டர் பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களையும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சமுதாயம் கல்வியறிவு பெற முடியாமல் இருக்கிறது. காலேஜ் கல்வி என்பது இப்போது நகர மக்கள் மட்டுமே பெற வாய்ப்புள்ளதாக இருக்கிறது. நாம் கல்லூரியை எடுத்துக்கொண்டாலும், அல்லது நல்ல கல்வி வசதி வேண்டுமென்றாலும் சரி, அது நகரப் பகுதியில்தான் ஏற்பட்டு இருக்கிறது. அந்த கொங்கு வேளாளர் சமுதாயம் முழுக்க முழுக்க கிராமப்புறத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்து கொண்டு இருப்பதால் அவர்கள் கல்வியறிவு பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சமுதாயம் பெரும்பாலும் விவசாயச் சமுதாயம். நில நீர் ஆய்வாளர்களுங்கூட அந்தப் பகுதியில் நீர் வளம் இல்லை, அது மிகவும் நீர்வளமற்ற பின்தங்கிய பகுதி என்று அறிவித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயத்திற்கு கல்வியறிவு பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படியே கல்வியறிவு பெற்ற ஒரு சிலர் வந்தாலும், முற்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதால் அவர்களை கல்லூரியில் சேர்த்துக்கொள்ள இடமில்லை என்று சொல்கிறார்கள். அப்படியே தவறி கல்லூரியில் படித்தாலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது இல்லை. அப்படி வேலை வாய்ப்பு கிடைத்தாலும் ப்ரமோஷன் கிடைப்பது இல்லை. ஆகவே, அவர்கள் கல்வியறிவு பெறத்தக்க வகையில் அவர்களை பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். முற்பட்டோர் பட்டியலில் உள்ள ஒரு பிரிவிற்கு உதவித் தொகை இல்லாமல் காலேஜ் அட்மிஷனுக்கு மட்டும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்ததால் சிறிது சிரமம் குறைந்துள்ளது என்று சொன்னார்கள். நான் கூறிக்கொள்கிறேன், அந்த அளவிலேனும் அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க—பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அந்த கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் சேர்த்தால் நாம் நினைத்து இருக்கிற பின்தங்கிய இனம் இருக்கக்கூடாது என்கிற முயற்சி நடைபெறும். இல்லையென்றால் 25 ஆண்டுகள் ஆனாலும் பிற்பட்டோராக இருக்கும் அவர்கள் இன்னும்



பிற்படடோராக ஆகும் அளவுக்கு நிலைமை போய்விடும் என்று கூறி, இந்த அளவுக்கு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கொடுக்கபபட்டு இருக்கிற பேக்வார்ட் கிளாஸஸ், ரிஜிஸ்டிரேஷன் டிமாண்டிலே ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன.

முதலில், பிற்பட்டோர் நலனை எடுத்துக் கொண்டால், அந்த இனம் முன்னேற வேண்டுமென்றால் அதற்கு படிப்புச் சலுகை எவ்வளவுக்கெவ்வளவு கொடுக்கவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு கொடுத்தால் தான் முடியும் என்பதை இந்த அரசுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பிற்பட்டோர் இனம் முன்னேற வேண்டுமென்பதற்காக இந்த அரசு நல்ல பல மாற்றங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபிசர் என்று அமைத்து அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அந்த முயற்சி எடுத்து இருப்பதைப் பாராட்டுகிறோம். ஆனால், இநத "பர்பாமனஸ் பட்ஜெட்"டையப் பார்த்தால், முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்படட்ட பணம், ரிவைஸ்டு எஸ்டிமேட்டில பார்க்கிறபோது குறைவாகச் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. அது ரொம்பவும் வருந்தத்தக்கது. ரூ.6·17 கோடி என்று பட்ஜெட்டில் போட்டு இருக்கிறது. ஆனால் செலவு செய்து இருப்பதைப் பார்த்தால் ரூ. 5·77 கோடியாக இருக்கிறது. பிற்பட்டோர் இனத்தில் ஒதுக்கப்பட்ட பணம் ஒழுங்காகச் செலவு செய்யவில்லை என்றால், வேறு எந்த இனங்களில் தான ஒழுங்காகச் செலவழிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இன்று ஸ்காலர்ஷிப்புக்காக ஒதுக்கப்படும் பணம் ரூ.14·37 கோடி. ஆனால் செலவு செய்து இருப்பது ரூ.3 8 கோடி. இதேமாதிரி எல்லாவற்றிலும் குறைவாக இருக்கிறது. 1969-70ல் பட்டப்படிப்பு ஸ்காலர்ஷிப்புக்காக ரூ. 144 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அதில் 25 இலட்சம் சரண்டர் செய்து இருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் ரூ. 2,500 என்று சீலிங்கை வைத்து 40 சதவிகிதம் மார்க்கு வாங்கியிருக்க வேண்டுமென்று வைத்து இருக்கிறார்கள். இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்த உதவித் தொகை கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இன்று ரூ. 2,500 வருமானம் இல்லாமல் யார் இருக்க முடியும். ஏதோ விவசாயிகள் வேண்டுமென்றால் விளையவில்லை என்று சொல்லி இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் அர்பன் ஏரியாவில் இருக்கிறவர்கள் ரூ. 2,500 வருமானம் இல்லாமல் யார் இருப்பார்கள் அவர்களுக்குததான் கொஞ்சம் படிக்க வழி வாய்ப்பு இருக்கும் ஆகவே இந்த சீலிங்கை ரூ. 6,000 என்று உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு குடும்பத்திற்கு பட்டப்படிப்பு கொடுத்து விட்டால் அந்தக் குடும்பமே பிழைத்துக்கொள்ளும். ஆகவே, இந்தப் பிற்பட்டோர் இனத்தில் ரூ.500 மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள்கூட பட்டப்படிப்புக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்புவதற்கு வழிவகுக்கிற வகையில் அதை ரூ. 6,000 என்று உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி டோபிகானா கட்டுவதற்கு ரூ. 25 இலட்சம் ஒதுக்கி இருக்கிறீர்கள். ஆனால் ரூ. 15 இலட்சம் தான செலவழிக்கப்பட்டு இருககிறது. காரணம் என்னவென்றால், முனிசிபாலிட்டிகளிடம் பணம் கொடுத்து, அவர்கள் அதைக் கட்டவேண்டும், அவர்களுக்கு ஹாப்-சப்சிடி, ஹாப்-கடன் என்று முறையில் கொடுக்கிறீர்கள். ரொம்ப முனிசிபாலிட்டிகளுக்கு உள்ள வேலையையே செய்ய முடியவில்லை. ரோடு போடுவது, லைட் வசதி செய்து கொடுப்பது, குப்பை கூளங்களைத்திரட்டுவது, இந்த நிலையில் இதை எங்கே செய்யப்போகிறார்கள்.

சைதாப்பேட்டையில் ஒரு டோபிகானா கட்டியிருக்கிறார்கள். அது இன்னும் துவக்கப்படவில்லை. அது இயங்கினால் சாதனையாக இருக்கும். ஒரு கார்ப்பரேஷனுடைய கதியே இப்படியென்றால், ஒரு முனிசிபாலிட்டி எப்படி டோபிகானா கட்ட முடியும்? இந்த டோபிகானா கட்டுவது என்பது ஹைஜீனிக் பாய்ன்ட் ஆப் வியூவில் நல்லது. இல்லையென்றால், அவர்கள் கண்ட தண்ணீரில் துவைத்துக்கொண்டு வந்து விடுவார்கள். அதனால் பல நோய்கள் ஏற்பட வழி இருக்கிறது. ஆகவே, அரசாங்கம், உடனடியாக இந்த டோபிகானா கட்டுவதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டியது மிகமிக அவசியம் அந்த வகையில் முழு மானியமாக டோபிகானா கட்டுவதற்கு அரசு பணம் தரவேண்டும் அல்லது முனிசிபாலிட்டிகளைக் கேட்காமல் நீங்களே கட்டிக்கொடுங்கள். அது ரொம்ப வரவேற்கத் தக்கதாகும்.

அதேமாதிரி அடுத்தபடியாக பார்க்கும்போது இங்கே நம்முடைய முதலமைச்சர் Backward Community College Students Stipend 50 ரூபாய் அதிகமாக கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இது வரை அது கல்லூரிகளுக்குப் போய்ச் சேரவில்லை என்று சொல்லப்படுகிறது. உறுதிமொழி கொடுத்த பிறகு அதை பின்பற்ற பார்க்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஒரு வருஷம் இந்தச் சலுகை பெறப்படாமலே போய்விடும். ஆகவே, இந்த ஸ்டைபண்ட் உயர்வு அமுலாக்கப்பட்டதா அதில் காலதாமதம் இருக்கிறதா என்பதை தயவு செய்து பார்த்து உடனடியாகப் போய்ச் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி Drinking Water Wells குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் என்னைச் சார்ந்த பிற்பட்ட வகுப்பினர் இருக்கும் இடங்களில் போய்ப் பார்த்தால் எப்படி குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஹரிஜனங்களைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் குடி தண்ணீருக்காக கிணறு தோண்டிக் கொடுத்தால் நன்றாய் இருக்கும். இதை பஞ்சாயத்திடம் கொடுக்கக் கூடாது. இலாகா மூலம் செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட்டவர் இருக்கும் இடத்தில் சென்ற ஆண்டு மூன்று கிணறுகள் வெட்டிக்கொடுக்கப்பட்டு இருப்பதாகப் போட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் அவமானமாக இருக்கிறது. ஆகவே, குடி தண்ணீர் கிணறுகளை பிற்படுத்தப்பட்டோர்





ங்கே concentrated ஆக இருக்கிறார்களோ அந்த இடத்தில் உடனடியாக சதி செய்து கொடுக்க முன்வர வேண்டும் என்று தாழ்மையோடு கட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, Private Colleges and percentages கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இன்ன சதவீதம் என்று அரசாங்கம் போட்டிருக்கிற த்தரவு அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகளில் கடைப்பிடிக்கப்படுறது. ஆனால் அந்த விகிதாசாரத்தில் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு னியார் நடத்தும் கல்லூரிகளில் இடம் தரப்படுகிறதா என்றால் இல்லை. வ்வாறு ஒழுங்காக அந்த விகிதாசாரம் தரப்படுகிறதா என்பதை ட்டாயமாக நாம் கவனத்துடன் பார்க்க வேண்டும். இந்த வேலையை Education டிபார்ட்மெண்டில் கொடுத்தால் கவனிக்காது. You must have nterest. தயவு செய்து பிற்படுத்தப்பட்டோர் நல இலாகா இந்த அரசு த்தரவைக் கடைப்பிடிக்கிறார்களா இல்லையா எனபதைக் கவனமாகப்பார்க்க வேண்டும். தனியார் கல்லூரிகளிலும் அந்த விகிதாசாரத்தை கடைப்பிடிக்க வேண்டும், இல்லை என்றால் அரசாங்கச் சலுகைகள் நிறுத்தப்படும் என்று வந்தால்தான் மற்றக் கல்லூரிகளிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்க வாய்ப்பு கிடைக்கும்.

அதுமட்டுமல்ல. பிற்பட்ட இனம் முன்னேறவேண்டும் என்றால் அரசாங்கக் கல்லூரிகளிலும் நல்ல course களை அதிகமாகக் கொண்டு வர வேண்டும். உதாரணமாக B.Com. Course-க்கு நல்ல டிமாண்ட், அந்த கோர்ஸ் பிரைவேட் காலேஜ்களில்தான் அதிகமாக இருக்கிறது. பிற்பட்ட மாணவர்கள் முன்னேற வேண்டும் என்றால் இப்படிப்பட்ட கோர்ஸ்களை படித்தால்தான் முன்னேற முடியும். இப்படிப்பட்ட கோர்ஸ்களை வைத்திருக்கிற அரசாங்க காலேஜ்களின் எண்ணிக்கை negligible. தனியார்க் கல்லூரிகளில் போனால் ஐயாயிரம் பத்தாயிரம் நன்கொடை கேட்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் அந்தப்பணத்திற்கு எங்கே போவார்கள். ஆகவே நல்ல கோர்ஸ்களை B.Com. போன்ற கோர்ஸ்களை அரசாங்கக் கல்லூரிகளில் கொண்டுவர சென்னையிலும் மாவட்டங்களிலும் கொண்டுவர அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ரெஜிஸ்திரேஷன் பற்றி ஒரு வார்த்தை கூறி முடித்துக்கொள்ளுகிறேன். ரெஜிஸ்திரேஷன் துறையில் பல வேலைகளைச் சேர்த்திருக்கிறோம். Registration of births and deaths, registration of documents எல்லாவற்றையும் ஒரு ரெஜிஸ்திரார் பார்க்க வேண்டும். எந்த வேலையும் தாமதமாகாமல் நடக்காது. ஒரு சொஸைட்டியை ரெஜிஸ்டர் செய்ய வேண்டும் என்றால் கூட 3 மாதம் பிடிக்கும். ஒரே ரெஜிஸ்டிரார். வேறு எப்படி ஆகும். அதிலும் இப்போது சிட் பண்ட்ஸ் வேறு அவர்களுக்குப் போய்விட்டது. இரண்டு லட்சம் மூன்று லட்சம் சொஸைட்டிகள், Firms ரிஜிஸ்தர் பண்ணப்போகும்போது ஒரே ரிஜிஸ்திரார் இருப்பது ரொம்பக்கஷ்டமாக இருக்கிறது. Registrar of Societies and Firms—ஒரு தனி ரெஜிஸ்திரார். Registrar for Registering documents— ஒரு தனி ரெஜிஸ்திரார். Registrar for Births

and Deaths, Chit Funds—ஒரு தனி ரெஜிஸ்திரார் என்று பிரித்துக் கொடுத்தால் நல்ல விதத்தில் காரியங்கள் நடக்கும். அந்த இலாகா வில் இருக்கிறவர்களுக்கும் வேலைப் பளு அதிகம் இரவு 8, 9 மணிக்குக் கூட விளக்கு போட்டுக்கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பெஞ்சில் உட்கார்ந்தே சாக வேண்டிய நிலை இருப்பது சரியல்ல. எந்த எந்த இலாகாவாகப் பிரித்துக் கொடுக்க முடியுமோ, decentralise செய்ய முடியுமோ அந்த அளவு செய்தால் வேலை நல்லபடியாக நடக்கும். அடுத்து, ரெஜிஸ்ட்ரேஷன் fees அதிகமாக இருக்கிறது. வரி ஒருபக்கம். அது அல்லாமல் கணக்குப் பார்க்க கஷ்டம் என்று round off செய்வதில் வேறு கூடுகிறது. ரவுண்ட் ஆப் செய்ய வேண்டும் என்றால் 2½ பைசாவிலிருந்து 2 பைசா என்று செய்தால் பரவாயில்லை. மூன்று பைசா என்று செய்கிறார்கள். இதுபற்றி குறிப்பாக ஒரு கட் மோஷன் கொடுத்து இருக்கிறேன்.

பர்மா, இலங்கை போன்ற இடங்களிலிருந்து வரும் அகதிகளுக்கு அவர்கள் வாங்கும் நிலத்திற்கு, கடைக்கு ரெஜிஸ்தர் செய்யும் விஷயத்தில் சலுகை தரக் கூடாதா, exemption from registration fees. ஏற்கனவே அகதிகளைக் கவனிப்பதில் பிற்பட்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து அகதிகளுக்காக உதவித் தொகை சரியாக வாங்கவில்லை. இன்னும் கொஞ்சம் சண்டை போட்டு அதிகமாக வாங்கி வந்திருக்கலாம். பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். வாழ இடம் இன்றி அகதிகள் அகதிகளாகவே இருக்கிறார்கள். வியாசர்பாடியில் போய்ப் பாருங்கள். வீடு கூட கிடையாது அவர்களுக்கு. குடிசை மாற்று வாரியத்திற்குச் சொல்லி ப்ரையாரிட்டி கொடுத்து வீடு கட்டி அவர்களுக்கு கொடுத்து இருக்கலாம். திரைகடல் ஓடியாவது திரவியம் சேர்க்கவேண்டும் என்று போனவர்கள் இன்றைக்கு அகதிகளாக வந்திருக்கிறார்கள். இவர்கள் நல்வாழ்வு வாழ அரசு நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு லோன் கேட்டால் கூட ஆறுமாதமாகிறது. Stamp paper, முத்திரைத்தாள் இப்போது கிடைப்பதே இல்லை. 25 ரூபாய் முத்திரைத்தாள்தான் கிடைக்கிறது. ஆயிரம் ரூபாய்க்கு ஒட்ட வேண்டும் என்றால் 80, 100 என்று வாங்க வேண்டும். Paper scarcity இருக்கிற நேரத்தில் higher denomination போட்டால் பணமும் save பண்ணலாம், முத்திரைத்தாளும் கிடைக்கும். தேவை எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு அச்சடிக்கவேண்டும் என்று பார்த்து நாசிக் பரசிலாவது ஆர்டர் வைக்கலாம். இதை ஆராய்ந்து பார்த்து செய்தால் பொது மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று கூறி முடிக்கிறேன்.

(பிற்பகல்-1·30)



## 2. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்மிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

11—3—1975-ஆம் நாளன்று நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி பேரவையின் அலுவல்கள் பற்றிய திருத்திய நிகழ்ச்சி விவரம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 12-3-1975 (புதன்கிழமை) | 6 | .. | பத்திரப் பதிவு | விவாதத் தொடர்ச்சி |
| | 32 | .. | பிற்தங்கிய வகுப்பினர் நலன் | |
| 13-3-1975 (வியாழக்கிழமை) | 18 | .. | மருத்துவம். | |
| | 19 | .. | பொதுச் சுகாதாரம். | |
| | 34 | | நகர்ப்பகுதி வளர்ச்சி. | |
| 14-3-1975 (வெள்ளிக்கிழமை) | 36 | .. | பாசனம். | |
| | 37 | .. | பொதுப்பணிகள்—கட்டிடங்கள். | |
| 15-3-1975 (சனிக்கிழமை) | 38 | . | பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும். | |
| | 39 | .. | சாலைகளும், பாலங்களும். | |
| | 51 | .. | பாசனம் குறித்த மூலதனச் செலவு | |
| | 52 | .. | பொதுப்பணித் துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | |
| | 53 | .. | சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | |
| | 48 | .. | பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. | |
| 16-3-1975 (ஞாயிற்றுக்கிழமை) | .. | .. | விடுமுறை. | |
| 17-3-1975 (திங்கட்கிழமை) | 10 | .. | பால் வழங்கு திட்டங்கள். | |
| | 12 | .. | 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம். | |
| | 27 | .. | கதர். | |
| 18-3-1975 (செவ்வாய்க்கிழமை) | 1 | .. | நிலவரித் துறை. | |
| | 5 | .. | முத்திரைத்தாள்கள்—நிர்வாகம். | |

[பேரவைத் தலைவர் [1975 மார்ச் 11

19-3-1975 (புதன்கிழமை)
47 .. ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.
11 .. மாவட்ட நிர்வாகம்.

20-3-1975 (வியாழக்கிழமை)
1975-76-ம் ஆண்டுக்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.
நிதி ஒதுக்க (முன்பணம் கோருதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல்.
17 .. கல்வி.

21-3-1975 (வெள்ளிக்கிழமை)
நிதி ஒதுக்க (முன்பணம் கோருதல்) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும்.
17 .. கல்வி-

22-3-1975 (சனிக்கிழமை)
1974-1975-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிநிலை மதிப்பீடுகளை அளித்தல்.
13 .. நீதி நிர்வாகம்.
14 .. சிறைச்சாலைகள்.
23 .. கூட்டுறவு.
26 .. கைத்தறியும்—துணித்தொழிலும்.
35 .. உணவுப் பொருள் வழங்கல்.
56 .. பல்வகை மூலதனச் செலவு.

23—3—1975 (ஞாயிற்றுக்கிழமை).
விடுமுறை.

24—3—1975 (திங்கட்கிழமை)
13 .. நீதி நிர்வாகம்.
14 .. சிறைச்சாலைகள்.
23 .. கூட்டுறவு.
26 .. கைத்தறியும்—துணித்தொழிலும்.
35 .. உணவுப் பொருள் வழங்கல்.
56 .. பல்வகை மூலதனச் செலவு.

25—3—1975 (செவ்வாய்க்கிழமை)
1974-75-ம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.
நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல்.
20 .. வேளாண்மை.
49 .. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.



1975 மார்ச் 11] [பேரவைத் தலைவர்]

V2H,51 N75 3/N75.6.5

26—3—1975 (புதன்கிழமை).
மீலாடிநபி—விடுமுறை.

27—3—1975 (வியாழக்கிழமை).
20 .. வேளாண்மை.
49 .. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

28—3—1975 (வெள்ளிக்கிழமை)
தூய வெள்ளி—விடுமுறை.

29—3—1975 (சனிக்கிழமை).
இறுதித் துணை மானிய நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுதலும், நிறைவேற்றலும்.
24 .. தொழில்கள்.
50 .. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

30—3—1975 (ஞாயிற்றுக்கிழமை)
விடுமுறை.

31—3—1975 (திங்கட்கிழமை)
4 .. பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.
22 .. கால்நடை வளர்ப்பு.
25 .. சின்கோனா.
45 .. காட்டுவளத் துறை.
55 .. காட்டுவள மூலதனச் செலவு.
15 .. காவல் துறை.

61694

1—4—1975 (செவ்வாய்க்கிழமை)
16 .. தீயணைப்புப் பணிகள்.

2—4—1975 (புதன்கிழமை).
31 .. பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

3—4—1975 (வியாழக்கிழமை).
29 .. தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

4—4—1975 (வெள்ளிக்கிழமை).
33 .. வீட்டு வசதி.
28 .. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

5—4—1975 (சனிக்கிழமை).
6—4—1975 (ஞாயிற்றுக்கிழமை).
விடுமுறை.

7—4—1975 (திங்கட்கிழமை).
3 .. மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.
40 .. சாலைப் போக்குவரத்துப் பணிகள்.
44 .. எழுதுபொருள்—அச்சுத் துறை.
54 .. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு.

(பேரவைத்தலைவர்) 

8—4—1975 (செவ்வாய்க்கிழமை)
2 .. மாநில ஆயத் தீர்வை.
8 .. தேர்தல்கள்.
9 .. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்.
41 .. இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.
42 .. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.
43 .. பல்வகை.
46 .. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.
57 .. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

9—4—1975 (புதன்கிழமை)
21 .. மீனளம்.
30 .. சமூகநலன்.

10—4—1975 (வியாழக்கிழமை)
7 .. மாநிலச் சட்ட மன்றம்.
நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல்.

11—4—1975 (வெள்ளிக்கிழமை) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணி முதல் கூடும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர் இப்போது இந்தப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அதனால் ஒரு தப்பான அபிப்பிராயம் ஏற்படலாம். ஆகவே, அவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பி, அதற்கு தாங்கள் தீர்ப்பு கொடுத்துவிட்டால் நல்லது.

திரு. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்போகிறார் என்று இவர் என் சொல்ல வேண்டும்? அவரே தேவைப்பட்டால் கேட்கலாமே.

திரு. நா. வீராசாமி; நான் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே இதுபோன்ற ஒரு நேரத்தில் அண்ணா தி. மு. க. துணைத் தலைவர் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார். அப்போது, தலைவர் அவர்களே, பேசுவதற்கு இடம் கேட்டு, எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருந்த......

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது வேடிக்கையான ஆப்சர்வேஷன். அவ்வளவுதான். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

இத்துடன் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.





## 8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

130. Sixteenth Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1972-73 (Tamil). [Laid on the Table of the House under section 75 (IA) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 56. Policy Note on Demand No. 6—Registration Department (English and Tamil).

% 57. Policy Note on Demand No. 32—Backward Classes Department for the year 1975-76 (English and Tamil).

% 58. Policy Note on Demand No. 30—Social Welfare for the year 1975-76 (Tamil).

% 59. Performance Budget of the Backward Classes for the year 1975-76.

% 60. The Tamil Nadu Land Encroachment (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 6 of 1975).

% 61. The Tamil Nadu Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 (L.A. Bill No. 7 of 1975).

---

@ Despatched to Members on 8-3-1975.

% Despatched to Members on 10-3-1975.

இணைப்பு.

[6-ம் பக்கத்தில் 271-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

புதிதாக மருத்துவ மனைகள் கட்டப்படும் போதெல்லாம் நவீன சவக் கிடங்குகள் மருத்துவமனையின் வரைபடத்தில் சேர்க்கப்படுகின்றன. அவை மாதிரி வடிவமைப்பு அடிப்படையில் கட்டப்படுகின்றன. அத்தகைய நவீன சவக்கிடங்குகளில் சவப் பரிசோதனை நடத்துவதற்கு இடவசதி ஒதுக்கப் படுகின்றது.

மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலுள்ள சவக்கிடங்குகளில் படிப்படியாக குளிர்ப்பதன அறை வசதியை வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதுவரை, கீழ்க்கண்ட 4 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் குளிர்ப்பதன அறை வசதிகளை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

1. திருச்சிராப்பள்ளி
2. கடலூர்.
3. சேலம்.
4. தூத்துக்குடி.

மேற்கண்ட பணியை எடுத்து நடத்தும்படி திருச்சிராப்பள்ளி, பொதுப் பணித்துறை மின் பொறியாளர் ஏற்கெனவே கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். எஞ்சியுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மேற்கண்ட வசதிகள் உரிய காலத்தில் செய்யப்படும். முக்கிய வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

நவீன சவக் கிடங்குகள் உள்ள இடங்கள் குறித்த விவரங்கள் பின் வருமாறு :—

1. இம்மாநகரில் மற்றும் இம்மாநிலத்தில் கீழ்க்காணும் மருத்துவ களில் நவீன சவக்கிடங்குகள் உள்ளன.

(1) அரசுப் பொது மருத்துவ மனை, சென்னை-3.

(2) அரசு ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை-1.

(3) அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னை-10.

(4) அரசு இராயப்பேட்டை மருத்துவ மனை, சென்னை-14.

(5) அரசு ஆர். எஸ். ஆர். எம். மருத்துவ மனை, சென்னை-13.

(6) அரசு எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை.





2. இம்மாநகரில் மற்றும் இம்மாநிலத்தில் கீழ்க்காணும் மருத்துவ மனைகளில் நவீன சவக்கிடங்குகள் இல்லை.

(1) கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல அரசு மருத்துவ மனை, சென்னை-5.

(2) அரசினர் கண் சிகிச்சை மருத்துவ மனை, சென்னை-8.

(3) அரசு மனநோய் மருத்துவ மனை, சென்னை-10.

(4) அரசு காசநோய் மருத்துவ மனை, ஓட்டேரி, சென்னை-12.

(5) மகப்பேறு மருத்துவ மகளிர் நோய் இயல் நிறுவனம் மற்றும் தாய்சேய் நல மருத்துவ மனை, சென்னை-8.

(6) குழந்தை நல சிறுவர் மருத்துவ மனை, சென்னை-8.

(7) ராஜா மிராஸ்தார் அரசு மருத்துவ மனை, தஞ்சாவூர்.

3. இம்மாநகரில் மற்றும் இம்மாநிலத்தில் கீழ்க்காணும் மருத்துவ மனைகளில் நவீன சவக் கிடங்குகள் விரைவில் கட்டப்படும் :—

(1) அரசினர் காசநோய் மருத்துவ மனை, தாம்பரம், சென்னை-47.

(2) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, தஞ்சாவூர்.

(3) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, கோயம்புத்தூர்.

(4) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, திருநெல்வேலி.

(5) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, செங்கற்பட்டு.

Whenever new Hospitals are constructed, modern mortuaries are included in the Plan of the Hospital and constructed based on a type design. In the modern mortuary there is a provision for conducting post-mortem.

For Mortuaries in District Headquarters Hospitals, it is proposed to provide cold storage facilities in a phased manner. So far, the proivision of cold storage facilities has been sanctioned for the following 4 District Headquarters Hospitals :—

1. Tiruchirappalli.
2. Cuddalore.
3. Salem.
4. Tuticorin.

The Electrical Engineer, Public Works Department, Tiruchirappalli, has already been asked to take up the above works. remaining District Headquarters Hospitals will be provided with the above facility in due course. The major Taluk Hospitals will then be taken up.

Details regarding places of availability of Modern Mortuaries, etc., are given below :—

I. *Modern Mortuaries available in the following Hospitals in City and in this State* :—

(*a*) Government General Hospital, Madras-3.

(*b*) Government Stanley Hospital, Madras-1.

(*c*) Government Kilpauk Medical College Hospital, Madras-10.

(*d*) Government Royapettah Hospital, Madras-14.

(*e*) Government RSRM Lying-in Hospital, Madras-13.

(*f*) Government Eraskine Hospital, Madurai.

II. *Modern Mortuaries not available in the following hospitals in City and in this State* :—

(*a*) Government Kasturba-Gandhi Hospital for Women and Children, Madras-5.

(*b*) Government Ophthalmic Hospital, Madras-8.



(*c*) Government Mental Hospital, Madras-10.

(*d*) Government TB Hospital, Otteri, Madras-12.

(*e*) Institute of Obstetrics and Gynaecology and Government Hospital for Women and Children, Madras-8.

(*f*) Institute of Child Health and Hospital for Children, Madras-8.

(*g*) Government Raja Mirasdar Hospital, Thanjavur.

III. *Modern Mortuaries likely to be taken up shortly for construction in the following hospitals in the City and in this State* :—

(*a*) Government Tuberculosis Sanatorium, Tambaram, Madras-47.

(*b*) Thanjavur Medical College Hospital, Thanjavur.

(*c*) Coimbatore Medical College Hospital, Coimbatore.

(*d*) Tirunelveli Medical College Hospital, Tirunelveli.

(*e*) Chingleput Medical College Hospital, Chingleput.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1975 மார்ச் 12.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

---

*Archaeological survey in Brihadeeswarar temple*

* 281 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that an idol of Lord Siva was unearthed by the Archaeological Survey of India at Sri Brihadeeswarar Temple in Thanjavur in recent times; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) சமீபத்தில் ஒரு சிவன் சிலை கிடைத்துள்ளது. அச்சிலை சோழர் கலைப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, அந்தச் சிலையினுடைய முக்கியத்துவம் என்ன? எதை எதைப்பற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தஞ்சையிலுள்ள பெரிய கோவிலைத் துப்புரவு செய்யும் போது, தலை மட்டும் உள்ள அர்த்தநாரீச்வரர் சிலையொன்று சமீபத்தில் கிடைத்துள்ளது. உயரம் 1 அடி 9 அங்குலம். அது, முதலாவது இராசேந்திரன் காலத்தைச் சேர்ந்தது என்று தொல் பொருள் ஆராய்ச்சியாளரால் கருதப்படுகிறது. அந்தக் கோவிலைச் சுற்றி அகழ்வாய்வு செய்து கண்டெடுக்கப்பட்ட பிற பொருள் களுடன் மத்திய அகழ்வாய்வுத் துறையினரால் அக்கோயிலிலேயே

பல்வேறு நூல்களை சரஸ்வதி மகால் நூலகத்தினர் வெளியிட்டு வருகிறார்கள். மேலும் தொடர்ந்து அந்தத் துறையிலே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

### *Periods for language teaching*

* 283 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of periods for language teaching in the High Schools in the State: and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

* 284 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் 1970 முதல் 1974-ம் ஆண்டு வரை எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டன?

(இ) இவற்றிற்காக மொத்தம் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

(உ) இதில் மத்திய அரசு உதவி ஏதாவது உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) 1970-ம் ஆண்டு முதல் 1974-ம் ஆண்டு வரை 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் துவங்கப்பட்டன.

(இ) 1970-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதி முதல் 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய இந்த 37 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ரூ. 55,52,506.44 பைசா செலவழிக்கப்பட்டது.

(உ) இல்லை.



* 285 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any scheme under the consideration of the Government to engage qualified doctors in the allopathy and Indian systems of medicine by opening health centres at the rate of two per block; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, படித்துவிட்டு ஏராளமான டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க இதைத்தவிர வேறு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, கிராமப் பகுதியில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துவது போன்ற ஆலோசனை இருக்கிறதா என்று கேட்கப்பட்டது. Opening of health centres at the rate of two per block என்ற அந்த ஆலோசனையை தமிழக அரசின் சார்பில் வழங்கினோம். மத்திய அரசு அப்படிப் பரிசீலிக்கலாம் என்று ஓரளவுக்குக் கருதினார்கள். அதற்குப் பின்னர், பொருளாதார நிலை இடம் தரவில்லை என்று கைவிட்டு விட்டார்கள். அவர்கள் கைவிட்ட நிலையில் நாம் தனியாக எதும் செய்யக்கூடிய வாய்ப்பு இல்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் எத்தனை நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன? இன்னும் எத்தனை நிலையங்களுக்கு கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன? அப்படி அமைக்க வேண்டிய இடங்களில் அமைக்கப்படாமலிருப்பதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைப்பதென்பது கொள்கையளவில் மத்திய அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. கட்டடங்கள்

கட்டும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது. குடும்ப நலத் திட்ட மையங்களோடு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டப் படுகிற அந்த கட்டடங்களுக்கு மட்டும் மத்திய அரசு கட்டட நிதி தரும். அதற்கு ஏறத்தாழ ஒரு கட்டடம் அமைப்பதற்கு ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் செலவாகுமானால், இந்த ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடத்திற்கு ஒரு இலட்சத்து எழுபதாயிரம் முதல் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் வரை செலவாகிறது. முப்பது, நாற்பது இடங்களில் நாம் ஆரம்பித் தோம் என்றால், அதற்கு நிதி ஒதுக்கம் செய்ய வேண்டியிருந்தது. நாம் ஒதுக்கிய அளவு ஒதுக்கி செயல்பட்டபின் மேலும் தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுகளில் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கிக் கட்டி முடிக்க வேண்டும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, 1970 இலிருந்து 1974 வரை ஏறத்தாழ 37 சுகாதார நிலையங்கள்தான் கட்டப் பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இது வளர்ந்து வரும் தேவைகளுக்குக் குறைவானது என்பதை அரசு அறியுமா? மேலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களை உருவாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, 'ஆரம்பிக்கப்பட்டது' என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் எந்த இடத்தில் அமைப்பது என்பதல்ல. 1969 இல் வேறுபாடு இருந்து, இடம் கிடைக்காமல் இருந்து, இவை ஆரம்பிப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கட்டப்படுவது—பொதுவாக குடும்ப நல நிலையங்கள் எந்த ஒரு ஒன்றியத்தில் கட்டப்பட்டிருந்தாலும், கொஞ்ச நாள் கழித்து ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டப் படுகின்றன. ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம் முன்னால் கட்டப் பட்டிருக்குமானால் கடைசி நேரத்தில் குடும்ப நலக் கட்டடம் கட்டப்படுகிறது. ஆனால், ஏறத்தாழ ஒரு சில இடங்கள் தவிர மிச்ச இடங்களில் குடும்ப நல நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்ட பின் இனி அடுத்து ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைப்பது தொடர்ந்து நிறைவேறும்.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருந்தாலும், ஒன்றியத்தின் பரப்பளவு அதிகமாக இருப்பதால் ஒரு நிலையம்





போதாத நிலை இருக்கிறது. ஒரு ஒன்றியத்தில் நூற்றுக்கணக் கான கிராமங்கள் கொண்டதாக இருப்பதால், அப்பேர்ப்பட்ட ஒன்றியங்களில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் பதிலாக இரண்டு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் என்பது வெறும் ஒரு டிஸ்பென்சரிபோல் மத்திய அரசால் கருதப்படவில்லை. அது அந்த ஒன்றியம் முழு வதற்கும் இன்சார்ஜ் ஹாஸ்பிட்டல் என்று வழங்கப்படுகிற முறையில், நோய்த் தடுப்புப் பணிகளுக்காகவும், ஒரு வகையிலே மகப்பேறுக்கு உதவி செய்வதற்காகவும், அந்த வட்டாரத்திலே, சிகிச்சையை சப் சென்டர்கள் மூலமாக வழங்குவதற்காகவும் இணைத்திருக்கிறார்கள். அதிலேயே குடும்ப நல சிகிச்சை சேவை செய்ய வேண்டுமென்பது மத்திய அரசின் கொள்கை. அதற் கென்று தனியாக, இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்றால், ஒரே ஒன்றியத்திலே, இரண்டாவது நிலையம் அமைக்கின்ற பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று மத்திய அரசினர் தெரிவித்து விட்டார்கள். ஆகவே, நாமாக இரண்டாவது நிலையம் ஆரம்பிப்பது என்றால், அது இப்பொழுது ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு நடை முறையில் ஒத்துவரவில்லை. ஆனால், மக்கள் தொகை மிக அதிக மாக இருக்கிற இடத்தில் மூன்றாவது ஒரு டாக்டரையாவது நாமாக நியமிக்கலாம் என்று முடிவெடுத்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் படுக்கை வசதியில்லை. வியாதியஸ்தர்களை படுக்க வைத்து, வியாதியைப் போக்குவதற்கு குறைந்தபட்சம் 5 படுக்கைகள் கொண்ட வசதியையாவது செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் படுக்கைகள் உண்டு. படுக்கைக்கு வேண்டுமானால் நோய் வந்திருக் கலாமே தவிர, 6 படுக்கைகள் கட்டாயம் உண்டு. அவற்றைப் பயன்படுத்திக் கொள்கிற அளவுக்கு மக்களுக்கு, அங்கே போய் படுத்திருந்து சிகிச்சை பெறக்கூடிய அளவுக்கு நம்பிக்கை

வருவதில்லை. அங்கேயிருக்கிற டாக்டருக்கு, ஆளையும் படுக்க வைத்துவிட்டு, சிகிச்சை தவறிவிட்டால்? என்ற அளவில் நம்பிக்கை வருவதில்லை. ஒவ்வொரு டாக்டரும் 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம் தொடக்கக் கட்டத்திலே அந்த நிலையத்திலே இருக்க வேண்டும். ஆகவே, இது சமுதாயத்திலே இருக்கிற எத்தனையோ குறைகளிலே, ஒரு அடிப்படையான குறை. ஆனால், கட்டடம் கட்டப்படாமலிருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே, இருக்கிற அலுவலகங்களிலே படுக்கையே இல்லாமலிருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் 6 படுக்கைகள் உண்டு.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, புதிதாக நியமனம் பெறுகின்ற டாக்டர்கள், கிராமப் பகுதிகளிலே சென்றிருப்பதற்கு அவர்கள் இசைவு கொடுப்பதில்லை. ஆகவே, குறிப்பாக ஒருவர் சீனியர் டாக்டராகவும், இன்னொருவர் கொஞ்சம் ஜூனியராகவும் இருக்கக் கூடிய அளவிலே ஒவ்வொரு நிலையத்திற்கும் டாக்டர்களை நியமித்தால் அது பொருத்தமாக இருக்கும். அந்த ஆலோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, கூடுமான வரையில், ஏற்கனவே இரண்டு மூன்று ஆண்டுக்காலம் பணி செய்கிற ஒருவரும், புதிதாக வருகிற ஒரு அம்மையாரும் என்று தான் அமைகிறது. லேடி டாக்டர்ஸ் ரெக்ரூட்மெண்ட்—எண்ணிக்கை தொடக்க காலத்திலே அதிகம் பேர் இல்லாத காரணத்தால் சேர்க்க முடியவில்லை. தற்பொழுது ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலும் ஒரு ஆடவர் டாக்டரும், ஒரு பெண் டாக்டரும் இருக்க வேண்டுமென்று கூடுமானவரை செய்யப்படுகிறது. ஆனால், இருக்கின்ற நிலைமை என்னவென்றால், நிர்வாக அடிப்படையிலே, ஒருவருடைய சர்வீஸ் அடிப்படையிலே நாம் நபர்களைப் பெற முடியவில்லை. நாம் ஒரு இடத்திற்குப் போட்டால், அந்தப் பகுதியிலே இருக்க முடியாது, இன்னொரு பகுதிக்குப் போட வேண்டுமென்று அந்த டாக்டர் கேட்கிறார். அப்படி கேட்கிற பகுதியில் போட முடியாது என்றால், 3 மாத காலத்திற்கு டாக்டர் விடுமுறை எடுத்துக் கொள்கிறார். இதையெல்லாம் கட்டுப்படுத்துகிற அளவுக்கு நாம் ஒரு முறையை ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் காலா காலத்தில் அந்த வளர்ச்சி ஏற்பட முடியும்.





**திரு. தி. பொன்னுமலை:** தலைவரவர்களே, சில கிராமங்களிலே ஆரம்பச் சுகாதார நிலையத்திலே, குடும்பக் கட்டுப்பாடு நிலையமும் கட்டி முடித்து விடுகிறார்கள். அதற்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை. அங்கே பெரிய அசிங்கமெல்லாம் செய்கிறார்கள். ஆகவே, அதைச் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் போடப்படுமா? ஆரம்பத்திலே எஸ்டிமேட் போடும்போதே, காம்பவுண்ட் சுவருக்கும் சேர்த்து எஸ்டிமேட் போட்டு, அதை அரசு பாதுகாக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, கட்டடம் கட்டுவதற்கே பணமில்லாத ஒரு நெருக்கடி நாட்டிலே பொதுவாக இருக்கிறது. ஆகவே, சுற்றுச் சுவருக்கு ஏறத்தாழ ரூ. 30,000, ரூ. 40,000, சில இடங்களிலே ரூ. 70,000 கூட ஆகும்—அதற்கு நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் இடம் தராது. ஆகவே தான், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் பொதுமக்களுடைய ஆதரவோடு அவற்றையெல்லாம் பாதுகாக்க வேண்டும். பாதுகாக்க வேண்டுமென்று சொல்லும் போது, மக்கள் தவறு செய்யாதபடி பாதுகாக்க வேண்டும். சுவரைக் கட்டிய பிறகு, சுவர் ஏறிக் குதித்து உள்ளே இருப்பதை எடுத்துக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். சுற்றுச் சுவர் பாதுகாப்பு இல்லை, அறிவும் தெளிவும்தான் பாதுகாப்பு.

### *Kesari dhall*

*286 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether Kesari dhall is imported in this State; and

(b) if so, the details of the samo?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** ஏராளமான கேசரி பருப்பு இங்கு வந்து துவரம் பருப்புடன் சேர்க்கப்பட்டு, அடல்டரேட் பண்ணி விற்கப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, இந்தமாதிரி அடல்டரேட் பண்ணாமலிருக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 12

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஏராளமான கேசரி பருப்பு எங்கே வந்து, எங்கே அடல்டரேட் செய்கிறார்கள் என்பது உறுப்பினருக்குத் தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால், ஏன் அவர் அதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை?

**திரு. என். கே. பழனிசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் கேள்வி கேட்கிறேன், எதிர்க் கேள்வி போடலாமா...

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, என்னுடைய நோக்கம் கேள்விக்கு எதிர் கேள்வி போடவேண்டுமென்பதல்ல, நிலைமை விளக்கம் பெறுவதுதான்.

### தேசிய நெடுஞ்சாலைகள்

* 287 வினா—**திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் என்ன? 1967-க்குப் பின்னர் எவ்வளவு தூரம் தேசிய நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழ் நாட்டில் தற்பொழுது உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,852 கிலோ மீட்டர். 1967-க்குப் பின் 51 கிலோ மீட்டர் நீளமுள்ள பாளையங்கோட்டை-தூத்துக்குடி சாலை தேசிய நெடுஞ்சாலையோடு இணைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, பஸ் ரூட் செல்கிற எல்லா இடங்களையும் ஹைவேஸ் ரூட்டாக ஆக்க அரசு முடிவு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன். எல்லாம் நிதி நிலையைப் பொறுத்திருக்கிறது.



1975 மார்ச் 12]

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலைக்கு மத்திய அரசாங்கம் சென்ற ஆண்டு, அதாவது ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பணம் கொடுத்து வருகிறது? அந்தப் பணத்தைத் திறமையாகப் பயன்படுத்துகின்ற காரணத்தினால் நமக்குப் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆனால், வேறு மாநிலங்களில் சரியாகப் பயன்படுத்தவில்லையென்றால், அதை நாம் உபயோகப் படுத்திக் கொள்ளலாம் எனப்படுகிறதே, அப்படி வேறு மாநிலங்களிடமிருந்து நாம் கேட்டு வாங்கி இருக்கிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தேசிய நெடுஞ்சாலைக்கு மத்திய அரசாங்கம் கொடுத்த பணம் பற்றிய புள்ளிவிவரம் தற்பொழுது என்னிடத்திலே இல்லை. மத்திய அரசாங்கம் வேறு மாநிலங்களில் செலவு செய்யாததை நாம் செலவு செய்து கொள்ளலாம் என்று சொல்வதாகச் சொல்வது சரியல்ல. அதற்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு பணம் ஒதுக்குகிறார்கள். என்ன பாதை என்று அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதிலே சில சிக்கல்கள் வருகின்றன. மானியக் கோரிக்கை வரும்போது அதைப் பற்றி மீண்டும் விவாதிக்கலாம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தவரை நம்முடைய மாநில அரசுக்கு அதிலே இருக்கிற அதிகாரவரம்பு என்ன? பாதையின் குறுக்கே ஏதாவது குழாய் அமைக்க வேண்டும், கல்வெர்ட் அமைக்க வேண்டுமென்றால்கூட, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்ற சூழ்நிலையிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா?

**மாண்புமிகு திரு: ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நமக்கிருக்கிற அதிகாரம், அதைப் பராமரிக்கின்ற அதிகாரம். அவர்கள் பணம் தருகிறார்கள். எந்த எந்த இடத்தைத் தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக்கொள்வது என்பது மட்டுமல்ல, அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு எந்த இடத்தைப் பராமரிக்க வேண்டுமென்பதையும் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதற்கு எஸ்டிமேட் தயாரிக்கச் சொல்கிறார்கள். அந்த எஸ்டிமேட் இங்கு தயாரிக்கப்பட்டு அங்கு போய் அப்ரூவாகி வரவேண்டும். அதற்குப் பிறகு டெண்டர் கேட்கிறோம். அந்த டெண்டர் அங்கு போய் அப்ரூவாகி வரவேண்டும். அதற்குப் பிறகு யார்

கான்ட்ராக்டர் என்று சொல்கிறார்கள். அந்த காண்ட்ராக்டரிடம் நாம் வேலை வாங்க வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் நாம் மத்திய அரசாங்கத்தின் ஏஜண்டுகளாக இருக்கிறோம். அதற்காக அவர்கள் தருவது, 7½ சதவிகிதம் ஏஜண்டு பணம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, சென்னை-நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள கல்வெர்ட்டுகள் கழிந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக உடைந்திருக்கின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளாகியும் அவற்றைச் சீரமைக்கும் வேலை முற்றுப் பெறவில்லை. அதற்குக் காரணம் என்னவென்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்னை-நாகர்கோவில் முழுவதும் எல்லா பாலங்களும் பழுது பார்க்கப்படாமல் அப்படியே கிடக்கின்றன என்று சொல்வது சரியல்ல. சிலவற்றிற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கிறது என்பது உண்மை. ஆனால், நான் சொன்ன இந்தக் காரணங்களைத் தவிர வேறு காரணங்கள் கிடையாது. விரைவிலே முடித்து விட வேண்டுமென்று நான் ஆணை பிறப்பித்திருக்கிறேன், கேட்டுக் கொண்டிருக்கிறேன். விரைவிலே முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்தத் தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஆகக்கூடிய செலவு அனைத்தையும் மத்திய சர்க்கார் தருகிறதா? அல்லது மாநில சர்க்காரும் அதில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்கிறதா? தூத்துக்குடியில் இருந்து மதுரை வரையில் உள்ள சாலை தேசிய நெடுஞ்சாலையில் சேர்ந்திருக்கிறதா? அல்லது திருநெல்வேலியில் இருந்து வரும் பாதை மட்டும்தான் சேருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அங்கத்தினர் சொல்கின்ற பாதை தேசிய நெடுஞ்சாலையில் சேர்க்கப்படவில்லை.

மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலைகளுக்கான பணத்தைக் கொடுத்து நிர்வாகச் செலவுக்காக 7½ சதவிகிதம் தான் கொடுக்கிறார்கள். ஆனால் நமக்கு கிட்டத்தட்ட 20 சதவிகிதம் செலவாகிறது. ஆகவே மிச்சம் இருக்கிற பணத்தை நாம்தான் செலவழிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.





**திரு. பி. பொன் சொக்கலிங்கம்:** தமிழ்நாட்டில் சிறப்பு மிக்க தேவாலயங்கள் இருக்கக்கூடிய பகுதிகளுக்குச் செல்லும் சாலைகளை எல்லாம் தேசிய நெடுஞ்சாலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நாம் பல சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் வற்புறுத்தி வருகிறோம். ஆயினும் கடந்த எட்டாண்டுகளில் அவர்கள் 51 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் தேசிய நெடுஞ்சாலையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் நிறைய இடங்களைச் சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். இதுவரை பதில் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைக்கின்ற முகத்தான் சில இடங்களில் பைபாஸ் ரோடு போடும் திட்டம் இருந்ததே, அந்த பைபாஸ் ரோடுகள் எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்தால் உடனடியாக அதைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பை பாஸ் ரோடுகள் போடப்படாமல் தேசிய நெடுஞ்சாலையை இடிக்கவோ, பாலத்தை இடிக்கவோ ஆரம்பிப்பதில்லை. பைபாஸ் ரோடுகளை முதலில் போட்டுவிட்டுத்தான் இந்த வேலைகள் நடைபெறுகின்றன.

### நெல்லை வட்டத்திலுள்ள குளங்கள்

* 288 வினா—**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நெல்லை தாலுக்காவிலுள்ள (1) வேளார் குளம், (2) உற்பத்தியார் குளம் இவைகள் போதுமான தண்ணீர் நிரம்ப முடியாமல் தூர்ந்து மேடாகிவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவைகளை ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்திச் சீர்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** இந்த இரண்டு குளங்களும் நீண்ட நாட்களாக தூர் எடுக்கப்படாமல், கரை உயர்த்தப்படாமல் இருப்பதால் அங்கிருக்கிற ஆயக்கட்டுகளில் நஞ்சை விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறதே, இந்தப் பஞ்ச நிவாரண திட்டத்தின் கீழோ அல்லது வேறு ஒரு திட்டத்தின் கீழோ இந்தக் குளங்களை ஆழப்படுத்த, கரைகளை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஒரு ஏரியை ஆழப்படுத்துவது, கரையை உயர்த்துவது என்றால் அந்த ஏரியின் ஆயக்கட்டுகள் பாதிக்கப்பட்டிருந்தால் ஏரியை ஆழப்படுத்தும் திட்டத்தின் கீழ் இதைக் கொண்டு வரலாம். ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் சொல்லக்கூடிய வேளார் குளம் 14.3 எக்கராவுக்கு பாசன வசதி அளிக்கக் கூடியது. அதில் இதுவரை பாதிக்கப்பட்டிருப்பது .63 எக்கராதான். அடுத்து உற்பத்தியார் குளம் ஆயக்கட்டை எடுத்துக் கொண்டால் அது 34.95 எக்கராவுக்கு பாசனம் அளிப்பது. இதில் .07 எக்கராதான் பாசன வசதி பெறாமல் இருக்கிறது என்கிற புள்ளிவிவரம் இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டுமே பாசன வசதியைப் பூரணமாக பெற்றிருக்கிற காரணத்தினால் தற்போது அவை விடப்பட்டிருக்கின்றன.

## குறுவை சாகுபடியில் கொள்முதல்

* 289 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு குறுவை சாகுபடியில் அரசாங்கம் கொள்முதல் செய்த நெல் எவ்வளவு?

(இ) கொள்முதலுக்கென தமிழ்நாடு அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை என்ன?

(உ) மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலை என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 1974-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தின்போது, 31—12—1974 வரை, 1,50,132 டன் அரிசியை அரசு கொள்முதல் செய்துள்ளது.





(இ) 25—9—1974 அன்று, மாநில அரசு, கொள்முதல் விலைகளைக் கீழ்க்கண்டவாறு வரையறுத்தது:—

(குவிண்டால் ஒன்றுக்கு)

| | |
|---|---|
| மிக நேர்த்தி ரகம் | ரூ. 98 |
| நேர்த்தி ரகம் | ரூ. 95 |
| நடுத்தர ரகம் | ரூ. 90 |
| மோட்டா ரகம் | ரூ. 85 |

(உ) 1974-75-ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில், நெல் கொள்முதல் விலைகளைக் கீழ்க் கண்டவாறு வரையறுக்குமாறு இந்திய அரசு மாநில அரசுக்கு ஆலோசனை நல்கியது.

(குவிண்டால் ஒன்றுக்கு)

| | |
|---|---|
| மிக நேர்த்தி ரகம் | ரூ. 86 |
| மெல்லிய நேர்த்தியான ரகம் | ரூ. 83 |
| நீண்ட மோட்டா ரகம் | ரூ. 78 |
| குட்டை மோட்டா ரகம் | ரூ. 74 |

*290 வினா—திரு. கே. எ. வகாப்:
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல் கொள்முதல் விலையை அதிகமாக நிர்ணயிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், ஒரு குவிண்டாலுக்கு என்ன விலை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

DR. H. V. HANDE: Sir, when it is possible for the State Government to give more amount than what has been fixed by the Centre, will it not be possible for the Government right now to review its entire programme and see to it that a more realistic price is given to the persons from whom paddy is levied so that they will be able to part with their produce properly and they will also get proper price commensurate with the cost of cultivation and they will also be satisfied with it?

[1975 மார்ச் 12

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நாம் போனசாகவும், டிரான்ஸ்போர்ட் செலவுக்கு ஈடாகவும் 15 ரூபாய் கொடுத்திருக்கிறோம். நெல் விலையைக் கூட்டிக் கொடுப்பது என்றால் அரிசி விற்பனை விலையும் அதிகமாகும். இதை எல்லோரும் ஏற்றுக் கொண்டால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. எ. வகாப்:** இன்றையதினம் விவசாயச் செலவுகள் இரட்டிப்பாகி விட்டன. நெல்விலை அதற்குத் தகுந்த அளவு உயரவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கூட நெல் விலையை உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். குறைந்த பட்சம் க்விண்டாலுக்கு 125 ரூபாய் என்ற அளவுக்காவது உயர்த்திக் கொடுத்தால்தான் விவசாயிகளுக்குக் கட்டுபடியாக இருக்கும். அப்போதுதான் அவர்களும் லெவிக்குக் கொடுக்க தாராளமாக முன்வருவார்கள். பஞ்சத்தையும் தவிர்க்க இது சாதகமாக இருக்கும். ஆகவே, நெல் விலையை க்விண்டாலுக்கு ரூ. 125 என்ற அளவிலாவது உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எல்லோரும் நெல் விலையை அதிகப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்கிறார்கள். தஞ்சையில் பேசும்போது அது சுவையாக இருக்கிறது. அதே நேரத்தில் அரிசி விலையை அதிகப்படுத்தி விட்டார்கள் என்றும் இவர்கள் எல்லோரும் இங்கே சொல்கிறார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** சர்க்கார் இன்றைக்கு ஒரு க்விண்டால் அரிசியை 135½ ரூபாய்க்குத்தான் வாங்குகிறது. அதே சமயம் இது ரூ. 190-க்கு விற்கப்படுகிறது. கிட்டத்தட்ட வாங்குவதற்கும், விற்பதற்கும் இடையில் ரூ. 50 ஓவர்ஹெட் சார்ஜுக்காக வைக்கிறார்கள். இந்த ஓவர்ஹெட் சார்ஜையாவது குறைத்து அந்தத் தொகை விவசாயிகளுக்குப் போய்ச் சேரும்படியாகச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாண்புமிகு அங்கத்தினர் நல்ல விவசாயி. விவசாயிக்கு ஒரு க்விண்டால் உற்பத்தி செய்ய என்ன செலவாகிறது; அவர்களுக்கு என்ன விலை கொடுத்தால் கட்டுபடியாகும் என்பதை கணக்கிட்டு அவரே சொன்னால் நான் அதைப் பரிசீலிக்கத் தயாராய் இருக்கிறேன். இதைப்பற்றி ஒரு காஸ்ட் அக்கவுண்டெண்ட் போட்டு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. நாம் க்விண்டாலுக்கு 135 ரூபாய் கொடுக்கிறோம் என்றால் அது விவசாயிகள் நெல்லைக் கொடுக்கிற இடத்தில். நாம் அதை மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு அனுப்புகிற செலவு இருக்கிறது, அறைவைக் கூலி இருக்கிறது. அளவு குறைவு இருக்கிறது, இவற்றின் காரணமாக அரிசி விலை அதிகமாகிறது.



**திரு. கு. காமாட்சி:** கோதுமையைப் பயிரிடுவதற்கு அதிக செலவு ஆகிறது என்று மத்திய அரசு எண்ணி கோதுமைக்கு க்விண்டால் 121, 122 என்ற அளவில் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். கோதுமை பயிரிடுவதை விட நெல் பயிரிடுவதற்கு அதிகச் செலவு ஆகிறது. இந்த நிலையில் நெல்லுக்கு க்விண்டால் 87 என்று கொடுப்பது மிக மிகக் குறைவாகும். இதைக் கொஞ்சம் அதிகப்படுத்தித் தர நமது மாநில அரசு முயற்சி செய்யுமா? இதனால் அரிசி விலை ஏறிவிடும் என்றால் அப்படி ஏறாதிருக்க மத்திய அரசாங்கம் இதற்கும் சப்ஸிடி தர வேண்டுமென்று வற்புறுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கோதுமை விலை, நெல் விலை இரண்டுக்கும் வாதப் பிரதிவாதம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. நாம் இந்த மன்றத்திலேயே முன்பு விளக்கிச் சொன்னதைப்போல மத்திய அரசிடம் நெல்லின் விலையை அதிகப் படுத்த வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அக்ரிகல்சுரல் ப்ரைஸஸ் கமிஷன் கோதுமைக்கு க்விண்டால் ரூ. 125 என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் நெல்லுக்கு நூறு ரூபாயாவது கொடுப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது? நூறு ரூபாய் கொடுத்தாலும் கூட—நாம் நம்முடைய ஓவர்ஹெட் சார்ஜைக் குறைத்துக் கொண்டால் இன்றைக்கு அரிசியை விற்கின்ற விலைக்கே விற்க முடியும். கொள்முதல் விலைக்கும், விற்பனை விலைக்கும் இடையே இன்றைக்கு தனியார் துறையில் அதிக இடைவெளி இல்லையே, இதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியார் துறையில் குறைத்து விற்கிறார்கள் என்றுசொல்ல முடியாது. அப்படிச் சொல்வதும் சரியல்ல என்று நினைக்கிறேன். எந்த அளவுக்கு செலவைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைத்துத்தான் வைத்

திருக்கிறோம். கோதுமை விலையை ஒட்டி அரிசி விலையை நிர்ணயிக்க வேண்டும் என்பதில் ஒன்றிரண்டு கருத்துக்கள் பரிசீலிக்கப்பட வேண்டும். கோதுமை 125-க்கு வாங்கப்பட்டது என்றால் அதை அப்படியே விற்கிறோம். ஆனால் அரிசியைப் பொறுத்தவரையில் நெல்லாக வாங்கி—அறைத்து—அறைக்கும் போது அளவு குறைகிறது—விற்கிறபோது விலை அதிகமாகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** நெல், கோதுமை போன்ற உணவுப் பொருள் சம்பந்தமாக விலையை நிர்ணயிக்கிறபோது மத்தியில்—மாநில உணவு அமைச்சர்களை எல்லாம் கூட்டி வைத்துக்கொண்டு, நாட்டின் ஒட்டு மொத்தமான நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதானே நிர்ணயிக்கிறார்கள். மாநில உணவு அமைச்சர்களுக்கும் அங்கு நடைபெறுகிற வாதம் கன்வின்சிங்காக இருந்த காரணத்தினால்தானே அந்த நிலைக்கு ஒத்துக் கொள்கிறார்கள். திரும்பவும் இந்த விலையை மாற்றுவது என்றால் மத்திய உணவு அமைச்சர்—மாநில உணவு அமைச்சர்கள் எல்லாம் திரும்பக் கூடும்போது நாட்டின் நிலைமையை ஒட்டு மொத்தமாகப் பார்த்துத்தானே இதைச் செய்ய முடியும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய உணவு அமைச்சரை நாங்கள் சந்தித்து நிறையச் சொல்லியிருக்கிறோம். என்றாலும் மத்திய அரசாங்கம் செய்வது எல்லாம் சரி என்று இங்கே வாதிடுவதுதான் வேதனையாக இருக்கிறது. கோதுமைக்கு விலையை அதிகப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்து, அதைப் பரிசீலித்து உயர்த்துகிறபோது, அரிசியைப் பற்றி கணக்கில் கொள்ள மாட்டோம் என்று அவர்கள் சொல்வது எந்த அளவுக்கு சரி என்றுதான் எங்களுக்குத் தெரியவில்லை.

**திரு. எஸ். வடிவேல்:** மத்திய அரசு கோதுமைக்கு எப்படி சப்சிடி கொடுக்கிறதோ அதுபோல நமது அரசு அரிசிக்கு சப்சிடி கொடுத்து மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் அரிசி ஒரே விலையில் கிடைக்க வழி செய்ய வேண்டும். இன்றைக்கு ஒரு யிடத்தில் மூட்டை நெல் 54 ரூபாய், அடுத்த இடத்தில் 90 ரூபாய். ஒரு தாலுக்காவில் படி அரிசி 4 ரூபாய், இன்னொரு இடத்தில் 8 ரூபாய்—இதுபோல நம்முடைய மாநிலத்திலேயே இடத்திற்கு



இடம் விலை அதிக அளவுக்கு வேறுபடாதிருக்க இந்த அரசு துரிதமான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற நிலையை ஒட்டி நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. பொதுவாக உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது என்பது அவர்களுக்கே தெரியும். ஏற்கனவே நாம் 90 ரூபாய் கொடுத்ததைக் கூட மத்திய அரசு ஒத்துக் கொள்ளாது போன துர்பாக்கியமான நிலைதான் நமக்கு ஏற்பட்டது.

(முற்பகல் 9-30)

**திரு. மா. வெ. கரிவேங்கடம்:** விவசாய உற்பத்திச் செலவு முன்னைக் காட்டிலும் கூடுதலாக இருக்கிறது. தற்போது உரத்தின் விலை ஒன்றுக்கு மூன்றாக உயர்ந்திருக்கிறது. ஆனால், நெல்லின் விலை மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, நியாயமான விலையில் கொள்முதல் செய்தால் உற்பத்தி பாதிக்கப்படாது. இந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு விலையை நிர்ணயம் செய்யும்போது நியாயமான அளவாக இருக்க வேண்டும். உரத்தின் விலையை இரண்டு மடங்காக நிர்ணயித்து மத்திய அரசு அந்த அளவுக்கு நெல்லின் உற்பத்திச் செலவு கூடுமே என்று சிந்திக்காமல் இருப்பது வருத்தப்படக் கூடிய ஒன்றாகும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும் போது அரிசி விலையை உயர்த்த வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு இருப்பதால், நெல்லுக்குக் கூடுதல் விலை நிர்ணயிக்க வேண்டியது அவசியம் என்று சொன்னார்கள். நாம் கொள்முதல் செய்யும் போது ஐ.ஏ.எஸ். ஆபீசர், டெபுடி கலெக்டர், தாசில்தார் முதலிய பெரிய அதிகாரிகளைக் கொண்டு கொள்முதல் செய்வதால், அவர்களுடைய சம்பளம் போன்ற நிர்வாகச் செலவுகளையும் ஏற்க வேண்டியிருப்பதால் அரிசியை அதிக விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, நெல் கொள்முதல் செய்யும்போது மேல் மட்ட அதிகாரிகளை அனுப்பாமல் சாதாரண அதிகாரிகளையே அனுப்பி, நிர்வாகச் செலவைக் குறைத்து, அரிசியின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1975 மார்ச் 12

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நிர்வாகச் செலவைப் பொறுத்தமட்டில் அது ஆழ்ந்த பரிசீலனைக்கு உரியது என்பதை ஒப்புக் கொள்கிறேன். அரசு இதுபோன்ற வியாபாரத்தில் ஈடுபட்டால் அந்தச் செலவு இருக்கத்தான் செய்யும். பெரிய அதிகாரிகளைப் போடுகிறோம் என்ற வாதத்தை உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தனியார்கள் அப்படி வாங்கும்போது 30 ரூபாய் சம்பளத்தில் ஆளைப் போட்டு விற்பனை செய்து விடுகிறார்கள். அதே போல் தனியார் கடையில் 25 ரூபாய் சம்பளம் கொடுத்து ஆளைப் போட்டு விற்பனை செய்து விடுகிறார்கள். அரசாங்கம் இந்த இரண்டையும் செய்ய முடியாது. அரசாங்கத்திற்கு நிர்வாகச் செலவு கூடுகிறது என்பது உண்மை தான்.

**திரு. எஸ். நல்லசாமி:** நெல் விலையை உயர்த்த வேண்டும் என்று எல்லோரும் சபையில் கூறுகிறார்கள். நெல் விவசாயம் செய்தால் லாபம் கிடைப்பது இல்லை என்ற நிலைமை எல்லோரும் அறிந்த உண்மை. உரங்களின் விலை ஏறியதன் காரணமாக நெல் விவசாயம் செய்வது என்பது லாபம் இல்லாத காரணத்தால் நெல் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய சர்வகட்சிக் குழு அமைத்து, அவர்கள் சுற்றுப்பயணம் செய்து, ஒரு நியாயமான விலையைக் குழு நிர்ணயித்தால் அதை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா? அத்தகைய குழு அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாட்டைப் பொறுத்த வரை எந்தவிதமான கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாக் கட்சியினரும் ஒரே குரலிலேயே கேட்கிறார்கள், ஆளும் காங்கிரஸ் கட்சியைத் தவிர. அதிலே கூட கருத்து வேறுபாடு இருக்கிறது. அதிலே கூட ஒருவர் நெல்லுக்குக் கூடுதல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். திரு. சுரேந்திரன் அவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டம், இப்படிக் கேள்விகள் கேட்கிறார்களே என்பதால். ஆளும் காங்கிரஸ் கட்சி உட்பட நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். மத்திய அரசும் ஒப்புக்கொள்கிறார்களா என்பதுதான் பிரச்சினை.



1975 மார்ச் 12]

**திரு. ஆ. கு. சுப்பையா:** 31—12—74 முடிய கொள்முதலான நெல் 1.84 ஆயிரம் டன் என்று சொன்னார்கள். அதனுடைய இலக்கு எவ்வளவு? எவ்வளவு நெல் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது? மத்திய அரசு சரியான முறையில் கொள்முதல் செய்து கொண்டு இருக்கிறார்களா? அவர்கள் எவ்வளவு கொள்முதல் செய்துகொண்டு இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ்நாட்டில் மத்திய அரசு எப்.சி.ஐ. மூலம் வாங்குவது நம்முடைய ஆணையின் பேரில் தான். மொத்தம் எவ்வளவு என்ற விவரம் இல்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** புரொக்கியூர் மெண்டுக்கு இந்த ஆண்டிலே கொடுக்கப்படக்கூடிய விலை அடுத்த ஆண்டிலும் கொடுக்க வேண்டும், எப்போதும் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்க வேண்டும். தமிழகத்திலே ஏற்பட்டிருக்கும் உணவுப் பற்றாக்குறை காரணமாக மற்ற மாநிலங்களிலிருந்து தருவிக்கும் சூழ்நிலை இருக்கும் காரணத்தால் எதிர் காலத்தில் 2, 3 மாதங்களில் ஏற்படக்கூடிய நிலைமையைச் சமாளிக்க இந்த ஆண்டில் கிடைக்கக்கூடிய நெல்லை ஓப்பன் மார்க்கெட்டிலும் லெவி சிஸ்டத்திலும் அதிகப்படியாக அரசு வாங்கி வைத்து விலை ஏறாமல் தடுப்பதற்கு முயற்சி செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே இதைப் பற்றி விளக்கியிருக்கிறேன்.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** முன்பு எல்லாம் நெல் கொள்முதல் செய்யும்போது மரக்காலில் அளந்து வாங்கி வந்தார்கள். இப்போது குவிண்டால் கணக்கில் வாங்கும்போது ஒரு குவிண்டாலுக்கு 3 ரூபாய், 4 ரூபாய் வரை குறைத்து விடுகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? இது என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சில சமயங்களில் நெல்லை வாங்கும்போது ஈர நெல்லாக இருந்தால் அப்படிப்பட்ட பிரச்சினை எழுகிறது. ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் அதைப் பார்த்துக் கொள்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** என்னுடைய துணைக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் நெல் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுப்பதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. அப்படி உயர்த்திக் கொடுத்தால் விற்கக்கூடிய விலை ஏறும் என்றார்கள். மாண்புமிகு திரு. சுரேந்திரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு மத்திய அரசும் பொறுப்பு என்ற வகையில் சொன்னார்கள். இன்றைக்கு மார்க்கெட்டில் படி அரிசி 7 ரூபாய், 8 ரூபாய் விற்கப்படும்போது விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற நேரத்தில் 90 ரூபாய், 100 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. அந்த ரேட் பிரகாரம் பார்த்தால் கிலோ அரிசி ரூ. 1.30, ரூ. 1.40-க்கு விற்க முடியும். எங்கே கோளாறு இருக்கிறது என்று தெரியவில்லை. விவசாயிகளுக்கும் பலன் கிடைக்கவில்லை. கன்ஸ்யூமர்களுக்கும் குறைந்த விலையில் அரிசி கிடைக்கவில்லை. ஆகவே, இந்தக் கோளாறைச் சரிப்படுத்தி, கன்ஸ்யூமர்களின் அதிருப்தியையும், விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கும் பயங்கரமான நிலைமையையும் போக்குவதற்கு என்ன திட்டங்களை அரசாங்கம் கொண்டு வரப் போகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்தக் கோளாறு எங்கும் இல்லை. சில பேர்களுடைய சிந்தனையில்தான் கோளாறு இருக்கிறது. மன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சியினரும் ஒரே குரலில்தான் பேசுகிறார்கள். 89 ரூபாய்க்கு வாங்கி, படி அரிசி 7 ரூபாய், 8 ரூபாய்க்கு விற்கிறார்கள். எந்த அளவுக்கு வாங்குகிறார்களோ அந்த அடிப்படையில்தான் இஷ்யூ பிரைஸ் நிர்ணயிக்கப்படுகிறது. கொள்முதலுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை 74 ரூபாய்தான். நாம் 89 ரூபாய்க்கு அதிகாரமற்ற முறையில் போனஸ், டிரான்ஸ்போர்ட் என்று மறைமுகமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைவிட மாநில சர்க்கார் 12 ரூபாய் போனஸ் கொடுத்து வருகிறது. அந்த 12 ரூபாயை மானியமாக அரசு கொடுத்து விடுகிறதா ? அல்லது அரிசியை வாங்கிச் சாப்பிடுகிற மக்களிடமிருந்து அதையும் விலையிலே சேர்த்து திரும்ப வாங்கிக் கொள்கிறார்களா ? சில்லரைக் கடைகளிலே அரிசி கிலோ 2 ரூபாய்க்கு விற்கிறது, போனஸ் கொடுக்கிற அந்த ரூபாயையும்



விலையிலே சேர்த்து கொஞ்சம் லாபத்தையும் சேர்த்துக் கொடுத்தால்தான் இப்போது இருக்கிற கிலோ இரண்டு ரூபாய் என்ற விலைக்கு கணக்கு வருகிறது. ஆகவே லாபம் இல்லாமல் செய்தால் இப்போதுள்ள கொள்முதல் விலையைக் கூட்டலாம் அல்லது அரிசி விலையைக் குறைக்கலாம் என்ற முறையிலே கணக்கு வருகிறதே, இதையெல்லாம் பரிசீலனை செய்து உற்பத்தியாளர்களுக்கும் வாங்குகிறவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கக்கூடிய முறையில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை வைத்துக் கொண்டாவது ஆலோசனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கொள்முதல் விலை, விற்பனை விலை எல்லாம் யோசனை செய்துதான் தரப்பட்டு வருகிறது. 15 ரூபாய் என்று நாம் கொடுப்பது விலையாகத்தான் கொடுக்கப் படுகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** விலையை நிர்ணயிக்கிறபோது அதிக நிலம் வைத்திருப்பவர்களைப் பற்றிக் கவலையில்லை. 3 ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு ஒரு விலை நிர்ணயத்தையும் 3 ஏக்கர்களுக்கு மேலே வைத்திருக்கின்றவர்களுக்கு ஒரு விலை நிர்ணயத்தையும் கொண்டுவர அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது முடியாத காரியம்.

**திரு. கே. எ. வகாப் :** இப்போது பரவலாக நெல் வியாபாரத்திலே அரசாங்கம் மிக அதிகமான லாபத்தை சம்பாதிக்கிறது என்ற பிரச்சாரம் வெளியிலே செய்யப்படுகிறது. நிர்வாகச் செலவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் விற்பனை செய்யக்கூடிய முறைகளையும் கொண்டு வந்தால் இப்போதுள்ள அரிசி விலையை மேலும் ஏறாமல் பார்த்துக்கொள்ளலாம், அதேபோன்று நெல் விலையை ஏற்றலாம், ஆகவே அதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

ஈர நெல்லாக இருந்தால் 5 கிலோ மாய்ஸ்ச்சர் என்ற முறையிலே எடுக்கப்படுகிறது, ஆனால் காய்ந்த நெல்லுக்கும் அதிகாரிகள் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லப்

படுகிறதே, அது இல்லாமல் செய்வதற்கும் அரசாங்கம் அதிகமான லாபம் சம்பாதிக்கிறது என்று வெளியிலே சொல்லப்படுகிறதே அதுபற்றியும் விளக்கம் அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கத்திற்கு அதிகமான லாபம் கிடைக்கக் கூடாது என்பது நியாயமான வாதம். அதிகமான லாபம் கிடைத்தால் விவசாயிகளுக்கு அதிகமான விலை கொடுக்க முயற்சிக்கலாம். அரசாங்கம் வியாபாரத்தை ஏற்றுக்கொண்டால் நிர்வாகச் செலவுகள் எப்படி எப்படி ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களே சொன்னார்கள்.

**திரு. செ. அரங்கநாயகம் :** மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் விலையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிற விலை எவ்வளவு என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் அதிகமாக இங்கேயே கொடுத்திருக்கிறோம், அவர்களைக் கேட்காமலேயே 90 ரூபாய் கொடுத்தோம். அதை நிறுத்தச் சொல்லிவிட்டார்கள் அவர்கள்.

**திரு. என். கே. பழனிசாமி :** உணவு அமைச்சர்கள் மாநாட்டிற்கு சர்க்காரின் சார்பிலே போனவர்கள் நெல்லுக்கு இன்ன விலை கொடுக்க வேண்டுமென்றும், கோதுமைக்கு எந்த அடிப்படையிலே விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த அடிப்படையிலே நெல்லும் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் கேட்டார்களா ? அவர்களிடத்தில் கணக்கு இல்லாமல் இருந்ததால்தான் அக்ரிகல்சர் பிரைஸ் கமிஷன் சொன்ன விலையை இவர்களிடம் கணக்கு இல்லாததால் பேசாமல் ஒத்துக் கொண்டார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது ஒரு பெரிய யூகம். இப்படிப்பட்ட கற்பனை எங்கிருந்து எழுந்ததோ தெரியவில்லை. அவர்களோடு தொடர்ந்து இதைப்பற்றித் தெளிவாக விவாதித்து இருக்கிறோம், அவர்களோடு சண்டை போட்டு இருக்கிறோம், அவர்களைக் கேட்காமலேயே 90 ரூபாய் கொடுத்திருக்கிறோம்.





**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** அக்ரிகல்சர் பிரைஸ் கமிஷனிலே யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அவர்கள் எந்த அடிப்படையிலே விலை நிர்ணயம் செய்கிறார்கள், தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் யார் யார் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** யார் யார் என்ற தகவல் இல்லை.

**திரு. எப். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது நான் ஏதோ கொள்முதல் விலையை உயர்த்தக் கூடாது என்று சொன்னதைப் போன்று ஒரு கருத்து வரும்படியாக பதில் சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம் உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே இங்கிருந்து சென்று கலந்து கொண்டவர்கள்—மாநில அரசும் மத்திய அரசும் ஒன்றுக்கொன்று நெருக்கமானவை, மாநில அரசின் மேல் ஆதிக்கம் செலுத்தக் கூடிய எஜமானத்துவம் பெற்றதல்ல மத்திய சர்க்கார்—இங்கே இருக்கிற நிலைமைகளைப் பற்றி சரியான முறையிலே வாதத்தை எடுத்து வைத்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது. அப்படி வாதத்தை நல்ல முறையிலே எடுத்து வைப்பது உங்கள் கடமையல்லவா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வாதாடுவது எங்கள் கடமையென்று நினைவூட்டினார்கள். வாதாடிய விவரங்களையெல்லாம் பத்திரிகைகளிலே அவர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து வாதாடியும் கூட உண்மையான நிலைமையைப் புரிந்து கொண்டு விலையை அதிகப்படுத்திக் கொடுப்பது அவர்களுடைய கடமையல்லவா ? அந்தக் கடமையை அவர்களுக்கு நினைவூட்ட ஏன் திரு. சுரேந்திரன் அவர்கள் மறுத்து வருகிறார்கள் ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஏதோ தங்களுக்குச் சங்கடம் இருப்பது போன்று சொன்னார்கள். எப்.சி.ஐ.யிலே 2, 3 ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்ற தகவல் இருக்கிறது, அதுமட்டுமல்ல அங்கே மெஷர்மென்ட்டும் சரியாக இருக்கிறது.

farmers are more attracted to sell it to F.C.I. என்ற தகவல் பத்திரிகைகளிலே எல்லாம் கூட வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே மாநில அரசு 15, 20 ரூபாய் என்று போக்குவரத்து மற்ற மற்ற வகையிலே எப்படிக் கூட்டிக் கொடுக்கிறார்களோ அதைப்போன்று—மத்திய சர்க்கார் தடையாக இருக்கிறது, நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள்—இன்னும் 10 ரூபாய் வேறு கணக்குக் காட்டி கூட்டிக் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கிறது ? அதே நேரத்திலே வெய்ட்ஸ் எல்லாம் சரியாக இல்லை என்று சொல்கிறார்கள், அதையெல்லாம் சரிப்படுத்தி சீர்படுத்தி நல்ல வகையிலே எடுத்துக் கொள்வதற்கும் அதிக விலையைக் கொடுப்பதற்கும் நான் கூறிய ஏற்பாட்டின்படி அரசாங்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா ? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆத்திரப்படாமல் நிதானமாகப் பதில் கொடுக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** டாக்டர் ஹாண்டேயைப் போல் நான் ஒருக்காலும் ஆத்திரப்படவே மாட்டேன். மத்திய சர்க்காருக்குச் சொந்தமான எப்.சி.ஐ.யை அவர்கள் புகழ்ந்ததிலே எனக்கு ஆச்சரியமில்லை. அதைவிட பல மடங்கு நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் உன்னதமான முறையிலே செயல் படுகிறது, புரக்யூர் செய்துவருகிறது. மத்திய சர்க்காரைக் கேட்காமலேயே இன்னும் ஒரு 15 ரூபாயை உயர்த்திக்கொடுத்து மேலும் மத்திய அரசினுடைய பகையை அதிகப்படுத்திக் கொள்வது சரியல்ல.

### *Handicrafts Development Corporation*

* 291 *Q.*—THIRU B VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Handicrafts Development Corporation had organised an exhibition in Bombay in 1974; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கழகம் பம்பாயில் உள்ள குமாரசாமி அரங்கில் 19—10—1974 முதல் 30—10—1974 வரை பொருட்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்தது. இந்தப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்ய ரூ. 18,836.75 (ரூபாய்



பதினெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தாறும் பைசா எழுபத்தைந்து மட்டும்) செலவாகியது. இந்த பொருட்காட்சியில் கைவினைப் பொருள் கழகம் ரூ. 99,858.75 (ரூபாய் தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தெட்டும் பைசா எழுபத்தைந்து மட்டும்) மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்தது.

* 292 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் தமிழ்நாடு கைவினைப்பொருள் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் செயல்படத் துவங்கிவிட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த கைவினைப் பொருள் அபிவிருத்திக் கழகமானது பெரிய நகரங்களிலே கண்காட்சி நடத்துவதின் மூலமாக சிறந்த முன்னேற்றமான முறையை ஏற்படுத்தி நம்முடைய கைவினைப் பொருட்கள் அதிகமாக விற்க ஏற்பாடு செய்திருக்கிறது. குறிப்பாக தமிழ் நாட்டிலேயிருந்து தயாரிக்கப்படுகின்ற பாய் போன்றவை அதிகப் படியாக விற்கக்கூடிய அளவிலே அவற்றையும் கண்காட்சியிலே வைத்து விற்க ஏற்பாடு செய்வார்களா ? கோரை பாய் தொழிலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்க்கை அடங்கியிருக்கிறது, அதனுடைய விற்பனை தற்போது குறைவாக இருக்கிறது. ஆகவே இந்த கைவினைப் பொருள்கள் அபிவிருத்திக் கழகம் அதையும் எடுத்துக்கொள்ள முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பம்பாயிலே நடை பெற்ற கண்காட்சியிலே பாய் ரூ. 7,302-க்கு விற்றது. டிமாண்டை பொறுத்துத்தான் விற்பனை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ள பூம்புகாரிலே கைவினைப் பொருள் கழகம் இன்னும்

துவங்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது ஏராளமான பேர்கள் அந்த சரித்திரப் புகழ்வாய்ந்த இடத்தைப் பார்க்க வருகிறார்கள், அங்கே இந்த கைவினைப் பொருட்களை வைப்பதால் அந்த இடத்தில் அப்படிப்பட்ட நிலையத்தை ஆரம்பித்தால் அந்த இடத்திற்கும் கீர்த்தி சேரும், வரக்கூடிய மக்களும் அதிகமாக வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அங்கே ஏன் துவக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* இப்போது உள்ளது பூம்புகார் சேல்ஸ் எம்போரியம் சென்னை, மகாபலிபுரம், நெய்வேலி, சேலம், கோயம்புத்தூர், திண்டுக்கல், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது. இந்த ஹான்டிகிராப்ட்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் கடலூர், வேலூர், ஈரோடு, மதுரை, ஊட்டி ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்று இந்தக் கழகத்தின் சார்பாக சேல்ஸ் எம்போரியம் ஆரம்பிப்பதற்கு செயற்குறிப்பு இருக்கிறது. மற்ற மாவட்டங்களைப்பற்றி இப்போது பரிசிலனை நடைபெற்று கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH · Sir, may I know from the Hon. Minister for Electricity and Industries whether this Development Corporation derived any benefit from the Exhibition held at Bombay and if so, what is the total amount of income derived?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: As I have already stated, the expenditure is Rs. 18,830. The sales was to the extent of Rs. 99,000 and there is a benefit.

*திரு. செ. அரங்கநாயகம்:* தமிழ்நாட்டு கைவினைப் பொருள்களுக்கு வெளிநாட்டுப் பயணிகளிடம் கிராக்கி இருக்கும் காரணத்தால் இதுபோன்ற விற்பனை நிலையங்களை வெளிநாட்டுப் பயணிகள் நிறைய வருகின்ற பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களில் அமைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபோன்ற செயற் குறிப்பு இருக்கிறது; இப்போது கூட நம்முடைய விமான நிலையத்தில் சேல்ஸ் எம்போரியம் ஆரம்பித்திருக்கிறோம்.



THIRU B. VENKATASWAMY: Most of the ladies in the house are doing this handicraft work. May I know from the Hon. Minister whether this handicraft will be given more prominence and whether he will see that more handicraft goods are produced and sold through the Handicrafts Development Corporation?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: There is a proposal to start Poompuhar Sales Emporium in Krishnagiri also. So, my friend will be satisfied with this answer.

## *Work study of Housing Board*

* 293 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether a study on the staff position and the nature of work done by the State Housing Board has been undertaken by the Finance Department; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணி ஆய்வை நிதித் துறையின் அமைப்பு-நடைமுறைப் பிரிவு 5—8—1974 ஆம் நாளிலிருந்து மேற்கொண்டுள்ளது. அது பொறியியல் பிரிவைப் பற்றிய தன் அறிக்கையை முடித்துள்ளது. நிர்வாகம், கணக்கு பிரிவுகளுக்கான அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

*திரு. என். கே. பழனிசாமி:* இதுவரை ஆய்வு செய்யப்பட்டதில் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? மேலும் இருக்கக்கூடிய குறைபாடுகளைப் போக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவர்கள் ஆய்வு செய்து கொடுத்த அறிக்கையின்பேரில் ஒவ்வொரு பத்து நாளைக்கும் ஒவ்வொரு பொறியாளர் சென்று எவ்வளவு தூரம் வேலை செய்கிறார்கள் என்ற கணக்கெல்லாம் பார்க்கப்பட்டு வருகிறது. அவர்கள் செய்த ஆய்வு எல்லாம் ஒப்புக்கொண்டு பொறியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு நல்ல அளவில் வேலை நடந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 மார்ச் 12

திரு. எம். சுரேந்திரன்: வீட்டு வசதி வாரியத்திலே கணக்குகள், வரவு-செலவுகள், அட்வான்சுகள், டெபாசிட்டுகள், வாடகைகள் போன்றவற்றுக்கு முறையாக கணக்குகள் இல்லை என்றும், அது சம்பந்தமாக ஆராய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அந்தக் கமிட்டி ஆராய்ந்து அந்த ரிப்போர்ட் தரப்பட்டிருக்கிறதா? அம்மாதிரி ஆராயப்பட்ட பிறகு எல்லாம் முறைப்படுத்தப்பட்டிருக்கிறதா? இப்போதும் முறையாக நடைபெறவில்லை என்ற புகார் இருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே சொன்னது போல் நிர்வாகக் கணக்குப் பிரிவுகளுக்கான அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது. கணக்குப் பிரிவைச் சரிப்படுத்தும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: வீட்டு வசதி வாரியத்திற்குப் பணியாளர்களை நியமிப்பதற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா? பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமனமாகிறதா அல்லது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் நியமனம் ஆகிறதா? மாவட்டங்களில் வீட்டு வசதி வாரியத்தை விஸ்தரிக்கும்போது சென்னையிலே நியமித்து ஆங்காங்கு அனுப்பக்கூடிய முறை தற்போது இருந்து வருகிறது. இதனால் அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு உரிய விகிதாசாரம் கிடைக்கவில்லை. இந்தக் குறைபாடுகளை நீக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வசதி வாரியத்தில் ஏற்கனவே ஏராளமான பேர் வேலையில் சேர்ந்து விட்டிருந்தார்கள். ஆகவே, புதிதாக மாவட்டங்களில் ஏற்படும் அலுவலகங்களுக்கு ஏற்கனவே வேலையில் இருப்பவர்கள் அனுப்பப்படுகிறார்கள். புதிதாக எடுக்கும்போது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலந்தான் எடுக்கிறார்கள். கடந்த ஓராண்டுக் காலமாக புதிதாக வேலைக்கு ஆட்களை எடுக்கக்கூடிய அளவுக்கு அந்த நிறுவனம் இல்லை.



1975 மார்ச் 12]

## கோயம்புத்தூர் பத்மா மில் தொழிலாளர்கள்

*294 வினா—திரு. என் மருதாசலம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், காளப்பட்டி பத்மா மில்லில், 23—2—1974-ம் தேதி சர்க்கார் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மில் முதலாளி அமுல் படுத்தாதை எதிர்த்து 26—5—1974 முதல் வேலை நிறுத்தம் செய்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். கோயம்புத்தூர், ஸ்ரீபாலதண்டாயுதபாணி அண்டு கம்பெனியில் (குத்தகைதாரர்: ஸ்ரீபத்மா மில், காளப்பட்டி) கோயம்புத்தூர் மாவட்ட ஆலைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 19 தொழிலாளர்கள், சென்னை தொழில் தகராறு சிறப்பு நடுவர் மன்றம் தொழில் தகராறு எண் 1/1974-ல் அளித்த தீர்ப்பை செயற்படுத்துமாறு நிர்வாகத்தினரைக் கேட்டு 26—5—1974-லிருந்து உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) அத்தீர்ப்பைச் செயற்படுத்தாமை குறித்து மேற்சொன்ன நிர்வாகத்தினர் மீது வழக்கு தொடருவதற்கு அவசியமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, கோயம்புத்தூர், தொழிலாளர் நல ஆய்வாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. வே. டி. கே. தங்கமணி: இன்னும் அக்ரீமென்டில் இருக்கக்கூடிய இதர பிரச்னைகள் பற்றித் தீர்வு காணவில்லை என்று சொல்லுகிறார்கள். அதைப்பற்றி அரசின் நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நிர்வாகம் சிலவற்றை ஒப்புக் கொள்ளாமல்போன காரணத்தால் ஏ.பி. திருப்பதி என்ற மானேஜிங் டைரக்டர் மீது 29-வது விதி இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்-படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 மார்ச் 12

*Coral reef in Periathalai village*

* 295 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether coral reef in Periathalai village in Tirunelveli district has been removed so as to facilitate easy movement of fishermen; and

(b) if so, the details thereof?

*மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணுமலை :* பவழப் பாறைகளை அகற்றி நீர்வழிப் போக்குவரத்துக்கான கால்வாயை அமைக்கும் பொருட்டு திருநெல்வேலி மாவட்டம், பெரியதாளை கிராமத்தில் தொடக்க ஆய்வுப் பணியைப் பொதுப்பணித்துறை மேற்கொண்டு வருகிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) ஒத்திவைப்புத் தீர்மானம்

### காவல்துறை தலைமை அதிகாரியின் அலுவலகத்தில் புதிய கொடி பறப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு திரு. சோ. அழகர்சாமி அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும்—" Serious situation arising out of a new Flag with State Symbol being flown in I.G.'s Office from 11th March 1975 and the likelihood of such flags coming up in the various Government institutions. " என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தக்கது என்பது பற்றி விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சபாநாயகர் அவர்களே, நேற்று இந்தப் பிரச்சினையைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பியபோது ஒருவிதமான பதிலை முதலமைச்சர்





அவர்கள் கொடுத்தார்கள். அந்தப் பதிலை அவர்கள் கொடுக்கின்ற நேரத்தில் 'இதுதான் முதன் முதலாக நாங்கள் ஏற்றியிருக்கும் கொடி' என்ற கருத்துப்படத் தெரிவித்திருக்கிறார்கள்.

பொதுவாக, நம்முடைய அரசியல் சட்டத்தின்படி இந்த நாடு பூராவிலும் குறிப்பிட்ட ஒரே மாதிரிக் கொடி இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அரசாங்கக் கட்டடங்களில் எல்லாம் எம்மாதிரிக் கொடியை ஏற்ற வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

சோவியத் யூனியனில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனிக் கொடி இருக்கிறது என்ற கருத்தைக் கண்டிப்பாக முதலமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று எனக்குத் தெரியும். அங்கி ருக்கக் கூடிய கொடிகளில் கூட மத்திய அரசின் சிம்பலையும் வைத்துக் கொண்டு அந்த மாநிலத்திற்கான கொடி அமைக்கப்பட் டிருக்கிறதே தவிர, தனியாக இல்லை. நம்முடைய அரசியல் சட்டப்படி மூவர்ணக் கொடி, அசோகச் சக்கரம் இருக்க வேண்டும். அந்த சிம்பல் இல்லாமல் இங்கே கொடி பறக்க விடப்படுகிறது என்றால் அது ஒரு தப்பான கருத்தை உண்டாக்கும் நிலைமை ஏற்படும். இப்போது ஐ.ஜி. ஆபீசில் மட்டுந் தான் கொடி பறக்கிறது. இனிமேல் சர்க்கார் அலுவலகங்களில் எல்லாம் பறக்க விடலாம். அப்படிப் பறக்க விடும்போது தப்பான கருத்து ஏற்படும் என்ற காரணத்தால், இதைப்பற்றித் தெளிவு ஏற்படும் வகையில், அரசாங்கம் தமிழ்நாட்டுக்குத் தனியாகக் கொடியை நிர்ணயித்து நினைத்த இடத்தில் எல்லாம், அரசாங்கம் விரும்பும் இடத்தில் எல்லாம் பறக்க விடப் போகி றார்களா என்பதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்ற காரணத்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது விவாதிக்க அனுமதி அளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் காவல் துறை மாநில தலைமை அதிகாரி யினுடைய அலுவலகத்திலே பறக்க விடப்பட்டிருக்கின்ற கொடியைப் பற்றி எழுப்பியுள்ள பிரச்சினைக்கு நான் சற்று விளக்கமாகப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 மார்ச் 12

மத்திய சர்க்காரிடம் இருந்து வந்த ஆணையின் அடிப்படையிலேதான் இப்படிப்பட்ட ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கடந்த பிப்ரவரி திங்கள் 7-ம் நாள் அன்று மத்திய சர்க்காரிடம் இருந்து வந்த உத்தரவில்—அது முதலில் கோவா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் இருக்கின்ற ஐ.ஜி. ஆபீஸ்களைப் பற்றி எழுந்த பிரச்சினையின் அடிப்படையில் அவர்கள் வெளியிட்டுள்ள உத்தரவில்—

"As it is the general policy of the Government of India to restrict the display of the National Flag, the present practice of displaying the National Flag on the Offices of the Inspector-General of Police may therefore be discontinued under intimation to this Ministry."

என்ற ஆணை அனுப்பி—

"Copy forwarded for information to the Chief Secretaries of all State Governments and Union Territories"

என்று போடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10.00)

இந்த ஆணை பிப்ரவரி 7-ம் தேதி வந்த பிறகு இந்த ஆணை நம்முடைய தலைமைச் செயலகத்திலிருந்து ஐ.ஜி. அலுவலகத்திற்கு அப்படியே அனுப்பப்பட்டிருக்கிறது, எந்தவித குறிப்புங்கூட இல்லாமல் அந்த ஆணைக்கு ஏற்ப ஐ.ஜி. அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு எழுதிய கடிதத்தில், 'அந்த ஆணைக்கு ஏற்ப இந்திய தேசியக் கொடி பறக்கவிடுவதை நாங்கள் நிறுத்தி விட்டோம்'

'I have issued instructions to discontinue flying the National Flag on my office and on the office of the Commissioner and Additional Inspector-General of Police, Madras . . . .'

என்று ஐ.ஜி. அவர்கள் நம்முடைய அரசுக்கு, தலைமைச் செயலகத்திலுள்ள தொடர்புடைய அதிகாரிகளுக்குப் பதில் எழுதி விட்டார்கள். அதற்குப் பிறகு மார்ச் 6-ம் தேதி ஐ.ஜி. அலுவலகத்திலிருந்து, 'நேஷனல் ஃபிளாக்குக்குப் பதிலாக எந்தக் கொடியைப் பறக்க விடுவது' என்று கேட்டார்கள். அவர்கள் எழுதிய கடிதத்திற்குப் பிறகு தான், தலைமைச் செயலகத்தில் இருந்து காவல் துறைக் கொடிக்கு என்று நீங்கள் அமைத்த



1975 மார்ச் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

வண்ணங்களில் ஒன்றான நீல வண்ணத்தின்மீது தமிழ் நாடு சின்னத்தை பதித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்குக் கூறப்பட்டு, அந்தக் கொடி இரண்டு நாட்களாக ஐ.ஜி. அலுவலகத்தில் பறந்து கொண்டு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். சோவியத் நாட்டிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி கொடி இருக்கிறது என்று முதலமைச்சர் வாதிக்கக்கூடும் என்று சொன்னார்கள். நான் வாதிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். அது வேறு விவகாரம். அதற்கு, இன்று மத்திய சர்க்காருடன் நல்லுறவு கொண்டிருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லவேண்டும், நாம் இத்தகைய உறவு வைத்து இருக்கிறோம், சோவியத் நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி கொடி கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று அந்த நல் அறிவுரைகளை எல்லாம்கூட மத்திய அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறது.

அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்தக் கொடியில் இந்திய தேசியக் கொடியின் சாயலே இல்லை என்று. அதற்கும் வருகிறேன். நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாநிலங்களுக்குத் தனிக்கொடி கேட்டபோது, எப்படி அந்தக் கொடி இருக்கவேண்டும் என்ற அமைப்பை வரைந்து, அதை நம்முடைய 'தமிழ் அரசு' ஏடுகளிலேகூட அந்த ஓவியத்தை வெளியிட்டு, எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் கொடுத்து, அந்த டிசைனை நாம் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அந்தக் கொடியில், ஒரு பகுதியில் இந்திய தேசியக் கொடியும், இன்னொரு பகுதியில் தமிழ் நாடு அரசின் சின்னமும் பதிக்கப்பட்டு இருந்தது. இப்போது ஐ.ஜி. அலுவலகத்தில் பறக்கும் கொடி அது அல்ல. நாம் தொடர்ந்து அதற்காக மத்திய சர்க்காரோடு வாதிட்டுக் கொண்டு இருப்போம்.

இங்கேயிருக்கும் அந்தக் கொடியில் தேசியச் சின்னம் இல்லையா என்று கேட்டால் தமிழக அரசின் சின்னத்தை உற்றுப் பார்ப்பார்களேயானால், அதிலே தேசியச் சின்னம் இருக்கிறது. கோபுரம் இருக்கிறது. அதற்குக் கீழே அசோக ஸ்தூபி சிங்கம், சிங்கத்தின் இரு புறத்திலும் தேசியக் கொடி இருக்கிறது. ஆகவே, ஐ. ஜி.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 மார்ச் 12

அலுவலகத்தில் பறந்து கொண்டிருக்கிற கொடியில், தமிழ் நாடு அரசின் சின்னத்திலேகூட தேசியக் கொடியின் சின்னம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த வகையிலும் தேசியக்கொடிக்கோ அல்லது தேசிய கீதத்திற்கோ தேசிய உணர்வுகளுக்கோ இந்த அரசு புறம்பானது அல்ல என்பதை பலமுறை எடுத்துச் சொன்னது மாத்திரமல்ல, செயல் மூலமும் காட்டி வருகிறோம். அதே நேரத்தில், ஐ.ஜி. ஆபீசில் அந்தக் கொடி பறக்க வேண்டாம் என்று வந்த உத்தரவுக்கிணங்க, எல்லா மாநில அலுவலகங்களிலும் அது பறக்கவிடுவது நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னுலேதான் அங்கே இருந்த கொடிக்குப் பதிலாக, அந்தக் கம்பத்தில் இன்று நம்முடைய தமிழக அரசின் சின்னம் பதித்த கொடி பறக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு, இது குறித்து விவாதிக்க வேண்டிய பிரச்னை இல்லை என்று உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், ஏற்கனவே மத்திய அரசுக்கு ஒரு கொடியைக் காட்டியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை மத்திய அரசு மறுத்து இருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் தேசியக் கொடி பறக்கவிடவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நாம் இப்படிப் புதிதாக ஒரு கொடி பறக்க விடுகிறோம் என்பதைப் பற்றி மத்திய அரசுக்கு ஏதாவது நாம் தகவல் கொடுத்து இருக்கிறோமா, முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் பார்த்தால், ஐ.ஜி. ஆபீசில் அந்தக் கொடி பறக்க வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறார்களே தவிர வேறு கொடி பறக்கலாம் என்று சொன்னதாகத் தெரியவில்லை. அப்படிப் பறக்க வேண்டுமென்று சொன்னால் இந்த மாதிரிப் பறக்க விடப் போகிறோம் என்று மத்திய அரசுக்கு தெரிவித்து, உத்தரவு வாங்கியிருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர்கள் அந்தக் கொடி பறக்கக் கூடாது என்று சொல்லி, அதற்கு மாற்றுக் கொடி எதுவும் சொல்லவில்லை. அவர்களுக்கு என் சிரமம் கொடுக்க வேண்டுமென்பதற்காக நாமே அந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டோம்.



1975 மார்ச் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### (3) கவன ஈர்ப்பு.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் காலரா போன்ற நோய்களால் பாதிப்பும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியமும் குறித்து.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் காலரா போன்ற பல கொடிய நோய்களால் மக்கள் பாதிக்கப்படுவதால் அரசு உடன் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளவேண்டும் என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 5—1—1974 அன்றுதான் முதன்முதலாக சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து குடல் தொற்று நோய் பரவியதாக அறிக்கை கிடைத்தது. இந்த மாவட்டத்தில், 1974 ஆம் ஆண்டில் 650 நபர்களுக்குக் குடல் தொற்றுநோய் ஏற்பட்டதில், 119 நபர்கள் மரணமடைந்தனர். மற்றும் 42 நபர்களுக்கு வாந்திபேதி நோய் (காலரா) ஏற்பட்டதில் அவர்களில் ஒருவர் மட்டும் இறந்தார். குடல் தொற்றுநோய் கண்டதற்கான அறிக்கைகளைப் பெற்றவுடன், பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் உடனடியாக அவ்வித நோய் கண்ட இடங்களுக்கு விரைந்து சென்று பல தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். அரசு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் அனைத்தும், மருத்துவ அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன. மேலும் அனுமதிக்கப்பட்ட நபர்களின் விவரங்கள், பொது சுகாதாரப் பணியாளர்களுக்கு, மருத்துவ அலுவலர்களால் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டில், இம்

[திரு. க. அன்பழகன்] • [1975 மார்ச் 12

மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்களிலும், குடல் தொற்று நோய் மற்றும் வாந்திபேதி நோய் ஏற்பட்டதாக அறிக்கைகள் கூறுகின்றன:—

1. கரியபட்டி
2. வாட்ராப்
3. இளையான்குடி
4. கல்லல்
5. திருப்பத்தூர்
6. சிங்கம்புணரி
7. திருப்புல்லாணி
8. திருச்சுளி
9. கடலாடி
10. திருப்புவனம்
11. முதுகுளத்தூர்
12. தேவகோட்டை.

மேலும் அருப்புக்கோட்டை, விருதுநகர் ஆகிய நகராட்சிகளிலும், ராமேஸ்வரம் நகரியத்திலும் மேற்கண்ட நோய் ஏற்பட்டது. தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மாவட்ட உடல் நல அலுவலர், மற்றும் உதவி மாவட்ட உடல் நல அலுவலர் இருவரும் அவ்வப்போது நோய்கண்ட இடங்களைப் மேற்பார்வை செய்தனர். மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை அலுவலகத்தைச் சேர்ந்த உதவி இயக்குநர், கொள்ளை நோய் வல்லுநர் முதலியவர்களும் அவ்விடங்களை மேற்பார்வை செய்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு அதற்கான ஆலோசனைகளை வழங்கினர்.

இந்த மாவட்டத்தில். 1974-75 ஆம் ஆண்டுகளில் (13—2—75 முடிய) 1,68,737 காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 515 நீர் நிலையங்களில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டன; நோய் கண்ட வீடுகள் அனைத்திலும் மருந்துகள் தெளிக்கப்பட்டன.

நடப்பு ஆண்டில், இந்த மாவட்டத்தில் 256 பேர்களுக்குக் குடல் தொற்று நோய் ஏற்பட்டதில் 51 நபர்கள் மரணம் அடைந்தனர். மற்றும் 7 பேர்களுக்கு வாந்தி பேதி காணப்பட்டதில், இருவர் மரணமடைந்தனர். தேவையான தடுப்பு நடவடிக்கைகள், நோய் கண்ட இடங்களிலும் மற்றும் அருகிலுள்ள இடங்களிலும் மேற்



1975 மார்ச் 12] [திரு. க. அன்பழகன்]

கொள்ளப் பட்டன; இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனையிலும், திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையிலும் மேற்கண்ட நோயினால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர் களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் அனைத்தும் செய்யப் பட்டன. முதுகுளத்தூர், திருப்புல்லாணி, கடலாடி, பரமக்குடி, திருப்புவனம், திருப்பத்தூர், தேவகோட்டை, இராமநாதபுரம், இளையான்குடி, போகலூர், திருவாடானை மற்றும் மானாமதுரை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலும் குடல் தொற்று நோய் ஏற்பட்டது. நோய்கண்ட இடங்களை இம் மாவட்ட உடல் நல அலுவலர், மற்றும் உதவி மாவட்ட உடல் நல அலுவலர் இருவரும் மேற்பார்வையிட்டு பொதுச் சுகாதார ஊழியர்களுக்கு எடுக்கப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி வருகின்றனர்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் பதில் சொல்கிற நேரத்தில் விளக்கம் குறைவாக இருந்தது. 120 பேர் கேஸ்டிரோ என்டிரிடீஸ் மூலமாகவும், 2—3 பேர் காலரா மூலமாகவும் இறந்து போனதாக அமைச்சர் சொன்னார்கள். சாதாரணமாக காஸ்டிரோ என்டிரிடீஸ் மூலம் யாரும் இறந்து போவது இல்லை. பெரும்பாலும் காலரா மூலம்தான் இறந்து போகிறார்கள். சென்னையில் பார்த்தால் காஸ்டிரோ என்டிரிடீஸ், வாந்தி பேதி வரும். வாந்தி பேதியையும், காஸ்டிரோ என்டிரிடீஸ்ஸையும் வேறுபடுத்தி சொல்வது கஷ்டம். பாசிடிவ் வாக டெஸ்ட் செய்யவேண்டும். டெஸ்ட் செய்கிற கோளாறு ஏற்பட்டதா? காஸ்டிரோ என்டிரிடீஸ் மூலம் 120 பேர் இறந்து போனார்கள் என்றால் பெரிய பயங்கரமாக இருக்கிறது. சீரியஸ் மேட்டராக இருக்கிறது. அந்த 120 பேர் வேறு ஏதாவது கார ணத்தால் இறந்து போனார்களா? அதற்கு தடுப்பு ஊசி, காலரா போன்றவற்றிற்கு போட ஆராய்ச்சி செய்து நடவடிக்கை எடுக்க, அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** காஸ்டிரோ என்டிரிடீஸ் ஏற்பட்டாலும்கூட ஒரு 24 மணி நேரம் 36 மணி நேரத்தில் இறந்து விடும் நிலைமை இருக்கிறது. கிராமப்புறத்தில் போதுமான மருத்துவ வசதிகள் இல்லாததால், அந்த இடங்களில் அந்த நோய் ஏற்பட்டால் அங்குள்ள மக்களால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடிவதில்லை. காலரா அந்தப் பகுதியில் இருக்கிறது

என்று அறிந்தவுடன் உடனடியாக முறைப்படி நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் மலேரியா நோய் வராமல் இருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. காஸ்டிரோ என்டிரிடீஸ் வராமல் தடுக்க வாய்ப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. காஸ்டிரோ என்டிரிடீஸ் என்று கண்டுபிடிப்பதற் காக, அந்த மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் உள்ள அலுவலர்கள் அதற்காக சோதனை நடத்தி இந்த முடிவைத் தெரி விக்கிறார்கள். அதற்குப் பிறகு சுகாதார அலுவலர்கள் இதிலே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முற்படுகிறார்கள். அவர்கள் மக்களுக்கு அறிவிப்புச் செய்து, ஆங்காங்கு கிராமங்களுக்குச் சென்று, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். ஆனால் மருத்துவ மனைக்குக் கொண்டு சேர்க்கப்பட்ட பின்னாலே தான், அந்த நோயாளிகளைப் பற்றிய விவரங்களை அவர்கள் அறிந்த பின்னாலேதான், இந்த அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள். ஓரளவு நல்ல தேர்ச்சி பெற்றவர்கள்தான் இந்தப் பணியில் ஈடு பட்டு இருக்கிறார்கள். ஆனால், இது உள்ளபடியே தீர்ந்து போன சங்கதி. 1974-ல் நடந்தது. இதை இப்போது விசாரித்தால் சரியான உண்மை கிடைக்காது. மறுபடி ஒரு நிலைமை இப்படி ஏற்படு மானால் அப்போது முழுப் பரிசீலனை செய்வதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டுமென்று அந்தத் துறையினருக்குத் தெரிவித்துக் கொள்வேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, அந்த இடம் அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் தொகுதி தான். சிங்கம் புனரிக்குப் பக்கத்தில் தான். 120 பேர்கள் ஒரே தடவையில் காஸ்ட்ரோ என்டிரிடீஸால் இறந்தார்கள் என்பது சரியான செய்தியாகத் தெரியவில்லை. சைமல்டேனியஸாக, ஒரே நேரத்தில் 120 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றால் அவர்கள் தவறான உணவைச் சாப்பிட்டிருப்பார்கள். ஃபுட் பாயஸனாக இருக்கும், மூலக் காரணம் என்னவென்பதை ஆராயவேண்டும். மருத்துவ நிபுணர்களைக் கொண்டு ஆராயவேண்டும். 120 பேர்கள் காஸ்ட்ரோ எண்டிரிடீஸ் காரணமாக இறந்தார்கள் என்பது இருக்காது. மூல காரணத்தைச் சரியான வகையில் ஆராய்ந்தால் பல உண்மைகள் வெளியே வரலாம். அதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதா வென்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்களின் அக்கறையையும், ஆர்வத்தையும் நான் வரவேற்கிறேன். சிங்கம்புணரி மாண்புமிகு திரு. மாதவன் அவர்கள் தொகுதி தான். சிங்கம்புணரி ஒன்றியத்தில் ஏற்பட்டது. இதைக் கேட்டு திரு. மாதவன் அவர்களே பயந்து போய் விட்டார். இராம நாதபுரம் மாவட்டம் முழுவதும் 42 லட்சம் மக்கள் இருக்கிற பகுதி. அதில் 600 பேர்களுக்கு ஏற்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட காலத்திலே ஏற்படவில்லை. இது ஒரு ஆண்டின் புள்ளிவிவரம். இரண்டு, மூன்று மாதங்களில் வெவ்வேறு சீசனில் வருகிறது. அப்படி ஏற்பட்ட நேரங்களில் குறிப்பிட்ட காலங்களில் மருத்து வர்கள் பொறுப்புணர்ச்சியோடு தெரிவித்திருக்கிறார்கள். மேலும் எதிர்காலத்திலே இப்படி ஏற்படுகிற போது எப்படி ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து பாருங்கள் என்று கேட்டுக் கொள்ள முடியும். அவர்களைக் கூடுமான வரையில் இதைக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்வேன்.

## (4) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன்—தொடர்ச்சி.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று மானியமாக வந்திருக்கக் கூடிய ரெஜிஸ்ட்ரேஷன், பின் தங்கிய பகுதியினர், இவைகள் சம்பந்தமாக என் கட்சியின் சார் பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த டிமாண்டுகளின் பேரில் பேசுவதற்கு முன்பாக இந்த இரண்டு இலாகாக்களுக்கும் ஏற்கெனவே ஒரு அமைச்சரவர்களை இங்கே நிர்ணயித்திருக்கிறோம். அந்த அமைச்சர் இன்றைக்கு இங்கு வந்து இந்த விவாதத்தில் கலந்து கொள்ள முடியாத நிலை மையில் இருக்கிறார்கள். அப்படியானால் இந்த இரண்டு இலாகாக் களைப் பொறுத்த வரையில் எந்த அமைச்சரவர்கள் விவாதத்தில் கலந்து கொள்கிறாரோ அவருக்குப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக் கிறதாவென்பதை அறிய விரும்புகிறேன். காரணம், இன்றைக்கு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 12

அமைச்சராக இருக்கக்கூடியவரே பின்தங்கிய வகுப்பினர் ஆலோசனைக் குழுவினுடைய தலைவராக இருக்கிறார்கள். அவர் தலைவராக இருந்து இந்த கூட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது. வருஷத்தில் இரண்டு கூட்டங்கள் நடக்க வேண்டுமென்று இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அப்படி சொல்லியிருந்தும் கூட சென்ற மாதம் கோவையில் கூட்டம் நடக்கிறது என்று அறிவித்துவிட்டு, தலைவராக இருக்கிற அமைச்சரவர்கள் வராத காரணத்தினால் ஒத்தி போடப்பட்டது. வருஷத்தில் இரண்டு முறை கூட வேண்டிய கூட்டம் அமைச்சரவர்கள் இல்லாத காரணத்தினால், கூட்டம் விடுபடக்கூடிய நிலைமை ஏற்பட்டால் இந்த இலாகாமீது அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க இதைச் சொல்கிறேன். இனிமேலாவது இந்த இலாகா பொறுத்த வரையிலே ஒரு குறிப்பிட்ட அமைச்சர் உடல் நலம் சரியில்லையென்றால் அவரிடத்திலே இலாகா இருக்கவேண்டுமென்ற நிலைமை இல்லாமல் அந்த இலாகாவை வேறு அமைச்சரிடத்திலே ஒதுக்கி அதன் மூலமாக நேரே இருக்கக் கூடிய அதிகாரிகளை செயல்படுத்த முடியுமே தவிர வேறு நிலையில் முடியாது.

To whom are these officers responsible? Are they responsible collectively to the Ministry?

இந்த நிலையில் எந்த அமைச்சரிடத்திலே அவர்கள் போவார்கள். இந்தச் சிக்கல் ஏற்படும். இந்த மிக முக்கியமான இலாகாவிலே எவ்வளவு பாராமுகமாக அரசு இருக்கிறது என்பதை நான் முதலிலே சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக ரெஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக எங்கள் கட்சியின் சார்பில் சில வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறோம்.

'To discuss the need to confirm the 240 listed section writers' என்று நான் கொடுத்திருக்கிறேன். அதே மாதிரி

'To discuss the need to follow yardstick in regard to strength of Junior Assistants, Assistants and Sub-Registrars in each Circle in Dindigul and Madurai Districts'

என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதே மாதிரி

'To discuss the need to confirm section writers and apprentices who have put in more than one year service' என்று



1975 மார்ச் 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

குறிப்பிட்டிருக்கிறேன். சீர்காழி, கொள்ளிடம் நகரத்தில் பத்திரப் பதிவுக் காரியாலயத்தை அமைத்திட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இந்த இலாகா பொறுத்த வரை, மற்ற இலாகாக்கள் சம்பந்தமாக விரிவான அறிக்கைகள் கொடுக்கப்படுகிறதைப் போல அந்த மாதிரி விரிவான அறிக்கை கொடுக்கப்படுவதில்லை. இந்த இலாகாவைப் பொறுத்த மட்டில் சில விஷயங்களைப் பத்திரிகைகளில் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. ஒரு காலத்தில் 21 ஜில்லாக்கள் என்று இருந்ததை இப்போது 26 ஜில்லாக்களாக உயர்த்தியிருக்கிறார்கள். இப்போது 31—34 ஜில்லாக்கள் வரையிலும் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் இப்படி ஜில்லாக்களைப் புதிதாக அமைக்கிறபோது, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எத்தனை இன்ஸ்பெக்டர்கள் தேவைப்படுமோ அத்தனை இன்ஸ்பெக்டர்கள் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

உதாரணத்திற்கு, ஸ்தூலமாக சொல்லப்பட வேண்டுமானால் மதுரை ஜில்லாவிலே ஏற்கெனவே நிச்சயித்தபடி இன்னொரு இன்ஸ்பெக்டர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இன்றைக்கு மொத்தமாக 500 ஜூனியர் அஸிஸ்டெண்டுகள், 500 அஸிஸ்டெண்டுகள். 500 சப்-ரெஜிஸ்ட்ரார்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வேலைகளையெல்லாம் கண்காணிக்கக் கூடிய இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் ரெஜிஸ்ட்ரேஷன் அவர்கள் இருக்கிறார்கள். இந்த ஐ.ஜி. ஆஃப் ரெஜிஸ்ட்ரேஷன் அவர்களுக்குக் கீழே பணியாற்றக் கூடியவர்கள் சம்பந்தமாக உள்ள இந்த இலாகாவை புனரமைக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்வதற்கு அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீசைப் பொறுத்த வரையிலே அதிகமான வொர்க்லோடு இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இப்போது சிட் ஃபண்டு சம்பந்தமாக உள்ள விஷயத்தை ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில் வைத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல் ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீசிலே எதையும் ரெஜிஸ்டர் செய்கிறார்கள். 10 ரூபாய். 20 ரூபாய் கட்டிக் கூட ரெஜிஸ்டர் செய்யலாம்.

Even an agreement for concubinage can be registered. இப்படிச் செய்தால் என்ன ஏற்படும், என்பதைப் பார்க்க வேண்டும். அறியாத பெண்களை யாராவது கூட்டிக் கொண்டு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 12

வந்து ரெஜிஸ்டர் பண்ணி விட்டோம் என்று சொன்னால் போதாது. அந்தப் பெண்கள் திருமணம் என்று நினைத்து விடுவார்கள். இப்படி ஏமாற்றப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த மாதிரி விஷயத்தைப் பதிவு செய்யக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ரெஜிஸ்ட்ரேஷன் விஷயமாக உள்ள சில விஷயங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். 50 ஆயிரம் ரூபாய், அதற்கு மேலே இருக்கக் கூடிய சொத்துக்களுக்கெல்லாம் இன்கம்டாக்ஸ் கிளியரன்ஸ் செய்யப்பட வேண்டும். இதைப் பரிசீலனை செய்வதில் மிகுந்த சிரமங்கள் இருக்கின்றன. எந்த ஜில்லாவிலே எந்தப் பகுதியிலே அந்த நிலம் இருக்கிறதோ அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

கறுப்புப் பணம் எப்படி பயன்படுத்தப்படுகிறது, அதை எப்படிக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக ஒரு ஆலோசனையை கமிட்டி கொடுத்திருக்கிறது. அந்த ஆலோசனை என்னவென்றால் ஏதாவது ஒரு சொத்தின் மதிப்பு அதிகமாக இருந்து அதை கம்மி விலையில் பதிவு செய்தால் அப்படி கம்மியாகப் பதிவு செய்திருக்கக் கூடிய சொத்தை அரசாங்கமே எடுத்துக் கொண்டு அந்த குறைந்த விலையில் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னால் பல இடங்களில் இந்த மாதிரி குறைந்த விலையில் பதிவுகள் ஏற்படாது என்ற ஆலோசனையை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையில் ஒவ்வொரு வருஷமும் 50 ஆயிரம் ரூபாய் அல்லது அதற்கு அதிகமாய் பதிவாகி இருக்கக் கூடிய சொத்துக்களின் விவரங்களையெல்லாம் சேகரித்து, உண்மையிலேயே அந்த சொத்துக்களின் மதிப்பு என்ன என்று பார்ப்பது ஓரளவிற்குக் கறுப்புப் பணங்களையெல்லாம் வெளியே கொண்டு வருவதற்கு வழியாக இருக்கும். அப்படியிருந்தும் குறைந்த விலையில் பதிவு செய்யக்கூடிய நிலை, அது இன்றைக்கு அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

For Section Writers, the qualification is the same as for the Ministerial Service. They are appointed directly by I.G. of Registration. There are temporary apprentices appointed each month. They have served at least 10 years and they are yet to be



1975 மார்ச் 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

confirmed. There is no lien at all and their appointment is based on work load. They are known as listed section writers. They are 240 in all.

இந்த மாதிரி செக்ஷன் ரைட்டர்ஸ் இருக்கிறார்களே அவர்கள் பிரத்தியேகமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்று என்னுடைய வெட்டு பிரேரணையில் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஐந்து வருஷம் சர்விஸ் ஆகிவிட்டால் அவர்களை ஜூனியர் அஸிஸ்டண்டுகளாக ஆக்க வேண்டும். அந்த செலக்ஷன் லிஸ்டட் பர்சன்ஸ்களுக்கு வருகிறது. இன்றைக்கு எஸ்.எ.சியில் வந்தாலும் அது கவனிக்கப்படுவது இல்லை. ஏற்கனவே ஒரு yardstick வைத்து இருப்பதை பரிசீலனையில் வைத்து பார்த்தால் எந்த அளவுக்கு இடங்கள் சேர்க்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு சேர்க்கப்படவில்லை என்று தெரியும். அடுத்து ஒரு முக்கியமான விஷயம். சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் பல இடங்களில் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு உடனடியாக ஒரு அதிகார பூர்வமான ஒரு குழுவை அமைத்து எந்த எந்த இடங்களில் தேவை workload அதிகமாக இருக்கிறது என்பதைப் பார்த்து, உதாரணமாக சென்னை, மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களில் ரொம்ப ஓர்க் லோட் இருக்கிறது. சில இடங்களில் குறைவாகவும் இருக்கிறது. இதை எல்லாம் கணக்கில் எடுத்து எந்த அளவு உடனடியாக ஆபீஸ்களை திறக்க வேண்டுமோ அந்த அளவு திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கு மேல் அதிகமான விவரங்களைக் கூற நான் விரும்பவில்லை. இதற்காக ஒன்றே முக்கால் கோடி செலவழிக்க இருக்கிறோம். அது எந்த எந்த முறையில் செலவழிக்கப்படுகிறது அது எந்த அளவுக்கு சிப்பந்திகளுக்கு உதவிகரமாக இருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பின்தங்கிய பகுதியினர் பற்றி வருகிறபோது இன்றைக்கு இந்த விஷயத்தை அறிமுகப்படுத்திய அமைச்சர் அவர்களே பின் தங்கிய பகுதி அமைச்சராக இருந்தவர். இதற்கு தனி அமைச்சர் வைத்தது நல்லது. தனியாக அமைச்சர் வைத்து இருக்கிறோம் என்று சொல்லுவதில் வேண்டும் என்றால் பெருமை அடையலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்தங்கிய பகுதி அல்ல, பின்தங்கிய மக்கள். பின்தங்கிய மக்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பின்தங்கிய மக்கள் பின்தங்கிய பகுதிகளிலும் இருக்கிறார்கள். நான் அந்த கரெக்ஷனை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

பின்தங்கிய மக்களைப் பொறுத்த வரையில் குறிப்பாக மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 1920 ஆம் வருஷத்திலிருந்து பிரன்மலைக் கள்ளர் என்ற அவர்களுக்கு ஒரு விசேஷ ஏற்பாடு செய்து அன்றைக்கு இருந்த பிரிட்டிஷ் சர்க்காரே பணம் ஒதுக்கி தனியாக கல்வி போன்ற வசதிகளை எல்லாம் செய்து வந்தார்கள். அதுவும் இதில்தான் வந்து சேருகிறது. இன்னும் பிரத்தியேகமாக இருக்கிற மக்களுக்குக்கூட இன்றைக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு அப்படி கொண்டு வந்தது சாதனை தான். இவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற $5\frac{3}{4}$ கோடியில் எதற்கு செலவு செய்கிறோம் என்று பார்த்தால் கல்விக்காகத்தான் செலவு செய்கிறோம்.

கல்வியைப் பொறுத்தவரையில் இந்த இலாகாவின் மூலம் செலவழிப்பதை விட 148 கோடி என்று கல்விக்காக ஒதுக்கப்பட்டு வரப்போகிறதே அந்தப் பணத்தில் இருந்து செலவழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். $5\frac{3}{4}$ கோடியில் 5 கோடி கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. இந்தச் செலவைக் கல்வி இலாகா பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பின்தங்கிய மக்களுக்கு இந்த ஒதுக்கீட்டு பணத்தில் வேறு என்ன உதவி கிடைக்குமோ அந்த உதவிகளை மிக நல்ல முறையில் செய்ய முடியும் என்று கருதுகிறேன். நான் ஏற்கனவே இந்த பிரன்மலைக் கள்ளர்களைப் பற்றி சொன்னேன். அவர்கள் மதுரை வட்டத்தில் தான் இருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் தனி டைரக்டர் போட வேண்டும் என்று ஆலோசனைக் குழுவில் சொன்னோம். அமுல் படுத்தி இருக்கிறார்கள். அவருக்கு கீழே ஒரு ஸ்பெஷல் டெபுடி கலெக்டர் போட்டு மதுரை மாவட்டத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார். அதுமாதிரி நான் ஆலோசனை குழுவில் சொல்லி இருக்கிறேன்.





மதுரையில் எப்படி டெபுடி கலெக்டரை போட்டார்களோ அதே மாதிரி முதுகுளத்தூரில் ஆப்பநாட்டு மறவர்கள் இருக்கிறார்களே அவர்களுடைய பிரதிநிதிகள் வந்து சொன்னார்கள். ஒரு டெபுடி கலெக்டர் இல்லாவிட்டால் ஒரு தாசில்தாரையாவது போட வேண்டும் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் அல்லது அந்தக் குறிப்பிட்ட முதுகுளத்தூர் தாலுக்காவில் தனி கவனம் செலுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பரிசீலனை செய்ய ஒரு ஸ்பெஷல் தாசில்தார் வந்தார். அவர் என்ன சொன்னார், ஏதாவது ரிப்போர்ட் கொடுத்தாரா, அதில் ஏதாவது அமுல் நடத்தப்பட்டதா என்று தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறேன்.

ஸ்டேட் அட்வைசரி கமிட்டியில் போடப்படுகிற தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். அமுல்படுத்தப்பட்டால் மதுரை மாவட்டத்தில் பிரன்மலைக் கள்ளர்களுக்கு எப்படி திருப்திகரமாக இல்லாவிட்டாலும் ஓரளவாவது நன்மை கிடைக்கிறதா அந்த அளவுக்காவது இவர்களுக்கும் செய்ய முடியும். மதுரை மாவட்டத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு ஹாஸ்டல் வைத்திருக்கிறார்கள் அரசாங்கம், திருமங்கலம், உசிலம்பட்டி, செக்கானூரணி, தும்மகுண்டு போன்ற இடங்களில் இருக்கிறது. ஆனால் அவற்றில் மிகக் குறைந்த மாணவர்களே இருக்கிறார்கள். திருமங்கலத்தில் 100 பெண்களும், 100 பையன்களும் தான் இருக்கிறார்கள். நமக்குத் தேவையான போதுமான அளவு ஹாஸ்டல் இல்லை. இது வற்புறுத்தப்பட வேண்டும். சில இடங்களில் 40 அல்லது 50 மாணவர்கள் தான் இருக்கிறார்கள். குறைந்தது 150 பேராவது ஹாஸ்டலில் இருக்கிற நிலை வேண்டும்.

இன்னும் இது போன்ற ஹாஸ்டல்கள் செல்லம்பட்டி, காத்தநங்குடி போன்ற இடங்களில் எல்லாம் வைக்கலாம். கலெக்டரை கேட்டுப் பரிசீலனை செய்தால் எந்த எந்த இடங்களில் வைக்க முடியும் என்று புரிந்து கொள்ள முடியும். இந்த டெபுடி கலெக்டர் இதில் அதிகமாகக் கவனம் செலுத்தி விரிவான இடங்களில் ஹாஸ்டல் கொண்டு வர உதவி செய்ய வேண்டும். இந்த ஹாஸ்டல்களில் மாணவர்களுக்கு எல்லாம் பணம் 30 ரூபாயிலிருந்து 65 ரூபாய் வரை தான் ஒதுக்கப்படுகிறது. இது போதாது

என்று ஆகும் ஏற்றுக்கொள்ளுவோம். அப்படி ஏற்றுக்கொள்கிற போது அவர்களுக்கு 100 ரூபாயாவது குறைந்தது இருக்க வேண்டும் என்று வெட்டுப் பிரேரணை கொடுத்து இருக்கிறோம். இன்னொரு சிக்கலும் இருக்கிறது. இப்போது பையன்கள் ஹாஸ்டலில் வந்து சேருகிறார்கள். அதில் வருகிற ஹரிஜன மாணவர்களுக்கு ஹரிஜன நலத்துறை பணம் கட்டிவிடுகிறது. ஹாஸ்டலில் சேர்ந்தவுடன் உடனடியாக பணத்தை கட்டிவிடுகிறது. ஆனால் பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் முன்னதாகப் பணம் கட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை நீக்குகின்ற வகையில் இந்த நிர்வாகச் சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஹரிஜன நலத்துறையில் இருப்பதைப் போலவே இங்கேயும் இவர்களுக்குக் கொண்டு வந்தால் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிற பையன்களுக்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டு பார்த்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிட்டத்தட்ட 50 சத விகிதம் இந்த பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள். தென் பகுதியில் முக்குலத்தோர், மரம் ஏறுபவர்கள் என்று சொல்லுகின்ற சாணார், நாடார், முத்துராஜாக்கள், அம்பலக்காரர்கள் என்று இருக்கிறார்கள். தஞ்சாவூரிலும் அம்பலக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு தொழில்களைச் செய்கிறவர்கள். இராமநாதபுரத்தில் அம்பலக்காரர் என்பது பெரிய ஜாதி. வடஜில்லாக்களில் வன்னியர்கள் என்று ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் ஒவ்வொரு குறை இருக்கிறது. வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சென்னை நகரத்திற்கு வந்து ஒரு முக்கியமான குறையை சொன்னார்கள். இந்தப் பின்தங்கிய மக்களுக்கு முன்னாலே வரக்கூடிய ஒரு அந்தஸ்தை கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

எங்கள் பகுதியிலிருந்து ஒரு ஜில்லா கலெக்டர் ஹைகோர்ட் ஜட்ஜ்கூட கிடையாது என்று சொல்லுகிறார்கள். அதை அரசு விரும்பினால் கட்டாயமாகச் செய்ய முடியும். அதற்காக அவர்களைக் கைது செய்து அதற்காக கேஸ் கூட நடந்தது. அவர்களுக்கு அரசாங்கத்தில் தனி அந்தஸ்து இருக்கலாம். ஆனால் ஹைகோர்ட்டில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டுகளில் எங்கள் ஆட்கள் இல்லையே



என்று அவர்கள் சொல்வது நியாயமாகத்தான் இருக்கிறது. இப்போது கூட ஒரு ஹரிஜன் வகுப்பை சேர்ந்தவர் ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்கிறார் என்று பெருமையாகச் சொல்கிறோம். பின் தங்கிய வன்னியர் சமூகத்திற்கு இல்லை என்ற குறை இருக்கிறது. இப்படி ஒவ்வொரு பகுதி மக்களையும் கேட்டால் அவர்கள் குறைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லுவார்கள்.

(முற்பகல் 10-30)

இன்னொரு விஷயம் என்னவென்றால் இந்த "நான்-பிளான்" எக்ஸ்பெண்டிசர் என்ற முறையில் 5 அல்லது 6 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே நான் இரண்டு சமுதாயத்தைப்பற்றி குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒன்று சலவைத் தொழிலாளர்கள், இன்னொன்று முடி திருத்துவோர். சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முனிசிப்பாலிட்டியில் பணம் கொடுத்து அவர்களுக்கு டோபிகானா கட்டிக் கொடுக்கிறார்கள். அநேகமாக முனிசிப்பாலிட்டி, மேஜர் பஞ்சாயத்து, மற்றும் முக்கியமான இடங்களில் டோபிகானா இருக்கும். ஆனால் தேவையான அளவுக்கு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. தேவையான இடங்களில் எல்லாம் டோபிகானா கட்டிக்கொடுப்பதாக இருந்தால் இன்னும் செலவு அதிகமாகும். இந்த 5 கோடி ரூபாயிலிருந்து அதற்குச் செலவழிக்கலாம். அப்படிச் செய்தால் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட முழுத் தொகையையும் செலவழிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். நீங்களே கூட ஒரு கணக்கு வைத்துக்கொள்ளலாம். இந்த வருஷம் இந்த முனிசிப்பாலிட்டியில் இத்தனை டோபிகானா கட்டினோம், இந்த மேஜர் பஞ்சாயத்தில் இத்தனைக் கட்டியிருக்கிறோம்; இந்த கிராமப் பஞ்சாயத்தில் இத்தனை கட்டியிருக்கிறோம் என்று சொல்லும் போது உங்களுக்கும் பெருமையாக இருக்கும். அவர்களுக்கும் தேவையைப் பூர்த்தி செய்ததாக இருக்கும்.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு டோபிகானா தேவையா என்று கேட்டால் தேவைதான். ஏனென்றால் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். நகரங்களில் வந்து அழுக்குத் துணிகளை எடுத்துக் கொண்டுபோய், வெளுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகையால் அங்கேயும் வேண்டியதுதான்.

It must be organised and planned. ஆனால் இங்கே இருக்கக் கூடிய நிதி வசதியை வைத்துக்கொண்டு கண்டிப்பாகத் தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் செய்ய முடியாது. யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்திக் கேட்டால் அவர்கள் தொகுதிக்கு ஒருவேளை கிடைக்கும்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் அரிசன நல அமைச்சர் சொன்னார். நான் ஒரு சட்டமன்ற உறுப்பினரிடம் சொல்லியிருக்கிறேன். அந்த சட்டமன்ற உறுப்பினர் பகுதியில் இவ்வளவு வீடுகள் கட்டுவோம் அல்லது கட்டுவதற்கு உத்தரவு போடப் படும் என்று சொன்னார்கள். அது சரியானதுதான். நான் இல்லை என்று சொல்லவில்லை. அந்தமாதிரி ஒவ்வொரு தொகுதியிலும் ஏற்பட வேண்டும்.

சலவைத் தொழிலாளர்களுக்குக் குறை நிறைய இருக்கிறது. அவர்கள் நல்ல ஸ்தாபனத்தை வைத்திருக்கிறார்கள். மாநிலம் தழுவிய ஒரு அமைப்பை வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் நல்ல நல்ல கோரிக்கைகளை வைக்கிறார்கள். அது எந்த முறையில் நிறைவேற்றப்படுகிறது என்று பார்க்கிறார்கள். நிறைவேற்றப் படவில்லை என்றால் மாவட்ட கலெக்டரிடம் போகிறார்கள். கலெக்டர் அந்தக் கோரிக்கையை அமைச்சர்களுக்கு அல்லது இங்குள்ள தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கிறார். எங்களுக்கும் கோரிக்கையின் நகலை கொடுக்கிறார்கள். நாங்கள் அது பற்றி இங்கே கேட்கிறோம். இறுதியில் அதுபற்றி என்ன சொல்லப் படுகிறது? போதுமான அளவுக்குக் கையில் பணம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

அதேமாதிரி முடி திருத்துவோர் சமுதாயம் இருக்கிறது. அவர்கள் என்னிடம் ஒரு பெரிய மகஜரைக் கொடுத்திருக்கிறார்கள். நான் அதை அமைச்சரிடம் கொடுத்து விடுகிறேன். பொதுவாக நாம் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறோம். குறைந்த சம்பளம் இவ்வளவு இருக்க வேண்டும், அதைவிடக் குறையக் கூடாது என்று இந்தியா முழுவதற்கும் சொல்லியிருக்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும் அதற்கான உத்தரவு போட்டிருக்கிறார்கள்.



சோவியத் யூனியனில் முடி திருத்துவோர் எப்படி இருக்கிறார்கள் என்பதைக் கூறுகிறேன். நான் சோவியத் யூனியனைப் பற்றிக் குறிப்பிடுவதற்காக யாரும் தவறாகக் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே மினிமம் வேஜ் 85 ரூபில் கொடுக்கிறார்கள். அது 850 ரூபாய். நம்முடைய நாட்டின் விலைவாசியை வைத்துப் பார்க்கும் போது 250 ரூபாய் என்று குறைந்த சம்பளம் நிர்ணயித்திருக்கிறார்கள். சோவியத் யூனியனில் முடி திருத்துவோருக்கு ஒரு தனி அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் கிட்டத்தட்ட 2,500 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரை இருக்கிறது. மிக அதிகமான வருமானம் பெறக்கூடியவர்கள் இந்த முடி திருத்துவோராகத் தான் இருக்கும். எல்லாவிதமான உதவிகளும் அவர்களுக்குச் செய்துகொடுக்கிறார்கள். சமுதாயத்தில் அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறார்கள். முடி திருத்தும் கடைக்குப் போனால் பெரிய மாஸ்டர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே நிலைமை இருக்கிறது.

ஆனால் இங்கு சமுதாயத்திலே ரொம்பக் கேவலமாக அவர்களை வைத்திருக்கிறார்கள். அது மிகவும் வேதனை அளிப்பதாக இருக்கிறது. ஆதலால் இந்த விஷயத்தைக் கொஞ்சம் பரிசிலனை செய்ய வேண்டும். அவர்களுக்கு அரசாங்கம் இலவசமாக பலவகைப் பொருட்களைக் கொடுக்கிறது. ஆனால் அந்த உதவி அவர்களுக்குப் போதாது. கொடுப்பதும் எத்தனை பேர்களுக்கு? ஒதுக்கியிருக்கிற பணத்தைக்கொண்டு ஒரு 10 பேர்களுக்குக் கூட கொடுக்க முடியாது. ஏதோ நாமும் உதவி செய்கிறோம் என்று சொல்லக் கூடிய வகையில் மட்டும் இருந்தால் போதாது. இந்த சமுதாயத்தில் இருக்கக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் என்று மிகச் சுலபமாக கணக்கெடுத்துவிடலாம். அதிலும் குறிப்பாக முடி திருத்தும் பணியில் இருப்பவர்கள் யார் யார் என்று சரியாகக் கணக்கு எடுத்து விடலாம். அப்படி கணக்கெடுத்து உதவி செய்தால் நல்லது.

முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகிய இந்த இரண்டு சமுதாயத்தினருக்கு மட்டும் இந்த 5 கோடி ரூபாயையும் செலவழித்தால் ஓரளவு அவர்கள் மனதில் படும்படியாக இருக்கும். அந்த அளவுக்குக் காரியங்கள் செய்ய முடியும். அந்த அளவுக்குச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு வகை தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பிரச்சனை மிக முக்கியமானது. அவர்கள் வேறு யாருமல்ல; மது மா தொழிலாளர்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்கள் என்னென்ன என்பதைப் பார்க்க வேண்டும். ஏற்கனவே 1946-47 ஆம் ஆண்டில் இங்கு மதுவிலக்கு வந்தபோது, எங்களுக்கு எல்லாம் அதில் நேரடியான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. மதுரை நகரத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 8,000 தொழிலாளர்கள் பணியாற்றினார்கள். மதுவிலக்கு வந்தவுடன் அது நல்லது என்று சொல்லி, அப்போதிருந்த அமைச்சர் டானியல் தாமசிடம் 5,000 பேர் மனு கொடுத்தார்கள். நீங்கள் எல்லாம் ஒத்துழைப்புக் கொடுங்கள்; உடனடியாக உங்களுக்குப் போதுமான வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்; போதுமான பாதுகாப்பை அரசு வைத்திருக்கிறது என்று அமைச்சர் சொன்னார். அதற்குப் பின்னால் பல மாற்றங்கள் ஏற்பட்டு, போராட்டங்கள் நடைபெற்று, நாங்கள் எல்லாம் ஜெயிலுக்குப் போனோம். திரும்பி வந்து பார்த்தால் பலர் ஊரில் இல்லை. பலர் உயிரோடு இல்லை. இந்த நிலைமையைத்தான் எங்களால் திரும்பி வரும்போது பார்க்க முடிந்தது.

அரசாங்கம் வேலை கொடுப்பது கஷ்டம். அப்படி இருக்கும்போது வேலையை கொடுத்துவிட்டு, மீண்டும் இல்லை என்ற நிலை வரும்போது அவர்கள் நிலைமை என்னவாகும்? கொஞ்சம் யோசிக்க வேண்டும். "கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்" என்பதைப்போல மிகவும் இக்கட்டான ஒரு நெருக்கடி நிலைதான் ஏற்படும். அதைப்போல ஏற்கெனவே இருந்த மதுவிலக்கை ரத்து செய்தோம். ரத்து செய்த உடனே கிட்டத்தட்ட ஒரு வருஷத்திற்கு யாரும் மரம் ஏறும் வேலைக்கு வரவில்லை. ஏனென்றால் முன்னால் அந்தத் தொழிலை செய்தவர்கள் வேறு ஜீவனத்திற்குப் போய்விட்டார்கள். இந்தத் தொழிலில் நல்ல வரும்படி கிடைக்கும் என்று தெரிந்தவுடன் அவர்கள் மீண்டும் மரம் ஏறும் தொழிலுக்கு வந்தார்கள். ஒருவருக்கு சுமார் 350 ரூபாய், 400 ரூபாய் என்று மாதம் கிடைத்துவந்தது.

மீண்டும் இந்த ஆண்டு திடீரென்று மதுக்கடைகளை எல்லாம் மூடிய பிறகு அவர்களுக்கு எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. அப்போது அவர்கள் ஒரு சின்ன விஷயத்தைக் கேட்டார்





கள். இப்போது பனை மரத்திலிருந்து கள் இறக்குவது மாதிரி, தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்க அனுமதி வேண்டுமென்று கேட்டார்கள். ஓரளவு கொடுத்திருக்கிறார்கள். இப்போது ஓரளவு தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்கிக் கொண்டிருக்கிறார்கள். கோவை ஜில்லாவில் மட்டும்தான் தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற இடங்களிலும் கேட்டபோது, தென்னை மரத்திலிருந்து இறக்குவதைக் கள்ளாக்கி விற்று விடுவார்கள், பனை மரத்திலிருந்து இறக்குவதை அப்படி செய்ய மாட்டார்கள்; அதனால் தென்னை மரத்திலிருந்து பதனீர் இறக்கக் கூடாது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்போது அனுமதி கொடுத்தால் கூட தென்னையிலிருந்து பதனீர் இறக்குவார்களோ என்னவோ தெரியாது. ஏனென்றால் தேங்காய் விலை 1½ ரூபாய், 2 ரூபாய் என்று இருக்கிறது. இருந்தாலும் அரசாங்கம் இந்தக் கோரிக்கைக் செவி சாய்க்க வேண்டும். பலர் இன்றைக்கு வேலை இல்லாமல் இருக்கிறார்கள்; வேலை இழந்திருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த வகையில் வேலையிழந்தவர்கள் எல்லாம் ஒன்று கூடி 'ஜீவா மன்றம்' என்று ஒரு மன்றத்தை அமைத்திருக்கிறார்கள். அதன்மூலம் ஏதாவது கிடைக்குமா என்று பார்த்தார்கள்; ஒன்றும் கிடைக்கவில்லை.

இன்றைக்கு மாஜி ராணுவத்தினர் இருப்பதைபோல மாஜி மது மாத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற எல்லா மாவட்டங்களிலும், தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆக்கப்பூர்வமாக ஏதாவது உதவி செய்ய வேண்டும். அவர்களுக்குப் படிக்க உதவி செய்கிறோம் என்று சொன்னால் அதனால் என்ன பிரயோஜனம்? படித்த பின்னால் வேலை கிடைக்காது. இப்போதைய நிலைமை அப்படி இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நிவாரணம் செய்ய பின்தங்கியோர் நல அமைச்சரவர்கள் ஒரு தனி இலாகா போட்டு, மாஜி மது மாத் தொழிலாளர்களுக்கு இன்னின்ன செய்கிறோம், இன்னின்ன வேலை கொடுக்கிறோம், இன்னின்ன வகையில் உதவி செய்கிறோம், இன்னின்ன சலுகை செய்கிறோம் என்று சொல்லி, செய்து கொடுப்பதுதான் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அவர்கள் நல்ல உழைப்பாளிகள்; உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் விஷயத்தை நல்லமுறையில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 12

நான் இங்கே குறிப்பிட்ட இந்த 2, 3 விஷயங்களில் சரியான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதற்காக விரிவாகச் சொன்னேன். இன்னொரு விஷயத்தை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். அதாவது அவர்களுக்குக் கல்விக்கு என்று ஒதுக்கிக் கொடுக்கிற பணத்தை வேறு முறைகளில் செலவழிக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி அடுத்துப் பேசுகின்ற உறுப்பினர்கள் பத்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

*** திரு. கு. காமாட்சி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பின் தங்கிய வகுப்பினர் நல மானியத்தில் பேசுவது எனது கடமையென நான் கருதுகிறேன்.

பொதுவாகப் பின்தங்கியவர்கள் என்று சொல்வதைவிட, பிற்படுத்தப்பட்டவர் என்று சொல்வது சாலப் பொருத்தமாக இருக்கும் என்பது என் கருத்து என்று சொல்ல விரும்புகிறேன். ஏதோ பெரிய— அதிகமான வாய்ப்பு வசதிகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டு அவற்றை இவர்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் பின்தங்கிவிட்டார்கள் என்று சொல்வதுபோல இருக்கிறது. அப்படி இல்லை. உண்மையைச் சொல்லப் போனால் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், சாத்திர சம்பிரதாயங்களின் பெயரால் இவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். இன்னும் பகிரங்கமாகச் சொல்ல வேண்டுமானால் ஏமாற்றப்பட்டவர்கள் என்று சொல்லலாம். அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் 60 சத விகிதம், 70 சத விகிதம் என்று பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பரந்து, விரிந்து கிடக்கிறார்கள். அதுவும் போதாது என்று இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள பல சமுதாயத்தினர் தங்களைப் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். பல சமுதாயத்தினர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கான மானியம் அதிகம் ஒதுக்கப்படுகிறதா என்றால் மானியங்கள் அதிகமாக ஒதுக்கப்படுவதில்லை.



1975 மார்ச் 12] [திரு. கு. காமாட்சி]

நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரையில்தான் முதன் முதலாக 1971—72இல் இருந்து பின்தங்கியவர்கள் நலத்திற் காகவே தனியாக மானியம் ஒதுக்கப்படுகிற நிலை ஏற்பட்டது. 1969 லேயே பிற்பட்டவர் நலத்துறை என்று தனியாகவே ஒரு துறையை ஏற்படுத்தி, அந்தச் சமுதாய மக்களது நலனைக் கவனிக்க ஒரு அமைச்சரையே போட்டார்கள். இந்தப் பெருமை நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் அவர்களையே சாரும். அதற்காக நான் மிகுந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறேன். ஆழ்ந்து சிந்தித்துச் செயலாற்றுகிற ஒருவர் நமக்கு முதலமைச்சராக இருக்கிற காரணத்தினால்தான் இன்றைக்குப் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஓரளவாவது நன்மை பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் இதை யாரும் மறுக்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, இருக்கின்ற பொருளாதாரத்தை வைத்துக்கொண்டு ஓரளவுதான் செய்யப் படுகிறது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக இன்றைக்கு ஒதுக்கப்படுகிற தொகை போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது. கொள்கை விளக்கங்கள் எல்லாம் இந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும் இந்த மானியத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகையைப் பார்க்கும்போது மற்ற மானியங் களுக்கு எல்லாம் லட்சக்கணக்கில் இருக்கிறது என்றால் இதற்கு வெறும் ஆயிரக்கணக்கில்தான் கணக்கிடப்படுகிறது. இதற்கும் லட்சக்கணக்கில் கணக்கிடுகிற நிலை வந்தாகவேண்டும். அப் போதுதான் இந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் ஓரளவுக்காவது வாழ்க்கை வசதிகளைப் பெற்று முன்னேற்றத்தைக் காண முடியும்.

இன்றைக்கு இந்தப் பிற்பட்ட மக்களுக்காக மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்குகிறது என்றால் ஒரு பைசா கூட அவர்கள் ஒதுக்குவதில்லை. அவர்களுக்கு இந்தச் சமுதாயத்தினரிடத்து அக்கறை இல்லையென்றே நினைக்கிறேன். மத்திய அரசு ஒதுக் காதது மட்டுமல்ல இங்கே இருக்கிற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர் களாவது இந்தப் பிற்பட்ட சமுதாயத்தினர்களுக்கு மத்திய அரசு அதிக மானியம் ஒதுக்கவேண்டுமென்று சொல்கிறார்களா என்றால் இல்லை. ஸ்தாபன காங்கிரசாக இருந்தாலும் சரி, ஆளுங்

காங்கிரசாக இருந்தாலும் சரி, அண்ணு தி.மு.க.-வாக இருந்தாலும் சரி எல்லோரும் பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டுமென்றுதான் சொல்கிருர்களே தவிர பிற்பட்ட சமுதாயம் என்று கொடுக்கக்கூடியது தேவையில்லை என்று சொல்கிருர்கள்.

ஸ்தாபன காங்கிரஸ் இதுபோன்றே ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறது. சென்ற முறை கூட ஆளுங் காங்கிரசைச் சேர்ந்தவர் வெட்டுப் பிரேரணை கொடுத்தபோது சமுதாய அடிப்படையில் இருக்கக் கூடாது, பொருளாதார அடிப்படையில் தான் இருக்க வேண்டும் என்ருர்கள். இது எல்லாம் இவர்களுக்கும் கூட பிற்பட்ட சமுதாயத்தினர் முன்னேறுவதில் அக்கறை இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. நான் விரும்பிக் கேட்டுக் கொள்வது எல்லாம் அவர்கள் எல்லோரும் கூட இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர்களுக்காக மத்திய அரசிடம் வாதாட வேண்டும் என்பதுதான். அவர்கள் மத்திய அரசில் செல்வாக்கு உள்ளவர்கள். இவர்கள் எல்லாம் இந்த மானியத்திற்காக இன்றைக்கு ஒதுக்கப்படுகிற பணம் போதாது என்று அங்கே வாதிட வேண்டும். இங்கே நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி போன்றவர்கள் இதற்கு ஒதுக்கப் பட்ட பணம் போதாது என்று சொன்னக் கருத்தை நான் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்களைச் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் என்று சொல்லுங்கள். நண்பர் என்பதுபோல பெயரைச் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல.

**திரு. கு. காமாட்சி :** நான் இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்ருல் ஒவ்வொரு பிற்பட்ட சமுதாயத்தினருக்கும் ஒரு வரலாறு பின்னணியாக இருப்பதைப் பார்க்கலாம். கல்தோன்றி [illegible]ன்ருக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியாக இ[illegible]துபோன்று வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட பிற்[illegible]ட்ட சமுதாயத்தினர்களுக்கு நாம் இன்னும் அதிகம் உதவி[illegible]க வேண்டும்.





இங்கே இந்த ஆண்டுக்கு 578 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. மேற்கொண்டு வேறு மானியங்களில் இருந்தாவது இதற்கு அதிகத் தொகை மாற்றியாக வேண்டும். இன்னும் சொல்லப்போனுல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாம் எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கிருேம். அந்தச் சமுதாயத்தினர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள் அத்தனையும் இவர்களுக்கும் கொடுத்தாக வேண்டும். வேண்டுமானுல் தாழ்த்தப்பட்டவர்களாக நாங்கள் மாறுவதற்குக் கூட தயாராக இருக்கிருேம்.

அதேபோல கல்விக்காகப் பணம் ஒதுக்கியிருக்கிருேம், மாணவர் இல்லங்கள் திறக்கப்படுகின்றன என்று சொன்ஞர்கள், இன்னும் பல இல்லங்களைக் கட்டித் திறந்து, இந்தச் சமுதாய மாணவர்கள் பயன் அடைய வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்ஞென்று 40 சதவிகிதம் மார்க் வாங்கியுள்ள மாணவர்களுக்குத்தான் இந்தச் சலுகை என்று வைப்பது சரியல்ல. எங்கள் சமுதாயத்திற்கு மார்க் வரம்பு வேண்டாம். ரொம்ப பிற்படுத்தப்பட்டவர்கள்—படிப்பதற்கே வசதி இல்லாதவர்கள். நகர்ப்புறங்களில் இருக்கிற குழந்தை 3 வயதில் படிக்க ஆரம்பித்தால் இவர்கள் ஆறு, எழு வயதில் தான் பள்ளி வாசனையையே பெறுகிருர்கள். ஆகவே தேர்வில் பாஸ் ஆகியிருந்தால் போதும், மார்க் வரம்பு வேண்டாம் என்று இவர்களுக்குச் செய்ய வேண்டும்.

வீட்டு மனைகளைப் பொறுத்தும் பிற்பட்ட சமுதாயத்தினர்களுக்கு கூடுமான அளவு இனமாகத் தந்து உதவி செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 1 லட்சம் வீடுகளை நம்முடைய மாநிலத்தில் உருவாக்க திட்டமிட்டு, இன்றைக்கு 10, 15 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போலவே பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காகப் பத்துப் பதினைந்தாயிரம் வீடுகளையாவது உடனடியாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலுக்கு கடன் தருவதாகச் சொன்ஞர்கள். 30 பேர் 25 பேர் என்றுதான் இருக்கிறதே தவிர ஆயிரக்கணக்கானவர்கள் பயிற்சி பெற்று வருகிற சூழ்நிலை இல்லை. அந்த நிலையை உண்டாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நம்முடைய மாநில அரசு அலுவலகங்களில், தொழிலகங்களில் இந்தப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் வேலை கொடுக்கப்படுகிறது. ஆனால் மத்திய அரசு அலுவலகங்கள், அதன் கீழ் இயங்குகின்ற தொழிலகங்கள் ஆகியவற்றில் பிற்பட்ட சமுதாயத்தினர்களுக்காக என்று தனியாக ஒதுக்கப்படுகிறது இல்லை. அதே நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்குகிறார்கள். இதே நிலையை பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் ஏற்படுத்தித்தர நமது அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக ஒதுக்கித் தர வேண்டும் என்று அம்மையார் போன்றவர்கள் மத்திய அரசிடம் வாதாட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் மிகத் தெளிவாகக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் முன்பே கூறியதைப் போல் இந்தச் சமுதாயம் ஒரு பாரம்பரியம் பெற்ற சமுதாயம்; வரலாற்றுச் சிறப்பு பெற்ற சமுதாயம்; வீரம் நிறைந்த சமுதாயம்.

ஒவ்வொரு சமுதாயத்தையும் எடுத்துக் கொண்டால், அந்தந்தச் சமுதாயத்தினுடைய வீரம் குறித்து தனியாக ஒரு பெரும் கதையே எழுதலாம். அந்த அளவிற்கு அவர்களுடைய முன்னோர்கள் எல்லாம் தனித்தனியாகக் கோட்டை கட்டி, கொத்தளம் கட்டி ஆண்டிருக்கிறார்கள்.

எங்கோ கொடி ஏற்றியதைப் பற்றியெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், அவர்கள் முன் காலத்தில் தனித் தனியாகக் கொடியோடும் கோட்டை, கொத்தளங்களோடும் வாழ்ந்த சமுதாயமாக இருந்திருக்கிறார்கள்.

எனது சமுதாயத்தையே எடுத்துக் கொள்வோம். என் சமுதாயத்திற்கு ஏற்றாண்டார் என்று பெயர். அதாவது ஏற்று ஆண்டார்கள் ஒரு காலத்தில்; இப்போது அல்ல.

அதே போல நாட்டார்கள் இருக்கிறார்கள். மன்னையர்கள் இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு பட்டப் பெயரையும் எடுத்துக் கொண்டால் அது ஒரு வீர வரலாறு. புறமுதுகு இட்டவர்கள் என்று இருக்கிறார்கள்; மழவராயர்கள் என்று இருக்கிறார்கள்;





மண் கொண்டவர்கள் இருக்கிறார்கள்; கார் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அந்த வீரச் சமுதாயம் இன்றைக்கும் இருக்கிறது.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், முதல்வர் அவர்களுக்கு—நீங்கள் ஒரு பெரிய சமுதாயத்தின்—வீர சமுதாயத்தின்—வரலாறு கண்ட சமுதாயத்தின் தலைவராக நீங்கள் வீற்றிருக்கிறீர்கள்—நீங்கள் எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டிலே இருக்கின்ற பல லட்சக்கணக்கான—இன்னும் சொல்லப் போனால் 70 சதவிகித பிற்பட்ட சமுதாய மக்கள், நீங்கள் என்ன காரியம் செய்கிறீர்களோ, எதைச் செய்யக் கட்டளையிடுகிறீர்களோ அதைச் செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அவர்களுக்கு உங்கள் காலத்திலேயே என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தராவிட்டால் வேறு யாராலும் நிறைவேற்றித் தர முடியாது. மற்றவர்களால் நிறைவேற்றித் தர முடியும் என்று யாராவது சொன்னால் அதை நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டேன். தயவு கூர்ந்து நல்ல முறையில் ஆழ்ந்த சிந்தனை உடைய தாங்கள், என்ன என்ன காரியங்கள் செய்ய நினைக்கிறீர்களோ அவைகளையெல்லாம்—எந்த முறையிலே செயலாற்ற வேண்டுமோ அந்த முறையிலே செயலாற்றி, எங்களுக்கு எல்லாம் வழிகாட்டி, எங்களை எல்லாம் உங்கள் காலத்திலேயே உயர்த்துங்கள் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. குழ. செல்லையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியம் குறித்து என்னுடைய கருத்தினை நான் இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதுபோல் 1969 மே திங்களில் பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற ஒரு தலைப்பு தொடங்கப்பட்டு, அது 1971-72-ல் ரூ. 1,61,45,000-ல் தொடங்கி, இன்றைக்கு 1975-76-ல் ரூ. 5,78,27,000 ஆக ஆக்கப்

[திரு. குழ. செல்லையா] [1975 மார்ச் 12

பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஆறாண்டுக் காலத்தில், 50 லட்சம் விகிதத்தில் அதிகமாக உயர்ந்து இருந்தாலும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிற போது, பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அரசு உதவி செய்கிறது என்று கருதப்படுகிற நேரத்தில், இன்றைக்கு நாம் முக்கியமாக ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தத் தொகை போதுமா என்று எண்ணும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியது போல் இந்தத் தொகை நிச்சயமாகப் போதாது என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், தமிழகத்தைப் பொறுத்த வரையில் அரசியலிலும், பொருளாதாரத்திலும், வணிகத்திலும், கல்வியிலும் மற்ற எல்லாத் துறைகளிலும் பின்தங்கியவர்கள் இருக்கிறார்கள், அவர்களை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் பிற்பட்டோர் நலத்துறை பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதை நாம் அறிவோம். ஆனால், அடிப்படையில் பின்தங்கிய சமுதாயம் என்று சொல்லுகிற நேரத்தில், கல்வியைப் பொறுத்தமட்டில் ஒருவருடைய ஆண்டு வருமானம் 2 ஆயிரம் என்று இருந்ததை 2,500 ஆக உயர்த்தியிருக்கிறோம். ஆனால், 2,500 என்று சொல்லும்போது இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையையும் கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த 2,500 என்ற உயர்வு இருப்பது போதாது. குறைந்த பட்சம் ஆண்டு வருமானம் 5 ஆயிரம் என்ற அளவிலாவது நிர்ணயித்து அத்தகைய வருமானம் உள்ளவர்களுக்குச் சலுகை வழங்க அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான கருத்தினை—முதல்வர் அவர்கள் இங்கே இருப்பதால் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் —பின்தங்கிய வகுப்பினர் நலக் குழு—பிற்பட்டோர் நலக் குழு, தமிழகம் முழுவதும் சுற்றி, பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலை என்ன, அவர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது தமிழகத்திலே பின்தங்கி இருக்கிற மக்களைக் குறித்துச் சரியான



1975 மார்ச் 12] [திரு. குழ. செல்லையா]

புள்ளிவிவரங்கள் தரப்படவில்லை என்பதைத் தான் நிச்சயமாகச் சொல்ல முடியும். நான் சான்றுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

முத்துராஜா என்று சொல்லப்படுபவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 10 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறது. ஆனால், என்னுடைய பேராவூரணித் தொகுதியிலேயே—1971 ஆம் ஆண்டுக் கணக்கை வைத்துச் சொல்கிறேன்—53 ஆயிரம் பேர் வாக்காளர்கள் இருக்கிறார்கள். 10 ஆயிரம் பேர் என்று கணக்குக் கொடுத்திருப்பது சரியல்ல என்பதைத் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் இந்த வகுப்பார்கள் பல்வேறு செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். முத்துராஜா சமுதாயத்தைப் பொறுத்த வரையில், அது ஒரே தலைப்பில் இல்லை. 18 தலைப்புகளில் இருக்கிறது.

தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் பல இடங்களில் சேர்வை என்றும், அம்பலகாரர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வலையர் என்ற பெயரில் அழைக்கப்படுகிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலும், சென்னையிலும் முத்துராஜா நாயக்கர் என்று அழைக்கப்படுகிறார்கள். திருச்சி மாவட்டத்தில் முத்துராஜா என்றும், முத்திரையர் என்றும், வீட்டுக்காரன் என்றும், காவல்காரன் என்றும், தலையாரி என்றும், பாளையக்காரர் என்றும், முத்துராஜா நாயுடு என்றும் அழைக்கப்படுகிறார்கள். இப்படிப் பல பெயர்களில் இந்தச் சமுதாயம் தமிழகம் முழுவதும் பரந்து கிடக்கிறது. இதை எண்ணிப் பார்க்கும்போது பிற்பட்டோர் நலக் குழு எடுத்த கணக்குச் சரியில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்ட மக்களுக்கு அரசு தரும் சலுகையைத் தாங்களும் பெற வேண்டும் என்பதற்காக உயர்ந்த வகுப்பினர் என்று சொல்லக் கூடியவர்கள் தங்கள் இனத்தையே மாற்றி அமைத்துக் கொள்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் தங்களுடைய பெயரைச் சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். உண்மையிலேயே பொருளாதாரத் துறையிலும், தொழில் துறை

[திரு. குழ. செல்லையா] [1975 மார்ச் 12

யிலும், வணிகத் துறையிலும், கல்வித் துறையிலும், இன்னும் மற்றத் துறைகளிலும் பாதிக்கப்பட்டுள்ள பின்தங்கிய மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அரசு அளித்து வரும் உதவிகளை இவர்கள் பெற்று விடுகிறார்கள். அந்தச் சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள்.

ஒரு மனிதனுடைய வருமானத்தின் அடிப்படையில் சலுகைகள் வழங்கப்படுமானால், நிச்சயமாக ஏழை, நடுத்தர பின் தங்கிய மக்களுக்குப் போய்ச் சேரும். ஆனால், பொறுப்பில் இருப்பவர்கள் —செல்வாக்குப் படைத்தவர்கள்— கொஞ்சம் செல்வாக்குப் படைத்த நிலைமையில் இருப்பவர்கள் தங்களுடைய இனத்தை வேறு பெயர்களில் மாற்றி அமைத்துக்கொண்டு சலுகைகளைப் பெற்றுக் கொண்டு இருக்கிறார்கள். திருமணத் திற்குப் பெண் எடுக்கும் நேரத்தில் ஏதேதோ சொல்லி, இனத்தை மாற்றிக்கொண்டு, பிற்பட்டவர்களுக்கு உரிய கல்விச் சலுகை களையும் மற்றச் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

கணக்குப்பிள்ளையிடம் சென்றால் ஏதோ பட்டியல் தந்து விடுகிறார் என்றும் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். பின்தங்கிய மக்களுக்கு அரசாங்கம் தரும் சலுகைகளை உண்மையிலேயே பின்தங்கிய மக்கள் பெற முடியாமல் இருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். பின்தங்கிய மக்கள் என்பவர்கள் உண்மை யிலேயே மிக மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சோனையா அவர்கள் சில தினங்களுக்கு முன்பு இந்த மாமன்றத்தில் ஒரு கேள்வி கேட்டார்கள். வலையர்கள் ஆதி திராவிட மக்களோடு சேர்க்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்று. ஏன் அப்படிக் கேட்டார்கள் என்றால், அந்த அளவுக்கு முத்துராஜா மக்கள் மிக மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதால்தான். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன மரியாதை காட்டப்படு கிறதோ, எந்த அந்தஸ்து அளிக்கப்படுகிறதோ அதே நிலைமையில்தான் இந்த முத்துராஜா மக்கள் இருக்கிறார்கள்



1973 மார்ச் 22] [திரு. குழ. செல்லையா]

என்பதற்கு இதுவே ஒரு சான்று. 18 பிரிவுகளாக இருக்கும் இந்த இன மக்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஆதி திராவிட வகுப்புப் பட்டியலில் சேர்த்துவிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக் கொள் கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நாங்கள் எந்த விதமான சலுகையும் பெற முடியவில்லை. மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும்போது எங்களுக்கெல்லாம் பாரம்பரியம் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் பல காரியங்களைச் செய்து இருப்பதாகவும் சொன்னார்கள்.

நிச்சயமாகச் சொல்கிறேன், தமிழகத்தைப் பொறுத்தவரையில் முத்துராஜா பிரிவைச் சேர்ந்தவர்கள் 85 லட்சத்திலிருந்து 1 கோடி அளவில் வாழ்கிறார்கள். அவர்களுடைய நிலைமையை நான் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் தமிழகத்தில் பல்வேறு பெயர்களில் பரவலாக வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இந்தச் சமுதாய மக்கள் ஏறக்குறைய 85 லட்சம் —1 கோடி பேர் இருக்கிறார்கள். சரியான கணக்கு அரசுக்கு வரவில்லை. பல்வேறு தலைப்புகளில் அவர்கள் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன், தனியாக ஒரு குழு அமைத்து, மீண்டும் மாவட்ட வாரியாகச் சுற்றுப்பயணம் செய்து . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 'முத்துராஜா' பிரிவைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சொல் கிறீர்கள்?

**திரு. குழ. செல்லையா:** முதல்வர் அவர்களுக்குப் பணிவன் போடு தெரிவித்துக் கொள்கிறேன், 85 லட்சம்—1 கோடி பேர் இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசாங்கத்திற்கு இருக்கிற சங்கடமே, ஒவ்வொரு வகுப்பாரும் சொல்கின்ற மொத்தத் தொகையைக் கூட்டிப் பார்த்தால், நம்முடைய மாநில மக்களுடைய மொத்தத் தொகை 7, 8 கோடிகளாகி விடுகிறது. முக்குலத்தோர் 2 அல்லது 2½ கோடி என்கிறார்கள். வன்னியப்

பெருமக்கள் 2 கோடி என்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் 1½ கோடி என்கிறார்கள். இப்படி இவைகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் 7, 8 கோடி என்று வருகிறது.

திரு. குழ. செல்லையா: நான் தவறான புள்ளி விவரம் தருகிறேன் என்று கருதாதீர்கள். இன்றைக்குத் தமிழக முதல்வர் அவர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், எங்களுக்கென்று சங்கம் வைத்திருக்கிறார்கள். தலைமைச் சங்கம் திருச்சியிலிருக்கிறது. அவர்கள் மாவட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்து, முத்துராஜாக்கள் 80 இலட்சத்திலிருந்து 1 கோடி வரை இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதனைக் கணக்கிட, இதற்கென்று தனியாகக் குழு அமையுங்கள். மாவட்டம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்யட்டும்; மாநிலம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்யட்டும்.

நான் ஏற்கனவே 18 பெயர்களைச் சொன்னேன். மீண்டும் சொல்கிறேன், நீங்கள் கணக்கெடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் என்ன சொன்னாலும் அதனை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். சலுகைகளைப் பெற வேண்டுமென்பதற்காக இவ்வளவு பேர் என்பது வேறு; உண்மையான நிலைமைகளை எடுத்துச் சொல்வது என்பது வேறு. அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கே தெரியும். ஆகவே, தனியாகக் குழு அமைத்து, அந்த ஒரு சரியான கணக்கை, சந்தேகம் ஏற்படாமலிருக்கின்ற வகையில், தெளிவாகத் தெரிந்துகொள்ள, அளிக்க அரசாங்கம் குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அவர்கள் எல்லாவற்றிலும் பின்தங்கியிருக்கிறார்கள். எங்கெங்கே மக்கள் பின்தங்கியிருக்கிறார்கள் என்று பார்த்து, எங்கெங்கு ரா மெட்டீரியல்ஸ் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் குடிசைத் தொழில்கள் அமைக்க, இவர்களுக்குச் சில கடன்களை ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே காட்டு இலாகா வைத்திருப்பது—எனக்குத் தெரிந்த வகையிலே சொல்கிறேன்—பொன் விளையும் பகுதியாக புதுக்கோட்டை, ஆலங்குடி, திருவரங்குளம் பகுதிகளில் காடுகள்





இருந்து வருகின்றன. தனி நிலமில்லாத அடிமைகளாக, கூலிகளாக, வாழத் தெரியாதவர்களாக, ஓட்டுப் போடுகிற நிலைமையைத் தவிர, வேறு இலாபங்களைப் பெறாத அளவுக்கு இருக்கின்ற அவர்களுக்கு அந்தக் காடுகளிலேயிருக்கிற நிலங்களையாவது அரசாங்கம் குறைந்த விலையிலே கொடுத்து உதவி செய்தால் நாட்டிலே இருக்கக்கூடிய உணவுப் பற்றாக்குறை தீரும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு பெரிய சமுதாயத்திற்கு ஏற்கனவே சொன்ன மாதிரி, குரூப்-1 நியமனத்திலே எந்தவிதமான வாய்ப்பும் கிடைக்கவில்லை, பெரும் பொறுப்பும் கிடைக்கவில்லை. துணைப் பேராசிரியர்கள், கடந்த ஆண்டு போடப்பட்டபோது, இம்மக்களுக்கு ஒன்றுகூடக் கிடைக்கவில்லையென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இவ்வளவையும் சொல்வதால், ஜாதிக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவதாகத் தயவுசெய்து தள்ளிவிடக் கூடாது. ஜாதியின் அடிப்படையிலே, நாட்டிலே இன்னும் பல்வேறு வகுப்பினருக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இப்பொழுதுதான் நாட்டிலே ஜாதி உணர்வுகள் வளர்ந்திருக்கின்றன. ஜாதிக் கூட்டங்களிலே கலந்து கொள்கிறோம், ஜாதியைப் பற்றிப் பேசுகிறோம், ஜாதிக்காக என்று கேட்கிறோம்.

பர்கவா குலம் என்ற ஒரு குலம் இருக்கிறது, யாதவர் குலம் இருக்கிறது. அவர்களெல்லாம் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட குலத்தவர்களுக்கு அமைச்சரவையிலே கூட இடம் இல்லையென்ற சூழ்நிலையிருக்கிறது. ஒவ்வொரு சமுதாயத்தைப் பொறுத்த அளவுக்கும் அமைச்சர் பேரவையிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யாதவர் குலத்திற்கோ, பர்கவா குலத்திற்கோ, முத்துராஜா குலத்திற்கோ, இடம் கொடுக்கவில்லை. முதல்வர் அவர்கள் அப்படி வைத்திருப்பதைக் குற்றமாகச் சொல்லவில்லை. ஆனால், இக்குலத்தவர்கள் ஓட்டு போடுவதைத்தான் தங்கள் தொழிலாக வைத்திருக்கிறார்களே, அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன்: ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். அ.தி.மு.கழகம் பொருளாதாரத்தை மட்டுமே மையமாக வைத்துத்தான் மக்களைப்

[திரு. செ. கந்தப்பன்] [1975 மார்ச் 12

பாதுகாக்க வேண்டுமென்று கொள்கை வகுத்திருப்பதாக அறிகிறேன். ஆனால், நண்பர் அவர்கள் வேறு அளவுகோல் ஒன்றைச் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. குழ. செல்லையா:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வருமானத்தின் அடிப்படையிலே தான் பொருளாதார அடிப்படையிலேதான் செய்ய வேண்டுமென்று நம்புகிறேது. ஆனால், நீங்கள் ஜாதி அடிப்படையிலே சலுகை தருகிறீர்கள். என்றைக்கு ஜாதியை ஒழிக்கிறீர்களோ, அப்பொழுதுதான் இதைப் பெறமுடியும். அமைச்சர்களை ஜாதி அடிப்படையிலே வைத்திருக்கிறீர்கள். மற்றக் காரியங்களை ஜாதி அடிப்படையிலே செய்கிறீர்கள். அதற்காக நான் முதலமைச்சரைக் குறை சொல்லவில்லை. அவருக்கு நிர்ப்பந்தம் அப்படி, அவர்கள் அவருக்கு இடையூறு தருகிறார்கள். மிரட்டுகிறார்கள். ஆகவேதான் அதனைப்பற்றிப் பேசுகிறேன். அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையல்ல. என்னுடைய தனிப்பட்ட கருத்து, நானும் சுயமரியாதைக்காரன்தான். ஆனால், இப்பொழுது இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். அதேபோல், ஜாதியின் பெயரால் இருக்கிற நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்த மாநில பிற்பட்டோர் நலக் குழுவில் கடந்த முறை எங்களுடைய துணைத் தலைவர் எட்மண்ட் அவர்கள் இருந்தார்கள். ஆனால், இப்பொழுது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை, பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அதற்கு முன்பு நீதிக் கட்சித் தலைவர்களும் தொடங்கிய வகுப்புவாதப் பிரதிநிதித்துவக் கொள்கையை வேண்டாமென்று கூறுகிறதா?

**திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, பெரியார் அவர்கள் தான் இறப்பதற்கு முன்னதாக கோவை நகரிலே வந்து, வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தில் அளிக்கப்படுகிற தனிப்பட்ட சலுகைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள் என்பதை முதலமைச்சரவர்களுக்குக் கூறுகிறேன்.



1975 மார்ச் 12]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். ஒரு உறுப்பினர் பேசும் பொழுது, அமைச்சர்கள் எழுந்து கேட்டால், அந்த உறுப்பினர் பதில் சொல்வது நல்லது. அல்லது அவர் சார்ந்த கட்சியின் தலைவர் அமைச்சர்களுக்குப் பதில் சொல்வது நல்லது. பெரியார் அவர்கள், வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தில் அளிக்கப்படுகிற தனிப்பட்ட சலுகைகளில் சில தவறுகள் நடைபெறுவதாகச் சொன்னது வேறு விவகாரம். தவறுகள் நடைபெற்றால் அதைச் சுட்டிக்காட்ட எதிர்க் கட்சிகளுக்கு உரிமையுண்டு. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமைகள் உண்டு. அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ள, அரசுக்குக் கடமையுண்டு. வகுப்புவாதப் பிரதிநிதித்துவக் கொள்கையை இன்றைக்கு அ.தி.மு.கழகம் எதிர்ப்பதற்கு என்ன காரணம்?

**திரு. குழ. செல்லையா:** மாண்புமிகு முதல்வரவர்கள் என்னை வேறு வழியில் இழுப்பதற்கு முயல்கிறார்கள் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேறு வழி அல்ல, இது தமிழ்நாட்டினுடைய தலைவிதியை நிர்ணயிக்கின்ற பெரிய பிரச்னை. அதற்காகத்தான் 40 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக் கட்சி பார்ப்பனர், பார்ப்பனரல்லாதவர் போன்றவர்களுக்குத் தங்களுக்கு வேண்டியவைகளுக்காக இயக்கங்கள் தமிழ் மாநிலத்திலே ஏற்பட்டன. அதற்குப் பிறகு காமராசர் கூட, இடைக் காலத்தில் அது தேவை என்பதை ஒத்துக் கொண்டார். நீதிக் கட்சி தனது கொள்கையாக இந்த நாட்டிலே இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்பதைத்தான் தனது உயர் பெரும் கொள்கையால், தனிக் கொள்கையாக வகுப்புவாதக் கொள்கையாக வைத்திருந்தது. அதை அடியோடு மறந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கையாக வைத்திருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கக் கொள்கையாகும்.

**திரு. குழ. செல்லையா:** அதைத்தான் நான் சொன்னேன். இப்பொழுது ஜாதியின் பெயராலே சட்டங்கள் இருக்கிறவரை, சமூக நீதி வேண்டுமென்று தந்தை பெரியார் சொல்லியிருக்

கிறார்கள். பார்ப்பனீயம், பார்ப்பனீயமல்லாதது என்ற நிலைமை வருகிறது. இன்றைக்கு அந்தச் சூழ்நிலை வருகிறது. அண்ணா சொன்னது—பார்ப்பனீயம் எந்த ஜாதியிலே இருந்தாலும் கண்டிக்கத்தக்கது என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இன்னும் என்னுடைய கேள்விக்கு நேரடியான பதிலை உங்கள் கழகத்தின் சார்பாக நீங்கள் தரவில்லை. வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்ளவில்லையென்று உங்கள் தலைவர் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார், அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**திரு. குழ. செல்லையா:** அதிலே எங்களுக்கு ஒன்றும் ஐயம் கிடையாது, சரிதான். ஆனால், இப்பொழுது அந்தச் சூழ்நிலையை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். எங்கள் தலைவர் சொன்ன கருத்திலே . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆக, உங்களுடைய தலைவர் கூறிய கூற்றின் அடிப்படையில், வகுப்புவாரி அடிப்படையில் எந்தவித சலுகையையும் வழங்கக் கூடாது என்பதுதான் உங்களுடைய கொள்கை.

**திரு. குழ. செல்லையா:** இன்றைக்கு நிர்வாகத்திலே இருக்கிறவரை நீங்கள் செய்கிறீர்கள் . . . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, சட்டநாதக் கரையாளர் அவர்கள் (குறுக்கீடு) கொடுத்திருக்கிற சிபாரிசுகளை இந்த அரசாங்கம் ஒழுங்காகக் கடைப்பிடித்தால், அதுவே போதுமானது . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சட்டநாதக் கரையாளர் என்று யாரும் இல்லை.

THIRU G. R. EDMUND: I mean the Backward Class Commission's Report,





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அந்தக் குழுவின் பரிந்துரைகளை நாங்கள் படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டுதான் வருகிறோம். ஆனால், உங்கள் கட்சியினுடைய, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை—கொள்கை வகுத்திருக்கிறார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது—ஆனால் உங்கள் தலைவர் வகுத்திருக்கிற கொள்கை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்பதுதான் உங்களுடைய கொள்கையாக இருக்கிறது. அது தமிழ்நாட்டிற்கு வேண்டுமென்று எந்தக் கட்சிக்காரரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரவர்கள், மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், சலுகைகள் கொடுப்பது பொருளாதாரத்தின் அடிப்படையிலேதான், வருமானத்தின் அடிப்படையிலேதான் கொடுக்கவேண்டுமேயொழிய ஜாதி அடிப்படையில் கொடுப்பது நல்லதல்ல. நீங்கள் கொடுக்கின்ற சலுகைகளை, பொருளாதார அடிப்படையில் கொடுப்பீர்களானால், இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இங்கே அவசியம் இருக்காது என்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆக திராவிட முன்னேற்றக் கழக அரசால் இன்றைக்குச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. நீங்கள் ஆட்சிக்கு வந்தால் அவை ஒழிக்கப்பட்டு, பொருளாதார ரீதியிலேதான் வழங்குவீர்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு யோசித்துப் பார்க்கவேண்டியது.

**திரு. குழ. செல்லையா:** நீங்கள் வகுத்திருக்கிற முறைகளிலேயே முறையாக வழங்கப்படவில்லை. யார் யாரோ அதிகாரத்திலே உள்ளவர்கள் வாய்ப்பு வசதி பெற்றவர்கள்தான் அதைத் தட்டிக் கொண்டு போகிறார்களே தவிர உண்மையாகவே பின்தங்கிய மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சர்வீஸ் கமிஷன் தேர்வு முறையிலே குரூப் 1. ஏ.சி.டி.ஓ., அஸிஸ்டெண்ட் புரபஸ்ஸர், டெபுடி எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸர், டெபுடி வெல்பேர் ஆபீஸர், பி.ஆர்.ஓ., ஏ.பீ.ஆர்.ஓ., இந்தப் பதவிகளில் ஒரு சாதாரணமான பதவிகூட எங்கள் வகுப்புக்கு வரவில்லை, அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு பெரும்பகுதியாக இருக்கிற சமுதாயத்திலே கூட எண்ணிக்கையிலே பார்த்தால் 2 எஞ்சினியர்கள், 2 டாக்டர்கள் என்ற அளவிலே குறைந்த எண்ணிக்கையிலே உள்ளவர்கள்தான் அப்படி இருக்கிறார்கள்.

கடந்த முறை நலத்துறை சம்பந்தமான அறிக்கை கொடுக்கப்பட்டபோதுகூட 12, 15 பேர்கள்தான் கொடுக்கப்பட்டார்கள் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்தங்கிய மக்களுக்கு அவர்கள் அடையவேண்டிய எல்லாச் சலுகைகளையும் அடைகிற வகையிலே அதிலே ஏதும் தவறுகள் நடக்காமல் கொடுக்கக்கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலக் குழுவிலே முன்பு திரு. எட்மண்ட் அவர்கள் இருந்தார்கள், மீண்டும் அவரைப் போடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. எதிர்க்கட்சியிலே உள்ளவர்களைப் போட்டால் அது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரவர் குலம் என்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நெல்லை, குமரி, முகவை மாவட்டங்களிலே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் குமரி மாவட்டத்திலே இருப்பவர்கள் பின்தங்கியவர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், ஆனால் அதே சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் நெல்லை, முகவை மாவட்டங்களிலே இருக்கிறார்கள், அவர்கள் அந்தச் சலுகைகளை பெறமுடியாமல் இருக்கிறார்கள். ஆகவே எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள அப்படிப்பட்ட சமுதாய மக்களுக்கு எல்லாச் சலுகைகளையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நீங்கள் ஆட்சிக்கு வந்தால் பொருளாதார நிலையை வைத்து அளிப்பீர்களா அல்லது வகுப்புவாரி அடிப்படையிலே அளிப்பீர்களா என்று கேட்ட



போது திரு. எட்மண்ட் அவர்கள் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று தனக்கு உள்ள சந்தேகத்தைத் தெரிவித்தார்கள், அது இருக்கட்டும், நீங்கள் இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறீர்கள், ஆட்சிக்கு வந்தால் என்ன என்ன செய்வோம் என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். உங்களுடைய தலைவர் வகுப்புவாரி அடிப்படையில் அல்ல பொருளாதார அடிப்படையில் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். உங்களுடைய தேர்தல் பிரகடனத்திலே இதைப்பற்றிச் சொல்ல வேண்டும், அப்போது எந்த அடிப்படை வேண்டுமென்று சொல்வீர்கள்?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அன்றையிலும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கொள்கையில் எங்களுடைய கட்சித்தலைவர் மிகத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். சமுதாயத்தில் ஜாதி வேறுபாடுகளைக் களையவேண்டும் என்பதுதான் அன்று அவர்களின் கொள்கை, பெரியார் அவர்களின் கொள்கை, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே உள்ள நீங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட சமுதாயத்திற்கும் சமுதாய அடிப்படையிலே செய்துகொண்டு வருகிறீர்கள். அன்று திராவிட முன்னேற்றக் கழகம் அவர்கள் மட்டுமல்ல, சமுதாயத்திலே முற்பட்ட சமுதாயத்திலே இருக்கிறவர்களில்கூட வறுமையின் காரணமாக முன்னேறாமல் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள் சமுதாயத்திலே உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவேண்டுமென்றும் பொருளாதாரத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கிறவர்களுக்கு சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்பதும் எந்த நல்லாட்சியாக இருந்தாலும் பாடுபடும். பொருளாதார அடிப்படையிலே சலுகைகளை வழங்குவது நியாயம் என்று அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையை அது வகுத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தேர்தல் பிரகடனம் வரும்போது இதை சேர்த்துக்கொள்வீர்களா என்று. இன்றைய தினம் எந்த எந்தக் கொள்கைகளை செய்யவேண்டுமென்று சொல்கிறோமோ அந்தக் கொள்கைகளைத் தேர்தல் நேரத்திலே, ஆட்சிக்கு வருகிற நேரத்திலே ஏற்றுக்கொண்டு செயல்படுகிற முயற்சிகளை எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1975 மார்ச் 12

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முற்போக்கான மக்களில் ஏழ்மையாக இருக்கிறவர்களுக்கு உதவிட வேண்டுமென்று இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. அதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அதிலே ஏழைகளாக இருக்கிறவர்கள் இன்றைக்கே அவைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். திரு. எட்மண்ட் அவர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். இந்த நாட்டிலே உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த நாட்டிலே இனி சமூக அடிப்படையிலே சலுகைகளைப் பெறமாட்டார்கள், பொருளாதார அடிப்படையிலேதான் பெறுவார்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அது தமிழ்நாட்டிலே உள்ள பின்தங்கிய மக்களை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், முதலமைச்சர் அவர்கள்—பேசுகின்ற நேரத்திலே அவருக்குக் குறுக்கிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. உறுப்பினர் பேசியதைத் திருத்திச் சொன்னார்கள் . . .

MR. DEPUTY SPEAKER : Please do not begin a speech now.

DR. H. V. HANDE : I have the right and I want to exercise my right. . . .

MR. DEPUTY SPEAKER : You cannot interpret the speech of the hon. Member, Mr. Edmund . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பேசுவதற்கு உரிமை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரிமை இருக்கிறது. You can put forth your views only.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது அண்ணாயிஸம்பற்றிச் சொன்னபோது எல்லோரும் சிரித்தார்கள். அண்ணாயிஸம் என்ற 29 பக்கங்கள் கொண்ட நூலிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தற்போது கொடுத்துக்கொண்டிருக்கிற சலுகைகள் நீடிக்கவேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். ஏனென்றால் அதை அச்சடிப்பதிலே எனக்கும் பங்கிருந்தது. அந்த முறையிலே சொல்கிறேன். பேக்வர்ட் கிளாஸஸ், தாழ்த்தப்பட்ட



1975 மார்ச் 12] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

மக்களைப் பொறுத்த வரையில் இப்போதுள்ள சலுகைகள் இன்னும் சிறந்த வகையிலே—சட்டநாதன் கமிட்டி அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற சிபாரிசு அடிப்படையிலே—செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதோடு எக்ஸ்ட்ரா ஆக்ஸலன்ட்டாக பொருளாதார அடிப்படையிலே யாராவது பின்தங்கிய நிலைமையில் இருந்தால் அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட அதைத்தான் சொன்னார்கள். ஆகவே பின்தங்கிய மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சலுகைகள் அளிக்க வேண்டுமென்ற கொள்கையிலே மாறுதல் இல்லை என்பதை நான் ஆணித்தரமாக ஆதாரத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. எட்மண்ட் சொன்னதை டாக்டர் ஹாண்டே அவர்கள் மறுத்திருக்கிறார்கள், அவ்வளவுதான்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான்கு மாத காலத்திற்கு முன்பு அவர்களுடைய அண்ணா தி. மு. க. வின் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுப்பது சிபாரிசுத் தவறானது என்று பத்திரிகையிலே பேட்டி கொடுத்திருக்கிறார்கள். . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எந்த இடத்திலே சொன்னார்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொல்லி முடிக்கட்டும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** பொருளாதாரத்திலே தாழ்ந்து இருக்கிற சிக்கிக்கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச்சலுகைகள் அளிப்பதுதான் சாலச்சிறந்தது என்று தி.மு.க. அரசு கருதுகிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகைகள் கொடுத்தால் மேல் மட்டத்திலே இருக்கிறவர்கள் மேல் ஜாதியிலிருந்து படிப்படியாக கீழே இறங்கிவிடுவார்கள். ஆகவே அது தேவையில்லை என்று நான்கு மாதங்களுக்கு முன்னால் பத்திரிகைக்குப் பேட்டியளித்திருக்கிறார். அதை நான் நிரூபிக்கிறேன்..

[1975 மார்ச் 12

Dr. H. V. HANDE : No, no . . . .

(Mr. Deputy Speaker sounded the gong)

Dr. H. V. HANDE : Do not threaten me . . .

Mr. DEPUTY SPEAKER : No; I am not threatening you Let him have his say first.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஏன் அவ்வளவு ரூட் ஆக பெல் அடிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பெல் இருக்கிறது, அடிக்கிறேன். எப்படி அடிக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும், நீங்கள் சொல்ல வேண்டாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் முடிக்கட்டும்.

**திரு. க. உரா. எட்மண்ட் :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் நண்பர் குழ செல்லையா அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலேயிருந்து சில விளக்கங்களைக் கேட்டார்கள். அதற்கு எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் திரு. அரங்கநாயகம் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஏதாவது உறுப்பினர் பேசும்போது அமைச்சர் குறுக்கிடும்போது அந்த உறுப்பினர் அல்லது அந்த உறுப்பினர் சார்ந்திருக்கிற கட்சித் தலைவர், துணைத்தலைவர்தான் பேசவேண்டும். மற்ற உறுப்பினர்கள் பேசக்கூடாது என்று சொன்னார்கள். நீங்களும் சொன்னீர்கள். நான் கேட்க விரும்புவது திரு. பாலசுந்தரம் எந்த அடிப்படையிலே எந்த விதிமுறையின்கீழ் பேசிக் கொண்டு இருந்தார்?

**திரு. தி. பொன்னுமலை :** அப்போது டாக்டர் ஹாண்டே எந்த விதிமுறையிலே பேசினார்?

**திரு. க. உரா. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒழுங்குப் பிரச்சினையில் பேசினார்கள். He was on a point of order.



1975 மார்ச் 12] [திரு. க. உரா. எட்மண்ட்]

(குறுக்கீடு) உண்மைக்குப் புறம்பான ஒன்றைத் திரு. துரை முருகன் கூறுகிறார். ஹாண்டே அவர்கள் எழுந்து பேசும்போது 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லிவிட்டுத்தான் பேசினார். இப்படிச் சொன்னால் இந்த மன்றத்தில் நாங்கள் எதைத்தான் பேசுவது என்று தெரியவில்லை.

(Dr. H. V. Hande and Thiru N. Veerasami stood up in their seats.

Mr. DEPUTY SPEAKER : I have to give a ruling first to the point raised and then ask Mr. Balasundaram to finish.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எந்த உரிமையில் பேசினாரோ அதே உரிமையில்தான் திரு. பாலசுந்தரமும் பேசினார்.

Thiru G. R. EDMUND : Dr. Hande rose on a point of order; but Mr. Balasundaram was not on a point of order.

Mr. DEPUTY SPEAKER : Mr. Edmund, what I say is though Dr. Hande prefaced his speech with ' a point of order ', actually he never raised a point of order. He just gave an explanation of his party policy.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்ல சான்ஸ் கொடுக்கவில்லை. எட்மண்ட் சொன்னதை முதலமைச்சர் அவர்கள் சொல்லலாமா? அதுதான் பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்டது, நான் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை சரியானது என்று ஹாண்டே அவர்கள் மறுபடியும் மறுபடியும் வாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் திரும்பத் திரும்ப எட்மண்ட் அவர்களைக் கேட்டது நீங்கள் பொருளாதார அடிப்படையில் இதை அணுகியிருக்கிறீர்களா அல்லது சமுதாய அடிப்படையில் சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறீர்களா? உங்கள் கட்சியின் கொள்கை என்ன என்று திரும்பத் திரும்பக் கேட்டேன். திட்டவட்டமாக பொருளாதார அடிப்படையில்தான், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்றுக் கொள்ளவில்லை' என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். 'நீங்கள் ஆள வந்தால் அதைத் தான் செய்வீர்களா?' என்று மறுபடியும் கேட்டபோது

அன்றைக்கு வரும் நேரத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அந்தச் சந்தேகம் பிறகு இருக்கட்டும்.

ஆட்சிக்கு வரக் கருதுகிற எதிர்க்கட்சி தாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். பொருளாதார ரீதியில்தான் பின்தங்கிய மக்களை அணுக வேண்டுமென்று குறிப்பிடுவார்களானால் பின்தங்கிய சமுதாயத்திற்காக நீதிக் கட்சி காலத்திலிருந்து தொடர்ந்து நடந்து வருகிற, எல்லாக் கட்சிகளும் ஒப்புக் கொள்ளுகிற முறைக்கு மிக, மிக ஆபத்தாக முடியும் என்பதற்கு எட்மண்ட் பதில் சொல்லியிருக்க வேண்டுமே தவிர, இதிலே ஹாண்டே அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது ஏன் என்று புரியவில்லை.

(டாக்டர் ஹாண்டே எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பாலசுந்தரம் பேசிய பிறகு உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பலாம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** டாக்டர் ஹாண்டே அவர்கள். .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஹாண்டே அவர்களை விட்டு விட்டு பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனிச் சலுகை கொடுப்பது மிக மிகத் தவறு. அது இந்த அரசு செய்கிற மிகப் பெரிய தவறு என்று அவர் பேட்டி கொடுத்திருக்கிறார். ஹாண்டே அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் சலுகை கொடுக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது என்று சொல்லுகிறார். நான் அவர் கொடுத்த பேட்டியை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஹாண்டே அவர்கள் குழப்பாது வாபஸ் பெற்றுக் கொள்வார்கள் என்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 'குழப்பம்' என்றெல்லாம் பேசுவது சரியல்ல.

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எழுப்பிய வினாவுக்கு நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் எட்மண்ட் அவர்கள் பதில்





சொல்லும்போது 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொருளாதார அடிப்படையில்தான் பிற்பட்டவர்களுக்கும் சலுகைகள் அளிப்போம்' என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். தப்பித்தவறி இவர்கள் ஆட்சிக்கு வந்தால், பொருளாதார அடிப்படையில் பிற்பட்டவர்களுக்குச் சலுகை அளிக்க அரசியல் சட்டத்தில் இடம் இருக்கிறதா என்பதை அருள்கூர்ந்து தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எங்களைப் பொறுத்தவரை நம்முடைய பொதுச் செயலாளர் அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளைப் பற்றி அப்போதைக்கப்போது பிரஸ் கான்பரன்சில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய எனது இனிய நண்பர் பாலசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை அந்தக் குற்றச்சாட்டுக்கு அதிகாரப் பூர்வமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதாவது ஒரு பத்திரிகையில் வராமல் இருந்திருக்கலாம். அன்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் எம். ஜி. ஆர். அவர்கள் திட்டவட்டமாக 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு இப்போது கொடுக்கக்கூடிய சலுகைகள் போதாது; இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார்கள். அன்று திராவிட முன்னேற்றக் கழகம் வகுத்திருக்கக்கூடிய 'அண்ணாயிசம்' புத்தகத்திலேயே இருக்கக்கூடிய கருத்து அது.

பிற்பட்ட வகுப்பினர்களுக்குக் கூட சட்டநாதன் ரிப்போர்ட்டில் பொருளாதாரத்தில் அடித்தளத்தில் இருப்பவர்களை கூட சேர்த்துக் கொண்டு வரவேண்டும்' என்று இருக்கிறது. பாக்வேர்டு கமிஷன் அறிக்கையிலேயே இருக்கிறது. அதல்லாமல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து 'மற்ற பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு வேறு வகையில் சலுகை கொடுக்க அரசாங்கம் சிந்திக்கும்' என்று 1967-ம் ஆண்டு முதன் முதலில் சொன்னார்கள். அன்று அவ்வளவு பேரும் பாராட்டினோம். அந்த அடிப்படையிலேதான் சொல்லப்பட்டதே தவிர, இதிலே அனாவசியமாக நமக்குள்ளே எந்த விதமான குழப்பமும் தேவையில்லை.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 மார்ச் 12

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் எம்.ஜி.ஆர். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நல்ல பணிகள் செய்ய வேண்டும், அவர்கள் மேலுக்கு வரவேண்டும் என்பதிலே இதயப்பூர்வமான எண்ணத்துடன் இருக்கிறார்கள். அவருக்கும், கட்சிக்கும் மாசு கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இங்கே பேசப்படுகிறது. அது சரியல்ல. சட்டநாதன் கமிஷன் அறிக்கை மீது நான் அரை மணி நேரம் பேசினேன். அதிலே எவ்வளவோ பாயின்ட்டுகள் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இதிலே தவறான எண்ணங்களுக்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். டாக்டர் ஹாண்டே அவர்கள் பாக்வார்டு கமிஷன் ரிப்போர்ட் பற்றிச் சொன்னார்கள். பிற்பட்ட இனத்தில் இருப்பவர்கள் எல்லோருக்கும் சலுகை கொடுப்பதில்லை. அதிலும் எகனாமிகலி பாக்வார்டாக இருப்பவர்கள் அனைவருக்கும் இந்தச் படுகிறது. நான் அந்தச் சலுகையைப் பெற்றதில்லை. எகனாமிகலி பாக்வார்டு plus சோஷியலி பாக்வார்டுக்குத் தான் கொடுக்கிறார்கள். பாக்வார்டு கிளாசில் இருப்பவர்களிலேயே எகனாமிலி பாக்வார்டாக இருப்பவர்கள் அனைவருக்கும் இந்தச் சலுகை முழுவதுமாக கொடுக்கப்படாத நேரத்தில் இதிலே எல்லா சாதியையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்றால் பிற்பட்ட சாதி எங்கே போகும்.

One must be economically backward and socialy backward. It should be social backwardness plus economic backwardness. If I am forward in respect of income and if the income is beyond Rs. 2,500 per annum, I do not get any privilege.
பிற்பட்ட வகுப்பினரில் இன்னும் நால்வாசிப் பேருக்கு மேல் எந்தவித வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள்.

1967-ல் முற்பட்ட இனத்தில் பொருளாதாரத் துறையில் பிற்பட்டவர்களாக இருப்பவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்க வேண்டுமென்பதற்காக 14 லட்சம் ரூபாய் மத்திய அரசிலிருந்து வாங்கி அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. பொருளாதாரத் துறையில் பின்தங்கியிருக்கும் ஐயர்களுக்குக் கூடச் சலுகை கொடுக்கலாம். அதற்காக அப்போது 14 லட்சம் ரூபாய் மத்திய அரசிலிருந்து வாங்கப்பட்டது. அது இப்போது இல்லை.



1975 மார்ச் 12] [திருமதி த. ந. அனந்தநாயகி]

If you now open the flood-gates we are doomed. We will be nowhere.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அம்மையார் அனந்தநாயகி அவர்களின் உணர்வுகள் அனைத்தையும் நான் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன். ஏனென்றால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அம்மையார் அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்காகத் தனி இலாகா ஏற்படுத்த வேண்டுமென்று பல முறை போராடித் தோற்றவர்கள் வாதத்தில். அதற்குப் பிறகு, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகுதான் தனி இலாக்கா ஏற்படுத்தப்பட்டு, குழு அமைக்கப்பட்டது. கொஞ்ச காலம் நானே அந்த இலாக்கா பொறுப்பை வகித்திருந்து, அதற்குப் பிறகு ஒரு அமைச்சரிடத்தில் அது தரப்பட்டது.

அப்படித் தரப்படுகிற நேரத்தில்கூட பெரும்பான்மையாக குறிப்பிட்ட வகுப்பில் இருக்கின்ற அமைச்சரிடத்தில் கொடுத்தால் விமரிசனங்கள் வரக்கூடும் என்று கருதி பின்தங்கிய வகுப்பில் சிறுபான்மை வகுப்பைச் சார்ந்த ஒரு அமைச்சரிடத்தில் தர வேண்டுமென்ற எண்ணத்தில் அது ஒப்படைக்கப்பட்டு காரியம் நடைபெற்று வருகிறது. இன்னும் வேகமாகப் பணிகள் நடைபெற வேண்டுமென்று சொல்லுவதை வரவேற்கிறேன்.

இப்போதே தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் சில பேர் பின்தங்கிய மக்கள் அளவு தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யவில்லை என்ற குறைபாட்டைச் சொல்லி வருகிறார்கள். அம்மையார் அவர்கள் எடுத்துக் காட்டியது போல் முன்னேறிவிட்ட மக்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் சலுகைகளை வழங்க மேலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்த முயற்சிகளை அரசு தொடர்ந்து எடுத்துக் கொள்ளும் என்று உறுதி கூறுகிறேன். அதைச் சொல்ல வேண்டுமேயல்லாமல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையில் அடைந்து வரும் சலுகைகளை ஒழிப்பது என்பது தமிழ்நாட்டைப் பொறுத்த வரை பேராபத்தாக முடியும். பின்தங்கிய மக்களுக்காகத் தரப்பட்ட சலுகைகள் 25 சதவிகிதமாக இருந்தது இந்த ஆட்சியில் 31 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

அதைப் போலவே 16 சதவீதம் என்று தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருந்த சதவிகிதாசாரம் 18 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்குமேல் உயர்த்த முடியாது, அரசியல் சட்டப்படி. ஆகவேதான் 31-ஓடு 18 சேர்த்து 49-ஓடு நாம் நிறுத்தியிருக்கிறோம். அரசியல் சட்டம் இடம் கொடுத்தால் இன்னும்கூட அதிகமாக பின் தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சதவீதத்தை உயர்த்தியிருக்க முடியும். ஆனால் அரசியல் சட்டம் இடம் தரவில்லை. இதை பொருளாதார ரீதியிலேதான் அணுக வேண்டும். வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை அழித்து விட வேண்டுமென்று சொன்னால், இப்போது அல்ல, எதிர்காலத்திலே செய்வோமானால் அது நாட்டிற்கு பேராபத்து. இப்படி ஒரு கொள்கையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருப்பது நல்லதல்ல.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, அப்படிச் சொல்லவே இல்லை என்பது எங்களுடைய வாதம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இதற்கு முத்தாய்ப்பு வைத்து விட்ட காரணத்தினால் இது முடிந்து விட்ட ஒன்று என்று ஆகாது. இதற்கு முன்பு திரு. வேலப்பன் பேசிய நேரத்தில் இதைச் சொல்லியிருக்கிறார்கள். வகுப்பு அடிப்படையில் எந்தச் சலுகையும் அளிக்கக் கூடாது என்று தம் கட்சியின் கொள்கையை அவர் சொல்லியிருக்கிறார். திரு. எட்மண்ட் அவர்களும் அதைத்தான் சொல்லி இருக்கிறார்கள்.

* **திரு. மணலி சி. கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

பின் தங்கிய மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய பணம் இந்திய அரசியல் சட்டப்படி வரைமுறைக்கு உட்பட்டதுதான் அதைத்தான் ஒதுக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கு விளக்கம் கூறியிருக்கிறார்கள். இந்தப் பணம் போதியதல்ல என்று அவர் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். பின்தங்கியவர்களாக இருக்கிறவர்கள் நூற்றுக் கணக்கான ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஒரு குறிப்பிட்ட இரண்டு, மூன்று ஜாதிகளை நினைத்துக் கொண்டு பேசுவது தவறு.





திரு. குழ. செல்லையா அவர்கள் தங்கள் ஜாதியைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டார்கள். மேல் ஜாதிக்காரர்கள்கூட, தங்களை பின்தங்கிய ஜாதி என்று பதிவு பண்ணிக்கொள்ளக் கூடிய அளவிற்கு பின்தங்கிய மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு தங்களை பின்தங்கிய ஜாதி என்று பதிவு பண்ணிக் கொள்ளக்கூடிய நிலை அதிகரித்துக் கொண்டே போகிறது.

இப்போது பின்தங்கியவர்கள் யார் யார் என்று சென்சஸ் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பின்தங்கியவர்கள் என்றால் அது இப்போது ஏற்பட்டதல்ல, ஆங்கில ஏகாதிபத்தியம் ஆண்ட காலத்திலே, அதற்கு முன்னாலே சேர, சோழர் ஆண்ட காலத்திலே சில வகுப்பினர் ஜாதியைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்கு வசதியான இடங்களைப் பிடித்துக் கொண்டு விட்டதனால் சில பகுதியினர் பின் தங்கிவிட்டனர். அவர்களைக் கை தூக்கி விடுவது ஒரு ஜனநாயக அரசின் கடமை என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் பின் தங்கிய மக்களுக்காகப் பணம் ஒதுக்குவது ஒரு சிறந்த ஜனநாயக கொள்கை என்று அதை இந்த அரசு மேற்கொண்டு இருப்பதற்கு அடையாளமாகத்தான் அதற்காக ஒரு அமைச்சகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைப் பற்றி நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கூடாது என்று பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல, யோக்கியதையின் அடிப்படையில்தான் வரவேண்டுமென்று சொன்னால் மேல் ஜாதிக்காரர்கள் வருவார்கள். பின்தங்கியவர்கள் தலை தூக்க முடியாது. ஏன் அவர்களுடைய இந்தக் கொள்கையை மறுக்கவேண்டும்? ஒரு கொள்கை என்று ஒன்றை வகுத்துக் கொண்டால் அதைத் தைரியமாகச் சொல்வதற்குத் துணிவு வேண்டும். அப்படி ஒரு கொள்கையை அவர்கள் வகுத்துக் கொண்டு, அதை இல்லை என்று சொல்வது தவறு.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 மார்ச் 12

பின்தங்கியவர்களை கை தூக்கி விடவேண்டும். நிச்சயமாக முன்னேறியவர்களோடு அவர்கள் சேர்ந்து போவதற்கு ஒரு விசேஷ வழி வகுக்கவேண்டும் என்பது தார்மீக முறை. என்னைப் பொறுத்தவரையில் பழைய பெருமையைப் பேசிக் கொண்டிருப்பதில் எந்த வித பயனும் இல்லை.

திரு. காமாட்சி அவர்கள் அந்த பெருமைகளைப் பற்றிப் பேசினார்கள். நமக்கு பின்தங்கியவர்களுக்கு இருக்கக்கூடிய துர்ப்பாக்கியமெல்லாம் இதனாலேதான் நாம் குட்டிச் சுவராகப் போனோம். பின்தங்கியவர்கள் தாங்கள் மேல் ஜாதியாகக் கூடிய அளவிற்கு முன்னேற வேண்டுமென்று ஒருசேர முடிவு செய்வார்களானால் அவர்கள் ஒரு மகத்தான சக்தியாக ஆக முடியும் என்று நான் கூறிக்கொள்கிறேன். அத்தகைய நிலைமை இல்லை. அவர்களை தலைமை வகித்து நடத்தக் கூடியவர்களும் அந்த மக்களை முன்னுக்கு கொண்டு போகக் கூடிய நிலைமையில் இல்லை. அந்த அடிப்படையில்தான் பின்தங்கிய மக்களுக்கு அரசே கை கொடுத்து உதவ வேண்டிய நிலை இருக்கிறது.

அவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பது, அவர்களை ஹாஸ்டலில் வைப்பது என்பது மாத்திரம் போதாது. அவர்கள் தான் பல்க் ஆப் தி பாபுலேஷன். பின்தங்கிய மக்களை முன்னேற்றக் கூடிய எல்லா நடவடிக்கைகளும் சோஷலிசத்தை நோக்கி முன்னேறக் கூடிய நடவடிக்கைகளாகும். அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் இடம் கொடுக்கப்பட்டால் அது ஒட்டு மொத்தமான சமுதாய முன்னேற்றத்திற்கு, சோஷலிசத்திற்குப் படியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் அவர்களை பள்ளிக்கூடத்தில் படிக்கவைப்பது மட்டும் போதாது. அவர்களைப் படிக்க வைப்பது என்பது ரொம்பவும் நல்லது தான். படித்தவன்தான் மனிதனாக இருக்க முடியும். அவர்களுக்கு படிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறோமென்றால் அதோடு நிற்காமல் கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு பண்ணைகளை நிறுவி, அவர்களை தொழில் துறையில், வியாபாரத் துறையில், மற்றும் பல்வேறு துறைகளில் புகுத்தக் கூடிய அளவிற்கு அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடிய அளவிற்கு இண்டக்ரேட்டாக—இணைந்த ஒரு விதத்தில் அவர்கள் முன்னேற்றத்திற்கு திட்டமிடப்பட்டால் நலமாக இருக்கும்.



1975 மார்ச் 12] [திரு. மணலி சி. கந்தசாமி]

இந்தத் துறை, விசேஷமாக கல்வித் துறையாகப் பயன் படுகிறது. மற்ற துறைகளிலே உள்ளவர்கள், தம்முடைய இலாகாக்கள் மூலமாக எந்த அளவிற்குப் பின்தங்கிய மக்கள் பயன் பெறுகிறார்கள் என்ற ஒரு உணர்வோடு அதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். இவர்கள் முன்னேற்றத்தில் ஒவ்வொருவருக்கும் பங்கு இருக்கிறதென்ற முறையில் இந்த விஷயத்திலே கவனம் செலுத்தவேண்டுமென்ற அடிப்படையில் இந்தப் பிரச்சனையை நான் பார்க்கிறேன்.

இன்றைக்கு மிகப் பின்தங்கியவர்களாக நாவிதர்கள், சலவை தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்கவில்லை. தப்பித் தவறி கிடைத்தாலும்கூட மற்றவர்கள் பின்தங்கியவர்கள் என்ற அடிப்படையில் பெற்றுவிடுகிறார்கள். ஆகவே சலுகைகள் என்று சொன்னால் மற்ற பின்தங்கியவர்களை ஒதுக்கிவிட்டு இவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இவர்கள் அடித்தளத்தில் அவமானப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களை கை தூக்கி விடவேண்டும். 10 பேர்களிடமிருந்து மனுக்கள் வந்தது என்றால் சலவைத் தொழிலாளர்களிடமிருந்து வந்திருக்கிறதா, சவரத் தொழிலாளர்களிடமிருந்து வந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்.

அவர்களுக்கு நிச்சயமாக முதல் இடம் ஒதுக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட பின்தங்கிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான். இங்கே பல பேர்கள் பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். சலவைத் தொழிலாளி, நாவிதர்கள் ஆகியவர்களைப் பற்றி முக்கியமாக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும், அவர்களை கை தூக்கிவிடவேண்டும். அவர்களுடைய இழிவைத் துடைத்து அவர்கள் முன்னேறுவதற்கு குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அடுத்த ஆண்டில் அவர்களுக்காக இவ்வளவு நடவடிக்கைகளைச் செய்தோம் என்று சொல்லக் கூடிய நிலையில், அவர்கள் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நரிக்குறவர்களைப் பொறுத்து, ஒரு குறத்திப் பெண்ணை ஒரு இந்து கல்லியாணம் செய்து கொண்டு இருக்கிறார். அந்தப் பெண் உபாத்தியாயினியாக இருக்கிறார். சில சலுகைகளை

[திரு. மணலி சி. கந்தசாமி] [1975 மார்ச் 12

அவர்கள் கேட்கிறார்கள். நீண்ட நாட்களாக அது இருந்து கொண்டிருக்கிறது. இதில் முதலமைச்சரவர்கள் கவனம் செலுத்தி வேண்டியவைகளை அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நரிக்குறவர்கள் ஷெட்யூல் டிரைப்ஸைப் போன்றவர்கள். மலையில் இருக்கக் கூடிய டிரைப்ஸைச் சேர்ந்த அவர்களுக்கு விரிவாக சலுகைகளைச் செய்ய வேண்டும்.

இந்த விவாதத்தில் பிராமின்ஸ், நான்-பிராமின்ஸ் என்ற பிரச்சனை வந்தது. ஜஸ்டிஸ் கட்சிக் காலத்தில் இது ஏற்பட்டதற்குக் காரணம் ஏகாதிபத்தியத்தின்கீழ் பல்வேறு பகுதிகளை பிராமணர்கள் தங்கள் கீழ் வைத்துக் கொண்டிருந்தார்கள். பாக்கி ஜாதிக்காரர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்காக ஒரு மூவ்மெண்ட் ஏற்பட்டது. படிப்படியாக பிராமின்ஸ், நான்-பிராமின்ஸ் என்று பிரிக்கக்கூடிய அளவிற்கு நிலை ஏற்பட்டது. ஆனால் இடையில் பல்வேறு உயர்ந்த ஜாதியினர் பிராமணர்கள் இருந்த இடத்தைப் பிடித்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்க வேண்டும்.

சட்டநாதன் கமிஷன் சிபாரிசுகளுக்குப் பிறகு இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு புதிய கமிஷனை நியமித்து யார் யார் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள், யார் யார் இடைக்காலத்தில் வளர்ந்திருக்கிறார்கள் என்று அதன் மூலமாக கண்டு ஆராய்ந்து புதிய முடிவுகளை நாம் எடுக்க வேண்டும்.

பின்தங்கியவர்களை முன்னேற்றுகிறோம் என்று சொல்கிற போது சமுதாயத்தில் தகுதி உள்ளவர்கள் பயன் பெற்று உண்மையில் பின்தங்கியவர்களுக்குக் கிடைக்காத நிலை ஏற்படாத அளவுக்குக் காரியங்களைச் செய்ய வேண்டும். இந்த பின்தங்கியவர்களுக்காக இருக்கக்கூடிய கமிட்டியை விரிவுபடுத்தி, அது அடிக்கடி உட்கார்ந்து பயனுள்ள முறையில் வேலை செய்யக் கூடிய அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1975 மார்ச் 12] [திரு. மணலி சி. கந்தசாமி]

கடைசியாக, இந்தத் துறைக்காக உள்ள அமைச்சர் மாண்புமிகு திரு. நடராசன் அவர்கள் உடல் நலம் குன்றியிருக்கிறார்கள். அவர்கள் வெகு விரைவிலே குணம் அடைந்து இந்த பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நல் விழைவினையும் தெரிவித்துக் கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. பாலசுந்தரம் அவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கொடுத்த பேட்டியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் அதை மறுத்தார்கள். 5—1—1975 ஆனந்தவிகடனில், அமெரிக்கா சென்றபோது திரு. எம்.ஜி.ஆர். அவர்களை நியூயார்க் பத்திரிகையாளர்கள் சந்தித்துக் கேட்ட போது கேட்ட கேள்வியும் அளித்த பதிலும்:

"கல்லூரி அட்மிஷனில் ஜாதிவாரி பிரிவினை காரணமாக திறமை இழந்து விடுகிறோமே, எதிர்காலத் தமிழ் நாட்டிற்கு இது நல்லதா?" இது கேள்வி. அதற்கு பதில் "எனது கட்சி பதவி ஏற்குமானால், திறமைக்குத்தான் முதலிடம். தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்ற தனிப் பயிற்சியும், அதற்குத் தனிப் பணமும் செலவிடப்படும்". ஏற்கனவே தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவதற்காக மத்திய சர்க்கார் அக்கறை எடுத்து வருகிறது. மாநில சர்க்காரும் அக்கறை எடுத்து வருகிறது. அவர்களுக்கென தனிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால், கேள்வி, கல்லூரி அட்மிஷனில் ஜாதிவாரி பிரிவினை காரணமாக என்று கேட்டிருக்கிறார்கள். அட்மிஷனில் இப்போது 31 சதவிகிதம் வைத்து இருக்கிறோம். 25 என்று ஏற்கனவே இருந்ததை 31-க்கு உயர்த்தி இருக்கிறோம். எந்த அடிப்படையில் அவர்கள் கேள்வி கேட்கிறார்கள், அதற்கு எப்படி பதில் தருகிறார்கள், "எனது கட்சி பதவி ஏற்குமானால், திறமைக்குத்தான் முதலிடம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் பெரிய ஆபத்து என்று எடுத்துக் காட்டினார்கள்.

DR. H. V. HANDE: Sir, I am very grateful to the Hon. Chief Minister for reading it out . . .

*[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 மார்ச் 12*

**அதை மிகத் தெளிவாகப் பார்த்தால், திறமைக்கு முதலிடம்** என்றால் பேக்வார்ட் கிளாஸ் எடுக்கக் கூடாது என்று அல்ல. (குறுக்கீடு) தயவுசெய்து எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். நான் அமைதியாகப் பேசுகிறேன். முதலமைச்சர் அவர்கள் நன்றாக வாதத் திறமை பெற்றவர்கள். அவர்கள் சரியான வகையில் பதில் சொல்வார்கள்.

He is capable of countering my argument.

பேக்வார்ட் கிளாசில் திறமையாக உள்ளவர்களை எடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். சட்டநாதன் ரிப்போர்ட்டிலேயே அது இருக்கிறது. நான் பேசியிருக்கிறேன். பேக்வார்ட் கிளாஸூக்கு இப்போது 31 சதவிகிதம் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் இன்னும் உயர்த்தினாலும் உயர்த்தலாம். நிர்மாண சட்டத்தின் அடிப்படையில் எது சாத்தியமோ அதைச் செய்வோம். திறமை இருந்து சீட் கிடைக்கவில்லை என்ற நிலைமை வராது. இன்று வகுப்புவாரி அடிப்படையில் சீட் ஒதுக்கியிருந்தால் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொன்னால் அவர்களுக்கு செல்வாக்கு இல்லையென்றால், திறமை இருந்தால் அவர்களை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். பேக்வார்ட் கிளாஸூக்கு கொடுக்கக் கூடாது என்று எந்த நேரத்திலும் சொல்லவில்லை.

இரண்டாவதாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய சலுகைகள் எல்லாம் தொடர்ந்து கொடுக்கப்படும். அதே நேரத்தில் அவர்களுக்கு எக்ஸ்டிரா கன்சஷனும் கொடுக்கப்படும். இந்த விஷயம் குறித்து நானும் எம்.ஜி.ஆர். அவர்களும் பல நேரங்களில் பேசியிருக்கிறோம். நம்முடைய கொள்கை மிகத் தெளிவாக இருக்கிறது. 'தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை கொடுத்துக் கொண்டே வருவோம்.

அது மட்டுமல்லாமல், அவர்களுடைய திறமையை உயர்த்துவதற்காக ஐ.ஏ.எஸ். போன்ற பதவிகளுக்கும் பயிற்சி கொடுத்து அவர்களை இன்னும் திறமைசாலிகளாக மாற்றுவோம். அதன் மூலம் அந்த சமுதாயம் மேலும் நல்லமுறையில் வளர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இண்டர்வியூ பற்றியும்



*1975 மார்ச் 12] [டாக்டர் எச். வி. ஹாண்டே]*

டிஸ்கஸ் செய்தோம். அது முதலமைச்சர் அவர்கள் சொல்வதற்கும், ஏன் இன்னும் சொல்லப் போனால், அண்ணா அவர்கள் சொன்னதற்கும் மேலாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தப் பேட்டியைப் பற்றி அவர்களுடைய வாதம், ஹாண்டே அவர்கள் சொல்வதிலிருந்து, அது ஒரு விவாதத்திற்குரிய பிரச்னையாக இருந்து இருக்கிறது என்பதை நாம் எல்லாம் புரிந்து கொள்ளலாம். (கைதட்டல்) சட்டநாதன் ரிப்போர்ட்டிலே இங்கே தெளிவாகப் பேசினார்கள். அது டாக்டர் ஹாண்டே அவர்கள் கருத்து. அப்போது அவர் எந்தக் கட்சியில் இருந்தார், எந்தக் கட்சி அடிப்படையில் பேசினார் என்று பார்க்க வேண்டும். ஹாண்டே அவர்கள் கருத்து பாராட்டப் பட வேண்டிய கருத்து. இப்போது அவர் இணைந்து இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மிகத் தெளிவாக விளக்கமாகச் சொல்லி இருக்கிறார். இன்று நாட்டிலே எழுந்து இருக்கிற பிரச்னை, சில மேல் ஜாதிக்காரர்கள், வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் குறைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். திறமைக்குத்தான் முதலிடம் என்று சொல்லியிருப்பது, அந்த பிற்பட்ட மக்களுக்கு ஆபத்தாக இருக்கிறது. அதன் காரணமாக இன்று இருக்கும் பின்தங்கிய மக்கள் முன்னுக்கு வர முடியாமல் போய் விடும்.

இங்கே நாம் பிற்பட்ட மக்களுக்காக 25 சதவிகிதம் என்று இருந்ததை 31 சதவிகிதமாக உயர்த்தி இருக்கிறோம். இந்த நேரத்தில் கேள்வி கேட்கிறார்கள். நியூயார்க்கில் இருப்பவர்கள் யார், யார் இருப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் கேட்கிறார்கள், "கல்லூரி அட்மிஷனில் ஜாதிவாரி பிரிவினை காரணமாக திறமை இழந்து விடுகிறோமே" என்று கவலைப்படுகிறார்கள். அதற்கு அழுத்தம் திருத்தமாக அவர் பதில் சொல்கிறார், 'எனது கட்சி பதவி ஏற்குமானால் திறமைக்கு வாய்ப்பு அளிக்கப்படும்'. இதுதான் ஆபத்தானது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் மீண்டும் சொல்கிறேன், . .

**திரு. க. உரொ. எட்மண்ட்:** எங்களுடைய கட்சித் தலைவர் சரியாகத் தான் பதில் சொல்லியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'திறமைக்குத்தான் முதலிடம்'

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1975 மார்ச் 12

கொடுக்கப்படும் என்று அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னதை, திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிற காரணத்தால், நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், 'பிற்பட்ட சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் திறமை அற்றவர்கள்தான் இருக்கிறார்களா அல்லது, திறமையுடையவர்கள் அந்தச் சமுதாயத்தில் இல்லையா' என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குறிப்பாக, இன்று இன்ஜினீரிங் கல்லூரியை எடுத்துக் கொண்டால், அதிலே அட்மிஷன் என்று வருகிற காலத்தில் 31 சதவிகிதம் நாம் ஒதுக்கியிருக்கிறோம். அப்படி ஒதுக்கியிருக்கிற 31 சதவிகிதம் சீட்டிற்கு, படிப்படியாக எண்ணிக்கை வாங்கியவர்களை எடுக்கிறோம். அப்படி எடுக்கிற நேரத்தில் பின் தங்கியவர்கள் என்று வருகிற நேரத்தில், இவ்வளவு மார்க் வாங்கினால் போதும் என்று நிர்ணயித்து, அந்த அடிப்படையில் எடுக்கிறோம். ஆனால் அவர்கள் பேட்டியைப் பார்த்தால், எல்லோரையும் போட்டு குழப்பி, மேல் ஜாதிக் காரர்கள், பிற்பட்ட மக்கள் எல்லோரையும் போட்டு குழப்பி, ஒட்டு மொத்தமாகப் போட்டு, அட்மிஷன் தருவார்கள் என்பது போல் இருக்கிறது. பின்தங்கிய மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கு இது வழியாகாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எம்.ஜி.ஆர். அவர்கள் பேக்வார்ட் கிளாசஸ் இத்தனை சதவிகிதம் இப்போது ஒதுக்கப் பட்டிருக்கிறதை உயர்த்துவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் டிரெயினிங் கொடுத்து, அவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி கொடுத்து. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தவறாகச் சொல்லக் கூடாது. அவர்களுடைய பேட்டியில், தாழ்த்தப்பட்டவர் களுக்குத்தான் தனிப் பயிற்சியும் தனிப் பணமும் செலவிடப்படும் என்று சொல்லியிருக்கிறார். கேள்வி, "கல்லூரி அட்மிஷனில் ஜாதிவாரி பிரிவினை காரணமாக திறமை இழந்து விடுகிறோமே, எதிர்காலத் தமிழ் நாட்டிற்கு இது நல்லதா?" அதற்குப் பதில், "எனது கட்சி பதவி ஏற்குமானால் திறமைக்குத்தான் முதலிடம். தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்ற தனிப் பயிற்சியும், அதற்குத்



1975 மார்ச் 12] [டாக்டர் மு. கருணாநிதி]

தனிப் பணமும் செலவிடப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதே ஒதுக்கப்படுகிறது. புதிதாக ஒதுக்க வேண்டிய தேவையில்லை. 31 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறோம். அதற்கு மேல் உயர்த்த முடியாது. அரசியல் சட்டத்திற்குட்பட்டு 25 சதவிகிதம் என்று இருந்ததை 31 சதவிகிதம் என்று உயர்த்தியிருக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் அப்போதே சொன்னேன், நிர்மாண சட்டத்தின் அடிப்படையில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்வோம் என்று சொன்னேன். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் இருந்து அவர்களுக்கு செல்வாக்கு இல்லையென்றாலும், அவர்களுடைய திறமையின் அடிப்படையில் எடுப்போம் என்று சொன்னார்கள். அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். 31 சதவிகிதத்திற்கு மேல் ஒதுக்க முடியும் என்றாலும் ஒதுக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் குறைப்போம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** டாக்டர் ஹாண்டே அவர்கள் அவருடைய தலைவரைக் காப்பாற்ற கஷ்டப்படுகிறார் என்பது நன்றாகப் புரிகிறது. விஷயம் வெளியே வந்தால் என்ன ஆகுமோ என்று பயப்படுகிறார். இன்று தமிழ் நாட்டில் இருக்கும் பெரிய போராட்டம், தகுதி அடிப்படையா, வகுப்புவாரி அடிப் படையா என்பதாகும். அந்தப் போராட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் வகுப்புவாரி அடிப்படை என்ற அணியில் தான் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள் கிறேன். (கைதட்டல்) தகுதி அடிப்படை என்பது மாய்மாலம். தகுதி அடிப்படையில் என்றால் நாட்டிலே இருக்கும் பின்தங்கிய மக்களுக்கு எதிர்காலத்தில் ஒரு பயங்கரமான நிலை இருக்கிறது. பின்தங்கிய மக்களை முன்னேற்றத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் இங்கே ஒரு வேண்டு கோளாக, ஒரு சேலஞ்சாகக் கூடச் சொல்கிறேன், பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு அன்று திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா வகைகளிலும் தற்போது செய்வதை விட ஜாஸ்தியாகச் செய்யும் இதை சவாலாகச் சொல்கிறேன்.

[1975 மார்ச் 12

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களுடைய தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறுகிற கூற்றுக்கு முற்றிலும் மாறுபட்ட கூற்றைச் சொல்கிறீர்கள். உங்களுடைய அறிவுத் தெளிவை நான் பாராட்டுகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** இங்கே சட்டமன்றத்திலே இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் கொள்கையிலே தனி வாதம் நடத்தி கொண்டு இருந்தார்கள். இந்த இரண்டு கட்சிகள்தான் இங்கே இருக்கிறதா? மற்ற கட்சிகளும் இந்த தனி வாதத்தில் கலந்து கொள்ளலாமா?

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** மோதல் ஏற்பட்டு முடிந்து விட்டது, அதைத் திருப்பிக் கிளப்ப வேண்டாம்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவை துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று பிற்பட்டோர் நலத்துறை மானியத்தின் வாயிலாக பல்வேறு சலுகைகளை பிற்பட்டோர் சமுதாயத்தினருக்கு இந்த அரசு செய்து வருகிறது. இந்த மானியத்தின் வாயிலாக நல்ல திட்டங்களை வகுத்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பட்டோருக்குச் சலுகை அளிப்பது எந்த அடிப்படையில் என்பது பற்றிய விவாதம் எழுந்தது. பொருளாதார அடிப் படையிலா, சமுதாயத்தின் அடிப்படையிலா, என்று விவாதம் வந்தது. சோசியல் பேக்வார்ட்நஸ் என்பது சமுதாயத்தின் அடிப்படையில் மட்டுமல்ல, பொருளாதார அடிப்படையில் மட்டு மல்ல, இன்று நாட்டிலே ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சீர்குலைவிற்குப் பின்பும், சமுதாயத்திலே சில பிரிவினர்கள் இன்று பின்வாங்கிவிட்ட பிறகும், பிற்பட்டவர்கள் என்று சொல்ல சில பாரம்பரிய வரலாறுகள், பின்னணிகள் அவற்றிற்கு உண்டு.



1975 மார்ச் 12] [திரு. எம். ஏ. லத்தீப்]

இந்த வரலாற்று பின் அணியின் அடிப்படையிலும் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக நம் சமுதாயத்தில் கடைபிடித்து வந்த சமய சமுதாயப் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்டு விட்ட சூழ்நிலையின் அடிப்படையிலும் இந்தச் சூழ்நிலையினால் ஏற்பட்டுவிட்ட சிக்கல்களின் அடிப்படையிலும் பின்தங்கிவிட்ட சமுதாயத்தை நாம் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகிறதே தவிர பொருளாதாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்பட வேண்டும் என்றால் வாதத்திற்கு அது ஒரு கருத்தாக ஏற்றுக் கொள்ளலாம்.

அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லக் கூடியவர்கள் இந்த நாட்டின் பாரம்பரியத்தை உணராதவர்கள் தான் அப்படிச் சொல்ல முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொருளாதார அடிப்படையில் தகுதி அடிப்படையில் திறமை அடிப்படையில் தான் பிற்படுத்தப்பட்ட பகுதியினருக்குச் சலுகைகள் அளிக்க வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள் என்றால் அதைக் கண்டு கோபமோ ஆச்சரியமோ அடையத் தேவை இல்லை. தமிழ் நாட்டின் பாரம்பரியத்தை, தமிழ் நாட்டின் வரலாற்றை, தமிழ்நாட்டின் மரபை, அறிந்தவர்களாக இருப்பவர்கள் இப்படி நிச்சயமாகச் சொல்ல மாட்டார்கள். தமிழ் மரபையும் வரலாற்றையும் தெரியாதவர்கள் யாராவது அப்படிச் சொல்லுவார்கள். அவர்கள் சொல்வதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் அறியாதவர்கள்; அப்படித்தான் சொல்லுவார்கள். அதைப்பற்றிக் கவலையில்லை.

இந்த பிற்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்தைப் பற்றி பேசுகின்ற நான் குறிப்பாக நான் சார்ந்திருக்கிற சமுதாயத்தைப் பற்றி பேசக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழ் நாட்டில் இருக்கிற உருது பேசும் முஸ்லிம்களும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் இடம் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்த போது இந்த ஆட்சி பரிவோடு கவனித்து பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தார்கள். அதற்காக அந்தச் சமுதாயத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆனால் அதே சமயத்தில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்த பிறகு எந்தச் சமுதாயத்திற்கு இந்தச் சலுகை கிடைக்க வேண்டும் என்று கருதப்பட்டதோ அல்லது எந்தச் சாராருக்கு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 12

இது கிடைக்க செய்யப்பட்டதோ அந்தச் சாரார் பெற்ற பயன் அதிகமாகி இருக்கிறதா என்றால் இல்லை. பயன் அடிப்படையில் உயராதது மட்டும்அல்ல. ஏற்கனவே பெற்றிருந்த அளவு கூட அவர்களால் பயன் பெற முடியவில்லை. இன்றைக்கு அரசு அறிவித்து இருக்கிறது உருது பேசும் முஸ்லீம்கள் இந்தச் சலுகைகளைப் பெற தகுதி உள்ளவர்கள் என்று. ஆனால் கீழே இருக்கிற தாசில்தார்கள் தக்கனி முஸ்லீம்கள் யார் லப்பை முஸ்லீம்கள் யார் என்ற பிரச்னையைக் கொண்டு வந்து பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு முன்பு எவ்வளவு சலுகை பெற்றிருந்து வந்தார்களோ அதை விடக் குறைவான அடிப்படையில் தான் சலுகைகள் பெறக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதுதான் எனக்குத் தெரியாமல் இருக்கிறது.

உருது பேசுகின்ற முஸ்லீம்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று அறிவிப்பு வந்த பிறகு அதற்கு முன்பு எவ்வளவு சலுகைகளைப் பெற்றோம் இந்த அறிவிப்பு வந்ததற்கு முன்னால் எவ்வளவு சலுகைகளைப் பெற்றோம் என்ற புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால் உருது பேசுகின்ற முஸ்லீம்கள் பட்டியலில் சேர்க்கப்பட்ட பிறகு மிகக் கீழான அளவுக்கு மிக குறைந்த அளவுக்குத்தான் சலுகைகளை பெற்று இருக்கிறார்கள் என்பதை பார்க்க முடியும். தாசில்தாரும் மற்றவர்களும் அத்தாட்சி பத்திரத்திற்குச் சென்றால் பலவிதமான சிக்கல்களை ஏற்படுத்துகிறார்கள்.

இந்த நாட்டில் பாரம்பரியத்தைப் பற்றிச் சொன்னேன் அல்லவா. அந்த அடிப்படையில் பல சமுதாய சமூக பின் அணிகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட மனப் பக்குவத்தையும் மன நிலையையும் வைத்திருக்கிற அதிகாரிகள் பெரும் அளவு இருக்கிற காரணத்தால் முஸ்லீம் சமுதாயம் முன்னேற அரசு செய்கிற இந்த நல்ல காரியத்தில் கூட பயன் அடைய முடியாத சூழ்நிலையைக் காண்கிறோம்.

அப்படிப்பட்ட பாரம்பரியத்தை அகற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும்? புள்ளி விவரங்களை எடுத்துப் பார்க்க வேண்டும். அப்படி புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால் இந்தச் சமுதாயம் எந்த அளவுக்கு வேதனையைத் தாங்க



1975 மார்ச் 12] [திரு. எம். ஏ. லத்தீப்]

வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். உருது மொழி பேசுகின்ற முஸ்லீம்கள் யார், தக்கனி முஸ்லீம்கள் யார் என்றெல்லாம் இங்கே முன்பு ஒரு முறை தெளிவான விளக்கத்தை தந்திருக்கிறேன். சட்டம் தடங்கலாக இருக்கிறது என்று சட்டமே தெரியாத அதிகாரிகள் சொன்னார்கள். யார் உருது மொழி பேசுகிறார்களோ அவர்கள் தக்கனி முஸ்லீம்கள், யார் தமிழ் பேசுகிறார்களோ அவர்கள் லப்பை முஸ்லீம்கள் என்று விளக்கமாக சொல்லி இருக்கிறேன். முன்பு சொன்னோம்

'Those who speak habitually the Tamil language and their descendants are to be considered as Labbais''

அடுத்து

'Those who speak habitually the Urdu language and their descendants other than Khojas and Horas'.

என்று சொன்னோம். ஹோரா, ஹோஜா என்ற வகுப்பினரை தவிர்த்து மற்ற யார் யார் உருது மொழி பேசுகிறார்களோ அவர்கள் எல்லாம் தக்கனி முஸ்லிம்கள் என்று சொன்னோம். இந்தத் தாசில்தார்கள் இதைக் கேட்காமல் மக்கள் அரசாங்கத்தின் மீது கெட்ட உணர்ச்சி ஏற்படுகிற வகையில் அதிகாரிகள், தாசில்தார்கள் நடந்து கொள்ளுகிறார்கள். ஜீ.ஓ. திருத்தப்பட்ட பிறகும் இந்த நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டை இந்த இடத்தில் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகளைப்பற்றி மெத்த மகிழ்ச்சி அடைகிறோம். அவர்கள் பல ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட நிலையிலேயே இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று நாமும் சொல்லுகிறோம்.

ஆனால் அதே நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பிற்பட்டோர் பட்டியலில் உள்ள மக்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது? மத்திய அரசு 3 கோடி தான் முழுமையாகக் கொடுத்து இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சேர்ந்து மூன்று கோடி ரூபாய் தான் கொடுத்து இருக்கிறது. ஆனால் மாநில அரசு அதற்கு மேலாக தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் 3 கோடி கொடுத்து விட்டு அத்தோடு மீண்டும் ஒரு கோடி அதாவது

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 12

97 லட்சத்தைக் கொடுத்து தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பல சலுகைகளையும் கொடுக்க தமிழக அரசு முன் வந்திருக்கிறது. மத்திய அரசு கொடுத்த 3 கோடியையும் சேர்த்து மொத்தமாக தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுத்து விட்டு அதற்கு மேலாக ஒரு கோடி செலவழிக்க இந்த மானியத்தில் இடமளித்து இருக்கிறது. ஆனால், இதே பட்ஜெட்டின் வாயிலாக சிலர் பேசும் போது தாழ்த்தப்பட்டோருக்குக் குறைவாகத் தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். தாழ்த்தப்பட்டோருக்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதே சமயத்தில் இந்த நாட்டில் உள்ள பிற்பட்ட ஜாதியினருக்காக 64 லட்சம் ரூபாய் மட்டுமே . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திட்டச் செலவு தான் 64 லட்சம். திட்டத்தில் சேராத செலவைச் சேர்த்தால் மொத்தம் 5 கோடிக்கு மேல் வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: அதைத்தான் சுட்டிக் காட்டுகிறேன். திட்டச் செலவு 64 லட்சம். இது disproportionate ஆக இருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கு 4 கோடி ஒதுக்கியதைப் போல பிற்படுத்தப்பட்டோருக்கும் 4 கோடி என்ற அளவில் ஒதுக்கி இருந்தால் நாம் மகிழ்ச்சி அடைந்திருப்போம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பிற்பட்டோர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக பரிந்துரைகள் வழங்க ஒரு குழுவை ஒரு கமிஷனை அரசு நியமித்து இருக்கிறது. சென்ற ஆண்டு கூட இந்த மானிய அறிக்கையில் பார்த்தோம். அது திருத்தி அமைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதிலேயும் முக்கியமான மைனாரிட்டியாக உள்ள முஸ்லீம் களுக்கு இடம் அளிக்கப்படவில்லை. பிரதிநிதித்துவம் தரப்பட வில்லை. சென்ற ஆண்டிலும் இல்லை இந்த ஆண்டிலும் இல்லை. 6 மாதத்திற்கு ஒரு தடவை இது கூடுகிறது. இதில் இடம் அளிக்கப்படவில்லை என்பதை எந்த அளவு உதாசீனப்படுத்தப் பட்டிருக்கிறோம் என்பதை குற்றச்சாட்டாக இல்லாவிட்டாலும் இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



1975 மார்ச் 12] [திரு. எம். ஏ. லத்தீப்]

(நண்பகல் 12.00)

அதேநேரத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்குத் தாழ்த்தப் பட்ட மக்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறோம், வீட்டு மனைகளுக்காகவும், சாகுபடிக்காகவும் நாம் நிலம் ஆர்ஜிதம் செய்கிறோம். அப்படி நில ஆர்ஜிதம் செய்யும்போது யாருடைய நிலங்களை அதிகமாக ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள் என்பதை மாவட்ட வாரியாகப் புள்ளிவிபரங்கள் எடுத்துப் பார்த்தால் தெரியும். எங்கள் மாவட்டத்தைப் பற்றி மட்டும் நான் சொல்கிறேன். அங்குள்ள நிலைமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் அரிசனங்களுக்காக எவ்வளவு நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறீர்கள் என்று பாருங்கள். ஆர்ஜிதம் செய்த நிலங்களில் 70 சதவிகிதம் சிறுபான்மை சமுதாயமான முஸ்லீம் மக்களுடைய நிலங்கள்தான். சிறுபான்மை சமுதாயமாக இருக்கக்கூடிய முஸ்லீம் மக்களுடைய நிலங்களைத் தான் 70 சதவிகிதம் ஆர்ஜிதம் செய்திருக்கிறீர்கள் என்பதை ஒரு குற்றச்சாட்டாக இந்த மன்றத்திலே நான் தெரிவிக்கிறேன்.

திரு. நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலை இந்த மன்றத்திற்குத் தருகிறார்கள். 70 சதவிகிதத்திற்குமேல் முஸ்லீம் மக்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்துவிட்டார்கள் என்று திரு. லத்தீப் அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மைக்குப் புறம்பானது. காரணம், அந்த மாவட்டத்தில் இருக்கிற மக்கள் தொகையில் 15 சதவிகிதம்தான் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களை 70 சதவிகிதம் எடுத்துவிட்டார்கள் என்பது உண்மைக்குப் புறம்பானது. என்னுடைய ஆர்க்காடு தொகுதியைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், அரிசனங்களுக்காக எடுக்கப் பட்ட நிலத்தில் ஒரு சென்ட் நிலம் கூட முஸ்லீம்களிடமிருந்து எடுக்கப்படவில்லை. எல்லாம் வன்னியர்கள் அல்லது மற்ற பிற்பட்ட மக்களிடமிருந்து எடுக்கப்பட்ட நிலம் தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 15 சதவிகிதம்தான் முஸ்லீம்கள் இருக்கிறார்கள் என்றால் அது 70 சதவிகிதம் என்று வராமல் போய்விடாது. 15 சதவிகிதம் மக்களிடமிருந்து 70 சதவிகிதம் நிலம் எடுக்கப்பட்டது என்று சொல்லலாம். திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக முஸ்லீம்கள் 70 சதவிகிதம் நிலத்தை விட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்று அமைத்துச் சொன்னால் நல்லதாக இருக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : எங்களுக்கு அந்த அளவுக்கு நிலம் இருந்தால் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இப்பேர்ப்பட்ட நல்ல காரியங்களுக்கு நாங்கள் எப்போதும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இப்போது எடுக்கப்பட்டிருக்கிற நிலங்கள் யாருடையது என்று பார்த்தால் பெரும்பாலும் விதவைகள். விதவைகளாக இருப்பவர்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். வேறு வருமானம் இல்லாமல், அந்த நிலத்திலிருந்துதான் ஜீவனம் நடத்த வேண்டுமென்ற நிலையிலிருப்பவர்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அனாதைகளாக இருக்கக்கூடியவர்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். அதிகாரிகளிடத்திலும் மற்றவர்களிடத்திலும் பல முறை எடுத்துச் சொல்லிய பிறகுதான் இன்றைக்கு இந்த மன்றத்தில் அதைப்பற்றிச் சொல்கிறேன்.

திரு. வீராசாமி அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். தயவுசெய்து புள்ளிவிபரங்களுக்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். புள்ளிவிபரம் கேட்டால் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன், அறுதியாகச் சொல்கிறேன். திரு. வீராசாமி அவர்களுடைய தொகுதியில் நிலம் சொல்கிறேன், 70 சதவிகிதம் நிலங்களை முஸ்லீம்களிடமிருந்து ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள் என்பதை ஒரு குற்றச்சாட்டாகவே சொல்கிறேன். வீராசாமி அவர்களுடைய தொகுதியில் நிலம் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். உங்கள் தொகுதியில் நிலம் வைத்துக் கொள்ள முஸ்லீம்களை எங்கே விட்டு வைத்தீர்கள் ? ஒருவரிடம் கூட நிலம் இல்லையே.



மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : எங்கெங்கு அரிசனங்களுக்கு இடம் கொடுக்க, நிலம் ஆர்ஜிதம் செய்ய வழிவகை இருக்கிறதோ அங்கெல்லாம் எடுத்துக் கொள்வது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அது யாருடைய நிலம், எந்த ஜாதியினர் நிலம், எந்த மதத்தவர் நிலம் என்று பார்ப்பதில்லை. சில இடங்களில் அரிசனங்கள் நிலத்தைக் கூட எடுத்திருக்கிறார்கள். உச்சவரம்பு சட்டத்தின்படி கூட அல்லாமல், 5 எக்கருக்கு மேல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவருடைய நிலம் இருந்தால், அந்த இடம்தான் அரிசனங்களுக்கு ஆர்ஜிதம் செய்ய ஏற்ற இடம் என்று தெரிந்தால் அதையும் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். ஆகவே, நில ஆர்ஜிதம் செய்யும்போது, ஜாதி, மதம் பார்ப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஜாதி, மதம் பார்த்து நிலம் ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்பதுதான் எங்களுடைய கொள்கை. ஆனால் எங்களுடைய மாவட்டத்தைப் பார்த்தால் ஜாதி, மதம் பார்த்து எடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும்; வேண்டாமென்று சொல்லவில்லை. அவர்களுக்கு வசதியான இடத்தில் இடம் கொடுக்க வேண்டும்; ஒப்புக்கொள்கிறேன். அதை ஜாதி, மதம் பார்த்து எடுக்கக் கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

சிறுபான்மை மக்களாகிய முஸ்லீம் மக்களுடைய இடுகாடு இருக்கிறது; தர்கா இருக்கிறது. இடுகாடு, தர்கா நிலங்களை எல்லாம் இன்றைக்கு ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் கூட எடுத்திருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் பல பகுதிகளில் அப்படிப்பட்ட நிலங்களை எடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக இன்றைக்கு கிராமப் பகுதிகளிலே முஸ்லீம் மக்கள் நிலம் வைத்துக் கொள்ள முடியவில்லை. இடுகாடு, தர்காவுக்கு நிலம் இல்லை. எல்லா நிலத்தையும் விட்டுவிட்டார்கள். எனக்கும் என்னுடைய மாமனாருக்கும் கூட சண்டை மூட்டிவிட்டார்கள். அவர்களுக்கு இருந்தது 3 எக்கர் நிலம். அதை. . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, திரு. லத்தீப் அவர்களுக்கும் அவருடைய மாமனுருக்கும் உள்ள சண்டையை இந்த மன்றத்தில் சொல்ல வேண்டாமென்று அருள்கூர்ந்து தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : வடார்க்காடு மாவட்டத்தில் எடுக்கப்பட்ட நிலம் பற்றி 3 ஆண்டு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 3 ஆண்டுகளில் யார் யாருக்குச் சொந்தமான நிலத்தை, எந்த மதத்தினருக்குச் சொந்தமான நிலத்தை எடுத்திருக்கிறார்கள் என்ற கணக்கை எல்லாம் கொடுக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விட்டுவிட்டு, பொதுவான கருத்துக்களைச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அதை நாங்கள் நம்புகிறோம். இருந்தபோதிலும் சிறுபான்மை சமுதாயத்தினருக்கு முஸ்லீம் மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்படக் கூடாது; அவர்கள் மனக் கஷ்டமடையாமல் நடந்துகொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் எவ்வளவோ நன்மைகள் செய்து கொண்டிருக்கிறது. முஸ்லீம்களுக்கு அதிகமாக நிலம் இருந்தால் அரிசனங்களுக்கு விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அரிசனங்களுக்கு இந்த ஆட்சி என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறதோ அதற்கு நாங்கள் முழு ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம்.

இந்த அரசாங்கத்தினுடைய எண்ணம் எங்களுக்குப் புரிந்திருக்கிறது. உங்களுடைய நோக்கம் எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. அதற்கு எங்களுடைய ஒத்துழைப்பு என்றைக்கும் இருக்கும். இருந்தாலும், அதிகாரிகள் அதைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். அதனால் ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன. ஆகவே நான் இப்படிப்பட்ட அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொள்வதற்காகவே, இப்படிப்பட்ட காரியங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.





அதேநேரத்தில் மாவட்ட வாரியாக சிறுபான்மை மக்களாகிய முஸ்லீம்களில் எத்தனை பேர்களுக்கு இத்தகைய உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற கணக்கையும் பார்க்க வேண்டும். எத்தனை பேருக்கு சாகுபடி நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது, எத்தனை பேருக்கு வீட்டு மனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று மாவட்ட வாரியாகப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது யாரோ சில தோல் வியாபாரிகளையும், சில பீடி வியாபாரிகளையும் பார்த்துவிட்டு, அவர்கள் எல்லாம் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற முஸ்லீம்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்த்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர்களுக்கும் அது தெரியும். அவர்கள் மிக மிக பின்தங்கிய நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கும் முஸ்லீம்களுக்கும் விகிதாச்சார அடிப்படையில் சலுகைகள் செய்து கொடுங்கள். சலுகைகள் வேண்டுமென்று கேட்கும்போது நூற்றுக்கு நூறு வேண்டுமென்று கேட்கவில்லை. 8 சதவிகிதம், 10 சதவிகிதம் இருந்தால் எங்களுக்கு 8 சதவிகிதம் கொடுங்கள், போதும். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். 10 சதவிகிதம் இருந்தால் 8 சதவிகிதம் கொடுத்தால் கூட நாங்கள் மன நிறைவோடு ஏற்றுக் கொள்கிறோம். இன்றைக்கு மாவட்ட வாரியாகப் பார்த்தால் சாகுபடி நிலம் ஒதுக்குவதிலும், வீட்டு மனை நிலம் ஒதுக்குவதிலும் இந்த விகிதாச்சாரம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பார்த்தாலும் அப்படித்தான் இருக்கிறது. ஒரு காலத்தில் எங்களுக்கு வேறு கல்லூரியில் இடம் கிடைக்காது; படிக்க வசதி இல்லை. இன்றைக்கு படித்திருக்கிறோம். தியாகம் செய்து படித்திருக்கிறோம். அன்றைக்கு எங்களுக்கு 'மகமடன் கல்லூரி' ஒன்றுதான் இருந்தது. அப்போதிருந்த காருண்யமிக்க அரசாங்கம் இவர்களுக்கு என் மகமடன் கல்லூரி என்று அதையும் எடுத்து விட்டது. அந்தக் குறையை இன்றைக்கு இந்த அரசு தீர்த்து வைத்திருக்கிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். செய்த நன்றியை நாங்கள் ஒருகாலத்திலும் மறக்க மாட்டோம். நல்லதை செய்தவர்களை உயிர் கொடுத்தும் காப்போம்; ஊன்

உறக்கமின்றி இரவு பகல் என்று பாராமல் தோள் கொடுப்போம்; உயிர் கொடுக்கத் தயங்க மாட்டோம். நீங்கள் செய்கின்ற நல்லவற்றைப் பாராட்டி, கடைசி வரையில் உங்களுக்கு உதவியாக இருப்போம்.

எங்களுடைய நல்லெண்ணத்திற்கு ஒன்றை மட்டும் உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். சிறுபான்மை முஸ்லீம்கள் சார்பில் 12, 13 கல்லூரிகள் நடைபெறுகின்றன. அங்கெல்லாம் குறைந்த அளவில்தான் முஸ்லீம்கள் படிக்கிறார்கள். பெரும்பாலும் இதர சமுதாயத்தினர்—இந்துக்கள், கிறிஸ்தவர்கள் எல்லாம் படிக்கிறார்கள்.

வாணியம்பாடியை மட்டும் எடுத்துக் கொண்டாலும் அங்கே 30 சதவிகிதம் தான் முஸ்லீம்கள் படிக்கிறார்கள். இங்கே இருக்கிற புதுக் கல்லூரியை எடுத்துக் கொண்டால் 15 சதவிகிதம் தான் படிக்கிறார்கள். எங்களுடைய தர்மத்தால், உழைப்பால் மற்றவர்களும் படிக்க உதவுகிறோம். மற்றவர்களுக்கு நாங்கள் உதவுகிற அதே நேரத்தில் அரசாங்கச் சலுகைகளையும் பெறக்கூடிய நிலையில் இருக்கிறோம். அதையெல்லாம் கவனித்து எங்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் சலுகைகள் அளிக்க வேண்டும்.

பப்ளிக் அப்பாயின்ட்மென்டில் எங்களுக்குப் போதுமான அளவு இடம் கிடைக்கவில்லை. இப்படிச் சொல்லும்போது கோர்ட்டிலே கொடுத்திருக்கிறோம், சர்வீஸ் கமிஷனில் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படி அதைக் கொடுத்தோம், இதைக் கொடுத்தோம் என்று "ஷோபீஸ்" என்று காட்டுவதுதான் எங்களுக்கு மன வருத்தத்தைக் கொடுக்கிறது. வேலை வாங்கிக் கொடுங்கள், வேலை வாங்கிக் கொடுங்கள் என்று இரவு பகலாக என்னுடைய வீட்டிலே கூட்டம் கூட்டமாக வந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்வதற்கே நேரம் போதவில்லை. இரவு பகல் என்று பாராமல் மக்கள் குறைகளைக் கேட்பதால் என் உடல் கூட கெட்டுவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் 20 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.



**திரு. எம். ஏ. லத்தீப்** : இன்னும் கொஞ்சம் நேரம் கூட்டிக் கொடுங்கள். பாயின்ட், பாயின்ட்டாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். சுருக்கமாகத் தான் ஒன்றன் பின் ஒன்றாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

ஏதோ ஓரிருவருக்குக் கொடுத்துவிட்டு, முஸ்லீம்களுக்கு அது கொடுத்தோம், இது கொடுத்தோம் என்று சொல்லிக் கொள்வதில் பயனில்லை. இந்திரமல் ஹோத்ரா என்ற அறிஞர் ஒருமுறை 'இல்லஸ்ட்ரேட் வீக்லி' யில் ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். சென்ட்ரல் செக்ரெட்டேரியேட்டில் 9,500 பேர் வேலை செய்கிறார்கள். அவர்களில் முஸ்லீம்களின் எண்ணிக்கை 21 தான். அவ்வளவு தயாள சிந்தனை உள்ளவர்கள் அங்கே இருந்து இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

மாநில அரசின் நிலைமை என்ன என்று கேட்கலாம். இங்கே நல்லவர்கள் ஆளுகிறார்கள். ஆளுகின்றவர்களைப் பற்றி ஒன்றும் குறை இல்லை. ஆனால், ஒன்றை நான் சொல்கிறேன். நாம் திட்டங்களைத் தீட்டி அவற்றை யாரைக் கருவியாகக் கொண்டு நிறைவேற்ற முற்படுகிறோமோ அந்தக் கருவிகளாக கீழே உள்ள அதிகாரிகள் தான் இந்தச் சமுதாயத்திற்கு உதவிகரமாக இல்லை. எங்களுக்குச் சேர வேண்டிய விகிதாசார அடிப்படையில் இன்னும் சேர வேண்டியது அதிகமாக இருந்து வருகிறது. அதில் இந்த அரசாங்கம் தன் கவனத்தைக் கொஞ்சம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

Mr. DEPUTY SPEAKER: I now call Thiru Palanivelan to speak.

Thiru M. A. LATHEEF: Sir, I am pleading with you to allow me some more time.

Mr. DEPUTY SPEAKER: I can't allow. The hon. Member has already taken more than 22 minutes. If hon. Members do not co-operate with me but want to go on speaking, what can we do? How can we control the proceedings? Still ten members have to speak and the Hon. Minister has to reply. Where is the time?

THIRU M. A. LATHEEF : I am always co-operating with the Chair. But at the same time I have to co-operate for the cause for which I have come here.

MR. DEPUTY SPEAKER : All right. The hon. Member can take whatever time he wants.

**திரு. எம். ஏ. லத்தீப் :** போலீஸ் துறையைப் பொறுத்த வரையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் அந்தத் துறையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸ் துறையிலும் முஸ்லிம் மைனாரிட்டியினருக்கு அளிக்க வேண்டிய விகிதாசார அடிப்படையில் முஸ்லிம்களைச் சேர்க்க வேண்டும். இப்படி இந்தப் போலீஸ் துறையில் எல்லா மாவட்டங்களிலும் முஸ்லிம்களைப் போடுவது மிகவும் நல்லதாகக் கூட இருக்கும். காரணம், இந்தத் துறையினிடத்தில் இன்றைக்கு எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

அடுத்து, மானியங்களை ஒதுக்குகிறபோது அந்த மானியங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறதா, மத்திய அரசு கொடுக்கின்ற பணம் பூராவையும் செலவழித்துக் கொள்கிறோமா, அல்லது திருப்பிவிடப்படுகிறதா என்பதை முழுமையாக ஆராய வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்த இலாக்காவைப பொறுத்தவரையில் மத்திய அரசு எங்கும் வருவதில்லை. அவர்கள எதுவும் பணம் கொடுப்பதில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பின்தங்கியவர்கள் நலனுக்காக தொழில்களுக்கு என்று நாம் பலதரப்பட்ட தொழில்களின் அடிப்படையில் நிதி ஒதுக்குகிறோம். அது சரியான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்பதை ரெவ்யூ எடுக்க வேண்டும்.

பர்மா, சிலோனில் இருந்து வந்துள்ள அகதிகள் இன்றைக்கு பரிதாப நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். தெருவில் கடைகளை வைத்துக் கொண்டு நித்ய கண்டம் என்ற அடிப்படையில் இருந்து





கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் அன்றைக்கே கேட்டேன். மைனாரிட்டீஸ் இன்டரெஸ்டுகளைப் ப்ரொடெக்ட் செய்ய ஒரு தனி டைரெக்டரேட்டையே இந்த அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். அந்தமாதிரி ஏற்படுத்தினால்தான் அவர்கள் அவ்வப்போது சிறுபான்மை வகுப்பினர்களைப் பற்றிய பல ஆய்வுகளை செய்வதற்கு வழியேற்படும். அவர்களது குறைகளை உடனுக்குடன் களைவதற்கும் முடியும். அப்படி தனியாக ஒரு டைரெக்ட்ரேட்டையே ஏற்படுத்த முடியாது என்றாலும் உடனடியாக செக்ரடரி ஃபர் சோஷல் வெல்பாரின் கீழ் டெபுடி செக்ரடரி ஃபர் மைனாரிட்டீஸ் என்றாவது உடனடியாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லி இந்த மானியத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

### (5) விளக்கம் கோரல்

### அரசியல் நிர்ணயச் சட்டத்தை குறைகூறிப் பேசுவது குறித்து

THIRU R. PONNAPPA NADAR : Sir, I want to have a clarification from the Chair. The other day Thiru K. T. K. Tangamani rose on a point of order stating how far we can criticise the Constitution in this House. You had been in the Chair at the time of discussion. When the point was raised, the Hon. Speaker was pleased to say that ruling would be given within a couple of days. Now that the Deputy Speaker is in the Chair, it would be better if you could give a revised ruling on that point; You had previously said that we could criticise the constitution in this House. I would like to have your clarification on this point.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அன்றையதினம் அவையில் எழுந்த பிரச்சினை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட பின்னர் அதைப்பற்றிப் பேசலாமா என்பது. அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பற்றி எதை வேண்டுமானாலும் பேசலாம், எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்ற அடிப்படையில் நான் சொன்னேன்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1975 மார்ச் 12

அதற்குப் பிறகு திரு. எம். ஆர். கண்ணன் அவர்கள் பேசும் போது நீங்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றுதான் சொல்லிவிட்டீர்களே என்ற முறையில் குறிப்பிட்டபோது நாம் நம்முடைய மன்றத்திற்காக சில விதிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம், இந்த விதிமுறைகளுக்குட்பட்டே அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று அன்றைக்குச் சொன்னேன்.

அதே அடிப்படையில்தான் இன்றையதினமும் சொல்கிறேன். முன்பு திரு. அனந்தசயனம் அவர்கள் சொல்லும்போது அரசியல் அமைப்புச் சட்டம் 194 பிரிவுப்படி அப்சல்யூட் ஃப்ரீடம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றார்கள். ஆனால் அதற்கு ஒரே ஒரு கட்டுப்பாட்டை அரசியல் சட்டத்தில் வைத்திருக்கிறார்கள். பிரிவு 211 இன் கீழ் உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பற்றியோ, உயர்நீதிமன்ற நீதிபதியைப் பற்றியோ—நீதிமன்றங்களின் செயல்முறைகளைப் பற்றியோ பேசக் கூடாது என்ற கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார்கள். அதுபோல அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதித்துள்ள கட்டுப்பாட்டை வைத்து தான் நாமும் நம்முடைய விதிமுறைகளில் சில கட்டுப்பாடுகளை இதுபற்றி வைத்திருக்கிறோம். நம்முடைய விதிமுறைகளுக்கு உட்பட்டே நாம் அதைப்பற்றிப் பேச வேண்டும். இதைத்தான் அன்றைக்கும் சொன்னேன். வேறு இதில் எந்த விளக்கமும் தேவையில்லை. இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

(4) 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிநிலைக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **திரு. வி. பழனிவேலு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட நலத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைச் சொல்லுகின்றேன்.

இன்று நமது டாக்டர் கலைஞர் அரசு பிற்பட்ட நலத் துறைக்காக ஐந்து கோடியே எழுபத்தெட்டு லட்சம் ரூபாய் சொச்சம் ஒதுக்கியிருக்கிறது. 1969 ஆம் ஆண்டிலேயே இதற் கென்று தனித் துறையையே போட்டு, ஒரு அமைச்சரவைப் போட்டிருக்கிறது. இதன்மூலம் பிற்பட்ட சமூகத்தினர்களுக்கு பல நல்ல காரியங்களைச் செய்து வருவதைப் பாராட்டுகிறேன்.



1975 மார்ச் 12] [திரு. வி. பழனிவேலு]

பிற்பட்ட சமுதாயத்தினர்கள் முன்னுக்கு வர வேண்டுமென்ப தற்காக பள்ளியிலும், கல்லூரியிலும் அந்தச் சமுதாய மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். அதற் காகவும் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அதோடு இந்த மாணவர்களுக்காக இல்லங்கள் அங்கங்கே அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதையும் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஆத்தூர் வட்டாரத்தில் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இல்லங்களே இல்லை. அது மிகமிகப் பின்தங்கிய இடம். அங்கே. இத்தகைய மாணவ இல்லத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கொங்கு வேளாளர், நாட்டு வேளாளர், பவளக் கட்டி வேளாளர் என்று மிகவும் பின்தங்கிய மக்கள் 45 லட்சத் திற்கும் அதிகமானவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, தென்னாற்காடு ஆகிய இந்த மாவட்டங் களில் அவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்த வர்கள் தமிழகத்தின் மொத்த ஜனத்தொகை நாலரை கோடியில் 15½ சதவிகிதமாவது இருப்பார்கள். அவர்களையும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

நாட்டு கொங்கு வேளாளர்களையெல்லாம் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும்போது இந்தக் கொங்கு வேளா ளர்களை மட்டும் சேர்க்கப்படாமல் விட்டுவிட்டதற்குக் காரணம் என்ன ? இந்தக் கொங்கு வேளாளர் சமுதாயத்தில் பாளையக் காரர், மன்றாடியார் போன்ற ஒருசில பண்க்காரர்கள் இருக்கின்ற காரணத்தால் தான் இந்தப் பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்க்க விட்டுவிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். தென் மாநிலத்தில் 12 சதவிகிதமாக இருக்கின்ற இந்த மக்களில் ஒருசில பேர் தான் பட்டயக்காரர்கள், பட்டயக்காரர்களுடைய வாழ்க்கை நிலை உயர்ந்து இருக்கின்ற காரணத்தால், கொங்கு வேளாளர் சமுதாயத்தையே பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்க் காமல் விட்டதற்குக் காரணம் என்று நான் கருதுகின்றேன்.

(திரு. ந. காமாட்சி தலைமை)

நாங்கள் இந்த நேரத்திலே, எங்களுடைய சமுதாயத்தின் தலைவராக டாக்டர் கலைஞர் அவர்களைத் தான் கருதுகின்றோமே அல்லாது வேறு ஒருவரையும் அல்ல. இந்த மக்களுக்கு நல்ல

தொண்டினை ஆற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். எந்த எந்த மக்கள் எந்த அளவுக்குப் பிற்பட்டு இருக்கிறார்களோ, கல்வியிலும் பொருளாதாரத்திலும் எந்த அளவுக்குப் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்களோ அவர்களையெல்லாம் கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னுக்குக் கொண்டு வந்து மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவே டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல காரியங்களைச் செயலாற்றி வருகின்றார்கள். இந்தக் கலைஞர் அவர்கள்தான் எங்களுடைய சமுதாயத்திற்குத் தலைவர். இதை கொங்கு வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த 45 லட்சம் மக்களும் உறுதியாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் எங்களை இந்த நேரத்திலே பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கௌண்டர் என்று பொதுவான பெயர் உண்டு. வன்னிய கௌண்டர், வேட்டுவக் கௌண்டர், குறும்பக்கௌண்டர் என்று இருக்கிறார்கள். இப்படி பல்வேறு கௌண்டர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த நாட்டு கௌண்டர்களை பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்காமல் இருக்கிறார்கள். காரணம், மகாலிங்கம் போன்ற கோடீஸ்வரர்களைப் பார்த்துவிட்டு, மற்றவர்களும் கோடீஸ்வரர்களாகத்தான் இருப்பார்கள் என்று கருதுகின்றார்கள் போலும். அப்படிப்பட்ட நிலையில் ஒன்று, இரண்டு பேர் மகாலிங்கமாக இருக்கலாம். ஆனால், 45 லட்ச மக்களும் கோடீஸ்வரர் மகாலிங்கம் போல் இருக்கிறார்கள் என்று எண்ண வேண்டாம். இத்தகு எண்ணத்தால் இந்த 45 லட்சம் மக்களையும் புறக்கணித்து பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருப்பது மிகவும் அநீதியான செயலாகும்.

பெருமையாகச் சொல்லப் போனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த பசுமைப் புரட்சியை இந்த நாட்டிலே கொங்கு வேளாளர் சமுதாயம் தான் நல்ல முறையில் செயற்படுத்திக் கொண்டு வருகிறது. இந்தச் சமுதாய மக்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளான கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி போன்ற இடங்களில் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் மோசமான பகுதிகளில் உள்ள காடு மேடுகளை எல்லாம் திருத்தி, நல்ல முறையில் விவசாயம் செய்து உணவுப் பொருள்களை இந்த நாட்டிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கும் உழைப்பாளி மக்களாகத்தான் இருந்து





வருகின்றார்கள், அப்படிப்பட்ட மக்களை இந்தப் பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த உழைப்பாளி மக்கள் 25 ஆண்டுகளுக்கு முன் ஆத்தூர் பகுதியில் இருந்த காடுகளில் பழம் போன்ற பொருள்களைக் கொண்டு வந்து வியாபாரம் செய்து வாழ்ந்திருக்கிறார்கள், அவர்கள்தான், இப்போதும் தமிழகத்தில் உள்ள மக்களுக்கு காய், பழம், தயிர், பால் போன்ற உணவுப் பொருள்களை வழங்கக்கூடியவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட உழைப்பாளி மக்களை நீங்கள் அவசியம் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து, அவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்.

இந்த மாநிலத்தில் 12 சதவிகிதம் உள்ள இந்த மக்களுக்கு அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும். தற்போது இவர்களில் ஒரு சதவிகிதம் பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்புக் கிடைத்து வருகிறது. இவர்களுக்குக் கூட்டுறவுத் துறையிலும், அதைச் சார்ந்த நிறுவனங்களிலும், வாரியங்களிலும் வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்ட அளவில் உள்ள அரசாங்கத்தின் அனைத்துத் துறை அலுவலகங்களிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

கோவை மாவட்டத்தில் 50 சதவிகித அளவில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஆனால், 6 சதவிகிதம் தான் கொடுக்கப்படுகிறது. அதே போல் சேலம் மாவட்டத்தில் 50 சதவிகித அளவில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஆனால், 1.5 சதவிகிதம் தான் கொடுக்கப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டிய அளவு 6 சதவிகிதம். ஆனால், 0.6 சதவிகிதம் மட்டுமே கிடைக்கிறது. இதைப் போலவே மதுரை மாவட்டத்தில் 7.5 சதவிகிதத்திற்குப் பதிலாக ஒரு சதவிகிதம் தான் கொடுக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் 10 சதவிகிதம் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆனால், ஒரு சதவிகிதம்கூட இல்லை.

இவை எல்லாம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். பள்ளியில் படிக்கும் வாய்ப்போ, கல்லூரியில் படிக்கும் வாய்ப்போ இல்லாமல் இருக்கின்ற இந்

தகைய மக்களைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அப்படித் தெரிந்து இருந்தும், ஏனோ மாண்புமிகு முதலமைச்சர் எடுத்துச் சொல்லாமல் விட்டு இருக்கிருர்கள். அந்தக் குறைகளை எல்லாம் போக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்ந்த நிலையில் இருக்கின்ற இந்தச் சமுதாயத்தை இந்த நாட்டு மக்களுக்கு உணவு வழங்கக்கூடிய, உற்பத்தி செய்யக்கூடிய மிகத் திறமை படைத்த இந்தச் சமுதாயத்தை பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்த்தால், அவர்களுடைய உழைப்புக்கு அரசு தரும் பரிசு இது என்பதை மீண்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, நீங்கள் முன் வந்து செய்ய வேண்டும் என்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, in support of the cut motion given on behalf of my Party, I want to speak on the Demands presented by the Hon. Minister namely, Registration and Backward Classes. In participating in this discussion at the outset, I want to stress one thing. The Government should establish more Registrar Offices in rural areas. Or, they should introduce a mobile registration office to go to the rural parts once a week wherever there is necessity. Such a van could be utilised for some urban areas also, if found wanting. People in rural areas find it very difficult to go to the Registrar's office. Because, such registration offices are located far away from their places of residence. If we can have mobile registration vans, they can be sent to the Panchayat Unions for registration purposes once a week and people will benefit and they will be saved of the trouble of going to distant places. At the same time, Government also can get more revenue by way of registration fees.

I want to stress a few more things. I want to say something about the Registration Department.

(பிற்பகல் 12-30)

There is a lot of confusion in the Registration Department. For example, suppose a man enters into an agreement with another and the same gentleman will sell the same land to some





other gentleman and will register the deed also. Even before registration he will execute an agreement. After that he will register the document. Then finally they will have to go to Civil Court. I want to stress that this confusion should be avoided. In this connection I suggest one thing. Whenever a man wants to enter into an agreement with another, he must do it only though the department in the Registrar's Office so that it can be registered and the same land cannot be sold to some other man and the sale deed registered. Then, he need not go to the Civil Court and he can save some money which he would otherwise have to spend by way of litigation. There are so many cases like that and hence, this should be avoided.

There is also another handicap. An order may be issued through the Registration Department that the man who is going to purchase the land must sign in the stamp papers. So many people will purchase stamp papers and keep them in their houses without use. Some others may go and take those stamp papers from such people and execute documents in those papers. To avoid the confusion the person who purchases the stamp should sign in the stamp paper and execute the document in it. Rules to that effect must be made. Otherwise, there will be a lot of confusion in the Registration Department driving so many people to Civil Courts. For example in my constituency one thing happened. A man has registered an agreement. The agreement date had lapsed. The other gentleman got stamp paper from another and he created an agreement by signing himself. So, the parties had to go to Civil Court. Finally, the documents had to be sent to the Finger Print Expert and so many things came out of it. To avoid all these things, the man who purchases the land must get the stamps from the stamp vendor after signing in it. I do not think there will be any difficulty for the department to give strict instructions to the stamp vendors so that we can save so much of money, time and unecessary litigation. I hope this department will take up this matter.

THIRU M. V. KARIVENGADAM : It is a matter relating to the Contract Act wherein the Central Government alone can deal with it. This Government have nothing to do with it. These are all agreements entered into between two parties. If they do not act upon it, the Civil Court is the proper forum to deal with the matter.

THIRU B. VENKATASWAMY: At least this Government can send such a proposal to the Central Government to take the necessary steps in this regard. It is a day-to-day problem and people are suffering a lot. The State Government can recommend to the Central Government like this to minimise the difficulties of the people.

Regarding scarcity of stamps also, some of the members have already mentioned about it. I hope this scarcity of stamps and stamp papers will be looked into. Action must be taken to see that they are made available easily to the people.

I have given a cut motion to discuss the need to open a Registrar's Office at Thally. We are badly in need of a Registration Office there. It is Block headquarters. So, I request the Hon. Minister to see that at least this year Thally is provided with a Registrar's Office. Similarly Anchetty may also be provided with a Registrar's office, so that the people there may be benefited.

Coming to backward classes, I am very glad to note that a separate Backward Classes Ministry has been created to look after their interests. But at the same time I regret to note most of the facilities are not given to them. For example, trade loans are not given to them. There are 31 per cent of backward classes in the State. Really they are economically backward. What kind of facilities you are going to provide them to raise their economic prosperity? At least you must give loans to those who are doing some business. You can give loans to purchsae bulls, etc. Otherwise, they cannot come up. Just as the Government are giving facilities to the Harijans, these backward classes people also should be given such facilities like trade loans and loans to purchase bulls and other things.

Coming to housing the backward class people are very badly in need of houses. The Housing Corporation should look into this matter and see that housing colonies are built for these backward class people because 31 per cent of the population are suffering a lot.



Regarding education, the backward class people are suffering a lot. They will not send their children to school in time. I request the concerned Minister to see that age relaxation is given to them in the matter of securing employment. More employment opportunities should be provided for them. I understand that age relaxation is given up to 27th year in the case of scheduled castes and scheduled tribes. Similar age relaxation may also be given in the case of backward classes who want to secure employment in the Government sector.

As for hostels a lot of hostels have been opened last year. I have represented to Government to open a hostel at Kondu Kota. Last year it was said that a hostel would be opened there. But no hostel has yet been opened there. Kondu Kota is a forest area. 95 per cent of the people belong to backward classes. So, I request that a hostel may be opened there. Similarly a hostel should be opened at Roya Kota where 80 per cent of the people belong to backward classes. If hostels are opened in these two areas, the backward class people there will be very much benefited.

Lastly I want to mention about Nayudu and Naicker in Tamil Nadu. There is a long pending grievance that these two communities should be included in the backward classes list. So, I request the Hon. Minister to include these communities in the list (interruption) I am glad if Veeraswami Naidu also will be included in that list. I am pleading for it. Naidu Community is a very very backward community and similarly Naicker community. There are only very few families who are rich among them. (interruption) You cannot compare Coimbatore Naidus with ordinary Naidus. So, I request the Hon. Minister to include these two communities in the backward classes list.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

Then I come to Barbers, Dhobies and Potters. They also must be given good education in their respective lines. Barbers must be given good training so that they may become experts in the line. Just like Ph.D. or M.A. if we give training to them in that particular trade, they will become very good experts. Similarly very good education should be given to dhobies also. There are so many fashions in hair cutting and if barbers are given good training they will become experts and they can also earn more.

[Thiru B. Venkataswamy] [1975 மார்ச் 12

Dhobies and Potters also should be given training in their respective trades. Potters are now preparing only traditionally local made pots. If they are given sufficient training, they will prepare very beautiful pots and they can even export the pots to foreign countries. I hope that this matter will be seriously considered. I also request the Minister to do all that is needed to the backward classes. Thank you, Sir.

* **திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கும் பின்தங்கியோர் நலம்பற்றிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். முதலில், நான் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பின்தங்கியோர் நலமென்றாலும், இன்று அவரவர்கள் பேசியதிலிருந்து, அவரவர்களுடைய ஜாதிகளைப் பற்றி பேசலாம் என்ற ஒரு எண்ணம் தோன்றுகிறது. இங்கே ஜாதிப் பிரச்னையைக் கிளப்பி விடுகிறார்களோ, ஜாதியை வளர்க்க விரும்பினார்களோ என்று அஞ்ச வேண்டிய சந்தர்ப்பத்தில் அவரவர்களுடைய ஜாதியைப் பற்றி சொன்னதாலும் வகுப்பு வாதியின் அடிப்படையில்தான் அரசிடமிருந்து உதவிபெற முடியும் என்று விதிகள் இருப்பதாலும் நான் ஜாதிகளைப்பற்றி சொல்ல வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. என்று இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கியது. என்னுடைய தொகுதி எந்தவிதமான ஆற்று பாசன வசதியில்லாத பின்தங்கிய பகுதியாக இருப்பதை போலவே அங்கே வாழ்கிற மக்களும் மிகவும் பின்தங்கியவர்கள். அங்கே இருக்கக்கூடியவர்களில் பெரும்பான்மையானவர்கள் வன்னியர்கள். அதற்கு அடுத்து அதிகமாக இருக்கக்கூடியவர்கள் நெசவாளர்கள். அதற்கு அடுத்து அதிகமாக இருக்கக்கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று வரிசைப்படுத்திப் பார்ப்போமேயானால் நான் முன்னமேயே குறிப்பிட்டபடி ஜாதியை வளர்ப்பதற்காக இவற்றை யெல்லாம் சொல்லவில்லை. இந்தப் பகுதியில் வன்னியர்கள் அதிகமாக இருக்கின்றனர், வன்னியர்களின் நலன்



1975 மார்ச் 12] [திரு. செ. சதாசிவம்]

களுக்காக என்றே இருக்கின்ற உழைப்பாளர் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் என்னை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்டவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன்னியர்களை எடுத்துக் கொண்டால் 75 லட்சத்திலிருந்து 1 கோடி பேர்கள் வரையில் இருக்கலாம் என்று அவர்கள் கணக்குச் சொல்கிறார்கள். சரியான கணக்கு எனக்குப் புரியாவிட்டாலும் கூட அரசாங்கம் சரியான கணக்கை எடுத்து அவர்களுக்காக என்ன எண்ணிக்கையைச் சொல்கிறதோ அவற்றை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆண்டு தோறும் யார் யார் எல்லாம் தங்களையும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுங்கள், சேர்த்துக்கொள்ளுங்கள் என்று செல்கிறார்களோ அவ்வளவு பேர்களையும் தாராள மனப்பான்மையோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சேர்த்துக் கொண்டது தவறு என்று நான் சொல்லவில்லை, அந்தப் பின்தங்கிய மக்களுக்கு எல்லாம் போதுமான நிதி தொகை ஒதுக்கப்படவில்லை, அதன் காரணமாக அவர்கள் சலுகைகளை அடைய முடிய வில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரிசனங்களுக்கு இனமாக 1 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் அதிலே கிட்டத்தட்ட 15 ஆயிரம் கட்டப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். அதன் மூலமாக என்னுடைய தொகுதியிலே கூட 200 வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வீட்டு மனைகளே இல்லாதவர்கள் பின்தங்கிய வகுப்பினர்களிலும் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நாம் அரிசனங்களாகப் பிறக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள், நாம் அரிசனமக்களோடு சேர்ந்து வாழ்ந்தால் அவர்களுக்குக் கிடைக்கிற சலுகைகள் நமக்கும் கிடைக்குமே என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதையெல்லாம் பரிசீலனை செய்து பின்தங்கிய வகுப்பினர்களில் யாருக்கு மனை இல்லையோ அவர்களுக்கு—ஒரு சென்ட் நிலம்கூட இல்லாதவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்—இனமாக வீட்டு மனையும் கொடுத்து வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் என்னோடு உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் போட்டியிட்ட போது அந்த மக்கள் தி.மு.க. தான் ஆட்சிக்கு வரவேண்டும், அவர்கள் வந்தால் நன்மைகளைச் செய்வார்கள் என்று எண்ணி வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்தார்கள், அவர்களுக்கு எல்லாம் தி.மு.க. அரசால்தான் நமக்கு வாழ்வதற்கு வசதி கிடைக்கும், வாய்ப்புகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த எண்ணம் வீண் போகாமல் இருக்க இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே சட்டநாதன் அவர்களின் குழுவானது உடையார்பாளையம் வட்டம் வல்லம் என்ற கிராமத்திற்கு முகாமிட்டபோது அங்கே பலரை விசாரணை செய்தது. அங்கே இருக்கின்ற வன்னியர்கள், அங்கே இருக்கிற அரிசன மக்களைவிட மிகப் பின்தங்கியவர்கள் என்றும் அவர்களுடைய நிலை அரிசனங்களைவிட மிகக் கேவலமாக இருக்கிறது என்றும் எழுதியிருக்கிறார்கள், நான் இதைப்பற்றி சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயே பேசியிருக்கிறேன். அங்கே வாழ்கின்ற குழந்தைகள் படிப்பதற்கு வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் காட்டுக்கு காலையில் சென்றால் மாலையில்தான் வீடு திரும்புவார்கள், பிள்ளைகள் படிக்கிறார்களா இல்லையா என்றுகூட பார்க்க முடியாது. இப்போது இருக்கிற சட்டத்தின்படி 40 சத விகிதம் மார்க் வாங்கினால்தான் ஸ்காலர்சிப் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. இதை அறவே நீக்க வேண்டும். இன்றுள்ள நிலைமையில் ஹைஸ்கூலில் எல்லா பாடங்களையும் சேர்த்து கூட்டினால் 75 மார்க் வாங்கினால் பாஸ் போடலாம் என்று இருக்கிறபோது 40 சதவிகிதம் வாங்கினால்தான் ஸ்காலர்ஷிப் என்று சொல்வது சரியல்ல, ஆகவே, அந்த நிபந்தனையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி குற்றப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்களுக்கு எப்படிச் சலுகைகள் ஒன்றாவது கிளாசிலிருந்து வேறு கிளாசுக்கு மாறினால் போதும் என்று வைத்து உதவித் தொகை கொடுத்து இருக்கிறார்களோ அதைப்போன்று இவர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் 13 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் எல்லாம் பெரும்பாலும் பின்தங்கிய மாணவர்கள்தான் படிக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே





ஒரு பின்தங்கிய வகுப்பினர் மாணவர் உணவு விடுதி தான் இருக்கிறது. அங்கே கூட 50 மாணவர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆகவே, அப்படியில்லாமல் 13 பள்ளிகளிலும் மாணவர்கள் உணவு விடுதிகள் ஏற்படுத்தி கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அல்லது குறைந்தது 500 மேல்பட்ட மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளிலாவது பின் தங்கிய மாணவர்கள் உணவு விடுதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டில் இப்போது 585 தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளும் 231 பின்தங்கிய மாணவர் விடுதிகளும் இருக்கின்றன. இந்த ஆண்டு 20 பின்தங்கிய மாணவர் இல்லங்களும், 20 தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதிகளும் ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது போதாது என்பதுதான் என்னுடைய கருத்து. என்னுடைய தொகுதியிலே 2 தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதியும், 2 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரிசன மாணவர் இல்லங்களிலே தற்போது 75 சதவீதம் அரிசன மாணவர்களைச் சேர்த்துவிட்டு பாக்கிபேர்களை பின்தங்கிய மாணவர்கள் 20 பேர்கள், மற்றவர்கள் 5 பேர்கள் என்ற முறையிலே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆனால் பின்தங்கிய மாணவர் விடுதியில் பின்தங்கியோர் 65 பேர்களும் அரிசனங்கள் 25 பேர்களும் இதர மாணவர்கள் 10 பேர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பின்தங்கிய மாணவர்கள் விடுதியில் 75 பின்தங்கிய மாணவர்களைச் சேர்த்துக்கொண்டு மீதியில் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருக்கச்செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் சொன்ன காரியங்களைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு பயிற்சி கொடுக்க திருச்சி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கின்ற முறை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளிலே பயிற்சி அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் பின்தங்கிய மாணவர்களுக்காக ஒரு இடம் கூடக் கிடையாது. ஆகவே மாவட்டந்தோறும் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதக்கூடிய

முறையில் பின்தங்கிய மாணவர்களுக்கு பயிற்சியளிக்கக்கூடிய முறையை எற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Speaker, Sir, I thank you very much for giving me an opportunity to say a few words on my cut motions to Demands 6 and 32, Registration and Welfare of the Backward Classes. I am very glad that this portfolio has been given to the Hon. Minister who is so kind and who is also very popular. I have already got the satisfaction that he will be very helpful.

Regarding Registration Department, I wish to say a few words. In the Dharmapuri district, the number of Sub-Registrar's Offices are very, very inadequate when compared to other areas. For instance, in Rasipuram taluk there are three Sub-Registrar's Offices, though its area is only 242 sq. miles. Hosur which has an area of about 450 sq. miles has got only one Sub-Registrar's Office and also Denkanikottah which has an area of about 600 sq. miles is having only one Sub-Registrar's Office. As my hon. Friend, Thiru Venkataswamy has suggested, there is need to open a Registrar's Office at Thally. There is also a demand for opening a Registrar's Office at Berigai. With regard to the opening of a Sub-Registrar's Office at Berigai there was such a proposal even last year. It was recommended by the District Registrar and the concerned Sub-Registrar. I request the Hon. Minister to see that a Sub-Registrar's Office is opened at Berigai.

Secondly, in regard to valuation of small and thatched houses, it is high and one has to spend a lot of money in case of their purchase or sale. Their valuation should be decreased. I request the Hon. Minister to look into this aspect of the matter.

With regard to the sale of stamp papers, stamp papers of small denominations are not available in all places. Arrangements should be made to make them available at all places. Moreover, the discount given to the vendors is too low and it should be increased. Also, more licences should be given for the sale of stamp papers.





Also section writers should be given more money. Also care should be taken to see that only those persons who possess good handwriting should be appointed.

Coming to backward classes, 90 per cent of the people belong to different backward classes and they form the backbone of the entire society. Only one to three per cent of the people belong to the forward communities. We can give any amount of money to these backward classes for education, housing, scholarships, and for carrying on their trade.

For example take pipers. They have been doing a wonderful thing. They have added to the culture and music of the country. Similarly there are persons weaving the broomsticks. They weave besides baskets also. We can call these people backward. We are wedded to removing backwardness from every part of the country. We must remove the sufferings of the oppressed. We have to make their life prosperous. But the conditions of these people is miserable. Many are starving. They have no money even to purchase an ordinary meal or an ordinary cloth. Whatever help we can give to these people must be a welcome thing. Their condition requires no explanation.

Regarding forward class people, there are only four or five classes, viz., Reddiars, Kammas, Naidus, Kshatriyas and some Brahmins. The Government of Mysore revised recently the list of backward class people and added certain classes from forward classes. Excepting the four or five classes, the others are all backward. To consider the backwardness, take the economic condition of that class. Last time the Kalelkar Commission said that sufficient time may be given for the backward classes to come up. Necessary data and information are there. Whatever money is needed for these backward classes people to come up, we need not grudge. They must come up in economic, social and national life. With these words, I support the Demand.

திரு. கு. பெரியசாமி: தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் மானியக் கோரிக்கையினை வரவேற்று, ஆதரித்து என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன்.

கிட்டத்தட்ட 5¾ கோடி ரூபாய்க்கு மானியம் கோரும் இந்தக் கோரிக்கையானது பின்தங்கிய வகுப்புக்கு எவ்வளவு தூரம் உபயோகரமாக இருக்கிறது என்பதைச் சிந்தித்துப்

[Thiru K. S. Kothandaramiah] [1975 மார்ச் 12

பார்க்கும் நேரத்தில் நான் சார்ந்திருக்கிற பார்தவ குல மக்கள் எவ்வளவு தூரம் ஆதாயம் அடைகிறார்கள் அல்லது வசதி பெறு கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது மிகவும் குறைவுதான். தமிழக அரசில் பின்தங்கியோர் நல இலாகா ஏற்படுத்தப்பட்ட பிறகுதான் இந்தக் குலம் இன்றைக்குப் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த வகுப்புக்குப் போது மான பிரதிநிதித்துவம், இலாகா வாரியாக, மக்கள் தொகை வாரி யாக இல்லையென்பதை வேதனையோடு, வருத்தத்தோடு தெரிவித் துக் கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த மக்கள் தொகை கணிப்பு சரி வர எடுக்கப்படவில்லை. ஊருக்குத் தகுந்தாற்போல், மாவட்டங் களுக்குத் தகுந்தாற்போல் பார்தவ குல மக்கள் இருக்கிறார்கள். சில ஊர்களில் உடையார்கள் என்று சொல்லுகிறார்கள்; சில ஊர்களில் மூப்பனார் என்கிறார்கள். சில ஊர்களில் கவுண்டர்கள் என்கிறார்கள், சில ஊர்களில் பிள்ளைமார்கள் என்கிறார்கள் சில ஊர்களில் முதலியார்கள் என்கிறார்கள். இப்படி பட்டங்களை வைத்துக் கொண்டிருப்பதால் குழப்பங்கள் இருக்கின்றன. இந்தக் குழப்பத்தைத் தீர்க்க சரிவரக் கணக்கெடுத்து முறையாகச் செய்ய வேண்டும். இலாகா வாரியாக பின்தங்கிய வகுப்பினருக்கு அங்கீ காரம் செய்யப்பட்டது மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தான். அதற்காக அமைச்சரவைக்கு நன்றி கூறக் கடமைப்பட் டிருக்கிறேன். இருந்தாலும்கூட நான் கிறித்தவ மதத்தில் சேர்ந்த காரணத்தால் பிற்பட்ட வகுப்பினருக்கான சலுகைகள் எதுவும் பெற முடியாத நிலையிலே இருக்கிறோம். இந்த துரதிருஷ்டத்தை இந்த அரசு மாற்றியமைத்துத் தரவேண்டுமென்ற கோரிக்கையை விடுகிறேன்.

ஒரு தலைமுறைக்கு முன்பு கிறித்தவர்களாக மாறிய அரிசனக் குடிமக்களுக்கு இந்த அரசால் கொடுக்கப்படக்கூடிய சலுகைகள் மறுக்கப்படுகின்றன. நாம் மதச் சார்பற்ற நாடு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். எந்த மதத்திற்கு வேண்டுமானாலும் போக லாம், உரிமையோடு வாழலாம் என்று சொல்லுகிறார்கள். ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் கிறித்தவர்களாக பெற்றோர்கள் மாறி விட்டார்கள் என்ற காரணத்திற்காக அரிசனங்களுக்கு அரசின் சலுகைகள் மறுக்கப்படுகிறது. இது அநீதியாகும். இதற்காக



1975 மார்ச் 12] [திரு. கு. பெரியசாமி]

இந்த மாமன்றம் ஏகோபித்த ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசு சட்டத்தை மாற்ற வேண்டுமென்று கூற வேண்டுமென்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் சாதிமத வேறுபாடுகள் இன்றி எல்லோருக்கும் சமமாக சலுகைகள் கிடைக்க உத்தரவாதம் இருக்க வேண்டும். சமுதாயத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை எப்போது ஒப்புக் கொண்டோமோ அந்த அடிப்படையில் சலுகைகள் வழங்கப் பட வேண்டும். சட்டங்களின் பெயரால் சலுகைகள் வழங்கப்பட வில்லை. சமுதாய நீதி அளிக்கப்படவில்லை என்று தந்தை பெரியார் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். சாதியின் அடிப்படையில் எங்களுக்கு உண்டான உரிமையைக் கொடுங்கள். கிறித்தவர் களாக மாறிய காரணத்தால் பிரதிநிதித்துவம் பல இடங்களில் இல்லாத நிலை இருக்கிறது. மறைந்த என்னுடைய மாமன் ஏ.டி. பன்னீர்செல்வம் இந்த இடத்திலே அமர்ந்திருந்தார்கள். அவர் களுக்குப் பிறகு உடையார் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் அமைச்சரவையில் இடம் இல்லை. ஓர் தம்மாள் சைமனுக்குப் பிறகு கிறித்தவர்கள் யாருக்கும் இடம் இல்லை. உடையார் சமுதாயத்தைச் சேர்ந்த மாண்புமிகு திரு. நயினுமலை இருக்கிறார்கள்; முத்தமிழ்ச் செல்வன் அவர்கள் இருக்கிறார்கள்; தஞ்சை நடராசன் இருக் கிறார்கள் ஏழு, எட்டு உடையார்கள் இருக்கும்போது எங்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது. அதற்காக நான் குறைபட்டுக் கொள்ளவில்லை. ஆனால் வேறு நிலையிலும் இடம் பெற முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். வாரியங்களில் உடையார்கள் இருக் கிறார்களா என்றால் கிடையாது. இதர அரசு அலுவலகங்களில் இருக்கிறார்களா என்றால் கிடையாது. சர்வீஸ் கமிஷனில் இருக் கிறார்களா என்றால் கிடையாது. இந்தப் பிரதிநிதித்துவம் சரிவர விநியோகிக்கப்பட வேண்டும். இந்தச் சமுதாய மக்களின் கோரிக்கைக் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 1-00)

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இங்கு நடக்கின்ற இந்த விவாதத்திலே பங்கு கொண்டு எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரு வார்த்தைகளில் சுருக்கமாகப் பேசி முடிக்கலாமென்று கருது

கிறேன். முதலில் பத்திரப் பதிவு பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறி அடுத்தபடியாக அடுத்த இலாகாவிற்குச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

பத்திரப் பதிவைப் பற்றி இங்கே பல்வேறு கருத்துக்களெல்லாம் கூறப்பட்டன. நான் சொசைடி ரெஜிஸ்ட்ரேஷன், சிட்பண்ட் ஆகிய இந்த இரண்டு பிரிவுகளைப் பற்றி என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சொசைடி ரெஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக இப்போதிருக்கிற சட்டத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று ஒரு மசோதாவானது கொண்டு வரப்பட்டு அது செலக்ட் கமிட்டிக்குப் போய் அந்த மசோதா சட்டமாகிற தருவாயில் வந்திருக்கிறது. சொசைடி ரெஜிஸ்ட்ரேஷன் பொறுத்த வரையில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. ரெஜிஸ்ட்ரேஷன் இலாகாவில் இருக்கிறவர்களை தகுந்த முறையில் கண்காணிக்கவேண்டுமானால் அதற்கு அதிக அதிகாரம் இருக்கிறதா என்றால் இல்லை. இன்றைக்கிருக்கிற அமைப்பில் அந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அதிக அதிகாரம் இல்லை.

உதாரணத்திற்கு எங்கள் பகுதியில் இருக்கிற சட்டத்தில் ஒரு சிக்கல் இருக்கிறது. திருவிதாங்கூர் கொச்சியிலே எங்கள் பகுதி இருந்த போது இயற்றப்பட்ட ஒரு சட்டம், அந்த சட்டம் கன்னியாகுமரி ஜில்லாவில் இன்றைக்கும் அமுலில் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே ஒரு சில கல்லூரிகளில் சில சொசைடிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு லட்சுமிபுரம் கல்லூரி இருக்கிறது. அந்த அமைப்பின் கீழே ஒரு சொசைடி நிறுவப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு சிலர் தங்களுடைய குடும்ப சொத்தாக அந்த சொசைடியை வைத்திருக்கிறார்கள். வேறு யாராவது அதில் பங்கு சேர வேண்டுமானால், அவர்களுக்கு அனுமதி மறுக்கிறார்கள். வேண்டுமென்றே மறுக்கிறார்கள். மெமோரேண்டம் ஆஃப் அசோசியேஷனிலே கூறியிருக்கிற சில வார்த்தைகளை வைத்துக் கொண்டு வேறு யாருக்கும் சேர உரிமை இல்லை, நாங்கள் தான் இந்த உலகை ஆளுவோம் என்ற முறையில் அந்த சொசைடியானது நடந்து கொண்டிருக்கிறது. இதனால் பல சிக்கல்கள் ஏற்பட்டு, அந்தக் கல்லூரியிலே குழப்பம் ஏற்பட்டு, அரசாங்கமானது அந்தக் கல்லூரியிலே ஒரு கேர் டேக்கரைப் போட்டிருக்கிறார்கள். அதைக் கூட எதிர்த்து அந்த பிற்போக்கு வாதிகள் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு செய்திருக்கிறார்கள்.





சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைகிறார்கள். ஆயிரத்திற்கும் மேலான மாணவர்களை பாழடிப்பதற்கு இம்மாதிரியான செய்கைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகையினால் இந்த மேற்சொன்ன மசோதாவை சட்டமாக்கி அதை அமுல் நடத்துவதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்யவேண்டும். இதிலும் இந்த சட்டத்தில் பல்வேறு மாற்றங்களைச் செய்து வழி வகை செய்திருக்கிறார்கள். அதை விரைவிலே செய்வார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த கல்லூரிகள் போன்ற தர்ம ஸ்தாபனங்களுக்கு இந்த ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தைக் குறைத்துக் கொடுத்து உதவவேண்டும். பிற்படுத்தப்பட்டோர் நடத்துகிற தர்ம ஸ்தாபனங்களுக்கு இந்த மாதிரி முத்திரை தாள்கள் கட்டணத்தில் சலுகையும், ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தில் சலுகையும் கொடுக்கவேண்டும். ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணத்தைக் குறைக்க முடியுமா, அது சர்வீஸ் சார்ஜ் அல்லவா என்ற ஆட்சேபணை கிளம்பக் கூடும். அதையும் ஆய்ந்து நிச்சயம், கல்லூரி, ஆஸ்பத்திரி போன்ற தர்ம ஸ்தாபனங்களுக்கு கொடுக்கவேண்டுமென்பதை மனப்பூர்வமாக ஆதரித்து மேலும் பேச முற்படுகிறேன்.

இன்றைக்குப் பல்வேறு இடங்களிலே இந்த சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அவைகள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கிற காரணத்தினால் அரசாங்கத்திலிருந்து வாடகைக்காக அதிகமான பணம் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அதிலும் குறிப்பாக இங்கு கொடுத்திருக்கிற குறிப்பைப் பார்த்தால்—ரெஸிட்ஸ் அண்ட் எக்ஸ்பெண்டிசர் 1963-64 முதல் 1973-74 வரை பார்த்தால் எக்ஸ்பெண்டிசர் என்ற தலைப்பில் குறைவாகத் தான் இருக்கிறது. புதிதாக கட்டிடங்கள் எங்கெங்கு தேவையோ, மாவட்ட ரீதியாக எத்தனை கட்டிடங்கள் தேவை என்று பார்த்து அதை பேஸ்ட் ப்ரோக்கிராமாக திட்டமிட்டுச் செய்யவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு எங்கள் பகுதியில் கருங்கல் என்ற இடத்தில் வாடகைக்கட்டிடத்தில் சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது. அங்கு புதிய கட்டிடம் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரியான நிலைமைகளையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இந்த 'சீட்டு' சட்டம் பொறுத்த மட்டிலே பல் வேறு கொள்ளைக்காரர்கள் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் பணத்தை 'சீட்டு' என்ற பேரிலே பெற்றுக் கொண்டு அப்படி பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள் பணத்தோடு ஓடி விடுகிற அவல நிலைமையைப் பார்க்கிறோம். இந்தச் சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் இந்த மாதிரியான காரியங்களைச் செய்கிறார்கள். இது சம்பந்தமாக விசேஷ கமிட்டி ஒன்று நிறுவப்பட்டு அதன் அறிக்கை ஐ.ஜி. ஆஃப் ரெஜிஸ்ட்ரேஷன் பார்வையில் இருக்கிறது என்று இந்த உரையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இந்த மாதிரி 'சீட்டு' நடத்துவதற்கு சட்ட திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். எவ்வளவு கேஷ் டெபாசிட் வைக்க வேண்டுமென்று முறை வைக்க வேண்டும். அல்லது இவ்வளவு அசையா சொத்துக்களை டெபாசிட்டாக வைக்க வேண்டுமென்று இப்படி திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். அவர்கள் ஆயிரம் ரூபாய்க்கு சீட்டு ஆரம்பிக்க வேண்டுமானால் இவ்வளவு டெபாசிட் இருக்கவேண்டுமென்று இப்போது சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதில் உள்ள ஒரு குறையை நான் சொல்கிறேன். சீட்டு நடத்துகிறவர்கள் பணத்தைச் சேர்த்துக் கொண்டு ஓடி விடுகிற நிலைமையைப் பார்க்கிறோம். ஆகவே, உடனடியாக இந்த சிட் பண்டு சட்டத்தை மாற்றியமைத்து ஏழை எளிய மக்களுக்கு புனர் வாழ்வு அளிக்கவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி நிரந்தரமாக பல ஊழியர்கள் இந்த இலாகாவில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லைசென்ஸ் போன்ற விஷயங்களைக் கூறியிருக்கிறார்கள். நேரமில்லாத காரணத்தினால் நான் அவைகளைப் பற்றி விளக்கிப் பேசவில்லை.

அடுத்தபடியாக, இந்த பிற்பட்டோர் நலத்துறையைப் பற்றி ஓரிரு கருத்துக்களைக் கூற கடமைப்பட்டவனாக நான் இருக்கிறேன். இந்த மன்றத்தில் காரசாரமான விவாதங்களெல்லாம் இந்தத் துறையைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் ஏற்பட்டன. சமுதாய மாற்றங்கள் என்ன ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கு நடந்த வாதப் பிரதிவாதங்களிலிருந்து கவனித்தேன். இன்று இருக்கிற நிலைமையில் தமிழ் நாட்டிலே இருக்கிற அமைப்பு பொருத்தமாக



இருக்கிறது என்ற வாதத்தை நான் கேட்டுக் கொண்டேயிருந்தேன். பொருளாதார அடிப்படையிலே சலுகை வழங்கவேண்டுமென்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. எந்த சமுதாயமானாலும், அதில் பிற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் வேண்டிய சட்ட திட்டங்களைப் போட்டு ஊக்குவிப்பதை ஆட்சேபிக்கவில்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற ஏற்றத் தாழ்வுகள் இருக்கிற காரணத்தினால் உத்தியோகத் துறையானாலும் மற்ற துறைகளானாலும் உயர்ந்தவர்கள் முன்னேறியிருக்கிறார்கள். பிற்பட்ட மக்களும் முன்னேறுவதற்காக அவர்களுக்கு வாய்ப்பு வசதியை அளிப்பதற்கு அரசாங்கம் வகை செய்வதில் யாரும் ஆட்சேபணையை தெரிவிக்க முடியாது.

உதாரணத்திற்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்விலே பிற்பட்ட மக்கள் எவ்வளவு பேர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று பார்க்கின்ற நேரத்திலே, அந்த விவரத்தை இந்த பர்ஃபார்மென்ஸ் பட்ஜெட்டிலே தந்திருக்கிறார்கள்—அவர்களுக்காக பயிற்சிக் கல்லூரி வைத்திருக்கிறார்கள். பயிற்சிக் கல்லூரியிலே வெற்றி பெற்றவர்களுடைய சதவீதத்தைப் பார்க்கிற நேரத்தில் அது கடலிலே பெருங்காயம் கரைத்த மாதிரி இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பயிற்சி போதாதா? அல்லது அங்கு கல்வி பயிலுகிற மாணவர்களின் தரம் போதாதா? என்ற விஷயங்களைப் பற்றியெல்லாம் நினைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வொரு விஷயத்தை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். கன்ஃபர் செய்து கொடுக்கிற நேரத்திலே பிற்பட்ட சமுதாயங்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். சமுதாயத்தில் அவர்களுடைய சர்வீஸ் அடிப்படையில் தரத்தின் அடிப்படையில் இந்த மாதிரியாக அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும்.

உயர் நீதி மன்றத்தில் பிற்பட்ட சமுதாயத்தினருக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் கிடைக்கவில்லை என்ற புகார்களை வெவ்வேறு அங்கத்தினர் கூறினார்கள். அது நியாயமான கூற்று என்று நான் கருதுகிறேன். அந்தந்த பிற்பட்ட சமுதாயத்திற்கு அவரவர்களுடைய ஜனத்தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு ரொடேஷன் வைத்தாவது கொடுப்பது சாலச் சிறந்ததாக

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 மார்ச் 12

இருக்கும். இதைக் கையாள வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது பப்ளிக் சர்விஸ் கமிஷனில் இருக்கிற மெம்பர்கள் மிகவும் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். அப்படி செய்தால் தான் பிற்பட்ட மக்களுடைய நலனை பாதுகாப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, பப்ளிக் சர்விஸ் கமிஷனில் மெம்பர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கவேண்டுமென்ற ஆலோசனையைக் கூற கடமைப் பட்டவனாக இருக்கிறேன். பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு நீங்கள் பரிந்துரை அனுப்பி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்றால் தான் அரசாங்கம் காரியங்களைச் செய்ய முடியும் என்று அரசியல் அமைப்பிலே இருக்கிறது. சட்ட திட்டங்கள் இருக்கிறது. அந்த சட்ட திட்டங்களை மாற்றியமைப்பதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேறு ஒரு விஷயத்தைப் பற்றிக் கூற வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இன்று நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கிற மாதிரி, பிற்பட்ட சமுதாயத்தில் நில மற்றவர்களுக்கு அவர்கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு வீட்டு மனை கொடுப்பது பொருத்தமாக இருக்குமென்ற ஆலோசனையை நான் கூறிக் கொள்கிறேன். மாவட்ட ரீதியாக பிற்பட்ட மக்களுக்கு எங்கெங்கு நிலங்கள் ஒதுக்கப்பட முடியுமோ அங்கெல்லாம் ஒதுக்கவேண்டுமென்ற ஆலோசனையை மனப்பூர்வமாக வரவேற்று ஆதரிக்கிறேன் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைக் கூற நினைக்கிறேன். சலவை தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் சலுகைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய ஜில்லாவிலே இருக்கிற சலவை தொழிலாளர் எல்லாம் ரோமன் கத்தோலிக்கர்களாக, லேடின் கத்தோலிக்கர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கிருஸ்துவ மதத்தைத் தழுவியவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் சலுகை வழங்கவேண்டும். பொருளாதார அடிப்படையில் பார்த்தாலும் அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேறு ஒரு மதத்தைத் தழுவியவர்களாக இருந்தாலும் அரசாங்கம் சம நோக்கோடு, சம நீதியோடு அவர்



1975 மார்ச் 12] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

களுக்கும் வேண்டிய வழி வகைகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களுக்குச் செய்யவேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு சமுதாயத்தைப் பற்றி, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதாவது, பண்டாரம், வீரசைவம் இந்த ஜாதிக்காரர்களைப் பற்றி. அவர்கள் ஆலயத்திற்கு பூ கட்டிக் கொடுப்பவர்கள். அவர்கள் சிறுபான்மைச் சமுதாயமாக பின் தங்கிய நிலையில் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறார்கள். அவர்களை பிற்பட்டோர் பட்டியலிலே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஜேம்ஸ் அவர்கள் இதைக் குறித்து பல்வேறு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய சமுதாயத்தில் ஒரே ஒரு வக்கீல் தான் இருக்கிறார். இந்த மாதிரி பார்க்கிற நேரத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் இந்த சமுதாயத்தினர் ஏறத்தாழ பிற்பட்ட சமுதாயத்தை விட தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்களையும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் துறையில் இந்த பிற்பட்ட மக்களுக்கு தொழில் துவங்குவதற்கு அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்பதை நான் வலியுறுத்திக்கூற கடமைப்பட்டு இருக்கிறேன். பிற்பட்ட மக்களுக்கு நல்ல காரியங்களை செய்வதை நாங்கள் எல்லோரும் வரவேற்கத்தான் செய்வோம். கொடுத்து இருப்பது போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது.

உதாரணமாக இந்த 'பர்ஃபாமென்ஸ் பட்ஜெட்டை' பார்க்கிறபோது ஒரு பகுதியில் பக்கம் 20-ல் கிணறு வெட்டுவதைப் பற்றி சொல்கிறபோது, பிளான், நான்-பிளான் என்று சொல்லி, அதிலே விவரம் தந்து இருக்கிறார்கள். நான்-பிளானில் 75-76-ல் 3 கிணறுகள் வெட்ட திட்டமிடப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். பிளானில் ஒன்றும் இல்லை. பிளானில் வேறு இடத்தில் வந்து இருக்கலாம். பிற்பட்ட மக்கள் வாழும் பகுதியில் அவர்கள் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் மைல் கணக்கில் நடந்து சென்று தண்ணீர் எடுத்து

வரவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட கிராமங்கள் பல இருக்கின்றன. அது எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் கிணறுகள் வெட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரம் ஏறும் தொழிலாளி பற்றி கே.டி.கே. அவர்கள் சொன்னார்கள். அவர்கள் வாழ வழியில்லாமல் இருக்கிறார்கள். கடல் ஓரமக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் வைத்துள்ளது போல் இந்த மரம் ஏறும் தொழிலாளிகளுக்கும் வீடு கட்டித் தரும் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இலவசமாக இல்லாவிட்டாலும், கொஞ்சம் மானியமாகவும், கொஞ்சம் கடனாகவும் என்ற முறையில் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் இந்த மது விலக்கு திட்டத்தால் பாதிக்கப்பட்ட அந்த ஏழை எளிய மக்கள் புனர் வாழ்வு பெறமுடியும் என்று கூறி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத்துறை மானிய விவாதத்தில் பங்கு கொண்டு, பதில் சொல்ல வேண்டிய மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்கள் உடல் நலக் குறைவாக இருப்பதால், அவர்கள் சார்பில் நான் அதற்குப் பதில் அளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இலாக்காவில் அவர்கள் பல்வேறு கடமைகளை பொறுப்பாகவும், அழகுறவும் செய்து நல்ல பணியாற்றி வந்து இருப்பதால், அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் பதில் அளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை நேற்று கூட என்னிடத்தில் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த விவாதத்தின் ஆரம்பத்திலிருந்தே, இந்த இலாக்காவில் என்னென்ன வேலைகளைச் செய்கிறோமோ, அதைச் சம்பந்தப்படுத்தி இந்த விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்ற நிலை இல்லாமல், ஏறக்குறைய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு கோடி மக்களுக்கு என்ன செய்யவேண்டு





மென்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த விவாதம் அமைந்து இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது என்பதை ஒவ்வொருவரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்த மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என 1969-ம் ஆண்டு கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற உடன் நல்லபல சலுகைகளைத் தரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், 1972-லிருந்து அதற்குப் பல்வேறு காரியங்களைச் செய்து, அதற்கென தனிப்பட்ட அமைச்சரைப் போட்டு காரியம் செய்து இருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்தில் இருக்கும் பல்வேறு மக்களை எப்படியாவது முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அவர்கள் நல்லபல முயற்சிகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பட்ட மக்கள் சமுதாயத்தினருக்கு எல்லாக் காரியங்களும் நடந்து விட்டன, ஆகையால், மற்ற சமுதாயத்தினரையும் பிற்பட்ட மக்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டார்கள் என்பதைப் பார்த்தோம். இந்த பிற்பட்டோர் வகுப்பு என்று சொல்வதற்கு அவர்கள் என்னென்ன தொழிலில் ஈடுபட்டு இருக்க வேண்டும், எப்படியெப்படி அவர்கள் இருக்க வேண்டும். என்பதையெல்லாம் சட்டநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட பிற்பட்டோர் நலக்குழு, 1971-ம் ஆண்டில் பல்வேறு இடங்களுக்குச் சென்று போய் பார்த்து பரிசீலனை செய்து இருக்கிறார்கள். பயிர் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள், உடல் உழைப்புத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள், நெசவுத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள், தச்சு, கருமார், பட்டரை தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள், உப்பு, எண்ணெ போன்று பணிகளில் ஈடுபட்டு உள்ளவர்கள், வெற்றிலை சாகுபடி செய்பவர்கள், வெற்றிலை விற்பவர்கள், மண் வேலை செய்பவர்கள், ஆண்டிப் பண்டாரம், பாட்பு பிடாரன், படகா, பெஸ்தா, பட்ராஜு, ஹெக்டே போன்றவர்கள் இதிலே பிரதானமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமுதாயத்தினர் எந்தத் தொழிலில் ஈடுபட்டு இருந்தாலும் பிற்பட்ட மக்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறார்கள். அங்கே அங்கம் வகிக்கும் உறுப்பினர்களைப்

[திரு. க. இராசாராம்] [1975 மார்ச் 12

பார்த்தால் அவர்களை விட கொஞ்சம் முன்னேறியவர்கள் என்று சொல்ல வேண்டும். அதைத் தவிர நான் வேறு சொல்வதற்கு இல்லை.

இந்த பிற்பட்டோர் என்ற தன்மை ஒழிய வேண்டுமென்பதற்காக தந்தை பெரியார் அவர்கள் எவ்வளவோ பாடுபட்டார்கள். அவர்கள் புதுமையான பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையை ஒழிக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் பலவற்றை எடுத்துப் பேசியிருக்கிறார்கள். வேத சாஸ்திரங்களை கூட ஒழிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். ஜாதி ஒழிய வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நாம் பின் தங்கிய சமுதாயத்தினர் கொஞ்சம் முன்னேறி இருக்கிறோம் என்று சொன்னால், அதற்கு உள்ளபடியே நான் சுயமரியாதை இயக்கத்திலிருந்து வரலாற்றை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நேரம் இல்லை.

1927-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் முதன் முதலாக பிற்பட்ட சமுதாயத்தினர் அத்தனைபேரும் ஒன்றாக உட்கார்ந்து சமபந்தி போஜனம் உண்ண வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் காலத்தில் கே. டி. கே. தங்கமணி, பொன்னப்ப நாடார் ஆகியவர்கள் சேர்ந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சமையல் செய்தால் யாரும் சாப்பிடமாட்டார்கள். அத்தகைய பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். அதை மாற்றி சமபந்தி போஜனம் என்று கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு கலப்புத் திருமணம். அதற்குப் பிறகு கோவில் பிரவேசம் என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு சமுதாயத்தில் இருப்பவர்களின் நிலைமையை மாற்ற வேண்டுமென்று பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

கலப்புத் திருமணம் பற்றி சொல்கிற நேரத்தில் எல்லோரும் கலப்புத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஒருவர் இருவர் மட்டும் கலப்புத் திருமணம் செய்து கொண்டால் அதுவே ஒரு பிற்பட்ட இனமாகி, கலப்புத் திருமண ஜாதி என்று வந்து விடும். ஆகவே, எல்லோரும் கலப்புத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள்.



1975 மார்ச் 12] [திரு. க. இராசாராம்]

இன்று மன்றத்தில் 18 பேர் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். இரண்டு நாட்களாகப் பேசியிருக்கிறார்கள். கடைசியாகப் பேசிய பெரியசாமி அவர்கள் பிற்பட்ட ஜாதியைச் சேர்ந்தவரையே அமைச்சராகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரே ஜாதியைப்பற்றி பேசி, பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவரையே போட வேண்டுமென்று சொன்னார்கள்.

பிற்படுத்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் வசதி பெற்று இருக்கிறார்கள், கல்வி பெற்று இருக்கிறார்கள், என்கிற அடிப்படையை நீங்கள் தெரிந்து கொண்டாக வேண்டும். தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றால், ஜாதியால் பிற்படுத்தப்பட்டவர்கள் மட்டுமல்ல. பொருளாதாரத்தில், சமுதாயத்தில் இருக்கிற நிலையையும் நாம் பார்க்க வேண்டும். காலாகாலமாகப் பார்த்தால், வேத சாஸ்திர காலத்திலிருந்து பார்த்தால், பல்வேறு வகையில் ஜாதி அமைப்பு இருந்திருக்கிறது. உதாரணமாகப் பார்த்தால், ஒரு கோவிலைச் சுற்றிப் பார்த்தால், உயர்ந்த ஜாதிக்காரர்கள் கோவிலுக்கு அருகாமையில் இருப்பார்கள். அதைவிட கொஞ்சம் தூரத்தில் குறைந்த ஜாதிக்காரர்கள், சூத்திரர்கள் என்று பட்டம் வாங்கியவர்கள் இருப்பார்கள், கடைசியில் ஊருக்குக் கோடியில் ஆதித் திராவிடர்கள் என்ற சமூகத்தினர் இருப்பார்கள். இந்தச் சமுதாய அமைப்பைத்தான் மாற்ற வேண்டுமென்று, இந்த நலத்துறை இலாக்கா பாடுபட்டுக் கொண்டு இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு கல்விச் சலுகைகளையும், வேறு எதை எதை எல்லாம் செய்ய முடியுமோ அவை எல்லாவற்றையும் நிரம்பச் செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. சௌந்திரபாண்டியன் பேசும்போது வைரத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும், அவர்களுக்கு வேலையில்லாத நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். மேட்டுப் பாளையம் அருகே கூசா என்ற ஒரு வித கல் கிடைக்கிறது. செயற்கை வைரம் செய்வதற்கு மேட்டுபாளையத்தில் ஒரு நிறு நிறுவனம் இருக்கிறது. மின்சாரப் பற்றுக்குறை காரணமாக மாதம் ஒன்றுக்கு 800 கிலோகிராம் கற்களை செய்து வந்த அந்த கம்பெனி

இப்போது 300 கிலோகிராம் தான் செய்கிறது. வேலை வாய்ப்பு குறைந்திருக்கிறது, அவ்வளவு தான். அதற்கும் பிற்படுத்தப் பட்டோர் நலன் இலாகாவிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, அந்தப் பிரச்சினைக்கும் முடிந்த அளவு செய்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வேறு அங்கத்தினர்கள், இலங்கையிலிருந்து வந்திருக்கின்ற, பர்மாவிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளுக்கு எல்லாம் பல காரியங்களை பிற்படுத்தப்பட்டோர் நல இலாக்கா செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இதற்குப் பல இலாக்காக்கள் அரசாங்கத்தில் இருக்கின்றன. அகதிகளாக வந்திருக்கிற எல்லோரையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து விட முடியாது. அகதிகளிலும் உயர்ந்த ஜாதி, தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் என்றெல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, எல்லோரையும் கொண்டு வந்து பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றால் அது கஷ்டம். அகதிகளுக்குத் தனியாக ஒரு இலாக்கா கவனித்து வருகிறது. அகதிகள் வியாபாரம் செய்யக் கடன் தரப்படுகிறது. தொழில் தேட கடன் தருகிறார்கள். முகாம்கள் இருக்கின்றன. வீட்டு வசதி வாரியம் மதுரையில் 400 வீடுகள் கட்டித்தர திட்டமிட்டு, 200 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டு இருக்கின்றன. அவர்களுக்குத் தொழில் பயிற்சி தரப் படுகிறது. இந்த பர்மா பசாரை அவர்களுக்குச் சொந்தமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் கடை வைத்துக் கொள்ள இடம் ஒதுக்கியதே கஷ்டமான காரியம். சென்னையில் இப்போது இருக்கிற இடத்திற்குத் தொல்லையில்லாமல் இருந்தாலே பெரிய காரியம்.

அகதிகளில் சிலர் திருவாங்குளத்தில் பட்டினியால் செத்துப் போனார்கள் என்று திரு. சௌந்திரபாண்டியன் குறிப்பிட்டார். அகதிகளைக் கவனிப்பது மத்திய அரசும், மாநில அரசும். இது வரை யாரும் பட்டினியால் செத்ததாக எந்தத் தகவலும் வரவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பொன்னப்ப நாடார், திரு. தங்கமணி, திரு. சௌந்தர பாண்டியன் ஆகிய மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் மருத்துவர்களுக்கும், சலவையாளர்களுக்கும் சாமான்கள் வாங்கித் தருவதற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்று குறிப்பிட்-





டார்கள். மாண்புமிகு தங்கமணி பேசும்போது அங்கே ரஷ்யாவில் மருத்துவர்கள் எவ்வளவு பாராட்டப்படுகின்ற அளவில் இருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். எனக்கும் கூட ஞாபகம், 1952-ல் நான் தந்தை பெரியார் அவர்களுடன் மலேயா சென்று இருந்தேன். வளமான வாழ்க்கை அவர்களுக்கு அங்கே அமைந்திருப்பதைக் கண்டேன். அப்படிப்பட்ட மருத்துவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசிற்கு நிறைய இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். சில உறுப்பினர்கள் மருத்துவர்களுக்கு அதிகமான பணம் வழங்கும் வகையில் அதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த ஆண்டு 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது, 6 லட்சம் வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னபோது சென்ற ஆண்டு ஒதுக்கீட்டை விட குறைத்துவிடாதே என்று அவர் எனக்கு அன்புக் கட்டளையிட்டிருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அத்தோடு கொங்கு வேளாளர் என்ற பிரிவினரை பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று நம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நடராசன், திரு. நாச்சியப்பன், திரு. பழனிச்சாமி ஆகியோர் சொன்னார்கள். ஏன் இந்த கொங்கு வேளாளர் என்ற பிரிவை பட்டியலில் சேர்க்கவில்லை என்று சட்டநாதன் குழு அறிக்கையில் பார்த்தபோது அதை மறைந்த சேலம் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களைத் தவிர வேறு யாரும் அந்தச் சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று பட்டியல் குழு தலைவரையும் கேட்கவில்லை, தயாரிப்பாளரையும் கேட்கவில்லை என்பதை அந்த அறிக்கையில் தந்து இருக்கிறார்கள். அதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்தில் எண்ணம் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு மானியத்தில் ஒதுக்கியது போதாது என்று குறிப்பிட்டார். போதாது என்பது உண்மைதான். பிற்பட்டோர் சமுதாய மக்களுக்குப் பல்வேறுபட்ட காரியங்களை நாங்கள் செய்து வருகிறோம். என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

கன்னியாகுமரியில் வாழும் ரோமன் கத்தோலிக்கர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதற்காகத் தனியாக திரு. சிதம்பரம் என்கிறவர் தலைமையில் ஒரு ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. அந்த மக்களைச் சேர்க்க முடியுமா இல்லையா என்று அந்த ஆராய்ச்சியின் முடிவு வந்த பிறகு அதற்கான காரியங்களை மேற்கொள்ளுவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தனியாக ஒரு அலுவலகம் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இவர்களுக்கு என்று ஒரு தனியாக அலுவலகம் இருப்பதற்குச் சட்டம் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பிற்படுத்தப்பட்டோருக்கு இந்த அளவு பாதுகாப்பு அளித்ததற்கே காரணம் சுப்ரீம் கோர்ட் வழங்கிய ஒரு தீர்ப்பினால்தான். அரசியல் சட்டத்தின் 15 (4) விதியின்கீழ் சமுதாயத்தில் பிரதிநிதித்துவம் அற்றவர்கள்—அப்படிப்பட்டவர்கள் பிற்பட்டவர்களாக கருதப்பட வேண்டும். அதுவும் 49 சதவிகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்று அறிவித்த திரு. வாஞ்சு அவர்களின் தீர்ப்பின் பிறகு இந்த இலாக்கா ஏற்படுத்தப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்து, இதற்கு மேலே காரியம் எதுவும் செய்ய இயலாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல திருமதி அனந்தநாயகி அம்மையார் ஆறு கோடி ரூபாயில் பாதிக்கு மேல் 3½ கோடி ரூபாய் கல்விக்காகவே தரப்படுகிறது, மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் பணம் தரவில்லை என்று தெரிவித்தார்கள். இந்த ஸ்டைபண்ட் பணம் இந்த இலாக்கா தருவது இல்லை என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். வருகின்ற மனுக்களில் ஒரு பகுதி வருமானத்தில் உச்ச வரம்பு மீறியிருக்கிறது என்பது போன்ற காரணங்களால் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. 1972-73-ல் 3,90,123 மனுக்களில் 2,64,547 ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1973-74 ஆம் ஆண்டு 3,44,421 மனுக்களில் 2,44,277 ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1974-75-ல் வந்த மனுக்கள் 3,21,290. ஏற்றுக் கொள்ளப்பட்டவை 2,31,814 மனுக்கள். இந்த மனுக்களில் ஏன் கொஞ்ச மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்றால், 2,500 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்தான் உபகாரச் சம்பளம் பெறத் தகுதி உடையவர்கள், அதற்கு மேலே உள்ளவர்களும் பிற்படுத்தப்





பட்ட வகுப்பில் சேராதவர்கள் என்று ஆராய்ந்து பார்த்ததில் புலப்பட்டவர்களும் தகுதி அற்றவர்கள் என்று அவர்களுடைய மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கிணறுகள் வெட்டப்பட்டவை ரொம்பவும் குறைவு என்று குறிப்பிட்டார்கள். பிற்பட்டோர் நலனுக்காக செலவு செய்யப்பட்டது போக மீதி உள்ளவற்றில்தான் கிணறு தோண்டப் பயன்படுத்துகிறோம். வறட்சி நிவாரணப் பணி மூலமாகவும், குடி தண்ணீர் வாரியத்தின் மூலமாகவும், விவசாயத் துறையின் மூலமாகவும் ஆங்காங்கே குடி தண்ணீர் கிணறுகள் வெட்டப்பட்டு தரப்படுகின்றன. ஆகவே, கிணறு தோண்டுவதற்காக போதுமான பணம் செலவழிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பிற்பட்டோர் நலத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் இந்த ஆட்சி எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குப் புள்ளி விவரத்தின் மூலம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

1968-69-ல் ஒரு கோடி 87 லட்சமும்,
1969-70-ல் 2 கோடி 40 லட்சமும்,
1970-71-ல் 3 கோடி 1 லட்சமும்.
1971-72-ல் 4 கோடி 33 லட்சமும்,
1972-73-ல் 4 கோடி 86 லட்சமும்,
1973-74-ல் 5 கோடி 8 லட்சமும்.
1974-75-ல் 5 கோடி 63 லட்சமும்,
1975–76-ல் இந்த ஆண்டு 5 கோடி 78 லட்சமும்

நாங்கள் பிற்பட்டோர் நல இலாகாவிற்கு ஒதுக்கி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

பிற்பட்ட மாணவர் இல்லங்களில் மாணவர்களைச் சேர்ப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் சதாசிவம் அவர்கள் குறிப்பிட்டார்கள். பிற்பட்ட மாணவர் இல்லங்களில் பிற்பட்ட மாணவர்கள் 65 சதவிகிதம், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 25 சதவிகிதம், இதர மாணவர்கள் 10 சதவிகிதம் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட மாணவர் இல்லங்களில் 75 சதவிகிதம் தாழ்த்தப்

[திரு. க. இராசாராம்] [1975 மார்ச் 12

பட்ட மாணவர்கள், 20 சதவிகிதம் பிற்பட்ட மாணவர்கள், ஐந்து சதவிகிதம் இதர மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இது நியாயமா என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, பிற்பட்டவர்களை விட தாழ்த்தப்பட்டவர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் என்பதை அவர்கள் மனதில் கொள்ள வேண்டும். இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த இலாக்காவில் ஏற்பட்டிருக்கிற ஒரு பெரிய மௌனப் புரட்சியை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். முன்பெல்லாம் ஒரு ஜாதிக்காரன்—பிற்பட்ட ஜாதிக்காரன் இன்னொருவர் வீட்டுக்குப் போனால் அவனை திண்ணையில் வைத்துச் சோறு போடுவார்கள். இன்றைக்கு அந்த நிலை மாறி, ஒரே இடத்தில் உணவு உட்கொள்ளும் பழக்கம் வந்திருக்கிறது என்றால் அது ஒரு பெரிய புரட்சிதான். இன்றைக்கு பிற்பட்ட மாணவர் விடுதியில் 25 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களும், 5 சதவிகிதம் முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள் என்றால் இந்த ஆட்சி சத்தம் இல்லாமல், கத்தி இல்லாமல், ரத்தம் சிந்தாமல் ஒரு பெரிய புரட்சியை உருவாக்கியிருக்கிறது என்பதை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

பலர் இதை உணரவில்லை. நான் சிறிய வயதில் இருந்தபோது எங்கள் ஊரில்—நாங்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயம்—வணிக வைசியர் என்று சொன்னால் அது பெரிய ஜாதி. வைசியர் என்று சொல்லிக் கொள்வதற்கே புண்ணியம் செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். அப்போது பிராமணர் என்றும், ஆரியர் என்றும், ஆரிய வைசீகர் என்றும், கணபதி ஜாதி (கணபதி அவர்கள் இங்கே இல்லை) என்றும், விஸ்வகர்மா பிராமணர் என்றும் இருந்த காலம். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு 'ரிவர்ஸ் கியரில்' போய் (சிரிப்பு) பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். இது இந்த ஆட்சி செய்திருக்கிற மகத்தான புரட்சி. இந்த ஆட்சி செய்த மகத்தான சேவைகளில் இது ஒன்று. இந்தப் பெரிய புரட்சியை தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் செய்ய முடியவில்லை. அப்படி யாராவது செய்ய முன்வந்தால் 6 மாதத்திற்கு மேல் அமைச்சரவை இருக்காது. ஆனால் இங்கே தொடர்ந்து இத்தகைய சேவையை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது.



1975 மார்ச் 12] [திரு. க. இராசாராம்]

வருமான வரம்பு 2,500 ரூபாய் என்றிருப்பதை 6,000 ரூபாயாக மாற்ற வேண்டுமென்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த அளவுக்கு இப்போது நிதிநிலை இல்லை. இப்போதே லட்சக்கணக்கான மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த வரன்முறையை இப்போது இருக்கிற நாணய மதிப்பின் அடிப்படையில் சற்று உயர்த்துவதற்கு இன்னும் அரசாங்கம் முடிவு செய்யவில்லையா? 1,500, 2,000 அல்லது 2,500 ரூபாய் என்பது ரொம்பவும் குறைவானது. இதை 5,000 ரூபாய் என்ற அளவுக்காவது உயர்த்துவதில் என்ன தயக்கம் இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வருமான வரம்பை உயர்த்துவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் துட்டு இல்லை (சிரிப்பு). பணம் இல்லை. அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. 2,000 ரூபாய் என்று இருந்ததை 2,500 ரூபாய் என்று சமீபத்தில் நான் உயர்த்தினேன்.

தற்போது மாணவர்களுக்குத் தரப்படுகிற உணவு விகிதத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது உயர்த்தித் தரப்படுகிறது. சென்னை மாநகரில் இருக்கிற கல்லூரி மற்றும் தொழில் கல்லூரி மாணவர்களுக்கு முன்பு 49 ரூபாய் தரப்பட்டது; இப்போது 54 ரூபாய் தரப்படுகிறது; ஐந்து ரூபாய் அதிகம். மற்ற இடங்களில் கல்லூரி மாணவர்களுக்கும், தொழில் கல்லூரி மாணவர்களுக்கும் முன்பு 39 ரூபாய் தரப்பட்டது; இப்போது அது 44 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. புற நகர்ப் பகுதிகளில் முன்பு 38 ரூபாயாக இருந்தது இப்போது 43 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் முன்னால் 28 ரூபாய் தான். இப்போது 33 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது போதும் என்று அமைச்சரவர்கள் கருதுகிறார்களா?

[1975 மார்ச் 12

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எல்லாவற்றுக்கும் ஒரே பதில்தான். மாறுதல் இல்லை. பண வசதி, நிதி வசதி பெருகப் பெருகத் தொகையை உயர்த்திக் கொடுக்க இந்த ஆட்சி தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். முஸ்லீம் சமுதாயத்தினருக்குப் பற்பல செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்து, எல்லா இலாகாக்களும் சேர்ந்து செய்ய வேண்டியவைகளைப்பற்றி எல்லாம் வைத்து அவர்கள் பேசினார்கள். தாசில்தார்கள் தடைக்கற்களாக அமைந்திருப்பதாகச் சொன்னார்கள். அது மட்டுமல்லாமல் உருது முஸ்லீம்கள், தக்கனிகர் முஸ்லீம்கள் போன்றவர்களுக்குக் காரியங்கள் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். தக்கனிகர் முஸ்லீம் என்பதற்கு என்னென்ன சட்டதிட்டங்கள் என்பதை நாங்கள் வரையறை செய்து, அதன் அடிப்படையில் இருக்கிற உருது பேசுகின்ற, தமிழ் பேசுகின்ற முஸ்லீம்கள் எல்லாம் தக்கனிகர் முஸ்லீம்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதன் காரணமாக 74 சதவிகிதம் பேர்கள் இன்றைக்கு இந்த உபகாரச் சம்பளம் பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அது குறைக்கப்படவில்லை. ஆனால் அரேபியாவில் இருந்து வந்த முஸ்லீம்கள் என்றால் இதில் இடமில்லை. வட இந்தியாவிலிருந்து வருகிற முஸ்லீம்களுக்கும் இதில் இடமில்லை என்று தீர்மானித்திருக்கிறோம். ஆகவே, ஏற்கெனவே சட்டம் போட்டு, எந்த அளவுக்குக் காரியங்கள் நடைபெற வேண்டுமோ அந்த அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுடுகாடு போன்றவற்றுக்குப் பயன்படுத்திய நிலங்களை எல்லாம் கூட வீடு கட்ட எடுத்துக் கொண்டார்கள் என்று ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் ஒரு சுடுகாடு பிரச்சனை வந்தது. முஸ்லீம் மக்கள் சார்பில் நான் அதை விசாரித்து, யாருக்கும் இடையூறு இல்லாமல் இருக்க அங்கே ஒரு பெரிய 'காம்பவுண்ட்' சுவர் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தேன். அது மட்டுமல்ல. வக்போர்டு அந்தச் சொத்தை சரியாக நிர்வகித்து வரவில்லை. ஆகவே, அதைச் சீர்திருத்தி, அங்கே திப்புசுல்தான் மார்க்கெட் என்று ஒரு மார்க்கெட்டை கட்ட ஏற்பாடு செய்திருக்கிறேன். இன்னும் சில நாட்களில் அதிலிருந்து நல்ல லாபம்



1975 மார்ச் 12] [திரு. க. இராசாராம்]

கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இவைகளை எல்லாம் நான் செய்திருக்கிறேன் என்றால் நான் அல்ல: இந்த அரசாங்கம். நான் அரசின் சார்பில் செய்திருக்கிறேன். அது மட்டுமல்ல. வக்போர்டு நிலங்களை எங்கெங்கே யார் யார் ஆக்கிரமித்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களைச் சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்க வக்போர்டுக்குச் சிபார்சு செய்திருக்கிறேன்.

வீடுகள் கட்டித்தர சென்னை மாநகரில் குடிசைமாற்று வாரியம் இருக்கிறது. பிற இடங்களில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த இலாகாவுக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதால் அதைச் சொல்கிறேன். அந்த முறையில் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் குடிசைகளை மாற்றியமைக்கும் பணியை மேற்கொண்டபோது, முஸ்லீம்கள் வாழ்ந்த பகுதியிலுள்ள குடிசைகளைத்தான் முதலில் மாற்றி, கட்டித்தரப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு வகைகளிலே முஸ்லீம் மக்களுக்கு அரசால் சலுகைகள் அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

அதோடு, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கலைஞர் நகர், சாஸ்திரி நகர், இந்திரா நகர், அண்ணா நகர் என்று சென்னை மாநகரில் பல நகர்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்படி உருவாக்கப்படுகின்ற நகர்களில்—வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புறநகர்ப் பகுதிகளில் வீடுகள் கட்டும்போது ஒரு இந்து கோவிலுக்கு இடம், ஒரு முஸ்லீம் மசூதிக்கு இடம், ஒரு கிறிஸ்தவ சர்ச்சுக்கு இடம், இந்த மூன்றுக்கும் இடம் விட்டு விட்டுத்தான் வீடு கட்ட 'லே அவுட்' போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காய்தே மில்லத் அவர்கள் பெயரில் ஒரு கல்லூரியை நிறுவி இருக்கிறோம். அதற்கு அவர்கள் நன்றி தெரிவித்திருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் சுலைமான் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னால்தான் நுழைந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிவார்கள். திவான்முகமது அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் அறிவார்கள். இப்படி பல்வேறு வகைப்பட்ட காரியங்கள் இந்த இலாக்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட

ஏற்பாடுகளை எல்லாம் இந்த இலாக்கா அல்லது அந்த அமைச்சரவை உருவாக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, ஆட்சியாளர்கள் செய்யவில்லை என்று நான் குற்றஞ்சாட்டவில்லை. ஆட்சியாளர்கள் செய்கிறார்கள். செய்ய வேண்டுமென்ற எண்ணம் நிறைய இருக்கிறது. ஆனால் நிறைவேற்றும் கட்டம் வரும்போது கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் அதற்கு ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னேன்.

இன்னும் ஒன்று. அமைச்சரவர்கள் அரேபியாவிலிருந்து வந்த முஸ்லீம்களுக்குச் சலுகை இல்லை என்று சொன்னார்கள். அரேபியாவிலிருந்து எந்த முஸ்லீமும் இங்கே வந்து குடிமகனாக இருக்க விரும்பமாட்டான். பெயரை சையத் என்று வைத்துக் கொண்டதால் அவர்கள் எல்லாம் அரேபியாவிலிருந்து வந்தவர்கள் என்று அர்த்தமல்ல. நம்முடைய அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள்கூட சையத்தான். ஒரு காலத்தில் நாயகத்தோடு தொடர்பு கொண்டவர்கள் என்பதைக் காட்ட அந்தப் பெயர் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் எல்லாம் அரேபியாவிலிருந்து வந்தவர்கள் அல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சலுகைகள் வழங்கப்படுவதில் இருக்கிற கஷ்டம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். என்னென்ன கஷ்டம் இருக்கிறது என்று சொன்னால் அதை நிவர்த்திக்கிறோம். தமிழ், உருது என்று அவர்கள் சொன்னதால் இந்தக் கருத்தைக் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பாக்வெர்டு கிளாஸ் மினிஸ்டராக இருந்தபோது சிலாமியான் அவர்கள் வந்து சொன்னதால் தமிழ், உருது என்று விளக்கம் போடப்பட்டது. உருது பேசக்கூடிய கோராஸ், கோஜாஸ்களுக்கு அவர்கள் குறிப்பிட்ட கஷ்டம் இருந்தால், அதைச் சொன்னால் நிவர்த்தி செய்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சையது பற்றி சொன்னதால் நான் இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மதுரையில் காசிமாநகரில் சையத்கள் இருக்கிறார்கள். பாண்டி ராஜா காலத்தில் அவர்களுக்குத் தனி மானியம் வைத்து, அவர்களுடைய காரியங்களைச் செய்து வந்தார்கள். ஆகையால் சையது



என்பவர்கள் ஏதோ இப்போதுதான் வந்தார்கள் என்று சொல்வது சரியல்ல. அவர்களுக்கு எப்போதும் ஒரு தனி அந்தஸ்து இருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஒரு தவறான கருத்து ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் சொல்ல விரும்புகிறேன். உருது பேசுகின்றவர்கள் எங்கும் அரேபியாவில் இருந்து வந்துவிடவில்லை. நான் உருது பேசுகிறவன். நான் பாண்டிய நாட்டு ராஜ பரம்பரையைச் சேர்ந்தவன். தாய்மொழி தமிழ்தான். நான் தமிழன்தான்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இப்படி அந்தக் காலத்தில் இஸ்லாமியர்களிடமும் பெருமையாகச் சொல்லிக்கொள்கிற வழக்கம் இருக்கத்தான் இருந்தது. எனக்குத் தெரியும். எங்கள் சாதிகளில் இருந்தும் பிராமணர்களாகப் போவதற்குப் பலபேர் முயற்சி பண்ணி முடியாமல் போனதனால் இங்கே வந்துவிட்டோம். குறிப்பாக நான் யாரையும் சொல்வதாகக் கருதிக் கொள்ளத் தேவையில்லை. அந்தக் காலத்து சமுதாயச் சூழ்நிலை அப்படி இருந்தது. எங்கள் பக்கத்து ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள் எல்லாம் அப்படித்தான் சொல்வார்கள்.

அடுத்து, திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மரம் ஏறுகிற தொழிலாளர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்தவுடன் அவர்களில் 40 ஆயிரம் பேர்கள் வேலை இழந்தார்கள். திரு. கண்ணப்பன் அவர்கள் தலைமையில் இருக்கிற கிராம நல இலாக்காவின் மூலம் ஏறத்தாழ 35 ஆயிரம் பேர்களுக்கு மறு வாழ்வு அளிக்க ரூபாய் 200 வரை உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் 40 ஆயிரம் பேருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, திரு. குழ. செல்லையா அவர்கள் பேசும்போது முத்துராஜா வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் ஒரு கோடிக்கு இருப்பதாகச் சொன்னார்கள். நான் பிற்பட்டவர்கள் சம்பந்தமாக அமைக்கப்பட்ட குழுவின் ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தேன். அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி—முத்துராஜா வகுப்பில் 50 ஆயிரம் பேர்கள் உள்ளதாகக் கொடுக்கப்

பட்டிருக்கிறது. அது அந்த மாவட்டத்தில் தமிழகம் முழுவதிலுமே—சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை கணக்குப் பார்த்ததில் முத்துராஜா வகுப்பினர் நமது மாநிலத்தில் ஒரு லட்சத்து அறுபத்து நாலாயிரத்து ஐம்பத்தொன்பது முத்தரையர்கள் ஒரு லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து அறுநூற்று இருபத்து மூன்று வலையர் ஆறு லட்சத்து முப்பத்து மூன்றுயிரத்து நாநூற்று எழுபத்தெட்டு.—இதுதான் அவர்களது மொத்த ஜனத்தொகை என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குழ. செல்லையா : இதுதான் மொத்த ஜனத்தொகை என்று வரையறைத்து சொல்வது சரியல்ல. எங்கள் தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 50 ஆயிரம் இருப்பதாகச் சொல்கிறுர்கள். என்னுடைய தொகுதியில் மட்டும் 53 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறுர்கள். அந்தக் கணக்கே சரியான கணக்கல்ல. ஆகவே ஒரு கமிட்டியைப் போட்டு அந்தக் கணக்கை எடுக்க வேண்டுமென்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** யார் அமைச்சராக இருந்தாலும் சில புள்ளிவிவரங்களை வைத்துத்தான் சொல்ல வேண்டும். கடைசியாக . . .

திரு. மு. சின்னசாமி : கொங்குவேளாளர் சமூகத்தை கொள்கை அளவிலாவது பிற்பட்ட சமூகத்தினரின் பட்டியலில் சேர்த்துக் கொள்வதாக முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** கொங்குவேளாளர் சமூகத்தை பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற கோரிக்கை அனுதாபத்தோடு பரிசீலிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ஆவண பதிவுத்துறையைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டன. அவர்களுக்கு வேலைப் பளு அதிகம் இருப்பதாகக் குறிப் பிட்டார்கள். வேலைப் பளுவைக் குறைக்க வேண்டுமென்றுதான் இப்போது நிறைய அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 1968-இல் பத்து சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ்கள், 1969–70-ல் 6, 1970–71-ல் 6, 1971–72-ல் 11, 1972–73-ல் 3, 1973–74-ல் 3, 1974–75-ல் 7 ஆக



மொத்தம் 46 அலுவலகங்கள் புதியதாக உருவாக்கப்பட்டிருக் கின்றன. ஆக மொத்தம் நம் மாநிலத்தில் இன்றைக்கு 405 சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ்கள் இருக்கின்றன.

அதுபோல டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்திரார் ஆபீசும் புதியதாக 1968-இல் 4-ம், 1973-இல் 5-ம், 1974-இல் 5-ம் ஆக மொத்தம் இப்போது 14 அலுவலகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் புதியதாக உருவாக்கப்பட இருக்கிற இடங்கள்—திண்டுக்கல், சென்னை (வடக்கு), கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, மதுரை, தென்காசி, திருச்சிராப்பள்ளி, அரியலூர் ஆகியவை யாகும்.

மேலும் சாணுரப்பட்டி, ராயபுரம், வடபொன்பரப்பி, வேர்க்கலாம்பி, செக்காணூர்ணி, ஊத்தமலை, தாரங்கம்பட்டி, வேப்பன்தட்டை, கிருஷ்ணராயபுரம் ஆகிய இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்ற விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.

திருமண பதிவு ரிஜிஸ்திரார் ஆபீஸ்களை அதிகப்படுத்த வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆண்டுக்கு நாலாயிரம் திருமணங்கள்தான் பதிவாகின்றன. அடிக்கடி மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் சுயமரியாதைத் திருமணங்கள், மற்ற திருமணங் களுக்குப் போகிறபோது திருமணங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்கிற கருத்தை வலியுறுத்தி வரவேண்டும். இந்த எண்ணிக்கை அதிகமானால் அதற்கும் ஏற்பாடுகள் செய்யலாம்.

அடுத்து செக்ஷன் ஆபீசர்கள் பற்றிச் சொன்னுர்கள். 400 பேர்கள்தான் விதிமுறைகளுக்குட்பட்டு தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். இதில் 300 பேர்கள் சம்பந்தமாகத்தான் 6 மாத சர்வீசிற்குள் இருக்கிறது. அந்தப் பிரச்சினையையும் விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

கடைசியாக ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். பிற்பட்ட சமுதாயத்தைப் பற்றி அண்ணு தி.மு.க. நிலைபற்றி காலையில் விவாதித்தார்கள். 25—10—73-இல் குமுதம் பத்திரிகைக்கு எம்.ஜி.ஆர். கொடுத்த பேட்டியில் அவரே குறிப்பிட்டிருக்கிறுர்.

"தாழ்த்தப்பட்டவர்கள் என்ற சொல் ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர்களின் கண்டுபிடிப்பாகும். அதே சமயம் இன்னொரு பக்கம் உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் தாழ்ந்து கொண்டே போய் ஒரு நூற்றுண்டுக்குள் இன்னொரு தாழ்ந்த சமுதாயம் உருவாகிவிடும்.

இந்தத் தத்துவம் ஒரு ஜாதியை ஒரு மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக மட்டும் அல்லாமல் பொருளாதாரத்தில் பிற்பட்டிருக்கின்ற அனைத்து மக்களுக்கும் சமுதாயத்தில் உயர்நிலை வாழ்வு பெறத் தகுந்த முறையில் ஒவ்வொரு வரும் உழைத்தாக வேண்டும்".

காலையில் குறிப்பிட்டதற்கு இதுதான் ஆதாரம். இதில் இருந்து அண்ணா தி.மு.க.வினருக்கு பிற்பட்ட சமூகத்தினர்களைப் பற்றிய எண்ணம் சரிவர இல்லை என்பதைச் சுட்டிக்காட்டத்தான் படித்தேன்.

முடிவாக இந்த மானியத்தின்மீது தெரிவிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கும் நான் விரிவாகப் பதில் அளித்திருக்கிறேன். ஒரு வெட்டுத் தீர்மானத்தை திரு. வெங்கடசாமி அவர்கள் கொடுத்திருந்தார்கள். அதில் பிற்பட்டவர் பட்டியலில் புரோகிதர்களையும் சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். பிறகு நான் அவரிடம் பேசியபோது நல்ல வேளையாக அவர் அதைப் பிரேரேபிக்கப் போவதில்லை என்று தெரிவித்துவிட்டார்.

திரு. கோதண்டராமையா அவர்கள் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்—பொருளாதார அடிப்படையில் என்றார்கள். அது பொதுப்படையான பிரச்சினை. அது ஒரு தத்துவம். தற்போது இருக்கிற சமுதாயச் சூழ்நிலையில் சமுதாய அடிப்படையில் பிற்படுத்தப்பட்டிருப்பவர்களின் பிரச்சினையை ஓரளவு எண்ணிப் பார்த்த பிறகே நிதிவசதி பெறுகிறபோது அதைச் சிந்திக்க வேண்டும்.

இந்த இலாக்காவில் உள்ள அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இலாக்கா அமைச்சர் நோய்வாய்ப்பட்டிருக்கிறாரே, இந்த இலாக்கா வேலை ஒழுங்காக நடக்கிறதா என்று திரு. கே. டி. கே. கேட்டார்கள். எல்லா வேலைகளும் ஒழுங்காகத்தான் நடைபெற்றுக்





கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த மானியங்களுக்கு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தவர்கள் அவற்றைத் திரும்பப் பெற்று இந்த மானியங்களை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காலையில் திரு. லத்தீப் அவர்கள் பேசியபோது வடாற்காடு மாவட்டத்தில் அரிசனங் களுக்குத் தருவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலங்களில் 70 சதவிகிதம் முஸ்லிம்களுடைய நிலங்கள் என்று குறிப்பிட்டார். அது பயங்கரமான புள்ளிவிவரமாக இருந்தது. நான் அது பற்றி அதிகாரிகளிடம் விசாரித்தபோது அதிகாரிகள் கொடுத்திருக்கிற விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதில் தவறு இருந்தால் திரு. லத்திப் அவர்கள் சுட்டிக் காட்டினால் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

வடாற்காடு மாவட்டத்தில் 1970-71-ஆம் ஆண்டில் மொத்தமாக ஆர்ஜிதம் செய்யப்பட்ட பரப்பளவு இருநூறு ஏக்கரா, அரிசனங் களுக்காக. அதில் முஸ்லீம்களுடைய நிலம் 96 சென்ட்தான். 1971-72-இல் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பது 26 ஏக்கரா. இதில் முஸ்லிம் நிலம் எதுவும் இல்லை. 1972-73-இல் ஆர்ஜிதம் செய்யப் பட்டிருப்பது 4 ஏக்கரா 23 சென்ட். இதிலும் முஸ்லிம் நிலம் எதுவும் இல்லை. 1973-74-இல் எடுக்கப்பட்டது 109 ஏக்கரா 98 சென்ட். இதில் முஸ்லீம் நிலம் 3 ஏக்கரா 97 சென்ட்தான். இந்த விவரம்தான் தரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்

**திரு. எம். ஏ. லத்தீப் :** தயவு செய்து நான் கேட்டுக்கொள்வது— அதிகாரிகள் கொடுத்த இந்த விவரம் சரி—வட்டாரவாரியாக புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்க்க வேண்டும். காரணம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற நோட்டீஸ் கொடுக்கப்பட்ட நிலங்களே என் தொகுதியில் 50 ஏக்கராக்களுக்கு இருக்கும். வட்ட வாரியாக புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தால் நான் சொல்வதில் தவறு இருந்தால் சரி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் அதைத்தான் முன்பே சொன்னேன். தவறு இருந்தால் சுட்டிக்காட்டலாம். அரிசனங்களுக்காக எடுக்கப்பட்ட நிலங்களில் முஸ்லிம் நிலங்களே 70 சதவிகிதம் என்று சொன்னது எனக்கு அதிர்ச்சியை

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 மார்ச் 12

அளித்ததால்தான் இந்தத் தகவல்களைத் தருமாறு கேட்டேன். மேற்கொண்டு இதுபற்றி விசாரித்து வேறு தகவல்கள் கிடைத்தாலும் நான் அதை இந்த அவையில் அளிப்பேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** சார் மைனாரிட்டி கம்யூனிட்டிகளுக்கென்று தனியாக ஒரு டைரெக்டரேட் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னேன்.

He has opined that a separate department cannot be instituted for the minorities because there are constitutional hurdles. But so far as the Constitution is concerned, I submit to the Hon. Minister that there are separate provisions in the Constitution—Articles 26, 29 and 30—to safeguard the interests of the Muslim minorities—not only Muslim minorities but also other religious minorites in the country. Therefore, so far as the Constitution is concerned, there is no legal bar as such for that.

I plead with the Hon. Minister that if he cannot have a separate Directorate for the minorities, at least a Deputy Director for the minorities can be appointed. So far as that point is concerned, no reply was given by the Minister. There is no constitutional hurdle for that. The Hon. Minister says that there is constitutional hurdle to have a separate department for the Muslim minorities. So far as the Constitution is concerned, there are constitutional provisions for the minorities in Articles 26, 29 and 30 of the Constitution of India. Therefore, when the Constitution itself has accepted the necessity of safeguarding the interests of the religious minorities in this country, what is the difficulty in instituting a separate department or at least in appointing a Deputy Director for minorities? It will go a long way to mitigate the difficulties experienced by the minorities. It has been accepted by all the people in this country. Why not the Tamil Nadu Government come forward to do this ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இது விவாதத்தில் இருக்கிற பிரச்சினை. இதுபற்றி சட்டப்படியான நிலை என்ன என்பதை ஆராய்ந்தே முடிவு எடுக்கப்பட வேண்டிய ஒன்று. சட்டப்படி என்ன செய்ய முடியும் என்பதை ஆராய்ந்த பின்னர் தகவல் தெரிவிக்கிறேன்.



1975 மார்ச் 12]

**திரு. செ. கந்தப்பன்:** ஒரு விளக்கம்—கொங்குவேளாளர் சமுதாயத்தைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை அனுதாபத்தோடு பரிசீலிப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக அந்தச் சமுதாயம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

ஆனால், சட்டநாதன் குழு அறிக்கையில் யாரை, எந்தச் சமுதாயத்தை பின்தங்கியோர் பட்டியலில் சேர்ப்பது, அல்லது ஏற்கனவே அந்தப் பட்டியலில் உள்ள எந்தச் சமுதாயத்தை நீக்குவது என்கிற பிரச்சினை எங்களுக்கு விடப்படவில்லை என்று சொல்லிவிட்டு, கொங்குவேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் தங்களைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரி முன்வரவில்லை என்று சொல்லியிருப்பதாவது ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. அவர்கள் வேண்டுமென்று இதைச் சேர்க்க எதற்காக முயற்சி செய்தார்கள் என்பதை ஆராய்ந்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1969-இல் இந்தச் சமுதாயத்தைப் பின்தங்கியோர் சமுதாயமாக ஆக்குவதற்கு ஒரு அறிக்கை கேட்டதாக அறிகிறேன். அந்த அறிக்கை வந்ததா? அது பரிசீலிக்கப்பட்டதா? அதற்குப் பின்னால் என்ன முடிவு எடுக்கப்பட்டது? பின்தங்கியோர் பட்டியலில் யார் யாரைச் சேர்ப்பது என்பதற்கு சில அளவுகோல் வரையறுக்கப்பட்டும் மிகமிகப் பின்தங்கிய நிலையில் உள்ள மிக முக்கியமான சமூகமான கொங்குவேளாளர் இந்தப் பட்டியலில் ஏன் வரவில்லை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவர்களது கோரிக்கையை அனுதாபத்தோடு கவனிக்கிறேன் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். சட்டநாதன் குழுவில் அவர்கள் சொல்லியிருப்பது சேலத்தைச் சேர்ந்த திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள்தான் இந்தச் சமுதாயத்தைப்பற்றிச் சொன்னார்கள், வேறு யாரும் சொல்லவில்லை என்பதுதான். அதைத்தான் நான் சொன்னேன். அந்தக் குழுவிற்கு இதுபற்றிய அதிகார வரம்பு கொடுக்கப்படாத காரணத்தினால் அவர்கள் இதுபற்றி தாங்கள் ஒன்றும் செய்வதற்கு இல்லை என்று சொல்லியிருப்பதையும் தான் நான் சொன்னேன்.

திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசும்போது நரிக்குறவர்களுக்கு என்ன செய்தார்கள் என்று கேட்டார்கள். இந்த அரசு அவர்களுடைய நலனுக்காக சைதாப்பேட்டையில் தனியாக ஒரு

[திரு. க. இராசாராம்] [1975 மார்ச் 12

இடத்தை ஒதுக்கி வைத்து ஒரு பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறது. மேலும் அவர்களுக்காக ஸ்டாம்பு வெளியிட வேண்டுமென்று உறுப்பினர் ஒருவர் கேட்டார். அதையும் ஏற்றுக் கொண்டு கண்காட்சியில் பத்தாயிரத்திற்கு ஸ்டாம்பு விற்று அதை அவர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நோமாடிக் ட்ரைப்ஸ் என்ற நிலை அவர்களுக்கு இருக்கக் கூடாது என்றுதான் திருச்சிக்கு அருகில் தேவராயநேரியில் 148 வீடுகளைக் கட்டி அவர்களை அங்கே குடியேற்றவும் திட்டமிட்டிருக்கிறோம். நாளையதினம் முதலமைச்சர் அவர்கள் அங்கு சென்று அந்த இல்லங்களைத் திறந்து வைக்க இருக்கிறார்கள். நரிக்குறவர்களுக்கும் இந்த அரசு வாழ்வளித்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

தலைவரவர்களே, அரசாங்கத்திலே இருக்கிற வேலை வாய்ப்புகளையெல்லாம் 31-18 என்ற சதவிகிதத்திலே கொடுப்பதைக் கடைபிடித்துத்தான் வருகிறோம். ஆனால், தனியார் துறையிலேயுள்ள கல்லூரிகளில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

**திரு. கு. காமாட்சி:** நான் சொல்வது, மத்திய அரசு அலுவலகங்கள், சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஓர்க் ஷாப்ஸ் இவைகளிலே ஒன்றுமே கிடையாது . . .

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மத்திய அரசு அலுவலகங்களில் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரவில்லை. அதைப் பற்றியெல்லாம் நாம் மத்திய அரசு அலுவலகங்களுக்கு எழுதுகிறோம். தனியார் கல்லூரிகளுக்கு எழுதுகிறோம். பல ஜாதியினரால் நடத்தப்படுகிற கல்லூரிகளுக்கு எழுதுகிறோம். அங்கே எல்லாம் அவர்கள் சரியாக பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. அவற்றையெல்லாம் கேட்டு நிறைவேற்றுவோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நரிக்குறவர்கள் காலனியைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே, கலெக்டர் மலையப்பன் அவர்கள் திருச்சி மாவட்டத்திலே ஒரு காலனி அமைத்தாரே, அது சரிவர பரிபாலிக்கப்படுவதில்லை. ஒரு பெரிய அதிகாரி, முயற்சி எடுத்து, இவர்களுக்காகச் செய்திருக்கிறார். அது சரியாக நடைபெற அரசு உத்தரவாதம் தருமா என அறிய விரும்புகிறேன்.



1975 மார்ச் 12]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, மலையப்பன் அவர்களுடைய காலத்தில், நரிக்குறவர்களுக்கு பெரம்பலூர் வட்டத்திலே ஒரு காலனியும் பல இடங்களிலே உழுவதற்கு நிலம் கூடக் கொடுக்கப்பட்டது. ஆனால், அவர்கள் சரிவர இல்லாத காரணத்தாலே, அவைகளிலே பல காலியாக இருக்கின்றன. ஆனால், இப்பொழுது தேவராயனேரி என்ற பகுதியிலே 144 வீடுகளில் அவர்கள் இருந்து வருகிறார்கள், வீட்டிலே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கென பள்ளிக்கூடம் கட்டப்பட்டு, அங்கேயே படித்து வருகிறார்கள். அவர்களுக்கு உழுவதற்கு, நிலம் கொடுக்க வேண்டுமென்பதற்கான அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் செய்தார்கள். அவர்கள் விவசாயம் செய்யவிருக்கிறார்கள். மலையப்பன் காலத்திலே இருந்த விதத்திலே அவர்கள் இல்லை.

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (திரு. வா. மை. அப்துல் ஜப்பார் குறுக்கிடு) ஒவ்வொரு சமூகத்திற்காகவும் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். உங்கள் சமுதாயத்திற்காக லத்தீப் எத்தனையோ முறை கேள்வி கேட்டார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அமைச்சரவர்கள் சொல்லிக் காட்டியதிலிருந்து ஒரு விளக்கம் கேட்பேன், அதற்காக ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் கேளுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள், திப்பு சுல்தான் மார்க்கெட் கட்டுவதற்காகச் செய்த உதவிகளைப் பற்றிச் சொன்னார்கள். உண்மையிலே சேலம் பொதுமக்கள் குறிப்பாக முஸ்லிம் பெருமக்கள் நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்.

அதைப் போலவே, குகை ரோடிலே இரண்டு முஸ்லிம் சமாதிகள் உள்ளன. அந்தப் பகுதியிலுள்ள மைதானம் நீண்ட நெடுங்காலமாக அனுபவிக்க முடியாத நிலைமையிலிருக்கிறது. மிகப்பெரிய சொத்து அது. அதையும் எங்களுக்குப் பெற்றுக் கொடுத்து, அந்தச் சொத்தும் வாக்ஃப் போர்டின் மூலமாக,

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1975 மார்ச் 12

எங்களுக்கு நன்மை கொடுக்கக்கூடிய வகையில் செய்தால், நன்மையாக இருக்குமே அதற்கு ஏதாவது அமைச்சர் அவர்கள் செய்வார்களா ? . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழுப்பப்பட்ட பிரச்னைகளுக்குத்தான் விளக்கம் கேட்கலாமே தவிர, புதுப் பிரச்னையை எழுப்பிவிட்டு, அதற்கு விளக்கம் கேட்க முடியாது.

**திரு. கே. என். குமாரசாமி:** கொங்குவேளாளர் சமுதாயம் பிற்பட்டோர் நலக் குழுவிலே ஒன்றுமே சொல்லவில்லை. என்ன காரணத்தாலோ விடப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். முதலமைச்சரவர்களும் கவனிப்பதாகச் சொன்னார்கள். 1969-ம் ஆண்டிலிருந்து அந்தச் சமுதாயத்தைப் பிற்பட்டோர் சமுதாயத்திலே சேர்க்க வேண்டுமென்பதற்காக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் முதலமைச்சரிடத்திலே பல்வேறு கோணங்களிலே, பல இடங்களிலே விளக்கமாக எடுத்துச் சொல்லி, இந்த ஆண்டாவது அறிவிப்பு வருமென்ற நம்பிக்கையோடு இருந்தார்கள். கோவையிலே, 10,000-க்கும் அதிகமான கொங்குவேளாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை பிற்பட்டோர் சமுதாயத்திலே சேர்க்க அறிவிக்க வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார்கள். அதை இந்த டிமாண்டிலே அறிவிப்பது சரியாக இருக்கும். அனுதாபத்தோடு கவனிப்பதாகக் கூறுவதால், காலம் நீண்டு போகக் கூடாது என்பதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, என். டென்னிஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. கே. ஏ. வகாப் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கருதப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்ததனுல் நான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வாபஸ் வாங்குகிறேன்.



1975 மார்ச் 12]

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,86,05,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, எம். ஏ. லத்தீப், கே. பி. கோபால் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப் பட்டன.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,78,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-05 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

(6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

† 131. Notification issued in G.O. Ms. No. 2583, Rural Development and Local Administration, dated the 6th December 1974, in regard to declaration of the area forming the Mettupalayam local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

† 132. Notification issued in G.O. Ms. No. 2657, Rural Development and Local Administration, dated the 18th December 1974 in regard to declaration of the areas forming the Mudurantakam local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

† 133. Notification issued in G.O. Ms. No. 903, Labour, Employment and Housing, dated the 26th September 1974 in regard to appointment of Inspectors for the purposes of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972. [Laid on the table of the House under section 41 (5) of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).]

† 134. Notification issued in G.O. R. No. 374, Commercial Taxes and Religious Endowments, dated the 10th December 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharges on the benefit film shows organised by Heavy Vehicles Factory, Avadi, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

135. Notification issued in G.O. Ms. No. 767, Commercial Taxes and Religious Endowments, dated the 23rd December 1974, in regard to date of commencement of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Act, 1974. [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

136. Notification issued in G.O. Ms. No. 2167, Rural Development and Local Administration, dated the 5th October 1974, in regard to constitution of the post of the Chief Town Planning Officer in Class I of the Establishment of the Corporation of



Madurai into a post in the Civil service for the State of Tamil Nadu. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

137. Notification issued in G.O. Ms. No. 2000, Rural Development and Local Administration, dated the 9th September 1974, in regard to an amendment to the Tamil Nadu Panchayats Building Rules, 1970. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. *Reports, Notifications and other papers.*

@ 62. Policy Note on 'Fisheries' 1975–76. (English and Tamil).

@ 63. Policy Note on Demands under Land Revenue (English and Tamil).

---

@ Despatched to Members on 10th March 1975.

† Laid on the table of the House on 11th March 1975.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

## வியாழக்கிழமை, 1975 மார்ச் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Job-oriented courses.*

*296—Q—THIRU N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce job-oriented degree courses in colleges in the State ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே

(அ) ஆம்.

(இ) வேலை வாய்ப்பை மையமாகக் கொண்ட இரண்டு வகுப்புகள் 1974-75 கல்வியாண்டில் துவக்கப்பட்டன. அவைகளாவன :—

| கல்லூரியின் பெயர். | துவக்கப்பட்ட வகுப்பின் விவரம். |
|---|---|
| மாநிலக் கல்லூரி, சென்னை .. | பி.ஏ. (பிரிவு 18) கூட்டமைப்புச் செயலாளர் ஆக்கப் பயிற்சி தலைமைப் பாடமும் (கார்ப்போரேட் செக்ரட்டரிஷிப்), பொருளாதாரம், புள்ளியியல், வாணிகக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறை விதிகள் (ரெகுலேஷன்ஸ்) துணைப் பாடங்கள். |
| இராணிமேரி கல்லூரி, சென்னை. | பி.எஸ்ஸி., (பிரிவு 10அ) ஊட்டம் மற்றும் உணவு இயல் (நூட்ரிஷன் அண்டு டையடடிக்ஸ்). |

இப்படி இரண்டு கல்லூரிகளில் துவக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி: எம்.ஐ.டி., மற்றும் டெக்னிகல் கல்லூரிகள் நிறைய இருக்கின்றன. அவற்றில் படித்தவர்களுக்கு வேலை இல்லை

அம்மாதிரி படித்தவர்கள் அப்ரெண்டிசாக ஒரு வருஷம், இரண்டு வருஷம் வேலை பார்க்கக்கூடிய வகையில் இதை மாற்றியமைக்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத்தில் ஜாப்-ஓரியன்டெட் என்ற அளவுக்கு, வேலை வாய்ப்புக்கு அடிப்படையாக அமையும் அளவுக்கு கல்வி தர வேண்டும் என்ற அளவுக்கு எட்டு பாட முறைகளை இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகம் புகுத்தி இருக்கிறது. பி. ஏ.—ல் புக் இன்டஸ்ட்ரி, பப்ளிக் ரிலேஷன்ஸ், டூரிசம், கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப் என்ற வகையிலும் பி.எஸ்.ஸியில், நூட்ரிஷன் அண்டு டையடடிக்ஸ், சைல்டு, பாமிலி அண்டு சோஷல் வெல்பேர், ஃபுட் ப்ரிசர்வேஷன், இன்டீரியர் டிசைன் அண்டு என்விரன்மென்ட் போன்று எட்டுப் பாடங்கள் இந்த அடிப்படையில் புகுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப் பாடங்களை எடுத்துப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப்படை நோக்கத்தில் இந்தப் பாடங்கள் பல்கலைக் கழகத்தால் புகுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த ஜாப்-ஓரியன்டெட் கோர்ஸ் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மட்டும்தான் இருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகத்திலும், கோயம்புத்தூர் பல்கலைக் கழகத்திலும் இதை விஸ்தரிக்க அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பல்கலை கழகத்தின் கீழுள்ள பல்வேறு கல்லூரிகளில் இந்தப் பாடத் திட்டங்களைத் துவக்கலாம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். எந்தெந்த கல்லூரிகளில் அதற்கான இட வசதி, மற்ற வசதி இருக்கின்றதோ அங்கு அவற்றைத் துவக்கலாம். ஆனால், மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்கு உட்பட்ட கல்லூரிகளில் இந்தப் பாடங்களைப் புகுத்த வேண்டுமென்றால் மதுரைப் பல்கலைக்கழகம் முடிவு எடுக்க வேண்டும். மதுரைப் பல்கலைக்கழகம் முடிவு எடுக்காமலிருந்தால் அந்தப் பல்கலைக் கழகத்திற்கு நாம் பரிந்துரை செய்யலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரைப் பல்கலைக் கழகத்தில் கீழுள்ள கல்லூரிகளில் இம்மாதிரி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஹோம் ஸயன்ஸ் போன்ற சில பாடங்களை ஓரிரண்டு கல்லூரிகளில் மட்டும்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். மற்ற கல்லூரிகளிலும் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கு வேலை வாய்ப்பு மிகக் குறைவாக இருப்பதன் காரணமாகத்தான் பல்வேறு கல்லூரிகளில் வரவில்லை. இதில் படித்தால், பி.டி. எடுத்துப் படித்து, பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்க வாய்ப்பு ஏற்படவில்லை. ஆகையால், சில பல கல்லூரிகளில்தான் ஹோம் ஸயன்ஸ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மேலும் சில கல்லூரிகளில் முன்வந்தால் பல்கலைக் கழகம் அதற்கான ஏற்பாடு செய்யும்.



திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்தப் படிப்பு இரண்டு கல்லூரிகளில் சொல்லிக் கொடுப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இரண்டு கல்லூரிகளிலிருந்தும் படித்துத் தேறி வருபவர்களுக்கு வேலை வாய்ப்பு எதிர்காலத்தில் கிடைக்குமா ? அவினாசிலிங்கம் ஹோம் ஸயன்ஸ் கல்லூரியில் படித்து வெளிவருபவர்களுக்கே வேலை கிடைக்க வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. இப்படிப் படித்து வேலையில்லாமலிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தரஅரசு எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஹோம் ஸயன்ஸைப் பொறுத்த வரையில், அதற்கென்று இருக்கும் சில துறைகளில் ஓரளவுக்குத்தான் வேலை வாய்ப்பு இருக்கிறது. எந்த அளவுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துவது என்பதைப்பற்றி, பள்ளிகளில் அதற்காக வைத்தால், பி.டி.இல் படிக்க வாய்ப்பு ஏற்படுத்த முடியும். படித்து வந்த எல்லோருக்குமே வேலை வாய்ப்பு இருக்குமா என்று சொல்ல இயலாது. ஆகையால் அந்தந்த துறையையொட்டி ஆங்காங்கு இந்தப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. ஹோம் ஸயன்ஸைப் பொறுத்த வரையில் சிலபல கல்லூரிகளில் இருக்கின்றன. மேலும் பல கல்லூரிகளில் விரிவு அடையாமலிருக்கிறது. அதற்கு வாய்ப்பு ஏற்படும் நேரத்தில் வேறு பல கல்லூரிகளுக்கும் விரிவு அடையச் செய்யலாம்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வணிக இயல், பிஸினஸ் மானேஜ்மென்ட் போன்ற பாடங்களுக்கு தனிக் கல்லூரிகள் ஆரம்பிக்கத் திட்டம் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறியிருந்தார்கள். அத்தகைய திட்டம் என்ன ஆயிற்று ? அப்படியொரு கல்லூரியை கோவை நகரில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கல்லூரி என்று அல்ல. பொருளாதாரம், வணிகயியல் ஆகியவற்றை முக்கிய பாடங்களாகக் கொண்டு இரண்டொரு கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலும் ஓரிரு கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் துவக்க யாராவது முன்வருவார்களானால் ஆக்கம் தருகிறோம். வேறு பல கலைக்கல்லூரிகளிலும் வணிக இயல் பாடத்தைப் பட்டப் படிப்பில்-மேல் பட்டப் படிப்பில்-கொண்டுவர முயற்சிகளையும் செய்துகொண்டிருக்கிறோம். தனியார் முன்வந்தால் பல்கலைக் கழகம் இட வசதி மற்ற வசதிகள் இருக்கின்றனவா என்று பார்த்து அனுமதி தருகிறார்கள். பி.காம். சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், அதற்கு எம்.காம். படித்தவர்களின் எண்ணிக்கை வளர வேண்டியிருக்கிறது. இப்பொழுதுதான் இரண்டொரு கல்லூரிகளில் எம்.காம். வகுப்பு துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் படித்து வெளிவந்தவர்கள் கிடைக்கும்போதுதான் பி.காம். வகுப்பில் பாடம் சொல்லிக்கொடுக்க வாய்ப்பு ஏற்படும். அந்த முயற்சியினையும் பல்கலைக்கழகம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, பல கல்லூரிகளில் வேலை வாய்ப்புத் தேடித் தரும் வகையில் பாட திட்டங்கள் மாற்றியமைக்கப் பட்டன என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். பல அறிஞர்களுடைய கருத்து முழுமையாக அறியப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. சிலபஸ்ஸையே அடியோடு மாற்றியமைக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். அந்த அடிப்படையில் பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தும், மதுரை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தும், இப்பொழுது மூன்று நான்கு ஆண்டுக் காலமாக பாட திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. புதிய முறை-செமஸ்டர் ஸிஸ்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம் ஐந்தாண்டு காலத்தில் 90க்கு மேற்பட்ட புதிய புதிய துறைகளையெல்லாம் கொண்டுவந்திருக்கின்றன. இப்பொழுது புதிய பாடத் திட்டங்களின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளில் புகுமுக வகுப்பு, பட்டப் படிப்புகளெல்லாம் நடைபெற்று வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir these job-oriented schemes should be introduced in high schools and then continued in colleges, so that the candidates may have good grounding in the subjects. May I know from the Hon. Minister whether these subjects will be taught as main subjects in colleges or subsidiary subjects? May I know the details about them?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே உயர்நிலைப் பள்ளிகளிலேயே துவக்கும் முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். அதை காம்ப்ரஹென்சிவ் ஸ்கூல் என்கிறோம். இப்படி 17 பள்ளிகளில் இந்த ஆண்டு புகுத்தியிருக்கிறோம். அவற்றைத்தவிர, பைபர் கேடட் கோர்ஸ் என்ற முறையில் ஏற்கெனவே 200க்கு மேற்பட்ட பள்ளிகள் நடைபெற்று வருகின்றன.. காம்ப்ரஹென்சிவ் ஸ்கீம் முறையை அடுத்த ஆண்டில் சிலபல பள்ளிகளுக்கு விரிவடையச் செய்யும் முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஜாப்-ஓரியண்டட் கோர்ஸ் என்ற அடிப்படையில் எட்டு பாடங்கள் புகுத்தப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், நம்முடைய நாட்டில் பி.எஸ்.ஸி., பி.காம். படித்து முடித்துவிட்டு சடைசியில் க்ளார்க்குகள் வேலைக்கு வருகிறார்கள். அப்படி வரும்போது டிராப்ட் எழுதக்கூட பலபேருக்குத் தெரிவதில்லை. உயர்நிலைப் பள்ளியில் செக்ரடேரியல் கோர்ஸ் வைத்திருக்கிறார்கள். அதையே மேல் படிப்புக்குப் புகுத்தி, அதைப் படித்தவர்கள் க்ளார்க்கு வேலைக்கு வரவேண்டும் என்ற அடிப்படையில் விரிவாக்க நம்முடைய அரசு முயற்சிக்குமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே' உறுப்பினர் அவர்கள் கூறுகிற யோசனை நல்ல யோசனை. அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதை ஆராய வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஜாப்-ஓரியண்டட் கோர்ஸ் நடத்துவதற்கு ஆசிரியர்களுக்கு விசேஷ பயிற்சி அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தந்தத் துறையில் வல்லுநர்களைக் கொண்டுதான் நாம் பயிற்றுவிக்க வேண்டும். குறிப்பிட்ட துறையில் போதுமான அளவுக்கு பயிற்சியாளர்கள் இல்லாவிட்டால் அவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அந்தந்தத் துறையில் வல்லுநர்களாக உள்ளவர்கள் தான் சொல்லிக்கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அடிப்படையில் நடத்தப்படுகிற வகுப்புகளுக்கு தனியே ஒரு கல்லூரி துவக்கலாமே. ஏற்கெனவே இருக்கிற கல்லூரியோடு இணைக்க வேண்டும் என்பது அவசியமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே இருக்கிற கல்லூரிகளில் இருக்கிற படிப்பு போதும் என்ற அளவுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தரவில்லை. மெல்ல மெல்ல மாற்றவேண்டி வரும். இல்லாவிட்டால் ஒரே ப்ரொடோ டைப்பாக இருக்கும். மாதமேடிக்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, ஸையன்ஸ் படித்து வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்றால், 183 கல்லூரிகளை இப்படி வேலை வாய்ப்புக்குப் பயன்படக்கூடிய அளவுக்கு மாற்றினால் மாணவர்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து பயிலுதல் எதிர்காலத்தில் அவர்களுக்குத் தக்க இடம் கிடைக்கும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் கல்லூரிகளில் மெல்ல மெல்ல புகுத்தி வருகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் 'வொக்கேஷனலைசேஷன் ஆப் எஜுகேஷன்' ஆக இருக்க வேண்டும். தற்போது 'எஜுகேஷன் ஈஸ் இன் க்ரைஸிஸ்' கல்வியிலே பெரிய நெருக்கடி இருக்கிறது. படித்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கக்கூடிய நிலைமை இல்லை. ப்ரொடக்ஷன் ஓரியன்டெட்டாக இருக்க வேண்டும். தொழில் விவசாயம் என்ற இரண்டையும் அடிப்படையாக வைத்து, மாணவர்களுக்குக் கீழேயிருந்து போதிக்கக் கூடிய முறையில் கல்வி முறையை மாற்றியமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த வகையில்தான் கல்வித்துறை ஆராய்ந்து வருகிறது. மாநில அரசால் நியமிக்கப்பட்ட திட்டக் குழு, கல்விக்காக அமைக்கப்பட்ட குழு, இரண்டு ஆண்டுக் காலம் ஆராய்ந்து யோசனை சொல்லியிருக்கிறார்கள். வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிற கல்வி முறையைப் புகுத்தும் போது ஒவ்வொரு துறைக்கும் அதிக செலவு நமக்கு ஏற்படும்.

[1975 மார்ச் 13

அதை நாம் தாங்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான வாய்ப்பு வசதி உள்ள கல்வி நிலையங்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் படிப்படியாக முறைகள் புகுத்தப்பட்டு வருகின்றன.

*297—வினா—திரு என். கே. பழனிசாமி: திரு என் கிட்டப்பா மாண்புமிகு கல்வித் சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்கு 9 ஆம் வகுப்பிலிருந்து நேரடி தொழில் பயிற்சி அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம், எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) and (இ) 1974–75ம் ஆண்டு முதல் 11 உயர்நிலைப் பள்ளிகளில் ரேடியோ பொறியியல், எலெக்டிரிக் மின்சார இயக்கிகள் பின்னுதல் ஆகிய இரு பாடங்கள் பதிலாகத தொடங்கப்பட்டுள்ளன. ஐந்து உயர்நிலைப் பள்ளிகளில் உந்து வண்டி பழுது பார்க்கும் பாடம் தொடங்கப்பட்டுள்ளது. மூன்று உயர்நிலைப்பள்ளிகளில் வேளாண்மைப் பொறியியல் பாடம் விரைவில் தொடங்கும். மேற்சொன்ன பாடங்கள் நேரடி தொழிற்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டவையே ஆகும். அவை அனைத்தும் பாட நேரத்திற்கு வெளியில் பிற பாடங்களுக்கும் மேலாகக் கற்றுத் தரப்படும்.

திரு. என கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு குறிப்பாக வேளாண்மை பொறியியல் முறையை நிரந்தரமாக, கட்டாயமாகக் கொண்டு வருவதற்கு 9-ஆம் வகுப்பிலிருந்து நேரடித் தொழிற் பயிற்சியாகக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே கூறியபடி 11 உயர் நிலைப் பள்ளிகளிலே இந்த ஆண்டு ரேடியோ மெக்கானிக், மோட்டார் ரீவைண்டிங் ஆகிய இரண்டு பாடங்கள் புகுத்தப் பட்டிருக்கின்றன. அதிலே தஞ்சாவூர் அறந்தாங்கி உயர்நிலைப் பள்ளியிலே அந்தப் பாடம் புகுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மையைப் பொறுத்த வரையில் சிறப்புப் பாடமாக பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியில் புகுத்தப்பட்டிருக்கிறது. மேலும் மேலும் இப்படிப்பட்ட முறையிலே வெவ்வேறு பள்ளிகளில் புகுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு இருக்கிறது.

திரு என். கே. பழனிசாமி : சார், சிறிய வகுப்புகளில், நரி வேட்டையாடுவது, அணில் பிடிப்பது, மட்பாண்டங்களைச் செய்வது போன்ற தொழிற் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டுமென்பது அவசியந்தானா? இப்போது சொல்லிக் கொடுக்கப்படுகிற பாடங்கள் தியாரிடிக்கலாகத்தான் இருக்கின்றனவே தவிர பிராக்டிக்கல்லாக இல்லை. அதனால் அந்தப் பாடங்களை படித்துவிட்டு வெளியே வருகின்ற பையன்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. அதை மாற்றியமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?



1975 மார்ச் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கல்வித் துறையிலே அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் பல்வேறு மாறுதல்கள், செய்யப் படுகின்றன. பள்ளிகளிலே அளிக்கப்படுகின்ற பயிற்சி வெளியே பயன் படாத காரணத்தால் நாளடைவில் பேஸிக் "எஜுகேஷன்" என்பதை கைவிட்டுவிட்டு காம்ப்ரஹென்ஸிவ் மெத்தட் என்ற முறையிலே "ரேடியோ மெக்கானிக், மோட்டார் ரீவைண்டிங், அக்ரிகல்சரல் எஞ்சினியரிங்" ஆகிய மூன்று வகைகளிலே பல்வேறு பாடங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, எங்கெங்கே எந்த எந்தப் பாடங்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றனவோ அவை அங்கங்கே புகுத்தப்படுகின்றன. எட்டாவது வகுப்புப் படித்தவர்களாக இருந்தால் அவர்களை ஐ.டி.ஐ.யிலே எடுத்துக் கொள்ளலாம். பத்தாவது வகுப்பு படித்தவர்களாக இருந்தால் பாலிடெக்னிக்குகளில் சேர்த்துக் கொள்ளலாம், அதற்கு மேலும் படித்தவர்களாக இருந்தால் எஞ்சினியரிங் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளலாம். பாலிடெக்னிக்குகளில் படிக்கிறவர்கள் அங்கே உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இருநதால் மதுரை பாலிடெக்னிக்கில் அந்த வாய்ப்பு இருக்கிறது—அங்கேயே இருக்கிற மெஷின்களைப் பயன்படுத்திக் கொண்டு அவற்றிற்காக ஓரளவிற்குச் வாடகை 30 காசுகள், 40 காசுகள் என்று கொடுத்துவிட்டு ஓரளவிற்கு சம்பாதித்துக் கொள்ளலாம் என்று வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சார், பள்ளி நேரம் முடிந்ததற்குப் பிறகு அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்குப் பதிலாக பள்ளிக்கூட நேரத்திலேயே அவற்றையும் பாடங்களாகச் சொல்லிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இருக்கிற பாடங்களைச் சொல்லிக கொடுப்பதற்கே நேரம் போதுமானதாக இல்லை என்று கூறுகிறார்கள். மொழிக்கு, கணக்கியலுக்கு நேரம் போதவில்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. ஆகவே அடிப்படைப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவே நேரமில்லை என்ற நிலை தான் இருக்கிறது. இப்போது 11 உயர்நிலைப்பள்ளிகளிலே இந்த முறையிலே சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இதிலே என்ன என்ன நிலைமைகள் ஏற்படுகின்றன என்று கண்டாராய்ந்து அதற்குப் பிறகு அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளிலே மாற்றங்கள் தேவையானால் செய்யலாம்.

திரு வை. பாலசுந்தரம் : இது மாணவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையை பொறுதத காரணத்தினாலே எல்லாப் பள்ளிகளிலேயும் விரிவு படுத்துவதற்கு எண்ணம் உண்டா? அதே நேரத்தில தொழிற்பயிற்சி சொல்லிக் கொடுக்கப்படுகிற பள்ளிக்கூடங்களிலே தேவையான எக்விப்மெண்ட்ஸ் கொடுக்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறதே, அதை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டேன். 11 உயர்நிலைப்பள்ளிகளிலே மோட்டார் ரீவைண்டிங் ரேடியோ மெக்கானிக் போன்றவற்றை புகுத்துவதற்கு [illegible] முதலான

செலவு கிட்டத்தட்ட ஒரு லட்சத்து அறுபதுஆயிரம் வரையிலும் 5 உயர்நிலைப் பள்ளிகளில் உந்து வண்டி பழுது பார்க்கும் பயிற்சியளிக்க 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வரையில் ஆகிறது. ஆகவே, எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் அதைக் கொண்டுவர வேண்டுமானால் அதிகமான செலவாகும். ஆகவே படிப்படியாக இருக்கிற வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து இந்த முறைகளைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது.

மாண்புமிகு அமைச்சர் திரு ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டம் அவர்கள் 11 உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 11 மாவட்டங்களில் எந்த எந்த பள்ளிகளில் என்ற விவரத்தைச் சொல்லமுடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எம்.சி.டி. உயர்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை கிறித்துவ கல்லூரி உயர்நிலைப்பள்ளி சேத்துப்பட்டு, அரசு கழக உயர்நிலைப்பள்ளி, குளித்தலை, அரசு கழக உயர்நிலைப்பள்ளி ஆரணி, அரசு கழக உயர்நிலைப்பள்ளி அறந்தாங்கி, அரசு கழக உயர்நிலைப்பள்ளி ராசிபுரம், அரசு கழக உயர்நிலைப்பள்ளி தர்மபுரி, கே. ஜே. என் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம், புனித மேரி உயர்நிலைப்பள்ளி, மதுரை, உயர்நிலைப்பள்ளி, திருச்சி, இளையான்குடி உயர்நிலைப்பள்ளி, இளையான்குடி ஆகியவையாகும்.

திரு எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே இப்போது, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதில் தஞ்சாவூர் விடப்பட்டிருக்கிறது. குறிப்பாக நகரப்புறங்களிலேதான் இப்படிப்பட்ட தொழிற் பயிற்சியை ஆரம்பிக்கிறார்கள், கிராமப்புறங்களிலேயும் அவற்றை ஏற்படுத்தினால்தான் அங்கே வேலையில்லாத திண்டாட்டத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள் இந்தத் தொழில்களைச் செய்து பிழைப்பார்கள். ஆகவே கிராமப்புறங்களிலேயும் இதை விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அறந்தாங்கி தஞ்சை மாவட்டத்திலே இருந்தது. இப்போது புதுக் கோட்டையிலே உள்ளது. ஆகவே தஞ்சை மாவட்டத்திலே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வேளாண்மையைப் பொறுத்த வரையில் பயிற்சி பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் கொடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பயிற்சிக்கு தஞ்சை ஏற்ற இடம் என்பதாலே வேறு சில இடங்களிலே அக்ரிகல்சுரல் எஞ்சினியரிங் கோர்ஸ் ஆரம்பிப்பதற்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

## அரசினர் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

*298 வினா—திரு கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்விச்-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தஞ்சாவூர் அரசினர் மகளிர் கல்லூரிக்கு மாணவர் விடுதிக் கட்டடம் ஒன்று புதிதாகக் கட்டுகின்ற உத்தேசம் அரசிற்கு உண்டா?

(இ) ஆம் எனில், அதன் உத்தேசச் செலவு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ரூ. 4.50 லட்சம்.

திரு கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம் தொடங்க இருப்பதாகச் சொன்னார்கள், எப்போது தொடங்க இருக்கிறார்கள் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக மானியக் குழு ஆதற்கு 3 லட்சம் தரும். அது மத்திய அரசிலிருந்து வந்தபிறகு அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

## செல்லியம்மன் ஓடைத் திட்டம்.

*299 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், மணக்குடையான் ஊராட்சி, இருங்களாகுறிச்சி கிராமம் செல்லியம்மன் ஓடைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன?

(உ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : (அ) இத் திட்டத்திற்கான மதிப்பீடு ஸ்தலப் பொறியாளர்களின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ரூ. 2.05 லட்சம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை. ஏனென்றால், இத்திட்டத்திற்கான மதிப்பீடு இன்னும் அரசின் பரிசீலனைக்கு வரவில்லை.

திரு. செ. சதாசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியிலே ஆற்றுப்பாசனம் இல்லை என்று முன்பே குறிப்பிட்டிருந்தேன். இதை உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதிப்பீடு அரசுக்கு வந்தவுடன் அதைப்பற்றி ஆணை பிறப்பிக்கப்படும்.

வெட்டாற்றின் குறுக்கே அணை.

*300 வினு—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தாலுகா, வெட்டாற்றின் குறுக்கே ஊர்குடி அருகில் (Bed-dam) ஒன்று கட்டி காவனூர் சூரனூர் போன்ற எழு கிராமங்களின் நீர்ப்பாசன வசதிகளைச் சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஸ்தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

திரு. தாழை மு. கருணாநிதி : இது இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படுமா? அதற்கு அமைச்சர் அவர்கள் உறுதியளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் முடிவுற்றவுடன் மதிப்பீடு தயார் செய்யப்படும் அநேகமாக 1975-76-ல் இந்த வேலை நடைபெறும் என்று நம்புகிறேன்.

*Chemical Industries.*

*301 Q—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that the feasibility report has been submitted to Government on running Chemical Industries in Small Scale Sector by Messrs. M. M. Gurunath & Sons ;

(*b*) whether the report has been examined by the Government ; and

(*c*) whether a copy of the report will be placed on the table of the House'

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) : ஆம்

(உ) உப்பு, ஜிப்சம், பிட்டர்ன்ஸ் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறுதொழில்கள் வளர்ச்சி குறித்து திருவாளர்கள் எம்.எம். குருநாதன் & சன்ஸ் தயாரித்த தொடக்க திட்ட அறிக்கையின் நகல்கள் சட்டமன்ற பேரவைத்துறை நூலகத்தில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : சார், அவர்கள் சிபாரிசு செய்த முக்கியமான தொழில்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா

The HON. THIRU S. J. SADIQ PASHA : The developmen t si for the under-mentioned marine chemical industries.—





1. Freelowing table salt.
2. Dairy Salt.
3. Cattle licks.
4. Soral cement tiles.
5. Potassium schoentie (double sulphate of potassium and magnesium).
6. Hydrated calcium silicate.
7. Light basic magnesium carbonate.
8. Potashalum.
9. Sodium cholarate.
10. Magnesium metal.

இந்த பத்திலே எட்டு கெமிகல்சைப் பொறுத்து அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

*302 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்-மின் சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

வேதாரண்யத்தில் உப்பை மூலப் பொருளாக் கொண்ட இராசயனப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுத் துறையில் அமைக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேதாரண்யம் பகுதியில் உப்புத் தொழில் ஏற்படுத்த நிலத்தை தொழில் நுட்ப-பொருளாதார ரீதியில் மேம்படுத்துவது ஆய்விலுள்ளது.

*Conference of Agriculture Ministers.*

*303 Q. THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether it is a fact that a conference of the State Agriculture Ministers was held in New Delhi in January 1974 ; and

(*b*) the details of the subjects discussed at the conference?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த ஐந்து சிபார்சுகளில் (setting up of a gobar gas plant) என்று இருக்கிறது. இது இப்பொழுது எந்தெந்த இடங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சரவர்கள் சொல்லுவார்களா?

---

*384-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, gobar gas plant பற்றி நமது காதி வாரியத் துறை அமைச்சரவர்களிடத்திலே கேட்க வேண்டும். அந்த வாரியத்தின் மூலம் அது செயல்படுத்தப்படுகிறது. அடுத்து, sewage utilisation scheme மதுரை நகராட்சி உள்பட 10 local bodies களில் அமல்படுத்துவதாக இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த ஐந்து விதமான ஆராய்ச்சியிலே நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகள் வழங்குதல் என்று ஒன்று இருக்கிறது. அதாவது பூமியிலிருந்து வரும் அந்தப் பூச்சிகளை கொல்லவும், அல்லது சரியான சத்து ஏற்படுத்துவதாக நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகள் அளிக்கவும் நடவடிக்கை விரைவில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த பேக்டீரியல் கல்சரைப் பொறுத்தவரையில், அது ரிசோபியா என்ற கிருமிக்கு ஆகாயத்திலுள்ள நைட்ரஜன் சத்தைப் தரையிலே வைக்கும் சக்தி இருப்பதால் அந்த ரிசோபியா என்ற அந்த நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகளைக் கொடுக்கிறோம். அதை பிளாஸ்குகளிலும் கொடுக்கிறோம், பாலதீன் பைகளிலும் கொடுக்கிறோம். சென்ற ஆண்டு ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட பேக்குகளைக் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, மாநகராட்சிகளிலும், பெரிய பெரிய நகராட்சிகளிலும் இந்த "மெகானிக்கல் கம்போஸ்ட் பிளாண்ட்" களை நிறுவுவது பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது? அதைப்பற்றி அரசு என்ன முடிவைச் செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, முதலிலே இந்த மெகானிக்கல் கம்போஸ்ட் இயந்திரங்களை சென்னை மாநகராட்சியிலும், மதுரை மாநகராட்சியிலும் செயல்படுத்துவது என்று நினைத்து, அதற்கான தனியான திட்டம் தயாரித்து, சென்னை நகரத்திற்கு ஏறக்குறைய 61.75 இலட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டத்தை தயார் செய்து வருகிறோம். இதற்கு மத்திய அரசின் மானியம் உண்டு. அதைப் பற்றித் தகவல் வரவில்லை.

*Correspondence course for agriculturists.*

*304—Q— THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether it is a fact that correspondence course has been started by the Tamil Nadu Agricultural University Coimbatore, and





(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) தீவிர நெல் சாகுபடி, தீவிர காய்கறி சாகுபடி, கோழி வளர்ப்பு, விதைகள் உற்பத்தி, டிராக்டர் பராமரிப்பு ஆகியவை பற்றி அஞ்சல் வழிப் பாட முறைகள் தொடங்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், கடிதப் போக்குவரத்தைவிட ஒவ்வொரு சமயத்திலும் நேரடியாகப் பார்க்க வேண்டிய இடங்களில் நேரடியாகப் பார்த்து ஆலோசனை செய்யும் முறையிலே இதை ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே இந்த அஞ்சல் வழிப் பாட முறைகள்கூட முடிகின்ற தருவாயில் இதைப் படிப்பவர்களுக்கு நேரடியாக ஒரு சில நாட்கள், இந்தப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. ஆனால் என்னுடைய கருத்து, நன்றாகப் போதிக்க வேண்டுமென்றால் தனியான "மாடல் ஃபார்ம்ஸ்" ஏற்படுத்தி எல்லா விவசாயிகளும் பாடம் கற்றுக்கொள்ள அனுமதித்தால் சிறப்பாக இருக்கும் என்று அதையும் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, இம்மாதிரியான கடிதத்தின் மூலம் பாடம் சொல்லிக் கொடுப்பது என்பதை ஏதோ ஊரிலே ஒருவர் இருவர் படித்தவர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால் நூற்றுக்கு 90 பேர் விவசாயிகளாக உள்ள இடங்களில் இது பயன் தராது. ஆகவே, அரசாங்க டெமான்ஸ்ட்ரேட்டர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று ஒரு மாதத்தில் பத்து நாட்கள் ஸ்டடி கிளாஸ் மாதிரி வைத்து, விவசாயிகளுக்கு நல்ல விவசாய நுணுக்கங்களைச் சொல்லித் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த பாட முறையிலே ஊருக்கு ஓரிருவர் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தகவல் அப்படி இல்லை. நமது மாநிலம் பூராவுமே ஏறக்குறைய 200 பேர்தான் இந்தப் பாட முறையைக் கற்று வருகிறார்கள். இன்றைக்கு கிராமத்திற்கு ஓரிருவர் என்றால், ஏறத்தாழ 50,000 பேர் இருக்க வேண்டும். இந்த "டெமான்ஸ்ட்ரேஷன் பிளாட்ஸ்" வேளாண்மைத் துறை அதிகாரிகள் அந்தந்த ஊர்களுக்குச் சென்று வேளாண்மையிலுள்ள நவீன முறைகளைக் கற்றுத் தருவது என்பது இப்பொழுது நடைமுறையிலிருக்கிறது.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்திலேயும், கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலேயும் புதிய ரக நெல்லும், புதிய கரும்பு ரகங்களும் கண்டு பிடிக்கப்படுகிறது. இந்த மாநாட்டில் அவர்களை ஊக்குவிப்பதற்காக ஏதேனும் பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அஞ்சல் வழிப்பாட முறைகளைப் பற்றியது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட ஒருசில பாடங்களில் அஞ்சல்வழிப் பாட முறை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அதற்கு விண்ணப்பம் செய்வதற்கு யார் யார் தகுதியுடையவர்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, யார் யார் தகுதியுள்ளவர்கள் என்ற குறிப்பு எனனிடம் இல்லை. ஆனால் இவ்வாறு அஞ்சல் வழிப்பாட முறைகளைக் கற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள் மூன்று மாதங்களுக்குக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் 50 ரூபாயும், 6 மாதங்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் 100 ரூபாயும் செலுத்த வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், விவசாய உற்பத்தியை மிக வேகமாகச் செய்ய வேண்டிய இந்த நேரத்திலே இந்தப் பாடமுறை மிகவும் நல்லது தான். ஆனால், இந்தப் பாடமுறை நல்லது என்ற காரணத்தினால் தான் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில், இந்தப் பாட முறை எல்லோருக்கும் எட்டும் வகையில் முயற்சிக்க வேண்டாமா ? கட்டணம் விதிப்பதன் காரணமாக அந்தப் பாட முறை வேகமாகப் பரவுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு கிராமம் அல்லது ஒரு பிளாக்கிற்கு என்று நிச்சயமான பாடமுறைகளை அமைத்துத் தர முயற்சியெடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஏறத்தாழ இப்பொழுது 200 பேர்களுக்கு இந்த அஞ்சல் வழிப் பாடமுறை கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இன்னும் அதை அதிகப்படுத்துவது என்று சொன்னால், இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறோம். அது செயல் முறையில் எப்படி வருகிறது என்று பார்த்து, அது வெற்றிகரமாக இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இந்த அஞ்சல் வழிப் பாட முறை எந்த மொழியில் கற்றுக் கொடுக்கப்படுகிறது, தமிழ் மொழியிலா அல்லது மற்ற மொழிகளிலா ? இந்தப் பாட முறையை முடித்தவர்களுக்கு ஏதேனும் பட்டயம் வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது தமிழிலும் ,ஆங்கிலத்திலும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பாட முறையில், 3 மாதம் அல்லது 6 மாதம் முடித்த பிறகு அவர்களுக்கு ஏதாவது டிப்ளமா கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. இது, விவசாயிகள் நவீன முறைகளை அவர்களாகத் தெரிந்து கொண்டு சொந்த முறையிலே கையாள்வதற்காகச் செய்யப்படும் முறையாகும்.



திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த அஞ்சல் வழிப்பாடமுறைகளைப் பெறுவதற்கு 50 ரூபாய், 100 ரூபாய் என்று கட்டணம் விதிப்பதால் அதிகமான ஆட்கள் இந்தப் பாட முறையைப் பெற முடியவில்லையா என்று திரு. சுரேந்திரன் அவர்கள் கேட்டதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை. அந்தக் கட்டணத்தை நீக்கிவிட்டால் அதிகமான ஆட்கள் சிறந்த பலன்களைப் பெற உதவியாக இருக்குமே. சாதாரண ஏழை எளிய மக்கள் பணம் கட்டிப் பெறுவது என்றால் முடியாது. இன்னொன்று இந்தப் பாட முறையில் சேர்வதற்கு ஏதாவது தகுதி இருக்கிறதா ? அல்லது யார் வேண்டுமானாலும் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பிக்கலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி, அவர்களுக்கு என்ன தகுதிகள் வேண்டுமென்பதைப் பற்றி இங்கே குறிப்பில் இல்லை. இந்தப் பாட முறையை நடத்துவது வேளாண்மைப் பல்கலைக் கழகம், யூனிவர்சிட்டி நடத்துகிறது. அந்தக் கட்டணத்தை அவர்கள் இப்பொழுது வசூலித்துக்கொண்டு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை அந்தப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவிக்கப்படும்.

(முற்பகல் 9–30)

திரு. எஸ். ஆறுமுகம் : அஞ்சல் வழி பாட முறையில் பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு வானொலி மூலம் விரிவுரைகள் அளித்து பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தற்சமயம் வானொலியில் பள்ளிக்கூடம் மாதிரியாகவே இதைப் பற்றிச் சொல்லி கொண்டு வருகிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : உழவர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்கின்ற அதிகாரிகளில் சில பேருக்கு அனுபவ உண்மைகள் பல தெரிவதில்லை. ஐ. ஆர். 8 நாற்று அரை அடிக்கு ஒன்று வீதம் நட வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது நெருக்கமாக நடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அனுபவ ரீதியாக விவசாயிகள் பயிற்சி பெற ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதிகாரிகள் பயிற்சிக்காக வேறு மாநிலங்களுக்கும், வேறு பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்படுகிறார்கள். வேளாண்மைத் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் நடைபெறுகின்றன. முன்பு 6 அங்குல அளவுக்கு நாற்றை நடலாம் என்று சொன்னது. இப்போது 4 அங்குல அளவில் நடலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு செடியில் குறைவாக வளர்ச்சி இருந்தாலும் ஏக்கர் முழுவதும் பார்க்கும் போது அதிக விளைச்சல் கிடைக்கும். இப்போது ஏ.டி.டி. 31 என்ற புதிய ரக நெல் விதை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது ஐ.ஆர். 8-ஐ விட அதிக விளைச்சல் தரும். இப்படி புதிய புதிய விதைகள், முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்களிடத்தில் பரப்பப்படுகின்றன.

[1975 மார்ச் 13

திரு. ஆ. பரந்தாமன் : தமிழ்நாட்டிலே ஏனோ கரஸ்பான்டன்ஸ் கோர்சுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. டில்லி பல்கலைக் கழகத்தில் அதிக முக்கியத்துவம் இதற்குக் கொடுக்கப்படுகிறது. வேளாண்மை முக்கியமாக இருக்கும் காரணத்தால் வேளாண்மைத் துறையில் கரஸ்பான்டன்ஸ் கோர்ஸ் பட்டப்படிப்பு மாஸ்டர்ஸ் டிகிரி வரை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேளாண்மை பற்றிய பாடங்களை வேளாண்மைத் துறை கற்றுக் கொடுப்பதில்லை. அஞ்சல் வழிப் பாட முறையில் வேளாண்மை பற்றிக் கற்றுக் கொடுப்பது, வேளாண்மைப் பல்கலைக் கழகந்தான். அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைத் தெரிவிக்கிறேன்.

திரு. கோவை செழியன் : இலாகா மூலம் டெமானஸ்ட்ரேட்டர்ஸ் ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்லுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் என்னுடைய சொந்தக் கிராமத்திற்கே இதுவரை யாரும் வரவில்லை. நானே சில டெமான்ஸ்ட்ரேட்டர்களைக் கூப்பிட்டு கேள்வி கேட்டால் விவசாயத்தைப் பற்றிக் குடியானவர்களுக்குத் தெரிந்த விஷயம் கூட அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி அறிந்து கொள்ள பயிற்சி கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கு அவ்வப்போது பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மைத் துறையில் வேகமாக நுண்ணறிவு பரவிக்கொண்டு வருகிறது. வேளாண்மைத் துறை அதிகாரிகள் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் பட்டதாரியாக இருப்பார்கள். அதனால் புதிய நவீன முறைகளைக் கற்றுக் கொடுக்க அவர்கள் டிரெயினிங்குக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள்.

## மஞ்சள் ஏற்றுமதி

* 305 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மஞ்சள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ)) தமிழ்நாட்டிலிருந்து 1972-73 ஆம் ஆண்டு 4,15,283 கிலோ எடையுள்ள மஞ்சள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

திரு. ஈ. எம். நடராசன் : மஞ்சள் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் எதையும் அரசாங்கம் இதுவரை செய்ததாகத் தெரியவில்லை. அதனால் அது குறைந்து வருகிறது.



1975 மார்ச் 13]

மஞ்சளுக்குப் பதிலாக கரும்பையும் கத்தரியையும் அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். ஆகவே, அரசு மஞ்சள் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மஞ்சள் விவசாயத்தைப் பற்றி நம்முடைய விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தேவையில்லை. நல்ல விதைகளைக் கொடுக்க அரசு முயற்சித்து வருகிறது. மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசனை செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலனை செய்கிறேன். தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 50,000 ஏக்கர் அளவுக்கு மஞ்சள் பயிரிடப்படுவதில் 42,000 ஏக்கர் கோவை மாவட்டத்தில் பயிராகிறது. ஆகவே, கோவை மாவட்ட உறுப்பினர் அவர்களுடைய கருத்து நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். வடிவேல் : மஞ்சள் பயிருக்கு அதிகமாக உழைப்புத் தேவையில்லை. இரண்டு மூன்று நடவை தண்ணீர் இறைத்தால், போதும். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். வறண்ட பகுதியைப் பற்றிச் சொல்லவில்லை. தஞ்சை வயல்களில் வாய்க்கால்கள் பெரும் பகுதி போகும். தஞ்சையில் வரப்பு வெளிகளில் மஞ்சள் பயிர் நிறையப் போடலாம். அதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வரப்பு வெளிகளில் மஞ்சள் போடுவது பற்றி என்னிடம் குறிப்பு இல்லை. தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 50,000 ஏக்கரில் மஞ்சள் பயிரிடுவதில் தஞ்சை மாவட்டத்தில் 480 ஏக்கரில் தான் பயிராயிருக்கிறது. அது இப்போது 372 ஏக்கராகக் குறைந்திருக்கிறது.

திரு. கோவை செழியன் : கோவை மாவட்டத்திலே மஞ்சள் அதிகமாக உற்பத்தியாகக் காரணம் அங்கிருக்கும் மண்தான். எல்லா இடங்களிலும் மஞ்சள் வராது. மஞ்சள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் இல்லாததற்குக் காரணம் வருஷா வருஷம் விலை நிரந்தரம் இல்லாமல் போகிறது. விலையைக் கட்டுப்படுத்தி அரசாங்கம் இதற்காக தனியாக ஒரு கார்ப்பரேஷனாவது அமைத்து விவசாயிகளுக்கு ஊக்கமளித்து மஞ்சளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதற்கென்று தனியாகக் கார்ப்பரேஷன் ஏற்படுத்துவது என்பது ஆலோசிக்கப்பட வேண்டிய காரியம். மார்க்கெட்டிங் பெடரேஷன் அல்லது மார்க்கெட்டிங் சொசைடிஸ் மஞ்சளை வாங்க முடியும். வேளாண்மைத் துறை மூலம் வாங்கலாமா என்று பரிசீலனை செய்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : இதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெற வாய்ப்பு இருப்பதால் இதை அதிகமாகப் பயிர் செய்து ஏற்றுமதி செய்ய அரசாங்கம் புதிய திட்டங்கள் வைத்திருக்கிறதா ?

[1975 மார்ச் 13

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எக்ஸ்போர்ட் என்பது கிரவுண்ட்நட் போன்ற சில பயிர்களுக்குத் தான இருக்கிறது. மஞ்ளுக்கு எக்ஸ்போர்ட் இல்லை. இதிலே ஏராளமாக வெளிநாட்டுச் செலாவணி வரவில்லை. 10 லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் வெளிநாட்டு நாணய கிடைக்கிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : கோவை மாவட்டத்தில் 42,000 எக்கர் நிலத்தில் மஞ்சள் பயிரிடப்படுகிறது என்று சொன்னார்கள். இதற்கு நல்ல விதைகள் கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். கோவையில் இருக்கும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ? நல்ல விதைகள் கிடைக்கச் செய்வதன் மூலம் உபரியாக மஞ்சளில் வருமானம் கிடைக்க வழி ஏற்படும் அல்லவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தீவிர விதைகளைத் தயார் செய்து உழவர்களுக்குக் கொடுப்பது என்பது அரசு இப்போது செய்து வருகிற திட்டமாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Turmere is a profitable crop and it yields plenty of profit. It requireis plenty of water and manure. It has been neglected all these years. There iss cope to improve it. So may I know from the Hon. Minister whether he will provide more incentives in the form of manure and subsidy for cultivating the crop in other areas of the State like Hosur where it can be grown in plenty?

The HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, there is no proposal before the Government for the grant of any subsidy for the growing of turmeric crop. Even now the farmers of Coimbatore are producing about 4½ tonnes per acre which is a very good yield but in-other districts the growth is not so good. Therefore, the present idea is to increase the cultivation of turmeric in the Coimbatore district where it is popular and where the farmers are used to the growing of the crop.

திரு. வை. பாலசுந்தரம் ; மஞ்சளை விட மஞ்சள் கயிற்றுக்கு வெளி நாடுகளில் மவுஸ் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக, கீழ்த் திசை நாடுகளில் மஞ்சள் கயிறுக்கு மவுஸ் இருக்கும் காரணத்தால் அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவர்கள் ஈ. ஈ. சி. நாடுகளைப் பற்றி குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) எதைப் பற்றி குறிப்பிட்டீர்கள்? நான் சொல்கிறேன், பதில் உங்களுக்கு......



1975 மார்ச் 13]

திரு. வை. பாலசுந்தரம் : கிழக்குத் திசை நாடுகள் பற்றிக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நாம் வெளி நாடுகளுக்கு, தமிழ நாட்டிலிருநது ஏற்றுமதி செய்வது முக்கியமாக இலங்கைக்குத் தான். இலங்கைக்கு மட்டும் நாம் ஏறத்தாழ 1,36,000 கிலோ ஏற்றுமதி செய்கிறோம். அடுத்தாற்போல் வருகிறது—கிலோ கணக்கில் தான் சொல்ல வேண்டியிருக்கிறது, மஞ்சளை நாம் கிலோ கணக்கில் தான் ஏற்றுமதி செய்கிறோம்—இங்கிலாந்து. அந்த நாட்டிற்கு 1,07,000 கிலோ என்கிற அளவுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம். ஆனால் மற்ற நாடுகளில் அரேபியன் நாடுகளில் (குறுக்கீடு) மஞ்சள் கயிறா? மஞ்சள் கயிறைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. Probablv he means coconut fibre. I do not know.

சேலத்திலுள்ள நகராட்சிச் சாலைகள்.

*306—வினா.—திரு. கி. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73, 1973-74-ம் ஆண்டு சேலம் நகரத்தில் அரசுப் பராமரிப்புக் காகப் புதியதாக எடுத்துள்ள நகராட்சிப் பாதைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1972-73-ம் ஆண்டு சேலம் நகரத்தில் அரசுப் பராமரிப்புக்காக எந்த ரோடுகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1973-74-ம் ஆண்டில் நெடுஞ்சாலைக் கிராமப்பணித் துறையினரின் பொறுப்பில் பஸ் ரூட் ரோடுகளை எடுத்துக்கொள்ளும் அரசு, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை 132, நாள் 23—1—74-ன் படி சேலம் நகரத்தில் அரசுப் பராமரிப்புக்காக 1.6 கி. மீட்டர் நீளமுள்ள ஓமலூர் பிரதான சாலையை எடுத்துள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையினை தன் பராமரிப்பில் வைத்துக்கொள்ள சேலம் நகர மன்றம் தன்னுடைய 28—2—1974 தேதிய தீர்மான எண். 2400 ல் தீர்மானித்துள்ளது. அத்தீர்மானம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, அரசு இந்த நகர மன்ற பாதைகளையெல்லாம் எந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் எடுத்துக் கொள்ள முன் வருகிறது? நான் அறிந்த வரையில், எந்த அடிப்படையில் நாம் எடுத்துக் கொள்ளுகிறோமோ அதே அடிப்படையில் எல்லா நகராட்சி களிலும் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. இப்படி வேறுபடுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : எந்தெந்த நகராட்சி விரும்புகிறதோ அதைப் பரிசீலித்து மொத்தமாக இந்தந்த மாவட்டத் திற்கு எவ்வளவு எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் எடுத்துக் கொள் கிறோம். 25 சத விகிதம் 'கான்ட்ரிபியூஷன் பார் மெய்ண்டனன்ஸ்' அவர்கள் ஒப்புக்கொண்டால் எடுத்துக் கொள்கிறார்கள்.

[1975 மார்ச் 13

*Rural Man Power Programme.*

*307. *Q.*—THIRU N. DENNIS :—Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayat Unions in Kanyakumari district where Rural Man Power Programme is now being implemented ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஊரக மனித சக்தித் திட்டம் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் இராசாக்க மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வேலை இல்லாதவர்கள் அதிகம் இருக்கும் இடமாக இருக்கிறது. அங்கே வறட்சியும் அதிகமாக இருக்கிறது. அதை உணர்ந்து, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பகுதியில் ரூரல் மேன் பவர் ப்ரொக்கிராம் செயல்படுத்தவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். ஆகவே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ரூரல் மேன் பவர் ப்ரோக்கிராம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்படிப்பட்ட வேலைகள் எடுத்துக் கொள்வதாக இல்லை. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இராசாக்க மங்கலத்தில் முன்னாலேயே வேலை நடந்து வருகிறது.

*Applied Nutrition Programme.*

* 308. *Q.*—THIRU N. DENNIS :—Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayat Union areas in Kanyakumari d'strict where Applied Nutrition Programme is implemented ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஊட்டச் சத்துணவு திட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் 1973–74–ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி ஏழைகள் மிகுந்த இடமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக கிள்ளியூரில் செயல்படுத்த முடியும். அதை உணர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கிள்ளியூர் ஏரியாவை அப்ளைடு நியூட்ரிஷன் ப்ரொக்கிராமில் செயல்படுத்தவேண்டுமென்று, சில காலத்திற்கு முன்னால் சிபார்சு செய்தார்கள். ஆகவே, கிள்ளியூரில் அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அப்படி ஒன்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்ததாகத் தெரியவில்லை, வந்தால் அது பற்றி யோசிக்கப்படும்.



1975 மார்ச் 13]

சென்னை-தேவம்பட்டு பேருந்து வழித்தடம்.

*309—வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து தேவம்பட்டு செல்லும் 90–எ பேருந்துகள் அயநல்லூர் கிராமம் வரை சென்றுவர வழித் தடம் தரப்பட்டிருந்தும், சீராக அயநல்லூர் கிராமத்திற்கு சென்று திரும்புவதில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை. சென்னைக்கும் தேவம்பட்டுக்கும் இடையே 90–எ பேருந்து வழித்தடத்தில் ஓடுகின்ற பேருந்துகள், அயநல்லூர் வழியே தவறாமல் சென்று வருகின்றன. அந்த வழித்தடத்தில் ஓடுகின்ற பேருந்துகள் சேருமிடத்தைக் காட்டும் பலகைகளுள் "அயநல்லூர்" கிராமத்தின் பெயரைச் சேர்க்குமாறு கிளை நிர்வாகிக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படி வழங்கப்பட இருக்கிற உத்தரவுக்கு நன்றி சொல்கிற நேரத்தில், இப்போது கூட சில நேரங்களில் அந்த 2,000 மக்கள் தொகை வாழும் அயநல்லூருக்கு அந்த பஸ் செல்லாமல் இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்த பெயர் பலகையில்—வழி அயநல்லூர்—என்று எழுதப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நன்றி சொன்னதற்கு நன்றி.

திருப்பூரில் பேருந்துப் பணி மனை.

*310—வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் சேரன் போக்குவரத்துக் கழகப் பணிமனை எப்போது கட்டி முடிக்கப்படும் ?

(இ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) திருப்பூரில் சேரன் போக்குவரத்துக் கழக பணிமனை பிப்ரவரி 1974–ல் கட்டி முடிக்கப்பட்டது.

(இ) நிலத்திற்கும் கட்டடத்திற்குமான மொத்த மதிப்பீடு ரூ. 1.27 இலட்சம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் பணிமனையில் இன்னும் நிறைய போக்குவரத்துக்களை விரிவுபடுத்தும் வாய்ப்பு இருப்பதால், கூடுதல் கட்டிடம் கட்டி, பெரிய வகையில் அந்தப் பணிமனையை—அது மாவட்டத்தின் மையப் பகுதியில் இருக்கிறது—விரிவுபடுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கிற போக்குவரத்துக் கழகத்தில் சேரன் போக்குவரத்துக் கழகம் மிகவும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. மேலிடத்தில் இருக்கிறது. அது நல்ல முறையில் இயங்கினாலும், அங்கே உள்ளபடி ஒர்க் ஷாப் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறது. போதிய சக்தி இல்லாமல் இருக்கிறது. ரிப்பேர் செய்வதற்கான பொருள்கள் இல்லாமல் இருக்கிறது. அதனால் பழுதுபார்க்கும் வேலை சரிவர நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே, அந்த திருப்பூர் போக்குவரத்துப் பணிமனை பெரிய இடமாக இருப்பதாலும், மாவட்டத்தில் மையப்பகுதியில் அமைந்து இருப்பதாலும், அதை நல்ல முறையில் விரிவுபடுத்தி, ரிப்பேர் செய்யும் ஒர்க்-ஷாப்-திருப்பூர் நகரத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து—என்ற முறையில் அமைத்துக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பலத்த பீடிகை போட்டு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பணிமனை இப்போது வந்துவிட்டது. மற்றவைகள் எல்லாம் அந்தப் போக்குவரத்துப் பணிமனை விரிவு ஆக ஆக கவனிக்கப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இம்மாதிரி சேரன் போக்குவரத்து, பாண்டியன் போக்குவரத்து என்று பல கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் பல இடங்களில் டெப்போக்களை ஒதுக்கியிருக்கிறார்கள். இராமநாதபுரம் போன்ற சென்டர்களில் அப்படிச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள்—அந்தப் பகுதிகளில் ஓடிக்கொண்டிருப்பவை—அந்த டெப்போக்களில் பழுது பார்க்க முடியாமல் இருக்கின்றது. அந்த டெப்போக்களில் ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அல்லது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் என்றே புதிய டெப்போக்கள் அமைக்கப்படுமா ? புதிய டெப்போக்கள் அமைக்கப்படும் வரை அங்கே ரிப்பேர் செய்துகொள்வதற்கு அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசுப் போக்குவரத்து பேருந்துகளை போக்குவரத்துக் கழக டெப்போக்களில் பழுது பார்ப்பதற்கு ஏற்கெனவே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் பழுது பார்த்த பிறகு அதற்கான கட்டணத்தை அரசுத் துறையிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்போது அரசாங்கப் பணிமனைகளில் போதுமான பழுது பார்க்கும் வசதி இல்லாததால்—பல நேரங்களில் எனக்குக் கூட அனுபவம் ஏற்பட்டு இருக்கிறது—அவைகள் வழியில் நின்று விடுகின்றன. அவர்கள் சரியாக பழுது பார்க்காமல் ஏதோ ஒட்டவைத்துக் கொடுத்துவிடுகிறார்கள். மீண்டும் ஓடுகிறபோது வழியில் நின்று விடுகிறது. இந்தக் காரணத்தால், நீண்டதூர பயணிகள்—அதுவும் இரவில் பயணம் செய்யும் பயணிகள்—மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, ஒர்க் ஷாப்புக்களில் திறன் பெற்ற ஊழியர்களை அமர்த்தி தேவையான இயந்திரங்களையும் அமைத்து நல்லபடியாக பழுது பார்க்க ஆவண செய்யப்படுமா ?





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய குறைகள் ஏதேனும் இருக்குமானால், போக்குவரத்துத் துறை மானியத்தில் அது பற்றி தெரிவிப்பாரானால், அரசு நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது மாதிரி பஸ்கள் அடிக்கடி நடுவழியில் நின்று விடுவதால் பயணிகள் தொல்லை படுகிறார்கள். அதை நிவர்த்தி செய்வதற்கு ஆங்காங்கு மொபைல் ஒர்க் ஷாப் வைத்து, அதில் டெக்னீஷியன்களை வைத்தால் அதன் மூலம் அந்தப் பேருந்துகளை ரிப்பேர் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால், அந்தக் கஷ்டங்கள் உடனடியாக நிவர்த்தியாகும். அது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே தான் நீண்டதூர போக்குவரத்துப் பேருந்துகளுக்கு இந்த வசதி செய்யலாமா என்பதை பரிசீலித்து வருகிறோம். அதற்கான உத்தரவு முதற்கட்டமாக பிறப்பிக்கப் பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்போது அரசு போக்குவரத்து பேருந்துகளுக்கும், கழகப் பேருந்துகளுக்கும் இடையே ஒரு போட்டியே இருக்கிறது என்ற சந்தேகம் தோன்றும் விதத்தில் காரியங்கள் நடந்து வருகின்றன. இந்த மாதிரி நடப்பது சரியல்ல. அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் வழியில் நின்று விட்டாலோ, அல்லது கழகப் பேருந்துகள் — அண்ணா போக்குவரத்து, பெரியார் போக்குவரத்து—பஸ்கள் நின்று விட்டாலோ, மற்ற கழக பேருந்துகளில் அந்த நின்று விட்ட பஸ் பயணிகளை ஏற்றிக்கொள்வது இல்லை. இப்படிப்பட்ட நிலை இருப்பதால் பயணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை சீரமைப்பு செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிரான்ஸ்போர்ட் என்று வந்தால், எந்தக் கேள்வியும் கேட்டு விடலாமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : போட்டி இருப்பது என்றுமே நல்லது. ஆனால், பொறாமைதான் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. நடைமுறைக் கேள்வி

### விவசாய அமைச்சர் அளித்த ஒரு விடை குறித்து.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, கேள்வி நேரத்தில் 304-ம் கேள்விக்கு விவசாய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, இது ஒரு புதிய திட்டம். அதாவது அஞ்சல் வழிப் பாடமுறை

என்ற புதிய திட்டம் இருந்தும் கூட அதில் படிக்கின்றவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வராமல், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி யிருக்கிறார். இது சரிதானா என்ற.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆக முடியும்? அமைச்சர் கேள்விக்கு பதில் சொல்லாமலும் இருக்கலாம். ஆகவே இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

## 3. 1975–76-ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,93,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. கே. எ. கோப்: தலைவரவர்களே, சென்னை பெரிய மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை ஆகியவற்றை விரிவுபடுத்தி கூடுதல் தனி அறைகள் கட்டுவது பற்றி விவாதிக்க, "நிதிக்கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,9,8000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம்: வேலூர் சி. எம். சி. மருத்துவமனையின் நிலைமையைப்பற்றி விவாதிக்க, "நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,98,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கின்றேன்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, to disc[illegible] need to provide adequate maternity beds to the Government Hospital at Denkanikota in Dharmapuri district, I move "that the allotment of Rs, 30,93,98,000 under Demand No. 18—Medical be reduced by Rs. 10"

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதை கம்ப்யூட்டர் மூலம் செய்ய வேண்டியதின் அவசியத்தை எடுத்துக்கூற, "நிதிக்கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,98,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.



THIRU J. JAMES : Sir, to discuss about the necessity to open the proposed Government Homoe-College at Madurai and the need to admit the students thrown out of the recognised college due to its closure, I move—

"That the allotment of Rs. 30,93,98,000 under Demand No 18—Medical—be reduced by Rs. 100".

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு உணவு வழங்குவதை அவரவர்களின் படுக்கைகளில் வழங்க வேண்டுமென்பது குறித்து விவாதிக்க "நிதிக்கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 30,93,98,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஆ) கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்; தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழி கிறேன் :

"நிதிக்கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 16,25,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, தொழிற்சாலைகளின் புகை வழிவந்து ஆங்காங்கு பொதுச் சுகாதாரம், குடிநீர், நிலம் போன்றவைகளுக்கு ஏற்படும் சேதங்களின் மதிப்பை நிர்ணயிப்பது பற்றி விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 16,25,76,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு கட்டாயமாக ஒவ்வொரு கல்வி ஆண்டின் ஆரம்பத்திலும் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் பற்றி எடுத்துக் கூற "நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய். 16,25,76,000-ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the necessity to open an additional Primary Health Centre at Berigai in Hosur Taluk, I move—

"That the allotment of Rs. 16,25,76,000 under Demand No. 19—Public Health—be reduced by Rs. 100".

[1975 மார்ச் 13

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, தமிழக அரசு அடிப்படை சுகாதாரப் பணியாளர்கள் 15 ஆண்டுகள் பணி செய்தும் பிராவிடண்ட் பண்டு பிடிக்காததைப் பற்றி விவாதிக்க "நிதிக்கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற 16,25,76,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்று வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, கட்டட தடைச் சட்டத்தால் குற்றம்செய்யாத சிறிய வியாபாரிகள் தண்டிக்கப்படுவதை தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 16,25,76,000-ல் ரூபாய். 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU N. DENNIS: Sir, to discuss about the necessity to improve the sanitary conditions of towns and cities in Tamil Nadu, I move—

"That the allotment of Rs. 16,25,76,000 under Demand No. 19—Public Health—be reduced by Rs. 100".

(இ) நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

" நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 6,17,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. M. SUBRAMANIAM: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 6, 17, 62,000 under Demand No. 34—Urban Development—be reduced by Rs 100".

THIRU N. DENNIS: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs 6,17,62,000 under Demand No. 34-Urban Development—be reduced by Rs. 100".

Dr. H. V. HANDE: Sir, to discuss the need to draw and implement a master plan for greater Madras without further delay, I move—

"That the allotment of Rs. 6,17,62,000 under Demand No. 34-Urban development—be reduced by Rs. 100."



1975 மார்ச் 13]

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, to discuss the need to set up Madras Metropolitan Development Authority with an official from the centre as in Bombay, I move "That the allotment of Rs. 6,17,62.000 under Demand No. 34—Urban Development—be reauced by Rs. 100".

திரு. கே. எ. வகாப்; தலைவரவர்களே, சென்னை நகரில் பல அடுக்கு மாடிகள் கட்டுவதில் கட்டுப்பாடுகள் குறித்து விவாதிக்க "நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 6,17,62,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீதான உரைகள் * ஏற்கனவே அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் நாட்டிலே இந்தத் துறை இயங்கி வருகின்ற முறை குறித்தும், எந்த அளவுக்கு விளக்கம் தர முடியுமோ அந்த அளவுக்குத் தரப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் நான் இங்கே எடுத்துப் பேசியதாக உரை ஆற்றியதாக நடவடிக்கை குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்கத்தினர்களின் மேலான ஆலோசனைகளை வரவேற்கிறேன்.

திருமதி. டி. ஜானகி. [illegible]: தலைவரவர்களே. இந்த மானியங்கள் எடுக்கும்போது நாங்கள் ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இரவு 9½ மணிக்குத் தான் இந்தப் புத்தகங்கள் எல்லாம் வருகின்றன. இந்த நாங்கள் எப்பொழுது வாசிப்பது, நாங்கள் எப்படி அதைப் பற்றி விவாதிப்பது என்று புரியவில்லை. முதல் டெலிவரியாக இரவு 9½ மணிக்கு எனக்குத்தான் வருகின்றது என்றார்கள். மற்ற அங்கத்தினர்களுக்கு எப்பொழுது சென்றிருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆக அந்த டெலிவரியை சபாநாயகரவர்கள் அல்லது இங்கே சபை முடிவதற்கு முன்போ தந்து விட்டால் நல்லது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த டிமாண்டை எப்பொழுது எடுத்துக் கொள்வது என்பதில் நாம் மாறுபடுவதில் தாமதம் இருந்தது. ஆனாலும் இனி தாமதம் ஏற்படாது. மாண்புமிகு அமைச்சரிடம் பேசிக் கொண்டேன். அவர்கள் துறையிலிருந்து ஒரு நாள் முன்பாக சட்டசபைத் துறைக்கு வந்தால், நாங்கள் உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்புவதற்கு ஏதுவாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் தங்கள் துறை செயலாளர்களுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

*385, 442-ம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

argument. But I totally refute it. I am not able to agree with the Hon. Minister on this issue. A number of brilliant young people are available. If you block their promotions, there will be total demoralisation and, therefore, this has to be looked into.

In fact, there was a particular instance which prompted me to bring to the notice of this Minister as to what is happpening in the General Hospital. In the General Hospital there was a doctor who got Padma Shri—Dr. Ramachandra. Unfortunately I do. not know under what circumstances his services were terminated The arguments advanced by the Government were that this person had finished his term of service; 55 years is over. But then, another doctor has been put in service. I do not want to mention names because I have nothing personal against them. But this doctor whose services have been extended, has been given a promotion. This is against Government rules themselves. The rules specifically say that if an extension of service is given to a person, he should never be promoted. But this doctor has been promoted. Under what circumstances the services of Dr. Ramachandra were terminated.

There were certain very serious irregularities in the Government General Hopital. I have myself given a number of cut motions, a plethora of cut motions I have given regarding the deplorable way in which the functioning of the Government General Hospital is taking place for the past couple of years. That will reveal tc the public the extent to which things have to be set right there. I have brought in the cut motions a number of irrigularities and I do not want to take the time of the House in reading them. My submission is this. These irregularities were sought to be rectified by Dr. Ramachandra and at this particular context of time his services were terminated.

In fact, I can give a number of specific instances of certain irregularities in the General Hospital. There is what is known as catgut and gloves scandal. In this particular scandal two doctors were involved in putting the invoice. I do not want to specify names. It is not proper. In fact, I feel very sensitive on this subject because most of them are known to me very well. Two doctors were involved in this scandal. One lakh of rupees worth of catguts and gloves were purchased. They were not at all used by the hospital concerned. I am told Dr. Ramachandra tried to find out and probe who was behind this. At that time he was removed from service.



Then again there was theft of equipments from the operation theatres—theatre Nos. 2 and 5. Lakhs of rupees worth of equipments are supposed to have been stolen from the General Hospital during the last month. Similarly, drugs, essential drugs were also going out from the hospital. All these things were brought to the notice of the previous Superintendent. In addition to this glucose bottles worth about Rs. 75,000 were purchased from a particular company. I would not like to give publicity to the name of the company-when glucose bottles were available with the King Institute, Guindy at a cheaper rate. King Institute, Guindy is a Government organisation and when glucose bottles were available there, this thing happened.

Then again in the General Hospital a new rule has come into force. It is very shocking. A new doctor has been appointed and a new post has been created to certify deaths in the General Hospital. This is unheard of in the history or in the annals of the General Hospital. I do not know whether it is done because of the fantastic quantum of increase in the number of deaths and beacuse the normal doctors are not able to cope up with the work of issuing death certificates. I do not know what is the cause for it. For certifying deaths alone a medical officer has been appointed. Formerly, the practice was, the Assistant Medical Officer attached to the ward used to issue the death certificate. Now one doctor has been specifically appointed for this purpose. I would like to bring this matter to the kind attention of the Hon. Minister. I am mentioning all these things only to point out that the administration of General Hospital is far from satisfactory.

A number of irregularities are there and they have to be rectified. For instance, in the matter of cancer control how many times we have mentioned in this House that cancer control has to be viewed on a war footing and proper steps have to be taken to step up cancer control. How can we be able to control cancer after cancer is made known or has come to the cognizance of the doctor. After that, can we control it? No. We can control cancer only in a pre-cancerous stage. How can we find out the pre-cancerous stage? We can do it only by proper screening, by proper routine check-up? What is the amount allotted for this routine check-up? It is deplorably a paltry sum of Rs. 4·54 lakhs. We have spent Rs. 2 crores for the General Hospital, Rs. 85 lakhs for the Stanley Hospital. Will it not be possible for the Hon. Minister to see that this amount is spent properly?

The repairs to the General Hospital, the buildings to the Genera Hospital, the water-supply to the General Hospital, the method by which drugs are distributed--all these things have to be thoroughly overhauled. The General Hospital Advisory Committee had brought to the attention of the Hon. Minister a number of lacunae in this regard and nothing seems to have been done by the Hon. Minister.

I would like to bring to the notice of the Hon. Minister one particular instance. We are spending about Rs. 42·54 lakhs for the Maternity Hospital. Maternity Hospital administration has to be toned up. In fact, I have given a cut motion with regard to this point relating to the Maternity Hospital. A patient comes into the hospital, especially a lady with labour pains or a lady who is serious. No prompt attention is being given in the hospital because of want of adequate medical staff in the Casualty Department. This was brought to my attention, especially through a specific incident.

In this context I wish to draw the attention of the Hon. Minister to a complaint by a person who is the President of Parent's Association of Rao Bahadur Kalavala Kannan Chetty School in Chintadripet. That gentleman is a Central Government Servant, one Mr. T. A. Balakrishnan and he had written a number of complaints. He had given a number of petitions. He had written to the Hon. Minister, to the Secretary to Government, to the Police Department. He had written to all people. But no proper investigation was done into shocking circumstances in which his wife had expired in the hospital. This took place about 3 or 4 years ago. No action seems to have been taken till about June. He had written a number of complaints. He had given a large number of points in respect of this matter. I am prepared to pass them on to the Hon. Minister. In this he has pointed out that a lady was brought in the night and the lady expired in the morning. When it was about 6 a. m. when the husband came to the hospital he was told by the ladies who were shouting and he was given the impression that some foul play had taken place in the hospital. The husband was wondering whether this lady was taken away from the hospital, or abducted from the hospital and redeposited there in the early hours of the morning. He had clear misgivings about it and he had recorded the same in his complaint.



He is a man of some standing and he is also the President of an Association. I have mentioned this incident only to show and vindicate my point that the type of treatment given in the Hospital is far from satisfactory. Something has to be done in this regard.

Then again, I would like the Hon. Minister to appreciate another point. Sir, I have always been making a complaint that diversion of funds from one head to another takes place. A particular amount is allotted for a particular head but it is not spent and it is diverted to some other head. In this connection I would like to point out to the Hon. Minister that in the Revised Budget Estimates for 1974-75, a sum of Rs. 78,17,000 was allotted for Medical Relief (State Plan) but what was the amount spent during that year. Only a sum of Rs. 43·1 lakhs, almost a half of the original allotment, was spent. Why was this diversion of funds? Such diversion of funds especially in the case of medical relief, is a thing that has to be completely done away with. That is a very important point.

In the Ophthalmic Hospital, there is large-scale unrest among the doctors there. Rehabilitation of the superannuated persons is practised in that Hospital. A number of opthalmic specialists are upset about it because there is no scope for their promotion. The superannuated persons who curry the favour of the Government have been rehabilitated and the Government have to put an end to it summarily. That is an important point.

Then I come to another important point, namely, that the standard of education imparted and treatment given should be of a high order and there can be no doubt about it. I would like to ask the question, are we satisfied with the type of treatment? I am very pained to say that not one of my constructive suggestions made last year, has been accepted by the Government. Madras City is a very important Metropolition City in South India and we should have a Van fitted with all equipments to tackle accident cases on a war footing and this suggestion I made last time. Nothing seems to have been done. I once again reiterate that some step has to be taken by the Hon. Minister in that direction. In Bombay they have tackled this problem and this is mentioned in a Medical Journal called "Medical Times". It is stated—

"A pilot project for rendering prompt medical aid to accident victims has been initiated by the Bombay Municipal Corporation

at the Lokmanya Tilak Municipal General Hospital, popularly known as Sion Hospital. Known as the "Central Ambulance Scheme", the project aims at providing skilled medical help to victims at the accident site itself and then transporting them, under medical supervision, to an emergency ward in the hospital......" This is an interesting and novel method adopted in this hospital. This first aid is necessary as otherwise the patient involved in the accident might expire by the time he is brought to the hospital. This method could be used for cases of cardiac failure also. So, my suggestion for a van with all equipments is a constructive one, but I am very pained to say that nothing seems to have been done so far.

Then coming to the Cardiac Block in the General Hospital, I have mentioned a number of times that there is no proper co-ordination between the Casualty Wing and the Cardiac Wing. Also the Cardiac Block and the Intensive Care Unit should be linked. One is in one corner of the hospital and another is in another corner of the hospital and they have to be linked.

Then I come to one of the distinguished Ministers of this Government and my former colleague in the Legislative Council. Thiru N. V. Natarajan who has been suffering from liver disorder, I am very pained to hear some persons talking that the assistance of the hospital authorities in Chandigarh has to be sought to attend to this case. Why don't we have such facilities here, in the Madras City? We should upgrade the General Hospital which is a premier institution in India. I am very sorry to say—the Ministers should not feel hurt—that from the premier position it has come down. This is an important point which I want to bring to the notice of the Hon. Minister.

With regard to quality of education what is the type of education you are giving? I am very pained to reveal a fact with regard to Post Graduate Courses like M.D. Students who have applied for General Medicine course are interviewed by a panel of senior physicians but there is a lot of victimisation going on with regard to their selection. If he is a student of the General Hospital, one Member of the Panel will say "we will pluck him". If he is a student of the Stanley Hospital, another member of the panel will say, "we will pluck him". These are the facts and figures ..

THE HON. THIRU K. ANBAZHAGAN: When the Hon. Member referred to some sort of mal-administration—according to him—I did not even interfere. But now as he has referred to the victimisation of students, I want to know how the Government can take cognizance of such offences or how is it possible for them to control such things, which are completely under the control of the University and the personal view of the Examiner is not known to the Minister or the Government. Even if the Minister feels in certain cases injustice is done it is not possible for the Government to rectify it, unless there is good understanding among themselves so that the students could have confidence in their profession.



DR. H.V. HANDE: The Government should own responsibility as far as this matter is concerned and they cannot disown it because a vast amount is spent. Also the Legislature is a supreme body to which everyone is finally answerable and it is that body which allots the amount and all others are subordinate bodies. This is my opinion. It is my duty to point out these things.

Sir, M.D. results in the other Universities under similar circumstances are 40 per cent and above—Kerala, Andhra Pradesh, Delhi, Chandigrah, etc. Why should the Madras University alone get a result of 3·4 per cent? Are our boys and girls not brilliant? We are talking of State Autonomy but what are our boys and girls going to do so far as Central jobs are concerned.

Now, I come to the examinatons conducted by the All India Institute of Medical Sciences and the Union Public Service Commission and how our boys and girls fared in those examinations. The results were fluctuating a vast deal during the past year. In April 1972, only 26 candidates out of 140 passed. In September 1972, only three out of 102 were successful. In April 1973, only 24 out of 132 were fortunate. Whereas in October 1973, only three out of 89 were declared qualified. Sir, the students who pay Rs. 250 towards examination fees are responsibile persons.

The whole difficulty can be completely neutralised. The Hon. Minister can recommend this. To whatever colleges these local examiners go, we can have a panel of outside examiners. Out of every four examiners, three may be from outside; this is another thing which I would like the Hon. Minister to take cognizance of.

With regard to Family Planning, last year I mentioned something. But sufficient headway has not been made. Before coming to that point of family planning. I would like the Hon. Minister to

[Dr. H. V. Hande] [1975 மார்ச் 13

see that the two colleges, Chingleput Medical College and Tirunelveli Medical College are upgraded immediately without delay. I find that a line is there about that in the Hon. Minister's speech But that is not enough. The students there are frustrated. Their colleges also should be upgraded so that recognition may be given by the Indian Council of Medical Research.

With regard to family planning, the budget estimate for 1974–75 is Rs. 6·08 crores. The original allotment was Rs. 7 crores and ultimately it became Rs. 8·4 crores including some amount from funds. But the revised estimate shows only Rs. 5 crores. Full amount allotted has not been spent. For 1975–76, the budget allotment is Rs. 5·34 crores. Are we spending the amount allotted properly?

One serious thing I would like to bring to the notice of the Hon. Minister. In Madurai, there is a Contraceptive Testing Unit. About some months ago, an article about this unit came in the Hindu, Express, etc., It opened my eyes. I and my friend Mr. Kalimuthu got in touch with the concerned people and we culled out some information. We find it most shocking. There is serious malady with regard to this unit. I would like to point out that the Indian Council of Medical Research has expressed anxiety over the functioning of this unit. Absence of proper research in Tamil Nadu Unit will leave the State out of the scheme of research into fertility control in the country. The reasons they give are really shocking. One officer says that it is because of absence of ether. We got a few letters on this. Another argument is that there is no driver for the van. We are spending lakhs and crores. Can this argument of "no ether, no driver for van", no petrol'—can all these be accepted? These are something shocking. I am bringing this to the notice of the Government so that the administration can be completely overhauled and so that better control can be exercised. Even among the smear materials reaching the clinic, a good many were unfit for tests as they got spoilt due to friction. What I say is, the money that is given by the Centre should be properly utilised. If this is the state of affairs. then we run the risk of losing the money from the Centre. There is no use of blaming the Centre then.

The Hon'ble Thiru K. ANBAZHAGAN : Till now the Central Government has not found any fault with any method tried by this Government about family planning. They have not warned this State Government on any particular plant. But on general lines whenever they criticise, we are in a position to reply them on general



1975 மார்ச் 13] [Thiru K. Anbazhagan]

lines. If the Hon. Member feels that in this particular department some things had taken place and if he brings them to my notice, I will look into them. Even the Central Government are not in a position to see eye to eye with actual difficulties in the field. I wish to say that they are not in a position to say how far the research work should be done. Difficulties are there.

Dr. H.V. HANDE: In spite of there being large number of mothers who had taken the loop, smears for clinical purposes had been taken only from some of them, resulting in the loss of more than 80 per cent. Does this speak well of the unit? This is what I would like to bring to the notice of Hon. Minister.

Coming to B. Pharmacy students, their association wrote several letters to Government, to the Secretary to Public Health Department, pointing out the lacunae in the Government Order with regard to industrial training. As per the Drug Act, a graduate in Pharmacy must undergo a practical training of 18 months in a reputed pharmaceutical concern to become an approved manufacturing chemist. But, no such opportunity has been given to them for the last two to three years. B. Pharmacy students of Madurai Medical College wrote a letter to Secretary for Public Health on 28th October 1974. But they have not received any reply. Nothing seems to have been done in this regard. Their grievances have to be looked into. I did not want to say anything to the boys. Let us not whip up anything. If something snowballs let us scotch it.

The Hon. Thiru K. ANBAZHAGAN: It is to help them that Government had a meeting with Drug industrialists to see that 18 to 20 students are given the training in pharmaceutical concerns; for government jobs, there is no need for such training. Ordinarily when they apply to Government, Government can, depending on vacancy, take them in sevice. No training is required for that. But in private pharmaceutical concerns, training is required. Government is negotiating with industrialists in this connection. The steps taken by Government in this regard have not succeeded. But we will try further.

Dr. H.V. HANDE: Now I come to rural medical practitioner. I find their condition shocking. These people, who are the backbone for the whole State, who work in rural areas, are paid a paltry sum of Rs. 125 per mensem as subsidy. Most of them have qualification as L.M.P. or L.I.M. But subsidy is poor; Something has to be done

The Rural Medical Practitioner is left to treat only 'necessitou poor" getting only this poor subsidy. Attempts made through Rural Medical Practioners' Association since the last two decades have not been successful. Nothing seems to have been done. The subsidy should be increased.

Now I come to drug scarcity. Sometime before I raised the question of absence of triple antigen in the market. But I was told it was available. But I find now that it is not available. Glaxo laboratories have stopped manufacturing that. Alembic is also not manufacturing, Bengal Chemicals is doing it. But there are no sales of it in Tamil Nadu. What I say is with regard to general treatment, 75 per cent is covered by general practitioners. But essential drugs are not available. In other words, 75 per cent are left in the wilderness. What is the action taken by this Government ? Government should take up responsibility.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Government is fully aware of its responsibility and also its capacity to implement it, but the capacity is there only with the Central Government. The State Government has nothing to do with the preparation and control of such essential medicines. We have to make representation to the Union Health Ministry and then through the Union Health Ministry to the Petrolium Ministry for supply of such and such important medicines produced by such and such factories. There is some lacunae at Central level. The Hon-Member as a doctor, must know that the matter is with the Central Government and it should see to its implementation as early as possible.

(முற்பகல் 10–30)

DR. H. V. HANDE : Whenever I say something, I have a solution also. And now also I have a solution and I am going to offer that. There is our King Institute under our control. The King Institute manufactures various vaccines. They manufacture cholera vaccine and many other vaccines. We have only to streamline its functions. They are selling the vaccine in 20 c.c. ampules. That cannot be used by any private practitioner. If it is sold in 5 cc ampules that can be made use of by all. So, in that way we have to streamline its working. If the department concerned takes particular care and interest in the matter it will be very good.

The King Institute is the finest Institute in India and no one can dispute it. The institute is a most excellent institute.





If they can sell the vaccine in 5 cc phials, that will be very helpful. In such a case the Triple Vaccine would be useful. Whatever facilities are necessary can be given.

The other day also, the Hon. Chief Minister participated in a Conference connected with Drugs. But no concrete steps have been taken by the Government to improve the manufacture, the quality and quantity, especially the quantity, of drugs. It is very shocking that in our State only 10 per cent of our drug requirements are manufactured. Only 10 per cent of Bombay manufacture and 10 per cent of Calcutta manufacture is done here. Why are we so lacking? Why should we not do some large scale drug manufacture? In other words, my complaint against the Government is that the Government is cold-shouldering this important sector and they are not encouraging the most important sector, namely, the drug industry.

Finally, I want to say a word about Ayureveda. Government have allotted only a small sum, a very very small sum for this field. My submission is this. There is a very fine institution. I think the Hon. Member, Jothi Venkatachellum also would recollect that this institution used to treat paralysis and other diseaes and people in hundreds used to stand in queue for their names to be registered and then on intimation by post card would come and take treatment. In other words, this is an area where some exploration can be done and I would like the Hon. Minister not to give Ayurveda a stepmotherly treatment but to bestow proper attention and help it.

Finally, regarding the cut motion moved by the hon. Member, Mr. Marudachalam, it is very very important cut motion and I am interested in it. Not its political aspects, but as an institution, I am interested in it. My submission is that in Vellore they are doing open-heart surgery. Are we doing it effective by in the General Hospital? Let us be very frank. This is an important thing; it is very, very important for the whole State. Open-heart surgery is done in the C. M. C. Hospital very efficiently. Of course, Brain Surgery we do in the General Hospital, and the Stanley Hospital it is done well and we are second to none in that field ..........

THE. HON. THIRU K. ANBAZHAGAN : I would like to state that such criticisms do not reflect on the capacity and ability of

the Doctor in our General Hospitals. Especially, about open heart surgery, I would like to inform the House that there are two young surgeons doing open heart surgery and they have done about 100 cases per year. In order to facilitate doing more operations of open heart surgery, two Operation Theatres are being built and when that is done, I think, the number of cases operated will increase.

DR. H· V. HANDE : That is exactly what I am suggesting. It is an area where we have to provide all facilities and create ideal conditions. In brain surgery they are doing very well and in that field we are not second to the C.M.C. But in the case of open heart surgery, especially, in Fallots Tetrology, children are geting operated and that is very, very important thing. About that, Swarajya had also written articles. It is an important field and sophisticated equipments are required. Such things I think are not......

THE HON. THIRU K. ANBAZHAGAN : In such cases, children with the help of Rotary Clubs and other institutions, go to America Australia and England for treatment and therefore even such cases are not confined to Vellore. Therfore, it is only by experience which they would gain in the course of years, that every kind of operation can be done here in our hospitals.

DR. H. V. HANDE : My submission is that Fallots Tetrology is done in Vellore, because the special equipments required are not available here. Of course, the person doing the surgery is our own man, he is a person from here and not one from Chandra Mandalam.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

In this context, I would suggest to the Hon. Minister two thingsr Let us forget all politics as far as the C.M.C. is concerned. For heaven's sake, forget about politics. I was very much pained to see in the morning papers that a sum of Rs. 5 lakhs has been demanded and notice given for Police help and also there has been Sales Tax raid. These two things smack of victimisation of the institution Let us not show we are either jealous of them, or demolish this premier Christian institutions, belonging to a minority community. It is very, very important that we should completely protect the minority here, Therefore, let us not take such punitive action of demolishing the institution because they have not come to our point





of view—if that is so, let us try to reduce the area of differences and find a solution.

My submission is let us not victimise the institution with this sort of threats of closure and demand of sales tax. This sort of demand for police help is unheard of. There was the Simpson & Co. trouble and so may other institutions had it. Such Police bills did not go to them. If this is the way we treat them, the country will have a very bad opinion of our very fine State. I am quite confident that our Hon. Minister will not allow the State's name to be sullied. Therefore, I request him to view the whole thing in a dispassionate and objective manner, Thank you, Sir.

4. தாழ்வாரத்தில் (லாபி) வெளியார் அனுமதிக்கப்படலாமா என்பது குறித்து.

திரு. மு. முனுசாமி : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற விதியின் படி உறுப்பினரின் அனுமதியின் பேரில் யாரும் வரலாம், போகலாம் என்று இருக்கிறது. இங்கே சட்டமன்ற லாபியில் கூட அதே விதி தானா? நாங்கள் அமர்ந்திருக்கிற லாபியில் உறுப்பினர் அல்லாத ஒருவர் நிரந்தரமாக உட்கார்ந்திருக்கிறார்கள். நாங்கள் எது பேசினாலும், அதை வெளியிலே போய் சொல்வதற்கு அவருக்கு வாய்ப்பு இருக்கிறது. இது போல் வெளியார் லாபியில் வந்து நிரந்தரமாக உட்கார அனுமதிக்கலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளியார் யாரும் லாபியில் வந்து உட்காரக்கூடாது. உறுப்பினர்கள் எல்லோரும் இங்குள்ள அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டும் யாரையும் உள்ளே அனுமதியுங்கள் என்று சிபாரிசு பண்ணாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

3. 1975–76-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற Medical and public Health, மானியக் கோரிக்கை மீது என்னுடைய கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சாதாரணமாக எதைக் கேட்டாலும் கூறுவார்கள். அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிதி நிலை சரியாக இல்லை, இவற்றை எல்லாம் செய்ய வேண்டியது தான் என்று ஒத்துக்கொள்வார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

1967-ம் ஆண்டு இந்த மாநிலத்தின் நிதி நிலை 194 கோடியாக இருந்தது. ஆனால் இன்றையதினம் ஏறக்குறைய 500 கோடிக்கு மேலான பிறகும்கூட மாநிலத்தின் நிதி நிலை சரியாக இல்லை என்று சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எந்த அளவுக்கு அதிகரித்து இருக்கின்றதோ அந்த அளவுக்கு இந்தத் துறைக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முதன் முதலாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியது போல் இந்த ஆண்டு மாநிலம் முழுவதுக்கும் அதிகபபடுத்தியிருக்கின்ற படுக்கைகள் 26 தான். இது வருந்தக்கூடிய ஒரு சூழ்நிலை, என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் ஆஸ்பத்திரிலே வியாதிஸ்தர்களுக்கு இட நெருக்கடி அதிக்கரித்துக்கொண்டு வருவதை நம்போன்றவர்கள் உணர்ந்து இருக்கிறோம். அந்த அளவுக்கு மருத்துவ மனைகளில் படுக்கைகளை அதிகரிக்கச் செய்வது அரசாங்கத்தின் கடமை. அதைச் செய்ய முடியாமல் தட்டிக் கழித்து, இந்த ஆண்டு 26 படுக்கைகள் தான் கொடுக்க முடியும் என்று கூறியிருப்பது மிகவும் வேதனைப்படக்கூடியதாகும் ஏனென்றால், படுக்கைகள் குறைகின்றன என்றால் அதனால் பாதிக்கப்படுவது வசதி படைத்தவர்கள் அல்ல, ஏழை எளியவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவகள் அறிவார்கள். சாதாரணமாக, அரசாங்க மருத்துவ மனைக்கு வருபவர்கள் எளியவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்குத் தேவைப்பட்ட மருத்துவ வசதிகளைச் செய்து தர அரசாங்கம் முயலவில்லையென்றால் அது வரவேற்கத்தக்கதல்லவென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சாதாரணமாக, நம் அரசாங்க மருத்துவமனையில் உபயோகிக்கின்ற டிரக்ஸைப் பார்த்தால், மிகவும் தரம் குறைவாக இருக்கிறது. அதனையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதற்கும் காரணம் கூறுகிறார்கள். போதிய நிதி இல்லாததால், நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால், போதிய டிரக்ஸை வாங்க முடியாத சூழ்நிலையிருக்கிறதென்று கூறுகிறார்கள்......

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தரம் குறைந்த மருந்துகளை வாங்குகின்ற சூழ்நிலையிருக்கிறதென்று அமைச்சர் சொல்கிறார் என்பது தவறான, கருத்தாகும். தரம் குறைந்த மருந்து என்று நான் சொல்லவில்லை. மருந்து பயன்பட வேண்டிய அளவு சிறப்பாகப் பயன்படவில்லை என்று எப்போதும் சொல்லப்படவில்லை. ஆனால் டிரேட் மார்க் அண்டு நேம் என்று அறிமுகப்படுத்தப்பட்ட மருந்துகளை வாங்குவது என்பது அரசாங்கத்தாலே முடியாது. பயன்படக்கூடிய தரமுள்ள சிக்கனமாகவும், அதிக அளவுள்ள பயன்படுத்தப்படுகிற மருந்துகள் என்று நான் சொன்னேனே தவிர, தரம் குறைந்த மருந்து என்று நான் ஏற்றுக் கொள்ளவில்லை. Quality control is always there.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறுவதெல்லாம் நமது அரசு மருத்துவ மனையை நம்பியிருக்கின்றவர்கள், அவர்களுக்கு இயற்கையாகவே— They are very poor. Weshould not supply them poor quality medicines. நமக்கிருக்கிற பொளாதாரத்தில் எந்த அளவுக்கு வழிவகை செய்ய





முடியுமோ அந்த அளவுக்கு மருந்துகளின் தரத்தையும் கூட்டிக் கொடுக்க —ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வசதி உள்ளவர்கள், தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று அல்லது கடைகளுக்குச் சென்று வாங்குகிறார்கள். ஆனால், ஏழை எளியர்களுக்கு அந்தச் சூழ்நிலை இல்லாததன் காரணமாக, சமதர்மச் சமுதாயகொள்கையைக் கைக்கொண்டிருக்கிற அரசு, ஏழை எளியவர்கள்மேல் அக்கறை கொண்டு, தரமான மருந்துகளை வாங்கிக் கொடுக்க முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக, மின்சார வெட்டு ஏற்பட்டால், அல்லது தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டால் மருத்துவமனைகளுக்கு விதிவிலக்கு அளிப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற மின்சார வெட்டின்பொழுதும் தண்ணீர்த் தட்டுப்பாட்டின்பொழுதும் மருததுவமனைகள்கூட அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நான் ஒரு மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கே ஒரு டாக்டர் கூறினார். தண்ணீர் இல்லை, ஆகவே, என்னுடைய கையைக் கழுவுவதற்கு வழியில்லாத காரணத்தால், சிகிச்சை செய்ய வழியில்லை என்று. இதுபோல், மின்சார வெட்டினால்கூட மருத்துவ மனைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அராசாங்கம் மின்சார வெட்டானாலும், தண்ணீர்த் தட்டுப்பாடானாலும் இம்மாதிரி நிலைமைகளிலிருந்து மருத்துவமனைக்கு விதிவிலக்கு அளித்து எப்போதும் மின்சாரம் கிடைக்கின்ற வகையிலும், தண்ணீர் கிடைக்கின்ற வகையிலும் வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலேயிருக்கிற ஓமியோபதி கல்லூரியைப்பற்றி நான் ஓர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே, அங்கே ரெககனைஸ்ட் ஓமியோபதி கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருந்தது. என்ன காரணத்தாலோ, அந்த கல்லூரியை மூடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அரசுகூட ஒரு ஓமியோபதி கல்லூரியைத் திறக்கத் திட்டம் தீட்டியிருப்பதாக கூறினார்கள். ஆனால், ஏற்கனவே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழிவகை செய்ய வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரண்டு ஆண்டு, 3 ஆண்டு, 4 ஆண்டு படித்த மாணவர்கள் எந்தக் கதியும் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து படிப்பதற்கான வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சித்த வைத்தியப் பிரிவு ஓரளவுக்குச் செயல்பட்டாலும்கூட ஏற்கனவே 177 பட்டதாரிகள் இப்பிரிவில் பட்டம் பெற்று வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களில் 16 பேர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் காணப்பட்டிருக்கிறது. ஆனால், நாட்டிலிருக்கிற நிலைமையைப் பார்த்தால் அல்லோபதியைப் போல் சில வியாதிகளுக்கு சிறப்பாக பயன் அளிக்கக்கூடிய மருந்துகள் சித்த வைத்தியத்திலே இருக்கின்றன. உதாரணமாக, மஞ்சக்காமாலை, ஆஸ்துமா போன்ற வியாதிகளுக்கு அல்லோபதியில் இல்லாத மருந்து சித்தப் பிரிவிலிருக்கிறது. ஆகவே, அதனை அதிகமாக விஸ்தரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இப்பொழுதுள்ள கல்லூ

ரியில் அதிக மாணவர்களைச் சேர்க்க வழிவகை செய்து, ஏற்கனவே பட்டம் பெற்ற அந்தச் சித்த மருத்துவ மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக கொடுத்தால், சித்தப் பிரிவு வளர அதிக வாய்ப்பு இருக்கும், மாணவர்களையும் கவர வாய்ப்பிருக்கும் என்பதை நான் சொலல விரும்புகிறேன்.

இப்பொழுது மாவட்ட ரீதியில் சித்தப் பிரிவு வைத்திருக்கிறோம. அது போதாது, தாலூகா லெவலில், பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற ஒவ்வொரு மருத்துவமனையிலும் சித்தப் பிரிவை வைதது டாக்டர்களை அங்கே நியமித்தால் நிச்சயமாக அதிகப் பலன் அளிப்பதற்கும் இப்பொழுதிருக்கிற நெருக்கடியை தவிர்ப்பதற்கும் அது வழிவகை செய்யும் என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இப்பொழுது அரசு மருத்துவமனைகளிலிருக்கிற வியாதியஸ்தர்களுக்குக் கொடுக்கின்ற உணவுக்கான ரேட் அந்தக் காலத்திலே நிர்ணயம் செய்யப்பட்டது. இப்பொழுது, விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அதற்கேற்றவகையில் ரேட்டையும் கூட்டிக்கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஏதோ, முன்காலத்தில் நிர்ணயித்த அந்த அளவுக்கு உணவு கொடுத்தால், போதுமான சத்துணவு வியாதியஸ்தர்களுக்குக் கொடுக்க முடியாமல் போகும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களில் டாக்டர்களையும் புரபேஷன் ஆபீசர்களையும் நியமித்திருக்கிறோம். டாக்டர்களை நியமிப்பதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று அங்கிருக்கிற மற்றவர்கள் கூறுகிறார்கள். ஏனென்றால், டாக்டர்களைப் பொறுத்த அளவுக்கு நிர்வாகம் செய்வதற்கு ஒருவேளை பல இடையூறுகள் இருக்கலாம். ஆகவே, அந்தப் பொறுப்பினை, புரபேஷன் ஆபீஸர்களுக்குக் கொடுத்தால், தொழுநோய்ப் பிச்சக்காரர் மேம்பாடு திட்டம் சிறப்பாக இருக்கும் என்று சாதாரணமாகக் கூறப்படுகிறது. அதனை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்தில் கழிந்த பல ஆண்டுகளாக நான் கேட்டுக் கொண்டேயிருக்கிறேன். குலசேகரம் என்ற பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கு 15,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள்— மிகவும் பின்தங்கியவர்களாக. அங்கே ஒரு டிஸ்பென்சரி இருக்கிறது. அதில், 2 டாக்டர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஏறத்தாழ 380 அவுட்பேஷண்டுகளைச் சந்தித்து, மருந்து கொடுக்க வேண்டிய நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த மருத்துவமனையை 50 படுக்கைகள் கொண்ட பெரிய மருத்துவமனையாக விஸ்தரிக்க வேண்டுமென்று நான் பலதடவைகள் கூறிக்கொண்டே இருக்கிறேன். அதற்காக ஒரு கமிட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் கமிட்டியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. ஆனால், அரசாங்கம் பொதுமக்களிடத்தில் எவ்வளவு நன்கொடை வரும் என்று எதிர்பார்க்கிறது. அப்பகுதி ஏழைகளிருக்கிற பகுதியென்ற காரணத்தால், பொதுமக்களிடமிருந்து நிச்சயமாக



நன்கொடை வரமுடியாத நிலைமை இருப்பதால், பொறுப்பை அரசாங்கம் ஏற்று, 50 படுக்கைகள் கொணட மருத்துவமனையாக மாறற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுககொள்கிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மருத்துவமனையிருக்கிற பகுதியில் ஏழை அரிசனங்கள் அதிகமாகவிருக்கிற காரணத்தால், அரிசன ஸடேட் அட்வைசரி கமிட்டி, குலசேகரத்திலேயிருக்கிற டிஸ்பென்சரியை பெரிய மருத்துவமனையாக மாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதைப் பரிசிலனை செய்யவேண்டுமென்று அவர்களும் தீர்மானம் நிறைவேறறி இருக்கிறார்கள். ஆகவே ஒன்று மருத்துவத்துறை அல்லது அரிசனததுறை அல்லது இரண்டும் சோந்து இந்த மருத்துவமனையை விஸ்தரிக்கவேண்டு மென்று கேட்டுக கொள்கிறேன்.

ஹோமியோபதி தனியார் கல்லூரிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் டெபாஸிட் கட்டினால் போதும் என்று முன்பு இருநதது. அதை நம்பி தனியார்கள் பல கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறாகள். ஆனால் மருத்துவ கவுன்சில் 10 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது, 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்து இருக்க வேண்டும், 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தொகை ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சருக்காக கட்டவேண்டும் டெபாஸிட்டாக என்றும் நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு வசதியாக உள்ளவர்கள் நிச்சயமாக ஹோமியோபதி காலேஜ நடத்துவதற்கு முன்வர முடியாது. உண்மையிலேயே அந்தத் துறைக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் எண்ணினால் ஏற்கனவே இருந்த 50 ஆயிரம் ரூபாய் போதும் என்று வைத்துவிட வேண்டும். சிறப்பாக நடக்கிற தனியார் கல்லூரிகளுக்கு ரிகக்கனிஷன் கொடுக்க வேண்டும். இதன்மூலம் இப்போது மருத்துவ கல்லூரிகளுக்கு இருக்கிற இட நெருக்கடியை சமாளிப்பதற்கு வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேஸிக் ஹெல்த் எம்ப்ளாயீஸ் ஏறத்தாழ 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதிலே 56 தொழிலாளர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எல்லாம் 1956-ஆம் ஆண்டிலே அந்தப் பிரதேசமானது கேரளத்தில் இருந்த காரணத்தினால் அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் மலையாளத்தைப் பாடமொழியாகப் பயின்றிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால் அவர்களுக்கு இப்போது உத்தியோக உயர்வோ அல்லது சர்வீஸ் ரிகக்னைஷனோ கொடுக்கப்படவில்லை அதற்காக அந்த அசோசியேஷனிலிருந்து அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தமிழர்கள், அவர்களுக்கு தமிழில் எழுதவாசிக்கத் தெரியும். அவர்கள் கடந்த 15 ஆண்டுகாலமாக ரிக்கார்டுகளையெல்லாம் தமிழில் தான் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த விதிமுறையைத் தளர்த்தி அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுத்து அவர்களுக்கு புரமோஷன் கொடுப்பதில் உள்ள இடையூறுகளை நீக்கி அவர்கள் 56 பேர்கள்தான் இருக்கிறார்கள் அவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. மனு ஆதி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், நான்அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரில் கையெழுத்துப்போடபோனபோது வேறு யாரோ

ஒரு எம்.எல்.ஏ. போட்டுவிட்டிருக்கிறார், நான் எங்கே போடுவது ? முனியாண்டியோ அல்லது முனுசாமியோ யாரோ போட்டிருக்கிறார். நான் பார்த்தேன், மணலி கந்தசாமி அவர்களிடம்கூட காண்பித்தேன், அவர் கூடச் சொன்னார், அப்படிப்பட்ட எம்.எல்.ஏ.க்களையெல்லாம் நாம் வைத்திருக்கிறோம் என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சமயத்திலே நீங்களேகூட சொல்லி அவர் போட்டிருந்தாலும் போட்டிருப்பார் (சிரிப்பு).

திரு. மு. முனு ஆதி : என் பெயரே இல்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கையெழுத்துப்போட்டுவிட்டு அதற்கு நேரே ஒரு ஆரோ மார்க் போடுங்கள் சரியாகிவிடும்.

திரு. மு. முனு ஆதி : போட்டுவிட்டேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலவாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி ஆகிய இரண்டு மானியங்கள் குறித்தும் சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, முன்னேற்றம் எல்லாம் அந்த நாட்டிலேயுள்ள மக்களுடைய நல்வாழ்வில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்த இந்த அரசு மருத்துவத்துறையிலே பல்வேறு முன்னேற்றங்களையும் மருத்துவக் கல்லூரிகளிலே பல்வேறு வசதிகளையும் செய்திருக்கிறது. அதுவும் குறிப்பாக 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்று இருக்கிற அரசு, குறிப்பாக இந்தத் துறையை ஏற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் வேகமான முன்னேற்றங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டுகூட பட்டப்படிப்புக்கு அனுமதிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையைக்கூட்டுவதா அல்லது குறைப்பதா என்ற பிரச்னை இருந்தது. இறுதியாக, அமைச்சரவைக் கூட்டத்திலே இருக்கின்ற எண்ணிக்கை அப்படியே இருக்கட்டும் என்று முடிவெடுத்தார்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே சென்னை மருத்துவக் கல்லூரியிலே எங்கள் பேட்சிலே 120 பேர்கள்தான் செலக்ட் செய்யப்பட்டார்கள். அப்போதுகூட எல்லோரும் அந்தக் கல்வியைக் கற்பதற்கு நல்ல வாய்ப்பு வசதிகள் கொடுக்கப்படவில்லை. இதுவே அதிகம் என்று நினைக்கக்கூடிய நிலைமை இருந்தது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கிற நேரத்திலே சென்னை மருத்துவக்கல்லூரியிலே 170-ம், ஸ்டான்லியிலே 170-ம், எர்க்லின்னிலே 165-ம் இருப்பதாக சொல்கிறார்கள். குறைக்கின்ற அல்லது அதிகமாக்குகின்ற முடிவை எடுப்பதற்கு முன்னாலே ஒவ்வொரு கல்லூரியிலும் அதிக மாணவர்கள் 175 என்ற முறையிலே சேர்ப்பதைத் தவிர்க்க வேண்டும். நமக்கு வேண்டுவது தரமான டாக்டர்கள்தாம். அதுதான் நம்முடைய கொள்கை. டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட சொன்னார்கள். எம்.டி., எம்.எஸ்.—இவைகளில் பர்சன்டேஜ் குறைந்திருப்பதாகவும் அதற்குக் காரணம் அங்கே



இருக்கின்ற உயர்ந்த டாக்டர்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்கிறார்கள் என்ற முறையிலே நோக்கம் கற்பித்து அவர்கள் பேசினார்கள், அது நல்லதல்ல, நம்முடைய மாநிலத்திலே சிறந்த பணியாற்றக் கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களை உற்சாகப்படுத்துவதாக அது அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே 170, 175 என்று இருப்பதைக் குறைக்க வேண்டும். பட்டப்படிப்பிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இன்னும் நேரடிப் பயிற்சி அதிகமாகக்கொடுக்க வேண்டும். பிராக்டிக்கல் நாலெட்ஜ் அதிகம் தேவைப்படுகிறது. அதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஐந்தாண்டுகள், ஐந்தரை ஆண்டுகள் பட்டப்படிப்பை முடித்து விட்டு வருகிற இளம் டாக்டர்கள் இண்டிபெண்டன்ட் ஆக தொழில் செய்யமுடியவில்லை. காரணம் அதற்கு வேண்டிய பிராக்டிகல் நாலெட்ஜ் இல்லை, தியரிட்டிக்கல் நாலட்ஜ் நிறைய இருந்தாலும் அனுபவ ரீதியான அறிவு குறைவாக இருப்பதால் முடியவில்லை. ஆகவே எதிர்காலத்திலாவது பட்டப்படிப்பில் அதிக அளவிற்கு அனுபவ அறிவைப் பெறக்கூடிய முறையிலே மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போஸ்ட் கிராஜுவேட் படிப்பை இப்போது நிறைய பிராஞ்சுகளுக்கு விஸ்தரித்துக் கொண்டு வருகிறார்கள். ஜெனரலாக எம்.டி., எம்.எஸ். இவற்றிற்குப் போகின்ற மாணவர்களைச் சேர்க்கிறார்கள். நேரடியாகப் படித்து விட்டுச் சேருகிற மாணவர்களும் இருக்கிறார்கள். பத்துப் பதினைந்து ஆண்டுக்காலம் அனுபவத்தோடு விட்டுப்போகிறவர்களும் இருக்கிறார்கள்—ஜெனரலாக எம்.டி., எம்.எஸ்., மெடிஸின்ஸ், சர்ஜரி படிக்கின்றவர்களுக்கு சம்பளம் எதுவும் கிடையாது. ஆனால் ஸ்பெஷாலிட்டி எம்.டி. எம்.எஸ். படிக்கிறவர்களுக்கு முழுச் சம்பளத்தோடு படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த முறை இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தால் அப்போது ஸ்பெஷாலிட்டிக்கு ஆட்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு 5 இடங்கள் இருந்தால் 25 மாணவர்கள் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் போன்று ஜெனரலாக எம்.டி., எம்.எஸ், படிக்க வருகிறவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே டி.எம்.இ., அவர்கள் முழு கவனம் செலுத்தி ஆராய்ந்து சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு டாக்டர் இப்படிப்பட்ட ஆலோசனையைச் சொல்கிற நேரத்திலே அந்தக் கருத்தை மேலும் தெளிவுபடுத்த இந்த விளக்கத்தை எடுத்துரைக்கிறேன். எம்.பி., பி.எஸ். தேர்ச்சி பெற்றதற்குப் பின்னாலே நேரடியாக வேறு அனுபவம் இல்லாமல் உள்ளவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். சில சிறப்பான பாடங்களுக்கு அனுபவம் உள்ளவர்கள்தான் வேண்டுமென்ற முறையிலே அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இன்னும் சில இங்கில்லாத சிறப்பான பயிற்சிகளுக்கு அரசாங்கம் அனுபவம் உள்ளவர்களை டெபுட்டேஷன் என்ற முறையிலே அனுப்புகிறது. ஆகவே சம்பளம் இல்லாமல் படிக்க அனுமதிப்பது, சம்பளம் கொடுத்து படிக்க அனுமதிப்பது, டெபுட்டேஷன் அனுப்புவது ஆகிய மூன்று முறைகளிலே அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். எல்லாவற்றிற்கும் சம்பளம் கொடுப்பது என்பது நிதித் துறையினால் இயலாததாக இருக்கும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : போஸ்ட்கிராஜுவேட் படிப்புக்கு ஒதுக்கப்படுகிற 14 லட்சம் ரூபாயை சமமாக பிரித்துக் கொடுக்க வேண்டும். பதினாறு, பதினேழு ஆண்டுகள் சர்வீஸ் போட்டவர்கள் எம்.டி., எம்.எஸ். படிக்க வருகிறார்கள். அவர்களுக்கு ஹாஃப் தி பேஸிக் பே தான் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அவர்களுக்கு ஏற்கனவே குடும்ப பாரம் இருக்கும். அவர்கள் அந்த முறையில் 400 ரூபாயை வாங்கிக்கொண்டு படிப்பது கஷ்டமாக இருக்கும். ஆகவே கொடுக்கின்ற தொகையை பாகுபாடு இல்லாமல் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

டாக்டர் ஹாண்டே பேசியபோது மற்ற மாநிலங்களிலே உள்ளதைப் போல் முன்னேற்றமான இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் இங்கே இல்லை என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11.00)

அதை மெள்ள மெள்ளத்தான் செய்ய முடியும். நிதிநிலை இடம் கொடுக்கின்ற அளவிற்கு ஒவ்வொரு மருத்துவமனையிலும் மெள்ள மெள்ளத்தான் செய்ய முடியும். இருந்தாலும்கூட இருக்கின்ற ஒருசில இன்ஸ்ட்ருமெண்ட்கள் பழுதடைந்துவிட்டால் அதைப் பழுது பார்க்க மாதக் கணக்கு, ஆண்டுக் கணக்கு ஆகிறது. எனவே, அவைகளையாவது நிவர்த்தி செய்வதற்கு எதிர்காலத்தில் முயற்சிக்க வேண்டும். அப்படிப்பட்ட முக்கியமான இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் உடனடியாகப் பழுது பார்க்கப்பட மருத்துவமனை அதிகாரிகளோ மற்றவர்களோ நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், 1975–76-ஆம் ஆண்டு கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் வளர்ச்சிக்காக அதிக நிதி ஒதுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்து கொள்கிறேன். அங்கே 100 மாணவர்கள் சேர்ந்து படிக்க வசதி இருக்கிறது. இருந்தாலும் அந்த மருத்துவக் கல்லூரி இன்னும் எல்லா வசதிகளையும் பெற வில்லை, புதிய வசதிகள் ஒவ்வொரு இலாக்காவிற்கும் வேண்டிய "எக்விப்மெண்ட்"கள் இல்லை. 1975–76-ஆம் ஆண்டில் மருத்துவமனை வளர்ச்சிக்காக ஒதுக்கிய தொகையை மற்ற மருத்துவமனைகளோடு ஒப்பிடும் நேரத்தில் அந்த மருத்துவமனைக்குக் குறைந்த நிதிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்ட மருத்துவமனைகள் 14 இருக்கின்றன. பிளானிங் கமிஷனில் 400 படுக்கைகளிலிருந்து 500 படுக்கைகளாக உயர்த்தலாம் என்று சிபார்சு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுதுதான் ஈரோட்டிலே உள்ள கோவை மாவட்ட மருத்துவமனையிலும், ஈ.என்.டி. டிபார்ட்மெண்ட் வந்திருக்கிறது. மாவட்ட மருத்துவமனைகளில் வசதிகள் போதுமானவையாக இல்லை. கிராமங்களிலுள்ளவர்கள் 300 மைல், 400 மைல் தூரத்திலே இருப்பவர்கள், சென்னை, மதுரை போன்ற பகுதிகளுக்கு சிறிய உடல் கோளாறுகளுக்குக்கூட போக வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஸ்பெஷல் டிபார்ட்மெண்ட்களை மாவட்ட மருத்துவமனைகளில் கூடிய விரைவில் ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.



அடுத்து, வட்ட மருத்துவமனைகளைப் பொறுத்தவரையில், அடுத்த ஆண்டு அதன் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ்களில் இப்பொழுது இருக்கின்ற படுக்கைகளின் எண்ணிக்கை 4,451. அதை அடுத்த ஆண்டு, 4,475 ஆகத்தான் அதிகரிக்க இருக்கிறது. அதாவது 24 படுக்கைகள்தான் அதிகமாக இருக்கிறது. இந்த மாநிலத்திலே இருக்கின்ற 97 வட்ட மருத்துவமனைகளில் 24 படுக்கைகள் மட்டுமே உயர இருக்கிறது என்பது வேதனையாக இருக்கிறது. இந்த நாட்டிலே உள்ள 80 சதவிகித மக்கள் கிராமங்களிலே இருக்கிறார்கள். அந்த 80 சதவிகித மக்களும் தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைகளில் தொடர்பு கொண்டவர்களாக இருப்பார்கள். ஆகவே, தாலுக்கா மருத்துவமனைகளில் இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, அங்கேயுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, அங்கேயுள்ள வைத்திய வசதிகளை அதிகப்படுத்தி நல்லமுறையில் செய்ய இந்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இந்த வட்ட மருத்துவ மனைகளிலே பணியாற்றும் அசிஸ்டண்ட் சர்ஜன்களுக்கு உள்ள ஒர்க் லோட் பற்றிப் பார்க்க வேண்டும். அங்கேயுள்ளவர் காலை 7½ மணிக்கு அவுட் பேஷண்ட் டிபார்ட்மெண்டில் வேலையை ஆரம்பித்தால், அவருக்கு அன்றைக்கு ட்யூட்டி டே-ஆக இருந்தால் அன்று முழுவதும், அன்று இரவும் இருந்து, அடுத்த நாள் காலை 7 மணிக்கு அவுட் பேஷண்ட் டிபார்ட்மெண்டுக்கு வர வேண்டும். எனவே, மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் உள்ள அசிஸ்டண்ட் சர்ஜன்களுக்கு இருக்கும் ஒர்க் லோடை விட டி.எச்.எஸ்.ன்.—கிழே உள்ள மற்ற அசிஸ்டண்ட் சர்ஜன்களுக்கு ஒர்க் லோட் அதிகமாக இருக்கிறது. இங்கே மருத்துவமனைக் கல்லூரியில் இணைந்திருக்கின்ற மருத்துவமனைகளில் உள்ள அசிஸ்டண்ட் சர்ஜன்களுக்கு ஒரு வாரத்தில் ஒரு அட்மிஷன் டே தான் இருக்கிறது. அதுவும், "சீப்ஃ" வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு வந்துவிட்டு, அவர் போனதற்குப் பிறகு போய் விடுவார்கள். ஆனால் டி.எச்.எஸ். கண்ட்ரோலில் இருக்கும் அதே அசிஸ்டண்ட் சர்ஜன்கள் 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அடுத்த நாளும் ஓ.பி.க்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த வித்தியாசத்தைக் குறைக்க வேண்டும். டி.எச்.எஸ். கண்ட்ரோலில் இருக்கும் அசிஸ்டண்ட் சர்ஜன்களின் ஒர்க் லோடுக்கும், டி.எம்.ஈ. கண்ட்ரோலில் இருக்கும் அசிஸ்டண்ட் சர்ஜன்களின் ஒர்க் லோடுக்கும் பாரபட்சம் இருக்கிறது. அதைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், அசிஸ்டண்ட் சர்ஜனாக சர்வீசிலே இருந்தால் 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் கழித்து அசிஸ்டண்ட் சர்ஜனாகவே கூட ரிடையர் ஆகியிருக்கிறார்கள். ஆனால் மற்ற துறைகளில் பார்த்தால், பி.ஈ. படித்த ஒருவர் ஜே.ஈ. ஆகி, 6 ஆண்டுகளுக்குப் பிறகு ஏ.ஈ. என்றும், பிறகு ஈ.ஈ. என்றும், சீ.ஈ. என்றும்கூட ஆவதற்கு வழியிருக்கிறது. ஆனால் அசிஸ்டண்ட் சர்ஜன் பணியை மேற்கொண்டவர் 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் உழைத்தபிறகும்கூட அசிஸ்டண்ட் சர்ஜனாகவே ரிடையராக வேண்டிய நிலைமை இந்த மாநிலத்தில் இருக்கிறது. இது நிச்சயமாக அவர்களுக்கு ஊக்கம் அளிக்காது. எனவே, அவர்களுக்கு என்று ஒரு

புதுமுறையை வகுக்க வேண்டும். அதற்கு என்னுடைய தாழ்மையான ஆலோசனை ஒன்றை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது, இந்த அசிஸ்டண்ட் சர்ஜன் பதவியிலே நுழைபவர்கள் குறைந்தது 25 ஆண்டுகளாவது பணி செய்கிறார்கள். அதை நான் ஐந்து கட்டங்களாக வகுத்து, கிரேட் 1, கிரேட் 2 என்று இப்படி வகுத்து, 5 ஆண்டுகள் பணியாற்றினால் கிரேட் 5-லிருந்து கிரேட் 4-க்கும், பிறகு 5 ஆண்டுகள் கழிந்தால், கிரேட் 4-லிருந்து கிரேட் 3-க்கும், பிறகு கிரேட் 2, கிரேட் 1 என்று ஆக்கினால், அந்த அளவிற்கு ஏதாவது ஊக்கம் அளித்தால்தான் இந்தத் துறையிலே பணியாற்றுபவர்களுக்கு ஆர்வம் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பி. எல். படித்தவர்கள் இந்த நாட்டினுடைய சீப் ஜஸ்டிஸாகக் கூட ஆகலாம். ஆனால் இன்றைக்கு அசிஸ்டண்ட் சர்ஜன்களாக நுழைபவர்கள் பெரிய பதவிக்குப் போக முடியவில்லை. இன்னும்கூடச் சொல்கிறேன். அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடிலே, டி.எம்.ஈ., டி.எச்.எஸ். என்று நிரம்பப் படித்தவர்கள், நல்ல அனுபவம் உள்ளவர்கள், அவர்கள் ரிடையர் ஆவதற்கு 10 ஆண்டுகள், 5 ஆண்டுகளுக்கு முன் வர வேண்டியிருக்கிறது. அவைகளெல்லாம் நிர்வாக அமைப்புகள். அதற்கு அசிஸ்டண்ட சர்ஜன்களில் சீனியர்களாக உள்ளவர்களைப் பார்த்துப் போடலாம். ஆனால் இவர்களுடைய சேவை ஆஸ்பத்திரிகளுக்குப் பயன்பட வேண்டும். டி.எம்.எஸ். ஆக இருப்பவர்கள், அறுவை சிகிச்சை வல்லுநராகவும், நிரம்ப அறிவும் ஆற்றலும் பெற்றவர்களாகவும் இருக்கும் நேரத்தில் அவர்களை இப்படி ஃபைல் பார்க்க ஒரு ஆபீசில் உட்கார வைத்து இருப்பது இந்த நாட்டிற்கு நஷ்டம், அவர்களுடைய அறிவு, ஆற்றல் வீணாக்கப்படுகிறது. ஆகவே, அதையும் இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த டிரக்ஸ்களைப் பொறுத்தவரையில், குவாலிட்டி ஆஃப் திடிரக் என்று பார்க்கும்பொழுது, இன்றைக்குக்கூட தாலுக்கா மருத்துவமனைகளிலும், மற்ற இடங்களிலும் மருத்துவர்கள் தாங்கள் இஷ்டப்பட்டால் தரமான மருந்துகளை வாங்கலாம் என்ற முறையிருக்கிறது. ஆனால் ஆடிட் அப்ஜெக்ஷனில், லோயஸ்ட் கொட்டேஷனை ஏன் வாங்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்தக் குறைபாட்டையும் நிவர்த்திக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாலுக்கா மருத்துவ மனைகளிலேயும், மற்ற மாவட்ட மருத்துவ மனைகளிலேயும் உள்ள இந்த மருந்துகளெல்லாம் நூற்றுக்கு நூறு அங்கேயுள்ள வியாதியஸ்தர்களுக்குத்தான் போய்ச் சேருகிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. இதில் ஏதோ தவறு நடந்துகொண்டுதான் இருக்கிறது. எல்லாயிடத்திலும் அப்படி இருப்பதாகச் சொல்லவில்லை. ஆனால் சில இடங்களில் இருக்கிறது. அந்தத் தவற்றை யார் செய்தாலும் அதிகாரிகளும் மற்றவர்களும் கண்காணிப்பாக இருந்தால்தான் நாம் செலவழிக்கும் பணம், அதனால் ஏற்படும் நன்மைகள் நோயாளிகளுக்குப் போய்ச்சேரும், அதாவது மருத்துவமனைகளிலுள்ள நோயாளிகளுக்குப் போய்ச்சேரும். ஏனென்றால்





வெளியே எடுத்துக் கொண்டு சென்றாலும் அதுவும் நோயாளிகளுக்குத்தான் பயன்படும், ஆனால் இது மருத்துவமனைகளிலுள்ள நோயாளிகளுக்குப் பயன்படும் வகையில் எதிர்காலத்திலே திட்டங்கள் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய வட்ட மருத்துவமனையிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான்காண்டுக்காலமாகவே கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆனால் அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. இன்னொன்று, சென்ற ஆண்டு அங்கேயுள்ள லயன்ஸ் கிளப்பைச் சார்ந்தவர்கள் பிளட் பேங்க் அமைப்பதற்காக 25,000 ரூபாய் மதிப்புள்ள ஆர்ட்டிகிள்ஸ் கொடுத்தார்கள். இன்னும் அப்படியே இருக்கிறது. அதைச் செயற்படுத்த எந்தவிதமான முயற்சியும் இல்லாமல் இருக்கிறது. அங்கே அசிஸ்டண்ட் சர்ஜன்கள் 6 பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இந்தப் பணியைக் கவனித்துக் கொள்ளலாம். மேலும் செவிலியர்கள் அங்கே 14 பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இதைக் கவனித்துக் கொள்ளலாம். ஆனால் அரசாங்கத்தின் அனுமதி கிடைக்காமல் அங்கே பிளட் பேங்க் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. இதனால் டொனேஷன் கொடுத்தவர்கள் சங்கடப்படுகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் இல்லாமலிருக்கிறது. இதனால் அவர்கள் மற்ற நல்ல காரியங்களில் ஈடுபட ஊக்கம் இல்லாமல் இருக்கிறது. அதையும் விரைவில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக எந்தவிதமான கூடுதல் செலவும் ஆகாது, அங்கே இருப்பவர்களை வைத்து அதைக் கவனித்துக் கொள்ள முடியும். எனவே, அங்கே பிளட் பேங்க் சிறப்பாக நடக்க முயற்சியெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. நெல்லித்துறையிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் ஒரு திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை விரைவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூரிலே கட்டப்பட்டு வரும் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கூடியவிரைவிலே கட்டி முடிக்கவும், கட்டியபிறகு, அது தொழிலாளர்கள் நிரம்பிய இடமாக இருப்பதால் அந்தப் பகுதியை நல்ல முறையிலே எல்லா ஸ்பெஷாலிட்டீசும் நிறைந்த மருத்துவமனையாக ஆக்கித்தர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து ....................

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கோபி இதற்கே தமிழ்நாடு அரசாங்கத்தின் வரவு-செலவு முழுவதையும் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பினால் மற்ற உறுப்பினர்களின் உரிமை பறி போய்விடும். கொஞ்சம் வேறு மாவட்டங்களுக்கும் போய் வரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : அடுத்து, சி.எம்.சி. மருத்துவ மனை ............(மணியடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஏற்கனவே ரொம்ப நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>டாக்டர் ச. மு. பழனியப்பன் :</u> சி.எம்.சி. மருத்துவமனை பற்றிய பிரச்சினை பற்றிப் பல்வேறு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். அந்த நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து ஆலோசிக்க வந்தபோது ஒரு சமரசத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் வைத்தார்கள். 15 தொழிலாளர்களை மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறினார்கள். ஆனால் அவர்களை எடுத்துக் கொள்ள அவர்கள் மறுக்கிறார்கள். இந்த நிலைமை நிச்சயமாக ஒரு மாநில அரசாங்கத்திற்குச் சவால் விடுவதாக இருக்கிறது. அவர்கள் இந்த சமரசத்திற்கு உடன்படாவிட்டால் அரசு அதனை எடுத்து நடத்த முன்வரவேண்டும். மால்கோவை நாட்டுடைமையாக்கியது போல்—இன்னும் முடிவு மத்திய அரசிடமிருந்து வரவில்லை—இந்த மருத்துவமனையையும் அரசு எடுத்து நடத்த முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன் இருக்கும் மருத்துவம் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள் சி.எம்.சி. வேலூர் ஹாஸ்பிடல் பற்றிச் சில கருத்துக்களைச் சொன்னதால் நானும் அதைப் பற்றி இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் அந்தச் சூழ்நிலைக்கு எந்தவிதக் குந்தகமும் இல்லாது ஒரு ஆலோசனையைக் கூறுவது உசிதம் என்று கருதுகிறேன். அந்த ஆஸ்பத்திரி நிர்வாகிகளுக்கும் அரசுக்கும் ஏதோ ஒரு தகராறு இருக்கிறது என்ற எண்ணம் மக்கள் மனத்தில் நிலவி வருகிறது. அந்த எண்ணத்தைப் போக்க இப்போது மதிப்புமிக்க அம்மையார் அவர்கள் மு[illegible] மற்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சி நல்ல முறையில் வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணத்தை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய எண்ணம் நல்லதாக இருந்தாலும் மக்கள் மனதில் ஒரு உஷ்ணமான எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. அரசுக்கும் அந்த ஆஸ்பத்திரிக்கும் எந்த விதமான தகராறும் இல்லை, அரசு நல்ல முறையில் பிரச்சினையைத் தீர்த்து வைக்க விரும்புகிறது என்ற எண்ணத்தை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும். எத்தனையோ வருஷங்களாக நல்ல முறையில் நடந்து வருகிற அந்த ஆஸ்பத்திரியில் அரசு சொல்வதை அவர்கள் கேட்கவில்லை என்றால் அதற்கு முக்கியமான காரணம் ஒன்று இருக்க வேண்டும். அந்தக் காரணம் என்ன என்பதை அறிந்து அதையும் களைய முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் நல்ல பலனும் கிடைக்கும், நல்ல சூழ்நிலையும் ஏற்படும்.

பொதுவாக, மற்ற மானியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த நல்வாழ்வுத் துறை நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பெருமை கூட அடைந்து கொள்ளலாம்.

மற்ற நாடுகளில் இலவச சிகிச்சை 5 சதவிகிதம் 10 சதவிகிதந்தான் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை 80 சத





விகிதம், 90 சதவிகிதம் இலவச சிகிச்சை கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட கொள்கையை வைத்துக் கொண்டு அதற்காகப் பாடுபட்டு வரும்போது ஏராளமான பிரச்சினைகள் இருப்பது சகஜந்தான். ஆகவே, இதிலே ஏதேனும் கோளாறுகள், குறைகள் இருந்தால் அவை என்ன என்று பார்த்து அதைக் களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதற்கு இந்த அரசு என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றிய ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

இந்தத் துறையிலே இன்று மாணவர்கள் படித்து டாக்டர்களாக வருகிறார்கள். முன்னாலே படித்து டாக்டர்களாக வந்தவர்களிடம் இருந்த சேவா உணர்ச்சி இப்போது படித்து வரும் மாணவர்களிடம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இன்றைய சூழ்நிலையில் மாணவர்கள் படித்து வந்தவுடன் சேவா உணர்ச்சிக்கு இடம் இல்லாமல் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணந்தான் அவர்களுடைய மனதிலே இருக்கக்கூடிய சூழ்நிலை தோன்றியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலை ஏற்படுவது, நம்முடைய நாட்டுக்கும், நம்முடைய நாட்டு மக்களுக்கும், நாம் செலவழிக்கும் பணத்திற்கும் உகந்ததா என்று சிந்தித்துப் பார்த்து அதைப் போக்க நாம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ஆஸ்பத்திரிகளைப் பொறுத்தவரை பணக்காரர்கள் வந்தாலும், ஏழைகள் வந்தாலும் ஒரே மாதிரி சிகிச்சைதான் அளிக்கப்படுகிறது. அதிலே குறை சொல்ல முடியாது. ஆனால் மக்கள் மனதில் வசதி படைத்தவர்களுக்கு அதிகமான சலுகைகள் கொடுக்கப்படுகிறது, நல்ல முறையில் கவனிக்கப்படுகிறார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. இதையும் போக்க நாம் நிச்சயமாக முயலவேண்டும். மக்கள் மனதில் அப்படிப்பட்ட எண்ணம் இருப்பது ஒரு பிரமையாக இருந்தாலும் அந்தப் பிரமையை விட்டு வைப்பது நல்லதல்ல. அதைப் போக்க என்ன செய்யவேண்டுமென்பது பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

பழைய மருத்துவக் கலைகளான சித்த வைத்தியம், யுனானி போன்றவற்றுக்கு சரியான வகையில் போஷாக்கு, ஊக்கம் கொடுக்கவில்லை என்ற கருத்து நாட்டுமக்கள் மனதில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இவை நல்ல ஒரு பெருமையைத் தேடித் தந்த மருத்துவ முறையாகச் செயல்பட்டு வந்திருக்கின்றன. அந்தப் பெருமையை அடைவதற்கு இப்போது இருக்கக்கூடிய அந்நிய மருத்துவ முறைக்கும், இவற்றுக்கும் இடையே கோ-ஆர்டினேஷன் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல முடியும். இதை ஒருங்கிணைத்து பழைய மருத்துவ முறைக்கும் ஊக்கம் அளிப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். இப்படி இதிலே உள்ள குறைபாடுகளை எல்லாம் களைவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அரசு இந்தத் துறையில் பெருமைப்பட கூடிய அளவுக்குச் செயலாற்றி வந்தாலும் சிறு விஷயங்களில் கூட குறைகள் இருந்தால் அதை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக ஒரு கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி மூலமாக ஆலோசனைகளைப் பெற்று செயல்படுத்த முன் வரலாம். அந்த அளவிலே நம்முடைய அரசு செயல்பட வேண்டுமென்று

கேட்டுக் கொண்டு நல்ல முறையில் நம்முடைய நாட்டில் இயங்கி வருகின்ற இந்தத் துறை மேலும் சிறப்பாக இயங்கிட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இங்கே வழங்கப்பட்டிருக்கின்ற 3 மானியக்கோரிக்கைகள் சம்பந்தப்பட்டவரை, என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்தி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக, நோய்வாய்ப்படுகின்ற மக்களுடைய விகிதமானது மிகவும் வேகமாக அதிகரித்துக்கொண்டு வருகின்றது. அப்படியிருந்த போதிலும் அந்த நிலை இங்கே பிரதிபலிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது அவுட்லேயைவிட—ஒதுக்கீடைவிட செலவு 7 லட்சம் கூடியிருக்கிறது. மூன்றாவது திட்டகாலத்தில் ஒதுக்கீட்டைவிட—செலவானது 467 லட்சம் கூடியிருக்கிறது. ஆனால் நான்காவது திட்டத்திலே ஒதுக்கியிருக்கும் தொகை 1,610 லட்சம் ரூபாய். அதாவது மெடிகல்-பப்ளிக் ஹெல்த்துக்கு மட்டும். ஆனால் செலவோ 1,533 லட்சம் தான்—ஆக, ஒதுக்கீட்டைவிட செலவான தொகை குறைந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

அதேபோல மெடிகல் டெவலப்மெண்ட் பட்ஜெட்டைப் பார்க்கும்போது 1974–75-க்கான எஸ்டிமேட் எக்ஸ்பண்டிச்சர் ரூ. 2,216 லட்சம். ஆனால் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் ரூ. 2,054 லட்சம்—அதாவது ரூ. 62 லட்சம் குறைந்திருக்கிறது. ஆக, எந்தத் தொகை, மக்களுக்கு அதிகமாக செலவு செய்யப்பட்டு, மக்களின் உடல் நலனை பேணிப் பாதுகாப்பதற்காக அதிகரிக்க வேண்டுமோ, அந்தத் தொகை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைந்திருக்கிறது. சாதாரணமாக, மக்களின் உடல்நலம் குறைந்து கொண்டிருக்கிறது என்பதைப் பரவலாகப் பார்க்கிறோம். இது நாட்டின் பொதுவான நிலை. எனவே, அதற்காக ஒதுக்கப்படுகின்ற தொகை அதிகரித்திருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். படுக்கை எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் கூட, இந்த நிலை இதிலே பிரதிபலிக்கவில்லை. 1971–72-லிருந்து 1975–76 வரை, படுக்கை எண்ணிக்கை எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்று பார்த்தால் 262 தான்—அதாவது ஆண்டுக்கு 2 சதவிகிதம் தான் கூடியிருக்கிறது........

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, படுக்கை எண்ணிக்கையைப் பற்றிய விவரத்தை உறுப்பினர் குறிப்பிட்ட காரணத்தால் இடையிலே குறுக்கிட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. 262 என்று குறிப்பிட்டார்கள். தவறான அடிப்படையில் அந்தப் புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் இந்த எண்ணிக்கை மிகக் குறைவு. இந்த ஆண்டு கூட படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்று ஊர் ஊராகச் சொல்ல முடியும். புள்ளிவிவரத்தில் தவறான எண்ணிக்கையைத் தெரிவித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். சரியான தகவல்களைக் கேட்டிருக்கின்றேன். அத்தகவல் வந்தவுடனே அதைப் பற்றிக் கூறும்போது சரியான எண்ணிக்கையைத் தெரிவிக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நான்காகா ஆஸ்பத்திரிகளைப் பற்றி நான் இங்கே சொல்லவில்லை. மொத்தத்தில் நமது மாநிலத்தில் ஆயிரத்தி சொச்சம் படுக்கைகள் தான் 5 ஆண்டுகளில் அதிகரித்திருக்கின்றன. எஸ்டிமேட்டில் தந்திருக்கும் தகவல்படி அதாவது, ஆண்டுக்கு 262 படுக்கைகள்தான்—அதாவது 2 சத விகிதம் தான் அதிகரித்திருக்கின்றன. தேவையைப் பார்க்கும்போது இது மிக மிகக் குறைவானது என்பதைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

மருத்துவ மனைகளில் ஸ்பெஷலிஸ்ட் சர்வீஸ் மிகவும் குறைவாக இருக்கிறது. மருத்துவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருக்கிறது. அரசு மருத்துவ மனைகளில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைந்திருக்கிறது. எனவே, நோயாளிகள் தனியார் நர்சிங் ஹோம்களை நாடவேண்டியிருக்கிறது. தனியார் மருத்துவ மனைகளில் "ஃப்லீஸிங்" செய்யப்படுகிற நிலை காணப்படுகிறது. நாள் ஒன்றிற்கு ரூ. 100, 200 என்று கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. சாதாரண மக்கள் இவ்வளவு செலவு செய்ய முடியாமல் அல்லல் படுகிறார்கள். ஆகவே, ஸ்பெஷலிஸ்டுகளின் எண்ணிக்கையை அரசாங்க மருத்துவ மனைகளில் கூடுதலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, குறிப்பாக, ஹார்ட் சர்ஜரி—இருதய நோய் அதிகமாகி இருக்கிறது. மற்றொன்று புற்றுநோய். இருதய நோய்க்கான அறுவை சிகிச்சை வசதி எல்லா இடத்திலும் இல்லை. அதற்காக சென்னைக்கும், வேலூருக்கும் போக வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, எல்லா மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் ஹார்ட் சர்ஜரிக்கான ஏற்பாடுகள் இருக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். அதற்கான தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் அமர்த்தப்படவேண்டும் .

மருத்துவ மனைகளில் பொதுவாக, செவிலிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. அதனால் அவர்கள் செய்ய வேண்டிய வேலைப்பளு கூடுகிறது. எனவே அவர்களால் சரிவர வேலையை கவனிக்க முடியவில்லை. செவிலியர்கள் வேலைக்காக படித்தவர்கள் நிறைய பேர்கள் வேலையில்லாமல் வேலைக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும், நோயாளிகளையும் சரிவர கவனிக்க முடியும்.

நோயாளிகளுக்கு இன்ஜக்ஷன் போடுகிறார்கள். அப்போது ஸ்பிரிட்டை உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக வெந்நீரை உபயோகப்படுத்துகிறார்கள். ஸ்பிரிட் பற்றுக்குறை காரணத்தால் அப்படிச் செய்கிறார்களா? அல்லது ஸ்பிரிட்டும் மருந்தோடு சேர்ந்து மறைந்து விடுகிறதா என்பது தெரியவில்லை. அதனால், ஊசி போட்டுக்கொண்டவர்களுக்கு காய்ச்சல் போன்ற உபாதைகள் ஏற்படுகின்றன. சில ஃபேடல் கேஸ்களுக்குக் கூட இதுவும் ஒரு காரணம். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புற்றுநோயைப் பொறுத்தவரையில் கோவை மருத்துவக் கல்லூரியில் புற்றுநோய்க்கான பிரிவு கிடையாது. எனவே, தனியாக புற்றுநோய்க்

கான பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவை ஒரு பெரிய பஞ்சாலைகள் நிறைந்த மாவட்டம். புற்று நோய் தொழிலாளர்களை அதிகமாக தாக்குவதற்கு வாய்ப்பு அங்கே அதிகம். எனவே, கோவை மருத்துவக் கல்லூரியில் தனி டிபார்ட்மெண்ட் ஒன்றினை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவை, சி. எம். சி. மருத்துவ மனையில் இதற்கான புற்றுநோய் வார்டு ஏற்படுத்தப்படவேண்டும். அதோடு அந்த மருத்துவ மனையில் இன்னொரு ஸ்பெஷல் வார்டு உடனே கட்ட வேண்டும். மற்ற மருத்துவ மனைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது படுக்கை எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் ஸ்பெஷல் வார்ட் ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ மனைகளில் ஆம்புலன்ஸ் வேன்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. இருக்கின்ற ஒன்றிரண்டும் ரிபேராகி பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. ரிபேரானவைகளை உடனடியாக பழுது பார்க்க வேண்டும். கோவை ஈ. எஸ். ஐ. மருத்துவ மனை மிக முக்கியமானது. அங்கே உள்ள ஆம்புலன்ஸ் வேன் ரிபேராகியிருக்கிறது. தொழிற்சாலைகளில் தான் தொழிலாளிகள் ஆக்சிட்ண்டுக்கு உள்ளாகிவிட நேரிடும். அப்போது ஆம்புலன்ஸ் வேன் தேவைப்படுகிறது. எனவே, இன்னொரு ஆம்புலன்ஸ் வேன் உடனடியாக கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சைதாப்பேட்டை டிஸ்பென்சரியில் தினசரி அவுட்-பேஷண்டுகள் 1,500 பேர்கள் வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் மொத்தம் அங்கு 4 டாக்டர்கள் தான் இருக்கிறார்கள். படுக்கைகள் 30 தான் இருக்கின்றன. எனவே, அங்கே டாக்டர்களின் எண்ணிக்கையையும் படுக்கை எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐ. டி. ஆஸ்பத்திரி என்று சொல்லப்படுகிற தொற்றுநோய் மருத்துவ மனை வட சென்னையில் தண்டையார்பேட்டையில் இருக்கிறது. தென் சென்னையில் இருக்கும் நோயாளிகள் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருப்பதால் அவதிப்படுகிறார்கள். எனவே, தென் சென்னையிலும் ஒரு ஐ. டி. ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவையில் ஒரே ஒரு ஆஸ்பத்திரி—சி. எம். சி.-ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி—ஒன்றுதான் இருக்கிறது. அது கோவை மக்களுக்கு போதுமானதாக இல்லை. எனவே, வட மேற்குப் பகுதியில் இன்னொரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பப்ளிக் ஹெல்த்தைப் பொறுத்த வரையில் இன்றையதினம் பப்ளிக் ஹெல்த் மிகக் குறைவாக இருக்கிறது. அதாவது சானிடேஷன் சரியாக இல்லை. பல தொற்றுநோய்கள் பரவிக்கொண்டிருக்கின்றன. சானிடேஷன் சரியாக இல்லாததுதான் இதற்குக் காரணம். சானிடேஷன் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது. பொதுவாக மாநிலம் எங்கிலும் கொசுத் தொல்லை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. உதாரணமாக எம். எல். ஏ. ஹாஸ்டலிலேயே கொசுத் தொல்லை அதிகமாகி இருக்கிறது. முன்னே மேல் மாடிகளில் கொசுத் தொல்லை இருக்காது. ஆனால்





இப்பொழுது எங்கும் கொசு அதிகமாக இருக்கிறது. மின்சார விசிறி சுற்றிக்கொண்டிருந்தால் கூட கொசு வருகிறது. இது தீவிரமாக கவனிக்க வேண்டிய விஷயம். கொசுத்தொல்லையால் மலேரியா போன்ற வியாதிகள் அதிகரிக்கின்றன என்பதைக் கவனத்திற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ மனைகளில் மருந்துகள் மறைந்துபோகின்றன. இதைப் பற்றி நண்பர் பழனியப்பன் அவர்கள் மிகவும் நாசூக்காகச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இது இருக்கிறது. இதைப்பற்றி தீவிரமான நடவடிக்கை தேவை. இதனால் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் இல்லாமல் கஷ்டப்படும் நிலை ஏற்படுகிறது. மருத்துவ மனைகளுக்கு வருகின்ற மருந்துகளை, குறிப்பாக காஸ்ட்லி மெடிசன்ஸ் மிகக் குறைவு. அவையும் திருட்டுப் போய் விடுகின்றன என்பது வேதனைக்குரிய ஒன்று. மருந்துகள் மாயமாகப் போவதைப் பற்றி கேள்வி நேரத்தில் கேள்வி கேட்டால், அமைச்சரவர்கள் ஏதோ பதில் சொல்லி சமாளித்துக்கொள்கிறார்கள். சமாளித்துக் கொள்ளும் விஷயம் அல்ல இது. நோயாளிகளுக்கு மருந்து கிடைக்காமற் போவது மட்டுமல்ல, மருத்துவ மனைகளில் தவறு செய்யும் போக்கு இதனால் அதிகரிக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு, மருத்துவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி ஆய்வு செய்தால், இந்தத் தவறை முழுக்க முழுக்க தவிர்க்க முடியாவிட்டாலும் குறைப்பதற்காவது முடியும். எனவே, ஆய்வுக் குழு அமைத்து மூன்று மாதத்திற்குள் அறிக்கை தரச்செய்து, அதனை அமுல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்யாவிட்டால், இத்துறைக்காக, நோயாளிகளின் நன்மைக்காக அரசாங்கம் என்னதான் செய்தாலும், நோயாளிகளுக்காக கொடுக்கப்படுகின்ற மருந்துகள் நோயாளிகளுக்குக்கிடைக்காவிட்டால், செய்கின்ற செலவுக்கு அர்த்தமில்லாமல் போய் விடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருந்துகள் திருடுபோவது பற்றிக் குறிப்பிட்டார்கள். மருந்துகள் திருடு போவது குறித்து குறிப்புகள் அரசாங்கத்திற்கு அனுப்பி, இப்படி திருடு போனதாக மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் தெரிவித்தோ அல்லது பொதுமக்கள் தெரிவித்தோ குறிப்பு வருகிறபோது, உடனடியாக போலீஸ் இலாகா மூலமாக அதைக் கண்டுபிடிக்கச் சொல்லி நடவடிக்கை எடுக்கிறோம். திருடு போகாமல் இருப்பதற்காக, மருந்துகள் குறிப்பேட்டில் எழுத வேண்டும், இன்னார் சீட்டு கொடுத்தால்தான் மருந்து கொடுக்க வேண்டுமென்று விதிமுறை வைத்து இருக்கிறோம். இத்தகைய நடவடிக்கைகளையும் மீறி திருடு போகிறது என்று சொன்னால், அது எப்படிப் போகிறது என்று சொன்னால் என்னால் புரிந்து கொள்ள முடியும். யாரால் போகிறது என்று ஓரளவிற்குச் சொன்னால், யாரைக்கொண்டு தடுப்பது என்று நான் தீர்மானிக்க முடியும்.

திரு. எ. சுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே, குழு போட வேண்டுமென்று சொல்கிறபோது, இது ஒரு சிக்கலான விஷயம் என்று

[திரு. எ. சுப்பிரமணியம்] [1975 மார்ச் 13

புரிந்து கொண்டிருக்கவேண்டும். இதிலே பலருக்குப் பங்கு இருக்கிறது. நோயாளிக்கும் சில நேரங்களில் பங்கு இருக்கிறது. டாக்டர்கள், ஊழியர்களுக்கும் பங்கு இருக்கிறது. அதனால் தான் சொன்னேன், குழு போடவேண்டுமென்று. நான் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மட்டும் குறை சொல்லவில்லை. குற்றம் சொல்லவில்லை. இது ஒரு கொடுமையான நோய், இந்த நோயை அகற்றுவதற்கு வழி கண்டுபிடிக்கவேண்டும். நோயை முழுமையாக அகற்றாவிட்டாலும், குறைப்பதற்கு வழி கண்டுபிடித்தாக வேண்டும். அமைச்சர் அவர்கள் ஆளைச்சொல் நடவடிக்கை எடுக்கிறேன் என்ற முறையில் சொன்னார்கள்........

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> ஆளைச்சொல், நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லவில்லை. நான் சொல்லியதற்கு அர்த்தம் புரிந்து கொண்டுதான் திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது? வேலி என்று சொல்கிறபோது. பாதுகாப்புக்கான வேலியே மேய்கிறபோது தவறு ஏற்படாமல் இருக்காது. அங்கேயுள்ள சிறிய சிறிய பணியில் இருப்பவர்கள் தவறு செய்வதைக் கண்டும் காணாமல் விட்டுவிடும் நிலை இருக்குமானால் யாரைக் கொண்டு அதனைத் தடுக்க முடியும், கண்டுபிடிக்க முடியும். முறைகேடு இருக்கிறது. எப்படியெப்படியெல்லாம் அக்கவுண்டு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. யார் குறிப்பு தந்தால் மருந்து கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. டூப்ளிகேட் ரசீது வைத்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. இவ்வளவு இருந்தும் சில இடங்களில் தவறு நடக்குமானால் பொதுவாக அந்தத் துறையில் இருக்கும் சிலர் செய்யும் தவறு காரணமாகும். அதைச் செய்பவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்களானால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகூட எடுக்க முடியும்.

<u>திரு. எ. சுப்பிரமணியம் :</u> தலைவரவர்களே, இது ஒரு சிக்கலான காரியம். வேலியே பயிரை மேய்கிறது என்பது உண்மை, அதற்குச் சிலர் ஒத்தாசை செய்து இது நடைபெறக்கூடும். இது சம்பந்தமாக நான் சில மாதங்களுக்கு முன்பு "ஹிந்து" பத்திரிகையில் ஒரு கட்டுரை பார்த்தேன். ஒரு டாக்டர் நன்றாக ஆராய்ந்து அதை எழுதி இருந்தார். ஆகவே, அது பற்றி அப்படிப்பட்ட டாக்டர்கள் கொண்டு கமிட்டிபோட்டு ஆராய்ந்தால், அந்தக் குறையைப் போக்கமுடியும். அதை அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பப்ளிக் ஹெல்த் பொறுத்தவரையில், குடிநீர் மிகவும் முக்கியமானது. இதிலே குறிப்பாக என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு இருக்கிறது. நிரந்தரமான பரிகாரம் செய்யும் வகையில் ஒரு திட்டம் அமைக்க வேண்டும். டாக்டர் பழனியப்பன் அவர்கள் நெல்லித்துறை திட்டம் பற்றி குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று 1971லேயே மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது சொன்னார்கள். ஆனால் நெல்லித்துறை திட்டம் பற்றி இப்போது பேச்சே இல்லை. இப்போது சிறுவாணி திட்டம் பற்றிச் சொல்கிறார்கள். இந்த சிறுவாணி திட்டம் பற்றி பேசுகிற நேரத்தில் நான் கூட குறிப்பிட்டேன், சிமெண்ட் கிடைக்காததால் வேலை தடைப்பட்டிருக்கிறதென்று. இப்போது சிமெண்ட் கிடைத்துள்ளதாகத்



[திரு. எஸ். நல்லசாமி] [1975 மார்ச் 13

முதலில் மருத்துவத் துறையில் பணியாற்றும் டாக்டர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். புதிதாக படித்து விட்டுப் பட்டம் பெற்றுவரும் டாக்டர்களை எடுத்த உடனேயே, ஆரம்ப சுகாதார நிலையம், அல்லது ஈ. எஸ். ஐ. மருத்துவ மனை, அல்லது லெப்ரசி சென்டர் ஆகியவற்றில் போட்டு விடுகிறார்கள். அவர்களுக்கோ அனுபவம் குறைவு. இப்படி அனுபவம் குறைவானவர்களை எடுத்த எடுப்பிலேயே இந்த மாதிரி கிராமத்திலே இருக்கக்கூடிய இடங்களில் போடுகிறார்கள். அங்கேயுள்ள மக்களுக்கு நோய் இன்னது என்று தெரியாமல் கடைசி வரை நோயை முத்தவிட்டுக்கொண்டு கடைசியில் மருத்துவ மனைக்கு வருகிறார்கள். அந்த இளம் டாக்டர்களுக்கு அனுபவம் இல்லாத காரணத்தாலும், சீனியர் டாக்டர் யாரிடத்திலும் ஆலோசனை கேட்க முடியாத காரணத்தினாலும், அவர்கள் சிறப்பாக வைத்தியம் செய்வதற்கு முடியாமல் போய்விடுகிறது.

ஈ. எஸ். ஐ. மருத்துவ மனையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே யாரைப் போட்டாலும் அவர்கள் தண்டனை என்று நினைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் தினமும் மருத்துவ மனையில் பேச்சு வாங்க வேண்டியிருக்குகிறது. கெட்ட வார்த்தைகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையத்தை எடுத்துக்கொண்டால், அங்கேயுள்ள கிராம மக்கள் நோயை முத்த விட்டுக் கொண்டு மருத்துவ மனைக்கு வருகிற காரணத்தால், அவர்கள் திறமையாக வைத்தியம் செய்ய முடியாமல் போய் விடுகிறது. இதே மாதிரி லெப்ரசி மருத்துவ மனையை எடுத்துக் கொண்டாலும், அதுவும் ஒரு தண்டனை போல் கருதுகிறார்கள். என்னைப் போன்றவர்கள் சிபாரிசு செய்யவில்லையென்றால்......................

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> இப்படி ஆரம்ப சுகாதார நிலையம், ஈ. எஸ். ஐ. மருத்துவமனை, டி. பி. ஹாஸ்பிடல் போன்றவற்றில் பல ஆண்டுகள் பயிற்சி பெற்ற டாக்டர்கள் தான் போடவேண்டுமென்றால், அந்த அளவுக்கு பயிற்சி பெற்ற டாக்டர்கள் இல்லை. டாக்டர்கள் பல துறைகளில் மக்களுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். டாக்டர்கள் திறமையை விட, அவர்கள் முதலில் தொண்டு செய்வதில் பயிற்சி பெறவேண்டும். அதனால் தான் அவர்களை முதலில் கிராம மருத்துவ மனை, ஈ. எஸ். ஐ. மருத்துவ மனை, டி. பி. ஹாஸ்பிடல், ஜெயில் மருத்துவ மனை போன்றவற்றில் போடுகிறோம். கிராமப்புறத்திலேயே இப்படிப்பட்ட இளம் டாக்டர்கள் போட வாய்ப்பில்லையென்றால் மாவட்டத்தில் இருக்கும் பெரிய மருத்துவ மனைகளில் போட்டால், எத்தகைய முறையில் அவர்கள் திறமையாக சிகிச்சை செய்ய முடியும். இப்போதுதான் டாக்டர்கள் அதிக அளவில் படித்துவிட்டு வருகிறார்கள். அவர்களை நாம் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில் தான் முதலில் இப்படிப்பட்ட இடங்களில் நாம் போடுகிறோம். இவர்களை இப்படிப் போடுவதன் காரணமாக அவர்கள் படிப்படியாக வளர்ச்சி பெற முடியும். அதை விடுத்து, உறுப்பினர்கள் அவர்கள் எல்லாம் பாவம் செய்தவர்கள் என்றால், அவர்களெல்லாம் கோவிலில் தான் முறையிடலாமே தவிர, நிர்வாகத்தில் மற்றும் செய்வது இயல்வதல்ல, முடியாது.

1975 மார்ச் 13] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

தகவல் வந்துள்ளது. அந்தத் திட்டம் கோவை, சிங்காநல்லூர் வரை வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் பேச்சில் பார்த்தால் அது கோவைக்கு மட்டும் வரும் என்பது போல் தோன்றுகிறது. அப்படியே வந்தாலும் கிழக்குப் பகுதிக்குத்தான் கிடைக்கும். வடக்குப் பகுதிக்குக் கிடைக்காது. இந்த நெல்லித்துறை திட்டம் வந்தால் தான், வடக்குப் பகுதிக்கு தண்ணீர் கிடைக்கும். நான் அன்றைக்குக்கூட சொன்னேன், குறைந்தது அந்தத் திட்டத்தை துவக்கியாவது வையுங்கள். முதலில் 1 கோடி, 2 கோடி என்று ஒதுக்கி, அதற்கான பூர்வாங்க பணிகள் செய்தால், 3-4 ஆண்டுக்குள் அதை நிறைவேற்ற வாய்ப்பு கிடைக்கலாம். அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த ஏர்-பொல்யூஷன் வாட்டர்-பொல்யூஷன் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். காற்று அசுத்தம் மிக அதிகமாக இருக்கிறது. கேள்வி நேரத்தில் குறிப்பிட்டேன், பஸ்கள், லாரிகள் இவைகளில் சில ஒழுங்காக ஓடுகின்றன. பல பஸ்கள் ரயில் இன்ஜின் மாதிரி புகை விட்டுக்கொண்டு செல்கின்றன. பெட்ரோலில் மண்ணெண்ணெய் ஊற்றுவதால் வருகிறதா? அல்லது இயந்திரக் கோளாறினால் வருகிறதா என்பது தெரியாது. காரணம் எதுவாயினும் இது சுகாதாரத்திற்கு மிகவும் பாதகமாக இருக்கிறது. இரண்டாவதாக பாக்டரிகளால் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சுரேந்திரன் அவர்கள் கூட ஒரு கட்மோஷன் கொடுத்து இருக்கிறார்கள். அவைகளிலிருந்து மோசமான கழிவு நீரை வெளியே கொண்டுபோய் அருகில் உள்ள ஆறுகளில் விடுகிறார்கள். மேட்டூர் போன்ற இடங்களில் அப்படிக் கலக்கிறது. இப்படி கலக்கிற காரணத்தால் ஆற்றுநீர் கெட்டுவிடுகிறது. அதேபோல் டிஸ்டிலரிஸிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. 4, 5 மைல் தூரத்திற்குக் கூட நடமாட முடியாத நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக அரசு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலை நாடுகளில் கடுமையான சட்டங்களைப் போட்டு, கடுமையான தண்டனைகள் கூட வைத்திருக்கிறார்கள். ஒலிக்குக்கூட இத்தனை டெசிமல் சவுண்டுக்கு மேல் உண்டுபண்ணினால் தண்டனை என்று வைத்திருக்கிறார்கள். இந்த ஏர்-பொல்யூஷன், வாட்டர் பொல்யூஷன் ஆகிய இரண்டையும் எபக்டிவ்வாக தடுப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைச் சொல்கிறபோது, என்னுடைய சிங்காநல்லூரில் இரண்டு குட்டைகள் இருக்கின்றன. அந்த குட்டைகளில் கழிவு நீர் தேக்கி வைக்க பயன்படுத்துகிறார்கள். இதனால் நோய் பரவுகிறது. இது குறித்து கூட நான் கட்மோஷன் கொடுத்து இருக்கிறேன். ஆகவே, இந்த பொல்யூஷனைத் தடுக்க அரசு தன்னுடைய பணியாக அதை எடுத்துக்கொண்டு, நகரத்தின் சுகாதாரத்தை பாதிக்கும் இந்தப் பிரச்னையைத் தவிர்க்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, மருத்துவத் துறை மானியத்தை வரவேற்று சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.



1975 மார்ச் 13]

திரு. எஸ். நல்லசாமி : தாலுக்கா ஆஸ்பத்திரியிலும், மாவட்ட மருத்துவ ஆஸ்பத்திரியிலும் மருத்துவர்களுக்கு 2 வருடம் பயிற்சி கொடுத்து, அதற்குப் பிறகு நிபந்தனையுடன் ஒரு டாக்டர் 2 வருடம் பெரிய மருத்துவ மனையில் பணி செய்தால், அதற்குப் பிறகு ஆரம்ப சுகாதார மனையிலும் அல்லது ஜெயில் டாக்டராக, அல்லது இ. எஸ். ஐ. டாக்டராக 1 வருடமோ, 2 வருடமோ செயல்பட்டாக வேண்டும் என்று கண்டிப்பாக ஆர்டர் செய்யலாம். புதிதாக ஆரம்பத்திலேயே அவர்களை அந்த இடத்திற்கு போடக் கூடாது என்பதுதான் என் யோசனை. அவர்கள் அந்த ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யக் கூடாது என்பதல்ல என் நோக்கம். அவர்களை அந்த ஆஸ்பத்திரிகளில் ஆரம்ப காலத்திலே போட்டு அவர்கள் தங்கள்பேரில் பாரம் சுமத்தப்பட்டிருக்கிறது என்று நினைக்கக் கூடாது என்ற நிலையில் அவர்களை நீங்கள் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, வெளி நோயாளிகள் அதிகமாக வரக் கூடிய ஆஸ்பத்திரிகளில் கண்டிப்பாக டாக்டர்களை அதிகப்படுத்தவேண்டும். அப்படி அதிகப் படுத்தினால் அந்த ஆஸ்பத்திரி நல்ல முறையில் செயல்படும். அதற்கான படிப்பு வசதிகளை அதிகப்படுத்தவேண்டும்.

அடுத்து, கரூரில் பெரிய கட்டடத்தை கட்டியிருக்கிறார்கள். அதற்காக கரூர் நகர மக்களுடைய சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நிர்வாகத்தில் நமது அமைச்சர் அவர்கள் ரொம்ப நல்லவர். நியாயமானவர். மனச்சாட்சியோடு நடந்து கொள்ளுவார். ஆனால் அவர் கீழ் இருக்கக் கூடிய நிர்வாகத்தில் பெரிய டன் கணக்கில் பொய் பேசக் கூடிய பெரியவர்கள் இருக்கிறார்கள். நான் அமைச்சருக்கு தொல்லை கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொய் என்பதை பொறுத்த வரையில் டன் அளவுக்கு பொய் பேசுவது என்பது.............

திரு. எஸ். நல்லசாமி : வேண்டுமானால் திருத்திக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் வேண்டுமென்றே அப்படி சொல்லி இருக்க மாட்டார். மொத்தம் எவ்வளவு டன் இந்த பண்டம் அங்கே கிடைத்தது என்று கேட்டிருப்பார். 1, 2 டன் குறைவாக இருக்கும். டன் கணக்கில் குறைந்தது என்று சொல்லுகிறார். பொய்மை நிறுவை அளவில் இல்லை என்று நான் கூறிக் கொள்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி : சில சீர்திருத்தம் செய்ய வேண்டும். சீனியாரிட்டியை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாறுதல் செய்யாமல், ஜூனியாரிட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.

சித்த வைத்தியத்தைப் பற்றி நமது அரசு சரியான கவனத்தோடு இருக்கிறது. சித்த வைத்தியத்தைவிரிவுபடுத்தியாக வேண்டும். எப்

படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறோமோ, அதே போல சித்த வைத்தியத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வீட்டு வைத்தியமாக மாற்ற வேண்டும். சித்த வைத்தியம் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டிய அளவுக்கு மாற்ற வேண்டும். ஒவ்வொரு தலைநகரத்திலும் ஒவ்வொரு தாலுகா ஆஸ்பத்திரியிலும், கிராம, ஒன்றிய ஆஸ்பத்திரிகளிலும், சித்த வைத்தியம் இருந்தாக வேண்டும். முடிந்தால் கிராம அளவுக்கு விரிவு படுத்தி, நாட்டு மக்கள் எல்லோரும் சித்த வைத்தியத்தை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டை சர்க்கார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் துறையின் மானியத்தை வரவேற்று நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இந்த நல்வாழ்வுத்துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியத்தின் மீது எங்கள் கட்சியின சார்பாக சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

அதாவது, இந்த நாட்டிலே, இந்திய நாட்டிலே சுகாதார முறையில் வாழ்ந்தால்தான், இந்த நாட்டிலே மனிதன் மனிதனாக வாழ முடியும். ஆகவேதான், இன்று நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம் என்று கூறப்படுகிறது. அந்த நோயற்ற வாழ்வு வாழ வேண்டுமென்றால், இன்றைக்கு ஆஸ்பத்திரிகள் சுகாதார முறையில் இருக்க வேண்டும். நாடு, நகரங்கள் சுகாதார முறையில் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் நோயற்ற வாழ்வு வாழ முடியும். அதே சமயத்திலே நமது நாட்டிலே எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள், இன்றைக்கு ஆயிரக் கணக்கானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அப்படி வேலையில்லாமலிருக்கிற டாக்டர்களுக்கு வேலை கொடுப்பதற்கு நம்மிடத்தில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இன்றைக்கு கிராமப் பகுதியிலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், தலைநகரங்களில் ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் பிரசவ விடுதிகள் கட்டினால், அந்த டாக்டர்களுக்கு வேலை கொடுக்க முடியும். அந்த டாக்டர்களுக்கு வேலை கொடுத்தால், பிரசவ கேஸ்கள் நகரத்திற்கு அதிகமாக வருவதைக் குறைக்க முடியும். ஆகையினால் அந்த முறையை அரசு கையாள்வது மிக நல்லது என்று கூற விரும்புகிறேன்.

அரசு மருந்து வாங்குவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. தமிழ் நாட்டிலேயும் இந்தியாவிலேயும் செய்யக் கூடிய மருந்துகளிலே சில தரம் உயர்ந்ததாகவும், விலை குறைந்ததாகவும் இருக்கின்றன. அந்த மருந்துகளை வாங்கி உபயோகிப்பதில்லை. அயல் நாட்டு மருந்துகளை வாங்கினால் உயர்ந்ததாக இருக்கும் என்று அதிக விலை கொடுத்து வாங்குகிறோம். அதைத்தான் சில டாக்டர்கள் கூறுகிறார்கள். அப்படி இல்லாமல், இந்தியாவிலே செய்யக் கூடிய மருந்துகள், அதாவது தரத்திலும் உயர்ந்தது. விலையிலும் குறைந்தது, அப்படிப்பட்ட மருந்துகளை உபயோகப்படுத்துவதற்கு எல்லா ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கும் நீங்கள் சப்ளை செய்ய வேண்டும். அந்த மருந்துகளைத்தான் அந்த டாக்டர்கள் வாங்கி பிரயோஜனப் படுத்த வேண்டும்.





அதேபோல இன்றைக்கு சுகாதார முறையில் நடக்காமல், அந்த ஆஸ்பத்திரிகளிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அதாவது, கக்கூஸ வசதிகள் இல்லை. சில இடங்களிலே சுகாதார முறையில சுத்தம் செய்வதில்லை. கோவை பெரிய ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால்—நான் கமிட்டி மெம்பராக இருக்கிறேன். இங்கு மருந்து இல்லை, வெளியில் வாங்கி வாருங்கள் என்று சில இடங்களிலே சொல்லுகிறார்கள். அந்த மருந்து இங்கே இருக்கிறது. அந்த முறையை சில டாக்டர்கள் கையாளுகிறார்கள். அது தவிர்க்கப்படவேண்டும். அதைக் கண்காணிப்பதற்கு சில மருத்துவர்களை உபயோகப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இன்றைக்கு மருந்துக்கு கொடுக்கக் கூடிய பணம் ரூ. 3 ஆயிரம். அந்த பஞ்சாயத்திலே 65 ஆயிரம் பேர் ஜனத்தொகை இருக்கிறது. ஆக ரூ. 3 ஆயிரம் கொடுத்தால் தலைக்கு ஒரு ரூபாய் என்று கூட இல்லாமல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, யாரோ தவறாக இவருக்கு சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆரம்பத்தில் 6 ஆயிரம் ரூபாய் மருந்துக்காக கொடுக்கப்பட்டது. அதை ரூ. 8 ஆயிரமாக்கினோம். 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ரூ. 10 ஆயிரமாக்கினோம். கடந்த ஆண்டு ரூ. 12 ஆயிரம் வரையில் மருந்து கொடுக்கிறோம். அது தவிர ஒவ்வொரு துணை நிலையத்திற்கும் (சப் சென்டர்) 600 ரூபாய்க்கு மருந்து வாங்க அனுமதி வழங்கினோம். எட்டு சப் சென்டர்களுக்கு 5,000 ரூபாய் வரை மருந்து கொடுக்கிறோம். ஆக ரூபாய் 15 ஆயிரம், 17 ஆயிரம், 18 ஆயிரம் வரை மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வழங்கப்படுகின்றன.

திரு. கே.டி.கே. தங்கமணி : இன்றைக்கு மருந்து விலை உயர்ந்த நேரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சில இடங்களில் மருந்தில்லை; போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அதை வைத்து சொல்லுகிறார்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆண்டு முழுவதும் பரவலாக கிடைக்கச் செய்யக் கூடிய மருந்துகள்தான் பெரும்பாலும் 100-க்கு 90 மருந்துகள் பொதுவாக பயன்படுத்தக் கூடிய மருந்தாக இருக்கும். அப்படி ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துகள் இல்லையென்றால் மாவட்ட அலுவலர் அந்த ஆரம்ப நிலையத்திற்கு ரூபாய் 2,000 வரை கொடுத்து மருந்துகள் வாங்கி வழங்க வழி வகை இருக்கிறது. சில இடங்களில் டாக்டர்கள் முன்கூட்டி நடவடிக்கை எடுப்பதில்லை. சில டாக்டர்கள் அந்த மருந்தை வெளியே வாங்குங்கள், இங்கே இல்லை என்று சொன்னால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்குமானால் எடுக்கலாம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, நான் கிராமப் பகுதிகளிலே ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கக்கூடிய ரூபாயை மட்டும் சொன்னேன். இன்று பெரிய கிராமப் பகுதிகளிலே ஆஸ்பத்திரி இருக்கிறது;

ஆனால் அங்கு நல்ல மருந்து இல்லை. ஆகவே, எல்லா இடங்களிலும் நல்ல தரமான மருந்துகளை வாங்கிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் தனியார் ஆஸ்பத்திரி இருக்கிறது. தனியார் ஆஸ்பத்திரிகளில் நல்லமுறையில் சிகிச்சை செய்யப்படுவதால் வசதி படைத்தவர்கள் அங்கே போகிறார்கள். வசதியற்றவர்கள்தான் அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு வருகிறார்கள். சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு வரக்கூடிய ஏழை எளிய மக்கள் அரை நோயோடு திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இதை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். அந்த முறை இல்லாமல் நோய் முழுவதும் தீரும் வரையில் சிகிச்சை அளித்து, நோயாளிகளை அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அறந்தாங்கி, தேவக்கோட்டை போன்ற இடங்களில் நல்ல குடிதண்ணீர் கிடையாது. அங்கே குழாய்க் கிணறுகள் கூட இல்லை. ஆகையால். கிடைத்த தண்ணீரை மக்கள் குடிக்க வேண்டியிருக்கிறது. அதனால் நோய்கள் வருவதற்கு வழி ஏற்படுகிறது. ஆகவே, அங்கே போர் வெல்ஸ் போட்டு, நல்ல சுத்தமான தண்ணீர் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் அரிசன மெடிக்கல் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர்கள் அதற்கு காரணமாக இருந்த அந்த டீனை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது மாற்றிவிடுவதாக ஒப்புக்கொண்டார்கள். ஆனால், இதுவரையில்—ஒரு வருஷத்திற்கு மேலாகியும் அவர் மாற்றப்படவில்லை.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> அந்தக் கல்லூரியில் யார் தாக்கினார். யார் தாக்கப்பட்டார் என்பதை அங்கத்தினர் அவர்கள் தெரிந்துகொள்ளாவிட்டாலும் பக்கத்தில் இருக்கிற உறுப்பினரிடமிருந்து தெரிந்துகொண்டாவது பேசினால் நல்லது.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி :</u> ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தகராறு ஏற்பட்டது. அவர்கள் டீனை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்த சம்பவத்தில் அரிசன மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். அதைத்தான் கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். விஷயம் என்னவென்றால், அந்த டீனை மாற்றிவிடுவதாகச் சொல்லிவிட்டு, மேற்கொண்டும் அவருக்கு ஒரு வருஷம் கொடுத்திருக்கிறார்களே, அதற்கு என்ன காரணம்?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் விபரத்தை நான்கு பேரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு சொன்னால் முறையாக இருக்கும். தாக்கப்பட்டவர் வார்டன்; மாணவர்கள் அல்ல. தாக்கினவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவர்கள். அவர்கள் ஓர் வார்டனை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அதில் சில தகராறுகள் ஏற்பட்டு மற்றொரு வார்டனை அடித்தார்கள். அதுபற்றி நடவடிக்கை



எடுக்கப்பட்டு, இப்போது கைவிடப்பட்டிருக்கிறது. அந்த சம்பவத்தில் சில எம்.எல்.ஏ. வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் கூட சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். மாணவர்கள் தாம் செய்த தவறை உணர்ந்து வார்டனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்று வார்டன் தெரிவித்துவிட்டார். ஆகவே, அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி, வழக்கு கைவிடப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவம் இதுதான். டீனை மாற்ற வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை.

<u>திரு. எஸ். வடிவேல் :</u> தலைவரவர்களே, ஸ்டான்லி ஆஸ்பத்திரி விவகாரத்தில் சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ. வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் விடுதலை அடைந்துவிட்டார்கள் என்றும், மற்ற தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஜெயிலில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவர்கள் இன்னும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று அமைச்சரவர்கள் நேற்று சொன்னார்கள். உடனடியாக அவர்களை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக்கொள்வார்களா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> எம்.எல்.ஏ. வீட்டுப் பிள்ளைகள், மற்றவர்களுடைய பிள்ளைகள் என்று பாகுபடுத்தி அவர்களை வழக்கில் சம்பந்தப்படுத்தவில்லை. வார்டனிடம் மாணவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் வார்டன் அவர்களை மன்னித்து, வழக்கு தொடர வேண்டாமென்று கேட்டுக்கொண்டார். அதன் பேரில் வழக்கு கைவிடப்பட்டது. கடுமையான முறையில் இப்படிப்பட்ட கலவரங்களில் ஈடுபடக்கூடிய மாணவர்களை ஒரே இடத்தில் மீண்டும் சேர்த்து வைப்பது முறையல்ல. ஆகையால், அவர்களை மற்ற கல்லூரிகளுக்கு மாற்றி, படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி மாற்றுவதற்கு, அந்த மாணவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வேறு வேறு கல்லூரிகளில் சென்று படிக்க வேண்டுமானாலும் படிக்கிறோம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், யார் யாருக்கு எந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்று உடனே சொல்லமுடியாது. ஏனென்றால், பல்கலைக் கழகம் அதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். இடவசதியைப் பொறுத்து பரிசீலனை செய்து, பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திருமதி த.ந. அனந்தநாயகி :</u> சார், பாயின்ட் ஆப் ஆர்டர். சாதாரணமாக டாக்டர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுப்பதில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாறாக ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் ஒருவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கக் காரணம் என்ன? அவரை ஏன் ......

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

<u>திருமதி த.ந. அனந்தநாயகி:</u> நான் கேட்பது கிளாரிபிகேஷன். கிளாரிபிகேஷன் என்று கேட்டால் அனுமதிக்க மாட்டீர்கள். அதனால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டேன். குறிப்பிட்ட ஒரு டாக்டருக்கு மட்டும் 4 மாதமோ ஒரு வருஷமோ தெரியவில்லை—எக்ஸ்டென்ஷன் எதற்குக் கொடுக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு நிர்வாகத்தைப் பற்றி முடிவு செய்வதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. நிர்வாக நலனை உத்தேசித்து அந்த டாக்டருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. விபரத்தைத் தெரிந்துகொண்டு அங்கத்தினர்கள் பேசினால் நல்லது. மார்ச் மாதத்தோடு அவருடைய பதவி முடிகிறது. கல்வி ஆண்டு ஜூன் மாதத்தில் முடிகிறது. இந்தக் கல்வி ஆண்டு முடியும் வரை அவரே தொடர்ந்து இருந்தால் நிர்வாகத்திற்கு நல்லது என்று அரசு கருதியதால் அரசு அவருடைய பதவியை நீட்டித்திருக்கிறது. இல்லையென்றால் அவருடைய இடத்தில் இன்னொரு பேராசிரியரைப் போட வேண்டும். "டிஸ்லொகேஷன் ஆஃப் ரெஸ்பான்ஸிபிலிட்டி" ஏற்படாமல் இருக்கட்டும் என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு ஓராண்டு காலம் பதவி நீட்டிப்பு கொடுக்கவில்லை. மூன்று மாதங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிர்வாகி திறமைசாலியானவராக இருந்தால் அரசாங்கம் விரும்பினால் அவருக்குப் பதவி நீட்டிப்பு கொடுக்கலாம் என்பது ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, ஸ்டான்லி மருத்துவமனை கல்லூரி அரிசன மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வார்டனுக்கும் அடிதடி ஏற்பட்டு. அதன் காரணமாக ஏற்பட்ட தகராறு குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அப்போது அமைச்சரவர்கள் ஒரு டாக்டர்—டி.கே. சண்முகசுந்தரம்—தலைமையில் விசாரணை நடத்தப்படுகிறது என்று சொன்னார்கள். அது பற்றி ஏதாவது ரிப்போர்ட் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விசாரணை நடைபெற்றது. யார் யார் மீது வழக்குப் போடலாம், யார் யார் தவறு செய்தனர் என்று பரிசீலனை செய்யும் கட்டத்தில் சமாசம் ஏற்பட்டு, மேற்கொண்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டதால் போலீஸ் நடவடிக்கையோ இதர நடவடிக்கையோ எடுக்க முடியவில்லை. வழக்குப் போடப்பட்ட மாணவர்கள் தங்களுடைய தவறுதலை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டனர். அவர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதால்தான் அவர்களை மன்னித்து விட்டதாகவும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் கடிதம் எழுதிக் கொடுத்ததால் போலீஸ் நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அதுவும், அந்த கடிதம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு, அவர்கள் அனுமதியின் பேரில் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

திரு. கோவை செழியன் : அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நிர்வாக வசதிக்காக ஆண்டு முடிகிற வரையில் ஒரே பேராசிரியர் இருக்கட்டும் என்ற முறையில் எக்ஸ்டென்ஷன் கொடுத்ததாகச் சொன்னார்கள். அப்படியானால் ஜி.எச்-ல் டாக்டர் இராமச்சந்திராவுக்கு ஏன் கொடுக்கவில்லை? அவர் இந்தியாவிலே புகழ் மிக்க ஒரு மருத்துவ வல்லுநர். அப்படிப்பட்ட ஒரு மருத்துவ வல்லுநரை வெளியே போக உத்தரவிட்டுவிட்டு, டாக்டர் அண்ணாமலை என்பவரை எக்ஸ்டென்ஷன் கொடுத்து, நியமித்திருக்கிறார்கள். எக்ஸ்டென்ஷன் கொடுத்தவரை அதே பதவியில்



தான் நீட்டிப்பார்கள். ஆனால் டாக்டர் அண்ணாமலைக்கு எக்ஸ்டென்ஷனும் கொடுத்து, ப்ரமோஷனும் கொடுத்திருக்கிறார்கள். எக்ஸ்டென்ஷனில் இருப்பவருக்கு ப்ரமோஷன் கொடுத்தது எந்த விதியின் அடிப்படையில்? டாக்டர் இராமச்சந்திராவை அனுப்பிவிட்டு, அந்த இடத்தில் எக்ஸ்டென்ஷனில் இருப்பவரை ப்ரமோட் செய்து போட்டது எந்த முறையில், இதற்கு பின்னாலே இருப்பது ஒரு பெரிய அரசியல் பின்னணி இல்லையா?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : அங்கத்தினர் அவர்கள் வாய்ப்பு கிடைத்தவுடனே தன்னுடைய மனதில் இருந்த ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதை ஒரு கேள்வியாக எழுப்பியிருக்கிறார்கள். நடைபெற்றது ப்ரமோஷன் அல்ல. ப்ரமோஷன் என்றால் இருக்கிற பதவியைவிட உயர்ந்த பதவி தருவது. இங்கே அப்படிச் செய்யவில்லை. ஒருவர் ரிட்டயர் ஆகிறார் என்றால் அவர் மேலும் பதவியில் நீடிக்க விரும்பினால், அவருடைய விருப்பத்தைத் தெரிவித்தால், அரசு பரிசீலனை செய்து, முடிவு செய்யும். உற்புறுத்தாத ஒருவரை பதவியில் நீடிக்க வேண்டுமென்பது அரசின் எண்ணமல்ல. ஒரு சிறந்த வல்லுநர் பதவியை விட்டு போனாலும் அவர் தொடர்ந்து மக்களுக்கு தொண்டாற்ற முடியும். அதனால் எக்ஸ்டென்ஷன் கேட்காமல் இருக்கலாம். அதேநேரத்தில் இன்னொரு பேராசிரியர் தனக்கு பதவி நீட்டிப்பு வேண்டுமென்று கேட்டால் அவருடைய சேவையை பாராட்டி, அவருக்கு பதவி நீட்டிப்புக் கொடுத்து, இந்த இடத்தில் அமர்த்தப்பட்டால், அது பதவி உயர்வு அல்ல.

திரு கோவை. செழியன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆப் ஆர்டருக்கு இடமில்லை. இது ஒரு தனிப் பிரச்சினை. நீங்கள் கிளாரிபிகேஷன் கேட்டீர்கள். அமைச்சரவர்கள் அதற்கு பதில் சொல்லிவிட்டார்கள். அதோடு விட்டுவிட வேண்டும்.

(Thiru Kovai Chezhian rose)

MR. DEPUTY SPEAKER : If it is not a point of order but some other clarification I can expunge it ; according to rules, I can do it. Subject to that condition, the hon. Member can raise the point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Chairman can expunge it only if it is unparliamentary and not otherwise.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : Only when there is disorder in the House, there could be point of order. That can be made clear, Sir

(நண்பகல் 12-00)

DR. H. V. HANDE : Sir, in order to help the Chair.

MR. DEPUTY SPEAKER : I can help myself.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாயிண்ட் ஆப ஆர்டர் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தைத் பற்றியதாகும். மன்றத்தில் ஒரு தவறான கருத்து சொல்லப்பட்டால் அதன்பேரில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியும்.

MR. DEPUTY SPEAKER : If the Hon. Minister gives a wrong information or incorrect information, you can raise a matter of privilege and not point of order.

திரு. கோவை செழியன் : நான் பேசுவதைப் பூராவும் கேட்டுக்கொண்டு சொல்லுங்கள். அந்த டாக்டருக்கு பதவி உயர்வு கொடுக்கபடவில்லை. எக்ஸ்டென்ஷன் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அப்படி இல்லை. அவர் ப்ரொபசர் நம். 2 ஆகத்தான் இருந்தார். அவரை ப்ரொபசர் நம். 1 ஆக்கி ஆஸ்பத்திரி சூப்பிரண்டாகவும் போட்டிருக்கிறார்கள். இது பதவி உயர்வு இல்லையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பதவி உயர்வு என்பது வேறு பொறுப்புக்களை ஒருவரிடத்தில் ஒப்படைப்பது என்பது வேறு. திரு. இராமச்சந்திரா அவர்கள் ஓய்வுபெற்றபோது தொடர்ந்து மேலாளர் பதவியில் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி கேட்கவில்லை. அவர் விரும்பவும் இல்லை. ஓய்வு பெறத்தான் மனமுவந்து தயாராய் இருந்தார்கள். அதற்கு முன்பே ஓய்வு பெற்ற ஒருவருக்கு ஒரு ஆண்டுக்கு நாம் முன்பே ரீ அப்பாயிண்ட்மென்டு கொடுத்திருந்தோம். அதில் பாக்கி 6 மாதம் இருந்த நிலையில்தான் சூப்பிரண்டு ஆகவும் இருந்தவர் ரிடையரானவுடன் இவரையே அந்தப் பொறுப்பையும் பார்த்துக்கொள்ளும்படி சொல்லப்பட்டது. அந்த உரிமை இவருக்கு வந்தது. இதில் சட்டப்படி சிக்கல் இல்லை. மனசாட்சிப்படி அவர் இருந்திருக்கலாமே, இவர் இருந்திருக்கலாமே என்று எண்ணுகிறபோது கருத்துவேறுபாடு இருக்கலாம். (திரு கோவை செழியன், திரு வி. கிருஷ்ணமூர்த்தி குறுக்கீடு.)

திருமதி சத்தியவாணிமுத்து : மருத்துவ மனையில் உள்ள டீனை மாற்றவேண்டுமென்று மாணவர்கள் கேட்கவில்லை என்று சொன்னார்கள். மாணவர்கள் டீனை மாற்றவேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அவருடைய பதவிக்காலம் முடிகிறது, அது முடிந்தவுடன் அவரை விலகிவிடுவார் என்கிற உறுதி அளிக்கப்பட்டது. இன்றைக்கு மீண்டும் அவருக்கு ஓராண்டு நீட்டிப்புத் தரப்பட்டிருக்கிறது. அந்த டீனை மாற்ற வேண்டுமென்பதும்தான் மாணவர்களின் கோரிக்கை.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : மாணவர்கள் கடைசியாக எழுதிக் கொடுத்த கடிதத்தில் தங்கள் படிப்பு வீணாகிவிடக்கூடாது என்றும், தங்களை வேறு கல்லூரிகளுக்கு மாற்றும்படியாகவும்தான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். டீனை மாற்றச் சொல்லலாம். மந்திரியை மாற்றச் சொல்லலாம். முதலமைச்சரையே மாற்றச் சொல்லலாம். அது வேறு, மாணவர்கள் சொல்வதை எல்லாம்





செய்வதற்கு அரசாங்கத்தால் ஒன்றும் இயலாது, ஆனால் அப்படி அவர்கள் கூறவில்லை. தங்கள் படிப்பு வீணாகிவிடும்படி செய்யக் கூடாது என்று அவர்கள் கேட்டுக்கொண்டு, வார்டனும் அவர்களை மன்னித்து இதில் ஒரு சமாதானமான முடிவு ஏற்பட்டு, மாணவர்கள் தங்களை வேறு கல்லூரிகளுக்கு மாற்றிவிடுவதற்கும் இசைவு தெரிவித்து அதுவும் எம்.எல்.ஏ. மூலமாகவே கேட்டு இந்த ஆண்டு படிப்பு வீணாகிவிடாதிருக்க, இந்த ஆண்டு தேர்வை இங்கேயே எழுத அனுமதித்து அடுத்த வருட துவக்கத்தில் மாற்றலாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு ஒரு சுமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் டீனை மாற்றச் சொல்லி வேண்டுகோள் தெரிவிக்கவில்லை. வேறு எங்காவது அந்தக் கருத்தை அவர்கள் தெரிவித்திருந்தால் அந்தக் கருத்துக்கு நான் கடமைப்பட்டவன் அல்ல. (திருமதி சத்தியவாணிமுத்து குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேசுகின்ற அங்கத்தினருக்கு அமைச்சர் ஒரு விளக்கம் கொடுத்து அதன்பேரில் ஒவ்வொரு கட்சியின சார்பாகவும் அந்த பிரச்சினையின் மீது விளக்கம் கேட்க முற்படுவது விவாதத்தையே வேறு திசைக்கு திருப்பிவிடுகிறது. அதைத் நான் அனுமதிக்க முடியாது. ஒரு பிரச்சினை சொல்லயாகிவிட்டது. அதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்.

திருமதி சத்தியவாணிமுத்து : மாணவர்கள் மீது போலீஸ்காரர்கள் தான் வழக்குப் போட்டார்கள். வார்டன் வழக்குப போடவில்லை. மாணவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு—இது போல எழுதித தர வேண்டுமென்று அவர்களிடம் வற்புறுத்திக் கேட்கப்பட்டு—அரசாங்கத்தின் சார்பில் நிபந்தனை விதிக்கப்பட்டுதான் அவர்கள் மன்னிப்பு கடிதம் எழுதித் தந்தார்கள். முதலில் அவர்கள் வைத்த கோரிக்கைகளில் அதுவும் ஒன்றுதான்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை அனாவசியமாக நீட்டிக்கொண்டு போவதற்கே அவசியம் இல்லை. மாணவர்கள் மீது புகார் கொடுத்தவர் வார்டன் தான். மாணவர்கள் தங்களுடைய படிப்பு பாழாகிவிடக்கூடாது. தங்களை மன்னிக்கவேண்டும் என்று வார்டனிடத்தில் எழுதிக் கொடுத்து, அவரும் அந்த மாணவர்களின்மேல் இரக்கப்பட்டு வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக எழுதிக் கொடுத்ததின் பேரில்தான் ஒரு சமாதானமான முடிவு ஏற்பட்டது. இந்த இரண்டு சாரார்களையும் அது போல எழுதிக் கொடுத்த பின்னர் இந்த இரண்டின் அடிப்படையில்தான் வழக்கு கைவிடப்பட்டது வார்டனிடத்திலும் கடிதம் பெற்றிருக்கிறோம். மாணவர்களிடத்திலும் கடிதம் பெற்றிருக்கிறோம். அதுவும் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் மீது இரக்கப்பட்டு அவர்கள் படிப்பு வீணாகிவிடக்கூடாதே என்று மனமுவந்து புகாரை வார்டன் திரும்பப் பெறுவதாக எழுதிக் கொடுத்த அடிப்படையில்தான் வழக்கு கைவிடப்பட்டது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் வார்டன் கொடுத்த புகாரின்பேரில் போலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. வார்டன் தாக்கப்பட்டிருக்கிறார். அந்த இடத்திற்குச் சென்ற

போலீசார் வார்டனைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், வார்டன் புகார் எதுவுமே செய்யவில்லை என்றாலும் இதுபோல தாக்குதல் நடந்த இடத்தில் போலீசார் நடவடிக்கையே எடுத்திருக்க மாட்டார்களா ? ஒரு கல்லூரியில் ஒரு ஹாஸ்டலில் இதுபோல நடந்திருக்கிறபோது அரசாங்கம் வழக்கை வாபஸ் பெறுவது என்றால் அந்த ஸ்தாபனங்களில் எப்படி டிசிப்ளின் இருக்கும் ?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> நான் முன்பே இதை விளக்கியிருக்கிறேன். மாணவர்கள் தங்களை மன்னிக்கும்படி எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். வார்டன் அவர்களை மன்னித்துவிட்டதாகவும் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> அவர்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பது பிரச்சனை அல்ல. போலீசார் வழக்குப் போட்டிருக்கிறார்கள். அரசாங்கம் மாணவர்களை எழுதித் தரும்படியாகக் கேட்டு நிபந்தனை விதித்தது. அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்று பரிசீலிக்கவில்லை.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> இந்தப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள ஒரு சுமுகமான சமாதானத்தை விரும்பாமல் வேறுவிதமான கருத்தோடு பேசினால் அது அந்த மாணவர்களுக்கும் நல்லதல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :</u> சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சில மாணவர்கள் மருத்துவக் கல்லூரி விடுதி வார்டனை அடித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அடித்தால் ரத்தம் வருமா ? உயர்ந்த சாதி மாணவர்கள் அடித்தால் ரத்தம் வருமா என்கிற பிரச்சினை இல்லை. அது டீனாக இருந்தாலும், கல்லூரிப் பேராசிரியராக இருந்தாலும் சரி. ஒரு மாணவன் ஒருவரைக் குத்தி விட்டான் என்றால் குத்தப்பட்டவர் மன்னித்து விட்டேன் என்றால் அந்த வழக்கை வாபஸ் பெற முடியுமா ? இங்கே 307–ஆவது செக்ஷன்படி வழக்கு போடப்பட்டது. உள்ளபடியே கேஸ் போட்டிருந்தால் அதைச் செய்தவர்கள் அது தவறுதான், அதற்காக வருந்துகிறேன் என்று எழுதிக் கொடுத்து விட்டாலோ, தாக்கப்பட்டவர் அவர்களை மன்னித்து விடும்படி எழுதிக் கொடுத்து விட்டாலோ வழக்கை திரும்பப் பெற முடியுமா ? அப்படியானால் இந்த முறை கொலைக் குற்றத்திற்கும் பின்பற்றப்படுமா ? எப்படி அரசாங்கம் இந்த வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ள அனுமதித்தது என்பதற்கு பதில் சொல்வார்களா ?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> மற்றவர்கள் இதற்குப் பதில் சொல்வதை விட நான் சொல்வது பொருத்தமாக இருக்கும். சட்டப்படி அங்கத்தினர் சொல்வது சரியாக இருக்கலாம். தர்ம நியாப் அடிப்படையில் யார் யாருக்கிடையே பகை ஏற்பட்டதோ அவர்கள் இரண்டு பேர்களும் சமாதானமாகப் போவதைவிட மகிழ்ச்சிகரமான காரியம் வேறு எதுவும் இல்லை. அந்த அடிப்படையில்தான் இது ஏற்பட்டது.





கல்லூரி, விடுதி கட்டுப்பாடு கெடாமல் இருக்க வேண்டும் என்பதும் முக்கியம்தான். இந்த மாணவர்களை வேறு கல்லூரிகளுக்கு மாற்றி விட்டால் இவர்களது படிப்பும் கெடாது, கல்லூரிக் கட்டுப்பாடும் கெடாது அந்த வகையில் இவர்களை வேறு இடத்திற்கு மாற்றி விடலாம் என்று ஆலோசனை கூறப்பட்டது.

(டாக்டர் ஹாண்டே எழுந்திருந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> இந்த விவாதம் வேறு திசையில் போகிறது. அதை இதோடு முடிக்கிறேன். திரு. மருதாசலம் தொடர்ந்து பேசுவார்.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : On a point of order, Sir. You should not allow illegal things..

MR. DEPUTY SPEAKER : After the speech of Mr. Marudachalam, you can raise your point of order. I am not allowing any point of order now.

<u>திரு. என். மருதாசலம் :</u> தலைவர் அவர்களே, இந்த நகரில் உள்ள மருத்துவத் துறையில் இரண்டு இணை இயக்குனர் பதவி காலியாக இருக்கிறது. இது வரையிலும் 2 ஆண்டுகளாக யாரையும் அந்தப் பதவியில் போடவில்லை. யாருக்கும் அந்த வேலையைக் கொடுக்கவில்லை. அந்தப் பதவியை நிர்வாகம் செய்யும் இயக்குனருக்கு 10 வருஷங்களாக இன்கிரிமெண்ட் கொடுக்கவில்லை. ஆகவே, அவருக்கு உடனடியாக இன்கிரிமெண்ட் போட்டுத் தரும்படியாகவும், இணை இயக்குனர் பதவிக்கு உத்தியோகஸ்தர்களைப் போடும்படியாகவும் உத்திரவு போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் கொசு, தொத்து நோய் பரவாமல் இருக்க, கொசு உற்பத்தியாகாமல் இருக்க சுகாதார முறைப்படி நடவடிக்கை எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகரில் 32 வார்டுகள் இருக்கின்றன. வடிகால் வசதி இல்லை. ஆகவே, பாதாளச் சாக்கடை கட்டுவதன் மூலம் கொசு, தொத்துநோய்களைத் தடுக்க முடியும். அதற்குரிய நடவடிக்கைகளை உடனே எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொற்றுநோய் பிரிவு அமைப்பதற்காக இடவசதி செய்யுமாறு அரசாங்கத்திற்கு மெடிகல் சூப்பிரண்டெண்டு எழுதியிருக்கிறார்கள் அதை உடனே கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

மேலே ஒரு மாடி கட்டுவதற்கு வசதி இருக்கிறது. அதைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டி. பி. ஆஸ்பத்திரி கட்ட இருக்கிறார்கள்.

மாவட்ட அளவில் உள்ள ஆஸ்பத்திரியில் ஸ்பெஷல் வார்டுகள் குறைவாக இருக்கின்றன. இப்போது 28 தான் இருக்கிறது. இன்னும் 20 ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் கோரியுள்ள மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை கூற ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் மருத்துவத் துறையும் மக்கள் நல்வாழ்வுத் துறையும் மிக அருமையாகச் செயலாற்றிக் கொண்டு வருகின்றன என்பதை நான் மிகத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால்—என்னுடைய தொகுதியைப் பற்றி நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் கடந்த 10, 15 ஆண்டுகளாகக் கட்டி முடிக்கப் படாமல் இருந்த மருந்தகம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்களின் முயற்சியினால் 10 லட்சம் ரூபாய் அளவில் கட்டி முடிக்கப் பட்டு, அதனுடைய திறப்பு விழாவும் சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது. அதை வெற்றிகரமாக நடத்தித் தந்தமைக்காக மாண்புமிகு பேராசிரியர் அவர்களை இந்த நேரத்தில் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன். அங்குள்ள ஏழை எளியவர்கள் இன்றைய தினம் தமிழக அரசைப் பாராட்டி வருகிறார்கள்.

அன்று திருத்தணி ஆந்திர பிரதேசத்தைச் சேர்ந்திருந்தபோது வளர்ச்சி பெறாத நிலைமையில் இருந்தது. இப்போது வளர்ச்சி கண்டு வருவதற்காக திருத்தணி மக்கள் சார்பாக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கே கட்டி முடிக்கப் பெற்றுள்ள அந்தப் பெரிய கட்டிடத்திலேயே எக்ஸ்ரே யூனிட்டும், மற்ற பரிசோதனை நிலையங்களும் அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறையில்—பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எல்லா யூனியன்களிலும் இன்றையதினம் துவக்கப் பட்டுள்ளன. பேமிலி பிளானிங்கிற்காக இப்போது ஒரு பிரிவும் கட்டப் பட்டுள்ளது. அங்கே குடிநீர் வசதிக்காக ஓவர் ஹெட்டேங்கும் அமைக்கப் பட்டுள்ளது. தண்ணீர் சப்ளைக்காக குழாய்கள் அமைத்து இருக்கிறார்கள். அந்தக் குழாய்கள் பிளாஸ்டிக் பைப்புகள். பூமிக்குள் பிளாஸ்டிக் பைப்புகளை வைத்திருப்பதனால் அவை அடிபட்டு ஓட்டையாகி விடுகின்றன. அதனால் தண்ணீர் சப்ளை பாதிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரைமரி ஹெல்த் சென்டர்களும், பேமிலி பிளானிங் சென்டரும் தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் அவதிப்பட்டிருக்கின்றன. ஆகவே, போடப் பட்ட பிளாஸ்டிக் பைப்புகளை எடுத்துவிட்டு, ஜி. ஐ. பைப்புகளைப் போட்டு உடனே தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்குக் கட்டிடங்கள் கட்டு வதற்காக நம்முடைய அரசு டெண்டர்கள் விட்டிருக்கிறது. இருந்தும்





யாரும் டெண்டர் போடாத சூழ்நிலையுள்ளது. காரணம், ஒரு குறிப்பிட்ட திட்ட மதிப்பீட்டிற்குள் கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்பது முடிவு. தற்போது ஆண்டுதோறும் விலைகள் ஏறிக்கொண்டு வருவதன் காரணமாக 2, 3 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட எஸ்டிமேட்டில் கட்ட முடிவ தில்லை. ஆகவே, இன்றைய நிலைக்கு அனுசரித்து மதிப்பீடுகளைத் திருத்தி டெண்டர் விட வேண்டும் என்றும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை]

அடுத்தபடியாக, பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும், பேமிலி பிளானிங் சென்டரிலும் போடப்படுகின்ற டாக்டர்கள் அந்த ஊரிலேயே குடி இல்லாமல் 10, 15 மைல்களுக்கு அப்பால் உள்ள நகரங்களில் குடி இருப்பதால் மாலையில் 2 மணிக்கு வந்து விட்டுப் போகிறார்கள். அதனால் அங்கே இருக்கின்ற மக்களுக்குப் போதுமான வைத்திய வசதி அளிக்க முடிவதில்லை. ஆகவே, அந்த டாக்டர்கள் சென்டர்கள் இருக்கின்ற ஊரிலேயே குடி யிருக்கும்படி உத்திரவு போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பேமிலி பிளானிங் சென்டரில் ஆண் டாக்டர்களையும், பெண் டாக்டர்களையும் போடும்படி நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி சப்-சென்டர்களைப் பொறுத்த வரையில், முன்னமே உள்ள திட்டத்தின் பிரகாரம் 4, 5 சப்-சென்டர்கள் என்று இல்லாமல் மக்கள் தொகை பெருகிக்கொண்டே போவதன் காரணமாக அவைகளை அதிக மாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தற்போது குடி நீர்ப் பிரச்சினை மிக முக்கியமான தொன்றாகும். அதைப் போக்குவதற்காகத் தமிழ் நாடு அரசு குடிநீர் வாரியத்தை மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் தலைமையில் அமைத்திருக்கிறது. இன்றைய தினம் அது சீரிய முறையில் செயலாற்றி வருவதற்காக எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக திருத்தணிப் பகுதி பெரும் பகுதி மலைப் பிரதேசமானதாகும். அங்கு குடி தண்ணீர் பிரச்சினை ஆண்டு தோறும் இருந்து கொண்டு இருக்கிறது. அதைப் போக்க குடி நீர் வாரியத்தின் மூலமாகத் தீவிர நடவடிக்கை எடுத்து குழாய்க் கிணறுகள் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதட்டூர் பேட்டை என்கிற பெரிய நகரப் பஞ்சாயத்து இருக் கிறது. குடிநீர்ப் பஞ்சத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதையும் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி இந்த நேரத்தில் தயவு கூர்ந்து கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதட்டூர்பேட்டை டவுன் பஞ்சாயத்து என்ற பெரிய நகரமிருக்கிறது. அங்கு கடந்த 4, 5 ஆண்டுக்காலமாக, திட்டம் போடப்பட்டு, தள்ளிக் கொண்டே போகிறது. அந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிப் பட்டியிலேயுள்ள ரூரல் டிஸ்பென்ஸரியை, அரசு டிஸ்பென்ஸரியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 7 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. 1½ மணி நேரம் கூட இல்லை. இனி, பேசும் ஒவ்வொருவரும் 5 நிமிடங்களிலேயிருந்து 7 நிமிடங்களுக்கு மேல் போகாமல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே, மக்கள் நல்வாழ்வுக்காக நல்ல திட்டங்களைக் கொண்ட மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு என்னுடைய தொகுதியில் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக தம்மம பட்டியிலே மருத்துவமனை தோற்றுவித்திருக்கிறார்கள். தலைவாசலில் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் குடும்ப நலப்பிரிவைத் தோற்றுவித்திருக்கிறார்கள். ஆத்தூர் மருத்துவமனையில் ரூ. 2 இலட்சம் செலவில் ஒரு ஓ.பி. வார்டைக் கட்டித் தர வழி வகை செய்திருக்கிறார்கள். இன்னும் இது போன்ற நல்ல காரியங்களை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டையும், எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோல், இந்த மானியக் கோரிக்கையில் நல்ல திட்டங்களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கிராமங்கள் முன்னேற்றம் பெற, நல்ல காரியங்கள் செய்ய, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், எல்லா கிராமங்களுக்கும் சாலை வசதி செய்து தர வேண்டும், மின்சார வசதி செய்து தர வேண்டும். என்ற எண்ணத்தோடு நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள்.

அதேபோல், மக்கள் நல்வாழ்வில் கிராமங்கள் வசதி பெற, இங்கே பல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கூடுதலாக மருத்துவர்களை நியமிப்பதன் மூலம் அங்கே கிராம மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க திட்டம் கொடுத்து இருக்கிறார்கள். புதிதாக 150 செவிலியர்களை நியமிக்கின்ற திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலமாக, கிராமங்கள் நல்ல பலன் பெற முடியும் என்பதால், அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.



ஆத்தூரிலே கடந்த வருஷம் தொழிலாளர் நலனுக்காக ஒரு புதிய மருத்துவ மனையைத் தோற்றுவித்திருக்கிறார்கள். ஆகவே, தொழிலாளர் நலனுக்கு அரசாங்கம் நல்ல ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்து வருகிறது என்பது தெரிகிறது. அந்த நல்ல திட்டத்திற்காகவும் அமைச்சரவர்களைப் பாராட்டுகிறேன். இது போன்று பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வந்தாலும் கூட இன்னும் பல காரியங்களைச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் கிராம மக்கள் பயன் பெற முடியும். குறிப்பாக என்னுடைய பகுதியிலே ஆரம்பிக்கப்பட்ட தம்மம்பட்டி அரசு மருத்துவ மனையில் பெண் மருத்துவரை நியமிக்க வேண்டும். அங்குள்ள பச்சை மலையில் மருத்துவ வசதி இல்லை. ஆகவே, அங்கு புதிதாக மருத்துவ மனை தோற்றுவிக்க வேண்டும். வீரநூரில் மருத்துவமனை தோற்றுவிக்க வேண்டுமென்று இரண்டு மூன்று முறை அமைச்சரிடம் நேரிலே சொல்லி இருக்கிறேன். அதற்கான தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அதனை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன.

எனக்கு முன்பு பேசிய திரு. சுப்பிரமணியம் கூடச் சொன்னார்கள், ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் இருதய நோய்ப் பிரிவும், புற்று நோய்ப் பிரிவும் தோற்றுவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். சேலம் மாவட்டத்தில் இருக்கிற மருத்துவ மனையில் அந்தச் சிறப்புப் பிரிவுகளைத் தோற்றுவிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தம்மம்பட்டி மருத்துவ மனைக்குக் கட்டடம் கட்டித் தர வேண்டும். தலைவாசலிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டித் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், தலைவாசலில், தடார் என்ற பேரூராட்சி ஒன்றியத்திற்குத் துணை ஆரம்பச் சுகாதார நிலையம் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் மருத்துவ வசதி பெறுகின்ற முறை இருக்கிறது. எங்களைப்போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களது குடும்பத்தாருக்கு, மனைவி, மக்கள், தாய், தந்தையருக்கு மருத்துவ வசதி அளிக்கின்ற நிலை இல்லாமலிருக்கிறது. அதனால், எங்களைப் போன்றவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அமைச்சரவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்பத்திலேயிருக்கிற எல்லோருக்கும் நல்ல முறையிலே மருத்துவ வசதி செய்து தர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கள் பகுதிக்குக் குடிநீர் வசதி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆத்தூர் நகரில் ரூ. 35 இலட்சம் செலவிலே குடிநீர்த்திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். செந்தாரப் பட்டியில் குடிநீர்த் திட்டம் அமைக்க, ரூ. 2 இலட்சம் செலவில் அமைக்க, மாண்புமிகு

அமைச்சரவர்களும், கந்தப்பன் அவர்களும், ஆரம்பித்துக் கொடுத்து இருக்கிறார்கள். இருப்பினும், அந்தத் திட்டத்தில் இப்பொழுது வறட்சிக் காலத்தில், போதிய குடிநீர் இல்லாததால், மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கோரி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவத்துறை ஆகியவற்றின் 1975—76-ம் ஆண்டு மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துகள் சிலவற்றை கூற ஆசைப்படுகிறேன்.

பொதுச் சுகாதாரத்திலே மட்டும், சென்னைத் தலைமை அலுவலகத்திலே கிட்டதட்ட 10 துணை சுகாதார இயக்குனர்கள் இருக்கிறார்கள். மேலும், சேலம், கடலூர், மதுரை மூன்று இடங்களிலும் மலேரியா துணை சுகாதார இயக்குனர்கள் இருக்கிறார்கள். சென்னையிலே 10 சுகாதார துணை இயக்குநர்களை நியமித்துள்ளதைப் பிரித்து, அந்தந்த மாவட்டத் தலைமையிடத்திலே, ஒவ்வொருவரை வைத்தால், நல்ல முறையில் சரியாகப் பணிபுரிய முடியும். ஆகவே, இங்குள்ள 10 துணை இயக்குநர்களை மாவட்டத்திற்கு ஒருவராக நியமிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் ,ஒவ்வொரு மாவட்டச் சுகாதார அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பில் உணவு இன்ஸ்பெக்டர்களை, உணவு கலப்படச் சட்டத்தைக் கண்காணிக்க அரசு நியமிக்கவிருப்பதாகக் கேள்விப்பட்டேன். கிட்டதட்ட 110 பேரை நியமிக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மத்திய அரசால் கூட்டப்பட்டக் கூட்டத்தில் இம்முடிவெடுக்கப்பட்டது. என்ன காரணத்தாலோ அப்பதவிகளில் ஆட்கள் நியமிக்கப் படவில்லை. ஆகவே, இன்றைக்கு உணவு கலப்படத்தைத் தடுக்க மாவட்டச் சுகாதார அதிகாரியின் நேரடிப் பொறுப்பில் இருப்பதை, உணவு இன்ஸ்பெக்டர்களை நியமித்துத் தீவிரப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அனைத்து ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் தொலைபேசி தொடர்பு ஏற்படுத்த வேண்டும். காரணம், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலிருக்கிற இடங்கள் நகர்ப்புறத்திற்கு அப்பாலிருக்கின்றன. ஆகவே, வட்ட மருத்துவ மனைக்கும் எல்லா அரசு மருத்துவ மனைகளுக்கும் நேரடித் தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல, அங்குள்ள நோயாளிகளை விரைவாக எங்காவது கொண்டுசெல்ல வேண்டுமென்றால்கூட, அதற்கு ஏதுவாக இருக்கும் என்ற முறையில் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தொலைபேசி தொடர்புகள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில், வர்ஷ நாடு மலைப் பகுதியில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டு



மென்ற செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலிருப்பதாக அறிகிறேன். இப்பொழுது எங்களுடைய பகுதியில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையமிருக்கிறது. இருப்பினும், மலைப் பகுதியில் வாழும் மக்களுக்குச் சுகாதார வசதிகளைச் செய்துக் கொடுக்க, அங்கொரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 6 சுகாதாரா ஆய்வாளர்கள் பணி புரிகிறார்கள். அவர்களில் ஒருவர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து கொண்டு பணி செய்து வருவதாகக் கூறுகிறார்கள். ஆனால், அந்த ஒருவர், ஊராட்சி ஒன்றியத்திற்கு. சரியாக வருவதில்லை, பணியும் புரிவதில்லை. ஆகவே, அவரை ஊராட்சி ஒன்றியத்திற்கே மாற்ற வேண்டும். இதனால் அரசுக்கு கூடுதல் செலவு ஒன்றும் ஏற்படப் போவதில்லை. காரணம் ஒவ்வொரு ஒன்றியத்திலும் எ.இ.ஓ., சி.இ.ஓ., போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப்போல் இந்த ஆய்வாளர்களையும் நியமித்தால், நல்ல முறையில் பணி புரிவார்கள் என்று நம்புகிறேன்.

1973-ம் ஆண்டு பணியாளர் தேர்வுக் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 100-க்கும் அதிகமானவர்களுக்கு இன்னும் வேலை கொடுக்கவில்லை. 2 ஆண்டுகளாகிவிட்டது. ஆனால், நியமனம் அளிக்கப்படவில்லை. இதனால் சர்வீஸ் கமிஷனுக்கே அர்த்தமில்லாமல் போய்விட்டதைப் போல் தெரிகிறது. ஆகவே, அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரியகுளத்தில் உள்ள தாலுகா மருத்துவமனையிலே

[பிற்பகல் 12-30]

இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த 2, 3 ஆண்டுகளாகக் கூறி வந்திருக்கிறார்கள். நானும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அங்கிருந்து மதுரைக்கோ அல்லது திண்டுக்கல்லுக்கோ சென்றுதான்—ஆண்டிப்பட்டி, தேனி, கம்பம் போன்ற இடங்களிலிருந்து 50 மைல் 60 மைல் தூரம் சென்று—பெறவேண்டியிருக்கிறது. ஆகவே, பெரியகுளத்திலேயே ஒரு ரத்த சேமிப்பு நிலையத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டியிலே ஒன்றியத்தினுடைய மருத்துவ மனையாக இருந்ததை ஜனவரி 1-ம் தேதி முதல் அரசு மருத்துவ மனையாக மாற்ற ஏற்பாடு செய்ததற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் அங்கே கடந்த 3 மாதங்களாக சரியான மருந்துகள் கிடைக்கவில்லை. ஆகவே மருந்துகளை அதிகமாக சப்ளை செய்யவேண்டுமென்றும் அங்கே ஒரு பெண் டாக்டரை நியமிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைப் பொறுத்தவரையில், என்னுடைய தொகுதி ஒரு வறண்ட பகுதியாக இருக்கிறது, கடந்த வாரம் குடிநீர் வாரியத் தலைவர் திரு. கந்தப்பன் அவர்கள் மதுரைக்கு வந்தபோது எடுத்துக் கூறியிருக்கிறேன். அரசு 28 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய்க்கு

சாங்ஷன் செய்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்பகுதிகளில் எல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கக்கூடிய வகையில் குழாய்க் கிணறுகள் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருத்தடை அறுவைச் சிகிச்சைபற்றி இந்த மானியக் கோரிக்கையில் மிகவும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நல்ல திட்டந்தான். ஆனால் செயல்படுகிற முறை மிகவும் மோசமாக இருக்கிறது. குறிப்பாக ஒன்றியத்தை சேர்ந்த ஆசிரியர்கள், பள்ளி கண்டக்டர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். பள்ளி கண்டக்டர்கள் 50 ரூபாய் சம்பளத்தில் அமர்த்தப்படுகிறார்கள், அவர்களிடத்திலே எல்லாம் ஒரு ஆளை நீங்கள் கொண்டு வந்தால்தான் வேலை, இல்லாவிட்டால் வேலை கிடையாது என்று மிரட்டக் கூடிய அவலநிலைமை இருக்கிறது. கருத்தடை எல்லாம் அவர்களாகவே முன்வந்து செய்துகொள்ளவேண்டும். ஆரம்ப சுகாதார நிலையத்திலே ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியில்லாமல் ஆசிரியர்கள், பள்ளி கண்டக்டர்கள், இ.ஒ.பி. இவர்களையெல்லாம் அந்தப் பணிக்கு பயன்படுத்தக் கூடாது. இங்கே இலக்கு எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த இலக்கைக் காட்டிலும் அதிகமாக செய்திருக்கிறோம், அதைத் தாண்டியிருக்கிறோம். இது ஒரு சாதனை என்று சொல்வதைக் காட்டிலும் அவர்களுக்கு அதிகமாகத் தொல்லைக் கொடுக்க கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. நல்லசாமி அவர்கள் பேசும்போது புதிதாக டாக்டர்கள் போடுவதற்குப் பதில் வயது முதிர்ந்தவர்களைப் போடவேண்டுமென்று சொன்னார்கள். வயது முதிர்ந்தவர்கள் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதற்குப் பிறகு மீண்டும் அவர்களை வைக்காமல் புதிதாக வருகிறவர்களுக்கு வழிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மக்கள் நல்வாழ்வு மானியத்தை முழுமையாக நான் ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

உண்மையிலேயே நம்முடைய நாடு மிகுந்த ஏழ்மை நாடு நம்முடைய நிதிநிலைமைகளை அறிந்து நல்வாழ்வுத் துறையிலே இதுவரையில் செய்யப்பட்டிருக்கிற காரியங்களை உற்று நோக்கும்போது ஏனைய செதிகளை மக்கள் பெற்றிருப்பதைவிட அவற்றோடு இதை ஒப்பிட்டு நோக்கும்போது நாம் உண்மையிலேயே பெருமைபடத்தக்க அளவிலே இது அமைந்திருக்கிறது, குறை பட்டுக்கொள்ளத் தக்கவகையிலேயே இல்லை, சிலர் சொல்லலாம், குவெய்த் போன்ற நாடுகளிலே அளிக்கப்படுகின்ற மருத்துவ வசதிகளைப்போல் இங்கே கிடைக்கவில்லையே என்று. ஆனால் நம்முடைய நாடிலே இருக்கிறது பல மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தை ஒப்பிட்டு நோக்கும்போது நம்முடைய செயல்கள் இத்துறையிலே மிகவும் பெருமைக்கு உரியதாக இருக்கிறது.



குடிநீர்வடிகால் வாரியம் என்று இருக்கிறது. அது ஏற்பட்டதற்குப் பிறகு பலபெரிய நகரங்களில் மாநகராட்சிகளில், நகராட்சிகளில், பேரூராட்சிகளில் குடிநீர் இல்லாத குறைபாட்டை முழுமையாக நீக்கியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் கிராமப்புறங்களிலே அந்தப் பிரச்னை அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. முதன்மையாக நகராட்சிகள் சம்பந்தப்பட்ட பிரச்னை தீர்க்கப்பட்டாகிவிட்டது. ஆனால் கிராமங்களைப் பற்றியும் இந்த அளவிற்கு அக்கறை எடுத்துக்கொண்டால் இந்தத் துறைக்கு அந்த வகையிலே அதிகமான நிதி ஒதுக்கினால் கிராமப்புறங்களிலே இந்த அரசுக்கு அதிக அக்கறை உண்டு—நம்முடைய கலைஞர் அவர்கள் சொல்லியபடி 1976-ஆம் ஆண்டிற்குள் குடிநீர் இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு—அதிகமான நிதி ஒதுக்கீடுகளைத் தந்து கிராமப்புறங்களுக்கும் குடிநீர் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வசதி செய்யும்போது கழிவு நீரை அகற்றுகின்ற பணியையும் செவ்வனே செய்யவேண்டும். பெரிய நகரங்களிலே கழிவு நீரெல்லாம் பக்கத்திலே உள்ள ஆறுகளிலே அல்லது குளங்களிலே அல்லது குடிநீருக்கு என்று மக்கள் பயன்படுத்துகின்ற நீர்நிலைகளிலே விடப்படுகிற காரணத்தினாலே கண்டாமினேஷன்ஸ் ஏற்பட்டு தொத்து நோய் பரவக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, கழிவுநீரை அகற்றுவதற்கான கவனம் செலுத்தப்பட வேண்டும். எப்படி குடிநீர் வழங்குவதற்கு முக்கியத்துவம் செலுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு முக்கியத்துவம் கழிவுநீரை அகற்றுவதிலும் காட்டப்படாவிட்டால் மக்கள் தொத்து நோயால் பாதிக்கப்படக்கூடிய நிலையேற்படும்.

திருச்சி போன்ற மாநகரத்திலே இதுவரையிலே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தாதது ஒரு பெரிய குறையாக இருக்கிறது. நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் மிகுந்த கருணையோடு அதைப் பரிசீலனை செய்து திருச்சி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியும் அதோடு 500, 600 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையையும் ஏற்படுத்தவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.....

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கனம் அங்கத்தினருடைய தொகுதி இருக்கிற பகுதியை கோவை மாவட்டத்தோடு சேர்த்துவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இருப்பினும் உணர்ச்சிப்பூர்வமாக திருச்சி மாவட்டத்தோடு தொடர்பு உள்ளவன். கோவை மாவட்டத்தில் சேர்ந்தால் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் திருச்சிக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

வளர்ச்சியுற்ற நாடுகளுக்கு மேல்படிப்புக்காகச் செல்கிறவர்கள் அங்கேயே தங்கிவிடுகிறார்கள். பெரும் தொகையை அவர்களுக்காகச் செலவழித்து அரசாங்கம் படிக்கவைக்கிறது. அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புகிற

போது அங்கே பிரெய்ன் டிரெய்ன் என்று சொல்கிருர்களே, அதன்மூலமாக அவர்கள் அங்கேயே தொடர்ந்து வாழக்கூடிய முறையிலே தனி நபர் வாழ்விற்காக, முன்னேற்றத்திற்காக—நாம் மருத்துவக் கல்லூரியிலே ஒரு மாணவர் படிப்பதற்கு மக்கள் வரிப்பணத்திலிருந்து எவ்வளவோ பணம் செலவழிக்கிருேம், ஏழை மக்கள் பணத்திலிருந்து செலவழிக்கப்படுகிறது—இந்த நிலையில் அவர்கள் இலண்டனுக்கோ அமெரிக்காவிற்கோ சென்று தங்களுடைய சொந்த வாழ்வைப் பெருக்கிக்கொள்வார்களாளுல் அவர்களே இந்த நாட்டிற்குத் துரோகம் செய்தவர்கள் ஆகிருர்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு தடை ஏற்படுத்தவேண்டும். அவர்களிடம் ஒரு வாக்குறுதிபெற வேண்டும். மேல் படிப்புக்குச் சென்ருல் நிச்சயமாக இந்தியாவுக்கு திரும்பிவர வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தொகையை நஷ்ட ஈடாகத் தரவேண்டுமென்று உறுதிமொழி பத்திரம் தரவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்யவேண்டும்.. ..

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரமில்லை, உட்காருங்கள்.

திரு. கோவை செழியன் : நேரமில்லையென்ருல் நாளைக்கு வைத்துக் கொள்ளுங்கள். ஒரே நாளில் இவ்வளவையும் வைத்துக்கொண்டால் எப்படி ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜப்பார், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. கோவை செழியன் : நான் முக்கியமான ஒன்று கேட்க விரும்புகிறேன், நான் பேசவிடமாட்டேன், வேண்டுமாளுல் என்னை வெளியே அனுப்புங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையோடு பேசுங்கள்.

திரு. கோவை செழியன் : முறையாகத்தான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தான் முறையா ? இது என்ன முறை ?

திரு. கோவை செழியன் : பல சந்தேகங்கள் வருகின்றன எனக்கு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மன்றத்திலே விவாதிக்கப்படும் பொருள்களை எவ்வளவு நேரம் விவாதிப்பது என்பது இதற்காக உள்ள குழுவிலே தீர்மானிக்கப்படுகிறது. திரு. கோவை செழியன் சார்ந்திருக்கின்ற கட்சியின் தலைவரும் சேர்ந்து உட்கார்ந்து எல்லோரும் தீர்மானித்து ஒன்றரை மணிக்கு முடிப்பதாக எண்ணிக் கொண்டு நேரம் ஒதுக்கியிருக்கிருர்கள். இன்னும் 6 பேர் பேச வேண்டும். ஆகவே, ஒவ்வொருவருக்கும் ஏற்படும் சந்தேகத்தைக் கூறிக்கொண்டிருப்பதால் நேரம் அதிகமாகக் கூடாது என்பதால் குறுக்கிட வேண்டாமென்று சொல்கிருர்கள். அதற்காக வருத்தப்படுவது பொருள் உடையதாக இல்லை.





திருகோவைசெழியன் : வருத்தம் இல்லை. இது ஜனநாயக நாடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜனநாயக நாட்டிலே 3 நாட்கள் வேண்டுமாளுலும் பப்ளிக் ஹெல்த்தைப்பற்றி விவாதியுங்கள். ஆளுல், அதைப்பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுக்கலாம். இன்றைக்கு முடிப்பது என்று முடிவெடுத்துவிட்ட பிறகு, இன்னும் இத்தனை உறுப்பினர்கள் பேசியாக வேண்டும். ஆகவே, அவர்கள் பேசும்பொழுது குறுக்கிட்டு நேரத்தை வீணுக்க வேண்டாமென்று சொல்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே. இந்த மருத்துவக் கல்லூரியிலே மேற்பட்டப் படிப்பிலே சேர்ப்பதிலே பொதுவாக முஸ்லீம் சமுதாயத்தினர், அதிலும் குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்தினருக்கு ஒரு குறை உள்ளது. எண்ணிக்கைக்குத் தகுந்தபடி மாணவர்கள் சேர்க்கப்படுவதில்லை என்று குறிப்பிடுகின்றனர். அந்தக் குறை இனிமேல் ஏற்படாத வகையில் அவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவத்தை, மருத்துவம் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைகளிலேயும் சிறுபான்மையினருக்குக் காடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த உணவுக் கலப்படம் சம்பந்தமாக உள்ளாட்சிகளில், அதாவது பேரூராட்சி, நகராட்சிகளில் துப்புரவு ஆய்வாளர்கள், அதாவது சானிடரி இன்ஸ்பெக்டர்கள் மூலம் வழக்குகள் பதிவு செய்யப்படுகிறது. அதில் பெரிய குறைபாடு உண்டு. இவர்கள் ரொம்பவும் சீர்கேடடைந்து விட்டார்கள். அதில் ஏதாவது மாற்றம் காண வேண்டும். நகராட்சித் தலைவரோ, பேரூராட்சித் தலைவரோ நேரடியாகத் தொடர்பு கொள்ளும் முறையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். ஆளுல், இப்பொழுது பலயிடங்களில் உண்மையான குற்றவாளிகள் விடுபட்டுப்போய், பெட்டிக்கடை போன்றவற்றை வைத்திருப்பவர்கள் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுகிருர்கள். இது மனிதாபிமானத்திற்கு விரோதமாக இருக்கிறது. எனவே, இதில் தக்க மாறுதல் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அண்மையில் 10 நாட்கள் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. அந்த மருத்துவமனையில் கோபால்ட் தெரபி வசதியில்லை, நான் கேள்விப்பட்டேன். ஜெனரல் ஹாஸ்பிடலில்தான் இருப்பதாகவும், தங்களிடத்தில் இல்லை என்றும் என்னிடத்தில் சொன்ஞர்கள். எனவே, ஸ்டான்லி மருத்துவமனையிலும் கோபால்ட் தெரபி யூனிட் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கேயுள்ள கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை என்று அவர்கள் சொல்கிருர்கள்.

அடுத்து, இந்த ஐ..சி.சி. யூனிட்டில் ஒரு வேடிக்கை. அங்கே ஒரு அறைக் கதவு போடாதன் காரணமாக ஓராண்டு காலமாக அந்த அறை பயன்படுத்தப்படாமல்—3 பிணியாளர்கள் பயன்படுத்தும் இட வசதியும், இயந்திரங்களும் கொண்டது அந்த இடம்—இருக்கிறது. இதிலே வீணுக ஓராண்டு ஆகியிருக்கிறது என்று எனக்குச் சொல்லப்பட்டது. அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மருந்துகளில் கலப்பட மருந்து வருகிறது என்று கேள்வி பட்டு வருத்தமடைந்தேன். வட நாட்டில் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலேயும் உள்ளதோ இல்லையோ நான் அறியேன், ஆகவே, இது சம்மந்தமான விஷயங்களில் அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அப்படிப்பட்ட தவறு செய்தவர்களை நடுத்தெருவில் நிற்க வைத்துத் தூக்கு தண்டனை அளித்தாலும் இந்தச் சமுதாயம் அதை முழுமனதோடு வரவேற்கும். எனவே, இதில் கடுமையாக நடக்க வேண்டும்.

அதே நேரத்தில் சில மருந்துகள் சில நேரங்களில் இடைப்பதில்லை. மருத்துவர்கள் எழுதிக்கொடுக்கும் சில மருந்துகள் கிடைக்காமல் பல நோயாளிகள் மரணமடையும் அபாயம் ஏற்பாடுகிறது. இது விஷயத்தில் மத்திய அரசு வெளிநாட்டு நாணயச் செலாவணியை மிச்சப்படுத்துவதற்காக இப்படி செய்ய வெண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றியங்களுக்கு இரண்டு ஆதார மருத்துவமனை வசதிகளை அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாக அறிகிறேன். பள்ளப்பட்டியில் ஒரு மருத்துவமனை துவங்கப்பட்டது. அமைச்சரவர்கள் வாக்கு கொடுத்திருக்கிறார்கள். 12 புதிய படுக்கை வசதிகள் செய்து தருவதாக அதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

வந்தவாசியில் அங்கே அவர்களுக்குச் செய்யப்பட வேண்டிய வசதிகள் செய்யப்படவில்லை. கணக்கு வரவு-செலவுகள் அந்தப் பேரூராட்சி மன்றத்தால் ஐந்தாண்டுகளாகக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் பேரூராட்சி மன்றம் தன் மீது சுமத்தப்பட்ட கடனைப் பற்றிக் கோரிப் பெற உரிமை உண்டு. அது விஷயம் கவனிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடியில் கட்டிடம் கட்டுவதற்காக இரண்டாண்டுகளுக்கு முன் அடிக்கல் நாட்டப்பட்டு அது அந்த நிலையிலேயே இருக்கிறது. அதில் அபிவிருத்தியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாத் தொகுதிகளையும் பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறீர்களே.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: என்னுடைய கட்சியின் சார்பாக வேலூர் மருத்துவமனை சம்பந்தமாக ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேண்டாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்; மிகவும் முக்கியமான விஷயம் இது. அதாவது, இப்பொழுதிருக்கும் பிரச்னை நான் அறிந்தவரையில் 15 தொழிலாளர்களை மீண்டும் எடுப்பது சம்பந்தமான பிரச்னை என்று கேள்விப்படுகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடந்தது, இந்தத் தகவலைச் சொல்லாமல் இருப்பது நல்லது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: அப்படியா, தலைவரவர்கள் இப்படிக் கூறியதால், அது சம்பந்தமான கருத்துக்களைப் பிறகு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, முழுமையாக இந்தக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். அதேநேரத்தில் ஏற்கனவே சொன்னதைப்போல குடிநீர்—வடிகால் வாரியத்திற்கு இன்னும் கூடுதல் தொகையை ஒதுக்கி, கிராம மக்களுக்கு இப்படிப்பட்ட பணிகள் தொடரட்டும் என்று நல்லாசி கூறி அமைகிறேன்.

*டாக்டர் ச. அ. சின்னராசு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கு நான் சொல்ல விழைகிறேன்.

ஒரு நாட்டினுடைய சுகாதாரமும் மக்கள் நல்வாழ்வும் அந்த நாட்டிலேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களையும், அவர்களுடன் கூட ஒத்துழைக்கும் உதவியாளர்களையும் பொறுத்துத்தான் இருக்கிறது. இப்பொழுது நம்முடைய தமிழ்நாட்டிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்தும் மிகவும் நன்றாகப் பணி புரிகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி அந்த மருத்துவ நண்பர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அவர்களுக்கு ஒரு சில வேண்டுகோள்களையும் விடுக்க பிரியப்படுகிறேன்.

முதலாவதாக, அங்கே பணி புரியும் டாக்டர்கள் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். தடுப்பு நோய் சம்பந்தமாக பெரும்பாலான கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. குழந்தைகளுக்கு தடுப்பு நோய் ஊசி போடுவது இன்னும் புரியாமல் இருக்கிறது. எனவே, இந்த நிலையில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வரும் கிராம மக்களிடம் தடுப்பு ஊசி போட வேண்டியதன் அவசியத்தைப்பற்றி அந்த டாக்டர்கள் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்த "ட்ரிபிள் ஆண்டிஜன்", "போலியோ வேக்ஸின்" ஆகியவற்றைப் பாதுகாத்து வைக்கும் அளவில் "ஃபிரிஜ்" வசதி, அதாவது குளிர்சாதனப் பெட்டி வழங்கப்படவில்லை. அவைகளை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்த மாகாணத்திலே ஒரு வருடத்திற்குக் குறைந்தது நான்கைந்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயாவது அந்த குளிர்சாதனப் பெட்டிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயுள்ள டாக்டர்கள் இளம்பிள்ளை வாத தடுப்பு வாக்சினைப் பயன்படுத்த ஒரு நோயாளி வரும்பொழுது வீட்டிலேயிருக்கின்ற குழந்தை

களுக்கு போலியோ வாக்சின் கொடுத்தாகிவிட்டதா என்று கேட்டு, இல்லையென்றால் அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது, தமிழகத்திலே ஏறத்தாழ 3,000 டாக்டர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த டாக்டர்கள் வேலையில்லாமலிருப்பது பெரிதும் வருத்தத்திற்குரியது. இருப்பினும், அந்த டாக்டர்களுக்கு இப்பொழுது ஆரம்பிக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களில்—100 நிலையங்களில் டாக்டர்களைப் போடுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றுவதாகப் போடும் மருத்துவர்களை ஏதாவது ஒரு ஸ்பெஷலிஸ்டாகப் போட்டால் கிராம மக்களுக்கு அந்த ஸ்பெஷலிஸ்டினுடைய அனுபவம் கிடைக்கவும், அவரது சேவை கிடைக்கவும் வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் தாலுக்கா மருத்துவ மனைகளில் இருக்கும் டாக்டர்களிலும் ஸ்பெஷலிஸ்ட்களைப் போடுவது நன்றாக இருக்கும். பெரிய பெரிய மருத்துவமனைகளில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த டாக்டர்கள் தாலுக்கா மருத்துவ மனைகளில் பணியாற்ற முன்வர வேண்டும். அப்பொழுதுதான் கிராம மக்களுக்கும் அனுபவம் மிகுந்த சேவை கிடைக்கும். அதேபோல் வேலையில்லாமல் இருக்கும் புதிய டாக்டர்களுக்குப் பெரிய மருத்துவ மனைகளில் வேலை செய்ய அனுபவம் உண்டாக வாய்ப்பிருக்கும்.

எம்.எஸ்., எம்.டி., படிக்க டாக்டர்கள் வருகிறார்கள். அதிலே சில டாக்டர்கள் 10 அல்லது 15 ஆண்டுகள் பணியிலேயிருந்துவிட்டுக்கூட எம்.எஸ்., எம்.டி., டிப்ளமாக்கள் படிக்க வருகிறார்கள். அவர்களுக்கும் 3 வருஷம் படிப்பு என்று இப்பொழுது வரையறுத்து வருகிறோம்.

சில டாக்டர்கள் விஷயத்தில் அந்தத் துறையாளர்கள் சில சலுகைகளைக் காட்டியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதை ரூல் ஆக மாற்றி பத்துப் பதினைந்து ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு மூன்று ஆண்டு என்று இருப்பதை இரண்டு ஆண்டு என்று குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்கிறது. ரீ-இம்பர்ஸ்மென்ட் உறுப்பினர்களுக்கு மட்டும் கிடைக்கிறது. அந்த வசதியை உறுப்பினர்களுடைய ஃபாமிலிக்கும் செல்ஃப், மிஸஸ், அன்மேரிடு சில்ட்ரன் ஆகியவர்களுக்கு நீடித்துத் தரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களைத் தடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். பெரியம்மையை முழுமையாகக் கட்டுப்படுத்தியிருக்கிறோம். காலரா போன்ற தண்ணீரால் பரவக்கூடிய வியாதிகளை ஓரளவு கட்டுப்படுத்தியிருந்தாலும்கூட அந்தந்தக்



காலங்களில் அந்தந்த நோய் ஓரளவு பரவிக் கொண்டுதான் வருகிறது. காலரா நோயைத் தடுக்க உரிய தடுப்பு முறைகள் ஏற்படுத்த தனி கவனம் செலுத்த வேண்டும்.

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதில் தமிழ்நாடு குடிநீர் வாரியம் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அதிகப்படியாக வழங்க வேண்டும். அரிசனக் குடியிருப்புகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, முழுமையாக வழங்கப்படவில்லை. அதிலே தனி கவனம் செலுத்தி அரிசனக் குடியிருப்புகள் முழுவதிலும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்க தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வாரியத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான அரூரில் தாலுக்கா மருத்துவமனை இருக்கிறது. நிலத் தகராறு இருந்து இப்போதுதான் தீர்ந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் தருமபுரி தலைமை மாவட்ட மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்ட வந்தபோது அவர்களிடம் கூறினேன். ஒரு எக்ஸ்ரே நிலையம் உருவாக்க அனுமதி இருந்தும் கட்டடம் இல்லாத காரணத்தால் செய்ய முடியாமல் இருக்கிறது. அரூர் தாலுக்கா மருத்துவமனையை விரிவுபடுத்துவதில் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் டார்கெட்டுக்கு அதிகமாக அறுவை சிகிச்சைகள் செய்து முன்னால் இருப்பதற்காக மத்திய அரசு இரண்டு பார்லிமெண்ட் சீட்டுகளைத் தமிழகத்திற்குக் குறைத்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கு மானியத் தொகையைவிட அதிகமாகச் செலவழிந்து வருகிறது. அறுவை சிகிச்சைகள் இந்திய மட்டத்தில் செய்யப்படுவதால் மத்திய அரசில் இருந்த அந்தக் கூடுதல் தொகையை பெற நம்முடைய அரசு மத்திய அரசுக்கு தெரிவித்து முழுமையான உதவியைப் பெற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, பேராசிரியரின் திறமையைப் பற்றியோ இந்தத் துறையை நிர்வகிப்பதைப் பற்றியோ எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. மிகத் திறமையாக நிர்வகிக்கிறார். ஆயினும் இந்த மானியத்தை மகிழ்ச்சியோடு வரவேற்க முடியாது என்று தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பாரம்பரியமான சித்த மருத்துவ முறையைப் பற்றி அவர்கள் கொஞ்சம்கூடக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. என்றுதான் இதைப் பார்த்த பிறகு முடிவுக்கு வந்திருக்கிறேன். பரந்த பாரத நாட்டில், இந்த நாட்டின் நாகரிகத்தில், பண்பாட்டில்

வளர்ந்து வந்திருக்கக்கூடிய முறைகள், இந்த நாட்டில் மருத்துவத்தில் தலைசிறந்து விளங்கிய முறைகள் இருந்து வருகின்ற நிலையிலே அலபதி மருத்துவ முறையை மாத்திரம் நம்பிக் கொண்டு, அதன் மூலந்தான் இந்த நாட்டிலே இருப்பவர்கள் சாகாமல் வாழ முடியும் என்று நம்பிக் கொண்டு நம்முடைய மருத்துவ முறைகளிலே நாட்டம் இல்லாமல் இருப்பது அவ்வளவு நல்லதல்ல என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஒப்பிட்டுப் பார்க்கும்போது கேரளாவில், குஜராத்தில், வங்காளத்தில் நாட்டு மருத்துவ முறைகளை அமலுக்குக் கொண்டு வரக்கூடிய நிலையில் எந்த அளவுக்கு அவர்கள் சலுகைகளை அளிக்கிறார்களோ அந்த அளவுக்குக்கூட இங்கே சலுகைகள் அளிப்பதில் கவனம் செலுத்தப்படவில்லை என்ற நிலைமையை இந்த பட்ஜட்டில் ஒதுக்கியிருக்கும் தொகையே எடுத்துக் காட்டுகிறது என்று அழுத்தந்திருத்தமாகக் கூற விரும்புகிறேன்.

ஆங்கில மருத்துவத்தைப் படித்து தேர்ச்சி பெற்ற வைத்தியர்களின் அறிவு பற்றியோ, ஆற்றலைப் பற்றியோ, அவர்கள் சமுதாயத்திற்குச் செய்து வரக்கூடிய தொண்டு பற்றியோ எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் இந்த நாட்டு மருத்துவ முறையைப் பற்றி காட்டக்கூடிய அலட்சியம் இந்த நாட்டுக்குச் செய்யக்கூடிய நல்ல செய்கையாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறை பணம் திரட்டும் துறையாக வந்திருக்கிறதே தவிர, சேவா நோக்கோடு பணியாற்றக்கூடிய விதத்தில், இந்த நாட்டின் மருத்துவத்தையும் வளர்க்க வேண்டுமென்ற முறையில், இரண்டையும் இன்டகிரேட் செய்யும் விதத்தில் ஆங்கில மருத்துவர்கள் தயாராகவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நாட்டு வைத்திய முறையை எந்த அளவுக்கு முன்னுக்குக் கொண்டு வரலாம் என்பதிலே தனிக் கவனம் செலுத்தினால் நிரம்பப் பயன் கிடைக்கும். தமிழ் வைத்தியத்தைப் பற்றிச் சொன்னால் "குவாக்" என்பார்கள். அனுபவத்தில் பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக நம்முடைய முதியவர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் இதே டாக்டர்களுடைய தாய் தந்தையர் குழந்தைகளாக அந்த டாக்டர்கள் இருக்கும்போது அவர்களைக் காப்பாற்றிய முறையை படித்துப் பட்டம் பெற்று பிறகு அலட்சியப்படுத்துகிறார்கள் என்ற நிலை வருந்தத்தக்கது. மனிதனுடைய உயிரைக் காக்கும் பெரும் தொழில் எப்படி வியாபார ரீதியாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் மருத்துவ முறைக்கு அடிப்படை இருக்கிறதா, அடிப்படை இல்லை என்றால் அடிப்படையை ஏற்படுத்த முடியுமா, ஆங்கில முறையையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்துச் செய்ய முடியுமா என்று ஒப்பிட்டு நோக்கி இந்த முறையை வளப்படுத்தக்கூடிய விதத்தில் காரியங்களைச் செய்யாதது மிகவும் வருந்தத்தக்கது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சித்த மருத்துவத்தைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளாதவர்கள் பலர் இருக்கிறார்கள். சித்த மருத்துவம், சித்தா கல்ட் என்பது பெரிய கடலைப் போன்றது. மனிதன் பிறந்துவிட்டால்



இறக்காமல் இருக்க முடியும் என்று பல்வேறு விஷயங்களை ஆய்ந்த ஒரு தனிக் கலை. செழிப்பான தேசங்கள் பின்பற்றக்கூடிய அளவில் இருக்கின்றன. இதுவரை அந்த மருத்துவத் துறையைப் பற்றி இரண்டு புத்தகங்கள்தான் வந்திருக்கின்றன. பேராசிரியர் இதைப் பற்றி அடிக்கடி பேசி வருகிறார்கள் என்பதற்காக ஆங்கில வைத்தியர்களுக்கு அவர் மீதே கோபம் இருக்கிறது. அவர் சித்த மருத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார். பேசுவதோடு நின்று விடுவதால்தான் அந்த நிலைமை. செயல்படுத்த முனைந்திருந்தால் எவ்வளவோ விதத்தில் முன்னுக்கு வந்திருக்கும். பொதுவான நோய்களைக் குணப்படுத்தக்கூடிய ஜெனரல் மெடிசின்ஸ் எவ்வளவோ இருக்கின்றன.

லெப்ரசியை எடுத்துக் கொள்ளுங்கள். "சல்பனா" என்ற மாத்திரையை ஆங்கில மருத்துவர்கள் கொடுக்கிறார்கள். அந்த "சல்பா" மூலிகைகளில் இருக்கிறது என்று சித்த வைத்தியர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். என்னிடம் சில மருந்துகள் இருக்கின்றன. அவற்றை நான் கூறத் தயாராக இருக்கிறேன். சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும். நான் அதை வைத்துச் சம்பாதிக்க விரும்பவில்லை. முந்தாநாள் மேல் சபை மாஜி அங்கத்தினர் பாராங்குசத்தின் டிரைவர் குஷ்டத்திற்கு மருந்து கேட்டான், கொடுத்தனுப்பியிருக்கிறேன். மூன்று ரூபாய், ஐந்து ரூபாயில் வைத்தியம் செய்யலாம், பந்தயம் கட்டுங்கள் (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி குறுக்கீடு) பழைய எஸ்டிமேட் கமிட்டித் தலைவருக்குச் சொல்லுகிறேன். எனக்கு ஒன்றும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. நல்ல மருத்துவ முறை நாட்டு மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதுதான்.

(பிற்பகல் 1–00)

டாக்டர் எச். வி. ஹாண்டே : கிருஷ்ணமூர்த்தி ஒரு **controvertial** எஸ்டிமேட் கமிட்டித் தலைவர்..

திரு. மணலி சி. கந்தசாமி : **Because you always want to create controversy.** இப்படியெல்லாம் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆஸ்பத்திரியில் கூட்டம் தாங்க முடியவில்லை என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. டாக்டர்களின் சேவா உணர்ச்சி குறைந்துக் கொண்டு வருகிறது. மக்களுக்கு தமிழ் மக்களுக்கு சேவை செய்கிறோம் என்ற உணர்ச்சி இருந்தால் இந்த நிலையை மாற்ற முடியும்.

சி.எம்.சி. ஆஸ்பத்திரியைப் பற்றி பேசவேண்டாமென்றிருந்தேன். அங்கே ஒரு ஒப்பந்தம் ஆகியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆட்சேபணை இல்லை. அங்கே லட்சக்கணக்கில் வசூல் செய்கிறார்கள். தற்போது அந்த ஆஸ்பத்திரியைப் பற்றி பலர் பேசுகிறார்கள். நான் ஒத்துக்கொள்ள முடியாது. பெரிய பணக்காரர்கள், வெளிநாட்டுக்குப் போகக் கூடிய வசதி படைத்தவர்கள்தான் அந்த ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள், என்பதை இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனவே, அதைப் பொது மக்கள் பிரச்சினையாக கருத முடியாது. இதில் அந்த மானேஜ்மெண்டார் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டிருக்கிறார்களா

இல்லையா என்பது வேறு, என்றாலும் பிரச்சினையை தீர்த்துக்கொள்வது நல்லது—உங்கள் மூலமாக–என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதில் அரசியலுக்குள் போக நான் விரும்பவில்லை.

சித்த வைத்தியத்தைப் பொறுத்தவரையில், பச்சிலைகள், மூலப் பொருள்கள், மூலிகைகள், அதை வைத்து செய்யப்படுகின்ற மருந்துகள் பல நோய்களை தீர்க்க முடியும். பேராசிரியர் அவர்கள் கேட்டால் இதைப் பற்றிப் பல விவரங்கள் தர முடியும், தரத் தயாராக இருக்கிறேன். வெண்குஷ்டத்தை நீக்குவதற்கு அபூர்வமான மருந்துகள் இருக்கின்றன. நானே செய்து வைத்திருக்கின்றேன். கேட்பவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) ஆனால் அதை வைத்து வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்க விரும்பவில்லை. லூகோடர்மா என்ற வெள்ளைப் புள்ளி வியாதிக்கு உங்கள் வைத்தியப்படி ரொம்ப நாள் ஆகும். சித்த வைத்தியம் மூலம் 3 மாதத்தில் குணப்படுத்தும்படியான மருந்துகள் இருக்கின்றன. இதைச் சொல்லும்போது பொறுப்போடு சொல்கிறேன். இப்படிப்பட்ட மருந்துகள் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். பாலக்காடு மலையிலிருந்து ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகிலுள்ள மகாலிங்க மலை வரை பல அபூர்வமான மூலிகைகள், மரங்கள், பச்சிலைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பரிசீலித்து மக்களுக்கு அவை பயன்படுமாறு செய்ய வேண்டும். இளமையை உண்டுபண்ணும் மருந்துகள் எல்லாம் கூட இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்களே அவற்றை ஆராய்ச்சி செய்து பணம் சம்பாதிக்கலாமே.

திரு. மணலி சி. கந்தசாமி : அம்மையாரைப் போல சட்டத்தைப் படித்து அதை வைத்து பணம் சம்பாதிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் மக்களுக்காகவே சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. மணலி சி. கந்தசாமி : இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது. இன்னும் ஒதுக்க வேண்டும். கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும். சித்த மருத்துவத்தில் எம். டி.க்கு புத்தகங்கள் போதாது அட்டவணை சரியாக இல்லை என்றெல்லாம் புகார்கள் வருகின்றன. பி. ஐ. எம். படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்று கூட புகார்கள் இருக்கின்றன.

கிராமத்தில் இருக்கும்படியான கிராம வைத்தியர்களுக்கு சம்பளம் மிகக் குறைவு. ஒரு பியூனுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்தை விட குறைவு. ஒரு ஸ்கில்ட் வொர்க்கருக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்தையாவது கொடுக்கலாம். அவர்கள் நூற்றுக் கணக்கான வியாதியஸ்தர்களை சொஸ்தம் செய்கிறார்கள். எனவே, அவர்களது சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பார்மஸிகளைப் பொறுத்தவரையில், நல்ல மருந்துகளை தயார் செய்து நல்ல முறையில் விநியோகிக்கலாம். இந்த மருந்துகளை செய்து விற்றால் கூட, அரசாங்கத்திற்கு பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் சம்பாதிக்கலாம். ஹோக்கர் மல்லவாய் என்ற புத்தகத்தில் நிறைய எழுதியிருக்கிறார்கள். இளமையை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் இருக்கின்றன. டாக்டர் சிவராஜ், காளிமுத்து போன்றவர்களின் மருந்துகள் எல்லாம் ஏராளமாக விற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் : உறுப்பினர் அவர்கள் ஏதோ வியாபாரி பாணியில் பேசிக்கொண்டிருக்கிறார். யார் யாருடைய மருந்துகளுக்கெல்லாம் விளம்பரம் தருகிறார். (குறுக்கீடு) அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களில் இரண்டு பேர்கள் பேச அனுமதிக்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித் தரப்பில் இந்த மானியத்தின் மீது பேச யாரும் பேர் கொடுக்கவில்லையே.

திரு. மணலி சி. கந்தசாமி : இப்படிப்பட்ட மருந்துகள் பல இருக்கின்றன. டாக்டர் சிவராஜ் மருந்து என்று சொல்லும்போது நான் அவர்களுக்காக பேசவில்லை. சர்க்காரே மருந்து தயாரிக்கின்ற தொழிலை ஏற்றுக்கொள்வதானால் அப்படிப்பட்டவர்கள் வளர வகை இருக்காது என்பதற்காகச் சொன்னேன். ஆக, இப்படிப்பட்ட நல்ல மருந்துகள் எல்லாம் இருக்கின்றன. "அவற்றை பயன்படுத்தி மக்களுக்கு நன்மை செய்ய முடியும். மக்களின் நோயைத் தீர்க்க முடியும். இதில் மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லாமல் சித்த வைத்தியத்தை வளர்ப்பதற்கு சீரியஸ் அட்டென்ஷன் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, மருத்துவம், பொது சுகாதாரம் என்ற இரண்டு மானியங்களுக்காக இந்த சபையின் முன் ரூ. 47 கோடிக்கும் அதிகமான பணத்தை சர்க்கார் அனுமதி கோருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் நாம் கோடிக்கணக்கிலே இந்த மருத்துவம், சுகாதாரம் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து அதிகப்படுத்திக் கொண்டே போகின்றோம். ஆனால் நம்முடைய மருத்துவ மனைகள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கும்போது பொதுவாக, அரசாங்க மருத்துவ மனைகளை எடுத்துக் கொண்டு பார்க்கப் போனால் படுக்கைகளின் எண்ணிக்கை இரண்டு பங்குக்கும் அதிகமாகவே வியாதியஸ்தர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டு போகின்றது. அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க இயலவில்லை என்ற நிலை இருக்கின்றது. இதை நாம் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

சென்னையிலுள்ள பொது மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் இருக்கக் கூடிய படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி வியாதியஸ்தர்களை நிம்மதியாக மருத்துவம் பார்த்துக்கொள்ள விட வேண்டும். பேஷண்ட்–நர்ஸ் ரேஷியோவைப் பார்த்தால் செவிலியர்கள் குறைவாக இருக்கிறார்கள். டாக்டர்கள் குறைவாக இருக்கிறார்கள்,

அப்படி ஏற்படுகின்ற ஒரு நிலையில் ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை செய்துகொள்ள இயலாத நிலை ஏற்படுகின்றது. மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் கேட்கலாம், "நீங்கள் இருந்தீர்களே, அப்போதும் அப்படித்தானே இருந்தது?" என்று. இன்றைக்கு, அப்போது ஒதுக்கப் பட்ட தொகையை விட 3 பங்கு தொகை உயர்ந்திருக்கின்றது என்பதை அவருக்கு ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

தென் சென்னையில் ஒரு மருத்துவ மனையை ஏறபடுத்த வேண்டு மென்று பல ஆண்டுகளாக நான் கூறிக்கொண்டு வந்திருக்கிறேன். நெருக்கடியைத் தவிர்க்க வேண்டுமேயானால் மருத்துவ மனைகளை அதிகப்படுத்தியாகவேண்டும். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கின்றார்கள், கலைஞர் கருணாநிதி நகரில் ஒரு மருத்துவ மனை வரப்போகிறது என்று. அதை துரிதமாகக் கொண்டுவந்தால் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்கக் கூடிய முறையில் பொதுமருத்துவ மனையில் நெருக்கடியை சமாளிக்கலாம் என்று கருதுகின்றேன்.

பொது மருத்துவ மனையில் ஸ்பெஷல் வார்டுகள் இருக்கின்றன. அதைப்பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்கள் கவனத்திற்கொண்டு, இன்னும் சில ஸ்பெஷல் வார்டுகளை ஏற்படுத்த வேண்டும். இப்போது எங்களைப் போன்ற சட்டசபை அங்கத்தின்ர்களுக்கு ஒரு சலுகை கொடுத்திருக்கிறார்கள். மருத்துவ வசதியை பொறுத்த மட்டில், இது எப்படி ஆகிறதென்றால்,— சட்டசபை அங்கத்தினர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது—செக்கப், செக்கப் என்று சதா அந்த ஸ்பெஷல் வார்டுகளை பயன்படுத்திக்கொள் வதால், ஸ்பெஷல் வார்டு எப்போதும் ,·.புல்லாக இருக்கிறது. அதனால், உள்ளபடியே நோய்வாய்ப்பட்டு மருத்துவச் சிகிச்சையும் அறுவை சிகிச்சையும் பெற வேண்டிய நோயாளிகளுக்கு உடனடியாக மருத்துவம் பார்க்க வேண்டிய எமர்ஜென்ஸி கேஸ்களுக்கு கூட வார்டு இல்லாமல் திண்டாடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இந்த ஸ்பெஷல் வார்டுகளை அதிகப்படுத்தினால் நலமாக இருக்கும் என்பதை கருத்திற்கொண்டு செல வழிக்கக் கூடிய பணத்தில் ஒரு பங்கை அதற்காக ஒதுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்,

தாய்–சேய் மருத்துவமனை — எக்மோரில் உள்ளது — குடும்பக் கட்டுப்பாடு திட்டம் — மெடிக்கல் டெர்மினேஷன் ஆப் ப்ரக்னஸ்ஸி யின் அடிப்படையில் அறுவை சிசிச்சை செய்கிறார்கள், ஸ்டாடிஸ்க்டிஸ் என்று பார்க்கும்போது எட்டளவில் நன்றாக இருக்கிறது. ஆனால் அங்கே கடந்த இரண்டு மாதத்திற்குள் 22 தாய்மார்கள் இறந்திருக் கிறார்கள், என்ற தகவலை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள், இதில் டாக்டர்களைத்தான் குற்றம் சொல்ல வேண்டும், இந்த மெடிகல் டெர்மி னேஷன் ஆப் பிரக்னன்ஸி செய்து கொள்கின்ற தாய்மார்களுடைய ஜெனரல் கண்டிஷன் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து அறுவை சிகிச்சை செய்வதில்லை. ஏதோ, ஸ்டாடிஸ்டிக்ஸூக்காகவும், பிரச்சாரம் செய்யக் கூடிய அளவிலும் தான் இருக்கிறதே தவிர, தாய்மார்களின்



உடல் நிலையை கவனித்து அறுவை சிகிச்சை செய்வதாகதெரியவில்லை. இனால் எந்த அளவிக்கு தய் மார்கள பாதிக்கபடுகிறார்க்ள் என்பதை எடுத்துக் கூற விறும்புகிறேன். நெகலிஜெனஸ் ஆப்டாக்ர்ஸ் என்று நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர்கள் ஒததுழைப்பும் இல்லை, அங்கே நெருக்கடியும் அகமாக இருக்கிறது, பலமாதங்களக அங்கேயுள்ள லிப்ட் சரிவர வேலை செய்யவில்லை, அதை எடுசது விட்டு புதிதாக லிப்ட் போட்டால் அங்கேயுள்ள நோயாளிகளுச்கும், டாக்டர்களுக்கும் வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்பு கின்றேன்

பல ஆணடுகளுக்கு முன்பே ஜனத்தொகை அதிகரிக்கும் முன்பே எழும்பூரிலுள்ள கண் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது, அதில் எந்த விதமான க்ஸ்டென்ஹன் செய்வதற்க்கும் பணம் ஒதுக்கப்பட வில்லை. இது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து அந்த மருத்துவ மனையை விரிவாக்க வேண்டும், தக்க கருவிகளை, தேவையான சாதனங்களை வாங்கித் தந்து அந்த மருத்துவ மனையை நல்ல வகையில் முன்னேற்ற வேண்டுமென்று கேட்டுக்கெள்கின்றேன்

அடுத்தாக ரிசர்ச் பற்றி சொல்ல விறும்புகிறேன், நான் கிளினிகள் ரிசர்ச் செய்கிறவர்களுக்கு மாதம் ரு, 150 ஸ்டைபண்டு கொடுப்பதாகச் சொல்கிறது அதுவும் இரண்டு பேர்தான் எடுத்து இருக்கிறிர்கள் சென்னையில் ஒருவர், மதுரையில் ஒருவர், ரு. 150 என்பது குறைவு. அதை ரு. '200 என்ற அளவுக்கு உயர்த்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், பலர் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் அப்படிபட்டவர்களை பொறுக்கி எடுத்து ரிசர்ச் செய்வதற்க்கு வசதி செய்து கொடுத்தால் நல்லது என்று கூறிக்கொள்வதோடு, சென்னை அடையாறுக்கு அருகே தரமணி என்ற இடத்தில் ரு. 60 லட்சம் செலவில், 1971–ம் ஆண்டு ஒரு சுகாதார மருத்துவ மேல் படிப்புப் பட்டம் பெறும் நிலையத்திற்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது ஆனால் இன்று வரை அந்த கட்டிடத்தை எந்த விதமான முறையிலும் பயன்படுதாது இருக்கக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அங்கே எறத்தாழ 200 படுக்கைகள் அமைக்க வசதி இருக்கின்றது. அங்கே ரிசர்ச் செய்வதற்க்கும் வசதி இருக்கின்றது ஆகவே, அதை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரப்பகுதிகளில் ஓரளவு மருத்துவ வசதி நல்ல முறையில் இருக் கிறது, அரசாங்க மருத்துவ மனைகள், தனியார் ஆஸ்பத்திரிகள் இருக் கின்றன, ஆனால் மாவட்டப் பகுதிகளில் அந்த நிலைமை இல்லை, என்னுடைய தொகுதியில், ஸ்ரீரங்கத்தில் இருக்கும் ஆஸ்பத்திரிக்கு சில முக்கியமான வசதியை செய்து தந்து அதை விரிவுபடுகித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அதிலே பல விஷயங்கள் இருக் கின்றன, அவற்றைச் சொல்வதானால் நேரம் ஆகும் என்பதால், அவற்றை எழுதிக் கொடுத்து விடுகின்றேன். அதன் அடிப்படையில் செய்து கொடுக்க வேண்டுமென்று கோட்டுக்கெள்கிறேன்,

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1975 மார்ச் 13

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி என்ற சிற்றூர் இருக்கிறது. அங்கே சுமார் 55,000 மக்கள் தொகை இருக்கிறது. பல ஆண்டுகளாக அங்கே மருத்துவ மனை வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அங்கேயுள்ள மக்கள் மிகவும் ஏழை, எளிய மக்கள். நெசவுத் தொழில் செய்து பிழைப்பவர்கள். ஆகவே, அங்கே ஒரு மருத்துவ மனை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளில் திருடு அதிகமாக ஆகிறது என்று பத்திரிகை யிலும் பார்க்கிறோம். நமக்கு வரும் தகவலில் இருந்தும் தெரிகிறது. அந்தத் திருடுகளை கண்டுபிடிப்பதற்கும், அதைக் கண்காணிப்பதற்கும் தக்க முறையில் அரசு அந்த இலாகாவைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாய்-சேய் மருத்துவ மனைகளில் கூட பச்சைக் குழந்தைகளை திருடிக்கொண்டு போய் இருக்கிறார்கள். ராஜா சர் ராமசாமி முதலியார் ஹாஸ்பிடலில் கூட ஒரு குழந்தையை திருடிச் சென்று விற்பதற்கு முயற்சித்தபோது அந்தப் பெண்ணை பிடித்து இருக்கிறார்கள். இப்படி குழந்தைகளைத் திருடிக்கொண்டு போகிற அளவில் மருத்துவ மனைகளில் கோளாறு ஏற்படுமானால், அங்கே வரும் தாய்-சேய்க்கு மாத்திரமல்ல, அங்கே சிகிச்சை பெற வரக்கூடிய மக்களுக்கும் கஷ்டமும் பீதியும் ஏற்படும். இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். இவற்றை தடுப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

போலி டாக்டர்கள் நாட்டில் நிறைய ஏற்பட்டு இருக்கிறார்கள். நாம் மருத்துவக் கல்லூரி பல ஆரம்பித்து, டாக்டர்கள் பலரை உருவாக்கிக் கொண்டு வருகிற நேரத்தில், இப்படி போலி டாக்டர்கள் ஏற்படக்காரணம் என்ன ? அவர்கள் அப்படி ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ? இப்படி போலியாக இருக்கும் டாக்டர்கள் — குவாக்ஸ் — எவ்வளவு பேர் உயிரை போக்கும் அளவில் செயல்பட்டு இருக்கிறார்கள் என்பது தெரிய வில்லை. இவர்கள் வளர்ச்சியைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கட்சியின் பெயரால் ஏற்படும் குழப்பங்கள் — கட்சி பற்றி பேச வில்லை — கட்சியைச் சேர்ந்தவர்கள் — ஒரு கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் மற்றொரு கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டுவிட்டால், அதிலே அடிப்பட்டு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறக் கூடிய அளவிலே சென்றால், அவர்களை கட்சிமனப்பான்மையோடு இல்லாமல் டாக்டர்கள் கவனிக்கவேண்டும். ஆனால், நான் இதைச் சொல்லக் காரணம், நுங்கம்பாக்கத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் அடிப்பட்டு கீழ்ப் பாக்கம் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரை சரிவர கவனிக்கவில்லை. அவருக்கு சரிவர சிகிச்சை அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அப்படி வருகிறபோது, கட்சிமனப்பான்மை யைக் காரணமாகக் கொண்டு டாக்டர்கள் சிகிச்சை அளிக்கிறார்கள் என்று எனக்கு புகார் எழுதி அனுப்புகிறார்கள்.



1975 மார்ச் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முதலில் அந்த டாக்டர் யார், அவர் ஏதாவது அரசியல் கட்சியைச் சார்ந்தவரா என்று அறியவேண்டுகிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாக்டருக்கு அரசியல் கிடையாது. அதை விவரிக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். சொல்கிறபோது அமைச்சர் கண்டுகொள்ள வேண்டும். ஆகையால், அவை விவரித்தால ரொம்ப விபரீதமாகப் போய்விடும். யார் அடி பட்டு வந்தாலும வரக்கூடியவர் எந்த அரசியல் கட்சி என்று பார்க்காமல் சிகிச்சை பெற வந்தவர்க்கு சிகிச்சை அளிக்கவேண்டும். அதிலே எந்தவிதமான தலையீடும் இருக்கக்கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள்.

நீங்கள் அரசு ஊழியர்களுக்கு எல்லாம் சம்பள உயர்வு அளித்து இருக்கிறீர்கள் — முதலமைச்சர் அவர்கள் அளித்து இருக்கிறார்கள். இப்படிக் கொடுக்கிறபோது, செவிலியர்கள், லாஸ்ட் கிரேட் சர்வென்ட்ஸ் ஆகியோருக்கு தனிப்பட்ட முறையில் அவர்கள் வேலையின் தன்மையைக் கருத்தில் கொண்டு கொடுக்கவேண்டும். செவிலியர்கள், வேலை மிகவும் பாராட்டத்தக்கதொரு வேலை மட்டுமல்ல, அவர்கள் தான் நோயாளி களுக்கு பக்கபலமாக இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்வதில் அவர்களுக்கு பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட பணிகளைச் செய்கிற அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவு கலப்படம். எந்த உணவுப் பண்டங்களின் விலைவாசி உயர்ந்தாலும் அதில் கலப்படம் அதிகமாக ஆகிறது. அரிசி, பருப்பு போன்றவற்றில் கூட கலப்படம் அதிகமாக இருக்கிறது. சமீபத் தில்—உதாரணத்திற்கு கூற வேண்டுமானால் — பத்திரிகையில் வெளி வந்திருந்தது. — 600 வாகன் உணவுப் பண்டங்கள் தமிழ்நாட்டிற்கு வந்து கேள்வி அற்றுப்போய் இருந்தது. அதிலே ஒரு வாகன் கலப்படம் செய்யும் பொருள்களாக இருந்தன என்று பத்திரிகையில் பார்த் தோம். இந்தக் கலப்பட பொருள்கள் செய்வதைத் தடுக்க நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். நாம் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்டரி மூலமாக லைசென்சு கொடுக்கிறோம் தொழிற்சாலைகளுக்கு. ஏதாவது ஒரு தொழிற்சாலை இப்படி கலப்படத்திற்கு உபயோகிக்கும் பொருளை தயாரிக்குகிறார்கள் என்று தெரிந்தால் அதனுடைய லைசென்ஸை ரத்து செய்து விடவேண்டும். அப்படிப்பட்ட முறையில் செயல்படுவதற்கு நம்முடைய அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

T. B· Research Centre-ஐ southern Regional Headquarters ஆக I.C.M·R. எடுத்துக் கொள்ள போவதாக அதில் குறிப்பிட்டிருந்தது. அதுவும் ஆண்டுக்கு Re. 1 nominal rent ஆக அரசு கொடுப்பதாக இருக்கிறது. அதை வரவேற்கிறேன். இதை பல ஆண்டுகளாக எடுத்துச் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு கேட்டுக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு 1 ரூபாய் வாடகையாக nominal rent per year போட்டு கொடுத் திருக்கிறார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்துவது தமிழ்நாட்டுக்கு உதவிகரமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தண்ணீர் சப்ளை. இது ரொம்ப முக்கியம். இப்பொழுது இருக்கும் தண்ணீர் பிரச்னையில், வைத்தியம், சுகாதாரம் என்று பேசுகின்ற நேரத் தில், தண்ணீர் திட்டத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவ மனைகளில் எல்லாம் கிணறுகள் வெட்டுவதற்கும், ஏற் கனவே இருக்கும் கிணறுகளை ஆழப் படுத்துவதற்கும், சுத்தம் செய் வதற்கும், தண்ணீர் கொடுப்பதற்கும் கார்ப்பரேஷன் மூலமாக கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அதை விட்டு தண்ணீர் தோண்டப்படுகின்ற கிணறுகள் மூலம் தண்ணீர் சப்ளையை பெருக்க வேண்டும். ஆஸ்பத்திரி களில் தண்ணீர் வாராதகுறை பெரும்குறையாக இருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டும். அது மாத்திரமல்ல. நகரத்தில் இருக்கும் மக்களுக்கு இன்று தண்ணீர் பற்றுக்குறை இருக்கும் இந்த நேரத்தில் அந்த தண்ணீர் போதுமான அளவுக்கு கிடைப்பதற்கான வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுச் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளில் essential drugs or life-saving drugs இவை கள் இல்லாமல் பல உயிர்கள் காப்பாற்ற முடியாமல் போகிறது என்ற குறைபாடு டாக்டர்களிடத்தில் இருக்கிறது. இது எந்த காரணத் தினால் அந்த ஸ்டாக் இல்லாமல் இருக்கிறது, போடக் கூடிய இண் டெண்ட்ஸ் என்ன, வாங்கப்படக் கூடிய மருந்துகள் யாவை, சில சமயங் களில் நோவால்ஜன் கூட ஜெனரல் ஆஸ்பத்திரியில் இல்லாத குறை இருக்கிறது. இந்தமாதிரி இருக்குமானால் அவர்கள் கொடுக்கக் கூடிய ஒரு முக்கியமான சிகிச்சை கூட நோயாளிகளுக்கு கிடைக்க இயலாத நிலைமை ஏற்பட்டு விடும். Intensive cardiac care unit பற்றி கூறினார்கள். அதற்கும் Cardiac Block-க்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. அதை ஒன்று படுத்தி, அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும் அந்த ஐ.சி.சி. யூனிட்டில் ஒரு முக்கியமான அரசாங்க உத்தியோகஸ்தர் ஜனவரி மாதத்தில் எடுத்து செல்லப்பட்டார். அவருக்கு ஆக்சிஜன் சிலிண்ட ரில் ஆக்ஸிஜன் இல்லாமல் அவர் உயிரை காப்பாற்ற முடியாமல் இறந்து விட்டார் என்பதைப் பார்க்கும் போது, எவ்வளவு வருந்தத்தக்கதாக இருக்கிறது. இதை சாதாரணமான விஷயமாகக் கருத இயலாது. ஆக்சி ஜன் இல்லாத காரணத்தினால் இறந்து விட்டார் என்று அவர்களே கூறியிருக்கிறார்கள். ரிப்போர்ட் இருக்கிறது. அதுவும் அரசாங்க முக்கிய உத்தியோகஸ்தர். அப்படி ஆக்சிஜன் சிலிண்டரில் ஆக்சிஜன் இருக்கிறதா, இல்லையா என்று பார்க்காது டாக்டர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால் அவர்களை நீங்கள் கண்டித்தாக வேண்டும். அப்பொழுது அந்த யூனிட் டில் யார் இருந்தார்கள் என்பதை விசாரித்தாக வேண்டும்.

இந்த ஓப்பன் ஹார்ட் சர்ஜரியைப் பற்றிக் கூறினார்கள். இந்த புத்தகத்தில் மானியம் ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் எடுத்து கூறியிருக்கிறார்கள். 2 அறுவை சிகிச்சைக்கான தியேட்டர்கள் கட்டப் போவதாக இருப்பதை வரவேற்கிறோம். ஆனால் தியேட்டர்கள் வருவ தோடு, அவர்களுக்கு ஒரு தனி வார்டு ஏற்படுத்தியாக வேண்டும். இல்லை யானால் அவர்கள் அறுவை சிகிச்சை செய்யக் கூடிய பேஷண்டுகளுக்கு தக்க முறையில் ஒரு போஸ்ட் ஆபரேடிவ் கேர், பிரீ ஆபரேடிவ் கேர் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படாமல் போகும் என் பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.





இந்த நோயாளிகள் இறந்து விட்டால் சில கேஸ்களில் போஸ்ட் மார்டம் செய்ய வேண்டியிருப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இது மிகவும் வருந்தத்தக்கது. அப்படி இறந்து போகின்ற நோயாளிகளின் சொந்தக்காரர்கள் எவ்வளவு கவலையாக இருப்பார்கள். அந்த சவத்தை சீக்கிரமாக எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று கவலையாக இருப்பார்கள். அங்கே போஸ்ட் மார்டம் செய்யக் கூடிய டாக்டர்கள் 10 அல்லது 10–30 மணிக்கு மேல் வருவார் என்று கேள்வி. அந்த மார்ச்சுவரி பக்கத்தில் இருக்கும் பரிதாபமான நிலைமையைப் பார்க்க வேண்டும். நானும், கனம் அமைச்சர் அவர்களும் அந்த வழியாகத்தான் போகின்றோம். மணிக்கணக்காக அங்கு இறந்து போகின்றவர்களுடைய சொந்தக்காரர்கள் சவத்தை எடுத்துச் செல்ல காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையைப் பார்க்கின்றோம். அந்த டாக்டருக்கு ஆர்.எம்.ஓ.-வுக்கு குவார்ட்டர்ஸ் கொடுத்த மாதிரி மருத்துவமனை உள்ளேயே Quarters கொடுத்து ஒரு உத்திரவ போட வேண்டும். 6 மணி, 7 மணிக்குள் ஆஜராக வேண்டும். 1 மணி நேரத்திற்கு மேல் எந்த சவத்தையும் வைக்கக் கூடாது, சொந்தக்காரர் களிடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று உத்திரவு போட வேண்டும். இது ரொம்ப முக்கியமான விஷயம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: *பாயிண்ட் ஆப் ஆர்டர் சவம் ஒரு மணி நேரத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். அன்றைக்கு கனம் அங்கத்தினர் வீராசாமி அவர்கள் பாட்டி இறந்து போய், 8 மணி நேரத்திற்குப் பிறகு உயிர் வந்ததாகச் சொன்னார்கள். ஆகவே அவசரப்பட்டு 1 மணி நேரத்திற்குள் போஸ்ட் மார்டம் செய்து உயிர் வரக்கூடியவர்களை கொன்று விடாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போஸ்ட் மார்டத்தை தாமதப் படுத்தக் கூடாது என்றுதான் சொன்னார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: செத்துப் போன பிறகு உயிர் வராத அளவுக்குப் பார்த்து அனுப்புங்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: நம்மிடத்தில் மருத்துவர்கள் குறைவு என்று கூறுகிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்த சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதில் கூறும்போது 1,300 மருத்துவர்கள் இன்னும் வெயிட் டிங் லிஸ்டில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த 1,300 மருத்துவர் களுக்கு நாம் எப்பொழுது வேலை கொடுக்கப்போகிறோம்? அவர்களுக்கு முறையாக வேலைகளை கொடுப்பதற்கு வழி வகை செய்து, அவர்களை இந்த வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது காலரா, எபிடமிக், காஸ்ட்ரோ என்டிரைடிஸ் அது இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பகுதிகளில் வருகிறது என்று கூறினார்கள். இப்பொழுது நீங்கள் உடனடியாக பிரிவென்டிவ் மெஷர்ஸ் எடுத்தால், அடுத்து வெயிற் காலம், கோடை காலம் வரப்போகிறது. அந்த நேரத்தில்

இந்த நோய் பரவக் கூடிய நிலைமை ஏற்படாமல் இருக்கும். அப்படி பரவும்போது, பரவுகின்ற மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அரசு முன்வர வேண்டும். தண்டையார்பேட்டை ஆஸ்பத்திரி; அதற்கு ரொம்ப காலமாக சில அபிவிருத்திகள் எல்லாம் தேவையாக இருக்கின்றன. இதையும் அபிவிருத்தி செய்து, இன்னொரு தொற்று நோய் ஆஸ்பத்திரி கட்டுவதற்கும் அரசு முன்வர வேண்டுமென்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மலேரியா கன்டின்ஜென்ஸி ஸ்டாஃபை இன்னும் தற்காலிகமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உத்தியோகத்தை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றொன்று, சி.எம்.சி. ஆஸ்பத்திரி பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அது அரசியலோ, அரசியல் இல்லையோ தெரியாது. நம் மாநிலத்தில் இருக்கக் கூடிய ஒன்று, மற்ற மாநிலத்திற்கு செல்கிறது என்று நினைப்போமானால் நாம் பெற்றிருக்கக் கூடிய நல்ல மருத்துவ மனையை இழந்தவர்களாகி விடுவோம். அதற்கு நாம் கிராண்ட் கொடுத்திருக்கிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இங்கே இல்லை. இதை சுமுகமாக முடிக்க வேண்டும். பத்திரிகைகளிலும் "லெட்டர்ஸ் டு தி எடிட்டர்ஸ்" **column** களையும் படித்துப் பார்க்கும் போது அரசியல் காரணமாகக் கூறப்படுகிறது. அந்த மருத்துவமனையை இங்கேயிருந்து நகர விடாமல் பார்த்துக் கொள்வது நமது அரசின் பொறுப்பு, கடமை என்று கூற விரும்புகிறேன்.

மற்றொன்று, கண் இழந்தவர்களுக்கெல்லாம், கண்ணொளி கொடுக்கின்றார் முதலமைச்சர். அதுவுமில்லாமல் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கெல்லாம் இங்கே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கும் போது நாம் வரவேற்கிறோம்.

ஆனால் கண் இழந்தவர்களுக்கு கண்ணொளி கொடுக்கக் கூடிய முதலமைச்சர் காலத்தில், இந்தக் கண் இழந்தவர்களுக்காக நடத்தப்படும் பள்ளி மூடப்பட்டிருக்கிறது. பிறவியில் கண் இழந்தவர்கள் இன்றைக்கு பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பிச்சைகாரர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கக் கூடிய இந்த அரசு, இன்றைக்கு கண் பார்வை இழந்தவர்களை பிச்சை எடுக்கின்ற நிலைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் இங்கே கண்டிக்கத்தான் வேண்டியிருக்கிறது. அதற்கு நம் முதலமைச்சர், கல்வியமைச்சர் பதில் கூற வேண்டும். கல்வியமைச்சருடைய இலாகா அது.

[பிற்பகல் 1–30 மணி.]

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை</u> : கனம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டது கல்வியமைச்சரோடு தொடர்புடையதாக இருந்தாலும் என்னுடைய சமூக நலத் துறையும் சம்பந்தப்பட்டிருப்பதால் அதற்கு என்னுடைய விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அரசாங்கமாகப் பார்த்து அவர்களுடைய அந்தப் பள்ளியை மூடவில்லை. அரசாங்கம் அவர்கள் கொடுத்த 6 கோரிக்கைகளில் 5 கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு, உடனடியாகப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று தெரிவித்தும் கூட, ஆறாவது கோரிக்கையை ஏற்றுக் கொண்டால்தான் போவோம என்று கூறிவிட்டார்கள். ஆறாவது கோரிக்கை அந்தப்பள்ளியின் பிரின்சிப்பாலை மாற்றவேண்டும் என்பது. பிரின்சிப்பாலை மாற்றினால் தான் பள்ளிக்குச் செல்வோம் என்று கூறி, மறியல் செய்தார்கள். அதையும் அரசாங்கம் கருணையோடு பரிசீலித்து, அவரவர் இல்லத்திற்கு அவர்களை எடுத்துச் சென்றுவிட்டு, உரிய காலத்தில் தேர்வு எழுதுவதற்கும் ஏற்பாடு செய்து, இப்போது அந்தப் பள்ளி திறக்கப்பட்டு, முறையாகப் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திருமதி ஜோதி வெங்கடாசலம்</u> : 6 கோரிக்கைகளில் ஐந்தை நிறைவேற்றி விட்டோம் என்று சொன்னார்கள். ஆறாவது கோரிக்கையான பிரின்சிபாலை மாற்ற வேண்டுமென்பதுதான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கை. அந்த விபரம் எனக்கும் தெரியும். பிறவியிலே கண்ணிழந்த மாணவர்களை வெளியே பிடித்துத் தள்ளி அவர்களை துன்பப்படுத்தியிருக்கிறோம் என்றால் அது எவ்வளவு கொடுமையானது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சமூக நல அமைச்சர் அவர்கள் பள்ளி திறக்கப்பட்டு, பயிற்சி பெற்று வருவதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் சந்தோஷம். **It is state—'Chief Minister Kalaignar Karunanidhi Free Eye Camp will bring light and cheer to the lakhs of families of blind persons.'** பிறவியிலேயே கண் இழந்தவர்கள் பள்ளியைவிட்டு வெளியே வந்தபின்னால் சபாநாயகர் அவர்களே, நீங்களேகூட பார்த்திருக்கலாம் "பஸ் ஸ்டாப்பிலும், தெருக்களிலும் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அதனால்தான் இந்த சப்ஜக்டை இங்கே எழுப்பினேன். இப்போது பரீட்சை எழுத ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கிறது என்றால் அதை வரவேற்கிறேன்.

அடுத்து, மெட்ராஸ் மெட்ரோபோலிட்டன் டெவெலப்மெண்ட் அதாரிட்டி பற்றி ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நானும் அதிலே ஒரு அங்கத்தினராக இருக்கிறேன். பம்பாயில் இருக்கிற மெட்ரோபோலிட்டன் டெவெலப்மெண்ட் அதாரிட்டி மாதிரி நாமும் மத்திய அரசினுடைய பிரதிநிதி ஒருவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மத்திய அரசின் பிரதிநிதி ஒருவர் இருந்தால், நமக்கு மத்திய அரசு கொடுக்க வேண்டிய மானியம் போன்றவற்றை உரிய அளவில் தக்க சமயத்தில் பெறுவதற்கு அவர் ஒரு "லயசன் ஆபீசராக" இருக்கும் வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறேன். ஆகையால் மத்திய அரசு ரெப்பிரசென்டேட்டிவ் ஒருவரை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறார்கள்.

**'To discuss about the necessity to develop the Kuzhithurai Taluk Headquarters Hospital'**

என்று கொடுத்திருக்கிறார்கள். இதை எங்கள் ஆட்சி காலத்திலேயே விரிவுபடுத்த வேண்டுமென்று முடிவு செய்து, பக்கத்தில் இருந்த

நிலம் எல்லாம் கையகப்படுத்த 4(1)(எ) நோட்டிபிகேஷன் இஷ்யூ செய்யப் பட்டது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. பக்கத் தில் இருக்கிற நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி, அந்த மருத்துவ மனையினுடைய படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன்.

திரு. நா. வீராசாமி : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். (திரு. கே.எம். சுப்பிரமணியம் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் அவருடைய பாயிண்ட் ஆப் ஆர்டரை சொல்லட்டும்.

திரு. நா. வீராசாமி : சார், நான்தான் முதலில் கேட்டேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am rising on a point of order. Discussion has taken place en all Demands except one Demand involving about Rs. 6 crores. Nobody has spoken about that Demand except one sentence by one hon. Member....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. பேசுகின்ற உறுப்பினர் பேசவில்லை என்றால் அது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டரில் வரும்?

THIRU K. M. SUBRAMANIAM : If no mention has been made about it, the people in the Madras City will think that we have no interest in Madras City

திரு. நா. வீராசாமி : இன்று காலையில் திரு. முனு ஆதி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பி, அதற்கு தாங்கள் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறீர்கள். லாபியில் யாரும் உட்காரக்கூடாது என்று அப் போது இருந்த தலைவர் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனால் இப்போது பத்திரிகையாளர்கள் கூட அந்த வழியாக வர, போக முடியவில்லை. உறுப்பினர்களிடமிருந்து செய்திகளைக் கேட்டு அவர்கள் பத்திரிகைகளில் போடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஏனென்றால் அவர்களை அங்கே விட மறுக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி பின்னால் பேசிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் இன்றைய தினம் கொண்டுவரப்பட்ட மக்க ளுடைய நல்வாழ்வுக்கான மருத்துவ செதிகள், நகர வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய மானியங்கள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள் 14 பேர் பங்கு பெற்று, தங்களுடைய மேலான



கருத்துக்களையும், நடைமுறையில் இருக்கின்ற குறைபாடுகளைத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும் எடுத்து வலியுறுத்தியதற்காக என்னுடைய நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நல்வாழ்வுத் துறை போன்ற துறைகள் மக்களுடைய அன்றாட வாழ்க்கையிலே மிக இன்றியமையாத தொடர்பு கொண்டு, முக்கியமான பல்வேறுவகைத் தொண்டினை மக்களுக்கு நிறைவேற்றுகின்ற அமைப்பு களாக இருப்பதாலும், ஒரு குறிப்பிட்ட அளவில் இல்லாமல், பரவலாக இயங்கும் நலத்துறையினுடைய நடைமுறையாயும் ஒரு குறிப்பிட்ட பயிற்சி பெற்றவர் மட்டுமல்லாமல் பல்வேறு வகையான பயிற்சி பெற்றவர்கள் இதில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தாலும், அவர்க ளுடைய பணிகளை விரும்புகிற மக்கள் தங்கள் நலனைக் கருதி அவர்களை விரும்புகிறார்கள் என்பது இயற்கையாக இருக்கிற காரணத்தாலும் குறை பாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ள துறை இது என்ப தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் அதிகமான குறைபாடுகளை யாரும் சொல்லவில்லை என்பதால் இத்துறை நல்லமுறையில் இயங்கி வருகிறது என்பதற்கு அடையாளமாக அது இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

உள்ளபடியே, கடந்த 4 ஆண்டுக் காலமாக இந்தத் துறைக்குப் பொறுப் பேற்றிருக்கிற வகையில், இது சமூகப் பணியாற்றுகின்ற ஒரு துறை என்றும், ஆர்வத்தோடு இருக்கிற எனக்குப் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியது பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. தொழுநோய்த் தடுப்புத் திட்டம், காச நோய் ஒழிப்புப் பணி, மலேரியா நோய், பைலேரியா நோய் போன்ற வற்றிற்குக் காரணமாக இருக்கிற கொசு ஒழிப்புத் திட்டப்பணி, குடிநீர் மூலம் பரவுகின்ற நரம்புச் சிலந்தி நோய் வராமல் தடுக்கின்ற பணி, காலரா, பிளேக் போன்ற தொற்று நோய்களைத் தடுக்கிற பணி போன்ற பல்வேறு பணிகளை இந்தத் துறை மேற்கொள்கிறது. இந்த நோய்கள் பற்றிய குறிப்புகள் இப்போது மக்களுடைய கவனத்திற்கு விறுவிறுப் பாகக் கொண்டுவரப்பட்டு மக்களுடைய ஒத்துழைப்போடு இப்பணிகள் நடை பெற வேண்டுமென்று நாளும் இந்தத் துறை இயக்குநர்களும் பல்வேறு முறைகளை மேற்கொண்டுள்ளோம். ஓரளவு இவை எல்லாம் இப்போது மக்களிடம் போய்ச் சேர்ந்திருக்கிறது. மக்கள் இவற்றை எல்லாம் தெரிந்துகொண்டு குறையிருந்தால் சொல்லத் தொடங்குகிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் காசநோய் அல்லது சயரோகத் தடுப்பு நிறுவனங்கள் இருக்கின்றன என்பது பொது மக்களுக்குத் தெரியாது. இப்போது இந்த 4,5 ஆண்டுகளில் ஓரளவு பரவலாக எடுத்துச் சொல்லப் பட்டு, காசநோய் வந்துவிட்டால், அல்லது காசநோய் வருவதாக அறிகுறிகள் தெரிந்தால் உடனே அதைத் தடுப்பதற்கான சிகிச்சை முறைகள் இருக்கின் றன. தகுந்த சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்று எடுத்துச் சொல் லப்பட்டு, மிகத் தீவிரமான சிகிச்சை பெற வழி இருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். மாவட்டத் தலைநகரிலும், தாலுக்கா மருத்துவ மனையிலும் காசநோய் சிகிச்சைக்கு வழி ஏற்படுத்தப்பட்டிருக்கி

றது. அதன் பலனை மக்கள் பரவலாகப் பெற்று வருகிறார்கள். இன்றைக்கு காசநோய்க்கு வீட்டிலிருந்தவாறே கூட சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலைமையும் உருவாகியிருக்கிறது.

அதைப்போல தொழு நோய் என்பது, சமூகக் கடமை உணர்வோடு மக்களே சேர்ந்து ஒத்துழைத்து பணியாற்றினால்தான் தடுக்கப்படும் என்று மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். சில ஆண்டு காலத்தில் நூற்றுக்கு இரண்டு பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று காணப்பட்டு அவர்கட்கெல்லாம் சிகிச்சைக்கு வழிகோலப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ளலாம்.

இன்றைக்கு மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற முயற்சியில் நாடு முனைந்திருக்கிறது. மக்கள் தொகை வளர்கிற வேகத்தினால் ஏற்படக்கூடிய கேட்டினைத் தடுக்க குடும்ப நலத் திட்டம் நிறைவேறி, தமிழ் நாட்டில் பிறப்பு எண்ணிக்கை விகிதம் ஓரளவு குறைந்திருக்கிறது என்பதற்குப் புள்ளி விபரம் தரமுடியும். என்றாலும் மொத்தத்தில் மக்கள் தொகை வளர்கிற வேகம் ஆயிரத்திற்கு இத்தனை பேர் என்று தடுத்துக் குறைக்கப்பட்டாலும் ஏற்கனவே 3 கோடி பேர் இருந்தபோது இருந்த மக்கள் உற்பத்தி பெருக்கத்தைவிட 4¼ கோடிபேரில் உற்பத்திப் பெருக்கம் ஆண்டுதோறும் ஏறிக்கொண்டேதான் போகிறது. அந்த மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றவாறு நம்முடைய நலத்துறையின் தொண்டு, சிகிச்சை இவைகள் கிடைப்பதற்குப் பல இடையூறுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளை எல்லாம் போக்குவதற்கு இந்தத் துறை தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

அம்மையார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். கிராமப்புறங்களில் பல்லாண்டுகாலமாக இருக்கிற நெருக்கடி ஏற்கனவே இருந்ததைப் போலவே இன்னும் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு முன்னாலே பெரிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் இங்கே இந்த அரசால் தரப்பட்ட குறிப்பிலே ஏற்பட்ட தவறாலே, அதுதான் உண்மை என்று கருதி குறைபட்டுக் கொண்டார்கள். 26 படுக்கைகள்தான் 1975–76-ம் ஆண்டில் அதிகரிக்கப்படுவதாக இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். அப்படி எடுத்துக் காட்டுவது அவர்களுடைய கடமை. அந்தத் தவறுக்கு நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் உண்மையில் அதிகப்படுத்தப்படுவது அந்த 26 படுக்கைகள் மட்டுமல்ல; 220 படுக்கைகள் வரப்போகின்றன. இன்னும் திறந்து வைக்கப்படவேண்டிய கட்டத்தில் பல மருத்துவமனைகள் இருக்கின்றன. வடாற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும் செங்கத்தில், தானிப்பாடியில் புதிய மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன. அதேமாதிரி பல இடங்களில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

அதிகாரிகள் சொல்கிற கணக்குப்படி மட்டுமல்ல, எனக்குத் தெரிந்ததைச் சொல்ல முடியும் கிட்டத்தட்ட 220 படுக்கைகள் அதிகப்படுத்தப்படவிருக்கின்றன. இன்னும் எக்ஸ் சர்வீஸ்மென்களுக்காக ஒவ்வொரு இடத்திலும் 10 படுக்கை அல்லது 12 படுக்கைகளை தனியாக ஏற்படுத்தி



ஒதுக்க 16 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் மருத்துவ கல்லூரி மருத்துவ மனைகளில் வேறு இருக்கிறது. செங்கற்பட்டில் தனியாக மெட்டர்னிட்டி பிளாக் வருகிறது. இந்த ஆண்டு 75—76 என்கிறபோது 1975 ஏப்ரல் 1-ம் தேதியில் இருந்து 1976 மார்ச் 31 ஆம் தேதி வரைக்கும் என்று பார்க்கிற போது முன்னர் மேற்கொண்ட திட்டப்படி கிட்டத்தட்ட 400 படுக்கைகள் அதிகரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும் இது நம்முடைய தேவைக்கு குறைவாகத்தானிருக்கும் நம்நாட்டில் "தொட்டிலும் காணாது கட்டிலும் காணாது" என்கின்ற நிலை இருக்கின்றபோது மருத்துவ மனைகளில் மட்டும் படுக்கை காணும் என்கிற நிலையை எப்படி ஏற்படுத்த முடியும் என்பதை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். பொதுவாக இந்தப் பிரச்சினையே பிரசவ மருத்துவ மனையில் தொடங்குகிறது. அங்கே குழந்தைகள் பிறந்து மக்கள் எண்ணிக்கைக்கு வருகிறது. அங்கேயும் இடநெருக்கடி இருக்கிறது. குழந்தைகளுக்காக என்று சென்னையில் தனியாக குழந்தைகள் மருத்துவமனை இருக்கிறது. அதிலும் இடநெருக்கடி இருக்கிறது. இது சமுதாயத்தின் மொத்தபோக்கின் விளைவு என்பதை உணர்கிறோம். முடிந்த அளவிற்கு இந்த அரசும் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றி, குறைகளைப் போக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பநலத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் திருமணம் ஆகாதவர்களுக்கும் கூட அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஒருக்கால் திருமணம் ஆகாதவர்கள் தங்களால் நாட்டில் கஷ்டம் ஏற்பட்டு விடக் கூடாது என்று கருதி தங்களுக்குத் திருமணம் ஆனதாகச் சொல்லிக்கொண்டு செய்து கொண்டார்களோ என்னமோ? மருத்துவரிடத்தில் திருமணம் ஆனதாகச் சொல்லிக் கொண்டுதான் செய்துகொண்டிருக்க வேண்டும். அப்படிச் சொல்லிக்கொண்டு செய்துகொண்டவர்கள் புகார் எழுதிக் கொடுப்பதில்லை. அவர்களது உறவினர்களுக்குத் தெரிந்து அவர்கள் புகார் கொடுத்திருக்கலாம். இன்னும் ஓரிரண்டு இடங்களில்— உனக்கு 60 ரூபாய் கிடைக்கும் 70 ரூபாய் கிடைக்கும் என்று சொல்லியும் தவறு நடந்திருக்கலாம்.

பொதுவாகப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில் இந்த ஆண்டில் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் பேர்களுக்கு இந்த சிகிச்சை நடைபெற்றிருக்கிறது என்றால் இதுவரையில் 30 அல்லது 40 கேஸ்களில்தான் தவறு நடந்திருக்கலாம். அதிலும் புகார் செய்திருப்பது யார் என்று தேடிக்கொண்டு போகின்றபோது பத்து, இருபது பேர்கள்கூட இருப்பதே இல்லை. உண்மையாகத் தவறு நடந்துவிட்டது என்பது பத்து பதினைந்து தான் இருக்கும். மொத்தம் நடைபெற்றிருப்பது ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் என்கின்ற கணக்கை வைத்துப் பார்க்கிறபோது இந்த முப்பது நாற்பது என்பது மிகமிகக் குறைவு. இன்றைக்கு நம் நாட்டில் எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் நூற்றுக்கு நூறு விழுக்காடு அல்லது 99.9 சதவிகிதம் என்கிற அளவில் குறையே இல்லாமல் நிறைவேற்றப்படுவது எதுவுமே இருக்காது. வெறும் அம்மைப்பால் குத்துவதை எடுத்துக் கொண்டால் கூட சில தவறுகள் ஏற்பட்டு விடக்கூடிய வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. தபால் கார்டு வாங்குவதில் கூட தவறு நடந்தாலும் நடக்கும். இந்தச் சூழ்நிலையில் கூட இந்தத் துறையைப் பொறுத்த வரை

யில் இந்தப் பணி மிகச் செம்மையாக நடந்து வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். குறையே இல்லாமல் நடைபெறுவதற்கும் தனித்தனியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் நான் தயாராய் இருக்கிறேன்.

திருமதி ஜோதியம்மாள் ஒரு முக்கியமான கருத்தைச் சொன்னார்கள். இது வரை நான் கேள்விப்படாத ஒன்றைச் சொன்னார்கள். சென்னையில் உள்ள தாய் சேய் மருத்துவ மனையில் போஸ்ட் மார்ட்டம் ஆப்பரேஷன் மட்டுமல்ல-கருவுற்றுவிட்டாலும் கருச் சிதைவு செய்துகொள்ள உரிமை இருக்கின்றபடியால் அதற்காகவும் வந்திருப்பார்கள். கடந்த எழெட்டு மாதங்களில் 22 பெண்கள் இறந்து விட்டார்கள் என்று சொன்னார். இது எனக்குத் தெரியாத ஒன்று. தரப்பட வேண்டிய மருந்து தரப்படாது இறந்து போய்விட்டார்களா, கவனக் குறைவினால் இந்த நிலை ஏற்பட்டதா அல்லது வேறு என்ன காரணம் என்பதைப் பரிசீலிக்கும்படி இத்துறை இயக்குநரை நான் இப்போதே கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படி ஏதாவது ஓரிடத்தில் திறமைக் குறைவினால் தவறு ஏற்பட்டிருந்தாலும், கருவிகள் பழுதுபட்ட நிலையினால் ஏற்பட்டிருந்தாலும் யாராவது ஒத்துழைக்காமல் இருந்ததால் தவறு நடந்திருந்தாலும் நான் நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறேன். ஆனால் சென்னையிலுள்ள தாய்-சேய் நல மருத்துவமனை பெரிய அளவுக்குப் பெண்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்து வருகிறது, என்பதை நாடு ஒப்புக் கொண்டிருக்கிறது. அங்குதான் இத்துறையில் வல்லுநரான சூப்பிரண்டு இருக்கிறார். ஆராய்ச்சித்துறை வல்லுநரான நிபுணர் இருக்கிற இடமும் அதுதான். என்றாலும் அங்கே குறை ஏற்பட்டிருக்குமானால் அதைக் கவனிக்கத் தயாராய் இருக்கிறேன். இந்தக் குறைகளை எல்லாம் சேர்த்து வைத்து விகிதாச்சார முறையில் பார்த்தால் மருத்துவ மனையில் சேர்க்கப்படுகிறவர்கள் அங்கே சிகிச்சை பெற்று எல்லோரும் நல்ல முறையில் திரும்பி வந்துவிடும் நிலைமை எந்த ஒரு நாட்டிலும் இருக்க முடியாது.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மருத்துவ அறிஞர் ஒருவர் செஸ்ட் (chest) அல்லது ஹார்ட்டு (heart) சம்பந்தமாக ஒரு சொற்பொழிவு ஆற்ற இங்கே வந்தார்கள். அவருக்கு இங்கே இருதயக் கோளாறு ஏற்பட்டுவிட்டது. உடனடியாக நமது மருத்துவ மனையில் இன்டென்சிவ் கரோனரி யூனிட்டில் சேர்க்கப்பட்டு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இரண்டு நாள் கழித்துத்தான் அவரது மனைவியாரே இங்கு வந்தார்கள். அவரை நானே சென்று பார்த்தேன். நமது கல்வி அமைச்சரும் சென்று பார்த்தார்கள். அவரே எங்களிடம் நமது மருத்துவ மனையில் அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றிச் சொல்லும்போது மிகுந்த வளர்ச்சிபெற்றுள்ள இலண்டனிலே, அமெரிக்காவிலே நாங்கள் எப்படி சிகிச்சை கொடுக்கிறோமோ அதே அளவு திறமையோடு இங்கே சிகிச்சை தமக்குக் கொடுக்கப்பட்டதாக மிக மகிழ்ச்சியோடு சொன்னார்கள். நமது மருத்துவர்களையும் சிகிச்சை முறையையும் பாராட்டி எழுதியும் இருக்கிறார்

இப்படி மேல்நாட்டார் நம்மை மதிக்கும் படியும் காரியம் நடக்கிறது. நம்மை நாமே வெறுக்கும் படியும் சில நேரத்தில் காரியம் நடக்கிறது. இதற்குக் காரணமாய் இருக்கிற திறமைக் குறைவு, சூழ்நிலைக்



கோளாறு, ஒத்துழைப்பு இன்மை இன்னும் ஒருவரைப் பற்றி இன்னொருவர் கொள்கிற வெறுப்பு அதன் பேரில் ஒருவருக் கொருவர் புகாரைக் கிளப்பி விடுவதிலேயே அக்கறை காட்டுகின்ற தன்மை இவற்றை எல்லாம் நீக்குவதற்கு இந்தத் துறையினர் நிச்சயமாக கவனம் செலுத்தி நல்ல பணி ஆற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், சென்னையில் உள்ள மருத்துவ மனையில் டெத் சர்டிபிகேட் கொடுப்பதற்காக ஒரு டாக்டரை தனியாக நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஸ்பெஷல் போஸ்ட் ஒன்று போட்டு யாரையும் நியமிக்கவில்லை. வேறு துறையில் இருப்பவர்கள் அது போன்ற ட்யூட்டியைக் கவனித்துக் கொண்டால் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கிற டாக்டர்களுக்கு அதில் கவனம் செலுத்த உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் ரிலீவிங் டூட்டி என்ற முறையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புதிதாக இதற்கென்று யாரையும் நியமிக்கவில்லை. இது சரியானதுதானா என்பது வேறு விஷயம். Mutual assistance to each other in the same institution என்ற முறையில் போடப்பட்ட பணி என்று கூறப்படினும், இதற்கு மறுப்பு தெரிவிக்கிற கருத்தும் இருக்கிறது, நேரிடையாக சிகிச்சை வழங்காத ஒரு டாக்டர் டெத் சர்டிபிகேட் கொடுப்பது முறையானதும் அல்ல, சரியானதும் அல்ல என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி கருத்து மாறுபாடு டாக்டர்களிடையே இருந்து வருகிறது. ஒரு ஹாண்டே இருந்தால் நான் அந்த ஹாண்டே சொல்வதை கேட்டுச் செய்யலாம். இரண்டு ஹாண்டேக்கள் என்று வருகிறபோது—இரண்டு பேர்களிடத்திலும் நாங்கள் எங்கள் முடிவைச் சொல்ல முடியாமல் அலுவலகத்திற்கு வருகிற நிலைமையும் ஏற்படுகிறது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : இரண்டு ஹாண்டே சேர்ந்தால் சண்டை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சண்டைக்கு ஒரு ஹாண்டேயே போதும். நிபுணர்கள் இப்படி இரண்டு வேறுபட்ட கருத்துக்களைச் சொல்வதனால்தான் உடனடியாக நிர்வாகத்தில் உள்ள எங்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அதனால் தாமதம் ஏற்படுகிறது. இவையெல்லாம் அவ்வப்போது ஆராய்ந்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று அதில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தை மிகச் செம்மையான முறையில் நான் நம்முடைய மாநிலத்தில் நிறைவேற்றி வருகிற காரணத்தினால் ஏதாவது பயன் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை நாம் பார்க்க வேண்டும். 1941-ல் இருந்து 1951- வரை அகில இந்தியாவில் மொத்தமாக மக்கள் பிறப்பு என்பது ஆயிரத்திற்கு 40 என்ற விகிதம் இருந்தது. அதாவது 39.9 சத விகிதம் என்று வரும். அப்போது இறப்புக் கணக்கு ஏறக்குறைய 27 என்ற அளவுக்கு இருந்தது.

1951 முதல் 1961-வரை அகில இந்திய அடிப்படையில் பார்த்தால் பிறப்பு ஆயிரத்துக்கு 41·7 ஆகும். தமிழ்நாட்டில் மட்டும் 34·9 அல்லது 35 பேர்தான். ஆயிரத்துக்கு 6 பேர் அளவுக்குக் குறைந்திருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1975 மார்ச் 13

1961-இல் இருந்து 1971-வரை ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி இன்றைய தினம் தமிழ்நாட்டில் ஆயிரத்துக்கு 30 பிறப்புக்கள்தான். அகில இந்தியாவில் ஆயிரத்துக்கு 37.6 அளவில் உள்ளது. 7.5 numbers more than the Tamil Nadu figures for 1000.

ஒவ்வொரு மாநிலத்திலும் குழந்தைகள் பிறக்கிற கணக்கை மொத்தமாக எடுத்துக் கொண்டு பார்த்தால், மகாராஷ்டிராவில் 32, கேரளாவில் 31 என்றெல்லாம் வரலாம்—மொத்தமாகப் பிற மாநிலங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டைப் பார்க்கின்றபோது நம்முடைய எண்ணிக்கை ஆயிரத்துக்கு 30 தான். தமிழ்நாட்டில் நாம் இந்த அளவுக்குக் குடும்ப நலத் துறையில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றால்—அங்கங்கே ஒன்றிரண்டு குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். அதை ஏற்றுக் கொண்டு தான் சொல்கிறேன். 1971-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் நான்கு கோடியே 15 இலட்சம் மக்கள் இருந்தார்கள் என்றால் இப்போது நான்கு கோடியே 25 இலட்சமாக இருக்கும். அதாவது அவற்றை எல்லாம் நாம் செய்யாவிட்டால் நான்கு கோடியே முப்பத்தைந்து இலட்சமாகவும் நாற்பத்தைந்து இலட்சமாகவும் இருக்கும் என்றால் நாம் குடும்ப நலத்துறையில் இவ்வளவு செம்மையாகச் செயல்பட்டதன் காரணமாகப் பத்து இருபது இலட்சத்தைக் குறைத்திருக்கிறோம் என்பதை யாரும் உணரலாம்.

டில்லி அரசு இந்த அளவுக்கு ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதை மதிக்கிற மனப்பான்மையைக் காட்டுகிற அளவுக்குகூட இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவில்லை. டில்லி அரசிலே இருக்கும் அமைச்சர்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இதிலே மக்கள் பிறப்பு விகிதத்தினுடைய வேகம் குறைந்திருக்கும் அளவைப் பார்த்தால் அந்த எண்ணிக்கை ஏதோ 1—2 தான் குறைந்து போய் இருக்கிறது என்று கருதுவதற்கு இல்லை. தமிழ்நாட்டில் 10,20 இலட்சம் பேர் பிறப்பது குறைந்தது என்றால் அது சாதாரணமல்ல. மற்றொரு மாநிலத்தில் 5 இலட்சம் பேர் குறைந்து இருக்கலாம். இன்னொரு மாநிலத்தில் 2 இலட்சம் குறைந்து இருக்கலாம். மொத்தத்தில் 10 இலட்சம் பேர் அதிகம் குறைந்த மாநிலத்தில் ஒரு—பாராளுமன்ற இடம் குறையாதா? இந்தப் பிரச்சினையை டில்லி அரசு புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இந்தியாவிலேயே குடும்ப நலத்திட்டம் வெற்றி பெற வேண்டுமானால் எந்த ஒரு மாநிலமும்—அது மராட்டிய மாநிலமாக இருந்தாலும், கேரள மாநிலமாக இருந்தாலும், பஞ்சாப் மாநிலமாக இருந்தாலும் இந்தத் திட்டத்திலே அக்கறையோடு ஈடுபட்டுச் செயல்பட வேண்டும் என்றால் இந்தத் திட்டத்திலே அக்கறையோடு ஈடுபட்ட அந்த மாநிலங்கள் தமது மக்களுடைய எண்ணிக்கை குறைந்துபோய் விட்டால் என்ன செய்வது என்று அஞ்சுகின்ற நிலைமை ஏற்படுவதற்கு இடம் தராமல் சட்டப்படி பாதுகாப்பு தருவதுதான் மத்திய அரசினுடைய கொள்கையாக இருக்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதுபோல் அகில இந்தியாவிலேயே 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு அடிப்படையில் நாடாளுமன்றத்தில் எவ்வளவு இடங்கள் ஒரு மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டனவோ அந்த இடங்களைக் குறைப்பது இல்லை என்றுவது டில்லி அரசு உறுதி அளிக்க முன் வர வேண்டும். அப்படி



1975 மார்ச் 13] [திரு. க. அன்பழகன்]

இல்லையென்றால் ஒவ்வொரு மாநிலமும் ஆண்டுதோறும் செய்து வரும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு இயக்கத்தின் மூலமாக எந்த அளவுக்கு அந்த வட்டாரத்திலே மக்கள் தொகைப் பெருக்கம் குறைந்து இருக்கிறதோ அதை ஈடு கட்டும் அளவுக்கு proportional representation for the effect of Family Planning என்ற முறையில் வழங்கவேண்டும். இது தேர்தல் proportional repre-sentation முறை அல்ல; proportional representation to compensate the result of Family planning activity in the respective state என்ற முறையில் டில்லி அரசு ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ளும் நிலைமை வந்தால் அவர்கள் தரும் இன்செண்டிவ் ஊக்கத் தொகை மிகக் குறைந்து போனாலும் பரவாயில்லை. தமிழக அரசு சென்ற ஆண்டு 1 கோடி ரூபாய் குடும்ப நலத் திட்டத்திற்காக நம்முடைய அரசு நிதியிலிருந்து செலவழித்து இருக்கிறது. இந்த ஆண்டு 60 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். தலப்பட்ட அமைப்புகளின் மூலமாகவும் மாநகராட்சியின் மூலமாகவும் நடைபெறுகிற இந்தத் திட்டம் மிக அக்கறையோடு செயல்படுகிற அந்த அளவுக்கு தமிழ்நாடு மக்களிடையே கருத்தோட்டத்தை உருவாக்கி இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சுயமரியாதை இயக்கத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் திருமணங்களை நடத்தி வைக்கும்போதெல்லாம் குடும்பம் என்பது அளவோடு 'குழந்தைகளைப் பெற்று அவர்கள் நிம்மதியாக வாழும் முறையாக இருக்க வேண்டுமே ஒழிய ஆண்டவன் பெயரைச் சொல்லி நினைத்தபடி குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு இருக்கக்கூடாது என்று சொன்னதை இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். அதற்கு மேல் அவர்கள் சொன்ன கருத்தையெல்லாம் இங்கே சொல்ல தேவை இல்லை. அப்படியெல்லாம் சொல்லி உணர்ச்சிகளை ஊட்டியதன் விளைவாகத்தான் அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் சொல்லும்போது காது கொடுத்தாவது கேட்கிறார்கள். An atmosphere is there to receive the idea of Family Planning even in villages என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கிறது. ஆனால், அவர்களுக்கு முடிவான கருத்து உருவாகவில்லை. கலவிக்ஷனோடு மன உறுதியோடு அறுவைச் சிகிச்சை செய்துக் கொள்ள முன் வருவது இல்லை. அதற்குத் தான் இந்த ஊக்கத் தொகை தேவைப்படுகிறது. அதை மத்திய அரசு பெருமளவு குறைத்து இருப்பது வருந்தத்தக்கது. அகில இந்திய புள்ளி விவரத்தின்படி பார்த்தால், அகில இந்திய குடும்ப நலத் திட்டத்தினுடைய எல்லா வகையிலும் ஆன மொத்தச் செலவுத் தொகையை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், ஒரு குழந்தை பிறப்பதைத் தடுப்பதற்கு prevention of a birth of a child சராசரியில் ரூபாய் 200–ஆகி இருக்கிறது. இது பெரும் தொகை அல்ல என்று அகில இந்தியப் பொருளாதார நிபுணர்கள் அரசாங்கத்தின் சார்பாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு குழந்தை பிறந்துவிட்டால் அதைக் காப்பாற்ற அந்தக் குடும்பமும் அரசுமாக ஓராண்டில் குறைந்தது 600 ரூபாய் செலவிடுகிறது. ஆகவே ஒரு குழந்தை பிறப்பைத் தடுக்க—சராசரியாக 200 ரூபாய் அளவு செல

வானாலும் கூடப் பரவாயில்லை. ஒரு குழந்தையை ஓராண்டு காப்பாற்றவே 600 ரூபாய் செலவாகிறது. தொடர்ந்து காப்பாற்ற ஆண்டுக்கு ஆண்டு செலவு அதிகமாகும். எனவே, பிறப்பைத் தடுப்பதற்கு 200 ரூபாய் செலவழிக்கப்பட்டாலும் அது லாபகரமான காரியமே என்று குறிப்பிட்டு இருக்கும்போது 100 ரூபாய் அளவு கூட குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஊக்கத் தொகை கொடுக்க முன்வராமல் இருக்கிறது. மத்திய அரசு 35 ரூபாய் தான் என்றால் தமிழக அரசு மேலும் 35 ரூபாய் கொடுக்கிறது. மேலும் 50, 60 ரூபாய் பொது மக்களிடமிருந்தும், லிஸ்டு ஆப் சர்வீஸ், ரோட்டரி சங்கம் போன்றவற்றின் துணையோடும் இந்தத் திட்டத்தை நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களை ஒன்று கேட்டுக் கொள்வேன். குறைபாடுகள் இருந்தால் எங்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். மன்னிப்புக்கூட கேட்கத் தயார், எப்படியாவது இந்தத் திட்டம் நிறைவேறுவதுதான் எதிர்காலத் தமிழகத்திற்கும் நாட்டுக்கும் நல்லது. ஆகவே, எல்லாவகையிலும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இவ்வளவு மிக முக்கியமான இந்த மானிய விவாதத்தில் சுகாதாரத் துறை, மருத்துவத் துறை என்று இயங்கும் அந்தப் பகுதிகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு மட்டத்தில் பணிகள் நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பணி வளர வேண்டும் என்பதை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தாலுக்கா மருத்துவ மனைகள் 20 படுக்கைகள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாக இயங்கி வரும் இடத்தில், 90 படுக்கைகள் அளவுக்கு உயர்த்த வேண்டும், அதற்குரிய நிதி ஒதுக்க வேண்டும் என்று தமிழக அரசு கொள்கை அளவில், ஐந்தாண்டுக்கான வளர்ச்சிப் பணி என்ற முறையில் செய்ய வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

மாவட்ட அளவில் சில மருத்துவ மனைகளைப் புதிதாக ஆரம்பிக்கும் போது நிறைய படுக்கை வசதிகளை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. தருமபுரி போன்ற இடங்களிலும் வட்ட மருத்துவ மனையாக இருந்திருந்தால் குறைந்த அளவில் படுக்கை வசதி கொண்டதாகத்தான் இருந்தது. தருமபுரியிலும் மற்ற மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும் 400-க்குக் குறையாமல் 600 படுக்கைகள் உள்ள அளவுக்கு உயர்த்த வேண்டும் என்னும் கொள்கையுடன் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரையில், ஒரு பிளாக்குக்கு இரண்டு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டது. மத்திய அரசு இதற்கென (Task Force) டாக்ஸ் ஃபோர்ஸ் ஒன்றை ஏற்படுத்தியது. அதற்கு மோகன் நாரியா தலைவராக இருந்தார். இப்பொழுது ராஜிநாமாச் செய்துவிட்டார். அவர் தலைவராக இருந்த அந்தக் குழு கிராமத்திற்கு மருத்துவ வசதியைக் கொண்டு செல்ல வேண்டும் என்றும், அதற்கு பேர்ஃபுட் டாக்டர்களை (Bare Foot Doctors) ஏற்படுத்த வேண்டும் என்று கூறியது.





50, 60 அலோபதி முதலான மற்ற துறை மருந்துகளையும் அந்த மருத்துவர்களிடம் வழங்கினால் போதும்; இந்த நோய்க்கு இந்த மருந்து என்று லேபிளைப் பார்த்து நோயாளிகளுக்கு கொடுத்து விடுவார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அப்போது நான் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் கேரளம், கர்நாடகம், ஆந்திரத்தைப் பொறுத்த வரையிலும்கூட நீங்கள் சொல்கிற மருத்துவ முறையைப் பொது மக்கள் வரவேற்கமாட்டார்கள் என்று சொன்னேன். மருத்துவர்கள் என்னும் பெயரில் பிராட்ஸ் (Frauds) இருக்கிறார்கள். போலி டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். போலி டாக்டர் என்று தெரிந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது நடைமுறையில் இருக்கிறது. ஒன்றிரண்டு பேர் மீது வழக்குப் போடப்பட்டிருக்கின்றது. செய்த குற்றத்திற்கு அவர்கள் தண்டனை பெறுவார்கள்.

ஏறத்தாழ பத்தாயிரம் எம். பி. பி. எஸ். படித்த டாக்டர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களில் ஏறத்தாழ ஐயாயிரம் பேர் அரசாங்கத்திலேயே பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 1,300 பேர் வேலைக்குக் காத்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர, நம்முடைய பெரியவர் மணலி அவர்கள் சொன்னதைப்போல், சித்த மருத்துவ முறையில் ஓர் ஆண்டுக்கு 30, 40 பேர் தேறி வருகிறார்கள். இவர்களைத் தவிர, ஏற்கனவே பரம்பரை வைத்திய முறையில் சித்த மருத்துவம் செய்து, அரசில் பதிவு செய்து கொண்ட ஆர். ஐ. எம். பி. டாக்டர்கள் இருக்கிறார்கள். பத்தாண்டு பணி செய்து பயிற்சி பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களும் பதிவு செய்து கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்கள். இவ்வளவு பேர் இருக்கும்போது நீங்கள் புதிதாக bare foot doctors கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை; அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்றேன். ஆனால் கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதி பெருக வேண்டுமானால், அந்தப் பணி ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகத்தான் நடைபெற வேண்டும் என்றும் கூறினேன்.

One Primary Health Centre is suggested as an umbrella for the whole Panchayat Union area—a single umbrella is not sufficient, you provide another umbrella for every Panchayat Union at least where the population is more than lakh என்று எடுத்துச் சொன்னேன்.

இரண்டாவது சுகாதார நிலையம் ஏற்படுத்தி, இப்பொழுது இருக்கிற கிளை நிலையங்களில் ஒரு பகுதியை அந்த மெயின் சென்டரோடு இணைத்து, அங்கும் ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர் ஆகியோரை நியமித்து இப்பணியை நிறைவேற்ற வேண்டும் என்றோம். ஆனால் அவர்கள் Second Primary Health Centre cannot be accepted by the centre as resources are not available என்று எடுத்துச் சொன்னார்கள். பேர் ஃபுட் டாக்டர் என்று சொல்லி கிராமத்திற்கு அனுப்பும்போது அவர்கள் ஏதோ தகுதி பெற்றுவிட்ட டாக்டர்கள் என்ற எண்ணம் ஏற்பட்டுவிடக்கூடும். பேர் ஃபுட் டாக்டர் என்றாலும் பரவாயில்லை; ஆனால், பேர் ஹெட் டாக்டரும் வரலாம் என்ற நிலைமை வரக் கூடாது.

அகில இந்தியாவிலே அலோபதி படிப்பு படிக்காமலேயேகூட இப்படி அலோபதி வைத்தியர்களாகவும் பதிவு செய்வவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகள் உள்ளன.

தமிழ் நாடு அரசு அதை ஏற்றுக்கொள்ளாது. ஏதோ நாட்டு வைத்தியத்திற்கு ஏற்கனவே ஏற்றப்பட்டுவிட்ட முறைக்குப் போதுமான படிப்பு வசதியில்லாத காரணத்தால், நாம் அதைச் செய்யத் தவறிய குறைக்காக அவர்களைப் பதிவு செய்யலாமே தவிர, ஓமியோபதி கல்லூரியை ஏற்கனவே நாம் ஏற்படுத்தாத காரணத்தாலே பதிவு செய்யலாமே தவிர, அல்லோபதியிலே யாரும் படிக்காமலேயே, பதிவு செய்வது இந்த நாட்டுக்குத் தேவையல்ல. மற்றைய மாநிலங்களிலே அந்த நிலை இருக்கிறதென்றால், அது அரசியலோடு சேர்ந்துள்ளது.

(பிற்பகல் 2–00)

அகில இந்திய அளவில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் இரண்டாவது ஆரம்பச் சுகாதார நிலையத்தைத் துவக்குகின்ற பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாத நிலையிலே ஒவ்வொரு நிலையத்திலும் குடும்ப நலப்பிரிவை ஏற்படுத்த ரூ. 1,10,000 ஒதுக்கவும் மத்திய அரசுக்கு மனமில்லை, அதற்கு நிதியில்லை யென்று கூறி விட்டனர். ஒவ்வொரு ஆண்டிற்கும் நூறு, ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் தேர்ந்தெடுத்து அதிக மக்கள் தொகையுள்ள ஒன்றியங்களாக உள்ள இடங்களைப் பார்த்து அங்கு பணியாற்றும் இரண்டு டாக்டருடன் மூன்றாவது டாக்டரை to facilitate better services to the rural folk என்னும் நோக்குடன். இந்த ஆண்டு முதல் நியமிக்கலாம் என தமிழக அரசு முன்வந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனையோ மாவட்ட, ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்றிருக்கிறது. மருந்தகங்கள் வேறு, மருத்துவ மனைகள் வேறு. எந்தெந்த மருந்தகங்களை அரசு ஏற்று நடத்துகிறது என்பதெல்லாம் பட்டியலில் தரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு மருந்தகத்தையாவது, ஜில்லா போர்டால் முன்னர் நடத்தப்பட்ட மருந்தகத்தை, எடுத்து நடத்த வேண்டுமென்ற அடிப்படையில் நாம் எடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குருசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், ஆண்டிப்பட்டியிலே ஒரு மருந்தகத்தை அரசு மேற்கொண்டதைப்போல், கட்டிட வசதியும் போதுமான நிலமும் சொந்தமாக இருக்குமானால், அந்த மருந்தகங்களை நாம் எடுத்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கடுத்து, இங்கே வெட்டுத் தீர்மானங்களின் மூலமாக பல பிரச்னைகளை எழுப்பியிருக்கிறார்கள். அதிலே ஒன்று, கிராமங்களிலேயுள்ள தாய்மார்களுக்குத் தரப்படுகிற மருந்துகள், குழந்தைகளுக்குத் தரப்படுகிற உணவுகள் இவைகளெல்லாம்கூடத் தரமுள்ளவையாக இருக்க வேண்டும், சுகாதார முறைப்படி இருக்க வேண்டுமென்பதாகும் பெரும்பாலும், இந்த உணவு தருகிற பொறுப்பை 'சப் சென்டர்களுக்கு அளித்திருக்கிறோம், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படுகிறது. மருத்துவர்களுடைய மேற்பார்வையில் செய்யப்படுவதாகத்தான் கொள்கை அளவிலே ஒப்புக்



கொள்ளப்பட்டிருக்கிறது. மருத்துவர் மேற் பார்வையிலே, உதவி செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கேர் நிறுவனம் உதவி அளித்து, தாய்மார்களுக்கு உணவு வழங்குகிறார்கள். மருந்து வழங்குகிற அளவு—கர்ப்பவதிகளுக்கு குழந்தைப் பேற்றுக்கு முன்னாலே 4 திங்கள், குழந்தைப் பெற்றெடுத்த பின்னாலே 6 திங்கள் பொறுப்பதைப் பற்றி—புள்ளி விவரம் வைத்திருக்கிறேன். புள்ளி விவரத்தை எடுத்துச் சொல்வதானால் இன்னும் நீண்ட நேரமாகும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்மேல் நம்பிக்கை இருக்கும். புள்ளி விவரமில்லாமல் நான் பேச மாட்டேன். உங்களுக்கு என் மேல் நம்பிக்கை இருக்கும் என்ற முறையில் தான் கருத்துக்களை மட்டும் சொல்கிறேன். கடந்த 4 ஆண்டு காலத்திலே, தாய்மார்களுக்குச் சத்து மாத்திரைகள், விட்டமின் பில்ஸ், ஃபாலிக் ஆசிட் ஆகியவை வழங்கப்படுவது, பரவலாக்கப்பட்டிருக்கின்றன, அதிகமாக்கப்பட்டிருக்கின்றன.

டிரிபிள் ஆண்டிஜன் எந்தப் பகுதியிலும் சரிவரக் கொடுக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே சில இடங்களில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அது படிப்படியாக ஆண்டுதோறும் எல்லா இடங்களுக்கும் பரப்பப்படும். ஒவ்வொரு ஆண்டும் இன்னும் 10 சுகாதார நிலையங்களில் இத் திட்டம் செயல்படும் என்ற அளவில் இது வளர்ந்து கொண்டு வருகிறது, பரவிக் கொண்டு வருகிறது.

மேலும் 20 இடங்களிலே, ஆரம்பச் சுகாதார நிலையமுள்ள இடங்களில், உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட வேண்டுமென்ற அளவில், இன்னும் 20 இடங்களிலே குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்கு வரவிருக்கிறது. அதற்காக 20 இடங்களில் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை நியமிக்கவும் வேறு சில பணிகளை ஆரம்பச் சுகாதார நிலையத்திலே நடை முறைப்படுத்தவும், புதிய பணிகளுக்கு ஆட்களை நியமிக்கவும் அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது.

மிகப் பெரிய மருத்துவ மனைகளிலே போதுமான சர்வீஸ் வசதியில்லையென்று சொல்லப்பட்டது. கே. ஜி. ஆஸ்பிட்டலில் போதுமான டாக்டர்கள் இல்லை. ஆகையால், அங்கே போகிற நோயாளிகளைச் சரியாகக் கவனிக்கவில்லையென்று சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு குறிப்பிடம் சொன்னார்கள். மனு போடப்பட்டிருக்கிறது, பதில் வரவில்லையென்று சொன்னார்கள். வழக்கு போடப் போவதாகக்கூட ஒரு செய்தியை நான் கேள்விப்பட்டேன். அது எதுவாக இருந்தாலும் அங்கே இருக்கிற மருத்துவ பணியினுடைய கண்காணிப்பாளராக உள்ள தகுதி படைத்தவரிடமும் விளக்கங்களைக் கேட்கிறோம். நாம் எடுத்த முடிவு தவறு, அல்லது அரசாங்கத்தின் விசாரணையில் சரியான நியாயம் கிடைக்கவில்லை என்றால் காரணம், இது 1970-ம் ஆண்டிலோ, 1971-ம் ஆண்டிலோ நடைபெற்றது என்று சொல்கிறார்கள். ஏற்கனவே உள்ள குறிப்புகளை, உள்ள தகவல்களை வைத்துத்தான் எங்களுக்குப் பதில் தருகிறார்கள். அதை வைத்துக் கொண்டு மேல் நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. அந்தத் தகவல்களுக்கு மேல், நடவடிக்கை எடுக்க, மேலும் ஆராய்ந்து பார்க்க வாய்ப்பிருக்குமானால்

நிச்சயம் அரசு ஆராய்ந்து பார்க்கும் என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். போதுமான டாக்டர்கள் இல்லாத காரணத்தால், வசதி இல்லையென்று சொல்லப்பட்டது. அதற்காக, அந்த மருத்துவமனையில் அரசு ஏப்ரல் 1-ம் தேதி முதல் 13 அசிஸ்டெண்ட் சர்ஜன்களைப் பணியிலமர்த்துவதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருக்கிறது. அப்படி 10 பேருக்கு மேல் புதிதாக நியமிக்கப்படுவார்களானால், அந்த மருத்துவமனை பணி சிறப்பாக நடைபெற வாய்ப்பு ஏற்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலேயுள்ள மருத்துவ மனைகளிலே—மருத்துவக் கல்வி இயக்குநராலே கவனிக்கப்படுகிற மருத்துவ மனைகளில்—அவுட்—பேஷண்ட் டிபார்ட்மெண்டிலும், காஷுவலிட்டி டிபார்ட்மெண்டிலும் நல்ல முறையிலே பணிகள் நடைபெறுவதற்காக, புதிய பணியாளர்கள் என்ற வகையிலே, ஒரு ரீடர் அல்லது ஒரு புரபசர் தலைமையில் 2 பேர் அல்லது 4 பேர் இணைந்து பணியாற்றுமாறும் பலரை வேலையிலே அமர்த்துவதற்காக அரசு கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்ட திட்டம்—இந்த ஆண்டு நடைமுறையிலே வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம் இந்த ஆண்டு மேலும் வசதி கிடைக்கும்.

அதிக நர்சுகளுக்கு வேலை வாய்ப்புத்தர வேண்டும். இப்பொழுது நர்சுகளுக்கு வேலை கிடைக்கவில்லை. பல மருத்துவமனைகளிலே நர்சுகள் அதிகம் தேவையாகும் என்று தெரிவித்தார்கள். ஏற்கனவே ஒவ்வொரு ஆண்டும் புதிதாக வேலை வாய்ப்புத் தருவதைப்போல, இந்த ஆண்டும் ஏறத்தாழ 100 நர்சுகளை, தாலுகா மருத்துவ மனைகளுக்கும், மாவட்ட மருத்துவ மனைகளுக்கும், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கும் புதிதாக நியமிக்கப்பட வேண்டுமென்பதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களும் இந்த ஆண்டு நியமிக்கப்படுவார்களாதலின் அதன் மூலம் மேலும் சிறந்த பணி நடைபெறும்.

நாகர்கோவில் அல்லது கன்னியாகுமரியில் ஏற்கனவே வேலையில் சேர்க்கப்பட்ட சிலரை ரெகுலரைஸ் செய்ய வேண்டுமென்று திரு லேம்ப் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது பரிசீலனையிலிருக்கிறது. அதிலே ஒரு குறைபாடு இருக்கிறது. மினிமம் குவாலிபிகேஷன் அல்லது வயது இது இரண்டிலே ஏதாவதொன்றில் குறைபாடு இருக்குமானால் அதனை நிவர்த்திக்கலாம். ஆனால், மினிமம் தகுதியும் இல்லாமல், வயது வரம்பையும் மீறி இருக்குமானால், அவர்களுடைய கல்வித் தகுதியைவிட உயர்ந்த பதவியிலே நிலை பெறச் செய்வது என்பது கடினம். எனவே, இன்றைக்குச் சட்டப்படி பிரச்னை ஏற்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப்படுகிறது. முடிவை இப்பொழுது நான் சொல்வதற்கில்லை. ஆகவே, எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சட்டப்படி பார்த்து, அவர்களுடைய நல்வாழ்வுக்காக, வேலையிலே நீடிக்கச் செய்வதற்கு அரசாங்கம் இயன்ற வகையில் முயற்சிக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



நல்வாழ்வுத் துறையிலே பணியாற்றுகிற ஊழியர்கள், எந்த எந்த வகையிலே இருந்தாலும் சரி, அவர்கள் மலேரியா ஒர்க்கர்ஸ் ஆக இருந்தாலும், ஃபைலேரியா ஒர்க்கர்ஸ் ஆக இருந்தாலும் அவர்களெல்லாம் ஒரு குறிப்பிட்ட முறைக்கு உட்பட்டு ரெகுலரைஸ் செய்யப்படுவதற்கு ஆண்டுதோறும் பட்டியலின்படி முறைபடுத்தப்படுகிறது, அதற்கான பணிகளை செய்வதற்கென்றே ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அதன் மூலம் அவர்கள் வேலை நிரந்தரமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது, இன்ஜக்ஷன் போடும் போது ஸ்பிரிட் தடவுவதற்குப் பதில் வெந்நீர் தடவுகிறார்கள் என்று கூறினார். சுப்பிரமணியம் அவர்கள் கூறுவதைப்போல், இன்ஜக்ஷன் போடுவதற்கு முன் ஸ்பிரிட்டுக்குப் பதில் வெந்நீர் தடவினால் ஊசி போடும் போது வலி தெரியும். ஸ்பிரிட் தடவினால் வலி தெரியாது. ஸ்பிரிட் தடவுவது இரு காரணங்களுக்காக. ஒன்று, நோய்க் கிருமிகள் இருக்குமானால், அந்த நோய்க் கிருமிகள், ஊசி மூலமாக உள்ளே போய் விடக்கூடாது என்பதற்காக. மற்றொன்று, வலி அதிகம் தெரியாமலிருப்பதற்காக. ஸ்பிரிட் தடவும்போது ஜில் என்று இருக்கும் போது ஊசி போடுவதுதான் முறை. ஆகவே வெந்நீர் தடவிவிட்டு யாராவது ஊசி போடுவார்களானால், அது குற்றச்சாட்டுக்கு உரியதாக இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க முடியும். அப்படியெல்லாம் தவறு நடக்க வாய்ப்பு அதிகம் கிடையாது.

கோவை தலைமை மருத்துவ மனையில் புற்று நோய் கோபால்ட் தெராப்பி இல்லையென்று சொன்னார்கள். அங்கு கோபால்ட் தெராப்பி இல்லையென்று சொன்னாலும், எக்ஸ்ரே தெராப்பியிருக்கிறது. இன்னொரு மருத்துவமனை அங்கேயே, குப்புசாமி நாயுடு மருத்துவ மனையினர் அரசு நிதி உதவி பெறுகிறார்கள். இந்த மருத்துவ வசதியைத் தருகிறார்கள். அவர்கள் கான்சர் சிகிச்சைக்காகத் தனி ஏற்பாட்டையும் தனி கட்டிடத்தையும் அமைத்துள்ளார்கள். பாரின் எக்சேஞ்சு அவர்களுக்கு, தனிப்பட்ட நிறுவனம் என்ற முறையிலே உடனே கிடைத்துவிட வாய்ப்பு இருக்கிறது. நாம் கேட்டால் உடனே கிடைப்பதில்லை.

எழும்பூரிலுள்ள மெட்டர்னிட்டி ஹாஸ்பிட்டலில் கோபால்ட் கருவி வைப்பதற்காக அனுமதியளித்த பின்னாலே, அதற்கென கட்டிடம் இல்லையென்ற காரணத்தாலே, அது நிறுவப்படாமல், இப்பொழுது விரைவாக கட்டிடம் கட்டி அமைக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது ;

திரு ஜப்பார் அவர்கள் ஸ்டான்லி மருத்துவமனையிலே கோபால்ட் தெராப்பி வேண்டுமென்று கேட்டார்கள். அங்கே ஒரு கோபால்டு தெராப்பியை அமைப்பது அவ்வளவு எளிதல்ல, திரு ஜப்பாரையோ அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களையோ அது இப்போது இருக்கிற இடத்திற்கு அனுப்புவது எனக்கு மிகச் சுலபமாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போது அடையாறு கேன்ஸர் இன்ஸ்டிட்யூட்டில் அது இருக்கிறது ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கிறது, மெட்டர்னிட்டி ஆஸ்பிட்டலில் ஏற்

படுத்த இருக்கிறோம், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா மருத்துவமனையிலே—அந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கான டெண்டர்கள் கேட்டிருக்கிறோம். அதிகமான தொகை கேட்கிறார்கள் என்ற நிலைமை இருப்பதால் கட்டடங்கள் உடனே கட்டப்படவில்லை—விரைவிலே கட்டடங்கள் கட்டப்பட்டு அங்கேயும் இதை ஏற்படுத்த வேண்டியதற்கான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் மதுரையில் ஒன்று வர இருக்கிறது, தஞ்சாவூரிலே தேவை என்கிறார்கள். ஆகவே வட்டாரத் தேவையைக் கருத்தில் கொண்டு அந்த முறையிலே செயல்பட்டு வருகிறோம். எப்படியிருந்தாலும் மேல்நாடுகளிலே கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்திக்கொள்ளத்தான் வேண்டும் என்னும் நிலையில் வெளிநாட்டுச் செலவாணி வேறு தேவைப்படுகிறது, நம்மிடமோ பொருளாதார வசதியில்லை. இவ்வளவு நிலைமைகள் இருந்தாலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொத்துநோய் மருத்துவமனை தென் சென்னைக்குத் தேவையென்று இங்கே எடுத்துச்சொல்லப்பட்டது. மற்ற நோய்களுக்குத் தென்சென்னையில் மருத்துவ மனைகள் இருக்கின்றன. குடியிருப்பு வட்டாரம் அதிகமாக வளரக்கூடாத இடத்திலே அது அமைக்கப்பட வேண்டும். தென் சென்னையில்தான் அமைக்கப்பட வேண்டுமென்று கருதினால் குடியிருப்பு வட்டாரம் இல்லாத இடம், மக்கள் நெருக்கடி இல்லாத இடம் தேவை அதை தேடிச் செல்லவேண்டும். தொத்து நோய் மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் எப்பொழுதும் நிறைந்திருக்கும் நிலை என்பது கிடையாது. எந்தக் கட்டத்திலேயும் நோயாளிகள் வந்தால் உடனுக்குடன் சிகிச்சை பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. தொத்துநோய்களைப் பொறுத்தவரையில் காலரா போன்றவை பரவாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய அம்மை நோயைப் பொறுத்தவரையிலும்கூட நம்முடைய மாநிலத்திலே அதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்து இருக்கிறது. பெரியம்மை நோயால் பீகார் மாநிலத்திலே கடந்த ஆண்டிலே எத்தனையோ ஆயிரம் பேர்கள் பாதிக்கப்பட்டார்கள், ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நான்கைந்து பேர்கள்தான் பாதிக்கப்பட்டார்கள் என்று புள்ளி விவரம் பார்க்கிற நேரத்திலே நமக்கு ஆறுதல் ஏற்படுகிறது.

தொத்துநோய் மருத்துவமனையைவிடப் பொதுவாக சிகிச்சை தரக்கூடிய நல்ல மருத்துவ மனைகள் எல்லாம் ஜெனரல் ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, கீழ்பாக்கம் ஆஸ்பத்திரி ஆகியவை எல்லாம் போக்குவரத்து நெருக்கடி இருக்கிற இடங்களிலே இருக்கின்றன. போக்குவரத்து நெருக்கடி இல்லாத சென்னை மாநகரின் எல்லைப் பகுதிகளிலே இனி வருகின்ற மருத்துவ மனைகள் அமைய வேண்டுமென்ற கொள்கையை ஏற்று அதன்படி, அதாவது தென்மேற்குக் கோடியிலே கலைஞர் கருணாநிதி நகரிலே ஒரு மருத்துவ மனை 20 இலட்சம் ரூபாய் செலவில் வர இருக்கிறது. அதோடு ஒட்டி இ.எஸ்.ஐ மருத்துவமனை ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் வர இருக்கிறது. அறிஞர் அண்ணா நகரிலே ஒரு மருத்துவமனை கட்டவேண்டுமென்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தண்டையார் பேட்டைக்கும் திருவொற்றியூருக்கும் இடையே உள்ள மாநாகராட்சிக்குச்



சொந்தமான ஒரு இடத்தில் ஒரு மருத்துவமனைக்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது, 24 இலட்சம் ரூபாய் செலவாகும். பெரம்பூரிலே இருக்கிற ஒரு இடத்தில் மாதவரத்திற்குப் பக்கத்திலே மருத்துவமனை கட்டுவதற்காக நில ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறோம். இப்படி பெரி பெரல் மருத்துவமனைகள் என்ற முறையிலே 50 படுக்கைகள் முதல் நூறுவரை இருக்கக்கூடியவை அமைக்கப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் இங்கே எம்.எல்.ஏ. வாக வந்ததில் இருந்து பெரிபெரல் ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இருக்கிறேன். எதிர்க் கட்சிக்காரர்களின் தொகுதியில் இல்லாமல் சீப் மினிஸ்டர் தொகுதியில் ஆரம்பிக்கிறீர்கள், ஏன் எதிர்க் கட்சிக்காரர்களின் தொகுதியில் ஆரம்பிக்கக் கூடாது?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : சுருக்கமாகச் சொன்னால் அம்மையார் அவர்கள் தொகுதியை மாற்றிக்கொள்ளலாம், அம்மையார் பெரம்பூருக்கு வருவதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. தென் சென்னை என்று வருகிறபோது அதிகமான மக்களுக்குள்ள தேனாம்பேட்டை பகுதியை ஒட்டி சைதாப்பேட்டை அருகில் ஒரு இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நிதி வசதி கிடைக்கிறபோது செய்வோம்.

தென்சென்னையைப் பொறுத்தவரையில் அடையாறு வி.எச்.எஸ். மருத்துவமனை இருக்கிறது. அங்கிருந்து மயிலாப்பூருக்குள் நுழைகிறபோது ஆந்திர மகிளசபா மருத்துவமனை இருக்கிறது, அதையும் கொஞ்சம் தாண்டி வந்தால் ராயப்பேட்டை மருத்துவமனையும் இடையிலே கல்யாணி ஆஸ்பத்திரி,—அவர்கள் வேண்டுமானால் சொல்லலாம், கல்யாணி ஆஸ்பத்திரி பிரசவத்திற்குத்தானே என்று— ஆனால் இப்படி பெரிய பெரிய தனியார் மருத்துவமனைகளும் இருக்கின்றன. சைதாப்பேட்டையிலே கட்டுகிறதை அது கலைஞர் கருணாநிதி தொகுதி என்று சொல்லிவிடக் கூடும்; ஆகவே நான் அந்தத் தொகுதியில் வராமல் பக்கத்தில் வேறு இடம் தேடிக் கொள்கிறேன்—இடம் கிடைக்கிற நேரத்திலே நிதி வசதி இருந்தால் செய்யலாம். கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானக் கருத்துக்களை நான் கூர்ந்து நோக்கியிருக்கிறேன். என்றால் அவற்றிற்குப் பதில் சொல்ல முடியும். வெட்டுத் தீர்மானக் கருத்துக்களை பரிசீலித்து இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் என்ன என்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ அதை எடுப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்த மருத்துவத்தைப்பற்றி பெரியவர் மணலி அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

திரு. என். மருதாசலம் : கோவை பெரிய நகரம். அங்கே ஒரே ஒரு மருத்துவமனை தான் இருக்கிறது. மேற்குப் பகுதியிலே ஒரு மருத்துவமனையைக் கட்டினால் நல்லதாக இருக்குமே, அதைக் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவமனை ஒவ்வொரு தெருவிலும் இருந்தாலும் மக்களுக்கு வசதியாக இருக்கும். கோவை மருத்துவ மனை வளர்ச்சிக்காக கடந்த நான்காண்டுகளாகப் பல லட்சம் ரூபாய் வரையில் செலவிடப்பட்டிருக்கிறது. காரணம், மெடிக்கல் கவுன்சில் விதிகளின்படிச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். கல்லூரி வளர்ச்சிக்குப் புதிய செலவுகள் இருக்கின்றன. அகில இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு ஒப்புக் கொள்ளவேண்டும், இப்போது ஒப்புக் கொண்டுவிட்டார்கள். இருந்தாலும் தொடர்ந்து காரியங்களைச் செய்கி-றோம். செங்கற்பட்டு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகட்கும் தனியாக நிதி ஒதுக்கப்பட்டு காரியங்களைச் செய்கிறோம். இப்போது கூட அக் கல்லூரிகளில் ஒரு சில கட்டடங்களைத் திறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறேன். தொடர்ந்து திறக்கப்பட்டு போதுமான படுக்கை வசதிகள் செய்யப்பட இருக்கின்றன. ஆசிரியர்கள் போதுமான அளவிற்குப் பணியாற்றுகிறார்கள் என்பதை யெல்லாம் நடைமுறைப்படுத்தி விட்டால் மெடிக்கல் கவுன்சில் தரும் அங்கீகாரத்தைப் பெற முடியும். ஏறத்தாழ இந்த ஆண்டு இறுதிக்குள் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு முயற்சி யெடுத்துக் கொள்ளப்படும்.

பார்மஸிஸ்ட்களுக்கு பயிற்சி கொடுக்கப்படவேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க அரசாங்கம் வசதி செய்யும். நாட்டிலே மருந்துகள் கிடைக்கவில்லை என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். ஒரு சிலர் அரசு மருத்துவமனைகளில் தரக்குறைவான மருந்துகளைத் தருகிறார்கள் என்று சொன்னார்கள். தரக்குறைவு என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தயாராக இல்லை. வேண்டுமானால் சிலருக்கு அவர்கள் விரும்புகிற மருந்துகள் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கலாம். இன்ன மருந்துதான் எனக்குப் பிடித்தமானது, இன்ன மருந்தைத்தான் நான் சாப்பிட்டுப் பழகினவன் என்று கூறிக்கொள்ளும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் மருந்துகளை டாக்டர் தீர்மானிப்பதைவிட The choice af the patient to choose the medicine he wants என்ற அளவிலேதான் நிலைமைகள் இருக்கின்றன.

Dr. H.V. HANDE : Sir, the patients can never choose. It is the Doctor who prescribes the medicine.

The Hon. Thiru K. ANBAZHAGAN : The doctor prescribes but the patient chooses.

Dr. H. V. HANDE : The patient can choose the doctors.

The Hon. Thiru K. ANBAZHAGAN : The patient chooses the doctors as well as the prescriptions. If the patient does not get the medicines he wants, he goes to another doctor.





இ.எஸ்.ஐ-க்குப் போனால் இந்த நிலை தெரியும், டாக்டரையே இன்ன மருந்து எழுதிக் கொடு என்று கேட்கிற நோயாளிகளைப் பார்க்கமுடியும். ஊசிப்போட்டுத்தான் ஆகவேண்டுமென்று சொல்லுகிற பேஷண்ட்களையும் பார்க்கலாம். டாக்டர் மாத்திரை கொடுத்தால் "ஏன் மாத்திரையைக் கொடுக்கிறீர்கள், ஊசி போடுங்கள்" என்று கேட்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். கொஞ்சம் மயக்கம் வரக்கூடிய மருந்துக்களைக் கொடுக்கக் கூடாதா என்று கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். இது நாட்டிலுள்ள மக்களின் மனநிலைமைகளைப் பொறுத்து இருக்கிறது. சித்த வைத்திய, ஆயுர்வேத மருந்துகள் என்றால் கொஞ்சம் திராட்சா அரிஷ்டம் போன்றவை கேட்பார்கள். போதை பர்சன்டேஜ் 10,12 அளவிற்குள் இருக்கிறது என்று தான் டெஸ்ட் செய்கிறோம். 10 பர்செண்ட் இருப்பதையே நாலு அவுன்ஸ் சாப்பிட்டால் நாம் என்ன செய்ய முடியும்?

இரண்டு அவுன்சுக்குப் பதிலாக அரை பாட்டிலைக் காலி பண்ணினாலும் சரி என்றும் சிலர் பழகியுள்ளனர். அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும் என்பதால் இவற்றில் மக்களின் விருப்பப்படியே எல்லா மருந்துகளையும் தர முடியவில்லை என்றாலும், மக்களுக்கு உள்ள நோயைப் போக்கக் கூடிய மருந்துகளைத் தர முடியும். ஆனால் சில மருந்துகள் உற்பத்தியாகும் இடத்திலேயே குறைந்திருக்கிறது. அவைகள் முழு அளவில் உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க, திரு. ஹாத்தி அவர்களைக் கொண்ட குழு சுற்றுப்பயணம் செய்து ஆலோசனை நடத்தி "பேசிக் மெடிசனை" இந்தியாவிலேயே அதிகம் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழக அரசும் மருந்து உற்பத்தியைப் பெருக்க "தாதா பார்மசூடிகல்ஸ்" என்ற நிறுவனத்தை, அரசோடு கூட்டுச்சேர வைத்து ஜாயிண்ட் செக்டார் ஆக தமிழ் நாடு தாதா பார்மசூடிகல்ஸ் என்று ஏற்படுத்தி இன்றையதினம் மருந்துகள் உற்பத்தியாகின்றன. மேலும், அப்படிப்பட்ட முறையிலே மருந்து உற்பத்தி செய்ய தமிழ்நாட்டிலே யார் முன்வந்தாலும் அரசாங்கம் பெருமளவில் ஆதரவாக இருக்கும். அந்த வகையில் பார்மசி படித்தவர்களுக்குக்கூட வேலை வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே சொல்லப்பட்ட குறைகளை நான் எதிர்க்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருத வேண்டாம். ஓரளவிற்கு உணர்ந்திருக்கிறேன். பிறவற்றைக் கண்டறியத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு மணலி கந்தசாமி அவர்கள் சித்த மருத்துவம் பற்றிச் சொன்னதைப்போல், தமிழ்நாட்டிலே அதை வளர்த்திடும் அந்தக் குறிக்கோளோடு நடைபோட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆயுர்வேதத்தின் மூலம் கிடைக்கும் பலன்களையும் பயன்படுத்த விரும்புகிறோம். யுனானி மருத்துவ சிகிச்சை மூலம் கிடைக்கும் பலன்களையும் தமிழ்நாட்டில் வரவேற்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஒருவேளை நான் பேசும்பொழுது சித்த மருத்துவத்தையே ஆதரிப்பதாக அப்படிப்பட்ட ஒரு தொனி ஏற்பட்டாலும்கூட அது தவறல்ல. சித்த வைத்தியம் தமிழ் நாட்டிலேயே தோன்றி, வேறு எங்கும் நிலைக்காத வைத்தியம். அந்த வைத்தியம் தமிழ்நாட்டிலேயும் நிலைக்காமல் போய்விட்டால், பின் அந்த

மருத்துவமே மறைந்துவிடும் ஆபத்து ஏற்படும். சித்த மருத்துவம் ஒரு
விஞ்ஞான வழி முறை என்னும் அடிப்படையில் அதனை அழிய விட்டால்.
**as a science we will be losing a branch of science** ஒரு விஞ்ஞான
முறையிலே, விஞ்ஞான அடிப்படையிலே உள்ள கருத்துக்களையும் மருத்துவ
தத்துவத்தையும் நாம் அடியோடு இழந்துவிட்டவர்களாவோம் என்பதால்
தான் அதனைப் பெரிதும் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

We have to give protection preserve and develop Siddha,
We have to utilise Unani,
We have to be benefited by Ayurveda,
We have also to be enriched by homoeopathy,

என்ற அந்த முறையிலேதான் இந்த மருத்துவங்களை அணுகிறோம்.
ஆனால் அலோபதி மருத்துவத்தைப் பொறுத்த வரையில் 150 ஆண்டுக்
காலமாக அது ஆலமரம்போல் வளர்ந்து இருக்கிறது. சித்த வைத்தியம்
ஏற்கெனவே வளர்ந்து, பட்டுப்போன நிலையில் ஆலமரத்தின் நிழலில்
உள்ள நாவல் கன்றுபோல் வளராமல் போய்விட்டது. ஆலமரத்தின்
நிழலில் வளராமல் போன அந்த நாவல் மரத்தை நாவல் கொட்டையை
வைத்து மறுபடியும் வளர்க்க, முற்படுவதுபோல் சித்த வைத்தியத்தில்
மறுமலர்ச்சி ஏற்படச் செய்ய வேண்டுமென்று அதற்காகச் சில முயற்சிகளை
எடுக்கிறோம்.

சித்த மருத்துவ நூல்களைப் பற்றி திரு. மணலி அவர்கள் சொன்னார்கள்.
ஒரு சிறந்த நூலின் பெயரைக்கூடச் சொன்னார்கள். அந்தத் துறையிலே
உள்ள அனைவரிடத்திலும் அறிவு ஏற்பட முடியாமல், சிலரிடத்திலே சில நூல்
களைப் பற்றிய அறிவும், வேறு சிலருக்கு வேறு நூல்களைப் பற்றிய அறிவு
உள்ளது என்ற நிலை இருக்கிறது. முஸ்லீம்களுக்கு குரான் போன்று,
இந்துக்களுக்குப் பகவத்கீதை போன்று, கிறித்தவர்களுக்கு பைபிள் போன்று
என்று சொல்வதைப்போல் இதில் அந்தந்த வைத்தியர்களுக்கு அவர
வர்கள் பயின்ற சில நூலைப் பின்பற்றித் தயாரிக்கும் மருந்துகளே தெரியும்.
ஆனால் எல்லோருக்கும் எல்லா மருத்துவ நூல் விளக்கங்களும், தெரியாது
என்ற அவல நிலையை மாற்றுவதற்காக இந்த நூல்களை வெளியிட அரசு
விரும்பியது. அரசாங்கத்தில் நிதி ஒதுக்க முயன்றாலும் நடைமுறையில்
சில சிக்கல்கள் ஏற்படக்கூடும். பல இலாக்காக்களிலே கேட்டு நிதியைப்
பயன்படுத்துவதிலே தாமதம் ஏற்படுகிறது. என்பதால் பழனி அறங்
காவலர் குழுவைக்கேட்டு, இரண்டு லட்சம் ரூபாய் நன்கொடையாக ஒதுக்கி
வைத்து இதுவரையில் ரூபாய் 75,000 தந்திருக்கிறார்கள். இதில் ஒரு
வேடிக்கை என்னவென்றால் சித்த வைத்தியத்தில் முருகன் பெயர்
சம்பந்தப்பட்டிருக்கும் சிவபெருமான் பெயர் சம்பந்தப்பட்டிருக்கும்
என்பது அனைவருக்கும் தெரியும். இதற்கு நிதி ஒதுக்கியிருப்பது அருள்
மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். இப்போது முதலில்
வெளியிடப்படும் நூல்கள் வரிசை அப்துல்லா என்னும் முஸ்லீம் பெரு
மகன் எழுதி வெளியிட்டதன் மறுபதிப்புகளாகும். அவர் சுமார்
50 நூல்களை சுமார் 60, 70 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருக்கிறார்.



இதை உடனடியாக அச்சிட்டால்தான் மாணவர்களுக்கும் பிற மருத்
துவர்களுக்கும் அனுபவத்தோடு கூடிய சித்த வைத்திய அறிவு ஏற்படும்.
ஹக்கீம் ப. முகமது அப்துல்லா என்பவர் சென்னையில் இருந்தவர்.
அவர் ஆராய்ச்சி செய்து பத்து பகுதிகளைக் கொண்ட "அனுபோக வைத்திய
நவநீதம்" என்னும் நூலையும், அதன் திறவுகோல் **The key to study
the ten volumes** என்னும் தனி எட்டையும் வெளியிட்டுள்ளார்.

இன்னும் சொல்லப் போனால் சித்த வைத்தியத்தைப் பற்றிய பல
நூல்களைத் தொடர்ந்து அச்சிட முயற்சி நடக்கிறது. சித்த வைத்திய
அகராதி திரு. சாம்பசிவம் பிள்ளை என்னும் அறிஞரால் நாற்ப
தாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டு ஒரு பகுதி மட்டும் அச்சிட்டு வெளி
யிடப்பட்டும் சில ஏடுகள் தனித்துவிடப்பட்டும் இருந்தன. இடைத்தவற்றைச்
சேகரித்துள்ளதுடன் மீதி உள்ளவற்றையும் திருத்தமுற அமைத்து அச்சிட
பெருமுயற்சி மேற்கொள்ளப்படுகிறது. 1,500 பக்கங்கள் கொண்ட அக
ராதியின் பிற்பகுதியை ஜி.டி. நாயுடு அற நிலையத்தின் சார்பில், அரசு
வாங்கிக் கொடுக்கும் அச்சுத்தாளில் நாம் கொடுக்கும் எட்டுப் பிரதிகள் அச்
சடித்துத்தர இசைந்துள்ளனர். அதற்கு ஒரு ஆண்டு ஆகலாம்.

ஒரு தமிழ் அறிஞர், வடமொழி அறிவும் பெற்றவர்; சித்த வைத்
தியத்தின் சொற்களுக்கு விளக்கம் கொடுக்கும் அளவிற்கு,
மிகப்பெரிய **medicine, chemistry, botany and allied
sciences** என்ற தலைப்புகளில் வருவனவற்றை உள்ளடக்கிய அக
ராதியை அப்பொழுதே எழுதியிருக்கிறார்கள் என்றால் மிகப்பெரிய
ஆராய்ச்சியாளராக அவர் வாழ்ந்திருக்கிறார் தமிழகத்திலே என்பது
விளங்கும். அவருடைய தொண்டினை மேம்படுத்தி நிலைநாட்ட
முடியாத ஒரு நிலைக்கு நாம் ஆளாகி இருக்கிறோம் என்று நினைக்கும்
பொழுது வருத்தம்தான் ஏற்படும். இருந்தாலும் சித்த வைத்தியத்
தின் மறுமலர்ச்சிக்கு ஏதுவாக, யுனெஸ்கோ அறிஞர்கள் இந்தியாவிற்கு
வந்தபொழுது **(indigenous medicine)** இண்டிஜெனஸ் மெடிசினில்
உள்ள சிறப்பான மருந்துகள் இந்தியாவில் பல நோய்களைக் கட்டுப்படுத்த
முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

காசநோய்க்கு "இண்டிஜெனஸ் மெடிசனால்" பலன் இருக்கிறது என்று
சொல்லியிருக்கிறார்கள், திரு. மணலி அவர்கள் குஷ்டத்திற்கு மருந்து
இருப்பதாகக் கூறினார்கள். வேலூருக்குப் பக்கத்திலே உள்ள சித்த
மருத்துவர் இந்தத் தொழுநோய்க்காக எண்ணெய் தயாரித்து சிகிச்சை
வழங்குகிறார்கள். இப்படிச் சில அருமையான முறைகள் இருக்கின்றன.

ஆனால் நூற்றுக்கு அறுபது எழுபது தானே பயன்படுகிறது, முப்பது
சதவிகிதம் பயன்படவில்லை என்றால், அலோபதியிலே மட்டும் முற்றும்
பயன்படுகிறதா? அதில் 90 சதவிகிதம் பயன்பட்டாலும் 10 சதவிகிதம்
பயன்படாமல் போகவில்லையா? ஆகவே மருத்துவத் துறையிலே சித்த
மருத்துவம் தமிழ்நாட்டிலே பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாக இருப்
பதால் அதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அந்த மருத்துவம் காப்பாற்
றப்பட வேண்டுமென்பதற்காக மற்ற மருத்துவம் கைவிடப்பட வேண்டும்
என்பது நோக்கம் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஹோமியோபதி மருத்துவர்கள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு 4,000, 5,000 பேர் அளவிற்குப் பதிவு செய்து கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே இனி பதிவு செய்ய வேண்டுமானால் தேர்வு எழுதிப் பதிவு செய்து கொள்ளும் நிலைமை ஏற்படலாம். அப்படி ஏற்படும்பொழுது பதிவு செய்து கொண்டவர்கள் எவ்வளவுதான் இருந்தாலும், மருத்துவக் கல்வித் துறையிலே ஹோமியோபதி டாக்டர்கள் பட்டதாரிகளாகப் பலர் வர வேண்டியிருக்கிறது. அப்படி வருவதற்கு மதுரையில் ஒரு கல்லூரியை திரு. தங்கராஜ் என்பவர் அவர்கள் நடத்தினார்கள். அவருக்குப் பொருளாதார வசதியில்லாததால் அவர் ஏற்றுக் கொண்ட பொறுப்பை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டது. கல்லூரி முதல்வருக்கும் அவருக்கும், மாறுபாடு ஏற்பட்டு சிக்கல் ஏற்பட்டது. அந்தக் கல்லூரி அப்படியே அனுமதிக்கப்பட்டால் வெளிவரும் மருத்துவர்கள் தகுந்த தேர்ச்சியில்லாமல் குறைபாடு உடையவர்களாக இருப்பார்கள் என்று எண்ணி, ஹோமியோபதி கவுன்சில், அதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்தக் குழு பரிசீலனை செய்து அந்தக் கல்லூரிக்குத் தாற்காலிகமாகக் கொடுத்திருக்கும் அங்கீகாரத்தைக் கைவிட்டார்கள். மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்க வேண்டுமென்று கேட்டதற்கு சென்னையிலே அப்படிப்பட்ட ஒரு ஹோமியோபதி கல்லூரியை அரசின் சார்பிலேயே ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பாக சித்தவைத்திய ஆராய்ச்சி நடைபெறும் அளவிற்கு ஒரு கட்டிடம் இருக்கிறது. 25 படுக்கைகள் கொண்டது. சில வகுப்புகள் நடத்தலாம். அது கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்குப் பின்பக்கத்தில் இருக்கிறது. அது மே திங்களில் கிடைக்கும், ஜூன் திங்களில் ஹோமியோபதி கல்லூரியை அரசாங்கச் சார்பில் தொடங்கலாம் என்று எண்ணியிருக்கிறோம்—அப்படி அங்கே கொஞ்சம் வசதி போதவில்லையென்றால் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் உள்ள வசதிகளை இடைக்காலத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையிலே கல்லூரி தொடங்க அதற்குத் தேவையான கருவிகள் எப்படிப்பட்டவை வேண்டும் என்று அறிந்து வாங்குவதற்கும் என்னென்ன முன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அறியவும் ஆந்திராவில் உள்ள ஒரு ஹோமியோபதி கல்லூரியின் முதல்வர் அகில இந்திய ஹோமியோபதி ஆலோசனைக் குழுவிலே உள்ள உறுப்பினர் டாக்டர் குடும்பராவ் அவர்களிடம் ஆலோசனை கேட்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஹோமியோபதி கல்லூரி வருகிற ஆண்டிலே ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. சென்ற ஆண்டு நிதி ஒதுக்கியும் சரியான முறையில் அதைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படவில்லை. இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி அந்தக் கல்லூரி ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 2-30]

"சென்னை மாநகரப் பெருவளர்ச்சித் திட்டம் பற்றியும்—" மெட்ரோபாலிடன் டெவலப்மெண்ட் அதாரிடி" பற்றியும் இரண்டு மூன்று பேர் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்.' திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் அதைப் பற்றித் தனியாகப் பேச முடியவில்லையே என்று குறிப்பிட்டார்கள்.





உள்ளபடியே தனியாகப் பேசப்பட வேண்டிய பிரச்சினைதான் என்றாலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை தேவையான குறிப்புகளைத் தர முடியும். மெட்ரோபாலிடன் டெவலப்மெண்ட் அதாரிடி ஏற்படுத்தி, நகர வளர்ச்சித் துறை நிபுணர்கள் மூலம் எந்தெந்த வகையில் சென்னை மாநகரப் பெருவளர்ச்சித் திட்டம் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை விரிவாக ஆராய்ந்து தயாரிக்கப்பட்டுள்ளது. யு.என்.ஓ. அதிகாரிகளும் வொர்ல்டு பாங்கு அதிகாரிகளும் பார்த்து நல்ல முறையில் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள் எனறு பாராட்டுகின்ற அளவு—அது உருவாகியுள்ளது. அவர்கள் we are satisfied with your preliminary work of planning என்று தெரிவித்திருப்பதோடு We want some more details. Let us sit and work about details and priorities) என்று கூறியுள்ளனர். மேலும் நாங்கள் நிதிகொடுத்திக்கிறோம். டிடெயல்டு பிளான் தயாரிக்கத் தகுந்தவகையில் ஒத்துழைக்க அவர்கள் முன்னுக்கு வரக்கூடிய அளவுக்கு சென்னை மாநகரப் பெருவளர்ச்சித் திட்டம் நடைமுறைக்கு வர இருக்கிறது. அதற்காக மத்திய அரசாங்க அதிகாரி ஒருவரை இந்தக் குழுவில் இடம் பெறச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் மூலமாக நமக்கும் டில்லி சர்க்காருக்கும் இடையில் இத் திட்டம் பற்றி எடுத்துச் சொல்ல உதவிகரமாக இருக்கும் என்று இங்கே குறிப்பிடப்பட்டது.

மத்திய சர்க்கார் அதிகாரிகளையும் மாநில சர்க்கார் அதிகாரிகளையும் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

Advisory body over the Metropolitan Authority or a negotiating body.

என்ற முறையில் மத்திய சர்க்கார் அதிகாரிகளும், நம்முடைய சர்க்கார் அதிகாரிகளும் கொண்ட குழு பம்பாயில், கல்கத்தாவில் அமைந்திருப்பது போல்—அதே முறையில் அமைந்துள்ளது.

நகர்ப்புற வளர்ச்சிக்காகவும், சென்னை மாநகர வளர்ச்சிக்காகவும், 6 கோடி ரூபாய் நிதியை மாநில அரசு ஒதுக்கியிருக்கிறது என்று சொன்னாலும் இந்தத் திட்டம் 20 ஆண்டுக் காலத்தில் 980 கோடி ரூபாயில் முடியும் என்று ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டது. இப்போது அது 980 கோடி ரூபாயில் நிற்காது. 1,250 கோடி ரூபாய் அளவுக்குப் போகலாம். ஐந்து ஆண்டுகால வளர்ச்சித்திட்ட அடிப்படையில் இன்றைக்குச் செயற்படுத்த 200 கோடி ரூபாய் அளவு தேவை. இந்தியாவில் இருக்கும் மற்ற பெரு நகர வளர்ச்சிக்கு இந்திய அரசு நிதி தந்திருக்கிறார்கள். அந்த வகையில் நமக்கும் நிதி உதவி செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். இதற்காக உலக வங்கி கடன் கொடுக்கமுன் வரக்கூடும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த வகையில் சென்னைப் பெருநகர வளர்ச்சி, நகரப்புற வளர்ச்சி, புது நகரமான, மறைமலை அடிகள் நகரம், எண்ணூர், கும்மிடிப்பூண்டி போன்ற சாடலைட் டவுன்ஸ் அர்பன் ரோட்ஸ் என்ற வகையில் வளர்ச்சி ஏற்படும்; அந்த அடிப்படையில் ஏற்பாடுகள் செய்யப்படும். எண்ணூர் வளர்ச்சிக்கு அடிப்படையான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல் மிகுந்த விரைவுப் போக்குவரத்து ஒன்றை கடற்கரை

ஓரமாக, தெற்கு வடக்குப் பாதையாக சென்னை நகரத்தில் கிழக்குப் பகுதியில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது மத்திய அரசு.

Underground transit system or in some places above ground.

கிழோ, மேலோ, பக்கிங்ஹாம் கால்வாய் ஓரமாகவோ, கூவம் நதி ஓரமாகவோ, விரைவுப் போக்குவரத்தை ஏற்படுத்தும் திட்டத்தை செயல் படுத்துவதற்கு—அதன் ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்படிப் பல்வேறு வகையில் சென்னை மாநகர வளர்ச்சியை உருவாக்க, அந்தப் பணிகளுக்கு ஆதரவான அடிப்படைகள் இன்றையதினம் இந்தத் துறை யின் ,மூலம் நிறைவேற்றப்படுகிறது என்பதைக் தெரிவித்துக் கொள் கிறேன்.

குடிநீர் வாரியத்தின் மூலம், அந்த இலாகாவின் பல்வேறு பணிகள் சிறப்பாகவும், செம்மையாகவும் இயங்கிக் கொண்டிருப்பது நாம் பார்த்துப் பாராட்டத் தக்கதாக இருக்கிறது. சமூக நலத் துறையின் மூலம், தொழு நோயாளிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் பணிகளும் சீராகவும், செம்மை யாகவும் நடைபெற்று வருகின்றன. அவற்றுக்கெல்லாம் தனித் தனியாக நான் விளக்கம் சொல்லாவிட்டாலும் மாண்புமிகு உறுப்பினர்களும், தலை வர்களும் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் கவனம் செலுத்தப் படும். உங்களுடைய மிகுந்த பொன்னான நேரத்தை எடுத்துக் கொண்டி ருக்கிறேன்.

அதிலும் ,குறிப்பாக இந்தக் குறிப்பிட்ட நேரம் பொன்னான நேரம் மட்டுமல்ல; பசிமிகுதியால் எரிச்சலூட்டுகின்ற நேரம். ஆகவே, நான் சொன்ன விளக்கத்தின் அடிப்படையில் வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், அந்தக் கருத்துக்களை எண்ணிப் பார்க்கின்ற ஒரு துறை இந்தத் துறைஎன்ற அடிப்படையில் ஒத்துழைப்புத் தரவேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்களையும் தலைவர்களையும் கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மதுரை ஓமியோபதி கல்லூரி பற்றிச் சொன்னார் கள். ஏற்கனவே தனியார் கல்லூரியில் படித்து பாதியில் அது மூடப் பட்டதால், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒரு வழியும் இல்லாமல் இருக் கிறது. ஆகவே, தொடங்க இருக்கும் கல்லூரியில் அந்த மாணவர்கள் படிக்க அரசாங்கம் சலுகை காட்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாணவர்கள் சரியாகப் படிக்கக் கூடிய சூழ்நிலை இல்லாத அந்தக் கட்டத்திலேதான் கல்லூரி மூடப் பட்டுள்ளது என்பதை அறிவார்கள். கூடுமான வரையில் தொடங்கப்பட இருக்கும் கல்லூரியில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது பற்றி ஆலோசிக்கப்படும். அந்த வகையில் அந்த மாணவர்கட்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. வாக் கெடுப்பு.





திருவாளர்கள் கே. ஏ. வகாப், என். மருதாசலம், கே. எஸ். கோதண்ட ராமையா, கோவை செழியன், ஜே. ஜேம்ஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டன.

திரு. எம். சுரேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவரு டைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 30,93,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப் பட்டது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், கே. எஸ். கோதண்ட ராமையா, என். மருதாசலம், கே. ஏ. வகாப், என். டென்னிஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,25,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் கே. எம். சுப்பிரமணியம், என். டென்னிஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே, என். மருதாசலம், கே. ஏ. வகாப் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப் பகுதி வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,17,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-38 மணி அளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

138. Notification issued in G.O. Ms. No. 6534, Revenue, dated the 23rd October 1973 in regard to exemption from tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) on the sales by any dealer of Coir dust. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

139. Notification issued in G.O. Ms. No. 11, Agriculture, dated the 3rd January 1975 in regard to amendments to Rules 185-A and 192-A of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [*Laid on the table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

140. Notification issued in G.O. Ms. No. 6533, Revenue, dated the 23rd October 1973 in regard to exemption from tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act, I of 1959) on the sales by any dealer of Coconut husk. [*Laid on the table of the House under section* 53(5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act* I *of* 1959).]

141. Notification issued in G.O. Ms. No. 679, Commercial Taxes and Religious Endowments dated the 2nd December 1974, inregard to an amendment to the Notification No. II(2) C.T. and R.E./4573(c)/74 published at page 1 of the Tam'l Nadu Government Gazette Extraordinary, dated the 1st November 1974. [*Laid on the table of the House under section* 10(4) *of the Tamil Nadu Betting Tax Act*, 1935 (*Tamil Nadu Act XX of* 1935).]



### B. *Reports, Notifications and Other Papers.*

@64. Policy Note on Leprosy Beggars Rehabilitatio Program 1975-76 (Under Demand No. 18) (English and Tamil).

%65. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Health on Demand No. 19—Public Health 1975-76 (English and Tamil).

%66. Speech by Hon. Thiru K. Anbazhagan, Min'ster for Health on Demand No. 18—Medical 1975-76 (English and Tamil).

%67. The Performance Budget on Medical Education, 1975-76.

---

*Cut motions circulated separately.

@ Despatched to Members on 11—3—1975.

% Despatched to Members on 12—3—1975.

## இணைப்பு I.

[271 ம் பக்கத்தில் 303 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

புதுடில்லியில் 1974 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4 ஆம் நாளன்று கரிம எருக்கள் குறித்து விவாதிப்பதற்காக மத்திய அரசு வேளாண்மை அமைச்சர் தலைமையின் கீழ் மாநில வேளாண்மை அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்று நடைபெற்றது.

இம்மாநாட்டில் கீழ்க்கண்ட பொருள்கள் விவாதிக்கப்பட்டன :—

(1) மாநகராட்சிகளும், தெரிந்தெடுக்கப்பட்ட பெரிய நகராட்சிகளும் இயந்திர முறைக் கலவை எரு உற்பத்தி சாதனங்கள் நிறுவுதல்.

(2) இம் மாநிலத்தின் கழிவு நீரைப் பயன் படுத்தும் திட்டங்களை செயற்படுத்தல்.

(3) நுண்ணுயிர் வளர்ப்புக் குடுவைகள் வழங்குதல்.

(4) மாட்டுச் சாணத்திலிருந்து எரிவாயு உற்பத்திச் செய்யும் சாதனங்கள் நிறுவுதல்.

(5) பசுந்தாள் உரவிதைகள் உற்பத்தியும், விநியோகமும்.

*A.*—

(*a*) Yes;

(*b*) A conference of the State Agriculture Ministers was held at New Delhi on 4th January 1974 under the Chirmanship of the Union Minister for Agriculture.

The following subjects were discussed in the conference :—

(1) Setting up of Mechanical Compost Plants by the Corporations and by selected big municipalities;

(2) Implementation of Sewage Utilisation Schemes in the State;

(3) Distribution of bacterial culture flasks

(4) Setting up of Gobar Gas Plants;and

(5) Production and distribution of Green Manure Seeds.





## இணைப்பு-II.

[287-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 18—மருத்துவம் 1975-76.

பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை 18 மருத்துவம் என்பதன் கீழ் ரூ. 30,93,98,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கப்பட வேண்டுமென நான் முன்மொழிகிறேன்.

வளங்கெழு அரசின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று, மக்களுக்குப் போதுமான மருத்துவ வசதி அளிப்பதாகும். ஒரு நாட்டின் வளர்ச்சியும் வளமையும் அந்நாட்டுக் குடிமக்களுடைய சிறந்த நல்வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது, நகரங்களிலும், கிராமங்களிலும் வாழுகின்ற மக்களுக்கு, உடனடியாக மருத்துவப் பணிவசதிகள் கிடைக்கச் செய்யும்பொருட்டு இப் பணி வசதிகளைப் பெருக்கி, அது நாளது வரையிலான முன்னேற்றங்களைக் கொண்டதாகவும், மிகத்திறமையுடன் பணியாற்றுவதாகவும் அமைக்கும்பொருட்டு நாம் பெருமுயற்சிகள் எடுத்து வந்துள்ளோம்.

அடுத்தடுத்து இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் மருத்துவம், மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றுக்குச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு விவரங்களைக் கீழ்க்காணும் புள்ளிவிவரத்திலிருந்து அறியலாம் :—

நீர்வழங்கல் உட்பட மருத்துவம், மக்கள் நல்வாழ்வு.

| திட்டம் | ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | செலவு |
|---|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் | .. | 642 |
| 2-வது ,, ,, | 1435 | 1442 |
| 3-வது ,, ,, | 2150 | 2617 |

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு மட்டும்.

| திட்டம் | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் | 1610 | 1533 (தற்காலிகமானது) |
| 5-வது ,, ,, | 5000 (தோராயமானது) | .. |

**மருத்துவ வசதிகளைப் படிப்படியாக விரிவுபடுத்தும் கொள்கை 1975-76 இலும் தொடர்ந்து தலையாய இடத்தைப் பெறும்.**

மருத்துவக் கல்வித் துறை செயல்படுவது பற்றிய முக்கியக் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

11 (a) மருத்துவக் கல்வி.

தற்போது அரசு 8 மருத்துவக் கல்லூரிகளை நடத்தி வருகிறது. இவற்றில் ஆண்டுதோறும் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். பி.ஃபார்மஸி படிப்பு தற்போது மதுரை மருத்துவக் கல்லூரி யில் நடத்தப்படுகிறது. இதில் 20 மாணவர்கள் பயில்கின்றனர். பி.ஃபார் மஸி வகுப்புகளில் சேர விழைவோர் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தபடியால், அரசு, 1974 ஜூலையில் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி யில் பி.ஃபார்மஸி வகுப்புகளைத் தொடங்கியுள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியில், சமூக நோய்த்தடுப்பு மருந்தியலில் எம்.டி பட்டப் படிப்பு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. மயக்கமருந்தியலில், எம்.டி. படிப்பிற்குச் சேர விழைவோர் தொகை மிக அதிகமாக இருந்தபடியால் அதற் கேற்ப, இடங்களின் எண்ணிக்கையை உயர்த்தும் பொருட்டு, நடப்பாண்டில், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் மயக்கமருந்தியல் எம்.டி. பட்டப் படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது. இது, ஏற்கெனவே சென்னை மருத்து வக் கல்லூரியில் நடத்தப்படும் இந்தப் படிப்புடன் சேர்ந்ததாகும். நடப்பாண்டில் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் முடநீக்கு இயல் பட்டயத் தகுதி படிப்பும் தொடங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பட்ட மேற் படிப்பு நிலையமாக உயர்த்தியது இத்துறையில் புதியதொரு வளர்ச்சியாகும். எம்.டி. (பொது மருத்தியல்), எம். டி. (பொது அறுவை சிகிச்சை இயல்) ஆகிய படிப்புகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வகுப்புகள் 1975 ஏப்ரலில் தொடங்கும். எம்.டி. (பொது மருந்தியல்) வகுப்பில் 3 பேரும், எம்.டி. (பொது அறுவை சிகிச்சை இயல்) வகுப்பில் 5 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கடந்த ஆண்டிற்குப்பின் ஏற்பட்டுள்ள மற்றுமோர் புதிய வளர்ச்சி, மதுரை மருத்துவக் கல்லூரியில் 1975 ஜூலையில் எம்.ஃபார்மஸி படிப் பினைத் தொடங்க மதுரைப் பல்கலைக் கழகம் அனுமதியளித்திருப்பதாகும். மருந்தியல் ஆராய்ச்சி படிப்புத் துறையில், பி.எஸ். சி. மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்பப் படிப்பைத் தொடங்கும் செயற்குறிப்பு ஒன்றும் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசிடமிருந்து உதவி கிடைக்கும் என நம்புகிறோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தைக் கலந்தாலோசித்து டி.எம். (Gastro Enterology), டி.எம். (Nephrology) எம்.டி. (இதய நோய் மருந்து), உடல்சார் மருந்தியலில் பட்டயத்தகுதிப் படிப்பு ஆகிய பாட முறைகளைத் தொடங்குவதற்கான வாய்ப்பு பற்றி மருத்துவக் கல்வி இயக்குநர் பரிசீலனை செய்துவருகிறார்.

பட்ட மேற்படிப்பு, பட்டயத்தகுதி பற்றிய விவரங்கள் விவர அறிக்கை I-இல் கொடுக்கப்பட்டுள்ளன.



(b) புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு இந்திய மருத்துவர் மன்றத்தின் அங்கீகாரம் பெறுதல்.

மொத்தமுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளில் செங்கற்பட்டிலும் திரு நெல்வேலியிலும் உள்ள மருத்துவக் கல்லூரிகள் இந்திய மருத்துவர் மன்றத்தால் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த மருத்துவக் கல்லூரிகளில் உள்ள வசதிகள் போதுமானவையா என்பதுபற்றி ஆய்வு செய்யும் பொருட்டு அது ஆய்வு ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளது. இந்த ஆய்வு ஆணைக்குழு அந்தக் கல்லூரிகளைப் பார்வையிட்டு, மன்றத்தின் விதிகளையும் தரங்களையும் நிறைவு செய்யும்பொருட்டுச் சில பரிவுரை களைச் செய்துள்ளது. இப்பரிவுரைகளைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. கிடைக்கின்ற வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, கடந்த 4 ஆண்டுகளில் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 45.52 இலட்சமும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 25.00 இலட்சமும், கோயம் புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 36.00 இலட்சமும் செலவிடப்பட் டுள்ளன. மேற் சொன்ன இரு கல்லூரிகளுக்கும் அங்கீகாரம் பெறு வதற்காக இந்திய மருத்துவர் மன்றத்துடன் தொடர்பு கொண்டு தொடர்ந்து முயன்று வருகின்றோம்.

மருத்துவ ஆராய்ச்சி.

நம் மாநிலத்தில் மருத்துவ நிறுவனங்கள் அனைத்திலும், எல்லா நிலையங்களிலும் ஆராய்ச்சி நடத்தப்படுகின்றது. மருத்துவக் கல்வி வளர்ச்சிக்கு மருத்துவ ஆராய்ச்சி இன்றியமையாததாகும். மக்கள் பயனடைய வேண்டுமாயின், மருத்துவ அறிவியலின் முன்னேற்றத்திலும், அந்த அறிவைப் பயன்படுத்துவதிலும் எல்லா நிலையிலும் உள்ள பணி யாளர்களும் பங்குபெறுவது மிக முக்கியமானதாகும். இதைக் கருத்தில் கொண்டு, மாநில அரசு ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கமளித்து வரு கிறது.

ஆராய்ச்சி இரண்டு வகைப்பட்டதாகும். செய்முறை அல்லது மருத்துவ ஆராய்ச்சி, அடிப்படை அல்லது கல்வி ஆராய்ச்சி. இதற்கு நிதி உதவி அளிக்கும் முக்கியமான நிறுவனங்கள் பின் வருமாறு :—

(1) மாநில அரசு.

(2) இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் போன்ற தேசிய நிறு வனங்கள்.

(3) உலக சுகாதார நிறுவனம், "யூனிசெப்" போன்ற உலக நாடு கள் நிறுவனங்கள்.

(i) தமிழ்நாடு மாநில ஆராய்ச்சிக்குழு.

தமிழ்நாட்டில் மருத்துவ அறிவியலிலும், மருத்துவக் கலையிலும் ஆராய்ச் சிப் பணியை ஊக்குவிப்பதற்காக மாநில மருத்துவ ஆராய்ச்சிக்குழு

ஒன்று 1944ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஆராய்ச்சிக்காக மானியங்கள் அளிக்குமாறு கேட்கும் வேண்டுகோள்களை இக்குழு பரிசீலித்து தகுதியுள்ள திட்டங்களுக்கு உதவியளிக்கிறது. இக்குழுவிடம் தற்போது ஆண்டொன்றுக்கு ரூ. 1,00,000 மொத்த மானியமுள்ளது.

(ii) ஆராய்ச்சித் திட்டங்கள்.

இம் மாநிலத்திலுள்ள மருத்துவ நிலையங்களில் 1973-74, 1974-75ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களும், செலவிடப்பட்ட தொகையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள். | திட்டங்களின் எண்ணிக்கை. | | அனுமதிக்கப்பட்ட தொகை. | |
|---|---|---|---|---|
| | 1973-74 | 1974-75 | 1973-74 | 1974-75 |
| பழைய திட்டங்கள் (தொடர்ந்து நிறைவேற்றப்படுபவை). | 23 | 24 | 30.500 | 34.300 |
| புதிய திட்டங்கள் | 40 | 59 | 50.530 | 1,19.820 |
| மொத்தம் .. | 63 | 83 | 81.030 | 1,54·120 |

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவின் கீழ் கீழ்க் காணும் ஆராய்ச்சித் திட்டங்கள் 1974-75-ல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:

(1) தொழுநோய் குறித்து நரம்பில் சீழ் கட்டிக் கொள்ளுதல், அதைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல்.

(2) தொழுநோயினால் குறைந்துவிட்ட உறுப்புகளை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்துதல்.

(3) இரந்திக் கிருமி எதிர்ப்பு உண்டாக்கும் பொருளைத் தயாரித்தல். T. P. H. A.

(4) தைமஸ் சுரப்பிக்கும், (Moist) உயிரணுக்களுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய ஆய்வு.

(5) மனிதனின் பல் எனுமலில் புளோரிஸஸ் படிவது.

(6) நரம்புகள் வேலை செய்வதையும், நரம்பு தளர்ச்சிக்குச் சிகிச்சை ளிப்பது குறித்து ஆய்வு.

(7) நோய்க் குறியியல் குறித்த வட்டாரப் பதிவு அலுவலகம் (பல துவாரங்கள் கொண்டது).





(8) அமின்ஸ் காரணமாக ஏற்படும் ஒழுங்கீனங்கள் குறித்த ஆய்வு.

(9) பல்வேறு சமூக-பொருளாதார நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிறுநீர்ப் பையில் அறிகுறி இல்லாமல் வரும் நோய்.

(10) புளோரிஸ் வாயு படிவதை மருத்துவ முறையில் கண்டு பிடித்து, தடுத்து சிகிச்சை அளித்தல்.

வாய்ப் புற்றுநோய்.

(iii) உலக சுகாதார நிறுவனத் திட்டம்.

சென்னை அரசு ராயப்பேட்டை மருத்துவமனையில் வாய்ப்புற்றுநோய் அறுவைச் சிகிச்சை குறித்து ஆராய்ச்சி நடத்துவதற்காக உலக சுகாதார நிறுவனம் 2,000 டாலர்களை அளித்துள்ளது. பிரச்சாரம் மூலம் சரும நோய் குறித்த ஆய்வு என்ற ஆராய்ச்சித் திட்டத்தை நடத்த உலக சுகாதார நிறுவனம் 2,000 டாலர்களைஅளித்துள்ளது.

(iv) பெல்ஜிய நாட்டு உதவி.

சென்னை அரசு கண் நோய் சிகிச்சை மருத்துவ மனையில் ரூ. 7 லட்சம் செலவில் மைகோஷியோ நோய்க் குறியியல் நிலையத்தை (Mycotio Diagnostic Centre) அமைப்பதற்காகவும், அறிவியல் கருவிகளை வழங்குவதற்காகவும் ரூ. 30,000-த்துக்கும், பெல்ஜிய நாட்டு நிறுவனம் அளித்த உதவியை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(v) மாணவர்களுக்கு உதவித் தொகை.

மேலும், மருத்துவ மாணவர்களிடையே ஆராய்ச்சி நடவடிக்கையை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை மருத்துவக் கல்லூரியிலும், மதுரை மருத்துவக் கல்லூரியிலும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ள விருப்பம் உள்ளவர்களும் கோடைக் காலத்தில் ஆராய்ச்சிப் பணியை நிறைவேற்றுவதில் பேராசிரியர்களுக்கு உதவுபவர்களுமான மருத்துவத் துறையல்லாத துறைகள் ஒவ்வொன்றிலுமுள்ள இரண்டு மாணவர்களுக்கு 1973-74-ல் மாத மொன்றுக்கு ரூ. 150 பயிற்சி உதவித் தொகையை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

(vi) காசநோய் ஆராய்ச்சி.

தற்போது காசநோய் மருத்துவ நிலையம் (T.B· Chemotherapy Centre) அமைந்துள்ள (எழும்பூர், அரசு மார்பு நோய் சிகிச்சை நிலையம்) இடத்திலுள்ள நிலத்தையும் கட்டிடத்தையும் நன்கொடையாக அல்லது ஆண்டொன்றுக்கு ஒரு ரூபாய் பெயரளவு வாடகைக்கு விடுமாறு இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் இந்த அரசைக் கேட்டுக்கொண்

"டுள்ளது. இம்மன்றத்தின் பிரதிநிதிகள் நமது அதிகாரிகளுடன் விரிவாக விவாதங்கள் நடத்தியுள்ளனர். காசநோய் சிகிச்சை நிலையம் ஆற்றிவரும் பணியின் முக்கியத்துவத்தையும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தினால் நிதியுதவி பெற்ற ஆராய்ச்சித் திட்டங்கள் ஆற்றி வரும் பணியின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு நிலங்களையும், கட்டிடத்தையும் ஆண்டொன்றுக்கு ஒரு ரூபாய் என்ற பெயரளவு வாடகைக்கு விட அரசு முடிவு செய்துள்ளது. தென் வட்டாரத் தலைமையிடத்தை சென்னையில் அமைக்க இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் கருதியுள்ளது.

## தனியார் மருத்துவ நிலையங்களுக்கு உதவி மானியம்.

(மக்கள் நல் வாழ்வுப் பணிகள்—குடும்ப நலத் திட்ட இயக்குநரால் நிர்வகிக்கப்படுவது.)

தனியார் நிறுவனங்கள், கழகங்கள், சங்கங்கள், கிறிஸ்தவ நிறுவனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தில் உள்ள மருத்துவ நிலையங்களுக்கு உதவி மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் அளிக்கப்பட்ட வெவ்வேறு வகை மானியங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

### I. தொடர் இன மானியங்கள்.

(i) தனியார் தொழு நோய் சிகிச்சை நிலையங்களுக்கு தலை வீத மானியங்கள்.

(ii) ஏனைய மருத்துவ நிலையங்களுக்கு பேணுதல் மானியங்கள்.

### II. தொடரா இன மானியங்கள்.

(i) கட்டிட மானியங்கள்.

(ii) கருவிகள் குறித்த மானியங்கள்.

" (i) தனியார் தொழு நோய் சிகிச்சை நிலையங்களுக்கு தலை வீத மானியங்கள்.—தொழு நோயாளி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 வீதமும், அந் நோயாளிகளை நம்பியுள்ள நல்ல உடல் நலமுள்ள குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 12 என்ற வீதத்திலும் இந்த மானியம் வழங்கப்படுகிறது. தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும், தொழு நோய் அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கும், வெப்ப நாடுகளில் வரும் புண்களுக்காக தொழு நோய் வகையைச் சாராத நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் உள்ள தொழு நோய் சிகிச்சைத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. அத்தகைய நிறுவனங்கள் 12 உள்ளன. ஆண்டொன்றுக்கு சராசரியாக 5 லட்சம் தலை வீத மானியமாக தமிழ் நாடு அரசிடமிருந்து பெறுகின்றன.



(ii) தனியார் மருத்துவ நிலையங்களுக்கு பேணுதல் மானியங்கள்.—தகுதியுள்ள நிறுவனங்களுக்கு பேணுதல் மானியம் அளிக்கப்படுகிறது. தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை கொடுப்பதன் பேரிலும், அத்தகைய மானியங்களை கொடுப்பதற்கான நிபந்தனைகளை இந்நிறுவனங்கள் பின்பற்றுகின்றன என்று ஆய்வு அதிகாரிகள் மன நிறைவடைந்த பின்னரும் இந்த மானியங்கள் அளிக்கப்படுகின்றன. தமிழ் நாடு அரசிடமிருந்து 32 நிலையங்கள் பேணுதல் மானியத்தைப் பெற்று வருகின்றன. சராசரியாக ரூ. 26 லட்சம் உதவி மானியமாகக் கொடுக்கப்படுகிறது.

II. (i) கட்டிட மானியங்கள்.—மருத்துவக் காரியங்களுக்காக கட்டிடங்கள் கட்டுவதற்கும், நிலத்தைக் கையகப் படுத்துவதற்கும், ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டில் ஒரு பாதித் தொகை, மானியமாகத் தனிப்பட்ட நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு நேர்விலும் அரசு முடிவு செய்கிற உயர்ந்தளவுக்குட்பட்டு இவ்வாறு அனுமதிக்கப்படுகிறது.

1974-75-ல் கட்டிட மானியங்கள் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(1) சுகாதாரத் தொண்டு நிறுவனம், அடையாறு, சென்னை ரூ. 1,55,925.

(2) ஏ. எஸ். பழனிசாமி நாடார், சுகாதார கூட்டுறவு சங்கம் லிமிடெட், மருத்துவ மனை, தலைவாய்ப்புரம், இராமநாதபுரம் மாவட்டம். ரூ. 16,000.

### III. கருவிகள் மானியம்.

கருவிகள் வாங்குவதற்கான செலவில் ஒரு பாதித் தொகை தனியார் மருத்துவ நிலையங்களுக்கு கருவிகள் மானியமாக வழங்கப்படுகின்றது. கருவிகளை நிறுவனங்கள் வாங்கிய பின்னரும், கருவிகள் வாங்கியது குறித்துத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளைக் கொடுத்த பின்னரும் அம் மானியங்கள் கொடுக்கப்படுகின்றன.

### IV. கிங் நிறுவனம், கிண்டி.

கிண்டி கிங் நிறுவனம் 1899-ல் தொடங்கப்பட்டது. அம்மாநிலத்திற்கு அம்மைப்பால் ஊசி சேமித்து வைக்கும் நிறுவனமாக (Vaccine Lymph Depot) இது முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது. கீழ் நாடுகளில், பொதுச் சுகாதார கருவிகள் தயாரிப்பு, கல்வி கற்பிக்கும் ஆராய்ச்சி நிலையமாக அது வளர்ச்சி அடைந்துள்ளது. அதனுடைய முக்கியப்பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

[1975 மார்ச் 13

## உறைய வைத்த அம்மைப்பால் மருந்து உற்பத்தியைப் பெருக்குதல்.

உறைய வைத்த அம்மைப்பால் மருந்து உற்பத்தி, யூனிசெஃப் உலக சுகாதார நிறுவன உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. இந்த நிறுவனங்கள் கருவிகளை வழங்கியுள்ளது. இதற்காகும் தொடர் இனச் செலவை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

நமது மாநிலத்திற்குப் 12 மில்லியன் டோஸ் (Doses) உறைய வைத்த அம்மைப்பால் மருந்து தேவைப்படுகிறது. 1970-71-ல் இந் நிறுவனத்தில் 12 மில்லியன் டோஸ் மருந்து உற்பத்தி செய்யப்பட்டு சென்னை மாநகராட்சிக்கும், இம் மாநிலத்திலுள்ள பொதுச் சுகாதாரத் துறைக்கும் வழங்கப்பட்டது.

நாட்டிலுள்ள 4 நிலையங்களில் இந்த நிறுவனம் ஒன்றாகயிருப்பதால் நாட்டின் தேவையை நிரைவு செய்ய இதன் உற்பத்தி அதிகமாக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசு கருதியது. அதற்கிணங்க, உலக சுகாதார நிறுவனம், யூனிசெஃப் ஆகியவற்றின் உதவியுடன் இதன் உற்பத்தியை 24 மில்லியன் டோஸாகப் பெருக்கியது. கடந்த இரண்டாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 24 மில்லியன் டோஸ் மருந்துகளை இந்த நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது என்பதைத் குறிப்பிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

## முந்நோய்த்தடுப்பு மருந்து.

### (தொண்டைப்புண், கக்குவான் மருந்து, தொண்டை, நச்சு எதிர்ப்பு).

1969-ல் முந்நோய்த் தடுப்பு மருந்து, தொண்டைப்புண், கக்குவான் இருமல், நச்சு எதிர்ப்பு மருந்துகளை உற்பத்தி செய்வதற்குக் கீழ்க்காணும் கட்டிடங்களைக் கட்ட அரசு அனுமதி வழங்கியது.

1. அனேரபிக் கட்டிடம் (Anerobic).

2 பாம்புப் பண்ணை.

3 குதிரைகளுக்கு 25 லாயங்கள்.

இசிவு நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி கீழ்க்கண்டவாறு பெருகியுள்ளது.

| 1969. | 7193. | 1974. |
|---|---|---|
| 1.5 லட்சம் டோஸ். | 3.5 லட்சம் டோஸ். | 5 லட்சம் டோஸ் |



1975 மார்ச் 13]

டெட்டனஸ் டாக்சாயிடு (Tetanus toxoid) உற்பத்தி 1971-ல் தொடங்கப்பட்டது. விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| 1971-72. | 1973-74. | 1974. |
|---|---|---|
| 1.69 லட்சம் டோஸ். | 2.7 லட்சம் டோஸ். | 3.9 லட்சம் டோஸ். |

தற்போது நமது மாநிலத்தின் தேவை முழுவதும் நிறைவு செய்யப்படுகிறது. இந்த உற்பத்தி 1975-ல் 8 லட்சம் டோஸ்களாக அதிகரிக்கப்படலாம்.

முந் நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தியும், நச்சு எதிர்ப்பு மருந்து உற்பத்தியும் தொடங்கப்படவில்லை.

(ஒருங்கிணைக்கப்பட்ட) தொண்டைப் புண் டெட்டனஸ் டாக்சாயிடு, கக்குவான் இருமல் மருந்து உற்பத்தி 1975-ல் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருவிகள் வாங்குதல், கட்டிடங்கள் கட்டுதல், பல கூடுதல் பணியாளர்களை நியமித்தல் ஆகியவற்றிற்கான மூன்றாவது இறுதி நிலைச் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன. இச் செயற்குறிப்பிற்கு, ரூ. 5 லட்சம் செலவாகும்.

## மருத்துவ மனைகள்.

### (அ) கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகள்.

இம்மாநிலத்தில் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகள் 18 உள்ளன. அவை விவர அட்டவணை-II-ல் வைக்கப்பட்டுள்ளன. இந்த விவர அட்டவணை 1971-72-ஆம் ஆண்டுக்கான படுக்கைகளின் எண்ணிக்கையையும், 1975-76-ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையையும் காட்டுகிறது. 1971-72-ல் படுக்கைகளின் எண்ணிக்கை 11,329 ஆகயிருந்தது. 1974-75-ல் இது 12,453 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1975-76-ல் 12,638 படுக்கைகளாக மேலும் அதிகரிக்கப்படும்.

கூடுதல் வசதிகளையளிக்கும் பொருட்டு ரூ. 163·12 லட்சம் மதிப்புள்ள 30 திட்டங்களுக்கு நடப்பாண்டில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்த விவரங்கள் விவர அட்டவணை III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1975-76-ஆம் ஆண்டிற்காக, ரூ. 19.09 லட்சம் மதிப்புள்ள 16 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படவிருக்கின்றது விவரங்கள் IV வது விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

(b) மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைகளின் முன்னேற்றம்.

(i) புறநிலை நோயாளிகள் சிகிச்சை.—புறநிலை நோயாளிகளுக்குச் சிறந்த முறையிலும் விரைவாகவும் சிகிச்சை அளிப்பதற்கு ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. நோயாளிகளைச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்க அனுமதிக்கும் மருத்துவ அதிகாரிகள் முந்திய நாள் பார்த்த நோயாளிக்கு அடுத்த நாள் சிகிச்சை அளிப்பதற்கு இருப்பதில்லை என்றும், அவர்களது பணி சுமார் 2-3 மணி நேரம் வரைதான் அளிக்கப்படுகிறது என்றும் கண்டறியப்பட்டது. புறநிலை நோயாளி சிகிச்சைப் பிரிவில் வரும் கடுமை யான நோய்க்கும் அதிர்ச்சிக்கும் உட்பட்ட நோயாளிகளைப் பிரித்து அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடு எதும் இல்லை. இவர்களில் சிலர், அகநிலை நோயாளி சிகிச்சைப் பிரிவில் சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்நிலையைப் போக்குவதற்காக நோய்க் குறியீடுகளைச் சரியாகக் கண்டு பிடிக்கவும் அடுத்த நாள் வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவும், புறநோயாளி சிகிச்சைப் பிரிவுடன் இணைக்கப்படும் செயற்கை முறையில் உயிரூட்டும் பிரிவில் அவசர சிகிச்சை அளிக்க வேண்டிய நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும், முழுவதும் தகுதி வாய்ந்த இரண்டு மருத்துவ அதிகாரிகளை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 9.7 இலட்சம் செலவில் இத்திட்டம், 1974-75 ஆம் ஆண்டில் 8 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் செயல் படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் புறநிலை நோயாளி சிகிச்சை அளிக்கும் முறையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நான்கு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் தீவிர மருத்துவச் சிகிச்சைப் பிரிவை அமைப்பதன் மூலம் இப்பணியை மேற்கொள்ளக் கருதப்பட்டுள் ளது. புறநிலை நோயாளி சிகிச்சைப் பிரிவு மருத்துவ அதிகாரிகளால் சிகிச்சைக்கு சேர்க்கப்படும் அபாயமான நிலையிலும் அதிர்ச்சியுற்ற நிலை யிலுமுள்ள நோயாளிகள், உயிர் பாதுகாப்புச் சாதனங்கள் உள்ள தீவிர மருத்துவச் சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்படுவர்.

(ii) கூடுதல் வசதிகள்.—மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு நடப்பாண்டில் கீழே குறிப்பிட்டுள்ள கூடுதல் வசதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(1) சென்னை, ஸ்டான்லி மருத்துவ மனையில் 100 படுக்கைகள் கொண்ட தொகுதி ஒன்றைக் கட்டுதல்.

(2) சென்னை, ஸ்டான்லி மருத்துவ மனையில் 100 படுக்கைகள் கொண்ட ராஃபில் தொகுதி வார்டில் அடித்தளத்தின் ஒரு பகுதியை யும், முதல் மாடி முழுவதையும் கட்டுதல்.

(3) சென்னை, கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மகப்பேறு தொகுதி கட்டுதல்.



(4) சென்னை, ராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் புற்று நோய்த் தொகுதி.

(5) சென்னை, ராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் புற்று நோய் தொகுதியின் அடித்தளம் முதல் மாடி; இரண்டாவது மாடி.

(6) சென்னை, கஸ்தூரிபா காந்தி மகளிர்-சிறுர் அரசினர் மருத்துவ மனையில் குறைமாதக் குழந்தைகள் பிரிவு.

(7) தஞ்சாவூர், ஆர் எம். மருத்துவ மனையில் சிசு நோய் மருத்துவ வார்டு.

(8) மதுரை, எர்ஸ்கின் அரசுசினர் மருத்துவ மனையில் சிசு நோய் மருத்துவப் பிரிவு.

(iii) 1974-75 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட சாதனங்கள்.—

(1) B.D.L.X-கதிர் குழாய் உள்ளேயே பொருத்தப்பட்ட நோய்க் குறியறியும் B.E.L. புதிய குழாய் வாங்குதல்.

(2) குழந்தை நல மருத்துவமனைக்கு ஆய்வுக்கூட இரசாயன பொருட்கள் வாங்குதல்.

(3) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு பர்ட்ஸ் சுவாசக் கருவி வாங்குதல்.

(4) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு ஃப்ளேம் புகைப்பட மானி வாங்குதல்.

(5) தெரமரைட் ஹைப்போ தெர்மியா இயந்திரம் (Theramerite Hypo Thermia Machine) வாங்குதல்.

(6) மதுரை மருத்துவக் கல்லூரிக்கு பென்னட் சுவாசக் கருவி வாங்குதல்.

(7) சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கு ஆஸ்ட்ரப் குருதி நுண்மங்கள் ஆய்வுச் சாதனம் வாங்குதல்.

(8) ராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு நடமாடும் குளிர் கலம் வாங்குதல்.

(9) D. X. கதிர் இயந்திரத்தில் குழாய் மாற்றிச் செப்ப னிடுதல்.

[1975 மார்ச் 13

(10) செங்கற்பட்டு, மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஆக்ஸி ஜன், நைட்ரஸ்-ஆக்ஸைடு உற்பத்தி இயந்திரங்களுக்கு வகை செய்தல்.

(11) சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையின் மருத்துவ ஊர்திப் பிரிவுக்கு (இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவு) சில சாதனங்களை வாங்குதல்.

(12) சென்னை, அரசினர் மகளிர்-சிறுர் மருத்துவ மனைக்கு கோபால்ட் 60 கதிர் வீச்சு மருத்துவ இயந்திரம்.

(13) ராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு ட்யூவல்டிரேஸ் மானிட்டர்.

(iv) நீர் வழங்கல் ஏற்பாடு.—சென்னை மாநகரிலுள்ள மருத்துவ மனைகளுக்கு மாநகராட்சி நீர்வாயில்களிலிருந்தும், மருத்துவ மனை வளவுக்குள் அமைந்துள்ள கிணறுகளிலிருந்தும் நீர் வழங்கப்பட்டு வரு கிறது. வறட்சி நிலைமையின் காரணமாக குறைவான அளவுக்கு நீர் வழங்கப்படுவதால் கூடுதலாக கிணறுகளைத் தோண்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்காக கடந்த 4 திங்களில் அரசு ரூ. 14.77 லட்சம் வழங்க அனுமதி அளித்ததுள்ளது.

(c) புதிய செயற்குறிப்புகள்.

(i) பாலரங்கபுரம் மருத்துவமனை.

மதுரை மாநகரில் கூடுதல் மருத்துவ வசதிக்காக வளர்ந்து வரும் தேவையும் T. V. S. அதிகாரிகள் அளித்த ரூ. 5 லட்சம் நன்கொடை யையும் கருத்திற்கொண்டு தென்மதுரை பாலரங்கபுரத்தில் T. V. S. அதி காரிகள் அளித்த நன்கொடை உட்பட ரூ. 14.20. லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அரசினர் மருத்துவமனை ஒன்றைப் புதிதாகக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மதுரை மாநகராட்சி மன்றம் மருத்துவ மனையைக் கட்டுவதற்காக 4 எக்கர் நிலத்தை அரசிடம் ஒப்படைத்துள்ளது. இத்திட்டம் 4 ஆண்டுக் காலத்திற்கு மேற்கொள்ளப்படுகிறது; பணி தொடங்கப்பட்டுள்ளது.

(ii) புறநகர் மருத்துவ மனைகள்.

சென்னை மாநகரமும் அதன் எல்லையோரப் பகுதியும் அளவிலும் மக்கட் தொகையிலும் வளர்ந்துள்ளதானது சென்னை மாநகரிலும் அதனை சுற்றிலும் அதிகமான மருத்துவ வசதிகளுக்கு வகை செய்ய வேண்டிய நிலைமையைத் தற்போது சில ஆண்டுகளாக ஏற்படுத்தியுள்ளது. மாநகர மருத்துவ மனைகளில் வசதிகள் அதிகப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், புறநிலை நோயாளி பிரிவில் சிகிச்சைக்கு வருபவர்களும் மருத்துவ மனை யில் சேர்த்துக் கொள்வதற்கு வருகிறவர்களும் அதிக அளவில் உள்ள னர்.



1975 மார்ச் 13]

சென்னை மாநகராட்சி நடத்திவரும் மருந்தகங்கள் போதுமான பணி யாளர்களைக் கொண்டதாய் இருந்தால் இவர்களில் சிலருக்கு சிகிச்சை அளிக்கும் பணியை மேற்கொள்ளலாம். எனினும் இத் தேவையை நிறைவு செய்ய இதுமட்டும் போதுமானதாயிராது. புறநகர் மருத்துவ மனைகளை ஏற்படுத்துவதற்கு வகை செய்வதே இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இதனைக் கருத்திற்கொண்டு கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், தண்டையார்பேட்டை, பெரம்பூர், தேனாம்பேட்டை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு புறநகர் மருத்துவ மனையை ஏற்படுத்த அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், தண்டையார்பேட்டை ஆகிய இடங்களில் மருத்துவமனைகளை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள் ளது.

(1) கலைஞர் கருணாநிதி நகர் மருத்துவமனை.

முதலில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைக் கட்டுவதறகுத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூபாய் 30 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட் டுள்ளது. நிலம் முதலியவற்றை மேற்கொள்வதற்கான தொடக்க ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(2) அறிஞர் அண்ணா நகர் மருத்துவமனை.

ரூபாய் 28.02 லட்சம் மொத்த செலவில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையைத் தொடங்குவதே இச்செயற்குறிப்பாகும். தொடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(3) தண்டையார்பேட்டை மருத்துவமனை.

இந்த மருத்துவமனையும் 100 படுக்கைகளை உடையதாகும். ரூபாய் 32·34 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம் மருத்துவ மனைக் கான அடிக்கல்லை 4—12—1974 அன்று மாண்புமிகு முதலமைச்சர் நாட்டினார்.

(iii) டாக்டர் கலைஞர் கருணாநிதி புதுவாழ்வு செயற்கை உறுப்பு பொருத்தும் நிலையம்.

1954-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் அரசினர் பொது மருத்துவ மனை, முட நீக்கியல் அறுவை சிகிச்சைத் துறையில் உடற்கூறு மருத்துவம் முடம் நீக்கிப் புது வாழ்வளிக்கும் சிறு பிரிவைத் தொடங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இயற்கை முறை மருத்துவப்பணி தொடங் கப்பட்டதையொட்டி மேற்படி துறை அமைக்கப்படும். முடவர்களுக்குப் புது வாழ்வளிப்பதற்கென்றே தனி நாட்டம் செலுத்தும் வகையிலும் அவர்களுக்கு இயற்கை முறை மருத்துவம், தொழில்முறை மருத்துவ

வசதிகள் செய்து கொடுக்கும் வகையிலும், அவசியமான செயற்கை உறுப்புகள் பொருத்தும் வசதிகள் இங்கு முன் இல்லை. செயற்கை உறுப்பும், இணைப்பு உறுப்பும் பொருத்த வேண்டிய அவசியமும் சமூக—தொழில்முறை புதுவாழ்வுக்கான அவசியமும் தோன்றியுள்ளன. முடமானவர் வகையில் பெருகி வரும் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, பொதுமருத்துவமனைக்கு வெளியே புதுவாழ்வு—செயற்கை உறுப்பு நிலையம் ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது ; 150 படுக்கைகளும் அதே அளவில் புறநிலை நோயாளிகள் சிகிச்சை வசதியும் கொண்ட மாநில நிலையில் அமைந்த பணி—பயிற்சி ஆராய்ச்சி நிலையமாக இது இருக்கும். இந்நிலையம் சுமார் 20 தொழில்முறை மருத்துவர்களுக்கும் 20 இயற்கைமுறை மருத்துவர்களுக்கும் பயிற்சி அளிப்பதுடன் உடற்கூறு மருத்துவக் கல்வியில் பட்ட மேற்படிப்பு தகுதி பெறுவதற்கு மருத்துவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கும். இது கலைஞர் கருணாநிதி நகரில் அமைக்கப்படும். இத்திட்டத்திற்கு ரூபாய் முப்பது லட்சம் தொடரா இனச் செலவும் ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் ஐந்து லட்சம் தொடரினச் செலவும் ஏற்படும். ரூபாய் இருபது லட்சம் மானியம் வழங்குமாறு இந்திய அரசிடம் எழுதிக் கேட்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(iv) ஃபிரீடா மோன்னியர் மருத்துவமனை, களக்காடு : எம்பியரி அமைதிப்பணி நிறுவனம் (இது ஒரு பெல்ஜியம் நிறுவனமாகும்). திருநெல்வேலி மாவட்டம் களக்காட்டில் தற்போது ஒரு சில ஆண்டுகளாக ஃபிரீடா மோன்னியர் மருத்துவமனையை நடத்தி வந்துள்ளது. இந்த மருத்துவ மனையில் அகநிலை நோயாளிகளுக்கும் புறநிலை நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கு X கதிர் வசதிகளும் மகப்பேறு பிரிவும் உள்ளன. இம் மருத்துவ மனையில் இயல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு ஒன்றும் உள்ளது. இம் மருத்துவமனையில் ரூ. 4,45,000 மதிப்புடைய பொருட்களும் சாதனங்களும் இருப்பதாக மதிப்பிடப்பட்டது. பெல்ஜியம் நிறுவனம், இம்மருத்துவ மனையைத் தொடர்ந்து நடத்த முடியாததை முறையிட்டு, இம் மருத்துவ மனையை ஏற்றுக் கொள்ளுமாறு அரசைக் கேட்டுக் கொண்டது. இம் மருத்துவமனை களக்காட்டிலும் அதனைச் சுற்றிலுமுள்ள மக்களுக்கு ஆற்றிய நற்பணியைக் கருதிப் பார்த்து 1974 அக்டோபரில் இம்மருத்துவ மனையை ஏற்று நடத்த அரசு முடிவு செய்துள்ளது. இதன் சொத்துக்கள் அரசிடம் ஒப்படைக்கப்படும். இந்த மருத்துவமனையை நடத்துவதற்கு ஆகும் ஆண்டுத் தொடர் செலவு ரூ. 1,77,000 ஆகும். மக்களுக்குத் தொடர்ந்து மருத்துவப்பணி நல்குவதுடன், இந்த மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மாணவர்களும், பயிற்சி மருத்துவர்களும் சமூகப் பாதுகாப்பு மருத்துவத்தில் பயிற்சி பெற புறநகர் கிராமநிலையமாகவும் செயல் புரியும்.

## பகுதி B.

(பொதுச் சுகாதாரப் பணிகள் இயக்குநர்).

(vi and vii) மாவட்ட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள்' வட்டத்திலுள்ள பிற மருத்துவமனைகள்.—மாவட்ட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்டத்திலுள்ள பிற மருத்துவமனைகள், இயல் மருத்துவ ஊர்திப் பிரிவுகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் மூலமாகப் பொதுமக்கள் மருத்துவ வசதியைப் பெறுகின்றனர். தற்போது இந்த மருத்துவமனைகளில் ஒட்டு மொத்தமாக 10,770 படுக்கைகள் உள்ளன. இவை நீங்கலாக, மருத்துவக் கல்லூரியிணைந்த மருத்துவமனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் 12,453 படுக்கைகள் உள்ளன. இவற்றில் ஆண்டொன்றுக்கு மொத்தம் 23.62 இலட்சம் நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர். 330.62 இலட்சம் பேர் புறநிலை நோயாளிகளாகச் சிகிச்சை பெறுகின்றனர். 1973–74, 1974–75, 1975–76 ஆகிய ஆண்டுகளில் மருத்துவமனைகள், அவற்றில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் விவர அறிக்கை viii-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



மாவட்ட மருத்துவமனைகள்.—மொத்தம் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் 1974–75-ஆம் ஆண்டில் இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 3,943 ஆகும். 'மாநிலத் திட்ட ஆணைக்குழு செய்த பரிவுரையின் அடிப்படையில், மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளை படிப்படியாகத் தரமுயர்த்த அரசு கருதியுள்ளது. இந்த மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் படுக்கை எண்ணிக்கை 400-க்குக் குறையாமலும் 650-க்கு மிகாமலும் இருக்குமாறு உயர்த்தப்படும். இவ்வகையில் நாகர்கோவில், தருமபுரி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளை இந்த ஆண்டில் தரமுயர்த்த அரசு கருதியுள்ளது. மேலும், 1974–75-ஆம் ஆண்டில், திண்டுக்கல்லில், மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கைதிகள் வார்டு ஒன்று கட்டவும், வேலூரிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் சலவைத்துறை ஒன்று கட்டவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்டங்களில் உள்ள மக்களுக்குச் சிறப்புச் சிகிச்சை யளிக்கும் கருத்துடன், அரசு, படிப்படியாக சிறப்புச் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தக் கருதியுள்ளது. கீழ்க்கண்டவற்றுக்கு அரசு 1974–75-ல் அனுமதி வழங்கியுள்ளது—

| | (செலவு). (ரூ. இலட்சத்தில்). |
|---|---|
| 1. தருமபுரியிலுள்ள அரசினர் தலைமையிட மருத்துவமனையில் குருதிச் சேமிப்பு நிலையம். | 0 21 |
| 2. ஈரோட்டிலும், திருச்சிராப்பள்ளியிலும் காது—மூக்கு—தொண்டை சிகிச்சைப் பிரிவு. | 1·41 |
| 3. ஈரோடு தலைமையிட மருத்துவமனையில் மேகநோய் சிகிச்சைப் பிரிவு. | 0·33 |
| 4. நாகப்பட்டினத்திலும், இராமநாதபுரத்திலும் முட நீக்கியல், வெளி நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு. | 1·90 |

[1975 மார்ச் 13

| | |
|---|---|
| 5. காஞ்சீபுரம் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் குழந்தைகள் நோய் சிகிச்சைப் பிரிவு. | 0·39 |
| 6. சேலம், திருச்சி மாவட்டத் தலைமையிட மருத்துவமனை களில் கண்ணோய் சிகிச்சைப் பிரிவு. | 1·33 |

1975-76-ம் ஆண்டில் புதுக்கோட்டையிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில், ரூ. 1 இலட்சம் செலவில் கூடுதலாக "எக்ஸ்" கதிர் சாதன வசதிகள் அமைக்கப்படும்.

வட்டத் தலைமையிட மருத்துவமனைகள்.—மொத்தம் 97 வட்டத்தலைமை யிட மருத்துவமனைகள் உள்ளன; அவற்றில் 4,451 படுக்கைகள் உள்ளன. இவ்வெண்ணிக்கையை 1975–76-ல் 4,475 ஆக உயர்த்தக் கருதப்பட்டுள் ளது. நடப்பாண்டில் 1974–75-ல் வட்டத்தலைமையிட மருத்துவமனைகளுக்கு கீழ்க் காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

| | (செலவு) (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1. கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப் பேட்டையில் அரசு மருத்துவமனையில் நவீன சமையற்கூடம் கட்டுதல். | 0·33 |
| 2. திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டையில் அரசு மருத்துவமனைக்கு நீர் வழங்கு வசதிகள் செய்தல். | 0.22 |
| 3. தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலத்தில் அரசு மருத்துவமனையில் பிண அறுவைச் சோதனைக் கொட்டகை கட்டுதல். | 0.23 |
| 4. தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனத்திலும், சேலம் மாவட்டம் நாமக்கல்லிலும் அரசு மருத்துவமனைகளில் குருதிச் சேமிப்பு வங்கிகள். | 0.42 |
| 5. செய்யாறு, தேனி, விழுப்புரம், அறந்தாங்கி, அரக் கோணம் ஆகிய ஊர்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பல் மருத்துவப் பிரிவுகள். | 1.16 |

நடப்பாண்டில், திருப்பத்தூரில் உள்ள அரசினர் மருத்துவமனையில் 48 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு கட்டுதல், ஹோசூரில் புதிதாக 25 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுதல், சீர்காழியில் 20 படுக்கைகள் கொண்ட பேறு கால வார்டு ஒன்று கட்டுதல் ஆகிய பணிகள் முடிந்தன.

1975-76-ஆம் ஆண்டில் ரூ. 1.24 இலட்சம் செலவில் வட்ட மருத்துவ மனைகளில் மேலும் 4 பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் கட்டக் கருதப் பட்டுள்ளது.



1975 மார்ச் 13]

கட்டிடங்கள்.—1975–76-ஆம் ஆண்டில், ரூ. 13.67 இலட்சம் செலவில் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது :—

| | (செலவு) (ரூ. இலட்சத்தில்). |
|---|---|
| 1. இராணுவ வீரர்கள் துயர் தணிப்பு நிதியிலிருந்து முன் னாள் படை வீரர் நலனுக்காக 12 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றை 16 வட்ட மருத்துவமனை களிலும் கட்டுதல். | 5.00 |
| 2. மாயூரம் அரசு மருத்துவமனையில் பண்டகசாலை கட்டுதல். | 0.21 |
| 3. திருச்செங்கோடு அரசினர் மருத்துவ மனையில் 24 படுக்கை கள் கொண்ட வார்டு கட்டுதல். | 1.75 |
| 4. துறையூர் அரசினர் மருத்துவமனையில் எக்ஸ்—கதிர்— தொகுதிக் கட்டிடம் கட்டுதல். | 0.50 |
| 5. தாம்பரம் அரசினர் மருத்துவமனையில் காத்திருக்கும் கொட்டகை கட்டுதல். | 0.63 |
| 6. திண்டிவனம் அரசினர் மருத்துவமனையில் சாக்கடைக் கால்கள், நடைபாதைகள் அமைத்தல். | 0.19 |
| 7. சீர்காழி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்காக வாங்கப்பட்ட புதிய மனையின் தளமட்டத்தை உயர்த்து வதற்கு வகை செய்தல். | 0.34 |
| 8. திருவண்ணாமலையிலுள்ள அரசினர் மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல். | 5.00 |
| | 13.67 |

எக்ஸ்—கதிர் சாதனங்கள்.—கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எக்ஸ் கதிர் சோதனைக்கு அதிக வசதிகள் செய்து தரும் பொருட்டு, நடப்பாண்டில் கீழ்க்காணும் வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் எக்ஸ்–கதிர் சாதனங்களை நிறுவ நடப்பாண்டில் அனுமதி வழங்கப் பட்டுள்ளது :—

1. அரசினர் மருத்துவமனை, சிதம்பரம், தென்னார்க்காடு மாவட்டம்.
2. அரசினர் மருத்துவமனை, லால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அரசினர் மருத்துவமனை, மேலூர், மதுரை மாவட்டம்.

4. அரசினர் மருத்துவமனை, ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்.

5. அரசினர் மருத்துவமனை, காரைக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.

(ஈ.சி.ஜி. சாதனம்) இருதயத் துடிப்புப் பதிவு மின்னியங்கு சாதனம்.

1974–75-ல் 10 வட்ட மருத்துவமனைகளில் ரூ. 1 லட்சம் செலவில் இருதயத் துடிப்பு பதிவு மின்னியங்கு ஈ.சி.ஜி. சாதனங்கள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1975–76 ஆம் ஆண்டில் மேலும், இரண்டு வட்ட மருத்துவமனைகளில் எக்ஸ் கதிர் சாதனங்கள் நிறுவப் படும்.

வட்டத்திலுள்ள பிற மருத்துவமனைகள் :

வட்டங்களில், வட்ட மருத்துவமனையல்லாத ஏனைய மருத்துவமனைகள் 109 உள்ளன. அவற்றில், 1974 படுக்கைகள் உள்ளன. நடப்பாண்டில் கீழ்க்காணும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

| | (செலவு) (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 1. நீலகிரி மாவட்டம் பாலாடாவில் உள்ள அரசு மருத்துவமனையில் நவீன சமையற்கூடம் கட்டுதல் | 0.10 |
| 2. தென்னார்க்காடு மாவட்டம், திட்டக்குடியில் அரசு மருத்துவமனையில் பிணப் பரிசோதனைக் கொட்டகை கட்டுதல் | 0.25 |

1975–76ஆம் ஆண்டில் ஏர்க்காடு அரசினர் மருத்துவமனையில் ரூ. 60,000 செலவிலும், பாபநாசம் அரசினர் மருத்துவமனையில் ரூ. 40,000 செலவிலும் அறுவை சிகிச்சைக் கூடங்கள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

இயல் மருத்துவப் பிரிவுகள் :

கிராமப் பகுதிவாழ் மக்களுக்குப் பணி புரிவதற்கெனத் தற்போது 13 இயல் மருத்துவப் பிரிவுகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| | இயல் மருத்துவப் பிரிவுகள் எண்ணிக்கை. |
|---|---|
| 1. தருமபுரி .. .. .. .. .. | 3 |
| 2. திருநெல்வேலி .. .. .. .. | 1 |
| 3. மதுரை .. .. .. .. .. | 2 |
| 4. நீலகிரி .. .. .. .. .. | 2 |
| 5. தென்னார்க்காடு .. .. .. .. | 1 |
| 6. கோயம்புத்தூர் .. .. .. .. | 2 |
| 7. இராமநாதபுரம் .. .. .. .. | 1 |
| 8. செங்கற்பட்டு .. .. .. .. | 1 |
| மொத்தம் | 13 |





இந்த இயல் மருத்துவப் பிரிவுகள் 1973–74 ஆம் ஆண்டில் 1,31,086 நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்துள்ளன.

VIII. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மேற்கொள்ளுதல்.

முன்னாள் மாவட்டக் கழக மருந்தகங்களைப் படிப்படியாகத் தாமே மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. 1968ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாளன்றுள்ளபடி மொத்தம் 268 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மேற்கொள்ளவேண்டியிருந்தது. இவற்றில், கீழே கொடுத்துள்ளவாறு 101 மருந்தகங்களை மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது ; இவற்றின் விரிவான பட்டியலை விவர அறிக்கை VI-ல் காணலாம் :—

| | |
|---|---|
| முன்னாள் மாவட்டக் கழக மருந்தகங்கள் .. | 64 |
| ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் .. .. | 28 |
| கிராமப் பகுதி மருந்தகங்கள் .. .. | 5 |
| நகராட்சி மருந்தகங்கள் .. .. .. | 4 |
| மொத்தம் | 101 |

2. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்பதற்காக 1972–73ஆம் ஆண்டிற்குப் பின்னர், விதிக்கப்பட்டுள்ள அடிப்படை விதிகள் பொது வகையாகப் பின்வருமாறு :—

(a) தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்கள் குறைந்தது ஈராண்டு கட்காயினும் சரியான பேணுதற் செலவைக் கொடுக்க ஒப்புக்கொள்ள வேண்டும்.

(b) ஊராட்சி ஒன்றியங்களும் பொது மக்களும் குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக வழங்க வேண்டும்.

(c) ஒரே ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மருந்தகத்தை மேற்கொள்வது பற்றிப் பரிசீலிக்கக் கூடாது.

(d) ஊராட்சி ஒன்றியம் இதற்குத் தேவையான கட்டடங்களையும் வெற்று நிலங்களையும் (குறைந்தது 2 ஏக்கர்கள்) அளிக்க வேண்டும்.

3. அரசு மேற்சொன்ன ஆணை பிறப்பிக்கப்பட்ட 101 மருந்தகங்களில், இன்றுள்ளபடி உண்மையில் 77 மருந்தகங்கள் மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இன்னும் அரசு மேற்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படுவதற்காக, முன்னாள் மாவட்டக் கழக மருந்தகங்கள் 122-ம், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் 54-ம் உள்ளன. இவற்றில், 9 மருந்தகங்கள் தொடர்பாக மேற்சொன்ன அடிப்படை விதிகளை நிறைவு செய்ய அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் முன்வந்துள்ளன. வேறு சில ஊராட்சி ஒன்றியங்கள் மேல் சொன்ன அடிப்படை விதிகளை ஓரளவு நிறைவு செய்ய முன் வந்துள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர அரசால் மேற்கொள்ளப்படுவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ள கிராம, நகராட்சி, தனியார் மருந்தகங்களும் சில உள்ளன.

4. மருந்தகங்களை அரசு மேற்கொள்வதற்காக 1975–76ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 12.4? இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## IX. காச நோய்த் தடுப்புத் திட்டம்.

தமிழ்நாட்டில் 7.6 இலட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டனர் என்று 1955-58 ஆண்டுகளில் நடத்திய ஆய்வு காட்டுகிறது. இந்த நோயைக் கண்டறிந்து சிகிச்சையளிக்கும் பொருட்டு, காச நோய்த் தடுப்பு தேசியத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இத் திட்டம் 1963ஆம் ஆண்டிலிருந்து செயலில் உள்ளது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவடைவதற்குள் மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் சென்னை மாநகரத்திலும் (தருமபுரி நீங்கலாக) மாவட்டங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்பட்டது, நான்காவது திட்டக் காலத்தில் மாவட்ட காச நோய்த் தடுப்புத் திட்டம் தருமபுரி மாவட்டத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. புதிதாக ஏற்படுத்தப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன. 13 மாவட்டக் காச நோய்த் தடுப்பு நிலையங்கள், சென்னையிலுள்ள காச நோய்த் தடுப்பு செய்முறை விளக்கப் பயிற்சி நிலையம் தவிர, 8 இதய நோய் சிகிச்சை நிலையங்களும், 863 புறநகர் மருத்துவ நிலையங்களும் (அரசு மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருந்தகங்கள்) உள்ளன. அங்கு மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் காச நோயைக் கண்டுபிடித்து சிகிச்சையளிப்பதற்கான வசதிகள் அளிக்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் இதுவரை 5.8 இலட்சம் காச நோயாளிகளுக்கு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகிறது. அவர்களில் சுமார் 1·2 இலட்சம் பேருக்கு (தற்காலிகமானது) முழுக் கால அளவிற்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

காச நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும், அவசர சிகிச்சை செய்யப்படவேண்டிய நோயாளிகளுக்கும், அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டிய நோயாளிகளுக்கும், அவர்களுக்கு அகநிலை நோயாளிகளாக அரசு, தனியார் காச நோய் நலம் பேண் மருத்துவ மனைகளிலும், (அரசு, தனியார்) பொது மருத்துவ மனைகளிலும் இணைக்கப்பட்டுள்ள காச நோய் வார்டுகளிலும் 3,230 படுக்கைகள் உள்ளன.

மாவட்ட காச நோய்த் தடுப்பு நிலையம் ஒவ்வொன்றுடனும் பி.சி.ஜி. குழு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. அதிகம் பேருக்கு காச நோய்த் தடுப்பு ஊசி போடும் பொருட்டு; வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மேலும் ஒரு பி.சி.ஜி. குழுவை ஏற்படுத்துவதற்கு மாநில அரசு அனுமதி வழங்கியுள்ளது. மாநில அளவில் பி.சி.ஜி. மேற்பார்வைக் குழு ஒன்று செயற்பட்டு வருகிறது. அது மாநிலத்திலுள்ள பி.சி.ஜி. குழுக்களின் பணியை மேற்பார்வையிடுகிறது. 1975-76-ல் இப்பணிகளை விரைவுபடுத்த மேலும் இரண்டு பி.சி.ஜி. பிரிவுகளை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. தமிழ்நாடு காச நோய்த் தடுப்புக் கழகம் காச நோய் வில்லை விற்பனை இயக்கங்கள் 24ஐ வெற்றிகரமாக நடத்தியுள்ளது. 25 ஆவது இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வசூலாகும் தொகை அந்தந்த மாவட்டங்களில் காச நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. கடந்த 7 ஆண்டுகளில் காச நோய்த் தடுப்பு வில்லைகள் விற்பனையை அதிக அளவில் செய்ததற்காக தமிழ்நாடு காச நோய்த் தடுப்புக் கழகத்திற்கு சுழல் கேடயம் ஒன்றை இந்திய காச நோய்த் தடுப்புக் கழகம் வழங்கியுள்ளது. இந்தக் கேடயத்தை தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு பெற்றதால் தமிழ்நாடு காச நோய்த் தடுப்புக் கழகத்திற்குக் கேடயத்தினை நேர் படி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.





### தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்.

இந்தியாவில் அதிக அளவில் கொள்ளை நோய் தோன்றிப் பரவும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 1971 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்திலுள்ள 411 இலட்சம் மக்கள் தொகையில் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கு 19 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அடிப்படையில் பார்த்தால் சுமார் 7·5 இலட்சம் தொழு நோயாளிகள் உள்ளனர்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர், தொழு நோயாளிகளுக்காக சில குடியிருப்புகளை கிறித்தவ சமய நிறுவனங்கள் பராமரித்து வந்தன. திட்டப் பணிகள் தயாரிக்கப்பட்ட போது, தொழு நோயை தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் ஒன்றாக மேற்கொள்ள கருதப்பட்டது. ஏனெனில் இந்நாட்டிலுள்ள முக்கிய நோய்களில் இதுவும் ஒன்றாக இருந்தது. உடல் ஊனத்தையும், மனித சக்தி இழப்பையும் இந்நோய் ஏற்படுத்துகிறது.

1956 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு திட்டக் காலத்திலும் சில கட்டுப்பாட்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒவ்வொரு திட்டக் காலத்திலும் தொடங்கப்பட்ட புதிய திட்டங்களுக்காகவும் செலவில் சிறிதளவு தொகையை மட்டுமே மத்திய அரசு அளித்து வந்தது. தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் தேசியத் திட்டத்தின் அடிப்படையில், சில அனைத்து நாட்டு நிறுவனங்களும், பல தொண்டு நிறுவனங்களும் தொழு நோய்க் கட்டுப்பாட்டுப் பணியைத் தொடங்கியுள்ளன. 1969-க்கு முன்னர் அரசு 42 இலட்சம் தொழு நோயாளிகளையும், தொண்டு நிறுவனங்கள் 60 இலட்சம் தொழு நோயாளிகளையும் கவனித்தன. நான்காவது திட்டக் காலத்தில் தொழு நோய்க் கட்டுப்பாட்டிற்காகத் தொடங்கப்பட்ட புதிய திட்டங்களுக்கு இந்திய அரசு முழு நிதியுதவி அளித்தது. அந்த நிதியுதவியை நாம் முழுவதும் பயன்படுத்தியுள்ளோம். இக்கால அளவில் அதிக அளவிலான தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. மேலும் 70 இலட்சம் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. மேற்சொன்ன கால அளவில் 10 இலட்சம் நகர்ப்புற நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் பொருட்டு சென்னை மாநகரில் தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை தொண்டு நிறுவனம் ஒன்று மேற்கொண்டது. நான்காவது திட்டக் காலத்தின் இறுதியில் 182 இலட்சம் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

1974-75-ல் 8 லட்சம் பள்ளிச் சிறுவர்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். 7,056 பேர்களுக்கு தொழுநோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

ஐந்தாவது திட்டக் காலத்திலும் இந்திய அரசு முழு நிதியுதவியை அளித்தால் மாநிலம் முழுவதும் நகர்ப்புற, கிராம அமைப்புகளின் மூலம் தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்காலிகமான ஐந்தாவது திட்டத்தின் முதலாவது ஆண்டான 1974–75-ல் நகர்ப்புற, கிராமப்புற பகுதிகளில் 20 லட்சம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்படும். ஐந்தாவது திட்டத்தின் இரண்டாவது ஆண்டான 1975–76ல் 86 லட்சம் பேருக்குச் சிகிச்சையளிக்கக் கருதப்பட்டுள்ளது.

1974–75-ல் திருமணியிலுள்ள தொழு நோய் கட்டுப்பாட்டுக் கல்வி-ஆராய்ச்சி நிலையத்தின் குடியிருப்புப் பகுதியையும், சைதாப்பேட்டையிலுள்ள வெள்ளி விழா மருந்தகத்தையும் ~~பராமரிக்க~~ மத்திய அரசு முன் வராததால் அவற்றை மாநில அரசு மேற்கொண்டது. தற்போது, இங்கு 350 தொழு நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். D. D. S. மருந்துகளைக் கொடுத்து இவர்களது நோய் மேலும் முற்றாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

## புற்றுநோய்க் கட்டுப்பாடு.

மக்கள் தொகை அடிப்படையிலான புற்றுநோய் விவரப் பதிவேடு ஒன்று மட்டும் பம்பாயில் 1963 லிருந்து செயல்பட்டு வருகிறது. இந்நாட்டில் ஆண்டுதோறும் ஐந்து லட்சம் மக்கள் புற்று நோயினால் இறக்கின்றனர் என்பது இந்தப் பதிவேட்டிலிருந்து மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு லட்சம் மக்கள் தொகையில் 85 பேர்களுக்கு தற்போது புற்று நோய் வருகிறது என்று பம்பாய் பெருநகரில் கிடைக்கும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. 41 மில்லியன் மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 35,000 பேர் புற்று நோயால் தாக்குறும் வாய்ப்பு உள்ளது.

## அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிறுவனத்தின் நோக்கங்கள்.

புற்றுநோய்த் தடுப்பு, புற்றுநோய்க் குறிகளை கண்டறிதல், புற்று நோய் கண்டுபிடிப்பு, புற்றுநோய் சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சைக்குப் பின் பாதுகாப்பு ஆகிய துறைகளில் தற்போதுள்ள மருத்துவ அறிவின் அடிப் படையில் தொடர்ச்சியான ஏற்பாடுகளை மேற்கொள்வதே புற்றுநோய்க் கட்டுப்பாடு என்று உலக சுகாதார நிறுவன வல்லுநர் குழு ஒன்று விளக்கம் கூறியுள்ளது. மேலும் புற்றுநோய் ஏற்படுவதைக் குறைத்தல், அதிகம் பேருக்கு புற்றுநோய் சிகிச்சை அளித்தல், புற்றுநோயால் ஏலாமையுறுவதைக் குறைத்தல் ஆகியவை புற்றுநோய் ஏற்பட்டுக் குணமடைந்த பின்னர் மேற்கொள்ளும் பின்பராமரிப்புப் பணிகளாகும்.

மேற்சொன்ன கொள்கையில் அடிப்படையில், உலக சுகாதார நிறுவனத்தின் உடனுழைப்புடன் தமிழ்நாடு அரசு, காஞ்சிபுரத்தில், முதன் முதலாக புற்றுநோய்த் தடுப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி வருகிறது. இது தென்கிழக்கு ஆசியாவிலேயே முதல் வகைத் திட்டமாகும்.

புற்றுநோயை ஆரம்ப காலத்திலேயே மாநில முன்னுரிமை வசதிக்குள்ளேயே பயன்மிக்க சிகிச்சையளிப்பது அடிப்படையில் தற்போதுள்ள சுகாதாரப் பணியாளர்கள் அந்தந்த பகுதிகளின் பொருளாதார வாய்ப்புகள், சமூகப் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் அடிப் படையில் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்ட வளர்ச்சியை மதிப்பிடுவது தான் பொதுவான நோக்கமாகும்.



## நிதி வசதிகளும், செயல்வழிமுறைகளும்.

### உலக சுகாதார நிறுவனத்தின் நிதியுதவி.

இந்நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு உலக சுகாதார நிறுவனம் மானியமாக அளிக்கவிருக்கும் 20,000 அமெரிக்க டாலர்கள் (1.5 லட்சம் ரூபாய்) தவிர்த்து, கட்டிடங்கள், கருவிகள் ஆகியவை குறித்தாகும் நடைமுறைச் செலவுக்காக உலக சுகாதார நிறுவனம் மூலமாக நாட்டு நிதியுதவி அமைப்பு மூலமாக ஒரு மில்லியன் நார்வே குரோனர்கள் (இது 11 லட்சம் ரூபாய்க்குச் சமமாகும்) மானிய உதவியாக இந் நிறுவனத்திற்கு அளிக்கப்படவிருக்கிறது.

இந்நிறுவனத்திற்கு உலக சுகாதார நிறுவனம் அளித்த கருவிகள் பராமரிப்பிற்காக, நார்வே நாட்டு நிதியுதவி நிறுவனம் வழங்க ஒப்புக் கொண்ட 70,000 நார்வே நாட்டு குரோனர்களில் (இது ரூபாய் 70,000-க்கு சமமானது) ஒவ்வொரு ஆண்டும் 20 சதவிகிதம் ஐந்து ஆண்டுக் காலத்திற்குக் குறைக்கப்படும். இந்த நிதியுதவியும் உலக சுகாதார நிறுவனம் மூலமாக வழங்கப்படும்.

40,000 அமெரிக்க டாலர்கள் (இது ரூ. 3 லட்சத்திற்குச் சமமாகும்). 1968–69-ஆம் ஆண்டில் உதவி மானியமாகப் பெறப்பட்டது. ரூ. 3 லட்சத்திற்குச் சமமான 40,000—அமெரிக்க டாலர்களுக்கு ஆய்வுக்கூட சாதனங்களையும், சுகாதாரக் கல்வி சாதனங்களையும் உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ளது.

F இத் திட்டத்தைத் தொடங்கியதில், இந்த புற்றுநோய்ப் பிரச்சினையின் முக்கியத்துவம் தெரியவந்துள்ளது. எனவே, புற்றுநோய் சிகிச்சைக்காக இந்நாட்டில் கிடைக்காத விலையுயர்ந்த கதிரியக்க மருத்துவச் சாதனங்களையும் ஏனைய கருவிகளையும் வாங்குவதற்காக நார்வேநாட்டு நிதி வழங்கு நிறுவனங்களிடமிருந்து, உலக சுகாதார நிறுவனத்தின் மூலமாகக் கிடைக்கும் அன்னியச் செலாவணி அனைத்தையும் விடாமல் இறுத்திக் கொள்ளுமாறு உலக சுகாதார நிறுவனத்திற்கு நாம் எழுதியுள்ளோம். இப்போது கட்டப்பட்டு வரும் 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய்ச் சிகிச்சை மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கும், மாநிலம் முழுவதற்குமான புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் படிப்படியாக மேம்படுத்தவும். மேற்கொண்டு நிதியுதவி அளிக்குமாறு நாம் கேட்டுக் கொள்ளக் கருதியுள்ளோம்.

## மாநில விதிகள்.

கொள்ளை நோயில் சம்பந்தப்பட்ட புதிய திட்டமும், உயிர்மாக்கள் ஆய்வுப் பள்ளியும் தன்மைத்தே கொண்டு தற்போதுள்ள நிறுவனத்தைப் பராமரிப்பதில் ஆகக்கூடும் தொடரா இனச் செலவாக ரூ. 10.04 லட்சமும், தொடர் இனச் செலவுக்காக ரூ. 3·5 லட்சமும் ஆகும். இந்நிறுவனம் புற்றுநோய்த் தடுப்பில் மருத்துவர்களுக்கும்

மருத்துவத் துணைப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்கிறது. இந்நிறுவனத்திலிருந்து $4\frac{1}{2}$ மைல் தொலைவில் காரப்பேட்டை கிராமத்தில் 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய்ச் சிகிச்சை மருத்துவமனையைக் கட்டுவதற்காக, அரசு ரூ. 35·02 லட்சம் (கட்டிடங்களுக்கு ரூ. 27 லட்சம், குளிர் சாதன வசதிக்கு ரூ. 6·92 லட்சம், நிலத்தின் விலைக்கு 1.10 லட்சம்) அனுமதித்துள்ளது. அதே மருத்துவ மனைக்கு 150 படுக்கைகள் கொண்டதாக மாற்ற அரசு தற்போது ரூ. 17 லட்சத்தை அனுமதித்துள்ளது. எனவே, மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 250 ஆகிறது. இம்மருத்துவமனையிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை 350 ஆக உயர்த்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 100 படுக்கைகள் கொண்ட புற்று நோய் சிகிச்சை மருத்துவமனையின் அறுத்தலத்தின் கதிரியக்கத்தொகுதி கட்டிடம் முடிவடைந்தவுடன், குறைந்தளவு தடுப்பு மருத்துவ வசதிகள் ஏற்படுத்துவதற்காக, தொடரா இனச் செலவாக ரூ. 0.73 லட்சமும், தொடர் இனச் செலவாக ரூ. 0.68 லட்சமும் அரசு அனுமதித்துள்ளது.

<u>அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் இந்தியாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் வருங்காலத்தில் ஆற்றும் பணி.</u>

இந்திய அரசு தகவல் பிரிவின் வெளியீட்டின் படி புற்றுநோய் அறுவைச் சிகிச்சை, கதிர் வீச்சு மருத்துவம், வேதியியல் வகை மருத்துவம் போன்ற நவீன வசதிகளுடன் கூடிய 250 படுக்கை கொண்ட மருத்துவமனையாகவும் மருத்துவப்பட்டதாரிகளுக்கும், பட்ட மேற்படிப்பு மருத்துவப்பட்டதாரிகளுக்கும் பயிற்சி அளிப்பதற்கும் இந்நிலையத்தைப் புற்றுநோய்த் தடுப்பு அடங்கள் திட்டத்துடன் புற்றுநோய் சிகிச்சை ஆராய்ச்சிக்கான 11 வட்டார நிலையங்களுள் ஒன்றாகவும் மேம்படுத்த இந்திய அரசின் புற்றுநோய் மதிப்பீட்டுக்குழு பரிவுரை செய்துள்ளது.

கொள்ளை நோயியலிலும் புற்றுநோய்த் தடுப்பு குறித்து ஆரம்ப நிலையில் கண்டு பிடிக்கும் முறையிலும், மருத்துவப் பணியாளர்களுக்கும், மருத்துவத் துணை பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது தவிர, தென் கிழக்கு ஆசியாவிலேயே, இந்நிறுவனம் மாநில புற்றுநோய் மருத்துவ மனையாக மேம்படுத்தப்படும். இந் நிறுவனம் புற்றுநோய் பற்றிய அடிப்படை ஆராய்ச்சிக்குவசதி அளிப்பதும் புரையோடும் கட்டி (Oncology) பற்றி பல்வேறு கூறுகள் குறித்து பட்டமேற்படிப்பு மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கும் அறுவைச் சிகிச்சையிலும், புரைக்கட்டி மருத்துவச் சிறப்புப் பட்டம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

<u>தனியார் புற்றுநோய்ச் சிகிச்சை மருத்துவ மனைகளுக்கு மாநில உதவி.</u>

புற்றுநோய்க்குச் சிகிச்சையளிக்கும் கீழ்க்காணும் புற்றுநோய்ச் சிகிச்சை தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது :—





புற்றுநோய்ச் சிகிச்சை நிறுவனம், அடையாறு—ஆண்டொன்றுக்கு 4·25 லட்சம் (பராமரிப்பு மானியம்).

G. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை, கோயம்புத்தூர் —ஆண்டொன்றுக்கு 1 லட்சம் (பராமரிப்பு மானியம்).

**XII.** <u>மருந்துக் கட்டுப்பாடு</u> :

சுகாதார பணிகள்-குடும்ப நலத் துறை இயக்குநர் மாநிலத்தின் மருந்துக் கட்டுப்பாடு-உரிமம் வழங்கும் அதிகாரியாவார். இவருக்கு, மாநிலத் துணை மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும், மாநில மருந்து உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி இருவரும் உதவி புரிகின்றனர். 59 மருந்து ஆய்வாளர்களும், 10 முதுநிலை மருந்து ஆய்வாளர்களும் உள்ளனர்.

தமிழ்நாட்டில் 398 மருந்து தயாரிப்பு நிறுவனங்களும் 7,105 விற்பனை நிலையங்களும் உள்ளன. 1973–74-ல் 27,535 விற்பனை நிலையங்கள், 1,101 தயாரிப்பு நிறுவனங்கள், 700-க்கு மேற்பட்ட மருத்துவமனை மருந்தகம்-மருந்துக் கடைகள் மருந்து ஆய்வாளர்களால் சோதனையிடப்பட்டன. இந்தக் கால அளவில் மருந்து-ஒப்பனைப் பொருட்கள் சட்டத்தின் கீழ் 153 வழக்குகளில் வழக்குத் தொடரவும், மருந்து விலைக் கட்டுப்பாட்டு ஆணைகளின் கீழ் 46 வழக்குகள் மீது வழக்குத் தொடரவும் அனுமதி வழங்கப்பட்டன. மருந்துகள்—மாயாஜால மருந்துகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டத்தின்கீழ் 948 விளம்பரங்கள் தணிக்கை செய்யப்பட்டன.

1974–75-ல் அரசு, 1950 ஆம் ஆண்டு அபாயகரமான மருந்துச் சட்டத்தின் நிர்வாகத்தை மாநில ஆயத் துறையின் ஆட்சி வரம்பிலிருந்து மருந்துக் கட்டுப்பாட்டு நிர்வாகத் துறைக்கு மாற்ற கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது.

<u>1974–75-ல் அடைந்த சாதனைகள் :—</u>

(1) சில நிறுவனங்களும் தனியார்களும் மருத்துவமனை இலச்சினையோடு மருந்துகள் விற்பனை செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டனர். எல்லா நேர்வுகள் குறித்தும் சரியாக ஆய்வு செய்து தவறு செய்த தனி நபர்கள் மீதும் நிறுவனங்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டது.

(2) மருந்துப் பற்றுக்குறை ஏற்பட்டதன் காரணத்தால் அங்காடியிலும் மருத்துவமனைகளிலும் கிடைக்கும் மருந்துகள் பற்றி கவனமாகக் கண்காணித்து வரப்படுகிறது. பற்றுக்குறைகள் ஏற்பட்டுள்ள நேர்வுகள் அனைத்தும் இந்திய அரசின் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரியின் கவனத்திற்கு முறையாகக் கொண்டு வரப்படுகின்றன.

(3) கள்ளத்தனமாக விற்பனை செய்யப்படுதலை அல்லது மருந்துகளைப் பதுக்கி வைத்தலைத் தடுக்கும் பொருட்டு மருந்து கிடைக்கும் அளவு, அவற்றின் விலை ஆகியவை பற்றி உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மருந்து (விலைக் கட்டுப்பாட்டு) ஆணையின்கீழ் 1974ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி வரை 17 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

(4) டெக்ஸ்ட்ரோஸ் ஊசி போடப்பட்டதனால் கான்பூரில் இறப்புகள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டதையொட்டி இம்மாநிலத்தில் உடலில் செலுத்தும் கரைசலைத் தயாரிக்கும் அனைவரும் அடிக்கடிச் சோதனையிடப்பட்டனர். மாநிலத்திற்குக் கொண்டு வரப்படும் கரைசலின் தரம் பற்றி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மருந்து சோதனை ஆய்வுக்கூடம், கிண்டி "கிங்" நிறுவனத்தில் 1948 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்துள்ளது. மருந்துகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஆய்வுக்கூடத்திற்கு புதுக் கட்டிடத்தின் அடித்தளத்தைக் கட்டுவதற்கு ரூ. 5 லட்சத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேற்கொண்டு இரண்டு மாடிகள் கட்டுவதற்கும் சாதனங்கள், மரச் சாமான்கள் வாங்குவதற்கும் ரூ. 12·40 லட்சம் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## XIII. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை முகாம்.

பார்வையிழந்த லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் புத்தொளி ஏற்படுத்தும் பொருட்டு மாண்புமிகு முதல்வரின் பிறந்த நாள் விழாவையொட்டி, 1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் தேதியிலிருந்து முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை முகாம் எனப்படும் கண்ணொளி வழங்கும் மாபெரும் திட்டமொன்றை அரசு தொடங்கியுள்ளது. முதல்வரின் பிறந்த நாள் பரிசாக பொது மக்கள் வழங்கும் தொகைகள் இத் திட்டத்திற்கு மூலதனமாய் இருக்கும்.

இத் திட்டத்தைப் பயனளிக்கத் தக்க வகையில் செயல்படுத்துவதற்கு, இம் மாநிலம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; ஐந்து கண் நோய் சிகிச்சை இயலூர்திப் பிரிவுகளுக்கு—ஒவ்வொரு பிரிவும் தகுந்த பணியாளர்கள் கொண்டது—அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒவ்வொரு பிரிவும் பொறுப்புடையது. நிர்வாகக் காரியங்களுக்காக கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு கண் சிகிச்சை இயலூர்திப் பிரிவுகள் அரசு மருத்துவ நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இப் பணியை விரைவுபடுத்துவதற்கு சாதனங்கள், போக்குவரத்து முதலியவற்றுடன் பணியாளர்களைக் கொண்ட சிறப்பு மாவட்ட துணை ஆட்சித் தலைவர் பதவி ஒன்றுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.





| ஒவ்வொரு மண்டலத்தின் கீழும் உள்ள பகுதி. | கண்சிகிச்சை இயலூர்திப் பிரிவுகள் இணைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவ நிறுவனங்கள். |
|---|---|
| 1. சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு. | அரசு கண்நோய் மருத்துவமனை. |
| 2. வட ஆர்க்காடு, தருமபுரி .. .. | ஷை |
| 3. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை. | ராஜாமிராசுதார் அரசு மருத்துவமனை, தஞ்சாவூர். |
| 4. கோயம்பத்தூர், சேலம், நீலகிரி .. | கோயம்பத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்பத்தூர். |
| 5. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. .. | அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை. |

இந்த ஐந்து பிரிவுகளில், இரண்டு சென்னையில் உள்ள அரசு கண் நோய் மருத்துவமனை கண்காணிப்பாளர் மேற்பார்வையின் கீழும், பொறுப்பின் கீழும் உள்ளன. எஞ்சிய மூன்று பிரிவுகள், மதுரையிலுள்ள எர்ஸ்கின் அரசு மருத்துவமனை கண் நோய் சிகிச்சை மருத்துவர் பொறுப்பின் கீழும் உள்ளன. சாதாரணமாக, ஒவ்வொரு பிரிவும், ஒரு திங்களில் இரண்டு முகாம்களை நடத்தி சுமார் 300-லிருந்து 500 புரையோடிய கண் அறுவை சிகிச்சைகளும் கண் நோயினால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சிகிச்சையும் அளிக்கிறது.

ஆண்டு வாரியான சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்களின் எண்ணிக்கை. | புறநோயாளிகளின் எண்ணிக்கை. | புரையோடிய கண் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை. | மாலைக் கண் அறுவை சிகிச்சை எண்ணிக்கை (Refraction). | சிறிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1972–73 .. .. | 57 | 244,349 | 32,948 | 37,375 | 688 |
| 1973–74 .. .. | 80 | 244,343 | 31,931 | 27,359 | 246 |
| 1974–75 (1975–76 வரை) .. | 87 | 162,108 | 25,371 | 15,651 | 252 |
| மொத்தம் .. | 224 | 650,800 | 90,250 | 80,385 | 1,186 |

[1975 மார்ச் 13

மாவட்ட வாரியான புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| மாவட்டத்தின் பெயர். | நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாம்களின் எண்ணிக்கை. | புறநிலை நோயாளிகளின் எண்ணிக்கை | புரையோடிய கண் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை. | மாலைக் கண் அறுவை சிகிச்சை (Refraction). | சிறிய அறுவை சிகிச்சைகள். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. சென்னை .. .. | 6 | 8,979 | 624 | 1,819 | .. |
| 2. செங்கற்பட்டு .. | 23 | 30,364 | 6,290 | 5,917 | 20 |
| 3. வட ஆர்க்காடு .. | 17 | 39,364 | 7,029 | 7,700 | 9 |
| 4. தென் ஆர்க்காடு .. | 16 | 42,740 | 6,452 | 7,618 | 45 |
| 5. தருமபுரி .. .. | 8 | 16,414 | 2,154 | 5,275 | 8 |
| 6. தஞ்சாவூர் .. .. | 18 | 83,757 | 10,901 | 7,905 | 220 |
| 7. திருச்சிராப்பள்ளி .. | 19 | 75,172 | 10,619 | 6,862 | 48 |
| 8. சேலம்.. .. .. | 19 | 51,139 | 8,820 | 5,126 | 114 |
| 9. கோயம்புத்தூர் .. | 24 | 75,405 | 12,184 | 8,263 | 153 |
| 10. நீலகிரி .. .. | 7 | 22,103 | 822 | 2,102 | 174 |
| 11. மதுரை .. .. | 19 | 89,400 | 10,471 | 6,725 | 148 |
| 12. ராமநாதபுரம்.. .. | 23 | 61,977 | 6,880 | 9,109 | 137 |
| 13. திருநெல்வேலி .. | 17 | 40,358 | 5,810 | 3,621 | 87 |
| 14. கன்னியாகுமரி .. | 6 | 9,761 | 665 | 1,954 | 23 |
| 15. புதுக்கோட்டை .. | 2 | 3,415 | 519 | 369 | .. |
| மொத்தம் .. | 224 | 650,800 | 90,250 | 800,385 | 1,186 |



1975 மார்ச் 13]

கண் சிகிச்சை முகாம்களைத் தவிர, கீழ்க்கண்ட மருத்துவ மனைகளில் நிலையான கண் சிகிச்சை முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன :—

1. உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனை.
2. சேலம் தலைமையிட மருத்துவமனை.
3. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.
4. அரசு மருத்துவமனை, தாம்பரம்.
5. ஸ்டேன்ஸ் கல்யாண மண்டபம், கோயம்புத்தூர்.
6. அரசுத் தலைமையிட மருத்துவமனை, திருச்சி.
7. தமுக்கம் திடல், மதுரை.

இத் திட்டத்திற்கு சுகாதாரப் பணிகள்–குடும்ப நலத் திட்ட இயக்குநர் முழுப் பொறுப்பு வகிக்கிறார். வருவாய்த் துறை, வளர்ச்சி வட்டாரப் பணியாளர்களின் உதவியுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பிரிவு மருத்துவ அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இந்த முகாம்களை நடத்துகின்றனர்.

பணியாளர்கள் செலவு நீங்கலாக (அதாவது பணியாளர்களின் சம்பளங்கள், படிகள்) இத் திட்டத்திற்காகும் செலவு "முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் நிதி" என்று அழைக்கப்படும் சிறப்பு நிதியிலிருந்து செய்யப்படுகிறது. இத் திட்டத்திற்கான செலவு, தொடக்கத்தில் அரசு நிதிகளிலிருந்து செய்யப்பட்டு, பின்னர் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை "முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் நிதி" யிலிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

கண் புரை அறுவை சிகிச்சை ஒன்றுக்கு தோராயமாக ரூ. 55 செலவாகும் என்றும், புற நோயாளிகளுக்கு தோராயமாக ரூ. 0·50 செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. 1972–73, 1973–74 ஆகிய ஆண்டுகளுக்கான செலவுத் தொகை ரூ. 40,74,882 முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் நிதியிலிருந்து இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. 1974–75 ஆம் ஆண்டிற்கு, கண் சிகிச்சை முகாம்களுக்காக ரூ. 20 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## XIV. ஹோமியோபதி :—

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு, ஹோமியோபதி மருத்துவ முறை-ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம் இம் மாநிலத்தில் 1972 மே 5 ஆம் நாளிலிருந்து செயலில் உள்ளது. மேற்படி சட்டத்தின் விதித் துறைகளின் கீழ் அமைக்கப்பட்ட ஹோமியோபதி குழு, ஹோமியோபதி மருத்துவர்களுக்குப் பதிவு† சான்றிதழ் வழங்குவதற்கான தொடக்கப்பணியை முடித்துள்ளது. இது விரைவிலேயே சான்றிதழ்களை வழங்கும்.

50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையுடன் இணைந்த ஹோமியோபதி அரசு மருத்துவக் கல்லூரி ஒன்றைத் திறக்க அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. கல்லூரிக்கும் மருத்துவ மனைக்கும் தேவைப்படக்கூடிய இடம், 1975 மே திங்களுக்குள் சென்னை மாநகரில் ஒதுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மருத்துவமனையுடன் இணைந்த மருத்துவக் கல்லூரி, அடுத்த கல்வியாண்டிலிருந்து செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தயாரிக்கப்பட்ட தாற்காலிக செயற்குறிப்புகளுக்கிணங்க பணியாளர்களை நியமிப்பதற்கும் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையைப் பராமரிப்பதற்கும் ஆகக் கூடிய தொடர் செலவு ஆண்டுக்கு சுமார் ரூ. 3.50 லட்சம் ஆகும் கல்லூரிக்கும், மருத்துவமனைக்கும், சாதனங்கள், புத்தகங்கள், மேசை, நாற்காலிகள் போன்ற பொருள்கள் முதலியன வாங்குவதற்கு தொடரா இனச் செலவு சுமார் ரூ. 3 லட்சம் ஆகும்.

## தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு உதவி மானியம் :

தகுதியான நேர்வுகளில், தனியார் நிறுவனங்கள், சங்கங்கள் கழகங்கள், கிறுஸ்துவ சமய நிறுவனங்கள் முதலியவற்றின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு உதவி மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியங்கள், தனியார் தொழு நோய் மருத்துவ நிறுவனங்களுக்கு தலைக்கட்டு மானியமாக வழங்கப்படுகின்றன. 1974–75-ஆம் ஆண்டில், தொண்டு நிறுவனத் திற்கு உதவி மானியமாக ரூ. 33.55 லட்சம் வழங்கப்பட்டது.

## XV. இந்திய முறை மருத்துவம் :

இந்திய முறை மருத்துவத்தின் மேன்மையையும், பாரம்பரியத்தையும் மீண்டும் ஏற்படுத்தவும் குறிப்பாக, தமிழ் நாட்டிலும்தென்மாநிலங் களிலும் நாட்டுமுறை மருத்துவமாக கையாளப்பட்டு வந்துள்ள சித்த மருத்துவத்தின் மேன்மையையும், பாராம்பரியத்தையும் மீண்டும் ஏற்படுத்தவும் மிகவும் ஆவலாக உள்ளது. ஆயூர்வேத, யுனானி போன்ற ஏனைய மருத்துவ முறைகளுக்கு ஊக்கமளிக்கவும் அரசு விழைகிறது.

சென்னை மாநகர்.—100 படுக்கைகளுடன் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனை 1970-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. 100 படுக்கைகளில், 34 சித்த முறை மருத்துவத்திற்கும், 33 ஆயுர்வேத முறை மருத்துவத்திற்கும், 33 யுனானி முறை மருத்துவத் திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று இந்திய முறை மருத்துவத்திற்கும் தேவைப்படக் கூடிய மருந்துகளைத் தயாரிப்பதற்கு இந்த மருத்துவமனையுடன் மருந்தகம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. மருந்தகப் பிரிவு ஒன்றைப் புதிதாகக் கட்டுவதற்கு அரசு அண்மையில் ரூ. 3.3 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. கட்டிடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.



பிணியாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மருந்து சம்மந்தப்பட்ட பச்சை மூலிகைகள் உடனுக்குடன் கிடைக்கச் செய்வதற்காக, மருத்துவமனைக்கு அருகில் மூலிகைத் தோட்டம் ஒன்றும் வளர்க்கப் பட்டுள்ளது. இந்த மூலிகைத் தோட்டத்தை மேம்படுத்துவதற்கு 1973–74-ல் ரூ. 23,000 அனுமதிக்கப் பட்டுள்ளது.

கல்வி.—சித்த, ஆயூர்வேத, யுனானி ஆகிய மருத்துவத்தில் இரண்டாண்டுப் பட்டயப் படிப்பு வகுப்புகள் 1974–75-ல் ஆரம்பிக்கப் பட்டன. சித்த முறை மருத்துவத்தில் 15 மாணவர்களும், ஆயூர் வேத முறை மருத்துவத்தில் 5 மாணவர்களும், யுனானி முறை மருத்துவத்தில் 5 மாணவர்களும் படித்து வருகின்றனர். இது, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனையுடன் இணைந்துள்ளது. மாணவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மருந்தகங்கள்.—தற்போது 3 சித்த முறை மருந்தகங்கள் தலைமைச் செயலகம், சேப்பாக்கம், சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் செயல் படுகின்றன. திருவல்லிக்கேணியில் மற்றும் ஒரு சித்த மருந்தகம் திறக்கப்படவிருக்கிறது. இதற்கான கட்டிடம் ரூ. 49,000 செலவில் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

கட்டிடத் திட்டம்.—1974–75-ல் கீழ்க்கண்ட கட்டிடங்கள் கட்டப் பட்டன :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) சென்னை–29-ல் உள்ள அறிஞர் அண்ணா இந்திய முறை அரசு மருத்துவமனையில் 25 படுக்கைகள் கொண்ட மருத்துவத்திற்கு கூடுதல் இட வசதி (கிழக்குப் பிரிவிற்கும் பிரிவு). | 1.45 |
| (2) சென்னை–29-ல் உள்ள அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவத் திற்கு என்று 25 படுக்கைகள் அமைப்பதற்குக் கூடுதல் இட வசதி (மேற்குப் பகுதி). | 1.41 |
| (3) சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ அரசு மருத்துவமனையில் புதிய மருந்தகப் பிரிவு. | 3.56 |
| (4) சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனைக்கு எதிரே, திருவல்லிக்கேணியில் சித்த மருந்தகம். | 0.40 |

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (5) சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ அரசு மருத்துவமனையில் மருந்துச் செடிப் பண்ணை. | 0.87 |
| மொத்தம் .. | 7.69 |

அறிஞர் அண்ணா இந்திய முறை அரசினர் மருத்துவமனையில் ரூ. 5 லட்சம் செலவில் மத்திய ஆராய்ச்சி நிறுவனத்திற்கான (சித்த) கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. 1975–76-ல் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது:—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) சென்னை கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிலையத்திற்கு மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் மீது (சித்த) இரண்டாவது, மூன்றாவது மாடி கட்டுதல். | 3.90 |
| (2) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் தற்போதுள்ள சமையல் அறையை அடுத்து பண்டகசாலை அறை கட்டுதல். | 0.40 |
| (3) பாளையங்கோட்டையிலுள்ள இந்திய முறை மருத்துவக் கல்லூரியிலுள்ள மருந்தகத்திற்கு மேம்பாடு. | 1.00 |
| மொத்தம் ... | 5.30 |

ஆராய்ச்சி.—புதுடில்லியிலுள்ள, இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சி மத்தியக் குழு, மாநகரில் கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகளை அமைத்துள்ளது. செவிலியர் வசதிகள் உட்பட மருத்துவ மனையில் இடவசதி, படுக்கை வசதி ஆகியவற்றை மாநில அரசு செய்து கொடுத்துள்ளது. ஏனைய செலவுகள் அனைத்தையும், இந்திய முறை மருத்துவம்—ஹோமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு ஏற்கிறது.

(i) மத்திய ஆராய்ச்சி நிறுவனம் (சித்தா).—குடற்புண் குறித்த மருத்துவ ஆராய்ச்சி, புற்றுநோய் குறித்த மருத்துவ ஆராய்ச்சி ஆகியவை ஒவ்வொன்றிக்கும் 10 படுக்கைகளுடன் ஆராய்ச்சிப்பணி





மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் இரண்டு நோய்களுக்கு பயன் படுத்தப்படும் மருந்துகள் குறித்த மருந்தாக்க இயல் நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

(ii) அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனையில் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு (சித்தா).—சொரியாசிஸ் (Psoriasis) சீல்வாயு (Rhlumatoid Arthritic) போன்ற நோய்கள் குறித்த ஆராய்ச்சியை இப்பிரிவு மேற்கொள்கிறது. அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனையின் வளவிற்குள் மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தை (சித்தா) அமைப்பதற்கு ரூ. 5.00 லட்சம் செலவில் கட்டிடம் ஒன்று கட்ட அரசு அனுமதி வழங்கி யுள்ளது. இது கட்டப்பட்டு வருகிறது.

(iii) மருந்துகள் (சித்த) பிரிவைத் தரப்படுத்துதல்.—அடையாற்றி லுள்ள கேப்டன் சீனிவாசமூர்த்து நிறுவனம், இந்திய முறை மருத்துவ மத்திய ஆராய்ச்சிக் குழுவின்கீழ் செயல்படுகிறது. சென்னை 29-ல் உள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவ மனை வளவிற்குள் உள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் (சித்த) புதிய கட்டிடத்தில் ரூ. 3.90 இலட்சம் செலவில் இதற்கு இட வசதி செய்து கொடுக்க அரசு கருதியுள்ளது.

<u>ஏனைய சிறப்புத் திட்டங்கள்.</u>

(i) பனை ஓலைச் சுவடிகள். கையேட்டுப் பிரதிகள். மிக அரிதான அச்சிடப்பட்ட புத்தகங்கள் ஆகியவற்றைச் சேகரித்தல், அச்சிட்ட புத்தகங்களை வாங்குதல்.

(ii) சித்த மருத்துவ நூல்கள், B.I.M. and M.D. (சித்தா) பட்டப்படிப்பு பட்டமேற்படிப்பிற்குரிய சித்த பாடப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுதல்.

(iii) "மூப்பு" நிலையை வகைப்படுத்துதல்.

மேற்சொன்ன பணிகள், சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு வாலும், இக் குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்த பொறுப்பிலுள்ள சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவின் சிறப்பு அதிகாரியாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக் குழு இது வரை, கீழ்க்கண்ட வற்றைச் சேகரித்துள்ளது.

(1) பனை ஓலைச்சுவடிகள் 360.

(2) கையேட்டுப் பிரதிகள் 84. (இவற்றில், காலஞ்சென்ற டி. வி. சாம்பசிவம் பிள்ளையால் எழுத்தப்பட்ட தமிழ் அகராதியின் கையேட்டுப் பிரதியின் சுமார் 5,000 பக்கங்களை நாம் வாங்கியுள் ளோம்).

(3) மிக அரிதான அச்சிடப்பட்ட புத்தகங்கள் 561.

(4) அச்சிடப்பட்ட புத்தகங்கள் இரண்டு வாங்கப்பட்டன. அதாவது :—

(1) அகஸ்தியர் குணவாகடம்.

(2) நோய்களுக்கு சித்த மருத்துவ சிகிச்சை (ஒவ்வொன்றிலும் 500 படிகள்).

இதைத்தவிர "யாமக வெண்பா" என்று அழைக்கப்படும் புத்தகம் ஒன்றின் 500 படிகள் அரசுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

(1) நஞ்சு நூல்.

(2) பாலவாகடம் ஆகிய நூல்களின் 500 படிகளை அரசு அச்சிட்டுள்ளது.

"சித்த மருந்துகளின் வரலாறு" குறித்த புத்தகம் தமிழிலோ ஆங்கிலத்திலோ இல்லை. நமது நாட்டிலுள்ள சிறந்த மருத்துவர்கள் பலர் சித்த மருத்துவம் குறித்து அறிந்து கொள்ள ஆவலாய் உள்ளனர். சித்த முறை மருத்துவத்தை மக்கள் விரும்பி சிகிச்சை பெறச் செய்யும் நோக்கத்துடன், "சித்த மருந்துகளின் வரலாறு" குறித்த நூலை ஆங்கிலத்தில் எழுதும் பணி நமது மாநிலத்திலுள்ள பலதுறைகளில் புலமை பெற்ற அறிஞர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர், சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவில் ஒரு உறுப்பினராவார்.

தனியார் வெளியீடுகள்.—பழனியிலுள்ள, அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம், தனிப்பட்டவர்கள் எழுதிய அல்லது சேகரித்த அரிய சித்த மருத்துவ நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு ரூ. 2.00 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது. 10 நூல்களை அச்சிடும் பணி முடியும் நிலையில் உள்ளது.

மாவட்டங்கள்.—மாணவர்களுக்கு (B.I.M.) பட்டப் படிப்பில் மருத்துவப் பயிற்சி அளிப்பதற்காக பாளையங்கோட்டையில் 100 படுக்கைகளுடன்கூடிய இந்திய முறை மருத்துவக் கல்லூரி 1966–ல் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியுடன் இணைந்த இந்த மருத்துவ மனைக்கு அரசு ரூ. 8 லட்சம் செலவில் புதிய கட்டிடம் ஒன்று கட்டிக் கொடுத்துள்ளது. கல்லூரிக்கு ரூ. 10 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டியுள்ளது. 1972 டிசம்பரில், இந்திய அரசின் முழு அளவு மானியத்துடன் M.D. (சித்த) பட்ட மேற்படிப்பு தொடங்கப்பட்டது. இதனால், மருத்துவம் (சித்த மருந்துகள்) குணபாடம் (சித்தா மெட்டீரியா மெடிகா) ஆகிய துறைகள் தரமுயர்த்தப்பட்டன. மாணவர்களுக்குத் தகுந்த மருத்துவப் பயிற்சி அளிப்பதற்கும், படுக்கை வசதிகளைச் செய்துகொடுக்கும்



பொருட்டு, ரூ. 5 லட்சம் செலவில் கூடுதலாக 100 படுக்கைகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த மருத்துவமனையுடன், மருந்துகள் தயாரிக்கும் மருந்தகம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தகத்தை அமைப்பதற்கு ரூ. 1 லட்சம் செலவில் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையுடன் மூலிகைச் செடி தோட்டம் ஒன்றும் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகிய பாண்டியபுரத்தில் மருத்துவ மூலிகைகள் பண்ணை ஒன்றை அமைப்பதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மக்களிடையே இந்திய முறை மருத்துவத்தை பிரசித்தப் படுத்தும் நோக்கத்துடன், அரசு, தலைமையிடங்களிலும், 25 வட்டத் தலைமையிடங்களிலும் சித்த மருத்துவப் பிரிவுகளைத் திறந்துள்ளது. ஏனைய இந்திய முறை மருந்தகங்களின் எண்ணிக்கை முதலியன V-வது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

## XVI. குடும்ப நலத் திட்டம்.

### 1. பொது நோக்கம்.

நமது திட்டத்தில் குடும்ப நலத் திட்டம் தொடர்ந்து முதன்மை இடம் வகித்து வருகிறது. 1979ஆம் ஆண்டுக்குள் பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 35-லிருந்து 25 ஆகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டதுதான் குடும்ப நலத் திட்டக் கொள்கையாகும். குடும்ப நலத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1975 பிப்ரவரி வரை, 18,11,300 பேருக்கு கருத்தடை அறுவை சிகிச்சைகள் அளித்தல், 2,46,656 கருத்தடை வளையங்கள் பொருத்துதல் போன்றவை செய்யப்பட்டுள்ளன. பல்வேறு முறைகளுக்காக திட்ட இலக்கு வரையறுக்கப்பட்டிருக்கையில், இந்த திட்டத்தை ஒன்று அல்லது இரண்டு முறைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட முடியாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, அனுமதிக்கப்பட்ட எல்லா முறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

### 2. நிர்வாக அமைப்பு.

இந்த அமைப்பில், மாநிலத் தலைமையிடத்தில், மாநிலக் குடும்ப நலத் திட்டக் கழகம், 13 மாவட்ட குடும்ப நலத் திட்டக் கழகங்கள், 241 நகர்ப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்கள், 374 கிராமப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. நகர்ப்புற நிலையங்கள், அரசு மருத்துவ மனைகளிலும் உள்ளாட்சி மன்றங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் அமைந்துள்ளன. கிராமத்தில் குடும்ப நல நிலையங்கள் தொடக்க சுகாதார நிலையங்களில் அமைந்துள்ளன.

[1975 மார்ச் 13

## 3. பேறு காலத்திற்குப் பின் செய்யும் கருத்தடை.

அறுவைச் சிகிச்சைத் திட்டம். (Post Partum Programmo)

மகப்பேறு மருத்துவமனைகளில் மகப் பேற்றுக்காகப் பெண்கள் சேர்ந்துக் கொள்ளப்படும்போது, குடும்ப நலத் திட்ட நடவடிக்கைகளைத் தொடங்கி தீவிரப்படுத்துவது இத் திட்டத்தின் நோக்கமாகும். மகப் பேறு காலத்திலும் மகப் பேறுக்குப் பின் 4 முதல் 6 வாரங்கள் வரையிலும் அறிவுரைத்து, அறுவை சிகிச்சைக்கு செய்துகொள்ளுமாறு தாய்மார்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1973–74-ல் மகப்பேறு எய்தியவருக்குச் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைப் பிரிவுகள் 11 செயல்பட்டன. 1974–75 ஆம் ஆண்டில் இத் திட்டம் மேலும் 13 நிறுவனங்களுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது. இதனால் 24 நிறுவனங்களில், 22 அரசு மருத்துவ மனைகளில், 2 தனியார் நிறுவனங்களில் இத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

எழும்பூர், சேலம் ஆகிய இடங்களில் அரசின்கீழ் இரண்டும், தனியார் நிர்வாகத்தின்கீழ் காந்தி கிராமத்தில் ஒன்றும் ஆக 3 பயிற்சி நிலையங்கள் உள்ளன. இந் நிலையங்களில் மருத்துவ அதிகாரிகள், சுகாதார பார்வையாளர்கள் மற்றும் ஏனையோர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

## 4. இலக்குகளும், சாதனைகளும்.

1973–74, 1974–75-ஆம் ஆண்டுக்கான இலக்குகளும், சாதனைகளும் பின்வருமாறு :—

| | 1973—74. | | 1974—75. (1975 பிப்ரவரி வரை) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| கருத்தடைக்கான அறுவை சிகிச்சை. | 1,00,000 | 1,10,095 | 1,89,400 | 1,75,533 |
| கருத்தடை வளையங்கள் (IUD). | 30,000 | 23,360 | 37,000 | 21,120 |
| கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தியவர்கள். (CC). | 1,50,000 | 90,216 | 87,400 | 2,12,430 |



1971 மார்ச் 13]

சம்பந்தப்பட்ட துறைகள் இடையறாது உழைத்ததால் இச் சாதனையை அடைய முடிந்தது. சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் துறை இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சென்னை மாநகரத்தின் தனி அதிகாரி ஏனையோர் ஆகியோர் வழிகாட்டியதனால் இந்தச் சாதனையை அடைய முடிந்தது.

எனினும், குடும்ப நலத் திட்டத்திற்கான மத்திய நிதியுதவியை 1973–74-ல் 414 லட்சமாக இருந்ததை 1974–75-ல் 360 லட்சமாக இந்திய அரசு குறைத்துள்ளது. கருத்தடை அறுவை சிகிச்சைக்கும், கருத்தடை வளையம் பொருத்து வதற்கும் அளிக்கப்பட்ட மத்திய அரசு உதவித் தொகை, மாநில அரசுக்கு செலவிட்டத் தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ஒவ்வொருவருக்கும் மொத்தசெலவு. | மத்திய உதவி. | மாநில அரசின் உதவி. |
|---|---|---|---|
| 1. கருத்தடை அறுவை சிகிச்சை— | | | |
| (a) வாசக்டமி.. | ரூ. 80 | ரூ. 35— | ரூ. 45— |
| (b) டியூபெக்டமி | ரூ. 110— | ரூ. 70— | ரூ. 40— |
| 2. கருத்தடை வளையம்.— | | | |
| பொருத்துதல்.. | ரூ. 15— | ரூ. 8— | ரூ. 7— |

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

சாதனை (1975 பிப்ரவரி வரை) .. .. 1,75,533

| | சாதனை. | மொத்த செலவு. | மத்திய உதவி. | மாநில அரசின உதவி. |
|---|---|---|---|---|
| | (ரூ இலட்சத்தில்) | | | |
| வாசக்டமி .. .. .. | 1,18,856 | 95.09 | 41,60 | 53.49 |
| டியூபெக்டமி .. .. .. | 56,677 | 62.34 | 39.67 | 22.67 |
| கருத்தடை வளையம் பொருத்துதல் .. | 21,120 | 3.17 | 1.69 | 1.48 |
| | 82.96 | 160.60 | 82.96 | 77.64 |

கருத்தடை அறுவை சிகிச்சைக்கும், கருத்தடை வளையம் பொருத்துதல் திட்டத்திற்கும் கூடுதல் உதவித் தொகை அளிக்குமாறு, நாம் மத்திய அரசுக்கு எழுதியுள்ளோம். நாம் அளித்த கூடுதல் தொகைக்கு தொகை அளிக்க இந்திய அரசு இதுவரை ஒப்புக் கொள்ளவில்லை. நாட்டின் வளர்ச்சிக்குத் திட்டமிடுவதில் குடும்ப நலத் திட்டம் முக்கியப் பங்கு வகிப்பதைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசு இதை மீண்டும் பரிசீலித்து நமது வேண்டுகோளை ஏற்றுக்கொள்வது நல்லது. குடும்ப நலத் திட்டம் வெற்றி அடைந்தாலொழிய நமது திட்டங்களும், முன்னேற்றமும் நிறைவேறாது என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

5. கட்டிடத் திட்டங்கள் :

374 குடும்ப நலத் திட்டக் கட்டிடங்களைக் கட்டுவதும், 1,395 துணை நிலையங்களைக் கட்டுவதும் கட்டிடத் திட்டங்களில் அடங்கும். இதுவரை, 350 முக்கிய நிலையங்களும், 1,222 துணை நிலையங்களும் கட்டப்பட்டுள்ளன,. 4 முக்கிய நிலையங்களிலும், 30 துணை நிலையங்களிலும் பணி நடந்தேறி வருகிறது.

கட்டிடங்கள் கட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டதன் காரணமாகவும், இந்திய அரசு குறைந்தளவு தொகையை ஒதுக்கியதாலும் ஏனைய கட்டிடங்களை கட்டும் பணி மேற்கொள்ள முடியவில்லை.

6. பொதுமக்களுக்கு குடும்ப நலத் திட்டம் பற்றி அறிவுரை வழங்குதல்.

விளம்பரப் பலகைகள், சுவர் ஓவியம், உலோகப் பலகைகள், திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள், கிராமபோன் ரிகார்டு பாட்டுக்கள், அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பு, செய்தித்தாள், பத்திரிகைகளில் விளம்பரங்கள், திரைப்பட சிலேடுகள், பொருட்காட்சிகள், வினா-விடைக் கூட்டங்கள்போன்ற பல்வேறு வழிகளில் குடும்ப நலத் திட்டம் குறித்து விளம்பரம் செய்யப்படுகிறது. மாநிலக் குடும்பநலத் திட்டத்துடன் இணைக்கப்பட்ட குடும்ப நலத் திட்ட அச்சகத்தின் மூலம் "குடும்பநல செய்திக் கதிர்" என்ற பெயரில் தமிழில் மாதாந்திர செய்திக் கடிதம் ஒன்று வெளியிடப்பட்டு வருகிறது. சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், சிறு வெளியீடுகள், குடும்ப நலத் திட்டம் குறித்த சிறு வெளியீடுகள் மகப்பேறு சிறார்நல சத்துணவு, மகப்பேறு பற்றிய மருத்துவ விளக்கத்தாள்கள் ஆகியவையும் வெளியிடப்பட்டு இந்த அச்சகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலக் குடும்ப நலத் திட்டக்கழகத்தின் ஒத்துழைப்புடன், சென்னை அகில இந்திய வானொலி, பிரசித்தமான வழிகளில் ஒலிபரப்புவதற்காக "ஸ்பாட்ஸ் அண்டு ஜிங்கில்ஸ்" (Spots and jingles) என்ற புதுமையானத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. மருத்துவ வல்லுனர்கள், புகழ்பெற்ற இசை இயக்குநர்கள், கலைஞர்கள் இப்பணிக்கு நியமிக்கப்பட்டனர். குடும்ப நலத் திட்டம் சுகாதார கல்வி குறித்த இத்திட்டங்களுக்கு நேயர்கள் அதிகமாக பாராட்டு தெரிவித்துள்ளனர். குடும்ப நலத் திட்டம் குறித்து நான்கு செய்திப்படங்களும், குறுகிய நேர இரண்டு வண்ணத் திரைப்படங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டம் குறித்து 24 பாட்டுக்கள் அடங்கிய 9 கிராமபோன் இசைத் தட்டுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.



1973-74-ஆம் ஆண்டில் பெருவாரியான மக்களுக்கு குடும்ப நல அறிவுரை வழங்கிட பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொண்டதன் மூலம் ஏற்பட்ட செலவு ரூ. 6.21 இலட்சமாகும். 1974-75-ஆம் ஆண்டில் இது ரூ. 3.25 இலட்சமாக இந்திய அரசால் குறைக்கப்பட்டது.

7. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு செலவுகள் :

குடும்ப நலத் திட்டம் மத்திய அரசு உதவி பெறும் ஒரு திட்டமாகும். ஆனால், இத்திட்டத்திற்காகும் செலவில் ஒரு பகுதி மாநில அரசால் ஏற்கப்படுகிறது. 1973-74-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூ. 540.08 இலட்சம் மொத்தச் செலவில், மத்திய அரசு ரூ. 512.08 இலட்சமும், மாநில அரசு ரூ. 28 இலட்சமும் ஏற்றுக் கொண்டன. 1973-74-ம் ஆண்டில், மொத்தச் செலவு ரூ. 332.69 இலட்சமாகவும், மாநில அரசின் பங்கு ரூ. 7.39 இலட்சமாகவும் இருக்கையில், நடப்பாண்டில் 1974 டிசம்பர் வரையில், மொத்தச் செலவு ரூ. 356.09 இலட்சமாகவும், மாநில அரசின் பங்கு ரூ. 33.52 இலட்சமாகவும் இருந்தது. இத்திட்டத்தை முழுமுரப்படுத்திய தன் காரணமாக, 1974-75-ஆம் ஆண்டில் ரூ. 562.64 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ. 84.83 இலட்சமும் அடங்கும்.

8. கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைத்தல் :

கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைப்பதற்காக 56 மருத்துவ நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், மருத்துவக் கல்லூரிகளுடன் இணைத்த மருத்துவமனைகள் 9, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் 13, வட்ட மருத்துவமனைகள் 28, தொண்டு நிறுவனங்கள் 6 ஆகியவை அடங்கும். 1974-75-ம் ஆண்டில் 27 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு மேற்சொன்ன திட்டம்விரிவுபடுத்தப்படும்.

| படிப்பின் பெயர். | ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள். | சென்னை மருத்துவக் கல்லூரி. | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி. | மதுரை மருத்துவக் கல்லூரி. | தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| எம். டி. பொது மருத்துவம் .. | .. | 21 | 20 | 18 | 5 |
| மகப்பேறு மருத்துவம் மகளிர் நோய் இயல். | .. | 8 | 4 | 4 | .. |
| நோய்க் குறியியல் .. .. .. .. | .. | 4 | .. | 2 | .. |
| நுண்ணுயிரியல் .. .. .. .. | .. | 6 | .. | 2 | .. |
| உடலமைப்பியல் .. .. .. .. | .. | 4 | .. | 4 | .. |
| சிசு நோய் இயல் .. .. .. .. | .. | 17 | .. | 3 | .. |
| கதிர் வீச்சு முறையில் நோய் தன்மை அறிதல். .. | .. | 4 | .. | .. | .. |
| கதிர் வீச்சு மருத்துவம் .. .. .. | .. | 4 | .. | .. | .. |
| மயக்க மருந்தியல் .. .. .. .. | .. | 3 | .. | .. | .. |
| மேக நோயியல் .. .. .. .. | .. | 4 | .. | .. | .. |
| சரும நோயியல் .. .. .. .. | .. | 4 | .. | .. | .. |
| உயிர் வேதியல் .. .. .. .. | .. | 4 | .. | .. | .. |
| பொது அறுவை மருத்துவம் .. .. | 21 | 20 | | 18 | 3 |
| முட நீக்கியல் மருத்துவம் .. .. .. | .. | 4 | .. | 2 | .. |
| கண் நோய் மருத்துவம் .. .. .. | .. | 6 | .. | 6 | .. |
| காது, கண், மூக்கு நோய் மருத்துவம் .. | .. | 6 | .. | 5 | .. |
| மருந்தாக்கியல் .. .. .. .. | .. | 4 | .. | 4 | .. |
| சட்டஞ்சார்ந்த மருத்துவ இயல் .. .. | .. | .. | .. | 2 | .. |
| எம். டி. உடற் கூற்றியல் .. .. .. | 4 | 2 | .. | 2 | .. |
| எம். எஸ். மூளை நரம்பு அறுவை மருத்துவம். .. .. | .. | 2 | .. | .. | .. |
| எம். டி. (எஸ்.பி.எம்.) .. .. .. | | 1 | 2 | 2 | .. |



1975-எப்ரல் திங்களுக்கான தகுதிப்பட்டயப் படிப்பு

| படிப்பின் பெயர். | | சென்னை மருத்துவக் கல்லூரி. | ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி. | மதுரை மருத்துவக் கல்லூரி. | |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | |
| டி.ஜி.ஒ. (D.G.O.) | .. | 18 | 6 | 8 | |
| டி.சி.ஹெச். எப்ரல்/அக்டோபர் (D.C.H.). | .. | 34 | 6 | 6 | |
| டி.எ. (D.A.) | .. | 4 | 4 | 6 | கல்வி ஆண்டொன்றுக்கு. |
| டி.எம்.ஆர்.டி. (D.M.R.D.) | .. | 4 | 4 | 6 | ,, |
| டி.ஒ. (D.O.) | .. | 6 | .. | 6 | ,, |
| டி.ஆர்த்தோ (D. Ortho) | .. | 4 | 2 | 2 | ,, |
| டி.எல்.ஒ. (D.L.O.) | .. | 4 | .. | 6 | ,, |
| டி.பி.எம். (D.P.M.) | .. | 6×28 | .. | 3 | ,, |
| டி.சி.பி. (D.C.P.) | .. | 4 | .. | .. | |
| டி.வி. (D.V.) | .. | 6×28 | .. | .. | |
| டி.டி. (D.D.) | .. | 6 | .. | | |
| டி.எம்.ஆர்.டி. (D.M.R.T.) | .. | 4 | .. | .. | |
| டி.டி.சி.டி. (D.T.C.D.) | .. | 12 | .. | .. | |

சிறப்பு மேற்படிப்புகள்

சென்னை மருத்துவக் கல்லூரி.

| | படிப்பின் பெயர். | இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1. | பல் அறுவை சிகைச்சையியல் (Operative Dentistry) | 2 |
| 2. | வாய் வழி அறுவை சிகிச்சையியல் .. | 3 |
| 3. | " பெரிடோன்ஷியா " .. | 3 |
| 4. | பி.எஸ்.எஸ்ஸி., ஐ.பி.எச்., (B.S.Sc. I.P.H.) .. | 10 |
| 5. | எம்.சிஹெச். சிசு நோய் அறுவை சிகிச்சை (M.Ch.) .. | 2 |
| 6. | பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை .. | 2 |
| 7. | எம்.சிஹெச். மார்புப் பகுதி அறுவை சிகிச்சை (M Ch.) | 2 |
| 8. | எம்.சிஹெச். பிறப்புறுப்பு சிறுநீர் பாதை அறுவை சிகிச்சை (M.Ch.) .. | 4 |
| 9. | டி.எம். மூளை நரம் இயல் சிகிச்சை (D.M.) .. | 2 |
| 10. | டி.எம். இதய நோய் மருத்துவவியல் (D.M.) .. | 2 |

[1975 மார்ச் 13

## மதுரை மருத்துவக் கல்லூரி.

| படிப்பின் பெயர். | இடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1. எம்.சிஹெச். சிசு நோய் அறுவை சிகிச்சை (M.Ch.) .. | 2 |
| 2. எம்.சிஹெச். மூளை நரம்பு அறுவை சிகிச்சை (M.Ch.) .. | 2 |

## விவர அறிக்கை II.

### மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

| | 1971-72 | 1975-76 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. அரசு பொது மருத்துவமனை, சென்னை .. | 1,244 | 1,537 |
| 2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை .. | 931 | 1,011 |
| 3. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, சென்னை .. | 300 | 300 |
| 4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை .. .. .. .. .. | 340 | 526 |
| 5. அரசு கண் மருத்துவமனை, சென்னை .. | 266 | 328 |
| 6. பெண்கள் குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் அரசு மருத்துவமனை, சென்னை .. | 615 | 635 |
| 7. மகப்பேறு–மகளிர் நோயியல் மகளிர்–சிறார் நல மருத்துவ நிலையம், சென்னை. | 474 | 528 |
| 8. ராஜா சர். ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை .. | 275 | 426 |
| 9. தாய் சேய் நல மருத்துவ நிலையம், சென்னை | 250 | 250 |
| 10. திருவொற்றியூர் காசநோய் அரசு மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை | 222 | 222 |
| 11. அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை .. | 1,800 | 1,800 |
| 12. அரசு காசநோய் மருத்துவமனை, தாம்பரம் .. | 618 | 726 |



1975 மார்ச் 13]

### விவர அறிக்கை II—தொடர்ச்சி.

மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை—தொடர்ச்சி

| | 1971—72 | 1975—76 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 13. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை .. | 1,310 | 1,394 |
| 14. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் | 636 | 642 |
| 15. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் .. .. .. .. .. | 538 | 538 |
| 16. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு .. .. .. .. .. | 400 | 416 |
| 17. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் .. .. .. .. | 785 | 805 |
| 18. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி .. .. .. .. .. | 325 | 554 |
| மொத்தம் .. | 11,329 | 12,638 |

## விவர அறிக்கை III.

### கட்டிடத் திட்டங்கள்.

#### சமீபத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தற்போதைய முழுத் திட்டங்கள்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | அரசாணை எண்ணும் தேதியும். |
|---|---|---|
| (1) | (2) (ரூ. இலட்சத்தில்). | (3) |
| **சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.** | | |
| 1. சிற்றுண்டி விடுதிக்கு மேல் கூடுதலாகக் கட்டப்படும் மூன்று அடுக்கு கட்டிடம். .. | 4.00 | அரசாணை எண் 2511, நலம் தேதி 12—11—1974 |
| 2. பொதுக்கூட்டத்திற்கான வசதிப் பெருக்கு .. | 3.85 | அரசாணை எண் 2717 நலம் 7—12—1974 |

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | அரசாணை எண்ணும் தேதியும். |
|---|---|---|
| (1) | (2) (ரூ. இலட்சத்தில்). | (3) |
| 3. மருத்துவப் பரிசோதனைக்கான கட்டிடம் .. | 1.60 | அரசாணை எண் 1731, நலம் 26— 7—1974 |
| 4. உடல் இயல் மருந்தியல் நிலையங்களுக்கான மின் இயல் வசதி பெருக்கும் வேலைகள் .. | 0.20 | அரசாணை எண் 1391, நலம் 17 —6—1974 |
| **கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை.** | | |
| 5. சமூக தடுப்பு மருத்துவம் நுண் உயிரியல் பிரிவுக்கான இடவசதி கட்டிடங்கள் .. | 4.40 | அரசாணை எண் 1738, நலம் 27—8—1974 |
| 6. கிணற்று நீர் கொண்டு வர பம்பு வைப்பதற்கான அறை .. | 0.21 | அரசாணை எண் 196, நலம் 7—2—1975 |
| **செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு.** | | |
| 7. மருந்துகள் கலக்கும் பகுதிக்கான கட்டிடம் | 7.50 | அரசாணை எண் 121, நலம் 22—1—1975 |
| 8. பிராண வாய்வு சேகரிக்கும் மற்றும் பல கருவிகளுக்கான கட்டிடம் | 2.35 | அரசாணை எண் 2725, நலம் 13—12—1974 |
| **கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையும்.** | | |
| 9. 30 படுக்கைகள் கொண்ட தற்செயல் விபத்துக்களை கவனிக்கும் கட்டிடம் .. | 3.00 | அரசாணை எண் 2031, நலம் 10—9—1975 |
| 10. இறந்தவர்களின் உடலை வைக்கும் கட்டிடம் | 1.60 | அரசாணை எண் 1016, நலம் 27—4—1974 |





| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | அரசாணை எண்ணும் தேதியும். |
|---|---|---|
| (1) | (2) (ரூ. இலட்சத்தில்) | (3) |
| **அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.** | | |
| 11. தூக்கும் கருவி மாட்டுதல் | 2.00 | அரசாணை எண் 2018, நலம், 18—9—1974 |
| 12. தண்ணீர் வசதியை பெருக்குதல் .. | 0.62 | அரசாணை எண் 2575, நலம், 20—11—1974 |
| 13. மின் கருவிகள் வைக்கும் அறைக்கான டிரான்ஸ்பார்மர் பெட்டி, அறுவை சிகிச்சை கட்டிடத்தில் இருந்து பூமிக்குள் செல்லும் மின் இணைப்பு வேலை. .. | 0.44 | அரசாணை எண் 2789, நலம், 18—12—1974 |
| 14. தலைமை மின் பொறி ஆய்வாளர் கண்டுள்ள மின் இயல் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு .. | 0.42 | அரசாணை எண் 2565, நலம், 16—11—1974 |
| 15. சென்னை பொது மருத்துவமனைக்கு கொதிகலம் வைப்பதற்கு கட்டிடம். | 3.90 | அரசாணை எண் 2265, நலம், 9—9—1974 |
| **அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.** | | |
| 16. 40 படுக்கைகள் கொண்ட கட்டிடம் (கீழ் அடுக்குக்கு இடது பக்கத்தில் உள்ள கட்டிடத்திற்கு 100 படுக்கைகளுக்கான வார்டின், மேல் மாடிக் கட்டிடம். | 4·50 | அரசாணை எண் 1654, நலம், 19—7—1974 |
| 17. தண்ணீர் வசதி பெருக்குதல் .. | 0.52 | அரசாணை எண் 2575, நலம், 20—11—1974 |
| **அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.** | | |
| 18. புற்றுநோய் பகுதி கட்டிடம் .. | 10.02 | அரசாணை எண் 1602, நலம், 12—7—1974 |

[1975 மார்ச் 13

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | அரசாணை எண்ணும் தேதியும் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. இலட்சத்தில்) | |
| **கீழ்ப்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சென்னை.** | | |
| 19. தண்ணீர் வசதி பெருக்குதல் .. | 0.34 | அரசாணை எண் 2575, நலம், 20–11–1974 |
| **பெண்கள் குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் அரசு மருத்துவமனை சென்னை.** | | |
| 20. கீழ் அடுக்கில் உள்ள தலைமை அறுவை கூடத்திற்கு குளிர்ச் சாதனம் செய்தல். | 1.92 | அரசாணை எண் 1538, நலம், 5–7–1974 |
| **பெண்கள் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனை, சென்னை.** | | |
| 21. ஜெனஸ் கேபால்ட் கருவி வைப்பதற்கான கட்டிடம். | 2.14 | அரசாணை எண் 65, நலம், 9–1–1975 |
| 22. டியூபெக்டமி வார்டு மேல் இரண்டு அறுவை சிகிச்சைக்கான இடம் | 1.85 | அரசாணை எண் 2026, நலம், 9–9–1974 |
| 23. தண்ணீர் வசதி பெருக்குதல் .. | 0.60 | அரசாணை எண் 2575, நலம், 20–11–1974 |
| 24. கூடுதல் வசதிகள் .. | 0.16 | அரசாணை எண் 1499, நலம், 29–6–1974 |
| **தாய் சேய் நல மருத்துவ நிலையம், சென்னை.** | | |
| 25 எம்.வி.மின் இயல் கருவியின் குறைகளை நிவர்த்தி செய்தல் | 0.10 | அரசாணை எண் 174, நலம், 28–1–1975 |



1975 மார்ச் 13]

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. | அரசாணை எண்ணும் தேதியும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. இலட்சத்தில்) | |
| **அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை.** | | |
| 26. தண்ணீர் வசதி பெருக்குதல் .. .. | 0·32 | அரசாணை எண் 2575 நலம், 20-11-1974 |
| **அரசு எர்ஸ்கின் மருத்துவமனை; மதுரை.** | | |
| 27. தென் மதுரையில் பாலரங்காபுரத்தில் அரசு மருத்துவ மனை கட்டுதல். | 14·20 | அரசாணை எண் 848 நலம், 10-11-1974 |
| **புறநகர் மருத்துவமனைகள்** | | |
| 28. சென்னை தொண்டையார் பேட்டையில் 100 படுக்கைகள் கொண்ட புறநகர் மருத்துவ மனை கட்டிடம். | 32·34 | அரசாணை எண் 2122 நலம், 21-9-1974 |
| 29. அண்ணா நகரில் 100 படுக்கைகள் கொண்ட புறநகர் மருத்துவ மனை கட்டிடம். | 28·02 | அரசாணை எண் 2122 நலம், 21-9-1974 |
| 30. கலைஞர் கருணாநிதி நகரில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை கட்டிடம். | 30·00 | அரசாணை எண் 1772 நலம், 30-7-1974 |

| மொத்த திட்டங்கள் | மதிப்பீடு |
|---|---|
| | (லட்சக்கணக்கில்) |
| 30 | 163·12 |

## விவர அறிக்கை-IV.

### 1975-76-ல் கொண்டுவரப்போகும் கட்டிடத் திட்டங்கள்

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | செலவு (2) (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1. சென்னை; தாய் சேய் நல மருத்துவ மனையில் நீராவி மூலம் துணி வெளுக்கும் கருவிகளை பொருத்துவதற்கான கட்டிடம். | 4·00 |
| 2. சென்னை; மகப்பேறு—மகளிர் நோயியல்; மகளிர் சிறார் நல மருத்துவ நிலையத்தில் 150 படுக்கைகள் கொண்ட இரண்டடுக்கு மாடிக் கட்டிடம் .. .. .. .. .. | 3·00 |
| 3. மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் நற்செயல் விபத்துக்களைக் கவனிக்கும் அறைக்கு மேல் குருதி சேமிப்பு நிலையம் அமைத்தல். .. .. .. | 2·60 |
| 4. சென்னை மருத்துவக் கல்லூரிக்கும், அரசினர் பொது மருத்துவ மனைக்கும் ஒன்று விட்ட அதிக மின் அழுத்தமுள்ள கம்பி பொருத்துதல் .. | 1·60 |
| 5. சென்னை மருத்துவக் கல்லூரியில் மின்நுண்ணியல் ஆய்வுக் கூடத்திற்கான கட்டிடம் .. .. | 1·60 |
| 6. கிண்டி கிங் நிலையத்தில் குதிரை மற்ற மிருகங்களின் பண்ணையை விரிவாக்குதல் .. .. | 1·32 |
| 7. சென்னை ராயப்பேட்டை மருத்துவ மனையில் பழைய கட்டிடத்தில் "ராம்ப்" அமைத்தல் .. | 1·00 |
| 8. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் மிருகங்களுக்கான மத்திய அறை அமைத்தல் .. .. | 0·80 |
| 9. சென்னை ராயப்பேட்டை மருத்துவ மனையில் பொருள்கள் வைப்பதற்கான இடம் அமைத்தல் .... | 0·30 |
| 10. அரசினர் ராயப்பேட்டை மருத்துவ மனையில் நீராவி துணி வெளுக்கும் கருவிக்கான இடத்தை விரிவாக்குதல் .. .. .. .. | 0·36 |



| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) (ரூ. இலட்சத்தில்.) |
|---|---|
| 11. தோப்பூர் காசநோய் மருத்துவ மனையில் திறந்த வெளி கழிவு நீர்த் தொட்டியை மறைமுக கழிவு நீர்த் தொட்டியாக மாற்றுதல் .. | 0·14 |
| 12. ஆர். எஸ். ஆர் எம். மருத்துவ மனையில் குழாய்களை சீர்படுத்துபவர்களுக்கான அறை .. .. .. | 0·17 |
| 13. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இறந்தவர்களை வைக்கும் அறைக்கு வசதி பெருக்குதல் .... .. .. .. | 0·12 |
| 14. மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் மகப்பேறு மகளிர் நோயியல் கட்டிடத்திற்கு மின் தூக்கு அமைத்தல் .. .. .. .. .. | 1·20 |
| 15. சென்னை ஆர். எஸ். ஆர். எம். மருத்துவ மனையில் பொருள்கள் வைக்கும் அறையின் மேல் முதல் மாடிக் கட்டிடம் .. .. .. .. .. | 0·67 |
| 16. சென்னை அரசினர் இருதய நோய் நிலையத்தில் இருக்கும் புதிய கட்டிடத்தில் உள்ள ரசாயன அறைக்கும், நோய்களின் உணர்ச்சி பார்க்கும் அறைக்கும் குளிர் சாதனம் செய்தல் .. .. | 0·21 |
| மொத்தம் .. | 19·09 |

## விவர அறிக்கை V.

### இம் மாநிலத்திலுள்ள இந்திய மருத்துவ முறை மருந்தகங்களின் எண்ணிக்கை.

| | சித்த. | ஆயுர்வேத. | யுனானி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| ஊராட்சி ஒன்றிய கிராமப்புற மருந்தகங்கள் | 285 | 63 | 9 | 357 |
| முறையான மருந்தகங்கள் .. .. .. | 32 | 13 | 1 | 46 |

[1975 மார்ச் 13

| | சித்த. | ஆயுர்வேத. | யுனானி | மொத்தம். |
|---|---|---|---|---|
| நகராட்சிகள் நடத்தி வரும் மருந்தகங்கள் .. | 36 | 21 | 5 | 62 |
| அரசு மருந்தகங்கள் .. .. .. .. | 5 | 5 | .. | 10 |
| கோயில்கள் நடத்திவரும் மருந்தகங்கள் | 26 | .. | .. | 26 |
| | 384 | 102 | 15 | 501 |

## விவர அறிக்கை VI.

### இதுவரையில் அரசு மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ள மருந்தகங்களின் பட்டியல்.

| மாவட்டம். (1) | | மருந்தகத்தின் பெயர். (2) | அரசு மேற்கொண்ட தேதி. (3) |
|---|---|---|---|
| முன்னாள்–மாவட்ட வாரிய மருந்தகங்கள். | | | |
| செங்கற்பட்டு | 1. | பாதிர்வேடு–மாதர்பாக்கம் | 30—12—74 |
| | 2. | சேலவாக்கம் | 1—6—73 |
| | 3. | திருப்போரூர் | 13—12—74 |
| | 4. | வாலாஜாபாத் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| கோயம்புத்தூர் | 5. | கள்ளிப்பட்டி | 10—1—75 |
| | 6. | புதுப்பம்பட்டி | 28—3—73 |
| | 7. | பொங்கலூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 8. | E. செட்டி பாளையம் | ஷை |
| தர்மபுரி | 9. | காரிமங்கலம் | 1—2—73 |
| | 10. | ராயகோட்டா | 1—1—75 |



1975 மார்ச் 13]

| மாவட்டம். (1) | | மருந்தகத்தின் பெயர் (2) | அரசு மேற்கொண்ட தேதி. (3) |
|---|---|---|---|
| மதுரை | 11 | ஆண்டிப்பட்டி | 1—1—75 |
| | 12 | இடையகோட்டை | 1—11—72 |
| | 13 | சாப்டூர் | 1—11—72 |
| | 14 | சோழவந்தான் | 1—11—72 |
| | 15 | கீரனூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| நீலகிரி | 16 | குந்தா அணைக்கட்டு | 1—11—72 |
| | 17 | மேலூர் ஒசட்டி | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது |
| வட ஆர்க்காடு | 18 | K.V. குப்பம் | 1—11—72 |
| | 19 | மராட்டிப்பாளையம் | 1—11—72 |
| | 20 | மேல்விஷாரம் | 1—11—72 |
| | 21 | தேசூர் | 29—8—73 |
| | 22 | சேத்துப்பட்டு | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 23 | புதுப்பாளையம் | 1—11—72 |
| | 24 | பணப்பாக்கம் | 23—1—75 |
| இராமநாதபுரம் | 25 | ஆனந்தூர் | 31—12—74 |
| | 26 | ஏழாயிரம் பண்ணை | 1—11—72 |
| | 27 | கமுதி (மகப்பேறு) | 1—11—72 |
| | 28 | மானாமதுரை | 1—11—72 |
| | 29 | வி. புதூர் | 1—11—72 |
| | 30 | கமுதி | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 31 | பாம்பன் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| மாவட்டம். | மருந்தகத்தின் பெயர் | அரசு மேற்கொண்ட தேதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சேலம் | 32 மல்லூர் | 1—11—72 |
| | 33 பெத்தநாயக்கன்பாளையம் | 1—2—75 |
| தென்னார்க்காடு | 34 பெண்ணாடம் | 1—11—73 |
| | 35 அவலூர்பேட்டை | 1—11—72 |
| | 36 காட்டுமன்னார்கோயில் | 1—11—72 |
| | 37 சங்கராபுரம் | 1—11—72 |
| | 38 புவனகிரி | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 39 சின்னசேலம் | ஷை |
| | 40 கவரப்பட்டு | ஷை |
| | 41 ஸ்ரீமுஷ்ணம் | ஷை |
| தஞ்சாவூர் | 42 கொள்ளிடம் | 1—11—72 |
| | 43 பேரளம் | 1—11—72 |
| | 44 எனங்குடி | 1—1—75 |
| | 45 பெருமகளூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 46 சித்தமல்லி | ஷை |
| | 47 மதுக்கூர் | ஷை |
| திருச்சிராப்பள்ளி | 48 தாத்தையங்கார்பேட்டை | 31—12—74 |



| மாவட்டம் | மருந்தகத்தின் பெயர். | அரசு மேற்கொண்ட தேதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருச்சிராப்பள்ளி—தொடர்ச்சி | 49 தோகைமலை | 31—12—74 |
| | 50 உதயபாளையம் | 1—11—72 |
| | 51 காட்டுப்புதூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| திருநெல்வேலி | 52 குலசேகரப்பட்டிணம் | 1—11—72 |
| | 53 விக்கிரமசிங்கபுரம் | 1—11—72 |
| | 54 சிவகிரி | 1—11—72 |
| | 55 ஆழ்வார்திருநகரி | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 56 கழுகுமலை | ஷை |
| | 57 பணக்குடி | ஷை |
| | 58 விளாத்திக்குளம் | ஷை |
| | 59 வீரவநல்லூர் | ஷை |
| | 60 வீரகேரளம்புதூர் | ஷை |
| புதுக்கோட்டை | 61 இலுப்பூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 62 கந்தர்வகோட்டை | ஷை |
| | 63 கீரமங்கலம் | ஷை |
| ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள். | | |
| செங்கற்பட்டு | 64 பழவேற்காடு | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 65 வில்லிவாக்கம் | ஷை |
| கோயம்புத்தூர் | 66 குமாரலிங்கம் | 31—3—74 |

| மாவட்டம் (1) | மருந்தகத்தின் பெயர் (2) | அரசு மேற்கொண்ட தேதி. (3) |
|---|---|---|
| தர்மபுரி | 67 மாத்தூர் | 1—11—72 |
| | 68 பாப்பாரப்பட்டி | 1—11—72 |
| | 69 தேன்கனிக்கோட்டை | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 70 ஊத்தங்கரை | ஷை |
| வட ஆர்க்காடு | 71 கலவை | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| இராமநாதபுரம் | 72 தொண்டி | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 73 சிங்கம்புணரி | ஷை |
| | 74 திருப்புவனம் | ஷை |
| | 75 இளையாங்குடி | ஷை |
| சேலம் | 76 குட்டப்பட்டி | 1—2—73 |
| | 77 வாழப்பாடி | 1—11—72 |
| | 78 தம்மம்பட்டி | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| தென்னாற்காடு | 79 கண்டாச்சிபுரம் | 1—11—72 |
| தஞ்சாவூர் | 80 கோடிக்கரை | 30—3—73 |
| | 81 போதக்குடி | 1—11—72 |
| | 82 வாய்மேடு | 1—11—72 |
| | 83 குழிக்கரை | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| திருச்சிராப்பள்ளி | 84 முசிறி (மகப்பேறு) | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |



| மாவட்டம் (1) | மருந்தகத்தின் பெயர் (2) | அரசு மேற்கொண்ட தேதி (3) |
|---|---|---|
| | 85 சோமரசம்பேட்டை | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| திருநெல்வேலி | 86 ஏர்வாடி | 1—11—72 |
| | 87 ஆறுமுகனேரி | 1—11—72 |
| | 88 வள்ளியூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 89 ராதாபுரம் | ஷை |
| புதுக்கோட்டை | 90 சுப்ரமணியபுரம் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| | 91 கொட்டாம்பட்டி | ஷை |
| கிராமப்புற மருந்தகங்கள்.— | | |
| செங்கல்பட்டு | 92 சதுரங்கப்பட்டணம் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| வட ஆர்க்காடு | 93 பள்ளிகொண்டா | 9—1—75 |
| | 94 பெரணமல்லூர் | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| நீலகிரி | 95 தேனாடு ஷோலூர் மட்டம் | 3—12—74 |
| மதுரை | 96 சித்தையன்கோட்டை | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| நகராட்சி மருந்தகங்கள் | | |
| வடஆர்க்காடு | 97 ஆர்க்காடு | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| சேலம் | 98 இடப்பாடி | ஷை |
| திருச்சிராப்பள்ளி | 99 மணப்பாறை | ஷை |
| திருநெல்வேலி | 100 புளியங்குடி | ஷை |
| தஞ்சாவூர் | 101 மீமிசால் | 1—11—72 |

## விவர அறிக்கை VII.

வெளியூர்களில் கிடைக்கும் பல்வேறு மருத்துவ வசதிகள் பின்வருமாறு வகைபடுத்தப்பட்டு பிரிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் .. | | 14 |
| 2 | வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் .. .. .. | | 97 |
| 3 | வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அல்லாத பிற மருத்துவமனைகள். | | 109 |
| 4 | மருந்தகங்கள் .. .. .. .. .. | | 10 |
| [5 | E.S.I. மருந்தகங்கள் .. .. .. .. | | 3 |
| 6 | E.S.I. மருந்தகங்கள் ... .. .. .. .. | | .. |
| | நிலை | 95 | |
| | இயல் | 9 | |
| 7 | பயன்கொள் மருந்தகங்கள் .. .. .. | | 3 |
| 8 | தொடக்கச் சுகாதார நிலையங்கள் .. .. .. | | 381 |
| 9 | தொழுநோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் .. .. .. | | 37 |
| 10 | இயங்கும் மருத்துவப் பிரிவுகள் .. .. .. | | 13 |

| | உயர்த்தப்பட்ட கூடுதலான படுக்கை வசதிகள். | மொத்தம் |
|---|---|---|
| 1973–74 | 152 | 10,385 |
| 1974–75 | 359 | 10,744 |
| 1975–76 | 26 (இலக்கு) | 10,770 |



| செலவு குறித்த தனித்தனி விவரங்கள். | 1974–75 ரூ. (லட்சத்தில்) | 1975–76 ரூ. (லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மாவட்ட மருத்துவமனைகள் | 3,943 | 3,943 |
| வட்ட மருத்துவமனைகள் | 4,451 | 4,475 |
| வட்ட தலைமையிட மருத்துவமனைகளல்லாத பிற மருத்துவமனைகள் | 1,974 | 1,976 |
| மருந்தகங்கள் | 376 | 376 |
| | 10,744 | 10,770 |
| தொடக்க சுகாதார நிலையங்கள் | 2,286 | 2,286 |

## இணைப்பு-III.

[ 287 ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பை காண்க]

### கோரிக்கை எண்-19.

### மக்கள் நல்வாழ்வு 1975-76.

பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை 19 "மக்கள் நல்வாழ்வுத் துறை" என்பதன்கீழ் ரூ. 16,25,76,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டுமென முன்மொழிகிறேன்.

கொள்கை :

ஒரு நாடு உரிய வகையில் வளர்ச்சி பெறுவதற்கும் நலமுடன் திகழ்வதற்கும் மக்கள் சிறந்த உடல் நலம் உடையவர்களாய் இருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். எனவே, "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழிக்கிணங்க, மக்கள் உடல் நலனைப் பேணி வளர்த்து மேம்படுத்துவதற்கு இவ்வரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகின்றது. இக்குறிக்கோளினை எய்தற் பொருட்டு அரசு பல ஆண்டுகளாகவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இவற்றில் தாய்-சேய் நலன், மக்கள் ஊட்டச் சத்துத் தரத்தை மேம்படுத்தல், தொற்றுநோய்த் தடுப்பும் கட்டுப்பாடும், சுகாதாரம் பற்றிய அறிவை மக்களிடையே பரப்புதல், உணவுக் கலப்படத் தடுப்பு, சுற்றுப்புறத் துப்புரவை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

நகரமைப்புத் திட்டம், குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம் ஆகியவை குறித்த செலவுகளும் இந்த வரவு செலவுத் திட்டக் கோரிக்கையில் அடங்கும்.

இனி, மக்கள் நல்வாழ்வுத் துறையினது நடவடிக்கைகளின் சிறப்பான கூறுகள் பற்றி இங்கு எடுத்துரைக்க விழைகின்றேன்.

### தாய்-சேய் நலன்கள் உட்பட (சமுதாய) மக்கள் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

(a) தொடக்க நல்வாழ்வு நிலையங்கள்.—தொடக்க நல்வாழ்வு-நிலையம்—கிராம குடும்ப நலப் பிரிவு கிராமப் பகுதிகளில் முக்கியமான பயனுள்ள பணியாற்றி வருகின்ற அமைப்புகள் ஆகும். தற்போது நமது மாநிலத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 381 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். (1) துரிஞ்சாபுரம், (2) கீழ்ப்பெண்ணாத்தூர், (3) மொடக் குறிச்சி, (4) கொடுமுடி, (5) வெள்ளக் கோயில், (6) தூக்கநாயக்கன் பாளையம், (7) ஆத்தூர் ஆகிய ஏழு ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும்





இரண்டிரண்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன. தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், தாய்-சேய் நலம், குடும்ப நலத் திட்டம், நோய்த் தடுப்பு, சத்தூட்டக் கல்வி, மருத்துவ சிகிச்சை முதலிய துறைகளில் தொடர்ந்து கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

மொத்தமுள்ள 381 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் 188 தொடக்க நிலையங்களுக்கு சொந்த கட்டிடங்கள் உள்ளன. 1973-74 ஆம் ஆண்டில் 31 தொடக்க நல்வாழ்வு நிலையங்கட்கும், 1974-75 ஆம் ஆண்டில் 42 தொடக்க நல்வாழ்வு நிலையங்கட்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது ; அக்கட்டிடங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. அண்மையில் நிதிப் பற்றுக்குறை காரணமாக இந்திய அரசு விதித்துள்ள தடையும் சிமிட்டி போன்ற கட்டிடம் கட்டுவதற்குரிய பொருள்கள் கிடைப்பதில் உள்ள இடையூறும் கட்டிடப் பணி முன்னேற்றத்தை ஓரளவு பாதித்துள்ளன. நிதிவசதி கிடைப்பதைக் கருத்திற்கொண்டு மற்ற தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கும் படிப்படியான திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டித்தரப்பட வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பணிகளுக்குஉரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது :—

(i) மருந்தகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடங்கள் கட்டுதல்.

(ii) தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கும் துணை நிலையங்களுக்கும் மருந்துகள் வாங்க கூடுதல் நிதி ஒதுக்குதல்.

தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்குப் போதுமான அளவிற்கு மருந்துகள் வழங்கப்படுவதில்லை என்று பொதுவாகக் கருத்து நிலவுகிறது. 1971-72 ஆம் ஆண்டில், ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும், மருந்துச் செலவு குறித்து விதிக்கப்பட்டிருந்த நிதி வரம்பான ரூ. 4,500 என்பதை 1974-75 ஆம் ஆண்டில் ரூ. 12,000 ஆக உயர்த்தியதன் மூலம் மேற்சொன்ன குறைபாடு பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளது. இதுபோன்றே 1972-73-ல் ஒவ்வொரு துணை நிலையத்திற்கும் அனுமதிக்கப்பட்ட செலவு வரம்பான ரூ. 600 என்பது 1974-75 ஆம் ஆண்டில் ரூ. 800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்னரே குறிப்பிட்டவாறு இந்த தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் பயனுள்ள பணியாற்றி வந்துள்ளபோதிலும் கூட, அவை பெரும் பரப்பளவிலும், அதிக மக்கள் தொகையினருக்குப் பயன்படும் வகையில் பணிபுரிய வேண்டியுள்ளதால் அவை முழுமையான அளவில் செயல்பட இயலாமல் உள்ளன. தொடக்கத்தில் கொண்டிருந்த கருத்துப்படி தொடக்க நல்வாழ்வு நிலையம் ஒன்று சுமார் 40,000 முதல் 60,000 வரையிலான மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். முற்றிலும் இயலாத காரணததால் ஒரு தொடக்க நல்வாழ்வு நிலையம் தொலைதூரப் பகுதிகளில் பரவிக் கிடக்கின்ற பெருமளவு மக்களுக்குப் பணி புரிய இயலாதுள்ளது. இந்தநிலைமையின் கடுமையைத் தணிக்கும் பொருட்டு, அப்பகுதியில் வாழ்கின்ற பெருமளவு மக்கட் பிரிவினர்க்கு மருத்துவ நல்வாழ்வு வசதிகள் கிடைப்பதற்காக (ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும்) கூடுதலாக இன்னொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்தை நிறுவுவதற்கு அனுமதியளிக்குமாறு

மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு எழுதியுள்ளது. ஆனால், மத்திய அரசு மாநில அரசின் இந்த வேண்டுகோளை ஏற்க இயலாதென்று தெரிவித்துள்ளது. மற்றவற்ருேடு ஒப்பிட, பெருமளவு மக்கள் தொகையும், மிகப் பின்தங்கிய பகுதிகளும் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலாகிலும் கூடுதலாக இன்ெருரு தொடக்க நல்வாழ்வு நிலையத்தை நிறுவ வேண்டியது அவசியமென நாம் கருதுகிருேம்.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் தற்போது இரண்டு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். மருந்துவ அதிகாரிகள் கிராமப் பகுதிகளை அடிக்கடி நேரில் சென்று பார்வையிடவும், கூடுதலாகின்ற பணிச் சுமையைச் சரிவரக் கவனிக்கவும் அவர்கட்கு வசதியளிக்கும் பொருட்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் மூன்ருவது மருத்துவ அதிகாரியை நியமிக்க அரசு கருதுகிறது. தொடக்கத்தில், மிக அதிக அளவு மக்கள் தொகையுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் 100-ல் இவர்கள் நியமிக்கப் படுவர்.

(b) தாய்-சேய் நலப் பணிகள்.—தாய்-சேய் நலப் பணிகளில் நல்ல உடல் நலன் பெற்ற தாய்க்கு உடல் நலன் பெற்ற குழந்தை பிறப்பதை உறுதிப்படுத்தவும், அதன்பின் தாய்-சேய் நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது இதற்காக தாய்மார்களுக்கு பேறுகாலத்திற்கு முந்திய கவனிப்பு அளிக்கப்படுகிறது. இதன் பொருட்டு அவர்கள் பதிவு செய்து கொள்ளப்படுகின்றனர். இந்தப் பதிவுப் பணி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், மகப்பேறு நிலையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மகப்பேறு உதவியாளர்கள்/துணைச் செவிலியர்-மருத்துவச்சியர்களால் செய்யப்படுகிறது.

பேறு காலத் தாய்மார் ஒவ்வொருவருக்கும், அவரிடத்தில் அல்லது கருப்பையில் சிசு வளர்ச்சி நிலையில் ஏதேனும் கோளாறு இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக மருத்துவச் சோதனை செய்யப்படுகிறது. பேறு காலத் தாய்மாரிடம் இரத்த சோகை, ரத்த திரிபு நோய், சத்துக் குறைவு உள்ளவர்கள் இருக்கின்ருர்களா என்றறிவதற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இரத்த சோகை உள்ள தாய்மாருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, அதைக் கட்டுப்படுத்த எடுத்துக் கொள்ள வேண்டிய உணவு குறித்து அவருக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. குழந்தைக்கு உணவளித்தல், நோய்த் தடுப்பின் பொருட்டு குறித்த காலங்களில் செய்ய வேண்டிய செயல்கள், குழந்தைப் பருவநோய்கள், குடும்பக் கட்டுப்பாடு முறைகள் ஆகியவை குறித்தும் அவர்களுக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. துணைச் செவிலியர், மருத்துவச்சியர் வீடுகட்குச் சென்று பிறந்த பச்சிளங் குழந்தைகளின் நலனைக் கவனிக்கின்றனர். சுகாதாரப் பார்வையாளர், துணைச்-செவிலியர்-மருத்துவச்சியர் பணியை மேற்பார்வையிடுவதோடு, குழந்தை நலன், பள்ளி செல்லும் வயதடையாச் சிருர்கள் நலன் மற்றும் பள்ளிச் சுகாதார திட்டம் குடும்ப நலத் திட்டம் ஆகிய திட்டங்களுக்குப் பொறுப்பு வகித்து அவற்றைச் செயற்படுத்துகிருர்.



தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, மகப்பேறு நிலையங்களைத் திறந்து பேணி வருவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். தற்போது மக்கள் தொகையில் பத்தாயிரம் பேருக்கு ஒரு நிலையம் வீதம் மகப்பேறு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியக் குழு வைத்து வரும் நிலையங்களில், தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த மூன்று துணை நிலையங்கள் அவற்றுக்கு ஆகும் தொடரினச் செலவில் மூன்றிலிரு பாகம் மானியமாக அரசிடமிருந்து பெறுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களினுல் நடத்தப்பட்டு வரும் பிற பேறுகால—குழந்தை நல நிலையங்கள், குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 100 சதவீத மத்திய உதவி பெறுகின்றன.

நகராட்சிகள் உள்ள மகப்பேறு இல்லங்களும் மகப்பேறு நிலையங்களும் தாங்கள் மேற்கொள்ளும்படி தொடரினச் செலவில் 25 சதவீதத்தை அரசிடமிருந்து மானியமாகப் பெறுகின்றன.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நடத்தி வரும் மகப்பேறு நிலையங்களுடன், அரசு, மகப்பேறு-குழந்தை நல நிலையங்களை அமைத்துள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதிகளாக தொலை தூரத்தில் உள்ள 95 கிராமங்களில் 1—1—1973 ஆம் நாளன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 3,840 மகப்பேறு நிலையங்கள் உள்ளன.

தொண்டைப்புண்—கக்குவான்—இசிவு நோய்த் தடுப்புத் திட்டம் குழந்தைகளின் நலனுக்காக தொடக்க உடல் நல நிலையங்கள் மூலமாக 1964-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. திட்டத்தின் கீழ் 5 வயதுக்குக் குறைவாக உள்ள குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. 1964-ல் இத் திட்டம் 164 தொடக்க உடல் நல நிலையங்களில் கொண்டு வரப்பட்டது. தற்பொழுது இத் திட்டம் தொடக்க உடல் நல நிலையங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளின் நலனுக்காக நடப்பாண்டில் 20 தொடக்க உடல் நல நிலையங்களில் மூவகை நோய்த் தடுப்பு சிறப்புத திட்டம் அண்மையில் தொடககப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக 20 தொடக்க உடல் நல நிலையங்கள் ஒவ்வொன்றிலும் சுகாதாரப் பார்வையாளர் ஒருவரும், மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 13 பொதுச் சுகாதார செவிலியர்க்கும் கூடுதலாக நியமிக்கப் பட்டுள்ளனர். 1975-76-ல் இத்திட்டத்தை மேலும் 20 தொடக்க உடல் நல நிலையங்களுக்கு நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது.

## I. சத்துணவு திட்டத்தில் காணப்படும் முன்னேற்றம்.

சத்துக் குறைவும், அதன் காரணமாக நாட்டு மக்களது வாழ்க்கையும் வளர்ச்சியும் பாதிக்கப்படுவது பற்றி பல விவாதங்களும் உரையாடல்களும் உலக நாடுகளில் நடைபெறுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர்கள். உலகத்திலுள்ள சத்துணவு வல்லுநர்களும், திட்ட அமைப்பாளர்களும் இப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்து அதனைத் தீர்ப்பதற்கான வகைகளைக் கண்டறிவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ள அதே நேரத்தாமும் இக்குறையைப் போக்குவதில் தொடர்ந்து முயன்று வருகிரோ

கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் ஒத்துழைப்புடன் செய்முறைச் சத்துணவுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான அடிப்படைப் புள்ளி விவரங்களைக் கொடுப்பதற்காக, 1974-75-ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்களில் சத்துணவு—உணவு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன :—

| மாவட்டம். | வளர்ச்சி வட்டாரம். | கிராமங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தருமபுரி. | ராயக்கோடு. | தத்தம்பட்டி. |
| திருச்சி. | திருவெறும்பூர். | நாவல்பட்டு. |
| கன்னியாகுமாரி. | தக்கலை. | கூத்தநல்லூர். |

செங்கற்பட்டு மாவட்டம், வில்லிவாக்கம் வளர்ச்சி வட்டாரத்தில் உள்ள போரூர் கிராமத்தில் ஆண்டிற்கு இருமுறை ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதுவரை, இம்மாநிலத்தில் கன்னியாகுமாரி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மாவட்டங்கள், ஒவ்வொன்றிலும் இரண்டு வளர்ச்சி வட்டாரங்களிலும் பிற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வளர்ச்சி வட்டாரத்திலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாண்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் 24 சுகாதார ஆய்வாளர்களும் 25 சுகாதாரப் பார்வையாளர்களும், மத்தியச் சத்துணவுக் கழகத்தில் நடத்தப்படும் அறிவியல் சத்துணவுத் துறையில் பணியிருப்புப் பயிற்சி பெற்றனர். விரிவுரைகள் வழங்கப்படுவதுடன், இப்பயிற்சியில் கட்புல விளக்கங்கள், இடங்களுக்கு நேரில் சென்று பார்த்தல், திரைப் படக் காட்சிகள் ஆகியவையும் அடங்கும். அடையாறு சுகாதாரத்தொண்டு நிறுவனத்தில் உணவு முறைப் பயிற்சி பெற்று வரும் மாணவர்களுக்குச் சத்துணவுச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

1975-76-ஆம் ஆண்டிலும் இதுபோன்ற பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

கூடுதல் உணவளிப்புத் திட்டம்.—இத்திட்டம் "யூனிசெஃப்" நிறுவன உதவியுடன் 1950-இல் தொடங்கப்பட்டது. பள்ளிச் செல்லும் பருவம் எட்டாத சிறார்கள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடம் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைபாட்டைப் போக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1970-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் "கேர்" நிறுவன உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது. இந்நிறுவனம் உணவுப் பொருட்களை நன்கொடையாக வழங்குகிறது. தொடக்கச் சுகாதார நிலையங்கள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் தற்போது 2,440 உணவளிப்பு நிலையங்கள் உள்ளன. நாள்தோறும்







சுமார் 98,000 பேர் பயனடைந்து வருகின்றனர். நடப்பாண்டில் சுமார் ரூபாய் 78 இலட்சம் மதிப்புள்ள 5,65,500 பவுண்டு உணவுப் பொருட்கள் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

1975-76-ஆம் ஆண்டிலும் அதனை அடுத்து வரும் ஆண்டுகளிலும் "கேர்" நிறுவன உதவியை நாம் தொடர்ந்து பெறுவதற்கான அறிகுறிகள் உள்ளன.

## (III) தொற்று நோய்த் தடுப்பும் கட்டுப்பாடும்.

(a) காலரா.—இந்நாட்டில் காலரா தோன்றிப் பரவுகிற மாநிலங்களில் நமது மாநிலம் ஒன்று எனக் கருதப்படுகிறது. நமது மாநிலத்தில் கீழ்க் காணும் 4 மாவட்டங்கள் காலரா தோன்றிப் பரவுகின்ற மாவட்டங்களாகும்

(1) திருச்சிராப்பள்ளி.

(2) கோயம்புத்தூர்.

(3) வட ஆற்காடு.

(4) தென்னாற்காடு.

காலரா கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டு இயல் ஊர்திப் பிரிவுகள் 7, கொள்ளை நோய் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் 3, தஞ்சாவூர், வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் காலரா ஒழிப்புக்குழு ஒன்று ஆகியன இயங்கி வருதல் அதன் சிறப்பியல்பு ஆகும். 1975-76-ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு கூடுதலாக காலரா ஒழிப்புப் குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர, பாதிக்கப்பட்ட பகுதிகளில் சென்று பணிபுரியப் பயன்படுத்திக் கொள்வதற்காக நம்மிடம் 64 இன்ஸ்பெக்டர்கள் உள்ளனர். கொள்ளை நோய் தோன்றிப்பரவும் இந்த நான்கு மாவட்டங்களிலும் காலரா ஒழிப்புப் பணி சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கொள்ளை நோய் குறித்த தகவலை சேகரிப்பதற்காகவும் குடிநீரில் குளோரினைக் கலப்பதற்காகவும் உயிரியல் ஆய்வின் பொருட்டு மாதிரிகள் எடுப்பதற்காகவும் இப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைமையிடத்துடன் இணைந்த, கொள்ளை நோயியல் பிரிவு ஒன்றும் உள்ளது. அதனிடம் இயல் ஆய்வுக்கூட ஊர்தியொன்றும் உள்ளது. கொள்ளை நோய் திடீரெனத் தோன்றிப் பரவும் காலங்களில் ஆய்வு—கட்டுப்பாட்டுப் பணியைச் செய்வதற்காக இந்த ஊர்தி பயன் படுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொள்ளைநோய் குறித்த சிகிச்சைகள் அளிக்கவும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விரைவுபடுத்தவுமென காலரா ஒழிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இக் குழுவால் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டவர்கள் எண்ணிக்கை விவரம் வருமாறு :—

1972—14,69,731.

1973—14,30,616

1974—17,25,434

1975—65,221.
(8—2—1975 வரை).

(b) பெரியம்மை ஒழிப்புத் திட்டம்.

பெரியம்மை ஒழிப்புத் திட்டம் **1963-64-ஆம்** ஆண்டில் நமது மாநிலத்தில் தொடங்கப்பட்டது. பெரியம்மை பரவுவதைத் தடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். (a) குழந்தைகளுக்கு முறையான தொடக்க அம்மைப்பால் வைத்தும், மக்களுக்கு மறு அம்மைப்பால் வைத்தும், (இ) மக்கட் சமுதாயத்தில் பெரியம்மை கண்டுள்ளவர்களைத் தீவிரமாகவும், உரிய தருணத்திலும் கண்டுபிடித்துத் தனிமைப்படுத்தி நோய்பரவாமல் தடுப்பதற்குரிய பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும், பெரியம்மை பரவுவது தடுக்கப்படும். நிலைத்த திறமையான பணியின் விளைவாக நமது மாநிலம் பெரியம்மை நோயினின்றும் விடுபட்ட மாநிலம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக **1963-ம்** ஆண்டில் **9,241** பேருக்கு பெரியம்மை நோய் கண்டது **2559** பேர் அதனால் மாண்டனர், அதற்கெதிராக, **1974-75-ஆம்** ஆண்டில் இங்கும் அங்குமாக **45** பேருக்கு மட்டுமே பெரியம்மை நோய் கண்டது. **4** பேர் இந்நோயால் மாண்டனர், என்றும் புள்ளி விவரத்தைக் கொண்டு பார்த்தால், மேற்சொன்ன உண்மை புலப்படும். இந்த **15** பேருக்குப் பெரியம்மை நோய் கண்டது கூட அந்நோய் பீகார் மாநிலத்திலிருந்து தொற்றி வந்ததே காரணமாகும். உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் **1973-74-ஆம்** ஆண்டில் பெரியம்மை இங்கு பரவியுள்ளதா எனக் கண்டறியும் பொருட்டு, பெரியம்மை கண்டவர்கள் பற்றி முனைப்பான, சோதனை எல்லா மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனைகளின் விளைவாக இம்மாநிலம் பெரியம்மை நோயற்ற மாநிலம் என்று தெரிய வந்தது.

**1975-76-ஆம்** ஆண்டிலும் கூட, எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு இரண்டு மாதங்கட்கும் ஒரு முறை மும்முரச் சோதனைகள் நடத்தப்பெறும். உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் பெரியம்மை ஆய்வு குறித்த சிறப்புக் குழுவொன்றும் செயல்பட்டு வருகிறது. பெரியம்மை கண்டுள்ளது என ஐயுறும் தகவல்கள் கிடைக்கும் போதெல்லாம் இக்குழு மாவட்டங்களுக்கு விரைகின்றது. **1974-75-ஆம்** ஆண்டில் (**1974** நவம்பர் வரையில்) **11,6,265** குழந்தைகட்கு தொடக்க அம்மைப்பால் வைக்கப்பட்டது. **27,50,3708** பேருக்கு மறு அம்பைப்பால் வைக்கப்பட்டது. இந்திய அரசு





விடுத்த வேண்டுகோளின் பேரில், பீகாரிலும், உ. பி. யிலும் பெரியம்மை ஒழிப்பு குறித்த நடவடிக்கைகளுக்காக பொது சுகாதாரம் குடும்ப நலத்துறை உதவி இயக்குநர்கள் இருவர், சுகாதார அதிகாரி ஒருவர் ஆகியோர், கொள்ளை நோயால் குறித்த சிறப்பு வல்லுநர்களாகச் சென்று பணிபுரிய முகமையில் அனுப்பப்பட்டனர்.

(c) பிளேக்.

கடந்த காலத்தில் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. மும்முர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக, இம்மாநிலத்தில் **1964-ஆம்** ஆண்டிற்குப் பிறகு பிளேக் நோய் அறவே ஒழிக்கப்பட்டது என்றே கூறலாம். எனினும், வட ஆற்காடு, கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி மாவட்டங்களில் நோய் பரவும் பகுதிகளில் வழக்கமான பிளேக் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(d) மலேரியா.

மாநிலத் தலைநகரான சென்னையில், மலேரியா நோய்கள், கொசுக்களால் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மலேரியாவையும், கொசுக்களினால் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தும் பணியை இக்கழகம் கவனித்து வருகிறது. அங்கு பயிற்சி, ஆய்வு கொள்ளை நோயியல் ஆய்வு வசதிகள் உள்ளன. தஞ்சாவூரிலும், கோயம்புத்தூரிலும் வட்டார நோய்க்கிருமி கட்டுப்பாட்டு அமைப்புகள் இரண்டு உள்ளன. இந்த அமைப்புகளில் பயிற்சி, ஆய்வு, சோதனை வசதிகள் உள்ளன.

இம்மாநிலம் **1958-59-ஆம்** ஆண்டிலிருந்து மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இதற்காக இம் மாநிலம் **31.45** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இத்திட்டம் நோய் பீடிக்கப்பட்ட நிலை, பராமரிப்பு நிலை, ஒருங்கிணைப்பு நிலை என்ற மூன்று நிலைகளில் செயல்படுத்தப்பட்டது. மலேரியா நோய் பீடிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு முழு அளவில் சிகிச்சையளிக்கப்பட்டது. பராமரிப்பு நிலையில் **28.40** பிரிவுகளில் மலேரியா அறவே ஒழிக்கப்பட்டது. வெளியூர்களிலிருந்து இங்கு பரவிய அல்லது உள்ளூரிலேயே நிலவிய மலேரியா நோயைக் கண்டுபிடிக்க நுண்ணாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மலேரியா நோய்க் கிருமியை ஒழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தற்போது கடினமான நிலையை கடந்து வருகிறது. தொழில் நுட்ப, நடைமுறைக் காரணங்களினால் மலேரியா நோய் கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. **1974-ஆம்** ஆண்டில் இதுவரை சேலம், தருமபுரி, வட ஆற்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களிலும், சேலம், ராசிபுரம், ஈரோடு, வேலூர், சென்னை மாநகரம் ஆகிய நகரங்களிலும் சுமார் **19,953** பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றில் பராமரிப்பு நிலையில் **17,948** பேர் நோய் கண்டிருப்பதாக பதிவு

ஆகியிருந்தது. இவற்றில் பெரும்பகுதி இராமநாதபுரம், வட ஆற்காடு, தருமபுரி மாவட்டங்களில் நோய் பரவும் பிரச்சினை மிகுந்த பகுதிகளில் இருந்துதான் அதிக அளவில் நோய் கண்டிருந்தது. போதிய போக்கு வரத்து வசதியின்மை, நிலப்பகுதியின் தனித்தன்மை, வீடுகள் மிகவும் பரவலாக அமைந்திருத்தல், மக்களின் நடமாட்டம் ஆகிய காரணங்களினால் இப்பகுதிகளில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் சிக்கலாக உள்ளது. நோயைக் கட்டுப்படுத்த பணியாளர்களை நியமிப்பதன் மூலமும், மருந்துகள் தெளிப்பதன் மூலமும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. இப்பிரச்சினைகள் குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு டுள்ளது. நமது அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தொழில் நுட்பப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்ய இந்திய அரசு தனது வல்லுநர்களை அனுப்ப உறுதியளித்துள்ளது.

ஒருங்கிணைப்பு நிலையின் கீழ் ஏற்றுக்கொண்ட செலவினம் போக மலேரியா ஒழிப்புத்திட்டப் பகுதிகளில் ஆகும் மொத்தச் செலவையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. தலைமையிடத்திலும், மண்டல நிலை யிலும் பணியாற்றும் மேற்பார்வை பணியாளர்களைப் பொறுத்தவரை மொத்த செலவில் 25 சதவீதத்தை இந்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. எஞ்சிய 75 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

பராமரிப்பு நிலையின் கீழுள்ள பணிகளில் அடிப்படை உடல் நலப் பணிகள் 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 353 ஊராட்சி ஒன்றியங்கள் வருகின்றன. அடிப்படை உடல் நலப் பணிகளில் உள்ள பணியாளர் அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

10,000 மக்கட் தொகைக்கு ஓர் அடிப்படை உடல்நலப் பணியாளர்.

ஒவ்வொரு 4 அடிப்படை உடல் நலப் பணியாளர்களுக்கும் ஓர் அடிப் படை உடல்நல ஆய்வாளர்.

ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நல்வாழ்வு நிலையத்திற்கும் ஓர் ஆய்வுக் கூட உதவியாளர்.

அடிப்படை உடல் நலப் பணியாளர்கள் பல நோக்குப் பணியாளர் களாவர். பராமரிப்பு நிலைப் பகுதியில் நிறைவேற்றப்பட்டுவரும் மலேரியா ஒழிப்பு, பெரியம்மை ஒழிப்புத் திட்டங்களுக்குரிய நுண்ணாய்வுப் பணி களுக்கு உதவி புரிகின்றனர்.

அடிப்படை உடல் நலப் பணி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டமாகும். ஆனால் ஐந்தாவது திட்ட டத்தில் இச்செலவை மாநில அரசு ஏற்க வேண்டும்.

3,199 அடிப்படை உடல் நல ஊழியர்களும், 738 அடிப்படை உடல் நல ஆய்வாளர்களும், மலேரியா நோய் ஆய்வாளர்களும், 358 ஆய்வுக் கூட உதவியாளர்களும் அடிப்படை உடல் நலப் பணியின்கீழ் பணியாற்று கின்றனர்.





(e) நகர்ப்புற மலேரியாத் திட்டம் :- 1972-73-ல் ஒப்புதல் வழங்கப் பெற்ற இந்திய அரசு நகர்ப்புற மலேரியாத் திட்டத்தை சேலம், ராசிபுரம், தூத்துக்குடி, சென்னை ஆகிய நான்கு உள்ளாட்சி மன்றங்கள் நிறை வேற்றி வருகின்றன. இளம்பிள்ளை பேரூராட்சிக்கான இத்திட்டம் துறைத் திட்டமாக நிறைவேற்றஎடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் ஐந் தாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

சென்னை மாநகர் நீங்கலாக, ஏற்றுக்கொண்ட செலவு போக நடை முறைச் செலவுகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தைச் செயல் படுத்துகின்ற உள்ளாட்சி மன்றங்கள் ஏற்கும் செலவு முழுவதையும் இந்திய அரசு ஈடு செய்யும்.

சென்னை மாநகரம் பலதிறப்பட்ட மக்கள் வாழும் நகரமாயிருப்பதால், இந்திய அரசு பொருள் உதவியை மட்டும் அளிக்கிறது. இத்திட்டங் களுக்குத் தேவைப்படும் கருவிகளும், சாதனங்களும் இந்திய அரசால் இலவசமாக வழங்கப்படும்.

(f) யானைக்கால் நோய்

நமது மாநிலத்தில் யானைக்கால் நோய் கண்டுள்ள பகுதிகளில் 1.3 கோடி மக்கள் வசித்து வருகிறார்கள்.

செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், வடார்க்காடு மாவட்டங்களில் யானைக்கால் நோய் ஒழிப்பு தேசியப் பிரிவுகள் நான்குடன் 1957-58-ல் தொடங்கப்பட்ட யானைக்கால் நோய் ஒழிப்பு தேசியத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பிரிவிலும் யானைக்கால் நோய் ஒழிப்பு அதிகாரி ஒருவர், கிருமியல் உதவியாளர் ஒருவர், உடல்நல ஆய்வாளர்கள் அறுவர், களப்பணி உதவியாளர்கள் அறுவர், ஆய்வுக்கூட உதவியாளர்கள் நால்வர், 60 மஸ்தூர்கள் ஆகியோர் உள்ளனர். இப் பிரிவு, கூட்டுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இப்பிரிவு களுக்கு கூட்டுப்புழு எண்ணெய் மத்திய அரசு உதவியாக வழங்கப் படுகிறது. அவற்றிற்கான நடைமுறைச் செலவு மாநில அரசு நிதிகளி லிருந்து செய்யப்படுகிறது.

மேலும் பல பகுதிகளை இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதற்காக இத்திட்டத்தைச் சீரமைக்கும் பொருட்டு, தற்போதுள்ள நான்கு பிரிவுகளை விரிவுபடுத்துவதுடன் நான்காவது திட்டக் காலத்தில் புதியதாக எட்டுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 4·5 மில்லியன் மக்கள் பயனடைகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், திருத்தி அமைக்கப்பட்ட பிரிவுகளுக்கான நடைமுறைச் செலவுக்கும், கருவிகள், சாதனங்களுக்கும் முழு மத்திய நிதி உதவி அளிக்கப்பட்டது. ஆனால், ஐந்தாவது திட்டக் காலத்தில் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் மட்டுமே மத்திய நிதி உதவி கிடைக்கும். நடைமுறைச் செலவை மாநில அரசு நிதிகளிலிருந்து செலவிட வேண்டும்.

[1975 மார்ச் 13

மேற்சொன்ன 12 கட்டுப்பாட்டுப் பிரிவுகளுடன், ஆய்வுப் பிரிவு ஒன்று, கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்கு, யானைக்கால் நோய் ஒழிப்பு மருந்த கங்கள் 81 ஆகியவற்றை ஐந்தாவது திட்டக் காலத்தில் படிப்படியாக ஏற்படுத்த இந்திய அரசு கருதுகிறது. இது குறித்து இறுதி அனுமதி இந்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுப்பாட்டுப் பிரிவுகளுக்கும் நகராட்சிகள் போன்ற அமைப்புகளுக்கு மிடையே ஏற்படும் தடைகளை நீக்கி, பணி செவ்வையாக நடைபெற இடவும் பொருட்டு கடலூர், சிதம்பரம், விழுப்புரம், கும்பகோணம், நாகபட்டினம், தஞ்சாவூர், மன்னார்குடி, திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக் கள் காலாண்டுக்கு ஒரு முறை கூடி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும்.

## (g) உதவி மானியத் திட்டங்கள்

யானைக்கால் நோய்த் தடுப்புத் தேசியத் திட்டம் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. யானைக்கால் ஒழிப்பு, மலேரியா ஒழிப்புத் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களும் பொறுப்பு ஏற்றுள்ளன. இத்திட்டங்களுக்காகும் செலவில் ஒரு பகுதியை மாநில அரசு கொடுக்கிறது. இதுவரையில் 171 உள்ளாட்சி மன்றங்கள் இத்திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. 1975-76-ல் இன்னும் பல உள்ளாட்சி மன்றங்கள் இத் திட்டத்தைச் செயற்படுத்தும் பணியை மேற்கொள்ள எதிர் பார்க்கப் படுகிறது. தஞ்சாவூரிலும், கோயம்புத்தூரிலும் அமைந்துள்ள இரு வட் டார அமைப்புகள் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவது குறித்துப் பார்வை யிட்டு இதில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பிட்டு வரு கின்றன.

## (h) சரும நோய் (Yaws)

இந்நோய் "ட்ரபோனிமா பெர்ட்டினுயு" (Treponema Pertenue) என்னும் ஒரு வகை நுண் கிருமியினால் ஏற்படுகிற மேக நோயல்லாத ஒரு வகைக கடுமையான தொற்று நோயாகும். இக்கிருமிகள் மேக நோய் உண் டாக்கும் கிருமிகளை போன்றவையாகும். மேக நோயைப் போல் அல்லாமல், இச்சருமநோய், உடலுறவு அல்லாத பிற வகை தொடர்பால் பரவுகிறது. இந்நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகவும் ஈக்களின் மூலமும் பரவுகிறது. ஒருவருக்குக் காயத்தினால் ஏற்பட்டுள்ள இரணம் அல்லது பரு, சீழ்க்கட்டி, கொப்பளம் போன்று சருமத்தில் ஏற்படும் சிறு குறைபாடுகள் இக்கிருமிகள் வளர்வதற்கு இடமளிக்கின்றன. இவற் றின் மூலம் இதுவரையில் சருமநோய் கண்டிராதவருக்கு புண் ஏற் பட்டிருக்கிறது. சுற்றுப்புறத் துப்புரவின்மை, உடல் ஆரோக்கிய மின்மை ஆகியவையும் இச்சருமநோய் பரவுவதற்குக் காரணமாக உள்ளன. இச் சரும நோய், சமூகப் பொருளாதார வகையில் பிற்பட்ட மக்களிடையே பெரிதும் பரவலாகக் காணப்பட்டது. 1956-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் அவனாசி வட்டத்தில் அரிசன மக்கள் வாழும் இடங்களில் இச் சருமநோய் பரவியிருந்தது பற்றிய ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இதனால், அவனாசி வட்டத்தில் 1959-ல் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்



1973 மார்ச் 13]

இச் சரும நோய் ஒழிப்பு பிரிவு ஊத்துக்குழியில் தொடங்கப்பட்டது. 1960-ஆம் ஆண்டு ஒன்றும் பெருந்துறையில் ஒன்றுமாக இரு பிரிவுகளில், இச் சரும நோய் ஒழிப்புத் இடைப்பகுதியிலிருந்து 1961 மே வரையில் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந் நோயை ஒழிப்பதற்கு ரூ. 8 லட்சம் செலவிலான ஒரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர், பெருந்துறை, பொள்ளாச்சி, கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம், பவானி, உடுமலைப்பேட்டை, தாரா புரம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட எட்டு பிரிவுகளில் 1961-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து சரும நோய் ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மேற்சொன்ன பிரிவுகள் கண்டுபிடித்த சரும நோயாளிகள் ஆங்காங்கே உடனுக்குடன் சிகிச்சை பெற் றனர். 1967-ஆம் ஆண்டின் இடையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பணி முடிக்கப்பட்டது. எனவே, இப்பிரிவுகளின் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டு அனித்தேயுள்ள மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங் களுக்கு மாற்றப்பட்டது.

பெரியகுளம், பழனி, கரூர் ஆகிய இடங்களில் 1966-ஆம் ஆண்டி லிருந்து செயல்பட்டுவரும் மூன்று பிரிவுகள், திண்டுக்கல்லில் உள்ள தனிச் சுகாதார அதிகாரியின் கட்டளைப்படி மூன்று சுகாதார ஆய்வாளர் களால் நடத்தப்பட்டு வந்தன. தருமபுரியில் 1971-ஆம் ஆண்டில் புதிய பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் செய்த ஆய்வின் மூலம் இச் சருமநோய் அங்கு பரவியிருப்பது தெரிய வந்தது. இந்நோயைக் கட்டுப்படுத்த மேலும் இரு பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டன. இப்பிரிவுகள் கடலூரிலும், கொல்லி மலையிலும் 1974-ஆம் ஆண்டு ஜூன் முதற்கொண்டு 1974, டிசம்பர் வரையில் செயல்பட்டு வருகின்றன. 764 கிராமங்களில் ஆய்வு செய்யப்பட்டது. 220 பேர்களுக்கு நோய் காணப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டது. 90 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

## (i) நரம்புச் சிலந்தி நோய் (Guinea Worm)

இம்மாநிலத்தில் இந்நோய் நடைக் கிணறு, குளங்கள் முதலிய வற்றிலிருந்து பரவுகிறது. இந் நோய் வராமல் கட்டுப்படுத்துவதற்கு நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் செயற்பட்டு, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. நரம்புச் சிலந்தி நோய் பரவிய பகுதிகள் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் பூச்சி இயல் உதவியாளர், சுகாதார ஆய்வாளர், களப்பணி உதவியாளர்கள் ஏனைய துணை பணியாளர் ஆகி யோரைக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், நரம்புச் சிலந்தி நோயினை அறவே ஒழிப்பதாகும். அதாவது நோய் கண்டுள்ள கிராமங்களிலுள்ள குடிநீர் வாயில்களில் "சைக்லாப்ஸ்" நீர்க்கிருமிகளை அழிப்பதாகும். பத்து லட்சம் பாகம் நீரில் 5 பகுதி (D. D. T.) மருந்து என்ற அளவில், சதவீதம் டி. பி. டி. (D. P. T.) கரைச்சல், நீர் நிலைகளில் தெளிக்கப் படுகிறது. இவ்வாறு செய்தால் அந்நோய்க் கிருமிகள் முழுவதும் அழிக்கப்

படுகின்றன அல்லது குறைந்த அளவு இருக்குமாறு செய்யப்படுகின்றன இதனால் தொற்று நோய் பரவுவது தடுக்கப்படுகிறது. இதைத் தவிர, நரம்புச் சிலந்தி நோயால் தாக்குண்ட நோயாளிகளுக்கு, 4 சதவீதம் கார்பாலிக் நீர்மத்தில் தோய்த்த பஞ்சினால், நோயினால் பாதிக்கப்பட்ட உடல் பகுதி சுத்தம் செய்யப்பட்டு துணியால் கட்டப்படுகின்றது. வலி தெரியாமல் இருப்பதற்காக, "எபிசி" மாத்திரைகள் (A·P·C· Tablots) அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. நோய் மீண்டும் தொற்றுவதைத் தடுப்பதற்காக "சல்பாடயசின்" மாத்திரைகள் (Sulphadiazino Tablots) கொடுக்கப்படுகின்றன.

நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்ட பணியாளர் மூலம் கிராமங்களில் சுகாதாரக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது. 1974-ஆம் ஆண்டில், 148 நேர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. 1975-76-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

(ii) கருங்காய்ச்சல் (Kala-azar)

இந்நோய், தொடக்கத்தில் மாநிலத்திற்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வந்தது. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை நிறைவேற்றும் போது டி. டி. டி. (D. D. T.) மருந்து தெளிக்கப்பட்டமையால், மணல், ஈக்களின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டு, இந்நோய் பல ஆண்டுகளாக ஏற்படவே இல்லை. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டம் கட்டுப்படுத்திய நிலைக்கு வந்தபோது, டி. டி. டி. மருந்து தெளிப்பது நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, கருங்காய்ச்சல் நோய் மீண்டும் பரவத் தொடங்கியது. கருங்காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் இராமநாதபுரத்தில் ஒரு பிரிவோடு இயங்கி வருகிறது. இந்தப் பிரிவில் பூச்சி இயல் உதவியாளர் ஒருவர், சுகாதார ஆய்வாளர் மூவர், களப்பணி உதவியாளர் 15 பேர் ஆகியோர் அடங்கியுள்ளனர். இந்த பிரிவு இராமநாதபுரத்தில் நோய் கண்டுள்ள பகுதிகளில் ஆய்வு நடத்தி, கருங்காய்ச்சல் நோய் இருப்பதைக் கண்டுபிடித்து சிகிச்சை நடவடிக்கையை மேற்கொள்கின்றது. நோய் இருப்பதைக் கண்ணுற்றதன்பேரில் அந்நோயாளிகள் ஆரம்பச் சுகாதார நிலையம் அல்லது அருகேயுள்ள அரசு மருத்துவமனை ஆகியவற்றிற்கு அனுப்பப்படுகின்றனர். 1974-ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 2,478 கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டன. நோயுற்றோர் 6 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். 4,080 மணல் ஈக்கிருமிகள் சேகரிக்கப்பட்டன.

## IV. பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.

பிறப்பு, இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள் சமுதாய நல்வாழ்வு நிலையைக் காட்டும் அடிப்படை அறிகுறிகளாகும். நீண்ட காலத்திற்கு திட்டமிடப்படுவதற்கும், திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், திட்டங்களின முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்கும், முறையாகவும், உரிய நேரத்திலும் பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, ஒப்பிட்டுப்பார்ப்பது ஆகியவை அவசியமானதாகும். திட்ட வளர்ச்சிக்கு பிறப்பு, இறப்பு



பற்றிய சரியான புள்ளி விவரங்கள் இன்றியமையாதவையாகும். இவற்றை நோக்கங்களாகக் கொண்டு, நிர்வாகமும் கல்வியும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய முக்கிய நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(a) மாநிலத் தலைமையிடத்தில் இயந்திரம் மூலம் அட்டவணைப் படுத்தும் பிரிவை அமைத்தல்.

வட்டார நிலை அமைப்புகளை வலுப்படுத்தல்.

1961 ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்குப்படி ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு மேலுள்ள தற்போதைய மதுரை மாநகராட்சி உட்பட சென்னை மாநகராட்சியிலும், 8 பெரிய நகராட்சிகளிலும் பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் அமைப்புகளை வலுப்படுத்தல்.

(b) மாதிரிகள் (Sample) பதிவுத் திட்டத்தைச் செயல்படுத்தல் ;

(c) மாதிரிப் (Model) பதிவுத் திட்டத்தைச் செயல் படுத்தல். மாதிரிகள் பதிவுத் திட்டம் பிறப்பு, இறப்பு வீதத்தையும், மக்கட் தொகை பெருக்க வீதத்தையும் மதிப்பிடுவதற்கு உதவியாக உள்ளது. இறப்புகள் ஏற்பட்டதற்கான சந்தர்ப்பங்களையும் விவரங்களை யும் அறிவதற்கு சவப் பரிசோதனை செய்வதன் மூலம் கிராமப் பகுதி களில் இறப்பு வீத வகையைக் கண்டறிவதே மாதிரிப் பதிவுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

நம் மாநிலத்தில் 1973-ஆம ஆண்டின் இடையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி பிறப்பு வீதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 23·4 ஆகவும், இறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 8·2 ஆகவும் இருந்தது. குழந்தை இறப்பு வீதம் உயிருடன் பிறந்த 1,000 குழந்தை களுக்கு இறப்பு வீதம் 49·4 ஆக இருந்தது.

## V. பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வு

(1) வெளியூர்

பள்ளிக் குழந்தைகளை மருத்துவச் சோதனை செய்யும் திட்டம் ஒன்று 18 தொடக்கச் சுகாதார நிலையங்களில் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்படி, தெரிவிக்கப்பட்ட இந்தத் தொடக்கச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஒவ்வொருவரும் ஆண்டு தோறும் 6-11 வயதுத் தொகுதியுள்ள பள்ளிக் குழந்தைகள் 2,000 பேரைச் சோதனை செய்கின்றனர். நோயுற்றிருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த மருத்துவ அதிகாரிகள் மருந்துகளையும், தேவையான சத்து உணவையும் வழங்குகின்றனர்.. சிறப்பாகச் சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகிற குழந்தைகள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் இரண்டு நகர்ப்புற மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மருத்துவ அதிகாரியும் ஆண்டுதோறும் 10,000 குழந்தைகளைச் சோதனை செய்கின்றார். பிற்காப்பு நடவடிக்கைகளையும் அவர் எடுத்துக்கொள்கிறார்.

1973–74-ஆம் ஆண்டில், 56,670 குழந்தைகளுக்கு சோதனைகள் நடத்தப்பட்டன. 1974–75 ஆம் ஆண்டில் (30-9-1974 வரை) 35,274 பள்ளிக் குழந்தைகளுக்குச் சோதனைகள் நடத்தப்பட்டன.

1974–75-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் 3 நகரங்களில் அதாவது காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலும், 20 தொடக்கச் சுகாதார நிலையங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1975–76-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் 5 தொடக்கச் சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்த நாம் எண்ணியுள்ளோம்.

(2) சென்னை மாநகர்.

சென்னை மாநகரில் பள்ளி குழந்தைகளுக்கு பொது உடல் நலச் சோதனை நடத்தும் திட்டம் 1972 ஆகஸ்ட் முதல் நிறைவேற்றப்படுகிறது. இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகரிலுள்ள 6 லட்சம் பள்ளிக் குழந்தைகளில் I ஆவது, VI ஆவது வகுப்பு படிக்கும் 1.2 இலட்சம் குழந்தைகளுக்கு உடல் நலச் சோதனை செய்யப்பட்டுள்ளது. இம் மாநகர் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் குழந்தை நோய் மருத்துவ உதவி பேராசிரியரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவின் பொறுப்பில் உள்ளது. இவ்வாண்டில் 320 நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் சுமார் 27,000 பள்ளிக் குழந்தைகளுக்கு உடல் நல மருத்துவச் சோதனை செய்யப்பட்டுள்ளது. அடுத்த கல்வி ஆண்டில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவச் சோதனை அளிக்கப்படும்.

உடல் நலக் கல்விக் கழகம் :

மாநில உடல்நலக் கல்விக் கழகம் 1960-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் சீராக வளர்ந்து வந்துள்ளது. இந்திய அரசு பரிவுரை செய்த ஐந்து பிரிவுகளைத் தற்போது இக்கழகம் கொண்டுள்ளது.

1. நிர்வாக-ஆய்வுப் பிரிவு.
2. பிரச்சார சாதனப் பிரிவு.
3. நேரிட ஆய்வு-கட்புல விளக்கப் பிரிவு.
4. மாணவர் உடல்நலக் கல்விப் பிரிவு.
5. உடல்நலக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.



தங்களுடைய நடவடிக்கை, முயற்சிகள் வாயிலாக சிறந்த ஆரோக்கியமுள்ள வாழ்க்கை நிலைகளை அடைய மக்களுக்கு உதவி செய்வது உடல்நலக் கல்விக் கழகத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. இது தவிர, ஆரோக்கிய வாழ்வுக்குரிய பொறுப்பை ஏற்க மக்களுக்கு அறிவூட்டுவது இதன் குறிக்கோளாகும். இந்த குறிக்கோளினை எய்துவதற்கு, இம் மாநிலத்தின் நல்வாழ்வுத் திட்டங்கள், கொள்கைகள் இவற்றில் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் ஒருசேரப் பெறும் நோக்கத்துடன், உடல் நலக் கல்விக் கழகம், பல்வேறு பயிற்சியையும் கல்வி நடவடிக்கைகளையும் திட்டமிட்டு நிறைவேற்றுகிறது.

மாநில உடல் நலக் கல்விக்கழகம், தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சிகளை நடத்திவருகிறது. இது வரை, 32 தொகுதிகளாக நடத்திய பயிற்சித் திட்டங்களின் மூலமாக எல்லா மாவட்டங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1974–75-ல் மூன்று தொகுதி பயிற்சியாளர்கள் பயிற்சி முடித்துள்ளனர்.

(a) நிர்வாகம்—ஆய்வுப் பிரிவு.—தொடக்கச் சுகாதார நிலையத்திற்குச் சிகிச்சைக்காக வருகை தருவோர் பற்றிய ஆய்வில் இப்பிரிவு தற்போது முழு நாட்டத்தையும் செலுத்தி வருகிறது. ஐம்பத்தைந்து தொடக்கச் சுகாதார நிலையங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவை, பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

(b) பிரச்சார சாதனப் பிரிவு.—உடல்நலக் கல்வி பற்றிய நூல்களைத் தயாரிப்பது, பெறுவது, அவற்றைக் கொண்டு பயிற்சி அளிப்பது பல நிலையங்களுக்கு வழங்குவது ஆகியவற்றை பிரச்சார சாதனப் பிரிவு முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது. 1971-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மாநில பொதுச் சுகாதார அச்சகம், உடல் நலம் பற்றிய சுவரொட்டிகள், சிறு வெளியீடுகள் அச்சிடுவது போன்ற துறையின் அச்சுப் பணிகளைக் கவனிக்கிறது. மொத்தம் 248 வெளியீடுகள் வெளியிடப்பட்டன. திரைப்பட நூலகம் ஒன்றும் உள்ளது. இதில், உடல் நலம் பற்றிய பல்வேறு 527 திரைப்படங்களும், 327 துண்டுப் படங்களும் உள்ளன. இத்திரைப் படங்கள் திரையிடப்படுவதற்காக இம் மாநிலத்திலுள்ள பல்வேறு துறை அமைப்புகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் இவை கட்டணம் எதுமில்லாமல் கடனாக வழங்கப்படுகின்றன. உடல் நலத் தலைப்புச் செய்திகள் குறித்த விளம்பரம் "சிலைடுகள்" தயாரிக்கப்பட்டு, திரைப்பட அரங்குகளில் திரையிடப்படுவதற்காக வழங்கப்பட்டன. 1974–75-ல், 900 திரைப்பட சிலைடுகள் தயாரிக்கப்பட்டு, காட்டப்பட்டன. 975 திரைப்படங்கள், திரையிடப்படுவதற்காக வழங்கப்பட்டன. பொதுமக்களுக்கு அறிவு புகட்டுவதற்காக மாநகரிலும், மாநகரைச் சுற்றியும் சுமார் 200 திரைப் படக்காட்சிகள் நடத்தப்பட்டன.

1974–75-ல் பொருட்காட்சிப் பிரிவு 15 பொருட்காட்சிகளை நடத்தியது, பொம்மலாட்டக் காட்சிப் பிரிவு, 40 பொம்மலாட்டக் காட்சிகளை நடத்தியது.

இவ்வாறாக, மேற்சொன்ன நடவடிக்கைகளினால், பிரச்சார சாதனப் பிரிவு, உடல் நலம் பற்றிய கருத்துக்களைப் பொதுமக்களுக்கு விளக்குகிறது.

(c) நேரிட ஆய்வு—தட்புல விளக்க நிலையம்.—வேளச்சேரி பகுதியிலுள்ள தொடக்கச் சுகாதார நிலையத்தில் இக்குழு தனது நடவடிக்கைகளில் நாட்டம் செலுத்துகிறது. சத்துணவு குறித்த பாடங்கள் தயாரிக்கப்பட்டு பள்ளிக்கரணை அரசு உயர்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம் மாநகராட்சி நடுத்தரப்பள்ளி ஆகியவற்றின் VI ஆவது வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. வேளச்சேரி பகுதியிலுள்ள சில பள்ளிகள் மருத்துவ ஆய்விற்குத் தெரிந்தெடுக்கப்பட்டு மாணவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன. கனகம் கிராமத்திலுள்ள மக்களுக்கு நீரடிக் கழிப்பிடங்கள் குறித்து விளக்கப்பட்டது. பன்னிரண்டு நீரடிக் கழிப்பிடங்களும் கட்டிக் கொடுக்கப்பட்டன.

(d) மாணவர் உடல்நலக் கல்விப் பிரிவு—சொந்தத் தூய்மை நலம், தொற்று நோய், தொற்று வகை அல்லாத நோய்கள், சத்துணவு ஆகிய தலைப்புகளில் வழி காட்டி நூல் ஒன்றை VI, VII ஆவது வகுப்புகளின் ஆசிரியர்களுக்காகத் தயாரிப்பதில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. கிராமங்களிலுள்ள தொடக்கப்பள்ளிகளில் தற்போதுள்ள சுகாதார நிலைமைகளைக் கண்டறிய 14 தொடக்கச் சுகாதார நிலையங்களிலிருந்து 293 பள்ளிகளில் தற்போதுள்ள சுகாதார நிலைமைகள் குறித்து இப்பிரிவு ஆய்வு ஒன்றையும் செய்தது. தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஆய்வு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

(e) ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.—இம்மாநிலத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இப்பிரிவு சுகாதாரக் கல்வியில் பயிற்சியளிக்கிறது. ஒவ்வொரு தொகுதியும் சாதாரணமாக 20-லிருந்து 25 ஆசிரியர்கள் கொண்டது. பயிற்சிக் கால அளவு 45 நாட்கள் ஆகும். ஓராண்டில் பயிற்சியளிக்கப்படும் தொகுதியினரின் எண்ணிக்கையை 4-லிருந்து 6 ஆக உயர்த்த, பயிற்சி கால அளவு, அண்மையில் 30 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும், சமுதாயத்திலும் சுகாதாரத்தைப் பேணுவதில் ஆசிரியர்களின் பங்குபற்றிய கருத்தை உருவாக்குவதே ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுவரை 15 தொகுதியினருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 16-வது தொகுதியினருக்குப் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. களப் பயிற்சிக்காக, போரூரில் உள்ள ஒரு பள்ளியும், நந்தனத்திலுள்ள ஒரு பள்ளியும் தெரிந்தெடுக்கப்பட்டன. இங்கு, அவர்களுக்கு, சுகாதாரக் கல்வி கற்பிப்பதற்கு பயிற்சி பெற வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்த இரண்டு பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்குச் சுகாதாரப் பணிகளும் செய்து தரப்பட்டன.

(f) மாநிலச் சுகாதாரக் கல்விக்குழு.—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டும், சில துறைத் தலைவர்களையும்; தெரிந்தெடுக்கப்பட்ட சில அரசுச் செயலாளர்களையும்,





சட்டமன்றப் பேரவை; மேலவை உறுப்பினர்களையும், கொண்டு நிறுவனப் பிரதிநிதிகளையும் கொண்ட மாநில சுகாதாரக் கல்விக்குழு ஒன்று உள்ளது. இக்குழு, மாநில சுகாதாரக் கல்விக் கழகத்தின் சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கும் வழிகாட்டுவதற்கும் துணைபுரிகிறது. இதுவரை இக்குழு 12 முறை கூடியுள்ளது.

(g) பொது நல்வாழ்வு நிறுவனம்; பூவிருந்தவல்லி.—இந்த நிறுவனம் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.—

(1) நல்வாழ்வுப் பிரிவு—பணிப் பிரிவு.

(2) மறுபயிற்சி நிலையம்—பயிற்சிப்பிரிவு

(3) ஆராய்ச்சி-செயல் திட்டம்—செயல் பிரிவு பின்பற்றும் ஆராய்ச்சி

இந்த நலவாழ்வுப் பிரிவு; ராக்பெல்லர் நிறுவனத்தின் உதவியுடன் 1935-ல் தொடங்கப்பட்டது. பின்னர் மேற்சொன்ன நிறுவனத்தின் உதவி முடிவடைந்த பின்னர் இதனைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.

இப்பிரிவின் நோக்கங்களாவன.—

(i) சோதனை முயற்சியாக மும்முரச் சுகாதாரப் பணிகளுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம் குறிப்பிட்ட கிராமப்புற பகுதி ஒன்றில் பொது நல்வாழ்வினை மேம்படுத்துதல்.

(ii) பொது நல்வாழ்வு நன் முயற்சியுடன் கிராம மக்களுக்கு நோய்த் தடுப்பு முறைகளைக் கையாள என்ன செய்யலாம் என்பது குறித்து விளக்குதல்.

பொது உடல் நலக் கூறுகள் அனைத்திலும் மருத்துவப் பணியாளர்களுக்கும்; துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்க வசதி அளித்தல்.

இப்பிரிவின் அலுவல்களாவன.—

(1) மகப்பேறு; குழந்தை நலப் பணிகளுக்கு வகை செய்தல்.

(2) குடும்ப நலத் திட்டம்.

(3) தொற்று நோய்கள் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.

(4) சுற்றுப்புறத் துப்புரவு.

(5) உடல் நலக் கல்வி.

[1975 மார்ச் 13

(6) பிறப்பு; இறப்புப் புள்ளி விவரங்களைத் தொகுத்தல்.

(7) பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

1974 ஆம் ஆண்டில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை 5,210 சுகாதார பிரிவு இருக்கும் பகுதியில் பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 2,584.

மகப்பேறு, குழந்தை நலப் பணி பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து குடும்ப நலத் திட்டப் பணி நடத்தப்பட்டு வருகிறது. மகப்பேறு, குழந்தைகள் நல தனி மருந்தகங்களுடன் குடும்ப நலத் திட்ட மருந்தகங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. 1974 ஆம் ஆண்டில் 252 ஆண்களும், 2,423 பெண்களும், குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளனர். 11 ஆண்கள் "வாசக்டமி" அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். 213 பெண்கள் "டியூபெக்டமி" அறுவை சிகிச்சை செய்து கொண்டனர்.

சுகாதாரப் பிரிவு தொற்று நோய்களைப் பரவா வண்ணம் தடுத்தல். சுற்றுப்புறத் துப்புரவு, சுகாதாரக் கல்வி முதலியவை போன்ற ஏனைய வகைப் பொதுச் சுகாதார நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. பொதுச் சுகாதாரம், ஏனைய சுகாதாரக் கூறுகளில் மும்முரப் பயிற்சி பெறுவதற்காக சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து மனையிட மருத்துவர்களும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெறும் செவிலியர்களும் இந்தச் சுகாதாரப் பிரிவுக்கு முறையாக நியமிக்கப்பட்டு வருகின்றனர் 1974-ல், இந்தச் சுகாதாரப் பிரிவில் 282 மனையிட மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெறும், மருத்துவர்களும், மருத்துவ உதவியாளர்களும், சமுதாய சுகாதார ஆய்வுப் பணியின் மூலம் கிராமங்களின் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளச் செய்யப்பட்டனர். அம்மை குத்துதல் முதலியன போன்ற சில சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு இந்த பயிற்சி பெறுபவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. பொது மக்களுக்கு சுகாதாரக் கல்வி கற்பிக்கும் திட்டங்களிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

(h) மறுபயிற்சி நிலையம் :

இந்நிலையம், 1954 ஆம் ஆண்டில் ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் உதவி நிறுத்தப்பட்டவுடன் இந்த நிலையத்தை அரசு மேற்கொண்டது. தொடக்கச் சுகாதார நிலையங்களில் பணியிருப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கும் மருத்துவ உதவியாளர்களுக்கும் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியின் நோக்கங்களாவன :—

1. தொடக்கச் சுகாதார நிலையத் தொகுதியைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களிடையே ஒருங்கு சேர்ந்து உழைக்கும் கூட்டுணர்வை வளர்த்தல், வேலை—பிரச்சினை இவற்றை மையமாகக் கொண்ட பயிற்சியளித்தல்.



1975 மார்ச் 13]

2. தொடக்கச் சுகாதார நிலையங்களில் பணிபுரியும் உடல் நலப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணியில் நடைமுறைப் பயிற்சி அளித்தல்.

இந்த நிலையம், அண்டை மாநிலங்களால் பயிற்சி நிலையமாகப் பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னர், இந்த மாநிலங்கள், தங்களின் பகுதியில் இத்தகு நிலையங்களை அமைத்துக் கொண்டுள்ளன. தற்போது இந்நிலையம் நமது மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்கிறது.

இதுவரை, 105 தொகுதி பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 106-வது தொகுதிப் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(i) ஆராய்ச்சி—செயல் திட்டம்.—இத்திட்டம், 1956 ஆம் ஆண்டில் ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. கிராமச் சுகாதார மேம்பாட்டு பணிகள், அவற்றின் அணுகு முறை ஆகியவை பற்றிய உத்திகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை மேற்கொள்வதாக இத்திட்டம் தொடங்கப்பட்டது. முதலில் கிராமப்புறக் கழிப்பிட வசதி திட்டம் பற்றி 1956 முதல் 1960 வரையில் நான்கு ஆண்டுகளுக்கு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் குறைந்த செலவிலும், எளிமையான முறையிலும் துப்புரவு வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான வழிவகை பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஃபோர்டு நிறுவனத்தின் உதவி நிறுத்தப்பட்டவுடன் 1961-லிருந்து இத்திட்டத்தை அரசு மேற்கொண்டது.

1974 ஆம் ஆண்டில் வில்லிவாக்கம், பூவிருந்தவல்லி, வாலாஜாபாத் திருத்தணி ஆகிய நான்கு பேரூராட்சிகளில் ரூபாய் 1.25 இலட்சம் செலவில் 1,000 கழிப்பிடங்கள் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை பூவிருந்தவல்லி, பொதுச் சுகாதார நிறுவனம் மேற்கொண்டது. இந்த நான்கு பேரூராட்சிகளில் 1,000 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. நீரடி வசதியல்லாத கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதற்கான திட்டம் ஒன்றும் உள்ளது. இம் மாநிலத்தின் பல கிராமங்களில் அரிசனங்களுக்காகக் கட்டப்படும் வீடுகளுக்கென 2,500 நீரடிக் கழிப்பிடங்களை அமைக்குமாறு ஆராய்ச்சி செயல் திட்டத்தை மாநில அரசின மேம்பாடு—வீட்டு வசதிக் கழகம் கேட்டுக் கொண்டது. இப்பணி தொடங்கப்பட்டது. செங்கல்பட்டு தஞ்சாவூர், மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த தெரிந்தெடுத்த ஊராட்சிகளில் ரூபாய் 5 இலட்சம் செலவில் தற்போதுள்ள நீரடி வசதியற்ற கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீரடிக் கழிப்பிடங்களின் முக்கியத்துவத்தைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்வதற்காக முறையான பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. வளர்புரம் கிராமத்தில் சத்துணவு குறித்த ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தில் துணை உணவுத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய "கேர்" நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தின் உதவியுடனும் கிராம அதிகாரிகளின் உதவியுடனும் இத்திட்டம் 1975 ஜனவரியில் செயல்படுத்தப்படும்.

## VII உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.

நுகர்வோரின் நலனைப் பாதுகாப்பதற்கென உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தலைத் தடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து செயலாற்றுகின்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், உணவு கலப்பட வழக்குகள் கண்டுபிடிக்கப்படுவதிலும்; 1954 ஆம் ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தை செயல்படுத்துவதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை முக்கியமாக உள்ளாட்சி மன்றங்கள் வாயிலாகச் செயல்படுத்த வேண்டியுள்ளதால், இம் மாநிலத்தில் கிராமப் பகுதிகள் அடங்கிய சுமார் மூன்றில் இரண்டு பகுதியில் இன்னும் இப்பணி நிறைவேற்றப்படவில்லை. இம் மாநிலத்தில் உள்ள கீழ்க்கண்ட ஆய்வுக் கூடங்கள் பகுப்பாய்வு பணிகளை தற்போது ஆற்றி வருகின்றன :—

(i) சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் உணவு பகுப்பாய்வுக் கூடம்.

(ii) கிண்டி கிங் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உணவுப் பகுப்பாய்வுக் கூடம்.

(iii) கோயம்புத்தூரில் உள்ள உணவுப் பகுப்பாய்வுக் கூடம்.

30—12—1974 வரையில் இந்த மூன்று ஆய்வுக் கூடங்களும் 18,341 உணவு மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்தன. இவற்றில் 4,864 மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டதெனத் தெரிய வந்தது. இவற்றில், 4,321 தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டன. 3,088 வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டது. 38 பேர் குற்றமற்றவரென விடுவிக்கப்பட்டனர். ஏனைய வழக்குகள் முடிவுறு நிலையில் உள்ளன. மொத்தம் ரூ. 7,49,231·50 அபராதம் வசூலிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் ஆய்வுக் கூட வசதிகளைப் பெருக்கும் பொருட்டு, மதுரையில் ஒன்றும் தஞ்சாவூரில் ஒன்றுமாக இரண்டு உணவுப் பகுப்பாய்வுக் கூடங்களை நிறுவ 1974–75-ல் அனுமதி வழங்கப்பட்டது. அவை முடிவுறும் நிலையில் உள்ளன. பாளையங்கோட்டையில் கூடுதல் பகுப்பாய்வுக் கூடம் ஒன்றும் சேலத்தில் மற்றொன்றுமாக இரண்டு பகுப்பாய்வுக் கூடங்களை 1975–76-ல் நிறுவக் கருதப்பட்டுள்ளது. இச் சட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக சுகாதார அதிகாரி ஒருவருடன் உணவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஒன்று தலைமையிடத்தில் செயல்பட்டு வருகிறது. இப் பிரிவு உணவுப் பொருள்களைத் திடீரெனச் சோதனையிடுவதுடன், உணவு ஆய்வாளர்களின் பணியை உன்னிப்பாக மேற்பார்வையிடுகிறது. உணவுப் பொருள் கலப்படம் செய்வதற்கெதிராக செய்தித்தாள்கள், சுவரொட்டிகள், வானொலி ஆகியவற்றின் வாயிலாகப் போதிய பிரச்சாரம் செய்யப்படுகிறது. உணவுப் பொருள் கலப்பட தடுப்பு குறித்து மாநில ஆலோசனைக் குழுவைச் சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதில் நுகர்வோர், வணிகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு நுகர்வோர் பிரதிநிதிகள் மூவரையும் (அரசு சார்பற்றவர்கள்) வணிகர்கள் பிரதி நிதிகள் ஆறுபேரையும் அரசு சார்பற்றவர்கள்) அக் குழுவில் சேர்த்துக் கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



## A–III. பல்வகை.

### (a) சந்தைகளும் திருவிழாக்களும் :

சந்தைகள், திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மேற்பார்வையின் கீழ் போதிய சுகாதார ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தேவையான இடங்களில் கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இயங்கும் கொள்ளைநோய்ப் பிரிவுகளின் பணிகளும் காலரா கட்டுப் பாட்டுக் குழுக்களின் பணிகளும் தேவையானபோது பயன்படுத்திக் கொள்ளப் படுகின்றன. கொள்ளை நோய்கள் பரவுவதைத் தடுக்கக் காலராதடுப்புப் பணி முதலிய பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

### (b) சுற்றுப்புறச் சுகாதாரம் :

தொழிற்சாலைகள் விரைவாக பெருகிவருவதன் விளைவாக, காற்று, நீர், நிலம் ஆகியவற்றின் தூய்மை கெட்டுவிடுவது பெரிய பிரச்னையாக இருக்கிறது. இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணவேண்டியது அவசியமாகும். இப்பிரச்சினைபற்றி இவ்வரசு நன்கு அறிந்துவந்திருப்பதோடு இதற்குத் தக்க வழியில் தீர்வு காண பல நடைமுறைகளைத் தொடங்கியுள்ளது. தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டு, அங்கிருந்து வெளியேறும் கழிவுகளை முடிவு செய்வதில் தொழிலதிபர்களுக்கு நல்லபல ஆலோசனைகளை நல்கும் பணியைச் சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகம் தற்போது கவனித்து வருகிறது. மேலும் தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு பொதுச் சுகாதாரச் சட்டம், 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் முதலியவை தொடர்பான விதிகள், விதிமுறைகள் ஆகியவற்றையும் அது செயல்படுத்திவருகிறது. நீர், கழிவு நீர்தூய்மைப் படுத்துவது குறித்த குழு கழிவுப் பொருள் பிரச்சினை குறித்து தொழிலதிபர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களை முறைப்படி ஆய்வு செய்து, மேற்சொன்ன பிரச்சினையை சரியான வழியில் அணுகி அதற்குத் தீர்வு காணுவதற்கான நடைமுறைகள் பற்றி அவர்களுக்கு ஆலோசனை நல்குகின்றது. சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத் திட்ட இயக்குநர் இக் குழுவின் தலைவராவார். தவிர, தூய்மைக் கேடு பிரச்சினையை எல்லா வழிகளிலும் நுணுக்கமாக அலசி ஆராய்வதில் சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகத்தோடு ஒருங்கிணைத்து அதற்கு உதவியாகச் செயலாற்ற தலைமைப் பொறியாளர் பதவித்தரத்தில் சிறப்பு அலுவலர் ஒருவரை அரசு நியமித்துள்ளது. சிறப்பு அலுவலரும் சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகத்தினரும் கீழ்க் காணும் பணிகளைத் தொடங்கியுள்ளனர் :—

(i) 13 தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில் தூய்மைக் கேடு பிரச்சினை பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 13

(ii) இம் மாநிலத்தில் தூய்மைக் கேட்டினை குறைக்க ஒன்பது தொழிற்சாலைகள் குறித்த திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மாநிலத் திட்ட ஆணைக் குழுவிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

(iii) தூய்மைக் கேடு குறித்த நான்கு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப் பட்டு புதுடில்லி, அறிவியல்—தொழில் நுட்பம், சுற்றுப்புறச் சுகாதாரத் திட்டம், ஒருங்கிணைப்பு துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(iv) சிறப்பு அலுவலரும், நீர்-கழிவு நீர் தூய்மைப் படுத்துவது குறித்த குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் (இயக்குநர் அலுவலகத் தைச் சேர்ந்த) ஏனைய அதிகாரிகளும் 11 தொழிற்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டு, தூய்மைக் கேட்டினால் ஏற்படும் விளைவுகள் தொழிற்சாலை களிலிருந்து வெளிவருகிற கழிவு நீரின் தன்மைகள், அது குறித்து தீர்வு காணும் நடைமுறைகள் பற்றி ஆய்வு செய்தனர்.

(v) புதுடில்லி, அறிவியல்-தொழில் நுட்பத் துறையின் பிரிவாக உள்ள சுற்றுப்புறச் சுகாதார ஆராய்ச்சிக் குழுவின் ஓர் உறுப்பினராக இருக்கும் இத்துறையின் சிறப்பு அலுவலர், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுற்றுப்புறச் சுகாதாரம் குறித்து செய்யத் திட்டமிட்டுள்ள ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டத்தை ஆய்ந்து அறிதல், தொடங்குதல், மதிப்பிடுதல், குறித்து சுற்றுப்புறச் சுகாதார ஆராய்ச்சிக் குழுவிற்கு ஆலோசனை நல்குகிறார்.

தூய்மைக் கேட்டினைக் கட்டுப்படுத்தி, பின்னர் அதனை அறவே ஒழிப் பதற்கான வழிவகைகளைக் கண்டறியத் தொழிலதிபர்களோடும் ஏனையவர் களோடும் மேற்கொண்டும் விவாதிக்கக் கருதப்பட்டுள்ளது.



1965 மார்ச் 13]

## இணைப்பு.

**மக்கள் நல்வாழ்வுக்கான செலவு :**

நமது மாநிலத்தில் 1967-68-ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1967-68 .. .. .. | 519.25 |
| 1968-69 .. .. .. | 595.60 |
| 1969-70 .. .. .. | 748.06 |
| 1970-71 .. .. .. | 850.08 |
| 1971-72 .. .. .. | 1,146.07 |
| 1972-73 .. .. .. | 1,610.73 |
| 1973-74 .. .. .. | 1,542.33 |
| 1974-75 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 1,576.63 |
| 1975-76 (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 1,625.76 |

"கோரிக்கை எண். 19—மக்கள் நல்வாழ்வு" என்பதன் கீழ் சேர்க்கப் படும் மக்கள் நல்வாழ்வு குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

இக்கோரிக்கையின் கீழ் அடங்கியுள்ள இனங்கள் பின்வருமாறு :

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| கழிவு நீர் அகற்றுத் திட்டங்கள் .. .. .. .. | 6.19 |
| நகர்ப்பகுதி நீர்வழங்குத் திட்டம் .. .. .. .. | 17.51 |
| கிராமங்களுக்குக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் | 325.01 |
| கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் ஏனைய திட்டங்கள் .. | 0.92 |

தூத்துக்குடி நீர் வழங்கு திட்டம் :

தூத்துக்குடியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 20 மில்லியன் காலன் நீர் வழங்கும் திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. இத் திட்டத்தின் மூலம் பயனடையும் நிறுவனங்களில் ஒன்றான சதர்ன் பெட்ரோ கெமிகல்ஸ் இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனுக்கு 1—11—73 முதல் முன்னோடி முறையில் நீர் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் எல்லா வகையிலும் 1975-76-ல் முடிக்கப்பட்டுவிடும்.

குடிநீர்ப் பற்றுக்குறையுள்ள, நரம்புச் சிலந்தி முதலிய நோய்கள் பரவியுள்ள கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு யூனிசெப் நிறுவனம் உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் 1973-74 இறுதி வரை 675 கிராமங்களில் 1,250 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு நீர் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1974-75-ல் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1,500 துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு நீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1975-76-ல் 600 கிராமங்களில் 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 1,500 துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

கிராமப் பகுதிகள் குறைந்த அளவு தேவைகளை நிறைவு செய்யும் திட்டம்.

கிராமப் பகுதிகள் அனைத்திலும் தூநீர் வழங்க வகை செய்வது அரசின் தலையாய நோக்கமாகும். இக்கொள்கைக்கிணங்கவும், மத்திய அரசின் உதவியோடும் மாநில அரசுகுடிநீர் வழங்கு விரைவுத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள் பலவற்றைத் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியத்தின் மூலமாக நிறைவேற்றியது. 1973-74-ஆம் ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தின் கீழ் 237 கிராமங்கள் பயனடைந்துள்ளன. தமிழ்நாட்டில் 58,595 கிராமங்களும் சிற்றூர்களும் இருக்கின்றன. இங்கு 2.56 கோடி மக்கள் வாழ்கின்றனர். 0.38 கோடி மக்கள் தொகை உள்ள 4,916 கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றில் பொதுப் பயனுக்கான குடிநீர் வாயில்கள் இல்லை. 0.19 கோடி மக்கள் தொகை உள்ள 2,230 கிராமங்களும் சிற்றூர்களும் நரம்புச் சிலந்தி முதலிய நோய்கள் பரவியுள்ள பகுதிகளில் அமைந்துள்ளன. இங்கு தூநீர் வழங்குத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணும் பொருட்டு, குடிநீர்ப் பற்றுக் குறையுள்ள, நரம்புச் சிலந்தி முதலிய நோய்கள் பரவியுள்ள பகுதிகளில் தூநீர் வழங்குவதற்கு வகை செய்ய குறைந்த அளவுத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்த மாநில அரசு அனுமதி வழங்கியது. இதற்காக 1974-75-ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. குடிநீர்ப் பற்றுக்குறையுள்ள பகுதியிலிருக்கும் 646 கிராமங்களுக்கும் நரம்புச் சிலந்தி முதலிய நோய்கள் பரவியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள 1,041 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க 1974-75-ல் வகை செய்யப்படும். 270 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 1,500 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படும் வகையில் இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை
## வெள்ளிக்கிழமை, 1975 மார்ச் 14

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள். கேள்வி எண் 311. திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கேள்விக்கு மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, on a point of order....

MR. DEPUTY SPEAKER : No point of order now. Only after we finish Questions, the hon. Member can raise his point of order. . . .

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் எப்பொழுதும் எழுப்பலாமே.

MR. DEPUTY SPEAKER : Here the convention is that we should first finish the questions and then the hon. Member can raise his point of order....

*Elementary School teachers' pension.*

* 311 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state....

(*a*) Whether there is any difference between the pension given to teachers of Aided Elementary Schools who retired prior to 1960 and those who retired after 1960; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) தனியார் துறை ஆரம்பப் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் எப்பொழுது ஓய்வு பெற்றார்களோ அப்பொழுது அமலில் உள்ள ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வு ஊதியம் பெற்று வருவதால் 1960-க்கு முன்பு ஓய்வு பெற்ற 1960-க்குப் பின்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத்தில் வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

**திரு. என். கே. பழனிசாமி** : தலைவர் அவர்களே, பென்ஷன் கொடுப்பதில் 1960-க்கு முன்னால் ஒரு விகிதமும், பின்னால் ஒரு விகிதமும் இருப்பது சரியா ? பென்ஷன் என்பது ஒரே சீராகத்தான் இருக்க வேண்டும். அப்படிக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அதைத்தான் முதலில் குறிப்பிட்டேன். ஓய்வு பெறுகிறவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க என்ன விதி முறைகள் இருக்கின்றனவோ அந்த விதிமுறைகளின் அடிப்படையில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. 1960-க்கு முன்னால் ஒரு நிலை இருந்தது. 1960-லிருந்து 1970 வரை ஒரு நிலை. 1970-க்குப் பிறகு விதிமுறைகள் மாறியிருக்கின்றன. இதற்கென்று என்ன விதி முறைகள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையில்தான் தரப்படும். பொதுவாக ஓய்வூதியத்தை எல்லோருக்கும் உயர்த்தியிருக்கிறோம். அந்த அளவு உயர்த்தி எல்லோருக்கும் கிடைக்கும்போது, எல்லோருக்கும் சரி சமமாகக் கிடைக்கும். ஆனால், ஓய்வூதியத்தின் அளவு அதற்குரிய விதி முறைகளின்படிதான் கிடைக்கும்.

**திரு. கோ. இளங்கோவன்** : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விடை சொல்லும்போது பென்ஷனில் வித்தியாசம் இருப்பதாகச் சொன்னார்கள். எவ்வளவு ரூபாய் வித்தியாசம் என்பதைத் அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, எவ்வளவு என்று கணக்குத் தெரியவில்லை. ஆனால், 30/120 என்று கணக்குப் போட்டு, அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னால் மூன்று ஆண்டுகளுக்கு முன்புள்ளதை சராசரிக் கணக்கெடுக்கிறோம். 30/120 என்பது 1960-க்கு முன்பிருந்த நிலை. பிறகு மேக்ஸிமம் பென்ஷன் ரூல்ஸ்படி 30/120 என்று 1960-க்குப் பின்னால் கொடுக்கப்பட்டது. 30 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருக்க வேண்டும். 1—6—1970-க்குப் பின்னர் 30/80. 25 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருக்க வேண்டும் என்ற விதி முறைகள் மாற்றப்பட்டன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் ஓய்வுபெற்று ஐந்தாண்டுகள் ஆகியும் இன்னும் பலருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. ஆகவே, ஓய்வு பெற்ற மறு மாதமே ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்புமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு உடனுக்குடன் ஓய்வூதியம் வழங்குவதற்குரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கல்வித் துறை அதிகாரிகளிடம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், சிலரைப் பொறுத்த வரையில் அதற்கான விவரங்கள், அதற்கான ரிக்கார்டுகள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. சில நேரங்களில் மேலும் விவரம் பெற வேண்டியிருக்கிறது. அதனால்தான், சில கேஸ்களில் காலத் தாழ்வு ஏற்படுகிறது. அவற்றை விரைவில் முடிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.



**திரு. ஜே. ஜேம்ஸ்** : கன்னியாகுமரி மாவட்டத்தில் சிங்கிள் ஸ்கூல் டீச்சர்ஸ் என்று ஒரு இனத்தவர் இருக்கிறார்கள். கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் வந்தபோது தனியார் பள்ளிகளை அரசுக்கு விட்டுக்கொடுத்து அப்பொழுது சர்வீஸில் இருந்தவர்களை அரசு ஏற்றுக்கொண்டது. அந்த வகுப்பினருக்கு பென்ஷனை இது வரையில் வழங்கப்படவில்லை. ஆனால், அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைப்படியான பென்ஷன் திட்டத்தை அந்த வகுப்பினர் இதுவரை பெறாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அது பற்றி விவரக் குறிப்பு இல்லை. தனியாக எங்காவது கவனம் செலுத்த வேண்டுமென்றால் எழுதியனுப்பினால் கவனம் செலுத்தலாம் அல்லது தனிக் கேள்வி போட்டால் அதனுடைய விவரம் தரலாம்.

**திரு. எ. சுப்பிரமணியம்** : தலைவர் அவர்களே, 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ந் தேதிக்கு முன்பு இருந்த பஞ்சப்படிதான் ஆசிரியர்களுக்கு பென்ஷனுக்குக் கணக்கிடப்படுகிறது. அதற்குப் பின்னால் இப்பொழுது வழங்கியிருக்கிற பஞ்சப் படியையும் பென்ஷனுக்கு வழங்க அரசு முடிவு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, அது பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. கோ. அழகர்சாமி** : இருவருடைய பணிக் காலம் முடிந்த உடனேயே அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பென்ஷன் உடனடியாகக் கிடைக்க வேண்டியதற்குப் பதிலாக, 90 சதவீதம், 75 சதவீதம் என்ற அளவில் அந்தந்தத் துறையினுடைய தலைவர் அல்லது அந்த அந்த மாவட்ட அதிகாரியே கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டதை, அது மாதிரி, இப்பொழுது கொடுக்கப்படாமல், இரண்டு மூன்று ஆண்டு கழித்து.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இது இல்லை.

**திரு. கோ. அழகர்சாமி** : 75 சதவீத பென்ஷனாவது உடனடியாகக் கிடைக்க வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று சென்ற ஆண்டு அந்த ஏற்பாடு செய்யப்பட்டது. முழுவதும் சரிபார்த்துக் கொடுப்பதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட விழுக்காடு, 75 சதவீதம், 80 சதவீதம் தரலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. யாருக்காவது அப்படிக் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருந்தால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது பற்றி அரசு கவனிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, சட்டக் கமிஷன் கமிஷனேகூட, ஓய்வு பெற்றவர்கள் சம்பந்தமாக புதிய விதிகள் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் அந்த விதிமுறை அனுஷ்டிக்கப்படுகிறதா ? 1960–க்கு முன்னால் 1960–க்குப் பின்னால் என்று வித்தியாசம் இல்லாமல், அவர்களுக்குப் போதுமான ஓய்வூதியங்கள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லாத் துறையினருக்கும் ஒரே விதமான முறைகள் கடைப்பிடிக்கப்பட்டு இன்றன. ஆனால், நான் குறிப்பிட்டது—1960–க்கு முன்னால் ஒரு விதிமுறை இருந்தது. 1960–க்குப் பிறகு 1970 வரை ஒரு விதி முறை கடைப்பிடிக்கப்பட்டது. 1970–க்குப் பிறகு வேறு விதி முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஓய்வு பெறும்போது எந்த விதி முறை அமலில் இருந்ததோ அதைத்தான் நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிறது. அதனால்தான் அந்த வேறுபாடுகள் இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னையா நாடார் : தலைவர் அவர்களே, சில ஆசிரியர்களுக்கு ஒழுங்கான முறையில் சர்வீஸ் ரிஜிஸ்டர் இல்லை என்ற புகார் இருக்கிறது. ஆகையால், இம்மாதிரியான கேஸ்களில் இப்பொழுது இருக்கிற விதிமுறையைத் தளர்த்தி அவர்களுக்கு உடனடியாகப் பென்ஷன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதை அரசாங்கத்தின் கவனத்திற்குத் தனித் தனியாகக் கொண்டுவந்தால் அந்தந்த வழக்குகளைத் தனியாக ஆராய்ந்து, தீர்க்க முடியாத சூழ்நிலை இருந்தால், தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தளர்த்தலாம். ஆனால், பொதுவான விதி முறைகளில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நாம் ஆராய வேண்டும்.

திரு. த. சொனையா : ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் பணி குறித்த ரிக்கார்டுகள் இருந்தும்கூட பென்ஷன் வழங்குவதில் கால தாமதம் ஆகிறது. ஓய்வுபெற்ற ஆசிரியர்களுடைய சேமிப்புப் பணமோ, பென்ஷன் பணமோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எப்படியும் கொடுத்துவிட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், முன்பு மாவட்டக் கழகங்களின் கீழ் இருந்த பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள், இன்னும் வேறு பல முறைகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் என்று பல்வேறு நிலைமைகள் இருப்பதால், பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. பென்ஷன் தொகையில் 75 சதவீதம், 80 சதவீதம் வரையில் முன் கூட்டியே கொடுத்துவிடலாம்: 20 சதவீதத்தை நிறுத்தி வைத்து பிறகு ஆராய்ந்த பிறகு தரலாம் என்ற விதிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஆகவே, கூடுமான வரையில் அவர்கள் தாமதம் இல்லாமல் ஓய்வு ஊதியம் பெறுவதற்கான வழிவகை காணும் முயற்சிகளை ஆங்காங்கே இருக்கிற கல்வித்துறை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.





திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பெற வேண்டிய ஓய்வூதியம் மாதா மாதம் கிடைக்காமல், இரண்டு மாதங்கள் ஆகின்றன. தடை இல்லாமல் மாதா மாதம் கிடைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சில வழக்குகளில் என்ன காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறது என்று தெரியவில்லை. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் காலதாமதத்திற்கான காரணத்தைக் கண்டறியலாம். அந்தந்த மாதத்திலேயே தர வேண்டுமென்பதுதான் இருந்து வருகிற விதியாகும்.

திரு. கே. என். குமாரசாமி : தனியார் பள்ளியில் இருக்கும் ஆசிரியர்கள் அரசாங்க பள்ளிகளுக்கு வேலைக்குச் செல்கிறார்கள். ஆனால், அவர்கள் தனியார் பள்ளியில் வேலை பார்த்த சர்வீஸ் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுவதில்லை. ஓய்வூதியம் பெறும்போது அந்த சர்வீஸ் "கட்" ஆகிவிடுகிறது. அவர்கள் ஓய்வூதியம் பெறும்போது பாதிக்கப்படாமல், பழைய சர்வீசும் கணக்கெடுத்துக்கொள்ளப்படும் என்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது என்ன விதிமுறை இருக்கிறது என்பதற்கான விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரமும் தரலாம்.

*works of Avvaiyar.*

* 312 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(a) Whether any research into the works of Avvaiyar has been under taken by the Government ; and

(b) if so, the of detail thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, ஔவையார் நூல்கள் இது வரையில் வெளிவந்திருக்கிற நூல்களை ஆராய்ச்சி செய்ய அரசு உத்தரவிடுமா ? கூழுக்குப் பாடுபவர் ஔவை என்ற அளவுக்குப் போற்றப்படுகிற ஔவையார் தமிழ்மக்களின் அன்பைப் பெற்றிருக்கிறார். அவருடைய நூல்களைப் பல்கலைக் கழகத்தில் இருக்கக் கூடிய ஆராய்ச்சி நிலையம் பரிசீலனை செய்யக் கூடிய அளவுக்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே நாம் பல்கலைக் கழகத்திற்கு உத்தரவிட இயலாது. ஆனால், பல்கலைக் கழகத்திலே இருக்கிற தமிழ் ஆராய்ச்சித் துறை இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளை

மேற்கொள்ள வழி வகை இருக்கிறது. தனியாக பி.எச்டி. பட்டம் பெற ஆய்வாளர் ஆராய்ச்சியை மேற்கொள்ளுகிற பொருள்களில் ஒவ்வொரு தனிப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு ஆராய்ந்து பி.எச்டி. பட்டம் பெற வாய்ப்பு இருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஆராய்ச்சி செய்கிற நிலைப்புகளில் இப்படிப்பட்ட தலைப்பையும் எடுத்து மேற்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இந்தத் தலைப்பைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்று நாம் அவர்களுக்குக் கட்டளை இடமுடியாது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ஔவையார் நூல்கள் நாட்டுக்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பது பற்றி அமைச்சரவர்கள் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். "ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்ற இரண்டு வரிகளிலே எவ்வளவு தத்துவங்கள் அடங்கி இருக்கின்றன..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி ஔவையார் பாடல்களைப்பற்றியது. நீங்கள் பாரதியார் பாடல்களைப்பற்றிப் பேசுகிறீர்கள்.

திரு நா. வீராசாமி : நான் சொல்லவந்தது வேறு. "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாடலில் உடற்பயிற்சியின் முக்கியம் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நாட்டிலே பலர் சோம்பேறிகளாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்கு சம்பந்தப்படாதது. ஆதலால் இந்தக் கேள்வியை "டிஸ் அலவ்" பண்ணுகிறேன்.

திரு கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, சென்னைக் கடற்கரையில் செந்தமிழ் மூதாட்டி ஔவைக்கு சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அதை பார்க்க வருகின்ற நண்பர்கள் "நீலச் சிற்றாடைக்கு நேர்" என்று பாடிய ஔவையின் சிலையா அல்லது "அறஞ்செய விரும்பு" என்று பாடிய ஔவையா என்று கேட்கிறார்கள். அதைக்கேட்டு எங்களுக்கெல்லாம் கூட குழப்பம் ஏற்படுகிறது. இந்தக் குழப்பத்தைப் போக்க அரசு ஆராய்ச்சி செய்து, அது எந்த ஔவையாருக்கு வைக்கப்பட்ட சிலை என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மற்றவர்களுக்குக் குழப்பம் வரலாம். ஆனால் புலவர்களுக்குக் குழப்பம் வரக்கூடாது; அவர்கள் எல்லாம் கற்றுத் தேர்ந்தவர்கள். அங்கே வைக்கப்பட்டிருக்கிற சிலை சங்க கால ஔவையின் சிலை. ஔவையில் மூன்று பேர் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நாம் சிலை எடுத்திருப்பது புகழ் மிக்க சங்க கால ஔவைக்குத்தான்.

திரு கே.எ. வகாப்: தலைவரவர்களே, ஔவை என்ற பெயரில் பலர் இருப்பதாக இலக்கியம் படித்தவர்கள் சொல்கிறார்கள். அதனால் ஔவையார், ஔவையார் என்ற சர்ச்சையெல்லாம் வந்திருக்கிறது.





ஆகவே ஔவையார் என்று சொல்லப்படுகின்ற பல ஔவையார்களில் உண்மையான ஔவை யார் என்ற ஆராய்ச்சியை மேற்கொள்ள அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஔவையார், ஔவை யார் என்பதெல்லாம் புலவர்கள் சொற்களில் விளையாடும் விளையாட்டாகும். மூன்று ஔவையார் இருந்ததாகச் சொல்கிறார்கள். அவர்களில் "ஆத்திச்சூடி" பாடிய சங்க கால ஔவையாரைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். நாம் குறிப்பிடுகின்ற ஔவையார் நூல்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய சென்னை, மதுரை, அண்ணாமலை பல்கலைக்கழகங்களில் தமிழ் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு வசதிகள் இருக்கின்றன. ஏதாவது ஒரு தனிப்பட்ட பொருள்பற்றி அவர்கள் ஆராய்ச்சி செய்யலாம்.

திரு என். மந்தாசலம் : தலைவரவர்களே, ஔவையாருடைய பாட நூல்களை ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து சொல்லிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஔவையார் பாடல்களான "ஆத்திச்சூடி" போன்றவைகளை 4, 5, 6 வகுப்புகளில் பாடங்களாக வைத்து, சொல்லிக்கொடுக்கப்படுகிறது. சங்க இலக்கியப் பாடல்களை மேல் வகுப்புகளுக்குப் பாடங்களாக வைத்திருக்கிறார்கள்.

திரு கு. காமாட்சி: தலைவரவர்களே, ஔவையாரைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன். "சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா" என்று முருகன் கேட்டு திகைக்க வைத்த ஔவையார் எந்தக் காலத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஔவையார் அந்தக் காலத்தைச் சேர்ந்தவர் அல்ல. இது பின்னால் சேர்க்கப்பட்ட கட்டுக்கதை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, பழைய இலக்கியங்களில் வருகிற காவியத் தலைவர்கள் பலருக்கு சிலை அமைக்கப்படுகிறது. அப்படி சிலை வைக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மாதிரி பீச் சிலை இருக்கிறது. அந்த ஔவையார் சிலையின் மூஞ்சியை மறைத்து விட்டு கீழே பார்த்தால் 16 வயது பெண் மாதிரி இருக்கிறது. அதைப் போலவே கண்ணகி சிலையும் இருக்கிறது. யாரோ ஒருவர்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சிலைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? ஔவையார் பற்றிய ஆராய்ச்சிதான் நடக்கிறதே தவிர, சிலைகள் பற்றிய ஆராய்ச்சி அல்ல.

திரு. கோவை செழியன் : சிலை அமைக்கும்போது இலக்கியங்களில் வருகின்ற குறிப்புகளை ஒட்டி சிலை அமைக்கப்பட வேண்டும். அதற்குத்

தனி ஆராய்ச்சி செய்து, திறமையானவர்களைக் கொண்டு அமைக்க வேண்டும். அதல்லாமல் நமக்கு வேண்டியவர்களுடைய முகத்தை வைத்து சிலை வடிக்காமல் இருக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிலைகள் வடிப்பதில் சில பல முறைகளை கையாளுகிறார்கள். அந்த முறைகளை ஒட்டித்தான் சிலைகள் வடிக்கப்படுகின்றன. ஔவையாருக்கு இன்ன வகையில் சிலை வைக்க வேண்டுமென்று அல்லது இன்ன வகையில் சிலை இருந்தது என்று குறிப்பு எதுவும் இல்லை. தொன்று தொட்டு வருகின்ற கருத்து அடிப்படையில், ஒரு கற்பனையின் அடிப்படையில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. சில பல முறைகளை ஒட்டி, ஒரு கற்பனையின் அடிப்படையில் சிற்பி அந்த சிலையை வடித்துத் தந்திருக்கிறார்.

திரு கே.டி.கே. தங்கமணி: சார், "எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே, கூரையில்லா வீடே" என்று ஔவையார் எழுதாக ஒரு பாடல் வருகிறது. அது ஔவையார் பாடியதா அல்லது ஔவையார் பெயரால் வெளிவந்த தனிப் பாடலா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இங்கே தமிழ் ஆராய்ச்சி நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பாடல் பிற்காலத்தில் வந்த ஔவையாரின் தனிப் பாடல் திரட்டு என்று சொல்லப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: "உண்டி சுருங்கல் பெண்டிற்கு அழகு" என்று பாடிய பாடலின் தத்துவத்தைப் பார்த்தால் அந்தக் காலத்திலேயே குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஔவையார் பாடியிருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது. திருக்குறள் பாடல்களை விட எந்த வகையிலும் இந்த ஔவையார் பாடலில் குறைவு இல்லை. ஆகவே, இதுபற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்படி ஒவ்வொன்றாக ஆராய்ந்துகொண்டு போனால் கேள்வி நேரம் இடம் தராது. அதைப்பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்யப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

திரு நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சி நடைபெறுகிறது என்றாலும் இந்தத் தலைப்புகளில் ஆராய்ச்சி செய்ய மாணவர்கள் முன்வருவதில்லை. அவர்களை ஆராய்ச்சி செய்ய உற்சாகப்படுத்துகிற வகையில் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்கிற மாணவர்களுக்கு, ஔவையாரின் பழைய சங்க கால நூல்களை ஆராய்ச்சி செய்கிற மாணவர்களுக்கு நம்முடைய அரசு ஸ்காலர்ஷிப் கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பல்கலைக் கழகங்களில் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு எல்லாம் ஸ்டைபண்ட் கொடுக்கப்படுகிறது. அதை வாங்கிக்கொண்டு, அவர்கள் ஆராய்ச்சி செய்கின்றார்கள். ஆராய்ச்சிக்கு அவரவர் விரும்பும் பொருளை தேர்



தெடுத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் எந்த பேராசிரியரின் கீழ் இந்த ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடுகிறார்களோ அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஆராய்ச்சிக்கான தலைப்பைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்கள். அந்த வகையில் ஔவையார் பற்றி ஆராய்ச்சி செய்யவும் வழிவகை இருக்கிறது. ஏற்கனவே இப்படிப்பட்ட ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு ஸ்டைபெண்ட் கொடுக்கும் முறை இருந்து வருகிறது.

திரு எம். சுரேந்திரன்: சார், இங்கே எழுப்பப்பட்ட கேள்விகளைப் பார்க்கும்போது மூன்று ஔவையார்கள் இருந்ததாகத் தெரிகிறது. தனிப் பாடல் திரட்டுகளும் ஔவையார் பாடலுக்குப் பின்னால் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எந்தெந்தக் காலத்தில் யார் யார் பாடிய பாடல்கள் என்ற நிச்சயம் இல்லாமல் இருக்கிறது. அப்படி இருக்கும்போது உண்மையான ஔவையார் யார், எந்த ஔவையாருக்கு நாம் சிலை வைதிருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சங்ககாலச் சிறப்பு பெற்ற ஔவையாருக்குத்தான் நாம் சிலை வைத்திருக்கிறோம். ஔவையார்களில் சிறப்பித்துக் கூறப்படுபவர் சங்க கால ஔவையார்தான். சங்க கால ஔவையாரின் சிறப்புகளை உணர்ந்து, அவருக்கு நாம் சிலை எழுப்பியிருக்கிறோம.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, ஔவையார் "அறம் செய விரும்பு" என்பன போன்ற நன்மொழிகளை 'ஆத்திச்சூடி' போன்ற பாடல்களைப் பாடியிருக்கிறார். இப்போது அதுபற்றி ஆராய்ச்சி நடக்கிறது. யார் யார் எப்போது பாடினார் என்ற ஆராய்ச்சியை விட அந்த பாடல்களின் தத்துவம் என்ன என்றும், அந்த நல்ல தத்துவங்களை, கோட்பாடுகளைக் கடைப்பிடித்து, பள்ளிப் பிள்ளைகள் பயனடையச் செய்வதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல, ஔவையார் பாடல்களின் தத்துவங்களை உணர்ந்து, ஆரம்பப் பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு "ஆத்திச்சூடி", "அறஞ்செய விரும்பு" போன்ற பாடல்களைப் பாடங்களாக வைத்திருக்கிறோம். மேல் வகுப்புகளுக்குப் போகப் போக சங்க இலக்கியங்கள் பற்றிச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. எந்த ஒரு பொருள் பற்றி ஆராய்ச்சி செய்வதாக இருந்தாலும், அது தொன்றுதொட்டு இன்னின்ன முறைகளில் இருந்திருக்கிறது. இன்னின்ன வகையில் பயன்படும் என்று தெளிவுபடுத்துவதற்கு ஆராய்ச்சிகள் பயன்படுகின்றன. அந்த வகையில் தனித்தனி ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: சார், நம்மிடம் ஔவையார் பாடிய ஆத்திச்சூடி தான் இப்போது இருக்கிறது. இது தவிர, வேறு நூல்கள் இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஔவையார் பாடிய "ஆத்திச்சூடி" பாடல் நூலும், வேறுபல தனிப் பாடல் திரட்டுகளும் நம்மிடம் இருக்கின்றன. சங்க இலக்கியங்களில்—புறநானூறு, அக நானூறு, போன்ற வேறுபல சங்க இலக்கியங்களில் ஔவையார் பாடிய பாடல்கள் உள்ளன. அதியமான் பற்றி பாடிய நூலும் இருக்கிறது. இவையெல்லாம் சங்க கால நூல்கள். ஆகவே தான் நாம் சிறப்பாகச் சொல்லுவதும் சங்க கால ஔவையாரைத்தான்.

## தொல்பொருள் ஆய்வுப் பயிற்சி.

*313 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் பள்ளி ஆசிரியர்களுக்கான விசேஷ கோடைக்காலப் பயிற்சி வகுப்பு ஏதேனும் நடத்துகின்றனரா?

(இ) ஆம் எனில், அங்கு என்ன பயிற்சி அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தொல்லியல், கலை, கல்வெட்டியல் பற்றிய பயிற்சி கொடுக்கப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிக்கு எந்தத் தகுதியின் அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர் என்பதையும், உயர்நிலைப் பள்ளியிலும் தொல்பொருள் ஆராய்ச்சி பற்றிய பாடத்தினை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் 1971-ம் ஆண்டு முதல் தொல்லியல், கலை, கல்வெட்டியல் பற்றிய கோடைகாலப் பயிற்சி வகுப்புகள் கல்லூரி, பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியில் பண்டைய தமிழ், வட்டெழுத்து, கிரந்தம், நாகரி எழுத்துக்களின் தோற்றம், வளர்ச்சி பற்றியும், கல்வெட்டுகளைப் படிக்கும் முறைபற்றியும் பயிற்றுவிக்கப்படுகிறது. பயிற்சியின் இறுதியில் வரலாறு, கலைச்சிறப்பு மிக்க இடங்களான காஞ்சிபுரம், மகாபலிபுரம், தஞ்சாவூர், கும்பகோணம், கங்கைகொண்டசோழபுரம், திருச்சி, மதுரை, ஆனைமலை, திருப்பரங்குன்றம், சித்தன்னவாசல் இன்னபிற இடங்களுக்குப்பயிற்சி பெறுவோர்களை அழைத்துச்சென்று நேர்முகப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், வரலாறு, தொல்லியல், கலையியல் பற்றிய திரைப்படங்களும் காண்பிக்கப்படுகின்றன என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. கோ. இளங்கோவன்: பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். பல கல்லூரிகளில் இது பாடமாக அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இது எந்தப் பாடமாக அமைந்திருக்கிறது? இதற்கும் சான்றிதழ் என்ன வழங்கப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: வரலாறு எடுக்கின்றவர் களுக்கு இது ஒரு துணைப்பாடமாக அமைந்திருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are a large number of inscriptions, both epigraphs and copper plates, not only in Tamil, but in Telugu and Sanskrit also. They are very important. But since our epigraphists are not able to read them, they are neglecting them. May I know from the Hon. Minister for Education and Tourism whether training classes are arranged and even candidates of other languages also are taken?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே. தமிழகத்தில் 80 ஆயிரம் கல்வெட்டுகளுக்குமேல் இருக்கின்றன. தமிழ், வட்ட எழுத்து, கிரந்தம், நாகரி ஆகிய எழுத்துக்களில் உள்ள அந்தக் கல்வெட்டுகளை படிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. கல்வெட்டு எந்தெந்த மொழிகளில் இருக்கின்றனவோ அவற்றைப் படிக்க அந்தந்த மொழிகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: கல்வெட்டுகளில் பயிற்சி கொடுக்க அவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் மாயூரத்திற்கு அருகில் உள்ள நீடூரில் அரிய பல கல்வெட்டு கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்களே, நீடூருக்கு அழைத்துச் செல்லக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எந்தந்த இடத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று பயிற்சியினைக் கொடுப்பது என்பதை அவர்களேதான் நிர்மாணிக்கிறார்கள். இதில் நாம் அபிப்பிராயம் சொல்வதற்கு ஒன்றும் இல்லை. இன்ன ஊருக்குத்தான் போகவேண்டு மென்று சொல்வதற்கில்லை. எந்தெந்த இடங்களில் கல்வெட்டுகள் இருக்கின்றனவோ அந்த அந்த இடங்களுக்கு எல்லாமே அழைத்துச் செல்வார்கள்.

## *Import Procedure.*

*314 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state:

(a) Whether the Government of Tamil Nadu have appealed to the Centre for the simplification of import procedure; and

(b) if so, whether any reply has been received for the same?

[1975 மார்ச் 14

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இப்போது நாம் என்ன என்ன பொருள்களை இறக்குமதி செய்கிறோம்? முக்கியமாக, அவற்றை இறக்குமதி செய்வதில் நமக்குள்ள கஷ்டங்கள் என்ன? இது பற்றி மத்திய சர்க்காருக்கு நாம் என்ன எழுதியிருக்கிறோம்?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: இதுபற்றி முதலமைச்சர் அவர்களே ஒரு விழாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனும் என்னென்ன உதவிகளைச் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது முக்கியமாக சில நாட்களாக தீப்பெட்டித் தொழிலுக்குத் தேவைப்படுகிற பொட்டாஷியம் குளோரைட் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இறக்குமதி லைசென்ஸ் வாங்கியபிறகு பலர் அதைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், விற்றுவிடுவதாகவும் நாடாளுமன்றத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறதே. அப்படி நம்முடைய மாநிலத்தில் இறக்குமதி லைசென்ஸை தவறாகப் பயன்படுத்தியவர்கள் பட்டியல் ஏதாவது அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா? அந்தப் பட்டியலை அவைமுன் வைக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சேகரித்துக்கொடுக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பொட்டாசியம் குளோரைட் தீப்பெட்டித் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாதது. அது கிடைக்காத காரணத்தினால் தென்மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. துரிதமாக இதை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தீப்பெட்டித்தொழில் மூடப்படாதிருக்கவும், தொடர்ந்து இருந்துவரும் பொட்டாஷியம் குளோரைட் தட்டுப்பாட்டால் நிலவும் நெருக்கடி சூழ்நிலையைக் குறைக்கவும் சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் இது பற்றி மத்திய அரசுடனும், அதனுடைய வணிக கழகத்துடனும் வேண்டிய அளவு இறக்குமதி செய்வதுபற்றி தொடர்பு கொண்டுள்ளது.

ஸ்டார்ச் முதலியன தயாரிப்பு.

*315 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1975 மார்ச் 14]

உடுமலைப் பேட்டை தாலுகாவில் மக்காச்சோளத்தை உபயோகித்து ஸ்டார்ச்சு, குளுகோஸ் முதலியவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஸ்டார்ச், குளுகோஸ் முதலியவற்றை தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதியை வழங்கியுள்ளது. அவர் அத்தொழிற்சாலையை உடுமலைப்பேட்டை தாலுக்காவில் நிறுவலாமா என்பது குறித்து பரிசீலித்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கான முதலீடு எவ்வளவு? இது தற்போது எந்த நிலையில் உள்ளது? அதை சீக்கிரம் முடிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது இப்போது பரிசீலனை செய்யப்படுகிற நிலையில்தான் உள்ளது. மக்காச்சோளம் எங்கு அதிகமாகக் கிடைக்கிறதோ அந்த இடத்தில் ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறார்கள். மதிப்பீடு தயாரிக்கிற நிலைக்கு வரவில்லை.

* 316 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்-மின்சாரதுறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், பாலையூரில் குளுகோஸ் தொழிற்சாலை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு விவசாயத் தொழில் கழகம், குளுகோஸ் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக மத்திய அரசிடமிருந்து பூர்வாங்க அனுமதிக் கடிதத்தைப் பெற்றுள்ளது. அந்தக் கழகம் இத்தொழிற்சாலையை புதுக்கோட்டை மாவட்டம், பாலையூரில் அமைக்கலாமா என்பதனை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: இதற்கான முதலீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும், இது எப்போது துவங்கப்பட இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது பூர்வாங்க ஆராய்ச்சி நிலையில் இருக்கிறது. அதைப்பற்றி மேற்கொண்டு விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: குளுகோஸ் தொழிற்சாலை ஆரம்பிப்பதிலே அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் என்ன என்ன? அவை நம்முடைய மாநிலத்தில் போதுமான அளவு கிடைக்கிறதா என்பது ஆராயப்பட்டதா? அது எவ்வளவு இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்

கிறது ? இதுபோல கணக்கிடப்படாமலேயே பல தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது அரசாங்கத்தின் நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த குளுகோஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரை எங்கு மக்காச்சோளம் அதிகமாகக் கிடைக்கிறதோ அங்கு ஆரம்பிக்கலாம் என்று சொல்கிறார்கள்.

Starch 20,000 tons per annum, glucose 7,000 tons per annum, dextrose 3,600 tons per annum.

என்பதாக மக்காச் சோளத்தைக் கொண்டு இதைச் செய்யலாம் என்ற அடிப்படையில்தான் கோவை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் இதை ஆரம்பிக்க பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : ஏற்கனவே கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டையில் நாற்பத்து ஐந்தாயிரம் ஏக்கரா மக்காச்சோளம் விளைகிறது. ஆகவே, அவசியம் கோவை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என் தொகுதி மக்களுக்காகப் பேசியதற்கு நன்றி.

(முற்பகல் 9-30)

திரு. கே. என். குமாரசாமி : சார், இந்தத் தொழிற்சாலைகளை தனியாருக்குக் கொடுப்பதைக் காட்டிலும், அரசாங்கமே அந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயுமா ? அதே நேரத்தில் பிற்பட்ட பகுதிகளில் இந்தத் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே மத்திய அரசு கமலா சுகர்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்திற்கு உடுமலைப் பேட்டையில் குளுகோஸ் தயாரிக்க அனுமதி கொடுத்தது 1953-ல். பிறகு ஜெய்பூர் சுகர்ஸ் கம்பெனி என்ற தனியார் நிறுவனத்திற்கு 1973-ல் மத்திய அரசு அனுமதி கொடுத்து இருக்கிறது. இப்போது மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்து இருப்பது சென்னையைச் சேர்ந்த ஒரு தனி நபருக்குத்தான். அதை எடுத்து தமிழ் நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் அனுமதி வாங்கியிருக்கிறது.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* 317 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், சின்னகண்ணனூருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரை ஒன்றியம் சின்னக்கண்ணனூர் என்ற கிராமம் ஒரு போக்குவரத்து இல்லாத, குடிக்க தண்ணீர் இல்லாத சிரமமான நிலையில் உள்ள கிராமம் ஆகும். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு, வறட்சியான நிலையில் உள்ள தற்போது, உடனடியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஏற்படுத்திக்கொடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிலேயே ஆமாம் என்று சொல்லிவிட்டேன். ரூ. 1,13,500 அளவுக்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது. விரைவில் அந்த வேலை துவங்கப்படும்.

* 318 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற பகுதி வாழ் மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) : தரங்கம்பாடி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 16·58 இலட்சத்திற்கும் ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ. 44,000-க்கும் உள்ளவாறு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, தரங்கம்பாடியைப் பொறுத்த வரையில், அங்கு வாழும் மக்கள் மீனவர்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 44,000 அந்த ஒன்றியம் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அங்கு வாழும் மக்கள் மீனவர்களாக இருப்பதாலும், தாழ்த்தப் பட்ட மக்களாக இருக்கிற அது வருமானம் இல்லாத காரணத்தாலும் ஊராட்சியாக இருப்பதால், அந்த தொகையை அரசே ஈடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்குத்தான் என்ன செய்வது என்று பரிசீலித்துக்கொண்டு வருகிறார்கள். 5,000 மக்களுக்கு மேல் உள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் அதற்கான பணத்தை செலவிடவேண்டும். சர்க்காரே முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், நாம் அந்த மாதிரியான திட்டங்களுக்காக எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் வாங்கி செலவு செய்து கொண்டிருக்கிறோம். அந்த ரூ. 44,000-ஐ

செலவு செய்ய இயலாது என்று அந்த பஞ்சாயத்து தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு அனுப்பினால், அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தரங்கம்பாடி பகுதியில் இருக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீருக்காக அவதிப்படும் நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக மீனவர்கள் வாழும் பகுதி, கடலோரப் பகுதியாக இருப்பதால், நீண்டகாலமாக அவர்களுக்கு நல்ல தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி வரையிலாவது அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தப் பகுதி எனக்கும் நன்றாகத் தெரியும். அதற்காக கிட்டத்தட்ட 16.58 லட்சம் அளவில் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதை எப்படிச் செய்யலாம் என்பதை பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கிராமங்களில் குடிநீர் கிணறுகள் வெட்டப்படுகின்றன. ஆனால் அவற்றில் எவ்வளவு ஆழத்திற்குப் போனாலும் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, குழாய்க் கிணறுகள் போட்டு......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி தரங்கம்பாடி பற்றியது. No, that question is disallowed.

## வந்தவாசி-சேதாராகுப்பம் சாலை.

* 319 வினா :—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி-சேதாராகுப்பம் இடையே உள்ள சாலையில் அரிப்புகளை தடுக்க கற்சுவர்கள் கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தச் சாலையானது வந்தவாசியிலிருந்து 10 கிராமங்களை இணைக்கும் சாலையாக இருக்கிறது. இடையில் சுகநதி என்ற கால்வாய் வருகிறது. அதனால் அரிப்பு நிறைய ஏற்படுகிறது. ஒன்றியம் அந்தப் பணியை செய்கிற அளவுக்கு போது நிதி அதிகம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அவர்களே அதைச் செய்து கொள்ள அனுமதி கொடுத்து, உத்தரவு பிறப்பிக்குமா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தச் சாலை 4 கிலோ மீட்டர் தொலைவுள்ள சாலை. அவர்கள் சொன்னது போல் சுகநதி என்ற ஆறு 1·6 கிலோவில் ஓடிக்கொண்டு இருக்கிறது. இதன் குறுக்கே பாலம் கட்ட 1 லட்சம் ரூபாய்க்கு திட்டம் போட்டு இருக்கிறார்கள். அதற்கு முன்னாலேயே, சங்கிலி என்ற கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. இதன் குறுக்காக சிறு பாலம் கட்ட ஒரு திட்டம் ரூ. 25,000-ல் போட்டு இருக்கிறோம். அதற்கு டெண்டர் கோரப்பட்டு, இன்னும் சில திங்களில் அது முடிந்து விடும். முதலாவது சொன்ன திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

## *E. S. I. Hospitals.*

* 320 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) Whether any request has been made by the State Government in recent times to the Centre to increase the ratio of beds from 4 to 7 for every 1,000 workers registered under the Employee's State Insurance Scheme ;

(*b*) if so, whether any reply has been received ; and

(*c*) the details of the reply so received.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) முதல் (உ) வரை :—தொழிலாளர் அரசுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காப்பீடு செய்துகொண்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் வசதிகளுக்காக அங்குள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வீதாசாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு அதாவது, காப்பீடு செய்து கொண்ட 1,000 தொழிலாளர்களுக்கு 11 படுக்கைகள் என்ற அளவுக்குக் கொண்டுவருமாறு 1971 பிப்ரவரியில் இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. நிதி நிலை நெருக்கடி காரணமாக மேற்படி படுக்கைகளின் எண்ணிக்கையை 4 என்பதிலிருந்து 11 ஆக உயர்த்த இயலாது என இந்திய அரசு இந்த அரசுக்குத் தெரிவித்தது. 1,000 பேருக்கு 11 படுக்கைகள் என்பதை 4 படுக்கைகளாகக் குறைப்பதை இனி வரும் நோயாளிகளுக்கு மட்டுமே செயற்படுத்தலாம் என்று 1972 மார்ச்சில் மறுமுறை இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த வேண்டுகோளையும் இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

காப்பீடு செய்து கொண்ட ஒவ்வொரு 1,000 பேருக்கும் 4 படுக்கைகள் என்பதைப் படிப்படியாக 7 படுக்கைகளாக உயர்த்த வேண்டுமென்று நீள்நோக்குத் திட்டக்குழு (Perspective Planning Committee) செய்துள்ள பரிவுரைகளை தொழிலாளர் நலக் காப்பீட்டுக் கழகம் அண்மையில் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டது. சாதாரணமாக ஒவ்வொரு 1,000 தொழிலாளருக்கு 4 படுக்கைகள் என்று ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பு உயராது என்றும், ஆனால் சிறப்பு நேர்வு

களில் மட்டுமே ஒவ்வொரு 1,000 பேருக்கு 5 படுக்கைகளுக்கு வகைசெய்து கூடுதல் மருத்துவமனைகளுக்கு/மருத்துவமனை இணைப்புகளுக்குத் தேவையான திட்டங்களுக்கும், மதிப்பீடுகளுக்கும் ஒப்புதல் வழங்கப்படலாம் என்றும் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கென கூடுதல் படுக்கைகளுக்கு வகை செய்திட உண்மையிலேயே தேவையுள்ளது என்பதையும், தற்போதுள்ள தொழிலாளர் நலக் காப்பீட்டு மருத்துவமனைகளில் அல்லது பகுதியில் உள்ள ஏனைய மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளில் எந்த அளவுக்கு நோயாளிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பதையும், அங்குள்ள படுக்கைகள் எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன என்பதையும் கண்டறிந்த பின்னரே மேற்கண்டவாறு கூடுதல் மருத்துவமனைகளுக்கு/மருத்துவமனை இணைப்புகளுக்கு ஒப்புதல் வழங்கப்படும் என்றும் தொழிலாளர் நலக் காப்பீட்டுக் கழகம் அண்மையில் கூறியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், ஏற்கனவே மாநில தொழில் மந்திரிகள் மாநாட்டில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், பண நெருக்கடி காரணமாக தள்ளிவைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். 4 படுக்கைகளை 11 படுக்கைகளாக உயர்த்துவதால் மாநில சர்க்காருக்கு அதிகப்படியாக எவ்வளவு பணம் செலவாகும் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதற்கான புள்ளிவிவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட கணக்குப் போடுவதற்கான வாய்ப்பு இல்லாத வகையில் இருக்கிறது. 1,000 தொழிலாளர்களுக்கு 4 படுக்கைகள் என்ற விகிதத்தில் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஏனெனில் அதற்கு இந்திய அரசின் உதவி பெரும்பாலும் இருக்கிறது. மேலும், நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமான படுக்கை இருக்கிறது. 4 என்கிற கணக்குப்படி பார்த்தால் கோவையில் 134 படுக்கைகள் அதிகமாக இருக்கிறது. மதுரையில் 74 படுக்கைகள் அதிகமாக இருக்கிறது.

திரு. வ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த நோயாளிகள் படுக்கைகள் விழுக்காட்டை அதிகப்படுத்துவதற்கு காப்புறுதிக் கழகத்தோடு வாதாடி, போராட்டம் தொடர்ந்து நடக்கட்டும். அதற்கிடையில் இடைக்காலத்தில், பல்வேறு மருத்துவ மனைகளில் இருக்கும் படுக்கைகளை—அதிகமாக சில பிரிவுகளில் இருக்கிறது, குறைவாக சில பிரிவுகளில் இருக்கிறது—எந்த இடத்தில் அதிகம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த அடிப்படையில் ஒரே மாதிரி சீரான நிலைமையை எல்லா பிரிவுகளிலும் செய்ய, அரசு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அங்கங்கு உள்ள மருத்துவ அதிகாரிகள் தருகிற ஆலோசனைகளை கருத்தில் கொண்டு படுக்கைகள் பிரிக்கப்படுகின்றன. அந்தந்த வட்டாரத்தில்



எங்கெங்கு நோய்கள் வரலாம் என்பதைப் பார்த்து செய்கிறோம். அந்த நோய் ஒரு நேரம் வரலாம், வராமலும் இருக்கலாம். அந்தந்த வட்டாரத்தில் இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப படுக்கைகள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதில் மாற்றங்கள் செய்யவேண்டும் என்ற குறிப்புகள் இதுவரையில் அரசுக்கு கொண்டு வரப்படவில்லை. அப்படி ஏதேனும் வந்தால், அரசு அதன் மீது தக்க நடவடிக்கை எடுத்து, பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரையில் ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய படுக்கைகள் போதாது என்று சொல்லி ஏற்கெனவே அங்கே இருக்கக்கூடிய லோக்கல் கமிட்டி மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தமாதிரி இடத்தில், வசதியிருக்கும் இடத்தில் விரிவுபடுத்தி, அந்தக் கட்டிடத்தை பெரிதாக்குவதற்கான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 74 படுக்கைகள் மதுரையில் அதிகமாகவே இருக்கிறது. ஆகவே, தற்போது மதுரையில் விரிவு படுத்தப்படுவதற்கான எந்தவிதமான எண்ணமுமில்லை.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் ஆயிரம் பேருக்கு 4 படுக்கைகள் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் ஆயிரம் பேருக்கு 11 படுக்கைகள் வேண்டுமென்று கோருகிறோம். திருப்பூரில் 10 ஆயிரம் பேர் இருக்கக்கூடிய இடத்தில், ஆயிரம் பேருக்கு 4 பேர் என்ற முறையில் 40 படுக்கைகள் இருக்கவேண்டும். ஆனால் 6 படுக்கைகள் தான் இருக்கிறது. இதை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதை அரசு ஆலோசிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: ஈ. எஸ். ஐ. மருத்துவமனை இருக்கின்ற இடத்தில் படுக்கை விஸ்தாரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் கேட்டிருக்கிறது. ஆனால் ஈ. எஸ். ஐ. மருத்துவமனைகள் இல்லாது, படுக்கை வசதிகள் இல்லாத தொழிலாளிகள் நிறைந்த பகுதிகளில் மருத்துவமனைகள் கட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா, அது சம்பந்தமாக அரசாங்கம் ஒப்புதல் வாங்கியிருக்கிறதா, குறிப்பாக மேட்டூர் பகுதிக்கு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பல இடங்களில் மருத்துவ மனைகள் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் விரும்பிக்கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் தவறான முறையில் மருந்து வாங்குவதற்கான பணம் வாங்கி, ஏராளமான பணத்தை வீணாக செலவழித்திருக்கிறார்கள். அந்தச் செலவையெல்லாம் குறைத்தால், மருத்துவமனைகள் இல்லாத இடங்களில் கட்டுவதற்கு ஏதுவாகும். அதற்கான எண்ணத்தை தொழிலாளர்கள் மத்தியில் பரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* 321 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) Whether it is a fact that the State Government has recommended to the Centre in recent times to increase the monthly income limit for medical benefits under Employees' State Insurance Scheme;

(*b*) if so, whether any reply has been received; and

(*c*) the details of the reply?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) & (உ) அரசு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் பலனடையும் வகையில் அவர்களின் மாத ஊதிய வரம்பினை அவ்வப்போது உயர்த்துவதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் அரசு தொழிலாளர் ஈட்டுறுதி சட்டத்தைத் திருத்தும்படி தாம் மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளதாக புது டில்லியிலுள்ள அரசு தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. மத்திய அரசின் முடிவு இதுவரையில் தெரியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: பெருவாரியாக டெக்ஸ்டைல்ஸ் மில்கள், இன்ஜினீரிங் டிபார்ட்மெண்ட்டை எடுத்துக் கொண்டாலும் சரி, தொழிலாளிகள் பஞ்சப்படி, சம்பளம் எல்லாம் சேர்த்து ரூபாய் 500-க்கு மேல் பெறுகிறார்கள். 8 தம்படி அதிகமானாலும் அவர்களுக்கு பெனிபிட் கிடைப்பதில்லை. இதை சர்க்கார் முக்கியமாக எடுத்து மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தக் குறைபாடு பொறுத்த வரை அரசு அறிந்திருக்கிறது. ஆயிரம் ரூபாய் வரையில் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறோம். எங்கள் ஆலோசனையை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: விலைவாசி காரணமாக ரூபாய் 500-க்கு மேல் வருமானம் வருகிறது. இப்படி உள்ளவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் தொழிலாளர்கள் வைத்திய வசதி பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் மீண்டும் எடுத்துச் சொல்லி, இதை உடனடியாக ரூ. 500-க்கு மேல், ஆயிரம் ரூபாய்க்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். கேரளத்தில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம். அவர்கள் ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதுமாதிரி தமிழ் நாட்டில் ஏன் அப்படி செய்ய விரும்பவில்லை என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது தொழிலாளர் சங்கத் தலைவர்கள் கூடுகிற ஈ.எஸ்.ஐ. ஆலோசனை குழுக் கூட்டத்தில் ஓராண்டு காலமாகப் பேசப்பட்டது. தமிழக அரசின் சார்பில் ஆயிரம் ரூபாய் வரையில் வழங்கலாம் என்று தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய ஈ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு தெரிவிக்கப்பட்டு, அவர்களும் அந்தக் கொள்கையை ஒத்துக் கொண்டு, மத்திய சர்க்காருக்கு தெரிவித்து, அதை அந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளாத கோரிக்கை மீது தமிழ்நாடு தனியாக ஒன்றும் செய்ய முடியாது..

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது, 1973 அக்டோபர் மாதத்தில் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ததாகச் சொன்னார்கள். சிபாரிசு செய்து 1½ ஆண்டு காலத்திற்கு மேல் ஆகி விட்டது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளிகள் இன்றைக்கு ரூபாய் 500-க்கு மேல் சம்பளம் பெற்றும், மருத்துவ வசதியில்லாமல் இருக்கிறார்கள். அரசாங்கம் ஒரு தீர்மான வடிவில் கொண்டு வந்து, மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி எல்லாம் ரீஜினல் போர்டு ஆப் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் என்கிற தலைப்பின்கீழ் நடைபெற்ற மாநாட்டில் 1974-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதற்கான ஆலோசனைகள் சொல்லியிருக்கிறது. இதிலே இருக்கிற சிக்கல் "ஒர்க்மென்" "தொழிலாளி" என்பதற்கான விளக்கங்களை சில மாறுதல்களை சட்டப்பூர்வமாக மத்திய அரசு உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கிய பிறகு அதற்கான முடிவை மத்திய அரசு எடுக்க முடியும். அந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் நிறைவேற்றும் வரையில் பொறுத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

திரு. எ. சுப்பிரமணியம்: மத்திய அரசு ரூ. 500 என்கின்ற உச்ச வரம்பை ஆயிரம் ரூபாய் என்று உயர்த்துவதற்கு ஒப்புக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தகவல் சரியல்ல. மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அரசு ஈட்டுறுதிக் கழக ஆலோசனைக் குழுவில் பேசும் போது சொன்னார்கள். இந்த நாடாளுமன்ற தொடர் கூட்டத்தில் அதற்கான சட்டம் வரும் என்று அறிவித்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்தத் தகவல் எனக்குத் தெரியும். ஆனால் தகவல்களில் இருக்கிற குறைபாடு என்னவென்றால் கேபினட் அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது அவர்கள் கேபினெட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இன்னும் அறிவிக்கவில்லை. கொள்கையளவில் அந்தக் கொள்கையை ஒத்துக்கொள்கிறேன் என்று தான் சொல்லியிருக்கிறார். அதை காபினட் ஏற்றுக்கொண்டு, பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்கிற வரையில் நடைமுறையில் கொண்டு வர முடியாது.

திரு. இரா. இராமலிங்கம்: இந்த வருமான அடிப்படையில் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆஸ்பத்திரியில், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் இருந்தால், அவர்களுக்கு கட்டணம் வசூலிக்கிறார்கள். அதைத் தவிர்க்க, தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லா விதமான இலவச மருத்துவ வசதிகளும் கிடைக்குமாறு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தொழிலாளர்கள் குடும்பத்திற்கு வைத்திய வசதி பெற மருத்துவ மனைகள் மக்கள் நல்வாழ்வுத் துறையில் கட்டப்பட்டிருக்கிறது. இது தொழிலாளர்களின் நலத் துறையாக கட்டப்பட்டிருக்கிற மருத்துவமனை. மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த உச்ச வரம்பை ஆயிரம் ரூபாய் என்று உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தை பல இடங்களில் தெரிவித்திருக்கிறார்கள். இதை உடனடியாக சட்டபூர்வமாக செய்யவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம்: மத்திய அமைச்சர் ரூபாய் 500-லிருந்து ஆயிரம் ரூபாய் உயர்த்துவதற்கு கொள்கையளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது குறித்து. . . .

MR. DEPUTY SPEAKER: This is a question of policy matter. . .

திரு. எ. சுப்பிரமணியம்: இது பாலிசிமேட்டர் இல்லை, தவறான பதிலுக்கு சில விளக்கம் பெற வேண்டும் என்பதுதான்.

MR. DEPUTY SPEAKER: When the Minister gives false information, according to the hon. Member, he can raise a point of privilege. He is not the spokesman of the Central Government here. I am not allowing him to speak. . . .

பொள்ளாச்சி சரகத்தில் தேக்கு மரங்கள்.

*392 வினா— திரு. வெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பின்வருவனவற்றைக் கனிவுடன் எடுத்துரைப்பாரா—

(அ) பொள்ளாச்சி வன சரகத்தைச் சேர்ந்த "டாப்ஸ்லிப்" என்ற பகுதி அரசாங்க காட்டில் உள்ள தேக்கு மரங்கள் 1973 டிசம்பர் மாதத்தில் களவு போயினவா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்புள்ள தேக்கு மரங்கள் களவு போயுள்ளன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(ஆ) களவு போன மரங்களின் மொத்த மதிப்பு ரூ. 68,416.

திரு. வெ. சௌந்தரபாண்டியன்: வன பாதுகாப்புக்காக அதிகாரிகள் இருக்கிறார்கள். இது எப்படி களவு போனது, காவல்காரர்கள் யார், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வனத்துறை அதிகாரி சோதனை செய்கின்றபோது இதைக் கண்டு பிடித்தார்கள். அதையொட்டி 8—12—73 அன்று மாவட்ட வன அதிகாரி அவர்கள் பார்வையிட்டார்கள். அதைத் தொடர்ந்து 7—1—1974 அன்று சீஃப் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் அவர்கள் பார்வையிட்டார்கள். இதைத் தொடர்ந்து மூன்று பேரும் ஒரு பாரஸ்டரும் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளார்கள். ரூ. 68 ஆயிரம் மதிப்புள்ள மரத்திற்கு ரூ. 71 ஆயிரம் இந்த காண்டிராக்டர்களிடம் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். எ. லத்தீப்: தேக்கு மரங்கள் மட்டுமல்ல, மாநிலத்தில் எல்லாக் காடுகளிலும் பரவலாக தேக்கு மரம், சந்தன மரம் போன்றவைகளெல்லாம் திருடு போவதாகவும், இதிலே சில அதிகாரிகள் கூட இந்த திருட்டுகளுக்கு உடந்தையாக இருப்பதாகவும், இதில் ஒரு இண்டர் ஸ்டேட் காங் வேலை செய்வதாகவும் சொல்லப்படுகிறது. பல கோடிக் கணக்கான ரூபாய் அளவுக்கு மாநிலம் முழுவதும் தொடர்ந்தாற்போல் திருடு போய்க் கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு திட்டமிட்டு அரசாங்கம் ஏதாவது செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாநில அளவில் ஒரு காங் வேலை செய்வதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் தகவல் தர வேண்டும். இதுபோன்ற திருட்டுகளை கண்காணிப்பதற்கு ஸ்பெஷல் மொபைல் பார்ட்டி இயங்கி கொண்டிருக்கிறது. அதற்கு வேண்டிய வாகன வசதிகள் இருக்கிறது. அவர்கள் மூலமாக பல திருட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு, சில உடந்தையாக இருந்த அதிகாரிகளுக்கு தண்டனை கொடுக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தடவை 2 பேர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. செ. அரங்கநாயகம்: இந்தத் திருட்டு பற்றி போலீஸ் வழக்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அந்த காண்டிராக்டர்களிடம் 71 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை சட்டப்படி அந்தப் பகுதிகளில் எவர் எடுத்தவர்கள் எல்லாம், அடுத்து 2 பர்லாங் தூரத்தில் யார் வெட்டியிருந்தாலும் அவர்கள்தான் அதற்கு பொறுப்பாளராகும். அந்தச் சட்டப்படி அவர்களிடமிருந்து 71 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ரேஞ்சு ஆபீசர்கள் பொறுப்பாளர்கள் என்பதால் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. என். ராமசாமி: இரவு 12 மணிக்கு அவர்கள் வெட்டச் சொல்லுவதாகவும், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மரங்கள் திருடு போவதாகவும், பிறகு 2 பேர் சஸ்பெண்டு என்று சொன்னால் அவர்கள் 5 லட்சம், 10 லட்சம் சம்பாதித்துக் கொண்டு விடுகிறார்கள். ஆகவே, சஸ்பெண்டு செய்வதால் பிரயோஜனம் இல்லை. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்கள் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்த வழக்கை பொறுத்த வரையில் இழப்புக்கு மேல் அபராதம் வசூல் செய்யப்பட்டது. உடனடியாக சட்டப்படி அவர்களை வேலையிலிருந்து டிஸ்மிஸ் பண்ண வேண்டும். முதல் கட்டமாக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தத் தேக்கு மரத் திருட்டிலே இதற்காக ரூ. 71,000 வசூலிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இம்மாதிரி மரங்கள் திருட்டுப் போகும்போது அதற்கு என்ன மதிப்பாகிறது என்று கணக்கிட்டு அந்தப் பணத்தை வசூலிப்பதால் மட்டுமே மேற்கொண்டு திருட்டு நடக்காமல் தடுக்கப்படுமா ? அந்த நபர்களை கிரிமினல் வழக்கில் பதிவு செய்து ஜெயிலில் அடைப்பதின் மூலமாகத்தானே மரங்களுக்கு இன்னும் அதிகமாக பாதுகாப்பைக் கொடுக்க முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கிரிமினல் வழக்குச் சட்டப்படி போடக்கூடிய வழக்குகளுக்குப் போடலாம்.

நீலகிரி மலையிலுள்ள மரங்கள்.

* 323 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மலையிலிருந்து கேரளாவில் அமைந்துள்ள பிர்லாவுக்குச் சொந்தமான செயற்கை பட்டு தொழிற்சாலைக்கு மரங்களை வெட்டிக் கொண்டு போக அனுமதி தரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். மேட்டுப்பாளையத்தில் ஆயிரக்கணக்கான டன்கள் நீலகிரி மலையிலிருந்து வெட்டப்பட்ட மரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை பார்க்கலாம். தொடர்ந்து கேரளாவுக்குச் செல்கிறது என்பதை இன்றைக்குப் போனலும் பார்க்கலாம். போன சட்ட மன்ற கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பழனியப்பன் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள். அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்வதை விட ஆராய்ந்து பார்த்து, தமிழ் நாட்டு மரங்கள் கேரளாவுக்குச் செல்வதை, பிர்லா கம்பெனிக்குச் செல்வதைத் தடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, கேரளாவிலுள்ள தொழிற்சாலைக்கு நீலகிரியிலிருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போக அனுமதி தரப்பட்டுள்ளதா என்பது கேள்வி. வன இலாக்கா காண்ட்ராக்ட்டுக்கு விடும் மரங்களை அனுப்பக் கூடாது. சட்டத்திற்கு உட்பட்டு ஏலத்திலே விடப்படுகிறது. காண்ட்ராக்ட்டு விட்டதை, சட்டப்படி ஒப்பந்தப்படி விட்டதை அனுப்ப முடியாது. இரண்டாவதாக, தனியார் ஃபீயர் செல்லிங்–க்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுக்கிறார்கள். ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் மரங்கள் அனுப்பப்படுவதை அரசியலமைப்புச் சட்டப்படி தடுக்க முடியாது. பர்மிட் வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். அரசுத் துறையிலே கொடுப்பதில்லை, அரசுத் துறையிலே காண்ட்ராக்ட் விடப்பட்டு வெட்டினாலும் அனுப்பப்படுவதில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், மேட்டுப்பாளையத்தில் ரயான் தொழிற்சாலைக்கான மரங்கள் வெட்டப்படுகின்றன. மறுபடியும் அதே இடத்தில் வைத்து, பயிரிட மரங்கள் இல்லாததால், இப்பொழுது வேப்ப மரம் முதற் கொண்டு வெட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி தொழிற்சாலைகளுக்காகத் தனியாக காட்டிலாக்கா மூலம் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்படுமா என்பதைச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, மரங்கள் வளர்ப்பதில் பலவேறு முறைகள் இருக்கின்றன. quick growing trees என்று மேல் நாடுகளில் புனுகம், யூகலிப்ட்ஸ் போன்ற மரங்கள் எட்டு, ஒன்பது ஆண்டுகளில் வளர்ந்து தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வகையில் வளர்கிறது. அப்படிப்பட்ட மரங்கள் நீலகிரியில், விஸ்கோஸ் தொழிற்சாலையிடம் ஒப்படைக்கப்பட்டு, 8 ஆண்டுகள் கழிந்துவிட்டால் வெட்டி உடனடியாகப் பயிரிடுகிறோம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள அரசாங்க காடுகளிலிருந்து மரங்களை வெட்டி கேரளாவுக்குக் கொண்டு செல்வதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நடப்பது என்னவென்றால், . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விளக்கம் கொடுக்க வேண்டாம். அவர் சொல்வதை ஏற்றுக் கொள்ளுங்கள். தவறாக இருந்தால் பிரிவிலேஜ் மோஷன் கொண்டு வாருங்கள்.

திரு. சு. துரைசாமி : இதை விசாரித்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, அவர்கள் பதில் சொன்னார்கள். அவர்களிடத்தில் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். தனிப்பட்ட முறையிலே ஏதாவது நடந்தால், அதைச் சொல்லட்டும். விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.

## தனியார் பால் பண்ணைகளுக்கு உதவி

* 324—வினா : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் தனியாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பால் பண்ணைகளுக்கு அரசு உதவி செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) கிராமங்களில் பாற்பண்ணை நிறுவும் தனிப்பட்டவர்களுக்கு நிதியுதவி எதையும் அரசு அளிப்பதில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : பால் வளத்தைப் பெருக்குவதற்கு அன்—எம்ப்ளாய்மெண்ட் இமேரஜ்வேட்டுக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு இன்றையதினம் டைரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் பண உதவி செய்கிறார்கள் பாங்கு மூலமாக. அந்தத் திட்டங்களின் கீழ் இல்லாவிட்டாலும், பால் வளத்தைப் பெருக்குவதற்காக ஏதாவது திட்டம் வகுத்து, தனிப்பட்டவர்களுக்கும் தகுந்த ஜாமீன் பெற்றுக் கொண்டு அந்தத் திட்டத்தை உருவாக்க சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வேலையற்று இருககும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் மூன்று மாதப் பயிற்சி மாதவரம் பால்பண்ணையில் கொடுக்கப்பட்டு, 3 மாதப் பயிற்சி காலத்தின் போது திங்கள் ஒன்றுக்கு ரூ. 150 பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தப் பயிறசி உதவித் தொகை மேலும் 9 மாத காலத்திற்கும் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு 22 பட்டதாரிகள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டில் சுமார் 42 பட்டதாரிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதே அடிப்படையில் சிறு உழவர்களுக்குப் பயன்படும் வகையில் நாம் திட்டங்களைச் செய்து இருக்கிறோம். குறைந்தது மூன்று ஏக்கர் நிலமும், கிணறும், விசையேற்றமும் உடைய உழவருக்கு நிதியுதவி அளிக்கலாம் என நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு அல்லது ஏனைய வங்கிகளுக்கு தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் பரிவுரை செய்யும். கறவை மாடுகள் 10 வாங்குவதற்கு வங்கி ஏறத்தாழ ரூ.30,000 கடனுதவியளிக்கும். கறவை மாடுகளும் உழவரின் நிலங்களும் வங்கியிடம் ஈடாக வைக்கப்பட வேண்டும். இக் கடன் ஏழு ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் அத்தகைய உழவர்கள் உற்பத்தி செய்த





பால் அனைத்தையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யும். மேலும், அவர்களது கறவை மாடுகள் செயற்கை முறையில் கருத்தரிக்கச்செய்தல், அவற்றுக்கு மருத்துவ உதவி அளித்தல், அவற்றிற்குத் தீவனம் வழங்குதல் ஆகிய வழிகளில் அவசியமான தொழில் நுட்ப உதவியையும் வழங்கும். இத்தகைய உதவி வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுக்கு மட்டும் அல்லாது சிறு உழவர்களுக்கும் நாம் இப்போது செய்து கொண்டு இருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் தனிப்பட்டவர்கள இந்தப் பால் பண்ணையைத் துவக்கி, தரமான பாலையும் வெண்ணெய் போன்ற பொருள்களையும் சென்னை போன்ற நகரங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்களுக்கும் அரசாங்க உதவி செய்தால் பொது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இனிமேலாவது அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, சிறு விவசாயிகளுக்கும் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுக்கும் நாம் இப்படிப்பட்ட உதவிகளையெல்லாம் செய்கிறோம். அதோடு அல்லாமல், தனிப்பட்ட முறையிலே கால்நடை வைத்து பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் இந்தத் துறையிலே இலவசமாக ஆலோசனையும் வழங்கப்படுகிறது. கடன் வசதிகளையும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அளிக்கிறோம். இப்படி சில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சிறு உழவர்கள் கூட்டாகச் சேர்ந்து கூட்டுறவு பால் பண்ணை வழங்கும் சங்கம் ஒன்றை ரிஜிஸ்டர் செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யவில்லை என்றாலும் அம்மாதிரி சங்கங்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, எந்த ஊரிலே அப்படிப்பட்ட சங்கத்தைப் பதிவு செய்து வைத்து இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தகவலை எழுதிக் கொடுப்பார்களேயானால் நிச்சயமாக தேவையான உதவிகளைச் செய்யலாம்.

திரு. பொன். சொக்கலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் சிறு விவசாயிகளுக்குப் பால் வழங்கும் திட்டத்தின் கீழ் பண்ணை அமைத்துக் கொடுப்பதற்குப் பதிலாக, பட்டதாரிகளுக்குக் கொடுத்து அவர்களை அந்தத் துறையில் ஈடுபடச் செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில பட்டதாரிகளுக்குக் கால்நடைகளைப் பற்றி சரிவரத்

[திரு. பொன். சொக்கலிங்கம்] [1975 மார்ச் 14

தெரியாத காரணத்தினால், ஏழை எளிய மக்கள், படிக்காத மக்கள், ஒரு எக்கரா, அரை எக்கரா என்று வைத்திருக்கும் மக்களை ஒன்றாகச் சேர்த்து, கூட்டுறவுத் துறை பால் வழங்கும் திட்டம், அரசு பால் வழங்கும் திட்டம், மற்றும் தனியார்களுக்குக் கடன் வழங்கும் திட்டம் ஆகியவற்றை ஒருங்கு சேர்த்து செயல்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, பட்டதாரிகளுக்குக் கால்நடை பற்றித் தெரியாது என்று கூறுவது சரியல்ல. அவர்கள் படித்துவிட்டு வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிற நேரத்தில் பால் மாடுகளைப் பற்றியும், பால் உற்பத்தியைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் மாதவரம் பால் பண்ணையிலே 3 மாதகாலம் பயிற்சி கொடுக்கிறோம். தனிப்பட்ட இடத்திலும், மாதவரம் பண்ணையிருக்கிற இடத்திலும் அவர்கள் பால் பண்ணை வைக்க முயற்சி செய்கிறோம். அவர்கள் பால் பண்ணை வைப்பதற்கான யோசனைகளை இந்தத் துறையின் சார்பிலே வழங்குவதோடு, இந்தத் திட்டத்தை ஏற்கனவே செயல்படுத்திக்கொண்டு வருகிறோம், தொடர்ந்து செயல்படுத்தி வருவோம்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பணம் கட்டி, எந்தெந்த இடத்திலே வரவில்லையென்று கேட்டார்கள். நான் முன்னாலே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறினேன்; சீர்காழி தாலுகாவிலே இராமாபுரத்திலே வேலையற்றிருக்கக்கூடிய அரிசன மக்களும் பின் தங்கிய சமுதாய மக்களும் பால் பண்ணை திறக்க வேண்டுமென்று பணத்தைக் கட்டி ஒரு வருஷமாகி விட்டது. திருச்சிக்கும், அங்கும் போய் வருவதிலேயே பணம் செலவாகிறது. இன்னும் அவர்கள் பால் பண்ணை வைக்க சான்ஸ் கொடுக்கப்பட வில்லை. அமைச்சரவர்கள் உடனடியாக உத்திரவிட்டு, அந்த அரிசனங்களும் தாழ்த்தப்பட்டவர்களும் அங்கு பண்ணையைத் துவக்க ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பால் வழங்கு சங்கங்களை நாம் ஏற்கெனவே நடத்திக்கொண்டு வருகிறோம். ஆனால், புதிதாக ஒரு சங்கத்தை உருவாக்க வேண்டுமானால் பால் பண்ணை மட்டும் அதைச் செய்ய முடியாது. அவர்களது கோரிக்கை தாழ்த்தப்பட்டோர் நலத் துறைக்குச் சென்று, அங்கு அவர்கள் இலவசமாக-மானியம் வழங்குகிறார்கள். ஆகவே, அங்கே ஒதுக்கியிருக்கிற நிதியைப் பொறுத்து, ஆண்டுக்காண்டு இவ்வளவு சங்கங்கள் என்று அனுமதிக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அங்கங்கேயிருக்கிற டெபுடி ரிஜிஸ்டிரார்களிடம் பதிவு செய்துகொண்டு கூட்டுறவு சங்கங்களைத் தொடங்குகிறார்கள்,



1975 மார்ச் 14]

திரு. இரா. மாணிக்கவாசகம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறுகின்ற பொழுது பட்டதாரிகளுக்கு வங்கிகளின் மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட பட்டதாரிகள் கால்நடைப் பட்டதாரிகளா அல்லது எல்லாப் பட்டதாரிகளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கால்நடைப் பட்டதாரிகள் என்று தனியாக இருக்கிறார்களா? (சிரிப்பு).

திரு. இரா. மாணிக்கவாசகம்: அப்படி வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்ற கடனகள—ஆடுகள் பாலும் கிடைப்பதில்லை; நோயாளிகளுக்கு அது அவசியமாக இருக்கிறது—ஆடுகள் வாங்கவும் வழங்கப்பட சிபாரிசு செய்யப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கால்நடைத் துறையில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்லாது வேறு எந்தத் துறையில் பட்டம் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்து உதவி செய்கிறோம். ஆட்டுப் பண்ணை அமைப்பது பற்றி இந்தத் துறையிலே வருவதில்லை. கால்நடைத் துறையிலேதான் கேட்கவேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பட்டதாரிகளுக்கு பாங்கு மூலமாகக் கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால், பாங்கிலே வட்டி $13\frac{1}{2}$ சதவீதம், 14 சதவிகிதம் ஆகிறது. அவ்வளவு வட்டிக்கு வாங்குவது கட்டுப்படியாகுமா என்பதிலே பலபேர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு, ஐயப்பாடு வந்திருக்கிறது. ஆகவே, அரசாங்கமே, குறைந்த வட்டிக்கு அல்லது பாங்கு மூலமாகவோ கடன் கொடுக்க—குறைந்த வட்டிக்குக் கொடுக்க—முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அரசாங்கத்திலே இருந்தும் கடன் உதவி செய்கிறோம். ஆனால்,தேவையான அளவு நம்மிடத்திலே நிதியில்லையென்ற காரணத்தால் முடிந்த அளவு ஆண்டுதோறும் பணம் ஒதுக்கி, அவற்றிற்காக நிதி உதவிகளைச் செய்கிறோம். அதல்லாமல், அங்கங்கேயிருக்கிற மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தங்களுடைய பொறுப்பிலே, நிதி இருக்குமானால், அவர்களும் ஏற்பாடு செய்து, தேவையான அளவுக்கு நிதி கொடுக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே வட்டியைக் குறைக்க வேண்டுமென்று சொன்னால் மத்திய அரசும் வங்கிகளும் சேர்ந்துதான் அந்த முடிவை எடுக்க வேண்டும்.

திரு. கோ. இளங்கோவன். பயிற்சிபெற்ற பட்டதாரிகளுக்கு அரசு கடன் தருவதாகச் சொன்னார்கள். எந்த அளவுக்குக் கடன் தருகிறார்கள்; அல்லது வங்கிகள் எந்த அளவுக்குத் தருகிறார்கள் என்று அறியவிரும்புகிறேன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சுமார் 10 கறவை மாடுகளுக்கு ரூ. 30,000 வரை அவர்கள் கடன் உதவி அளிக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ், தலைவரவர்களே, பட்டதாரிகளுக்குக் கடன் கொடுபபதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். இன்றைக்கு விரும்புகின்ற பட்டதாரிகள் அனைவருக்கும் பயிற்சி கொடுக்கப் படுகிறதா ? தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? தேர்வு எந்த அடிப்படையில் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, எத்தனை பட்டதாரிகள் விண்ணப்பித்தாலும் அத்தனை பேருக்கும் பயிற்சி தருகிறோம். சென்ற ஆண்டு 22 பட்டதாரிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு 42 பேர் அதற்காக விண்ணப்பம் செய்தார்கள். அந்த 42 பட்டதாரிகளுக்கும் இப்பொழுது பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த அரசு உதவி செய்து ,தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கூட்டுறவு முறையிலே இப்படிப்பட்ட பண்ணைகள் அமைக்கின்றபொழுது, அரசு விதிக் கின்ற நிபந்தனைகளை அவர்களால் தாங்கமுடியவில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட அரசு உத்தரவு இருக்கிற பொழுது இந்த நிபந்தனைகளை அரசு சற்றுத் தளர்த்துமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டம் அல்லது கூட்டுறவுத் துறையிலே பால் பண்ணையை அமைப்பதிலே எல்லோருக்கும் ஒரே விதிதான். ஆனால், தாழ்த்தப் பட்ட மக்களுக்கென்று— நிதி வகைகளிலே சில சலுகைகளைக் கொடுத்து— மானியம் கொடுத்து, அவர்களை இந்தத் தொழிலிலே ஈடுபடச் செய்து ஊக்குவிக்கச் செய்கிறோமே தவிர, அவர்களுக்கென்று விதிமுறைகளைத் தளர்த்துவது பொருத்தமில்லாதது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, பட்டதாரிகளுகருப் பயிற்சி அளிக்கும் காலத்தில் அவர்களுக்கு ஊதியம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாதம் ஒன்றுக்கு ரூ. 150-ஐ உதவித் தொகையாக வழங்குகிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, நாஷனல் டெய்ரி டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன் புதிதாக அங்கங்கு பால் சப்ளை செய்யகூடிய சொஸைட்டிகளை உருவாக்குகிறார்கள். அவர்கள் பால் சப்ளை சொஸைட்டிகளை உருவாக்கும்போது அங்கங்கேயிருக்கிற இரண்டு ஏக்கர் ஒரு ஏக்கர் விவசாயிகளுக்குப் பால் மாடு வாங்குவதற்காகப் பணம் கடன் கொடுக்கக் கூடாது. இந்தத் திட்டமே சொஸைட்டிகள் நல்லமுறையிலே வளர்வதற்கு ஏதுவாக இருப்பதில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டு மென்று அவர்கள் சொல்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா ? அப் படி தெரிந்திருந்தால், இனிமேல் பால் மாடு வாங்குவதற்குக் கடன் உதவி செய்வதை நிறுத்த அரசு முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அழுலுக்காக மாடுகளை வளர்க்கத் தமிழ் நாட்டிலே கூட்டுறவு சங்கங்களை அமைக்க வேண்டுமென்றுதான் ஈரோட்டிலும், வட ஆற்காடு மாவட்டத்திலே ஆம்பூரிலும் அப்படிப்பட்ட சங்கங்களை உருவாக்கியிருக்கிறோம். ஈரோட்டிலே 50 சங்கங்கள் அப்படி பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் தங்களுக்கென்று சில பொருளாதார நிலைமைகளை வைத்து, மாடுகளை வாங்கி பால் சப்ளை செயயவேண்டுமென்பதுதான் அந்தச் சங்கங்களினுடைய நோக்கமாகும். குஜராத் மாநிலத்திலே அப்படிப்பட்ட திட்டம் வெற்றி பெற்றிருந்தாலும் நம்முடைய தமிழ்நாட்டில் பணம் உதவி செய்தால்தான் தரமுள்ள மாடுகளை அவர்களால் வாங்கமுடியும் என்பதை இந்தத் துறை உணர்ந்திருக்கிறது. ஆகவே, தேவையான பண உதவி, அரசின் சார்பிலும், கூட்டுறவு வங்கிகள் சார்பிலும் கொடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதைப்பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு பால் விநியோகச் சங்கங்களிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய பல மாணவர்கள் பயிற்சி பெற்ற பிறகு ரூ. 120 உதவித் தொகையாகக் கொடுக்கப் போவதாகச் சொல்லப்பட்டது. ஓராண்டுக்கு முன்னால் பயிற்சி பெற்றவர் களுக்கு இன்னும் அந்த உதவித் தொகை வராமலிருக்கிறது. ஆகவே, அந்த உதவித் தொகையை உடனடியாக அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் சங்கத்திலிருந்து உதவி செய்வதாகத் திட்டம் கிடையாது. அதிலே இருந்து எடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி கொடுக்கத் திட்டம் கிடையாது. படித்துவிட்டு வேலையில்லாத பட்டதாரிகளை இந்தத் திட்டத் திலே ஈடுபடுத்த வேண்டுமென்று பயிற்சிக் காலத்திலே ரூ. 150-ம், பயிற்சி முடிந்த பிறகு 9 மாத காலம் தொடர்ந்து ரூ. 150-ம் மாதந் தோறும் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, அதற்குள் அவர்கள் தானாக அமைத்துக்கொள்வார்கள் என்பதற்காக, கூட்டுறவு சங்கத்திலே யிருந்து யாருக்கும் பயிற்சி கொடுப்பதில்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அமைச்சரவர்களே பதில் சொல்லும்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கறவை மாடுகள் வாங்குவதற்காக 10 மாடுகள் வாங்குவதற்கு ரூ. 30,000 தருவதாகச் சொன்னார்கள். தனி ஒருவருக்கே அந்தத் தொகை வழங்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, யார் பயிற்சி பெறுகிறார்களோ, அவருக்கு நாம் வழங்குகிறோம். ஆனால், அவர்கள் வாங்கிய கால்நடைகளையும் அவர்களுக்கு இருக்கக்கூடிய நிலம் அல்லது வேறு சொத்துக்கள், அவற்றை ஈடாக வைத்துக்கொண்டு தான் அந்தத் தொகையைத் தருகிறோம்.

## வடார்க்காடு மாவட்டத்தில் பால் வழங்கு சங்கங்கள்.

*325 வின.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா ?

வடார்க்காடு மாவட்டத்தில் 1973–74-ம் ஆண்டில் துவக்கப்பட்ட கூட்டுறவு பால் வினியோக சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 1973–74 ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 12 கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள் தொடங்கப் பட்டன.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அப்படித் தொடங்கப்பட்ட சங்கங்கள் சரிவர இயங்கவில்லை, லாபகரமாக நடக்கவில்லை என்ற காரணத் தால் அவற்றில் சிலவற்றை எடுத்து ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு நடத்து கிறார்கள். அவை பின்னர் லாபகரமாக நடக்கின்றன. எனவே, மறுபடி யும், ஜனநாயக முறைப்படி, அவற்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் 204 கோவாப்ரேடிவ் பால் சங்கங்கள் இருக்கின்றன. இவை களில் 113 சங்கங்கள்தான் செயல்பட்டு வருகின்றன. மீதி 91 சங்கங்கள் செயல்படக்கூடிய நிலையில் கிடையாது. காரணம், அச்சங்கங்களின் நிர் வாகம் சரியாக இல்லை. எனவே அவைகளுடைய நிர்வாகக் குழுவைக் கலைத்து தனி அதிகாரிகளை நியமிக்கின்றோம். பின்னர் அந்த நிர்வாகம் சரியாக செயல்பட ஆரம்பித்த பிறகு தனி நிர்வாக அதிகாரிகளை எடுத்து விட்டு மீண்டும் தேர்தல் நடத்தி, முறையாக தலைவரைத் தேர்ந்தெடுத்து நாம் நடத்திக்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் அப்படிப்பட்ட சங்கங்கள் முன்னேற்றமடைந்திருக்குமானால் பழைய முறையில் தொடர்ந்து செயல்படுத்தலாம்.



மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக குறிக்கும்.]

(திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. எ. சுப்பிரமணியம், திரு. கோவைசெழியன், டாக்டர் ஹாண்டே ஆகியோர் எழுந்து நின்று "பாயிண்ட் ஆப் ஆர்டர்" என்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திற்கு முன்பே திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை கிளப்ப வேண்டுமென்று கூறினார். எனவே, அவர் முதலில் பேசட்டும்.

## (2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) மானியக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட அறிக்கைகள், குறிப்புகள் இவற்றை முன்னதாகவே உறுப்பினர்களுக்கு வழங்குவது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இன்றைக்கு பொதுப் பணித்துறை மானியத்திலே 8 கோரிக்கைகள் மீது விவாதிக்க இருக்கிறோம். இக் கோரிக்கைகள் பற்றிய ஆய்வுரைகள் இன்று காலை தான் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உறுப்பினர்கள் நேற்று இவைகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதேபோல திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச் சினையை நேற்று இங்கு எழுப்பினார்கள், இரண்டு நாட்களுக்கு முன்ன தாகவே சம்பந்தப்பட்ட அறிக்கைகளைத் தருகிறோம் என்று அப்போது சொன் னார்கள். அதற்கு மாறாக, இன்று சம்பந்தப்பட்ட அறிக்கைகள் இன்று காலையில் தான் இங்கு வைக்கப்பட்டுள்ளன என்றால் என்ன நியாயம்? எனவே, ஒரு சீரான நடைமுறையை ஏற்படுத்த வேண்டும், அப்போது தான் உறுப்பினர்கள் அவற்றைப் படித்து விவாதிப்பதற்கு நேரமிருக்கும் என்கிற எனது ஒழுங்குப் பிரச்சினையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, எட்டு மானியக் கோரிக் கைகள் வரவிருக்கின்றன. முக்கியமான இந்த மானியங்கள் பற்றிய அறிக்கைகள் எங்களுக்கு நேற்றையதினம் தரப்படவில்லை. இன்று தான் அவை மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கின்றன. டைல்ட் பட்ஜெட் எஸ்டிமேட் கூட இப்போது தான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் நேற்றைய தினம் தான் நமது மாண்புமிகு தலைவரவர்கள் சொன்னார்கள், இனி ஒரு நாளுக்கு முன்ன தாகவே தரப்படும் என்று. அப்படிச் சொன்ன உடனேயே, நமக்குக் கிடைத்திருக்கின்ற அனுபவம் என்னவென்றால், முதல் நாள் கொடுக்கப் படாமல் அடுத்த நாள் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், இவை களை நாங்கள் எப்போது படிப்பது ? எப்படிப் பேசுவது நாங்கள் கண்ணை

மூடிக்கொண்டு பேசவேண்டும் என்று விரும்புகிறார்களா ? இம்மாதிரி
முக்கியமான மானியக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசும்போது சம்பந்
தப்பட்ட அறிக்கைகள் முன்னதாக வந்தால் தான் நாங்கள் விவாதிப்பதற்கு
வாய்ப்பாக இருக்கும். இனியாவது அந்த நடைமுறை தவறாது
கடைப்பிடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தற்போது எழுப்பப்பட்ட
ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருந்தால் பேசுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர்
எடுத்துக் கூறிய அதே விஷயத்தில் இன்னொரு கருத்தைக் கூற விரும்பு
கிறேன். இதில், ஒருவேளை, அரசுக்கு ஏற்படுகின்ற சிரமம், புத்தகங்களை
எல்லாம் அச்சிட்டுத் தருவதில் இருக்கலாம் என்று கருதுகிறேன்.
அப்படியானால் நமது அரசாங்க அச்சகம் சரியாக, ஒழுங்காகச் செயல்பட
வில்லையா ? எனவே, இதிலே நான் ஒரு ஆலோசனையை அரசாங்கத்திற்
குக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். நமது நிகழ்ச்சி நிரலில், சில
டிமாண்டுகள் - உதாரணமாக, 3—4—1975—பழங்குடி மக்கள், அரிசனங்
கள் முதலியோர் நலன் என்றும், 4—4—1975—லேபர் என்றும்,
9—4—1975—பிஷரீஸ் என்றும் தந்திருக்கிறார்கள். இம்மாதிரியான
அச்சடித்த புத்தகங்கள் தரப்படத் தேவை இல்லாத மானியக் கோரிக்கைகளை
முன்கூட்டியே வைத்திருக்கிறார்கள். முக்கியமான கோரிக்கைகளைப் பின்னால்
வைத்திருக்கிறார்கள். முக்கியமான கோரிக்கைகள் பற்றிய அறிக்கைகளை
அச்சடிப்பதற்கு முன்னுரிமை அளித்து முக்கியமில்லாத மற்ற
அறிக்கைகள் சம்பந்தப்பட்ட மானியங்களை அதற்கேற்றவாறு அமைத்துக்
கொண்டால் புத்தகங்கள் அவ்வப்போது கிடைக்கும். அதற்கேற்ற முறையில்
நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைத்தால் கூட வசதியாக இருக்குமென்று
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அலுவலாய்வுக் குழுவின்
ஆலோசனையின்படி 11-ஆம் தேதி சில முடிவுகளை எடுத்து அதன்படி இந்த
மானியக் கோரிக்கைகளை எடுத்து நடத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனால்
திடீரென்று இந்த மானியக் கோரிக்கையை இன்றையதினம் எடுத்துக்
கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட காரணத்தால் நேற்றைய
தினம் முடிந்த வரை—அதாவது ஐந்து புத்தகங்களையும் காலையில்
ஐந்து புத்தகங்களையும் அச்சடித்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே,..
(குறுக்கீடு) (திரு. எட்மண்ட் எழுந்து நின்றார்) நான் ரூலிங்
கொடுப்பதற்கு முன்னால் எழுந்து நின்றால் என்ன செய்வது ? நான
எனது ரூலிங்கை முடித்து விடுகிறேன்,

திரு. க. உரொ, எட்மண்ட் :— Before you give a ruling, I have
to say something. துணைத் தலைவரவர்கள் இந்த ஒழுங்குப் பிரச்சினையில்
என்ன தீர்ப்பு கொக்கப் போகிறார் என்று தெரிகிறது.....—........



Mr. DEPUTY SPEAKER : If the hon. Member is going to anti-
cipate what I am going to rule, that is not proper. The hon. Member
should not say that. Even if he anticipates something, let him keep
it in his mind.

திரு. க. உரொ. எட்மண்ட் : இன்றைக்கு ஒழுங்குப் பிரச்சினை எந்தத்
தவறின் மீது எழுப்பப்பட்டிருக்கின்றது என்று எழுப்பப்பட்டதற்கு தீர்ப்பு
சொல்லப் போகிறீர்கள். அதில், நமது அலுவல் ஆய்வுக் குழுவை
இழுக்கின்ற காரணத்தால் அதற்கு முன்னதாக ஒரு விளக்கத்தைச்
சொல்ல வேண்டியிருக்கிறது. அலுவல் ஆய்வுக் குழுவில், எல்லாக்
கட்சித் தலைவர்களும் கூடி, எந்தத் தேதி வரைக்கும் எந்தெந்த
மானியக் கோரிக்கைகளை எடுத்துக் கொள்வது என்று தான் முடிவு
செய்திருக்கிறதே தவிர, என்னென்ன மானியக் கோரிக்கைகள் எந்
தெந்தத் தேதியில் என்று முடிவு செய்யப்படவில்லை. ஆகவே, இன்
றைக்கு 14-ம் தேதி நீர்ப்பாசனம் மானியக் கோரிக்கையை எடுத்திருப்ப
தற்கும் அலுவல் ஆய்வுக் குழுவில் நாங்கள் சொன்ன கருத்துக்களுக்கும்
சம்பந்தம் இல்லை. எனவே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நிலைக்கும்,
கட்சித் தலைவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. கட்சித் தலைவர்கள் யாரும்
பொறுப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அலுவல்
ஆய்வுக்குழு முடிவு செய்த போது, காலையிலும் மாலையிலும் அமைச்சர்கள்
பகிர்ந்து கொள்வது என்று இருந்தது. அந்த நிலை இப்போது மாறி,
ஏப்ரல் பத்தாம் தேதி வரை போவது என்று வரும்போது, சம்பந்தப்
பட்ட அமைச்சர்கள் என்று வரும் போது முன்னால் போட்ட அமைச்சர்களை
பின்னுக்கும், பின்னால் போட்ட அமைச்சர்களை முன்னுக்கும் இழுக்க
வேண்டிய நிலை ஏற்பட்ட காரணத்தால், பின்னால் இருந்த ப. உ.
சண்முகம் அவர்களை முன்னால் இழுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.
அதனால் சம்பந்தப்பட்ட புத்தகங்களை அவசர அவசரமாக அச்சடித்து
நேற்று தர வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, தற்போது போடப்
பட்டுள்ள இந்த மானியம் பின்னால் போக வேண்டிய அவசியம் இல்லை
என்று கருதுகிறேன். இனி நாளைய தினத்திலிருந்து தரவேண்டிய
அறிக்கைகள் எல்லாம் ஒழுங்காக வந்து விடும். நேற்றைக்கு, இன்றைய
சம்பந்தப்பட்ட ஆங்கில அறிக்கைகள் தரப்பட்டு விட்டன. தமிழில் அறிக்
கைகள் இன்று காலை தரப்பட்டன. இனி, ஒரு நாளைக்கு முன்னதாகவே
தரப்படும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அட்வைசரி கமிட்டியில் நடந்த விஷ
யம் என்று சொன்னார்கள். இதிலே நான் குறிப்பிட விரும்புவது,
திடீர் என்று மாற்றப்பட்டிருக்கிறது. 14-ஆம் தேதி ரெவின்யூ என்று
தான் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குப் பின்னால் சபையில் சபாநாயகர்
அறிவிக்கின்றபோது இந்தத் தகவலைச் சொன்னார்கள். அமைச்சர்களின்
சௌகரியப்படி மாற்றியிருப்பார்களானால் சபையினுடைய மரியாதை
காப்பாற்றப்பட வேண்டும். முன்னதாகத் தந்தால்தான் விவாதிக்க
சௌகரியமாக இருக்கும். சபையின் உரிமையைப் புறக்கணிக்கக்கூடாது
ன்று குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த சபையை அகௌரவப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எதுவும்கிடையாது. அச்சடிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. திடீரென்று சிறிது மாற்றம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் சிறிது சிக்கல் ஏற்பட்டுவிட்டது. மாற்றம் ஏற்பட்டவுடனே அவசர அவசரமாக அச்சடிக்கப்பட்டது. நமது அதிகாரிகள் அச்சகத்தில் நீண்ட நேரம் காத்திருந்து பிரதிகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதில் அச்சகத்தின் பேரிலோ, அச்சடிப்பவர்களின் பேரிலோ தவறு இல்லை. நேற்று கொடுக்கப்பட வேண்டியது காலையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அங்கத்தினர்கள் பெரிது படுத்த வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. சுரேந்திரன், திரு. கோவை செழியன், திரு. எ. சுப்பிரமணியம் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் தாமதத்திற்கு வருத்தம் தெரிவித்த பிறகு இதில் தொடர்ந்து பேசுவது சரியாக இருக்காது. மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறியது போல அமைச்சர்களின் சௌகரியங்களைக் கருத்தில் எடுத்துக் கொள்ளும்போது, உறுப்பினர்கள் சௌகரியத்திற்காக, சம்பந்தப்பட்ட பேப்பர்கள் முன்னதாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். எனவே, இனியாவது சம்பந்தப்பட்ட பேப்பர்கள், புத்தகங்களை முன்னதாகவே கொடுத்துவிட வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இதில் பிராக்டிகலாக எப்படிச் செய்வது என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மானியம் சம்பந்தப் பட்ட பேப்பர்களை, படிக்க முடிந்தவர்கள், படித்தவர்கள் பேசட்டும்.

(ஆ) வேலூர் சி. எம். சி. மருத்துவமனைப் பிரச்சனை குறித்த ஒத்தி வைப்பு தீர்மானங்களை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Sir, I am raising my point of order under Rule 44 of the Assembly Rules. Rule 44 says—

"The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated to the member together with the reasons therefor and the member shall not raise the matter as such in the House."

நான் கொடுத்திருக்கிற தீர்மானத்தின் பேரிலே அதைப்பற்றி இந்தச் சபை







யிலே எதுவும் எழுந்து சொல்லக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டி
ருக்கிறது. **I am perfectly within my right to raise it.** ஆனால், 4, 5
தினங்களுக்கு முன்பாகவே சி. எம். சி. பற்றி நாங்கள் அவசரத் தீர்மானம்
கொடுத்திருக்கிறோம். தினசரி எப்படியாவது மறுநாள் எடுத்துக் கொள்
ளலாம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. **We were also
prepared to oblige the Ministry and the Hon. Speaker.** இன்றைக்குக்
காலையிலே எடுத்துக் கொள்ளப்படும் என்று நினைத்தோம். இவ்வளவு நேர
மாகியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இது ஒரு முக்கியமான விஷயமாக
இருக்கிறது. இரண்டு மாதங்களாக வேலை நிறுத்தம் மாத்திரமல்ல, இதை
யொட்டி பல சிக்கல்கள் வந்திருக்கின்றன. டாக்டர்கள் கைது செய்யப்
பட்டிருக்கிறார்கள். வேலூரிலே ஹர்த்தால் நடைபெறக்கூடிய நிலைமை
இருக்கின்றது. இந்த நாடு பூராவும் இன்றைக்கு இதைப்பற்றிக் கவலை
கொண்டிருக்கிறது. இது சம்பந்தமான இந்தத் தீர்மானத்தை
இப்போதே எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் கொண்டால் நாங்கள்
விவரங்களைச் சொல்ல முடியும். நாங்கள் சொன்னதற்குப் பிறகு நீங்கள்
இது சரியான தீர்மானம்தான் மற்ற தீர்மானங்கள் மாதிரியில்லை என்று
கண்டிப்பாக இந்தச் சபையை ஒத்திவைத்து இன்றைக்கே விவாதித்து
முடிவு சொல்ல வேண்டுமென்று சொல்லக்கூடிய அளவிற்கு மிக முக்கிய
மான தீர்மானமாக இருப்பதால் நாங்கள் இதை எடுத்துக் கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார்....

திரு. கோவை செழியன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்தவர்களிலே நானும் ஒருவன்......

திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கள் கட்சியைச் சேர்ந்த மெம்பர் திரு. ஜேம்ஸ்தான் முதலில் எழுந்தார். அவருக்குத்தான் நீங்கள் சான்ஸ் கொடுக்க வேண்டும்..................

திரு. கோவை செழியன் : நான் அப்பொழுதிலிருந்தே எழுந்துகொண்டு இருக்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை, இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இப்படி உறுப்பினர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது சரியல்ல, ஒருவர் விட்டுக் கொடுங்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : இது எல்லாம் ஒழுங்காகச் செய்யப்படுவதுதான் நன்றாக இருக்கும்.

திரு. கோவை செழியன் : முதன்முதலாக இந்தத் தீர்மானத்தை நான்தான் கொண்டுவந்தேன், அந்த முறையிலே நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தத் தீர்மானத்திலே சொல்லப்பட்டிருக்கிற விஷயம் மிகவும் அவசரமானது. இதைப்பற்றி நான் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம்.........................

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இரண்டு பேரும் பேசிக் கொண்டு இருந்தால் எப்படி ? இரண்டுபேர்களும் இருக்கைகளிலே அமருங்கள். முதலில் திரு. ஜேம்ஸ் பேசட்டும். அப்புறம் நீங்கள் பேசுங்கள்.

திரு. கோவை செழியன் : நான் முன்னாலேயிருந்தே கேட்டுக் கொண்டு இருந்தேன்.

திரு. மூனு ஆதி : முதலில் அவரைப் பேசச்சொன்னீர்கள், இப்போது அவரை உட்காரச்சொல்லுகிறீர்கள், இவரைப் பேசச்சொல்கிறீர்கள், என்ன இது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். இந்த சேர், கொடுத்த ரூலிங்கையே மாற்றிக்கூடக் கொடுக்கலாம். முதலில் கோவை செழியனைப் பேச அழைத்தேன்; இப்போது திரு. ஜேம்ஸை பேச அழைக்கிறேன்; கோவை செழியன் அதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சி.எம்.சி. ஆஸ்பிட்டல் சம்பந்தமாக நானும் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இது எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கூற விரும்பவில்லை. இந்த நெருக்கடியைப் பார்த்தால் இந்த விஷயம் பாராளுமன்றத்திலே விவாதத்திற்கு வரவிருக்கிறது. ஒருவேளை அங்கே விவாதத்திற்கு வந்து இங்கே நாம் சும்மா உட்கார்ந்துகொண்டிருந்தால் நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்? தமிழ்நாட்டுப் பிரச்சினை தமிழ்நாட்டின் சட்ட மன்றத்திலே முக்கியத்துவம் கொடுக்காமல் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் அக்கறையில்லாமல் இருக்கின்றன என்ற குறைபாடு ஏற்படும். ஆகவே இதை எடுத்துக்கொள்ளவேண்டும். பார்லிமெண்டிலே இது எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. நேற்றைய தினமே பாராளுமன்றத்திலே ஸ்பீக்கர்..........

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பாராளுமன்றத்திலே எடுக்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றிப் பேசவேண்டாம். நாம் இங்கே எடுத்துக் கொள்வதைப்பற்றி எம்பெசைஸ் பண்ணுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த அளவிற்கு உடனடியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதற்காக அதைச் சொல்லுகிறேன். அங்கே



ஸ்பீக்கர் நோட்டீஸ் கேட்டிருக்கிறார்கள், அதற்கு அவர்கள் இசைவு கொடுத்ததாகத்தான் அர்த்தம். ஆகவே இங்கேயும் அதைப்பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுத்ததற்குக் காரணமே ஆரம்பத்திலே இப்படிப்பட்ட தீர்மானம் இங்கே விவாதிக்கப்பட்டு இந்தப் பிரச்னை முடிவு பெறாத காரணத்தால் மறுபடியும் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். அட்ஜர்ன்மெண்ட் மோஷன் என்றாலே நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு அவசர முக்கியத்துவமான காரியத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே கொடுக்கிறோம். அதைத் தள்ளிக் கொண்டே போனால் இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவமே போய்விடுகிறது. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் அகில இந்தியாவிலே மட்டுமல்ல, அகில உலகமே ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற நிர்வாகிகளுக்கு தினம் தினம் தொல்லைகளும் துயரங்களும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பல டாக்டர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

* * *

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்...........

திரு. கு. காமாட்சி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்*** என்று சொல்லுகிறார்களே, அது சரியா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பிரச்னைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் தந்திருக்கிறார்கள். ஒரு சமரஸமான முடிவு காணவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே இந்த அவையின் உறுப்பினர்களும் மேலவையைச் சேர்ந்த உறுப்பினர்களும் கடந்த இரண்டு நாட்களாக பேசிப் பார்த்தார்கள். அந்த வேண்டுகோளின் அடிப்படையிலேதான் இரண்டொரு நாள் தள்ளிப்போடலாம் என்ற அளவிற்கு வந்தது. அந்தப் பேச்சுவார்த்தையிலே முடிவு ஏற்படவில்லை. அந்தப் பேச்சுவார்த்தையின் முழு விவரத்தையும் விரைவில் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்வார்கள். நாளைக்குக் காலையிலே முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்வார்கள் என்பதால் நாளை காலையிலே இதை எடுத்துக்கொள்ளலாம். இரண்டு நாட்களாக சமரஸப் பேச்சு நடந்து கொண்டிருந்தது, அதனால் தான் இரண்டு நாட்கள் தள்ளிவைத்தோம். நாளை எடுத்துக்கொள்ளலாம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைகளையும் பார்த்து மற்றவைகளையும் அறிந்துகொண்டு இங்கே சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அரசாங்கத்தின் தரப்பிலே கொடுக் கப்பட்ட விளக்கமானது எங்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை இது முக்கியமான பிரச்னை, உடனடியாக விவாதிப்பதுதான் சாலச்சிறந் ததாக இருக்கும். இந்த அவையின் முன்னர் அளித்த முன்னவர் அளித்த விளக்கத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது. ஆகவே நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

(அமைப்பு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

திரு. கே.டி.கே. தங்கமணி : இந்தப் பிரச்னை முடிகிறதோ இல்லையோ என்ன நிலைமையிலே இருக்கிறது என்பது நாட்டுக்குத் தெரிய வேண்டும். பல செய்திகள் பத்திரிகைகளிலே வந்துகொண்டிருக்கின் றன, இந்து பத்திரிகையிலே 3 பேர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள், பலவிதமான கருத்துக்களை நாட்டு மக்கள் மத்தியிலே பரப்பிக்கொண்டிருக் கிறார்கள். மக்களுக்கு உண்மையான நிலை என்ன என்பது தெரிய வேண்டும். இதிலே இன்னும் காலங்கடத்துவது சரியல்ல. இதைக் கால தாமதப்படுத்திக்கொண்டேபோய் எடுத்துக்கொள்ளப்படவில்லையென்பதால் நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தார்கள்).

திரு. க. உரா. எட்மண்ட் : வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் ஏற்பட்டு உள்ள விளைவுகளைப்பற்றியெல்லாம் ஏற்கனவே. அண்ணா திரா விட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கடந்த பத்தாம் நாள் நிதி நிலை அறிக்கையிலே விவாதிக்கும் போது எங்கள் கருத்தினை நாங்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 10-30)

அதற்குப்பிறகும் அரசாங்கம் அங்கேயுள்ள நிலைமைகளைச் சீர் செய் வதற்கு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாத நிலையில், கடந்த 11 ஆம் தேதி எங்கள் கட்சியின் சார்பில் எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. ஆலடி அருணா அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். நண்பர் திரு. கோவை செழியன் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். 12 ஆம் தேதி பேரவைத் தலைவர வர்கள் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை 13 ஆம் தேதி எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் நேற்றைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று எடுக்கப்படும் என்று யாரும் சொல்லவில்லை. ஸ்பீக்கர் சொல்லவில்லை.

திரு. க. உரா. எட்மெண்ட் : பேரவைத் தலைவரவர்கள் தன்னு டைய அறையிலே என்னிடத்தில் சொன்னார்கள். அதை வேண்டுமானால் பேரவைத் தலைவரவர்கள் மறுக்கட்டும். ஆனால் சொன்னது உண்மை. இன்றைக்குக்கூட அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அங்கே நிலைமை முற்றிக்கொண்டிருக்கிறது.



திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அறையிலே சொன்னதைப் பற்றி . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. உரா. எட்மண்ட் : இந்த நிலைமைகள் நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அவை முன்னவரவர்கள் சொல்லுகின்ற விளக்கம் எங்களுக்கு மனநிறைவு உள்ளதாகத் தெரிய வில்லை. ஏற்கனவே இந்தச் சம்பவத்தைப்பற்றி எவ்வளவு ஆதாரங் களைத் திரட்டவேண்டுமோ அவ்வளவு ஆதாரங்களையும் அரசாங்கம் திரட்டி வைத்திருக்கிறது. நாங்கள் எழுப்பும் பிரச்னைகளைப்பற்றிச் சொல்லுவதற்கு அரசாங்கமே முன்வரலாம். ஆனால் இதில் அரசாங்கம் காலம் தாழ்த்துவது எங்களுக்கு மனநிறைவு தருவதாகத் தெரியவில்லை. ஆகவே, எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் நாங்கள்—அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்—வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தார்கள்.)

திரு. எ. சுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நானும் இதுசம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். 42-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயங் களைக்கொண்டு வரலாம் என்று இருக்கிறது. அவசரத் தன்மை இல்லை என்று சொன்னால் முதலில் இதை ஏற்றுக்கொண்டே இருக்க மாட்டார்கள். அவசரத் தன்மை உள்ள காரணத்தினால்தான் இதை விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறோம். அவை முன்னவரவர் கள் சொன்னார்கள், பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது, இது வரையில் எதுவும் ஆகவில்லை என்றாலும் இனி எதாவது ஆகும் என்று சொன்னார்கள். வாரக்கணக்கில் பேச்சுவார்த்தைகள் நடந்து, அரசாங்கத் தினுடைய யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் இது நீண்டு கொண்டே இருக்கிறது. புதிய புதிய விளைவுகள் நேர்ந்து கொண்டிருக்கின்றன. அமைதியாக இருந்து பார்க்கக்கூடிய அளவிற்கு இல்லாமல் விளைவுகள் மோசமாக உருவாகிக்கொண்டிருக்கின்றன. அப்படியிருக்கும் பிரச்னையைப் பற்றி விவாதிப்பதற்கு இன்னும் ராசிபலன் பார்ப்பது, நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா, நாளைமறுநாள் எடுத்துக்கொள்ளலாமா என்று. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஜோசியம் பார்ப்பதற்கு ஆலமரத்தடிக்குப் போக வேண்டுமே தவிர சட்டசபையில் பார்க்க வேண்டியதில்லை. That is quite improper.

ராசிபலன் யார் பார்ப்பது? அதற்கு ஆலமரத்தடிக்குப்போக வேண்டும். இங்கே இருக்கக்கூடாது.

The hon. Member should please withdraw the words. "Rasi Palan".

*திரு எ. சுப்பிரமணியம் : நான் பார்லிமெண்டரி முறைக்குப் புறம்பான எந்தவிதமான வார்த்தையையும் சொல்லவில்லை என்றுதான் கருதுகிறேன். ஆகவே, இம்மாதிரி அவசரத்தன்மையிருக்கும் விஷயங்களைப்பற்றி பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் 234 பேர் இருக்கிறோம். இந்தப் பிரச்னை மாநிலம் மட்டும் சம்மந்தப்பட்ட பிரச்னைஇல்லை, நாடு முழுவதும் சம்பந்தப் பட்ட பிரச்னை. சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களைக் கொண்டிருக்கக்கூடும். அந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்தால் அந்தக் கருத்துக்களை வைத்து இந்தப் பிரச்னையை விரைவில் சுமுகமாகத் தீர்க்க ஒருவேளை வழிபிறக்கக்கூடும் என்ற ஆவலினால்தான் இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறோம். எனவே, இனியும் இதைத் தள்ளிப் போடும் அந்தச் செயலை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னைப பற்றி ஒததிவைப்புத் தீர்மானம் கொடுத்த அன்றைக்கே இந்தப் பிரச்னைகள் வந்தபொழுதே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொடுத்த திரு கே. டி. கே. தங்கமணி அவர்களே இதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளவேண்டாம், நாளை மறுநாள் பார்த்துக்கொள்ளலாம் என்றும், சமரசத்திற்கான சூழ்நிலை இருப்பதால் உடனடியாக இதை எடுக்கவேண்டாமென்றும் கூறினார்கள். அவருடைய ஒப்புதலின் பேரில் தான் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட மாண்புமிகு முதல்வரவர்கள் வந்திருந்தால் இந்தப் பிரச்னையை எடுத்துக் கெண்டிருக்கக்கூடும். அப்பொழுதுகூட—இதை விவாதத்திற்கு அல்ல—விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்பதைப்பற்றி யோசிக்க எடுத்துக்கொண்டிருக்கலாம். விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாமா என்பதற்கான அடிப்படைக் காரணங்களைச் சொல்ல எடுத்துக்கொண்டிருக்கலாம். அதைக்கூட இரண்டுநாள், ஒருநாள் தள்ளிவைப்பது பற்றி தீர்மானம் கொடுத்தவர்களே சொன்ன யோசனையின் பேரில்தான் தள்ளிவைக்கப்பட்டது. இன்றைக்கே கூட மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே வந்திருந்தால், முழுவிவரமும் தெரிந்தவர்களாக அவர்கள்தான் இருக்கிறார்கள், சமரசப்பேச்சை யார், யார் என்னென்ன பேசிக்கொண்டு வந்தார்கள் என்பதை அவர்களிடத்தில் தெரிவித்திருப்பதால், அவர்களுடன் தொடர்பு வைத்திருப்பதாலும் இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்ற பிரச்னையில் முதல்வரவர்கள் இருந்து கருத்துக்களை வழங்குவதுபொருத்தமாகஇருக்கும். நாளை முதல்வரவர்கள் இங்கே வருகின்ற சூழ்நிலை வரும்பொழுது இதை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நடந்தது இதுதான் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள மைப்பட்டிருக்கிறேன்.



THIRU B. VENKATASWAMY : Sir, in support of the stand taken by the other Opposition Parties, we also stage a walk-out.

(Then the Members belonging to the Swatantra Party staged a walk-out).

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, சி எம். சி. ஆஸ்பத்திரி சம்பந்த மாக நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இந்தப் பிரச்னை சுமுகமாகத் தீர வேண்டுமென்று அரசும், எதிர்க் கட்சிகளும் விரும்புகிறது என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து அம்மையார் அவர்களும், மேலவை உறுப்பினர் அவர்களும் சமரசத்திற்குப் போய் நல்ல முடிவு வரவில்லை என்று இன்றுதான் தெரிகிறது. இந்தப் பிரச்னை நல்ல முறையிலே தீரவேண்டுமென்ற அடிப்படையில்தான் இதை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்குக் கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள், உலகமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதென்று. நிச்சயமாக உலகத்திலே சில சக்திகள் இதை அரசியல் பிரச்னையாக்கி, வேறு சில எதிர்க் கட்சிகளையும் அதற்குச் சாதகமாக்கிக் கொள்ளும் சூழ்நிலை இருக்கத்தான் செய்கிறது, வேலூரிலேயும் பரபரப்பு இருக்கத்தான்செய்கிறது. இதை விவாதிக்க வேண்டியது அவசரமும் அவசியமும் வாய்ந்தது என்ற கருத்து இருந்தாலும் கூட, முன்னவர் அவர்கள் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, சமரசம் ஏற்பட்டு வேலூர் மருத்துவமனை நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு இருப்பதால் வெளி நடப்பு செய்வதால் பிரச்னைகள் தீராது என்பதை மட்டும் கூறிக்கொண்டு எனவே இந்த அவையிலே நான் இருந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருப்பதற்கு என் ஸ்டேட் மெண்ட் ?

திரு கே. எ. வகாப் ; இந்தப் பிரச்னையை நாளைக்கு எடுத்துக்கொள்ள சம்மதிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்கிருக்கின்ற சங்கடம் என்னவென்றால், பாயிண்ட் ஆப ஆர்டர் எழுப்பி இதை விவாதிக்க வேண்டு மென்று கூறியவர்கள் வெளியே போய்விட்டபிறகு தீர்ப்புச் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஆகவே அடுத்த அயிட்டத்திற்குப் போகிறேன்.

திரு கோவை செழியன் அவர்கள் பேசும்பொழுது கடைசி பகுதியில் * * * என்ற பகுதியை பார்லிமெண்டரி முறைக்கு உகந்தது அல்ல என்பதால் அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை பேரவைத் தலைவர் அவர்கள் நாளைக்கு வந்து எடுத்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றபட்டது.

(3) 1975–76ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,71,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU A. SUBRAMANIAM: Sir, to urge the inclusion of construction of the Chinnavedampatty tank in Sankar Samakulam Block in Coimbatore District in the works programme for 1975-76, I move—

"That the allotment of Rs. 19,71,79,000 under Demand No. 36—Irrigation—be reduced by Rs. 100".

THIRU K.S. KOTHANDARAMIAH: Sir, to discuss the need to take up for execution the Kelavarapalli Dam and Vempalli Dam in Hosur Taluk, I move—

"That the allotment of Rs. 19,71,79,000 under Demand No. 36—Irrigation—be reduced by Rs. 100".

திரு. கோவை செழியன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரவர்களே, காங்கேயம் தொகுதி கொண்டடம் ஒன்றியத்திலுள்ள செட்டிப்பாளையத்தில் வட்டமலைக்கரையில் அணைகட்ட வேண்டியதின் அவசியத்தை எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண். 36-பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,71,79,000-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, வந்தவாசி தாலுக்காவில் ஓடும் சுகநதியின் குறுக்கே அணைகட்டி அதைப் பாசனங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,71,79,000-ல் ரூ. 100-ஐக் குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.



திரு. கே. பி. கோபால்: தலைவரவர்களே, மாவட்டங்களில் நடத்தப்பட்ட நீர்ப்பாசன கருத்தரங்குத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்த—

"நிதிக் கோரிக்கை எண். 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,71,79,000-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,51,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU A. SUBRAMANIAM: Sir, to discuss policy, I move the following cut motion:

"That the allotment of Rs. 3,51,01,000 under Demand No. 37—Public Works—Buildings be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY: To discuss the need to set up a Building Corporation as a Public Undertaking to work as a commercial unit, I move the following cut motion:—

"That the allotment of Rs. 3,51,01,000 under Demand No. 37—Public Works—Buildings be reduced by Rs. 100".

THIRU K. P. GOPAL: Sir, to discuss the necessity to expedite the proposal to construct tourist rest houses for middle income group tourists at Thekkady, I move the following cut motion:—

"That the allotment of Rs. 3,51,01,000 under Demand No. 37—Public Works—Buildings be reduced by Rs. 100".

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, குளித்தலை வட்டம் அய்யர்மலை உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் பணி தாமதம் ஆவதைச் சுட்டிக் காட்ட—

"நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,51,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில் உள்ள பொதுப்பணித் துறைப் பயணிகள் விடுதியைப் புதுப்பித்துக் கட்டுவதோடு அதற்கு நீர்வசதியை உடன் செய்ய வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,51,01,000-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, அரசுக் கட்டடங்கள் சரியானபடி மராமத்து செய்யப்படாதது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,51,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண்.38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும் இயந்திர சாதனங்களும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 38-பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,62,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 4,62,86,000 under Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100".

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 4,62,86,000 under Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100".

THIRU A. SUBRAMANIAM : Sir to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 4,62,86,000 under Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100".



THIRU B. VENKATASWAMI : Sir, to discuss the need to reduce the cost of establishment on all wings of the Public Works Department, I move the following cut motion :—

"That the allotment of Rs. 4,62,86,000 under Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100".

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சாலைப்பணி புரியும் மேஸ்திரிகளுக்கு வழங்கும் ஊதியத்தை உயர்த்த வேண்டிய அவசியம் பற்றி எடுத்துக்கூற—

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,62,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 39— சாலைகளும் பாலங்களும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,99,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 20,99,35,000 under Demand No. 39—Roads and Bridges be reduced by Rs. 100".

THIRU K. T. K. TANGAMANI : Sir, to discuss about the improper maintenance of roads in the Varshanadu area, Madurai district, I move the following cut motion :—

"That the allotment of Rs. 20,99,35,000 under Demand No. 39—Roads and Bridges be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the need to lay road and bridges from Anchatty to Kotaiyur and Anchatty to Hogenekal *via* Natrapalayam, I move the following cut motion :—

"That the allotment of Rs. 20,99,35,000 under Demand No. 39—Roads and Bridges be reduced by Rs. 100".

[1975 மார்ச் 14

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பஸ் போக்குவரத்துப் பாதைகள் அனைத்திற்கும் தார் போடுவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,99,35,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, தாராபுரம்—காங்கேயம் (கோவை மாவட்டம்) சாலையில் வட்டமலையில் இருந்து கொளுவாய் வரை உள்ள சாலையைத் தார் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூற—

"நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,99,35,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வந்தவாசி பேரூராட்சியின் மோட்டார் செல்லும் சாலைகளை நெடுஞ்சாலைத்துறையுடன் எடுத்துக்கொள்ள வேண்டுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைகளும்-பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,99,35,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. பி. கோபால் : தலைவர் அவர்களே. உத்தமபாளையம் தாலுகாவில் சாக்குலூத்துமெட்டு வழியாக கேரளம், தமிழ் நாடு ஆகிய இரண்டு மாநிலங்களை இணைக்கும் சாலை அமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 39—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 20,99,35,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(உ) நிதிக் கோரிக்கை எண். 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 94,83,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



1975 மார்ச் 14]

THIRU A. SUBRAMANIAM: Sir, to urge for the provision of protected water supply to all the villages including Harijan colonies in 1975-76, I move the following cut motion:—

"That the allotment of Rs. 94,83,000 under Demand No. 48—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply be reduced by Rs. 100".

THIRU J. JAMES: Sir, to discuss the necessity to implement the water supply scheme proposed for the Nagercoil Municipality to remove the water scarcity in the extended areas, I move the following cut motion:—

"That the allotment of Rs. 94,83,000 under Demand No. 48—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss the delay in the execution of the Veeranam Water Supply Scheme to Madras City, I movethe following cut motion:—

"That the allotment of Rs. 94,83,000 under Demand No. 48—Capital Outlay on Public Health, Sanitation and Water Supply be reduced by Rs. 100".

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் செயல்படுத்தப்படுவது காலதாமதமாகி வருவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 94,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, பேரூராட்சி, நகராட்சியில் உள்ள சுகாதார ஆய்வாளர்கள் கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு மாதத்தில் இவ்வளவு கேஸ்கள் மட்டுமே பரிசோதிக்கலாம் என்ற தடையை நீக்கி, எத்தனை கேஸ்கள் வேண்டுமானாலும் பரிசோதனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 94,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

1975 மார்ச்சு 14]

(ஐ) நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,25,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU N. DENNIS: Sir, to discuss policy, I move the following cut motion:—

"That the allotment of Rs. 17,25,79,000 under Demand No. 51—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

THIRU A. SUBRAMANIAM: Sir, to discuss policy, I move the following cut motion:—

"That the allotment of Rs. 17,25,79,000 under Demand No. 51—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100".

DR. H. V. HANDE: Sir, to discuss the need to streamline the channels in the Cauvery delta through Central Government Grants I move the following cut motion:—

"That the allotment of Rs. 17,25,79,200 under Demand No. 51—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100".

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, தென் மாநிலங்களில் உள்ள கிருஷ்ணா, கோதாவரி, காவேரி, பெண்ணை, வைகை நதிகளை ஒருங்கிணைத்து பாசனத் திட்டம் அமைக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 17,25,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, ஆத்தூர் தாலுகா திட்டங்கள் (மலையாறு இராம நாயக்கன் பாளையம், பைத்தூர் தீர்த்தேக்க திட்டம், எட்டி அணை, சேணல், கல்பனூர் திட்டம்) அமலாக்குவதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 17,25,79,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1975 மார்ச்சு 14]

(எ) நிதிக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித்துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித்துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,18,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,18,53,000 under Demand No. 52—Capital Outlay on Public Works—Buildings be reduced by Rs. 100."

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,18,53,000 under Demand No. 52—Capital Outlay on Public Works—Buildings be reduced by Rs. 100".

THIRU A. SUBRAMANIAM: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 9,18,53,000 under Damand No. 52—Capital Outlay on Public Works—Buildings be reduced by Rs. 100."

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மதுரை கோர்ட்டை ஒட்டி வழக்கறிஞர்களுக்கு அறைகள் கட்டுவதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 52—பொதுப்பணித்துறைக் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,18,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

(ஏ) நிதிக் கோரிக்கை எண். 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச்செலவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,21,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 4,21,37,000 under Demand No. 53—Capital Outlay on Roads and Bridges be reduced by Rs. 100."

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move:-

"That the allotment of Rs. 4,21,37,000 under Damand No. 53—Capital Outlay on Roads and Bridges be reduced by Rs. 100."

THIRU K. T. K. TANGAMANI: Sir, to dicuss the need to build a wider bridge in National Highways No. 7 near Thirumangalam I move:—

"That the allotment of Rs. 4,21,37,000 under Demand No. 53—Capital Outlay on Roads and Bridges be reduced by Rs. 100."

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சின் நகல்* மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிறது. அதை நான் படித்ததாக ஏற்று அவை குறிப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எ. சுப்பிரமணியம்:</u> சில வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழியப் படவில்லை.

<u>திரு. கே. ஏ. வகாப்:</u> என்னுடைய வெட்டுத் தீர்மானங்களும் சில முன்மொழியப்படவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன.

<u>திரு. கே. ஏ. வகாப்:</u> தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் இன்றையதினம் அவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுப்பணித் துறை தமிழகத்தைப் பொறுத்த வரையில் புதுமையான திட்டங்களைத் தீட்டி நல்ல முறையில் செயல்படுகிற துறைகளில் ஒன்றாக அமைந்திருப்பது நாம் எல்லாம் மகிழ்ச்சியடையக்கூடிய ஒன்றாகும். இன்றையதினம் மற்ற மாநிலங்களோடு தமிழகத்தின் பொதுப் பணித் துறையை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் நிச்சயமாக இதனுடைய பணியானது எல்லாத் துறைகளையும்போல் சிறப்பாக விளங்குகிறது.

* 568—581-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



சாலைகள் விஷயத்தில் எடுத்துக் கொண்டால் நம்முடைய மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே மற்ற மாநிலங்களை யெல்லாம் விட சிறப்பான சாலைகளை அமைத்திருக்கிறது என்பதை நான் வெளி மாநிலங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து வந்த நேரத்தில் நல்ல முறையில் காண முடிந்தது. அக்கரைக்கு இக்கரை பச்சை இக்கரைக்கு அக்கரை பச்சை என்று சொல்வார்கள். அந்த முறையிலே வெளிமாநிலங்களை விட நம் மாநிலத்தில் சாலைகள் நல்ல முறையில் இருக்கின்றன என்று நிச்சயமாகச் சொல்வேன்.

பொருளாதாரத்தில் சிறந்த மாநிலம் என்று சொல்லப்படுகின்ற மராட்டிய மாநிலத்தில் செல்கின்றபோது அந்தச் சாலைகள் எல்லாம் சீரடையாத நிலையில் இருக்கின்றன என்பதைப் பார்க்க முடிந்தது. மற்ற மாநிலங்களுக்கு மத்திய அரசு தேசியப் பெருவழிக்காகக் கொடுக்கப் பட்ட பணத்தை யெல்லாம் பயன்படுத்தாது வைத்திருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். சென்ற ஆண்டு, பாலங்களுக்காக ரூ. 12·56 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 1975-76-இல் 66·86 ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. பல ஆண்டுகளாக நல்ல பாலங்களை அமைத்துப் பொருளாதாரத்தை வளர்ச்சி செய்கின்ற விதத்தில் போக்குவரத்தை அதிகப்படுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் ரூரல் ரோட்ஸ் என்ற தலைப்பில் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகையை விட ரூ. 50 லட்சம் குறைவாக ஒதுக்கப்பட்டிருப்பது ஏன் என்று தெரியவில்லை. நமது நாட்டின் இதயங்களாக இருப்பது கிராமங்கள். எனவே அந்த கிராமங்களின் முன்னேற்றத்திற்கு அதிகமான நிதியை ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். கிராமங்களுக்கு குடி நீருக்கும், மற்ற எந்த விதமான வசதிகளுக்கும் அதிகத் தொகை ஒதுக்கிக் கொண்டு வருகின்ற நேரத்தில் எப்படி இந்தத் தலைப்பின்கீழ் நிதியைக் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைப் பரிசீலிக்க வேண்டும். கிராமங்களிலுள்ள அத்தனைக்கும் சாலைகள் ஏற்படுத்த வேண்டும். எப்படி, 1976-க்குள் நாட்டிலுள்ள கிராமங்கள் அத்தனைக்கும் குடிநீர் வழங்கப் பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறி இருக்கிறார்களோ, அதே போல சாலைக்கு ஒரு தீவிரத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். ஹேம்லட் என்று சொல்லப்படும் எந்த ஒரு சிறிய கிராமத்திற்கும் கூட சாலை வசதி செய்து தரப்படவில்லை என்ற நிலை இருக்கக் கூடாது. அந்த வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை)

தேசிய நெடுஞ்சாலைகளைச் சீராக்குவதற்கு இங்கே ரூ. 12 கோடிக்குத் திட்டம் வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் மத்திய அரசிடமிருந்து ரூ. 4 கோடி தான்கிடைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது உண்மையிலேயே மிகவும்வருந்தத் தக்க ஒன்று. 12 கோடிக்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கும்போது ரூ. 4 கோடி கிடைத்தால் அதை எப்படி பயன்படுத்த முடியும்? மற்றமாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தை செலவு செய்யாமல் வைத்திருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும் போது ரூ. 8 கோடி பற்றாக்குறை இருக்கிறது என்றால் அதை மத்திய அரசிடம் போராடிப் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்போதுதான் தேசிய நெடுஞ்சாலை சீரடைந்து மேன்மை மிகும் என்பதோடு பொருளாதாரமும் நல்ல முறையில் முன்னேற்றம் அடையக்கூடும் என்று கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நமது நீர் நிலைகள் போதுமான தாக இல்லை. காவிரி நீர் கிடைக்குமா, கிடைக்காதா என்ற நிலை இருக்கிறது. காவிரி நீர் கிடைக்காவிட்டால், தஞ்சை மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்ற ஒரு வறட்சி மாவட்டமாக மாறிவிடக்கூடும் என்ற அச்சம் இருக்கிறது. எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களும் பல முறை இந்த அபாயத்தை எடுத்துக் காட்டியிருக்கிறோம். முன்னால் இருந்த அறிஞர் எல்லாம் காவிரி-கங்கை இணைப்பைப் பற்றி கூறியிருக்கிறார்கள். ஆனால் அத் திட்டம் நடைமுறையில் இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் வெட்டுப் பிரேரணையில் இன்றையதினம் கொடுக்கபட்டிருப்பதுபோல, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை ஆகிய, தென் மாநிலங்களிலுள்ள நதிகளை எல்லாம் ஒருங்கிணைத்து ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். இன்றைய தினம் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம். அந்த முறையில் பார்க்கும்போது, ஆந்திரம், கர்நாடகம், கேரளா தமிழகம் போன்ற மாநிலங்களை இணைக்கின்ற இந்தத் திட்டத்தைப் பற்றி மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். கர்நாடகம், கேரளா, ஆகிய ஆட்சியாளர்களை அணுகி இந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மத்திய அரசோடு போராட வேண்டிய கட்டம் வந்திருக்கிறது. காவிரி நீர் வராத காரணத்தால் வீராணம் திட்டம் என்ன ஆகுமோ என்ற அச்சம் எற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். 4 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதாகச் சொன்னார்கள். குறைந்தபட்சம் 2 டி.எம். சி. வேண்டியிருக்கும் நிலையிலே இன்றைய தினம் வீராணம் ஏரியைப் பார்த்தால் அது ஒரு வறண்ட மைதானத்தைப் போல வெட்டவெளியாக இருக்கின்றது. ஆகவே, இப்படிப்பட்ட நிலை இருந்தால் நாம் செலவழிக்கின்ற ரூ. 40 கோடி என்ன ஆகும் என்பதைப் பற்றி சிந்தித்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே காவிரி நீரைப் பெறுவதற்கு நாம் முழுமூச்சோடு சர்வ கட்சிகளைச் சேர்த்து போராட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இன்றையதினம் மாநில சுயாட்சி பெற வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதற்குமுன்னாலேயே கூட காவிரி நீரைப் பெறுவதற்கு மத்திய அரசோடு போராட முன்வர வேண்டும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டு வருவது என்பது நல்ல திட்டம் என்பதை துவக்கத்திலே கூறியிருக்கிறேன். பாலாறு ஒரு காலத்திலே ஜீவ நதியாக இருந்தது. ஒரு காலத்தில், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நரசிம்ம பல்லவனுடைய ஆட்சி நடக்கின்ற நேரத்திலே பாலாறு ஒரு ஜீவ நதியாக இருந்தது என்பதைப் பார்க்கிறோம். ஆனால், கவனிப்பின்மை காரணத்தாலும், மைசூர் அந் நதியில் அணைகளை கட்டிய காரணத்தாலும் பாலாறு பாழாருக மாறியிருக்கிறது என்று பல முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

பாலாறு பாழாருக இருந்தபோதிலும் அந்த ஆற்றில் ஜீவ ஊற்றுக்கள் அடங்கியிருக்கின்றன. அந்த ஊற்று நீரை குடிநீருக்கும் விவசாயத்திற்கும் கூட பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். விவசாயத்திற்குப் பயன்படுத்துவது என்று சொல்லுகின்ற நேரத்தில் ஒன்றினை குறிப்பிட விரும்புகிறேன். பாலாற்றின் குறுக்கு 20 மைல்களுக்கிடையே ஒரு தடுப்பு அணையைக் கட்ட வேண்டும். அப்படிக் கட்டினால் மழை பெய்து அதிகமான தண்ணீர் ஆற்றில் ஓடும்போது அத்தனை தண்ணீரும் கடலில் போய் விழாமல் அதிகமான தண்ணீரை அருகிலுள்ள ஏரிகளுக்குச் செல்ல ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட திட்டத்தை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீருக்கும் அத் திட்டம் வசதியாக இருக்கும்.



பாலாற்றின் ஊற்றுக்களிலிருந்து தண்ணீரை எடுத்து சென்னைக்கு அனுப்பினால் வட ஆற்காட்டில், விவசாயத்திற்கு மட்டுமல்ல, குடிநீருக்குக் கூடதண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் இருக்கின்றது. எனவே, பாலாற்றின் குறுக்கே 20 மைல்களுக்கு ஒரு தடுப்புச் சுவர் கட்டினால் தண்ணீரை ஏரிகளில் நிரப்பி வைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அத் தண்ணீரை விவசாயத்திற்கும் குடிநீருக்கும் வட ஆற்காடு மக்கள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பாலாற்றின் குறுக்கே வாலாஜாவில் ஒரு அணை இருக்கிறது. அந்த அணை காரணமாக பல நூற்றுக்கணக்கான கிராமங்கள் நீர்பாசன வசதி பெறுகிறது. அதை இன்னும் சீர்படுத்தினால் அந்த அணையை உயரப்படுத்திக் கட்டினால் இன்னும் அதிகமான கிராமங்கள் பயன் பெறும். எனவே, இத் திட்டத்தையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றிலிருந்து எனது தொகுதியிலும் பொதுவாக வட ஆற்காடு மாவட்டத்திலும், கஸம் என்று சொல்லப்படுகின்ற கால்வாய்கள் எல்லாம் இருக்கின்றன. அந்த கஸம்கள் எல்லாம் தூரடைந்திருக்கின்றன. தற்போது, அந்தந்த கிராமத்தைச் சேர்ந்த மக்களே அந்தத் தூரை எடுத்து வருகிறார்கள். அந்த வேலையை, பொதுப்பணித் துறையின் மூலம் புல்டோஸர்களை வைத்து கசங்களிலிலுள்ள தூரை எடுக்க வேண்டும்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் குடிமல்லூர் என்ற இடத்திற்குச் செல்கின்ற வழியில் இருக்கின்ற சக்கரமல்லூர், குப்பேரி, வன்னேரிவாடி என்ற கிராமங்களுக்கு பாலாற்றுத் தண்ணீர் சென்று கொண்டிருந்தது. அந்தப் பகுதியிலுள்ள நல்லாப் பண்ணை சிறப்பான பண்ணையாக விளங்குகிறது. பாலாற்றுத் தண்ணீர்தான் நேராகச் செல்லுகின்றது. பொன்னை ஆற்றிலிருந்து அந்த ஊருக்குத் தண்ணீர் தரப்படுகின்ற பாசனக் கால்வாய்கள் படிவம்பாக்கம் என்ற இடத்தில் செல்கின்ற கால்வாய் ஆகியவைகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அதனால் வருகின்ற தண்ணீர் காவேரிப்பாக்கம் ஏரிக்குச் சென்று விடுகின்றது. அதனால் இந்த கிராமங்கள் எல்லாம் 10 ஆண்டுகளாகச் சரியாக தண்ணீர் பெற முடியாத நிலை இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு கூறியிருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாறு பேசின் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவருக்கு நன்றாகத் தெரியும். அத்திட்டம் ஒதுக்கி விடப்பட்டதா, நொறுக்கித் தள்ளிவிடப்பட்டதா என்று தெரியவில்லை. எனவே அத் திட்டத்தை பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

பாலாறு திட்டத்தில் எப்படி இருக்கிறது? பாலாறு பேசினில் இரண்டு மைல் தொலைவிலுள்ள கிராமத்திற்கு மின்சாரம் கொடுப்பது திட்டத்தில் சேரவில்லை. 20 மைல் தொலைவில் இருக்கும் கிராமங்களில் மின்சார இணைப்புக் கொடுப்பது தடை செய்யப்படுகிறது. இப்படி விநோதமான சில சூழ்நிலைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் நிர்வாகத் தவறுகளா? பாலாறு பேசின் ரிலீஸ் சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்றால், ஒரு விவசாயிக்கு ரூ. 200 முதல் ரூ. 500 வரை செலவாகிறது. எந்த வகையில் செலவாகிறது என்று நான் விளக்க வேண்டியது இல்லை. அதைப் பல முறை அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்த நிலையைப் போக்க அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சி நேரத்தில் குடிக்க நீர் இல்லாத நேரத்தில், இப்படிப்பட்ட நீர் ஊற்றை விவசாயத்திற்கும், குடிநீருக்கும் நாம் என் பயன்படுத்திக் கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

வாதத்திற்காகச் சொல்கிறேன், சென்னைக்கு மட்டும் குடிநீர் கொடுப்பதற்காக 1 டி.எம்.சி. தண்ணீர் 10,000 மில்லியன் காலன் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மக்கள் குடிப்பதற்கும், விவசாயத்திற்கும் அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பாலாறு பேசின் திட்டத்தை நீங்கள் நிச்சயமாக எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், இந்த வறட்சி நேரத்திலே, அந்த மாவட்டத்திற்கு, அங்கேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பேருதவியாக இருக்குமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு வேளை அதைச் செயல்படுத்துவதில் சில சங்கடங்கள் இருக்கலாம். அவற்றை அதிகாரிகள் உங்களுக்குச் சுட்டிக் காட்டலாம். அவைகளெல்லாம் எங்களுக்குத் தெரியாது. எங்களைப் பொறுத்தவரையில், மக்களுக்கு குடிக்க தண்ணீர் வேண்டும், விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய தண்ணீர் வேண்டும். அப்படிச் செய்து தர மறுத்தால் நாங்கள் ஒரு போராட்டம் நடத்தலாமா என்று யோசித்துக் கொண்டு இருக்கிறோம். பாலாறு பேசின் திட்டம் உடனடியாக எடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலேயே அதை அறிவித்தால், வடாற்காடு மாவட்ட மக்களுக்கு பால் வார்த்தது போல் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்ட அமைச்சர் எங்களைப் போராட்டத்தில் இறங்க விட மாட்டார்கள் என்று நிச்சயமாக நம்புகிறோம். அந்தத் திட்டத்தை செயல்படுத்தவில்லையென்றால், நீங்கள் கோடிக் கணக்கில் மூலதானம் போட்டு இருக்கும் குடிநீர் திட்டங்கள் அத்தனையும் பாழாகிவிடும் நிலை இருக்கிறது. ஆகவே அந்தப் பாலாறு பேசின் திட்டத்தை நிச்சயமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



பாலாறு, பொன்னியாறு இடையே மக்கள் போக்குவரத்திற்காகப் பல இடங்களில் சிறு, சிறு பாலங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், குமங்கலம், பாப்பினி போன்ற இடத்தில் உடனடியாகக் கட்டவேண்டும். அவைகள் மிகவும் முக்கியமான பாலங்கள். ஆகவே, அவற்றைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தின் இரண்டு கண்களில் ஒன்றான, செய்யாற்றின் முழுப்பலனையும் செய்யாறு மக்களே அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். செய்யாற்றின் குறுக்கே தண்டரையில் ஒரு அணை கட்டப்பட்டு இருக்கிறது. அந்த ஆற்றின் தண்ணீரை வந்தவாசி போன்ற பின்தங்கிய பகுதிகளுக்கும் பயன்படும் வகையில் செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரணிக்கும், வந்தவாசிக்கும் இடையே செய்யாற்றின் குறுக்கே ஒரு பாலம் இருக்கிறது. இது 1850ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அதற்கு எந்தவிதமான பராமரிப்பும் இல்லை. பழுது பார்ப்பதும் இல்லை. அந்தக் காலத்தில் அது வண்டிகள் போவதற்குகாக் கட்டப்பட்டது. இன்று லாரிகள் அந்தப் பாலத்தையே இடித்துக் கொண்டு போகின்றன. அது மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தை விரிவுபடுத்த வேண்டும், அப்படியில்லை யென்றால்—வேறு கட்ட முடிந்தால், கட்டுங்கள், அப்படியில்லையென்றால், அதை அகலப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

அந்த அணைக்கட்டிலிருந்து வந்தவாசி பகுதிக்குத் தண்ணீர் கொண்டு வந்து தரவேண்டுமென்பது மட்டுமல்ல, அந்த அணைக்கட்டில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிற நேரத்தில், 30—40 சிஸ்டம் டாங்குகளுக்கு தண்ணீர் வருகிறது. அப்படித் தண்ணீர் வருகிற கால்வாய் தற்போது தூர் இருக்கிறது. இந்த வறட்சி நேரத்தில் அதை ஒரு பெரிய பணியாக எடுத்து, அந்தக் கால்வாயை சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுகநதி என்ற உபநதி வந்தவாசி தாலுக்காவில் செல்கிறது. இந்த நதி வந்தவாசி பகுதியில் முக்கியமான நதி. அதற்குத் தக்கதொரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நீர்ப்பாசன மாநாட்டில் சொல்லியிருக்கிறேன். சுகநதியில் ஒரு அணை கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நதியின் குறுக்கே ஒரு பாலம் இருக்கிறது. அது மிகவும் குறுகலாக இருக்கிறது. அதையும் பெரிதாக்கித் தரவேண்மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்த சுகநதி பற்றி நல்ல முறையில் ஆராய்ச்சி செய்தால், நல்ல முறையில் பல ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து தர முடியும்.

தற்போது சுகநதி நீர் எல்லாம் மதுராந்தகம் ஏரிக்குச் சென்று விடுகிறது. அப்படி மதுராந்தகம் ஏரிக்குச் செல்வதற்கு மருதாத்தான் என்று ஒரு கால்வாய் இருந்தது என்றும், 20 ஆண்டுகளுக்கு முன்பு அந்த வழியாகத்தான் தண்ணீர் சென்றது என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த ஏரிக்குச் செல்வதற்கு நேர் வழி இல்லாமல் செய்கிற வகையில், அந்த நதியின் குறுக்கே ஒரு சிறு தடுப்புச் சுவர் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நீர்ப்பாசன வசதியில்லாமல் விருதூர் என்ற பகுதியில் 200—300 விவசாயிகள் இருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். அது குறித்து ஆராய்வதற்கு இன்வெஸ்டிகேஷன் விரிவுக்கு ஆணைபிறப்பித்து உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்க உறுதுணை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, வறட்சிப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் சில தவறுகளையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அமைச்சர் அவர்களே நேரில் சென்று பார்வையிட்டு, ஆங்காங்கு ஏற்படும் தவறுகளைச் சரி செய்து வருகிறார்கள். அப்படி இருந்தபோதிலும் சில இடங்களில் தவறு ஏற்படுகிறது. இன்றையதினம் காண்டிராக்ட் முறை இருக்கிறது. இந்த காண்டிராக்ட் முறை எப்படியிருக்கிறது என்றால், ஒரு யூனியனுக்கு ஒரு குறிப்பிட்ட 4-5 காண்டிராக்டர்கள் தான் இருக்கிறார்கள். அவரிடத்தில்தான் அந்த வேலையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். சில நேரங்களில் 5—6—10 காண்டிராக்ட் கூட கொடுக்கப்படுகிறது. அந்த முறையைச் சீர்செய்யவேண்டும்.

உதாரணத்திற்காகச் சொல்ல வேண்டுமென்றால், கிராமங்களில் கிணறு வெட்டுதல், மற்றமற்ற பணிகள், போன்றவற்றிற்கு ரூ. 5,000 அளவில் மதிப்பீடு போட்டு காரியங்கள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட வேலைகளை காண்டிராக்டரிடம் கொடுக்காமல் அந்த ஊரிலுள்ள பொதுமக்களிடம் விட்டு, நிறைவேற்றினால் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்குக் கூலி கிடைக்கும், அதே நேரத்தில் சில குறைபாடுகளையும் தவிர்க்கலாம். அதாவது, 5 ரூபாய் கூலி கேட்கும் இடத்தில் ரூபாய் 10 கூட கூலி கேட்கிறார்கள். இதைத் தவிர்க்கலாம். நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பி.டபிள்யூ.டி.யில் ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு ஏரியில் வேலை செய்தார்கள். இப்போது வறட்சி நிவாரணத் திட்டத்தின் அடிப்படையில், அதே ஏரியில் வெட்டிய பழைய பள்ளத்தையே மறுபடியும் வெட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அங்கேயே ரூரல் ரோடு போடுவதும் நடைபெறுகிறது. இப்படி ஒரே இடத்தில் மூன்று வேலைகள் நடக்கின்றன. நான் தனியாக அது குறித்து விவரங்கள் தருகிறேன்.

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் வழக்கமாகவே உறுப்பினர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று உட்கார்ந்து கொண்டு இருந்தேன். எந்த இடத்தில் அந்தத் தவறு நடந்து இருக்கிறது என்று அங்கத்தினர் எழுதிக் கொடுப்பார்களேயானால் கடுமையாக நான் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன் தயது செய்து அங்கத்தினர் அது குறித்து எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : நிச்சயமாக நான் அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக்கொடுக்கிறேன். தவறு எங்கு நடந்தாலும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வதற்கு அதிகாரிகளுக்கு மேலே இருந்து, அமைச்சர்களிடமிருந்து உத்தரவு செல்ல வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



இன்று வறட்சிப் பணிக்காக நாம் ஒதுக்குகிற பணம் பயன்படுத்தமுடியாமல் இருக்கிறது. வறட்சி நேரத்தில் ஏரியில் கிணறுகள் எடுப்பதால் வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வெட்டி எடுக்க சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு 30 சத விகிதம் அதிகமாகக் கூலி கொடுத்தாலும் கஷ்டம் இருக்கிறது. சில நேரங்களில் வேலை தாமதமாக ஆகிறது. கூலி கொடுத்தாலும் வேலைக்கு ஆள் கிடைப்பது இல்லை. அதனால் கொடுக்கக்கூடிய பணம் பூராவும் உபயோகிக்க முடியாமல் போகிறது. இது குறித்து ஆராய்ச்சி செய்ய வேண்டும். கொஞ்சம் பெரிய திட்டங்களாக எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக, ஆரணியிலிருந்து, செய்யாறு வழியாகச் செல்லும் கால்வாயை எடுத்துக் கொண்டால், 40 ஏரிகள் பயன்பெறும். அந்தக் கால்வாயை தூர் எடுக்கும் காரியத்தைச் செய்தால், மழை பெய்து தண்ணீர் வருகிற நேரத்தில் அந்த மாவட்டத்திலுள்ள பல ஏரிகள் பயன் பெறும். அந்தந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கும் பயன்பெறுவார்கள். அவர்களுக்கும் வேலை கிடைக்கும்.

தற்போது கிராமத்திற்குப் புதிய ரோடுகள் போடுகிறார்கள். பழைய ரோடுகளைச் சரிசெய்வது இல்லை என்று எடுத்துள்ள முடிவு மிகமிக வரவேற்கத் தக்கதொன்றாகும். புதிய ரோடுகள் போடவேண்டும், கிணறுகள் வெட்டவேண்டும், ஏரிகளைத் தூர் எடுக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்தில், அதிலே ஏற்படுகிற சில குறைபாடுகளையும் போக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையில் வேலை செய்கின்ற காண்டிராக்டர்கள் ஒரு குறையைச் சொல்கிறார்கள். வேலையைச் செய்தாலும் பணம் சீக்கிரமாக கிடைக்கவில்லை என்று. என் தொகுதியில் இருப்பதைச் சொல்லுகிறேன். வன்னிமேடு பூண்டிக் கால்வாய் சம்பந்தமாக $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன் டெண்டர் விடப்பட்டது. பிறகு பணம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். 3 ஆண்டுகளாக அந்த வேலை பெண்டிங்கில் இருக்கிறது. வேலை முடிவு பெறவில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. சென்ற மாதத்தில் பொதுப் பணித்துறையில் ஏரி வேலைகள் செய்கின்ற நேரத்தில் எங்களுக்குச் சம்பளத்திற்கு பணமில்லை. உங்களுக்கு பணம் எப்படிக் கொடுப்பது என்று சூழ்நிலை இருந்தது. வேலை செய்கின்ற காண்டிராக்டர்களை கண்காணித்து வேலை வாங்க வேண்டும். அதே நேரத்தில் கொடுக்கின்ற பணம் சரியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

நகர் ஓரத்தில் பெருவழிச் சாலையில் என்க்ரோச்மெண்ட் எடுக்கிறார்கள் என்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். சி.எம்.சி.-யைப் பற்றிச் சொல்லும்போது சொன்னார்கள். $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்னால் எங்களுக்கு மாவட்டத்தில் பெரிய கட்டிடங்கள் இடிபட்டிருக்கின்றன. பெரியவர்கள், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், சரி, அவர்கள் கட்டிடங்கள் இடிக்கப்பட்டிருக்கிறது. தாம்பரத்தில் கூடப் பார்க்கலாம். சாலை ஓரங்களில் கடைகள் இருந்தது. இப்பொழுது இல்லாமல் போய்விட்டது. அரசாங்கம் நல்ல பணி செய்யும்போது, அது சி.எம்.சி. ஆஸ்பத்திரி என்று பார்க்கும்போது அது பிரச்சினையாக வந்து விட்டது. பிரச்சினையாக வந்த

காரணத்தினுல் கட்டிடத்தை இடிக்கச் சொன்ஞர்கள் என்று வரும் என்று நினைக்கின்றேன். அந்த சூழ்நிலையில்லாமல், பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு இருந்தால், இடிக்கச் சொல்லுகிறோம். அதே நேரத்தில் அப்படிப்பட்ட கட்டிடங்களை இடிக்கக் கூடாது என்று சொன்ஞல் அது சரியாக அமையாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, என்னுடைய நண்பர் வாணியம்பாடி பகுதியில் ஜாபராபாத் அணைத் திட்டத்தை கட்டவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஆலங்காயம் பெரிய ஏரி பாசனக் கால்வாய் திட்டத்தை செயல்படுத்துவதற்கு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நகராட்சியில், பேரூராட்சியில் தீர்மானம் போட்டிருக்கிறோம். 2 வருடமாகிறது. பேரூராட்சி நகராட்சி சாலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுவாக பொதுப்பணித்துறையின் புதுமைமையான திட்டங்களை வரவேற்று அமருகின்றேன்.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரால கொண்டு வரப்பட்ட மான்யக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆண்டு தமிழகத்திலே மழை பொய்த்து விட்ட காரணத்தினுல் அதை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, விளை நிலங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தாம்பிரவர்ணி பாசனப் பகுதிகளில், மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளால் மிகவும் திறமையாகச் சமாளிக்கப்பட்டது என்று நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பாபநாசம் அணையில் தண்ணீர் 50 அடிக்குக் கீழாக இருந்தது. மணிமுத்தார் அணையில் 50 அடிக்குக் கீழாக தண்ணீர் இருந்தது. இருந்தபோதிலும் குறிப்பிட்ட நேரங்களில் தண்ணீரை வயல்களுக்குக் கொடுத்து, அந்தப் பகுதியிலே இன்றைக்கு கடந்த ஆண்டை விட அதிகமாக விளைச்சல் ஏற்பட்டு இருக்கிறதென்ருல் அதற்குக் காரணம் பொறியியல் வல்லுநர்கள் என்று சொல்லாமல் இருக்க முடியாது.

அதைப் போல தூத்துக்குடி தொழிலாளர் பகுதிகளுக்கு 20 என்.டி.டி. ஸ்கீம் புதிய திட்டத்தை உருவாக்கி, அருமங்களம் குளத்திலிருந்து தண்ணீர் போக வேண்டுமென்று சொல்லப்படுகிறது. 410 லட்சம் செலவழித்திருக்கிருர்கள். திட்டம் சீக்கிரமாக முடியக் கூடிய நிலையில் இருக்கிறது. அருமங்களம் குளத்திலிருந்து தண்ணீர் எடுக்கக் கூடாது என்று விவசாயிகள் எதிர்த்து வந்தார்கள். இதனுல் விவசாயிகளோடு அரசாங்கம் பேசி, பேய்க்குளத்திலிருந்து எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து, பேய்க் குளத்திலிருந்து தண்ணீர் போகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

அந்த பேய்க் குளத்திற்கு பின்னுல் 2 குளங்கள் இருக்கின்றன. அடுத்தாற் போல் குட்டக் குளம், அதற்குப் பின்னுல் கோரமங்களம் குளம் விவசாயிகளுக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. 20 அடி தண்ணீர் ஒரு நாளைக்கு தொழிற்சாலை பகுதிக்குச் சென்ருல், தற்சமயம் அந்தத் தண்ணீர் தேவையில்லை என்ருலும், நாளா வட்டத்தில் அது தேவைப்படும்.. இவ்வளவு தண்ணீரைக் கொண்டு வருகின்ற நேரத்தில் அந்தப் பேய்



குளத்திலிருந்து கடைசிக் குளம் கோரமங்களம் குளத்திற்கு தண்ணீர் வருமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஏனென்ருல் அந்த 3 குளங்களுக்கும் மத்தியில் எந்த வித வாய்க்காலும் கிடையாது. ஒரு குளம் நிறைந்து மறு குளத்திற்குத் தண்ணீர் வர வேண்டும். அந்த நிலைமை இருப்பதால் கடைசி குளத்தின் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் பயன் படுகிருர்கள். அதற்கு நான் நீர்ப்பாசன மாநாட்டில் கூட என் யோசனையைச் சொன்னேன். இன்றைக்கு அதிகாரிகளும் அந்த யோசனையைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிருர்கள். பேய்க் குளத்திலிருந்து கடைசியில் இருக்கின்ற கோரமங்களம் குளம் வரையில் ஒரு இன்னர் சேனல் வெட்டி, அதை லைன் படுத்தினுல், எப்பொழுது தண்ணீர் தேவைப்படுகிறதோ, சிக்கனமாக தண்ணீரை விட்டு, குளம் பூராவும் நிரப்பாமல் கால்வாய் வழியாகத் தண்ணீர் கொண்டு போகலாம். அந்த முயற்சிக்கு அரசு ஆதரவு கொடுக்கவேண்டும். அந்தத் திட்டத்தை உருவாக்கி சீக்கிரமாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த திட்டத்தின் பயனுக அந்தப் பகுதி விவசாயிகள் நல்ல பயனை அடைவார்கள். இதற்குரிய செலவைக் கூட ஒரளவுக்கு அந்த விவசாயிகள் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிருர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த 3 குளங்களைச் சேர்ந்த நிலங்களில் பெரும் பகுதி இன்றைக்கு வாழை சாகுபடி செய்கிருர்கள். எங்கள் பகுதியிலிருந்து வாழை, வாழைப்பழம் முதலியவற்றை கேரளம், மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிருர்கள். ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் வரை டர்ன் ஓவர் கிடைக்கிறது. நல்ல செழிப்பான முறையில் அந்தப் பயிரை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு, நாம் ஓரளவுக்கு இந்த லைனிங் செய்து வாய்க்கால் வழியாகத் தண்ணீர் கொடுத்தால் பயன் உள்ளதாகயிருக்கும்.

பெரியார் சிஸ்டத்தை சிறப்பு திட்டமாக உருவாக்கியிருக்கிருர்கள். 16·15 கோடி ரூபாயில். சிக்கனமாகத் தண்ணீரை செலவழித்து, வயல்களுக்குத் தண்ணீரை பாய்ச்சக் கூடிய திட்டத்தை நாம் இனிமேல் உருவாக்க வேண்டும்.

ரோடுகளை பொறுத்த வரையில் தூத்துக்குடி—மதுரை ரோடு இன்றைக்கு துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஸ்பிக் நிறுவனத்தார் தங்கள் உற்பத்தியை இந்த மாதத்தில் கொண்டு வந்து விடுவார்கள். நாள் ஒன்றுக்கு 500 லாரிகள் வரை அதிகமாக ஸ்பிக் நிறுவனத்தில் உற்பத்தியாகக் கூடிய உரத்தை அடுத்த இடத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று இருப்பதால், அவசர அவசியமாக இந்த ரோடு வேலையை அரசு எடுத்துக் கொண்டு, வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கோஸ்டல் ரோடு பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. அது முக்கியமானது. கடற்கரை சாலை மிக முக்கியமானது. மேற்குக் கடற்கரையில் அப்படிப்பட்ட சாலை இருக்கிறது. கிழக்கு கடற்கரையில் ரோடு வசதி ஏற்படாமல் இருக்கிறது. இந்த சாலையை அபிவிருத்தி செய்தால் அதன் பயனுக சென்னை—கன்யாகுமரி வரையில் உள்ள சின்ன கிராமங்களில் உள்ளவர்கள் பயன்

யடைவார்கள். இன்றைக்கு இராமேச்வரத்திலிருந்து ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் கன்யாகுமரிக்குச் செல்லுகிறார்கள். அந்த ரோடு சரியாக இல்லை யென்றாலும், இன்றைக்கு போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. அந்த ரோடை முதலாவதாக எடுத்துக் கொண்டு, அதற்குப் பணம் ஒதுக்கி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாம்பன் பாலத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ, அதைப் போல கடல் ஓரச் சாலைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தூத்துக்குடி துறைமுகத் திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. ஒரு பகுதியை கட்டி முடித்து விட்டார்கள். 10, 15 நாளைக்குள் மற்றொன்றையும் கட்டி முடித்து விடுவார்கள். கஸ்டம்ஸ் பில்டிங் இதர, பில்டிங் வேலைகள் எல்லாம் துரிதமாக நடந்தேறி வருகின்றன. தலைமைப் பொறியாளர் அவர்கள், பொறியாளர்களும், காண்ட்ராக்டர்களும் எவ்வளவு குறைவாக வேலை செய்தாலும் அவர்களிடம் திறமையாக வேலை வாங்கி, இந்தத் துறைமுகத் திட்டம் முடியும் தருவாயில் இருக்கிறது. சமீபத்தில் கோல் ஏற்றிக் கொண்டு ஒரு கப்பல் வருவதாக இருக்கிறது.

இந்தத் துறைமுகத்தை உருவாக்கிய தமிழக அரசு சேதுசமுத்திரத் திட்டத்தையும் மறந்துவிடக் கூடாது. மத்திய அரசை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி, சேதுசமுத்திரத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டும். சேது சமுத்திரத் திட்டம் வந்தால்தான் தென் பிராந்தியத்தில் தூத்துக்குடி துறைமுகம் முக்கியம் வாய்ந்ததாக இருக்கும்.

சென்னையிலிருந்து கப்பல்கள் தூத்துக்குடிக்கு வரவேண்டுமென்றால் இன்றைக்கு இலங்கையைச் சுற்றிக்கொண்டுதான் வரவேண்டியிருக்கிறது. அதனால் 765 மைல் அதிகமாக சுற்றிவர வேண்டியிருக்கிறது. அதைப் போல தூத்துக்குடியிலிருந்து சென்னை, விசாகபட்டினம், கல்கத்தா போன்ற துறைமுகங்களுக்குப் போக வேண்டுமென்றாலும் இலங்கையைச் சுற்றிக் கொண்டுதான் போகவேண்டும். சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் 335 மைல் அளவில் சென்றுவிடலாம்;கிட்டத்தட்ட 430 மைல் குறையும். இந்த 430 மைல் குறையுமானால் இன்றைக்கு கொழும்புக்கு வருகிற கப்பல்கள் எல்லாம் தூத்துக்குடியில் வந்து, வேண்டிய அளவு தண்ணீர், உணவுப் பொருட்களை எடுத்துச்செல்ல வசதியாக இருக்கும். சர்வதேச கப்பல்கள் எல்லாம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்துபோக வசதியாக இருக்கும். அப்படி வந்துபோகிறபோது தென் பகுதியில் நல்ல வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு இருக்கும் என்பதைச் சொல்லி, சேதுசமுத்திரத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மைனர் போர்ட்டை பொறுத்தவரையில் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 260·75 இலட்சம் ரூபாய் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே தூத்துக்குடி பக்கத்திலே உள்ள வேப்பலோடை சிறு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.. வேப்பலோடை சிறு துறைமுகத்தைச் சுற்றி இன்றைக்குப் பல பெரிய உப்பளங்கள் இருக்கின்றன. அதோடு தூத்துக்குடி துறைமுகத்தைச் சுற்றியும் பல உப்பளங்களை உருவாக்கி வருகிறார்கள். வேப்ப



லோடை சிறு துறைமுகத்தைச் சுற்றியிருக்கிற உப்பளங்களையும் அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வேப்பலோடைசிறு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது மிகவும் முக்கியமானது என்ற கருத்தைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்பு குபொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகள் மீது எங்களுடைய கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத்தீர்மானங்களை வலியுறுத்தும் முகத்தானும், அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் முகத்தானும் என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு என்னுடைய முதல் பேச்சிலேயே என்னுடைய தொகுதிக்கு, என்னுடைய தொகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையான குடகனாறு திட்டத்தை நிறைவேற்றித்தருமாறு எடுத்துச் சொல்லியிருக்கிறேன்; கேள்விகள் கேட்டிருக்கிறேன்; கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரான பிறகு, மாண்புமிகு கோவிந்தசாமி அவர்கள் வேளாண்மை அமைச்சராக இருந்தபோது திருச்சி தேவர் மன்றத்தில் நடைபெற்ற நீர்ப்பாசன மாநாட்டில் குடகனாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியம் பற்றித் தெளிவாக வற்புறுத்திப் பேசியிருக்கிறேன்.

மரியாதைக்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களையும் இன்னும் அமைச்சரவையிலே இருந்த பல அமைச்சர்களையும் என்னுடைய தொகுதியில் உள்ள குடகனாறு திட்டப் பகுதிக்கு அழைத்துச் சென்று நிலைமைகளை நேரில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட அளவிலே இருக்கிற நிர்வாகப் பொறியாளர்கள் ஆகியோரை குடகனாறு பகுதிக்கும் என்னுடைய தொகுதியில் இருக்கிற பல வறண்ட பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று அங்கே இருக்கிற நிலைமைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். பொறியாளர்கள் அங்கே போதுமான தண்ணீர் இல்லை என்று சொன்ன நேரத்திலும், பல புள்ளி விபரங்களைக் காட்டிய நேரத்திலும் அதற்கு உரிய ஆதாரங்களை எடுத்துச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறேன். மரியாதைக்குரிய நம்முடைய முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொறியாளர்கள் அடங்கிய நீர்ப்பாசன மாநாட்டை கூட்டிய நேரத்தில் குடகனாறு திட்டம் என்னுடைய தொகுதிக்கு எவ்வளவு முக்கியமானது வறண்ட பகுதிக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை பல ஆதாரங்களோடு சுட்டிக்காட்டி எடுத்துக் கூறி இருக்கிறேன். அதன் பலனாக குடகனாறு திட்டத்தை மறு பரிசீலனை செய்து நல்ல எண்ணத்தோடு இந்த அரசாங்கம் நிறைவேற்றி யிருக்கிறது. அதற்கு உள்ளபடியே என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், வெள்ளியணைப் பகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த குடகனாறு திட்டத்திற்கு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. எங்கே நாட்டப்பட்டது என்றால், என்னுடைய தொகுதியில் ஆறு ஓடுகிற இடத்திற்கும் அடிக்கல்நாட்டப்பட்ட இடத்திற்கும் இடையேஉள்ள தூரம் 48 கிலோ மீட்டர். அணை கட்ட இருக்கிற இடம் ஆற்றுப் பக்கத்தில். அடிக்கல் நாட்டப்பட்ட இடம் கடைக்கோடிப் பகுதியில். இங்கே என்ன பொருகள் இருக்கிறது என்றால் முதலமைச்சரவர்கள் தனக்கு யார் யார் வேண்டாதவர்களோ அவர்களுக்கு பொதுமக்கள் மத்தியில் இருக்கிற நல்ல பெயரை மாற்றவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் தான் இங்கே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். போடப்பட்ட அடிக்கல் மறு நாளே தூக்கிக்கொண்டு போகப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கிராமப் புறங்களிலே பார்க்கலாம். சிறு குழந்தைகள் சேர்ந்து விளையாடுவார்கள். அப்போது தங்களிடம் இருக்கிற தின்பண்டங்களை—மிட்டாய் அல்லது வேறு பொருள்கள்—பகிர்ந்து உண்பார்கள். அவர்களுக்குள் சண்டை வந்துவிட்டால் நான் கொடுத்த மிட்டாயைத் தா என்று கேட்பார்கள். அதைப்போல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அல்லது தோழமைக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அந்தந்தத் தொகுதியில் நடக்கிற அரசாங்க நிகழ்ச்சிகளுக்கு அழைக்கிறார்கள்; அழைப்பிதழ் கொடுக்கிறார்கள். அழைப்பிதழில் பெயரைப் போடுகிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்பதால் குடகனாறு திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவுக்கு என்னை அழைக்கவில்லை. அழைப்பிதழில் என்னுடைய பெயரைப் போடவில்லை. எனக்கு அழைப்பிதழும் அனுப்பவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

யார் எந்தக் கட்சியில் இருந்தாலும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அழைத்து, அங்கே அவருக்கு உரிய மரியாதையை தர இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. தரவேண்டிய பொறுப்பும் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நிலைமை தொடர்ந்து நடைபெறாமல் இருக்க இந்த அரசு கவனம் செலுத்தவேண்டும் என வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மஞ்சநாயக்கன்பட்டியில் கருவேலன் குளம் இருக்கிறது. அந்தக் குளத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று 1969-ஆம் ஆண்டு முதல் இந்த மன்றத்திலும் பொறியாளர்களிடமும் அமைச்சர்களிடமும் வற்புறுத்தி வந்திருக்கிறேன். பொறியாளர்கள் நேரில் பார்வையிட்டார்கள். மதிப்பீடு தயாரித்தார்கள், தயாரித்த மதிப்பீடு அப்படியே இருக்கிறது. அங்கே தனி நபர் ஒருவர் பல ஆண்டுகாலமாக ஆக்கிரமிப்பு செய்து அதனுடைய பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அவரை வெளியேற்றுவதற்கு உயர்நீதிமன்றம் வரை



போய் உயர்நீதி மன்றத்தில் வெளியேற்ற உத்தரவும் போட்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் தாசில்தார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. சப்-கலெக்டர் நடவடிக்கை எடுக்கவில்லை; மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்கே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த முத்துரங்கம்பட்டி மக்களுக்கும் அங்குள்ள கால்நடைகளுக்கும் இது பெரிதும் பயன்படுவதாக இருப்பதால் உடனடியாக ஆக்கிரமிப்பு செய்திருப்பவரை வெளியேற்றி அந்தக் குளத்தைப் புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

இதேபோல என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கொசூர் பகுதியில் ஐயன்குளம் இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு பெய்த பெருமழையின் காரணமாக அந்தக் குளத்தின் கரைகள் எல்லாம் உடைபட்டுக் கிடக்கின்றன. அந்தக் குளத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று நான் சட்டமன்ற அங்கத்தினராக ஆன பிறகு இந்த மன்றத்திலும், வெளியிலும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு பொறியாளர்கள் வந்து அந்தக் குளத்தைப் பார்வையிட்டார்கள். மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன? நான் அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்தவன் என்ற ஒரே காரணத்திற்காக இதுவரை அந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை. நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அண்ணா தி.மு.க.வின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல முசிறி வட்டத்தில் அப்பநல்லூர் என்ற ஊர்க் குளத்தை செப்பனிட ஏறத்தாழ $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் இரண்டாண்டுகளுக்கு முன்பு ஒதுக்கியும், இதுவரை அந்தப் பணியும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதையும் துரிதப்படுத்தி, நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த அரசாங்கத்தை விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலைக்கும், முசிறிக்கும் இடையே காவேரிப் பாலம் அமைக்கின்ற பணி உள்ளபடியே நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்த ஒன்று. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு இந்தச் சட்டமன்றத்தில் நான் அதற்காகப் பலமுறை வாதாடியிருக்கிறேன். பலமுறை அதைப்பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறேன். என்னுடைய ஊர் காவேரியின் மறுகரையில் இருக்கிற காரணத்தினால்-பொதுப்பணித்துறை அமைச்சரிடத்திலும் வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். குளித்தலை-முசிறியை இணைப்பதற்கும் வியாபாரத்தை பெருக்கவும் திண்டுக்கல்லில் இருந்து சென்னைக்கு திருச்சியைச் சுற்றிச் செல்லாமல் இதன்வழியே குறுக்கே சென்றுவிடுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தினாலும் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வந்தது. அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் ஆரம்பத்தில் எவ்வளவு வேகமாக அந்த வேலை நடைபெற்றதோ அந்த அளவுக்குத் தொடர்ந்து நடைபெறவில்லை. இடையில் மாபெரும் தொய்வு ஏற்பட்டது. தற்போது வேலையே நடைபெறாத சூழ்நிலை ஏற்

பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை இந்த அரசாங்கம் அறிவித்து, அந்த வேலை துரிதமாக நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குளித்தலைக்குப் பக்கத்தில் உள்ள ஐயர்மலை உயர்நிலைப்பள்ளி 1956 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அந்தப் பள்ளிக்கூடத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக 1966 ஆம் ஆண்டிலே அந்தப் பகுதி மக்கள் 10 ஏக்கரா நிலத்தை அரசாங்கத்திற்கு எழுதிக் கொடுத்தார்கள். எழுதிக் கொடுத்த பிறகு அரசாங்கம் குறித்த விதிமுறைப்படி 10 ஆயிரம் ரூபாயை அந்தப் பள்ளிக் கட்டிடத்திற்காக அரசுக்கு 1967-ஆம் ஆண்டே செலுத்திவிட்டார்கள். பிறகு பள்ளி கட்டிட இணைப்புத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் நிதியாக 2,500 ரூபாயும், ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக 10 ஆயிரம் ரூபாயும், 14—7—1971இல், திருச்சி மாவட்ட கல்வி முதன்மை அதிகாரியால் 26 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் ஏறக்குறைய 48,500 ரூபாய் பொதுமக்கள் பங்குத் தொகை, கல்வித் துறையின் பங்குத் தொகை செலுத்தியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 12—2—72இல் கல்வி அமைச்சர் நாவலர் வந்து அந்தப் பள்ளிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அடிக்கல் நாட்டிய பிறகும், முதலமைச்சருக்கு மனுக் கொடுத்த பிறகும் அந்தப் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லை. இன்றைக்கு அந்தப் பள்ளிக்கூடம் ஐயர்மலை கோவிலுக்குச் சொந்தமான மண்டபத்திலும், சத்திரத்திலும், மரத்தடியிலும்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுப்பணித்துறையில் ஏன இந்த வேலை இவ்வளவு மெத்தனமாக நடைபெறுகிறது? நான் உள்ளபடியே இதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன். உடனடியாக இந்தப் பள்ளிக்கட்டிடத்தைக் கட்டி முடித்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே நேரத்தில் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரால் குடுமியா மலையில் ஒரு விவசாயப் பண்ணை துவங்கப்பட்டது. அண்ணா அவர்கள் உயிரோடு இருந்தபோது துவக்கப்பட்ட பண்ணை -அதை மேலும் பலவகையிலும் அபிவிருத்தி செய்வதை அண்ணா தி. மு. க. வின் சார்பில் வரவேற்கிறோம். அங்கே ஏற்படுகிற வேளாண்மைப் பெருக்கம் சுற்று வட்டார மக்களுக்கு வேலைவாய்ப்பு ஆகியவை நாம் தீட்டுகிற திட்டங்களின் பயனாக இருக்க வேண்டும். அந்தக் கருத்தில் அங்கே பல முனைப்புத் திட்டங்கள் பலவற்றை வகுத்து செயலாற்ற வேண்டுமென்பதில் எங்களுக்கு கருத்து வேற்றுமை இல்லை.

அதே நேரத்தில் இன்னொன்றை எண்ணும்போது நான் உள்ளபடியே மெத்த வருத்தப்படுகிறேன். இந்தப் பண்ணையில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இதற்கு கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் எனப் பெயரிட்டு கட்டிடம் கட்டுவதற்கு



இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், 14 இலட்சம் செலவில் விடுதி அறிவியல்சாலை, மாநாடு நடத்தப்படும் கூடம், கண்காட்சி மண்டபம் நூல் நிலையம் ஆகியவை அமைக்க திட்டமிட்டிருக்கிறார்கள். இன்னும் 36 இலட்சம் ரூபாய் செலவில் ஆராய்ச்சிப் பண்ணையை அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அண்ணாவின் பெயரால் ஒரு பண்ணை அங்கே இருக்கும்போது இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சரின் பெயரால் அங்கே ஒரு ஆராய்ச்சிப் பண்ணையைத் துவக்க வேண்டிய அவசியம் என்ன என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோள். ஏற்கனவே ஒரு வீட்டைக் கட்டியிருக்கிறோம். அதற்கு அண்ணா பெயரை வைத்திருக்கிறோம். அதே வீட்டில் ஒரு படுக்கை அறைக்கு இன்னொருவர் பெயரைச் சூட்டுவது நல்லதா? நியாயமா? நமது முதல்வர் அவர்கள் இப்படித்தான் அண்ணா பெயர் உள்ள இடங்களில் எல்லாம் தன்னுடைய பெயரை இணைத்துக் கொள்ள திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள். அரசாங்கத்தின் இந்தப் போக்கை நான் கண்டிக்கிறேன். இது மிகமிகத் தவறான போக்கு ஆகும். அண்ணா அவர்களுக்கு நாம் அளிக்கின்ற மரியாதை, அண்ணா அவர்களுக்கு நாம் காட்டுகிற மரியாதை எல்லாவற்றையும்விடச் சற்று உயர்வாக இருக்க வேண்டுமே தவிர அண்ணாவின் பெயரைத் தாழ்த்தக்கூடிய இதுபோன்ற காரியங்களைச் செய்யக் கூடாது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இன்றைய தினம் இன்றுள்ள சூழ்நிலையில் அரசாங்கம் காண்டிராக்ட் விடுகிற முறையைத் தயவு செய்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தின் திட்டங்கள் சாலையாக இருந்தாலும் சரி, பாலம் கட்டும திட்டமாக இருந்தாலும் சரி, குளம் குட்டைகளைச் சரிப்படுத்தும் திட்டமாக இருந்தாலும் சரி தனிப்பட்ட காண்டிராக்டர்களிடம் ஒப்படைக்கிறோம். அவர்களாவது அந்தப் பணியை ஒழுங்காக நிறைவேற்றுகிறார்களா என்றால் இல்லை. நூறு ரூபாயில் 25தான் திட்டத்திற்குச் செலவிடுகிறார்கள். 75 ரூபாய் இடையில் நழுவிவிடுகிறது. இதைத்தான் மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் சொல்லும்போது நாம் பனிக்கட்டியை ஒருவர் கையில் கொடுக்கிறோம். அது கைமாறி, மாறி கடைசியில் உள்ளவருக்குப் போய்ச் சேருகிறபோது உருகி உருகி ஒரு சொட்டுத் தண்ணியாகப் போய்ச் சேருகிறது என்றார்கள். அதுபோலத்தான் நாம் போடுகிற திட்டங்களுக்கு அதிகப் பணம் ஒதுக்குகிறோம் என்றால் மக்களுக்குப் போய்ச் சேருகிற நிலையில் அது ஒரு சொட்டுத் தண்ணிபோல் போய் சேருகிறது. ஆகவேதான் இப்போது கொடுக்கிற முறையை மாற்றி அமைக்க முடியுமா? திருத்தி அமைக்க முடியுமா என்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, என்னால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாகக் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கருத்துக்கள் அனைத்தையும் பரிசீலனை செய்து நிறைவேற்றுவதற்கு இந்த அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம். நன்றி.

*திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள பொதுப் பணித் துறை மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு இந்த நாட்டு மக்கள் அதிகபட்சம் நன்மைகளை அடைய வேண்டும் எனபதற்காக, நல்ல நோக்கத்தோடு பொதுப் பணித் துறையில் கோடிக்கணக்கான ரூபாயை ஆண்டுக்காண்டு அதிகமாக ஒதுக்கீடு செய்து, நல்ல பல திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்தி வருவதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள்.

இவ்வாண்டு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக இந்த நாட்டு மக்களுடைய கஷ்டத்தை நிரந்தரமாகப் போக்குவதற்காக நல்ல திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திக் கொண்டு வருவதற்கு உண்மையிலேயே நான் இந்த அரசை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, தற்போது ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சியின் காரணமாக இராமநாதபுரம் மாவட்ட மக்களுடைய துயரத்தைத் துடைப்பதற்காக இன்றைய தினம் செம்மையான நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருவதற்காக நான் உண்மையிலேயே இந்த அரசை முழு மனதோடு பாராட்டுகிறேன்.

குறிப்பாக, பொதுப் பணித் துறையின் கீழுள்ள—கண்மாய்கள், கால்வாய்களின் மராமத்து வேலைகளை யெல்லாம் கண்டிராக்டர்களுக்குக் கொடுக்கப்படுவதால், அவர்கள் அதிக லாபத்தை அடைந்துகொண்டு போகின்றனர். அந்த நிலைமையை மாற்றி, இன்றைய தினம் அங்காங்கு இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், ஒவ்வொரு ஊரிலே இருக்கின்ற ஆயக்கட்டுதாரர்களுக்கும் அந்த மராமத்து வேலையைக் கொடுக்கப்பட்டிருப்பதை நான் இந்த மன்றத்தின் மூலம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

பொதுவாக, அங்கே நிறைவேற்றப்படும் திட்டங்கள் அனைத்தும் அல்லற்படுகின்ற மக்களுக்குப் பயனுள்ளவையாய் அமையும் என்பதையும், அவர்களுடைய துயரத்தைத் துடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும், வருகின்ற காலத்தில் நல்ல நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இந்த மன்றத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் இன்றைய தினம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, ஆண்டுக்காண்டு, கடுமையான வறட்சியினால் பீடிக்கப்பட்டிருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் நிரந்தரமான நீர்ப்பாசன திட்டங்கள் எதுவும் இந்த அறிக்கையில் சொல்லப்படாமல் இருப்பது உண்மையிலேயே மெத்த வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கின்றது.



என்னுடைய தொகுதி இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுக்கா, கமுதி துணை தாலுக்காவில் அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப்பட்ட திட்டம் மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம். அரசாங்கத்தின் அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதையும், மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் ஏற்கனவே ஏறக்குறைய 90 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றிட திட்டமிடப்பட்டும் அரசின் அனுமதிக்காக காத்துக்கொண்டு இருக்கிறது என்பதையும், அது பற்றி இன்றைய தினம் இந்த அறிக்கையில் அறிவிக்கப்படாமல் இருப்பது என்பதையும் உண்மையிலேயே வேதனை அளிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், அங்கே இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிரந்தரமான பலனைக் கொடுக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால், அங்கே இருக்கக்கூடிய மக்கள் ஆண்டுதோறும் தங்களுடைய பிழைப்புக்காக வெளி மாநிலங்களை நாடிச் செல்லும் நிலைமை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மழைக்காலங்களில் மலட்டாறு ஆற்றில் வருகின்ற நீரானது பயனில்லாமல் கடலில் போய் விழுகின்ற காட்சியைத் தான் நாங்கள் பார்க்கின்றோம். அது மட்டுமல்லாமல், அந்த நீரானது வெள்ளப் பெருக்கினால் கரைகளை உடைத்து, அங்கே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான எக்கர் புஞ்சைப் பயிர்களை அழித்துச் செல்லும் காட்சியைத் தான் நாங்கள் காண்கின்றோம். ஆகவே, பயிர்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதோடு, அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு நிரந்தரமாக பாசன வசதியைச் செய்து தருவதற்கு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்யுமாறு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இந்த வறட்சி நிவாரண வேலைகள்—என் மாவட்டத்திலுள்ள கண்மாய் கால்வாய் வேலைகள் முறைப்படி திட்டமிடப்பட்டு இன்றையதினம் செயல்பட்டு வருகின்றன. அதேபோன்று பஞ்ச நிவாரண வேலைகளுக்கு இன்னும் கூடுதலாகப் பணம் ஒதுக்கி, நிறைவேற்றப்படாத வேலைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும், என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் சில திட்டங்கள் பண ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால் நிறைவேற்றப்படாமல் இருந்து வருகின்றன. அதிலும், ஆண்டுக்காண்டு வறட்சியால் பாதிக்கப்படுகின்ற என்னுடைய மாவட்டத்திற்கு நிவாரண வேலைகள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய மாவட்டத்தில் உள்ள பெரிய கண்மாய் இராமநாதபுரம் கண்மாய். அது வெகு நாட்களாக மராமத்து செய்யப்படாமல் இருந்து வந்து அதற்குத் தற்போது பணம் ஒதுக்கீடு செய்து வேலை நடந்திட வழி வகை செய்யப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

மழைக்காலங்களில் இந்தக் கண்மாயிலிருந்து தண்ணீர் சர்க்கரைக் கோட்டை கண்மாயில் விழுந்து, அதிலிருந்து நீர் வெளியேறி வீணாகிக் கொண்டு இருக்கிறது. அந்தச் சர்க்கரைக் கோட்டைக்கும் 8 லட்சம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக சாங்ஷன் செய்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சர்க்கரைக்கோட்டையிலிருந்து வெளியேறி வீணாகின்ற தண்ணீர், இராமநாதபுரம், மண்டபம் ஒன்றியம், திருபவானி ஊராட்சிய ஒன்றியத்தின் கீழ்ப்பகுதி ஆகியவற்றிற்குப் பாசனம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். இங்கே ஒரு ஏரியை உருவாக்கி இந்தப் பகுதிக்கு நிரந்தரமான பலன் ஏற்படுவதற்கு வழி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதி கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் வாலிநோக்கம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மக்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்; சுவையான மீன் பிடிப்பவர்கள். அந்த ஊருக்கு ரோடு வசதி இல்லை.. அந்த ஊர் மக்கள் மற்ற ஊர்களோடு தொடர்பு கொள்ளுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். ஆகவே, அங்கே தார் ரோடு போடுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கே மீன்பிடி துறைமுகம் ஒன்றும் கட்டித் தரும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் வள்ளக்குளம் கிராமம் இருக்கிறது. அது பெரிய கிராமம். முஸ்லீம் பெருமக்கள் அங்கே அதிகமாக வாழ்கின்றார்கள். பத்து சிறு கிராமங்களைக் கொண்ட பகுதியாக அது அமைந்திருக்கிறது. அதற்கு, சிக்கலிலிருந்து ரோடு வசதி கிடையாது. சிக்கல் கண்மாய் மத்தியில் நீர் பெருகிவிட்டால் வெளியே போக முடியாது. அது இப்போது துண்டிக்கப் படுகிற நிலையில் இருக்கிறது. அதனால் அங்கே சிக்கல் கண்மாயின் மத்தியில் பாலம் கட்ட அரசு திட்டமிடப்பட்டு, அனுமதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதையும் விரைவிலே சாங்ஷன் செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு வசதி செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, எங்கள் மாவட்டத்தில் சிறப்பான முறையில் வறட்சி நிவாரண வேலைகளை மேற்கொண்டிருக்கிற இந்த அரசைப் பாராட்டி, விடை பெறுகிறேன்.

<u>* திரு ச. சங்குமுத்து தேவர்:</u> தலைவரவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் நீர்த்தேக்கத்தின் மூலமாகவும், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் மூலமாகவும் பயனடையக்கூடிய நிலங்களுக்கு எல்லாம் தண்ணீர் விநியோகம் செய்வதில் இன்னும் சரியான நடைமுறையைக் கடைப்பிடிக்கவில்லை என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பாபநாசம் நீர்த்தேக்கம் மின்சாரத்திற்காகக் கட்டப்பட்ட அணை என்றாலும் மின்சாரத்திற்குப் பயன்படக்கூடிய தண்ணீரைக்



கோடைக் காலங்களிலே, நீர்த் தேக்கத்தில் தண்ணீர் சரியாகத் தேக்கி வைக்க முடியாத நிலைமையேற்படுகிறது. மின்சாரத்திற்காக, கோடைக்காலங்களில அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடும்போது கீழ்ப்பகுதிக்கு அட்வான்ஸ் கார் என்று கொடுக்கப்பட்டு வந்தது. அதைப் பற்றி நான் பலமுறை இம் மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். அப்படி அட்வான்ஸ் கார்க்கு என்று கொடுக்கும்போது, கீழ்ப்பகுதிக்குக் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், கீழ்ப்பகுதியிலுள்ளவர்கள் குறுகிய கால விதைகளைப் பயிர் செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் மேற்கத்தியப் பகுதிகள் பாதிக்கப்படாமலிருக்கும்.

இப்பொழுதுள்ள நடைமுறையில் மேற்கத்திய பாசனங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதில் பல பல தவறுகள் ஏற்படுகின்றன. இதன மூலமாகத் திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள எல்லாக் கால்வாய் பாசனங்கள் அத்தனையும் பாதிக்கப்படுகின்றன. மேற்குப் பகுதியிலிருப்பவர்கள் கார் காலம் தவறி மழைகாலத்தில் அறுவடை செய்ய வேண்டியிருக்கிறது. அட்வான்ஸ் கார் என்ற பெயராலே, டாமிலே இருக்கக் கூடிய தண்ணீர் அவ்வளவையும் காலி செய்துவிடுகிறார்கள். இந்த நிலைமை வரும் போது ஜூன் மாதத்தில் அணையில் தண்ணீரில்லையென்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது.

அது மட்டுமல்லாமல், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் விநியோகம் செய்யும்போது, 50 அடி தண்ணீருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று ஏற்கனவே அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் சரியான முறையில் அரசு உத்தரவை கடைப்பிடிக்கப்படவில்லை. அதன் காரணமாக, மேற்கத்திய பாசனம் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நீர்த்தேக்கத்திலிருந்து வடக்குக் கோடைமேல் அளகியன்கால், தெற்குக் கோடைமேல் அளகியன் கால், நதி உண்ணிக்கால் என்ற மூன்று கால்வாய்களுக்கும் தண்ணீர் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. குறிப்பாக, வடக்குக் கோடைமேல் அளகியன் கால்வாயில் தற்போது கார் பயிர் கிட்டத்தட்ட 30 நாள் வரையிலும் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தக் கால்வாயானது, கடைசியில் வாகைக்குளம், மன்றுகோயில் வரையிலும் சுமார் 12 மைல் தூரம் செல்லுகிறது. இந்தக் கால்வாய் ஆரம்பத்திலிருந்து, சுமார் 6 மைல் தூரம் வரையிலும், அதாவது, விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம் வரையிலும் தண்ணீர் ஓட்டமில்லாமல் ஒரே நீர்த் தேக்கமாக இருக்கிறது. இப்படி நீர்த் தேக்கமிருப்பதாலே, எவ்வளவு தண்ணீர் கொடுத்தாலும், தண்ணீரைக் கீழ் பகுதிக்குக் கொண்டு வர முடியவில்லை. தண்ணீர் பூராக் காலில் என்பது அளவு 4·6 அடி என்று சொல்லுகிறார்கள். ஆனால், 5 அடி, 6 அடி தண்ணீர்க் கொடுத்தாலும், நமக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, தண்ணீர்க் கொண்டுவர முடியவில்லை. அதிகாரிகள் ஒத்துழைப்பு செய்தாலும் தண்ணீரைக்கொண்டு வரமுடியவில்லை மாவட்ட வளர்ச்சி மன்றத்தில்கூட இதைப் பரிசீலனை செய்து, அரசு எப்படியாவது இதை மராமத்துச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் லைனிங் செய்யவேண்டிய ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு தற்போது

அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை முழுவதுமே செய்யாவிட்டாலும், இரண்டு மைல் தூரத்திற்காவது நீங்கள் செய்து கொடுத்தால்போதும் கடைசிவரையிலும் கூட செய்து கொடுக்க வேண்டாம். இதைப் பலமுறை நான் இம்மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். அந்தப் பகுதியிலேயிருக்கக்கூடிய மக்களெல்லாம் இந்தக் கோடை நேரத்தில் எப்படியாவது வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, தயவு செய்து வடக்குக் கோடைமேல் அளகியன்காலிலிருந்து 2 மைல் தூரத்திற்கு லைனிங் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வாகைகுளம் கிராமத்தில் நீர்ப்பாசனக் கமிட்டி வருஷம் ஒன்றுக்கு சுமார் ரூ. 5,000 வரையில் செலவு செய்கிறார்கள். ரிஜிஸ்தர் பதிவு செய்த சங்கத்தின் மூலமாக—அதற்குக் கணக்கெல்லாம் வைத்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்க நமது அரசு எத்தனையோ முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அங்கேயுள்ள விவசாயிகள், இலட்சக்கணக்கான ரூபாயைப் போட்டு பயிர் செய்து பயிர்கள் தீய்ந்து, கருகிவிடுகின்ற சூழ்நிலை எற்படுகிறது.

வாகைகுளம், மன்னார்கோயில் கிராமங்களில் தற்போது கார் பயிர்க்கு இன்ஜின் வைத்து, மேட்டுத் தண்ணீரை இறைக்கப்பட்டும் கடைசியாக எடுத்தும், $\frac{1}{4}$ மேனி, $\frac{1}{2}$ மேனிதான் கிடைக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே, நீண்டகாலமாக சரியாகக் கவனிக்கப்படாமல் இருக்கின்ற வடக்குக் கோடைமேல் அளகியங்கால் கால்வாயில் இரண்டு மைல் தூரத்திலாவது லைனிங் செய்தால், அங்குள்ள விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

கன்னடியக்கால் கீழ்ப் பாசனத்தில், தற்போது கார் அறுவடை செய்த பயிர்கு அதாவது, பிரான்சேரிக்குளம், அதைச் சுற்றியுள்ள குளங்களுக்குத் தண்ணீர் சரியாகச் செல்லாமலிருப்பதால் அங்கு விவசாயம்பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன் ஆகவே, அதனையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே சேர்வலார் நீர்த்தேக்கம் வேலை நடைபெறுகிறது. அதற்கு இந்த வருடம் ஒதுக்கியுள்ள பணம், அங்கு வேலைசெய்யக்கூடியவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும் போலிருக்கிறது. திட்டத்திற்காகப் பணம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. இந்த வருடம் அதிகமான பணம் ஒதுக்கினால்தான் அந்தத் திட்டம் நிறைவேறும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இராமநதியிலிருந்து தண்ணீர் விடப்படுகிறது. பக்கத்தில் கடானு நீர்த்தேக்கம் இருக்கிறது. கடானு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் விடப்படுவது முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதே போல் இராமநதியிலிருந்து குளங்களுக்கு வரக்கூடிய தண்ணீரைச் சீர் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



அம்பாசமுத்திரம் பகுதியில் ஆக்கிரமிப்புக்கள் செய்யப்பட்ட அநேக குளங்கள் இருக்கின்றன. அதனால் அந்தக் குளங்களில் தண்ணீரை சரியாக பெருக்க முடியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால், எங்களுக்கு ஆக்கிரமிப்புக்காரர்களை அப்புறப்படுத்த போதிய அதிகாரமில்லை. அவர்களை அப்புறப்படுத்த முடியவில்லையென்று சொல்கிறார்கள். ஆகையினால் குளங்களில் தண்ணீர் பெருக முடியாமல் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அவர்களை உடனடியாக அகற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மணிமுத்தாறு நதியில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்கப்பட்டுவருகிறது. அதுவும் அரசின் பரிசீலனையில் இருந்து வருவதாகத் தெரிகிறது. அதாவது, வைராவிகுளம் கல்லிடைக்குறிச்சி, ஆண்டியூர் கிராமத்தையும் இணைக்கும் வகையில் இவ்வூர்களுக்குச் செல்ல மணிமுத்தாறு நதியில் ஒரு பாலம் கட்டினால், கால்நடைகள் செல்வதற்கு உரம் முதலியவைகளைக் கொண்டு செல்லவும் பெரும் உதவியாக இருக்கும். தற்பொழுது, இப் பகுதியிலுள்ள மக்கள் சுமார் 10 மைல் தூரம் சுற்றித்தான் அம்பாசமுத்திரம் போன்ற முக்கியமான இடங்களுக்கு வரவேண்டியிருக்கிறது. மேலும், திருநெல்வேலியிலிருந்து அம்பாசமுத்திரம் மார்க்கமாக, தென்காசி செல்லக்கூடிய பொதுப்பணித் துறையைச் சேர்ந்த ரோட்டில் இரண்டு தாம்போதிகள் இருக்கின்றன. ஒன்று தருவைத் தாம்போதி; இன்னொன்று கோரரையாற்றுத் தாம்போதி. மழைக்காலத்தில் வெள்ளம் வந்துவிட்டால், திருநெல்வேலிக்கு வரக்கூடியவர்கள் ஒரு வாரம், 10 நாள் கழித்துத்தான் செல்லமுடிகிறது. இந்த இரு இடங்களில் மேம்பாலம் கட்டுவது சம்பந்தமாக பரிசீலனையில் இருந்துவருகிறது. மேலும் இப்பகுதி பொது மக்களும் மற்றவர்களும் பாலம் கட்ட வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரு பாலங்களையும் விரைவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதுடன் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

(நண்பகல் 12·00)

திரு. ஆ. கருப்பையா : தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்று பருவ மழை தவறினாலும் கூட நம்முடைய அமைச்சரவையின் பெரிய முயற்சியினால் பல தீய்ந்து போகின்ற நிலையிலே இருந்த பயிர்களைக் கூட காப்பாற்றி நல்ல விளைச்சலை நெல்லை மாவட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே நம்முடைய பொறியாளர்கள் திறமையாக நேரத்திலே தண்ணீரைப் பகிர்ந்தளித்து சிறப்பாக இந்தப் பணியில் ஈடுபட்டார்கள் என்பதால் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னும் சில வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது, ஆகவே என்னுடைய ஆலோசனைகளாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஆ. கருப்பையா] [1975 மார்ச் 14

கங்கைகொண்டான் சிறுகுளம் 700 ஏக்கர் நீர்ப்பிடிப்புள்ள பகுதியாக இருக்கிறது. மானூர் என்ற பெரிய குளம் 1,100 ஏக்கர் பரப்பளவுள்ள பெரிய குளமாக இருக்கிறது. இந்தக் குளங்களில் எல்லாம் கடந்த ஐந்தாண்டுக் காலமாக நீர் வந்தது கிடையாது என்ற நிலைமை இருப்பதால் இந்தக் குளங்களுக்குத் தாமிரபரணியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கால்வாய் மூலமாகக் கொண்டு வந்து இந்தக் குளங்களைப் பெருக்கினால் 10 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே கங்கைகொண்டான் குளத்திற்கு தாமிர பரணியிலிருந்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கால்வாய் வந்து கொண்டிருந்தது. இப்போது அது தூர்ந்த நிலையில் உள்ளது. அந்தக் கால்வாயைச் செப்பனிட்டுக் கொடுத்தால் பண்டாரங்குளம், பள்ளங்குளம் கங்கைகொண்டான் சிறிய குளம், அலங்காரப் பேரி, பதினாலாம்பேரி ஆகிய ஐந்து குளங்களுக்குத் தண்ணீர் கொண்டு வரலாம். இதன் மூலமாக 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். இந்தக் குளங்களுக்குத் தாமிர பரணியிலிருந்து தண்ணீர் கொண்டுவரப் படுவதன் மூலம் தாமிர பரணியில் ஏற்கெனவே உள்ள ஆயக்கட்டுக் களுக்குத் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட கூடும் என்று சொல்லலாம். நான் சொல்வது மழைக் காலங்களிலே மழை பெய்து அந்தத் தண்ணீர் கடலில் போய் வீணாகக் கலக்கிற நேரத்திலே, இந்தக் கால்வாயை இப்போதே வெட்டி வைத்து இருந்தால், இந்தக் கால்வாய் மூலமாக தண்ணீரைக் கொண்டு வர முடியும். ஏற்கெனவே ஒரு கால்வாய் இருந்தது. நெல்லையில் நடைபெற்ற கருத்தரங்கிலே கூட நான் இந்த ஆலோசனையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அவர்களும் கவனிப்பதாக வாக்கு அளித்தார்கள். நெல்லை மாவட்டத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற இந்த நேரத்திலே அந்தக் கால்வாய் செப்பனிடப்படுகிற வேலை எடுத்துக் கொள்ளப்பட்டால் அங்கே வேலையில்லாமல் இருக்கின்ற ஏழைகளுக்கு வேலை கிடைக்கும், அது மட்டுமல்ல ஒரு கால்வாயைச் செப்பனிடுகிறோம், அது மட்டுமல்ல, மழைக் காலங்களிலே தண்ணீரை இந்தக் குளங்களுக்குக் கொண்டு வருகிறோம். தாமிர பரணி தென்பகுதியில் இருக்கிறது. மழை பெய்தாலும்கூட தண்ணீர் எல்லாம் தாமிரபரணியிலேதான் போய்ச் சேருமே தவிர—தாழ்வான பூமியாக இருப்பதால்—இந்தக் கால்வாய் மூலமாக தாமிரபரணியிலிருந்து தண்ணீர் வராவிட்டால் கூட அங்கங்கே உள்ள மானாவாரிக் குளங்கள் இதன் மூலம் நிரம்பும், ஆகவே இந்தக் கால்வாயைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை உடனடியாக எடுக்க வேண்டும். அதன் மூலமாக வேலையில்லாத மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியானது அரசனோடு சேர்ந்தால் போலும் இல்லை, புருஷனோடு சேர்ந்தார் போலும் இல்லை, இரண்டும் கெட்டான நிலையிலிருக்கிறது. தாமிரபரணிப் பாசனத்தைச் சேர்ந்ததாகவும் இல்லை. மானாவாரிப் பிரதேசமாகவும் இல்லை. ஆகவே, இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் பராக்கிரம பாண்டியன் குளம் என்று இருக்கிறது. சங்கரன்கோயில் பகுதியில் பெய்கிற மழைத் தண்ணீர் எல்லாம் அந்தக் குளத்திற்கு வருகிறது. அந்த குளத்திற்காக கட்டப்பட்ட



1975 மார்ச் 14] [திரு. ஆ. கருப்பையா]

கோதண்டராம நதியில் அணை கட்டப்பட்டு 8 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே இருக்கின்ற அலகுகள் சரியாக இல்லை. ஆகவே அதையும் சரிப்படுத்த வேண்டும் பராக்கிரமபாண்டியன் குளத்தை அனுசரித்தே சீவலப்பேரி என்ற குளமும் இருக்கிறது, அந்தக் குளத்திற்குக் கால்வாயும் சீரமைக்கப் படாமல் இருக்கிறது. அதையும் சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்ச நேரமாக இருப்பதால்—இலங்கை அகதிகளுக்கு 100 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு நிலமும் கொடுக்கப்பட்டிருக்கிறது—அந்த இடத்தில் உள்ள சிந்தன் குளத்தில், அந்தக் குளம் பல்லாண்டுக் காலமாகத் தூர்ந்து போயிருக்கிறது—அந்தக் குளத்தைச் சீரமைத்துக் கொடுத்தால் அது அங்கேயுள்ள அகதிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். அவர்களுக்கு கிணறுகளுக்கு என்று பணம் கொடுத்து இருக்கிறோம், ஆனால் தண்ணீர் இல்லை, அவர்கள் என்ன செய்ய முடியும், அவர்கள் இருக்கிற பகுதி மலைமேடான பகுதியாக இருக்கிறது, தண்ணீர் இல்லை இந்தக் குளத்தைச் செப்பனிட்டுக் கொடுத்தால் அங்கே எல்லாக் கிணறுகளிலும் தண்ணீர் வரும். அவர்கள் அப்போது வேலை செய்ய முடியாமல் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கங்கைகொண்டான் கிராமத்தில் வடகரை என்ற ஒரு ஊரிலே ஒரு பாலம் உடைந்து பலகாலமாகிறது. இதைப் பற்றி நான் இந்த மன்றத்திலே பலமுறைகள் எடுத்துக் சொல்லியிருக்கிறேன். இது வரையில் கட்டித்தரப்படவில்லை. இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது பொதுமக்களுடைய மிக முக்கியமான கோரிக்கையாக இருக்கிறது ஆகவே கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால். இந்தப் பாலம் இருக்கின்ற இடம் மணியாச்சிக்கும் மதுரை செல்கிற ரோடிற்கும் இடையே உள்ள இணைப்புச் சாலையிலேயிருக்கிறது. பராக்கிரம பாண்டியன் குளத்தில் உடைப்பு ஏற்பட்ட நேரத்திலே இந்தப் பாலமும் அடித்துக் செல்லப்பட்டது. ஆகவே அதை உடனடியாகச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பராக்கிரம பாண்டியன் குளத்தில் அன்றைக்கு உள்ள அமைப்புக்கு ஏற்றபடி சில மடைகளைக் கட்டாமல் விட்டுவிட்டோம். இன்றைக்கு 700 ஏக்கர் சாகுபடி செய்யப்பட வேண்டும் திட்டப்படி, ஆனால் 400 ஏக்கர் தான் சாகுபடி செய்யப்படுகிறது. காரணம் மடை சரியாக இல்லை. ஆகவே கூடுதலாக ஒரு மடை வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். இந்த ஆண்டு அதைப் போட்டுத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மடையைப் போட்டுக் கொடுத்தால் 300 ஏக்கர் மேலும் சாகுபடி செய்யக் கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித் கொள்கிறேன்.

[திரு. ஆ. கருப்பையா] [1975 மார்ச் 14

சாலைகளை நல்ல முறையிலே செப்பனிட்டுக்கொண்டிருக்கிறோம். கயத்தாறுக்கும் கங்கைகொண்டானுக்கும் இடையில் காசி—கன்னியாகுமரி சாலையில் இந்த ஒரு பாலம் இருக்கிறது, அதிலே சிறு வண்டிகள் கூட போக முடியாமல் இருக்கிறது, அதை அகலப்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்செந்தூர் ஒரு பெரிய கேந்திர தளமாக இருக்கிறது. ஏராளமான பக்தர்கள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாலை மிகவும் குறுகியதாக இருக்கிறது. திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் போகிற அந்தச் சாலையில் ஒரு கார் வருகின்றபோது இன்னொரு கார் வந்தால் அந்தக் காரை எங்காவது வளைவு இருக்கிறதா என்று பார்த்து அங்கே நிறுத்திவிட்டு இந்தக் கார் போக வேண்டும், இந்தக் கார் போன பிறகுதான் அந்தக் கார் செல்ல வேண்டும். அவ்வளவு குறுகிய பாதையாக இருக்கிறது, அதனால் பல ஆக்ஸிடெண்ட்ஸ், தொல்லைகள் ஏற்படுகின்றன. அதைக் கண்கூடாகக் பார்க்கிறோம். ஆகவே அதை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணியிலே ஒரே ஒரு பாலம்தான் இருக்கிறது, சிந்துபூந்துறை பாலம் இருக்கிறது. அதைவிட்டால் 12,13 மைல்களுக்கு அப்பாலே வல்லநாட்டுக்குப் பக்கத்தில் ஒரு பாலம் இருக்கிறது. விவசாயிகள் தாங்கள் வைத்திருக்கின்ற பொருட்களை திருநெல்வேலி மார்க்கெட்டுக்குக் கொண்டு செல்லவேண்டுமென்றால் 13 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, சீவலப்பேரியிலிருந்து மாட்டுச் சாணம் கொண்டுவர வேண்டுமென்றாலும்கூட 13 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இந்தக் குறையைப் போக்க வேண்டும். பாளையங்கோட்டை யூனியனிலேகூட இதுகுறித்து ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இந்தப் பாலத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Mr. Chairman, Sir, I thank you for giving me an opportunity to participate in the discussion on the Demands relating to Irrigation, Public Works-Buildings, Public Works-Establishment and Tools and Plant, Roads and Bridges, Sanitation and Water Supply.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

Regarding irrigation, I want to stress a few important points. I have already given notice of a cut motion to discuss the non-availability of Cauvery waters for the agriculturists in the Southern Region in this State in time. Even in spite of our several requests to the Karnataka Government, we are not able to achieve full utilisation of the Cauvery waters. I am given to understand that these waters are available for only 50 per cent of the lands in the Thanjavur area and we must provide full water-supply on a permanent basis to the cultivators there. For this we must find out an alternative solution and there is no use of



1975 மார்ச் 14] [Thiru B. Venkataswamy]

saying that the Karnataka Government have not given us water and the Government of India have not taken any step in that direction. The people are getting worried about getting water and they want to see green revolution.

During the Budget discussion, I suggested that all the rivers should be controlled by an All-India Water Grid and they should distribute the water properly. Otherwise, it is highly impossible for our people to get more water. Sir, the Karnataka Government has not utilised even their share of the Krishna waters which havebeen allotted to them 500 thousand c. ft. of water. That is because they have no funds for that. But they have got funds for the utilisation of the Cauvery waters and they have constructed dams there. So, we must find out an alternative solution for it.

Also a large number of small anicuts hare to be constructed across small rivers. Of course, we have exhausted major water resources but small anicuts can be constructed to improve the rural economy of the people. I have given notice of a cut motion which has been rejected and it relates to the construction of anicuts in Denkanikottah taluk, which is a long felt demand of the people there. The names of the places where the anicuts are to be constructed are as follows :—

1. Gavipallam } Salivarani Panchayat.
2. Thopeppallam }
3. Kalyanian Eri, Bikkanapalli Panchayat.
4. Ganga Gowdripallam, Madakkal Panchayat.
5. Thaggatty Anicut, Thaggatty Panchayat.
6. Restoration of Gowri Eri in Origam village.
7. Forming a tank in S. F. No. 93 of Origam village.
8. Forming a tank across Bandahalli near Mathigowndanur.
9. Forming a tank across jungle stream near Shellalagguhalla near Origam village.
10. Forming a tank across Meerwhalla near Mallikarjunadurgam.
11. Restoring the tank across Nerahalla near Mallikarjunadurgam.

If anicuts are constructed in these places, the people there will be benefitted.

Regarding the Doddahalli project, I thank the Hon. Minister for sanctioning it and it is a long-felt demand of the people there. Regarding Kelavarapalli project, last year a token provision was made and I request the Hon. Minister to see that this project is executed immediately. In this connection, I want to stress one important point. The Project

[Thiru B. Venkataswamy] [1975 மார்ச் 14

Houses have to be built near the dams and not in far off places like Hosur and Denkanikottah, as otherwise it will not serve any useful purpose.

Regarding research for the conversion of sea water into drinking water, the Government may think that it is not necessary but in the long run it would be very useful to the people for drinking purposes.

Regarding soil erosion, check-dams should be constructed.

As regards the pond scheme, it is a very good and wonderful scheme. Some pond schemes have been executed and there is very good percolation of water from underground. Such schemes are not encouraged properly and I request the Hon. Minister to execute more such schemes.

So far as desilting of tanks are concerned, it should be done on a large scale, and tanks should be fully desilted. Otherwise, it would not serve any useful purpose. There is no use of giving a small amount of Rs. 50,000 or 60,000 to the panchayat union for such things. They cannot desilt even two tanks. They should be given more money for the proper maintenance of tanks.

Coming to roads, we are having very good roads in our State. In connection with the setting up of an Industrial Complex at Hosur, some foreigners came and inspected the road there and they were very much impressed about it and they had given up the idea of settling at Bangalore and they have stated that it could take them only 30 minutes to reach Bangalore from Hosur.

In this connection, I may point out that rural roads should be maintained properly. The Hosur-Adhamana Rottai Road is not maintained properly. If we concentrate only on National Highways, it will not be useful to the people in the rural areas. In the Anchetty-Origam area people cannot walk because elephants roam there and there are no proper roads there. Recently five or six persons died due to the elephant menace. At least a motorable road should be formed there so that people can walk safely. Once again I request that roads should be constructed in the rural areas.

Last year soil erosion had taken place through winds. Planting trees on the roads will also prevent to some extent soil erosion. Thiru Kumaramangalam who belongs to our district has asked me to represent to the Hon. Minister that trees should be grown on the road to prevent soil erosion. If trees are grown, we will not only get rain but we will



1975 மார்ச் 14] [Thiru B. Venkataswamy]

also get revenue. So I request the Hon. Minister to make arrangements to grow trees on the roads and that will be a permanent asset to the nation.

We must see that wherever it is possible, trees should be planted.

Coming to Public Works-Establishment and Tools and Plant, I come to understand that heavy machinery, which have been imported from foreign countries, like DW 10 and DW 15 Scrapper and TD XXV and TD XX and trippers and lorries are lying idle without anybody taking care of them. I do not know whether the Hon. Minister is aware of the same. I understand that they belong to Public Works Department. But the Civil works people are not taking advantage of the availability of this machinery but they are engaging machinery from private people and using them. With the result this is not being used, in spite of the fact that huge money has gone into the import of the same. I understand that there are some under-hand dealings between the Civil Works people and others. This should be enquired into by the Hon. Minister. Under-hand dealing with regard to engagement of private lorries should be put an end to, especially when machinery is available.

Coming to railways, I know that we cannot talk about that here but only in Parliament. But I have to say that the Salem-Bangalore line should be converted into broad-gauge. It is narrow-gauge at present. Many industries are coming in Hosur-Bangalore side. Government of India also had accepted this in principle. They should be told to take action in this line. Hosur-Malur line also should be opened. It is only a distance of 20 km.

Regarding water-supply I find that Veeranam Project has not been completed and there is water scarcity in Madras City. The Water Board is of course doing excellent work in rural areas. But in Hosur we are having water scarcity. We are thinking of supplying water in lorries. Water-supply scheme for Hosur should be expedited.

With these words, I conclude my speech.

திரு. வீ. கார்த்திசன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொது வாக, நீர்ப்பாசனம், கட்டடம், சாலை செதி போன்றவற்றுக்காக நல்ல காரியங்களைச் செய்ய பல கோடி ரூபாய் கோரியிருப்பதை நான் வரவேற் கிறேன்.

எங்கள் பகுதியைப் பொறுத்து ஒரு சில கூற விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்கள் 20 ஆண்டுக் காலமாகக் கேட்டு வந்துள்ள ஆலத்துறையாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்கள்.

இதன் காரணமாக எங்கள் பகுதியில் விவசாயிகள் நல்ல முறையில் பயன் அடைந்துள்ளார்கள். அதேபோன்று நான்குநேரி வட்டத்தில் நம்பியாறு திட்டம் உள்ளது. நம்பியாறு திட்டம் வேண்டுமென்று பல ஆண்டு காலமாகக் கேட்டு வருகிறோம். நம்பியாறு திட்டத்தை மூன்று பிரிவாகப் போட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. நம்பியாறு அணைக்கட்டுத் திட்டம், நம்பியாறு ரிசர்வாயர் ஸ்கீம், பான்ட் ஸ்கீம் என்று மூன்று பிரிவாகப் போட்டுள்ளார்கள். இந்த ஸ்கீமை நிறைவேற்றுகிறார்களா என்று தெரியவில்லை. எந்த ஸ்கீமானாலும் நம்பியாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் வறட்சியான பகுதியாக இருக்கின்ற எங்கள் பகுதியிலுள்ள கிணறுகளின் நீர்மட்டம் மேலே வந்து தண்ணீர் எடுக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இது மிகவும் முக்கியமான திட்டம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாறு என்ற ஆறு ஓடுகிறது. அது வீணாகக் கடலில் போய்ச் சேருகிறது. என்னுடைய தொகுதி அருகாமையில் இருக்கிறது. அந்தத் தண்ணீரை லிப்ட் செய்து ராதாபுரம் கானலில் விட்டால் எங்கள் பகுதி பயன்பெற முடியும். நெடுங்காலமாக இதனைக் கேட்டு வருகிறோம். இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குளங்கள் வானத்தை நம்பியிருக்கின்றன. ஆற்றுப் பாசனம் இல்லை. குளங்கள் வற்றிய காலத்திலே அதிலே "போர்" போட்டுக் கொடுத்தால் அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

குடிதண்ணீர்ப் பிரச்சினை பற்றி ஒரு சில சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் வடக்கன்குளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கு குடி தண்ணீர் கிடையாது. பூமிக்கடியில் தண்ணீரே இல்லை. குடிதண்ணீர் வாரியம் அந்தப் பகுதிக்கு குடி நீர் கொடுக்க திட்டமிட வேண்டும். பணகுடி, செட்டிகுளம், லவஞ்சிபுரம் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை உடனடியாக நிறைவேற்றி குடி நீர் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

புலிமான்குளம், நத்துவநேரி என்ற இரண்டு குளங்கள் எங்கள் ஊரில் இருக்கின்றன. இவற்றை உடனடியாக மராமத்து செய்து, கால்களைச் சீர்செய்து, மடைகளை நல்ல முறையில் ஆக்கி நல்ல அளவில் தண்ணீர் செல்ல வாய்ப்புத் தேடிக் கொடுக்க வேண்டும்.

சாலை வசதியைப் பொறுத்து ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதி கன்னியாகுமரிக்கும், திருச்செந்தூருக்கும் மத்தியில் உள்ள பகுதி. அங்கு கடற்கரை சாலை இருக்கிறது. இந்தியாவிலுள்ள அத்தனை யாத்திரிகர்களும் அந்த வழியில்தான் செல்ல வேண்டும். எனவே, திருச்செந்தூர்—கன்னியாகுமரி சாலையை விரிவுபடுத்த வேண்டும். அதை தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தில் கொண்டுவர நம்முடைய அரசு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில சாலைகளுக்குத்





தார் போட வேண்டும். ராதாபுரம்—இடையக்குடி சாலை, திசையன்விளை சாலை, வடக்கன்குளம், குமாரபுரம், பழவூர் சாலைகளில் தார் போடவேண்டும்.

ரூரல் ரோட்சில் எங்கள் பகுதியில் நல்ல வேலைகள் நடந்திருக்கின்றன. மேலும் ஒரு சில தேவைகள் இருக்கின்றன. கன்னியாகுமரி கடற்கரைச் சாலையிலிருந்து அவுடையார்புரம் என்ற கிராமததிற்குச் சாலை வசதி இல்லை. அது இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். ரூரல் ரோட்ஸ் திட்டத்தின் கீழ் அந்தச் சாலையைப் போட்டுக் கொடுக்க வேண்டும். இளையான்குடி, ஆட்டின்பட்டு சாலையைப் போட்டுக் கொடுக்க வேண்டும்.

இரண்டு சாதியின் பெயரால் இரண்டு உவரிகள் இருக்கின்றன. இரண்டும் பெரிய புண்ணிய ஸ்தலம். அந்த ஊருக்கு தமிழகத்திலிருந்து பல யாத்திரிகர்கள் வருகிறார்கள். ரெஸ்ட் ஷெட் கட்ட வேண்டும். இடிந்தகரை, உவரி பகுதியில் கடலரிப்பு அதிகமாக இருப்பதால் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அங்கே கடலரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்குச் செல்லும் நெடுஞ் சாலையில் காற்றுக் காலங்களில் அதிகமான மணல் ரோட்டில் சேர்ந்து விடுகிறது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இதைத் தடுக்க நிலையான ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். திருநெல்வேலி—உவரி செல்லும் வழியிலும் காற்றுக் காலங்களில் ரோட்டில் மணல் சேர்ந்து விடுகிறது. அந்த மணலை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

மேலும் ரோடு வேலைகளில் ஈடுபட்டிருக்கின்ற கேங்க் கூலிகளை தற்காலிகமாக வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பதவியை பர்மனண்ட் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தமாதிரியான நல்ல பல திட்டங்களை செயற்படுத்துகின்ற அரசை வரவேற்று, ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. கே. என். குமாரசாமி</u> : தலைவரவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள் பேரிலே எனது கட்சியின் சார்பில் சில விளக்கங்களைக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கோவை மாவட்டம் சம்பந்தப்பட்ட, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் ஏற்படுத்தியிருக்கின்ற ஒப்பந்தத்தின்படி அத்திட்டத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1970-இல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, 1974-ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தில் கேரள அரசாங்கத்திற்கு, தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சோலையாற்றில் தண்ணீர் 9 அடிக்கு மேல் வருகின்ற 2 அடி தண்ணீர்தான் வருகிறது நம்முடைய மாநிலத்திற்கு.

கேரளாவுக்கு 9 அடி தண்ணீர் விட வேண்டும். என்ன காரணத்தால் ஏற்பட்டது என்று தெரியவில்லை. அப்படி ஒரு ஒப்பந்தம் ஆகியிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

இப்படி அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கும்போது அந்தத் திட்டத்தை விஸ்தரிக்கின்ற நிலையில் போதிய தண்ணீர் கிடைக்குமா என்பது ஐயத்திற்குரிய ஒன்று. தற்போது அத் திட்டத்தின் மூலம் 2½ லட்சம் ஏக்கர் பயன்படுகிறது. அப்படியிருக்கும் போது, போதிய தண்ணீர் கிடைக்குமா? கபாசிடி இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டம் ரூ. 34 கோடிக்கு மேல், ரூ. 64 கோடியாக சென்று கொண்டிருக்கிறது. ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்தின் விஸ்தரிப்பின் மூலம் பயன் பெறலாம் என்று இருந்த கோவை, பல்லடம், அவிநாசி தாலுகா மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். காரணம், இப்போது விஸ்தரிக்கின்ற திட்டம், பல்லடம் பூராவும் விஸ்தரிக்கின்ற திட்டமாக இருக்கிறதா என்றால் இல்லை. இதனால் பயன் படக்கூடிய நிலங்கள், உடுமலைப்பேட்டை—23 ஆயிரம் ஏக்கர், பொள்ளாச்சி—24 ஆயிரம் ஏக்கர், தாராபுரம்—24 ஆயிரம் ஏக்கர். ஆனால் பல்லடம் மட்டும் 15 ஆயிரம் ஏக்கர் மட்டும்தான். 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு கனடா என்ஜினீயர்கள் பல்லடம பகுதியில் ஆய்வு நடத்தி, அப் பகுதியில் தண்ணீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது, இன்னும பத்து ஆண்டுகளில் தண்ணீரே இல்லாமல், பாலைவனமாகப் போய்விடக்கூடிய அபாயம் இருக்கிறது என்று சொல்லியும் கூட அரசாங்கம் தீவிரமான நடவடிக்கையை இதுவரை எடுக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், 350 அடி வெட்டியும் தண்ணீர் கிடைப்பது கஷ்டமாகப் போய் விட்டது. அப்படியிருக்கிறபோது விவசாயிகளால் என்ன செய்ய முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அந்தப் பகுதியில் ஒரு திட்டம் திட்ட வேண்டாமா? சுல்தான் பேட்டையில் ஒரு கிளை கால்வாயை வெட்டி பல்லடம் அருகிலுள்ள ஒரு கால்வாய்க்கு நீர் பாயச் செய்கின்ற, ரூ. 5, 6 கோடியில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு அரசாங்கத்திடம் வைக்கப்பட்டது. அது என்ன காரணத்தாலோ தெரியவில்லை, பரிசீலிக்கப்படவில்லை. அத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்ல நான் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படியானால் அந்தப் பகுதியை எப்படிப் பாதுகாக்கப் போகிறீர்கள்? தீவிரமான கவனம் செலுத்தி ஆக வேண்டும். ஒரு நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த விஸ்தரிப்புத் திட்டத்திலாவது அப்பகுதிக்குத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று அப்பகுதி மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குடிநீருக்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு ஸ்கீம் கிடையாது. அங்கே 15,800 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் ஒரு 2 ஆயிரம் ஏக்கருக்குக் கூட தண்ணீர் போகவில்லை. மற்றப்பகுதிகள் விஸ்தரிக்கப்படும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் போது பல்லடம் மட்டும் ஏன் புறக்கணிக்கப்படுகிறது? எனவே, அப்பகுதியை விஸ்தரிப்பதற்கு முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பாண்டியாறு–புன்னமபுழா சம்பந்தமாக அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது, நம்பிக்கை இருப்பதாக. அத்திட்டம் செயல்படுத்தப் பட்டால் பல்லடம் தாலுகா பயன் பெறும். ஏற்கனவே மேல் பவானி என்று திட்டம் இருந்து அதை லோயர் பவானியாக மாற்றி அதை வடக்கே கொண்டு போய் விட்டார்கள். பல்லடம் தாலுகா மக்கள் அத்திட்டத்தை நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் நம்பிக்கை தகர்ந்து போய் விட்டது. எனவே, இதையாவது அம்மக்களுக்கு பயனுள்ளதாகச் செய்யுங்கள். அது சம்பந்தமாக, "நம்பிக்கை அளிக்கிறது" என்று சொல்லியிருக்கிறார்கள். கேரள அரசாங்கம் என்ன கூறுவார்கள் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் கூட அது சம்பந்தமாக மத்திய அரசு தலையிட வேண்டுமென்று முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு தலையிட்டால் முடிவாகும் என்றும் கூறினார்கள்.

நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களிடம் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். அதற்குப் பிறகு, பேசித் தீர்க்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். அது அப்படியே இருப்பதால் பிரச்சினை தீர்ந்து விடாது. சிறுவாணித் தண்ணீர் கோவைக்கு கொடுத்தபோது கேரள அரசுக்கு 15 ஆயிரம் டன் அரிசி கொடுப்பதாக கூறியிருப்பதாகத் தெரிகிறது. 15 ஆயிரம் டன் அரிசி கொடுக்க முடியவில்லை. 2 ஆயிரம்தான் கொடுத்திருக்கிறார்கள். இதனால் கேரள அரசு அச்சம் தெரிவிக்கிறது. அரிசி கொடுப்பதற்கு மத்திய அரசு ஒரு ஒப்பந்தத்தை கொடுப்பதாக எங்களுக்கு ஒரு தகவல் வந்திருக்கிறது. அத்திட்டத்தை அவர்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். முயற்சி எடுத்துக் கொண்டால் சாத்தியக்கூறுகள் உண்டு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பாண்டியாறு–புன்னம்புழா கேச்மெண்ட் ஏரியாவில் உற்பத்தி ஆகிறது. 1965–இல் ஒரு ஒப்பந்தம் ஆகியிருக்கிறது. வேண்டுமானால் அதில் திருத்தம் செய்யலாம். இந்த ஆறுகளால் கேரளாவுக்கு பயன் அதிகம் இல்லை. அமைச்சர்கள் முயற்சி செய்து அத்திட்டத்தை பயனுள்ள வகையில் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல்லடம் தாலுகாவைப் பாதுகாக்க இத்திட்டங்களைத் தவிர வேறு திட்டம் கிடையாது. நொய்யலாறு என்ற ஆறு இருந்தது, ஆனால் அது அழிந்து போய் விட்டது. எனவே, இத்திட்டத்தை எப்படியாவது கொண்டு வர வேண்டும். தேவைப்பட்டால் மத்திய அரசோடு கலந்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால் அந்தப் பகுதியை பாதுகாக்க முடியாது, அங்கே உள்ள விவசாயிகளை வெளியே போய் விடுங்கள் என்று கூட சொல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

சின்னவேடம்பட்டிக்குளத்தை, ஐம்பத்தைந்து லட்சம் ரூபாயில் கட்டிக் கொடுப்பதாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னார்கள். சின்னவேடம்பட்டிக்குளம் இந்த பட்ஜெட்டில் இல்லை. என்ன காரணங்களோ தெரியவில்லை. அப்பகுதி விவசாயிகள் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயம்

செய்யாமல் பல வருடங்களாக சும்மா நிலத்தைப் போட்டுள்ளார்கள். மிகவும் வேதனைப்படுகிறார்கள். அதனால் சின்னவேடம்பட்டி குளத்தைக் கட்டிக் கொடுக்க அரசு அவசர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சோமனூர், வண்ணத்தங்கரை பக்கம் மழைக் காலங்களில் ஏராளமான தண்ணீர் போகிறது. அந்தப் பகுதியில் ஒரு குளம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். அதற்கு ரூ. 20 லட்சம் செலவாகும் என்று சொல்கிறார்கள். அதையும் செய்யக் காணோம். அதை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு பாசன திட்டமாக இருந்தாலும் சரி, பெரும் பாசன திட்டமாக இருந்தாலும் சரி, எங்கள் பகுதி எந்தக் காரணத்தாலோ புறக்கணிக்கப்படுகிறது. அது என்னவென்று தெரியவில்லை.

வறட்சி நிவாரணப் பணிகள் என்று வருகிறபோது, வறட்சிப் பகுதிகளில் மழைத் தண்ணீர் தேங்குகிற அளவில் குட்டைகளை ஆழப்படுத்தவும், குட்டைகள் இல்லாத பகுதியில் புதிய குட்டைகளை அமைக்கவும் வழிவகை செய்ய வேண்டும். குட்டைகள் அமைப்பதற்கு நிலச் சொந்தக்காரர்கள் கூட தங்களுடைய நிலத்தைத்தர தயாராக இருக்கிறார்கள். அந்த நிலங்களை கையகப்படுத்தி அந்த வாய்ப்பை பயன்படுத்தி புதிய குளம் குட்டை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையைப் பொறுத்த வரையில், ரோடு வசதி பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பல கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடுவதில் காலதாமதம் ஆகிறது. அதனால் பஸ் போக்குவரத்து போட முடியவில்லை. தார் ரோடு போட்டால்தான் பஸ் போக முடியும் என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியில் இணைப்புச் சாலைகளைப் போட வேண்டுமென்று சொன்னால் லிஸ்ட் படிதான் எடுத்துக் கொள்வோம் என்று சொல்கிறார்கள். அப்படி வந்தால் பல ஆண்டுகள் ஆனாலும் அந்தப் பகுதிக்கு ரோடு வராது. இப்படிப்பட்ட நிலை இருப்பதால், குறைந்தது எருதூர், இருகம்பளூர் ரோட்டை தார் ரோடாக மாற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். அதனால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பயனடைவார்கள்.

சோமனூர், வண்ணத்தங்கரை, ஆகியவற்றில் மழைக் காலங்களில் தண்ணீர் அதிகம் போவதால், திருப்பூர்–பல்லடம் ரோடில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொச்சின் ரோடில் ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று சொல்லி வருகிறேன். அந்தப் பாலம் கட்டாததால் அங்கே குட்டை அமைக்கும் வேலையும் தடைபடுகிறது. அந்தப் பாலம் கட்டினால்தான் குட்டை அமைக்க முடியும். கடந்த ஐந்து ஆண்டு காலமாக கேட்டு வருகிறேன். என்ன காரணத்தாலோ புறக்கணிக்கப்படுகிறது. அந்தப் பகுதியில் குடி நீர் பிரச்சினையும் இருக்கிறது. ஆகவே, அதையும் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டம், புன்னம்புழா திட்டம் ஆகியவற்றை விஸ்தரிக்கும்போது, பொள்ளாச்சிக்கு பயன் அடைகிற வகையில் செய்வதாக இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் மழைக் காலங்களிலேயே தண்ணீர் கிடையாது. பூமிகள் தரமான பூமிகளாக இருந்து, நல்ல விளைச்சலைத் தரும் சாத்தியக் கூறுகள் இருந்தாலும் பரவாயில்லை, ஆனால் அங்கே கல் மண் அதிகமானமுறையில் இருக்கிறது. அதனால் எந்தவித பிரயோசனமும் இல்லை. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு இந்த பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்கும்போது, பல்லடம் தாலுக்காவில் கிட்டத்தட்ட 20,000—25,000 ஏக்கர் பயன்பெறும் வகையில் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே நல்ல சோர்ஸ் இருக்கிறது. ஏரியாவும் இருக்கிறது. கால்வாய் வாய்ப்பு, பம்ப் செட் போன்றவைகளும் அந்தப் பகுதியில் இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதிக்கு இதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கு இராசமாணிக்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டு இருக்கும் மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டில் மேட்டூரில் தண்ணீர் மிகக் குறைவாக இருந்தபோதிலும், மழை அறவே இல்லாது இருந்த போதிலும், தஞ்சை மாவட்டத்தில் எப்போதும் இல்லாத வறட்சி, பஞ்சம் ஏற்பட்டிருந்தும், மிகவும் திறமையானமுறையில் பிப்ரவரி மாதம் கடைசி வரையில் மேட்டூரிலிருந்து தண்ணீர் பகிர்ந்து கொடுத்ததற்காக பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு தஞ்சை மாவட்டதின் சார்பாக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் பொதுப்பணித்துறையினரால் திருச்சிக்கு அருகிலே மேலணையில் ஒரு அணை துவக்கப்பட்டிருப்பதைச் சொன்னார்கள். அது மேட்டூரிலிருந்து அதிகமாக வரும் தண்ணீரை தடுத்து நிறுத்தவும், மழைக் காலங்களில் வரும் வெள்ளத்தால் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படும் சேதத்தைத் தடுக்கவும் நல்ல முறையில் உதவும் என்று கருதுகிறேன். மேலும், தடுத்து வைத்துள்ள தண்ணீரை முறையாக பாசனம் செய்வதற்கு அளிப்பதற்கு உகந்த ஒரு நல்ல திட்டமாகும். இத்தகைய நல்ல திட்டங்களை பொதுப்பணித் துறை மேற்கொண்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு துறைமுகத் திட்டங்களையும் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது. இப்படிப்பட்ட காரியங்களை பொதுப்பணித் துறையினர் திறமையாகச் செய்து வருகிறார்கள். இப்படி நல்ல காரியங்களையெல்லாம் அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டு வர வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறார்கள். இதே துறையை ஒரு காலத்தில் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் என்பதை, பப்ளிக் வேஸ்ட் டிபார்ட்மெண்ட் என்று சொல்வார்கள். அதாவது அரசாங்கத்திற்கு நஷ்டம் தரும் துறை என்று சொல்வார்கள்.

ஆனால் இன்றைக்கு மக்களுக்கு நல்ல தொண்டுகளை செய்து வரும் துறையாக இது விளங்குகிறது. நாட்டு மக்களுக்கு உணவு உயிராக இருக்கிறது. அதைப்போல் பொதுப்பணித் துறை நாட்டுமக்களுக்கு தொண்டு செய்கிற உயிர்நாடியாக விளங்குகிறது என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் நிறைய ஆறுகள் இருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணியில் மற்ற மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைவிட தஞ்சை மாவட்டத்திற்கு பணம் குறைவு. தஞ்சை மாவட்டத்தை கொஞ்சம் அனுதாபத்தோடு பார்க்க வேண்டும். மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் உணவு தந்து கொண்டிருக்கிறோம், [illegible] இடையே. என்னுடைய தொகுதியில் 12 ஆறுகள் ஓடுகின்றன. ஆறுகளில் தண்ணீர் வருகிற காலத்தில், ஆறுகளின் கரைகள் வண்டல் மண் பகுதியாக இருப்பதால், [illegible] பலவீனமாகப் போய்விடுகிறது. ஆகவே, ஆறுகளின் கரைகளுக்கு கட்டடம் கட்ட வேண்டும். தடுப்புச் சுவர் கட்டியும் ஆறுகளில் தண்ணீர் தேங்கிச் செல்வதால், ஆற்றில் [illegible] கட்டி தலைப்புகளை அமைப்படுத்தித் தரவேண்டும். பழைய தலைப்பு தற்போது மிகக் குறைவான அளவில் இருக்கிறது. ஆகவே, எந்தெந்த ஆறுகளில் எங்கெங்கே தண்ணீர் அளவு குறைவாக வருகிறதோ அங்கெங்கெல்லாம் தடுப்புச் சுவர் [illegible] கட்டி, அந்தத் தலைப்புகளையும் அமைப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற [illegible] ஒரு காலத்தில் கட்டப்பட்டவை. அந்தப் [illegible] நிலம் மேடு பள்ளம் அதிகமாகிக் கொண்டு இருப்பதால், அந்தக் கால்வாயை சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிய கால்வாய் வைக்கும் நேரத்தில் நிலத்தை கையகப்படுத்தும் பிரச்சினை வருகிறது. 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தின் மத்தியில் அந்த கால்வாய் வந்தால், அந்த நிலம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறதே என்று கவலைப்படுகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலத்தை [illegible] நிலச் சொந்தக்காரர்களுக்கு அதி [illegible] அந்த நிலத்தை கையகப்படுத்திக்கொண்டு, புதிய வாய்க்கால் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது அப்படிப்பட்ட நிலச் சொந்தக் காரர்களுக்கு பொதுப்பணித் துறை [illegible] புறம்போக்கு நிலம் அல்லது அரசாங்க புறம்போக்கு நிலம் [illegible] என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பொதுப்பணித் துறையில் இப்பொழுது [illegible] எடுத்துக் கொண்டாலும், மற்ற ஆறுகளை எடுத்துக் கொண்டாலும் சரி, [illegible] ஒரு சுவர், ரிவெட்மெண்ட் போடுவது தடுக்க முடியாது. ஒரு பகுதியில் பள்ளம் மாறி மேடாகப் போய்விடும். தடுப்புச் சுவர் கட்டுகின்ற வேலையை தொடர்ந்து செய்ய வேண்டும். அப்போதுதான் மேடு பள்ளம் இருக்காது. தண்ணீர் வருகின்ற நேரத்தில் எங்கெங்கே தண்ணீரைத்



தேக்கி, எங்கெங்கே பாய்வதற்கு வசதி செய்ய முடியுமோ, அந்த அளவுக்குச் செய்ய வேண்டும். [illegible] தேக்கி, கடலில் அறவே போய் விழாமல் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் 12 ஆறுகள் இருக்கின்றனவென்றால், பல ஆறுகளுக்குப் பல காலமாக வண்டிகள் செல்லுகின்ற பாலம் இல்லை. நான் இருக்கின்ற இடத்தில் உள்ள பழவாற்றைக் குறித்து கடந்த 8 ஆண்டு காலமாக, பஞ்சாயத்து ஒன்றியத்திலும், மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்திலும், சட்ட மன்றத்திலும், பழவாற்றில் ஒரு பாலம் இல்லாததைக் குறித்துப் பேசியிருக்கிறேன். அந்தப் பாலம் இல்லாததால், திருப்பனந்தாள், தஞ்சாவூர், மாயவரம் செல்லும் சாலையில் 50, 60 கிராமங்களுக்கு வழியில்லாமல் இருக்கிறது. பழவாற்றில் திருப்பனந்தாள் பஞ்சாயத்து ஒன்றியத்தில் திருலோகி வழியாகச் செல்லுகின்ற பாதையில் ஒரு வண்டிப்பாலம் கட்ட வேண்டும். அரசலாற்றில் நல்லிலம் செல்லுகின்ற சாலையில் ஆடுதுறை வருகின்ற வழியாக துக்காச்சி தண்டத்தோட்டம், திருநாகேஸ்வரம் போன்ற பகுதிகளில் ஒரு பாலம் கட்ட வேண்டும். அப்படிக் கட்டினால் அந்த மக்களுக்கு வசதியாக இருக்கும்.

ஆற்றோரங்களில் வண்டிகளும், மற்ற வசதிகளும் செல்ல முடியாமல் இருக்கிற பிரச்சினை பொதுப்பணித் துறையில் இருக்கிறது. ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் விளை நிலங்கள் இருக்கின்றன. டிராக்டரை வைத்து உழவேண்டும். ட்ராக்டரை வைத்து போர் அடிக்க வேண்டும். நகராட்சி, பேரூராட்சியில் இருக்கின்ற கம்போஸ்ட் உரங்களை கொண்டு வந்து வயல்களுக்குப் போட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான ஆற்றங் கரைகளில் போக்குவரத்துக்குரிய பாதைகளாக அமைத்துத் தர வேண்டும். கப்பிச் சாலைகளை அமைத்துத் தர வேண்டும். பொதுப் பணித்துறையினர் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டு, விவசாயிகள் மேலும் உற்பத்தியைத் தொடர்ந்து செய்வதற்கு வசதி செய்து தர வேண்டும்.

இப்பொழுது யாரும் மாடுகட்டி போர் அடிப்பதில்லை. சிமெண்ட் களங்களை அரசாங்கம் போட்டுத் தந்திருக்கிறது. டிராக்டர்களை வைத்து போர் அடிக்கிறார்கள். ஆகவே, டிராக்டர்கள் லாரிகள் வாய்ப்பில் செல்ல முடியாது. அவைகள் செல்லுவதற்கு வசதியாக பாதை அமைத்துக் கொடுக்க வேண்டும். இதனால் உணவு உற்பத்தியை பெருக்கிட வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து தர வேண்டும்.

இன்னும் பொதுப் பணித்துறையை எடுத்துக்கொண்டால், வேலைத் திட்டங்களில் சில பிரச்சினைகள் இருக்கின்றன என்று அசிஸ்டெண்ட் இன்ஜினீயர் தரப்பில் சொல்லப்படுகிறது. இப்பொழுது செங்கல் ரூபாய் 110, 120 ஆயிரத்திற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு வருகிறது. பொதுப்பணித் துறையினரால் போடும் திட்டத்தில் 60,

65 ரூபாய்க்கு மேல் இல்லை. ஆட்களுக்கு கூலி 6, 7 ரூபாய் என்று கேட்கிறார்கள். ஆனால் திட்டத்தில் 3, 3½ ரூபாய்க்கு மேல் இல்லை என்று பிரச்சனையைச் சொல்லி வேலைத்தரம் குறைகிறது என்று குறையைச் சொல்லுகிறார்கள்.

கால நிலவரத்தை அனுசரித்து, அந்த ஏற்றத்தாழ்வுகளை சீர்படுத்தி, வேலைகளை உத்திரவாதம் செய்யுங்கள். ஒரு ஒப்பந்தக் காரர் செய்தால் 3 வருடத்திற்காவது இருக்க வேண்டும். இல்லா விட்டால் மீண்டும் அதைச் செய்து தர வேண்டுமென்ற நிபந்தனை யைப் போடுங்கள். திட்டத்திற்கு ஒதுக்குகின்ற பணத்தைக் குறைத்து, வேலையும் தரமாக இருக்கவேண்டுமென்று சொன்னால் அது முடியாத காரியம். நீங்கள் உரிய பணத்தைக் கொடுக்கவேண்டும்.

வேலையினும் உத்திரவாதம் இருக்க வேண்டும் ஒரு 3 வருடத் திற்கு. அதில் தவறு ஏற்பட்டால் ஒப்பந்தக்காரரை ரத்து செய்து, மீண்டும் வேலையில்லை என்று சொல்லி விடலாம். 3 வருடத்தில் அதில் தவறு ஏற்பட்டால், அதை அந்த ஒப்பந்தக்காரரே செய்ய வேண்டுமென்ற நிபந்தனையைப்போட்டு கொடுக்க வேண்டும். இன்று இருக்கின்ற நிலையில் அவர்கள் சொல்வதில் நியாயமிருக்கிறது. இந்த நிலைமைகளை மாற்றி வேலையில் உத்திரவாதம் இருக்க வேண்டும். அந்த அளவுக்கு பொதுப்பணித் துறையினர் பரிசீலித்து அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இன்னும் அணைகள், நீர்ப்பாசன வசதிகள் செய்து தர வேண்டும். அணைக்கரையில் கொள்ளிடத்திலிருந்து நிறைய நீர் வருகிறது. அதற்கு ரெகுலேட்டர் பாலங்களை 4, 5 அடி உயர்த்தி விட்டால், மன்னியார் பாசனத்திற்கு கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். இன்னும் ஜெயங்கொண்டம், உடையார் பாளையம் போன்ற பகுதிகளுக்கு பம்பு செட்டு மூலமாக பாசன வசதிகள் செய்து கொள்ளலாம். இந்த பழவாற்றின் ரெகுலேட்டரில் தண்ணீர் கசிந்து அதிகமாக போய்க் கொண்டிருக்கிறது. விவசாயிகள் வைக்கோல், புல் முதலியவற்றை வைத்து அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ரெகுலேட்டரை புதுப்பித்து, தண்ணீர் கசிவு ஏற்படாமல் பாதுகாத்து, அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு நன்மை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. என். டென்னிஸ்.—தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது என் கட்சிக் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக் கின்றேன். இந்த மானியக் கோரிக்கைகள் மிகவும் முக்கியமான கோரிக்கைகள், கல்விக்கு அடுத்தபடியாக இவற்றிற்கு அதிக முதலீடு இருக்கிறது. ஆனால் இவ்வளவு முதலீடு இருந்தாலும், செய்யப்பட வேண்டிய வேலைகள் அதிகமாக இருக்கின்றன என்பதை அங்கத்தினர்கள் இங்கு எடுத்துக் கூறியதிலிருந்து தெரிய வருகிறது. சில மாவட்டங்களில் சில பகுதிகள் புறக்கணிக்கப்



பட்டிருக்கின்றன. சில பகுதிகளில் அதிக வேலைகள் செய்யப் பட்டிருக்கின்றன. இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் வேலைத் திட்டங்களிலிருந்து புறக் கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை யாவும் செலவழிக்கப் படுகிறதா என்பதைப் பார்த்தால், அது ஒழுங்காக சுறுசுறுப்பாக வேலை நடத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. வேலைகளின் ரேட், வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப, கூலி உயர்வுக்கு ஏற்ப உடனுக்குடன் மாற்றப்பட்டதாக இல்லை. இதனால் தரக்குறைவான வேலைகள், வேலை நிறைவேற்றப்படாத நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அடுத்ததாக டெக்னிகல் சாங்க்ஷ னுக்கு அதிக காலதாமதம் ஏற்படுகிறது. வேலைகள் ஜூனியர் இன்ஜினியர், ஏ.இ., டி.இ., எஸ்.இ., என்று இவ்வாறு போய் டெக்னிகல் சாங்க்ஷன் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் வேலைகள் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ஏற்ற வேலையில் நிறைவேற்றப்படாத நிலையும் ஏற்படுகிறது. நிர்வாகிகள் திறமையாகச் செயல்படவில்லை. அவர்கள் வேலையை ஒழுங்காக நிறைவேற்றாமல் தொகையை சரண்டர் செய்கிறார்கள். அது வீணாகி விடுகின்ற நிலைமை இருக்கின்றது. அடுத்தது அரசு ஒதுக்குகின்ற தொகை ஏற்ற சமயத்தில், தக்க வேளையில் ஒதுக்கப்படாத காரணத்தாலும் வீணாகி விடுகின்றது. உதாரணமாக மைனர் இரிகேஷனுக்கு ஒதுக்கப்படுகின்ற தொகை ஆண்டு கடைசியில் ஒதுக்கப்படுகின்றது.

இன்னும் அடுத்ததாக எஸ்டிமேட் ரேட் சரியாக தயார் செய்யப்படாத காரணத்தால் இந்த வேலைகளை நிறைவேற்றுவதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. நீர்ப்பாசனத்தை எடுத்துக்கொண்டால் இங்கு பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தி உயர்வு எனக் கூறப்பட்டது. ஆனால், மழை குறைந்தால் உற்பத்திப் பெருக்கம் இல்லை. பசுமைப் புரட்சி இல்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. திட்டமிட்டு செயல்படாத காரணத்தால் இந்தக் குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு நான் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

மழைக்காலத்தில், தண்ணீரைத் தேக்கி பாசனத்திற்கு பயன் படத்தக்க அளவில் அதைச் செய்ய வேண்டும். பூமிக்கு அடியில் இருக்கக் கூடிய தண்ணீரை அதிக அளவில் பயன்படுத்தத் தக்க விதத்தில் பல திட்டங்களைத் தீட்ட வேண்டும். மாஸ்டர் பிளானாக நிரந்தர பரிகாரம் ஏற்படும் வண்ணம் தீட்ட வேண்டும். பழைய குளங்களை சீரமைக்க வேண்டும். புதிய குளங்களை வெட்டுவதற்கும் வழிவகை செய்ய வேண்டும்.

(பிற்பகல் 1-00)

குளங்கள், கால்வாய்கள் ஏற்ற நேரத்தில் தூர் எடுக்கப்பட வேண்டும். இன்று பல குளங்கள் தூர் எடுக்கப்படாமல் மிகவும் மோசமாக இருக்கின்றன; அதனால் தண்ணீர் தேங்க முடியவில்லை. ஆகவே, குளங்களை உடனடியாகத் தூர் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் மடைகள் நல்ல முறையில் இல்லாததால் ஏரி, குளங்களில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட முடியவில்லை. அதையும் சீர் செய்ய வேண்டும்.

சில குளங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருப்பதால் அவைகளை செம்மைப்படுத்த முடியவில்லை. ஆகவே, உடனடியாக ஆக்கிரமிப் பாளர்களை அப்புறப்படுத்தி குளங்களை செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல கால்வாய்களில் தண்ணீர் வினியோகம் சரியாக இல்லாத தால் தண்ணீர் பாழாகப் போய்க் கொண்டிருக்கிறது, அதை அதிகாரிகள் ஒழுங்காக கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மைனர் இரிகேஷனை எடுத்துக்கொண்டால், அதற்கு ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவு. அதிலும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை மிக மிகக் குறைவு. ஒதுக்கப்படும் தொகையும் காலதாமதமாகித்தான் ஒதுக்கப்படுகிறது. அதனால் வேலை ஒழுங்காக நடைபெற முடியவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கடந்த ஆண்டு மைனர் இரிகேஷனுக்காக பிப்ரவரி கடைசியில்தான் பணம் ஒதுக்கப்பட்டது. அதனால், அந்தத் தொகை முழுவதும் செலவழிக்கப்படாமல் பெரும் தொகை சரண்டர் செய்யப்பட்டது. அதனால் குளங்களை நம்பியிருக்கிற விவசாயி களுக்கு பெருத்த கஷ்டமும், பாதகமும் ஏற்படுகிறது. ஆகவே, ஒதுக்கப்படுகின்ற தொகையை உரிய நேரத்தில் ஏற்ற அளவுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு இதுவரையில் மைனர் இரிகேஷனுக்கு அங்கு தொகை ஒதுக்கப்படுவதாக தெரியவில்லை. ஒரு வேலையும் ஆரம்பிக்கவில்லை. இன் னும் காலதாமதம் ஏற்பட்டால் மழை வந்துவிட்டால் அந்தக் குளங்களை பராமரிப்பு செய்ய முடியாது. அதனால் தண்ணீர் தேக்கம் குறைந்து, பெருத்த நஷ்டமும் கஷ்டமும் உண்டாகும். ஆகவே, உடனடியாக ஏற்ற நேரத்தில் இந்தத் தொகையை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் போடப்பட்ட சித்தாறு-பட்டணங்கால், நெய்யாறு, விளாத்துறை லிப்ட் இரிகேஷன் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த அரசால் அந்த திட்டங்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை இருக்கிறது. விளாத்துறை



லிப்ட் இரிகேஷன் திட்டம் வறட்சி காலத்தில் மக்களுக்கு மிகவும் பயன் பட்டு வந்தது. இன்று அத்திட்ட மெஷின்கள் எல்லாம் பிரித்தெடுத்து மாற்றப்பட்டுவிட்டன. அதனால் விவசாயிகளுக்கு பெருமளவில் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் அந்த லிப்ட் இரி கேஷன் மெஷின்களை செம்மையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தை எடுத்துக் கொண்டால் 15,000 ஏக்கர் அளவில் பாசனம் ஏற்படுத்த வேண்டுமென்பது குறிக் கோளாக இருந்தது. ஆனால் இன்று ஏறத்தாழ 9,000 ஏக்கர்தான் பயன் பட்டிருக்கிறது. கல்லுவிளை, காரவிளை ஆகிய இடங்களிலுள்ள பொது மக்களிடமிருந்து பல புது கால்வாய்களுக்கான விண்ணப்பம் இருந்தும், புதுமடைகள் ஏற்படுத்த வேண்டுமென இருந்தும் அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அங்கு "டெயில் எண்ட்" கடைவரம்பு நிலங்களுக்கு தண் ணீர் கிடைக்கவில்லை. பல நேரங்களில் இந்த மன்றத்தில் அது பற்றி சுட்டிக்காட்டியும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில் எடுக்க வில்லை.

சிற்றூர்-பட்டணங்கால் திட்டத்தில் மிடாலம், கீழ்மிடாலம், கீழ்குளம், பைங்குளம் போன்ற இடங்களில் தண்ணீர் என்றும் தட்டு. இதனால் பயிர் ஆண்டுதோறும் கரிவு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பலமுறை சொல்லியும் அரசாங்க அதிகாரிகளும், அரசாங் கமும் அதில் அக்கறை எடுத்துக்கொள்ள வில்லை; இதற்கு தீவிர நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்கள் கன்னியாகுமரி மாவட்ட நீர்ப்பாசன கருத்தரங்கிற்கு வந்தபின்னால் கூறப்பட்டதை இங்கும் கூறுகின்றேன். பெருமளவில் தொகை செலவு செய்து சிற்றூர்-பட்டணங்காலில் இரண்டு கால்வாய்கள் வெட்டப்பட்டும், இதுவரையில் அந்தக் கால்வாய்களில் தண்ணீர் விட வில்லை. அதில் ஒன்று ஆனுன்விளை கால்வாய். கால்வாய் வெட்டப்பட்டு 2, 3, ஆண்டுகள் ஆகியும் தண்ணீர் ஒரு நாளும் விடப்படவில்லை. அங்கு தண்ணீர் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது அரசுப் பணம் விரயமாக்கினதாக ஆகும்.

அடுத்தபடியாக கால்வாய்கள் பராமரிப்பு இல்லை; சில்ட் எடுக்கப்பட வில்லை. அதையெல்லாம் சீர்செய்ய வேண்டும்.

கேரள அரசாங்கத்தோடு நெய்யாறு இடதுகரைசானல் திட்டத்தில் செய்த உடன்பாடு சரியாக நிறைவேறினால் இன்னும் அதிகத் தண்ணீர் கிடைக்கும். இப்போது நமக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் சரியாகச் கிடைக்கவில்லை. உரிய அளவு தண்ணீர் கிடைப்பதற்கு அரசாங்கம் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

பேச்சிப்பாறை அணையில் 35 அடிக்கு மேல் தண்ணீர் இருந்தால்தான் இராதாபுரத்திற்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு போட வேண்டும். இல்லாவிட்டால் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாவார்கள்.

அடுத்தபடியாக, ஏ.வி.எம். கால்வாயில் தேங்காய்பட்டினம் முதல் கொல்லங்கோடு வரை கால்வாய் தூர் எடுக்கவில்லை. அதனால் ஏற்படும் பல கஷ்டங்களைச் சரிப்படுத்த வேண்டும்.

வள்ளியாற்றிலும், பழையாற்றிலும் லிப்ட் இரிகேஷன் திட்டம் போட்டு பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக சாலைகள் பராமரிப்பு பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று நம்முடைய மாநிலத்தில் எல்லா இடங்களிலும் பழுதான சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளில் குழிகள் இருக்கின்றன. அதனால் பெருத்த ஆபத்து ஏற்படுகிறது. புது சாலைகள் போடும்போது, பழுதான அந்த சாலைகளையும் புதுப்பிக்க வேண்டும்.

மாவட்டங்களில் ஒதுக்கப்படுகின்ற "ஹைவேஸ்" ரோட்டின நீளம் ப்ரொப்போர்ஷனேட்டாக இல்லை. சில மாவட்டங்களில் குறைவாகவும், சில மாவட்டங்களில் கூடுதலாகவும் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் மிகவும் குறைவான அளவுக்குத்தான் ஹைவேஸுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பஸ் ரூட் இருக்கக்கூடிய பாதைகளை எல்லாம் ஹைவேஸ் எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்து, தார் போடவேண்டும்.

ரூரல் போர்டு திட்டங்களை எடுத்துக்கொண்டால் வேலைகள் விறுவிறுப்பாக நடைபெறவில்லை. நிலம் ஆர்ஜிதம் செய்வதில் தடை இருக்கிறது. அந்தத் தடைகள் நீக்கப்பட்டு, நில ஆர்ஜிதம் துரிதமாகச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக,கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி "நீரோடி" -கடற்கரையோர ரோடு போடும் திட்டம் பல ஆண்டுகாலமாகவே செயல் படுத்தாமல் இருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, குழித்துறை ஆற்றில் தேங்காய்ப்பட்டினம், திக்குறிச்சி, மாங்காட்டுக்கடவு, ஞாருமினைக் கடவு ஆகிய இடங்களில் பாலங்கள் கட்டப் பட வேண்டியிருக்கின்றன. அவைகளை உடனடியாகக் கட்ட வேண்டும். அதோடு ஞாருன்விளை பாலம் வேலை மிகமிக அவசியமாகத் தீர்க்கவேண்டும். அதையும் உடனடியாகக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.வி.எம். கால்வாயில் பல பாலங்கள் பழையனவாக, . ஆபத்தான நிலையில் இருக்கின்றன. அவைகளைப் புதுப்பித்துக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறை ஆற்றில் தேசீய நெடுஞ்சாலைப் பாலம் இருக்கிறது. அதை அமைச்சரவர்கள் அகலப்படுத்துவதாக இந்தச் சபையில் சொன்னார்கள். அதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



கட்டடங்களை எடுத்துக்கொண்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக கட்டடங்கள் கட்டும் திட்டம் எதுவும் இந்த அறிக்கையில் சொல்லப்பட வில்லை. பல அலுவலகங்களுக்கு அங்கு கட்டடங்கள் இல்லாத நிலை இருக்கிறது. அவைகளுக்கு எல்லாம் கட்டடங்கள் கட்ட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோயில் மருத்துவ மனையில் இட நெருக்கடி இருக்கிறது. ஆகவே, மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டும்.

பள்ளிக் கட்டடங்கள் பல கட்ட வேண்டியிருக்கின்றன. பல பள்ளிகள் ஷெட்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கட்டடம் இல்லாமலேயே பரம்பு என்ற இடத்தில் ஐந்து ஆண்டுகளாக பள்ளி நடந்துகொண்டிருக்கிறது. உடனடியாக அங்கே ஒரு பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டும்.

அதைப்போல கருங்கல், தேங்காய்ப்பட்டினம், நட்டாலம் ஆகிய இடங்களில் உயர்நிலைப்பள்ளிக் கட்டடங்கள் உடனடியாகக் கட்டப்படவேண்டும்.

அடுத்தபடியாக, ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். நீர் மட்டங்களை கண்டறிவதற்கு "இன்வெஸ்டிகேஷன் சார்ஜ்" முனிசிபாலிட்டிகளும், பஞ்சாயத்துகளும்தான் தரவேண்டியிருக்கிறது. பல பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிட்டிகளிலும் அதற்கு போதுமான நிதி வசதி இல்லை. நிதி வசதி இல்லாததால் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். அப்படியே கொடுத்தாலும் சில சமயங்களில் திட்டங்கள் நிறைவேற முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. அதனால் முனிசிபாலிட்டிகளும், பஞ்சாயத்துக்களும் கஷ்டப் படுகின்றன. ஆகவே, இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜை அரசாங்கமே கொடுக்க வேண்டும். புதுக்கடை குடி நீர் திட்டத்தை நடைமுறைப்படு வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி கடல் அரிப்பு ஏற்படுகிறது. அதனால் வீடுகள் பல, கடலில் அடித்துச் செல்லப்படுகின்றன. பெருமளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. இந்த கஷ்டத்தைப் போக்க வேண்டும். இதற்கு பரிகாரம் காண கேரளத்தில் சில இடங்களில் செய்திருப்பதைப்போல கல்லை கடலில் அடுக்கி (டம்பிங் ஆஃப் ஸ்டோன்ஸ்) கடல் அரிப்பைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குளச்சல் துறைமுகம் இருக்கிறது. மேற்குக்கரையில் இருக்கிற ஒரே துறைமுகம் இதுதான். இது சரித்திரப் பிரசித்திபெற்ற துறைமுகம். இந்தத் துறைமுகத்தைச் சீர்படுத்தி, விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. தொ. க. சிறைமீட்டான் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட வறட்சியால் பயிர்கள் எல்லாம் காய்ந்துவிட்டன. 100 ஆண்டு காலத்தில் இப்படிப்பட்ட வறட்சி ஏற்பட்டதில்லை என்று பெரியவர்களால் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் நம்முடைய அரசு பல்வேறு வகைகளில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, பொதுப் பணித்துறையின் மூலம் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றும் வகையில் இன்று வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஜூபிலீ காலத்தில் இருந்து இன்றுவரை மராமத்து செய்யப்படாத பல கண்மாய்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கின்றன. அந்தக் கண்மாய்களை எல்லாம் மராமத்து செய்ய ஒரு திட்டத்தை அறிவித்திருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதே நேரத்தில் பொதுவாக விவசாயிகளுக்கு நிரந்தரமான நீர்ப்பாசன வசதி அங்கு கிடைப்பதில்லை. ஆண்டுதோறும் வறட்சியால் அடிபட்டு வரக்கூடிய மாவட்டம் அது. அதுவும் இந்த ஆண்டு பெரும் வறட்சி ஏற்பட்ட காரணத்தினால் நிலம் உள்ளவர்கள் நிலம் இல்லாதவர்கள் ஆகிய எல்லோருமே அந்த மாவட்டத்தைவிட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. முன்பு எங்கள் மாவட்டத்தைவிட்டு அடுத்த மாவட்டத்திற்குச் சென்றவர்கள் எல்லாம் அங்கேயே வாக்குரிமை பெற்று தங்கிவிட்டார்கள். இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலம் உள்ளவர்கள் கூட வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பெரியவர்கள் சொல்வார்கள் - 'நிலம் விளைந்தால் தான் விவசாயி—விளையவில்லை என்றால் கூலிக்காரன் என்பார்கள். நிலம் ஆயிரக்கணக்கில் இருந்தாலும் மழை இல்லை—விளையவில்லை என்றால் அவரும் கூலிவேலையைத் தேடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நாட்டுக்கு உற்பத்தியைப் பெருக்கித் தருகின்ற விவசாயிதான் முதலில் பாதிக்கப்படுகிறான் என்பதை நாம் சற்று உணரவேண்டும்.

இதை மனதில் வைத்துக்கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நிரந்தர பாசன வசதியை எப்படி ஏற்படுத்தித் தருவது என்பதை நமது அரசாங்கம் யோசிக்க வேண்டும். மழை பெய்கிற காலத்தில் கூட மழையைக் கண்டு அந்த மாவட்ட விவசாயிகள் புஞ்சைப் பயிரை வைக்கிறார்கள் என்றால் தொடர்ந்து மழை இல்லாது போனாலும், அறுவடைக்கு சிறிது முன்னால் மழை இல்லாது போனாலும் பயிர் சாவியாகிவிடுகிறது. இல்லை ஒரு பக்கம் விளையும்—பெரும்பகுதி வீணாகிவிடுகிறது. இதனைப் போக்க இந்த அரசு சிறப்புத் திட்டமாக பத்து எக்கரா, பதினைந்து எக்கரா புஞ்சை நிலத்திற்கு இடையில்—இப்போது கிணறு எடுப்பது போல ஊரணி எடுத்துக்கொடுக்க ஆவன செய்யவேண்டும். கிணறு வெட்ட லோன் கொடுப்பது போல ஊரணி, குளம் அமைக்க பொதுப் பணித் துறை மூலமாகவே வெட்டிக் கொடுக்க சிறப்புத் திட்டம் ஒன்றை அந்த மாவட்டத்திற்கு வகுத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் புஞ்சை நிலத்திற்காவது நிரந்தர பாசன வசதியை அமைத்துக் கொடுக்க முடியும்.



இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற கடும் வறட்சியினால் அந்த மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்படாதிருக்க நாம் பல திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறோம். ஒரு வாரம் முன்பாக சிறிது மழை பெய்தது. உடனே டெல்லியில் உள்ளவர்கள் தென் மாநிலத்தில் மழை பெய்து விட்டது என்று சொன்னார்கள். இதனால் வறட்சி நீங்கிவிடவில்லை. நீங்கியும் விடாது. அங்கு நடைபெறுகிற வேலை சிறப்பாக நடைபெறுவதற்குத் தான் இந்த மழை உதவியிருக்கிறதே தவிர விவசாயம் செய்வதற்கு உதவியான பெரிய மழை இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த மாவட்டத்திற்கு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றித் தந்தாக வேண்டும். முன்பு குறிப்பிட்டதைப் போல புஞ்சை நிலங்களுக்கிடையே சிறப்புத் திட்டமாக ஊரணிகளை அமைத்துத்தர தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்றையதினம் வைகைக் கால்வாய் திட்டம் நல்லமுறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தெற்கு கடற்கரைச் சாலையைப் பொறுத்த வரையில் ஏனோதானோ என்றுதான் இருக்கிறது. சேதுசமுத்திரத் திட்டத்தைப் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்கு வசதியாக இருக்கும். அதை நிறைவேற்றித்தர தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் பரமக்குடியில் இருந்து சாயல்குடி செல்கிற சாலையில் வெகுகாலமாக பஸ் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் அந்த சாலை மேம்படுத்தப்படாமல் அப்படியே இருக்கிறது. இதைச் சட்டமன்றத்தில் நானும் பலமுறைகளாகச் சொல்லி வருகிறேன். ஒரு வாரத்திற்கு முன்னால் அரசு போக்குவரத்துக் கழக பஸ் ஒன்று கவிழ்ந்துவிட்டது. இதை கவனத்தில் கொண்டு அந்தச் சாலையைச் செப்பனிட்டுத்தர தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூரில் இருந்து பரமக்குடி செல்கிற சாலையில்—விளத்தூர் வழியாக அபிராமபுரம் வழியாக பார்த்திபனூர் செல்கிற வழியில்—கூத்தன் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது—அந்த கூத்தன் கால்வாய்க்குக் குறுக்கே பாலம் இல்லாததால் பஸ் போக்குவரத்து நின்றுவிடுகிற சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தையும் உடனடியாக அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பஞ்சாயத்து யூனியன் மூலமாக ரோடு வேலைகள் செய்கிறார்கள். சிறு பாசனக் கண்மாய்வேலைகள் செய்கிறார்கள். ரோடு வேலைகளை பஞ்சாயத்து யூனியன் என்ஜினியர்கள் மூலமாகச் செய்தாலும் ஹைவேஸ் பொறியாளர் அதைப் பார்வையிடுகிறார். அதைப்போல நீர்ப்பாசன வேலைகளைச் செய்கிறபோதும் நீர்ப்பாசனத் துறை பொறியாளர் அதைப் பார்வையிடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இந்த கடுமையான வறட்சி நேரத்தில் எடுத்துக்கொள்கிற வறட்சி நிவாரணப் பணிகள் மூலமாக அந்த மாவட்டத்தில் நிரந்தர நீர்ப்பாசன வசதி செய்து தர வேண்டுமென்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

*Thiru K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I thank you very much for having given me an opportunity to say a few words on the cut motions that I have given for the Demands Irrigation and Public Works which are fundamental in nature and upon which all the other Demands, about 49 Demands, depend.

At the outset, I wish to thank this Government and also the Hon. Minister-in-charge of this department and the Officers-top to bottom-who have been very kind towards Dharmapuri district. Because I have been explaning this and appealing to the previous Government even before this Government came to power , but I know how it was neglected . But, fortunately now we are having a number of schemes. A number of tanks have been improved or repaired. We are having one or two dams already constructed. Some new roads have been laid. They have got bus routes also. Dharmapuri was neglected for centuries and centuries. More over in Dharmapuri district-Hosur and Denkanikottah taluks are all ex-zamindari areas and their backwardness is too much. Therefore, it requires a lot of sympathy and also action to improve the areas.

With regard to irrigation facilities, already one or two small dams have been constructed. This year the Government have been kind enough to sanction Doddahalla Scheme. It has been pending there for so many years and I request the Hon. Minister to see that it is taken up early. Even some two or three months back the Hon. Minister came to Hosur. He was very kind to say that it had been sanctioned.

With regard to another big dam, Kalavarapalli dam, it irrigates about 5,000 acres and also it is at the centre of the taluk. It will provide good drinking water to Hosur town also. The investigation has been completed and even last year it was included in the Budget, but somehow left out. It is a very important dam and it is required for the improvement of the taluk. Therefore, I request the Hon. Minister to see that sanction is accorded to it early. It costs about Rs. 2 crores and 4 lakhs. The Government have already spent a sum of Rs. 40,000 or 50,000 for investigation. Every day some officers from the Central Government or the State Government will be coming there and people are eagerly expecting that this Government which have been very kind will take up this schemes in the interests of the suffering peoples of that area, the last border area of the district.

With regard to Kodiyalam dam, it is about 10 miles from Hosur and it has already been constructed but two channels have to be constructed and the work is pending. Unless these channels are constructed, it is difficult to take water to the fields. So they have to be completed.



With regard to Vempalli Dam, in Sulagiri block investigation has been completed and it is estimated to cost about Rs. 48 lakhs and it will irrigate 800 acres in Sulagiri and Berigai areas. This has to be constructed soon.

Another dam under construction is Kuppama Cheruvu dam which is near the Mysore border. 90 per cent of the work has been completed. The rest of the work has not been completed. Unless it is completed before the onset of summer rains, the Government will be put to a loss of about Rs. 60,000. So the small work which is remaining has to be done immediately.

Another important matter is that in Hosur and Denkanikottah taluks, there are about 200 villages and more than two-third of them are ex-zamin areas and they are situated in Berigai, Sulagiri and Bagalur firka. They have been neglected and they are in a dilapidated condition, Three years ago we represented to the then Minister for irrigation, Thiru Sadiq Pasha at Harur that these villages should be taken up for separate investigation and separate officials should be appointed and special funds should be allotted. Now I learn that they have been taken up for investigation by the Public Works Department. But they have stated that only those tanks which can irrigate more than 100 acres would be taken up by them and those tanks which can irrigate less than 100 acres will be taken up by the panchayat unions. As the panchayat unions have no funds, they will not be able to desilt the tanks properly. Further, people are not satisfied with the work of the Panchayat Unions. So, I request the Hon. Minister to bring those tanks which can irrigate less than 100 acres up to 30-35 acres under the control of the Public Works Department . There are hundreds of tanks which have to be desilted in my district. I request him to look into this matter.

There are a number of ghat roads in our taluk because the Mysore Tableland slowly comes down to the plains through Hosur Taluk. There is a Ghat road from Berigai to Veppanapalli via Tirtham. The bends are very sharp and abrupt and buses are not able to cross them very easily. A diversion road should be constructed so that buses can ply easily. I request the Hon. Minister to sanction for the consrtuction of this road immediately.

Then the road from Sulagiri to Varasandram has to be constructed. Sir, under the crash programme in Sulagiri area 20 roads have been constructed. In Kelamangalam Block also 20 roads have been constructed. But they have not been metalled. When rains come, they will be washed away. We have spent a lot of money on these roads and so I request the Hon. Minister to see that they are metalled.

Then Sir, in Hosur a number of industries are to be set up. Already lands have been purchased and buildings are being constructed. With regard to the supply of water for these industries, it has to be taken from South Pennar or Cauvery. For the Bangalore City, water is taken from the Cauvery for drinking purposes and industries. So also for the Hosur town, water has to be taken from South Pennar or Cauvery. So, I request the Government to see that water is supplied to the industrial areas in our district, especially Hosur Taluk.

திரு. பி.பொன்சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு அனுமதி தந்தமைக்காக எனது நன்றி கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பொதுப் பணித் துறை மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்தில், இந்த நாட்டு மக்களுக்கு இருக்கக்கூடிய அத்தியாவசியமான காரியங்கள் அத்தனையும் இந்தப் பொதுப் பணித் துறை மூலமாக நடைபெற்றுக்கொண்டு வருவதை நான் இந்த மன்றத்தில் மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது பல ஆண்டு காலத்திற்கு முன்பு "வீராணம்", "வீராணம்" என்று கட் மோஷன் கொடுத்தவர்கள் கூடச்சொன்னார்கள். அந்த வீராணம் ஏரி எப்போது யாரால் வெட்டப்பட்டதோ அந்த ஏரியை இன்றைய தினம் தூர் வாரி, கரை கட்டி, நீர்ப்பாசன வாய்க்கால்களுக்குக் கரையை உயர்த்தி ஸ்லாப் சிஸ்டம் என்ற பெயரால் பெரிய திட்டத்தை உருவாக்கி, ஏறக்குறைய 5, 6 கோடி ரூபாய் அரசு செலவு செய்து இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு அறிவித்தது உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், கால்நடைகளை வளர்ப்பதற்கும், கல்விச் சாலைகளை கட்டுவதற்கும், இன்னும் சாலைகளைப் போடுவதற்கும் இந்தப் பொதுப் பணித்துறை வசதி செய்து இருக்கிறது. சாலைகளைப் பராமரிப்பதற்குப் பொதுப்பணித் துறை மிகவும் அத்தியாவசியமான துறையாக இருக்கிறது என்பதைக் கூற முடியும். நீர்ப்பாசனத் துறை நாட்டுக்கு அத்தியாவசியமான துறை. அந்த நீர்ப்பாசனத் துறையிலே பணியாற்றும் அதிகாரிகள் மிகவும் கவனத்துடன் பணியாற்றிய காரணத்தினால் என்னுடைய சிதம்பரம் வட்டாரத்தில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஏக்கர் நிலம் சாகுபடி இல்லாமல் போன நேரத்தில், கல்லணையிலிருந்து தண்ணீரைக் கொண்டு வந்து, விவசாயிகளுக்கு வளம் குளிர வைத்த பெருமை அந்தத் துறையைச் சாரும். அதற்காக அந்த அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், நீர்ப்பாசன மாநாட்டில், தென்னாற்காடு மாவட்டத்தில் நடந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மற்றும்



பொதுப் பணித் துறை அதிகாரிகளும் இருந்தார்கள். சிதம்பரம் வட்டாரத்தில் இருக்கும் ஏறத்தாழ 25 ஏரிகள் பற்றி மட்டும் அல்ல, தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக சிதம்பரம் வட்டாரத்தில் உள்ள அதிகமான அளவில் விவசாயம் உற்பத்தி செய்யக்கூடிய நன்செய், புன்செய் நிலங்களைப் பற்றியும் ஏரிகளைப் பற்றியும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில், அந்தக் கருத்தரங்கில் கூறியிருந்தேன். அந்தக் கருத்தரங்கில் கூறியதற்குப் பிறகும், அந்த 25 ஏரிகள் ஏறக்குறைய 11 ஆயிரம் ஏக்கராவுக்குப் பாசனத்திற்குரிய ஏரிகள் என்பதை தலைமைப் பொறியாளர் அவர்களிடத்தில் தெரிவித்ததற்குப் பிறகும் அந்த ஏரிகளைத் தூர் வார ஒதுக்கிய தொகை மிக மிகக் குறைவான தொகையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கவனப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. காரணம், தூர்ந்து போன ஏரிகளைத் தூர் வார ஏதாவது வறட்சி நிவாரண...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சபையின் அனுமதியுடன் இன்னும் 5 நிமிடங்கள் நீட்டித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு): அவர் சிதம்பரம் போகிறார்.

[பிற்பகல் 1-30]

திரு. பி. பொன்சொக்கலிங்கம்: அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் பணி செய்வதற்கு, இந்த ஏரிகளை உடனடியாகத் தூர் வாரவேண்டும். அப்படி தூர் வாரினால் அது மூன்றுபோக சாகுபடிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன். அதைத் தூர் வாருவதற்கு, இன்றையதினம் வறட்சிப் பகுதியென்பதால், ஏழை எளிய மக்களுக்கு வேலை கொடுத்துத் தூர் வார வேண்டுமென்று எண்ணாமல், மெஷின்களை வைத்து சரியாகத் தூர் வாரினால் அது அந்தப் பகுதி மக்கள் பாராட்டக்கூடிய ஒன்றாகயிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டே சொன்னேன். கிணற்றுமூலைக்குத் தடுப்புச் சுவர் கட்டவேண்டுமென்று. அதற்காக ரூ. $6\frac{1}{4}$ இலட்சம் மதிப்பிடப்பட்டு, ஒப்பந்தக்காரர்களிடம் வேலையை ஒப்படைத்திருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தின் காரணமாக, ஒப்பந்தக்காரர்கள் அதைக் கட்ட முன்வரவில்லை. அதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அந்தப் பகுதியில் உள்ள ஏரிகளின் விவரத்தையும் இங்கே சொல்வது நல்லது என்பதால் அவற்றைச் சொல்ல விரும்புகிறேன். குளமங்கலம் ஏரி 602 ஏக்கர் பாசனத்திற்கு உரியதாகும். மேல்புளியங்குடி ஏரி, கீழ் புளியங்குடி ஏரி 249 ஏக்கர் பாசனத்திற்கு உரியதாகும். வக்கரமாரி ஏரி 288 ஏக்கர் பாசனத்திற்கு உரியதாகும். நகர்பாடி ஏரி 509 ஏக்கர் பாசனத்திற்கு உரியதாகும். நெடுஞ்சேரி 303 ஏக்கர், கோனூர் ஏரி 416 ஏக்கர், அரியாவி ஏரி 213 ஏக்கர், பூவனூர் ஏரி 394 ஏக்கர், கீரனூர் 203 ஏக்கர், தீவனூர் ஏரி 268 ஏக்கர், கானூர் ஏரி 354 ஏக்கர், பெரிய பாண்டியன் ஏரி, சின்ன பாண்டியன் ஏரி 874 ஏக்கர், பாளையங் கோட்டை ஏரி 415 ஏக்கர், வளையமாதேவி ஏரி 928 ஏக்கர், குறிஞ்சி

கொல்லை ஏரி 826 ஏக்கர், நெல்லிக்கொல்லை ஏரி 409 ஏக்கர், எறும்பூர் ஏரி 360 ஏக்கர், சின்ன நெற்குளம் ஏரி 376 ஏக்கர், ஆணைவாரி ஏரி 301 ஏக்கர்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த ரெக்கார்டுகளை நீங்கள் கொடுத்துவிடலாமே, படிக்க வேண்டுமா? நீங்கள் வேறு ஏதாவது பேசுங்கள்.

திரு. பி. பொன்சொக்கலிங்கம்: அந்த ஏரிகளைத் தூர் வாரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பிரச்னையைப் பொதுப் பிரச்னை என்று கருதி, அது உணவு உற்பத்திக்கான பிரச்னை என்று கருதி, பொதுப் பணித்துறை முதல் வேலையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி வேலை செய்தால், நிச்சயமாகப் பலன் உள்ள காரியங்கள் ஏற்படும். ஆகவே, உணவுப் பிரச்னைக்காக அந்தக் காரியங்களில் ஈடுபட வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். காரணம், உணவை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டிய நிலையிலிருக்கிறோம். இந்த ஏரிகளையெல்லாம் வெள்ளத் தடுப்பு என்ற காரணத்தினால் கரைதட்டி, சென்ற ஆண்டிலே பணி செய்துள்ளதால் குறைந்த செலவிலே தூர் வார முடியும். கடந்த ஆண்டு................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்முடைய மானியக் கோரிக்கைகளை மாலை நேரத்திலும் வைத்துக்கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவெடுக்கப்பட்ட பிறகு, மீண்டும் அலுவல் ஆய்வுக் குழு கூடி, இதற்குப் பிறகு ஓட் ஆன் அக்கவுண்ட் எடுத்துவிடுவது, நீண்ட நாளைக்கு மானியக் கோரிக்கைகளை வைத்துக் கொள்வது என்று முடிவெடுத்த பிறகு, அவையை 1½ மணிக்கு மேலும் 1¾ மணி, 2 மணி வரை என்று ஆக்கிக்கொண்டு போனால், சட்டசபை நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டு வேறு பணிகளைக் கவனிக்க முடியவில்லை. ஆகவே ஒவ்வொரு நாள் மானியத்தையும் 1½ மணியோடு முடித்துவிடுவதுதான் நல்லது. இரண்டு நாள் மானியம் என்று வைத்திருக்கும்போது 1½ மணிக்கு முடிக்காமல், 1¾ மணி, 2 மணி என்றெல்லாம் அவையை நடத்திக் கொண்டு போக அனுமதிப்பது உள்ளபடியே தேக ஆரோக்கியத்திற்குக்கூட கெடுதி என்று நாங்கள் கருதுகிறோம்.

ஆகவே, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விவாதத்தின்போதும், எந்த அளவில் இருந்தாலும், விவாதம் முடிவுற்றாலும் முடியாவிட்டாலும், நீங்கள் தயவுசெய்து அவையை 1½ மணிக்கு முடித்துவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நானும் அந்த ஆலோசனைக்கு ஏற்றவாறு நடந்துகொள்வதுதான் பொருத்தம் என்று கருதுகிறேன். பி.ஏ.சி.யில் இதைப்பற்றி முடிவெடுத்தள்ளோம். ஆகவே இந்த ஆலோசனையை மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக இருப்போம் என்று உறுதியளிக்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைப் போலவே ஒவ்வொரு உறுப்பினரும்—ஆளுங்கட்சி சார்பில் நான் ஒரு உறுதிமொழியளிக்க விரும்புகிறேன்—7, 8, 9 நிமிஷத்திலே முடிக்க வேண்டுமென்று அனுமதிப்பீர்களானால் 8-வது நிமிஷத்தில் அல்லது முடிப்பதற்கு முன்னால் ஒரு நிமிஷத்தில் மணி அடித்துவிட்டால் அவர் முடித்துக் கொள்ள வேண்டும். அப்படி முடிக்கவில்லையென்றால், 10 நிமிஷம் என்றால், 10 நிமிஷம் முடிந்தவுடன் மணியடித்து, இன்னொருவர் பெயரைக் கூப்பிட்டுப் பேசச் சொன்னால்தான் முறையாக அவை நடக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த அவையை 1½ மணி அளவிலே முடிக்க வேண்டுமென்பதிலே எல்லோரும் ஒற்றுமையாக இருப்பதால், பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-35 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

'NIL'

### B. Reports, Notifications and Other Papers.

@ 68. The Performance Budget on Health Services and Family Planning, 1975–76.

@ 69. Policy Note on Demand No. 34. Urban Development, 1975–76 (English and Tamil).

@ 70. District Maps showing Family Planning Centres and Medical Institutions in Tamil Nadu, 1975.

@ Despatched to Members on 12th March 1975.

[......518-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## பாசன-பொதுப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகள், 1975-76

*மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 36. பாசனம்" என்பதன்கீழ் ரூ. 19,71,79,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 51. பாசனம் மீதான மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 17,25,79,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 37. பொதுப் பணிகள்—கட்டிடங்கள்" என்பதன்கீழ் ரூ. 3,51,01,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பு" என்பதன்கீழ் ரூ. 4,62.86,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 39. சாலைகளும் பாலங்களும்" என்பதன்கீழ் ரூ. 20,99,35.000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, கோரிக்கை எண் 48—மக்கள் நல்வாழ்வு, துப்புரவு, நீர் வழங்குதல் மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ், ரூ.20,000,831-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 52. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் மீதான மூலதனச் செலவு" என்பதன்கீழ் ரூ. 9,18,53,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரைக்கிணங்க, "கோரிக்கை எண் 55. சாலைகள், பாலங்கள் மீதான மூலதனச் செலவு"



என்பதன்கீழ் ரூ. 4,21,37,000-க்கு மேற்படாத தொகை அரசிற்கு வழங்கப்பட வேண்டுமென்று நான் முன்னுரைக்கிறேன்.
ரூ. 94,83,000 ஆகும்.

ஏற்கெனவேயுள்ள பாசன ஏற்பாடுகளை விரிவுபடுத்தவும், அவற்றை மேம்படுத்தவும் அவற்றிலிருந்து உரிய அளவு பயனைப் பெறும் வண்ணம் அவற்றைச் சரியான நிலையில் வைத்திருக்கச் செய்யப்படும் இயல்பான பேணுதல் செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் சேதங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றிற்காகும் செலவும், நடப்பு வருவாயிலிருந்து "கோரிக்கைகள் 36. பாசனம்" ஆகியவற்றின்கீழ் அளிக்கப்படும் மானியத்தின் மூலம் பெறப்படும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்ற அல்லது இவ் வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிற புதிய பாசனத் திட்டங்களின் மீதான செலவின் பெரும் பகுதி "கோரிக்கை 51. பாசனம் மீதான மூலதனச் செலவு" என்னும் தலைப்பின்கீழ் அளிக்கப்படும் மானியத்திலிருந்து பெறப்படும்.

கட்டிடங்கள், பல்வகைப் பணிகள், போன்ற மூலப் பணிகளுக்கும், கட்டிடங்களைக் கட்டுதலும் சீரமைத்தல் போன்ற பழுதுபார்த்தல் செலவுகளும், இப்போதுள்ள கட்டிடங்களைப் பேணி வருவதற்குரிய இயல்பான செலவுக்கும் உள்ள நிதி ஒதுக்கீடு கோரிக்கை 37-ல் அடங்கும். பொதுப்பணித் துறைப் பணியாளர்களுக்காகும் மொத்த செலவு கோரிக்கை 38-ன் கீழ் வருகிறது. சாலைகள், பாலங்கள், பல்வகைப் பணிகள் போன்ற மூலப்பணிகளுக்கும், சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், சாலைகள், பாலங்கள், ஆகியவற்றைச் சீரமைத்தல் போன்ற பழுது பார்த்தல் பணிகளுக்கும், இப்போதுள்ள சாலைகளையும், பாலங்களையும் பேணி வருவதற்குரிய இயல்பான செலவுக்கும் உள்ள நிதி ஒதுக்கீடு கோரிக்கை 39-ல் அடங்கும். இதில், நெடுஞ்சாலைகள் துறையின் பணியாளர்களுக்காகும் மொத்தச் செலவும் அடங்கும். ஒவ்வொன்றும் தனித்தனியே ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டு செலவாகிற சாலைகள், கட்டிடங்களுக்குரிய புதிய பணிகளுக்கும் அல்லது தனித்தனியே இந்தத் தொகை வரம்புக்குக் குறைவாக இருப்பினும், மொத்தத்தில் ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் செலவாகக் கூடிய ஒரு திட்டத்தின் பாகமாகவுள்ள பணிகளுக்கும் ஆகும் செலவு முறையே 52, 53-வது கோரிக்கைகளின்கீழ் பெறப்படுகிறது.

இவ்வாறு 1975-76-ல் பாசனம், கட்டிடங்கள், சாலைகள் ஆகியவை குறித்துச் செலவிடக் கருதப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ. 79,50,70,000-ம் நீர் வழங்குதல் மீதான மூலதனச் செலவாக அனுமதிக்கப்பட வேண்டிய தொகை ரூ. 94,83,000 ஆகும்.

பருவ மழை நிலைமைகளைப் பொறுத்த வரையில், 1974-75-ஆம் ஆண்டு, தமிழ் நாட்டிற்கு மிக மோசமான ஆண்டாக அமைந்து விட்டது. தென்மேற்குப் பருவக் காற்று மழை மிகவும் காலம் கடந்து பெய்தது மட்டுமின்றி, இயல்பான அளவிற்கும் மிகக் குறைவாகவே பெய்தது. மேட்டூர், அமராவதி, வைகை, கோதையாறு உட்பட பெரிய நீர்த் தேக்கங்களைத் திறந்து விடுவதும் தாமதப்பட்டது. மேட்டூர் நீர்த்தேக்கம் 20—7—74ஆம் நாளன்றுதான் திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கடந்த 100 ஆண்டுகளில் எப்போதும் கண்டிராத அளவுக்கு வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், நாம் மிகக் கடுமையான வறட்சியை அனுபவிக்க வேண்டியதாயிற்று. இதனால், நீர்த்தேக்கங்களில் தேங்கியிருந்த நீருக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டது. ஏனெனில், வழக்கமாக, ஆங்காங்கு பெய்யும் மழையே அவ்வவ்விடங்களின் தேவையை நிறைவுசெய்து விடுகின்ற காலங்களில்கூட, பாசனம் பேணப்பட வேண்டியிருந்தது. இந்த இடையூறுகள் இருந்தும் கூட, நீர்வழங்குவதைக் கவனமாக முறைப் படுத்தியும், நீர்விடுவதில் பகுதிகள் தோறும் முறை ஏற்பாட்டைச் செயற்படுத்தியும், பெரிய ஆற்றுப்பாசன ஏற்பாடுகள் அனைத்திலும் பயிரிடப்பட்ட பயிர்கள் முழுவதற்கும் நீர்விடப்பட்டுள்ளது. இருப்பினும், மணிமுத்தாறு, வீடூர், மணிமுக்தாநதி ஆகிய நீர்த் தேக்கங்கள் சிலவற்றின் கீழுள்ள ஆயக்கட்டுகளுக்கு நீர்வழங்க இயலாதென மறுக்கவேண்டி வந்தது. காவிரி கழிமுகப் பகுதிகளில், ஏற்கெனவே வளர்ந்திருந்த பயிர்களைக் காப்பாற்ற வேண்டி, கீழ் பவானி திட்டத்திலிருந்து கிடைக்கும் நீரைத் திருப்பிவிட வேண்டியிருந்ததால், அங்கும் இரண்டாவது முறை ஏற்பாட்டிற்கு நீர் திறந்து விடப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்கீழ் சொல்லியுள்ளவாறு, ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான விதிகளை வகுக்காமலேயே, கபினி நீர்த்தேக்கத்தில் கர்நாடக அரசு நீரைத் தேக்கியதால் நமது மாநிலத்தில் வேளாண்மைத் தொழிலுக்குப் பேரிடியாக அமைந்தது. இவ்வாறு தேக்கிக்கொள்ளப்பட்ட நீர் இயல்பாக மேட்டூருக்கு வந்து, காவிரிப் பாசன ஏற்பாட்டின்கீழ்





பாசனத்துக்குக் கிடைத்திருக்க வேண்டும். அப்படிக் கிடைத்திருந்தால் அந்தப் பகுதி முழுவதும் நல்ல மகசூல் கிடைக்க உறுதி செய்திருக்கும் என்பதோடு, பவானி பாசனத் திட்டத்திலும் பயிர்த்தொழில் நடைபெற உறுதியளித்திருக்கும் கருநாடக முதலமைச்சருக்கும், மத்திய அரசின் வேளாண்மைத்துறை அமைச்சருக்கும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்திருந்தும் கூட முதற்கண், 1974-ஆம் ஆண்டு டிசம்பரில் 500 கோடி கன அடி நீர் விடுவிக்கப்பட்ட பின்னர் நீர் ஏதும் விடுவிக்கப்படவில்லை.

பொதுவாக, ஆற்றுப்பாசன ஏற்பாடுகள், கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட அடிப்படையில் ஆயக்கட்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வெற்றிகரமாக முறைப்படுத்தி இயக்கப்பட்ட போதிலும், வடகிழக்குப் பருவக்காற்று மழையின்மூலமே முக்கியமாக நீர்பெறுகின்ற ஏரிகள், ஏனைய பாசன வாயில்கள் மூலம் கிடைத்த பாசன வசதி போதுமானதாக இல்லை. இவ்வளவிற்கும் இடையே நமது மனக்குறையைத் தவிர்த்த ஒவ்வொரு அம்சம் பருவத்தின் தொடக்கத்தில் பாலாற்றில் வெள்ளம் வந்ததேயாகும்.

இம்மாநிலத்தில் பெருமளவு பாசனத்திற்குக் கிடைக்கின்ற பெரிய பாசன வாயில்கள் அனைத்தையும் மாநில அரசு முழுவதுமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளைக் கிழக்கு நோக்கித் திருப்புவதற்கான பணிகளை மேற்கொண்டுள்ள பரம்பிக்குளம் ஆழியாறு திட்டமே கடைசியாக மேற்கொள்ளப்பட்ட பெரிய திட்டமாகும். நீர்த் தேக்கங்கள், நிலவளவிற்கேற்ப அமைந்த கால்வாய்கள், பாசன வழங்கல் ஏற்பாடு ஆகியவை தொடர்பாக இத்திட்டத்தின் பணிகளைச் சார்ந்த பகுதிப் பணிகள் முடிவடைந்துள்ளன. கேரளத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தமொன்றைத் தொடர்ந்து, நீராற்றிலிருந்து சோலையாற்று நீர்த்தேக்கத்துக்கு நீரைத் திருப்பி விடும் பொருட்டு நீராற்றின் குறுக்கே சிற்றணை ஒன்றும் சுரங்கக் கால்வாய் ஒன்றும் கட்டும் பணி 1970-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இது கட்டி முடிக்கப்பட்டு, பரம்பிக்குளம் ஆழியாறு பாசன ஏற்பாட்டில் நீர் வழங்குவதற்காக உரிய காலத்தில் பயனுக்குக் கொண்டுவரப்பட்டது. 1974 மார்ச் திங்களில் அடுத்து செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, கேரள அரசின் சில திட்டங்கள் காரணமாக தேக்கடியாற்றிலிருந்து நமக்குக் கிடைக்காமற் போகின்ற நீருக்குப் பதிலாக, நீராற்றிலிருந்து கூடுதலாக 250 கோடி கன அடி

நீரைத் திருப்பி விடுவதற்காக, மேற்சொன்ன சிற்றணைக்குக் கீழே அணையொன்றைக் கட்டும் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. நீராற்றிலிருந்து நீரைத் திருப்பி விடுவதன் மூலம் கிடைக்கின்ற கூடுதல் நீரைக்கொண்டு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் வறட்சிப் பாங்கான பகுதிகளில் பெருமளவுப் பரப்பிற்குப் பாசன வசதியை நீட்டிக்கும் பொருட்டு, பரம்பிக்குளம்-ஆழியாறு பாசன ஏற்பாட்டின் ஆயக்கட்டுப் பரப்பினை சுமார் 90,000 ஏக்கருக்கு நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் முறை மாற்று ஏற்பாடு மூலம் நீர் தொடர்ந்து வழங்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிஞசி வட்டத்திலும் அதனை அடுத்துள்ள வறட்சியான பகுதிகளிலும் பாசனப் பிரச்சினைக்கு பாண்டியாறு—புன்னப்புழா ஆறுகளின் நீரைத் திருப்பி விடுவது நிலையான தீர்வினை அளிக்கும். இது தொடர்பாக ஒப்பந்தம் எதுவும் கையெழுத்து ஆகாவிடினும், கேரள அரசின் நல்லெண்ணத்தைக் கொண்டு இப்பகுதியின் நலனுக்காக இத் திட்டம் செயல்படுத்தப்பட முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நாட்டின், குறிப்பாக கேரளத்தின், நலனுக்கென உணவு உற்பத்தியை மேம்படுத்தவும் இத்திட்டத்தால் முடியும்.

பெரியாறு பாசன ஏற்பாட்டின் திறனை மேம்படுத்தி, கூடுதல் ஆயக்கட்டுப் பரப்பிற்கு அதன் மூலம் பாசன வசதிகளை நீட்டிக்கும் குறிக்கோள் உடைய அடங்கல் திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அடங்கும் பணிகளாவன: வைகை அணைக்குக் கீழ்ப்பகுதியில் கால்வாய்க்கு நீர்விடும் அணை ஒன்று கட்டுதல்; அந்த அணையிலிருந்து பேரணை, பொறி மதகு வரைக்கும் 32 கிலோ மீட்டர் நீளத்திற்கு இணைப்புக் கால்வாய் ஒன்றுக்குக் காரை பூசுதல்; தற்போதுள்ள பெரியாற்றின் முதன்மை கால்வாய்க்கும் அதன் நான்கு பெரிய கிளைக் கால்வாய்களுக்கும் காரை பூசுதல்; கற்கட்டுமானப் பணிகளுக்கு மேம்பாடுகள் செய்தல்; புலிப்பட்டி பொறிமதகிற்கப்பால் 22 கிலோ மீட்டர் தொலைவிற்கு காரை பூசிய நீட்டிப்புக் கால்வாய் ஒன்று அமைத்தல். இத்திட்டத்தின் மூலம் புதிய ஆயக்கட்டில் 18,000 ஏக்கர் பரப்பும் பழைய ஆயக்கட்டில் 28,000 ஏக்கர் பரப்பும் பயன்பெறவிருக்கின்றன. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 16.15 கோடியாகும்.

சில ஆறுகள் கால்வாய்களில் மேல்மட்டப் பகுதிகளில் விசையேற்றம் மூலம் நீர் இறைப்பது நெடுங்காலமாக வழக்கத்தில்



இருந்து வந்துள்ளது. இவ்வழக்கம் தனிப்பட்டவர்களால் அவ்வப்போது தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கால்வாய்களை, அவற்றில் வரும் நீரை உரிய அளவிற்குப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் புதுப்பிப்பதன் மூலம், பாசன ஏற்பாடுகளைச் சீரமைக்கும் பணியின் ஒரு பகுதியாக, மேற்சொன்னவாறு விசையேற்றம் மூலம் நீர் இறைத்தலும், இறைவைப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதன் மூலம் சீரமைக்கப் படும். அப்போதுதான் ஆறுகள் கால்வாய்களிலிருந்து நீர் வெளியேறும் வாயில்களின் எண்ணிக்கையும், விசையேற்றம் செய்தலும் முறைப்படுத்தப்பட இயலும். இதன்பொருட்டு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் தொடக்கச் செயற்குறிப்புகள் வகுக்கப் பட்டுள்ளன. அவை பரிசீலனையில் உள்ளன.

மாநிலத்தின் சிறந்த நலன்களைக் கருத்திற்கொண்டு நிலமட்ட நீர், ஊற்று நீர் ஆகிய இருவகை வாயில்களும் ஒருங்கு திரட்டப் படுவதன் மூலம் இம் மாநிலத்தில் பாசன வள வாயில்களை உரிய அளவிற்கு மேம்படுத்தும் பணி மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இவ்வாண்டில் நமக்கு ஏற்பட்டு இருக்கும் அனுபவம் அறிவுறுத்தியுள்ளது. நீர் வாயில்கள் பற்றாக்குறையாக உள்ளன. கூடுதல் பாசன வசதி அளிப்பதன் மூலம் உழவுத் தொழிலுக்கு நன்மை அளிப்பதே நாம் கருத்திற் கொள்ள வேண்டிய ஒரே அம்சமாகும். நமக்குப் பற்றாக்குறையாக உள்ள நிதிவாயில்களை ஒதுக்கீடு செய்யும்பொழுது, செய்த செலவுக்கு ஏற்பக் கிடைக்கும் பயன்களையொட்டியே முதல் உரிமைகள் அளிக்கப்பட வேண்டும்; என்றாலும், முடிவில், நமக்குக் கிடைக்கும் நீர் வாயில்கள் யாவற்றையும் பயன்படுத்துவதே நமது குறிக்கோளாகும். திருநெல்வேலி மாவட்டத்தில் ராமநதி, கடனா நதித் திட்டங்கள் முடிக்கப்பட்டு 1974 ஆம் ஆண்டில் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. பொன்னணியாறு, பரப்பலாறு நீர்த் தேக்கங்களும் முடிக்கப்பட்டுள்ளன. நான்காவது, ஐந்தாவது திட்டக்காலத்தில் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட, சின்னாறு, தண்டரை அணைக்கட்டு, நந்தன் கால்வாய், கருப்பா நதி, பாலாறு-புரந்தலாறு, பிளவுக்கால் ஆகிய திட்டங்கள் 1975-76 ஆம் ஆண்டில் பயனுக்குக்கொண்டு வரப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

கோடகனாறு, மருதா நதி, வட்டமலைக்கரை ஓடை, வரதமா நதி, வறட்டுப்பள்ளம், குண்டேரிப்பள்ளம், குண்டாறு ஆகிய நீர்த் தேக்கங்கள், மற்றும் வைகைக் கால்வாய்களைக் காலத்திற்கேற்ப

மாற்றியமைக்கும் திட்டம், பெரியாறு மேம்பாட்டு திட்டம், சாத்தனூரிலிருந்து வலதுபக்கக் கால்வாய் அமைக்கும் திட்டம் ஆகியவற்றின் பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசின் அனுமதி பெறுவதற்காக, விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் பொருட்டு 6 திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைத்து உரையாற்றுகையில், 1975-76 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் படவேண்டிய திட்டங்களின் பெயர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், குறிக்கப்பட்டுள்ளன. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும்பொருட்டு, விரிவான ஆய்வுக்கு அனுமதி வழங்கப் படும். இவைதவிர, இம்மாநிலம் முழுவதும் கிடைக்கும் நீர் வாயில்களைக் குறிப்பிடுவதற்கான ஆய்வுப்பணி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஆற்றுப் பள்ளத்தாக்கு தொடர்பாகவும் அடங்கல் அடிப்படையில் இப்பணி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. கூடுதலாகக் கிடைக்கும் உபரி நீர் அளவையும், திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு இயலும் இடங்களையும் குறிப் பிட்ட பின்னர், விரிவான ஆய்வுக்கு அனுமதி பெறுவதற்காக, அரசின் பரிசீலனைக்கு வைக்கும் பொருட்டு திட்டங்கள் வகுக்கப் படும். இவற்றில் பின்வருவன அடங்கும்: கோயம்புத்தூர் மாவட்டத்தில் நொய்யலாற்றின் குறுக்காக ஒரு நீர்த்தேக்கம்; ஆண்டியப்பனூர் ஓடைக்குக் குறுக்காக ஒரு நீர்த்தேக்கம்; வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம் வட்டத்தில் கருப்ப நத்தத்திற்கு அருகே செய்யாற்றின் குறுக்காக ஒரு நீர்த்தேக்கம்; திருச்சி மாவட்டத்தில் பாலாற்றின் குறுக்காக ஒரு நீர்த்தேக்கம்.

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் வெள்ளக்கட்டுப் பாட்டுத் திட்டத்திற்கும் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக் கிறது. இத்திட்டங்களைச் செயற்படுத்துவதன்மேல் அவற்றின் மூலம் மொத்தம் 2.26 லட்சம் ஏக்கர் பரப்பு பயன்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் 48,426 எக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும். எஞ்சியுள்ள பரப்பிற்கு ஏற்கெனவேயுள்ள பாசன வசதி உறுதி செய்யப்படும். மேற்கொள்ளக் கருதியுள்ள புதிய திட்டங்கள் 71,730 ஏக்கர் பரப்புக்குப் பயன் அளிக்கும். அவற்றில் 19,052 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறும். எஞ்சிய பரப்புக்கு ஏற்கெனவேயுள்ள பாசன வசதி உறுதிப்படுத்தப்படும்.

தமிழ்நாடு ஏரிகளிலிருந்து கிடைக்கும் சிறு பாசன வசதியை மிகப் பெருமளவிற்குச் சார்ந்துள்ளது. இந்த ஏரிகள் யாவும், முக்கியமாக, வடகிழக்குப் பருவக்காற்று மழையால் உள்ளூரில்



பெய்கின்ற மழைநீரைத் தேக்கி வைக்கின்றன. புதிய பணிகளை மேற்கொண்டும், ஏற்கெனவேயுள்ள பாசன வாயில்களை மேம்பாடு செய்வதும் மழைநீர் வளத்தை உயர்ந்த அளவு பயன்படுத்திக் கொள்ளும்பொருட்டு, சிறு பாசன-ஏரிகள், தூர் வாரும் சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 3.75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் மூலமாக அவ்வப்பகுதிகளில் பெய்யும் மழைநீர் வளங்கள் உள்ளூர் நலனுக்காகத் தேக்கி வைக்கப் படும். இப்பணிகளின் வாயிலாகக் கிட்டுகின்ற கூடுதல் உணவு உற்பத்தியை வைத்தே இப்பணிகள் முக்கியமாகத் தெரிந்தெடுக்கப் படுகின்றன.

தற்போதுள்ள பாசன வாயில்களின் நிலைமையை மேம்படுத்தும் பொருட்டு, பழுது பார்க்கும் விரைவுப் பணிகளுக்கானப் புதிய திட்டம் ஒன்று நடப்பாண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1974-75 ஆம் ஆண்டில், பொதுப்பணித் துறையினது பொறுப்பிலுள்ள ஏரிகளுக்குப் பழுதுபார்க்க ரூ. 99.82 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூ, 1,00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 100 ஏக்கரும் அதற்கு மேலும் உள்ள ஆயக்கட்டு உள்ள ஏரிகள் பொதுப்பணித் துறையிடமே நிலைபெற்று இருக்கும் என்றும், 100 ஏக்கருக்குக் குறைவாக ஆயக்கட்டு உள்ள ஏரிகள் ஊராட்சியிடம் நிலைபெற்று இருக்கும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த அடிப் படையில் முன்னர் ஊராட்சிகளிடம் நிலைபெற்று இருந்த, 100 ஏக்கருக்கு அதிகமாகவும், 200 ஏக்கருக்குக் குறைவாகவும் ஆயக்கட்டினையுடைய ஏரிகள் பொதுப்பணித் துறைக்கு மாற்றப் படும். பழுதுபார்க்கும் விரைவுப் பணிகள் குறித்த சிறப்புத் திட்டம் ஊராட்சி ஏரிகளையும் உள்ளடக்குகிறது. இதற்காக, 1974-75, 1975-76 ஆகிய இரு ஆண்டுகளிலும் ரூ. 75 லட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போன்றதொரு திட்டம், மேம்படுத்தப் பட்டு, தர நிலைகளுக்குக் கொண்டுவரப்படவேண்டிய முன்னாள் ஜமீன் பகுதிகளைச் சேர்ந்த ஏரிகளுக்கும் செயற்படுத்தப்படும். இதற்காக 1974-75, 1975-76 ஆகிய இரு ஆண்டுகளிலும் ரூ. 25 லட்சம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணியைப் பொதுப்பணித் துறை நிறைவேற்றும். பின்னர் ஊராட்சிகள் அவற்றை பேணும் பணிகளை மேற்கொள்ளும்.

இம் மாநிலத்தில் வறட்சிப்பாங்கான பகுதிகள் திட்டம் தருமபுரி மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும்

நான்காவது, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், ரூ. 1,49,98 லட்சம் செலவாகிற 68 பணித்திட்டங்கள் தருமபுரி மாவட்டத்திலும், ரூ. 64.37 லட்சம் செலவாகிற 232 பணித் திட்டங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில், தருமபுரி மாவட்டத்தில் 21 பணித் திட்டங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 106 பணித் திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன. ஏனைய பணிகள் நடப்பாண்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நடப்பாண்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியினால் மானவாரி நிலங்களில் அல்லது ஏரிப் பாசனம் பெறும் நிலங்களில் பயிர்கள் சாவியாகப் போனதன் விளைவாகக் கிராமங்களில் நிலைமை மோசமாகிறது. பெரும்பாலான மக்கள் எந்தவிதமான நிதி வசதியோ அல்லது வேலைவாய்ப்போ இன்றி தவித்தனர். எனவே, நிலையான இருப்புகளை ஏற்படுத்தும் நோக்குடன் அரசு பெருமளவில் பணித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. குடிநீர் வழங்கல் போன்ற பொதுமக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்வது தவிர, சிறுபாசனப் பணிகள், சாலைகள் போன்ற நிலையான பயன்களை அதனால் பெறலாம். வேலை வாய்ப்பு வசதிகளையும் அவை பெருக்கும்பொருட்டு வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துறைத் திட்டங்கள் விரைவுபடுத்தப் பட்டுள்ளன.

1972 டிசம்பரில் ஏற்பட்ட புயலினால் விளைந்த சேதத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1972-73, 1973-74 ஆம் ஆண்டுகளில் ரூ. 2,99.93 லட்சம் செலவிடப் பட்டது. மேலும், 1974-75 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 58 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டம் பொன்னி யாற்றுக்குக் குறுக்கே சேதம் அடைந்த திருக்கோயிலூர் அணைக் கட்டை ரூ. 70 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் புதுப்பிக்கும் பணி 1975–76-ல் மேற்கொள்ளப்படும்.

வெள்ளப் பெருக்கக் காலங்களில் காவிரியில் வரும் நீரைக் கட்டுப்படுத்தவும், காவிரியில் கயவாய்ப் பகுதியில் மழை பெய்யும் போது மேட்டூரிலிருந்து வெளிவிடப்படும் நீரைச் சேமித்து வைக்கவும் ரூ. 4,13 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் காவிரிக்குக் குறுக்கே மேலணைக்கட்டில் தடுப்புச் சுவர் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

நிர்வாக வசதிக்காக நில-நீர் இயக்குநர் அலுவலகம் பொதுப் பணித் துறையின் ஒரு பிரிவாக அமைக்கப்பட்டுள்ளது. நில-நீர்



வளத்தை முடிவு செய்து மேற்கொண்டும் நீர் வளம் கிடைக்கும் பகுதிகளைக் கண்டறியும் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன. இதற்கிடையே விரைந்து செய்யப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நில-நீர் எங்கெல்லாம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் அந்நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் அதிகமாய்ச் செலவழிக்காமலிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மழை பொய்த்த தொடக்க காலத்தில் மீஞ்சூர், பஞ்செட்டி, தாமரப்பாக்கம் பகுதிகளிலுள்ள நில-நீர் சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல் வசதியைப்பெருக்க பயன்படுத்திக் கொள்ளப் பட்டன. மீஞ்சூர், பஞ்செட்டி ஆகிய இடங்களிலுள்ள நீர் முதலில் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. தாமரப் பாக்கத்திலிருந்து குழாய் ஒன்று தொழிற்சாலைப் பகுதிக்குப் போடப்பட்டு வருகிறது. இக்குழாய் போடப்படும் வரை பூண்டி நீர்த்தேக்கத்தையும், புழலேரியையும் இணைக்க தற்போதுள்ள நீர் வழங்கு வாய்க்கால் மூலமாக புழலேரிக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. குறைந்த அளவு நீரைச் சேமிக்கும்பொருட்டு தற்போதுள்ள நீர் வழங்கு வாய்க்கால்களிலும் ஏரிப்படுகைகளிலும் சிறிய வாய்க்கால்களை வெட்டி கரையமைக்கும் பணிகளைப் பொதுப் பணித் துறை மேற்கொண்டுள்ளது.

கல்பாக்கம் அணுசக்தி நிலையத்திற்கு நீர் வழங்குவதற்காக அப்பகுதியில் உள்ள பாலாற்றில் கிடைக்கும் நிலநீர் இறைக்கப் படுகிறது. இப்பகுதியில் வசதிகளைப் பெருக்குவதன் மூலம் நிறைவேற்றப்பட்டு வரும் வீராணம் குடி-நீர் வழங்கு குழாய்கள் மூலமாக சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு சுமார் முப்பது லட்சம் காலன் நீர் வழங்கக் கருதப்பட்டுள்ளது. இக்கிணறுகளை வீராணம் குழாய்களுடன் இணைப்பதற்கான குழாய் போடும் பணியை தமிழ்நாடு குடி-நீர் வழங்கல்-வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது. சிறுபாசனத்திற்காக உலக நாடுகள் வளர்ச்சி யமைப்பு அளிக்கும் 2.5 மில்லியன் டாலர்களை கருவிகள், பயிற்சி யளித்தல் ஆகியவற்றுக்காகவும் நில-நீர் எடுக்கும் பணியை எளிதாக்கும் பொருட்டு கம்ப்யூடர் வரைபடங்கள் ஆகியவற்றுக் காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பெறுவதற்கு ஒப்பந் தப்புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன. கருவிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன.

மின்வெட்டு காரணமாக சிமிட்டி உற்பத்தி குறைந்தது. இதனால் சிமிட்டி பற்றுக்குறை ஏற்பட்டது. இதன் விளைவாகக் கட்டிடத் திட்டம் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளது. அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்குச் சிமிட்டி பயன்படுத்துவதை

ஓராண்டுக் காலத்திற்கு நிறுத்தி வைத்து இந்திய அரசு ஆணையிட்டுள்ளது. இந்தத் தடையாணையைச் செயலுக்குக் கொண்டு வருமுன் தரைப் பகுதி வரை ஏற்கெனவே முடிக்கப்பட்ட கட்டிடங்கள் முடிக்கப்படலாம். எனவே, மருத்துவமனைகள், கல்லூரிகள் ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காகவே அதிக நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், தலைமைச் செயலகத்திற்கான கட்டிடம் கட்டும் பணி தொடர்ந்து நிறைவேறி வருகிறது. இணைந்த அலுவலகங்கள், குறிப்பாக ஒரே துறையைச் சேர்ந்த அலுவலகங்கள் ஒரே இடத்தில் அதற்கென கட்டப்பட்ட கட்டிடத்தில் அமைவதனால் அலுவலகப் பணியாளர்களுக்குக் குறைந்த அளவு வசதிகள் ஏற்படுவது தவிர, அலுவலகம் செவ்விய முறையில் செயல்படவும் உதவும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே கட்டிடத் திட்டம் தற்போது நிறுத்தித்தான் வைக்கப்பட்டுள்ளது. எனினும் கிண்டியில் நெடுஞ்சாலைத் துறையின் தற்போதுள்ள கட்டிடத்தில் கூடுதல் மாடி கட்டுவதற்கான பணியை அடுத்தாண்டில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. புது டில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் கூடுதல் கட்டிடத் தொகுதி கட்டும் பணி 1975-1976-ல் முடிக்கப்படும்.

நிதிப்பற்றுக்குறை காரணமாக சாலைத் திட்டமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தேசீய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் முந்திய ஆண்டுகளில் ரூ. 6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க, நடப்பாண்டில் ரூ. 4 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. நடந்தேறி வரும் பணிகளுக்கு ரூ. 12 கோடிக்குமேல் தேவைப்படுமாதலால் இத்திட்டத்தின்கீழ் புதிய பணிகளை மேற்கொள்வது இயலாததாகும். எனினும், ரூ. 5.32 கோடி மதிப்பீட்டுச் செலவில் பாம்பன் பாலத்தைக் கட்டும் பணி இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் பொன்னியாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல், தருமபுரி மாவட்டத்தில் பெண்ணையாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டுதல், கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறையாற்றுக்கு குறுக்கே பாலம் கட்டுதல் ஆகியவை மாநில சாலைத்திட்டத்தின்கீழ் 38 பணிகளை நிறைவேற்ற நடப்பாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியிலிருந்து அருப்புக்கோட்டை வழியாக மதுரைக்குச் செல்லும் சாலைக்கு மேம்பாடுகள், சேலம் உருக்காலைக்குச் சாலை போடுதல் ஆகியவை நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய முக்கிய சாலைத் திட்டங்களாகும். பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்துள்ள மாநிலங்களுக்கிடையிலான சாலைத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்



பட்ட கிழக்குக் கடற்கரைச்சாலையிலுள்ள பாலங்கள் இந்த ஆண்டில் அல்லது அடுத்த ஆண்டில் முடிக்கப்படும். வயலூருக்கு அருகே பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதும், தென்பாக்கத்திற்கருகே உப்பங்கழிக்குக் குறுக்கே பாலம் கட்டுவதும் நடப்பாண்டில் முடிக்கப்படும். மத்திய சாலைத் திட்டத்தின்கீழ் கோடைக்கானல் மலைகளில் மூன்று மலைச் சாலைகளைப் போடும் பணி நடந்தேறி வருகிறது. இவற்றில் கோடைக்கானலை பழனி மலையுடன் சேர்க்கும் சாலை அமைக்கும் பணி 1975-76-ல் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வாணியம்பாடிக்கும் ஜாபர்பாத்துக்கும் இடையே பாலாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் பணி நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. ரூபாய் 75 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் போளூரிலிருந்து ஜவ்வாது மலைக்கு மலைப்பாதை அமைப்பது உட்பட 13 பணிகள் ஐந்தாவது திட்ட நிதி ஒதுக்கமான ரூபாய் 252 லட்சத்தில் இத்திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

சென்னை மாநகரைத் தலைமையகமாக கொண்டு "தமிழ்நாடு பொதுப் பணித் துறை பொறியியல் நிறுவனம்" அண்மையில் அரசால் அமைக்கப்பட்டு இருக்கிறது. இதன் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடியாகும். சென்னையிலும், ஆளியாறு நகரிலும் அமைந்துள்ள பொதுப் பணித் துறை தொழிற் கூடங்களை எடுத்து, மேலும் பயன் தரத்தக்க முறையில் நடத்தி, விரிவுபடுத்தி, துறையின் தேவைகள் அனைத்தும் ஒருங்கிணைந்த முறையில் நிறைவேற்றும் குறிக்கோளோடு இந்த நிறுவனம் செயல்படும்.

மருதூர், ஸ்ரீவைகுண்டம் வாய்க்கால்களுக்கு கரைகள் அமைத்து அதன் பின்னர் குழாய்கள் மூலம் தூத்துக்குடி தொழில் பகுதிக்கு நீர் வழங்கும் திட்டம் (செலவு மதிப்பீடு ரூ. 470 லட்சம்) நடந்தேறி வருகிறது. முன்னோடியாக 1973 நவம்பர் திங்களிலிருந்து சதர்ன் பெட்ரோ கெமிகல்ஸ் இன்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு நீர் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொதுப் பணிப் பொறியியல் கார்ப்பரேஷன் என்னும் பெயருடன் நிறுவனம் ஒன்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் தலைமையிடம் சென்னையில் இருக்கும். ரூ. 3 கோடி அதிகாரம் அளிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் சென்னையிலும் ஆழியாறு நகரிலும் உள்ள துறை சார்ந்த பணிக்களரிகளை மேற்கொண்டு பொதுப் பணித் துறையின் தேவைகளை நிறைவு செய்ய அதன்

# தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை.

## சனிக்கிழமை, 1975 மார்ச் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### Teachers training for Graduates in Economics

*** 326. Q.** Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) Whether it is a fact that Economics Graduates are not admitted into the B.T. Training Colleges in the State and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தற்போது உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களுக்குப் பொருளாதாரப் பாடம் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தரப்படுவதில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பி. யு. சி. இல் பல மாணவர்கள் "ஹிஸ்டரி" யை இஷ்ட பாடமாக எடுத்துப் படிக்கிறார்கள். பி. ஏ. யில் ஸ்பெஷியலி பாடம் "ஹிஸ்டரி"யாக இருக்கிறது. பி. டி.யிலும் அவர்கள் "ஹிஸ்டரியை" இஷ்ட பாடமாக எடுத்துப் படிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. பொருளாதாரம் எடுத்து பி.ஏ. தேறிய பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். "ப்ரொஃபஷனல் கோர்ஸ்"—இல் அவர்களுக்கு அட்மிஷன் கிடைக்காத காரணத்தால் அவர்கள் பி.ஏ. எடுத்துப் படித்திருக்கிறார்கள். கேரளா பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பொருளாதார பட்டதாரிகளுக்கு பி. டி. யில் இடம் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதேபோல் தமிழகத்திலும் பி. ஏ. பொருளாதார பட்டதாரிகளுக்கு பி. டி. இல் அட்மிஷன் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்குப் பொருளாதாரப் பாடம் சிறப்புப் பாடமாகக் கற்றுத்தரப்படாததன் காரணமாக, அதை எடுத்துப் படித்து பி. ஏ. பட்டம் பெற்றவர்களை பி. டி.யில் சேர்த்துக் கொள்வதால் எந்தப் பலனும் ஏற்படுவதில்லை. ஆசிரியர் வேலைக்கு வரவேண்டிய எண்ணம் உள்ளவர்கள் வரலாற்றை முக்கியப் பாடமாக எடுத்து, பிறகு பி. டி..

நடவடிக்கைகளை பல கூறுக்கும். மேலும் துறையின் வணிக நடவடிக்கைகளையும் இந்த நிறுவனம் மேற்கொள்ளும்.

சிறு துறைமுகங்களின் சாதனை குறித்த மானியக் கோரிக்கை முதன் முதலாகத் தயாரிக்கப்பட்டு சட்டமன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. துறைமுகத் துறையின் 1974-75 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகளையும், 1975-76 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்களையும் இது விவரிக்கின்றது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு ரூ. 199 லட்சம் செலவில் முடிக்கப்பட்டது. இதன் மூல மதிப்பீடு ரூ. 134.98 லட்சமாகும். எஞ்சிய ரூ. 64.02 லட்சத்தை விரைவில் வழங்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான 1974-75 ஆண்டுச் செலவு ரூ. 23.86 லட்சமாகும். 1975-76 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 46.45 லட்சமாகும்.

மாநிலத் துறைமுகத் துறைக்கான செலவு மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநிலக் கப்பல்வாணிக நிதி (Landing an dShip in ; Fu ds) மாநில நாவாய்த்துறை நிதி (Stat Pilotage Fund) ஆகியவற்றிடமிருந்து ஈடு செய்யப்படுகிறது. சிறு துறைமுக நிதி என்பது இம் மாநிலத்தில் உள்ள துறைமுகங்கள் அனைத்திற்கும் பொதுவானதாகும். ஒவ்வொரு துறைமுகத்திற்கும் தனியான கப்பல் வாணிக நிதி ( Landing and Shipping Funds ) ஒன்று உள்ளது. இந்த நிதிகளின்கீழ் கிடைக்கும் வருவாய் இந்திய அரசியலமைப்பின் 266-வது பிரிவின்கீழ் மாநில வருவாயாகும். எனவே, இம் மாநிலத்தில் தூத்துக்குடி துறைமுகம் தவிர, சிறு துறைமுகங்கள், நடுத்தரத் துறைமுகங்கள் அனைத்திற்குமான துறைமுக, சிறு துறைமுக நிதிகளை இம் மாநிலத்தின் தொகு நிதியுடன் சேர்க்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தகைய துறைமுகங்களிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து செய்யப்படும் செலவு மாநிலச் சட்டமன்றத்தால் அனுமதி அளிக்கப்படுவதற்கு உட்பட்டதாகும். இந்த முடிவைச் செயல்படுத்த 1908 ஆம் ஆண்டு இந்தியத் துறைமுகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட வரைவு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



தூத்துக்குடியைப் பொறுத்தவரையில், இருவேறு நிதிகள் அதாவது தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழக நிதி, தூத்துக்குடி துறைமுக நிதி எனப்படும் நிதிகள் பேணி வரப்படுகின்றன. தூத்துக்குடி துறைமுகம் வளர்ந்து வரும் பெரியதொரு துறைமுகமாகும். புதிய துறைமுகம் செயல்படத் தொடங்கியவுடன் தற்போதுள்ள நடுத்தர துறைமுகம் பெரிய துறைமுகத்துடன் இணைக்கப்பட்டு அதன் நிர்வாகப் பொறுப்பு புதிய துறைமுகப் பொறுப்புக் கழகத்துடன் ஒப்படைக்கப்படும். தூத்துக்குடி துறைமுகம் அமைக்கப்படுவதை எதிர்பார்த்து, இப்பகுதி 1974 ஆம் வருடம் ஜூலை மாதம் 10-ம் தேதி முதற்கொண்டு எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி இடைநிலைத் துறைமுகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை அவர்களது தகுதியைப் பொறுத்து வேலைக்கமர்த்துமாறு தலைமைப் பொறியாளருக்கும், புதிய தூத்துக்குடி துறைமுகத்தின் நிர்வாகிக்கும் கட்டளைகள் பிறப்பிக்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. தற்போதுள்ள துறைமுகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களை புதிய துறைமுகப் பணியில் இணைப்பதே இதன் நோக்கமாகும்.

தூத்துக்குடி துறைமுகம் தனது பொன் விழாவை 1974 டிசம்பரில் கொண்டாடியது. அந்த விழாவில், குறைந்த அளவு 15 நாட்கள் பேரளவு 60 நாட்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஒவ்வொரு முடிவடைந்த ஆண்டுக்கும் இரண்டு நாட்கள் சம்பளம் என்ற வீதத்தில் தொழிலாளர்களுக்கு ரொக்கத் தொகை அளித்தல், பொன்விழா ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு பணி முடிந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் இரண்டு நாட்கள் சம்பளம் என்ற வீதத்தில் தொகை அளிக்கவும் அரசு அனுமதி அளித்தது. இதற்கு ரூ. 83,000 செலவாகும்.

திட்டப் பணிகள் குறித்த விவர அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

படிக்கலாம். பாலிடிக்ஸ், சோஷாலஜி, ஜியாலஜி, எக்கனுமிக்ஸ் பாடங்கள் உயர்நிலைப் பள்ளிகளில் இல்லை. பி. ஏ. படித்தவர்கள் ஆசிரியர் வேலைக்குத்தான் வரவேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், அதற்காக அந்தப் பாடங்களை உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்த முடியாது. மாதமாடிக்ஸ், ஃபிசிக்ஸ், கெமிஸ்டரி, நாச்சுரல் ஸயன்ஸ்; ஜியாக்ரஃபி. அட்வான்ஸ்டு தமிழ், அட்வான்ஸ்டு இங்கிலிஷ், ஹிஸ்டரி, எடுத்துப் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு பி. டி. இல் இடம் அளிக்கும்போது, அவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் , அத்தகைய பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முடியும். வரலாற்றைத் துணைப் பாடமாக எடுத்துக் கொண்டிருப்பவர்கள் வரலாற்றுப் பாடங்களைச் சிறப்பாகப் போதிப்பார்கள் என்று கருதுவதற்கில்லை. ஆகவேதான் சென்னைப் பல்கலைக்கழகம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழக அரசும் அதன்படி நடக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : உலகம் பூராவும் "பொலிடிகல் எக்கானமி" என்பது ஒரு முக்கியமான ஸப்ஜெக்டாக வந்திருக்கிறது. "எக்கானமிக் தியரி" பற்றியும் பலவிதமாகப் பேசப்படுகிறது. ஆரம்பப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் இதைச் சொல்லிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ? பொலிடிகல் எக்கானமி, எக்கானமிக்ஸ் படித்துத் தேறிய பி. ஏ. பட்டதாரிகளுக்கு பி. டி. யில் இடம் கொடுப்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொருளாதாரம் ஒரு பாடமாக உயர்நிலைப்பள்ளியில் கையாளப்படுவதில்லை. அதைப்பற்றிப் பல்கலைக் கழகம் முடிவு எடுத்து அந்தப் பாடத்தையும் பள்ளிக்கூடங்களில் புகுத்த வேண்டிய நிலைமையை வேண்டுமானால் ஏற்படுத்தலாம். அதை விருப்பப் பாடமாக வைத்து, மாணவர்களும் படிக்க முன்வந்தால் அதைப்பற்றி அவர்கள் ஆராயலாம். ஆனால், இப்பொழுது இருக்கிற நிலையில் அதற்கு இடம் இல்லை.

### ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை.

* 327. வினா—திரு. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த ஏழை மாணவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி காலத்தில் உதவித் தொகை அளிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



### *Primary Schools.*

*328. Q.—Thiru N. K. PALANISAMY and Thiru ALADI ARUNA : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to regulate the functionin of the English medium primary and nursery schools in the State ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Siddha Dispensary in Secretariat.*

*329 Q.—Thiru KOVAI CHEZHIYAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the non-availability of essential Siddha medicines in the Siddha Dispensary at Fort St. George. Madras ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சித்த மருத்துவ மருந்தகத்தில் நான்கு மருந்துகள் மட்டுமே சில குறிப்பிட்ட காலங்களில் கிடைக்காமல் இருந்தன. ஒரு மருந்து இந்த நாள் வரையிலும் கூட கிடைக்கவில்லை. அதன் பெயர் "சண்டமாருதம்". அயக்காந்தம், அயவீரம், அயச்செந்தூரம் ஆகிய மருந்துகள் இடைக்காலத்தில் கிடைக்காமல் இருந்தன.

(இ) அவற்றைத் தொடர்ந்து குறைந்த காலக் கட்டத்தில் உற்பத்தி செய்து வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

### இராணுவப் பணியிலிருந்து திரும்பும் மருத்துவர்கள்.

* 330. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணுவத்தில் பணியாற்றிவிட்டுத் திரும்பிவரும் டாக்டர்களுக்கு அரசு தனிச்சலுகை காட்டி வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[1975 மார்ச் 15

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இராணுவத்தில் பணியாற்றியவர்கள் உள்ளபடியே நாட்டுக்காகப் பணியாற்றியவர்கள் ஆகிறார்கள். ஆகவே, எம். டி. போன்ற உயர்படிப்புக்குச சேர்க்கும்போது இப்படி இராணுவத்தில் வேலை பார்த்துவிட்டுத் திரும்பிய டாக்டர்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேல் படிப்புக்கு விண்ணப்பிக்கும்போது பொதுவாக அவர்களுடைய நீண்ட கால சர்வீஸ் கருத்தில் கொள்ளப்படுகிறது. இராணுவத்தில் போய் பணியாற்றிவிட்டு அரசாங்கப் பணியில் இருந்தால் அவர்களுக்கு ஐந்தாண்டு, எட்டாண்டு பணிப் பயிற்சி ஏற்பட்டு விடுகிறது. அவர்களுக்குச் சில முன்னுரிமைகள் வரும். அவர்கள் இராணுவத்தில் பணியாற்றியதும் இதுகுறித்து கருத்தில் கொள்ளப்படும். ஆனால், எண்ணிக்கை அடிப்படையில் இடங்கள் ஒதுக்குவதில்லை. அவர்களுக்கு முன்னுரிமை இருக்கிறது. மேல் படிப்பில் இவைகளைக் கவனிப்பது அவ்வளவாக இயலாது. ஆனாலும், அவர்கள் சலுகை அளிக்கப்படுகிறார்கள் என்பது பொதுவான நிலைமை.

## திருக்குவளையில் உள்ள மருந்தகம்.

* 331 வினா.—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குவளையில் உள்ள அரசினர் மருந்தகத்தை படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருக்குவளையில் உள்ள அரசினர் மருந்தகத்திற்கு தனியார் யாரேனும் உதவி அளித்திருக்கிறார்களா? திருக்குவளை முக்கியமான ஊர் என்ற காரணத்தால் திருக்குவளை அரசினர் மருந்தகத்தை இனிமேலாவது விரிவுபடுத்துவது குறித்து அரசு ஆலோசிக்குமா ?

---

† 690–695-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1975 மார்ச் 15]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசினர் இதை மேற்கொண்டிருந்தாலும், அதற்கென்று சில சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. "மருந்தகம்" என்ற சொல்லுக்கு "டிஸ்பென்சரி" என்று அர்த்தம். டிஸ்பென்சரியை ஆஸ்பத்திரியாக்க வேண்டுமென்றால், அது வேறு கட்டத்திலேதான் பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, மருத்துவமனை அமைக்கிற அளவு அங்கே மக்கள் தொகை—சுற்றுப் புறக் கிராமங்களில் அமைந்திருப்பதாலும், தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே திருக்குவளை எல்லோருடைய உள்ளத்திலும் நிறைந்திருப்பதாலும் அதை முதலமைச்சருடைய ஊர் என்பதாலும் அபிவிருத்தி செய்யமாட்டேன் என்கிறார்களா ? அல்லது அங்கிருக்கிற மக்கள் இவர் அங்கே பிறந்த காரணத்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, திருக்குவளையைப் பொறுத்த வரையில், கலைஞர் கருணாநிதி அவர்களேகூட அங்குள்ள ஏழை மக்களுக்காக பத்தாயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்து தாய்-சேய் நல விடுதி ஆரம்பித்திருக்கிறார்கள். மொத்தமாக—முதலமைச்சருக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர். (சிரிப்பு)

## *Link roads for Villages.*

*332 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to start a special programme to connect even small hamlets with main roads ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தற்போது எந்த வகைச் சாலைகளாலும் இணைக்கப்படாத கிராமங்கள், சிற்றூர்கள் அனைத்துக்கும், மழை பெய்யாத காலத்தே பயன்படும் கப்பிச் சாலைகளை அமைப்பதற்கான விரைவுத் திட்டமொன்றை மூன்றாண்டுக் காலத்தில் நிறைவேற்றி முடிக்கும் திட்டமாக மேற்கொள்ள அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 1,194.24 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 9,575.80 கி. மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்கப்படும். இவற்றால் மொத்தம் 5,485 கிராமங்கள் பயனடையும். திட்டத்தின் முதனிலையில், 3,698 கி. மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைக்க, மொத்தம் ரூ. 429.62 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் மூலம், மொத்தம் 2,414 கிராமங்கள் பயனடையும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த சிற்றூர்களை முதன்மைச் சாலைகளுடன் இணைக்கின்ற இந்தத் திட்டத்திலே ஒதுக்கப் பட்டிருக்கிற பணம் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னமும் பல சிற்றூர்கள் சாலை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அவை முதன்மைச் சாலைகளோடு இணைக்கப்படாமல் இருக்கின்றன. அதற்குப் பிரதான காரணம் அந்த அந்த ஒன்றியங்களிலே உள்ள சாலைகள் போடப்படக்கூடிய நேரத்திலே ரோடுகள் வருகிற நிலங்களை இனாம் ஆக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அவர்கள் தர மறுக்கிறார்கள். அவற்றை ஆர்ஜிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது யூனியன்களில் இல்லை. ஆகவேதான் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அந்த மாதிரித் தடங்கல் இருந்தால் அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விசேஷ அதிகாரம் கொடுத்து விட மறுக்கிற நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி இணைப்புச் சாலைகளைச் சிற்றூர்களுக்கு விரைவிலே போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருந்த காரணத்தால்தான் சிறிய ரோடுகள் எடுத்துக்கொள்ளப் படாமல் இருந்தன. ஆனால் 18-5-1974 அன்று நடந்த கேபினட் மீட்டிங்கிலே "பேர் வெதர் ரோட்ஸ்" என்று சொல்லப்படுகிற இந்தத் திட்டம்—பெரிய சாலைகளோடு சிற்றூர் சாலைகள் இணைக்கப்படுகின்ற திட்டம் —எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் சொன்னதைப் போல் அப்படி நிலத்தை வாங்கவேண்டுமென்றுதான் முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார், இணைப்புச் சாலைகளுக்கு மிகவும் முட்டுக்கட்டையாக இருப்பது நிலம் கையகப்படுத்துவதிலே நில வுடைமையாளர்கள் மறுப்பதுதான். அவர்களிடமிருந்து கன்சன்ட் ஸ்டேட்மெண்ட் வாங்கி நிலங்களை கையகப்படுத்தக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து குறிப்பாக பேரூராட்சி சம்பந்தப்பட்ட சாலைகளை முதலிலே எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படியும் வாங்கு வதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. இதிலே பேரூராட்சிகள், ஊராட்சிகள் என்று இல்லை. எந்த எந்தக் கிராமங்கள் ரோடுகள் இணைப்பதற்கு அவசியமாக இருக்கிறதோ அவை சிறு கிராமங்களாக இருந்தாலும்கூட இணைப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. ஜி. ராமசாமி : ஒரு ஊராட்சி மன்றத்திலே 500-க்கு மக்கள் தொகை இருந்தால் அது எடுக்கப்படுவதில்லை. 1,500-க்கு மேற்கொண்ட மக்கள் தொகை இருந்தால் அப்படிப்பட்ட கிராமங்கள்தான் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆகவே மககள் தொகை 1,500 என்று இருப்பதை 500 என்று குறைத்து எல்லா சிறிய கிராமங்களுக்கும் சாலை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் திட்டம் அது வல்ல. 500 அல்ல, 200 மக்கள் தொகை இருந்தாலும் இந்தத் திட்டம் அமலாகும். நான் முன்பே சொன்னபடி, "பேர் வெதர் ரோட்ஸ்" திட்டம் என்று இதற்கு பெயர் போட்டிருக்கிறார்கள். ஆகவே 1,500-க்கு மேற் கொண்ட மக்கள் தொகை இருந்தால் எடுத்துக்கொள்ளப்படுகிற திட்டம் வேறு திட்டமாகும். இந்தத் திட்டம் அதற்குள்ளேயே மக்கள் தொகை இருந்தாலும்கூட பொருந்தக்கூடிய திட்டமாகும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த இணைப்புச் சாலைத் திட்டத தின்கீழ் அரசாங்கம் கொடுக்கிற பணத்தோடு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சி மன்றமும் பங்குத் தொகை கொடுக்கவேண்டுமென்று இப்போது விதிமுறைகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் சர்க்காரே முழுச் செலவையும் ஏற்றுக்கொள்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கிராமப்புற இணைப்புச் சாலைகள் பரவலாக எல்லாத் தொகுதிகளிலும் போடப்படுவதில்லை. ஒரு பகுதிக்கே சென்றுவிடுகிறது. கிராமப்புறங்களிலே இணைப்பு சாலைகள் போடப் படும்போது அந்த அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டு போடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : யார் யாரைக் கலந்து கொண்டு செய்யவேண்டுமோ அதைச் செய்து வருகிறோம். இந்தத திட்டத்தை இப்போதுதான் துவக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு 446 கிலோமீட்டர் தூரமுள்ள 323 ரோடுகள் போடப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து போடப்படுகிறபோது எல்லா இடங்களும் முடிந்துவிடும் என்று நினைக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : சிற்றூர்களுக்கு இணைப்புச் சாலைகள் போடு கின்றபோது ஊராட்சி ஒன்றியங்களிடம் அது ஒப்படைக்கப்படுமா அல்லது பெருவழித்துறையிடம் ஒப்படைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இது பெருவழித் துறையிலே ரூரல் டெவலப்மெண்டிலே ஏற்று அவர்கள் செய்கிறார்கள்.

திரு. கு. காமாட்சி : இந்த சிறப்பான திட்டம் பல கிராமங்களுக்குப் பயன் கொடுக்கத்தக்க வகையிலே உள்ள திட்டம். இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டு இருக்கின்ற கிராமங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறதே, அதற்குக் காரணம் நிதி வசதி போதாமை என்று கருது கிறேன். அதற்காக மத்திய அரசை நாம் நிதி கேட்டிருக்கிறோமா ? மத்திய அரசிடம் வற்புறுத்தி நிதியைப் பெறுவதற்கு என்ன என்ன வழிவகைகளைக் கடைப்பிடித்து இருக்கிறது அரசு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அநேகமாக எல்லாம் கணக்கெடுத்து ரூ. 11·94 கோடிக்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது. 1974-ஆம் ஆண்டிலே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மத்திய சர்க்காரிலிருந்து கேட்கவில்லை. அநேகமாக எல்லா கிராமங்களுக்கும் திட்டம் போட்டு, இந்த ஆண்டு 50 லட்சம் ரூபாய் அளவிற்கான வேலை நடந்து வருகிறது.

திரு. முனு ஆதி : 25 ஆயிரம் கிராமங்களுக்கு மேலே இருக்கிறது, இப்போது 50 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் அது எந்த மூலைக்குப்போதும் என்று தெரியவில்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேலை செய்திருப்பதுதான் அது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே.

திரு. முனு ஆதி : எத்தனை வருஷத்திற்கு, 10 வருஷத்திற்கு அந்தத் தொகையா, அதைத்தான் விளக்கம் கேட்கிறேன். கிராமப் புறங்களிலே இணைப்புச்சாலைகள் இல்லாமல் மக்கள் மிகுந்த வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாட்டுவண்டி போகக்கூடிய நிலைமைகூட இல்லாமல் இருக்கிறது. ஆகவே ஸ்பெஷல் ஸ்கீமாகப் போட்டு அதிகமான பணம் ஒதுக்கி இதையெல்லாம் செய்வதற்கு அரசு முன்வருமா ? அப்படிச் செய்தால்தான் அடுத்த வருஷம் தேர்தலுக்காகவது காரிலே அந்தப் பகுதிகளுக்குப் போகமுடியும், ஆகவே அதைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதை உணர்ந்துதான் சர்க்கார் ஸ்பெஷல் ஸ்கீம் போட்டு 11.94 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து முதல் கட்டமாகவே வேலை நடந்துவருகிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சிற்றூர் சாலைகளைச் செம்மைப்படுத்திக் கிராமப்புற மக்களுடைய நன்மைக்காகப் போடப்பட்டிருக்கிற இந்தச் சிறப்புத் திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1,500 மக்கள் தொகைக்கு மேற்கொண்ட கிராமங்களுக்கு இந்தத் திட்டத்தை முதலிலே எடுத்துக்கொவதாக இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அப்படியில்லாமல் எல்லா குக்கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, நான் முன்னமேயே சொன்னேன், 1,500 மக்களுக்கு மேற்கொண்டகிராமங்களுக்கு உள்ள திட்டம் அல்ல இது 300 மக்கள் தொகை இருந்தாலும் இந்தத் திட்டம் பொருந்தும். இதற்குப் பெயர் "பேர் வெதர் ரோட்ஸ் திட்டம்" என்று கொடுத்திருக்கிறார்கள்.

திரு. பூ. எட்டியப்பன் : தலைவர் அவர்களே, இந்தச் சிறப்பான திட்டம் செயல்படும்போது ஊராட்சி ஒன்றியங்கள் நாலில் ஒரு பங்கு பணத்தைக் கொடுக்க முன்வந்தால் அப்படிப்பட்டவைகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுமா ?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : யூனியன் பணமே தேவையில்லை என்று சொல்லிவிட்டாரே.

திரு. பூ. எட்டியப்பன் : ஊராட்சி ஒன்றியங்கள் பணம் தந்தால் முதலிடம் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிடம் எதற்கும் கொடுக்கப்படுவதில்லை. எல்லா இடங்களுக்கும் அவசியம் என்பதால்தான் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ந. சோமசுந்தரம் : அமைச்சர் அவர்கள், இணைப்புச் சாலை வேலையைப் பெருவழித் துறையிடம் விடுவதாகக் கூறினார்கள். இப்போது அந்தந்தக் கிராமங்களில் உள்ள சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் சொந்தமாக இருக்கின்றன, பெருவழித்துறை எடுத்து கொள்ள காலதாமதம் ஆகும், ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : போடுவதற்குத்தான் பெருவழித்துறையிடம் கொடுக்கிறோம், சாசனமாக அவர்களிடம் கொடுத்து விடப் போவதில்லை. ரோடுபோடுகிற வேலையை பெருவழித்துறையினர் அவர்களாகவே செய்துவிடுவார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த பேர் வெதர் ரோட்ஸ் திட்டம் நம்முடைய அரசாங்கத்தின் வரப்பிரசாதமாகும். நம்முடைய அரசாங்கத்திலே 3 கிலோ மீட்டர் அல்லது அதற்குட்பட்டவைதான் முதலிலே எடுத்துக்கொள்ளப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எந்த எந்த ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் தேவை என்று மொத்தமாகக் கணக்கெடுத்து மத்திய அரசோடு போராடி இதற்காக நிதியைப்பெற்று இணைப்புச் சாலைகள் எல்லாவற்றையும் சீக்கிரமாக எடுத்து முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எங்கெங்கே எல்லாம் அவசியமோ அங்கேயெல்லாம் சேர்த்திருக்கிறோம். இதற்காகத் தனிவிதி முறைகள் இல்லை. எல்லாம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

## புதுப்பாளையம்—எருக்குவாய்க்கண்டிகை சாலை.

*333 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கும்முடிபூண்டி ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்திலுள்ள எருக்குவாய்க்கண்டிகை செல்லும் பாதையில், சுண்ணாம்புக் கால்வாயின் மேல் அமையும் சிறுபாலத் திட்டம் காலதாமதம் ஆவதேன் ?

(இ) அது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே,

(அ) ஊராட்சி கொடுக்க வேண்டிய பங்குத் தொகையினைச் செலுத்த தாமதித்ததால் பால வேலையில் தாமதம் ஏற்பட்டது.

(இ) தற்போது பால வேலை நடந்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தச் சிறு பாலத்தைக் கட்டுவதன் மூலம் பல ஊர்களுக்கு இணைப்பு ஏற்படுத்த முடியும். எனவே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள்ளாக இதை முடிக்க வேண்டுமென்று ஒரு தனி ஆணை பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, வேலை நடந்து கொண்டிருக்கிறது, 16,500 ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டு 3,163 ரூபாய் அளவிலே நேற்றுவரையில் வேலை நடந்திருக்கிறது. ஆகவே, இன்னும் சில தினங்களிலே இந்த வேலை முடிந்துவிடும்.

### *Diamond Jubilee Arch in Thanjavur.*

*334 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Thanjavur Municipal Council had passed a resolution on January 24, 1974 requesting the Government to demolish the Diamond Jubilee Coronation Arch constructed during 1911 to commemorate the Coronation of King George-V; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) அண்டு (இ) தஞ்சாவூரில் மணிக்கூண்டுக்கு அருகில் உள்ள மன்னர் முடிசூட்டு வைர விழா நினைவு வளைவு, பாதசாரிகள் வண்டிகள் போக்கு வரத்துக்கு இடையூறாக இருப்பதால் அதை இடித்துவிடவேண்டும் என்று தஞ்சாவூர் நகராட்சி மன்றம் 1974-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் நாளிட்ட தனது 193-ஆவது தீர்மானத்தில் முடிவு செய்தது. தஞ்சை நகராட்சி மன்றத்தின் வேண்டுகோள் அரசால் ஏற்கப்படவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் ஏற்கப்படாததற்கு ஏதாவது காரணம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? பழங்கால மன்னர்களின் நினைவாக அது இருந்தாலும்கூட வருங்கால மக்களுக்கு வரலாற்றை எடுத்துக்காட்டுவதாக அவைகள் இருக்க ஏதாவது புது உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.



### *Cashew Plantations.*

*335 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state whether Cashew Plantations have been raised in the Public Sector in the State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஆம். வனத் துறை 35,104 ஹெக்டேர் பரப்பில் முந்திரி வளர்த்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சிந்திரி சிறக்கிறது வடக்கே, முந்திரித் தொழிலும் சிதைகிறது தெற்கே என்று அறிஞர் அண்ணா அவர்கள் 1957-ஆம் ஆண்டிலேயே குறிப்பிட்டார்கள். பல வாரியங்களை உருவாக்கிப் பல நல்ல காரியங்களைச் செய்யும் நமது அரசு முந்திரித் தொழில் மேலும் சிறப்படைய வாரியம் ஒன்று அமைத்திட ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு காடுகள்-மலைத் தோட்டக் கழகத்தின் சார்பில் முந்திரிச் சாகுபடி ஏற்றுக்கொள்ளப்பட்டது. 21,486 ஹெக்டேர் பரப்பு இந்தக் கழகத்தினிடத்திலே, தனியாகக் கவனம் செலுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், பல தொழிற்சாலைகளில் இன்றைக்கு முந்திரிப் பருப்பு செய்ய முந்திரிக்கொட்டை இல்லாததால் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதை விரிவுபடுத்த அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா? இப்பொழுது ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து "ரா-நட்ஸ்" இறக்குமதி செய்கிறார்கள். அதற்கு மாற்றுத் திட்டமாக இந்தத் திட்டத்தைச் சிறப்புத் திட்டமாக அமைக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்பொழுது சுமார் 35,000 ஹெக்டேருக்கு மேல் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் புதிதாகப் பயிரிடுவதற்குத் திட்டம் இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் விஸ்தரிப்பதற்கான குறிப்பு இருக்கிறது. தனி வங்கிகளின் மூலமும் சிறப்புத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்ற யோசனையும் இருக்கிறது.

### *Bamboo Cultivation.*

*336 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) the total acreage of land wherein bamboo cultivation is being done at present in Kanyakumari district; and

(*b*) the steps taken to expand the area under cultivation?

[1975 மார்ச் 15

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, (அ) அண்டு (இ) 1973–74-ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் 2 ஹெக்டேர் பரப்பளவில் வளர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதைப் பயிரிடுவதற்கு இன்னும் அதிக விஸ்தீரணம் உள்ள இடம் இருக்கிறது. பேப்பர் விலை இப்பொழுது அதிகமாக இருக்கிறது. பேப்பர் இன்டஸ்ட்ரிசுக்கு வழி வகுக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே, ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலமாக இந்தப் பயிரை அதிகமாகப் பயிரிடுவதற்கு வழிவகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே படிப்படியாக இத்திட்டத்தின்கீழ் பேச்சிப்பாறை, பெருஞ்சாணிக்கரைகளிலும் ரப்பர் தோட்டங்களின் கீழும் அதிக அளவில் வைக்க செயற்குறிப்பு உள்ளது.

*Board for administration of temples.*

*337 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether the Coimbatore District Conference of Hindu Temples Protection Committee held at the end of January 1974 requested the Government to constitute an autonomous Board for Hindu Temples, and

(*b*) if so, the action taken by the Government thereon?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) இக்கருத்து அரசால் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

புதியம்புத்தூர் கோவில்.

*338 வினு—திரு. பெ.சௌந்தரபாண்டியன் } மாண்புமிகு
திரு. எம். முத்தையா }

அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆகஸ்ட் மாதத்தில் தூத்துக்குடி அருகிலுள்ள புதியம்புத்தூர் கோவிலில் உள்ள சிலை திருட்டுப்போய்விட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1975 மார்ச் 15]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, (அ) 1974, ஆகஸ்ட் மாதத்தில் தூத்துக்குடி அருகிலுள்ள புதியம்புத்தூர் கோவிலில் உள்ள சிலை திருட்டுப் போய்விட்டது.

(இ) பீடத்துடன் கூடிய குலசேகரநாதர், குலசேகரவள்ளி மற்றும் சுப்ரமணியர் ஆகிய மூன்று பஞ்சலோக உற்சவ விக்கிரகங்களும், ஒரு தாமிர திருவாச்சியும் திருட்டுப் போயிற்று. இப்போது இவை காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளன. வழக்கும் நிலுவையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இது எவ்வாறு களவாடப்பட்டது? தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படவில்லை என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன். எந்த முறையிலே களவாடப்பட்டது? அந்தக் கோயிலில் தகுந்த பாதுகாப்பு இல்லாததால் தான் இந்தக் திருட்டு நடந்தது என்று சொல்லப்படுவது உண்மையா? அதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, களவாடப்பட்டதற்கான காரணங்கள் தெரியவில்லை. ஆனால் அது பட்டியலில் சேராத ஒரு ஆலயமாகும். அந்தச் சிலைகள் திருட்டுப் போனவுடன் அடுத்த நாளே கண்டு பிடிக்கப்பட்டு, காவல் துறையினிடத்தில் புகார் செய்யப்பட்டு, உடனடியாகச் சிலைகள் மீட்கப்பட்டு விட்டன.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, எவ்வாறு களவாடப்பட்டது என்பது திருட்டுப் பயலுக்குத்தான் தெரியுமே தவிர அமைச்சருக்கு எப்படித் தெரியும்?

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தச் சிலைகள் களவாடப்பட்டு பல சிலைகளெல்லாம் வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று சொல்லுகிறார்களே. அப்படி வெளிநாட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்ட மிக முக்கியமான இரண்டு சிலைகள் இன்றைக்கு அமெரிக்காவிலிருந்து வர முடியாமல் இருக்கிறதே. ஆகவே, அவைகள் வருவதற்கான நிலைமைகள் என்ன இருக்கின்றன. இந்தச் சிலைகள் வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படாத அளவிற்கு அதைத் தடுப்பதற்கு போலீசாரால் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா? அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கனவே தமிழ்நாட்டிலேயிருந்து வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்ட சில சிலைகளை மீண்டும் இங்கே மீட்டுக்கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நம்முடைய தமிழ்நாடு அரசாங்கம் அதிலே மிகவும் ஆர்வமாகச் செயல்பட்டு, மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க இப்பொழுது நியூயார்க்கில் இருக்கும் சிலையை மீண்டும் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று, வெளிநாடுகளில் உள்ள மூன்று நீதிமன்றங்களில் இது சம்பந்தமாக வழக்குகள் இருப்பதாக

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது மத்திய அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மேலும் இதுபோன்று சிலை திருடுபவர்களைத் தடுக்க வேண்டுமென்று, எல்லாக் கோயில்களிலேயும் பாதுகாப்புகளைப் பலமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். நிதி வசதி உள்ள கோவில்களில் காவலர்களை நியமிக்கிறோம். நிதி வசதியில்லாமலும், கட்டடம் பாதுகாப்பு இல்லாமலும் இருக்கும் கோயில்களைப் பொறுத்தவரையில், பக்கத்திலுள்ள வசதியான கோயில்கள் அல்லது பாதுகாப்பாக இருக்கும் கோயில்களுக்கு அந்தச் சிலைகளை உள்ளூர் கிராமத்தாரின் ஒப்புதலோடு எடுத்துச் சென்று பாதுகாக்கிறோம். இப்படிப் பல்வேறு வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளை இங்கே செய்கிறோம். அதோடு, இந்தச் சிலைத் திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக அல்லது தடுப்பதற்காக போலீஸ் துறையிலேயும் தனிப் பிரிவை ஏற்படுத்தி அவர்களும் இதைக் கண்காணித்துப் பாதுகாத்து வருகிறார்கள்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, இதில் எத்தனை பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் ? அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தக் கோயில் திருட்டு சம்பந்தமாக, புதியம்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சண்முகத்தய்யா, செல்லத்துரை, செல்லையா ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டார்கள். வழக்குத் தொடரப்பட்டு, வழக்குத் நிலுவையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த வெளிநாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்காவுக்குச் சென்ற சிலை, அதில் பிரதானமாக இருக்கும் சாமான்களெல்லாம் அங்கேயிருந்து பிரேசில் நகரத்திற்குத்தான் எடுத்துச் செல்லச் சட்டமிருப்பதாகச் சட்டச் சிக்கல் வந்திருக்கிறதே. இப்படிப்பட்ட சட்டச் சிக்கல் தமிழ்நாட்டிலேயிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சிலை சம்பந்தமாக சர்வதேச ரீதியிலே ஏற்படக்கூடிய காரணமாக இருப்பதால் இந்தக் குறிப்பிட்ட சிலைகள் தமிழ்நாட்டை விட்டுச்செல்லாமல் இருந்திருக்கிறதா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கனவே கடத்தப்பட்ட சிலைகள், அதிலே உள்ள சட்டச் சிக்கல்களை விவாதித்து மீண்டும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென்று எண்ணித்தான் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்து நடத்துகிறோம். ஆனால் இந்தச் சிலைகளைப் பொறுத்த வரையில் திருட்டுப்போனவுடனே காவல்துறையில் புகார்செய்யப்பட்டு, உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு மீண்டும் மீட்கப்பட்டு, இப்பொழுது நீதிமன்றத்தில் பொறுப்பிலே அந்தச் சிலைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அரிசன மாணவர் விடுதிகள்.

*339 வினா : திரு. வ. முத்து.—மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருச்சங்கோடு வட்டம், மல்லசமுத்திரம், கோட்டப்பாளையம் ஆகிய இடங்களில் அரிசன, மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில்; அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்.—(அ) சேலம் மாவட்டம் கோட்டப்பாளையத்திலிருக்கும அரசினர் அரிசன மாணவர் விடுதிக்காக கட்டடம் கட்டும் செயற்குறிப்பேதும் அரசிடமில்லை. ஆயினும் மல்ல சமுத்திரத்திலிருக்கும் அரசினர் அரிசன மாணவியர் விடுதிக்கும், மாணவர் விடுதிக்கும் கட்டடங்கள் கட்டுமாறு தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்துக்கு அரசு உத்திரவிட்டுள்ளது.

(இ) மல்ல சமுத்திரத்திலுள்ள விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணியைத் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் உரிய காலத்தில் மேற்கொள்ளும்.

*340 வினா : திரு. எ. எம் டி. நாச்சியப்பன் : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், ஆத்தூரில் உள்ள அரசு கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கென அங்கு ஒரு அரிசன மாணவர் இல்லம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:—(அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டம் ஆத்தூரில் 50 மாணவர்கள் தங்கிப் பயிலும் வசதியுடையதாய், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கென அரசு விடுதியொன்று, தொடங்கும் செயற்குறிப்பு, அரிசன நல இயக்குநரிடமிருந்து வரப்பெற்றுள்ளது. 1974–75-ஆம் ஆண்டுக்கு 21 புதிய விடுதிகள் நிதிநிலைக்கேற்ப திறக்க அரசு முடிவு செய்து அதற்கான இடங்களையும் தேர்ந்தெடுத்து ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. ஆகவே, மேற்படி கோரிக்கை இம்மாதிரி வரப்பெறும் இதர கோரிக்கைகளுடன் 1975–76-ம் ஆண்டில் இரண்டாம் நிலைத்-திட்டத்தின் கீழ் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

(முற்பகல் 9–30).

திரு. என். மருதாசலம்: அரிசன மாணவர்களுக்காக 21 புதிய விடுதிகள் திறப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த இடத்தில் திறக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இப்போதுதான் இடங்களைத் தேர்ந்தெடுக்கச்சொல்லி அந்தந்த மாவட்ட அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இடங்களைத் தெர்ந்தெடுத்து பட்டியல் வந்த பிறகு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநிலசுயாட்சி பற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அமைச்சரவை நடத்திய விவாதம் குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா என்பது பற்றி.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இராசமன்னார் குழு அறிக்கையை இந்த மன்றத்தில் விவாதித்து மாநிலசுயாட்சித் தீர்மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். அதைப்பற்றி இந்த மன்றத்தில் இருக்கும் சிலர் அது பிரிவினை வாதம் என்று சொன்னாலும் அவசரம் அவசரமாக இன்றையதினம் மத்திய அரசாங்கம் அமைச்சரவையைக் கூட்டி அதைப் பற்றி வியாழக்கிழமை இரவு விவாதித்து இருக்கிறது. அதைப் பற்றியும், அரசியல் சாசனத் திருத்தம் பற்றியும் பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அப்படி விவாதிக்கிறபோது ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "ஷேக் அப்துல்லாவிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே காஷ்மீர் பற்றி உடன்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மாநில சுயாட்சி கேட்கும் பின்னணியில் இந்த முடிவைக் கவனிக்க வேண்டும்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது ?

திரு. நா. வீராசாமி: இப்படி மத்திய அரசாங்கம் அவசர அவசரமாக கூடி இதைப் பற்றி விவாதித்திருக்கிறார்கள். இதைப் பற்றி அரசாங்கத்திற்கு விவரம் அளித்திருக்கிறார்களா? அல்லது இந்த மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.



(ஆ) வினுநேரம் முழுவதும் வினுக்கள் கேட்பதற்குப் பயன்படுத்தப் படாது வேறு அலுவல்கள் வினு நேரத்தில் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய கேள்வி நேரம் சம்பந்தமாக விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. முதல் மணி பூராவும் கேள்விகளுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்றும், அப்படி அந்த முதல் மணிக்கும் மேலும் செல்ல வேண்டியிருந்தால் தாங்களே அதை நீடிப்பதற்கு அதிகாரம் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மணி 9-30 தான் ஆகிறது. இன்றைக்கு நிகழ்ச்சிநிரலில் கொடுத்திருக்கும் விவரங்கள் பத்து மணிக்குத் தொடங்குவதுதான் முறையாக இருக்கும். 9-30 மணிக்கு மற்ற அலுவல்களைத் தொடங்குவது என்பது விதிமுறைகளுக்கு விரோதமாக இருக்கிறது. இந்த முறையானது மற்ற சட்டமன்றங்களில் அனுஷ்டிக்கப்படுகிறது. லோக்சபாவைப் பொறுத்தவரை கூட நாம் இங்கே கேள்வி நேரத்தில் எக்ஸ்டென்ட் செய்வது போல் நேரத்தை எக்ஸ்டென்ட் செய்வதில்லை. 11 மணிக்குக் கேள்வி நேரம் ஆரம்பித்து 12 மணிக்கு "சீரோ உறவர்" என்ற நிலை அங்கே இருக்கிறது. இங்கே "சீரோ உறவர்" 9.05-க்கும் வருகிறது, 9-30-க்கும் வருகிறது என்ற நிலை இருக்கிறது. ஆகவே, ஒன்று விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும் அல்லது அந்த விதிகளின்படி நடக்க வேண்டும், இதுபற்றித் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய விதிமுறைகள் தெளிவாக இருக்கின்றன. முதல் மணி கேள்வி நேரம். அவையின் அலுவல்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை நடக்க வேண்டும். சில நேரங்களில் நிகழ்ச்சி நிரலில் உள்ள செய்திகள் விவாதிக்கப்பட்டு முன்னதாகவே முடிந்து விட்டால் கூட 1-30 மணி நேரம் வரை உட்கார்ந்திருக்க வேண்டுமென்பதில்லை. 1-30 மணிக்கு மேல் நீடித்தால்தான் அவையின் அனுமதியைப் பெற வேண்டுமே தவிர முன்னதாகவே முடிந்தால் விட்டால் அதற்காக அவையின் அனுமதியைப் பெறத் தேவையில்லை. அதே போல் போதிய துணைக் கேள்விகள் அங்கத்தினர்கள் கேட்கவில்லை என்ற காரணத்தால் முன்னதாகவே முடிந்து விட்டது. ஆகவே, அடுத்த அலுவல் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதிலே விதிமுறைகளுக்கு மாருக எதுவும் இல்லை.

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி 10 மணி வரையிலும் கேள்வி நேரம். கால் அட்டென்ஷன் நோட்டீஸ், அட்ஜர்ண்மென்ட் மோஷன் எல்லாம் கொடுத்திருக்கிறோம். கேள்வி நேரத்தில் கேள்வி கேட்காதவர்கள் 10 மணிக்கு வந்து தாங்கள் கொடுத்த தீர்மானங்களின் பேரில் பேசலாம் என்று வந்தால் 9-30 மணிக்கே முடிந்து விடுகின்ற நிலையில் அவர்களுக்கு வாய்ப்பு இல்லாது போய்விடுகிறது. கேள்வி நேரம் 10-30 மணி வரை எல்லாம் போயிருக்கும்போது இன்றைக்கு என் 9-30 மணிக்கே முடித்து

விட்டீர்கள்? என்னுடைய கேள்வி ஒன்று இன்றைக்கு வந்திருக்கிறது. சாதாரணமாக, முதலமைச்சர், இரண்டாவது அமைச்சர் என்று வந்து அதன்பிறகுதான் என்னுடைய கேள்வி வரும் என்று அதற்கு பத்து நிமிஷம் ஆகும் என்று நினைத்துக் கொண்டு வெளியே முக்கியமான கருத்தை விவாதித்துக் கொண்டிருப்பதற்குள் கேள்வி ஓடிவிட்டது. ஏன் நீங்கள் அவசர அவசரமாக 9-30 மணிக்கே கேள்வி நேரத்தை முடிக்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குக் காரணம் பேரவைத் தலைவர் சொல்லவேண்டியதில்லை. கேள்விகேட்ட உறுப்பினர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் அவைக்கு வந்திருக்க வேண்டும். அது உங்களுடைய நீங்காக் கடமை. செழியன் அவர்கள் கேள்வி எடுத்துக் கொள்ளும்போது அவர்கள் அவைக்கு வரவில்லை. அதற்கு முன்பு யாரும் போதிய துணைக் கேள்விகள் கேட்கவில்லை. செழியன் அவர்கள வரும் வரையில் நான் காத்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. கோவை செழியன்: கேள்வி நேரத்தை 9-30 மணிக்கெல்லாம் முடித்துவிட்டீர்களே......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகளை உறுப்பினர்கள் கேட்கவில்லை என்றால் நான் என்ன பண்ண முடியும்? உறுப்பினர்கள் யாராவது மூலக் கேள்வி கேட்டு அந்த உறுப்பினர் அவைக்கு வரவில்லை என்று சொன்னால் அந்தக் கேள்வியை யாரும் எழுப்பாமல் இருக்க வேண்டும். அப்படி எழுப்பாமல் இருந்தால் பிறகு கேட்க அனுமதிக்கலாம். அதற்கு விதிமுறைகளில் இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, விதிமுறைகளைப் படித்துவிட்டு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ்; ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார். நமது விதிமுறைகளில் ரூல் 22-ல்................

மாண்புமிகு போரவைத் தலைவர்: இது தொடர்பாக நான் ஒன்றைக் கூறிவிடுகிறேன். 1961-ல்

"Even though the first-hour of every sitting should be available for answering of questions, if questions included in the list of questions for a day had been answered before one hour, the House could proceed to the next item on the agenda and permission for it was not necessary. Only when they wanted to take away the question-hour completely and allot it to some other business, permission of the House was necessary."

என்று கூறியிருக்கிறார்கள். அதுதான் நம்முடைய விதிமுறைகள். அதிலே எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை.



திரு. எ. சுப்பிரமணியம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டருக்குப் பதில் சொல்லும்போது ஒரு உறுப்பினருடைய கேள்வி வந்து அதை எழுப்பாமல் இருந்தால் பிறகு வாய்ப்புக் கொடுக்கலாம் என்று சொன்னீர்கள். நாடாளுமன்றத்தில் கேள்வியைக் கொடுத்து உறுப்பினர் இருந்தால்தான் கேள்வியை எழுப்பலாம் என்று இருக்கிறது. இங்கே கேள்வியைக் கொடுத்தவர் இருக்கிறாரா, இல்லையா என்றே பார்ப்பதில்லை. அவர் பெயரைச் சொன்னவுடனேயே அமைச்சர் எழுந்து பதில் தந்து விடுகிறார். ஆகவே, இதற்குத் தாங்கள் கூறுகின்ற பரிகாரம் இங்கே பொருந்தாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விதியை மாற்றுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. சுப்பிரமணியம் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று நினைக்கிறேன். மூலக் கேள்வி கொடுத்தவர் இல்லையென்றால் அவர்களுக்காக துணைக் கேள்விகள் காத்துக் கொண்டிருக்காது என்றுதான் சபாநாயகர் சொன்னதாக நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அல்ல, கேள்வி கேட்ட உறுப்பினரைத் தவிர வேறு யாரும் மூலக் கேள்வியை எழுப்பக் கூடாது என்று விதியை மாற்றிவிடுங்கள். நம்முடைய விதிமுறைகள் அப்படி இருக்கின்றன.

"If on a question being called, a Member in whose name it stands is absent, the Speaker, at the request of any member, may direct that the answer to it be given"

என்று விதிகளைப் போட்டிருக்கிறோம்.

"When all the questions for which an oral answer is desired have been called, the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whose name it stands, and may permit the member, if present, to ask the question."

என்று விதி முறைகளை நீங்கள் மாற்ற வேண்டும். விதி முறைகளைக் கொடுத்து விட்டு அதற்கு முரணான பாயிண்ட் ஆப் ஆர்டரைக் கேட்பது பொருத்தமல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்த விதிமுறைகளிலே

"The first hour of every sitting shall......be available for the asking and answering of questions".

என்று இருக்கிறது. 'ஷெல்' என்று இருக்கிறது. இந்தப் பாயின்டை நான் ரூல்ஸ் கமிட்டியிலேயே ரெய்ஸ் பண்ணியிருக்கிறேன்.

"the first hour shall be available........

நம்முடைய ரூல்ஸ் என்ன சொல்லுகிறது? It is a technical point."

"The first hour of every sitting shall......be available for the asking and answering of questions."

இது 'மான்டேட்டரி' யாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஃபஸ்ட் ஹவரை டிஸ்பென்ஸ் பண்ணலாம்.

"Unless the House unaniomously resolves otherwise".

ஃபஸ்ட் அவர் என்ற முறையை நாம் டிஸ்பென்ஸ் பண்ணிவிடலாம்.

The Hon. Speaker may in his discretion, extend the time for Questions. Now, my point is, that there is no option for the Hon. Speaker to reduce the Question Hour.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒரு விளக்கம் கேட்கிறேன். இப்போது 15 கேள்விகள் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு கேள்வியாக எடுக்கிறோம். போதிய துணைக் கேள்விகள் கேட்கவில்லை. அரை மணி நேரத்தில் முடிந்து விட்டது. அப்போது என்ன செய்ய வேண்டும்? அட்ஜர்ன் பண்ணுவதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மேலவையில் கூட இந்த ஒரு மணி என்ற விதி முறை இருக்கிறது. ஆனால் 10, 15 நிமிடங்களில் கேள்விகள் முடிந்து விடுகின்றன. பின்னர் மற்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன என்ற முறையை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மேலும், 1961-ஆம் ஆண்டு ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மணி என்று ஒதுக்கினாலும் கூட 10, 15 நிமிடங்களுக்குள் முடிந்து விடுகின்ற நேரத்தில் அடுத்த நடவடிக்கையை எடுத்துக் கொள்வதுதான் முறை. தொடர்ந்து அந்த முறை கையாளப்பட்டு வருவது நீடிக்க வேண்டும். அந்த முறையில் நீங்கள் தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஃபஸ்ட் அவர் என்றால், "தி ஹோல் ஃபஸ்ட் ஃபஸ்ட் அவர்" என்று பொருள் அல்ல. இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடந்தால் என்ன செய்வது என்று முன்பே தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதை பின் பற்றி நடந்து வருகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்:

'First hour shall be Question Hour'.

என்று இருந்தாலும் கேள்விகள் குறைவாக இப்போது கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதிகமாக துணைக் கேள்விகள் இருக்கின்ற காரணத்தால் கேள்விகளை மேலும் போடுவதற்கு அனுமதி அளிப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு விஷயம்.



## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### வேலூர் சி. எம். சி. மருத்துவ மனை விவகாரம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து சி. எம். சி. மருத்துவ மனை பற்றி இந்தப் பேரவையில் ஒத்தி வைப்புப் பிரேரணைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, அழகர்சாமி, ஆர். மாரிமுத்து ஆகியோர் கொடுத்திருந்தார்கள். 11-ஆம் தேதி என்னிடம் நோட்டீஸ் கொடுத்தார்கள். பிறகு இந்த அவையில் அது பற்றி எழுப்பப்பட்டபோது, ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்று என்னுடைய கருத்தைக் கூறினேன். அதற்குப் பிறகு, திரு. ஆலடி அருணா, திருமதி சத்தியவாணி முத்து, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. ஏ. வகாப், திரு. கோவை செழியன், திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. சௌடி சுந்தரபாரதி, திரு. எம். ஏ. லத்திப், திருமதி த. ந. அனந்த நாயகி, டாக்டர் எச். வி. ஹாண்டே, மறுபடியும் திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. என். டென்னிஸ் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். முன்னதாக சில உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து, அது ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்த பிறகு, இத்தனை உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்ற முறையில் இது ஒரு முறைதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசுவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நீங்கள் ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். அந்த ரூலிங்கில் எனக்கு ஒப்புதல் இல்லை. ஒன் அவர் கோர்ஸின் சம்பந்தமாக இருக்கிற ரூலிங்கை கொஞ்சம் திருத்தினால் அது சரியாக இருக்கும். அந்த மாதிரி ரூலிங்கை மாற்றாமல் இருக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அது தவறாக இருக்கலாம். எப்படியோ சில முறைகளை அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். அடுத்து முக்கியமான அட்ஜர்ன்மெண்ட் மோஷன், பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வரும்போது ஒரு நாள் ஒரு நாள், முன்னால் பின்னால் போகலாம். அந்த ஒத்திவைப்புப் பிரேரணையை எடுக்கின்ற நேரத்தில் கட்சிக்கு ஒருவராக, தலைவரோ, அடுத்தபடியாக இருப்பவரோ பேசுகின்ற முறையை அனுஷ்டித்துக்கொண்டு வந்திருக்கிறோம். அந்த முறையை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஆய்வில், இருக்கிறது, என்று சொன்ன பிறகும் கொடுப்பது என்றால் அர்த்தம் இருக்க முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதில் கொஞ்சம் டைம் கொடுக்க வேண்டும். காரணம், இந்த ஒத்திவைப்புப் பிரேரணை என்பது சாதாரணமாகக் கொடுக்கக் கூடியதல்ல. முக்கியமான பிரச்சினையில், அரசின் தவறு—அல்லது அரசு எந்த அளவுக்கு குற்றம் செய்திருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம் என்பதை உங்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். அதற்கு நீங்கள் கொஞ்சம் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்:

அட்மிஷிபிள் என்று சொல்வதற்கு இரண்டு மூன்று விஷயங்கள் நமது வாதத்தில் இருக்க வேண்டும். எந்த முறையில் சட்டசபையில் எழுப்புவது என்பது ஒன்று. இன்னொன்று, வெகு சமீபத்தில், நேற்றோ, முந்தாநாளோ அந்த சம்பவம் நடந்து அவசர, பொது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். அது மாத்திரமல்ல. மூன்றாவதாக, அரசின் தவறும் இருக்க வேண்டும். மொத்தம் நான்கு அம்சங்கள் இருக்கின்றன. அவற்றில் 3 அம்சங்களைப் பொறுத்தவரையில் கூறியிருக்கிறேன்.

நான்காவது அம்சம் ஒன்று இருக்கிறது. ஏற்கெனவே ஒரு தடவை இந்த சி. எம். சி. ஆஸ்பத்திரி சம்பந்தமாக இங்கே விவாதம் எழுப்பப் பட்டது. அந்த விவாதம் எழுப்பப்பட்ட பிறகு ஏற்பட்ட ஒரு புதிய சம்பவத்தை வைத்துக் கொண்டு நாங்கள் ஒத்தி வைப்புப் பிரேரணையை கொண்டு வந்தோம். எனது வாசகங்களே, "அந்த ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய ஒரு முக்கியமான டாக்டர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, பல டாக்டர்கள் ராஜினாமா செய்வதாகவும் சொல்கிறார்கள். இதன் மூலமாக, மிக முக்கியமாக இதிலே இருக்கக் கூடியது, அந்த ஆஸ்பத்திரியானது இந்த மாநிலத்தை விட்டு விட்டே போய் விடுமோ என்ற பயம் இருக்கிறது, எனவே இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும்" என்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

டாக்டர் கைது செய்யப்பட்டார் என்பதைப் பற்றி எனக்குக் கிடைத்த விவரங்களை வைத்துச் சொல்கின்றேன். 1954-ஆம் வருஷம் ஒரு சம்பவம் ஏற்பட்டது. 1954-ஆம் வருஷம், அக்டோபர் மாதம், அந்த ஒரு சம்பவத்திற்காக 1975-ஆம் வருஷம் மார்ச் மாதத்தில் கைது செய்யப் படுவது....... (குறுக்கீடு) ஒரு வேளை நான் சொல்கின்ற வருஷம் சரியானதாக இல்லாமல் இருக்கலாம். ஐ ஸ்டான்ட் கரெக்டெட். 1974-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் சம்பவம் நடந்திருக்கிறது. அந்தச் சம்பவத் தைப் பற்றி கம்பிளெயிண்ட் கொடுத்திருக்கலாம். கொடுக்காமலும் இருந் திருக்கலாம். போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரிய வில்லை.

இப்போது இங்கே பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தம் எல்லாம் நடந்து முக்கியமாக, பிரச்சினை இங்கே சட்ட சபையில் எழுப்பப் பட்டு, மக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டு இப்படி இருக்கின்ற சமயம்; மார்ச் மாதம் அந்த டாக்டர் கைது செய்யப்படுகிறார் என்றால், "ஹௌ ஃபார் இட் ஈஸ் போனஃபைடி" இந்த மாதிரி கைது செய்வதற்கு பெரிய நோக்கம் இருக்கிறது என்று நாங்கள் கருதுகின்றோம். இது முதல் விஷயம்.

அடுத்தாற்போல் இது சம்பந்தமாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதை "இன் ஃபேர்னஸ் டு தி கவர்ன்மெண்ட்" என்று சொல்ல வேண்டும். இந்தச் சமயத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். இது சம்பந்தமாக பரிசீலனை செய்து கொண்டிருக்கி றோம் என்று தான் சொல்ல முடியும், இதைப் பற்றி மற்றவர்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. பேச்சு





வார்த்தை நடந்தது. பொதுவாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள்—இங்கே கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், அண்ணா தி. மு. க.-வைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்— இந்தக் கட்சி யைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி இந்த விஷயங்கள் என்ன என்பதை தெரிந்து கொள்வதற்காக முயற்சித்தார்கள். இந்த முயற்சிக்கு முக்கியமான காரணமாக இருந்தவர் சட்டசபை உறுப்பினர் மிசஸ். ஆல்டா ஃபௌலர் அவர்கள் தான். மற்றும் எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து இப்படி ஒரு சிக்கலான விஷயத்தை தீர்த்து வைப்பதற்காக சில கருத்துக்களைக் கூறினார்கள். அவருடன் சில நண்பர்கள் முதலமைச்சரைப் பார்த்து சொன்னார்கள். முதலமைச்சரும் பொறுப்பேற்று, சரி என்று சொன்னார்கள். மிஸஸ் பௌலர் அவர்கள் வேலூருக்குச் சென்றிருந் தார்கள். அவரும் நானும் சந்தித்தோம். பேச்சு வார்த்தை முறை இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட விஷயங்களை வைத் துக் கொண்டு மிஸஸ் பௌலர் அவர்களும், திரு. சந்தோஷம் அவர்களும் வேலூருக்குச் சென்று அங்கு இருக்கக்கூடிய நிர்வாகஸ்தர்களை சந்தித்து அவர்களுடைய கருத்தைச் சொல்லி மறுபடியும் முதலமைச்சரிடம் சொல்லி முதலமைச்சர் அவர்கள் ஒரு புரபோசலைக் கொடுக்க, இதில் பாதிக்கப் பட்டவர்களைக் கலந்து கொண்டு தான் சொல்ல வேண்டும் என்று சொன் னார்கள். சொல்லி, மறுநாளே அவர் ஊருக்குப் போய் விட்டார். பதில் தெரிந்து, அது சம்பந்தமாக இங்கே எழுப்ப வேண்டுமென்று விரும்பி னேன். இதற்கிடையில் நமது சட்டமன்றத்தில் இதை சுட்டிக்காட்டி யிருக்கிறேன். இதே நேரத்தில் நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. அங்கே சபாநாயகர் அவர்கள் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் முறையாக எழுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கி றார்கள்.

பத்திரிகை செய்தியைப் பார்க்கும்போது இந்த குறிப்பிட்ட விஷயத்தில்,

"there is an opening for every member to address the Speaker when he says that he wants to make a submission" என்ற முறையில் கூறியிருக்கிறார்கள்.

அந்த சப்மிஷனை சரி என்று ஏற்றுக்கொண்டு அவர் ஒரு கருத்தையும் பேசுவதற்கு அனுமதித்து இருக்கிறார்கள். அப்படி அனுமதித்த பிறகு அங்கே நடந்த விவரங்கள் இன்று பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. அந்த விவரங்களின் உள்ளே நான் போகவில்லை. அந்த நேரத்திலே நாடாளுமன்றத்தில் உள்ள 27 உறுப்பினர்கள்—பல கட்சியைச் சேர்ந்த வர்கள்—ஆளும் காங்கிரஸ், எங்கள் கட்சியைச் சார்ந்த சந்திரப்பன், இந்திய முஸ்லீம் கட்சியைச் சேர்ந்த முகமதுகோயா ஆகியோர்—கையெழுத் திட்டு ஒரு மகஜரைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த மகஜரின் காப்பி கூட பத்திரிக்கையில் வந்து இருக்கிறது. இப்படி இருக்கிற நேரத்தில் அரசாங்கம் என்ன செய்து இருக்கிறது? அரசாங்கத்திற்கு இதிலே பொறுப்பு இருக்கிறதா, இல்லையா என்ற மிகப்பெரிய கேள்வி வருகிறது.

இன்று பத்திரிக்கையில் பார்த்தேன். முதலமைச்சர் அவர்கள் தெளி வாகச் சொல்லியிருக்கிறார்கள். அன்று அவர்கள் கொடுத்த கவுண்டர்-ப்ரபோசலை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்லி

விட்டார்கள். ஆகவே, சிக்கல் இன்று முத்திக்கொண்டு வருகிறது. அப்படி சிக்கல் முத்திக்கொண்டு வருகிறபோது, இது வெறும் தொழிலாளி—முதலாளி பிரச்னையாக இல்லாமல், ஒரு ஹாஸ்பிடலுக்கும் சிப்பந்திகளுக்கும் இடையே உள்ள பிரச்னையாக இல்லாமல்—எப்படி ஆகியிருக்கிறது என்றால்—ஹாஸ்பிடல் நிர்வாகத்திற்கும்—குறிப்பாக இங்கே இருக்கும் முதலமைச்சருக்கும்—அரசாங்கத்திற்கும் இடையே இருக்கும் பிரச்னையாக வந்து விட்டது. அப்படியிருக்கிற காரணத்தால் எங்களுக்க்கு சிக்கலாக இருக்கிறது.

எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அதை செட்டில் செய்யும் பொறுப்பு அரசின் கையில் இருக்கிறது. ஒருவரை அரெஸ்ட் செய்ய வேண்டுமென்றால் அது அரசின் உதவி கொண்டு தான் செய்ய வேண்டும். ஒரு பிரச்னையை சுமூகமாகத் தீர்க்கவேண்டுமென்றாலும் அது அரசின் உதவி கொண்டு தான் செய்யவேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். அப்படி நீங்கள் செட்டில் செய்வீர்களா என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில், அரசாங்கம் அந்த வகையில் செயல்பட வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில், அரசாங்கத்தின் நிலை என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் தெளிவு படுத்திவிட்டார்கள்.

ஆகவே, இதற்கு ஒரு பரிகாரம் கண்டிப்பாக தேடவேண்டும் என்ற அடிப்படையில்தான், அந்தப் பரிகாரத்தைப் பற்றி சொல்வதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறோம். இதை விவாதிப்பதன் மூலமாக, நாங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது நான் எடுத்துச் சொல்வது எல்லாம், இந்தத் தீர்மானத்தின் அட்மிசிபிலிடிக்காகச் சொல்கிறேன். மேட்டருக்குள் போகவேண்டுமென்றால், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, சபை அதற்கு அங்கீகாரம் கொடுக்கிறதா என்று பார்த்து, சபாநாயகர் அவர்கள் இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் பொறுத்த வரையில், கடைசியாக வந்திருக்கும் நிலை என்னவென்றால் உங்களுக்கு ஒரு அபிப்பிராயம் நான் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது சர்வகட்சி சார்பாக பிரதம அமைச்சரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்தபோது அவர்களைக் கேட்டு இருக்கிறார்கள், அநேகமாக எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏதாவது ஒரு ஆலோசனை கொடுக்கவேண்டும். தனியாக அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்ற நிலை இல்லை. இது அதற்கு அப்பாற்பட்டுப் போய்விட்டது. அரசாங்கம் கையில் மாற்று யோசனை ஏதாவது கொடுத்து, இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று பொறுப்போடு சொல்லியிருக்கிறார்கள். நாடாளுமன்ற சபாநாயகர் அவர்கள் கூட நாடாளுமன்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரைப் பார்த்து, நீங்கள் இதில் தலையிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் நம்முடைய அமைச்சர் மாதவன் அவர்கள் கூட அந்த நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கிறார்கள். ஆக்வே, அவருக்கும் அந்த விவரம் எல்லாம் தெரியும்.





என்னைப் பொறுத்தவரையில், சர்வ கட்சியைச் சார்ந்தவர்களும், ஒரு ஆலோசனை கொடுத்து, இரு சாராரும் ஏற்றுக்கொள்ளும் நிலையை உருவாக்கலாம், அல்லது ஓய்வு பெற்ற ஒரு ஹைகோர்ட் நீதிபதிக்கு முன்னால் இந்தப் பிரச்னையை வைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நஷ்ட ஈடு கொடுக்கலாம், எப்படி இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம் என்ற முறையில் செய்யலாம்.

சாதாரண முறையாக இருந்தால், நேரடியாக அரசாங்கமே இதைத் தீர்த்து விடலாம் என்று சொல்லலாம். தற்போது, அரசாங்கம் பொறுப்பு ஏற்கும் நிலையில் இல்லாமல், பொறுப்பிலிருந்து தவறி இருக்கிற காரணத்தால், அரசாங்கம் இதிலே குற்றவாளிகளில் ஒருவராக இருக்கிற காரணத்தால், அரசாங்கம் மீது ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொல்கிறோம். ஆகவே, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை குறித்து விவாதித்தால் நம்முடைய சபைக்கே கௌரவமாக இருக்கும்.

பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதன் மீது இரு சாராரின் கருத்துக்களையும் கேட்டு, ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று முடிவு சொல்லிவிடுகிறீர்கள். இந்தத் தீர்மானத்தைப்பொறுத்தவரையில், இதை இங்கே விவாதித்தால் இந்த மன்றத்தின் கௌரவமும் உயரும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதிப்பதன் மூலம் எங்களுடைய கருத்துக்களையும் கூற முடியும். அதே நேரத்தில், இன்றைக்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்க முடியாத ஆளும் கட்சி உறுப்பினர்கள், அந்த மாவட்டத்திலிருந்து வந்திருக்கிறவர்கள், அவர்களும் தங்களுடைய ஆலோசனைகளைக் கூறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் எல்லா உறுப்பினர்களும் பங்கெடுத்து விவாதிக்கும் வகையில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு சபையின் அங்கீகாரம் பெற்று, இந்தத் தீர்மானத்தை விவாதிக்க எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கோவை செழியன்</u>: பேரவைத் தலைவரவர்களே, இந்த வேலூர் கிருஸ்துவ ஹாஸ்பிடல் ஸ்டிரைக் சம்பந்தமாக ஒத்தி வைப்புத்தீர்மானத்தை இந்த மன்றத்தில் ஏற்கனவே கொண்டு வந்து விவாதித்து இருக்கிறோம். இந்தப் பிரச்னை மேலும் மோசமான நிலைக்கு சென்று இருக்கிற காரணத்தால்தான் இந்த மன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சிகளைச் சார்ந்துள்ள அத்தனை கட்சித் தலைவர்களும் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

நான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகிற நேரத்தில், எப்படி இந்த பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்கு சாதகமாக உள்ள பல சான்றுகளை வைத்து இருக்கிறேன். அதைத் தங்களிடத்தில் காட்டுகிறபோது, இது விவாதிப்பதற்கு வந்தால், அதைக் காட்டலாம் என்று தாங்கள் சொல்லிவிட்டீர்கள். அப்படியானால் விவாதிக்க இது வராது போல் இருக்கிறது என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. காரணம் இதில் உள்ளபடியே நீங்கள் அப்படி ஒரு முடிவு எடுத்துவிட்டால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்குள்ளே நடந்தது எல்லாம் சொல்வது சரியல்ல. இந்த தீர்மானத்தைப்பற்றி மட்டும் சொல்லுங்கள். விவாதத்திற்கு வந்த பிறகு காட்டுங்கள். அதற்கு முன் வேண்டாம் என்று கூறினேன்.

திரு. கோவை செழியன் : எனக்குள்ள பயம் என்னவென்றால் நீங்கள் எந்தக் கட்சியையும் சாராதவர்கள்—அங்கே உட்கார்ந்திருக்கிற நேரத்தில்—ஆகவே, தாங்கள் எல்லோரையும் சமமாகப் பாவித்து நீதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எல்லாம் வேண்டாம். அவை முன்னாலே இருக்கிற பொருள் பற்றி பேசுங்கள்.

திரு. கோவை செழியன் : நீதி வழங்குங்கள் என்று சொல்ல வேண்டாம் என்று சொல்கிறீர்களா? இந்தப் பிரச்னை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்காக காட்டுகிறேன் என்று சொன்னேன். சரி, விவாதம் நடக்கிறபோது தேவை என்றால் நான் அதைச் சொல்கிறேன். இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் எடுத்துச் சொல்லத்தான், முக்கியமாக உள்ள காரணத்தால் தான், அதை அனுமதிக்கவேண்டுமென்பதற்காக சில மேற்கோள்களை நான் காட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். அதிலே கூட மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி, முதலமைச்சர் அவர்களாலேயே இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கே அனுப்பப்பட்டு அவர்களும் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு தவறான கருத்து தரப்பட்டு இருக்கிறது, என்று சொல்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மையோ, பொய்யோ அது பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்த வேலூர் ஹாஸ்பிடலில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றால், —அந்த ஹாஸ்பிடல் போனால் இன்னொன்று வராதா என்று சொல்லலாம், பல ஆண்டுகாலம் கட்டிடம் கட்டலாம், அதிலே நிறைய டாக்டர்களைப் போடலாம், புதிய கருவிகளை வாங்கி வைக்கலாம், உங்களிடத்திலே பணம் இருக்கிறது, செய்யலாம், இத்தகைய புகழ் வாய்ந்த, நல்ல அனுபவம் பெற்ற மேல் நாடுகளில் சென்று பயிற்சி பெற்று வந்த டாக்டர்கள், டெக்னிசியன்களை நாம் உருவாக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வளவு பெரிய நிறுவனத்தை ஒரு மைனாரிட்டி மதத்தைச் சேர்ந்தவர்கள் உருவாக்கி நடத்தி வருகிறார்கள்.

Thiru V. KRISHNAMOORTHY (Nellikuppam): Sir, on a point of order. Is the hon. Member permitted to raise a debate ?

திரு. கோவை செழியன் : ஐ ஆம் நாட் ஈல்டிங். நான் 3 கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) வேண்டுமென்றே என்னைப் பேசவிடாமல் செய்வதற்காக இப்படி குறுக்கிடுகிறார்கள். திட்டமிட்டு இதைச் செய்கிறார்கள். உங்கள் தலைவர் இப்படி செய்ய வேண்டுமென்று சொல்லித் தந்தார்களா?



Thiru DURAI MURUGAN Sir, the hon Member (Thiru Krishnamoorthy) has got the right to raise a point of order and the Hon. Speaker should allow him....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சப்ஜெக்டுக்கு வாருங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்த சபையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்துவிட்டு, அது குறித்து என்ன காரணத்திற்காக ஒத்திவைக்க வேண்டுமென்று பிரீப்பாக சொல்ல வேண்டுமென்று விதி இருக்கிறது. அது தான் இந்த அவையில் கடைப்பிடித்து வரும் முறை. இங்கே அருமை நண்பர் செழியன் நோட்டீஸ் கொடுத்து இருக்கிறார்கள். அதன்மீது பேசுவதை ஒரு சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு அவர்கள் இந்த வேலூரில் இருக்கும் கிருஸ்டியன் மிஷன் ஹாஸ்பிடல் தான் உலகத்திலேயே பெரிய, சிறந்த ஹாஸ்பிடல் மாதிரி பேசுகிறார்கள். அது நடப்பதை இந்த அரசாங்கம் தடை செய்கிறது என்று இதிலே டிஸ்கஷன் மாதிரி சொல்கிறார்கள். இதை நீங்கள் ஏன் அனுமதிக்க வேண்டும்?

திரு. கோவை செழியன் : நான் பேசுவதில் என்ன தவறு இருக்கிறது? வேலூர் ஹாஸ்பிடலை நல்ல ஹாஸ்பிடல் என்று சொல்வது தவறா? மோசமான ஹாஸ்பிடல் என்று சொல்ல வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாக பேசி முடியுங்கள்.

(முற்பகல் 10-00)

திரு. கோவை செழியன் : என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் இந்த அரசாங்கம் வேண்டுமென்றே அந்த நிறுவனத்தை ஒழித்துக் கட்டுவது என்று முடிவெடுத்து விட்டது. அதற்குச் சான்றாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போனால் அந்த ஆஸ்பத்திரி போகிறது என்று. எவ்வளவு அநாவசியமாக சொல்லுகிறார்கள்! உங்களுடைய வாசகத்தில் எவ்வளவு ஆணவமிருக்கிறது. இந்த மன்றத்திலேயே சொன்னார்கள்.

அது மட்டுமல்ல இதிலே பல அமைச்சர்கள் வேண்டுமென்றே இந்த நிறுவனத்தை குளோஸ் செய்வதற்கு, ஒழித்துக் கட்டுவதற்கு பல உத்திரவுகளை போட்டிருக்கிறார்கள். அது டிஸ்கஷனுக்கு வருகின்ற போது உங்களுடைய அனுமதியின் பேரில் சொல்லுகிறேன். என்னிடத்தில் அந்த ஆஸ்பத்திரியைச் சார்ந்த பல ஊழியர்கள் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் கண்ணீர் விட்டு சொன்னார்கள். * * *

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ. நோ. இந்த அவையிலே இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலையில் இருப்பவர்களைப் பற்றி குற்றச்சாட்டு சொல்வது அவர்கள் தங்களுக்கு பாதுகாப்பு தேடிக் கொள்ள முடியாது. ஆகவே அந்தக் குற்றச்சாட்டை நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. கோவை செழியன்: வெளியே நடக்கிறது என்று சொல்ல முடியாதா? என் தொகுதியில் பல பேரை கொன்று விட்டார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதிக்கு போக வேண்டாம். இது எப்படி ஒத்தி வைக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது. அதைப் பற்றி சர்க்காருக்கு என்ன பொறுப்பு, பொதுமக்கள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அந்த அளவில் பேச வேண்டும். வெளியே நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசுவது விவாதத்திற்கு இடம் கொடுத்து விடும்.

திரு. கோவைச் செழியன்: நடுரோட்டில் மானபங்கப் படுத்தி விட்டார்கள் என்பது முக்கியமில்லையா. நீங்கள் நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள். அவமானப்படுத்துகிறார்கள் என்று சொல்லுவது என்ன தப்பு? எதற்காக நாம் இங்கே இருக்கிறோம்? இங்கே கூட சொல்ல முடியவில்லையென்றால் என்ன அர்த்தம்? நீங்களெல்லாம் வக்காலத்து வாங்கிக் கொண்டு ஏன் எழுந்திருக்கிறீர்கள்? தயவு செய்து என்னைப் பேச விடுங்கள். பேசுவதில் தவறு இருந்தால் அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மூன்று பாயிண்டுகள் உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த அரசாங்கம் அந்த நிறுவனத்தை வேண்டுமென்றே ஒழித்துக்கட்ட வேண்டுமென்று இருப்பதற்கு மூன்று உதாரணங்களைச் சொல்லுகிறேன். சேல்ஸ் டாக்ஸ் என்ற பேரிலே கிட்டத்தட்ட 74 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை வரி போட வேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. ஆனால் ஏற்கனவே இதே அரசாங்கம் மருத்துவமனைகளுக்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது என்று அவர்கள் போட்ட உத்தரவின் காப்பி என்னிடத்தில் இருக்கிறது. நாளைக்கு உங்களிடத்தில் கொடுக்கிறேன். திடீரென்று போடவேண்டிய அவசியம் என்ன என்று கேட்கிறேன்.

போலீஸ்* பந்தோபஸ்துக்கு 5 லட்சம் என்று வேண்டுமென்றே பில் போடுகிறார்கள்.

இந்த காம்பவுண்டு சுவற்றை இடிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்

இப்படி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி, எந்தவிதமாவது இந்த ஆஸ்பத்திரியை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணத்திற்கு இந்த அரசு வந்துவிட்டது. இதை நாட்டு மக்களிடத்தில் எடுத்துக் காட்ட வேண்டும். அதை எடுத்து விளக்குவதற்கு இந்த மன்றத்தை ஒத்தி வைத்து



இரண்டு நாள் விவாதித்து தீர வேண்டும். எத்தனை அமைச்சர்கள் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும். அவைகளையெல்லாம் சொல்ல வேண்டுமென்பதற்கு இந்த சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சி. எம். சி. ஆஸ்பத்திரி விவகாரம் எந்த அளவுக்கு வலுபெற்று விட்டது என்பதை இந்த நாடு முழுவதும் உள்ள மக்கள் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். இதனை நான் ஒரு அரசியல் பிரச்சினையாக்க வேண்டும் அல்லது அரசியல் லாபம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எள்ளளவும் இல்லை. ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு குறிப்பாக இந்த அரசுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது என்பதற்கு ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுதெல்லாம் பத்திரிகைகளைப் பார்க்கும்போது ஏதோ அரசியல் தலையீட்டினால் தான் இந்த விவகாரம் இவ்வளவு சிக்கலாகிவிட்டது என்ற கருத்து அதிகமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. அந்த நிலையைப் பார்க்கும்போது நாட்டுக்கு ஒரு சிறந்த மருத்துவமனைக்கு நாட்டு மக்கள் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் ஒரு அரசு நடத்த முடியாத அளவில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு மருத்துவமனையை அரசியல் வாதிகளாலும் குறிப்பாக மாநில அரசு தலையீட்டின் காரணமாகவும் அது இன்று மூடப்படக்கூடிய நிலைக்கு வந்துவிட்டதுஎன்று சொன்னால் நிச்சயமாக நாட்டு மக்கள் அனைவரும் கவலைப்படுகிறார்கள்.

நான் இவற்றையெல்லாம் கூறும்போது; இது எப்படியாவது தீர்த்து வைக்கப்பட வேண்டும், இந்த பிரச்னைக்கு செட்டில்மெண்ட் கண்டாக வேண்டும். அதற்கு இந்த மாநில அரசு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்ற உணர்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று தான் இவற்றையெல்லாம் கூற விரும்புகிறேன்.

அதிலும், குறிப்பாக நேற்றைய தினம் பாராளு மன்றத்தில் சபாநாயகர் அவர்களும், பாராளு மன்ற தி. மு. க. தலைவரவர்களை கேட்டுக் கொண்டதையெல்லாம் அறிந்திருக்கிறோம். எப்படியாவது நீங்கள் மாநிலத்திற்குச் சென்று இந்த பிரச்னையை தீர்ப்பதற்கு வழி காணுங்கள் என்று அவர்களைக் கேட்டிருக்கிறார்கள். அதோடு தி.மு.க. உறுப்பினர்கள் பாராளு மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் தீர்வு காண்பதற்கு மாநில அரசு அனைத்து முயற்சியையும் எடுத்துக்கொண்டிருக்கின்றது என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டு, பத்திரிகைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் கூறியிருக்கிறார்கள். மாநில அரசு அதை தீர்ப்பதற்கு வழிவகைகளை பார்த்துக்கொண்டிருக்கிறது, அத்துணை முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

இந்த மாநில அரசு எடுக்கின்ற முயற்சிகளை பார்க்கும்போது எனக்கு முன்னாலே மாண்புமிகு அங்கத்தினர்கள் விரிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 15

நான் ஒன்றிரண்டு காரணங்களை மட்டும் கூற விரும்புகிறேன். ஏதோ அங்கே நடைபெறுவது நிச்சயமாக தொழிலாளி, முதலாளி பிரச்னையல்ல என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நாமும் அதை தொழிலாளி, முதலாளி, பிரச்னையாக ஏற்பதற்கில்லை. ஒரு வேளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15 தொழிலாளிகளை காப்பாற்று வதற்காக இவ்வளவு தீவிரமாக சில வார்த்தைகளை கூறியிருந்தாலும் கூட, ஒரு பக்கம் 15 தொழிலாளி, மறு பக்கமிருப்பது 2 ஆயிரம் தொழிலாளி களும், இந்த நாட்டிற்குச் சிறந்த சேவை செய்யக் கூடிய மிகவும் உயர் தரத்தில் இருக்கக்கூடிய மருத்துவர்களும் இருக்கிறார்கள். ஆக இதனை பார்த்துக்கொள்ள வேண்டும் இந்த அரசு. இதனை பார்த்து செயல் பட்டால் நிச்சயமாக இந்த நிலைக்கு இந்த மாநில அரசு அந்த ஆஸ்பத்திரியை கொண்டு வந்து விட்டிருக்காது என்று நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கழிந்த சில நாட்களில் அங்கு நடைப்பெற்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது, நிச்சயமாக இந்த பிரச்னைக்குச் சுமுகமாக தீர்வு காண வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அப்படி இருக்குமானால் மின்சாரத்தை வெட்டுவதோ அல்லது தண்ணீர் சப்ளையை நிறுத்துவதோ அல்லது சேல்ஸ்டாக்ஸ் ஆபீஸர்கள் அங்கு சென்று அங்கே தர்பார் நடத்தி ஒரு சூழ்நிலையை உருவாக்குவதோ அல்லது 70 ஆண்டுகாலமாக இருந்து கொண்டிருக்கக்கூடிய சுவற்றை உடனே நீங்கள் அகற்ற வேண்டுமென்று நோட்டீஸ் கொடுப்பதோ இதுவரையில் நிர்வாகத்திலிருந்து 200 போலீஸ் கம்பிளெயிண்டுகள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதோ, நியாயமான தல்ல. இந்த மாநிலத்தில் ஊழியர்களான மாவட்ட மேல் அதிகாரிகளி லிருந்து மாவட்ட கலெக்டர், போலீஸ் சூப்பிரெண்டெண்டன்ட், டி. எம். ஒ. இவர்களை இந்த ஒரு நிகழ்ச்சி காரணமாக, வேலூர் ஆஸ்பத்திரி சம்பந்தமாக அங்கிருந்து மாற்றுவதோ தேவையில்லை. இந்தச் சம்பவங்கள் நிச்சயமாக அவசியமில்லை. உங்கள் கவனத்திற்கு இந்த அரசு எவ்வளவு தவறியிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் அந்த மருத்துவ அதிகாரி, எல். பி. எம். ஜோஸப், டைரக்டர் அவர்கள் ஒரு விளம்பரம் 'ஹிந்து' பத்திரிகையில் கொடுத்திருக்கிறார் கள். அதனையும் இந்த மன்றத்தில் முழுவதும் சொல்ல வேண்டுமென்று விரும்பவில்லை. ஏனென்று சொன்னால் சொல்வதற்கு சந்தர்ப்பம் இல்லை என்பது அல்ல, அவைகளைச் சொன்னால் நீங்கள் நிச்சயமாக இவற்றை நிகழ்ச்சி குறிப்பில் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பீர்கள். அந்த அளவுக்கு தலை சிறந்த பத்திரிகையாக இருக்கின்ற 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு எம்.எஸ். டாக்டர் தமிழ் நாட்டில் மட்டுமில்லாது, இந்தியாவில் சிறந்த டாக்டராக இருக்கின்ற அந்த மருத்துவர், டைரக்டராக இருக் கின்றவர் பொறுப்பேற்று விளம்பரம் செய்திருக்கின்றார்கள். இந்த அளவுக்கு சம்பவங்கள் நடைபெற்று இருந்தால் நாம் இதை அனுமதிக்கலாமா? இந்த அளவுக்கு அங்கே ஒரு சூழ்நிலை ஏற்பட் டிருந்தால் நாம் அதற்கு ஆதரவு கொடுக்கலாமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.



1975 மார்ச் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டீட்டெய்ல்ஸ் எல்லாம் வேண்டாம். சுருக்கமாக முடியுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: குறிப்பாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி விடுகிறேன். A Cashier embezzled Rs. 35,000 ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒன் சைடு வெர்ஷன்; அதுதான் வேண்டாம் என்கிறேன். விபரங்களை எல்லாம் விவாதத்தின் போது வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இர்ரெகுலரிடி எப்படி நடந்திருக்கிறது என்பதற் காகச் சொல்கிறேன். It has been published in the papers.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள் டீட்டெய்ல்ஸ் வேண்டாம். விவாதம் வரும்போது அதை எல்லாம் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: முடித்துவிடுகிறேன். 35,000 ரூபாய் ஒரு காஷியர் கையாடல் செய்திருக்கிறார். அதை நிர்வாகத்தினர் கண்டு பிடித்து போலீசுக்கு ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனே அரசாங்கம் தலையிட்டு, கட்டாய நிர்ப்பந்தம் செய்து வழக்கை பின்வலிக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி பத்திரிகையில் வந் திருக்கிறது. அதற்கு......

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கம். அரசாங்கம் தலையிடவில்லை. யூனியன் தலையிட்டதால்தான் வாபஸ் வாங்க வேண்டுமென்ற நிலை நிர்வாகத்திற்கு வந்திருக்கிறது. அது தொடர்பாக ஓரே ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். மூன்றுமுறை பரீட்சையில் தவறிய ஒருவருக்கு அதே எல்.பி.எம். ஜோசப் தான் உதவி செய் திருக்கிறார். அவர் முறை தவறி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நரசிம்மன், நீங்கள் உட்காருங்கள். அதனால்தான் சொன்னேன் டீட்டெய்ல்ஸ் எல்லாம் வேண்டாம் என்று. அப்படிப் போகும்போது இப்படிப்பட்ட சார்ஜ் எல்லாம் வரும் என்று எண்ணித்தான் வேண்டாம் என்று சொன்னேன். விவாதம் அனுமதிக்கப்பட்ட பிறகு விபரங்கள் எல்லாம் சொல்லலாம்; அப்போது சொன்னால் பரவாயில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: விவாதத்திற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டு மென்றால் அந்த அளவுக்குச் சில குற்றச்சாட்டுகளைச் சொன்னால்தான் உங்களுக்கு உதவியாக இருக்கும். அப்படிச் சொன்னால்தான் ஏதோ இருக் கிறது என்று அனுமதி அளிப்பீர்கள். உங்கள் கரத்தை வலுப்படுத்துவ தற்காகத்தான் சொல்கிறேன்.

It is to help the chair that I am quoting this.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டு "பீப்பிள்ஸ் கமிட்டி" அமைத்திருக்கிறார்கள். அதில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் இருக்கிறார்கள். ஆல் பார்ட்டி மெம்பர்ஸ் என்றால், இங்கே அந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கின்றவர்களோ அல்லது விதி 42-ன் கீழ் மோஷன் கொண்டு வந்து விவாதிக்கின்றவர்களோ அதில் இல்லை. அவர்கள் இருந்தால் ஏதோ அரசியல் நோக்கம் என்று சொல்லி விடலாம். அப்படி அல்லாமல் அனைத்துக்கட்சியினரும் சேர்ந்து "பீப்பிள்ஸ் கமிட்டி" அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டி எப்படியாவது இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்கவேண்டுமென்று எண்ணுகிறது. அரசாங்கமும் அதோடு சேர்ந்து தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

இன்னொன்று. இது ஒரு "கான்ஸ்டிடியூஷனல் கொஸ்டினாக" மாறியிருக்கிறது. மைனாரிட்டி சமுதாயத்தினரின் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. முதல் தினம் பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பியதற்கு, சபாநாயகர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஏன் என்றால் மத்திய அரசினுள் இது வரவில்லை என்று சொல்லி அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த நாள் இது ஒரு மைனாரிட்டி சமுதாயத்தைப் பற்றியது, கான்ஸ்டிடியூஷனல் கொஸ்டின் என்று சொன்ன பிறகு அனுமதி அளித்திருக்கிறார்கள்.

இந்த அரசாங்கம் நடந்து கொள்ளும் முறைகளைப் பார்த்தால் கான்ஸ்டிடியூஷன்படி ஒரு மைனாரிட்டி சமூகத்திற்கு அளிக்க வேண்டிய பாதுகாப்பை இந்த அரசாங்கம் செய்ய தவறி விட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வேண்டுமென்றே இந்த மருத்துவ ஸ்தாபனத்தின்மீது இத்தகைய நிர்ப்பந்தத்தை விதிக்கிறார்கள். நாங்கள் சொல்வதை நிர்வாகம் கட்டாயமாகக் கேட்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இந்த அளவுக்கு முஸ்லீம் மைனாரிட்டி சமுதாயத்தை நிர்ப்பந்தித்தால் சும்மா இருப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் தொடர் வேண்டியதில்லை. மைனாரிட்டி சமுதாயம் என்கிறபோது, இங்கே முஸ்லீம் உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாற்றிக் கொள்கிறேன். மற்ற மைனாரிட்டி சமுதாயத்திற்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு கிறிஸ்துவ சமுதாயத்திற்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். நான் முதலமைச்சர் அவர்களை குறை சொல்லவில்லை. ஏதோ ஒரு அபத்ததால் இந்தச் சிக்கல் வந்து விட்டது. தலைவரவர்களே, தங்களுக்கும் அது தெரியும். இம்மாதிரி விஷயங்களில் உரிய பாதுகாப்பு அளிக்கபடாவிட்டால் இந்த அரசுக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என்பதை எச்சரிக்கையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் கூறியதைப் போல இந்த விவகாரத்தில் மூன்று பிரச்சினைகள் இருக்கின்றன. கரப்ஷன் சார்ஜ், மைனாரிட்டி கொஸ்சன், கான்ஸ்டிடியூஷனல் கொஸ்சன் ஆகிய மூன்றும் அடங்கியிருக்கின்றன. அதோடு லேபர் கொஸ்சனும் சேர்ந்திருக்கிறது. ஆகவே,



இந்த விஷயங்களைப் பற்றி தீர விசாரித்து முடிவு செய்ய ரிட்டயர் ஆன ஹைகோர்ட் நீதிபதி ஒருவரை நியமித்து, அங்கிருக்கிற டிஸ்பியூட்டை நன்றாக விசாரித்து, அவர் கொடுக்கிற அறிக்கையின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுத்து, அந்த நிறுவனத்திற்குப் பாதுகாப்பு கொடுத்தால் நிச்சயமாக இந்த அரசுக்கு நல்ல பெயர் வரும் என்று மனப்பூர்வமாக கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை அவசரமாக, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என்ற காரணத்தாலே இதிலே அரசு காலம் கடத்தக் கூடாது என்பதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இரு தரப்பிலே ஒருவருக்கொருவர் சர்ச்சைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு கட்டத்திலே அரசு அதை மத்தியஸ்தம் செய்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்ற முறையிலே அதில் தலையிட்டு தீர்த்து வைக்க முயற்சி எடுத்திருக்க வேண்டும். ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் அரசு ஒரு தரப்பு ஆளாகிவிட்டது. இரண்டு பேருக்கும் மத்தியஸ்தம் செய்து வைக்க வேண்டிய இந்த அரசு ஒரு தரப்புக் கட்சியாக பேசவேண்டிய நிலை ஏற்பட்டது ரொம்ப வருந்தத்தக்கது. இப்படி ஒரு தரப்புக் கட்சியாக அரசு பேசத் தொடங்கியதால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை ஒரு "பிரிஸ்டிஜ்" பிரச்சினையாக வந்து விட்டது. அதனால்தான் இன்றைக்கு இந்தப் பிரச்சினை இப்படி நீடித்துக் கொண்டிருக்கிறது.

அரசாங்கம் அங்கே இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து, இரண்டு தரப்பிலிருந்தும் சொல்கிற விளக்கங்களை அனுசரித்து யார் பக்கம் குறை இருந்தாலும் பேசித் தீர்க்க முயற்சி செய்யாமல், நாங்கள் சொல்வதை ஏற்றுக கொள்ளத்தான் வேண்டுமென்ற நிலை வந்ததுதான் இத்தகைய சங்கடங்களுக்குக் காரணமாகும்.

நாங்கள் இந்தப் பிரச்சினைகளை எடுத்துக் கூறும்போது, தொழிலாளர்களுக்காக நாங்கள் வாதாடுகிறோம். அதை வேண்டாமென்று நீங்கள் சொல்கிறீர்களா என்று சொல்லி எங்களை வாயடைப்புச் செய்ய முயற்சிக்கிறார்கள். தொழிலாளர்களை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. அங்கே மானேஜ்மெண்ட் சொல்கின்றவைகளையும் மத்தியஸ்தம் செய்பவர்கள் கேட்டுக் கொள்ள வேண்டும். நேற்று சட்டமன்ற உறுப்பினர் திருமதி பௌலர் அவர்களும், திரு. சந்தோஷம் அவர்களும் அந்த நிர்வாகத்தினரோடு பேசிவந்த பிறகு ஏதோ உடன்பாடு வந்துவிடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்ததற்கு மாறாக நிலைமை மேலும் சிக்கலாகி இருக்கிறது என்பதை முதலமைச்சரவர்கள் பத்திரிகை மூலம் அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது ஒன்றும் பெரிதல்ல. எதிர் தரப்பிலே இருந்து கூறுவதை எல்லாம் இந்த மாதிரி மத்தியஸ்தம் செய்து கொண்டிருக்கும்போது எஸ்.பி., டி.எம்.ஓ., கலெக்டர் இவர்களை எல்லாம் ஏன் மாற்ற வேண்டும்?

அவர்கள் அரசுத் தரப்பில் சொன்னதைச் செயல்படுத்த மறுத்ததன் காரணமாக மாற்றப்பட்டிருக்கிறார்களா, அல்லது மானேஜ்மெண்டுக்குச் சாதகமாகச் செயலாற்றினார்கள் என்று மாற்றப்பட்டிருக்கிறார்களா, என்பதைத் தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையென்றால் இதில் முயற்சி எடுத்துக் கொண்ட அதிகாரிகளை ஏன் மாற்ற வேண்டும்? அரசுத் தரப்பில் சொல்லப்பட்ட கருத்தை ஆஸ்பத்திரி நிர்வாகத்தார் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள், ஆகவே அவர்களைப் பயன்படுத்தி, மிரட்டி நாம் எடுக்கிற நடவடிக்கைகளின் மூலம் அவர்களைப் பணியவைக்க வேண்டுமென்ற முறையில் அரசுத் தரப்பில் சிக்கல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று கருதுகிறார்கள். இந்தப் பிடிவாதப் போக்கை அரசு கைவிட்டுவிட்டு அவர்கள் இரண்டு பேர்களுக்குமிடையே ஒரு சமரசம் ஏற்பட வேண்டுமென்ற முறையில் நடுநிலையில் இருந்து செயல்பட முன்வந்திருந்தால் இவ்வளவு பெரிய சிக்கல் வந்திருக்காது. அரசு ஒரு தலைப் பட்சமாகச் செயல்பட்டுவிட்டதுதான் பெருந் தவறு. நிலைமையை ஒரு தவறான நிலைக்கு முற்றவிட்டு விட்டது என்று கருதப்படுகிறது. ஆகையால்—முதலமைச்சர் அவர்கள் கூறியபடி இது ரொம்ப சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி விட்டது. அரசால் இந்தப் பிரச்சினையை முடிக்க முடியாத நிலைக்கு வந்து விட்டது என்பதை எல்லோரும் உணர்கிறார்கள்.

இந்த நிலையில்தான் இதுபற்றி தீர்வு காண ஒரு ரிட்டயர்ட் ஜட்ஜைப் போட்டு அவருடைய தீர்வுக்கு இதை விட்டுவிட வேண்டும் என்கிற யோசனை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு பூரா ஊதியத்தையும் முறைப்படி கொடுக்க வேண்டும். அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்வதா, கூடாதா என்கின்ற பிரச்சினையில் அந்த நீதிபதியின் தீர்ப்பை இருசாராரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில்—இப்போதைய நிலையில் இதை ஒரு ஹைக்கோர்ட் ரிட்டையர்ட் ஜட்ஜின் தீர்ப்புக்கு விடுவதே சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இம்மாதிரி பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தினால், இதில் அரசு ஒருதலைப் பட்சமாக பெரும் தவறு செய்திருக்கிறார்கள் என்று பலரும் கருதுகிற காரணத்தினால் இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினை பூராவையும் விவாதிக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன்னால் இருக்கக் கூடிய வேலூர் ஸி.எம்.ஸி.ஆஸ்பத்திரிப் பிரச்சினை இருக்கிறதே, அது மிக முக்கியமான பிரச்சினை. இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள் எல்லோருடைய எண்ணமும், கவலையும் அதைப் பற்றியதாகவே இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அந்த ஆஸ்பத்திரியில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களது போராட்டம் ஒரு பக்கம்—நீக்கப்பட்ட தொழிலாளர்கள் தவறு செய்தவர்கள்—அவர்கள் மீது நிர்வாகம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பேரில் அரசு தலையீட்டின் பேரில் அவர்களை மீண்டும் அங்கே சேர்க்கக்கூடாது என்பதற்காக நடத்தப்படுகிற போராட்டம் ஒரு பக்கம்—இதற்காகத் தனித்தனியே கமிட்டிகள் அமைக்கப்பட்டு அந்தந்தக் கமிட்டிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இப்போது ஏற்பட்டுள்ள



திருப்பத்தின் அடிப்படையில் இதற்கு தமிழக அரசையே குற்றஞ்சாட்டக் கூடிய சூழ்நிலைதான் தமிழகத்தில் உருவாகி இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டுதான் பேச வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்தப் பிரச்சினை இவ்வளவு சிக்கலாக வளர்ந்து விட்டிருப்பதற்குக் காரணம் தமிழக அரசு இந்தப் பிரச்சினை மீது தவறாக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள்தான் என்பது சரியோ, தவறோ மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்தில் மறந்துவிட முடியாது.

ஸி.எம்.ஸி.ஆஸ்பத்திரி தமிழகத்தில் மிகச் சிறந்த பணியாற்றி வந்திருக்கிறது என்பதை எல்லோரும் எப்படியோ ஏற்றுக் கொள்கிறார்கள். இதை எல்லாம் அறிந்துதான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு தகப்பனார் தம்முடைய நல்ல பையனிடத்தில் அவனுடைய நன்மைக்காகவே ஒரு நல்ல யோசனையைச் சொன்னார் என்றே வைத்துக் கொள்வோம். தகப்பனார் சொன்ன யோசனையை அந்தப் பையன் கேட்கவில்லை என்றால்—உடனே தகப்பனார் கோபமுற்று—ஒரேயடியாக அவனை தண்டிக்க முற்படுவது சரியாக இருக்காது, அவன் நல்ல பையன் என்கிற காரணத்தினால் தாம் சொன்ன யோசனையை அவன் ஏன் ஏற்க மறுத்தான் என்பதையும் அவர் கொஞ்சம் நிதானத்துடன் யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறார். நாம் சொன்ன யோசனை சரிதானா, அதில் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்பதை யோசிக்காமல் அந்தப் பையனிடத்தில் ஒரேயடியாகக் கோபித்துக் கொள்வது தகப்பனாரைப் பொறுத்தவரையில் தவறாகத்தான் ஆகிவிடும்.

இதைப் போலத்தான்—வேலூர் ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில் அங்கே ஒரு தகராறு எழுந்தவுடன் அது நல்லவிதமாக சமரசமாக முடிய வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் நமது அரசு ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கலாம். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற காரணத்தினால் இன்றைக்கு அந்த அரசு அந்த ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு எதிராகவே ஒரு போராட்டத்தை நடத்த முற்பட்டுவிட்டதைப் போன்ற கருத்துதான் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

அரசு இன்றைக்கு சற்று நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். அந்த ஆஸ்பத்திரி நிர்வாகத்தை தமிழக அரசுக்கு எதிரி என்று நினைக்க வேண்டியதில்லை. தமிழகத்திலும் சரி—இந்தியா பூராவிலும் சரி அதற்கு என்று ஒரு நல்ல பெயர் ஏற்பட்டிருக்கிறதே, அதற்கு மாசு வராத அளவில் நாம் நடந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். முதலமைச்சர் நல்லெண்ணத்தோடு சொன்ன யோசனையை அவர்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நாமும் நிதானமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். “இவ்வளவு தூரம் நாம் சொல்வது, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாது பிடிவாதமாக இருப்பதா?” என்று நினைக்க வேண்டாம். இதில் ப்ரஸ்டிஜ் ஒன்றும் இல்லை. அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள்—தமிழக அரசு சொல்லி, அதைக் கேட்காது தட்டிவிட வேண்டுமென்று எளிதில் நினைத்துவிட மாட்டார்கள். என்றாலும் நாம் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்றால் அதற்கு முக்கியமான காரணம் இருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன். அந்தக் காரணத்தை அவர்களால் வெளியில் சொல்ல முடியாத நிலை இருக்கிறதோ என்னவோ அதுவும் புரியவில்லை.

இந்தச் சூழ்நிலை ஏற்பட்ட பிறகு—முன்பு பேசியவர்கள் சில யோசனைகளைச் சொன்னார்களே, அந்த அடிப்படையில்—வெளியில் இந்த அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற தவறானகருத்தைப் பரவவிடாது செய்யத் தான் சொன்ன யோசனையை தன் பிள்ளை கேட்கவில்லை என்று நிதானம் இழந்து கோபத்தை வெளிப்படுத்திக் கொள்ளாது, என் நாம் சொன்னதை அவன் கேட்க மறுத்தான் என்று நிதானத்துடன் சிந்திக்கிற தந்தையைப் போல—இது பற்றி அரசும் கொஞ்சம் நிதானத்துடன் சிந்தனை செய்ய-முன்பு சிலர் சொன்னதைப் போல் ஒரு ஹைகோர்ட் ரிட்டயர்ட் ஜட்ஜ் அவர்களை நியமித்து இந்தப் பிரச்சினை என்ன என்பதை முழுவதும் ஆராய்ந்து ஒரு முடிவு கூற ஏற்பாடு செய்ய வேண்டும். அவர் சொல்கிற தீர்ப்பு நமது அரசு சொன்னபடியே இருந்தால் அப்போதுதான் மக்களுக்கும் நமது அரசு எடுத்த முடிவுதான் சரியானது என்கிற தெளிவு ஏற்படும். அப்படி ஒருவர் நடுவராக இருந்து கொடுக்கிற முடிவைக் கூட நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்ல முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இத்தகைய ஒரு நிலைமையில் போவதுதான் இன்றைக்கு இப்பிரச்சினை மீது ஏற்பட்டுள்ள சூட்டைத் தணிக்க உதவியாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதைப்பற்றி எல்லாம் விரிவாக இப்போது பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். எ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனை சம்பந்தமான மிக முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சுமார் 70 நாட்களாக தொடர்ந்தார்போல இந்த மருத்துவ மனையில் வேலை நிறுத்தம் நடைபெற்று வருவது உள்ளபடியே ஒரு துர்ப்பாக்கியமான நிலையாகும் என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அங்கே என்ன நடந்திருந்தாலும் இதுவரை எங்களுடைய கட்சியைப் பொறுத்த வரையில் ஒரு சமரச முடிவை அங்கே காண்பதற்காகத்தான் இந்தப் பிரச்சினையில் நாங்கள் இது வரை எந்தக் கருத்தையும் சொல்லாமல் இருந்தோம். இங்கே சொன்னார்கள்—அங்கே சர்வ கட்சிக் குழு அமைத்திருக்கிறார்கள்—என்றார்கள். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் எந்தக் குழுவிலும் சேராமல் இருந்து வருகிறோம். மானேஜ்மெண்டுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட குழு. தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட குழு, ஆகிய எந்த ஒன்றிலும்—எதிலும் கலந்து கொள்ளாமல், நடுநிலை வகித்து—"உங்கள் கட்சியின் போக்கு என்ன, நீங்கள் எங்களை ஆதரிக்கவேண்டும்" என்று பல்வேறு நிலையில் வந்து கேட்டபோது கூட—எங்களைப் பொறுத்தவரை சமரசமான முடிவு ஏற்பட வேண்டுமென்பதற்கு முழு ஒத்துழைப்பு இருக்கிறது, ஆகையால் இந்த நிலையில் வெளிப்படையாக நாங்கள் எந்தக் கருத்தையும் சொல்ல விரும்பவில்லை என்றே நடு நிலையில் இருந்து வந்திருக்கிறோம். சமரச முடிவு ஏற்படவேண்டும் என்பதற்காகவே ஒரு குழுவிலும் சேராமல் இருந்தோம்.





இந்தச் சபையில் கூட கடந்த வாரம் இதைப்பற்றி ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் வந்தது. அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலும் கூட கலந்து கொள்ளாமல் நடுநிலையில் இருந்தோம். காரணம், சமரச முடிவு இதில் ஏற்பட வேண்டும் என்பதுதான்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அவர்களாகவே இதில் தலையிடவில்லை. மானேஜ்மெண்ட் சார்பிலும், தொழிலாளர்கள் சார்பிலும் ஆக இரண்டு தரப்பிலும் இருந்தும் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு ஒரு சமரச முடிவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் காரணமாகத்தான் மாநில அரசின் தலைவராக இருக்கிற காரணத்தினால் இந்தப் பிரச்சினையில் ஒரு சமரச முடிவைக் காண்பதற்கு தம்முடைய ஒத்துழைப்பு இருக்கிறது என்று இதில் ஈடுபட்டார்கள்.

குறிப்பாக, சமரசம் என்றாலே இருதரப்பினரும் தங்கள் தங்கள் நிலையில் இருந்து கொஞ்சமாவது விட்டுக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் சமரசம் என்பதற்குப் பொருள் உண்டு. அவரவர்கள் தங்கள் தங்கள் நிலையில் இருந்து கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லிக் கொண்டிருப்பது சமரச முயற்சி வெற்றி பெற உதவியாக இருக்காது. கிவ் அண்டு டேக் என்கிற கொள்கை அடிப்படையில் அவரவர்கள் தங்கள் தங்கள் நிலையில் இருந்து கொஞ்சம் விட்டுக் கொடுக்கிற மனோபாவத்தில் இறங்கி வந்தார்கள் என்றால் தான் ஒரு சமரச முடிவு ஏற்பட முடியும். இதில் ஒரு சமரச முடிவு ஏற்படுவதற்கு பெருந் தடங்கலாக இருப்பது தம் தம் நிலையிலேயே இருதரப்பினரும் இருப்பது தான். ஆகையால் தான் இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கிறது.

(முற்பகல் 10-30.)

இப்போது இதற்கு மேற்கொண்டு ஒரு முக்கியத்துவம் எதனால் ஏற்பட்டு இருக்கிறது என்றால், பல்வேறு பிரச்சினைகளை இன்றைக்கு இது தொடர்பாக நாட்டிலே பலர் எழுப்பி வருகின்றார்கள். நாடாளுமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள் சிறுபான்மை சமுதாயத்தினுடைய உரிமைகளைப் பாதிக்கக்கூடிய வகையிலே ஒரு மாநில அரசு செயல்படுகிறது என்ற ஒரு பிரச்சினையைக்கூட எழுப்பினார்கள். ஏதோ தவறாக திசை திருப்பிவிட வேண்டும் என்பதற்காக இப்படிச் செய்தார்களோ என்னவோ எனக்குத் தெரியாது.

ஆனால், நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எழுப்பி, ஒரு புதிய திசை திருப்புவதற்கு சிலர் முயற்சி செய்து இருக்கிறார்கள். ஆகையால் தான், இது ஒரு மிக முக்கியப் பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமரச முயற்சியை மேற்கொண்டு அவர்களுடைய உரிமைகளில் கைவைக்கின்ற சூழ்நிலையை உருவாக்குகிறார்களோ என்ற கேள்வி எல்லாம் கூட நம் முன்பு எழுந்திருக்கிறது. இது தவறான எண்ணத்தை நாட்டிலே உருவாக்கக்கூடாது என்ற காரணத்திற்காக எங்களுடைய கட்சியின் நிலைமையை நாங்கள் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

வேலூர் மருத்துவமனையில் சமரசம் நிலவ வேண்டும், அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் அதே நேரத்தில் மருத்துவமனை எல்லாவகையிலும் ஒழுங்கான சூழ் நிலைகளில்—நல்ல சூழ்நிலைகளில் இயங்க வேண்டும். அந்தச் சூழ்நிலை கள் பாதுகாக்கப்பட வேண்டும், அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பது தான் இப்போது நம் முன் இருக்கின்ற பிரச்சினை ஆகும்.

இந்த அரசாங்கம் நல்ல நோக்கத்துடனும் நல்ல எண்ணத்துடனும் சமரச முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அதை நாம் பாராட்டுகிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் இரு தரப்பினரும் ஒரே நிலையில் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் நடுவர் தீர்ப்புக்கு விட்டுவிடலாம் என்றும், ரிட்டயர்டு ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஒருவரை நியமித்து, அவர் மூலமாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இந்த முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமேயானால், ஒருவேளை நல்ல பலன் அளிக்கும் என்றும் சொல்லப்பட்டது.

அரசாங்கத்தின்மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, இப்படிச் செய்தால் அதற்கு இடமில்லாமல் போகும்.

நான் இன்னொரு கருத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் இடைக்காலத்தில்—பெண்டிங் என்குயரி—அந்தத் தொழி லாளர்களுக்கு முழு ஊதியம் தரப்பட வேண்டும். அதற்குரிய வழிவகை களைச் செய்யவேண்டும். அந்த என்குயரி மூலமாக என்ன தீர்ப்பு வந் தாலும் இருதரப்பினரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். நான் பொதுவாக எல்லோரையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதை ஒரு அரசியல் பிரச்சினையாக அணுகத் தேவை யில்லை. இதை ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்ற வேண்டுமென்று நினைக்கிறவர்களும் உண்டு. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இதில் ஏதோ ஒரு பின்னணி வேலை செய்கிறது, இதை வைத்துக்கொண்டு நாட்டில் குழப்பத்தை விளைவிக்க வேண்டும், இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று ஒரு பின்னணி வேலை செய்கிறது என்பதை எனக்குத் தெரிந்த தகவல்களின் மூலம நான் கூறுகிறேன். ஆனால், ஒரு மாநில ஆட்சியின் இறையாண்மைக்குச் சவால் விடக்கூடிய சில நிகழ்ச்சிகள் டில்லியில் நடக்கின்ற காரணத்தினால் இதில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

என்னுடைய மாவட்டத்தில்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் எனக்கு இரட்டிப்பு அக்கறை. எனது மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்களும் தங்களுடைய பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.





இன்றைக்குச் சட்ட சிக்கல்கள் இந்த ஆட்சியின் இறையாண்மைக்கே கேள்விக்குறியாக இருக்கின்றன. சில பேச்சுக்களுக்குச் சரியான விளக்கம் கொடுப்பதற்கும் ஒரு சந்தர்ப்பம் வேண்டும். அப்போது தான் நாம் விபர ரங்களைச் சொல்லலாம். ஆகவே, சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்லீக் கட்சியைப் பொறுத்த வரையில் எல்லாவகையிலும் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறது. ஆகவே, இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வேலூர் மருத்துவ மனையில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து இன்று எழுப்பப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி முஸ்லிம் லீக் கட்சி சார்பில் பேசிய அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்கள், இந்த அரசு எவ்வளவு நல்ல எண்ணத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகி, ஒரு சமரசத்தை ஏற்படுத்து வதற்கு முன் வந்தது என்கிற உண்மை நிலைமையை எடுத்துச் சொன்ன தற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பொதுவாக, ஏதோ இந்த அரசாங்கம் வேலூர் மருத்துவமனையோடு போராடிக்கொண்டிருக்கிறது என்கிற ஒரு கருத்தை நாடு தழுவிய இயக்க மாகப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் பதிலளிப்பதைவிட, பிப்ரவரி 6-ந் தேதி அன்று Christian Medical College and Hospital, Vellore, Tamil Nadu என்ற தலைப்பிட்டு, a letter from the Director என்கிற பெரிய தலைப்பிட்டு அதனுடைய டைரக்டர் Dr. Joseph அவர்கள் வெளியிட்டிருக்கிற புத்தக வடிவு அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருப்பது:—

"We are indeed grateful for the help of the district and State authorities over the past four weeks in the maintenance of law and order. This enforcement of law and order has been the major factor in enabling us to continue to run the hospital so far. We are also grateful for the interest that has been taken in the prob lems of this hospital by our Chief Minister and other Ministers of the State என்று ஜோசப் அவர்களே, அந்த டைரக்டரே வெளியிட்டிருக்கிற நூல் வடிவ அறிக்கையில் அதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

வேலூர் மருத்துவமனையில் ஏறத்தாழ 70 நாட்களாக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது என்றாலும் ஒரு இருபது நாட்களுக்கு முன்பு இரு தரப்பாரையும் சந்தித்துப் பேசுகின்ற ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. இரு தரப்பாரென்றால் நிர்வாகத்தினர், தொழிற்சங்கத் தினுடைய பிரதிநிதிகள். ஒவ்வொரு தொழிற்சங்கத்தினுடைய கிளர்ச்சி யிலும் தொழிலாளர்களுடைய முறையீடுகள் வைக்கப்பட்டு அதற்காக வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள், மறியல் போன்றவை நடைபெறுகிற ஒவ்வொரு நேரத்திலும் இரு தரப்பாரையும் வைத்துப் பேசுவதுதான் ஒரு

அரசினுடைய தலையாய கடமையாக, மரபாக இருந்து வருகிறது என்பதை வேலூர் மருத்துவமனைக்காக தாங்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் என்பதை யாராவது மறந்து விட்டிருப்பார்களானால் அந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம் நிச்சயமாக நினைவில் வைத்திருப்பார்கள் என்றே நான் கருதுகிறேன். அந்த வகையில் இரு தரப்பாரையும் நான் கிட்டத்தட்ட 3 மணி நேரம் சந்தித்து 20 நாட்களுக்கு முன்பு பேசினேன். அதற்குப் பின்பு நிர்வாகத்தினர் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு நானும் மேலவைத் தலைவரும் அவர்களோடு அமர்ந்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் பேசினோம். நாங்கள் பேசியதெல்லாம் ஏதோ அந்த மருத்துவமனைக்கு விரோதமாக கருத்துக்களைச் சொன்னோம் என்பதல்ல, ஒரு பதினைந்து பேர்களை வேலைக்கு சேர்த்துக்கொள்ளுங்கள், பிரச்சினை தீர்ந்துவிடும் என்று தொழிலாளர்கள் சார்பிலே கேட்டுக் கொண்டோம்.

இதிலே என்ன அவ்வளவு பெரிய சங்கடம் வந்துவிட்டது, எவ்வளவோ தொழிற் சங்கப் போராட்டங்களில் வேலை நிறுத்தம் வாபஸ் பெற வேண்டுமென்று முடிவுகள் வருகிற நேரத்தில் இப்படித்தான் சமரஸங்களைச் செய்து வருகிறோம். அகில இந்திய அளவிலே இன்றைய தினம் மத்திய அரசின் அமைச்சர்களே வந்து ஊக்குவித்தார்கள்—அப்போது தொழிலாளர்களை ஊக்குவித்தார்கள்—அந்த சிம்ஸன் போராட்டத்திலேகூட நாம் நூற்றுக் கணக்கானவர்களை திரும்பவேலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதை நிர்வாகம் ஏற்றுக்கொண்டது.

அண்மையிலே அரூரான் ஷுகர் பேக்டரியிலே நடைபெற்ற ஒரு வேலை நிறுத்தத்தில் 30 பேர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறைச்சாலைக்குச் சென்றார்கள், அதிலே ஏற்பட்ட சமரச ஒப்பந்தத்தில் அந்த 30 பேரும் தண்டிக்கப்பட்டவர்கள், சிறைச்சாலைக்குப் போனவர்கள், அவர்களும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கூறப்பட்டு, நிர்வாகத்தினரும் ஒப்புக்கொண்டார்கள். சிறையிலே இருந்த தொழிலாளர்களும் உடனே விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படிப்பட்ட பல்வேறு எடுத்துக்காட்டுக்களையெல்லாம் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னோம். அவர்கள் ஒப்புக்கொள்வதாக இல்லை.

இதற்கிடையிலே அங்கேயுள்ள டாக்டர் கைது செய்யப்பட்டதைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அதுவும் பெரிதுபடுத்தப்பட்டிருக்கிறது. 24—10—1974 அன்று அந்த மருத்துவ மனையிலே ஏற்பட்ட ஒரு அமளியின் காரணமாக இரு தரப்பினரும் போலீஸுக்குப் புகார்களைக் கொடுத்தார்கள். நிர்வாகத்தினர் 31 தொழிலாளர்கள்மீது புகார்களைக் கொடுத்தார்கள். அந்த 31 தொழிலாளர்களில் 29 பேர்கள் 10—3—1975 வரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே வழக்கில் தொழிலாளர்கள் சார்பாக நிர்வாகத்தின் மீது கொடுக்கப்பட்ட புகாரில் 36 பேர்கள் மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அதிலே 23 பேர்கள் 10—3—1975 வரை கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். புலனாய்விலிருந்து, அந்தப் புலனாய்விலே டாக்டர் மத்தாய் என்பவரும் இந்தப் புலனாய்





விலே உட்பட்டவராக இருக்கிறார் என்ற வகையிலேதான் அவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதுவே அல்லாமல் வேறல்ல.

ஏதோ டாக்டர் மத்தாய் கைது செய்யப்பட்டதை வைத்துக்கொண்டு ஒரு டாக்டரை கைது செய்துவிட்டார்கள் என்று சொல்வது முறையல்ல. எவ்வளவு எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் அவர்கள்மீது குற்றம் இருக்குமானால் அரசு நடவடிக்கை எடுக்குமென்பது முறைதான். அதை விட்டுவிட்டு புகாரிலே காணப்பட்டிருக்கிற ஒருவர் மீது நடவடிக்கை எடுத்திருப்பது சரியல்ல என்று வாதிப்பது எந்த வகையிலே நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை.

அடுத்தபடியாக ஏதோ போலீஸ் பாதுகாப்புக்குப் பணம் வசூல் செய்கிறார்கள், அதற்கு பில் போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்கின்ற மற்றொரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. காவல் துறையிலே தனியார் நிறுவனங்களுக்கு அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க போடப்படுகின்ற காவல் துறை பந்தோபஸ்துக்கு கட்டணம் வசூல் செய்வது வழக்கமாக கடைப்பிடிக்கப்படுகின்ற ஒன்று.

போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர்படி, காவல்துறை நிலையாணை எண் 392-2 ஆணையின்படி

" Fees for the services for additional police deputed on duty on the application of any private person or institution or authority shall be levied"

என்றுதான் போலீஸுனுடைய ஆணை, காவல் துறை நிலை ஆணை ஒன்று இருக்கிறது. அதன்படி இந்தக் கட்டணம் வசூலிக்கப்படவேண்டுமென்று பில் அனுப்பப்பட்டிருக்கிறது. இது அவர்கள் கேட்டார்களா, போலீஸ் பாதுகாப்புக் கேட்டார்களா என்றால், கேட்டிருக்கிறார்கள். சரி, வேலூர் மருத்துவமனைக்கு மாத்திரம்தான் பில் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. நான் ஒரு சில எடுத்துக்காட்டுக்களைக் கூற விரும்புகிறேன்.

அம்பத்தூர் டன்லப் இந்தியா லிமிடெட் கம்பெனிக்கு-27—3—1972-லிருந்து 18—5—1972 வரையில் அவர்கள் பந்தோபஸ்து கேட்டு அவர்களுக்குத் தரப்பட்டு, மீண்டும் 27—11—1972 முதல் 28—1—1973 வரை பந்தோபஸ்து கேட்டு அதற்காக மொத்தமாக அவர்களிடத்திலே கட்டணம் வசூலிக்கப்பட்டது ரூ. 1,18,033·30 பைசா.

அதுபோலவே இஸ்லாமியா காலேஜ், வாணியம்பாடி—16—8—1972-லிருந்து 15—11—1972 வரை அவர்கள் கேட்டு பந்தோபஸ்து அளிக்கப்பட்டு ரூ. 9,685·75 பைசா கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.ஐ.டி. அடையார்—7—9—1973-லிருந்து 2—10—1973 வரை—ஐ.ஐ.டி.க்கே—போலீஸ் கட்டணம் ரூ. 44,215·45 பைசா வசூலிக்கப்பட்டிருக்கிறது.

நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பை இடித்துவிட்டார்கள் என்று சொல்லி சில பத்திரிகைகளில் ஒரு பெரிய புகார் கூறப்பட்டிருக்கிறது. நேரில் போய் பார்த்துவிட்டு வந்த சிலர் இடிக்கப் போகிறார்கள் என்று யூகம் செய்து எழுதுகிறார்கள். ஆனால் ஈரோட்டிற்குச் சென்று பார்த்தால் தெரியும். வேறுபல நகரங்களுக்குச் சென்று பார்த்தாலும் தெரியும். நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவதற்காக இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளில், ஈரோடு நகரத்திலே மாத்திரம், கடைத் தெருவிலும், மற்றப் பகுதியிலேயும் மிகப்பெரிய கட்டிடங்களெல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டித்தான் கிறித்தவ மருத்துவமனைக் கல்லூரி தேசீய நெடுஞ்சாலையில் 1,160 சதுர அடி நிலத்தை வளைத்து வளைவு சுவரைக்கட்டி ஆக்கிரமித்திருக்கிறார்கள். இது டவுன் சர்வே நம்பர் 46-இல் இருக்கிறது. இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு தேசீய நெடுஞ்சாலைக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கிறது என்றும், அந்த ஆக்கிரமிப்பைக் காலி செய்ய வேண்டுமென்றும் கிறித்தவ மருத்துவமனைக் கல்லூரிக்கு நெடுஞ்சாலைத்துறை ஒரு நோட்டீஸ் அனுப்பியது, எப்பொழுது தெரியுமா 2—2—1973-இல். 1973-ஆம் ஆண்டு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது, சாலையை விரிவுபடுத்த வேண்டும், ஆகவே, அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்று. அதற்குப்பிறகு தொடர்ந்து பல நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டன. அப்படி அனுப்பப்பட்ட நினைவூட்டும் நோட்டீஸ்தான் 15-ஆம் தேதி பிப்ரவரியிலும், 16-ஆம் தேதியும் அனுப்பப்பட்டதும் ஆகும். ஆனால் அந்தக் கல்லூரி அந்த ஆக்கிரமிப்பைக் காலி செய்வதிலுள்ள சிரமங்களை எடுத்துக் காட்டி, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் முறையீடு செய்திருக்கிறது. அகற்ற இயலாது, சில சிரமங்கள் ஏற்படும் என்று முறையீடு செய்திருக்கிறது. அந்த முறையீட்டின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் இடிப்பதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்காமல், நடவடிக்கையை நிறுத்தி வைத்து, பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் தகவலே தவிர, சுவர் ஒன்றும் இடிக்கப்படவில்லை, அது இன்றைக்கு போடப்பட்ட உத்தரவு அல்ல, 1973-ஆம் ஆண்டிலேயே கொடுக்கப்பட்ட நோட்டீஸ் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (திரு. கோவை செழியன்—குறுக்கீடு) நீங்கள் பேசும்பொழுது நான் குறுக்கிடவில்லை.

விற்பனை வரியைப்பற்றிச் சொன்னார்கள், 1969–70-இல் அந்த மருத்துவமனையின் மொத்த வருமானம் ஒரு கோடியே 72,763 ரூ. இந்த மருத்துவமனையில் மருந்துகளை விற்பனை செய்கிறார்கள். இங்கே கூட பேசும்பொழுது கேட்டார்கள், மருந்துகளை விற்பனை செய்ய மருத்துவமனைக்கு விதிவிலக்கு கிடையாதா என்று.

வேலூர் மருத்துவ மனைக்கு இதுவரை அந்த விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. வெளிநாட்டிலிருந்து ஏழைகளுக்காக மருந்தை வாங்குகிறார்கள், மறுபடியும் விற்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஏழைகளுக்காக வழங்கப்பட வேண்டிய மருந்து எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதெல்லாம் வேறு விவகாரங்கள். நான் அவற்றுக்குள் நுழைய விரும்பவில்லை. ஆனால் அந்த அளவிற்கு ஒரு கணக்கிட்டுப் பார்த்து 74 லட்சம் ரூபாய்க்கு விற்பனை வரி போடலாம் என்று கணக்கிட்டு 5 லட்சம் ரூபாய்க்கு விற்பனை வரி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இந்த நேரத்தில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது என்று கேட்டால்—இந்தக் கேள்வியையும்





அதையும் வைத்து இணைத்துப் பார்க்கக் கூடாது. அந்தக் கணக்குக்கு ஐந்து ஆண்டுக் காலம் முடிந்துவிட்டால் இதற்காக நோட்டீஸ் கொடுக்க இயலாது. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் ஐந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. விற்பனை வரி 5 லட்சம் ரூபாய், 4 லட்சம் ரூபாய், இன்னும் குறைக்கப்பட வேண்டும் என்றெல்லாம் ஆட்சேபிக்க 20—3—75ம் தேதி வரை தவணை இருக்கிறது. அதற்குள்ளாக ஆட்சேபித்துக் கொள்ளலாம். இதெல்லாம் நடைமுறையில் இருக்கின்றன, நம்முடைய அரசு வருவாய்த் துறையில் இருக்கின்ற விஷயங்களே அல்லாமல் வேறு அல்ல என்பதை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கிடையில் அரசு அவர்களை மிரட்டுகிறது என்றெல்லாம் சொல்லுகிற வாதங்கள் சரியானது அல்ல என்பதையும், அரசு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் முயற்சி எடுத்துக் கொண்டது என்பதையும் வேலூர் மருத்துவ மனை ஒரு ரகளைக்கு ஆளாகிவிடக் கூடாது, அமளிக்கூடமாகிவிடக் கூடாது என்பதிலே அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே பேசியவர்கள் உணருவார்கள்.

குறிப்பாக, நேற்றையதினம் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதற்காக வெளிநடப்புச் செய்யப்பட்டது. உள்ளபடியே நான் வருத்தப்படுகிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அளிக்கப்பட்டபோது இன்றைக்கே எடுத்துக் கொள்ளலாமா என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களிடம் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள் "ஒரு சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; டாக்டர் சந்தோஷம், எம்.எல்.சி., திருமதி ஆல்டா பவுலர் ஆகியவர்கள் சென்றிருக்கிறார்கள்; இப்போது எடுத்துக்கொண்டால் வேறு சிக்கலாகி விடும்; ஆகவே, தேவையில்லை" என்று சொன்னார்கள்.

நேற்று இது எடுக்கப்படமாட்டாது என்றுதான் சற்று தாமதமாக வந்தேன். அதற்கு முதல்நாள் நீண்ட நெடுந்தூரம் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்ட காரணத்தால் சற்றுக் களைத்திருந்தேன். ஆனால் சற்றுத் தாமதமாக வந்தேன். அதுமட்டுமல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில்—"முக்கியமான விவாதங்களை மாலை நேரத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது பகலிலேயே முடித்துவிடவேண்டும். அதற்காக நான் நீடிக்கவேண்டும். வோட் ஆன் அக்கவுண்ட் எடுத்துவிட வேண்டும்" என்றெல்லாம் கேட்டபோது, எதிர்க்கட்சித் தலைவர்களைப் பார்த்து "அப்படியானால் சில நாட்கள் நாங்கள் சிலபேர் அவையில் இருக்க முடியாது போகும்; ஆட்சி நிர்வாகப் பணிகள் காரணமாகச் சுற்றுப் பயணம் போக வேண்டியிருக்கும்." என்று சொன்னபோது "நாங்கள் அட்ஜெஸ்ட் செய்து கொள்ளுகிறோம்; அதைப் பற்றிக் கவலை இல்லை" என்ற வாக்குறுதி அளித்தவர்கள், நேற்று நான் அவையில் இல்லாத நேரத்தில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள மறுத்ததைப்போல் வெளிநடப்புச் செய்தது உள்ளபடியே முதலில் சொன்னதற்கு மாறாக அமைந்துவிட்டது என்பதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 மார்ச் 15

இதற்கிடையில் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது போல், திருமதி ஆல்டா பலரும், சந்தோஷம் எம். எல். சி. அவர்களும், கே. டி. கே. அவர்களும் என்னைச் சந்தித்துப் பேசியபோது சில சமரச ஏற்பாடுகளைச் சொன்னார்கள். "15 பேர் என்று சொல்லுகிறீர்களே அதிலே மிகவும் கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்களை, நாலைந்து பேரைக் குறைத்து கொள்ளுகிறோம் என்றால் இதிலே என் இவ்வளவு பிடிவாதம் காட்டுகிறீர்கள். ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம்" என்று அவர்கள் கூடக் கேட்டார்கள். "ஐந்தாறு பேரைக் குறைத்தால் தொழிலாளர்களைச் சம்மதிக்க வைப்பீர்களா?" என்று கேட்டார்கள். "நீங்கள் போய்ப் பேசிப் பாருங்கள்" என்று சொன்னேன். அவர்கள் பேசிப் பார்த்தார்கள்.

பார்த்ததற்குப் பிறகு என்ன அறிக்கை விட்டிருக்கிறார் சி. எம். சி. வேலூர் ஆஸ்பத்திரி நிர்வாகி?

"சி. எம். சி. ஆஸ்பத்திரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட 15 பேரில் 10 பேரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாக சம்மதம் தெரிவிக்கும் சமரஸ ஒப்பந்தம் எதற்கும் இணக்கம் தெரிவிக்கவேயில்லை" என்று அந்த ஆஸ்பத்திரியின் டைரக்டர் டாக்டர் ஜோசப் வேலூரில் தெரிவித்தார். திருமதி ஆல்டா பவுலர், எம்.எல்.ஏ., டாக்டர் சந்தோஷம், எம். எல். சி. ஆகியோருடன் நடத்திய பேச்சு வார்த்தையின்போது இந்த 10 பேரை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதாக, ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரோ அல்லது டாக்டர்களோ ஒப்புக்கொள்ளவேயில்லை" என்று டாக்டர் ஜோசப் சொல்லியிருக்கிறார்.

ஆஸ்பத்திரியில் ஸ்டிரைக் வாபஸாகி, சகஜ நிலை ஏற்பட்ட பிறகு 10 ஊழியர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்வதில் சிரமம் ஏதும் இராது என்று திருமதி பவுலரும், டாக்டர் சந்தோஷமும் ஓர் அறிக்கையில் கூறியிருந்தனர். அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் டாக்டர் ஜோசப் இவ்வாறு கூறினார்" என்று பத்திரிக்கையில் வந்திருக்கிறது.

என்னை விட்டு விடுங்கள்; நான் தான் உங்களுக்கெல்லாம் ஆகாதவன். ஆல்டா பவுலரும், சந்தோஷம், எம். எல். சி. இரண்டு பேரும் சேர்ந்து பேசி விட்டு வந்த பிறகு அதனுடைய விவரத்தை மருத்துவமனை டைரக்டர் மறுக்கிறார்.

ஏதோ சிறுபான்மை சமுதாயம், கிறித்தவ சமுதாயம் என்றெல்லாம் சொன்னார்கள். இப்பொழுது வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள அந்த பதினைந்து பேர்களின் பெயர்களைப் படிக்கிறேன் :

(1) நாராயணசாமி, ஹரிஜன்.

(2) அருள் அன்னையா, ஹரிஜன் கிறிஸ்டியன்.

(3) சாந்தமூர்த்தி, ஹரிஜன்.



1975 மார்ச் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

(4) ஞானசேகரன், ஹரிஜன்.

(5) மோகன்ராஜ், ஹரிஜன்.

(6) பழனி, ஹரிஜன்.

(7) அந்தோனி ராஜ், ஹரிஜன் கிறிஸ்டியன்.

(8) வெலிங்டன், ஹரிஜன் கிறிஸ்டியன்.

(9) டேவிட் சம்பத், ஹரிஜன் கிறிஸ்டியன்.

(10) ரிச்சர்ட் துளசிதாஸ், ஹரிஜன் கிறிஸ்டியன்.

(11) கோபாலகிருஷ்ணன், செட்டியார் வகுப்பைச் சார்ந்தவர்.

(12) செல்வராஜ், உடையார் வகுப்பைச் சார்ந்தவர்.

(13) சத்ய குமார், பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்,

(14) செல்வசிகாமணி, ஹரிஜன் கிறிஸ்டியன்.

(15) ஆர்தர் வில்சன், ஹரிஜன் கிறிஸ்டியன்.

இதிலே என்ன, கிறிஸ்துவர்களுக்கும் இந்த அரசுக்கும் போராட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அரிஜன கிறிஸ்துவர்களுக்கு வாதாடுகிற ஒரே தவறுதான் இந்த அரசு செய்கிற தவறு.

நான் கேட்கிறேன், இந்தப் பதினைந்து பேர்களில் அரிஜன சமுதாயத்தைச் சேர்ந்தவர் 11 பேர்கள் இருக்கிறார்கள். ஒருவர் உடையார், ஒருவர் செட்டியார், ஒருவர் பிராமணர், ஒருவர் அரிஜன சமூகத்தைச் சாராத—சேர்ந்த அல்ல—கிறிஸ்துவர். மொத்தம் 11 பேர் ஹரிஜன சமுதாயத்தைச் சேர்ந்த ஹரிஜன கிறிஸ்துவர்கள் என்ற அளவிலே இருக்கிறார்கள். இந்த ஏழை எளியோர்களுக்காகத்தான் எல்லாத் தொழிற்சங்கப் போராட்டத்திலும்—நான் கேட்கின்றேன், தொழிற்சங்கத் தலைவர்களை, எந்த வேலை நிறுத்தத்திலாவது, வேலை நிறுத்தத்தை நீங்கள் வாபஸ் பெற்றால் தான் சமரஸம் என்கின்ற அளவிற்கு எந்தத் தொழிற்சங்கத் தலைவராவது ஒத்துக் கொண்டு இருக்கிறார்களா? அல்ல. இதிலே வேலை நிறுத்தத்தை முதலில் வாபஸ் பெற்றுக்கொள்கிறோம், பிறகு சமரசப் பேச்சு என்று முடிவு எடுத்தால் இதையே தமிழ்நாட்டினுடைய தொழிற்சங்கக் கோரிக்கையாக ஏற்று நடத்தித் தருவது என்று தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம் ஒப்புக்கொள்கிறார்களா? (ஆரவாரம்) மாட்டார்கள். திரு. குமாரசாமி தலையாட்டுகிறார். முடியாது, என்று. ஆகவே, இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் கேட்பதெல்லாம், இந்த ஹரிஜன கிறிஸ்துவ தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான். இதிலே என்ன சங்கடம்? சர்க்காருக்கும் ஒரு நிர்வாகத்திற்கும் இடையே தகராறு—தகராறு கூட அல்ல தகராறு போல் தோற்றம் அளித்தால் கூட

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த நிகழ்ச்சிக்குப் போயாகி விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் சொல்லிய கருத்திற்கு உங்கள் ரூலிங் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத்தீர்மானத்தை நான் அனுமதிக்க வில்லை என்று ரூலிங் கொடுத்தாகிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஐ பௌ டவுன் டு யுவர் ரூலிங். நான் அது பற்றிப் பேசவில்லை. முதலமைச்சர் அவர்கள் ஜாதிகளைப் பற்றி பேசியிருக்கிறார்............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது கிருஸ்துவ வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று பேசியிருக்கிற காரணத்தால், நான் சொன்ன பதிலில் கிருஸ்துவர்கள், மைனாரிட்டி மதத்தினர் மட்டுமல்ல, ஹரிஜன் கிருஸ்துவர்களும் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிற் சங்கங்களைப் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட கட்சிகள் என்ன நிலை எடுத்தன, அந்த வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்ட தொழிலாளர்களுக்காக என்ன செய்தார்கள் என்று நாங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கட்சிகளைப் பற்றி எடுத்து வைத்தவை விவாதத்திற்குரிய விஷயங்கள். அது ஒரு பட்சமான முறையில் சொல்லப்பட்டு இருக்கிறது. எங்களுக்கும் அதற்கு பதில் அளிக்க சந்தர்ப்பம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி மறுக்கப்பட்டது அந்தத் தீர்மானத்திற்கு என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : அதன் பிறகுதான் நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவரின் தீர்ப்பின் மீது பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : உங்களுடைய முடிவு தெரிந்த பின் தான ஒரு பாய்ண்ட் ஆப் ஆடர் ரெய்ஸ் செய்கிறேன். அந்த பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால், இப்போது ஒரு குறிப்பிட்ட பிரச்னையை நாங்கள் எழுப்பினோம். அதற்காக அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற காலத்தில் அதற்கு உள்ள வரைமுறைக்குள் பதில் சொல்லாமல், அதற்கு அப்பாற்பட்டு மற்ற கட்சிகளையும் மற்ற கட்சிகளின் நடவடிக்கைகள் பற்றியும் ஒரு விமர்சனமே செய்து இருக்கிறார்கள். அந்த நிலை வந்தால் அதற்குப்பதில் சொல்ல சந்தர்ப்பம் எங்களுக்கு வேண்டும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆப் ஆர்டர்............ கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு வார்த்தை சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. கோவை செழியன்............

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I have given notice of an adjournment motion on the same subject. I want a clarification from the Hon. Chief Minister......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : க்ளாரிபிகேஷன ஒன்றும் கிடையாது.

(4) கவன ஈர்ப்பு

முதல் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களை ஒரே நிலையாக இணைப்பதில் உள்ள தாமதம் குறித்து.

THIRU KOVAI CHEZHIYAN : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely the inordinate delay on the part of the Government in merging, the Grade I and Grade II Tamil Pandits into a single category.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு அ. பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள முதல் நிலை தமிழாசிரியர் பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு பள்ளிக் கல்வி இணை இயக்குநரால் செய்யப்படுகிறது. அரசு பி. பிரிவு பள்ளிகளில் அத்தகைய நியமனம் அல்லது பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலர்களால் செய்யப்படுகிறது.

அரசு ஆணை 63–நாள் 17—1—1974–ன் படி அரசுப் பள்ளிகளில் பணிவரன் முறை செய்யப்பட்ட எல்லா இரண்டாம் நிலை தமிழாசிரியர்களும் முதல் நிலைத் தகுதி அடிப்படையில் முதல் நிலை தமிழாசிரியர்களாக ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்டு முதல் நிலை ஊதியம் பெற்று வருகின்றனர்.

அரசு (அ. பிரிவு) பள்ளிகளில் உள்ள தற்காலிக இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களையும் மற்றும் இரண்டாம் நிலையில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெறாதவர்களையும் முதல் நிலை பதவியில் அமர்த்துவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் சில விளக்கங்களை அரசிடம் கோரியிருந்தார். இது அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் விளக்கங்கள் அனுப்பப்படும்.

மதுரை தமிழ்ச் சங்கம் வழங்கும் புலவர் பண்டிதர் சான்றிதழ் பெற்றவர்களை அரசு (அ. பிரிவு) பள்ளிகளில் முதல் நிலை பதவியில்

அமர்த்துவது குறித்தும் சில விளக்கங்களை இயக்குநர் கோரியிருந்தார். அவர்களையும் முதல் நிலைப் பதவியில் பதவி உயர்வு அளிக்கலாமென அண்மையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

அரசு பி. பிரிவு பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒரு 6 நபர்கள் தவிர மற்றெல்லோருக்கும் முதல் நிலைப் பதவிகள் அளிக்கப்பட்டுவிட்டன. இந்த ஆறு பேர்களில் பணிப் பதிவேடுகள் கிடைக்கப் பெற்றதும் அவர் களது பதவி உயர்வும் கவனிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த உத்தரவு வந்ததற்குப் பின்னாலும் கூட, சில தமிழ் ஆசிரியர்களுக்கு அவர் களுக்குச் சேர வேண்டிய அரியர்ஸ் பணம் இன்னும் கொடுக்கப் படாமல் இருக்கிறது. அதை உடனடியாக அனுப்புவதற்கு அரசு என்ன முயற்சி எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு ஆணை வழங்கிவிட்டது. 6 பேர்களுக்குத்தான் கொடுக்கப்படவில்லை. அந்த 6 பேர்களுக்கும் பணிப் பதிவேடு கிடைக்கவில்லை. அது வந்ததற்குப் பிறகு பதவி உயர்வு தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் யாருக்காவது அரியர்ஸ் வராமல் இருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (5) 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 36—பாசனம்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள்

(இ) நிதிக்கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

(ஊ) நிதிக்கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

(எ) நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப் பணித் துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

(ஏ) நிதிக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூல தனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நமக்கு இருப்பது 2½ மணி நேரம்தான். மாண்புமிகு அமைச்சருக்கு எவ்வளவு நேரம் வேண்டும் ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குறைந்தது 1½ மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானாலும் நமக்கு 1 மணி நேரம் தான் இருக்கிறது. 10 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆகவே, ஒரு உறுப்பினருக்கு 6 நிமிடம் என்ற அளவில் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். திரு. சோ. அழகர்சாமி......

திரு. சோ. அழகர்சாமி : நேற்றே பேசுவதற்கு பெயர் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நாளைக்கு விவாதம் என்று வைத்து இருக்கிறோம். நேற்று பேசுவதற்கு நிறைய உறுப்பினர்கள் பெயர் கொடுத்து இருந்ததால் இன்றைக்கு உங்களை அழைக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் ஒரே நாளில் பேசுவது என்றால் முடியாது.

திரு சோ. அழகர்சாமி : 6 நிமிடம் என்றால், நான் பேசவில்லை. உட்கார்ந்து விடுகிறேன்.

(உறுப்பினர் பேசாமல் உட்கார்ந்து விட்டதால், அடுத்த உறுப்பினர் திரு.எ. கே. சுப்பையா பேச அழைக்கப்பட்டார்).

*திரு. ஆ. கு. சுப்பையா : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துகளை தெரிவிப்பதற்கு முன் வருகிறேன்.

அமைச்சர் அவர்களுடைய உரையில், தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டி ருப்பது சம்பந்தமாக எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. காரணம், காவிரி பாசனத்தை நம்பி இருக்கக்கூடிய தஞ்சை மாவட்ட விவசாயி களுக்குப்பெரிய அளவுக்கு இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்ட தால் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த மாவட்டத்தில் பல்வேறு திட்டங்களின் மூலமாக அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய நீர்த் திட்டங்களைக் கொண்டு பாசன வசதிக்கு ஏற்ற முறை யில் ஒரு வாய்ப்பை அரசாங்கம் திட்டமிடவில்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற மாவட்டங்களையெல்லாம் விட இன்றைய தினம் தஞ்சை மாவட்டத் திலே நீர்ப்பாசன வசதி இருக்கக்கூடிய நிலங்களில் பெரிய அளவுக்குத் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குரிய முறையில் திட்டங்கள் வைக்க வேண்டும். அம்மாதிரியான திட்டம் வருகிறபோது, அந்த மாவட்டத்திலே பெரிய ஏரிகள் எல்லாம் இருக்கின்றன. உதாரணத் திற்காக இரண்டு ஏரிகளைச் சொல்கிறேன். திருமேனி ஏரி என்று ஒன்று இருக்கிறது. அது ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரி. 6 ஆயிரம், 7 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் கொடுக்க முடியும். அந்த

ஏரியின் நான்கு கரைகளை ஆக்கிரமித்துக்கொண்டு சிலர் விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றிவிட்டு, அந்தக் கரைகளை உயர்த்தி, மராமத்து செய்தால், 6 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அது போல திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் சிறுபனையூர் ஏரி ஆயிரம் ஏக்கரா விஸ்தீரணம் உள்ளது. அந்த ஏரி பாசனத்திலிருந்து நிறைய கிராமங்களில் விவசாயம் செய்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஏரியை மராமத்து செய்தால் அங்கிருக்கக்கூடிய நிலங்களுக்கு பாசன வசதி கொடுப்பதற்கு முடியும். அதே போல அந்த மாவட்டத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான, ஏரிகள், குளங்கள் எல்லாம் தனி நபர்களிடத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. கோவில், மடங்களுடைய நிர்வாகத்தின் கீழ் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஏரிகள், குளங்களை மராமத்து செய்வது மூலமாக அவைகளிலே தேங்குகின்ற தண்ணீரை எடுத்து ஆபத்து நேரங்களில் விவசாயம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியும், என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

காவேரி கழிமுகத் திட்டம், அந்தக் கால்வாய்களையெல்லாம் மாற்றி அமைக்கிற, மாடர்னைசேசன் திட்டத்திற்கு மிகக் குறைவாக நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது. அது போதுமானதல்ல. கூடிய சீக்கிரம் ஒரு 2, 3 ஆண்டுகளுக்குள் அந்த மாவட்டம் முழுவதும் இருக்கக் கூடிய வாய்க்கால்களை நவீனப்படுத்தி, பாசனத்திற்கு ஏற்ற ஒருநிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவ்வாறு செய்கின்ற போது, வடிகால், முக்கியமான வேலையாக கருதப்படுகிறது. வடிகால் இல்லாத காரணத்தினால் பல்லாயிரக் கணக்கான ஏக்கரா நிலங்கள் மழைக் காலங்களில் மூழ்கி பயிர்கள் நாசமாக்கப்படுகின்றன. திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் கிளைதாங்கி வடிகால் திட்டம் ஒரு 10 கிராமத்திற்கு வடிகால் திட்டமாகும். அந்தத்திட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதை 5, 6 ஆண்டு காலமாக அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியாகிவிட்டது. இந்த சட்ட மன்றத்திலும் பேசியிருக்கிறோம். அந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்குத்தடையாக இருப்பது கலெக்டர் அவர்கள் கன்கரென்ஸ் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். கலெக்டர் கன்கரன்ஸ் கொடுப்பதற்கு 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல் போனால் அவருக்கு அதிகாரமில்லை என்று சொல்கிறார்கள். 1965–ம் வருடம் நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகையை மாற்றி, இன்றைய தினம் இருக்கக் கூடிய நிலவரத்திற்குத் தகுந்தாற்போல், கலெக்டருக்கு 2 ஆயிரம் என்பதை 3 ஆயிரம் என்று உயர்த்திக்கொடுப்பது மூலமாக இந்த உயர்வை கொடுக்க வேண்டுமென்று பொதுப்பணித் துறையைச் சேர்ந்தவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். அதை ரெவின்யூ போர்டு ஏற்றுக் கொள்ளவில்லையோ, கலெக்டர் தான் ஏற்றுக் கொள்ளவில்லையோ, . தெரியவில்லை. இதன் காரணமாக அந்த வேலைகளுக்கு மதிப்பீடெல்லாம் செய்து, மதிப்பீடுகளை அங்கீகரிக்க முடியாத நிலையில் 6, 7 ஆண்டு காலமாக அது செயல்படாமல் இருக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



பாசன ஆயக்கட்டு வேலைகளை 100 ஏக்கராவுக்கு மேல் உள்ளதை எல்லாம் பொதுப் பணித் துறையினர் செய்யலாம். பஞ்சாயத்து யூனியன் 100 ஏக்கராவுக்கு உடபட்டதையெல்லாம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் ஒரு 10 ஏக்கரா பாசனம் உள்ள இடங்களைக் கூட செய்ய முடியாத, தகுதியில்லாத, நிலைமையிலிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனுக்கு அந்த அளவுக்கு பண வசதியில்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு 50 ஏக்கரா பாசனமுள்ள பிரதேசங்களையெல்லாம், அந்த மாதிரி இருக்கக் கூடிய ஏரிகள், குளங்களையெல்லாம் பொதுப் பணித் துறை ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த நிலையில் நீர்ப்பாசன வேலைகள் செய்து முடிக்க வேண்டும்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக கிராமங்களை இணைக்கக் கூடிய சாலைகளுக்கு பாலம் கட்ட வேண்டுமென்ற நிலையில் இன்றைய தினம் கிராமங்களை இணைக்கின்ற பொறுப்புக்களை—காலையில் கூட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள்—அந்த நெடுஞ்சாலை இலாக்காவைச் சேர்ந்தவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். அது போல பஞ்சாயத்து யூனியன்கள் எந்த ஒரு சாலை வேலையும் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது. சகல வேலைகளையும் ஒரு தனி நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலமாக அந்த வேலைகளையெல்லாம் செய்து முடிப்பது சிறந்த முறையில் இருக்கும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன். தஞ்சை மாவட்டத்தில் ரெயில்வே செஸ் இருக்கிறது. அந்த செஸ்ஸை அங்கே இருக்கக் கூடிய பஞ்சாயத்து யூனியன்களுக்கெல்லாம பிரித்துக் கொடுத்து, அங்கே பாலங்கள் கட்ட வேண்டுமானாலும், அல்லது சாலைகள் போட வேண்டுமானாலும் அந்த செஸ்ஸை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று பல ஆண்டு காலமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைக்கவில்லை. என்னுடைய தொகுதியில் 3 ஆறுகளுக்கு பாலம் கட்ட வேண்டுமென்று 15 ஆண்டு காலமாக சொல்லிக் கொண்டிருக்கின்றேன். பெருகவாழ்ந்தான்—மகூக்கூர் போகின்ற சாலையில் பாமணி ஆற்றிலும், திருத்துறைப்பூண்டி—பரவாக்கோட்டை செல்லுகின்ற சாலையில் கோரையாறு, பாமணி ஆற்றிலும் பாலம் கட்டுவது மூலமாக பல்வேறு கிராமங்களை இணைக்கக்கூடிய நிலை ஏற்படும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக பஞ்சாயத்து யூனியனிடம் வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய காங்க் கூலிகள் 4,700 பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஜில்லா போர்டு காலத்திலிருந்து வேலை செய்கின்றவர்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டும் என்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்ளுகிறேன். காண்டிராக்டர்கள் வேலைமுறையை ரத்து செய்வது மூலமாக பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு மிச்சப்படும். காண்டிராக்டர்கள் வேலைகளை நல்ல முறையில் செய்ய முடியவில்லை. அவர்கள் வேண்டுமென்றே வேலையைச் செய்யாமல் குந்தகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை ரத்து செய்து நிர்வாகத் துறையில் அந்த வேலைகளைச் செய்வதற்குரிய ஒரு ஏற்பாட்டை இந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகளை முழு மனதோடு ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுப்பணித் துறை எந்த அளவுக்கு நாட்டுக்கு முக்கியம் வாய்ந்தது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆனால் கொடுத்திருக்கின்ற நேரமோ பெல் அடிக்கின்ற வரையில்தான் என்பதையும் நாங்கள் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நேரத்தை சற்றுக் கூடுதலாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப்பணித் துறை குறிப்புகளை திரும்பத் திரும்பப் பார்த்தால் செங்கற்பட்டு மாவட்டம் பற்றி இந்தக் குறிப்புகளில் இல்லை என்பது தான் என்னுடைய வருத்தமான கருத்து என்று நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதி காலம் காலமாக பிற்படுத்தப்பட்டிருந்தாலும், நம்முடைய அரசு காலத்தில் பல்வேறு காரியங்கள் செய்திருந்தாலும், நம்முடைய அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்களைச் சொல்லுவார்கள், ஆறுமுகம் பகுதிக்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டிருக்கிறது என்று— தனித்தனியாக செலவிடப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அந்தக் குறிப்பைப் பார்க்கும்போது கருமாரி அம்மன் கோவிலுக்குப் போவதற்கு 8 லட்சத்திற்கு மேம்பாலம் கட்டுவதாகக் குறிப்பில் இருக்கிறது. கருமாரி அம்மன் கோவிலுக்கு மேம்பாலம் கட்ட வேண்டாமென்று சொல்லவில்லை. என்னுடைய பகுதியில் ஈசூர் நிலமங்கலம் சாலை வேண்டுமென்று 20 ஆண்டு காலமாக நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது மதுராந்தகம் ஏரியிலிருந்து கடலுக்குப் போகின்ற வழியில் 2 பகுதிகளில் உடைந்து விட்டிருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டினால் செங்கற்பட்டு தாலுக்காவையும், மதுராந்தகம் தாலுக்காவையும் இணைக்க முடியும். அவைகள் செய்யப்படவில்லை. அதே போல மதுராந்தகம் ஏரியில் சென்ற 1969-ம் வருடத்தில் செய்த வேலையோடு, இது வரைக்கும் அதற்கு எந்தவிதமான பணமும் கொடுக்கப்படவில்லை. அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். மதுராந்தகம் தாலுக்காவைப் பொறுத்த வரையில் ஏரிகள் நிறைந்திருக்கின்ற பகுதியாக இருக்கிறது. அந்த ஏரிகளுக்கு விசேஷ கவனம் செலுத்தி அவைகளுக்கென ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே போல மதுராந்தகம் நகருக்கு குடி தண்ணீர் திட்டம் வேண்டுமென்று கேட்டு, அதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மதுராந்தகம் ஏரியில் தண்ணீரில்லை நகரத்திலிருக்கின்ற கிணறுகளில் உப்புத் தண்ணீர் தான் வருகிறது. இதை ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுராந்தகம் ஏரியில் தண்ணீர் இருந்தால் மதுராந்தகம் நகரில் தண்ணீர் கிடைக்கும். அப்போது சற்று நல்ல தண்ணீராகக் கிடைக்கும். அந்தத் தண்ணீரை மக்கள் குடிப்பார்கள். மதுராந்தகம் ஏரியில் தண்ணீர் இல்லை என்றால் உப்புத் தண்ணீரைத்தான் அங்கே குடிக்க வேண்டும்.



இந்த ஆண்டு ஏரியில் தண்ணீர் இல்லை. மதுராந்தகம் நகருக்கான குடிதண்ணீர் திட்டம் அரசிடம் இருக்கிறது. குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் இந்த நேரத்திலாவது அதற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்று சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வரையில் செல்கின்ற பக்கிம்ஹாம் கெனால் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு பஞ்சம் ஏற்பட்டபோது அப்போது இருந்த பக்கிம்ஹாம் கவர்னரால் பஞ்ச நிவாரண வேலையாக சீர்திருத்தம் செய்யப்பட்டது. அதற்குப் பின்னால் அந்த கெனாலுக்கு சீரமைப்புகள் செய்யப்படவில்லை, ஒரேயடியாக செய்யாமல் இல்லை; செய்கிறார்கள் பக்கிம்ஹாம் கெனாலுக்கு வடக்குப் பகுதியில் செய்கிறார்கள். ஆனால் தெற்குப் பகுதியில் ஒன்றும் செய்யவில்லை.

மத்திய அரசின் நாவிகேஷன் என்ற தலைப்பில் ஏராளமான பணம் செலவிடப்படாமல் இருக்கிறது என்று நான் கூட கேள்விப்பட்டேன். அந்தப் பணத்தை நாம் பெற்றால் இந்த பக்கிம்ஹாம் கெனால் வேலையைச் சிறப்பாக செய்து முடிக்கலாம் என்று என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கடலோரப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. பாலாற்றங்கரையிலிருந்து மரக்காணம் வரையில் கடலோரப் பகுதிதான். 2, 3 அடி தோண்டினால் தண்ணீர் கிடைக்கும். மழை பெய்து ஏரிகளில் தண்ணீர் இருந்தால் நல்ல தண்ணீராகக் கிடைக்கும். இல்லை என்றால் தண்ணீர் கிடைக்காது. இந்த 2, 3 அடிக்குக் கீழே தோண்டினால் வெறும் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கும்; அதோடு சேறு வந்துவிடும். இந்தக் கடலோரப் பகுதிகளில் கிட்டத்தட்ட 50, 60 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே வசிப்பவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களும் மீனவர்களும்தான். என்னுடைய சொந்த கிராமமும் கடலோரத்தில்தான் இருக்கிறது. அந்தக் கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மிக முக்கியமான இம்மாதிரியான காரியங்களில் மக்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கவேண்டுமேயல்லாமல் மகேஸ்வரிக்கு அல்ல. மகேஸ்வரிக்கு செய்யக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் மக்களுக்கு முதலில், அப்புறம் மகேஸ்வரிக்கு என்பதுதான் என்னுடைய கருத்து. இன்றைக்கு ஆண்டவன் சிலைகள் எல்லாம் திருட்டுப் போய்க்கொண்டு இருக்கின்றன. இப்படி, தன்னைக் காத்துக்கொள்ள முடியாத ஆண்டவனுக்கு என் செய்ய வேண்டும் மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும்போது மகேஸ்வரி கோவிலுக்குச் செல்ல மேம்பாலம் என்

[திரு. சி. ஆறுமுகம்] [1975 மார்ச் 15

என்பதுதான் என்னுடைய கேள்வி. அந்தப் பணத்தைக் கொண்டு கிட்டத் தட்ட 10 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்க முடியும். ஆகவே, அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரையில், கடற்கரைச் சாலைக்கு மத்திய அரசு நிதியிலிருந்து 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் என் பகுதிக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. பொன்னேரி திருத்தணி பகுதிகளுக்கு மட்டும் ஒதுக்கியிருக்கிறார்கள். நான் கேட்டால் 17, 18 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோமே என்று அமைச்சரவர்கள் கணக்குச் சொல்லுவார்கள். என் பகுதிக்குக் கொடுக்கப்பட்ட நிதி 6,000 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் பயன் படும் திட்டத்தை நிறைவேற்றப் பயன்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச் சரவர்கள் சமீபத்தில்தான் அதற்குத் திறப்புவிழா நடத்தினார்கள். வேளாண்மை காரியங்களுக்குப் பணம் செலவு செய்திருக்கிறார்கள். இன் னும் பல்வேறு காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன. அதில் எந்த எந்தக் காரியங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டுமோ அவையவற்றிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

மதுராந்தகம் ஏரி கலங்கல் உத்தரமேரூர் ஏரி கலங்கல் வருகின்ற கால்வாய்கள் செப்பனிடப்படவில்லை. கால்வாயின் இரு கரைகளிலும். 30 எச். பி. 40 எச். பி. பம்புசெட் போட்டு தண்ணீரை இறைத்துவிடுகிறார்கள். அதனால் உண்மையான ஆயக்கட்டு நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. மதுராந்தகம் ஏரியிலிருந்து பல்லவன்மடை ஏரிக்குத் தண் ணீர் வரவேண்டும். ஆனால் வருகின்ற வழியில் 90 எச். பி. 100 எச். பி. பம்புசெட்டுகள் சுமார் 200 போட்டு தண்ணீரை இறைத்து விடுகிறார்கள்; இறைவை பாசனம் செய்கிறார்கள். அதனால் அந்த ஏரிக்குக் கீழ் இருக் கிற 6,000 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அங்கே 18 கிராமங்கள் இருக்கின்றன. ஆயக்கட்டு நஞ்சைக்கு தண்ணீர் கிடைக்காமல் வழியில் இருக்கிற இறைவை நஞ்சைக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இதை எந்த வகையில் அனுமதிக்கிறார்கள் என்று தெரிய வில்லை. இப்படி நடப்பதை வேண்டுமென்றால் இன்றைக்கே கூட அங்கே போய் பார்த்துக் கொள்ளலாம்.

ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டுமானால் இறை வைப் பாசனம் செய்யக்கூடாது என்று உத்தரவு போட வேண்டும். இரு கரைகளிலும் இருக்கிற 200 பம்புசெட்டுகளையும் அப்புறப்படுத்த வேண்டும். உண்மையில் ஆயக்கட்டு நிலம் வைத்திருப்பவர்களுக்குத்தான் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தும் உரிமை இருக்கிறது. இதிலே அரசியல் பார்க்காமல் உரிமை உள்ளவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கின்ற வகையில் உத்தரவு போடுங்கள்.

அண்ணா தி.மு.க. வினர் இதில் அரசியல் காட்டுகிறார்கள். நாம் காவேரி தண்ணீருக்கு டில்லிக்கும் மைசூருக்கும் ஓடுகின்ற நிலை இருக் கிறது. அதே நிலைமைதான் இங்கும் இருக்கிறது. அந்த நிலைமை நீடிக்குமானால் தலைவரவர்களே, அங்கே பல சங்கடங்கள் உண்டாகும். ஒரு சங்கடமான நிலைமை ஏற்படுமானால் அதற்கு அங்குள்ள மக்கள்



1975 மார்ச் 15] [திரு. சி. ஆறுமுகம்.]

பொறுப்பல்ல; அதற்கு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள்தான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கும் மானியக் கோரிக்கைகள்மீது உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அப்படிப்பலரும் கூறியிருந்தாலும் நானும் என்னு டைய கருத்துக்களை கூற அதிக நேரம் இல்லாததால் குறிப்பிட்ட ஒன் றிரண்டு விஷயங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பொதுப்பணித் துறையில் இப்போது அதிகமாக அடிபட்டி ருப்பது வீராணம் திட்டமாகும். இது ஒரு பயனற்ற திட்டம், மக்களை ஏமாற்றுகிற திட்டம், மக்கள் பணத்தை வீணாக்குகிற திட்டம் என்பது என் னுடைய கருத்து. அதை விளக்குவது என்னுடைய கடமையாகும்.

வீராணம் திட்டத்தில் 2 டி.எம்.சி. தண்ணீர் இருந்தால்தான் 'கிராவிட்டி' அடிப்படையில் பவர் இல்லாமல் நகருக்குத் தண்ணீர் கொண்டு வர முடியும். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை அங்கே இல்லை. ஆகவே, இப்போது 'ரீ டிசைன்' செய்திருக்கிறார்கள். பம்பிங் மூலம் தண்ணீர் கொண்டுவர எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரையில் இப்போது 30 மில்லியன் காலன் தண்ணீர் ஆல்டர்னேட்டிவ் டேசில் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் 40 மில்லியன் காலன் தண்ணீர்தினசரி தேவைப்படுகிறது. உண்மையிலேயே இந்த அளவுக்கு தண்ணீர் கொண்டுவர இந்தத்திட்டம் பயன்படுமா என்றால் நிச்சயமாக இல்லை.

எப்போதுமே ஒரு திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் தீர ஆராய்ந்து செய்வதில்லை. அவசரப்பட்டு எது எதையோ செய்துவிட்டு, பின்னால் முழிக்கிறார்கள். தண்ணீர் வேண்டியதுதான். ஆனால் அதை நன்றாக ஆலோசித்துச் செய்ய வேண்டும். நான் இப்போது புதிதாக இதைச் சொல்லவில்லை. இந்தத் திட்டம் ஆரம்பிக்கும்போதே சொல்லியிருக்கி றேன். இத்திட்டத்தினால் பல கோடி ரூபாய்—அது மக்களின் பணம்— வீணாகியிருக்கிறது. ஜப்பானிலிருந்து பல கோடி ரூபாய் பெறுமான மூள்ள இரும்புக் கம்பிகளை எல்லாம் வாங்கிக் கொண்டுவந்தார்கள். குழாய் செய்வதற்கு. ஆனால் அவைகள் எல்லாம் இன்றைக்குப் பயன்படுத்தப் படாமல் துருப்பிடித்து, தூக்கி எறியக் கூடிய நிலையில் இருக்கின்றன. இந்த அளவுக்கு விரயம் ஆவது யாருடைய பணம் ? இது மக்களுடைய பணம் இல்லையா ? தீர ஆலோசித்துச் செய்திருந்தால் இந்த நிலை வந்தி ருக்குமா ? (திரு. செ. கந்தப்பன் எழுந்தார்). சார், ஐ ஆம் நாட் ஈல்டிங்.

திரு. செ. கந்தப்பன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சனையின்மீது எழுந்து நிற்கிறேன். மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் மிகத் தவறான ஒரு தகவலை இந்த மன்றத்திற்குத் தருகிறார்கள். அதனால் நான் அதை ஆட்சேபிக்கிறேன். ஏற்கனவே இதுபோன்ற குற்றச் சாட்டுகள் எல்லாம் ஏடுகளிலே வந்து, அவைகளுக்கு எல்லாம் தகுந்த விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் பொறுப்புள்ள அங்கத்தினர்கள் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை திரும்பத் திரும்பச் சொல்வதால், இது இந்தத் துறையிலே தீவிரமாகப்பணியாற்றிக் கொண்டிருக்கிற பொறியாளர்களை—இன்றைக்கு ஏறத்தாழ ஆசியாவிலேயே ஒரு மகத்தான சேவையை செய்து வருகிற நம்முடைய பொறியாளர்களை சோர்வடையச் செய்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : அவர்களுக்கு இருக்கிற பொறுப்பு எனக்கும் இருக்கிறது. நானும் சில விபரங்கள் கையில் வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன். உருப்படியானத் திட்டங்களைப் போட்டிருந்தால் திட்டங்கள் செம்மையாக நிறைவேற முடியும். இல்லை என்றால் மக்களுடைய பணம் தான் வீணாகும். ஆரம்பத்தில் வீராணம் திட்டம் என்று போட்டார்கள். இப்போது அதை கைவிட்டுவிட்டு பாலாற்றுத் தண்ணீரைக் கொண்டுவர திட்டமிடுகிறார்கள். வீராணம் திட்டத்தைக் கைவிட்டாகிவிட்டது. அதைக் காண்ட்ராக்ட் எடுத்தவரும் செத்துவிட்டார்.

இந்த வீராணம் திட்டத்தை ஸ்டடி செய்வதற்கு 4, 5 பேர்களை அனுப்பினார்கள். விஸ்வநாதன், போர்டு மெம்பர், நடராஜன், ஐ.ஏ.எஸ். அதிகாரி உசைன்—தலைமைப் பொறியாளர் ஆகியோர் போனார்கள்.

(முற்பகல் 11-30.)

உசைன் போய் வந்தார். ஆறுமாத காலத்தில் ரிடையர் ஆகிவிட்டார். இதுபோன்ற ஒரு திட்டத்தை உத்தேசித்து ஒருவரை வெளியில் அனுபவம் பெற்று வருவதற்காக அனுப்புகிறபோது அவருக்கு 3 வருடகால சர்வீசாவது இருக்குமா என்று பார்த்து அனுப்ப வேண்டும். தமக்கு வேண்டியவர் என்பதற்காக 6 மாத கால சர்விஸ்கூட இல்லாத ஒருவரை அனுப்பி வைப்பதால் இதுபோல பொதுமக்களுடைய பணம்தான் விரயம் ஆகிறது. வீராணம் திட்டத்தில் எந்த எந்தப் பொறியாளர்கள் பணியாற்றி வருகிறார்களோ அவர்களில் இருந்து அனுப்பியிருக்க வேண்டும். அப்படிச் செய்யாது ஆறுமாதத்தில் ரிடையராகக் கூடியவரை அனுப்பி பொதுமக்கள் வரிப் பணத்தைத்தான் வீணாக்கியிருக்கிறார்கள். உள்ளபடியே நாட்டுமக்களின் வரிப்பணம் எவ்வளவு வீணாகிறது என்பதை எடுத்துக்காட்டச் சொல்கிறேன். திரு. நடராஜன் போய்வந்த பிறகு அவரை வேறு டிபார்ட்டுமெண்டுக்கு மாற்றிவிட்டார்கள். அவர் போய்வந்ததனால் என்ன பிரயோசனம் ? பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் போய்வந்தார். அவரிடம் இருந்து அந்தத் துறை வேறு ஒருவருக்கு மாற்றப்பட்டது.

இப்படி அரசாங்கப் பணத்தை எடுத்து ஒருவரை எந்தக் காரியத்திற்காக எங்கு அனுப்புகிறோம், அவர் திரும்பி வந்தவுடன் அந்தக் காரியத்தை முடிப்பதற்கு அவர் எவ்வளவு உதவியாக இருக்கிறார் என்பதை எல்லாம் பார்க்காமல் இராவுக்கு இராவே உத்தரவு போடுகிறார்கள்.





அடுத்த நாள் வேறு ஒரு உத்தரவைப் போடுகிறார்கள். இப்படி யாருடைய பணத்தில் விளையாடுகிறார்கள்? நாட்டு மக்களுடைய பணத்தில் தான் விளையாடுகிறார்கள் என்கிற இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தை எடுத்துக் கொண்டால் எங்கள் மாவட்டத்திலுள்ள ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலத்திற்கு கால்வாய்களின் மூலம் தண்ணீர் கொடுப்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. ஒரு ஆண்டு விட்டு ஒரு ஆண்டு தண்ணீர் விடவேண்டும். இந்தக் காரியம் ஒழுங்காக நடைபெறுகிறதா என்று பார்த்தால் நடைபெறுவதில்லை. அதில் பாலிடிக்ஸ் இருக்கிறது. சென்ற ஆண்டு உடுமலைப் பேட்டைப் பகுதிக்குத் தண்ணீர் விட்டார்கள். இந்த ஆண்டு எங்கள் பகுதிக்குத் தண்ணீர் விடவேண்டும். ஆனால் உடுமலைப்பேட்டைப் பகுதிக்கும் இந்த ஆண்டு தண்ணீர் விட்டார்கள். அப்போது ஏன் அப்படி விடுகிறீர்கள், எங்கள் பகுதிக்கு பின்னால் தண்ணீர் இல்லாது போய்விடும் என்று நாங்கள் சொன்னதற்கு—அப்போது தண்ணீர் நிறைய இருக்கிறது என்றார்கள். ஆனால் சேர்ந்தார்போல 3 நாட்கள் எங்கள் பகுதியில் தண்ணீர் வரவில்லை. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அமைச்சராக இருக்கிறார் என்ற காரணத்தினால் இதுபோலக் காரியங்கள் நடக்கின்றன. எங்கள் பகுதி மக்கள் மிகுந்த வேதனைப்படுகிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் பி.ஏ.சி. டெய்லெண்டில் தண்ணீர் வருவதே இல்லை. ஒரு சொட்டுகூட வருவதில்லை. இதிலே ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது. டெய்லெண்டுவரை தண்ணீர் வந்து சேரவேண்டுமென்றால் அதற்கு ஓரளவு தண்ணீர் அதிகமாக விடவேண்டும். அப்படி விடுகிறபோது விடுகிற இடத்திலேயே ஓவர்ப்ளோ ஆகிவிடுகிறது. கட்டும்போது தவறாகக் கட்டிவிட்டார்கள். இதைக் கலெக்டரிடத்திலும், பொறியாளரிடத்திலும் சொல்லியிருக்கிறேன். கட்டும்போதுதான் தவறாகக் கட்டிவிட்டார்கள் என்றாலும் இப்போதாவது அதை மாற்றுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதை அவர்கள் மாற்றுவதாக இல்லை. அதுபற்றி சூப்பிரண்டெண்டிங் என்ஜினியரிடம் கேட்டேன். அவர் நான் சொன்னதற்கு சரியாகக் கூடப் பதில் சொல்லவில்லை. தம்மை என்னமோ பெரிய இடத்தில் இருப்பதுபோல் எண்ணிக்கொண்டு, என்னை பிச்சை கேட்க வந்தவரைப்போல அவமானப் படுத்தினார்கள். அதுபற்றி நான் கூறியிருக்கிறேன். அந்த அதிகாரிமீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இன்னும் நான் வட்டமலைப் பகுதி செட்டிப்பாளையம் அணை பற்றிச் சொன்னேன். எண்பது லட்சம் ரூபாயில் அந்த அணைக்கட்டைக் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். கடைசியில் என்ன ஆயிற்று ? நான் அண்ணா தி.மு.க.-வில் சேர்ந்துவிட்ட காரணத்தினால் அந்த இடத்தில் இருந்து 12 மைல் கிழக்கே கொண்டுபோய் அந்த அணைக்கட்டைக் கட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். இதில் என்ன கஷ்டம்—சீப்பேஜ் வாடரே கிடையாது. வீணாக அந்தத் தண்ணீர் போய் அங்கே தேங்கி என்ன செய்யப் போகிறது. வேண்டுமானால் அந்தத் திட்டத்தையே கைவிட்டுவிடுங்கள். வேண்டாத இடத்திலே அதைக்கொண்டு போய்க் கட்டுவதனால் எந்தவித

மான பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவே தான் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து செட்டிபாளையத்திலேயே கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ராஜஸ்தான், மற்றும் பம்பாய் போன்ற இடங்களில் செயற்கை முறையில் மழையை உண்டாக்கப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு அவை வெற்றிகரமாக நடக்கிறது. ஏரோபளேனில் சென்று உப்பைத் தூவுகிறார் கள்—மழைபெய்கிறது என்கிறார்கள். அதுபோல செயற்கை மழையை பெய்விக்கக்கூடிய நிறுவனங்கள் பெயர்கள் என்னிடம் இருக்கின்றன. வேண்டுமானால் அவற்றை நான் தருகிறேன். அதைத் தமிழகம் பயன்படுத்த வேண்டுமென்று கூறி இந்த வாய்ப்பைத் தந்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன்னால் இருக்கக்கூடிய பொதுப்பணித்துறை, அதைச் சார்ந்த மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். பல மாவட்டங்களுக்கும் ஆயிரக்கணக்கில் அமைக்கப் பட்ட திட்டங்கள் இதில் அடங்கியிருக்கின்றன என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அந்த முறையில் இதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இருந்தாலும் என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இதில் போடப்பட்டுள்ள திட்டங்கள் என்ன என்பதைப் பார்க்கிற போது இதை முழுமனதுடன் வரவேற்கிற மன நிலை வரவில்லை. மிகுந்த வறட்சிக்குள்ளாகிற அந்த மாவட்டத்தில் வறட்சிப் பணிகள் நடைபெறு கின்றன என்று சொல்லிகிறார்களே தவிர அந்த வறட்சிப்பணிகளையும் சற்று ஆலோசித்துச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆறு ஏழு மாதங்களாக அந்த மாவட்டம் மிகுந்த வறட்சியினால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த மாவட்டத்தின் வறட்சியைப் போக்க நிரந்தரத் திட்டங்களாக என்ன என்ன மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை இந்த மானிய கோரிக்கையிலே கொண்டுவந்திருக்கலாம்.

இந்த வருடம் மாத்திரம் அல்ல—எப்போதும் அது இதுவரை வறண்ட மாவட்டமாகவே இருந்து வந்திருக்கிறது. இனியும் ஒரு வறண்ட மாவட்ட மாகவே இருக்கக்கூடிய சூழ்நிலையில்தான் அமைந்திருக்கிறது. எதிர் காலத்தை கருத்தில் கொண்டு அந்த மாவட்டத்தில் வறட்சியை நிரந்தர மாகப் போக்க எத்தனையோ திட்டங்கள் முன்பு பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களில் எதையும் இப்போது எடுத்துக் கொள்வதாக இந்த அறிக்கையில் காணோம். 56 லட்சம் ரூபாய் வறட்சி நிவாரணப் பணி களுக்குச் செலவிட இருப்பதாக சொல்லியிருக்கிறார்களே தவிர இவற்றைப் பயன்படுத்தி என்ன என்ன திட்டங்களை நிறைவேற்றப் போகிறார்கள் என்பது எதையும் இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை. டெம்பரரி மெஷராக செய்யக்கூடிய காரியங்கள் தற்போதைக்கு உதவியாக இருக்க லாம். அது எந்த அளவுக்கு நிரந்தரமான பயனை அளிக்கும் என்பதையும் நாம் கொஞ்சம் யோசித்தாக வேண்டும்.



உதாரணமாக, ஒன்றை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னையில் தண்ணீர் தட்டுப்பாடு வந்தபோது அங்கங்கே ஹாண்டு போரிங் பம்புகளைப் போட்டார்கள். அப்புறம் இப்போது கிணறுகளை எடுக்கவும், ஹாண்டு போரிங் பம்புகளைப் போடவும் முன்வந்தி ருக்கிறார்கள். இதுபோல அந்தப் பகுதியில் மிக ஆழமான குழாய்க் கிணறுகளைப் போட்டால் ஓரளவு நிலத்திற்கு அடியில் உள்ள நீரைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். முன்பு ஆழப்படுத்தப் பட்ட கண்மாயில் தண்ணீர் இல்லை என்று அதன் படுகையிலே இப்போது குழாய்க் கிணறுகளை அமைத்து எங்கள் பகுதியிலே அந்தக் கண்மாயின் ஆயக்கட்டுகள் பாதிக்கப்படாமல் தண்ணீர் பாசனம் தருகிறார்கள். ஆக அங்கே மிக ஆழமான குழாய்க் கிணறுகளை இந்த வறட்சி நிவாரண வேலையில் எடுத்துக் கொண்டு அமைத்துக் கொடுத்தால் பின்னாலும் அது அங்கே உபயோகமுள்ளதாக இருக்கும்.

கிணறுகளை ஆழப்படுத்துவதன் மூலமாக கொஞ்ச நாட்கள்தான் பயன் உடையதாக இருக்கும். உதாரணமாக அருப்புக் கோட்டைக்குத் திருபுவனத்தில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் வருகிறது. வழியில் இருக்கக்கூடிய கிராமங்களில் உள்ள கிணறுகள் எல்லாம் வறண்டு விட்ட காரணத்தினால் அந்த அந்தப் பகுதியில் உள்ள மக்கள் குழாயை உடைத்துத் தண்ணீர் எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று சொன்ன வுடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வருகிற வழியில் தண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடு செய்தார்கள். கிணறுகளை மட்டும் நம்பிப் பயன் இல்லை. அங்கங்கே ஹாண்டு போரிங் மிக ஆழமாகப் போட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்போதுதான் கிராமங் களில் உள்ளவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும். அந்த மாவட்டத்தின் வறட்சியை நிரந்தரமாகப் போக்க வேண்டுமென்றால் நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடித்து அங்கங்கே ஆழமான ஹாண்டு போரிங் பம்புகளைப் போட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என் பகுதியில் ஒரு ஊரிலே மழை பெய்யாமல் இருந்த நேரத்தில், கண்மாயிலும் தண்ணீர் இல்லாதபோது அதன் படுகையிலே 3 போரிங் பம்புகளைப் போட்டு, பாசனம் செய்து அங்கே இருக்கக்கூடிய நெல்லைக் காப்பாற்றி விட்டார்கள். எனவே, அந்தப் பகுதியிலே நல்ல முறையில் பயிர் செய்வதற்கு அரசு வேண்டிய காரியங்களையெல்லாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மானியத் தொகையைப் பார்க்கும்போது அந்த வறட்சிப் பகுதிகளுக்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் சேருமா சேராதா என்ற சந்தேகம் எழுகிறது. ஆகவே, இராமநாதபுரம் ஜில்லாவில் வறட்சிப் பகுதிகளுக்குச் செய்ய வேண்டியத் திட்டங்களை இனிமேலும் தள்ளிப் போடா மல் அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு நிரந்தரமான பலனை அளிக்கும் வகையில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொதுப்பணித் துறை மானியத்தை வரவேற்று, நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விழைகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் நல்ல பல திட்டங்களையெல்லாம் இந்த நாட்டிற்கு இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுககு நிவாரண வேலைகளையெல்லாம் இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப்பற்றிச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சாத்தனூர் அணையிலிருந்து கால்வாய் வெட்டி ரிஷிவந்தியம் தொகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகின்றது. இதுவரை எநதவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இனிமேலாவது துரித நடவடிக்கை எடுத்து, கால்வாய் வெட்டி, நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுகிறேன்.

அதேபோல், சங்கராபுரம் அருகே ஓடும் மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு அணை கட்டினால் சுமார் 50,000 எக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற ஏதுவாக இருக்கும். எனவே, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, என்னுடைய ஊரில் கவட்டேரி என்ற ஒரு சிறிய ஏரி உள்ளது. அநத ஏரி கடந்த 1972–ம் ஆண்டு பெய்த பெரும் மழையினால் பாதிக்கப்பட்டு, இது நாள் வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் சுமார் 100 எக்கர் நன்செய் நிலங்கள் பயிர் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, இது சம்பந்தமாகத் துரித நடவடிக்கை எடுத்து வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்து தூர் எடுத்து மதகு, கலிங்குகள் போன்றவை கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

அடுத்து, என்னுடைய ஊரில் பெரிய ஏரி ஒன்று உள்ளது. அந்த ஏரி அதிக மழைக் காலங்களில் கரை உடைந்து விடுகிறது. இதனால் கரை ஓரம் உள்ள 50 எக்கர் நிலங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பயிர் சேதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த நிலைமையைப் போக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல என்னுடைய தொகுதியில் மணிமுத்தா நதியிலிருந்து கால்வாய் வெட்டி மடம் வரை நீர்ப்பாசனம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதை மேலும் விரிவுபடுத்தி முடியனூர், விருகாவூர், நாகலூர் வரை கால்வாய் வெட்டி நீர்ப்பாசனம் செய்து கொடுக்க வேண்டுகிறேன்.



அடுத்தபடியாக, வெளாக்குறிச்சி—பாழ் அடைந்துள்ள அணையையும் கால்வாயையும் சீர் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் கூத்தக்குடி ஏரியிலிருந்து வீணாக ஆற்றில் விழும் தண்ணீரை கால்வாய் வெட்டிக் கொடுத்தால் சுமார் 500 எக்கர் புன்செய் நிலங்கள் நீர்ப்பாசனம் பெறும். இதனால் கூத்தக்குடி அரிசன காலனி மக்கள் பயன்பெறுவார்கள். ஆகவே, துரித நடவடிககை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட சொல்லியிருக்கிறேன். இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. உடையானாச்சி அருகே ஓடும் மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு அணை கட்டி புது உச்சிமேடு கிராம மக்களுக்கு நீர்ப்பாசனம் செய்து கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகிறது. இது சம்பந்தமாகவும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, கள்ளக்குறிச்சி ஒரு தீவு மாதிரியாகக் காட்சி அளிக்கிறது. இப்போது அந்தப் பகுதி வறட்சியாக இருக்கிறது. ஆகவே, அங்குள்ள எல்லா ஏரிகளையும் தூர் எடுத்துக் கொடுத்து நீர்ப்பாசனத்திற்கு உதவி செய்ய வேண்டுகிறேன்.

சட்ட மன்ற உறுப்பினன் என்ற முறையில் இது வரையில் நான் எவ்வளவோ சொல்லியிருக்கிறேன். நான் ஒரு மாணவன் போல் இருப்பதால் சட்டமன்ற உறுப்பினராக என்னைக் கருதாமல் அதிகாரிகளும் அமைச்சர்களும் நான் சொல்வதைக் கவனிப்பதில்லை. என்னுடைய தொகுதிக்கு 1, 2 பணிகளாவது செய்ய வேண்டும். புள்ளி விவரங்கள் இவ்வளவு கொடுக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு ஒன்றுகூடச் செய்வதில்லை என்று கூற உள்ளபடியே வருத்தப்படுகிறேன். இப்போதாவது நடவடிக்கை எடுத்து, சட்டமன்ற உறுப்பினனாக இருக்கின்ற காலத்தில் ஒரு காரியத்தையாவது நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்

அக்குளத்தூர் அருகே ஓடும் மையூரா நதியின் குறுக்கே தரைப் பாலம் ஒன்று கட்டித் தர வேண்டும் என்று நீண்ட நாளைய கோரிக்கை. இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இனி மேலாவது நடவடிக்கை எடுத்து கட்டித் தர வேண்டுகிறேன்.

தியாகதுருகம் அருகே ஓடும் மணிமுத்தா நதியின் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஈருடையாம்பட்டு அருகே ஓடும் முஷ்குந்தா நதியின் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்டித் தர வேண்டுகிறேன்.

விரஞ்சரம் அருகே ஓடும் கோமுகி நதியின் குறுக்கே தரைப் பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

கொங்கராயர்பாளையம் அருகே ஓடும் மணிமுத்தா நதியின் குறுக்கே தரைப் பாலம் ஒன்றும் கட்டிக் கொடுக்க வேண்டுகிறேன்.

அதோடு மட்டும் அல்ல. திருவரங்கம் அருகே ஓடும் பெண்ணையாற்றின் குறுக்கே மேம்பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுகிறேன்.

மூங்கில் துறைப்பட்டில் கட்டப்பட்டுள்ள பாலம் கடந்த பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பளுவான சுமைகளை ஏற்றிச் செல்ல முடியவில்லை. ஆதலால், அந்தப் பெண்ணையாற்றின் குறுக்கே புதிய பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுறேன்.

அடுத்து, விருகாவூரிலிருந்து அசகுளத்தூர் செல்லும் சாலையை தார் சாலையாக மாற்ற வேண்டும் என்று நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வருகின்றது. இது சம்பந்தமாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் மழை காலங்களில் போக்குவரத்தே இல்லாமல் ஒரு தீவு போல் காட்சி அளிக்கின்றது. எனவே, இந்த மக்களின் நிலைமையைக் கவனத்தில் கொண்டு கெட்டியாக்கி தார் சாலை அமைத்துக் கொடுக்க துரித நடவடிக்கை எடுத்து இந்த ஆண்டே ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, கள்ளக்குறிச்சி—உளுந்தூர்பேட்டை நெடுஞ்சாலையிலிருந்து கொட்டையூர் செல்லும் இணைப்புச் சாலையை தார் சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக, தியாகதுர்க்கத்திலிருந்து ஜேம்பாடி, வாலபேட்டை வழியாக திருவரங்கம் செல்லும் பாதையை தார் சாலையாகப் போட்டுத் தர வேண்டுகிறேன்.

அடுத்து, சங்கராபுரத்திலிருந்து திருக்கோயிலூர் வழியாக மடூவூருக்கு இணைப்புச் சாலை கேட்டிருக்கிறேன். அதையும் தார் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருக்கோயிலூர் சங்கராபுரம் சாலையில் தற்பொழுது பல வளைவுகளிருக்கின்றன. இதனால், அந்த வழியாக வண்டி ஓட்டிச் செல்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதனை நீண்ட சாலையாக இல்லாமல் குறுகிய சாலையாக ஆக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திம்மலை என்ற ஊரிருக்கிறது. அங்கு சாலைகள் போட்டிருக்கிறார்கள். அந்தச் சாலைகளில் மழைக்காலங்களில் மனிதர்கள்கூட நடக்க முடியவில்லை. ஆகவே, அந்தச் சாலையையும் விரிவுபடுத்திப் போட்டுக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



ரிஷிவந்தியத்திலிருந்து முனிவாழை வழியாக ஒரு தார் சாலையிருக்கிறது. அதையும் சீர்செய்து கொடுக்க வேண்டுமென வற்புறுத்தியும் வேண்டியும் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே வடமாந்தூர் என்ற ஒரு ஊரிருக்கிறது. அங்கு காப்பர் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், அங்கு நெய்வேலி போன்று தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று. கல்ராயன் மலையில் மூங்கிலும் சந்தன மரமும் கிடைக்கின்றன. அந்த மரங்களைக் கொண்டு சங்கராபுரத்தில் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ......

(மணியடிக்கப்பட்டது)

திரு. நா. வே. குருசாமி: தலைவரவர்களே, பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இன்று இந்த மானியக் கோரிக்கையில் இந்த அரசு கடந்த 7, 8 ஆண்டுகளாகச் சாதித்த சாதனைப் பட்டியலைப் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், மக்களுடைய தேவைகளைக் குறிப்பாக, நமது பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் மாவட்டந்தோறும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து, அங்கங்குள்ள ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், முதலியவர்களுடைய குறைகளையேற்று, அவற்றிற்கெல்லாம் தீர்வு காணப்படும் என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது ஒவ்வொரு ஒன்றியத்தைச் சேர்ந்த பெரும் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பல வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அங்கு நடைபெற்ற கருத்தரங்குகள் ஏட்டளவில்தான் இருக்கின்றனவேயொழிய செயலில் காட்டுவதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, இப்பொழுது எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில், அதிகமான கண்மாய்த் திட்டங்கள் எல்லாம் அந்தக் கருத்தரங்கில் கூறப்பட்டிருக்கின்றன என்பதைக் கூற விரும்புகிறேன். அந்தக் கண்மாய்த் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து ஆவன உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, அந்தக் கருத்தரங்குகளில் அதிகமான பேர்களால் பேசப்பட்டவை, கண்மாய்களிலும், குளம் குட்டைகளிலும் அதிகமான பேர்கள் ஆக்கிரமிப்புச் செய்கிறார்கள்—அவற்றை அகற்ற வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அங்கு பேசப்பட்டதேயொழிய இதுவரை எந்தவிதமான ஆக்கிரமிப்புகளையும் அகற்றியதாகத் தெரியவில்லை. ஆகவே, இந்தக் கண்மாய்களில் ஆக்கிரமிப்பு செய்பவர்களை இந்தப் பொதுப் பணித்துறை மூலமாகக் காலி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை வளத்தைப் பொறுத்த வரையில் நான், சென்ற முறை இம்மானியக் கோரிக்கையின்மீது பேசினேன், சாலைப்பணி ஆய்வாளர்கள் நாள் ஒன்றுக்கு 40 கிலோ மீட்டர் வரை சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பிரயாணப்படியும் கொடுக்கப்படவில்லை. மற்ற ஒன்றியங்களைச் சேர்ந்த பல இலாகாக்களில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி பிரயாணப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால், சாலைப்பணி ஆய்வாளர்களுக்கு மட்டும் இப்படி கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

2—5—1973–ல் நடைபெற்ற என். ஜி. ஓ. மாநில மாநாட்டில், சாலை ஆய்வாளர்களுக்குப் பென்ஷன் வழங்கப்படுமென்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்மீதும் இதுவரை எந்தவிதமான உத்திரவும் கிடைக்க வில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆண்டிப்பட்டி தொகுதியில், தெப்பம்பட்டி சாலையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, ரூரல் ரோட் என்ற ஒரு சாலையைப் போட ஒரு ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டு, அவர் சரியான முறையில் அன்றைக்கு கல், மற்ற சரளைகளை எல்லாம் சப்ளை செய்ய வில்லையென்ற ஒரே காரணத்திற்காக, அந்த ஒப்பந்தக்காரரது காண்ட்ராக்ட் ரத்து செய்யப்பட்டது. திரும்பவும் வேறு ஒருவருக்கு காண்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அவரும் சரியாக வேலை செய்யவில்லை. ஆகவே, தெப்பம்பட்டியில் அந்தச் சாலையை போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, எங்களுடைய தொகுதிக்கும் சேடப்பட்டி தொகுதிக்கும் ஒரு சாலை போட்டால், அது மயிலாடும்பாறை, கல்லுப்பட்டி, தேனி, கம்பம், இராஜபாளையம் ஆகியவற்றிற்குச் செல்லக்கூடிய ஒரு பாதையாக இருக்கும். அது பல ஆண்டுகளாகப் பரிசீலனையிலிருக்கிறது.

மேலும் என்னுடைய பகுதியில், கண்டமனூர் பக்கம் ஒரு பாலமும் குள்ளப்பரம் பக்கம் ஒரு பாலமும் கேட்டிருக்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையிலாவது அவை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், ஏமாற்றமாகத்தானிருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தையும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரசநாடு மலைப் பகுதி ஒன்றிருக்கிறது. அங்கு சாலைகள் சரிவரப் போடப்படாமலிருக்கிறது. அதேபோல், புலிமான்கோம்பை என்ற ஊராட்சி மன்றம்—குறிப்பாக, 30 கிராமங்கள் அடங்கிய அந்த ஊராட்சிப் பகுதிக்கு —தரைப் பகுதியாக இருப்பதால், அங்கு சாலைகள் போடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அந்தச் சாலைகளையும் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில், வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில், நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும், உணவு அமைச்சரவர்களும்தான், இந்த வறட்சியைப் போக்குவதற்காக, வேலையில்லாமலிருக்கும் ஆட்களுக்கு வேலை கொடுக்க பொதுப்பணித்துறை அமைச்சரவர்களும்,



சோறில்லாமல் இருக்கிற மக்களுக்குச் சோறு போட உணவு அமைச்சரவர்களும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. கந்தப்பன்—
12 மணிக்குள் முடிந்துகொள்ளுங்கள்.

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, மணியைக் காட்டி என்னை மிரட்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் விரைவாக முடித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலேயுள்ள பல பிரச்சனைகளைப்பற்றி அமைச்சரிடத்திலே தனியாக எழுதிக் கொடுத்து விடுகிறேன், இங்கே ஒன்று மட்டும் குறிப்பிடுகிறேன். நம்முடைய தமிழக அரசு, காலத்தைக் கருதி, வீராணம் திட்டத்தை ஆரம்பித்ததற்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். 20, 30 ஆண்டுகாலமாக, சென்னை மாநகரத்திலே, தண்ணீருக்கென ஒரு திட்டம் வேண்டுமென்று கோடைக்காலத்திலே உணரப்பட்டு மீண்டும் மழைக்காலத்திலே மறந்து விடுவதை நான் அறிந்தவன்.

நானறிந்த வரையில், இன்றைக்கு வீராணத்திலே ஆரம்பிக்கப்பட்டுள்ள அந்தத் தொழில் நுணுக்கம் உலகத்திலேயே புதுமையான முறையாகும். அந்தப் புதுமையான முறையை, மலிவானது என்கின்ற காரணத்தால், சில அதிகாரிகள், தலைமைப் பொறியாளர், இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் ஆகியோர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு, வெளிநாடுகளில் பார்வையிட்டு, நம்பிக்கையோடு வந்திருக்கிறார்கள். இதை மேற்கொள்ளலாமா, இது அறிவுத் தெளிவில்லாதது என்ற அடிப்படையிலே பேசுவது தவறானது என்று நான் சொல்லிக் கொள்கிறேன். மேல் மட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களும், அமைச்சரவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று தெளிவுபடுத்திவிட்டு வந்தபின் தான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

40 மில்லியன் காலன் தண்ணீரைக் கொண்டு வர, இப்பொழுதுள்ள வாக்குவம் டெக்னிக்கைப் பயன்படுத்தாமலிருந்தால், ஏறத்தாழ ரூ. 60 கோடியிலிருந்து ரூ. 70 கோடி வரை இந்தத் திட்டத்திற்கு ஆகியிருக்கும் என்பதை நான் மிகப் பணிவோடு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒரு நல்ல திட்டத்தை, மலிவான திட்டத்தை—மிகத் திறமையோடு அமைத்துத் தந்த இந்த அரசு பாராட்டுக்குரியதாகும்.

1971-ஜூனிலே, இந்தத் திட்டம் தொடர்பான நிலப்பகுதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. நிலத்தைத் தந்த தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் என்று அப்பொழுது காலக்கெடு தந்திருக்கிறார்கள். அந்தத் காலக்கெடு நீண்டிருந்தாலும் கூட, 3 பெரிய தொழிற் கூடங்களை வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவியோடு அமைக்க வேண்டிய சூழ்நிலை

காரணமாக, அந்நிலை ஏற்பட்டிருந்தாலும், சில பேர் அறியாமை காரணமாக, காலதாமதம் என்று சொன்னாலும் பணிகள் விரைவாக நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

(நண்பகல் 12-00)

இன்னொன்று இதன் தொடர்பாக நான் சொல்லியாக வேண்டும். வீராணம் இல்லாததற்கு முன்னாலேயே சில ஹை டென்ஷன் வயர்கள் குவிக்கப்பட்டு இருப்பதைப் பற்றிச் சில கருத்துக்களை, சில செய்திகளை சில ஏடுகள் சொல்லி வருகின்றன. அந்தச் செய்தியின் உண்மை என்ன என்பதைப்பற்றி நான் அந்த ஏடுகளுக்கு, அதன் மூலம் இந்த நாட்டிற்கு உணர்த்த ஒரு முயற்சியை மேற்கொண்டு பார்த்தேன். இங்கே, அதைப் பற்றி ஒரு மாண்புமிகு உறுப்பினர் கூட தவறான செய்தியைக் குறிப்பிட்டார்கள். நான் இந்தத் திட்டத்திற்காகச் சொல்லவில்லை; நான் சொல்வது அரசியல்வாதிகளுக்காகக்கூட அல்ல; இந்தத் திட்டத்திலே பாடுபட்டு வருகிற பொறியாளர்களுக்காகச் சொல்கிறேன்.

6 எம்.எம்., 5 எம். எம். அளவுள்ள கம்பிகளை 15 ஆயிரம் மெட்ரிக் டன் இறக்குமதி செய்யவேண்டுமென்று 1971-ஆம் ஆண்டு தேர்தல் நடப்பதற்கு முன்பே இந்தத் திட்டம் வரையறுக்கப்பட்டபோதே ஒப்பந்தத்திலே இறங்குவதற்கு முன்பே மத்திய அரசு அதற்கு ஒப்புக் கொண்டு 7,500 மெட்ரிக் டன்னுக்கு அனுமதி வழங்கினார்கள். ஆனால் 1971-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தக் குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டு அதனிடம் இந்தத் திட்டம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட பிறகு 7,500 மெட்ரிக் டன்னுக்கு அனுமதி கேட்டு மத்திய அரசை அணுகிய போது அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்- திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் டெல்லியில் இரும்பு உருக்குத் துறை அமைச்சராக இருந்தார். நம்முடைய மாநில அரசு இந்த விஷயமாக மத்திய அரசை அணுகியபோது அன்னியச் செலவாணியைப் பாது காக்கவேண்டும், இப்படி இரும்புக் கம்பிகளை இறக்குமதி செய்வதற்கு பதிலாக திரனைகள் இறக்குமதி செய்துகொள்ளலாம், இதன் மூலம் அன்னியச் செலவாணி 8 இலட்சம் ரூபாய் வரையில் மிச்சமாகும் என்ற நிலைமையை மத்திய அரசு இந்த மாநில அரசிற்கு உண்டாக்கியது. நான் இந்த நேரத்திலே—பொதுவாகக் காலஞ்சென்ற ஒருவரைக் குறித்துத் தவறாகப் பேசக்கூடாது என்று சொல்லுவார்கள்—நான் யாரையும் தவறாகப் பேசவில்லை, ஆனால் அதே நேரத்திலே உண்மையைக் கூறி யாக வேண்டும். திரனைகளை இறக்குமதி செய்து அவற்றை இந்தியாவிலே உள்ள தொழிற் கூடங்களிலே கம்பிகளாக மாற்றுவதற்கு அந்தத் திட்டத் திற்காக மட்டும் கூடுதலாக 70 இலட்சம் ரூபாய் நமக்குச் செலவாகியது. 8 லட்ச ரூபாய அன்னியச் செலவாணியைக் காப்பாற்றப்போய் 70 இலட்ச ரூபாய் அதிகமாகச் செலவு இந்த மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஆளாக்கப்பட்டது.



நம்முடைய தொழில் நுட்ப வல்லுனர்கள் திரனைகள் மழையால், வெயிலால் பாதிக்கப்படவில்லை என்று சொன்னதற்குப் பிறகுதான் அவையெல்லாம் அந்த இடத்திலே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை கம்பியாக மாற்றுகிற பணி நடைபெற்று வருகிறது. இதிலே எனக்கிருக்கிற பயமெல்லாம் வெளிநாட்டிலிருந்து ஒன்றை நாம் இறக்குமதி செய்கிறபோது தமிழக அரசோ அல்லது தமிழக அரசைச் சேர்ந்த அலுவலர்களோ சென்று வருகிறார்கள்; சில நண்பர்கள் குறைபாடாகச் சொல்லி வருகிறார்கள். இப் படிப்பட்ட காரியங்களில் மத்திய அரசினுடைய அதுவும் டி.ஜி.எஸ்.டி. யினுடைய அனுமதியில்லாமல் எதுவும் செய்ய முடியாது; அவர்களும் தவறான காரியங்களை ஒத்துக்கொள்ளமாட்டார்கள். கன்ஸ்யூமர்ஸ், யூஸர்ஸ், யாராக இருந்தாலும் மத்திய அரசாக இருந்தாலும்கூட, எலக்டிரிசிடி போர்டு ஆக இருந்தாலும், குடிநீர் வாரியமாக இருந்தாலும் கூட, அவர்கள் அனுமதியோடு தான் இறக்குமதி செய்ய வேண்டும்; அந்த முறையிலேதான் இந்த அமைப்பும் பயன்படுத்தியிருக்கிறது.

ஆகவே, நம்முடைய வாரியப் பொறியாளர்களின் திறமைக்கு களங்கம் கற்பிக்கக்கூடிய வகையிலே அரசியல் காரணமாக அவ்வாறு குறிப்பிடுவது சரியல்ல. இதற்காக வெளிநாட்டிலிருந்து உதவி செய்கிறவர்கள்கூட நம்முடைய பொறியாளர்களின் பணிகளைப் பாராட்டியிருக்கிறார்கள். அப்படி யிருக்கும் போது நாம் இவ்வாறு எல்லாம் சொல்லி அவர்களுக்கு சோர்வூட்டவேண்டாம்.

பாலாறு திட்டம் பற்றிச் சொல்லப்பட்டது. அந்தத் திட்டத்தினால் வீராணம் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது என்று பொருள் அல்ல; இடைக் காலத்திலே ஒரு நிவாரணத்திற்காக வருகிற திட்டம் அது. எந்த வகை யிலும் வீராணம் திட்டம் நிறுத்தப்படாது, அதுவும் பயன்படும், இதுவும் பயன் படும், இது மிக உயரிய திட்டம், உன்னதமான திட்டம், விரைவிலே முடிந்துவிடும். வெளிநாட்டிலிருந்து அந்த டெக்னிக்கைத் தெரிந்து வருவ தற்காக அமைச்சர்கள், அதிகாரிகள் செல்லவேண்டியிருந்தது. இதனால் 40 மிலியன் காலன் தண்ணீர் மலிவாகக் கிடைக்கிறது. தண்ணீர் கிடைக் குமா, ஏரியிலே தண்ணீர் இருக்குமா என்றெல்லாம் கேட்டார்கள். அவ்வளவு தெரியாத்தனமாக நம்முடைய பொறியாளர்களும் பாசனத் துறையினரும் இல்லை. ஆகவே, அந்த அளவிற்கு அவர்களுக்குக் களங் கம் கற்பிக்க வேண்டாமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : திரு. கந்தப்பன் வாட்டர் போர்டு தலைவராக இருக்கிறார். அவருக்குத் தெரியும், அமைச்சரிடம் கேட்கிற மாதிரி அவரிடம் விளக்கம் கேட்கிறேன். கம்பிகள் பாழாக்கப்பட்டது உண்மை என்று ஒத்துக் கொண்டார்கள், அதற்காக நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

**MR. DEPUTY SPEAKER :** You ask for a clarification.

[1975 மார்ச் 15

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதைத்தான் சொல்கிறேன். அதே நேரத்திலே இன்னொன்றும் சொன்னார்கள். ஒருவர் இறந்துபோனார். இறந்துபோனவரைப்பற்றி ஒன்றும் சொல்லக்கூடாது என்றார். அது யார் என்று எனக்குத் தெரியவில்லை. என்ன குறை என்று தெளிவாகச் சொல்லவில்லை. விவரங்கள் சொல்லவில்லை. மறைமுகமாக யார் மீதோ குற்றஞ் சாட்டினார். மத்திய சர்க்காரின் தவறினால் 80 இலட்சம் ரூபாய் நஷ்டம் வந்து விட்டது என்று சொன்னார். மத்திய சர்க்கார் தவறு என்றால் என்ன என்று சொல்ல வேண்டும். நான் அதை மறுத்துச் சொல்வதற்கோ அல்லது அதைப்பற்றி விவரம் சொல்வதற்காகவோ கேட்கவில்லை. என்னிடம் ஒன்றும் இல்லை; அவர் என்ன குற்றம் செய்தார்கள் என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். மொட்டையாகக் குற்றஞ் சாட்டி விட்டால் சரியாகாது. நாங்கள் ஏதாவது குற்றஞ் சாட்டினால் விவரங்கள் சொல்லவேண்டுமென்று கேட்கிறீர்கள். அதைப்போன்று தான் இப்போது கேட்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

திரு. செ. கந்தப்பன் : நான் எளிமையான தமிழில் தெளிவாகச் சொன்னதை விட மேலும் எப்படி தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்கிறார் என்று புரியவில்லை. கம்பிகள் பாழாக்கப்பட்டதாக நான் சொல்லவில்லை. யாருடைய கருத்தையோ என் கருத்தாக்கப் பார்க்கிறார்; அது சரியல்ல. பாழ்படவில்லை; பாழடிக்கப்படவும் விடமாட்டோம். (குறுக்கீடு) * * *

அதை விட நான் என்ன சொல்ல வேண்டும் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : * என்று சொல்கிறார்கள்; என்ன குற்றம் செய்தார்கள் என்பதை விவரங்களோடு சொல்ல வேண்டும். . . . . . .

MR. DEPUTY SPEAKER : You ask for as clarification. I am not permitting any discussion on this.

(Thiru S. Kandappan rose).

DR. H. V. HANDE : On a point of order. . . .

MR. DEPUTY SPEAKER : I am not allowing. Mr Subbiah Mudaliar . . .

Thiru A. R. SUBBIAH : Sir. . . .

DR. H. V. HANDE : I am on a point of order.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 மார்ச் 15]

MR. DEPUTY SPEAKER : I have already called hon. Member Thiru Subbiah Mudaliar to speak.

DR. H. V. HANDE : How can you disallow? I must be allowed to have my say on this, I am raising a point of order.

MR. DEPUTY SPEAKER : I have called the hon. Member Subbiah Mudaliar.

DR. H. V. HANDE : You might have called. But my point of order has to be heard. My submission is this. When the hon. Member speaks in this House he cannot say. * * * * * *

I am asking a specific question.

MR. DEPUTY SPEAKER : Dr. H. V. Hande is not raising a point of order. On the other hand, he is abusing his privileges. These proceedings are expunged.

DR. H. V. HANDE : Then you expunge those words also.

MR. DEPUTY SPEAKER : I expunge the words of Mr. Kandappan also. Please resume your seat. He need not answer your question.

DR. H. V. HANDE : He cannot speak anything he wants. We can also speak like that. You won't allow us but at the same time you are allowing the members on the side of the ruling party to speak like that. They are allowed to speak as they like. I have not had my say. He has accepted that there was a loss. Who is responsible for the loss? Should he not answer my question ? Because you are sitting in that seat you have a right........

MR. DEPUTY SPEAKER : Please do not misuse your right or abuse your right. Mr. Subbiah Mudaliar, are you going to speak or not?

திரு துரை முருகன் : இவர் பேசிக்கொண்டே இருக்கிறார், அவர் எப்படி பேச்சை ஆரம்பிக்க முடியும், அவருடைய கருத்துக்கள் எப்படி வெளியே வரும் ?

(Thiru S. Kandappan rose).

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

MR. DEPUTY SPEAKER: I am not going to allow any further explanation. I am not allowing. Mr Subbiah Mudaliar may speak now.

*திரு. எ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, இந்தப் பொதுப் பணித்துறை மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். இன்றைக்கு இருக்கிற வறட்சி; தண்ணீர் குறைபாடு இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு திறனுகச் செயல்படுவதற்குத் திட்டம் வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி காம்ப்ரஹென்லிவ் ஸ்கீம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லா இடங்களுக்கும் பரவலாகச் செய்தவற்கு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ரீ மாடலிங் ஆப் சேனல்ஸ் அண்ட் லைனிங் ரொம்பவும் தேவையாக இருக்கிறது. தண்ணீரை சிக்கனமாகச் செலவு செய்து அதிகமாகப் பாசனம் செய்வதற்கு அப்போதுதான் வசதியாக இருக்கும். அதன் மூலம் புது இடங்களுக்குத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும்; ஆகவே; ரீ மாடலிங் ஆப் சேனல்ஸ் அண்ட் லைனிங் மிக மிகத் தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அதை செயல் முறையில் செய்ய ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, Ground Water Directorate நன்கு வேலை செய்கிறது. அதை எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். எங்கெங்கு தண்ணீர் தேவை என்று பார்த்து திட்டம் வகுத்து அதற்குத் தனியாக ஒரு பிரிவு எஞ்ஜினியர்களை வைத்து, எந்த இடத்திலே வெட்டினுல் தண்ணீர் இருக்கும் என்ற செயல்முறையைச் செய்தால் பல இடங்களில் கிணறுகள் வெட்டப்பட்டு தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படும் நிலைமையை நிறுத்த முடியும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

அதுமட்டுமல்லாமல் cost benefit ratio பழைய கணக்கை வைத்துக் கொண்டிருக்கிருர்கள். ரூபாய் 2,500 பெர் டன் என்று வழி செய்து விட்டால் பல திட்டங்கள் உருவாவதற்கு வழியிருக்கிறது. இப்பொழுது cost benefit ratio முன்பின்னுக இருப்பதால் திட்டங்களைச் செயல்படுத்துவதில் கஷ்டமாக இருக்கிறது. அதை மாற்ற வழி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, comprehensive new legislation for offences aga nst irrigatio systems என்று கொண்டு வரப் போவதாகச் சொல்லப்படுகிறது.

**Decision** taken by the Government on A.R.C. report.



It was decided to accept the recommendation of the Commission. The legislation might be on the lines for forest offences except that the compounding of offences need not be so lenient as in the Forest Department.

இது நமக்கு ரொம்பத் தேவை. இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஆக்கிரமிப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. தவறு நடந்து கொண்டிருக்கிறது. ஆனுல் ஒன்றும் செய்ய முடியவில்லை. பலவிதமான "அஃபன்ஸ்"கள் இருந்தாலும் செயல் முறையிலுள்ள கஷ்டங்களை நிவர்த்திக்க முடியவில்லை. ஜீ.ஒ. போடப்பட்டிருக்கிறது. ஆனுல் அந்த ஜீ. ஒ. அமல் நடத்தப்படவில்லை. ஆனுல் புதிதாக ஒரு மசோதா வந்திருக்கிறது. என்க்ரோச்மெண்ட்கள் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது என்பதற்கு prosecution of offenders அந்த மசோதாவில் வழியில்லை.

Taluk Irrigation Committee வேண்டுமென்று எ.ஆர்.சி. ரிப்போர்ட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனுல் அதை இன்றுவரையில் செயல்படுத்தவில்லை.

அதேமாதிரி "half-yearly irrigation conference" வேண்டும் என்று அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது எ.ஆர்.சி. ரிப்போர்ட்டின்மேல். அதற்கு நடவடிக்கை இல்லை.

குடி மராமத்து சம்பந்தப்பட்டவரை, A.R.C. report பேரில் அரசினுல் கீழ்க்கண்ட முடிவு செய்யப்பட்டது.

Necessary legislation will be undertaken by the Government for taking over the works and collecting the contribution from the ayacutdars.

குடிமராமத்து தேவை, இதைச் செய்ய அரசு செயல்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரூரல் ரோடுகள் நன்கு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்று, கிராமங்களில் ரோடு வசதி நன்கு உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே முக்கியமான ஓரிரு கருத்துக்களை எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்டுள்ள வெட்டுத்தீர்மானங்களை ஆதரித்துப் பேசுவதற்கு முற்படுகிறேன்.

முதன்முதலாக, இன்றையதினம் எஞ்சினியர்களிடத்தில் மனத்தாழ்வு இருக்கிறது. உதாரணமாக, ஜூனியர் என்ஜினியர்களாக இருப்பவர்கள் அவர்களுடைய பெயரை அசிஸ்டண்ட் என்ஜினியர் என்ற முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களிலேயும் அரசாங்கத்திற்குப் பல முறையீடுகளைச் செய்தார்கள். ஆனால் இன்னும் மாற்றப்படவில்லை. மற்ற துறைகளில் எடுத்துக்கொண்டால், மெடிகல் கிராஜுவேட்ஸ்களை அசிஸ்டண்ட் சர்ஜன்கள் என்றும், வெட்டரினரி கிராஜுவேட்ஸ்களை அசிஸ்ட்ண்ட் வெட்டர்னரி சர்ஜன்கள் என்றும் சொல்கிறோம். அதேபோல் அக்ரிகல்சுரல் கிராஜுவேட்ஸ்களை அசிஸ்டெண்ட் அக்ரிகல்சுரல் ஆபீசர் என்று அழைக்கிறார்கள். ஆனால் இந்த எஞ்சினீயரிங் பட்டதாரிகளை ஜூனியர் எஞ்சினியர் என்று வைத்திருப்பதால் அவர்கள் அகில இந்திய அடிப்படையில் தேர்வு எழுதுவதற்கு கஷ்டமாக இருக்கிறது என்ற புகாரைச் சொல்கிறார்கள். இது நீண்ட நாளைய புகார் என்று கருதுகிறேன். அதை அரசாங்கம் அனுதாபத்தோடு அணுக வேண்டும் என்று இந்த நேரத்தில் கூற முற்படுகிறேன். இதைப்பற்றி முன்பு பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துக்கூறப்பட்டு இது சம்பந்தமாக அரசாங்கம் உறுதிமொழி கூறியிருக்கிறது. ஆனால் இதுகாறும் நடக்கவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அடுத்தபடியாக, எஞ்சினியரிங் இலாக்காவில், மெகானிக்கல் எஞ்சினியர்களாக இருப்பவர்களையும் சிவில் எஞ்சினியர்களாக நியமிக்கிறார்கள் என்ற புகார் இருக்கிறது. அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு எஞ்சினியரிங் மாணவர் வந்து, இம்மாதிரி நிலைமைகள் இருப்பதால் சிவில் எஞ்சினியரிங் கற்றவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று கூறினார். அதில் நியாயமான சில ஐயப்பாடுகள் எழுகின்றன. அதைத் தவிர்க்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இம்மாதிரி மற்ற "குவாலிஃபைட் சிவில் எஞ்சினியர்கள்" இருக்கும்பொழுது மெகானிகல் எஞ்சினியரிங் படித்தவர்களை நியமிப்பது என்றால் பொருத்தமாக இருக்காது என்ற கருத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மிக முக்கியமான பிரச்னையாக இருக்கக்கூடிய காவிரிப் பிரச்னையில் அதி தீவிரமாகத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசாங்கமும், நமது அரசாங்கமும், கர்நாடக அரசாங்கமும், கேரளா அரசாங்கமும் சேர்ந்து விரைவில் முடிவு காண வேண்டுமென்று கருதுகிறேன். ஏனென்றால் காவிரிப் பிரச்னையை உதாசீனம் செய்யமுடியாது. அது தமிழர்களின் ஜீவாதாரப் பிரச்னையாக இருக்கிறது. நாலரை கோடி தமிழ் மக்களின் பிரச்னையாக இருக்கிறது என்றால் மிகையாகாது. அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, வீராணம் திட்டத்தைப்பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். வீராணம் திட்டத்தில் "ஜெஸ்டேஷன் பீரியட்" மிகவும் அதிகமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். 1976-ஆம் ஆண்டிலேயாவது தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்த்



தார்கள். ஆனால், இப்பொழுது அவ்வாறு கிடைக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இருக்கின்ற கஷ்டமெல்லாம், அதற்காகப் பல கோடி ரூபாய்களைச் செலவிட்டு, ஒரு சொட்டுத் தண்ணீர்கூட குடிப்பதற்கு நமக்கு வாய்ப்பில்லாத நிலைமையிருக்கிறது. நான் யாரையும் குறைத்துக் கூற வேண்டுமென்று நினைக்கவில்லை. இவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்தும் எவ்வளவு தண்ணீர் கிடைக்கப்போகிறது என்பதையெல்லாம் இந்தத் திட்டமானது நிறைவேறியதற்குப் பிறகுதான் முடிவு செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

பாலாறு படுகையிலேயிருந்து தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதாவது உடனடியாக வந்தால் குறிப்பாக சென்னையிலே வாடி வதங்கும் மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கும். இப்பொழுது சென்னை நகராட்சியிலே பல டிவிஷன்களிலே ஒரு வாரம், இரண்டு வாரம் என்றுகூடத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. குறிப்பாக 43-வது டிவிஷனிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை என்று பல முறையீடுகள் செய்தார்கள். இம்மாதிரி கஷ்டங்களையும் நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக "மாடர்னைசேஷன்" என்று சொல்லப்படுகிற பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 13 கோடி ரூபாய் அளவிலே தஞ்சாவூரிலே மாடர்னைசேஷன் ஸ்கீம் உருவாக்கி மத்திய கிளியரன்சை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்று அறிக்கையில் தந்திருக்கிறார்கள். இதைத் துரிதப்படுத்த வேண்டும். சிக்கனமாக தண்ணீரை விநியோகம் செய்ய வேண்டுமென்றால் இம்மாதிரி ஸ்கீம்கள் தேவை. தஞ்சாவூரிலே மட்டும் போதாது, இன்னும் வைகை போன்ற இடங்களிலும் திட்டங்கள் தீட்டியிருக்கிறது. ஆனால் எல்லாப் பகுதிகளிலேயும் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிக்க இந்த ஸ்கீம் தேவை. எனவே, இன்றுள்ள எல்லா இர்ரிகேஷன் ஸ்கீம்களுக்கும் போதிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஓரிரு விஷயங்களை இங்கே கூற விரும்புகிறேன். எஞ்சினியர்கள் இன்னொரு புகாரையும் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு ஒரு தேக்க நிலைமை இருக்கிறது. பி.டபிள்யூ.டி.-லும் ஹைவேஸ் இலாக்காவிலும் தேக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுக்க முடியுமா என்ற கருத்தை ஆராய வேண்டும். குறிப்பாக பி.டபிள்.யூ டி-லேயும், ஹைவேசிலும் ஒரு காமன் சீனியாரிட்டி இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். போர்டு போன்றவற்றில் இருப்பவர்கள் 5, 10 ஆண்டுகளில் ஈ.ஈ. ஆகிறார்கள். ஆனால் இங்கே 15, 20 ஆண்டுகள் ஆகியும்கூட எ.ஈ. ஆக இருப்பவர்களுக்கு புரமோஷன் மிகவும் குறைவாக இருக்கிறது என்ற மனத்தாங்கல் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, முன்பு கூறியது மாதிரி, நிர்வாகச் சீரமைப்புக் கமிஷன் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் இந்தத் திட்டத்தைச் செய்ய அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1975 மார்ச் 15

அடுத்தபடியாக, இன்னுமொரு விஷயத்தைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். பல்வேறு திட்டங்களையெல்லாம் இந்த உரையிலே தந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு, தூத்துக்குடியிலே உள்ள திட்டம் இன்றைக்குச் சிறியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. "ஃபிஷ்ஷிங் ஹார்பார்" விரிவான திட்டமாக இருக்கும் என்று முதலில் திட்டமிட்டு, இப்பொழுது சிறிய அளவில் போடலாம் என்று சொல்கிறார்கள். சிக்கனமான முறையில் செய்வதற்காக குறைத்திருக்கிறார்களோ என்ற எண்ணம் அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிறது. இதைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, குளச்சல் துறைமுகத்தைப் பற்றி ஒரு வார்த்தை. குளச்சல் துறைமுகத்திலே எத்தனை மெட்ரிக் டன் ஆண்டாண்டு தோறும் ஏற்றுமதி செய்கிறார்கள் என்பதெல்லாம் இங்கே கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

கடைசியில் குளச்சல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, 1970–71-ல் 41 ஆயிரத்து சொச்சம்; 1971–72-லே 53 ஆயிரத்துச் சொச்சம்; 1973–74-லே 44 ஆயிரத்துச் சொச்சம் என்ற அளவிலே புள்ளி விவரங்கள் டன்கள் கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்குக் கடற்கரை ஓரத்தில் இருக்கும் ஓரே ஒரு சிறு துறைமுகமாக இருக்கும் காரணத்தால் இதை விஸ்தரித்து சீரமைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார்கள். ஹைட்ரோ கிராபிக் சர்வே செய்திருக்கிறார்கள். அதையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேஷனல் ஹைவேஸ் என்ற தலைப்பில் 6 கோடி ரூபாயாக இருந்தது.4 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ஈஸ்ட் கோஸ்ட் ரோடு திட்டத்தை உடனடியாகச் செயலாற்றவேண்டும்.

மைனர் இரிகேஷன் என்ற தலைப்பில் பணம் பூராவும் செலவழிக்கப் படாமல் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. 1973–74-ஆம் ஆண்டுக் கணக்குதான் இருக்கிறது. போன வருஷக் கணக்கு மார்ச்–31-ம் தேதிக்குப் பிறகுதான் கிடைக்கும். இந்தமாதிரி குறைவு ஏற்பட ாது என்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

திற்பரப்பு ஆர். பி. சி. கால்வாய் எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. இதற்கு முன்பு லேண்ட் அக்விசிசஷன் ஏற்பாடு செய்தார்கள். தனியார் ஒருவருடைய நிலம் போகிறது என்ற காரணத்தால் ஆட்சேபனை கொடுத்தார். 1969-ல் அது அன்எகனாமிக் என்ற முறையில் நிறுத்தி விட்டார்கள் என்று அறிகிறேன். ட்ரவுட் ரிலிப் திட்டத்தில் எடுத்து மாஞ்சேரி வரை, சிதறால் வரை நீடிக்க வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பல முறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கு ஒரு பரிகாரம் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெய்யாறு எல். பி. சி-ல் வாய்க்கால் பராமரிக்கப்படவில்லை. தண்ணீரைக் கேரள அரசு ஒழுங்காகத் தரவில்லை என்ற கூற்று இருக்கிறது.



1975 மார்ச் 15] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்.]

அது உண்மையாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 9,000 எக்கர் பாசன வசதி பெற முடியும் என்று கூறியிருக்கிறார்கள். 3,500 எக்கர் தற்போது பாசன வசதிக்குப் பயன்படுகிற தன்மை இருக்கிறது.

ஹைவேஸ் பற்றி ஒரு வார்த்தை. எங்கள் பகுதியில் நேசமணி பாலத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அது விரைவில் உருவாகும் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். அதற்குத் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கணபதியான் கடவு, மூவாற்று முகம், குழித்துறையாற்றில் பாலம் கட்டித் தரவேண்டும். பரலியாற்றிலும் அணைக்கரையிலும் பாலங்கள் அமைக்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். கண்ணனூர் வாய்க்காலில் பழுதடைந்த பாலம் இருக்கிறது. பஸ் செல்லக் கஷ்டமாக இருக்கிறது.

பள்ளிக்கூடங்களைப் பராமரிப்பதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஓலைக் கூரையில், கொட்டகையில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. உடனடியாகச் சீர்திருத்தித் தரவேண்டும். உதாரணமாக, புலியூர் சாலையில் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், குலசேகரத்தில் ஹைஸ்கூல், கட்டாத்துறை ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அரசாங்க ஹைஸ்கூல்கள் அவை. கட்டடம் கட்டவும், நில ஆர்ஜிதம் செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குலசேகரத்தில் 50 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்ட ஏற்பாடு இருக்கிறது. உடனடியாகச் செய்து தரவேண்டும்.

பட்டணங்கால் திட்டத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. காலா காலத்தில் திறக்கப்படவில்லை. தேவியூர் பிராஞ்ச் இருக்கிறது. மதகுகள் கிடையாது. சில்ட் எடுப்பதில்லை. இப்படிப் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. பேச காலம் இல்லாததால் கூற இயலவில்லை. இந்தத் துறையில் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கும் அரசாங்கம் துரித நடவடிக்கைகள் எடுத்துக கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, on a point of order. I want to know whether it is in order for one member on the Opposite side to cut short the speech of one of our Members. The Hon Member Thiru Chezhiyan, was speaking about the loss of a lot of materials. The hon. Member, Thiru Kandappan interrupted his speech and stated that that was not correct. Later on when Thiru Kandappan was speaking, he agreed that there was a loss but he tried to explain the reason for the loss by saying that the Centre did not co-operate. At that time I wanted to elicite some information and the Deputy Speaker was in the Chair.

* * * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1975 மார்ச் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்; துணைத் தலைவரோ தலைவரோ சொன்னதில் ஏதாவது முறைகேடு இருக்கிறது என்ருல்.

Dr. H, V. HANDE : நான் முடித்து விடுகிறேன். Now the Chair has asked to Hon Minister to give his reply. In the speech of the Hon. Minister we may find that certain points may not be correct and we must be given an apportunity to correct him.

* * *

Sir, I want a ruling from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகிற நேரத்தில் உணர்ச்சி வயப்பட்டுப் பேசுவது சரியல்ல ஒரு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் அந்த உறுப்பினர் சொல்வது தவறு என்று சுட்டி காட்ட இந்த மன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. இருக்கையில் இருக்கின்ற பேரவைத் தலைவரோ, துணைத் தலைவரோ ஏதாவது கூறுவார்களேயானுல், அது முறைகேடாக இருக்கிறது என்று உறுப்பினர் கருதினுல் அதை சுட்டிக் காட்ட வேறு வழி இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் துணைத் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்ட வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர் * * பண்ணிச் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் * பண்ணக்கூடாது அதற்கு வேறு முறைகள் இருக்கின்றன.

திரு செ. கந்தப்பன் : ஒரு சபையில் ஒரு உறுப்பினர் சொல்லாத கருத்தைத் திரும்பத் திரும்ப அவர் சொன்னதாகச் சொல்லிப் பேசுவது சரிதானு? இப்படிப் பிடிவாதமாகக் கூறி கொண்டே இருப்பார்களேயானுல் அதற்கு என்ன பரிகாரம்?

இன்றைக்குக் காலையில் நான் பேசுகிறபோது கம்பிகளை இறக்குமதி செய்வதன் காரணமாக எந்தவிதமான இழப்பும் இல்லை. கம்பிகளுக்குப் பதிலாக திரணைகளை இறக்குமதி செய்வதன் காரணமாக அந்தத் திரணைகளைத் திரும்பக் கம்பிகளாக மாற்ற செலவு ஏற்பட்டிருக்கிறது, அப்படி திரணைகளை இறக்குமதி செய்ய வேண்டிய நெருக்கடி மத்திய சர்க்காருடைய பிடிவாதம் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று எவ்வளவோ முறை எடுத்துச் சொல்லியும் அவர்கள் திரும்பத் திரும்ப அதையே கூறிக் கொண்டிருக்கிருர்கள். எட்டு லட்சம் ரூபாய் அந்நிய செலாவணியைக் காப்பாற்ற வேண்டுமென்று ஒரே குறிக்கோளின்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1975 மார்ச் 15] [திரு. செ. கந்தப்பன்]

காரணமாக "நீங்கள் திரணைகளாக இறக்குமதி செய்யுங்கள். கம்பிகளாக இறக்குமதி செய்ய நாங்கள் அனுமதி தரமாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள். பல மாதங்கள் கடிதப் போக்குவரத்து நடத்திய பிறகும் இதற்கு வேறு வழி இல்லாமல் திரணைகளாக இறக்குமதி செய்து அவற்றைக் கம்பிகளாக மாற்றிக் கொண்டிருக்கிருர்கள். எங்கே இருந்து இந்த பிரச்சினையை எடுத்துச் சொல்லுகிருர்கள் என்று எனக்குத் தெரியும். ஆடிட் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்நியச் செலவாணி 8 லட்சம் ரூபாயை மிச்சப்படுத்த இவ்வளவு செலவாகிற நிலை நிச்சயமாக இருக்கிறது. இதை நாங்கள் தடுக்க முயற்சித்தும் முடியவில்லை. இதைப் பற்றி பேச வேண்டிய இடம் டில்லியில் இருக்கக்கூடிய பாராளுமன்றந் தான். இவ்வளவு சொல்லியும் "இழப்பு ஏற்பட்டது" என்பதைத் திரும்பத் திரும்பத் சொல்லுகிருர்......

I demand an unconditional apology from him.

நான் சொல்லாத கருத்தைச் சொல்லக்கூடாது. என்னைப் போன்றவர்களுக்கு இங்கே பாதுகாப்பு இல்லை.

DR. H. V. HANDE : I will try to satisfy the hon. Member and there is no need for an unconditional apology from me. The point is that there has been a loss. He tried to explain that the loss was due to the unhelpful attitude of the Central Government in not allowing foreign exchange for Rs. 8 lakhs. He has tried to pass on the buck to the Central Government. I am not saying that particularly he is at fault.....

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றத்தில் ஒரு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லியிருந்து, மற்றவர், வேண்டுமென்றே அவர் கூறியதாக ஒரு கருத்தை சொல்கிருர் என்ருல் அதற்கு பரிகாரம் தேடுவதற்கு வேறு முறைகள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, நேற்றும் இன்றும், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை, போன்ற எட்டு மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் நீண்ட கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிருர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொகுதிகளுக்குத் தேவையான திட்டங்களை அறிவித்திருக்கிருர்கள். வேறு சிலர் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் எழுதியே கொடுத்திருக்கிருர்கள். அவைகள் எல்லாம் நிச்சயம் அரசின் பரிசீலனைக்கு உரியவைகளாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை துவக்கத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படாமல் குப்பைத் தொட்டிக்குப் போய்விடுமென்று கருதத் தேவை இல்லை. இங்கு இருக்கின்ற தலைமைப் பொறியாளர் அவர்கள் அவை பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். அவற்றைப் பற்றி அரசு நடவடிக்கை எடுத்து முடிவெடுக்கும் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பேச்சின் ஆரம்பத்திலே, அங்கத்தினர் பேசிய சில பேச்சுகளுக்கு மட்டும் குறிப்பாக, பதிலைச் சொல்லிவிட்டு அரசாங்கத்தின் நிலைமையைப் பற்றி விளக்கிப் பேசலாம் என்று கருதுகிறேன்.

நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு வகாப் ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். கிருஷ்ணா, கோதாவரி, காவிரி ஆகிய நதிகளை இணைக்கின்ற திட்டத்தை எடுத்தால் தமிழ்நாட்டிற்கு நிரந்தர பரிகாரம் ஏற்படுமென்று வலியுறுத்திச் சொன்னார்கள். நல்ல திட்டம்தான். ஆனால் கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் வேண்டும் என்று பல ஆண்டு களாக முயற்சித்துக் கொண்டு வருகிறோம். கொடுப்பதற்கு வேண்டிய மனம்தான் ஆந்திர அரசிடம் இல்லாமல்- போய்விட்டது. ஆனால் ஒரு செய்தியை மட்டும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். கிருஷ்ணா, கோதாவரி தண்ணீர் சென்னைக்குக் கொடுக்க குலாத்தி தலைமையில் ஒரு குழு போட்டு விசாரித்தார்கள். பிறகு 63-ம் ஆண்டு இது பற்றி நாடாளுமன்றத்தில் அன்றைய நீர்பாசனத் துறை அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் அறிக்கையை மேஜை மீது வைத்தார்கள். அவர் சொன்ன கருத்து, மகாராட்டிரம், ஆந்திரா, கர்நாடகம், ஆகிய மூன்று மாநிலங்களும் ஐந்தைந்து டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டிற்குக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று ஒரு அறிக்கையை மேஜை மீது வைத்தார்கள். அதற்காக ஆந்திர அரசுக்கு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். ஆனால் ஆந்திர அரசு கொடுக்க இயலாது என்று பதில் எழுதிவிட்டார்கள்.

ஆந்திர சட்டசபையிலே ஒரு கேள்வி எழுப்பப்பட்டதாகவும் அதற்கு அமைச்சர் பதிலளித்ததாகவும் பத்திரிகையில் செய்தி படித்தேன். அவர் சொல்லியிருக்கிறார் "நாங்கள் தண்ணீர் கொடுப்பதற்கு தயாராக இல்லை. கர்நாடகம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் ஐந்தைந்து டி.எம்.சி. தண்ணீர் கொடுத்தால் அதை ஆந்திரா வழியாக தமிழ் நாட்டிற்கு எடுத்துக் கொண்டு போவதற்கு ஆட்சேபணை இல்லை என்ற கருத்துப்பட தெரிவித்திருப்பதாக பத்திரிகையில் படித்தேன். 1963-ம் ஆண்டு ஒத்துக்கொண்டபடி இந்த மாநில அரசுகளை இணங்க வைக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை யாரும் ஒத்துக்கொண்டாக வேண்டும். இதை மத்திய அரசு தட்டிக் கழித்து விடக் கூடாது என்பதை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் பாலாறு பேசின் சட்டத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவைகள் எல்லாம் ஆண்டு தோறும் பேசப்படுபவைகள். தேவையான கிராமங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இது சட்டமன்ற தலைவராக இருக்கின்ற தங்களுக்கும் தெரியும். பாலாறு பேசின் சட்டம் எந்த அளவுக்கு மக்களை பாதிக்காமல் இருக்குமாறு செய்ய வேண்டுமோ அப்படி செய்துகொண் டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வகாப் அவர்கள் பாலாறு குறுக்கே அணை கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. லத்தீப்





அவர்கள் தனது தொகுதியிலுள்ள பெரிய ஏரியை—அது ஆலங்காயத்தில் உள்ளது—ஆழப்படுத்தி சீர்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். அதுவும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சௌந்தரபாண்டியன் பேசும்போது சில கருத்துக்களை தெரி வித்தார்கள். குடகனாறு திட்டம் பற்றி கூறினார்கள். இத்திட்டம் இந்த அவையில் பல முறை எடுத்துப் பேசப்பட்ட ஒன்று. நேற்றைய தினம் சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசும்போது கேட்டுக்கொண்டிருந்தேன். கால்கோள் விழாவிற்கு அச்சிடப்பட்ட அழைப்பிதழில் அவரது பெயரைக் காணவில்லை என்று குறை கூறினார். நான்பொதுவாக அங்கத்தினர்கள் பேசும்போது குறுக்கிடவேண்டாம் என்றிருந்தேன். ஆதலால் குறுக்கிடவில்லை. இந்த மன்றத்தின் 1957-ஆம் ஆண்டு நடவடிக்கையி லிருந்து படித்துப் பார்த்தால் தெரியும். தமிழக முதல்வர் குடகனாறு, குடகனாறு என்று பல முறை பேசியிருக்கிறார்கள். முதல்வரின் அன்றைய தொகுதியில் உள்ள ஆறு அது. அத்திட்டம்; என்ன காரணத்தாலோ; —நான் காரணம் கற்பிக்க விரும்பவில்லை ஏதோ காரணத்தால் அதை செயல்படுத்தாமல் விட்டுவிட்டார்கள். நமது முதல்வர் அவர்கள் முதல்வ ராக வந்ததற்குப் பிறகு குடகனாறு திட்டத்தை நிறைவேற்ற ஒரு திட்டத்தை வகுத்தார்கள். அதில்,நான் சௌந்தரபாண்டியன் ஒரு குறை சொன் னார்கள். கால்கோள் விழாவிற்கு அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை என்று. உடனே அந்த அழைப்பிதழைப் பார்ப்பதற்காக, கேட்டு விசாரித்துப் பார்த்தேன். அழைப்பிதழில் எந்த சட்டமன்ற உறுப்பினரின் பெயரும் போடப்படவில்லை. குடகனாறு ஓடுகின்ற இடம் வேடசெந்தூர். அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் முத்துச்சாமி. கரூர் தொகுதியிலும் அத்திட்டம் பயன் பெறுகிறது. கரூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் நல்லசாமி. கிருஷ்ணராயபுரத்திற்கும் அந்த வாய்க்கால் வருகிறது. ஆனால் அணை கட்டுகின்ற இடம் வேடச்செந்தூர். ஆக, 3 சட்ட மன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் அத்திட்டம் பயன்பெறப்போகிறது. இருந்தாலும் எந்த சட்டமன்ற உறுப்பினரின் பெயரும் போடப்படவில்லை. இதற்காக அந்தத்தொகுதி உறுப்பினர்கள் வருத்தப்படவில்லை என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தனது உரையில்; கரூர் தொகுதி வழியாக வாய்க்கால் போகிறது என்று சொன்னார்கள். கரூருக்கு இந்த வாய்க்கால் போகவில்லை. அரவங் குறிச்சிக்குத்தான் போகிறது. இன்னும் கேட்டால் விவரங்களைச் சொல்ல முடியும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரவங் குறிச்சி என்று எடுத்து கொண்டால் கூட அந்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜப்பார். அவருடைய பெயரும் போடப்படவில்லை. சாதாரணமாக, அப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்களில் சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களைப் போடுவதில்லை என்ற காரணத்தால் விட்டுவிட்டார்களே தவிர, உறுப்பினர் அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்திலுள்ள குடுமியான்மலை ஆராய்ச்சிப் பண்ணையைப் பற்றி பேசினார்கள். பொதுப்பணித்துறை பற்றிய விவாதத்தில் அதுபற்றிப் பேசுவது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று தெரியவில்லை. அங்குள்ள ஆராய்ச்சி நிலையத்திற்கு கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்; என்ன நியாயம்?; அண்ணா பண்ணையிலுள்ள ஒரு ஆராய்ச்சி நிலையத்திற்கு கலைஞர் கருணாநிதி பெயரை வைப்பதா என்று கேட்டார்கள். இதற்கு ஒரு உதாரணத்தையும் சொன்னார்கள். வீட்டிற்கு ஒரு பெயரும்; தொட்டிக்கு ஒரு பெயரும் வைப்பதா என்று கூறினார்கள். அதில் என்ன தவறு என்று எனக்குப் புரியவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அதற்குள்ளே இருக்கிற ஒரு ஹாலுக்கு சாஸ்திரி ஹால் என்று பேர் வைத்திருக்கிறார்கள். அண்ணாமலை பல்கலைக் கழகத்திலுள்ள ஒரு ஹாலுக்கு சாஸ்திரி ஹால் என்று பெயர் இருப்பது போல; அண்ணாவின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள பண்ணையிலுள்ள ஒரு ஆராய்ச்சி நிலையத்திற்கு கலைஞர் கருணாநிதியின் பெயரை வைப்பது பொருத்தமில்லை என்று கூறுவது எனக்குப் புரியவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே; அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசிக்கொண்டிருக்கும் போது குறுக்கிடுவது சரியல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பின்னர் என்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எது நேரம்? தலைவரவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்கள். அதில் எனக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். அதைப்பற்றி நான் இப்போது குறிப்பிட விரும்பவில்லை. வேறு ஏதோ மானியத்தில் பேச வேண்டியதை பொதுப் பணித்துறை மானியத்தில் பேசினேன் என்று குறிப்பிட்டதற்கு பதில் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மானியம் சம்பந்தப்பட்ட; எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற புத்தகத்தில்; 72-ஆம் பக்கத்தில் இது பற்றிய விவரம் முழுவதும் இருக்கிறது. ஆகவே உரிய மானியத்தில்தான் பேசினேன். அப்படி கலைஞர் பேரில் திறக்க வேண்டாம் என்று பேசவில்லை. கொல்லி மலையில் வேறு எதாவது மலையில் துவக்கி இருக்கலாமே என்றுதான் பேசினேன். ஆராய்ச்சி நிலையத்திற்குச் செய்யப்பட்ட செலவைப் பற்றித் தான் சுட்டிக் காட்டினேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பெயர் வைத்ததைப் பற்றிக் கவலைப்படவில்லை என்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு செய்யப்படுகின்ற செலவைப் பற்றித்தான் கவலைப்படுவதாகவும் குறிப்பிட்டார்கள். அவர் அப்படி கவலைப்படக்கூடாது. ஆராய்ச்சிக்காக எத்தனை கோடி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். ஆனால் அவருக்கு உண்மையில் அதைப் பற்றி கவலை இல்லை. பெயர் வைத்திருப்பதில்தான் வருத்தம்.





திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஆராய்ச்சிப் பண்ணைக்குப் பேர் வைத்தது மாத்திரமல்ல. அங்கே இருக்கின்ற குடி இருப்புக்களில் ஒன்றுக்கு அண்ணா குடியிருப்பு என்றும் மற்றொன்றிற்கு கருணாநிதியின் பெயரும் வைத்திருப்பதை தயவு செய்து மறந்து விட வேண்டாம்.

திரு. ப. உ. சண்முகம் சென்னையிலே பல நகர்கள் இருப்பது போல இருக்கலாம். அதிலே ஒன்றும் தவறு கிடையாது. ஆராய்ச்சிப் பண்ணைக்கு அதிகம் செலவழிக்கிறார்கள் என்று ரொம்ப வருத்தப்பட்டார்கள். ஆராய்ச்சிக்கு அதிகப் பணம் செலவிட இந்த அரசாங்கம் தயங்காது. ஏதோ முதலமைச்சர் அவர்கள் பெயர் இருக்கிறதே என்று கோபம்; அதை வைத்துக் கொண்டு பேசினார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். முசிறி, குளித்தலையை இணைக்கும் பாலத்தை, இந்த மன்றத்தில் தான் வந்து பேசிய பின்னால் தான் எடுத்தது போல் சொன்னார்கள். 1957-ல் சட்ட மன்ற குறிப்பிலேயே அது இருக்கிறது. நான் அதை விவாதத்திற்கு உரிய பிரச்னையாக ஆக்க விரும்பவில்லை. அந்தப் பாலம் ஏன் தாமதம் ஆகி வருகிறது என்று கேட்டார்கள். பாலம் தாமதம் ஆவதற்குக் காரணம், ஆண்டு முழுவதும் தொடர்பாக அங்கே வேலை செய்யமுடிவது இல்லை. காவிரி ஆற்றில் ஆண்டில் 4-5 மாதங்கள் தண்ணீர் வந்துவிடுகிறது. அதனால் தொடர்ந்து வேலை செய்ய முடிவது இல்லை. இப்போது எல்லா பீம்களும் கட்டியாகிவிட்டன. லாஞ்சிங் கர்டர்கள் எடுத்து வைக்கவேண்டும். காஸ்டிங் ஆகிவிட்டது. லாஞ்சிங் கர்டர்கள் வைக்க முயற்சி எடுத்து வருகிறார்கள். அது உள்ளபடியே சீக்கிரம் முடிந்து விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன சொல்லிவிட்டார், விளக்கம் கேட்க நேரம் இல்லை. உட்காருங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அந்தத்துறை, சென்னிமலையில் திட்டம் வகுத்து ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே சம்பந்தம் இல்லாதது. அமைச்சர் பேசுங்கள்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : அடுத்து, சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம் அவர்கள் பேசும்போது, மலட்டாறு பற்றி குறிப்பிட்டார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் வெங்கடசாமி, சுதந்திராக் கட்சித் தலைவர், பேசும்போது பெரிய பெரிய இயந்திரங்கள் பாழாகிக்கிடக்கின்றன. அவைகளையெல்லாம்

பயன்படுத்தவில்லை என்ற தவறான கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொல்வது தவறு. எல்லா இயந்திரங்களும் உபயோகத்தில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர் கோதண்டராமையா அவர்கள் பேசும்போது எக்ஸ் ஜமீன் ஏரியாவுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஜமீன் ஏரியாக்களை முன்னேற்றம் செய்ய 5 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; விரைவில் வேலைகள் துவங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பினர் குமாரசாமி அவர்கள் பேசும்போது ஒரு பெரிய கருத்தைத் தெரிவித்தார்கள். பி.ஏ.பி.க்கு 90,000 எக்கர் விரிவாக்கப் போகிறார்கள், எங்கள் தொகுதிக்கு 15,000 தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அதிகமாகக் கொடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். கொடுக்கக்கூடாது என்பது அல்ல. தண்ணீர் பற்றாக்குறை தான் காரணம். ஏற்கனவே பகலூருக்குக் கொடுத்து இருக்கிறோம். மேற்கொண்டு 15,000 கொடுக்கிறோம். தண்ணீரை சிக்கனம் செய்வதற்கு அதிக நீளத்திற்கு வாய்க்கால் வெட்டி நீரை சேதப்படுத்துவதற்கு பதிலாக பக்கத்தில் இருக்கும் கமாண்டிங் ஏரியாவுக்குத் தந்தால் பாசனத்திற்கு ஏற்ற வகையில் இருக்கும். அதற்கு மேல் தண்ணீர் கிடைத்தால் அடுத்து இருக்கிற பகுதிக்குக் கொடுக்கலாம் என்று செய்து இருக்கிறோம். இருக்கிற நீரை கூடிய மட்டும் நல்ல வகையில் பகிர்ந்து கொடுத்து இருக்கிறோம். அதில்எந்தவிதமான தவறும் இல்லை. நான் அவர்களுக்கு விளக்குவதற்காகத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்நீராறு ஆனமலையாறு என்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் பரிசீலனை முடிந்த பிறகு அமலுக்கு வருமானால், அப்படி வரும்போது அதிகமான ஆயக்கட்டுகளை விரிவுபடுத்த முடியும். அந்தத் திட்டம் விரிவாக்கும் சமயத்தில் பல்லடம் தொகுதிக்கு அதிகமாகக் கொடுக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த 90,000 எக்கர் விஸ்தரிப்பில் என்னுடைய தொகுதி கொண்டு வரப்படவில்லை. வேறு தொகுதிக்கு. ஏற்கனவே வருகிற தொகுதிக்குத்தான் வருகிறது. என்னுடைய தொகுதியில் ஏற்கனவே 2,000 எக்கருக்கு பாய்கிறது..................................

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உங்கள் தொகுதிக்கு வரவில்லை என்று சொன்னால் நான் என்ன செய்வது? பல்லடம் தாலுக்கா, உடுமலைப்பேட்டை தாலுக்கா, பொள்ளாச்சி தாலுக்கா தாராபுரம் தாலுகா என்று தாலுக்கா வாரியாக படத்தைப் பார்த்து கொடுத்தோம். தொகுதி வாரியாக பார்த்து போடவில்லை. பொள்ளாச்சிக்கு 86,000 எக்கர், உடுமலைப் பேட்டைக்கு 70,000 எக்கர், பல்லடத்திற்கு 50,910 எக்கர், தாராபுரத்திற்கு 42,000 எக்கர் என்று இருக்கிறது. புதிய ஆயக்கட்டு, கொடுக்கப்போவது, பொள்ளாச்சிக்கு 24,000 எக்கர், உடுமலைப்பேட்டைக்கு 25,000 எக்கர், பல்லடத்திற்கு 15,800



எக்கர், தாராபுரத்திற்கு 24,000 எக்கர் என்று தாலுக்கா வாரியாக பிரித்துத் தரப்பட்டு இருக்கிறதே தவிர வேறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. கே. என். குமாரசாமி—எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தொகுதி அடிப்படையில் தரவில்லை என்று சொல்லிவிட்டார். இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து சந்தேகம் கேட்டால் எப்படி?

திரு. கே. என். குமாரசாமி: 15,000 தந்து, அதை குளங்களுக்கு இணைத்து விட்டால், முக்கால்வாசி பயன்படுத்திக் கொள்வோம். ஒரு ஸ்கீம் அது குறித்து சர்க்காருக்கு வந்து இருக்கிறது. பம்பிங் ஸ்கீம் வைத்து கொடுத்தால் கிட்டத்தட்ட 110 குளம் குட்டைகளை ரொப்பிக் கொள்ளலாம். இதனால் எல்லா விவசாயிகளும் பயன்பெறுவார்கள். ஆகவே, அந்த ஸ்கீம்மை அரசாங்கம் உடனே பரிசீலித்து உத்தரவு போட்டால் நல்லது. அதைச் செய்யுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கும் குளம்-குட்டை திட்டம்—பம்பிங் ஸ்கீம் திட்டம் பற்றி குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன்—குடிநீர் திட்டத்திற்காக அப்படிப்பட்ட திட்டத்தைப் போட்டாலே லட்சக்கணக்கான ரூபாய் செலவாகிறது. நீர்ப்பாசனத்திற்கு என்று போனால் அந்த பம்பிங்-ஸ்கீம் சாத்தியம் ஆகவில்லை, ஏற்கனவே அது பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டு விட்டோம். அந்த பகுதிக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று உள்ளபடியே அனுதாபத்தோடு, அக்கறையோடு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் பேசும்போது திருமேனி ஏரியில் இருக்கும் ஆக்கிரமிப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பம்பிங்-ஸ்கீமின் கீழ் வருவதால், அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளுகிற போது, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும் போது பல்லவன் குளத்திலிருந்து பம்ப்செட் வைத்து ஆயக்கட்டுதாரர்கள் தண்ணீர் எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். கீழ் ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் வரவில்லை என்று சொன்னார்கள். அந்த பம்ப் செட்டுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கோவை செழியன் அவர்கள் பேசும்போது பலமான இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். வட்டமலைக் கரையில் கட்டப்படுகிற அணையைப் பற்றிச் சொன்னார்கள். அந்த அணை எங்கே கட்டுகிறார்கள், ஏற்கனவே கட்டவேண்டுமென்று சொன்ன இடத்தில் கட்டவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அணையைக் கட்டுகிற இடத்தில் அணை கட்டினால் ஏதோ தண்ணீர் வீணாகப்போவதற்கு கட்டஇருப்பது போல் அவர்கள் குறிப்பிட்டார்கள். செட்டிப்பாளையம் என்ற

இடத்தில் கட்டவேண்டுமென்று சொன்னேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் இருந்தபோது ஒப்புக்கொண்டார்கள். இப்போது நான் அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போய்விட்டதால் மாற்றி விட்டார்கள் என்று அவர்கள் சொல்லுவது சரியல்ல. அவர் திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினராக இருந்தபோது அவர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். அவர் கழகத்தில் இருந்த போது அந்தப் பிரச்சனை எடுத்துக் கொள்ளப்பட வில்லை. இரண்டு இடத்தில் எங்கே கட்டினால் அதிக பலன் உள்ளதாக இருக்குமோ, அந்த இடத்திதை ஆராய்ச்சி செய்து, கட்ட முடிவு செய்து இருக்கிறது. செட்டிபாளையத்தில் கட்டுவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. செட்டிப்பாளையத்தில் கட்டுவதாக இருந்தால், காட்ச்மெண்ட் ஏரியா 53 ஸ்கொயர் மைல்தான் வரும். வட்டமலைக் கரையில் கட்டுவதாக இருந்தால் 95 ஸ்கொயர் மைல் தான் காட்ச்மெண்ட் ஏரியா வரும். காட்ச்மெண்ட் ஏரியா எங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கே அதிகமாக தண்ணீர் கிடைக்கும். காட்ச்மெண்ட் ஏரியா குறைவாக இருந்தால் குறைவாகத்தான் தண்ணீர் கிடைக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். வட்டமலைக் கரையில் அதிக காட்ச் மெண்ட் ஏரியா இருப்பதால் தான் அங்கே கட்டமுடிவு செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன. வேறு இதிலே எந்தத் தவறும் இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, நான் எழுப்பியது ஒரு டெக்னிகல் பாயிண்ட். ஏற்கனவே ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்து செட்டிப்பாளையத்தில் தான் கட்ட வேண்டுமென்று உறுதியாகிவிட்டது. நான் அமைச்சரைச் சந்தித்ததாகச்சொன்னார்கள். நான் சந்தித்தபோது அவர் பி. டபிள்யூ. டி. அமைச்சர் இல்லை. நான் மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களை சந்தித்துதான் சொன்னேன். அவரும் ஒப்புக் கொண்டார். அவரை வேண்டுமானால் கேட்கட்டும். என்னுடைய டெக்னிக்கல் பாயிண்ட் செட்டிப்பாளையத்தில் 4,800 ஏக்கர் பாசன வசதி இருக்கிறது. அது சிறந்த இடத்தில் இருக்கிறது. பி. ஏ. பி. விரிவு படுத்தும்போது, அந்த அணைக்கட்டிற்கும் தண்ணீர் வரும்....................

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆகவே சீப்பேஜ் தண்ணீர் அணைத்தும் 12 மைல்களுக்கு போய் ஒரு இடத்தில் தங்க வேண்டும். அதை வடமலைக்குப் பக்கத்தில் கட்டியிருப்பதால் காச்மெண்ட் ஏரியா அதிகமாக இருக்கிறது.

திரு. கோவை செழியன் : அமைச்சர் அவர்கள் பழைய ரிகார்டுகளை பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை வைத்துக் கொண்டு நான் அதிகாரிகள் கொடுத்த ரிக்கார்டுகளை வைத்து பதில் சொல்லுகிறேன். காச்மெண்ட்



ஏரியா அதிகமாக இருக்கின்ற இடத்தில் கட்டியிருக்கிறார்கள். தண்ணீர் அவெய்லபிலிடியை எடுத்துக் கொள்வீர்களானால், செட்டிபாளையத்தின் பக்கத்தில் கட்டியிருந்தால் 57 எம். சி. பீட். தண்ணீர் கிடைத்திருக்கும். இப்பொழுது வடமலை பக்கத்தில் கட்டியிருக்கிற அணைக் கட்டில், அதிகாரிகள் கொடுத்திருக்கிற கணக்குப்படி 102 எம். சி. பீட். தண்ணீர் கிடைக்கிறது.

திரு. கோவை செழியன் : இது வடமலைப் பக்கத்தில் கட்டவில்லை. வெள்ளக் கோவில் பக்கத்தில் உள்ள நாகராயக்கன்பட்டியில் கட்டியிருக்கிறார்கள். வடமலை பக்கத்தில் கட்டினால் காச்மென்ட் ஏரியா அதிகம். நாகராயக்கன்பட்டி பக்கத்தில் கட்டினால் குறைவு. இதை நான் சேலன்ஞ் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு தனியாக ஒரு கேள்வியை கொடுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இன்ஜினீயர்கள் கொடுத்திருக்கின்ற விவரங்களை ஸ்டடி பண்ணி விட்டுத் தான்..................

திரு. கோவை செழியன் : நானும் ஸ்டடி பண்ணி விட்டுத் தான் கேட்கிறேன். நான் அந்த இன்ஜியர்களைக் கேட்கின்றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதிகாரிகள் கொடுத்த புள்ளி விவரங்களைக் கொண்டு தான் பதில் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அமைச்சர் அவர்களிடத்தில் தனியாகப் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எல்லா புள்ளி விவரங்களையும் பார்த்த பிறகு தான் பதில் சொல்லுகிறேனே தவிர, வேறொன்றுமில்லை. சென்னைக்கு குடிதண்ணீர் பற்றியெல்லாம் சொன்னார்கள். சென்னை குடிதண்ணீர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் விளக்கம் கொடுத்துவிட்ட காரணத்தால், மேலும் அதைப் பற்றி விஸ்தரிப்பது தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, மான்யங்கள் பற்றி சில தகவல்களை அவைக்குத் தரலாம் என்று நான் நினைக்கிறேன். கடல் அரிப்புத் திட்டம் வேண்டுமென்று உறுப்பினர்கள் பேசினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பு அதிகமாக இருக்கிறது, அதற்கான நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டுமென்று கேட்டார்கள். 1970-71 ஆம் ஆண்டில் கடல் அரிப்பு ஏற்பட்டதால் நான்கு கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அவைகள் அடித்துச் செல்லப்பட்டன. அப்பொழுது $4\frac{1}{2}$ லட்சம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்ய வேண்டியிருந்தது. நிரந்தரமான பரிகாரம் தேடவேண்டும் என்பதற்காகத் தான் 351 லட்சத்தில் ஒரு திட்டத்தை நாங்கள் தயாரித்து மத்திய அரசாங்கத்தின் உதவிகோரி அனுப்பினோம். இதுவரையில் அங்கிருந்து பதில் வரவில்லை. பதில் வராத காரணத்தினால்தான் அந்த

வேலை துவங்கவில்லை. அது கிடைக்குமென்ற நம்பிக்கையோடு நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இன்னொன்று மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரபாண்டியன் பேசும்போது 10 வருடமாக ஐயர்மலைப் பள்ளியில் ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு வேலை நடக்கவில்லை என்று சொன்னார்கள். நான் அதிகாரிகளை நேற்று விசாரித்ததில் வேலை துவங்கியாகி விட்டது என்று சொன்னார்கள். விரைவில் கட்டிடம் கட்டி முடிக்கப்படும். ஆகவே அவர் மகிழ்ச்சியடைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒரு வாரத்திற்கு முன்னால் கூட அந்தக் கட்டடம் கட்ட எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு வாரமாக நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். இப்பொழுது ஆரம்பித்திருப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : டெக்னிகல் சாங்ஷன் பதவைப்பட்டது. அது கொடுக்கப்பட்டு விட்டது. கட்டிடம் கட்டி முடிப்பதற்கான வேலை எடுக்கப்பட்டு இருக்கிறது.

நேஷனல் ஹைவேஸ் ரோடுபற்றி பணம் குறைவாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இதற்கு பணம் குறைவாகத் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் கொஞ்சம்கூட சந்தேகமில்லை. நேஷனல் ஹைவேஸ் ரோடில் நேஷனல் ஹைவேஸ் அர்பன் என்ற ஒரு பகுதியுண்டு. நேஷனல் ஹைவேஸ் அர்பன் என்னவென்றால் 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமம் வழியாக, 20 ஆயிரம் மக்களுக்கு மேல்கொண்ட பகுதி வழியாக நேஷனல் ஹைவேஸ் போகுமானால், அந்தப் பாதை நீளத்திற்கு 1 மைலுக்கு ரூபாய் 5,000 மத்திய அரசாங்கம் பணம் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. நேஷனல் ஹைவேஸ் பாதை 20 ஆயிரம் மக்களுக்கு மேல் கொண்ட ஒரு கிராமத்தின் வழியாக, முனிசிபாலிட்டி வழியாகப் போகுமானால், அது நேஷனல் ஹைவேஸ் அர்பன் என்று கருதப்படும். அதற்கு நாம் பணம் ஒதுக்க வேண்டும். பணத்தை மத்திய அரசாங்கம் நம்முடன் பேசி ஒரு மைலுக்கு ரூபாய் 5,000 கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தமாயிருக்கிறது. ஆனால் 1961-ம் வருடத்திலிருந்து இது வரையில் தமிழ்நாட்டுக்கு அப்படி ரீஇம்பர்ஸ் ஆக வேண்டிய பணம், இன்னும் கிடைக்காமல் இருக்கின்ற பணம், எவ்வளவு என்று கேட்டால் 73.42 லட்சம் மத்திய அரசாங்கத் திடத்தில் இருக்கிறது. வரவில்லை. நாம் எத்தனையோ கடிதங்கள் எழுதியும், மத்திய அரசாங்கம் அந்தப் பணத்தைக் கொடுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு நேஷனல் ஹைவேஸ்-க்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்த மட்டில் மூன்று பிரிவாக வைத்திருக்கிறார்கள். திட்டத்தை அனுமதிக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அனுமதிப்பது என்று சொல்லி ஒரு தொகையை அனுமதிக்கிறார்கள். இதன் பிறகு சில வேலைகளுக்கு பணம் கொடுக்கும்போது பணம் குறைவாகக் கொடுக்கிறார்கள்.





உதாரணமாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை முழுவதற்கும் ஒத்துக் கொண்ட தொகை 41·78 கோடி ரூபாய். வேலைகளை அனுமதித்தது 33·68 கோடியாகும். கொடுத்திருக்கின்ற பணம் 18·53 கோடி ரூபாயாகும். ரூபாய் 41 கோடி கொடுக்கிறேன் என்று சொல்லி, திட்டங்கள் போடுங்கள் என்று சொல்லி, 18 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். மிச்சப் பணம் வரவில்லை. வேலைகள், ஆங்காங்கே அவர்கள் அனுமதிக்காக காத்திருக்கிறது. இந்த தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தமட்டில் இருக்கின்ற சிக்கலெல்லாம் எந்தெந்த வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதலில் தீர்மானிக்கிறார்கள் என்று ஐந்தாண்டு திட்டத்தில் இல்லை. அந்தத் திட்டங்களைத் தீர்மானித்த பிறகு பணம் நமக்கு ஒதுக்கிக் கொடுத்து விடுவார்களானால் வேலையை நாம் தொடர்ந்து செய்யலாம். எந்த வேலையை முதலில் எடுத்துக் கொள்வதென்ற பிரையாரிட்டி நிர்ணயிப்பதில் நமக்கு ஆட்சேபணையில்லை. அதையும் விட்டு விட்டு, அவர்கள் அனுமதித்த திட்டங்களில் எந்தெந்த வேலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு ஒரு திட்டம் போட்டுக் கொடுத்து, இந்த வருடத்திற்கு இந்த வேலையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அதற்கு திட்டம் தயாரித்து, ரூபாய் 2,000-க்கு கல்வெர்ட்டாக இருந்தாலும், சாங்ஷன் செய்வதற்கு நம்முடைய தலைமை பொறியாளருக்கு அதிகாரம் கிடையாது. ரூபாய் 2,000 ஆனாலும் நம் அரசாங்கம் டெல்லி வரையில் போய் வர வேண்டும். அதற்கு நம் தலைமை பொறியாளருக்கு அதிகாரம் கிடையாது. ஆனால், அங்கே தலைமை பொறியாளருக்கு எத்தனை லட்சத்திற்கு வேண்டுமானாலும் டெக்னிகல் சாங்ஷன் செய்யலாம். ஆகவே எல்லாம் மத்திய அரசாங்கத்திற்குப் போக வேண்டும். எல்லா வேலைகளும் போய், அங்கேயிருந்து டெக்னிகல் சாங்ஷன் ஆகி வருவதற்கு காலதாமதமாகி எந்த வேலையும் நடைபெறாமல் இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்த வரையில் இன்னொன்று முக்கியமாக சென்னை பைபாஸ் ரோட்டிற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மத்திய அரசாங்கம் அங்கீகாரம் கொடுத்து விட்டது. பைபாஸ் சென்னைக்குச் செல்ல, அந்த பைபாஸ் எப்படி வரவேண்டுமென்று போட்டுக் கொடுத்து, நில ஆர்ஜிதம் செய்வதற்கு 1·22 கோடி ரூபாய் என்று நாம் திட்டத்தை தயாரித்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினோம். நாம் தயாரித்தது திரும்பி வந்தது 1974-ல். இப்பொழுது அனுமதிக்க முடியாது என்று வந்து விட்டது. இதே போல கரூர் அமராவதி பாலம் இதே கதியாக நின்று கொண்டிருக்கிறது. அனுமதிக்காக காத்திருக்கிறது. வரவில்லை.

இன்னொன்று, சென்னை ரோடு பண்ட், சி. ஆர். எப். இது மிக முக்கியமானது. இதற்குப் பணம் எப்படி சேருகிறது என்று சொன்னால், நமது மாநிலத்தில் விற்கப்படுகின்ற ஒவ்வொரு லிட்டர் பெட்ரோலுக்கும்

3½ பைசா மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. எக்சைஸ் வரியில் கொடுக்கிறார்கள். கஸ்டம்ஸ் வரியில் கொடுக்கிறார்கள். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு சேரும் என்ற கணக்கு கொடுக்கிறார்கள். சென்ற ஆண்டு எவ்வளவு சேர்ந்திருக்கிறது என்ற கணக்கைப் பார்த்து, அடுத்த ஆண்டிற்கு அவர்கள் திட்டத்தை அங்கீகரிக்கிறார்கள், பணம் கொடுக்கிறார்கள். ஆக, நம் பணம் அவர்களிடத்தில் சேர்ந்த பிறகு, திட்டங்களுக்கு அனுமதி அளிக்கிறார்கள். அதைக் கூட ஆட்சேபிக்கவில்லை. எவ்வளவு பணம் சேர்ந்தது என்று தெரிந்த பிறகு, திட்டம் கொடுப்பதில் தவறில்லை. ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து விட்டது. இதுவரையில் அவர்களிடத்தில் நம் பணம், தேங்கியிருக்கின்ற பணம் எவ்வளவு என்று கேட்டால், நமக்கு வரவேண்டிய பணம், நம் மாநிலத்திற்கு உரிமையோடு பெற வேண்டிய பணம் எவ்வளவு என்றால், 199·48 இலட்சம் ரூபாய் சி. ஆர். எப். பணம் வரவில்லை, கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கத்திற்கு எத்தனையோ கடிதங்கள் எழுதி விட்டோம். ஏறக்குறைய 2 கோடி ரூபாய் கிடைக்காத காரணத்தினால் தேசீய நெடுஞ்சாலைத் தொடர்பாக செய்ய வேண்டிய இந்த வேலைகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. சி. ஆர். எப்-பில் எடுக்க வேண்டிய வேலைகள் குறைவாக இருக்கின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் பணம் வராத காரணத்தினால் தாமதமாகிறது என்று சொன்னார்கள். நான் பல வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். இங்கே சென்னையிலிருந்து திருச்சிக்குப் போகும் சதர்ன் டிரங்க் ரோடு பல இடங்களில் பாலங்கள் பாதியாக கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் பணம் கொடுத்தும், இந்த வேலைகள் இன்னும் தாமதமாகிக் கொண்டிருக்கிறது. அதற்காக சில வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–00)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானத்தில் ஓசூர் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட பாலம் நீண்ட காலமாக கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். முதலில் நியமிக்கப்பட்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டதால் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, இப்போது புதிய ஒப்பந்தக்காரர் நியமிக்கப்பட்டு, வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் முடிந்துவிடும் என்று நம்புகிறேன்.

தேசிய நெடுஞ்சாலையில் ஆங்காங்கு தொடங்கப்பட்ட பால வேலைகள் அப்படியே இருக்கின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி குறிப்பிட்ட பல பால வேலைகள் மட்டுமல்ல, ஏராளமாக இருக்கின்றன. நான் கூட கேள்விப்பட்டேன். போகும்போது எத்தனையோ பாலங்கள் உடைந்து இருப்பதைப் பார்க்கிறேன். அந்த பக்கத்தில் மாற்றுப் பாதைப் போட்டு, அந்த வழியாகப் போகிறோம். அடுத்த முறை போகும்போது அதே மாற்றுப் பாதை இருப்பதாகத் தோன்றுகிறது. உண்மை என்னவென்றால் முதலில் உடைந்திருந்த பால வேலை முடிக்கப்பட்டு, அந்த



மாற்றுப் பாதையும் எடுக்கப்பட்டிருக்கும். வேறு சில இடங்களில் புதிதாக வேலை தொடங்கியிருப்பார்கள். அந்த அளவுக்கு வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிலே தவறுதல் ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். தமிழ்நாட்டில் மிகப் பெரிய பாலம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். அது எல்லோருக்கும் தெரிந்த பாலம் தான். அதுதான் பாம்பன் பாலம். அதுபற்றி சற்று விரிவாக விளக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

பாம்பன் பாலம் மிக முக்கியமானது. இதற்கு அடிக்கல் நாட்டுவிழா கூட இந்திய பிரதமர் அவர்களால் செய்யப்பட்டது. அப்போது நம்முடைய முதலமைச்சரவர்கள் கலந்துகொள்ள முடியாமற் போய்விட்டது. அது பற்றி பத்திரிகையில் எழுதிய மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற இந்த பெரிய பால வேலை நடைபெறாமல் இருப்பதற்குக் காரணம் தமிழ்நாட்டு மந்திரிகள் 50 இலட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டார்கள் என்று அவர்களுடைய பத்திரிகையில் பச்சையாக எழுதியிருக்கிறார்கள். அடுத்த நாள் நான் பத்திரிகையாளர்களை அழைத்து, அந்தமாதிரி கிடையாது என்று சொல்லி மறுத்தேன். அதற்கு புதிதாக வந்திருக்கிற பொதுப்பணித் துறை அமைச்சருக்கு அது தெரியாது என்று பதில் எழுதிவிட்டார்கள்.

இப்போது பால வேலை நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பாலத்தில் என்ன பிரச்சினை இருக்கிறது என்றால் இதற்கு உண்டான டெண்டர் கோரப்பட்டது. டெண்டரில் இரண்டு கவர் சிஸ்டம் உண்டு. ஒன்று காஸ்ட் கவர். இன்னொன்று சிறு மாற்றங்கள் செய்ய வேண்டுமென்றால் அதற்கான அலைன்மெண்ட் மாற்று கவர். காஸ்ட் கவரை திறக்கச் சொன்னார்கள். திறந்து விட்டோம். யார் குறைந்த டெண்டர் கேட்டார்களோ அவரை சிபார்சு செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். இந்த டெண்டருக்கு "வாலிடேட்" ஒன்று உண்டு. டெண்டர் அனுப்பும்போது இந்த டெண்டர் இந்த தேதி வரையில்தான் வாலிட் ஆகும் என்று எழுதி கொடுப்பார்கள். அந்த தேதி வரை முடிவு செய்யப்படாததால் வாலிட் தேதியை மாற்றிக் கொடுங்கள் என்று கேட்கப்பட்டது. அதன்படி "ரீ வாலிடேட்" செய்யப்பட்டது. இப்படி இரண்டு முறை "ரீ வாலிடேட்" செய்யப்பட்டது. அதன் பிறகு மேற்கொண்டும் ரீ வாலிடேட் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

மத்திய அதிகாரிகளோடு நம்முடைய அதிகாரிகள் போய் பேசினார்கள். மத்திய அரசோடு பேசும்போது ரீ வாலிடேட் செய்ய மறுக்கிறார்கள்; மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். ரீ வாலிடேஷன் கடைசி நாள் 8—5—1974. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒப்பந்தக்காரருக்கும் கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்றன; நேரடியாகப் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. கடைசியாக 26—4—1974-ல் எழுதி அனுப்பப்பட்டது. ஒப்பந்தம் காலாவதியாகின்ற கடைசி நாள் 8—5—1974. 6—5—1974 இல் டில்லியிலிருந்து ஒரு தந்தி வருகிறது.

மேற்கொண்டு ஒப்பந்ததாரரிடம் தேதியை நீட்டித்து வாங்குங்கள் என்று 6-ந் தேதி தந்தி வருகிறது. 8-ந் தேதி முடியப் போகிற டெண்டருக்கு 6-ந்தேதி தந்தி வருகிறது. தந்தி வந்த பிறகு ஒப்பந்தக்காரர் நீட்டிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டு நீடித்துக்கொடுக்க வேண்டுமென்றால் என்னுடைய ஒப்பந்தத் தொகைக்குமேல் 10 சதவிகிதம் கூட்டிக் கொடுத்தால்தான ஒப்புக்கொள்வேன் என்று எழுதிக் கொடுத்து விட்டார். அதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதை டில்லிக்கு அனுப்பினோம். டெல்லிக்குச் சென்றது. அதற்குப் பிறகு அனுமதி அளித்தார்கள். நான் இந்த விளக்கத்தைச் சொல்வதற்குக் காரணம் மத்திய அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக அல்ல. இருக்கின்ற நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்த 10 சத விகிதம் அதிகம் தருவது ஒப்பந்தக்காரருக்கு ஏதோ வசதி செய்யப்பட்டது போல தோன்றுகிறது. இந்த முறையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இதே தவறு தமிழ்நாட்டில் ஏற்பட்டால் என்ன சொல்வார்கள் என்பதை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். ஒரு கட்டடம் கட்டும் பணிக்கு ஒப்பந்தம் செய்யப்படுகிறது; ஒப்பந்தத் தேதி காலாவதி ஆகும் வரை ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் அளிக்காமல், காலாவதியான பிறகு ஒப்பந்தத்தை நீட்டிக்க வேண்டுமென்று ஒப்பந்தக்காரரை கேட்டு, அவர் 10 சதவிகிதம் கூட்டிக் கேட்டு, அதன் பிறகு அந்த ஒப்பந்தத்தைக் கொடுத்தால் நண்பர் ஹாண்டே கூட சீறி எழுந்திருப்பார். ஒப்பந்தக்காரருக்கு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவார்கள். ஆனால், இப்போது அவருக்கு கோபம் வராது; சிரித்துக் கொண்டிருக்கிறார். காரணம் இது மத்திய அரசு செய்த தவறு. இதனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ? 45 இலட்சம் ரூபாய்.

ஐம்பது இலட்சம் ரூபாய் லஞ்சம் கேட்டதாக எங்கள் மீது குற்றஞ்சாட்டுகிறார் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம். இதை யோசித்துப் பார்த்து அவர் பதில் சொல்ல வேண்டும். அவர்களுடைய காலதாமதத்தினால் 45 இலட்சம் ரூபாய் நஷ்டம். 26–4–1974-இல் இங்கிருந்து போகிறது. 8–5–1974 கடைசி நாள். இடையிலே 12 நாள் இருக்கிறது. இரண்டாண்டு காலம் பேசி, பேசி தீர்வு காணப்பட்டு, முடிவு செய்யப்பட்ட வேலை இது. அதற்குப் பிறகுதான் டெண்டர் கோரப்பட்டது. 8-ம் தேதி மாலை 6 மணிக்கு தந்தி கொடுத்திருந்தால் கூட ஒப்பந்தக்காரருக்கு இந்த 45 இலட்சம் ரூபாய் கூடுதல் கொடுத்திருக்க வேண்டியதில்லை. 6-ந் தேதி தந்தி கொடுத்து, தேதியை நீட்டித்து வாங்க வேண்டுமென்று தந்தி கொடுத்ததால் 10 சதவிகிதம் கூடுதல் தொகை கொடுக்க வேண்டி வந்திருக்கிறது. வேலையில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. காலதாமதத்தைத் தவிர, 45 இலட்சம் ரூபாய் கூடுதல் கொடுத்ததைத் தவிர ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

நாற்பத்திஐந்து லட்சம் ரூபாய் ஒரு ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாகப் போய் விட்டது. காலதாமதத்தினால் 10 சதவீதம் அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தவறை மாநில அரசு செய்யவில்லை. இது மத்திய அரசு செய்த தவறு. இதற்கு என்ன பதில் சொல்வார் நண்பர் ஹாண்டே என்பது தெரியவில்லை.



Dr. H. V. HANDE: This is a very serious matter, as far as the Central Government is concerned. Even if they are prepared, we are not going to exonerate them. All of us are agreed in that. I would even suggest that the Hon. Chief Minister may write to the Central Bureau of Investigation to find out which particular Officer in the Central Government is responsible for this mishap, for this very serious omission. He can send a communication to the Central Bureau of Investigation and ask them to investigate and find out who is the Officer responsible.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இது நம்முடைய வேலை அல்ல. மத்திய அரசுதான் ஒப்புதல் கொடுக்கவேண்டும். நாம் என்ன செய்ய முடியும்? மத்திய நிதி அமைச்சர்தான் கையெழுத்து போட்டு அதிகப் பணம் கொடுப்பதை ஒத்துக்கொண்டு, கொடுத்திருக்கிறார். அந்த அவசியம் என் ஏற்பட்டது. 8-ந்தேதி கையெழுத்துப் போட்டிருந்தால் கொடுத்திருக்க வேண்டியதில்லையே.

ஏறத்தாழ 80 கோடி ரூபாய்க்கான பல மானியங்களை இன்றைக்கு கோரியிருக்கிறோம்; இந்த மாமன்றத்தைக் கேட்டிருக்கிறோம். இந்த பாலம் ஐந்து கோடி ரூபாய்தான். ஐந்து கோடி ரூபாய்க்கான பால வேலையை நடத்த தமிழக தலைமைப் பொறியாளர்களுக்கு தகுதி இல்லையா? இவர்கள் திறமையற்றவர்களா? இந்த அதிகாரத்தை இவர்களுக்குக் கொடுக்கக் கூடாதா? மத்திய அரசிடம் இருப்பதால்தானே இவ்வளவு பெரிய தவறு ஏற்பட்டது. நாற்பத்திஐந்து லட்சம் ரூபாய் ஒப்பந்தக்காரருக்கு வீணாகப் போய்விட்டது. யாரால் போய் விட்டது? மாண்புமிகு உறுப்பினர்கள் இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னொன்று. Economic and Inter-State Important Schemes என்ற ஒரு திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு கடனாகப் பணம் கொடுக்கிறது. இதில் கிழக்கு கடலோர பாதை வருகிறது. மேற்கு கடலோர பாதை பூனாவிலிருந்து திருவனந்தபுரம் வரை போட்டாகி விட்டது. கிழக்கு கடலோர பாதை இன்னும் வரவில்லை. இந்தத் திட்டத்தின்கீழ் கிழக்கு கடலோர பாதையில் பல பாலங்களை கட்ட ஆரம்பித்திருக்கிறோம். வேறு சில இடங்களிலும் கட்டுகிறோம். நாற்பது பாலங்கள் கட்ட மத்திய அரசு 261 லட்சம் ரூபாய்க்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனால் ரிவைஸ்ட் எஸ்டிமேட் 396 லட்சம் வருகிறது. அது வேறு பிரச்னை.

பாலங்களைக் கட்டுவதற்கு நாம் 261 லட்சம் ரூபாய் கேட்டோம். அதை அவர்கள் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் 1974 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரையில் அவர்கள் கொடுத்திருக்கிற பணம் 130 லட்சம் தான். 260 லட்சத்தில் படிக்குப் பாதிக்கூடக் கொடுக்க வில்லை. நாம் இந்தப் பாலங்களுக்காகச் செலவு செய்திருக்கிற பணம் ரூ. 184 லட்சமாகும்.

இதில் இன்னொன்று. 1974–75-ஆம் ஆண்டிற்கு 107 லட்சம் ரூபாய் ஸ்பில் ஓவருக்காகத் தேவை என்று கேட்டோம். ஆனால் அவர்கள் 30 லட்சம் தான் கொடுத்திருக்கிறார்கள். எப்படி வேலைகள் நடைபெறும் என்பதை நாம் யோசிக்க வேண்டும்?

இன்னொன்று. அதை நான் முதலிலேயே சொல்ல மறந்து விட்டேன். நாஷனல் ஹைவேஸ் சம்பந்தமாக அவர்கள் நமக்கு ஏஜென்சி சார்ஜஸ் என்ற அடிப்படையில் 7½ சதவீதம் தான். கொடுக்கிறார்கள். தமிழ் நாடு அரசுக்கு மட்டுமல்ல—எல்லா மாநில அரசுகளுக்குமே இந்தத் தொகை போதவில்லை. இதை அதிகப்படுத்த வேண்டுமென்று பொதுப் பணித்துறை அமைச்சர்கள் மகாநாட்டில் டெல்லியில் வலியுறுத்திக் கூறி யிருக்கிறார்கள். இந்த நியாயமான வேண்டுகோளுக்குக் கூட இதுவரை மத்திய அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. இந்த ஏஜென்சி சார்ஜை அதிகப்படுத்திக் கொடுத்தால்தான் நடைபெற வேண்டிய பல வேலைகள் நடக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லலா மென்று நான் நினைக்கிறேன். நீர்ப்பாசனத் துறையில் தமிழ்நாடு அரசாங்கம் சில புதிய திட்டங்களை வைத்தது. இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில் இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்படுகிறபோது இந்த இரண்டு மாநிலங்களுக்குமிடையே பேசி—அவை இரண்டிற்கும் இடையே ஒரு உடன்பாடு ஏற்படுவது கஷ்டமாக இருந்தால் மத்திய அரசே பொறுப் பேற்றுக்கொண்டு இதில் எது நியாயமோ அந்தத் தீர்ப்பை வழங்க வேண்டியது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை மத்திய அரசாங்கம் தட்டிக் கழிக்க முடியாது.

நாம் பல திட்டங்களை வைத்திருக்கிறோம். குறிப்பாக பாண்டியாறு—புன்னம்புழா திட்டம். இந்தத் திட்டம் நிறைவேறினால் பல்லடம், அவினாசி, கோயம்புத்தூரைச் சுற்றியிருக்கிற பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். இல்லாவிட்டால் இந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க வழி வராது. அவினாசிக்குத் தண்ணீர் வரவேண்டுமென்றால் பாண்டியாறு—புன்னம் புழா திட்டம் மிக அவசியமானது என்பதை வலியுறுத்திக் கேட்டோம்; பேசினோம். ஏற்கனவே திரு. வெங்கட்டராமன் அமைச்சராக இருந்த போதே இதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். "நீங்கள் கேட்கவில்லை. ஆகவே நாங்கள் கொடுக்க முடியாது" என்று சொல்லி விட்டார்கள்.

நமது முதலமைச்சர் அவர்கள் சார்பில் இது பற்றி புதிய யோசனை ஒன்று வைக்கப்பட்டது. "நீங்கள் தண்ணீர் கொடுங்கள். பழைய ஒப்பந்தம் எதுவும் இல்லாவிட்டாலும், புதிய ஒப்பந்தத்தைச் செய்து கொள்வோம். உங்கள் தண்ணீரில் எங்கள் பகுதியில் எவ்வளவு பூமி விளைகிறதோ அவ்வளவு விளைச்சலையும் மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்கே உங்களுக்குக் கொடுக்கிறோம்" என்று சொன்னோம்.





இதற்கு கேரள அரசாங்கம் தெரிவித்த கருத்து, "நீங்கள் எவ்வளவு அரிசி கொடுத்தாலும் அவ்வளவையும் நாங்கள் வாங்கிக் கொள்ள முடியாது. நீங்கள் கொடுக்கிற கணக்கு செண்டிரல் பூலுக்குப் போய் விடும் இந்த அளவுக்கு அவர்கள் கொடுப்பதை குறைத்துக் கொள்வார்கள். இதில் எங்களுக்கு லாபம் இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

பிறகு நமது முதலமச்சர் அவர்கள் டெல்லிக்கு சென்றபோது திரு. ஜகஜீவன்ராம் அவர்களை வைத்துக் கொண்டு, திரு. அச்சுதமேனன் அவர்களையும் வைத்துக்கொண்டு மீண்டும் பேச்சு வார்தையை துவக்கி னார்கள். இது பற்றி அமநகமாக ஒரு ஒப்பந்தம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்கிற நம்பிக்கை தோன்றியிருக்கிறது. ஆகவே தொடர்ந்து பேச்சுவார்தையை நடத்த இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: நமது முதலமைச்சர் அவர்கள் கேரள அமைச்சருடன் சிறுவாணி திட்டத்தின் மூலம் குடி தண்ணீருக்கு போது மான தண்ணீர் கொடுத்தால் 15 லட்சம் டன் அரிசி கொடுப்பதாக நேரிடையாகப் பேசி தண்ணீர் கொண்டு வந்தார்களே, அதேபோல் இப்போது நேரிடையாக பேசி ஒரு உத்திரவாதந்தைக் கொடுத்து பாண்டி யாறு—புன்னம்புழா தண்ணீரைக் கொண்டுவர முயற்சி செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பதினைந்து லட்சம் அல்ல—பதினைந்தாயிரம் தான். இதுபோல் நாம் கேரள அரசாங்கத்தோடு பேசி ஒரு ஒப்பந்தத்திற்கு வர தயாராய் இருக்கிறோம். ஆனால் ஒப்பந்தப்படி நாம் அவர்களுக்கு அரிசி கொடுப்பதற்குத்தான் மத்திய அரசாங்கம் இடைஞ்சலாக இருக்கிறது. இதுபோல் இரண்டு மாநில அரசுகளிடையே ஏற்படுகிற ஒப்பந்தத்திற்கு மத்திய அரசுதான் இடைஞ்சலாக இருக்கிறது. நாம் மாநில சுயாட்சி கேட்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அரிசி கொடுப்பது இருக்கட்டும். இன் றைக்கு நமக்கே அரிசி போதுமானதாக இல்லை. நமக்கே அரிசி பற்றாக்குறையாக இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: முன்பே இதைப் பற்றி பொதுப்பணித் துறை அமைச்சரிடத்தில் சொன்னோம். இன்றைக்கு மத்தியில் நமது நிதி அமைச்சர் அவர்களும் கூட இதற்கு சாதகமாக இருக்கிறார்களே, இதைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாதா என்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் அதைத் தான் முன்பே சொன்னேன். நாம் தயாராக இருக்கிறோம். இந்த ஆண்டு அரிசி இல்லை. கொடுத்துவிடப்போகிறோமோ என்று டாக்டர் ஹாண்டே சொன்னார்கள். இது மட்டுமல்ல.

இடுக்கி—பெரியாறு தண்ணீரைக் கொண்டு வருவதற்கும் திட்டம் இருக்கிறது. அங்கே தண்ணீர் இருக்கிறது. அவர்கள் 10 டி.எம்.சி. கொடுத் தால் நமது பகுதியில் ஒரு லட்சம் ஏக்கரா பாசன வசதியைப் பெறும்.

கல்லாறு டைவர்ஷன் சானல் மூலமாக 2 டிஎம்ஸி கொடுத்தால் போதும். மதுரை மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கரா பாசன வசதியைப் பெறும்.

பாம்பாறு திட்டம்—சபரிகிரி திட்டம்—இதன் மூலம் 26 டிஎம்ஸி தண்ணீரைக் கொடுக்கலாம். கொடுக்க முடியும். டன்னல் வெட்டி கொண்டு வருவதற்குக் கூட நாம் தயாராய் இருக்கிறோம். இதைக் கொண்டு வந்தால் போதும். நிரந்தரமான வறட்சிக்கு உள்ளாகி வருகிற இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு லட்சத்து அறுபதாயிரம் ஏக்கராவைச் சாகுபடிக்குக் கொண்டு வர முடியும்.

இன்னும் அச்சன்கோவிலாறைத் திருப்பி விடுவதன் மூலம் 9 டிஎம்ஸி தண்ணீர் கிடைக்கக்கூடும். இதனால் 90 ஆயிரம் ஏக்கரா பாசன வசதி பெறும். இந்த நல்ல திட்டங்கள் எல்லாம் நாம் நமது அண்டை மாநிலமான கேரளாவின் அனுமதியோடு நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள். இந்த முக்கியமான திட்டங்களுக்கு கேரள அரசாங்கத்தை இணங்கச் செய்ய வைக்கிற பொறுப்பு மத்திய அரசுக்கும் உண்டு.. .. .. ..

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நொய்யாறு எல்பிஸி-இல் இருந்து தண்ணீர் கொடுக்க வகுத்த திட்டம் என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 152 டிஎம்ஸி தண்ணீர் கொடுக்க வேண்டும். இதுவரை அவர்கள் 100 டிஎம்ஸி, 107 டிஎம்ஸி தான் கொடுக்கிறார்கள். கேட்டால் எங்களிடத்தில் தண்ணீர் இல்லை, அவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆந்திர அரசாங்கம் நமக்குப் பக்கத்தில் இருக்கிறது. ஆரணியாறு திட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். படாஸ்கர் அவார்டுபடி தமிழகத்தில் உள்ள ஆறுயிரம் ஆயக்கட்டுகளுக்கு அவர்கள் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். ஆனால் ஆந்திர அரசாங்கம் இதுவரை அப்படிக் கொடுக்க வில்லை. அதுபற்றி பல காலமாகப் பேச்சுவார்த்தை நடைபெற்று இப்போது நின்றுபோய் இருக்கிறது. நான் இந்த மானியத்தைக் கோருகின்ற நேரத்தில் ஆந்திர அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "ஆறுயிரம் ஆயக்கட்டுகளுக்கு நீங்கள் தண்ணீர் கொடுக்க வேண்டும். இதில் எவ்வளவு கொடுக்க இருக்கிறீர்கள்? உங்களால் எவ்வளவுதான் கொடுக்க முடியும்?" இதுபற்றி இரு அரசாங்கங்களும் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயாராய் இருக்கிறோம். அவர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

ஒரு வேளை ஆந்திர அரசாங்கம் சொல்லக்கூடும். இவ்வளவு ஆண்டுகளாக நீங்கள் என்ன பண்ணிக்கொண்டிருந்தீர்கள் என்று. இவ்வளவு நாளாக வறண்ட நிலையிலேயே இந்த ஆயக்கட்டுகள் இருந்து வருகின்றன. அப்படியே அவை தொடர்ந்து இருக்கட்டும் என்று சொல்வது நியாயம் அல்ல. இதைப்பற்றி ஒரு சுமுகமான முடிவு ஏற்பட ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, காவேரிப் பிரச்சினை. காவேரிப் பிரச்சினை நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வருகிற ஒன்று. கபினியில் அவர்கள் தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு.) நான் இந்தப் பிரச்சினையை சிக்கலாக்குவதாக நினைக்க வேண்டாம். சிக்கலாக்க விரும்பவில்லை. கர்நாடக அவையிலும், வெளியிலும் அந்த மாநில அமைச்சர்களாலும், மற்றவர்களாலும் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்ட போது கூட அவற்றுக்கு நான் பதிலளிக்காமல் இருந்தது இந்தப் பிரச்சினையை சிக்கலானதாக ஆக்கக்கூடாது என்றுதான். கபினியில் தண்ணீரை தேக்கி வைத்திருப்பது எவ்வளவு தவறான காரியம். இதில் மத்திய அரசாங்கம் தலையிட்டு நமக்கு அவசியமாகத் தேவைப்படுகிற தண்ணீரை அவர்கள் திறந்து விடவேண்டும் என்று சொல்வது அவர்களது கடமையாகவே நான் கருதுகிறேன். இந்த கபினி டாமில் 13 டி.எம்.சி. தண்ணீர் இருந்தது. டெல்லியில் இதுபற்றி நமது முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்தியபோது ஜகஜீவன் ராம் அவர்களைக் கேட்டார்கள், கபினி தண்ணீரைத் திறந்துவிடச் சொல்லுங்கள் என்று. கர்நாடக அமைச்சர்தான இருக்கிறாரே, நீங்களே அவரிடம் கேளுங்கள் என்று அவர் சொன்னார். நமது முதலமைச்சர் அவர்களும் 3 முறை கர்நாடக முதலமைச்சரைக் கேட்டும் அவர் கடைசிவரை மௌனமாகவே இருந்துவிட்டு, பிறகு வெளியே எழுந்திருந்து போகும்போது, "உங்கள் மாநில பொதுப்பணித்துறை அமைச்சரை பெங்களூருக்கு வரச்சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

நான் பெங்களூருக்கு போய் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்களிடம் இப்போது இருக்கக்கூடிய ஆயக்கட்டுகளுக்கு 3 டி.எம்.ஸி. தண்ணீர் இருந்தால் போதும். பொறியாளர்களிடமும் சொன்னேன். அவர்கள் "தங்களுக்கு 8 டி.எம்.ஸி. தண்ணீருக்குக் குறையாமல் தேவை. அது இருந்தால் தான் வெயில் காலத்தில்—கோடை காலத்தில் எங்களுக்கு பயன்படும்" என்று சொல்லி மொத்தம் இருந்த 13 டி.எம்.ஸி. யில் அவர்களுக்குத் தேவை என்ற 8 டி.எம்.ஸி. போக 5 டி.எம்.ஸி.-ஐத் திறந்து விட்டார்கள்.

இப்போது கபினி என்ன நிலையில் இருக்கிறது என்று பார்த்தால், கபினியில் 12 டி.எம்.ஸி. தண்ணீர் இருக்கிறது. 8 டி.எம்.ஸி. போதும் என்றார்கள். 4 டி.எம்.ஸி. தண்ணீர் அதிகமாக இருக்கிறது. நாம் கேட்டது 8 டி.எம்.ஸி. தண்ணீரைக் கொண்டு உங்களுக்கு இருக்கிற ஆயக்கட்டுகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று சொன்ன கர்நாடக மாநிலம், மேற்கொண்டு 4 டி.எம்.ஸி. தண்ணீர் இருக்கும் போது அதைத் திறந்துவிட மறுக்கிறது. மத்திய அரசாங்கத்திடத்திலும் எல்லா அமைச்சர்களிடத்திலும் அதைப் பற்றிச் சொல்லிவிட்டு வந்தோம். ஏன் மத்திய சர்க்கார் அந்த மாநில அரசுக்கு உத்தரவிட்டு தண்ணீரைத் திறந்துவிடச் சொல்லக்கூடாது? நான் அவர்களுடைய ஆயக்கட்டு பாதிக்கப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அவர்களுடைய ஆயக்கட்டுக்குப் போதுமான தண்ணீரை வைத்துக்கொண்டு மீதமுள்ளதைக் கொடுக்கலாம் அல்லவா? அந்தத் தண்ணீர் ஆவியாகப் போய்க்கொண்டிருக்கிறது. வீணாக பூமி உறிஞ்சிக்கொண்டிருக்கிறது. "சீப்பேஜ்" போய்க்கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை பாசனமுள்ள தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுத்து உதவினால் நாட்டுக்கு எவ்வளவு

மிகத் தேவையான காரியம் நடைபெற்று இருக்க முடியும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்த்து இருக்க வேண்டும். அவர்கள் அப்படிச் செய்யவில்லை. அது சம்பந்தமாக நமக்கு மத்திய அரசாங்கத்திடம் வருத்தமுண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். நம்முடைய மாநிலத்துக்கு உரிய தண்ணீரைத் தடுத்து தேக்கி வைத்து கொடுக்க முடியாது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி முடிவு செய்ய டிரிபியூனலுக்குப் போக வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். மேலும் பேச்சு வார்த்தை நடத்தலாமா என்ற செய்திகள் பத்திரிகையில் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், நாம் எடுத்து வைத்துக்கொண்டிருக்கிற அந்தக் கொள்கையிலே இது வரையில் மாற்றம் எதுவும் கிடையாது, என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நாம் ஏதேனும் ஒத்துக்கொள்வோமானால் காவேரி பாலாறு போல் பாழாக வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்.

பாலாற்றில் ஒரு காலத்தில் முழுவதும் தண்ணீர் வந்துகொண் டிருந்தது. அதைப்பற்றிய முழு தகவல்களைக் குறித்து தமிழ்நாட்டு அரசாங்கத்திடம் ஏதாவது ரிக்கார்டு கிடைக்குமா என்று தேடிப் பார்த் தோம். ஒன்றும் இல்லை. அது நமது துர்ப்பாக்கியம் தான். மேலே ஒரு பெரிய ஏரியைக் கட்டி வளைத்து வைத்திருக்கிறார்கள். பாலாற்றில் தண்ணீர் இல்லை. தமிழ்நாட்டின் எல்லையில் பெய்கின்ற மழைத் தண்ணீர் தான் சில நேரங்களில் வெள்ளமாக வருகின்றது. கர்நாடக மாநிலம் கீழே இருக்கிற ஆயக்கட்டு தண்ணீரைத் தேக்கித் தடுத்து விட்டார்கள்.

மாடர்னைசேஷன் திட்டத்தை பற்றி பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாடர்னைசேஷன் திட்டத்தின்கீழ் காவிரியின் வாய்க் கால்களையெல்லாம் நவீனப்படுத்த வேண்டும் என்று சொல்லி டாக்டர் ஹாண்டே அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்த வாய்க்கால்களை நவீனப்படுத்த வேண்டும் என்று நாம் சொல்லியதன் பயனாக மத்திய அரசின் மூலம் உலக வங்கியும் அதை ஒத்துக்கொண்டு 40 கோடி ரூபாய் கடன் தருவதற்கு முன் வந்தார்கள். ஆனால், கர்னாடக மாநிலம் கொடுக்கக் கூடாது என்று ஆட்சேபணை தெரி வித்தார்கள். என்ன காரணமோ தெரியவில்லை. காவிரிப் பேச்சு வார்த்தை முழுவதும் முடிவதற்குள் கொடுக்கக்கூடாது என்று சொன் னார்கள். காவிரி நதி நீர் சம்பந்தமான பேச்சு வார்த்தைக்கும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற கால்வாய்களை நவீனப்படுத்துவதற்கும் என்ன சம்பந்தம் என்று மத்திய அரசு கேட்டு இருக்கலாம் அல்லவா? கேட்க வில்லை. உலக வங்கிக்குக் கொடுக்க வேண்டிய மனுவை—நாம் அனுப்பிய மனுவை நிறுத்தி வைத்துவிட்டார்கள். அந்த மனுவைக் கொடுத்திருந்தால், தண்ணீரைச் சிக்கனப்படுத்தியிருக்கலாம்; கால் வாய்களை நவீனப்படுத்தியிருக்கலாம். ஏற்கனவே 13 கோடி ரூபாய் செலவு செய்து பல கால்வாய்களைச் செப்பனிட்டிருக்கிறோம். சீர்ப் படுத்தியிருக்கிறோம். மேலும் தொடர்ந்து இந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம். அதைப் பூர்த்தி செய்தால் தண்ணீரை மிச்சப் படுத்தலாம் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.



அதைப் போல் வைகை, பெரியாறு மாடர்னைசேஷன் திட்டத்தையும் எடுத்துக்கொண்டு முடியும் தறுவாயில் இருந்துகொண்டிருக்கிறது. அதே போல் தாம்பிரபரணி, மணிமுத்தாறில் செய்ய முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறோம். அதற்கும் சாத்தியக்கூறு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினை. சேலம் மாவட்டத்தில் சில பகுதிகளில் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கலெக்டரிடம் பெர்மிட் வாங்கி தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சில பெர்மிட்டு களும் ரத்தாகி இருக்கின்றன. சிலர் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். இவை எல்லாம் எப்படி நடக்கின்றன என்பதைப் பற்றி நான் விரிவாகப் பேசத் தேவையில்லை, அவசியமும் இல்லை. ஆனால், இவைகளை எல்லாம் ஒழுங்குபடுத்த வேண்டும், முறைப்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஒரு முடிவு எடுத்துவிட்டது.

தண்ணீருக்குத் தண்டத் தீர்வை போட்டு, தண்டத் தீர்வை மூலம் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குக் கொடுமை விளைவிப்பதைவிட அதை ரெகுலரைசேஷன் செய்யலாம், ஒழுங்குபடுத்தி முறைப்படுத்தலாம் என்று கருதியிருக்கிறோம். எனவே, சேலம் மாவட்டத்திற்குச் சென்று, சுற்றிப் பார்த்து, அதிகாரிகளை வைத்துப் பேசி இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இது பற்றித் தெரிவித்து வந்துவிட்டேன். அவர்களும் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள். 41 லிப்ட் இரிகேஷன் சொஸைட்டிகளாக மாற்றலாம், கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவை களையெல்லாம் வயபிள் யூனிட்டாகச் செய்து ரெகுலரைஸ் செய்யலாம், ஒழுங்குபடுத்திவிடலாம், தண்டத் தீர்வை விதிப்பதைத் தடுத்துவிடலாம், அவர்களுக்குத் தண்ணீர் எடுத்துக் கொள்வதற்கு உரிமை கொடுக்கப் படலாம் என்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் பகுதி மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இன்னொரு முக்கியமான செய்தி, மேட்டூரைப் பற்றியது. மேட்டூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இப்பொழுது இங்கு இல்லை. மேட்டூர் பகுதியில் ஏராளமான பூமி ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. அது பீ.டபிள்யூ.டி. க்குச் சொந்தமான பூமி. என்ன செய்து இருக்கிறார்கள் என்றால், பல இடங்களில் பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன, பங்களாக்கள் கட்டியிருக்கிறார்கள். ஏழைகள் சிறு சிறு குடிசைகள் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் அப்புறப்படுத்துவது என்றால், இடித்துத் தள்ளுவது என்றால், முழுவதும் அவர்களை எல்லாம் வெளியேற்றுவது என்றால் அது நடக்கக் கூடிய காரியம் அல்ல என்பதை ஆலோசனை செய்து அரசாங்கம் ஒரு முடிவை எடுப்ப தாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

யார் யார் எந்த எந்த மனைக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார் களோ, யார் யாருக்கு இலவசமாக அதைக் கொடுப்பதற்கு அவர்கள் தகுதியுடையவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் இலவச

மாகக் கொடுப்பது என்றும், ஆனால் வசதி படைத்தவர்களிடத்தில் அதற்குண்டான கிரயத்தை வாங்கிக் கொடுப்பது என்றும், இன்றியமையாத அரசாங்கத்திற்குத் தேவையான நிலங்களாக இருக்குமேயானால் அவர்களை மட்டும் அப்புறப்படுத்துவது என்றும் சொல்லி, இதில் அரசியல் கண்ணோட்டம் கொஞ்சம் கூட இல்லாமல் அரசாங்கத்தோடு எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது மிக மிக முக்கியமான பிரச்சினை. ஒரு வேளை ஏதேனும் ஒரு பகுதி அரசாங்கத்திற்குத் தேவையாக இருக்குமானால், அந்தப் பகுதியிலிருந்து அந்த மக்களை அப்புறப்படுத்தும்போது அதை அரசியலாக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன். எந்தப் பகுதி அரசாங்கத்திற்குத் தேவையில்லையோ அந்த இடங்களை ஏழைகளுக்குக் கொடுத்து விடுவோம். வசதி படைத்தவர்களிடத்தில் பணத்தை வசூலித்துக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். எச். வி. ஹாண்டே: சிறிய கடைகளைப் பல பேர் வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி மனு கூட கொடுத்திருக்கிறார்கள். முதலமைச்சருக்கும் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கும் காப்பி அனுப்பியிருக்கிறார்கள். சிறிய கடைகள் வைத்திருப்பவர்களை வசதியுள்ளவர்களாகக் கருதாமல் ஏழைகள் குரூப்பில் சேர்த்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சிறிய கடைகள் வைத்திருப்பவர்களை நாம் ஏழைகள் பட்டியலில்தான் வைத்திருக்கிறோம். ஆனால், வியாபார ஸ்தலமாக வைத்து வருமானம் வரக் கூடிய இடமாக இருந்தால் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் படி அந்த உரிமை அவர்களுக்கு வராது. போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் படி யார்யாருக்கு உரிமை உண்டோ அவர்களுக்கு அந்த இடம் கொடுக்கப்படும். ஆனால், அதிகமாக ஆக்கிரமித்திருந்தால் அதிகமான இடத்தைக் கொடுக்க முடியாது. நாம் ஏற்கெனவே போட்டு வைத்திருக்கிற சட்டத்தின்படி ஒரு குடிசைக்கு 3 செண்ட்தான். ஆகவே, அந்த அளவுக்குத்தான் அவர்கள் பூமியைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும். அதற்கு அதிகமாக இருந்தால் அதை அரசாங்கம் எடுத்துக் கொண்டு விடும்.

திரு. கே. என். குமாரசாமி: அலுமினியம் பேக்டரிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இருந்த கிராமத்தில் உள்ளவர்கள் அந்தப் பகுதியை ஆக்கிரமித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அங்கிருந்து அவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அது எல்லாம் சரியா என்று பார்த்துக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எங்கிருந்து யார் வெளியேற்றப்பட்டார் என்பது அல்ல பிரச்சினை. அங்கு இருக்கிற ஏழை மக்களுக்கு போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்படி அவர்கள் தகுதியுடையவர்களாக இருப்பார்களேயானால், 3 செண்ட் பூமி அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படும். வசதி படைத்தவர்கள் வீடு கட்டிக் கொண்டிருந்தால், பங்களா கட்டிக் கொண்டிருந்தால், வியாபார ஸ்தலமாக வைத்துக் கொண்டிருந்தால் அந்த பூமியைப் பொறுத்த வரையில் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்படி



எவ்வளவு பணம் வசூலிக்க வேண்டுமோ எவ்வளவு பணத்தையும் அவர்களிடம் வசூலிக்கலாம். அரசாங்கத்திற்கு அதாவது இடம் தேவை என்று சொன்னால்; அந்த இடத்திலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி, அதை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு அங்கத்தினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்—விவாதம் முடிவுற்றது.

[பிற்பகல் 1–30]

திருமதி த. ந. அனந்தநாயகி: மாடர்னைசேஷன் ஆஃப் காவேரி டெல்டாவுக்கு ஓர்ல்ட் பாங்க் அனுமதி கொடுக்கவில்லையா? மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்கவில்லையா? World Bank has not given என்று சொல்கிறார்கள். மத்திய அரசு மனு அனுப்பவில்லையென்று சொல்கிறார்கள். விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் விளக்கமாகவே சொன்னேன். மத்திய அரசாங்கம் அந்த மனுவை உலக வங்கிக்கு அனுப்பவில்லை. ஓர்ல்ட் பாங்க் கடன் கொடுக்கத் தயாராக இருந்தது. மனுவை அனுப்பத் தவறி விட்ட காரணத்தால், நமக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை.

திரு. கு. காமாட்சி: காவேரி கங்கை இணையப் போகிறது என்று அடிக்கடி பேசப்படுகிறது. மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் நம்முடைய காலத்திலும் நடக்காது; பேரன் காலத்திலும் நடக்காது, பேரனுக்குப் பேரன் காலத்தில்தான் நடக்கும் என்று கூறியுள்ளார். அதற்கு நம்முடைய அரசு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறதா? அல்லது கேள்விக் குறியா என்று தெரியப்படுத்தவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆச்சரியக்குறி. (சிரிப்பு)

திரு. கே. என். குமாரசாமி: கோயம்புத்தூரிலே சின்னவேடிக்குளம் திட்டத்திற்கு ரூ. 55 லட்சம் ஆகும் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் இந்த பட்ஜெட்டிலே வரவில்லை. அதைப்பற்றி..........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எஸ்.எம்.ஐ.பி. திட்டத்தின் கீழ் வரும். அதைப் பற்றி தனியாகக் கேளுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் சொன்ன கேள்வியைப் பற்றி..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

திருவாளர்கள் எ. சுப்பிரமணியம், கே. எஸ். கோதண்டராமையா, கே. எ. வகாப் ஆகியோர் இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. கோவை செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. கே. பி. கோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,71,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் எ. சுப்பிரமணியம், பி. வெங்கடசாமி, கே. எ. வகாப் என். மருதாசலம் ஆகியோர் இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. பி. கோபால், பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,51,01,000-க்கு மேபடாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, எ. சுப்பிரமணியம், பி. வெங்கடசாமி ஆகியோர் இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், பெ. சௌந்தரபாண்டியன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும்; கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,62,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் கோவை செழியன், கே. எஸ். கோதண்டராமையா, கே. டி. கே. தங்கமணி, பி. வெங்கடசாமி, எம். சுரேந்திரன், கே. எ. வகாப் ஆகியோர் இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. கே. பி. கோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும்; பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,99,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் எ. சுப்பிரமணியம், பி. வெங்கடசாமி, கே. எ. வகாப் ஆகியோர் இருக்கையில இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிகை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர்வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 94,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[பேரவைத் தலைவர்] [1975 மார்ச் 15

திருவாளர்கள் என். டென்னிஸ், எ. சுப்பிரமணியம், சே. எ. வகாப், கே. டி. கே. தங்கமணி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,25,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் எ. சுப்பிரமணியம், சே. டி. கே. தங்கமணி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச்.வி. ஹாண்டே ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப்பணித்துறை–கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,18,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இருக்கையில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" நிதிக் கோரிகை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,21,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



1975 மார்ச் 15]

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 17—3—1975 காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

142. Notification issued in G.O. Ms. No. 273, Commercial Taxes and Religious Endowments, dated the 9th September 1974, in regard to an amendment to the rule published with Revenue Department Notification, dated the 5th August 1949, at pages 249–250 of the Rules Supplement to Part I of the Tamil Nadu Government Gazette dated the 16th August 1949, as subsequently amended. Laid on the table of the House under section 67 (4) of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948 (Tamil Act XXVI of 1948.

B. *Reports, Notifications and other Papers.*

@ 71. A Review on Buildings Programme in Tamil Nadu 1974–75 (English and Tamil).

@ 72. The Performance Budget on Port Department, 1975–76.

@ 73. Speech by Hon. Thiru P. U. Shanmugam, Minister for Public Works on Demands for Irrigation and Public Works Department Grants, 1975–76 (English).

@74. A Review on Road Development Programme in Tamil Nadu 1974–75 (English).

% 75. Speech by Hon. Thiru P. U. Shanmugam, Minister for Public Works on Demands for Irrigation and Public Works Department Grants 1975–76. (Tamil).

% 76. A Review on Road Development Programme in Tamil Nadu 1974–75 (Tamil).

%77. A Review on Irrigation in Tamil Nadu 1974–75 (English and Tamil).

% 78. Detailed Public Works Budget for the year 1975–76.

---

@ Despatched to Members on 13th March 1975.
% Laid on the table of the House on 14th March 1975.

இணைப்பு

586-ம் பக்கத்தில் 330-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

*A*. Yes.

C. The Government have granted the following concessions to the medical officers who joined the Defence forces in connection with the National Emergency proclaimed in 1962 and 1965 :—

1. Five per cent of the substantive vacancies which arose after the declaration of National Emergency and during the continuance of the Emergency in category 2 (Assistant Surgeons) of Class I has been reserved for the members of the service deputed for Military duty and for non-service candidates who rendered Military service in connection with the emergency and are recruited to the serevice on discharge from Armed Forces.

Any member of the service in categories 2 (Assistant Surgeons) who is deputed for Military service is eligible for the following concessions.

(1) He will retain his lien in the Tamil Nadu Medical Service and his seniority and promotion in the Tamil Nadu Medical Service will be protected in accordance with the rules.

(2) If he is a probationer, he will be confirmed on the occurrence of suitable vacancies.

(3) The period of Military service will count towards probation and pay and also for civil pension.

(4) The period spent on "field service" will count double for probation and increment of pay.

(5) The period of Military service will count for purposes of accumulation of leave under the Civil Rules, leave if any, taken while on Military duty being deducted.

The above concessions are admissible to those who entered military service during the National Emergency from 26th October 1962 to 10th January 1968. These concessions are not admisible to those who entered military service after the emergency was over.

The concessions mentioned under item (4) above will not be admissible to those deputed for military duty after 10th January 1968.



2. In respect of Assistant Surgeons who have been deputed to Military duty before completion of the period prescribed for passing the Account Test for Executive Officers/Departmental Test, the period of Military Service should be excluded for purpose of reckoning/calculation of the period prescribed for passing the Test and they shall be allowed the increments which accrue from time to time during the period of Military duty.

3. Recruitment to the reserved vacancies in the cadre of Assistant Surgeons shall be made by the Tamil Nadu Public Service Commission Selection of candidates for appoinment to the reserved vacancies in the above cadre by direct recruitment and fixation of seniority shall be made taking into account :—

(i) the date of joining the Armed forces;

(ii) the record of Service in the Armed forces;

(iii) the rank in the Armed forces and the date of relief;

(iv) field Service, if any;

(v) the number of years of service in the Armed forces;

(vi) Medals, etc., received;

(vii) Post- graduate qualification obtained prior to or after joining the Armed forces;

(viii) Specialist appointment held in the Armed forces.

Provided that a candidate who held a temporary appointment under General Rule 10 (*a*) (i) in Category 2 of the service at the time of his joining the Armed forces shall have preference over candidates who joined Armed forces direct.

4. The inter-se-seniority of Military service candidates recruited against reserved vacancies and Civilian candidates recruited against unreserved vacancies shall be as follows :

(i) All candidates appointed as Assistant Surgeons against reserved vacancies will rank below the successful competition candidates of the year to which they are allotted. The year of allotment shall be the year in which they joined defence forces ; or the year of selection by the Tamil Nadu Public Service Commission against vacancies reserved for Military candidates whichever is earlier, provided that in the case of candidates who had joined the defence forces earlier than 1962 the year of allotment shall be taken as 1962.

(ii) The inter-se-seniority of the War Service candidates belonging to each year of allotment should be fixed on the basis of the principles laid down in paragraph 3.

(iii) The particular date on which a candidate should be deemed to have been appointed to the post of Assistant Surgeon shall be decided by the Government.

5. The persons who have served in the Defence Forces during the National Emergency have been allowed to deduct from their age, the actual period of their service in the Defence Force, for appointment against vacancies to the post of Assistant Surgeon reserved for them.

6. The Government have relaxed the provisions of rule 8 (*a*) of the Special Rules for the Tamil Nadu Medical Services, Branch I—Medical Relating to the House Surgeoncy qualification in favour of certain doctors, who did not possess the House Surgeoncy qualification and who straightaway joined the Armed forces after finishing their final M.B.B.S. examination so as to enable them to be appointed as Assistant Surgeon on a regular basis with retrospective from the dates on which they took charge of their temporary appointment.

7. The above concessions granted to Medical Officers who joined the Defence forces have been incorporated in the Special Rules.

The candidates who have served in the Defence forces during the Emergency and who apply for the post of Assistant Surgeons have been exempted from the payment of the prescribed application fee.

(அ) ஆம்.

(இ) தேசிய நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்ட 1962, 1965ஆம் ஆண்டுகளில் பாதுகாப்புப் படைகளில் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளுக்குக் கீழ்க்கண்ட சலுகைகளை அரசு வழங்கியுள்ளது :—

1. தேசிய நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்ட பின்னரும், நெருக்கடி நிலைமை நீடிக்கும் காலத்திலும் வகுப்பு-1-ஐச் சேர்ந்த வகை 2 (உதவி அறுவை மருத்துவர்கள்) பதவிகளில் ஏற்படுகின்ற நிலையான காலியிடங்களில் ஐந்து சதவிகிதம் இராணுவப் பணிக்காக முகமையில் அனுப்பப்பட்ட மருத்துவப் பணியாளர்களுக்கும்; நெருக்கடி நிலைமை தொடர்பாக இராணுவத்தில் பணியாற்றிய மருத்துவப் பணியைச் சேராத பணியாளர்களுக்கும் ஒதுக்கப்பட்டு; அவர்கள் இராணுவத்திலிருந்து திரும்பி வந்தவுடன் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.



இராணுவப் பணிக்காக முகமையில் அனுப்பப்பட்ட வகை 2 ஐ (உதவி அறுவை மருத்துவர்கள்) சேர்ந்த எவரும் கீழ்க்கண்ட சலுகைகளைப் பெறத் தகுதியுடையவராவார்.

(1) தமிழ்நாடு மருத்துவப் பணியில் அவரது மீள் உரிமை நீடிக்கும். தமிழ்நாடு மருத்துவப் பணியில் அவரது பணி முதுநிலையும், பதவி உயர்வும் விதிகளுக்கிணங்க பாதுகாக்கப்படும்.

(2) அவர் தகுதிகாண் பருவத்தினராக இருப்பின்; பொருத்தமான காலியிடங்கள் ஏற்படும்போது அதில் அவர் உறுதிப்படுத்தப்படுவார்.

(3) தகுதிகாண் பருவம், சம்பளம் மற்றும் சிவில் ஓய்வூதியம் தொடர்பாக இராணுவத்தில் அவர் பணிபுரிந்த காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(4) போர்க்களப் பணிக்காலம், அவரது தகுதிகாண் பருவத்திற்கும்; ஊதிய உயர்வுக்கும் இருமடங்காகக் கணக்கில் கொள்ளப்படும்.

(5) அவரது இராணுவப் பணிக்காலம் சிவில் விதிகளின்கீழ் விடுப்பைச் சேர்த்து வைத்துக் கொள்ளும் காரியத்திற்காக கருத்திற் கொள்ளப்படும். அவர் இராணுவ பணிக்காலத்தில் விடுப்பு ஏதும் எடுத்திருப்பின் அது கழித்துக் கொள்ளப்படும்.

மேற்சொன்ன சலுகைகள் 26-10-1962 முதல்10-1-1968 வரையிலான தேசிய நெருக்கடி காலத்தில் இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்குப் பொருந்தும். நெருக்கடி நிலைமை முடிந்த பின்னர், இராணுவத்தில் சேர்ந்தவர்களுக்கு இந்தச் சலுகைகள் அனுமதிக்கப்படுவதில்லை.

மேலே இனம் (4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள் 10-1-1968-க்குப் பின்னர் இராணுவப் பணிக்கு முகமையில் அனுப்பப்பட்டவர்களுக்குக் கிடையாது.

2. நிர்வாக அதிகாரிகளுக்கான கணக்குத் தேர்வு, துறைத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள கால அளவு முடிவடைவதற்கு முன்னால் இராணுவப் பணிக்கு முகமையில் அனுப்பப்பட்ட உதவி அறுவை மருத்துவர்களைப் பொறுத்தவரையில், தேர்வில் தேர்ச்சி பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள, கால அளவைக் கணக்கிடும் காரியத்திற்காக அவர்களது இராணுவப் பணிக்காலம் விடப்படவேண்டும். இராணுவப் பணிக்காலத்தில் அவ்வப்போது சேர்ந்துவிடுகிற ஊதிய உயர்வுகள் பெற அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

3. உதவி அறுவை மருத்துவர் பதவித் தரத்தில் ஒதுக்கப்பட்டுள்ள காலியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் கழகத்தினுள் ஆள் சேர்க்கப்பட வேண்டும்.

[1975 மார்ச் 15

மேற்சொன்ன பதவித்தரத்தில் ஒதுக்கப்பட்டுள்ள காலியிடங்களில் நேர்முகத் தேர்வுமூலம் ஆட்களைத் தெரிவு செய்யும்போதும், பணி மூப்பு நிலையை நிர்ணயிக்கும்போதும், கீழ்க்கண்டவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் :—

(1) இராணுவப் படையில் சேர்ந்த நாள்;

(2) இராணுவப் படையில் பணிப்பிரிவு;

(3) இராணுவப் படையில் அரவது பதவித் தரமும், படையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளும்;

(4) போர்க்களப் பணி ஏதேனும் இருப்பின் அவை;

(5) இராணுவப் படையில் பணிபுரிந்த ஆண்டுகள்;

(6) இராணுவப் படையில் சேர்வதற்கு முன்னர் அல்லது சேர்ந்த பின்னர் பெற்ற பட்டமேற்படிப்புத் தகுதி.

(7) இராணுவப் படையில் வகித்த வல்லுநர் பதவி;

ஆனால், இராணுவப் படையில் சேரும்போது மருத்துவப் பணியைச் சேர்ந்த வகை 2-ல், பொது விதி 10 (a) (i)-ன் கீழ் தற்காலிகப் பதவி வகித்து வந்த ஒருவருக்கு, நேரடியாக இராணுவப் படையில் சேர்ந்தவர்களை விட முன்னுரிமை அளிக்கப்படும்.

4. ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவப்பணியைச் சேர்ந்தவர்களுக்கும் ஒதுக்கப்படாத காலியிடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவில் ஆட்களுக்கும் இடையிலான பணி மூப்பு நிலை வருமாறு :—

(1) ஒதுக்கப்பட்ட காலியிடங்களில் உதவி அறுவை மருத்துவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும் அவர்கள் எந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டார்களோ அந்த ஆண்டில், போட்டித் தேர்வில் வெற்றி பெற்று உதவி அறுவை மருத்துவர்களாக நியமிக்கப்பட்டவர்களைவிட பதவித் தரத்தில் குறைந்தவர்களாவார். அவர்கள் எந்த ஆண்டு பாதுகாப்புப் படையில் சேர்ந்தார்களோ அந்த ஆண்டு அல்லது இராணுவப் பணியாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்காகத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவினால் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஆண்டு, இவற்றில் எது முந்தியதோ அந்த ஆண்டு பதவி ஒதுக்கீடு ஆண்டாக இருக்கும். ஆனால், 1962-ஆம் ஆண்டுக்கு முன்னர் பாதுகாப்புப்படையில் சேர்ந்தவர்களைப் பொறுத்தமட்டில் பதவி ஒதுக்கீடு 1962-ம் ஆண்டாகக் கொள்ளப்படும்.

(2) ஒவ்வொரு பதவி ஒதுக்கீடு ஆண்டுக்குரிய போர்ப் பணிப் புரிந்தோர்க்கிடையிலான பணி மூப்பு நிலை 3 ஆவது பாராவில் வகுக்கப்பட்டுள்ள கொள்கைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(3) ஒருவர் குறிப்பிட்ட எந்த நாளன்று உதவி அறுவை மருத்துவர் பதவியில் நியமிக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும் என்பதை அரசு முடிவு செய்ய வேண்டும்.



1975 மார்ச் 15]

5. தேசிய நெருக்கடி நிலையின்போது பாதுகாப்புப் படையில் பணி புரிந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்ட உதவி அறுவை மருத்துவர் பதவிகளில் ஏற்படும் காலியிடங்களில் நியமிக்கப்படுவதற்கான வயது வரம்பிலிருந்து, அவர்கள் பாதுகாப்புப் படையில் பணிபுரிந்த கால அளவு கழித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

6. மனையிட அறுவை, மருத்துவத் தகுதியில்லாமலும் எம்.பி.பி.எஸ். இறுதி ஆண்டுத் தேர்வை முடித்தவுடனேயே இராணுவத்தில் சேர்ந்து விட்டவர்களுமான சில மருத்துவர்கள், அவர்கள் தற்காலிகமாகப் பதவி ஏற்ற கடந்த ஒரு நாளிலிருந்து முறையானதொரு அடிப்படையில் உதவி அறுவை மருத்துவர்களாக நியமிக்கப்பட இயலும் வகையில், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் பிரிவு I—மருத்துவத்திற்கான சிறப்பு விதிகளைச் சேர்ந்த 8 (a) விதியின், விதித்துறைகளை அரசு தளர்த்தியுள்ளது.

பாதுகாப்புப் படையில் சேர்ந்த மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட மேற்சொன்ன சலுகைகள் சிறப்பு விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய நெருக்கடி நிலைமையின்போது பாதுகாப்புப் படையில் பணிபுரிந்து, உதவி அறுவை மருத்துவர் பதவிக்கு விண்ணப்பிக்கின்ற பணிபுரிந்து, உதவி அறுவை மருத்துவர் பதவிக்கு விண்ணப்பிக்கின்றவர்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதினின்றும் அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets. e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for statement, etc. An entry without any such indication will mean that it pertains to a quesion, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.,

Various subjects like Schbols, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbrevations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House |
| C.A. | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes— (i) Motion to refer to Select/Joint Select Committee, |

(ii) Amendment to refer to Select/Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.,

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis. H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

THIRTEENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

11TH TO 15TH MARCH 1975.

VOLUME LXV (Nos. 1 to 5).

## A


PAGES.

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1975-76, Voting:

Medical

Public Health

Urban Development ... ... ... ... 338-343

ALAGARSAMY, THIRU S.—

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 38-40, 59

Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... 62-66

Tanks in Tirunelveli taluk, deepening ... ... 121-122

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1975-76, Voting:

Registration

Welfare of the Backward Classes, etc. ... 95-98, 186-137

A—*cont.*

PAGES

**ANANDANAYAKI, THIRUMATHI T. N.—*cont.***

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 36–38

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 603

Temples, autonomous Board for ... ... 594

ANBAZHAGAN, THIRU K.—

Budget, 1975–76, Voting :

Medical

Public Health

Urban Development ... ... ... 284, 285, 286, 287, 294–295, 296–297, 298, 299, 300, 302, 307, 314, 317, 318, 319, 323, 324, 325, 326, 327, 328, 329, 330, 358–380

Cholera and other diseases' prevalence in Ramanathapuram district (C.A. St.) ... ... 145–147, 147–148, 149

ARCHAEOLOGY—

Survey, Thanjavur Sri Brihadeeswarar temple ... 109–110

Teachers, training in— ... ... ... ... 476–477

ARUMUGAM, THIRU C.—

Budget, 1975–76, Voting :

Irrigation

Public Works—Buildings 638–641



PAGES.

A—*cont.*

**ARUMUGAM, THIRU C.—*cont.***

Budget, 1975–76, Voting—*cont.*

Public Works—Establishment and Tools and Plant.

Roads and Bridges

Capital Outlay on Public Health, Sanitation and Water-supply.

Capital Outlay on Irrigation

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges 638–641

ARUNA, THIRU ALADI—

National Highways, total length ... ... ... 118–121

Primary and Nursery Schools (English Medium), functioning ... ... ... ... ... 585

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 603

Teacher's training, stipend ... ... ... 584

B

BALASUNDARAM, THIRU V.—

Budget, 1975–76, Voting :

Registration, Welfare of the Backward Classes, etc. ... ... ... ... ... 181, 184

BAMBOO—

Cultivation in Kanyakumari district ... ... 593–594

BILL(S)—

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975—

Consid. ... ... ... ... ... 27–58

Consid. Cl. ... ... ... ... ... 58–59

Motion to pass, Passed ... ... ... 60

PAGES.

B—*cont.*

PAGES


BILL(S)—*cont.*

Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975—

Consid. ... ... ... ... ... 60-72

Consid. Cl. ... ... ... ... 72-75

Motion to pass, Passed ... ... ... 75

BOOKS AND PUBLICATIONS—

Avvaiyar's works, research ... ... ... 471-476

BRIDGES AND CULVERTS—

Madurai Bridge Station, construction of over-bridge near ... ... ... ... ... ... 9

Pudhupalayam-Erukkuvoykkandigai road, construction of culvert across Chunnambukalvoy ... 591-592

C

CALLING ATTENTION—

Cholera and other diseases, prevalence in Ramanathapuram district ... ... ... ... 145-149

Tamil Pandits, merger of Grades I and II ... 633-634

CHAIR—

Announcements—

Adjournment Motions re: C.M.C. Hospital, Vellore ... ... ... ... ... 25

B.O.H. ... ... ... ... ... 99-102

Rulings and Observations—

ADJOURNMENT MOTIONS—

*Flying of new flag with State symbol in the office of the Inspector-General of Police.*

Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House to discuss the issue after the explanation given by the Chief Minister 145




PAGES.

C—*cont.*


CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Adjournment Motions—*cont.*

*Scope of discussion.*—

While explaining why a matter should be taken up as an Adjournment Motion, Members should be brief and should not go into details. When discussion on an Adjournment Motion was allowed, details might be given ... ... 613

*Vellore Christian Medical College Hospital affairs.*

Consent was withheld as there was no need to adjourn the business of the House to discuss the matter after the explanation given by the Chief Minister ... ... ... ... 631

Allegations—

Certain allegations made by a Member about some persons who could not defend themselves in the House were ordered to be expunged by the Chair ... ... ... ... ... 610

Should not be made during question hour ... 6

Debate—

*Interruption.*

It was not proper for a Member to interrupt the speech of a Minister ... ... ... 666

Decorum—

*Reference to Members.*

Members should be referred to as 'Hon'ble Member.' and not as 'friend'. ... ... 164

Demands for Grants—

*Policy notes and reviews, advance circulation.*

On a request made by a Member that the Policy Notes, etc., relating to the Demands for Grants might be circulated to Members in advance, the Speaker asked the Ministers to instruct

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Demands for Grants—*cont.*

*Policy notes and reviews, advance circulation*—cont. their Departments' Secretaries to send the relevant papers to the Legislative Assembly Department a day prior to the taking up of the Demands so that the same could be circulated to Members in advance. ... 287

On 14th March 1975, a Member rising on a point of order complained that in spite of the earlier assurance that policy notes, reviews, etc., relating to the Demands for Grants that were to come up before the House would be circulated to Members in advance, they were continued to be supplied to them in the morning of the day of discussion of those Demands and that it deprived the Members of the opportunity to study them the previous day itself.

Some other Members also endorsed the point. After the Leader of the House explained the reason for the delay and the Minister for Public Works expressed regret for the delay in circulating the papers in advance, the Deputy Speaker asked the concerned persons to see that such papers were furnished to Members in advance to facilitate the Members' having adequate time to study them ... ... 499-502

Expressions used in the House—

" குழப்பம் " (Confusion)—Use of the expression by a Member with reference to the speech of another Member—Deprecated. ... ... 184

On a Member using the expression 'ராசி பலன்' (astrology) in the context "அப்படியிருக்கும் பிரச்சினையைப்பற்றி விவாதிப்பதற்கு இன்று ராசி பலன் பார்ப்பது, நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா, நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளலாமா என்று......"



C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Expressions used in the House—*cont.*

(To consult astrology for taking up such a matter for discussion to-day or the day after ........), the Deputy Speaker observed that it was quite improper to use such an expression and added that for consulting astrology one should go to the foot of the banyan tree and need not come to the Legislature ... ... ... ... 507

Expunction—

*Reference to Advocates.*

Certain references to advocates made by a Member were ordered to be expunged ... ... 45

Lobby—

*Admission of visitors.*

No outsider should sit in the Lobby. Members should co-operate with the officers and refrain from recommending admission to any outsider. 301

Points of Clarification—

After a Minister's reply to the discussion on Demands for Grants, clarifications could be sought only in respect of the points already raised during the discussion and no new points should be raised and clarifications sought for them ... ... 256

If a Member alleged that a Minister gave a false or wrong information, he could raise a point of privilege and he need not seek clarification on it ... ... ... ... ... ... 488, 491

Points of Order—

A point of order could be raised only after finishing the questions and not during the question hour ... ... ... ... ... ... 467

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Points of Order—*cont.*

A point of order could be raised only when there was transgression of either the rules or the procedure of the House ... ... ... ... 631

A point of order could not be raised to enquire whether the Government had received any information about the discussion the Central Government is reported to have had on the resolution passed by the House on State Autonomy ... 598

A point of order raised to seek the reason for giving extension of service to an officer was ruled 'not a point of order'. ... ... ... 325

*Consideration of the Adjournment Motions regarding the Christian Medical College Hospital, Vellore.*

On 14th March 1975, points of order were raised that adjournment motions given notice of by some Members on the Christian Medical College Hospital affairs should be taken up immediately. The Leader of the House explained that negotiations for a satisfactory settlement of the dispute were going on, and the Chief Minister who was not attending the House that day, would explain the position the next day and so, the adjournment motions could be taken up the next day. Members of some of the opposition parties then staged a walk-out. The Deputy Speaker then observed that as those who raised the points of order had walked out of the House, there was no need for him to give a ruling on it. He added that the adjournment motions would be taken up by the Speaker the next day ... ... ... 502–509



PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Points of Order—*cont.*

*Criteria for raising.*

If a Minister gave a wrong or incorrect information, a matter of privilege could be raised and not a point of order ... ... ... ... 328

*Criticism of Constitution.*

With reference to a ruling given by the Deputy Speaker some days before, that Members could criticise the Constitution in the House, a Member stated on 12th March 1975 that when a point of order on the matter was raised some time before, the Speaker observed that a ruling on it would be given in a couple of days. He therefore sought clarification on the point from the Deputy Speaker who occupied the Chair just then and enquired whether a revised ruling on the matter would be given by him.

The Deputy Speaker observed that even on the previous day when he gave the ruling referred to by the Member, he had made it clear that they could speak about the Constitution within the rules framed by them for the conduct of business of the House. He reiterated the same ruling.

Though Thiru Ananthasayanam had stated previously that according to Article 194 of the Constitution absolute freedom of speech had been granted, there was a restriction in the Constitution itself. That is, reference to Judges of the Supreme Court and High Courts and the proceedings of Courts should not be made. Based on that restriction in the Constitution. they had provided for some restrictions in their rules. So, they could talk on such matters

CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Points of Order—*cont.*
*Criticism of Constitution*—cont.

within their rules of procedure. No further clarification was necessary in the matter. 211-212

Questions and Answers—

A point of order could not be raised if a Minister did not possess full information to answer a supplementary question, as a Minister might not even answer a question ... ... ... 284

After the Speaker had announced that the question hour was over and passed on to the next item of business, a Member, who came late to the House and who was not present when his question was taken up and answered, requested that opportunities should be given to him to put supplementaries, just as Ministers, who came late to the House were allowed to answer questions later.

The Speaker quoting the relevant rule observed that only a question which had not been put by reason of the absence of the Member in whose name it stood, could be taken up later, but questions which had been put and answered earlier could not be taken up again. ... ... ... 25–26

*Members' presence in the House when their questions are taken up.*

A Member, rising on a point of order, stated that thinking that at least ten minutes would be taken for answering the earlier questions and that the question in his name in the list of questions for the day would be taken up sometime thereafter, he was discussing outside the House an important subject; but



CHAIR—*cont.*
Rulings and Observations—*cont.*
Question and Answers—*cont.*
*Members' presence in the House when their questions and taken up*—cont.

in the meantime, that question was hurried through. He asked the Speaker as to why the question hour was so hurriedly finished at 9.30 a.m. itself.

The Speaker observed that he need not explain the reasons for the same. The Member who had given notice of the question, realising his responsibility must have come to the House at the stipulated time and that was his indispensable duty. When the question in the name of the Member was taken up, he was not present in the House. As nobody put sufficient number of supplementaries, he could not wait till the Member came to the House ... ... ... ... ... 599–600

*Supplementaries.*

Supplementary questions which did not relate to the main questions were disallowed ... ... 172, 482

Question Hour—

On 15th March 1975, a Member rose on a point of order and asked whether it was in order to conclude the question hour earlier than an hour. He pointed out that while there was provision for extending the question hour there was no such provision for reducing the question hour. After a short discussion, the Speaker quoting an earlier ruling on the subject observed that though the rules specifically stated that the House should meet from 9 a.m. to 1.30 p.m., if the business for a day was over earlier, they could adjourn earlier and it did not mean that even in such cases the House should necessarily sit till 1.30 p.m. Only when the sitting was extended beyond 1.30 p.m., the permission of the House

PAGES

C—*cont.*


Question Hour...*cont.*

was sought. Likewise, if all the questions listed for a day were over before one hour, the House could proceed to the next item in the agenda and the permission of the House was not necessary. After all the questions were answered, if a particular question remained unanswered due to the absence of a Member and if nobody had put the question on his behalf, and if the concerned Member was present just then, the Speaker might permit him to put the question. Moreover, the term, 'first hour' should not be taken to mean 'whole first hour'. ... ... ... ... 599-602

Ruling—

A point of order could not be raised on the ruling given by the Chair ... ... ... ... 632

CHELLIAH, THIRU KUZHA—

Budget, 1975-76, Voting:

Registration

Welfare of the Backward Classes, etc. ... 167-178

CHEZHIYAN, THIRU KOVAI—

Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' Strike, taking up (point of order) ... 505

Budget, 1975-76, Voting:

Irrigation

Public Works—Buildings

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply

Capital Outlay on Irrigation




PAGES

C—*cont.*


CHEZHIYAN, THIRU KOVAI—*cont.*

Budget, 1975-76, Voting—*cont.*

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges 510, 514, 641-644, 670, 671

Medical

Public Health

Urban Development 284, 326-327, 328

Question hour, utilisation (Point of Order) ... 599-600

Siddha Dispensary in Secretariat, non-availability of essential medicines ... ... ... ... 585

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 607-611

Tamil Pandits, delay in merger of Grades I and II (C.A.) ... ... ... ... ... 633, 634

CHINNARAJU, DR. S. A.—

Budget, 1975-76, Voting:

Medical

Public Health ... 343-345

Urban Development

COLLEGE(S)—

Carnatic music, opening at Thanjavur ... ... 3

Training Colleges, admission to Economics Graduates ... ... ... ... ... ... 583-584

Women's College, Thanjavur, hostel for students 268-269

CONFERENCE(S)—

Agricultural Ministers' Conference, details ... 271-272

CORPORATION(S)—

Cinchona Corporation, formation ... ... 22

C—cont.


| | PAGES |
|---|---|
| CORPORATION(S)—*cont.* | |
| Handicrafts Development Corporation, exhibition in Bombay ... ... ... ... ... | 134–135 |
| Handicrafts Development Corporation, Poompuhar, functioning ... ... ... ... ... | 135–137 |


## D


| | |
|---|---|
| DAM(S)— | |
| Across Vettaru, construction ... ... ... | 270 |
| DENNIS, THIRU N.— | |
| Applied Nutrition Programme in Kanyakumari district, implementation ... ... ... | 280 |
| Bamboo cultivation in Kanyakumari district ... | 593–594 |
| Budget, 1975–76, Voting : | |
| Irrigation ... | |
| Public Works—Buildings | |
| Public Works—Establishment and Tools and Plant. | |
| Roads and Bridges | |
| Capital Outlay on Public Health, Sanitation and Water Supply. | |
| Capital Outlay on Irrigation | |
| Capital Outlay on Public Works—Buildings | |
| Capital Outlay on Roads and Bridges | 516, 554–559 |
| Medical | 286 |
| Public Health | |
| Urban Development | |
| Registration | |
| Welfare of the Backward Classes, etc. | 76 |




D—*cont.*


| | PAGES. |
|---|---|
| DENNIS, THIRU N.—cont. | |
| Nattalam High School, upgrading Headmaster's post | 2 |
| Rural Man Power Programme in Kanyakumari district, implementation ... ... ... | 280 |
| Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... | 603 |
| Training Colleges, admission to Economics Graduates ... ... ... ... ... | 583–584 |
| DHARMALINGAM, THIRU A. P.— | |
| Budget, 1975–76, Voting : | |
| Registration | |
| Welfare of the Backward Classes, etc. | 255 |
| Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... | 60–62, 70–72, 73 |
| DHARMALINGAM, THIRU N.— | |
| Budget, 1975–76, Voting : | |
| Irrigation ... ... | |
| Public Works—Buildings | |
| Public Works—Establishment and Tools and Plant. | |
| Roads and Bridges | |
| Capital Outlay on Public Health, Sanitation and Water Supply. | |
| Capital Outlay on Irrigation | |
| Capital Outlay on Public Works—Buildings | |
| Capital Outlay on Roads and Bridges | 646–649 |

PAGES

D—*cont.*


DISEASES—

Cholera and other diseases, prevalence in Ramanathapuram district (C.A.) ... ... ... 145–149

DORAISAMY, THIRU S.—

Transport Workshop at Tiruppur, estimated cost 281–283

Trees in Nilgiris Hills, felling ... ... ... 490–491

E

EDMUND, THIRU G. R.—

Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (Point of Order) 506, 507

Budget, 1975–76, Voting:

Registration
Welfare of the Backward Classes, etc. ... 177, 179, 195–196

Policy notes and notes on Demands for Grants, delay in supply to Members (Point of Order) ... 501

EDUCATION—

Job oriented degree courses, introduction ... 261–266

Teachers' training, stipend ... ... ... 584

EMPLOYEES—

Doctors from Army Service, extension of special preference ... ... ... ... ... 585–586

EXPORT—

Turmeric ... ... ... ... ... 276–279

EXPUNCTION(S)—

Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (Point of Order) ... 508, 509

Budget, 1975–76, Voting:
Irrigation
Public Works—Buildings




PAGES

E—*cont.*


EXPUNCTION—*cont.*

Budget, 1975–76, Voting—*cont.*

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges 654, 655, 661, 662

Budget, 1975–76, Voting:

Registration
Welfare of the Backward Classes ... 83

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 45

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 609

F

FACTORIES—

Glucose factory for Palayur ... ... ... 479–480

FINANCIAL BUSINESS—

Budget, 1975–76, Voting:
Irrigation
Public Works—Buildings
Public Works—Establishment and Tools and Plant
Roads and Bridges
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply
Capital Outlay on Irrigation

PAGES

F—*cont.*


FINANCIAL BUSINESS—*cont.*

Budget, 1975-76, Voting—*cont.*

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges ... 510-567, 634-689

Medical

Public Health

Urban Development ... ... ... 284-301, 301-381

Registration

Welfare of the Backward Classes, etc. ... 76-98, 149-257

FISHERIES—

Coral reef in Periathalai village, removal ... 140

FOODGRAINS—

Kesari dhall, import ... ... ... 117-118

Paddy, procurement price ... ... ... 123-134

Wheat, allotment by Centre ... ... ... 9-16

FORESTS—

Teak wood in Pollachi range, theft ... ... 488-490

Trees and plants used for the manufacture of aromatics, growing of ... ... ... 22-25

Trees in Nilgiris Hills, felling ... ... ... 490-491

G

GANESAN, THIRU S.—

Sembanarkoil Panchayat Union, bifurcation ... 16-22

GOPAL, THIRU K. P.—

Budget, 1975-76, Voting :

Irigation

Public Works—Buildings




PAGES

G—*cont.*

PAGES


GOPAL, THIRU K. P.—*cont.*

Budget, 1975-76, Voting—*cont.*

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply

Capital Outlay on Irrigation

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges 511, 514

Registration

Welfare of the Backward Classes, etc. ... ... 77

GURUSAMI, THIRU N. V.—

Budget, 1975-76, Voting :

Irrigation

Public Works—Buildings

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply

Capital Outlay on Irrigation

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges ... 649-651

Medical

Public Health

Urban Development ... 336-338

PAGES

## H

HANDE, Dr. H. V.—
Budget, 1975-76, Voting:
Irrigation
Public Works—Buildings
Public Works—Establishment and Tools and Plant
Roads and Bridges
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Roads and Bridges ... 515, 516, 517, 518, 653, 654, 661, 663, 674, 677
Medical
Public Health
Urban Development ... 298-301
Registration.
Welfare of the Backward Classes, etc. ... 180-181, 185-186, 193-195, 196-197
Cholera and other diseases, prevalence in Ramanathapuram district (C.A.) ... ... ... 145, 147, 148
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 50-52



PAGES

H—*cont.*

HANDE, Dr. H. V.—*cont.*
Rice procurement ... ... ... ... 122-123
Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 603

HARIJAN WELFARE—
Harijan Students Hostel, construction at Athoor 597-598
Harijan Students' Hostel, construction at Mallasamudram and Kottapalayam ... ... 597

HOSPITALS AND DISPENSARIES—
Dispensary at Thirukkuvalai, upgrading ... 586-587
E.S.I. Hospitals, increase in bed ratio ... 483-485
E.S.I. Scheme, income limit ... ... ... 486-488
Health centres, opening ... ... ... 113-117
Hospitals, setting up of modern mortuaries ... 6-8
Kodarangulam Hospital, shifting ... ... 5-6
Primary Health Centres, Central aid ... ... 112
R.M. Government Hospital, Thanjavur, purchase of generator ... ... ... ... ... 3-5
Siddha Dispensary in Secretariat, non-availability of essential medicines ... ... ... 585

HOUSING—
Housing Board, work study ... ... ... 137-138

ILANGOVAN, Thiru G.—
Women's College, Thanjavur, hostel for students 268-269

IMPORTS—
Procedures, simplification ... ... ... ... 477-478

PAGES

I—*cont.*

INDUSTRIES—

Chemical Industries, feasibility report ... ... 270-271

Salt-based chemical industry at Vedaranyam, starting 271

Starch manufacturing industry for Udumalpet ... 478-479

IRRIGATION—

Kiridumal river, repairing of bunds ... ... 8-9

Selliamman Canal Scheme, implementation ... 269

J

JAMES, THIRU J.—

Adjournment motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (point of order) ... 504-505

Budget, 1975-76, Voting— ... ... ...

Irrigation ... ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works-Establishment and Tools and Plant Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ...

515-517

Medical ... ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Urban Development ... ... ... ... 285, 301-305

Registration ... ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... ... 90-93



J—*cont.*

PAGES

JAMES, THIRU J.—*cont.*

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 40-42

Policy notes and notes on Demands for Grants, delay in supply to members (point of order) ... ... 500

Strike in C.M.C. Hospital, Vellore, (A.M.) ... 611-615

JAYARAMAN, THIRU K.—

Municipal roads in Salem, maintenance ... ... 279

—1Mv 4—

JOTHI VENKATACHELLUM, THIRUMATHI—

Budget, 1975-76, Voting

Medical

Public Health

Urban Development

287, 349-358

K

KAMATCHI, THIRU K.—

Budget, 1975-76, Voting :

Registration

Welfare of the Backward Classes, etc. 162-167

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 57

KANDAPPAN, THIRU S.—

Budget, 1975-76, Voting :

Irrigation

Public Works—Buildings

Public Works—Establishment and Tools and Plant

| | PAGES |
|---|---|
| KANDAPPAN, THIRU, S.— | |
| Budget, 1975–76, Voting—cont. | |
| Roads and Bridges | |
| Capital Outlay on Public Health Sanitation and Water Supply | |
| Capital Outlay on Irrigation | |
| Capital Outlay on Public Works—Buildings | 651–653 |
| Capital Outlay on Roads and Bridges ... | 654, 662–663 |
| Registration | |
| Welfare of the Backward Classes, etc. ... | 253 |
| KANDASAMI, THIRU MANALI C.— | |
| Budget, 1975–76, Voting: | |
| Medical ... ... ... ... | |
| Public Health ... ... ... ... | |
| Urban Development ... ... ... ... | 345–349 |
| Registration ... ... ... ... | |
| Welfare of the Backward Classes, etc. ... ... | 188–193 |
| KARTHEESAN, THIRU V.— | |
| Budget, 1975–76, Voting: | |
| Irrigation ... ... ... ... | |
| Public Works—Buildings ... ... ... | |
| Public Works—Establishment and Tools and Plant | |
| Roads and Bridges ... ... ... ... | 545–547 |
| Capital Outlay on Public Health, Sanitation and Water Supply | |
| Capital Outlay on Irrigation ... ... ... | |





| | PAGES |
|---|---|
| KARTHEESAN, THIRU, V.— | |
| Budget, 1975–76, Voting—cont. | |
| Capital Outlay on Public Works—Buildings ... | |
| Capital Outlay on Roads and Bridges ... ... | 545–547 |
| KARUNANIDHI, DR. M.— | |
| Budget, 1975–76, Voting: | |
| Irrigation ... ... ... ... ... | |
| Public Works—Buildings | |
| Public Works—Establishment and Tools and Plant | |
| Roads and Bridges ... ... ... ... | |
| Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ... | 566, 567 |
| Capital Outlay on Irrigation ... ... ... | |
| Capital Outlay on Public Works—Buildings ... | |
| Capital Outlay on Roads and Bridges ... ... | |
| Registration ... ... ... ... ... | 171–172 |
| Welfare of the Backward Classes, etc. ... | 174, 175, 176, 177, 178–179 180, 181, 183–184, 187–188 193, 195 196–197, 198, 202 204, 248, 251–252 |
| Flag (new) flying in I.G.'s Office (A.M.) ... | 141–144 |

K—*cont.*

KARUNANIDHI, Dr. M.—*cont.*

Flag (new) in I.G.'s Office (Pt. of Information) ... 26

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 621–630

KARUNANIDHI, Thiru THAZHAI M.—

Dispensary at Thirukkuvalai, Upgrading ... ... 586–587

Vettaru, dam across ... ... ... ... 270

KARUPPIAH, Thiru A.—

Budget, 1975–76, Voting:

Irrigation ... ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges ... ... ... 539–542

Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ...

KITTAPPA, Thiru N.—

Archaeology, training for school teachers ... 476–477

Cashew Plantations in Public Sector ... ... 593

Glucose factory for Palayur ... ... ... 479–480

Mayuram Panchayat Union, bifurcation, ... 16

Salt-based chemical industry at Vedaranyam, starting 271

Schools, direct industrial training to students ... 266–268

Wheat, allotment by Centre ... ... ... 9





KOTHANDARAMIAH, Thiru K. S.—

Budget, 1975–76, Voting:

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges ... ... ...

Capital Outlay on Public Health Sanitation and Water Supply

Capital Outlay on Irrigation ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ... 510, 512, 513, 562–564

Medical ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Urban Development ... ... ... 284, 285

Registration ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... 76, 77, 221–225

KRISHNAMOORTHI, Thiru V. (Nellikuppam)—

Budget, 1975–76, Voting:

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Urban Development ... ... ... ... 329–330

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975. 43–45

Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... ... 66–67

PAGES.

KUMARASAMI, THIRU K. N.—
Budget, 1975-76, Voting:
Irrigation ... ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health Sanitation and Water Supply
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... ... 547-551
Registration ... ... ... ... ...
Welfare of the Backward Classes, etc. ... 256

L.

LABOUR:
Padma Mills' Workers (Kalapatti), strike ... 139

LATHEEF, THIRU M. A.—
Budget, 1975-76, Voting:
Registration ... ... ... ... 77,
Welfare of the Backward Classes, etc. ... ... 198-211 246, 247 251, 252
Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 618-621

LOCAL BODIES:
Gummidipoondi Panchayat Union, bifurcation ... 16
Mayuram Panchayat Union, bifurcation ... 16



PAGES.

LOCAL BODIES—*Cont.*
Rural Man Power Programme in Kanyakumari district, implementation ... ... ... ... 280
Sembanarkoil Panchayat Union, bifurcation ... 16-22

M.

MADHAVAN, THIRU S.—
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 52, 57, 58
Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... ... 62, 63, 64, 65, 66, 74-75

MARIMUTHU, THIRU A. R.—
Budget, 1975-76, Voting:
Registration ... ... ... ...
Welfare of the Backward Classes, etc ... ... 77
Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... ... ... 74
Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 615-616

MARIMUTHU, THIRU M.—
Budget, 1975-76, Voting:
Medical ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Urban Development ... ... ... ... 334-336

MARUDACHALAM, THIRU N.—
Budget, 1975-76, Voting:
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...

PAGES.

MARUDHACHALAM, THIRU N.—*cont.*

Public Works—Establishment and Tools and Plant Roads and Bridges ... ... ...

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ... 512

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ...

Urban Development ... ... ... ... 281, 286, 287 322–324, 331

Padma Mills' Workers (Kalapatti), strike ... 139

MILK:

Private dairy farms, assistance ... ... ... 492–498

Societies, North Arcot district ... ... ... 498

MONUMENT(S):

Diamond Jubilee Coronation Arch in Thanjavur, demolition ... ... .. ... ... 592

MOTIONS:

Ad. Motions:

Flag (new), flying in I.G.'s office ... ... 140–145

Strike in C.M.C. Hospital, Vellore ... ... 603–633

MUNU ADHI, THIRU—

Outsiders occupying the lobby (Point of clarification) 301



PAGES

M—*cont.*

MUTHIAH, THIRU M.—

Puthiyamputhur Temple, theft of idol ... ... 594–596

MUTHU, THIRU V.—

Harijan Student Hostels, construction at Mallasamudram and Kottapalayam ... ... ... 597

N.

NACHIAPPAN, THIRU A.M.T.—

Harijan Students Hostel, construction at Athoor ... 597–598

NACHIMUTHU, THIRU N.—

Budget, 1975–76, Voting:

Registration ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... ... 93–95

NALLASAMY, THIRU S.—

Budget, 1975–76, Voting:

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ...

Urban Development ... ... ... 320–322

NATARASAN, THIRU E. M.—

Budget 1975–76, Voting:

Registration ... ... ... ...

Welfare of Backward Classes, etc ... ... 88-90

NEDUNCHEZHIYAN, DR. V. R.—

Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (point of order) ... 505–508

Policy notes and notes on Demands for Grants, delay in supply to Members (point of order) ... 501

Question hour, utilisation (point of order) ... 602

Tamil Pandits, merger of Grades I and II (C.A. St.) ... ... ... ... ... 633–634

PAGES.

P.

PALANIAPPAN, DR. S. M.—

Budget, 1975–76, Voting :

Medical ... ... ... ... }
Public Health ... ... ... } 306–312
Urban Development .. ... }

PALANISAMY, THIRU N. K.—

Agricultural University, Correspondence Course ... 272–276

Agriculture Ministers' Conference, details ... 271–272

Archaeological Survey, Thanjavur Sri Brihadeeswarar temple ... ... ... ... ... 109–110

Avvaiyar's Works, research ... ... ... 471–476

Chemical Industries, feasibility report ... ... 270–271

Coral reef in Periathalai village, removal ... 140

Diamond Jubilee Coronation Arch in Thanjavur, demolition ... ... ... ... ... 592

Elementary School Teachers, pensions ... ... 467–471

E.S.I. Hospitals, increase in bed ratio ... ... 483–485

E.S.I. Scheme, income limit ... ... ... 486–488

Health Centres, opening ... ... ... ... 113–117

Hospitals, setting up of modern mortuaries, ... 6–8

Housing Board, work study ... ... ... 137–138

Import procedure, simplification ... ... ... 477–478

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 45–47, 58, 59

Job-oriented degree courses, introduction ... 261–266

Kesari dhall, import ... ... ... ... 117–118



PAGES.

P—*cont.*

PALANISAMY, THIRU N. K.—*cont.*

Land Reforms Fixation of Ceiling on Land Fourth Amendment Bill, 1975 ... ... ... 68

Language teaching in High Schools ... ... 112

Link roads for villages ... ... ... ... 587–591

Paddy, procurement price ... ... ... 123–134

Primary and Nursery Schools (English medium), functioning ... ... ... ... 585

Schools, direct industrial training to students ... 266–268

Wheat, allotment by Centre ... ... ... 10–16

PALANIVELU, THIRU V.—

Budget, 1975–76, Voting :

Registration ... ... ... ... }
} 212–216
Welfare of the Backward Classes, etc. ... }

PAPERS LAID ON THE TABLE—

Agricultural Produce Markets Act, 1959, notification ... ... ... ... ... 382

Backward Classes, 1975–76, Performance Budget 103

Betting Tax Act, 1935, notification ... ... 382

Buildings Programme in Tamil Nadu, 1974–75, review (English and Tamil) ... ... ... 689

Demands—

Backward Classes Department, policy note (English and Tamil) ... ... ... ... ... 103

Irrigation and Public Works Department Grants, 1975–76, Minister's speech (English and Tamil) 689

Medical, 1975–76, Minister's speech (English and Tamil) ... ... ... ... ... 383

PAGES.

P—*cont.*


PAPERS LAID ON THE TABLE—*cont.*

- Public Health, 1975-76, Minister's speech (English and Tamil) ... ... ... ... 383
- Registration Department, Policy Note (English and Tamil) ... ... ... ... 103
- Social Welfare, Policy Note (Tamil) ... ... 103
- Urban Development, Policy note (English and Tamil) ... ... ... ... ... 567
- Detailed Public Works Budget for 1975-76 ... 689
- Electricity Supply Act, 1948, Sixteenth Annual Administration Report ... ... ... 103
- Entertainments Tax Act, 1939, notification ... 258
- Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, notification ... ... ... ... 689
- Family Planning Centres and Medical Institutions, district maps ... ... ... ... 567
- Fisheries, Policy note (English and Tamil) ... 259
- General Sales Tax Act, 1959, notifications ... 382
- Health Services and Family Planning, 1975-76, Performance Budget ... ... ... ... 567
- Hindu Religious and Charitable Endowments Act, 1959, notification ... ... ... ... 258
- Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 103
- Irrigation in Tamil Nadu, 1974-75, Review (English and Tamil) ... ... ... ... ... 689
- Labour Welfare Fund Act, 1972, notification ... 258
- Land Encroachment (Amendment) Bill, 1975 ... 103
- Land Revenue Demands, Policy note (English and Tamil) ... ... ... ... ... 259




PAGES.

P—*cont.*


PAPERS LAID ON THE TABLE—*cont.*

- Leprosy Beggars Rehabilitation Programme, 1975-76, policy note (English and Tamil) ... ... 383
- Madurai City Municipal Corporation Act, 1971, notification ... ... ... ... ... 258-259
- Medical Education, 1975-76, Performance Budget. 383
- Panchayats Act 1958, notification ... ... 259
- Port Department, 1975-76, Performance Budget. 689
- Road Development Programme, 1974-75, review (English and Tamil) ... ... ... ... 689
- Town and Country Planning Act, 1971, notifications ... ... ... ... 258

PERIASAMY, THIRU K.—

- Budget, 1975-76, Voting :
  - Registration, Welfare of the Backward Classes, etc. ... ... ... ... ... 225-227
- Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... 70

PLANTATION(S)—

- Cashew Plantations in Public Sector ... ... 593

PONCHOCKKALINGAM, THIRU P.—

- Budget, 1975-76, Voting:
  - Irrigation
  - Public Works—Buildings
  - Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 564-565
  - Roads and Bridges
  - Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...
  - Capital Outlay on Irrigation

PAGES.

P—*cont.*

PONCHOCKKALINGAM, THIRU P.—*cont.*

Budget, 1975-76, Voting—*cont.*

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges ... ... 564-566

PONNAPPA NADAR, THIRU R.—

Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (Point of order) ... 506

Budget, 1975-76, Voting :

Irrigation ... ... ... ... ...

Public Works—Buildings ... ... ... ...

Public Works—Establishment and Tools and Plant

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ...

Capital Outlay on Public Works—Buildings

Capital Outlay on Roads and Bridges ... ... 512, 518, 566, 657-661

Registration ... ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... ... 227-234

Criticism of Constitution, clarification ... 211

Flag (new) in I.G's Office (Point of information) 26

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 29-32

PUBLIC HEALTH—

Applied Nutrition Programme in Kanyakumari district, implementation ... ... ... 280



PAGES.

R

RAJA, THIRU A.M.—

Turmeric, export ... ... ... ... 276-279

RAJAMANICKAM, THIRU K.—

Budget, 1975-76, Voting :

Irrigation ... ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ... 551-554

RAJANGAM, THIRU N.—

Budget, 1975-76, Voting :

Registration ... ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... ... 85, 205, 206

RAJARAM, THIRU K.—

Budget, 1975-76, Voting :

Registration ... ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. 76, 78, 210, 234-251, 253-254

PAGES.

R—*cont.*


RAMALINGAM, THIRU C.—
Budget, 1975-76, Voting :
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... ... 534–536

RAMALINGAM, THIRU R.—
Budget, 1975–76, Voting :
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... 526–529

RAMAN, THIRU O. P.—
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... ... 27–28, 55–56, 60




PAGES.

R—*cont.*


RAMASWAMY, THIRU E.—
Cinchone Corporation, formation ... ... 22

RICE—
Procurement ... ... ... ... 122–123

ROAD(S)—
Link roads for villages ... ... ... ... 587–591
Municipal Roads in Salem, maintenance ... ... 279
National Highways, total length ... ... 118–121
Wandiwash—Sedharakuppam road, granite walls ... 482–483


S


SADASIVAM, THIRU S.—
Budget, 1975–76, Voting :
Registration ... ... ... ... ...
Welfare of the Backward Classes, etc. ... 220–224
Selliamman canal scheme, implementation ... 269

SADIQ PASHA, THIRU S. J.—
Budget, 1975–76, Voting :
Registration ... ... ... ... ...
Welfare of the Backward Classes, etc. ... 246

SAMPATH, THIRU T.V.—
Drinking water supply for Tranquebar Town Panchayat ... ... ... ... ... 481–482

PAGES.

S—*cont.*


SANGUMUTHU THEVAR, THIRU S.—

Budget, 1975–76, Voting :

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ... 536–539

Forests, growing of trees and plants used for the manufacture of aromatics ... ... ... 22–25

Kedarangulam Hospital, shifting ... ... 5–6

SATHYAVANIMUTHU, THIRUMATHI—

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 603

SCHOOL(S)—

Industrial training to High School students ... 266–268

Language Teaching in High Schools ... ... 112

Nattalam High School, upgrading Headmaster's post ... ... ... ... ... 2

Primary and Nursery Schools (English medium), functions ... ... ... ... 585




PAGES

S—*cont.*


SHANMUGAM, THIRU P. U.—

Budget, 1975–76, Voting :

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... 510, 511, 512, 513, 514, 516, 517, 518, 524, 603, 685

Policy notes and notes on Demands for Grants, delay in supply to Members (Point of Order) ... 592

SIRAIMEETTAN, THIRU T. K.—

Budget, 1975–76, Voting :

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works...Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... 559–561

PAGES.

S—*cont.*


SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Refusal to admit pass holders in gallery (Personal explanation) ... ... ... ... 27

SONIAH, THIRU T.—

Drinking Water Supply Schemes for Chinnakkannanur ... ... ... ... ... 480–481

Kirudumal river, repairing of bunds ... ... 8–9

Overbridge near Madurai Bridge Station, construction ... ... ... ... ... 9

SOUNDARAPANDIAN, THIRU P.—

Arts Gallery, Thanjavur ... ... ... 110–112

Budget, 1975–76. Voting:

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... 511, 513, 529, 533, 666–667

Medical ... ... ... ... ... 285

Public Health ... ... ... ...

Urban Development ... ... ... ...

Registration ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... ... 77, 78–88

Doctors from Army service, extension of special preference ... ... ... ... ... 585–586




PAGES.

S—*cont.*


SOUNDARAPANDIAN, THIRU P.—*cont.*

Handicrafts Development Corporation, Poompuhar, functioning ... ... ... ... 135–137

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 32–34, 56

Policy notes and notes on Demands for Grants, delay in supply to Members, (Point of order) ... 439

Private dairy farms, assistance ... ... ... 492–498

Puthiyamputhur Temple, theft of idol ... ... 594–596

Starch manufacturing industry for Udumalpet ... 478–479

Teak wood in Pollachi range, theft ... ... 488–490

SUBBIAH, THIRU A. K.—

Budget, 1975–76. Voting—

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ..

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ... ...

Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... 635–637

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 42–43

Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... .. ... 68–70

PAGES.

S—*cont.*

SUBBIAH, THIRU A. R.—
Budget, 1975-76, Voting—
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ..
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... 656–657

SUBRAMANIAM, THIRU A.—
Adjournment Motion on Vellore C. M. C. Hospital Workers' strike, taking up (Point of Order) ... 507–508

Budget, 1975-76, Voting—
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... 510, 511, 512, 515 516, 517

Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ...
Urban Development ... ... ... ... 314–320



PAGES.

S—*cont.*

SUBRAMANIAM, THIRU A.—*cont.*
Policy notes and notes on Demands for Grants, delay in supply to Members (point of order) ... 499–500
R. M. Government Hospital, Thanjavur, purchase of generator ... ... ... ... ... 3–5
Strike in C. M. C. Hospital, Vellore (A.M.) ... 603

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1975-76, Voting—
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ...
Urban Development ... ... ... ... 286
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 47–48

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1975-76, Voting—
Irrigation ... ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... ... 644–645
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ... ...
Urban Development ... ... ... ... 312–314
Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 616–618

PAGES.

S—*cont.*

SURENDRAN, THIRU M.—
Budget, 1975-76, Voting—
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... 514
Medical ... ... ... ... ...
Public Health ... ... ... ...
Urban Development ... ... ... ... 285

T.

TANGAMANI, THIRU K. T. K.—
Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (point of order) ... 502-503 506
Budget, 1975-76, Voting—
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... ... 513, 516, 517, 518,



PAGES.

T—*cont.*

TANGAMANI, THIRU K. T. K.—*cont.*
Registration ... ... ... ...
Welfare of the Backward Classes, etc. ... ... 76, 77, 149-162
Flag (new), flying in I.G.'s office (A.M.) ... ... 140-141, 144
Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1975 ... ... ... ... 74
Policy notes and notes on Demands for Grants, delay in supply to Members (point of order) ... 501
Question hour, utilisation (point of order) ... 599, 601-602
Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 603-607, 631, 632

TANK(S):
Tirunelveli taluk deepening ... ... ... 121-122

TEACHERS:
Elementary School Teachers, pension ... ... 467-471
Tamil Pandits, merger of Grades I and II (C.A.) 633-634

TEMPLE(S)—
Arts Gallery, Thanjavur ... ... ... .. 110-112
Autonomous Board for ... ... ... ... 594
Puthiyamputhur Temple, theft of idol ... ... 594-596

THIRUVENGADAM, THIRU THOPPUR:
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... ... 48-50
Primary Health Centres, Central aid ... ... 112

PAGES.

T—*cont.*

THIAGARAJAN, THIRU E. S.—
Budget, 1975-76, Voting—
Medical ... ... ... ...
Public Health ... ... ... ...
Urban Development ... ... ... ... 332-334

TRANSPORT AND COMMUNICATIONS—
Madras—Devampattu bus route ... ... 281
Transport Workshop at Tiruppur, estimated cost ... 281-283

TURMERIC—
Export ... ... ... ... ... 276-279

U.

UNIVERSITIES—
Agricultural University, Correspondence Course ... 272-276
Islamic Literature, research ... ... ... 1-2

V.

VADIVEL, THIRU S.—
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... 54-55

VEERASAMI, THIRU N.—
Budget, 1975-76, Voting—
Registration ... ... ... ...
Welfare of the Backward Classes, etc. ... ... 203
State Autonomy resolution, discussion in Central Cabinet (point of order) ... .. ... ... 598



PAGES.

T—*cont.*

VENKATASWAMY, THIRU B.—
Budget, 1975-76, Voting—
Irrigation ... ... ... ...
Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Capital Outlay on Public Health, Sanitation and Water-Supply ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—Buildings ...
Capital Outlay on Roads and Bridges ... ... 511, 513, 515, 542-545
Registration ... ... ...
Welfare of the Backward Classes, etc. ... 216-220
College of Carnatic Music, opening at Thanjavur ... 3
Handicrafts Development Corporation, exhibition in Bombay ... ... ... ... ... 134-135

VEZHAVENDAN, THIRU K.—
Gummidipoondi Panchayat Union, bifurcation ... 16
Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 ... ... ... ... 52-54
Madras—Devampattu bus route ... ... 281
Pudhupalayam-Erukkuvoykkandigai road, construction of Culvert across Chunnambukalvoy ... 591-592

PAGES.

## W.

WAHAB, Thiru K. A.—

Adjournment Motion on Vellore C.M.C. Hospital Workers' strike, taking up (point of order) ... 509

Budget, 1975-76, Voting:

Irrigation ... ... ... ...

Public Works—Buildings ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...

Roads and Bridges ... ... ...

Capital Outlay on Public, Sanitation and Water Supply ... ... ... ...

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works—Buildings ...

Capital Outlay on Roads and Bridges ... ... 510, 512, 514, 515, 516 518-526

Medical ... ... ... ... ...

Public Health ... ... ... ... ...

Urban Development ... ... ... ... 284, 286, 287

Registration ... ... ... ...

Welfare of the Backward Classes, etc. ... 6

Indebted Agriculturists (Temporary Relief) Bill, 1975 31-36

Islamic Literature, research ... ... ... 1-2

Milk Supply Societies, North Arcot district ... 498

Paddy, procurement price ... ... ... ... 123-134



PAGES.

## W—*cont.*

WAHAB, Thiru K. A —*cont.*

Strike in C.M.C. Hospital, Vellore (A.M.) ... 603

Wandiwash—Sedharakuppam Road, granite walls 482-483

WALK-OUTS—

Walk-out by Members ... ... ... ... 27, 506, 507, 508, 509

WATER-SUPPLY—

Drinking Water-Supply for Chinnakkannanur ... 480-481

Drinking Water-Supply for Tranquebar Town Panchayat ... ... ... ... 481-482

61694

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.